Koviloor Digital Library

10-5

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்யாபத்ரிகை

BRAHMA VIDYA PATHRIAKA

பத்திரிகையின் விலை (சந்தா):

ஷ 1-இ 3 0 0
ஷ 6-இ 1 8 0
ஷ 3-இ 0 14 0
1-காபிக்கு 0 3 0
இலங்கைக்கு 3 8 0.

பத்திர கிரயத்தை மணியார்டராகவாவது தபாலில் ரூபா 1-க்கு அணா 1-சேர்த்தனுப்பும் தபால் லேபிள்களாகவாவது சிதம்பரம் பிரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புக

பௌர்ணிமை அமாவாஸ்சைகளில் பிரசுரஞ்செய்யப்படும்.

[illegible]

௩ புத்தகம்] சிதம்பரம். கர (வருஷம்) மாசி௴ ௰௨௳ [இலக்கம் க

ஸம்வ்யூ௩ ௬௩.

ஸ்ரீவித்யா ஶங்கர.

ACC. NO. 15124

...OOR ANDA...IAR
A. No. 15124
LIBRARY, KOVILOOR

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீ [illegible]

ஸ்ரீ [illegible]

ஸ்ரீ [illegible]

[illegible]

ஸ்ரீமதீ ஸ்ரீ [illegible]

[illegible] ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible]

[illegible] "ப்ரஹ்மவித்யா" [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீவித்யாஶங்கர

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

குறிப்பு:—

ஸ்ரீமத் ஹிரண்ய கர்ப்பயாஜி ரவிகுல ராஜா ப்ராஸ்கர ஸேதுபதி அவர்கள், ப்ரம்ம வித்தியாவை ஆதரித்து வருவதாக அளிக்கப் பட்ட கடிதம் அடுத்தமுறையில் பிரசுரஞ் செய்யப்படும்.

பத்திராதிபர்.

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்: கா[illegible] மாசிமீ ௨ சனிக்கிழமை.

ப்ரம்மவித்தியாவிஜயம்.

பத்திரிகாஸன்பர்காள்! சிறிது செவிசாய்த்து மெது ப்ரம்மவித்தையா பத்திரிகையின் பெருமையை ஒருவாறுகவனியுங்கள்!

இந்நாட்டில் வாழும் வைதிக ஜனங்களுக் கினிய தோழியாக இப்பத்திரிகை ஒன்றே சென்ற ஐந்துவருடகாலங்களாக நிலைபெற்று வருவதை நீவிரறிந்திலிரோ? இப்பத்திரிகை ஆன்றோர் ஆசாரங்களை அநுஷ்டிக்கவேண்டுங்கட்காது அவைகளை எவ்விதத்துங்கொள்ளப்படாதெனவோது ன்மதங்களை நாட்டக் கங்கணம் பூண்ட எம்மடாதிபதிகளுக்கும் சமயம் நேர்ந்துழி அவரது மித்திபக்கடனும் நன்மதப் பிரதிஷ்டாபனத்தைத் தெரிவித்து வந்தனர். இப்பொழுது அப்பத்திரிகை பெற்ற பெரும்புண்ணியத்தாலோ, எம் பேரம்பலத்தாடும் பெருமான் திருவருளாலோ, அல்லது பெரியோர் பெருமையாலோ மற்றெக்காரணத்தாலோ அறியேம். எமது பத்திரிகை, இச்சென்னைபுரி மண்டலத்தில் ஆரியமதப் பெருமையை வெளியிடக் கங்கணம் பூண்ட பத்திரிகைகளுள் மற்றவை பெறாத பெரும் பேற்றைப்பெற்றது.

ஆராயுங்கள்! இக்காலத்தில் "சுதேசபாஷை பத்திரிகைகள் நிலைபெறுவதில்லை என்றும் பாதகண்டத்தவர் பத்திரிகைகளை நடத்த வலியற்றவரென்றும் வடமொழி நாவலர்கட்கு வாக்கியமெழுதும் பயிற்சி இல்லை என்றும் இக்குமரி கண்டத்தவர்க்கு உள்வேற்றுமை பலவுளவாயின் அவர்களுக் கொத்தோத பொதுவிஷயம் சிறிதுமில்லை என்றும் மற்றவர்க் குபதேசிக்க இத்தேசத்தவர்க்கு அதிகாரமில்லை என்றும் இந்நாட்டவர் பத்திரிகைகளில் நடைபெற்றவ ரென்றும் இவர்க்குச்

[illegible]

சிறிதும் பத்திரிகைகளின் பயன் தெரியாதென்றும் நீதி
முதலியன நிரம்பிய சற்புத்தகங்களில் வாக்கில்லை என்
றும் தம்மத புத்தகங்களையும் இவர் பாதுகார்த்தார்
இல்லை என்றும் உள்மதச் சண்டைகளில் உள்ள காலத்
தையும் போக்கித்திரியு மிவர்க்கு லோகோபகாரஞ்செ
ய்யச் சிறிதும் சமயம் கிடைப்பதரி தென்றும் தன்மத
ப்பற்றுச் சிறிதுமிவர்க் கில்லை என்றும் பிறமதத்தில்
பிரவேசிப்பவரே என்றும் பெண்டு பிள்ளைகளிடமு
ள்ள அன்பால் மட்டில் இவர் மதவிசுவாசிபோல் நடிக்
கின்றாரென்றும் அளவின்றிக்குடிக்கின்றாரென்றும்,
திட்டமின்றித் தின்கின்றாரென்றும், இவ்விதப் பெருங்கு
ற்ற மிவரிடமிருக்க அதை மடாதிபதிகள் சிறிதும் கவனி
ப்பதில்லை என்றும், அவர் சுதேசபண்டிதர்களை ஆதரிப்
பதில்லையென்றும் அவர்கள் இவ்வுலகத்துக் குண்டான பெ
ருங்கேட்டைச் சிறிது மறியாரென்றும், அவர்களுக்குச்
சேரிடம் பணம் பறிக்கும் வித்தை போன்றேயன்றி
ஏனைய வித்தை வேண்டியதில்லை"என்றும் மற்றும் நம்
மவர் முகத்தாற்றானே வெளிவரப்பமேகேட்டு மகிழ்கி
ன்றோமல்லவா? அவைகளில் சொற்பகாலமாயினும்
நமது பத்திரிகை வெளிவந்து "லோகா னந்தம்" "ஜ்ஞா
னவாணீவிலாசம்" முதலிய பத்திரிகைகளைப்போல மி
ன்னொளிபோல் ஒழியாது சுதேசபாஷா பத்திரிகைகளும்
முன்வருமென்றும், அதை நடாத்துபவர் இங்குண்டெ
ன்றும், வடமொழியில் வசனநடையும் எழுதப்படுகின்ற
பத்திரிகைகள்பலவும் பலவுண்டென்றும், உள்மதங்களைப்பற்
றுத பொது விஷயங்களையே கூறியதைக் கூறுது ஐந்து
வருடங்களாக வெடுத்தோதி அதனுல் அவ்விஷயங்களும்
நமக்குப் பல வுண்டெனவும் உலகத்தார்க்குண்மை விள
க்கு மதிகாரம் ஆரியர்க்கே என ஆரணங்கள் கூறுதென்
றும், பத்திரிகையை ஆதரிக்கும்புண்ணியவான்களித்தேச
த்தில பலருண்டென்றும, அதன் பயனையறிந்தவர் பல
ரென்றும், நீதி மதாசார வர்ணாசிரம தர்மங்களைப்பற்றிய
நன்னூல்கள் பல நம் தேசத்தி லுண்டென்றும் அனேக
நூல்களை அறிஞர்கள் புதியதுபோல் இப்பொழுதும்அறி
க்கா ரென்றும், உள்மத வேற்றுமைகளைப் பற்றிய சண்
டைகளை ஒருவாறொழித்துப் பெரியோர்களும் லோ
கோபகாரத்திற்கென பலர் முன்வந்தாரென்றும், நமது
ஆசாரங்களில் இம்மைப் பயன்கள் பலவுளவென்றும் புற
மதப் படுகுழியில் வீழ்தல் பெரும் வழுவென்றும், மனி
தன் மறுமையைப் பற்றிச் சிந்தையைச் சிறிதேனும்வை
த்த லின்றியமையாதெனவும், குடிமுதலியன கூடா
தென்றும், எல்லோரு மறிய எடுத்துக்கூறிப் பலவிடங்
களில் பயன்பட்டுவின்றதுமன்றி மடாதிபதிகள் நமது
தூக்கத்தைச்சிறிது துறக்கவும், அவர் நம் அறிஞர்

[illegible]

[illegible]

தூக்கத்தைக்] கிழித்து — துறக்கவும், — அவர்கள் அறிஞர்களை ஆதரிக்கவும் கம்மாரியர்களுள் அநாரிய சம்மந்தத்தை விலக்கவும் உலகத்தில் வந்திருக்கும் கேடு இன்னதென அறியவும், நாஸ்திக முதலிய புறமதங்களைத் தலையெடுக்காது அகற்றவும், சன்மதங்களை நாட்டவும் சதாசாரங்களையும் பரமபதியையும் இடைவிடாது ஏற்றுவதுமே நமது தொழிலெனத் தெரியவும் ஓர் புறஞ்செய்து வருவதால், இந்த லோக நாயகர்களின் கடவாய் நிலவிடங்களில் தைக்கப்பட்டதென்றறிக. இப்பொழுது இப்பத்திரிகை பெரியமடாதிபர்கள் ஓர் புறம் ஆசிகள் கூர்ந்தாதரிக்க, மற்றோர் புறம் மன்னவர் மானிக்க வெகு உல்லாசத்துடன் பெருமகிழ்ச்சியோடுடல் பூரித்து பூர்ணிமை அமை நிலைகளில் வெளிவந்து புண்ணிய புருடர்கள் பார்வையிலுலாவச் சங்கற்பத்திருத்தலால் இனி நமது பத்திரிகாசன்பர்கள் நமது இறைகைத் திட்டலாம். எங்கும் நமதுடன்மையைப் புகட்டலாம். புறமதங்களை ஓட்டலாம். சன்மதத்தை நாட்டலாம். எமக்கும் ஓர் பெரு மகிழ்ச்சி உண்டானமையால் இவ்வருடம் நமது பத்திரிகைக்கு ஓர் வேத விருத்தம் செய்து முடித்தோம். அதாவது:— எமனென்னும் ஓர் மாமுனி எழுதிய ஸ்மிருதியில் “முற்கற்பங்களில் பெண்களுக்கும் மௌஞ்சி உண்”டென ப்ரம்மவாதினி என்னும் ஓர்வகைப் பெண்களுக்கு உபநயனமென்னுமோர் சடங்கு விதிவழுவாது நடத்த விதித்திருத்தலால், அந்தணர்க்கு ஆறு வயது பூர்ணமானபின் அச்சடங்கு செய்யவேண்டியது முறையாயினும் அறிவு மிகுந்தவிடம் ஐந்தாம் வயது தொட்டே அச்சடங்கு செய்து முடிக்கலாமென ஆசாரியர் போதாயன மாமுனிவர் கூறியதுபற்றி இவ்வாண்டிற்றானே இக்கன்னிகைக்குபயனஞ்செய்யத் துணிந்தோம். இச்சடங்குக்கு ஓர் பிதாசாரியன் அவசியமாதலின், இவ்விஷயத்தில் அவ்யாஜக் கருணையால் லோகாசாரிய பதவி பெற்றவரும் வடமொழிக்கடல் கடந்தவரும் வழுக்களை பொழித்து நல்லொழுக்கங் கைக்கொண்டு நாதனூர் திருவடிகளை இடைவிடாதுபோற்றுமியல்பினராய ஸ்ரீ. ஸ்ரீகேசிராஜ ராஜகுரு பூமண்டலாசிரிய ஸ்ரீமகாஸ்வாமி சந்நிதானம் பேரன்புடன் நமது ப்ரம்மவித்தைக்கு ஆசிகள் கூறி அநுக்கிரகஞ்செய்தார்கள். இங்ஙனம் நமது ப்ரம்மவித்தையின் உபநயன மகோற்சவம் ஆசிரியர் கிருபையில் அபாரபூர்த்தி பெற்றதாயினும் அவ்வளவு நலமுங்களை இடைவிடாது ஆசிக்க ஓர் நல்லரசர் ஆதரவுவேண்டு மாதலின் குபேரனைக் குபேரனுக்கும் [குபேரன் = மற்றவர்களைக் கூடாத திருவுருவம் பெற்றவன்] இயல்பினரும், ஸ்ரீமத்

Koviloor Digital Library

[illegible]

னும் மற்றவர்க்கெக்காலமும் அடைவதற்கு அரிதான திவ்விய லோகபதிபட்டபத்திர மகாமகோதயனான ஸ்ரீபாஸ்கர மன்னவன் மணிகல்லாசிரியன் அடிவணங்கி அவர் திருமுக விலாசம் தம்முகத்திற்பட உபாயனம் பெற்ற நமது ப்ரம்மவித்தையின் முழுபோக க்ஷேமத்தையும் வகிக்க முன்வந்து நின்றார். இனி உபயனம் பெற்றவர் அன்று தொடங்கி ஸாவித்திரியை [சூரியனை ச்சார்ந்த பாஸ்கரனது பொருளை என்பதும் உட்கருத்து) இடைவிடாது போற்றுவதும், பாஸ்கரனை வழிபடுவதும் இயல்பேயன்றோ? அப்பாஸ்கர மண்டலத்திற்குள்ளே (திருராமேசுவரத்தில் அல்லது போர்க்களத்தில் அர்க்கபகவானது மண்டலத்தில்—மண்டலமென்பது ராஜ்யமெனவும் பொருள்படும்] கோதண்டதீக்ஷாவெனப் பெயர் தாங்கிய சக்கிரவர்த்தித் திருமகளும் வழிபட்டதாக ஸ்ரீவால்மீகி மகரிஷி கூறி நிற்கின்றார். இனி இப்பத்திரிகை எவ்வித இடையூறுமின்றி நீடூழி நிலைபெறவேண்டுமென ஆசிகூறுவதும் லோகாசாரியர் மகாசந்நிதானத்திருவருள் பெற்ற இப்பத்திரிகைக்குக் "கூறியது கூறல் அல்லது பயனற்று நிற்றல்" என்னுங் குற்றத்திற் கிடமாமென அன்னவம் கூறுதொழிந்தோம். ஆயினும் யாம்வேண்டுவது ஒன்றுண்டு. இளமைப் பருவம் கடந்து உலக வாழ்க்கையின் இயலறிந்த மடாதிபதிகள் இப்பத்திரிகையை ஆதரித்து ஒவ்வொரு கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் நாலுபிரமென வாங்கி இறைத்து தத்தம் சீடர்களெல்லோரும் இப்பத்திரிகையைக் கண்கேளித்து தம் சீடர்களெல்லோரும் உண்மையை யறிந்துய்யச்செய்வாரென்றும், இவர் நாறல்லது அதற்குமேல் சில சஞ்சிகைகளை வாங்கி வெளியிடுவதால் இவர்க்கு ஓர்சமயம் வருடத்திற்கு 100. வராகனுக்குமேல் செலவழிந்த போதிலும் இவர்க்குச் செலவழிந்த தெவ்வளவு, இவர் பெற்ற புகழ் எவ்வளவு என்பதையு மாலோசிப்பாராக. அங்ஙனமே அரசர்களும் சமுற்கூறிப் போந்த முடிமன்னவரைப்போல் முந்தி நமது பிரமவித்தையை ஆதரிக்காவிடினும் நாறு ஐம்பதாவது வாங்கிக் கொடுத்து என் நமது ராச்சியத்தில வசிக்கும் ஆசிரதரை உண்மையையறிந்து உய்யச் செய்யலாகாது? இனமதிலும் எம்பிரான் திருவருளால் இப்பத்திரிகை இவ்வைந்து வருடங்களி லடைந்த பெருமையினும் மெம்மேலும் பெருமைபெற்று அனேக நாற்றாண்டு வாழப் பல பண்டிதரும் பல அரசர்களும் பல ஆசிரியர்களும் ஆதரிக்கப்பதம் பெறுவார்களென்றும் இது தொடங்கி பல பண்டிதர்களும் தத்தமயிப் பிராயங்களைப் பத்திரிகையில் வெளியிடுவார்களென்று அன்னவம் அகண்ட சச்சிதானந்த அம்பலத்தரசன் அருள் புரிவானென முற்றிலும் சன்று.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மந்திரங்கள்

முன்தொடர்ப்பு.

ஐயா, முன் மந்திரங்களைச் சொல்லுமிடத்து யோகத்தின் அங்கமாகிய ஆசனத்தைப் பற்றி ஒருவாறு குறித்திருக்கின்றோமல்லவா? அவ்வழி கொண்டு யோகத்தையும் ஈண்டெடுத்து விரிப்பாம்.

யோகமென்பது மற்றெவ்வுட்டவருமறியாததும் என்றெட்டுப் பேரணியாக விளங்கிய மகரிஷிகளால் மெய்த்தன்மையையறிந்து கண்டுபிடிக்கப்பட்டதுமான வோர் நூல். இதனால் அதிக அற்பம்போல் தோன்று மானுட சரீரத்தின் பெருமை விளங்கும். இம்மானுட சரீரம் அநித்ய காலத்திலொழியுந் தன்மையுளதென்றும் தோலும் எலும்பும்பதிந்த கூடென்றும், ஆன்மாவுக்கு எட்டுணையும் பயனில்லை என்றும் சிற்சில பாமரர் கூறுவர். யோகத்தைச் சிறிது ஒற்று நோக்கின், அங்கு அற்புதங்கள் பல வெளியாகும். மிகவும் சரீரத்தைக்கொண்டே நீடிய ஆயுள் பெறவும், பற்பல பொருள்களை யறியவும், பல லோக விருத்தாந்தங்களைத் தெரிந்து கொள்ளவும், அநேக அணிமாதி சித்திகளைப் பெறவும், மனதிற்குறியதைக் கட்டி முடிக்கவும், இச்சரீர மிருக்கையிற்றானே பிறிதொரு சரீரத்திற் புகுந்து அதை நடாத்தவும் இதைப்போன்ற பற்பல சரீரங்களைப் பல இடங்களில் ஒரே சமயத்தில் அதிட்டித்து ஆட்டவும், மறுவுலகங்களுக்குச் சென்று திரும்பவும், சூரியன் முதலிய ஒளிகளை ஒருவாறு நிறுத்தவும், காலம் சேர்க்குழி கடவுளுக்கேற்ற தொழிலைப் படைத்தலைக் கைக்கொள்ளவுங் கூடும். மேற்கூறிப்போந்த பலவற்புதங்களும் இந்த யோகசாத்திரத்தைக்கற்றுணர்ந்தன்றி முடியாது. யோகாநுஷ்டானத்தால் மனம் ஒருவழிப்பட்டு நிற்றலால், எல்லாச்சித்திகளும் கைகூடுகின்றன. அவ்விதம் யோகி வேதாந்த விசாரம் செய்யப்புகுவானேல் அப்பொருள்கள் அவன் மன

Koviloor Digital Library

[illegible]

லைதஎக்காலும் விட்டு நீங்கா. ஆதலால் யோகத்தை யதிதல் மனதைச் சுத்திசெய்யும் பொருட்டே. ஒவ்வொரு தேசத்தவரும் ஏதோ சில சில தத்துவங்களைக் கண்டதாகப்புத்தகங்களிலெழுதி வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆயினும் எவரும் யோக விஷயத்தைக் கண்டெழுதித் தெழுதினாரில்லை. எத்தேசத்திலும் எப்பண்டிதனும் ஆரியர் தவிர மற்றவரால் யோகத்தைப்பற்றிப் புத்தகமெழுதினவனில்லை. நம் தேயத்தில் ஞானநூல்கள் பலவுளவென்பது எல்லோரு மறிந்திருக்கலாம். நமக்கு எவ்வித சாஸ்திரங் களிருப்பினும், ஆரியர்களிடம் பிறந்து அவர்களிடமே வளர்ந்து அவர்களுக்கேற்ற பயனைக்கொடுத்து ஆசாரியர் வேஷம் பாஷை யண்டி முதலியவைகளைக் கண்டவுடன் ஓட்டம்பிடிக்கும் யோக சாஸ்திரத்தைப்போன்ற உற்ற தோழன் நமக்கு எவனுளன்! இப்பெருநூல் நம்முதறிஞரால் வழிமாறாது கற்கப்பட்டதும் கையாடப் பட்டதும் சிட்டுக் குபதேசிக்கப்பட்டதுமெங்க. இக்காலத்தும் சிலவிடம் அதைக் காப்பதுண்டு; சிலவிடமனுட்டிப்பதுண்டு; சிலவிட முபதேசிப் பதுண்டு சிலவிடம் பயன்படுவது முண்டு. இவ்வருமையான யோகநூல் வேறோர் தேசத்திலிருந்தாவதல்லது வேறு எந்த பாஷையிலிருந்து மெடுக்கப் பட்டது மல்ல; மேற்றிசையார் ஈடேறும் புதிய வெந்திரத்தைக் கொண்டு அவைகளை விருத்தி செய்து வருவதுபோல் உள் நோக்கால்உண்மை அறிந்து இச்சரீரத்தின் நிலைமைகளுக்கேற்ற பலவற்புதங்களைப் பயக்குமின்னூலை அம்முதறிஞரே கண்டெழுதினர். இச்சாத்திரத்தைப் படித்த பல மேற்றிசைப்புலவரும் வியப் படைகின்றார்களென்பதில் ஆச்சரியமென்னை! மற்றவர் பாஷைகளில் இந்நூலின் பெயரே அகப்படுவதிலலை. ஆதலால் அவர்கள் இதே விகுதி ஒழித்து "யோக" எனச்சொல்லிவருகிறார்கள். இனிப்பிறர்பாஷைப் பேராசை கொண்ட சிலர் அவருடையே சொல்லையேஇவரெடுத்து வேற்றுமை காட்டி ஆரியர்கள் வழங்குகிறார்களெனச் சாற்றுவரேல், அவர்களை "இதன்பகுதி எது? விகுதியாது? அவற்றின் பொருளென்னை! அதன்வழி என்னை? ஏனைய சொற்களுண்டா? உமது பாஷையில் இச்சொற்கு முன் வழக்குண்டா? " என்பதாதி வழக்குகளைத் தொடுத்து வாயையடக்கி விடுவோம். எமக்குள்ள முதநூலாய முதல்வன் திருவாக்கே ஞானம், கன்மம், யோகம், இம்மூன்றையும் பற்றிப் பலவிடம் எடுத்துப்புகழ்கின்றது. இந்த யோகம் முக்கியமாய் மனதாலும், ஆரோக்கியம் பெற்ற சரீரத்தாலும், நல்லுண்டியாலும் நன்னீராலும் மற்றும் காற்று முதலிய நல்வியற்பொருளாலு முற்றுப்பெறும். இவற்றுள் தேகவேற்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

முறைகளுண்டாயினும் பொதுவாக "யோக மென்பது மனதையோர் வழிப்படுத்த"லென யோகநூல் முதலாசிரியராய ஸ்ரீ ஆசிரியர்பதஞ்சலியார் உரை செய்தார். அதற்கு வார்த்திகமெழுதிய வரும் யோக கீதையை யருளிய வருமான ஸ்ரீ யாக்ஞவல்கியர் "ஜீவனும் பரனும் சேருதலே யோக"மென யோகப் பதப்பொருளுரைத்தார். இஃதன்றி சிலர் கடவுள் வழிபாடே யோகமெனவும் கூறுவாராயினர். இவைகளுள் தனித்த யோகப் பதம் பொருளைப்பற்றி எழுதுவாம். இன்னும் வரும்.

ஆரியாசார ரகசியம்

விடயத்தால படலம்.

புண்டரத்தரித்தல்.

ஐயா, புண்டரத்தைப்பற்றியறியவேண்டியதுமுறை. இத்தேசத்தில் இஃது இருவகை யுடைத்து. சிலர் குறுக்கிடுவர், சிலர் நெடுக்கிடுவர். இதில் முன்சொல்லியது ஒரே வழிபாடாயிருக்கும். பின்சொல்லியது பலவிதம். இவ்விதம் இரண்டு. புண்டரங்களும் கன்மங்களுக்கங்கம். பெரும்பான்மையில் எவ்வித கன்மங்களும் அப்புண்டரங்களில்லாவிடம் கூறிய பயனைப் பயக்கா. அதற்குக் காரணம் பின்னெடுத் துரைப்பாம். அவரவர் தத்தம் வழிபடு கடவுளரது திருச்சின்னத்தைத்தாம் தரிக்கவேண்டு மென்னும் நியாயம் கொண்டு பரமசிவ மூர்த்தியை வழிபடு மியல்பினர் திருநீற்றையும் கமலக்கண்ணனுர் கழலினை யடைந்தோர் திருமண்காப்பையும், கோபிசந்தனத்தையும் செஞ்சந்தன முதலிய பல பொருள்களையும் உபயோகிக்கின்றனர். அவற்றுள் சைவர் கொண்ட திருநீற்றுக்காப்பு உள்வேற்றுமையற்று ஓர் வழி நின்றதாதலின், அதன்பெருமையை முன்னா விளக்கிப் பின் மற்றைய புண்டரங்களைப் பற்றிச்சொல்வாம்.

திருநீற்றுக்காப்பு, திரிபுண்டரம் என வொக்கும். திருநீற்றுக்காப் பென்பது நீற்றாலமைந்த புண்டரமாதலின், திரிபுண்டர. மென்பதுமூன்றுகோடு வாயமைந்தது.

திரிபுண்டர மென்பது குறுக்கிடுவதால் இதுவே தங்களில் எட்டுவிடங்களால் விதிக்கப்பட்டது. பல தர்மசாஸ்திரங்களிலும் இதைப்பற்றி விபந்து பேசப்பட்டுள்ளது! இம்மூன்று ரேகைகளை இட்டுக்கொள்வதும் அத்திருநீற்றை புண்டரக்குவதும் இன்னகருத்தைக்கொண்டதென விரிவாய் உபநிடதங்கள் கூறுகின்றன அதன் சுருக்கம் யாதெனில்:—பசுபதியினது பொருளாகல்

[illegible]

அச்சிவாக்கினியில் பசுக்களின் மலத்தை வாட்டி அதினால் நிர்மலத் தூய்மை பெற்று மூன்றாக நின்ற உலகப்பொருளைந்தும் ஒழித்து அநிதப் பழம்பொருளை யடைவதே மக்களுக்கு மாண் பென்பது. குணங்களில் தமஸ் என்பதாரஜஸ்ஸிலும், ரஜஸ் ஸத்துவத்திலடங்குமென்னுமுறையும் இதிலடங்கி யிருக்கின்றது. இம்முறைகளை யெல்லாம் ஜாபாலோபநிஷதம் வியக்தமாய் ஓதியதையறிக. ஆக்களின் மலம் அக்கினியிலிட அதுவே நீருகிறது. அதில் கர்மத பத்திரை முதலிய பலபசுஜாதிகளுண்டு. அவை மலமுதலிய வற்றையுட்கொள்ளாது நல்ல புல்லுகளையுட்கொள்ளும் சில முன்னன.

ஜீவர்களிடமமைந்த மலம்அநாதி மலத்தைவெளியில் இப்பசுக்களின் மலமாக வுருவகப்படுத்தி அவைகளைப்பரமேசாக்கினியிடம் விட்டு தகித்தால் அதனிட மமைந்தகருமைநிறம் நீங்கி அக்கினியுடன் கூடியகாலத்து செந்நிறந்தோன்றி இறுதியில் வெண்மை நிறம் தோன்றுகிறது. பசுக்களிடமமைந்த அநாதி மலம் கண்ணுதலார் கருணையின்றி ஒழியாதென்றும் அவனுற்றான் அது எரிக்கப்படுமென்றும் ஆன்றோர் கருதியது.

அது சுட்டபிறகு தூய்மையே மிகுதியாமென்பதுவெண்ணிறத்திருநீறிடவேண்டுமென்பதின் கருத்து. அம்மலம் ஆக்களின்சரீரத்தில் ரோசனம் என்னும்பித்தத்தால் பரிபாகமடைந்த நற்புல்லுகளின் விகாரமாதலால் பால் நெய் முதலிய உலோகோபகார பல பொருள்கள் நிகழும் சரீரத்தினின்று வெளிப்பட்டு போற்றல் பெற்று நிற்கின்றது. ஆதலால் மூன்று தினங்களுக்கு முன்னரே ஆக்களை நற்புல்லூட்டி வளர்த்து மூன்றாந்தினத்திற்குப்பிறகு அவ்வாக்களின் மலத்தைப்பூமியில் விழுமுன் வெள்ளி முதலிய லோகபாத்திரங்களில் ஏந்திவைக்கவேண்டும். பூமியில் விழ்ந்தால் அதிலுள்ள போற்றல்பூமியின் மண்ணால் இயக்கப்படுமென்றறிக. ஓர் சமயம் கை தவறி கீழேவிழுந்தால் கீழே விழுந்ததைத் தள்ளி மேல்பாகத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். அதிலே பால் தயிர் நெய் கோமூத்திரம் இவைகளையும் கலக்க வேண்டும். பால் தயிர் நெய் இவற்றின் குணம் எல்லோருமறிந்ததாயினும் கோ மூத்திரத்தின் குணத்தை வைத்தியத்திற்றான் காணலாம். அது காச்சின எறும்பைத் துளைக்கும் அதின்துல ரோகத்தையு மபகரிக்கும். அவ்விதம் உருட்டின உண்டைகளை அக்கினியில் பரமேசுரனைப்பாவித்து அக்கினியிட்டுக்கொளுத்த வேண்டும். அந்த நெருப்பில் பதரையிடவேண்டுமேயன்றி உமியேனும் நெல்லேனு மிடக்கூடாது. அதனுட்கருத்தியாதெனில்

Koviloor Digital Library

[illegible]

பற்பல ஜன்மங்களையும் பலதுன்பங்களையு மனுபவித்து அதில் ஒழிவுண்டாகி சத்குரு கிருபையால் நல்லறிவு பெற்றும், பிராரப்த விசேஷத்தால் ஓர்சரீரமெடுத்துமறு பிறப்பில்லா நிலைமையில் சரமஜன்மம் பெற்றவர் அப்ப ரமசிவ பேரொளியிற்கலந்து மகா பன்மயோகம் பெறுவா ராதலின், அதைக்குறிக்க நெல்லுடன் கலந்து பிறந்தும் மீண்டுமுளையா நிலைமையில் நிற்கும் பதரையே நெருப்பி லிடுவது. அதினின்றெடுத்த திருநீற்றை தலைமுதலிய விடங்களில் தரிக்கவேண்டும். ஜாக்கிரம் சொப்பனம் சுஷுப்தி என்னும் மூன்றவத்தைகளும் ஆன்மாக்களு க்குண்டாகுமென தாபசீயோபநிடதங்கூறுகின்றது. கொ ப்புள், மார்பு கண்டம், நெற்றி ஆகிய இவை மூக்கியஸ் தானங்கள். மற்றோர் சுருதியில் தலை, மார்பு, நெற்றி, கழுத்தென ரென்குவிடங்கள் கூறப்பட்டன. ஆயினும் ஸ்மிருதிகளும் புராணங்களும் சந்திகளையும் கொப்புள் முதலிய விடங்களையுங் குறித்தமையால் அங்கு விபூதியி டல் குற்றமாகாது. இனிச்சந்திகளிற் சுபர்தங்களிற்றலால் திருநீற்றின் வலுமை அங்கு அதிகம் உட்செல்லுமென்ப து பௌராணிகர் கூற்று. இனிச்சரீரத்துள்ள மயிர்க்கால் வழி மலங்கள் வெளிவருவது இயல்பாதலின், அங்கு திருநீற்றைப் பூசவேண்டும். இந்த ஹோமங்களுக்கு உப யோகமாகு மந்திரங்களுக்கு விரஜாமந்திரமெனப் பெயர். அம்மந்திரங்கள் பாவத்தை யொழித்துப் பரிவைத்துடன் கலக்கும் வழிகளைக் குறிக்கின்றன. இனி இவ்விதியறி ந்த எவர்க்கும் திருநீற்றைக்கண்டவுடன் அம்மந்திரப்பொ ருள் மனதிற்படுமே. இனி அதை மூன்று கோடுகளாக எழுதுவது, உலகம் பலவழியில் முப்பொருளாப் பகுக்கப் பட்டதெனவும், அதையறிவதுவீண்டா தத்தாலெனவு ங்குறிக்கவே. அம்முப்பொருள்கள் எவையெனில், சுருதி களிற்கூறியவற்றைச் சுருக்கிக்காட்டுவோம். ஜடம், ஜீவன், பரன். மும்மூர்த்திகள் முக்குணங்கள், மூன்றவத்தை கள்: விசுவன், தைஜஸன் ராஜஸன் என்று அவ்வவத் தாபிமானிகள். ஞாயிறு திங்கள் அக்கினி எனுமூன் றொளிகள். பிரணவத்தின் மும்மாத்திரைகள், ஆணவம் கார்மணம் மாயேயம் என்னும் மும்மலங்கள். மூன்று வியாகிருதிகள். மூன்றக்கினிகள். மூன்று வேதங்கள். போ க்தா, போக்யம், ப்ரேரிதா என மூன்றறியப் படுபொருள் கள். வித்தை அவித்தை ஸவித்என்னுப மூன்றறிவு ன் உத்தமன், மத்தியமன், அதமன் என்னுமூன்றதிகாரிகள். மிருது மத்தியம் தீவ்ரம் என மூன்றுபாகங்கள். இச்சை, ஞானம், கிரியை என்று மூன்று சக்திகள். காயத்திரி யின் பாதங்கள் மூன்று அடிநெடுமுடி எனவிடங்கள்மூன்று. சென்றது நிகழ்வது வருவது எனக்காலமூன்று. நாலம்

Koviloor Digital Library

[illegible]

குக்குமர் புகாரணமெனச் சரிரமூன்று. இனிச் சுருக்கி லைப்பின் மூன்றிலடங்காப் பொருளொன்றுமில்லை. ஆதலாற்றான் பன்மையேமூன்றைக்குறிக்குமெனவடநூலாசிரியர் சாற்றுகின்றார். இம்மூன்றென்னும் எண்ணை எம்மவர் மட்டிற் கனப்படுத்தினரில்லை. தேசாந்தரங்களிலும் இம்மூன்றென்னுமெண் வெகு பிரசித்தமாக வழங்கப்பட்டுவருகின்றது. ஆயின் இத்திருபுண்டரத்திற்கு இவ்வெண் அமைந்ததே ஒரு பெருக்கம் எனக்கொள்க. தாபத்திரயமென்னுமிடத்திலும் இவ்வெண்ணிருக்குமே எனின், அதைபொழிக்கும் கன்மத்திரயம், சமனத்திரயம் அதே எண்ணிருத்தலால் அவ்வெண்குற்றங்களையும் குணப்படுத்துந் தன்மையதே என அதன் பெருமையில் ஓர் சிறுபான்மையைக் கூறினுமென்க. இனி வேறு புண்டரங்களைக் கொண்டவர்களும் தமது புண்டரத்தையும் திருபுண்டரமெனனும் வழக்கத்தை "திருபுண்டரத்தைத் திருநீற்றாலமைக்கவேண்டு" மென்னும்வேதவாக்கியமறுக்கின்றதாயினும் அவ்வெண்ணின் பெருமை பசுமரத்தாணிபோல் காட்டப்பட்டதென்க. இனித் திருநீற்றிற்கு ஆறுபெயர்களுண்டு. அவற்றைப் பின் எடுத்தோதுவாம்.

வரும்.

கடிதம்

கடிதகர்த்தர்கள் அபிப்பிராயங்கள் பத்திராசிரியரைச் சாரமாட்டா.

இந்தியாவிலுள்ள ஆரியமகா ஜனங்கள்பலருக்கும்அன்புள்ள

விஞ்ஞாபனம்

ஆரியசிரோமணிகாள்! அடியில் வரும விஷயங்களை முற்றும் சிந்தித்துத் தங்களபிப்பிராயங்களை வெளியிடுவீர்களாக. தற்காலம் இவ்வருஷமாய்கம் தேயத்தில் பெண் பிரஜைகள் அதிகமாய் மலிந்துவருகின்றன. கலிகாலம் முற்றிவருமபோது உலகில் நேரும் உற்பாதம் பலவற்றுள் பெண்கள் மலிவதும் ஒன்றென நமது தீர்க்கதரிசிகளாகிய வாதராயணர் முதலிய பெரியோர் மாபாரதம் முதலிய உண்மைநூல்களில கூறிவைத்ததைச் சிந்திக்குங்கால் அப்பெரியோர் திருவாக்கு எத்துணை ஆற்றலுள்ளதென்பது விளங்கும். சமீபத்திலெடுத்த ஜனக்கணிதத்தின்படி கல்கத்தாவின் ஜனத்தொகை ஸ்திரீகள் 440746 புருஷர்கள் 234,814 ஆக 681560. இதில்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

புருஷுனக்காட்டிலும் பெண்கள் தொகை ஏறக்குறைய இரட்டிப்பாகின்றது. ஒவ்வொரு ராஜதானிகளிலும் பெண்களே அதிகம். இதைச் சிந்திக்கும்போது இன்னும் பிற்காலத்தில் இவ்வுலகம் எவ்வாறாகுமோவென்று எமதுள்ளம் நடுங்குகின்றது. இதுநிற்க. இவ்விபரீதமாகிய பெருநெருப்புக்கு அநுகூலமாகிய பெருங்காற்றும் அங்கங்கே வீசுகின்றன. அவற்றுள் பழங்காற்றுகள் சிலபுதுக்காற்றுசில. பழங்காற்றுள ஆரியராகிய நம்மவர் ஒவ்வொரு வருணங்களிலும்பலஉள்வேற்றுமைகள் வைத்துக்கொண்டு ஒருவருக்கொருவர் விவாகாதிகளில் சம்பந்தமின்றி நிற்பதே. இவ்வுள்வேற்றுமைகளால் இதுவரையில் யாதொரு பெருங்கெடுதிகளும் நேரவில்லை யென்றாலும் இனி அது நமது நாட்டிற்குப் பெருந்தீங்கு விளைவிக்கும்போல் தோற்றுகிறது. அதற்குத் திருஷ்டாந்தமாய் கிழ்த்த சம்பவமொன்றை அடியிற்கூறுகிறோம். கோயமுத்தூர் தாலுகா அக்கிரகார சாமக்குளம் கிராமத்தில் 15 பிராமணக் கிரகங்களிருக்கின்றன. அங்கு விவாகத்திற்குரிய ஆண்கள் (10) பேரிருக்கலாம். பெண்களோ (50) க்கு அதிகப்படும். இரண்டு ஏழைகள் அவ்வைந்து பெண்களைப் பெற்றூர்கள். பெண்கட்கு 12 வயதுக்குமேலாகியும் பெண் கேட்கவருவோர் ஒருவரையுங் காணமல் பெற்றோர் பரிதவித்தார்கள். இக்காலத்தில் அந்தணரில் பலரும் தரித்திரம் பிடித்தவர்களாகையால் செல்வர் வீட்டுப் பெண்களைக் கட்டினால் ஸ்ரீதனம்வகைரா கிடைக்குமென்கிற ஆசையால் தனவந்தர் முகத்தையே எதிர்பார்க்கிறூர்கள். தனவான்களோ தங்களுக்கொத்த தனவான்களின் சம்பந்தத்தை மதிப்பார்களன்றி ஏழைகள் வீட்டுப் பெண்களை அதிகமாய் விரும்புவதில்லை. இந்தத் தடுமாற்றத்தின் நடுவில் வடமன் பிரகசரணத்தான் என்பதாதி வீணன உட்பிரிவுகள் ஒருபக்கம் கழுத்தைக் கடிக்கின்றது. இத்தடையில்லாதிருந்தால் கொஞ்சம் சௌகரியமாகும். எப்படியெனில், ஷை சாமக்குளத்தில் வைணவர் ஒருவர் ஆதிசைவர் ஒருவர்தவிர 13 வீட்டுக்காரரும் ஸ்மார்த்தாகளே. இவர்கள் எழு பிரிவாய்ப் பிரிந்து ஒருவருக்கொருவர் கொள்ளல் கொடுத்தலின்றி ஒழுகுகிறூர்கள். இது என்ன அஞ்ஞானம்! இது எந்த வேதசாத்திரவிதி? இஃதென்ன மௌடீகமோ? இதற்கு விதி இவர்கள் தலைவிதியேயன்றி வேறு விதி யாமறியவில்லை. அவர்களைக்கேட்டால் அது வழக்கமென்று சொல்வார்கள். என்ன குருட்டுவழக்கமோ எமறியோம். கல்வியறிவில்லாத பேதைகளைத்திருப்புவதென்றால் சுலபசாத்தியமல்லவே? சந்நியாவந்தனத்தையும் விட்டுத்

[illegible]

தொலைத்துச் சாட்டு எதிர்கொண்டு உத்தியோகம் செய்வது இவர் பெரியோர் வழக்கமா! சோற்றுக்கடைமுதலியன வைத்து ஜீவிப்பதும் இவர் பெரியோர் கொண்ட வழக்கமா!

தாழ்ந்த ஜாதிகளையடைவதில் மட்டும் வழக்கம் அவசியமில்லைப்போலும். வினை உட்பிரிவுகளில் தான்வழக்கம் லயக்கென்று வந்து மென்னியைப் பிடித்துக்கொள்ளுகிறது. இது மிக்குமேற்கண்ட ஏழை யென்ன செய்வார் பாவம்! பெண்ணுக்கு வரையில் தேடிப்போய் தமது இனத்தில் ஓர் மாப்பிள்ளையைப் பிடித்து வந்தார். வந்தவரும் ஏழையாகையால் விவாகச் செலவுக்காகத் தாம் குடியிருக்கும் வீட்டைக் கொதுவை வைத்து விவாகம் நடத்தினர். ஒருபெண் விவாகத்திற்கே வீடு கொதுவையாயின் மற்ற நான்கு பெண்களுக்கும் எங்ஙனே விவாகம் நடக்கவேணுமோ, அதற்கு யாது கெதி? இந்தப்பரிதாபத்தைக்கேட்ட யாவர் மனந்தான் உருகாது? திருஷ்டாந்தத்திற்காக ஒன்று காட்டினேம். இப்படி யெத்தனையரிதாப நிலை நமது தேசத்திலுண் டென்பதை எண்ணிச் சொல்லவல்லார் யார்! ஏதோ கொஞ்சம் இங்கிலிஷ் கற்றறிந்து நல்லுழியிருந்தவாறு நூறு இருநூறு ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம்வாங்குகிற பிராமணர்கள்தான் வேறுதர்மத்தில் செலவிடாவிட்டாலும் தங்கள்பெண்களுக்காவது ஆயிரக்கணக்காய் கொடுக்கிறார்கள். அவர்கட்கு மாப்பிள்ளைகள் தேடவேண்டியதில்லை. அவர்களேழைகளின்கதியைச் சிந்திப்பதும் இல்லை. கொற்றுத்தவனை காட்டுவெளப்பத்தை அறியுமா? இந்த ஆபத்தானகாலத்தில் நம்மாரியருள்ளே குபேரசம்பத்துள்ள பெரியோர் ஏழைகளாகிய எங்களுக்கு ஏதாவது உதவிசெய்வார்களா என்று எதிர்பார்த்தோம். அதுகொறுவெட்டப்போய் பூதம்புறப்பட்டது. ஏழைகளாகிய எங்கள்தலையில்வேரோடு கல்லைப்போடுவதற்கே எங்கள்செல்வப்பிரபுக்கள் துணிந்துவிட்டார்கள். அதாவது விதவைகட்கும் இரண்டாவது விவாகம் செய்யப்புறப்பட்டதே; ஐயோ! இவர்கள்சீர்திருத்தம் செய்பவர்தரு இதுதானு! இவர்கட்கு ஐம்பது பெண்கள்பிறந்தாலும் அத்தனைக்கும் இரண்டாவது மூன்றாவது நான்காவது விவாகஞ்செய்து நிர்வகிக்கக் கூடிய ஆஸ்திபடைத்திருக்கிறார்கள். ஸாரிருக்ன இன்னறை மாப்பிள்ளைகளையும் இவர்கள் விதவைகட்காகக் கொள்ளையடித்துக்கொண்டால் எங்கள் ஏழைப் பெண்களுக்குக் கெதியென்ன! இனிநகனில் தள்ளிவிடுவதா! விவாகமில்லாமலே வைத்திருப்பதா! அல்லது பொட்டுக்கட்டித்தேவடியார்களாக்கிவிடுவதா! யாதுசெய்

[illegible]

லாது! விதவாவிவாகம் சாஸ்திரவிரோதமாயிருப்பது ஒன்றுமாத்திரமா! இப்படியெங்கள் தலைக்குப்பெருங்கல்லாக முடிந்திருக்கிறதே! இதைப்பற்றி சென்ற ப்ரம்மவித்யா பத்திரிகையில் "ஸ்ரீ திவான்பகதூர் ரெகுநாதராவ், அவர்கட்கு ஓர்கடிதம்எழுதியிருந்தேன். அதற்கிதுகாறும் யாதொருபதிலுங்காணவில்லையே! இவர்கள்சீர்திருத்தம் செய்வதுஉண்மையானல் மேற்சொன்ன ஆரியர்களின் வீண்உட்பிரிவுகளை நிவர்த்திக்க ஏன்முயலக்கூடாது? போலிவைதிகர்களும் பேதைகளும் செய்துவரும் முட்டுவிவாகம் குழந்தை விவாகங்களைத்தடுக்க ஏன்முயலக்கூடாது! ஊர்கடோறும் சீர்திருத்தவிஷயமாக சபைகளை ஏன் தாபிக்கக்கூடாது! நமது பண்டிதமணிகளைக்கொண்டு நமது வேதசாஸ்திர வுண்மைகளை ஏன் ஆராயக்கூடாது! இவைகளுக்காகக்கொஞ்சம் பணத்தான் ஏன்செலவுசெய்யக்கூடாது! இவர்களிப்படிமுயன்ருல் எந்தக்காரியந்தான் முடியாதது! இடம்பொருள் ஏவல் என்னும் மூன்றும் படைத்திருக்கிறர்களே! இப்படிச்செய்தால் இகத்தில்அழியாதகீர்த்தியும் மறுமைக்கு நற்கதியுங்கிடைக்குமே? அதைவிட்டு "கிடந்ததெல்லாங் கிடக்கட்டும் கிழவியையெடுத்துமணைமேல்வை" என்றுமுன்னடக்கவியாணம் செய்யவந்தாசீர்திருத்தம்!

ஐயா! திவான்பகதூர ரகுநாதராயரவர்களே! ஏழைகளாகியநாங்கள் தங்களுக்கு என்ன துரோகம்செய்தோம்! இங்கிலீஷ்கற்றவர்களும் அதிகாரம்பெற்றவர்களும் வேறு மதஸ்தர்களுமாத்திரம்தங்களுக்கு என்ன உபகாரம் செய்தார்கள். ஏழைகளாகியநாங்கள் ஏதாவது அபகாரஞ் செய்திருந்தாலுங்கூட அதைப்பொறுத்துக்கொண்டு பிரதியுபகாரமே செய்யவேண்டியது தங்கள்போன்றமேன்மக்களுக்குக் கடனுயிருக்க, ஒருஅபகாரஞ்செய்யாத எங்கள் தலையில் இன்னங் கல்லைப்போட்டு எங்கள்ஜாதி சமய ஆசாரங்களையும் தலைமாறச்செய்துநிராதுன்பத்துக்காளாக்கத் துணிவது தங்களுக்குத் தருமமா! பெரிய ஆடொன்று பள்ளத்தைத் தாண்டினுல் குட்டியாகேளும் ஒன்றின் பின்னொன்று தாண்டுவது போலும், பெரிய கோழிகுப்பையைப்பறித்தால் குஞ்சுகளும் சென்று பறிப்பதுபோலும், தங்களையொத்த பெரியோர் ஒருவழியிலிறங்கினுல் அதைப்பார்த்து மற்ற சாமானியரும் கூட இறங்குவது இவ்வுலக இயல்பல்லவா!. இப்படித்தாங்களும் தங்களைச் சேர்ந்தவரெல்லாரும் (தற்காலம் உத்தியோகத்திலிறங்கிய பிராமணரில் சமயவுணர்ச்சியில்லாத பலரும்) விதவாவிவாகஞ்செய்து கொண்டு பின் வருவதையும் சிந்தியாமல் [பசிக்கும் பனம் பழம் தின்ருல்

[illegible]

பித்தம் பட்டவாக்பில் பழமென்றது] மறுமைக்கு சேரும் கிராயத்துக்கும் அஞ்சாமல் எங்கள் தலையில் பெருங்கல் லேப்போட்டு (மூச்ச முறைப்பும் கொல்லாமல்) உயிரோ டுசித்திரவதை செய்தால் நாங்கள் யாது செய்வோம்சத் முத்திருவாய் மலா விர்களாக.

ஆரியசிகாமணிகாள்! மேலே குறித்த கூறிய விஷயங்களைச் சிந்தியுங்கள் இந்தப்பெரு வெள்ளத்தில் அமிழ்ந்திப்போகாமல் ஈமெல்லாம் தப்பி கொஞ்சகாலத்திற்கு ஆவது நம் வாணுளைக் கழிக்க வகையுண்டா வென்று யோசியுங்கள்! இக்கடிதத்தையும இதன் மேற்றங்கடங்களுக்குத் தோற்றுகிற அபிப்பிராயத்தையும் ஆரியாபிமானிகளாகிய பத்திராதிபர் பலரும் வெளியிடுங்கள்! கிருபசேர்கள் வெளிவாருங்கள்! இவ்வல்லல்கள் ஒருவாறு நீங்குமாறு வகை தேடுங்கள்! மூலைக்கு மூலை சபை கூடுங்கள்! சாதிசமயம் கெட்டாலும் கெடட்டும் சான் வயிறு வளர்ப்பதே போதுமென்று அவியாயமாய் பிரஷ்டர்களோடு சேர்ந்து அரிய ஜன்மத்தை வீணுக்காதீர்கள்! நமது ப்ரம்மவித்தியாவைப் போன்ற அரும்பத்திரிகைகளைப் பலருக்கும் வாசித்துக்காட்டி அறிவை மூட்டி அஞ்ஞானத்தை யோட்டி சபைகளைக்கூட்டி சமர்த்துகளை நீட்டி துராசாரங்களை வாட்டி கலியின் பிடையை விட்டி மேட்டான மேட்டியாய் வாழ நினையுங்கள்.

மற்றது பின்

சாமக்குளம் வெங்கடரமணதாஸ்

கோயமுத்தூர்.

தர்மசாஸ்திரம்.

ஐய, ஆஸ்திக மணிகாள் சற்றுச் செவிசாய்த்துக் கேண்மின்!

சற்றும் வேதத்தைப் படியாமலும், தர்மசாஸ்திரம் யாதொன்றையும் அறியாமலும், புராணங்களைப் பாராமலும், பெரியோர் ஆசாரங்களை எவ்விதத்தும் அநுஷ்டிக்காமலும், பண்டித கோஷ்டியில் பிரவேசியாமலும், அறகுறைய தர்மசாஸ்திர வசனங்களைக் கேட்டும் கேளாமலும் பண்டிதர்களென்று நடிக்கும் இக்காலத்திய சிலர் அருமையான தர்மசாஸ்திர விஷயங்களில் புகுந்து விவாதஞ்செய்வதும், தனக்குத் தோன்றியபடி அதனைமாறுபடப் பொருளுரைப்பதும், அவற்றுள் சிலவற்றை அ

[illegible]

யுடன் மாற்றுவதுமே தொழிலாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். அன்றி பெரியோர் மேலான ஆசாரக்கொள்கையையும் ஆபாஸப்படுத்துகிறார்கள்; அந்தோ! யாரை நொப்போம்! எந்த யுகத்தில் எத்தருமங்கள், எவ்வகுணங்கள் எவ்வண்ண மிருக்கின்றனவோ, அவைகளை யுகத்திற்குத்தக்கவாறு நிந்திக்கக்கூடாதென்று பராசரர் கூறியபடி மேற்கூறிப்போந்தவைகளை யாம் நிந்திக்கவந்தோமில்லை. பின் எடுத்தோதும் வினாக்களுக்கு விடைகளை வேதங்களை ஓதிய எந்த ஆஸ்திக சிரேஷ்டர்கள் விரும்புகிறார்களோ, அவர்களுக்கென தர்மசாஸ்திர விஷயங்களை விசாரிக்கப்புகுவாம். அவையாவன:—

தர்மசாஸ்திரமாவது என்னை? எவ்விதம் அது உண்டாயிற்று? அஃது பிரமாணந்தானா? வேதத்திற்கு ஒத்ததா? அல்லவா? வேதத்தைப்போலப் படிக்கவேண்டுமோ ஸ்மிருதிகள் எத்தனை? உபஸ்மிருதிகள் எவ்வளவு? அவைகளைச் செய்தவர்கள் யாவர்? கற்பசூத்திரங்களாவன எவை? எவ்விதம் ஸ்மிருதிகளுக்கும் சூத்திரங்களுக்கும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை? ஸ்மிருதிகளுக்கு விரோதம் நேரிடின் எவ்விதம் நிர்ணயஞ்செய்தல் என்பன.

மேற்கூறியவைகளுக்கு முறையே விடையளிப்பாம்:
(1) தர்மசாஸ்திரமாவது, தர்மத்தை வெளியிடுகிற நூலெனப்படும். அன்றித் தர்மத்தை அறிவிக்கும் வேதம், ஸ்மிருதி, சூத்திரம், புராணம், ஆகமம் என்றும் பொருள்படும். என்றாலும் யோகரூடத்தால் மனுஸ்மிருதிமுதலியவைகள் தான் அப்பெயரை வகிக்கின்றன. (2) தர்மமென்பது வாக்குக் கருமங்கள் இவைகளாலுண்டாகிய சுவர்க்க மோக்ஷங்களுக்குக் காரணமாயிருக்கின்ற அருவமயமான ஆத்மாவின் குணம். அது மநு கூறியபடி காமக்குரோதங்களை யொழித்த அறிஞர்களால் உள்ளன்புடன் யாண்டும் நடாத்தப்பட்ட ஆசார தர்மமென்றும், ஸ்ரௌத தர்மமென்றும், ஸ்மார்த்த தர்மமென்றும் மூவகைப்படும். இம்மூன்றினையும் அந்தணன் பயிலக்கடவன்.

இன்னும்வரும்.

Chidambaram:—Printed and published for the proprietor at the Brahvidya Press No 38 Senkallooneer pillar koil street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீ ஜகத் குருஸ்வாமிகள் நமது ப்ராம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீ முகத்தின் நகல்.

ஸ்ரீ

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதி பூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையை

ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீ ராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாசனர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஷேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

கரஸம்வத்ஸரம்,
துலாரவி உ௰உ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,

[illegible]

Koviloor Digital Library

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்:— கா[illegible] பங்குனிமீ 2௨

ப் ர ம் ம வி த் தி யா.

ஐயா, ப்ரம்மவித்தை என்னும் பெயருள்ள இப்பத்திரிகை சிறிது காலமாக நமது நண்பர்களுடைய போதரவின் பேரில் இத்தேசத்தில் நடைபெற்றுவருவதை இத்தென்னாட்டிலறியாதாரெவருமிலர். அவர்களுள் சிலர் வருணாச்சிரம தர்மசம்பந்தமாய் யாம் எழுதிவரும் பல விஷயங்களை இப்பத்திரிகைக்கு ஏற்றதெனவெனக்கொண்டு களிக்கின்றனர். மற்றுஞ்சிலர் இவைகள் நமது பத்திரிகைக்குச் சிறிதும் பொருத்தமற்ற விஷயமெனக் கருதுகின்றனர். அவர்களுள் இப்பத்திரிகைக்குப் பெயரிட்டவர் கொண்ட அச்சொல்லின் பொருளின்னதென்பது பிற்பகுதியார்க்குப் புலப்படாமையால் அதனுட்பொருளை அவர்களை நோக்கி எடுத்து விளக்க எமது இறகு சிறிது நடைபெறுகின்றது.

இப் ப்ரம்மவித்தை யென்னுஞ் சொல் வேதாந்தத்தின் சிறந்த பெயராய் வழங்கிவருகின்றது. "ஓ பகவானே! உயர்வுற்ற ப்ரம்மவித்தையை எனக்குபதேசித்தருள்வாயாக" "எதனால் அழிவற்ற உண்மைப்பொருளையறிவான். அப் ப்ரம்மவித்தையை உபதேசித்தருளினர்" என்பதாதி கைவல்யமுதலிய உபநிடதங்களில் ஓதப்படுதலாலுணர்க.

கன்மத்தால் நமது உள்ளம் தூய்மைபெற அதற்கு ப்ரம்மவித்தையின் அதிகாரம் நிலைபெறவேண்டித் தோன்றும் நான்கு சாதனங்களைப்பெற்றவனே ப்ரம்மவிசாரம் செய்யவேண்டுமெனத் தொல்லாசிரியர் வாதராயண முனிவர் உட்கருத்தென மூதுணர் ஆசிரியர் வெளியிட்டனர். மற்றுஞ்சிலர் கன்மவிசாரஞ்செய்து தெளிந்து பிறகு ப்ரம்மவிசாரஞ்செய்யவேண்டுமென அச்சொற்குரைசெய்தனர். இவ்விரு கொள்கைகளினும் கன்மமென்பது முற்றறிவைத் தோற்றுவித்து அதன் வழியாயினும் அல்லது முற்றறிவு உடனிகழ்ந்தாயினும் வீடுபயக்குமென முடிவதால் கன்மம் போதவேண்டும் இவ்விரண்டிற்கும் என்

[illegible]

லும் அறியாப் பெரும்பயந்த பொன்னுமென்பதுமின்னாம். அச்சம்பந்தங்களமைக்கக் குதலை நூன்காலகத்திருமியைமற்றகாரணவாக்கியங்களென்னும், பூரணவாக்கியங்கள், அக்கன்மஞான வாக்கியங்களிரண்டையும் ஒருவாறுதன் திருமேனியில்தொடுத்துடையுகின்றன. இவற்றுள் கன்மத்திலும் ஞானம் சிறந்ததென்பதுண்மையே. இனி காரணவஸ்துவானது முன்னிகழப் பின்னிகழ்வதே காரியமென்பது தருக்கநூற்றுணிபு. கன்மத்தால் உள்ளம் தூய்மைபெற அங்கு ஞானக்தோன்றக்கண்டோம். ஞானம கன்மத்தைப் பபக்கக்கண்டிலேம். ஆயின் ஞானம் கன்மத்திற்குக்காரணமாகாது. கன்மமே ஞானத்திற்குக் காரணமாம். காரியத்திற்குமுன்காரணத்தை எடுத்தோதலால் முன் கன்மகாண்டமும் பின் ஞானகாண்டமும் வேதங்களிலமைக்கப்பட்டதென்றறிக. காரியத்தில்காரணத்தின் தன்மைமுற்றும்மறையாதுதோன்றுமாதலின் ஞானகாண்டத்திலும் கன்மகாண்டத்தின் தொடர்பு சிறிதுண்டு. கன்மகாண்டத்தில் ஞானபாகஞ் சிறிதுமில்லை. வேதத்தின் கன்மகாண்டத்தை விரிக்கவெழுந்த மனுமுதலிய ஆன்றோருளிய திருவற நூல்களில் ஞானகாண்டசம்பந்த மதிகப்படாவிடினும், ஞானகாண்டப்பொருளை எடுத்துணர்த்த வெளிவந்த புராணங்களில் கன்மசம்பந்தமும் மிகுதியாகக் காணப்படுகிறது. "கன்மகாண்டத்தில் ஞானகாண்ட சம்பந்தஞ் சிறிதுமின்றேல் அஃது ஞானத்திற்குக்காரணமாவதெப்படி? காரியமான மரமுதலியவை காரணவித்திலுள் ளடங்கி நிற்றல்போல் இஞ்ஞானகாரணமாய கன்மத்திலும் ஞானம் உள்ளடங்கிநிற்றல்வேண்டுமே?" எனில், கூறுதும்:—

வித்திலுள்ளடங்கிய மரம் மேனோக்காப் புலப்படாது உற்று உள்நோக்கால் புலப்படு மரம்போல இக்கன்மகாண்டத்திலும் உட்புகுந்து ஆராய்ந்தால் ஞானகாண்ட அம்சங்கள் பல வெளியாகும். உதாரணமாக:— 'இவ்வுலகம் எவனிடம் ஒடுங்கினிறது; எவனிடம் தோன்றி விரிந்தது; எவனிடமொடுங்கும்!" என்றற்றொடக்கத்தின் பல வாக்கியங்களும் உலகப்பொருளெல்லாம் ஸ்ரீருத்திரமூர்த்தியினது திருமேனியேயென வெளியிடவெழுந்த ருத்திரவாக்கியங்களும் 'மூன்று அளவைகளாலே இவ்வுலகத்தை அச்சுதனளந்தான்; புருஷனின்றிப்பொருளில்லை' என்பனாதி சிலவிடங்களில ஞானகாண்ட அம்சம் உள்ளடங்கிநிற்கும். ஞானகாண்டத்தில் கன்மகாண்ட விஷயம் இடையிடையே தோன்றுவதுமிதமே. ஆயின் ஒன்றைவிட்டொன்று பிரியாது சங்கிலித்தொடராய் உடனிகழும் கன்மஞானங்களைப்பிரிக்க எயதுமையை எவ்வனவு?

[illegible]

இந்து ப்ராமணீதகை யென்றும் சொல்லால் யாம் கொண்ட பொருள் செம்பொருளாய் முற்றறிவும், ஆகு பொருளாய் அம்முற்றறிவுக்குச் சாதனங்களான கன்ம முதலியவைகளும், குறிப்பால் அதற்கு எதிர்மறையான மற்றையவைகளில் லாபமுங்கொள்ளற்பாலன. ஆகலின் அநேக நூதன பத்திரிகைகளுக்குப் பெயர் பொருட் பொருத்தம் சொற்பொருத்தமற்று நிற்பதுபோல நிற்காது இப்பத்திரிகை உங்களுக்குண்மையைப் போதிக்குமெனத் துணிக.

ஆரியாசார ரகசியம்

விடியற்காலபடலம்

புண்டரதாரணம்

தொடர்பு.

ஐய, திருநீற்றின் ஐந்து நாமங்களின் உண்மைப்பெயர்களை விளக்குவோமெனக்கூறினோமல்லவா! இவ்விஷயத்தில் ஜாபாலோப நிடதம "விபூதி, பஸ்மம், பஸிதம், க்ஷாரம், ரக்ஷை" என ஐந்து நாமங்களுண்டெனக் கூறுகிறது அவ்வுப நிடதம் இப்பெயர்களை மாத்திரம் கூறி யொழியாது அதன் காரணத்தையும் அச்சொற்பொருளையும் எடுத்து விளக்கியது. இதன் சுருக்கம்வருமாறு:— உலகத்தில் ஆநிரம் ஐவகையாம். அவற்றுள் கபிலை, கிருஷ்ணை, இரத்தை கபோதை, சித்திரை எனப் பெயர்களுளவே. அதன் மலத்தால் உண்டாகும் திருநீற்றினும் ஆற்றல் வேற்றுமை பெறும். இவைகளுக்கு இப்பெயர் நிறத்தாலமைந்ததாயினும் அந்நிறவேற்றுமை குணங்கள் வேறுபடுவதற்கும் காரணமென ஆன்றோர் கருத்து. ஆதலாற்றான் தன்வந்திரி பகவான் தாமெழுதிய பதார்த்த குணத்தில் "வெண்ணிறம் பெற்ற ஆக்களின் பால் வாதத்தை யொழிக்கும், கரியநிறம்பெற்ற ஆக்களின்பால் பித்தத்தை யொழிக்கும், செந்நிறமுடைய ஆக்களின்பால் கபத்தை யொழிக்கும், கபிலையின்பால் முக்குற்றங்களையும் அகற்று"மெனக்கூறி னின்றார். எச்சரித்திலும் இந்நிற வேற்றுமை தாய் தந்தைகள் உட்கொள்ளும் ஆகாரவேற்றுமையைப் போறுத்ததென பெண்களின் பால்களும் இக்குணவேற்றுமைகள் உள்ளன என பார்க்குணபடலத்தில் கூறியிருக்கின்றார்.

அவற்றுள் மண்ணும் தீயும் கலந்தது பித்தமெனவும், ஆகாயமும் வாயுவுங்கலந்தது வாதமெனவும், தனித்த நீர் கபமெனவுங், பித்தம் பொன்னிறம் பெற்றதும், உற்பத்திக்குச் சாதககுணமாதலின் அது ரஜோகுணமென

Koviloor Digital Library

[illegible]

யும், பிரமத்தலயினை அதற்கு காதனெனவும், வாதம் கிரியமிறமுன்னமெதனவும், அது சரீரம் நிலைபெறுதற்குக் காரணமாதலின், விஷ்ணு அதற்கு காதனெனவும், கபம் வெள்ளிறம பெற்று மனிதன் முடிவுக்குக் காரணமாதலின, அதற்கு காதன ருத்திர னெனவும வைத்திய நூலின் துணிபு. விரிவுமற்றோரிடம். அங்கு கருதியும் ஐம்தமான ஆக்கினைப் பிரித்து அவைகளின் சரீரத்தியைத் தகையிலமைந்த பஞ்ச பூதசக்திகளின் வேற்றுமைகளையும் நன்கு துணிந்து எம்மவர்க்குபதேசிக்கின்றது. திருநீற்றின் வேற்றுமையும் அவ்வாக்களின் வேறுமைகளைப்பற்றியே என்பது துணிபு.

அவற்றுள் கபிலையிடம் பிருதிவியம்சம் அதிகமாதலின் அதன் வழிதோன்றிய திருநீற்றிற்கு "பூதி" என்று பெயர். இவ்வுலகத்தில வசிக்குமவரிடர்க்கு இப்பூதியே அதிகவுபயோகம். 'ஐஸ்வரியத்திற்குக் காரணமாதல் பற்றி இது பூதி எனப்படும்' என்று சுருதியே அப்பூதிச் சொற்குப் பொருளுரைக்கின்றது. திருநீற்றைத் தரித்தவாருண்டாகும் ஐசுவரியம் என்னும் திருநீற்றுப் பயனை நிறைவேற்றக் குன்றாவலியுடைத்தது. இங்கு ஐசுவரிய மென்பது உலகத்தார் வழங்கும் செல்வமல்ல அஃது அளவில்லா ஆனந்தத்தை விரும்பும் ஆன்றோர் கருதும் பயனென்க. அங்ஙனமாயின், இங்கு யாது ஐசுவரியமென்னில், ஈசுவரனுருக்தன்மையே ஐசுவரிய மென்றறிக. இத்திருநீற்றை விதிப்படி தரித்து அதனுண்மையை யறிதலால் ஜீவன் மலத்தையொழித்துச் சிவனுவான்" என்பது இக்குண்மை. அதுகொண்டே தைத்தரீய வுபநிடதம் "பூதியை விட்டொழியற்க" என்று ஆணையிடுகின்றது. இவ்வாக்கியத்திற்கு ஆசிரியர் சங்கரமுனிவரும் அங்ஙனமே பொருளுரைத்தனர். "ஐசுவரியத்திற்குக் காரணமாம் பொருளை விட்டொழித்தல் கூடாது" என்பது அவர் கூற்று. அந்தணர்க்கு அநுதினமும் திருபுண்டர தாரணவிதியை எடுத்துரைப்பாம். பூதியை விட்டொழியற்க என்றல்லவோ ஆணைகூறுகின்றது." என்று ஆன்றோர் மணியாய ஆசிரியர் போதாயனமாமுனிவர் அருளிய திருவாக்கென்றறிக.

நிகண்டுகளில் "பூதி, விபூதி, ஐசுவரியம் உலகவழக்கில் செல்வத்தைக் குறிக்குமெனவும், நீற்றையுங் குறிக்குமெனவும் அமலன் முதலிய முதறிஞர் குறித்தார். ஆவின் விசேடமான பூதி விபூதியாகும். [விசேடம்-பெருமை தாங்கியது. பூதி-நீறு, அதையே திருநீறெனத் தேனமொழியில் வழங்குவது. எவ்விதச் செல்வமும் இதனால் விளைவது இயற்கையாதலின், அதற்கிடமான கபி

[illegible]

லயிடம் பூதி தோன்றுமென உபசரித்துக்கூறினர். 'பமமெனப்படும்'' என்றதற்கு வேதம் பொருளுரைத்தது. முன் கன்மத்தைப்பற்றி எழுதியவிடம், கேடித்தகாலஞ் செல்லின், சரீரத்தில் பாவங்கள் ஏர்வகை மலங்களாக நிற்குமென எடுத்துரைத்தோமல்லவா? இங்கு யாம் முற்கூறியவழி அம்மலமாய் நின்ற பாபங்களையொழிக்குந் தன்மை நீருநீற்றிற்கு இயல்பிலமைந்ததாயின் அது பன்மமென்றுரிற்று. உலகத்தில் நீரைக்கொண்டு எல்லாப் பொருள்களையும் கழுவுதல் வழக்கத்திலுள்ளதாயினும், பாபமென்னும் மலங்களை யொழிக்குந் தன்மைபெற்ற பன்மம், அக்நேரம்சம பெருகிய அக்கினிடம் தோன்றியதெனவுபசரிக்கப் பெற்றது. இவ்விஷயங்களை இனிது விளக்கவெழுந்த ஜாபால சுருதி அடுத்த பிராமணத்தில்அக்னிஷ்டோமதத்துவத்தைச்சொல்லுமிடம்நீரிலுள்ளவிரண்டம்சமுங்கெருப்பிலுமென்றேகூறுகிறது. என்னைமெனில்,'தேயுவினிடம பிரகாசம் கொளுத்தலென இருவகைப்பொருளமைந்த தெனவும், நீரில் வெண்மைப், பிரகாசமென இருபொருளமைந்ததும் இரண்டிலும் கலவாதுநிற்பதும் பிரகாசமென்றுமோ அம்சம்'' என்பது. இனி அங்ஙனம் சமமனென்றும் வழங்கப்பட்ட நீரும் நெருப்பும் பல பொருள்களையும்சுத்தி செய்யுமென்பது அறிவியலே யுறக்ககாக்கு உள்ளங்கை நெல்லிக்கனியே; இனி மூன்றாவது பெயர் "பசிதம்" என்பது "மற்றதை அவது மறைந்ததை வெளியிடுதலால் பசிதமெனப்படும்'' எனனுமபொருள் வேதத்திலுளது. யாமுற்கூறியவாறு மூன்றாகப் பகுக்கப்பட்ட எல்லாப் பொருள்களையும் உணர்த்தி அவ்வழி எங்குமிறைந்த பரம்பொருளென்னும் பேரொளிப் பிரகாசத்தை மனத்திலுதிக்கச் செய்தலால் இதற்கு அப்பெயர் தகுமென்க. மறைந்த பொருளை விளக்குவது தேயுவின் தொழிலாதலால் பற்றி இதை தேயுநிறைந்த அக்கினிகள் உபசரிக்கலாயிற்று. 'இனி க்ஷாரமென்பது நான்காவது பெயர் "ஆபத்துக்களை யொழித்தலால் அஃது க்ஷாரமெனப்படும்'' என்பது உபநிடத வியாக்கியானம் இங்கு ஆபத்தென்பது அநாதியாகியஅவித்தையே. ஓரிடத்திலுள்ள பொருளை மற்றோரிடஞ் சேர்ப்பது வாயுவின் தொழிலாதலால் பற்றி அவ்வாயுவம்சம்நிறைந்த அக்கினிடம் பிறந்ததாக வுபசரிக்கப்பட்டது. இக்காலத்துச்சிசாதர்களும் க்ஷாரமென்பது ஒருவகைக் காரமென வழங்குகிறார்கள். உவர்ப்பு எல்லாச் சுவைகளிலும் மேலான தாதலாலும்,எல்லாச் சுவைகளையும் அமிழ்த்தும் தன்மையாதலாலும், எல்லாச்சுவைகளிலும் கலக்கும் தன்மையாதலாலும் தமது ஏற்றத்தாழ்வுகளால் பொருள்களைக் கொடுக்கும் சுபாவம் பெ

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ற்றதாதலானும், எப்பொருளினுமமைந்ததாதலானும், நிமித்தமாதலானும், மாறு நிலைமைபெற்றதாதலானும், கல் முதலிய கடினப் பொருள்களையும் தம்முட்புகுந்து காலத்தாலொழிக்கும் தன்மை பெற்றதாதலானும் எல்லாவுயிர்களுக்கு மின்றியமையாதாதலானும் அக்குணங்கள் நிறைந்த இத்திருநீற்றின்கண் அவ்வுவர்ப் பைக்குறிக்கும் க்ஷாரம் என்னும் பெயரை இத்திருநீற்றிற்குச் சூட்டினரென்றறிக. இனி அதற்கு ஐந்தாம் பெயர் ரக்ஷை என்பது.

"பூதம், பிரேதம், பிசாசம், பிரமராக்ஷஸம், அபஸ்மாரம, இவற்றின் பயத்தை விலக்குதலால் ரக்ஷை எனப்படுமென ஜாபாலோபநிடதத்திற் இச்சொற்பொருள் கூறப்பட்டது. யாம் காணக்கூடாத மனத்தோற்றமயமாய் நிற்கும் மேற் கூறிய பயத்தை நிவர்த்தி செய்தலும் பரோக்ஷ பலமாதலின், இஃது ஆகாயாம்சம் நிறைந்த ஆவின் வழிதோன்றிய தென உபசரிக்கப்பட்டது. இவ்வைந்து பெயர்களில் பஸிதம் பஸ்மம் என்னுமிரண்டு பெயர்கள்தவிர விபூதி, க்ஷாரம் ரக்ஷை என்னு மூன்று சொற்களும் முறையே செல்வம் உவர்ப்பு ஆகிய மற்றையப் பொருள்களையும் உணர்த்துவதாக வுலகவழக்கு ஆயினும், இங்கு வேதம் ஒருவாறு திருநீற்றை இச்சொற்களிட்டழைத்தால் இவை அதன் பெயராயுமமையாதொழியா. ஆயின், எக்காலம் நீராடினும் எக்கன்மத்தைத் தொடங்கினும் அக்காலம் இத்திருநீறணிதல் இன்றியமையாதென அறநூலாய்ந்தோர் கூறுவர். இனி நீராட்டம் செய்தவுடன் திருநீறு தரித்தலின் பயனும் இதை ஆக்நேயஸ்நானம்பண்ணுவதற்குக்காரணமும் பின்வரும்.

மந்திரங்கள்.

யோகம்.

தொடர்பு.

ஐயர்,

யோகமென்னுஞ் சொல் "யுஜ" என்னும் முற்று வினைப்பகுதியின்கண் தோன்றி 'தத்துவத்தில் மனதைச் சேர்ப்பான்" என்பதாகி சுருதிவாக்கியங்களால் பொருளுரைக்கப்பெற்று மனத்தின் வியாபாரத்தை யொழித்துப் பரம்பொருளிடங் கலத்தலைப் பொருளாய்க் கொண்டு முடிந்தது. இப்பொருளையே மன்திற்கொண்டு ஆசிரியர் பதஞ்சலிபகவான் மகாசாரியயோகீசுவர யாஞ்ஞவல்கிய முனிவர் ஆகிய இவ்விருவரும் முறையே 'யோக' மென்பது மனத்தின் பிரவிருத்தியைத் தடுத்தல்" என்றும், 'ஜீவான்ம பரமான்மா இரண்டின் சேர்க்கையே யோக"மென்றும் அச்சொற்குப் பொருள் கூறினர். இவர்க

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

னுன் யோகசாஸ்திரத்தின் முதலாசிரியரான ஸ்ரீபதஞ்சலிபகவான் மனோவிகாரமின்றிப் பரம்பொருளிற் கலத்தலென்னும் யோகம் சித்தியாதுபற்றி அதற்குக்காரணமான இயமமுதலிய அங்கங்களைக் குறிக்க வெழுந்த யோகசாஸ்திரத்தின்கண் யோகமென்னுஞ் சொல்லை ஆகுபெயராகக்கொண்டு யோக காரணத்தையே யோகமெனக் கொண்டார். யோக ஆசாரியரான யாஞ்ஞவல்கியர் யோகமென்னுஞ்சொற்குச் செம்பொருளுரைத்தார். ஆயின் பின்னுரிபெருளாத்தது செம்பொருளு முன்னுரியருரைத்தது ஆகுபெயருமெனக்கொள்க. இனி அன்பு முதலிய நற்குணங்களும் பரம்பரையில் மனத்தை யோர்வழிப்படுத்திக் கடவுளிடம் ஆன்மாக்களை யொன்றுசேர்க்குமாதலின், அவைகளையும் குறிப்புப்பொருளாக யோகமென வழங்குவதுண்டு. ஆகலாற்றான் "அக்காரணம் சாங்கிய யோகங்களாலறியற்பாலதெனச் சுவேதாசுவதரோபநிடதங் கூறியதறிக. அந்நூலின்வரலாறுபின்வரும்

விசாரசாகரம்.

ஐயா, சிறிது கவனியுங்கள்! இப்பொழுது விசாரசாகரமென்னும்பெயர் புத்தகம் வடநாடுகளில் புகழ்பெற்ற ஓர் சாதுவினால் இந்துஸ்தான பாஷையிலியற்றப்பட்டு அந்நாடுகளில் வழங்கிவருகின்றது. இதில் அத்துவித வேதாந்த சித்தாந்தசாரம் அனேகமாய் அடங்கியுள்ளது. இதை யியற்றிய பெரியோர் பெயர் நிச்சலதாஸர். இத்தென்னாட்டில் தமிழ் தெலுங்குமகாராஷ்டிரமுதலிய பல பாஷைகளில் வேதாந்த நூல்கள் பலவிருப்பினும் அவற்றுள் எப்புத்தகத்திலும் இவ்வளவு பொருணயம், சொன்னயம், விஷய விரிவுகளடங்கியிருக்கவில்லை. இனி ஆரியபாஷைக்குச் சற்றேறக்குறையச் சமானமாய் நிற்கும் திராவிடபாஷை இப்புத்தகத்தைத் தம்மிடமமையப்பெற்றதென அதற்கு ஓர் குறைவெனக்கருதி, அதையும் நிறப்பி அத்தமிழ்ச்செல்வமோங்கச் செய்ய விரும்பி குத்தாலத்தில் வசிக்கும் 'சிவன்' என்னும் திருநாமம் பெற்ற ஓர் அந்தணர்மணி [Sub-Registrar] அந்நூலைமொழிபெயர்த்துவருகின்றனர். இனி விசேடமாய் வடமொழிப்பயிற்சி யற்று விடுபெற விரும்பும் விவேகிகளுக்கு இஃது அத்துவிதசாஸ்திரத்தின் உண்மைப்பொருளைத் தெள்ளத்தெளிய விளக்குங் கருவியாயமைதல்பற்றி இஃது ஓர் பெருத்த லோகோபகாரம். இந்நூல் யாதொரு இடையூறுமின்றி முற்றுப்பெற முழுமுதலைச் சிந்திக்கின்றோம். இதன் முதற் சஞ்சிகை யெமக்குக் கிடைத்தது. அதில் அந்நூலினுள்ள அட்டவணையைமட்டில் அடக்கிக்கொண்டிருக்கின்றது. அஃதொன்றே இந்நூலின் பெருமையை விளக்கப் போதியது.

சுபம்.

Koviloor Digital Library

[illegible]

சௌபத்திரஸ்தவம்.

'சௌபத்திரஸ்தவ'மென்னுமிப்பத்திர ஸ்தவம் (பத்திரம்-மங்களம், ஸ்தவம்-ஸ்தோத்திரமாகிய நூல்) சுபத்திரையென்னும் பெயர்வாய்ந்த ஓர் மலைநாட்டு நங்கையால் சுபத்திரையுடன்பிறந்த கண்ணபிரான் திருவவதாரச் சரித்திரத்தைச் சுருக்கிப் பாகவதத்திற் கண்டபடி பாகவதர் மனங்களிக்கச் சொல்லினும் பொருளினுமினிமை பொருந்திய செய்யுட்களாகச்செய்யப்பட்டது. இங்குஇக்காலம் வரை கவிதை யென்னும் கவித்தன்மையைப்பெண்பாலார் கைக்கொள்வது வடநூற் பெருவழக்காயினும் எங்கும் இது போன்ற அருமைநூல்களைச் செய்தருளும் வலிமைபெற்ற கவியிடம் அப்பெண்பால் தோன்றக்கண்டிலேம். இங்கு அஃதும் சேர்ந்ததென எமது மனம் வியப்பைப்படைகின்றது. இப்புத்தகத்தை எமக்கனுப்பிய வாசுதேவரென்பவர்க்கு யாம் எமது நன்றியைக்கூறுகின்றோம்.

கடிதம்

தர்மசாஸ்திரம்
தொடர்பு.

3. யாக்ஞவல்கியர் கூறியவாறு குரு க்ஷேத்திரமுதலிய க்ஷேத்திரங்கள், கிரகணமுதலிய காலங்கள் சாஸ்திரத்தில் கூறியபடி செய்யவேண்டிய ஏற்பாடுகள், நெய்பால் முதலிய யாகவஸ்துக்கள், ஆஸ்திகவெண்ணம், ஸத்பாத்திரதானமுதலிய இவைகளும் இன்னு மற்றவைகளும் தர்மத்திற்கு அங்கமாம். 4. தர்மம் ஆரியர்களால் புகழப்பட்டதென்றும் அதர்மம் இகழப்பட்டதென்றும் விசுவாமித்திரர் கூற்று. அன்றி மோக்ஷத்திற்குக் கிட்டியதும் விலகியதுமாயுள்ள சாதனமான மெய், புலனடக்கம், தவம், சந்தோஷம், வெட்கம், பொறுமை, நல்வழியிலிருத்தல், ஞானம், மன அடக்கம், தயை யாகம், பெரியோரை வழிபடல், வேதமோதல், தானம், ஆசாரம் அஹிம்ஸை, ஈசுவரத்தியானம், ஆகிய இவைகளும் தர்மங்களென்று வியாஸர், பிரஹஸ்பதி இவர்கள் கூற்று. தர்மசாஸ்திரத்தின் உற்பத்தி:—மநு, மரீசி, பராசரர் இவர்கள் கூறியபடி வேதங்களை ஆராய்ந்து பார்த்து வேதத்திற்கூறிய சொற்கள் ஆழ்ந்த கருத்துடையனவாதலின் எல்லோரும் எளிதிலறியும்பொருட்டு அவ்வேதார்த்தங்களை மநுமுதலியவர்கள் கற்பந்தோறும் ஸ்மரிப்பதே. ஆத

[illegible]

ஸ்மிருதித் தருமசாஸ்திரத்தை ஸ்மிருதியென்று கூறகிருக்கன். அந்த ஸ்மிருதியானது வியாசர், ஹாரீதர் சொல்லுகிற பிரகாரம் அநாதியான வேதம்போலவும் அவ்வேதவித்துக்கள் ஆசாரம்போலவும், தருமத்தின் மூலாதாரமான முக்கியப்பிரமாணமாம். "மனுமுதலிய ஆன்றோர் திருவாக்கு நோயாளிக்குக் கிடைக்கும் அருமருந்துபோல பயப்பிணிநீக்கும் பெருமருந்தென வேதம் சாற்றுதலாலும் புறச்சமயிகளின் நூல்களை ஆராய்ந்து அவ்வழி நின்று கிபாயவழி கடந்த சார்வாகர் முதலியோர் சொற்கள் நன்மைக்கெடுக்கும் வஞ்சனைமொழிகளென்று அவைகளை யொழித்திடவேண்டுமென்றும் எடுத்தோதும் பிரசேதஸ் முதலிய ஆன்றோர் வசனங்களாலும் மனு முதலியோர் கூறிய ஸ்மிருதிகளே உண்மை நூல்களெனவும் அவைகளே வேதங்களின் வழிநூல்களெனவும் கொள்க. மற்று பௌத்தர்முதலியவர்கள் கூறுவது வேதவிருத்தமென்க. வியாசர் கூறியபடி அந்த ஸ்மிருதியை அந்தணர்கள்மனக் கத்துடன் வேதத்தைப்போல் எப்பொழுதும் படிக்கவும் கேட்கவும் பார்க்கவும் வேண்டும். வேதம் ஸ்மிருதி இவை கலையறியாதவர்களுக்குச் செய்யும் தானமும் அளிக்கும் போஜனமும் ஏனைய எவ்வித மரியாதைகளும் பயன்படாதென்க. அன்றி வேதங்களும் தர்ம சாஸ்திரங்களும் அந்தணர்களுக்கிரண்டுகண்களாம். இவைகளிரண்டில் ஒன்றைப்படித்தால் ஒற்றைக் கண்ணுள்ளவனென்றும் இரண்டையுமறியாவிடில் அந்தகனென்றுங் கூறற்பாலது. ஸ்மிருதிகள் 18. அதைச் செய்தவர்கள் மனு, பிரகஸ்பதி, தக்ஷர், கௌதமர், யமன், அங்கிரஸ், யாக்ஞவல்கியர், பிரசேதஸ், சாதாதபர், பராசரர், சம்வர்த்தர், உசனஸ், சங்கர், லிகிதர், அத்ரி, விஷ்ணு, ஆபஸ்தம்பர், ஹாரீதர் ஆகிய இவர்களே. (11) அங்ஙனமே உபஸ்மிருதிகளும் அதனைச்செய்தவர்கள்:—ஜாபாலி, நாசிகேதர், கந்தர், லோகாக்ஷி, காசியபர், வியாசர், சனத்குமாரர், சந்தனு, ஜனகர், வியாக்கிரர், காத்தியாயனர், ஜாதுகர்ணர், கபிஞ்சலர், போதாயனர், காணுதர், விசுவாமித்திரர், பைடினஸி, கோபிலர், முதலியவர்களாம். (12) அன்றி வஸிஷ்டர் நாரதர், ஸுமந்து, பிதாமகர், பப்புரு, கார்ஷ்ணாஜினி, சத்தியவிருதர், கார்கேயர், தேவலர், ஜமதக்கினி, பரத்துவாஜர், புலஸ்தியர், புலஹர், கிரது, ஆத்ரேயர், சாகலேயர், மரீசி, வத்ஸர், பாரஸ்கரர், ரிஷ்யசிருங்கர், வைஜாவாபர் என இருபத்தொரு ஸ்மிருதிகர்த்தர்கள். இவர்களெழுதிய தர்மசாஸ்திரங்களைத்தும் எக்காரணத்தாலும் தள்ளப்படாதுகொள்ளற்பாலன வென்பது முதறிஞர் முதுமொழி என்க.

Koviloor Digital Library

[illegible]

அங்ஙனமே சூத்திரங்களும் 18. அவையாவன:—போதாயனம், ஆபஸ்தம்பம், ஸத்தியாஷாடம், திராஹ்யாயணம், அகஸ்தியம், சாகல்யம், ஆச்வலாயனம், சாம்பவீயம், காத்தியாயனம், வைகானசம், சௌனகீயம், பாரத்வாஜம், ஆக்நிவேச்யம், ஜைமினீயம், வாதூலம், கௌண்டின்யம், கௌஷீதகம் என்பனவாம். [14] இச்சூத்திரகர்த்தர்களும் மநுமுதலியோர் எடுத்தோதிய பொருள்களையே மந்திரமாகச் சொல்லியிருக்கிறபடியால் சூத்திரங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் ஒற்றுமையேயன்றி விரோதம் எட்டுணையுமின்றென்க. 15. எங்கு ஸ்மிருதி ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றதோ அங்கு பின் கூறுமாறு நிர்ணயம் செய்யவேண்டும். எங்ஙனமெனில், சூரியோதயகாலத்திலே ஹோமஞ் செய்யவேண்டுமென்றும் அல்லது உதயத்திற்குமுன் செய்யவேண்டுமென்றும், அதிராத்திரமென்னும் யாகத்தில் ஷோடசி என்பதைக் கிரகிக்கலாமென்றும் அல்லது கிரகிக்கக் கூடாதென்றும், கூறிய விதிவாக்கியங்களால் தோன்றிய வேதத்தின் முன்பின் விரோதத்தில் கல்பசூத்திர விதிப்பிரகாரம் இன்னின்ன சூத்திரத்தைச் சேர்ந்தவர்கள் உதயத்திற்குமுன் ஹோமமுதலியனவைகளைச் செய்யலாமென்றும் மற்றவர் உதயத்திற்குப்பின் ஹோமமுதலியனவைகளைச் செய்யலாமென்றும் எவ்விதம் பகுபாடுள்ளதோ அவ்விதமே ஸ்மிருதிகளின் விரோதத்திலும் ஸுமந்துவின் வசனப்படி தேசவழக்கத்தையேனும், அல்லது காலவழக்கத்தையேனும், அல்லது குலாசார வழக்கத்தையேனுங் கொண்டே நிர்மாணிக்கவேண்டும். அன்றி அம்மான்பெண்ணை விவாகம் பண்ணலாமென்கிற விதி விந்தியத்திற்குத் தெற்கிலும் அங்ஙனங் கூடாதென்கிற நிஷேதம் அதற்கு வடக்கிலுமிருப்பதற்குத் தேசாசாரமே காரணமும், மாம்சங்களால் சிரார்த்தஞ் செய்யவேண்டுமென்கிற விதி மற்றைய மூன்று யுகங்களிலுங் கூடாதென்கிற விதி இக்கலியுகத்திலுமிருப்பதற்குக் காலத்தின் வழக்கமும், பின் குடுமி முன்குடுமி நாமம் விபூதி இவைகளைத் தரிக்கிறவர்களுக்குக் குலாசாரமும் மூலகாரணங்களாம். 15. எவ்விஷயத்திலேனும் பெரியோர்களின் ஆசாரங்கள் விரோதப்பட்டதென்று புலப்படின், எத்தேசத்திலாவது எக்காலத்திலாவது எம்மகானிடம் காமக்குரோதம் உண்டாகாது மேன்மையான குணம் தோன்றுகிறதோ அம்மகானுடைய ஆசாரத்தையே முக்கியமாய்க் கிரகித்துக்கொள்ளவேண்டுமென்று தைத்திரீயோபநிடதம் சாற்றுகின்றது.

இன்னும் வரும்.

𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍍.

[illegible]

விக்கிரகாராதனம்.

ஐயா, விக்கிரகாராதனத்தின் பெருமையைச் சற்றுக் கவனியுங்கள்! நமக்குற்ற தோழனுகிய ஆச்சுனனுக்குக் கண்ணனுபதேசித்தருளி யகீதாசாஸ்திரத்தில் "எத்திருவுருவை எவன் வழிபடினும அவ்வழி நின்றருளியவனே யானவது என்கடமை" என உபதேசிக்கப்பட்டது. அங்கு திருவுருவை வழிபடலென எடுத்தோதியமையால் இஃது பிரதிமாரூபத்தில் பூசித்தலெனவேபொருள்படும். அருவப்பொருளை அர்ச்சித்தல் கூடாமையால் உருவப் பொருளைப் பூசித்தற்பாலதெனக் கொள்க. சிலர் எங்கும் நிறைந்த பரம்பொருளை ஓர் கருவியில் அடக்கிப்பாவித்தல் பெருங்குற்றமாயினும் அச்சர்வவியாபகனை ஒரு உருவகப் படுத்தாது உள்ளத்தில் தியானித்தல் கூடாதுபற்றி எங்குமிறைந்தவன் அங்குமிருப்பானென ஓர் எண்ணத்தைப் பற்றுறும் கோடாய்க்கொண்டு பூசித்திடுவோமாயினும் மற்றையக்கடவுளர்க்கு சர்வவியாபகத்துவமில்லையாதலால், அவர்களை வழிபடுதல் எவ்வாற்ருனு மிசையாதென ஓர் ஆசங்கையை நிகழ்த்துவர். முற்கூறிப்போந்த கீதாவாக்கிய உட்பொருளையறிந்தவர் அப்பரம்பொருளின் திருவருளே எங்கும் நிறைந்ததெனக்கொண்டு தேவர் மக்கள் முதலிய சரீரங்களிலும், புல், பூண்டுமுதலியதாவரங்களிலும், அவனை வழிபடப் பின்விடார். இனி அப்பரமபொருள் எங்கும் நிறைந்ததாதலின் சிவபிரான் திருமால்முதலிய பெரிய தேவதைகளைப் பூசித்தலும பிடாரிமுதலிய அற்ப தேவதைகளை ஆராதித்தலும் ஒக்குமோவெனின் இல்லை. ஓரே மண்ணிற்பிறந்ததாயினும், சிறு குடமும் பெருங் குடமும் தத்தமளவிற்குத்தக்க தண்ணீரைக் கொள்ளுமேயன்றி அளவுமிஞ்சிக்கொள்ளாததுபோல அவ்வத்திருவுருவிலடங்கிய அப்பரம்பொருளின் திருவருளைவழிபடும் மக்கட்குப் பயனும் அத்தாரதம்மியத்திற்கேற்கவே பிறக்கும். இவ்வபிப்பிராயத்தைக்கொண்டே கீதாசாரியராகிய ஸ்ரீகண்ணபிரான் எடுத்தோதியதாவது:—"அற்ப தேவதைகளையுபாசிப்பவர்க்குப் பயன் அற்பமாக முடியும். ஏனைய கடவுளரை வழிபடுவோர் அவரையே அடைவர். என்னையே நம்பினோர் என்னைப்பெறுவர்" என்பது. இனி உலக வாழ்க்கையைவிரும்பிப் பெண்பிள்ளைகளும்மற்ற சுற்றத்தார்களும் பெருகவேண்டு மென்றும் புத்திரன், புத்திரி, நாட்டுப் பெண்கள் முதலியவர் விருத்தியடையவேண்டுமென்றும் இடைவிடாது கருதுமியல்பினர், பரம்பொருளை வழிபடின் அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை

Koviloor Digital Library

[illegible]

கைகூடாது விட்ட கிடைக்குமாதலின், பின்னை பெண்டீர் பொருள் முதலிய இம்மைப் பயன்களைக்கொடுக்கும் அற்பதேவதைகளை வழிபடுகின்றோமெனின், அற்றன்று. பரமேசுவரன் தம்மைச் சர்வவியாபகனென அறிந்து அவனை எத்திருவுருவில் எவர் வழிபடினும் அவ்வழியின்று அவரவர் கருதிய பயனைக் கைகூடச்செய்வதில் யாதுந் தடையில்லை. ஆதலாற்றான் கீதையில் அர்ச்சுனனை நோக்கி ஸ்ரீகண்ணபிரானருளியது. "புண்ணியசாலிகளான நான்குவகையுள்ள ஜனங்கள் என்னை வழிபடுகின்றனர் ஓ அர்ச்சுனா! அவர் முறையே உலகத்தைவெறுத்தவன் உண்மையறிய விரும்புபவன், இம்மைப்பொருளைக் கருதியவன்; கலைஞானத்தை விரும்புபவன் எனப்படுவார். "என்பது. அவ்விதமே விஷ்ணுபுராணத்திலும் "கல்வி குலம், ஆரோக்கியம், செல்வம், போகங்கள், மக்கள் கருதிய மற்றைய பயன்கள் எல்லாவற்றையும் தம்மை வழிபடுபவர்க்குக் கடவுள் கொடுத்தருள்வதுமன்றி முத்தியையுங்கொடுப்பார்" என்று எல்லாங் கொடுக்கும் வல்லமை கடவுளிடம் காட்டப்பட்டிருக்கின்றது. கடவுளைத்தியானித்தலால் மனம் ஒன்றுமட்டில் ஒருவாறு சுத்திபெறும். தோத்திரம் செய்வதால் வாக்கு தூய்மையெய்தும் பிராணாயாமமுதலிய யோகங்கள் செய்வதால் சரீரத்தினக் கருவிகள் சுத்திபெறும். வெளிப்பூசை செய்வதில் பரம்பொருளது திருமேனியைத் தியானித்தலால் அகக்கருவிகளும் மற்றைய வெளி வழிபாடுகளால் புறக்கருவிகளும் கடவுள்பால் செலுத்தப்படுகின்றன. தியானபூஜாதிகளை ஒருவன் செய்திடில் அவன்மட்டில் சற்கதிபெறுவானேயன்றி யாம் முற்கூறிய விக்கிரகாராதனத்தால் ஒரு குடும்ப முழுவதும் பெறும் ஓர் நற்பேற்றைப் பெறுன். ஒருவன் பூஜை செய்ய, அவன்மகன் மாணாக்கன் முதலியவர் புட்பமுதலிய பூஜோபகரணங்களைக்கொண்டு தரவும், அவன் இல்லாள் பூஜைக்கு வேண்டிய நிவேதனங்களைச் சமைத்தளிக்கவும், அவனுக்குச் சேவகர்களாய மற்றவர்களும் ஒவ்வொரு சமயம் பூஜைக்கு வேண்டிய பொருள்களைக் கடைமுதலியவற்றிலிருந்து வாங்கியளிக்கவும் நேரிடுமாதலின், ஒருவன் விக்கிரகாராதனஞ் செய்ய அவனைப்பற்றி மற்றவர்களுக்கும் கடவுளிடம் மனம் சிறிதுகாலஞ்செல்லுகின்றது. அதனால் அவர்க்கும் சிறிது நற்பயன் கைகூடுகின்றது. அவ்யாஜகருணாநிதியாய பரமேசுவரன் சிறிதளவாவது தன்னைத் தியானித்தவர்கட்கு நற்பயனை அளிக்காதொழியாராதலின், வீட்டில் வசிக்கும் குடும்பத்தோர் எல்லோரும விக்கிரகாராதனஞ்செய்யாமலும் செய்பவர்க்குத் துணைபுரியாமலுமிருப்பினும் சோற்றுக்கலத்திலிடுங்காலாவது அதில் துளசி

[illegible]

[illegible]

பில்வமுதலிய தழைகளைக்கண்டு இது கடவுளுக்கு நிவேதனஞ்செய்த அன்னமென்று நினைத்தல் இன்றியமையாததலால் அந்த முழுச்சோற்றுப்பட்டதும் இவ்விக்கிரகாராதன வழிபால் கடவுளை நினைக்க நேரிடுகின்றது. "நினைத்தல், தோத்திரஞ்செய்தல் 'கேட்டல், கழலைக்கடைப்பிடித்தல், அர்ச்சித்தல், அடிபணிதல், அடிமையாதல், அன்புசெலுத்துதல் ஆவிபளித்தல் என ஒன்பதங்கமுளது பேரன்"பென ஆன்றோர் கூற்று விளங்குகையால் பேரன்பு என்னும் பத்தியும் இவ்வர்ச்சனமென்னும் அங்கமின்றி முற்றுப்பெறுதெனக்கொள்க. விக்கிரகாராதனத்தில் மெய்வருத்தம், பொருட்செலவு, பரஹிம்சை இவை சிறிதுமிடையாது. தும்பை துளசி பில்வம் அறுகுமுதலிய பொருள்களும், ஊரும் நீர் அல்லது பருகும் நீரும், உலகத்திலிடம்பெற லமைந்திருக்கின்றன. அதற்கெனச்சிறிதுதூரம் சென்றுலாவ ஈசுவரன்மெக்குக்கால்களையமைத்திருக்கின்றார். அவைகளைக்கொய்து எடுக்க இரண்டு கைகளையும் கொடுத்தார். இனி பத்திரம் புஷ்பம் முதலியவற்றைக் கொண்டேந்து கடவுளைவழிபட ஆற்றலற்ற நொண்டிமுதலியவர்க்குந் தியானத்தாற்றான் நல்வழிகிட்டுமென உரைக்குங்கால்நீண்டபருத்தகைகால்பெற்றயாம் அப்பரமன் திருவுருவாராதனத்தை உபேக்ஷித்தல்அடாது! அடாது!! தமதுஅகங்களில்கடவுளைவழிபடுகின்றேமென்று அகங்கொண்டு ஆலயங்களில் கடவுளை வழிபடக்கூடாதென நிற்றலுங்கூடாது. ஆலயங்களில் ஆன்றோர் ஒருங்குசேர்ந்து கடவுளை வழிபடுதலால் அங்கு அவரருள் நிறைந்திருக்கின்றது. அங்கும் யாம் அவனை வழிபட வேண்டுவதே. இனி வேதபாஹ்யராயுள்ளவர் விக்கிரகாராதனத்திற்குச சரியான பிரமாணமில்லையெனச்சாதிப்பரேல், அவரை நோக்கி யாம் கேழ்க்கவேண்டியது இது:—"கடவுளிருப்பதில் நீர் நிச்சித்த பிரமாணம் எது!" என்று ஆரியர்களில் எவரேனும் வினவில், நீர் சந்தியாவந்தனத்திற்கு எப்பிரமாணத்தைக்கண்டீர் என மறுவினவெழுப்புவாம். இவ்விஷயத்தில் வேதம், ஆகமம், புராணம், ஆசாரமுதலிய பல பிரமாணங்களை விக்கிரகாராதன விஷயத்தில் யாம் எடுத்துக்காட்டியிருக்கின்றோம். அநேகர் விக்கிரகத்தில் கடவுளை வணங்கி அதனால் அநேகப்பிரத்தியக்ஷ பலன்களைப் பெற்றிருக்கின்றார்கள். உலகத்தில் ஓரேமருந்தை இரண்டு பிணியாளிகள் உட்கொள்ள, ஒருவருக்குப் பிணி நீங்கியும் மற்றொருவருக்கு நீங்காமலுமிருப்பின், அதுமருந்தின் குற்றமெனக்கொள்ளாது பத்திய முதலியவற்றின் குறைமெனக்கொள்வது போல இருவர் விக்கிரகத்தை வணங்க, ஒருவருக்குக் கருதியது கைகூடியும் இன்னொருவருக்குக்

Koviloor Digital Library

[illegible]

இட்டாதுமிருப்பின், அது விக்கிரகாராதனத்தின் குறையல்லவென்றும், இவருடைய சித்தைக்குறையே என்றும், கூறத்தடையாதுளது? இக்காலத்துச் சோம்பேறிகள் விக்கிரகாராதனத்தின் பெருமையை யறியாது வீணில் காலங்கழிக்கின்றனர். உலகத்திலெவ்வளவோ தர்மங்களிருக்கின்றன. அவற்றுள் பிம்பங்களில் கடவுளை வழிபடுதல் சிறந்தது. இஃது இம்மை மறுமை இருமைப்பயன்களையுங்கொடுக்கும். என்றும் ஒழியாச் சுகத்தைப்பயக்கும. இதற்கென் ளவேனும் குற்றமில்லை. கடவுளைத் தியானிப்பதற்குப் பெரிய ஏது. தமக்கும் மற்றவர்க்கும் பெரிய நேத்திரானந்தம். இவ்வுலகத்தில் பெரும்பான்மையோர் சந்தானமுதலிய இம்மைப்பயன்களையே கருதி அனேக தேவாலயங்களில் கடவுளை வழிபட்டுப் பயன்களைப் பெறுகின்றார்கள். மற்றுஞ்சிலர் வெகுகாலம் பிம்பங்களில் கடவுளைப் பூசித்து அவ்வழக்கம்பற்றித் தனது மரணகாலத்திலும் தமது கண்ணுக்குக் கருடாரூடரான ஸ்ரீபகவான் திருவுருவமல்லது விருடபாரூடரான பரமேசுவரன் திருவுருவம் தோன்றுவதாகச் சொல்வதையாம் கேட்கின்றோம். ஸ்ரீகீதாசாஸ்திரத்தில் "எவனொருவன் எவ்வித வாசனையுடன் இச்சடலத்தை விடுகின்றானோ அவன் அவ்விதச் சடலத்தையே பெறுவன்" என்று கண்ணபிரான் திருவாய்மலர்ந்தருளியபடி மரணந்தகாலத்தில் கடவுளை மனதில் தியானிப்பவர் முத்தியடைவார்களென்பதிற்றடையில்லை. முற்கூறியவாறு கடவுளை வழிபடும் எல்வரும் ஒருவித புண்ணியசாலிகளெனவே கூறப்பட்டமையால் அவ்விதப் பெரும் புண்ணியமற்றவர்க்குப் பிம்பாராதனத்தில் மனஞ்செல்லாது. அவர்கள் காலையிலெழுந்து பற்பல காரியங்களில் முயல்கின்றார்கள். ஒன்றின்பின்னொன்றாக முடித்தபோதிலும் அவர் சித்தத்தில் எக்காலமும் ஏர் கலப்பைமுதலியவைகளும் அல்லது வண்டிக்காரர் அடிமைக்காரர் முதலியவர்களும் உழவு, விதைத்தல், தண்ணீர் பாய்ச்சல், களை எடுத்தல், அறுத்தல், களஞ்சேர்த்தல், அடித்தல், மாடுகொண்டு மிதித்தல், தூற்றல்முதலிய தொழில்களும் அவர் மனம் விட்டகல்வதில்லை. இவர் மரணமடைய நேர்ந்தால் அக்காலம் இவர் மனம் அப்பொருளையன்றி வேறு எதை நோக்கும்! இனி என்றைக்கும் அதிகாரியாயுள்ள ஒருவருக்கு அங்கரக்காப்மாட்டி ஆளும் தன் பணிவிடைக்காரன் வாதி பிரதிவாதி சாக்ஷி ஜாமீன்தார் தன் மேல்விசாரணைக்காரன் முதலியவர்கள் அவர் மனத்தில் குடிகொண்டார்களாதலின் அவர்களுக்கு மரணம்நேர்ந்தால் கரைக்கண்டன் அல்லது கண்ணனைத்தியானித்தல் எவ்விதம்? இனி வைக்கில்களாயுள்ளவர்கள் தாம் பிடித்த கக்ஷியின் சாதகபா

Koviloor Digital Library

[illegible]

தகங்களையும் பாதகங்களை யொழிக்கும் வழியும், சாதி களின் பலாபலங்களும் மனதுவிட்டகலாமலிருக்க, அவர் மாஞூர்ந்த காலத்திலாவது பரமாலோகவன் அல்லது பரமேசுவரனைத் தியானித்தல் எங்ஙனமையுமோ பாருங்கள்! வருடந்தோறும் இத்தேசத்தவர் பணம் ஒருவாறொழிய ஊர்கடோறும் தானமாக வியாயஸ்தலங்கள் ஏற்பட இனித் தூரஞ் செல்லவேண்டுவதில்லையென இத்துர்ப்புத்திகள் நினைக்கின்றார்கள். மின். வியகாரமாடிசர்வ ஞூன்வியர்களாய்ப் பரதேசிகளானவர்களைப் பார்த்தும் மென்மேலுமிவர் முயலுகின்றார்கள். இவர் பணத்திற்குப் பங்காளிகளனேகம். அரசன், அவன் பிரதிநிதி, வக்கில், அவன் குமாஸ்தா, சாக்ஷிக்காரர், வண்டிக்காரர், சோற்றுக்கடைக்காரர் மற்றுமனேகர். கடவுள் கிருபையால் சிறிது செல்வம் பெறினும் இப்பொழுது அவனை வழிபடாது உள்ளதையும் ஒழித்துவிடுகின்றார்கள். கடவுளளித்த பொருள் கையிலிருக்குங்கால் அவனைப் பூசிக்கவும் அவருடைய தேவாலயங்களை ஜீர்ணோத்தாரணஞ் செய்யவும், அவனை அவ்வாலயங்களில் விதிவழுவாது அர்ச்சிக்கவும் வேண்டுமல்லவா? அங்ஙனமாயின் கடவுளருள் மென்மேலும் பெருக இக்கடவுள் கைங்கரியத்தை மற்றவரும் செய்து சற்கதிபெறுவார். "காசாம்பு நிறம்பெற்ற கண்ணன் திருவடியைப்பெற்றவர் சவோத்தம கதியை யடைவாரெனவும், அவர் எவ்விதக் குறையையும் பெறாரெனவும் அனேக யாகபலன்களைப் பெறுவாரெனவும் பல நூல்கள் கூறுகின்றன. ஒருவாறு கடவுளை எங்கேனும்ஓர் கோயிலில்வணங்கினால்அதனாலேயே அனேக யாகபலன்கள் கிடைக்க அவைகட்கென யாம் எதற்கு வீணில் பணஞ் செலவழிக்கவேண்டுமென்று கருதின், அவ்வித கைங்கரியங்களைச் செய்யச் செய்யச் செல்வமற்றவர்க்கே முற்கூறிய விதியேயன்றி மற்றவர்க்கன்று. ஆதலாற்றான் "கொடையற்ற செல்வனையும் தவமற்ற தரித்திரனையும்" என்றுதொடங்கிச் சாஸ்திரம் விதிக்கின்றது. சர்வருபியாகிய கடவுளைப் பூசித்தால் அப்பூஜையால் மரத்தின் வேரில் விட்ட நீரால் கிளைமுதலியவையும் தளிர்வதுபோல் எவ்வுலகமும் சுகம் பெறும்.

இன்னும்வரும்.

இலத்தூர் சுந்தரராஜசாஸ்திரி.

(மொழிபெயர்ப்பு.)

Chidambaram:—Printed and published for the proprietor at the Brahmvidya Press No 38 Senkallooneer pillarkoil street.

Koviloor Digital Library

சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவிற்குக் கொடுத்த ஸ்ரீ முகத்தின் நகல்.

ஸ்ரீ
வித்யா
ஶங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத்ஹிரண் யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதி பூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையை

ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீராமசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ ஹு முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஷேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் திர்மானித்திருக்கிறதை இந்தலிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

கரணம்வத்ஸரம்,
துலாரவி உஅஉ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,

ஶாஸ்த்ரவேத-வதி:.

[illegible]

"இந்தியாவின்தற்காலவருணாசாரநிலை" ஆகிய கலிகாலப் பிராமண தருமம்.

முன்தொடர்.

இனி இக்கலிகாலத்தில் நம்மாரியாசாரங்கள் இங்ஙனம் தலை திரிந்து தமோறுமென்று நம்முன்னோர் புராணங்களில் மொழிந்துள்ளதும் அங்ஙனமே நடைபெறுவதும் உண்மையே? ஆயின் அடிக்குங்காற்றுக்கு அனைக்கும்படல் போல் இடை யிடை சிலர் எழுந்து அக்கொடுமைகளை மாற்றமுயல்வார்களென்பதும் அதனுல் ஓரோ வழி சிலநன்மைகள் உளவாமென்பதும்அப்பெரியோர் மறந்தாரல்லராதலின் அதுபற்றி யாண்டு ஆசங்கையென்னை யென்றொழிக. இனி யாவும் கடவுள் சங்கற்பமன்றோவெனின், அஃதென்றுமொக்குமாதலின் அது பற்றியும் ஆசங்கையின்றென்க.

இது நிற்க.மற்றோர் சாரார் வேறுசில கூறுவர்: அதாவது- "இக்காலத்து நமது, தேசத்தின் ஆட்சி வேற்றரசர் குடைக்கீழாயின. பிராமணர்கட்கு வேதமோதல் முதலியவை முட்டின்றி நடை பெறுதற்பொருட்டு வேண்டும் இடம் பொருள் ஏவல் கொடுத்தலில் நம் வேந்தர் பின்வாங்கினர். நம்மனோரது ஆசாரங்கட்கு அரண் போல் நின்று ஆதரிப்பார்வேறியாவர்! இங்ஙனமாகவேவேலியற்ற விளைநிலம் போல் ஆரியாசாரங்கள் குலையநேர்ந்தன. இனிநம்மவர் அன்னிய பாஷையை விரும்பிப் பயிலாத போது அன்னத்திற்கே பின்னம்நேரும். அங்ஙனம் பர பாஷையிற்பயிலுங்கால் நம்மாரியநூல்களின் அந்தரங்கப்பொருள் யாண்டும்விளங்காதொழிவதில் அதிசயமென்னை!

விளங்காதொழிய, ஆரியர் நடை வேறியில்லைடயாவது சகசமன்றோ? இங்ஙனம்நேர்ந்தது ஈசுவரசங்கற்பமும்இக்காலத்திலுமன்றோ! அங்ஙனமாகஇதனை யாராயாது வாளாக நம்மாரியர்களைக்கடிந்துரையாடி வெறுப்பதில்யாதுபயன்?"என்பனவாம். இதுபற்றியும் சிறிது விசாரிப்பாம். முற்கூறியவை முற்றும் உண்மையே. ஆதலின் இங்ஙனம் ஆரியாசாரங்கள் சிறிது தலை தடுமாற நேர்ந்ததும் உசிதம்தானென்று ஒப்புவாம். இங்கொருகதை ஞாபகம் வருகின்றது. அதாவது விசுவாமித்திரால் அரிச்சந்திரன் மனைவி மக்களை விற்றுப் புலையனுக்கடிமையாய் சுடலை காத்திருக்கப் பாம்புகடித்திறந்த தேவதாசனைச் சந்திரமதி - சுடலையில்வைத்தபோது அவ்வரிச்சந்திரன் தடுத்துத் தனக்குக் கொடுக்கவேண்டிய சுங்கப்பொருளைக் கேட்க,இவள் தன்னிடத்தில் யாதுமில்லையென்ன, அவன் உன் கழுத்தில் உயர்ந்த பொற்றாலி யிருக்கின்றதே யென்ன, அவன்திடுக்கிட்டுக் கூறுவதாக வருங்கவி:-

"அரும்புக்காழியனுனரிச்சந்திரன்
விற்பட்டுபாலிகையென்னைக்குலத்தொடும்
போற்பட்டுபோந் தீறைபோ முறைபோமென்றன்
தற்பட்டுபாவதென்னென்று கலங்கினுள்—என்பது....

[illegible]

இ-ன். கருணைக்கடலாகிய அரிச்சந்திரன் (விஷ்ணுவேயாம்) விற்கத் தகாதவைகளை விற்றுவிடும். அதனால் அருளும் பெருமையும், ஆசாரங்களும் அழிந்தொழிவதுடன் பாரும், எனதுகத்தும் அதனால் அழிவதாமே! இஃதென்னே யென்று நினைத்தான் என்பதாம்:—

அவன்றாவி அரிச்சந்திரன்கண் கட்கன்றிப்பிறர்க்குத் தோன்றாத தெய்விக முடையதாதலின் இங்ஙனங் கூறிறுனென்க. இதுபோல மேற்கூறிய கால கதியால் நம்மாரியர்களுக்கு மானியங்களில்லாமலே ஒழியட்டும், அரசர் ஆதரவு போயினும் போகட்டும், பின் எது கெடினும் கெடட்டும், அதனால் அவர்க்குச் சிறப்பியல்பாயமைந்த சில ஆசாரங்கள் முட்டுற்று முறாவது ஞாயமாவதன்றி எவ்வெச்சாதி சமயத்தார்க்கும் யாண்டும் பொது வியல்பாய் நிற்கும் பேரறங்களும் குடிபோகக்காணமென்னே! பொதுவியல்பான பேரறம் யாவை யெனின், கொல்லாமை, பொய்யாமை, பிறன்மனை பிறர்பொருள் நயவாமை, பொறை, மன்னுயிர்க்குறுதி, யாத்றல், முதலியனவாம். இப்பொது வறங்கள் ஒருவனிடத்தில் இல்லையாயின் அவன் சிறப்பியல்பான தனது சாதிசமய ஆசாரங்களால் யாதொரு பயனும் அடையான். இது பற்றியன்றே வாய்மை, ஜீவகாருணியம் முதலிய அறங்களே பரம தருமங்களென்று அறநூல் பலவும் முழங்குகின்றன. தமிழ் வேதம்.

"புறந்தூய்மைநீரானமையும் அகந்தூய்மை
வாய்மையாய்க்காணப்படும்,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று'——என்றுகூறியது.

தண்ணீரும் விளக்கும்புறத்துஅழுக்கையும் புறவிருளையும் நீக்குவது போல் வாய்மையென்பது அகத்து அழுக்கையும் அகத்து இருளையும் நீக்கும் என்றதை ஆராயின் அதன் உண்மை விளங்கும். இனி இப்பொது வறங்கள், அந்தணர், அரசர், வணிகர், வேளாளரென்று நாற்றிறத்து ஆரியர்க்கும் உரியவாயினும் அந்தணர்க்கே விசேடமாயுரிய தென்பது. "அந்தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்'—என்னும் தமிழ் வேதவாக்கியத்தால் விளங்கும். இங்ஙனமாக. இக்கால அந்தணர் ஜீவகாருணிய முதலிய பேரறங்களை வேரோடு விட்டொழித்தாரே! இப்பேரறங்களையும் எந்தத்திருடர் கொண்டுபோயினர்? எந்தமன்னர் பிடுங்கிக் கொண்டனர்? எந்த வெள்ளங் கொண்டுபோயிற்று? எத்தப்பார்ப்பாரிடத்தில் இரக்கம் சமைமுதலியநற்குணங்களிருக்கின்றன. இனி வேளாளர் முதலிய சாதியாரிடத்து சைவரபக்தி, அடியார்பக்தி, பிராமணபக்தி, சமைய ஆசாரம் இரக்கம் முதலிய நற்குணங்கள் அங்கங்கே குடிகொண்டிருப்பதைப் பலரும் கண்டறியலாம் அந்தணரிடத்திலோ அதற்கெதிர் மறையான குறைவுகளெங்கள் பூரணமாயமைந்திருக்கின்றன. அந்தோ! இப்பார்ப்பாரப் பதகரிடத்தச் சீவகாருணிய முதலிய பொதுவறங்களிருக்குமாயின் இவரை நாம் தெய்வமாகக் கொண்டு துதிப்போமே! அஃதின்மையாலன்றோ இங்ஙனம் வெறுத்துரைக்க ஒருப்பட்டோம்! இப்போ

Koviloor Digital Library

[illegible]

லிப்பார்ப்பாது தாட்சணியத்தால் நாம் வாளாவிருக்கமாட்டோம். இவர்க்கு அஞ்சவும் மாட்டோம்! பின்னர் யாதெனில், இப்பதகர் செய்கையை விரித்துக்காட்டிப்பன்முறையும் தூற்றுவோம். இங்ஙனஞ் செய்வதால் உண்டாகும் பயன் யாதோவெனில், அதனைப்பின்னர்ச் சொல்லுவோம். இதுநிற்க; இப்பார்ப்பார் எந்த அக்கிரமங்களை புரிவர், எவ்வாறு நடந்துகொள்ளுவர், எப்படி வேண்மோனாலும் இருப்பர் அதைப் பற்றி நீரென்ன கண்டிப்பது! நீர் உம்மபாட்டிலிருக்கலாமே என்பவர்க்கு, அவர் செய்யும் அநீதிகளைப்பற்றி நாம்எப்படி வேணுமானாலும்கண்டிப்போம் அதைப்பற்றி நீரென்ன ஆட்க்ஷேபிப்பது? நீர் உம்மபாட்டிலிருக்கலாமே! என்று மறுத்துச்சொல்லி வாயை அடக்கிவிடுவோம். பிறர் செய்யும் அநீதிகளைக்கண்டிப்பதற்கு நீரென்ன கடவுளா? அரசனா? என்பவர்க்கு, கடவுள் கட்டளைக்கும் அரசர் கட்டளைக்கும் மாறுகவே பிறர் செய்யும் அநீதிகளைஅக் கட்டளைகட்கு உட்பட்ட நாம் கண்டிக்கவருகிற நீதியைத் தடுப்பதற்கு நீர் யாரோ சற்றே வாய்திறவும் என்போம். ஓஹோ ஹோ! பல ஜனங்களையும் பகைத்துக்கொள்ளுகிறீர்இனி கெட்டுப்போவீர் என்பவர்க்கு ஆனாறனா! கடவுளுக்கு அஞ்சும் அச்சம் அதிகப்படும் தோறும் மனிதருக்குஅஞ்சும் அச்சம் குறுகிக்குறுகி ஒழியும் என்பதறியீர்போலுமென்று பரிகசிப்போம். எவ்விதத்திலும் வாய்திறக்க ஒட்டோம்! ஒட்டோம்!! இனி அந்தணர்க்குரிய, ஓதல் முதலிய அறு தொழில்களில் முக்கிய ஐந்தையும் அந்தரத்திலோட்டி விட்டாராயினும் கடைநின்ற 'ஏற்றல்' என்னும் தொழிலைமட்டும் இக்காலப்பார்ப்பார் ஒருவாறு பேணி நிற்கின்றனர். அதாவது லௌகிக வைதிகமாகிய, இரு நெறி கொண்ட பார்ப்பாருள்ளே லௌகிகர் "தானம்' என்னும் சொல்லுக்குமுன் இரண்டெழுத்தைச் சேர்த்தும் (பரிதானம்) ஏற்றலேயாம், (பரிதானம்=லஞ்சம்)இனி வைதிக ரோவெனின், அங்ஙனம் லஞ்சம்வாங்கி ஊரார் குடியைக் கெடுத்து வாழும் உத்தியோகப் பார்ப்பாருக்குத் தீவினை வசத்தால் காசம், குன்மம், குஷ்டம் பாண்டு, விசிழிவு முதலிய பெருவியாதிகள் வந்தபோது தாங்கள் பாவமூட்டையோடு கட்டிவைத்திருக்கிற பணமூட்டையை அவிழ்த்து ஆட்டுக்கிடாதானம், எருமைதானம், கம்பளம், எண்ணெய், எள், கும்பாண்டம், இரும்பு, உப்பு முதலிய பொருள்களைத் தானம் கொடுக்கப் பறையறைவித்தவுடனே ஆட்டின் சத்தங்கேட்ட கோநாய்கள் போல் பரபரத்து ஓடி அந்தத் தானப்பொருள்களை இருகையிலும் ஏற்றுக்கொண்டு மகாப்பிரபு உமது துன்பந்தீர்ந்து சுகம் பெறுவீராக என்று வாழ்த்திப்போகின்றனர். இனி இவர் வேதமோதுவதாகிய முதற்றொழிலை விட்டனரோவெனில், விடவில்லை. தானம் வாங்குவதை பரிபாலிப்பதுபோலவே வேதம் என்னும் சொல்லுக்கு "சத்ய' என்னும் மருடஞ்சேர்த்து அப்பெயரால் வழங்குவதெதுவோ அதை ஓதுவதிலும் இப்பார்ப்பார் அக்கிரகண்ணியராயிருப்பரென்க.

இன்னும் வரும்,

கோயமுத்தூரான்

[illegible]

[𑌭𑌾𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑍀𑌕𑍃𑌤𑌂.]

𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌵𑍇𑌕𑌃

𑌸𑍌𑌮𑍍𑌯! 𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 [illegible]

நித்யாநித்ய வஸ்து விசாரம்.

இவ்வுலகம் சேதனம் அசேதனமென இருவேறுவகைப்பட்டு ஸ்திரீலிங்க புல்லிங்க நபும்சகலிங்கங்களாகிய ஆக்ருதிகளுடைத்தாயிருக்கின்றது. காணப்பட்ட அசேதனவுலகம் காரியமாயும் தானே காரியப்படுமியல்பில்லாத ஜடமாயுமிருத்தலால் இவற்றை இங்ஙனம் காரியப்படுத்தற்கு இவற்றின் வேறாகிய வினைமுதல் (நிமித்தகாரணன்) ஒருவன் வேண்டப்படுமென்பது இவற்றினியல்பைப் பகுத்தறிய வல்லோரானறியப்படும். இதன் திறமெல்லாம்பின்னர்த் தொடர்ச்சியாயெழுதி வரப்படும் பகுதிகளிற்றெரியவிரிக்கப்படுமாதலால் அதனிற்கு சமஷ்டியினுலகமென்றுரைக்கப்படுவனவாகிய நமது தனுகரணபுவன போகாதிகளெல்லாம் எத்தன்மையுடையனவென்பதை இப்பொழுது சிந்திப்போம். நம் சரீரம்நேற்று இருந்த இயல்பு மாறி இன்று வேறுபடக் கண்டோம். நேற்று நமது பாட்டன் பாட்டிகளின் மடிமீதேறி விளையாடினோம். இன்று அந்தப்பாட்டன் பாட்டி பிழைப்புக் கதையாய் முடிந்ததன்றி அநுபவத்திலிருக்கக் காணோம். அதுமட்டோ! அங்ஙனம் நம்மைப் பாட்டன் பாட்டிகளாகக் கொண்டு வேறு குழவிகள் நம்மடிமீதூர்ந்து இப்போது விளையாடுகின்றன. இன்னும்சிலபகல்கழிபின்நம்பிழைப்பும் அவர்கட்கு அங்ஙனம் கதையாய் விடுமென்பதற் தடையில்லையே! நேற்றுப் பகல் நாம் புசித்த அறுசுவையுண்டிகள் இன்று கனவும் கதையு மாய்விட்டதன்றி அநுபவத்திலிருக்கக் காணோம். இன்று புசிக்கும் உணவும் சிலகடிகையில் அவ்வாறாகும். இனி இவ்வுலகத்தைத் தமதாகக் கொண்டு நெடுங்காலம் ஆணை செலுத்தினவராகச் சொல்லப்பட்ட மனு மாந்தாதி சக்கரவர்த்திகளெங்கே! அவர்சரிதமெல்லாம் இப்போது கதையாகி விட்டனவே! இதுபற்றியன்றோ (நெருநலுளனொருவனின்றில்லையென்னும்பெருமையுடைத்திவ்வுலகு)என்று இவ்வுலகத்தின்பெருமையையிங்ஙனம் எடுத்தோதியதுதமிழ்வேதம். நாம் இவ்வுடலெடுத்தமுதல் இதுகாறும் நம்போன்ற மனிதரும் மற்றும் அனந்த ஜீவராசிகளும் எண்ணிறந்தனவாய்த் தோன்றி நின்று அழிந்ததைக் கண்டோம், காணுகின்றோம். அது கொண்டே நம்முடலும் அவ்வாறு ஏதோ ஒரு கணத்தில் அழிந்தொழியுமென்பதும் ஓர் போது அறிகின்றோம். இப்போது இவ்வுலகத்தில் நாம் பார்க்கின்ற எண்ணிறந்த உயிர் வருக்கங்களெல்லாம் இன்னும் ஏறக்குறைய நூறுவருஷத்தின் பிறகு பார்ப்போமாயின் இவற்றிலொன்றேனு மின்றி இறந்தொழிந்து இத்தொகைக்குச் சரியாக அல்லது மிகுதி ஏறத்

[illegible]

தாழ வேறு ஜீவராசிகள் விறைந்திருக்கக் காணலாமன்றோ! இதனால் நாறுவருஷத்திற்கோர் முறை இவ்வுலகம வேறு வேறாக மாறுகிறதென்றும் ஒருவழி நிச்சயிக்கலாம். இனி நாம் எத்தன்மையாய் வாழ்கின்றோமெனில், யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலியவைகளைச் சிறிதும் சிந்தியாது சிந்தித்த போதும் உடனே மறந்தும் "உண்பதுநாழி உடுப்பது நான்குமுழம், எண்பது கோடி நினைந்தெண்ணுவன்"—என்றபடி நமது மனுதிகாணங்களை எல்லை கடந்து ஓடவிட்டு, அந்தோ மோசம் போகின்றோம். இரவு வந்தால் உலகை மறைத்து உடல் மறந்து வாழ்வு வறுமைகளை மறந்து உற்றார் பெற்றார் உண்டி உடை முதலிய எல்லாம் மறக்கும் பகருணைப் படலம் படிக்கத்தொடங்கிச் சொப்பனவல்லையை சேர்ந்து அறிவுமாறுபட்டு ஒன்றை மற்றொன்றாகச் சித்தத்திலே திரிபு படக்கண்டு அலக்கணுறுகின்றோம். பின்னர் அதுவுந்தோன்றாத சுழுத்தியவல்லையெய்திமுடங்குகின்றோம். பின்னரும் இரண்டவல்லையெய்துகின்றோம். பின்னர் விழித்தெழுந்து எல்லாம் போயிற்று "பழய குருடி கதவுதிறடி" என்று சித்தத்தைச் சென்றவழி செலுத்துகின்றோம். பிறிதெல்லாம் நிற்க. நமதுடல் தானும் இந்நிலைப்போது நிற்குமென வுணர்ந்தோமா? ஆஹா! நமது காருண்ணிய சக்கரவர்த்தினியாரியமஹாராணியாருக்குப்பின் நமது சக்கரவர்த்தியாய் வரவிருந்த (விக்டர்) ராஜகுமாரரும் திடீரென இவ்வுலகத்தைத் துறந்தாரே! இவர்க்கு இடமில்லையா? பொருளில்லையா? ஏவலில்லையா? அன்னவிசாரமா? ஆசரிப்பாரில்லையா? பதினாயிரம் டாக்டர்கள் கைகட்டிக் காத்திருக்கவில்லையா? சரீரபலமில்லையா? பாலியவயதில்லையா? யாது குறை? இத்தகையார் இங்ஙனம் இறந்தது யாதுகாரணம்? "குடம்பைதனித்தொழியப் புட்பறந்தற்றே—உடம்போடுயிரிடை நட்பு"—என்னும்தேவா திருவாக்கை மெய்ப்பிக்கவோ! "வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்"?—என்னும் தெய்வவாக்கை மெய்ப்பிக்கவோ! [illegible] என்றும் நீதிவசனத்தை நிலைநிறுத்தவோ! செல்வநிலையாமை யாக்கை நிலையாமைகளைச் சிந்திக்காது நமதுடல் பொருள் முதலிய வாழ்வுகள் குரு [illegible] மலைபோன்றதென மதித்து மெய் மறந்திருக்கும் எம்மனோர்க்குப்பின் வருங்கதிராய நிலைப்பூட்டி எச்சரிக்கவோ! எல்லாம் இயற்கையாயுள்ளதும் முயற்சியால் நிகழ்வதுமே யன்றிப்பிறிதொருகாரணப் பொருளுண்டெனக் கருதுவது பிழைக்க வகையறியாத பிதற்செய்கையாம் என வீதண்

[illegible]

[illegible]

டைபேபிலிருப்பதாக்குமிழியும் காத்திகர் தலைமையாகவிக்குலை யச்செய்யவோ! யாங்கள் உள்ளங்களிலிருந்து வைருக்தங் காட்டுவோம் இறந்தவரைச்செழுத்தெழச்செய்வோமென்று ஆணவமை பேசும் ஆயுள் வேதியர் செருக்கை அடங்கச்செய்வோ! "ஒருபோழ்தும் நாம்வாழ்வதறியார்கருதும் கோடியுமல்லபல"—என்னும் திராவிடக்குறளின்சிறப்பை விளக்கவோ! மற்றுமபாதுகாரணங்களா! இதுவிடக்க. நம் கண்முன்னுலமரணத்தையடையும்ஜீவகோடிகளது மரணவன்மையை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அம்ம! நெஞ்சம் திடுக்கிடுகின்றதே! நாம் தாய்வயிற்றில் [கருப்பாசயத்தில்] கிடக்கும் போதே அவள் தனங்களில் அவளும்தேடிவைக்காமல் நாமும் தேடிவைக்காமல்நாம் பிறந்தவுடன் பருகுதற்குரிய அமிர்தம் போன்ற பால் வந்து அமைந்ததென்பதையாவது சிந்திக்கிறோமா! அந்தோ! நமக்கு அன்று காணப்படாத ஓர்பகுத்தறிவு இன்று விளங்கியிற்கவும் அதுகொண்டு இச்சரீரம் உள்ளபோதே இங்ஙனம் ஆராயவேண்டியவைகளை விரைந்து ஆராய்ந்துய்யாமல் உண்டுறங்கி வாளாகாலம் போக்குகிற நமக்கும் காளிகோயில் பூசாரிகளால் வெட்டப்படுகிற பொலிபாட்டுக்கும் பேதமென்னை.

நண்பர்காள்! இக்காலம் நமக்கொரு நற்காலமாம் நமது தாய் போன்று இத்தேசத்திலுலாவி வரும் அருமைபொருந்திய இப்பிரமவித்தையை நாம கிடைக்கப் பெற்றதோடு இவளையாதரித்து வருதற்கு தெளனுட்டு மன்னராகிய ஆரியசிகாமணி யொருவருங்கிடைக்கப்பெற்றோம். இனி நமது தாய் நமக்கெல்லாம் பசிதீரத்திவ்யவுண்டிகளைப் பரிமாறி வருவாள். இனித்தூக்கம் விட்டு ஊக்கத்தோடு எழுந்திருங்கள்! நமது தாயுடனுறவாடிப்பற்பல நல்போதனைகள் பெறுவோம். உய்யும் வழியறிவோம். வீண்சண்டைகளையொழித்து நாமெல்லாம் ஒருவருக்கொருவர் அரிய விஷயங்களைச் சம்பாஷித்துப்பிறருக்கு ஆனந்த மூட்டுவோம். இப்பிரம வித்தையை முன்கண்டு கேட்டறியாதவர்களும் இனி எங்கே அவளென்று தேடி வரும்படி செய்வோம். பக்ஷத்தோறும நாம் சில காணிக்கைகளை இவள்தபட்டில் சேர்த்துவைத்து[கல்விப்பொருளுஞ்செல்வப்பொருளுமாம்]நம்மைத்தேடி வருகிற இவள் திருவடிகட்குச் சமர்ப்பிப்போம். "நாமார்க்குங்குடியல்லோம் நமனையஞ்சோம்"—தங்கள் நண்பர் பலருக்கும் இவளைப்பற்றிச் சொல்லுங்கள்.

"ஒன்றேசெய்யவும்வேண்டுமொன்றும்
இன்றேசெய்யவும் வேண்டுமின்றும்
நன்னோனாளையென்பீரேல்
நம்முடைமுறை நாளாவதுமறியீர்"——

நண்பர்காள்! வந்தனம்! சாமக்குளத்தான்.

[illegible]

ब्रह्मविद्या.

[illegible]

[illegible]



ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—[illegible] பங்குனிமீ 17உ

ஆரியாசார ரகசியம்.

விடியற்காலப்படலம

புண்டரம்.

ஐயா!

இப்பொழுது நீராட்டமானவுடன் திருநீறணிதலின் பயனெடுத்தோதல் அத்தியாவசியம். இவ்விஷயம் திருநீற்றிற்கும் திருமண் காப்புக்கும் சமமாயினும் ஓரிடம் சொன்னால் மற்றோரிடம் அதைப்பற்றி எழுதவேண்டியதில்லை என்பதே எமது கருத்து.

இங்கு "காலையில் மூழ்கி நல்லுடை உடுத்து உடனே புண்டரம் தரிக்க" என்பது விதி. அதை திருத்தமாய்த் தரிக்கவேண்டியவிடம் முதலியவை நன்குவிளக்கப்படுகின்றன. இங்கு விசாரிக்கவேண்டியது. விடியற்காலத்தில் நேத்திரம் முதலியவிடங்களில் மலம் இளகி நிற்பதைப் பற்றி முன் எடுத்துக் காட்டினோம். அதுகொண்டு அக்காலத்தில்ஸ்நானஞ்செய்வதால் உடனேசரீரத்தில் எங்கும் ஓவிதக் குளிர்ச்சியுண்டாவதால் புத்திஸ்தானமாகிய மூளை முதலிய விடங்களும் குளிர்ச்சியடைந்து அவற்றின் வேலை சிறிது தாமதமாகவே நடக்க நேரும். இனி மூளை முதலிய விடங்களிலும் சந்துக்களிலும் சிறிது குடுண்டானால் புத்திய பிரகாசமும் சந்திகளில் கபம் உருகினால் சந்திகளுக்கு மிக சலபமாய் வேலைசெய்யு மாற்றலும் உண்டாம். ஆதலின் மூளை முதலிய நான்கு புத்திஸ்தானங்களிலும் அதைப்போன்றசில சந்திகளிலும் அவசியம் இத்திருநீறு தரிக்கவேண்டும். இனி எக்காலத்தும் சந்திகளால் சௌகரியமும் வேண்டுமாதலால் எக்கருமத்துக்கும் புண்டரந்தரித்தல் அவசியமே. ஆயினும் நீராட்டத்தில் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஓரே நிமிஷத்தில் குளிர்ச்சி பிறப்பதாலும் உடனே புத்திஸ்தானத்திலும் சந்திகளிலும் உஷ்-

[illegible]

ளம் பிறப்பிக்கவேண்டி. சேறுதலாலும் அதற்கென உடனே இத்திருநீற்றை முற்கூறிய விடங்களில் தரிக்கவேண்டும். இனி திருநீறு உடலிலுள்ள நீரை இழுக்கும் என்பது வைத்தியத்திலும் அநுபவத்திலும் கண்டதுணிபு. பல்பம் தண்ணீரை யிழுக்கக் கதிரவன் கதிர்த்துணைவைச்சிறிதும் அவாவாது. மண் முதலியவை தண்ணீரை இழுக்கக் கதிரவன் ஒளியின் ஆற்றலை எதிர்நோக்கும்.

உதாரணமாக, ஒரு சிறுச் சாம்பற்கட்டியைக் கையிலே வைத்து இருண்டவிடத்திலிருந்து தண்ணீரில் சிறிது நனைத்தால் அது உடனே தன்னுருவம் உள்ளமட்டில் தண்ணீரை இழுக்கக் காண்கின்றோம். வைத்தியத்திலும் ஒருவனுக்கு தலையில்நீர்க்கோர்வையிருந்தால் அவனுக்கு ஒருசாம்பல் மூட்டையைத் தலையணையாகவிடின் அது அந்த நீரை இழுக்கும் என்று சொல்லியிருக்கிறது. இதுமட்டோ! சிறிது தண்ணீர் பட்டவுடன் அந்தச் சாம்பற்கட்டியில் வெளிவரும் மணம் பித்தத்தைச் சாந்தப்படுத்தும். என்னை யெனில், காலை நீராட்டத்தால் நாதவிருத்தியும் பித்தம் ஓங்குதலும் உண்டென்றுரைத்தோமல்லவா? அப்பித்தம் நாட்டோறும் மேனோக்க வாந்திரோகம் பிறக்கும். அதற்குத் தண்ணீர் சேர்ந்த திருநீற்றின் நாற்றம்பெரியமருந்தாகும். அதுகொண்டே காலையில் உடலில் தண்ணீர் கலந்த திருநீற்றைப்பூசுவது. விடியற்காலச் சூரியனொளி குணத்தையும் அதிலுள்ள பித்தத்தையும் பற்றிப் பின்சொல்லுவோம். அக்காலப் பித்தத்தை ஒழிக்கவேண்டியே காலையில் நெல்லிக்கனி முதலியவைகளை உட்கொள்ளல்வேண்டும் என வைத்தியம் கூறுகின்றது. நீரில் கலந்த நீற்றின் நாற்றம் முற்றிலும் வமனத்தை [வாந்தியை] த்தடுக்கும் என்பது அநுபவம். இனி மாலைக் கால விபவேறுப்பன் கபம் அதிகப்படும் காலமாகலானும் அக்காலம் நீராட்ட மின்மையானும் மூளைச்சுற்றி சந்திச் சுழல் அக்காலத்துக்கு வேண்டினும் உடலெல்லாம் நிறைந்த பித்தம் முதலியவைகளை இழுக்கவேண்டுவது அவ்வளவாக வேண்டுவதில்லை எனக் கருதியே 'மாலையில் நீரின்றி நீறுபூசலாம' என்றது. இதனால் காலை நீராட்டத்தால் இருபெசக்துக்கபங்களை இளக்கவும் புத்தியை நல்வழி நடத்தவும் காலைப்பித்தத்தைக் கழிக்கவுமே திருநீற்றைத் தரித்தல் எனக்கண்டறிக.

இனி இத்திருநீறு வெகு குங்குமமாக உட்புகுந்து அங்குள்ள குளிர்ச்சியைச் சிறிது சிறிதாக ஒழித்துவிடும். சூட்டை உண்டாக்கும். சரீரத்துக்குச் சுகம் கிடைக்கச்செய்யும். ஆதலாற்றான் தருமநூல்களில் மண் முதலியவற்றிற்கமையாத ஆக்கிநேயஸ்நானமாந்தன்மை நீத்திரு

[illegible]

நீற்றிற் கமைந்தது. அதனுட்கருத்திது. ஸ்நானம் என்பது எவ்வழிபாவது உள்ளும் புறம்பும் நிறைந்த மலத்தை ஒழிக்கும் தொழிலே. அதில் திருநீற்றால் முடித்தால் அதை 'ஆக்நேய ஸ்நானம்" எனச்சொல்வது. இங்குண்மை இது. நீரானது மயிர்க்கால்வழி உட்சென்று அங்குள்ள மலங்களை ஒழித்து அவ்விடத்துக் குளிர்ச்சியுண்டாக்குகின்றது. இதுதொழில் நீரால் முடிய நல்லவேகமும் அல்லது நல்ல களமும் அவரவர் படும் குறைந்தவிர்த்திவலேமேற்படின் அதனாற்றுலாதல்மற்றதனாலாதல் காய்ச்சிடும் ஆதலால் அவசியம் அதிக வீர்ய குணங்கொடுக்கும் என்றது, ஆதலாற்றான் குளம் ஆறுமுதலியவற்றிற் குளிக்கவேண்டு மென்றேம். அன்வீர் அகப்படா விடில் வென்னீரே நலமென்றேம். இனி திருநீற்றின் போற்றலே எவ்வழியிலும் எவ்வித பூதசக்தியாலும் மாற்றமுடியாது. அதில் காற்றுமோதினும் அதனாற்றல் குன்றாது. நீர்படினும் ஒழியாது நெருப்பிலிடினும் தொலையாது. ஆகையால் அதன் ஆற்றல் அழியாமிலேமை பெற்றதென வறிக. ஆயின் அத்திருநீறு புத்தி கிலேகளையும் சக்திகளையும் ககப்படுத் துவதிற்றடையாதுமிலலே. ஆதலாற்றான் அதை "ஆக்நேயஸ்நானம்" என்றனர் ஆன்றோர். ஓரிடம் தீயிடில் அக்தீ தனது போற்றலுள்ளவரையில் உள்ளும் புறம்பும் நிறைந்து ஆங்காங்குள்ள அழுக்கை யகற்றுமாதலின் அதுபோல் தமதாற்றலுள்ளவரை உள்ளும் புறம்பும் சுத்திசெய்யும் திருநீற்றை அக்கினி என வுபசரித்ததுகாண்க. ஆதலாற்றான் 'முக்காலத்தும் நீர் கலந்து நீற்றைப் பூசுக' என்றும் 'திருநீற்றால் செய்யும் ஸ்நானம் ஆக்நேயம்' என்றும் 'நீராடலிலாற்றலற்றவன் திருநீற்றிலாடுவோன்' என்றும் முதலினர் திருவாக்கிட்டனர்

இனி இதற்குள்ள மற்றோர் பெருமையை விளக்குவாம். இத்திருநீறு 'இத்தேகத்தாரியர் சரீரம் எல்லாம் இறுதியில் நீறுவதேயென்று குறித்து அதுவழி மக்களுக்குப் பெருந் துறவை உபதேசிக்கின்றது' என்பதே. எங்ஙனம் எனில் கூறுவாம். இத்தேகத்தில் உயிர்துறந்தவர் இருவகை ஸம்ஸ்கரிக்கப்படுவர். கொளுத்தல் அல்லது புதைத்தல்இதில் முதல் வகையால் நீறுவது எல்லோரு மறிவார். இரண்டாம் முறையிலபதர் திருநீறு உப்பு இவற்றில் இட்ட சரீரம் அது வாக முடிகிறது. இனி மண்ணிற்றானே சரீரத்தைப்புதைத்தால் அது அழுகிப்புழுக்கள் உண்டாகப் பெறும். துர்நாற்றம் வீசும். இனி உப்பு சாம்பல் முதலியவை போட்டால் அவைகளின் சேர்க்கையால் அச்சரீரம்

Koviloor Digital Library

[illegible]

உளுந்து வீருரும். உளுந்து வீருவது மாமுதலியவ ற்றிலும் காணலாம். லெர் வீபூதித் துவே ஷத்தால்தங்கள் நெற்றிகளில் அதைத்தரியா தொழிந்தாலும் அவர்சரீ ரம் இறுதியில் அந்தத் திருவீருருவமாய் முடியும் என் பதை மறுக்க வல்லராகார். அவரும் ஒரு காரமாயடைப் பிற்றுனே அச்சரீரத்தைதயிடுகிருர்கள். இனி தனியுப்பில் வைத்தால் காலம் குளிர்காலமாயின் அவ்வுப்புக் கரைந்து மண்ணிற் கலக்கச் சரீரம் அழுகி நாற்றம் வீசும். அது கொண்டே இக்காலத்து மேற்றிசை வைத்தியரும் புதை ப்பதிலும் கொளுத்துவதே நலமெனவும் புதைக்கநேர்ந் தால்அச்சரீரத்தைச்சாம்பல் சுண்ணும்புகளில் இடலாம் என்றும் சொல்லுகிருர்கள்.' ஆயின் திருவீற்றின் பெரு மையை யாதுரைப் போம். இதில் பலவேற்றுமைகளும் இதற்குள்ள பலமுறைகளும் வேதாகமங் க ளு ட்கண்டு களிக்க. மற்றதுபின்வரும

[illegible]

மந்திரம்.

யோகம்.

இம்மந்திர யோகம் என்னும் பெரு மிதி ஆதியில் 'இரண்யகர்ப்பர்' என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது. அது கொண்டே ஸ்ரீவாதராயண முனிவர் கோமான் மாபாரதத்தில் 'ஹிரண்ய கர்ப்பரே யோகத்தை முத லில் குறித்தவன் வேறெவனுமிலன்' என்றுமோகூதரு மந்திற்கூறினுர். அதே யோகசாஸ்திரங்கள்தொடங்கும் வரை இத்தேசத்தில் வழங்கப் பட்டுவந்தது. பெரும் பயனையும் விளைத்தது. பிறகு அவ்வவை பெரியநூலை க்கற்று அதிற்கண்டபடி நடந்து பயன் பெறவாற்ற லற்ற மாக்தமை நோக்கக்கருணை கூர்ந்து ஆசிரியர் ஸ்ரீபதஞ் சலிமாமுனிவர் அவ்வியோக சாஸ்திரத்திற்கு ஒருசூத் திரம் செய்துவைத்தார். அது இக்கலிகாலத்தவர் யோகசாஸ்திரத்திற்கு முதநூலாய் விளங்குகின்றது. அ தற்குப் பிரமஸூத்திரம் வகுத்தருளிய ஸ்ரீவாதராயண மாமுனிவர் பாடியம் இயற்றினர். அதற்கே கவிவாணர் புகழ்ப்பதம் பெற்றுக் கபால சோதனஞ்செய்த மகானுபா வனை ஸ்ரீ போஜ பூபாலன் ஓர் உரைசெய்தான். பி றகு ஸ்ரீவாசஸ்பதி மிச்ரர் என்னும் மகாபண்டிதர் ஒரு பேருரையும் செய்துவைத்தார். இனி மஹரிஷியர் பத ஞ்சலியார் எழுதிய யோகசூத்திரங்கள் எல்லாம சற்றே றக்குறைய அதேமொழிகளாய் ஸ்ரீசிவமகாபுராணத்தில் வாயுசங்கிதையில் காணப்படுகின்றன. ஆயின் இவை யோக சூத்திரத்தைப் பார்த்து வியாஸாசாரியர் புராணம்

Koviloor Digital Library

[illegible]

எழுதினரோ அல்லது புராணத்தைப்படித்துப்பதஞ்சலியார் சூத்திரம் எழுதினரோவென மயக்கமுண்டாகின்றது. இங்கு இருவகையிலும் உள்ள யுக்திகளை எடுத்துக்காட்டிப்பிறகு ஏதேனுமொன்றைப் புத்திக் கெட்டியாமட்டில் உறுதிப்படுத்துவாம். இங்கு சிவபுராணம் எழுதிய வியாஸர் யோக சூத்திரங்களுக்குப் பாஷ்யம எழுதியிருக்கிறார். அன்றி வியாஸர் எழுதிய சிவபுராண வாயுசங்கிதையில் அப்பதஞ்சலியின் தோழரான வியாக்கிரபாதர் அவர் குமாரரான உபமன்யு பகவான் இவர் கதைகள் சொல்லப்பட்டது. ஆயின் வியாஸாசாரியர் தாமேமுன் யோக சூத்திரங்களுக்குப் பாஷ்ய மியற்றி அவ்வாசனையால் அந்தப்பொருள்கள் மனதிலமைந்திருந்த சமயத்தில் அப்பொருள் கிறைந்து அனேக செய்யுட்களை சிவபுராணத்தில் அமைத்தார் எனச் சொல்லலாகும். இனியோக பாஷ்ய வுரையாசிரியர் ஐபாதித்தியர் இவ்விஷயம் இத்தன்மையதென எடுத்துக்குறித்தாரில்லை.

அங்ஙனமே ஆசிரியர் பதஞ்சலியார் பின்னவதரித்தவர் என்பதில் சில குறிகள் உண்டு. மாபாரதத்தில் 'ஹிரண்யகர்ப்பனே யோகத்தின் தொல்லாசிரியன்' என்று வியாஸர் திருவாக்கிருத்தலால் அக்காலத்திலஹிரண்யகர்ப்பனின்றிவேறுயோகாசிரியர் இருப்பதாகப் புலப்படாததாலும் பதினெண்மகாபுராணங்களையும் செய்து அதன் சாரமாகப்பாரதமியற்றினா' என்று மாச்சியபுராணம் கூறுதலாலும் மாபாரதத்தின் முன் செய்யப்பட்ட பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ சிவபுராணத்தில் யோக சூத்திரப்போலிகள் அமைய நியாயமிலலை.

இங்ஙனம் ஓர் துணிபின்றிக்கிடக்கும் இவ்விஷயத்தில் சில கவிஞர்கள் 'யோகசூத்திராசிரியரான ஸ்ரீ பதஞ்சலி மாமுனிவர்வியாஸருக்குப்பிறகே பிறந்தவர்என்றும்அவர் வியாசர் எழுதிய புராணத்தைப் பார்த்தே இவ்வியோக நூலேஇயற்றினர்என்றும்யோகபாஷ்யம்வகுத் தருளியவியாஸர் வேறு என்றும்முடிவுரைகூறுகின்றனர்.இங்கு எமது துணிபிது. 'இவ்விருகுருமாரும் ஓரேகாலத்திருந்தவர்.இவர்களிபற்றியபெருநூல்கள்மட்டில்முன்பினாக வியற்றப்பட்டன' என்பதே. எங்ஙனமெனில், வியாஸாசாரியர் புராணங்களையும் பின் மாபாரதத்தையும் முறையேயியற்றினர். இதன் பின்னர் யோக சூத்திரம் ஸ்ரீபதஞ்சலிபகவானுலியற்றப்பட்டது. பிறகு யோக சூத்திரங்களுக்குப்பாஷ்யம் வியாஸர் செய்தருளினார். 'என்று இவ்வித வழி ஒப்பாதொழியின் எவ்விதத்தும் பொருத்தம் கூறுவது முடியாது. பாருங்கள் சமஸ்தேசத்துப் புலவர்களில் முதன்மைபெற்ற ஸ்ரீசங்கே

Koviloor Digital Library

[illegible]

ச பட்டர் தாமியற்றிய 'மஞ்ஜூஷா' கிரந்தத்தில் யோக பாஷ்யம் இயற்றின ஸ்ரீவியாசபகவான் தாம இயற்றிய பிரமசூத்திரத்தின் அவாந்தரத்தில் அதிலுள்ளனவைகளை மகொண்டுள்ளார்' என்றுரைக்கிறார். மேலும் பதஞ்சலியார் மஹாபாஷ்ய மூலத்திற்கு 'வியாஸ வருட' என்று தொடங்கி வியாகரண வார்த்திகக்காரர் ஆசிரியர் காத்தியாயனர் கூறுதலால் ஆசிரியர் பதஞ்சலியார் அவர் கருப்பிறந்தவர் எனக் கூறுவதனங்ஙனம் அமையாதொழியும்! இங்கு அதிகம் சொல்லவேண்டுவது வியாகரணத்தைப்பற்றி எழுதிய விடத்தெழுதினும். மீண்டும் இங்கெழுதோம். இங்கு முடிக்கப்படு. ஸ்ரீவியாஸர் பதஞ்சலியார் இருவரும் ஒருகாலத்தவரே. இவர் இயற்றிய நூலிரண்டும் முன்பின்னாகவமைக்க இனி பல நூல்களை இயற்றியும பலகாலஞ்சென்று முன்ன ஓர் இழிவாசிரியர் தமக்கு வயதிற்சிறிது தாழ்ந்த புலவர் எழுதிய பெருநூலுக்குரையிடல் கூடாதென்றுவது அமையாதென்றுவது யுக்திக்கொவ்வாதென்றுவதன்றோ? ஆயின் வியாஸர் முதலிய முதலினுர் ஈத்திவ்விய சாஸ்திரத்தை ஆதரித் தார் என்பதிற்றடையேதுமில்லை. இனியிதற்குப் பின்னுசிரியர் அனேகர். அவர்களுள் ஸ்ரீஜயாதித்தியாசாரியர் ஒருவர். மற்று ஸ்ரீபகவான் சங்கராசாரியர் ஸ்ரீஸனத்ஸுஜாதியபாஷ்யத்திலும் இராஜயோகபாஷ்யத்திலும்யோகத்தைப் பற்றிய பல விஷயங்களை உபதேசித்தார். ஆயின இதனுல் யோகம் மறுக்கப் பட்டதிக என்று சூத்திரம் கூறுதலால் ஆசிரியர்க்கு யோகம் அசம்மதமோவெனின் அற்றன்று. அவர் கூறும் "ஸத்வ புருஷான்னியதாக்யாதி "(அதாவது ஸத்வம்- காணும் பொருள், புருஷன்-ஆன்மா, அன்னியதா-வேற்றுமைத் யாதி-அறிவது)" யேமோக்ஷசாதனம்என்பதுமட்டில்மறுக்கப்பட்டதேயன்றி வேறேதுமில்லை யென்றறிக. அன்றேல் அம்மதன்னைமாக,சைவபாஷ்யம இயற்றிய ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் "பதிக்கொவ்வாமையால்" என்னும் சூத்திரம் நிரீஸ்வரயோகத்தை மறுப்பதாகக்கூறியதனால் எவ்வாறமையும் எனில்,கூறுதும்: யோகசாஸ்திரம் ஒன்றிற்றன் பரமேஸ்வரன்நிமித்தகாரணமே எனக் கூறியுள்ளது அதுபோருந்தாதேனக்கொண்டு அதைமட்டில் மறுப்பதே ஆசிரியர் கருத்து. அது கொண்டே "சிவாகமங்களிலும் பரமபதி நிமித்தகாரணனுகவே சொல்லப்படுகின்றமையால் அவ்வாகமங்களை இச்சூத்திரத்தில் லக்ஷ்யமாக்காது ஹிரண்யகர்ப்பயோகத்தைமட்டுமிலக்காக்கியது எதுபற்றி" என்னும் ஆசங்கை நிகழ "யாம் வேத சிவாகமங்கட்கு வேற்றுமை காண்கிலேம். வேதமுஞ்சிவாகமுமேஎனச்சமாதானங்கூறினர். இதற்கு அங்கமைந்த கருத்தது. வேதங்களிலும் சிவாகமங்களிலும்[உலகத்துக்குக் கடவுள் நிமித்தமும்] உபாதானமும்[முதற்காரணமும்] என்னும் (விஷயத்தைமட்டில்) வேற்றுமைகாணப்படவில்லை.வேதமும்(இவ்விஷயத்தில்)சிவாகமமுமே. அவ்வாகமங்கள் கூறியவற்றையே கூறுதலால் . என்க" என்பதே (உலகத்துக்குக் கடவுள் அபின்ன நிமித்தமும் உபாதானமும் ஆவார் என்பதும் யாகம் முதலிய வேதவிஹித கன்மங்களாற்றன் ஞானமும் ஞானத்தாற் பரமபதியினது வீடுகைகூடும் என்பதும் சைவமா

[illegible]

பாடிய கர்த்தாவாகிய ஸ்ரீ சைவசிகாமணி ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர் கருத்தென்பது அவர் பாடியம் படித்தோர்க்கினிது விளங்கும்.) நற்காலத்துக்கில சைவாசிரியர் அவைதிகமென்னும் ஆகமங்களுட்காணுதலென்னும் அமைத்ததால் யோக சாத்திரத்தை அவ்விஷயத்தில் பொய்யாக்கியதாயும் உள்ள கேவல நிமித்தகாரணவாதம் சிவாகமங்களில் உள்ளது' கேவல நிமித்தகாரணவாதம் என்றுமட்டில் அவைதிகம் என ஆசிரியர் கருதி யோகத்தை அவ்விஷயத்தில் மறுத்தாராயினும் மற்றைய விஷயத்தில் ஒப்பாதொழிந்திலர்.

இனி ஸ்ரீசிவபுராணத்தில் சில செய்யுட்களையும் யோக சூத்திரத்தின் ஒற்றுமையையும் எடுத்துக்காட்டுவோம். [illegible]" என்பது புராணம். "[illegible]" என்பது யோகசூத்திரமாயின் சூத்திரத்தில் [illegible]" என்பதே அதிகம். "[illegible]" இது புராணம். "[illegible]" இது சூத்திரப்பொருள் ஒன்று சிறிது சொல் வேற்றுமை. இதுமட்டோ! மேலும் பல புராணங்கள் யோக வேற்றுமையையும் விளக்குகின்றன. அதை அங்கியம் பாக்கவேண்டும் என்பதைப் பின் எழுதுவாம்.

வரும்.

கடிதம்

கடிதகர்த்தர்கள் அபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச் சாராமட்டா.

ஓர் ஆராய்ச்சி

ஐயா, பிறந்ததுமுதல் மேது மதங்களுக்குற்ற வைரிகளாய் உள்ளவர் மேற்றிசைப் பாதிரிகள் என்பது நம் தேசத்தவர்க்குள் எவர்க்கும் தெரியுமே. இவர்கள் சொல்லிக்கொள்வதுமட்டில் "பரம் உலகத்தார் அஞ்ஞானவிருளை வேரோடு கிளைய வந்தோம்" என்பதே. அவர்களுக்குத் தொழில் ஆரியமத பூரணசந்திரனுக்கு எவ்வழியிலாவது ஓர் குறைவு காட்டி நிற்றலே. இதற்கு இவர் கொள்ளும் பிரமாணங்கள் குழந்தைச் சொல், வீட்டில் பாட்டிகள் பழங்கதை இவைகளே. இக்கதைகளில் ஏதேனும் சொற்குற்றம் பொருட்குற்றம் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு ஒரு சிறு கடுகை மேருவாக்கிக் காட்டிப் பல புத்தகங்களை எழுதி 'கூறியது கூற்று' என்னும் குற்றம் செறிய பல சிறு குழாங்களை மயக்கிவருகிறார்கள். இவர் உபந்நியாசங்கள் செய்வது ஊஜியிலுள்ள திரு

[illegible]

[illegible]

[illegible]

டர் மற்றுள்ள கீசர் மற்ற விபசரிகள் முதலியவரும் இக த்தில் எவ்விதத்தும் பெருமைபெற வாற்றலற்றவருமான ஜனங்களிடத்தே இவர்க்கு இரண்டுகோறுள்ள யக்த மிருகம் கிடைப்பினும் அதுவும் ஒருலாபமாகவே முடியும். இவர்கள் மதிமயங்க ஜாலமாகப்பேசியும், உடை உணவு ஒன்டொடிகள் முதலிய பல வின்பங்களாலும் சாமானிய வறிவற்ற மக்களைக்கவர்ந்து ஏதேதோ அவர்க்குபதேசித்தே வருகிறார்கள். நம்மிடம் ஏதோ கடுகளவு குற்றத்தை மலையாகக் காட்டித் தமது மலையளவு குற்றத்தைக் கடுகளவுங்காட்டாது காலக்ஷேபஞ்செய்துவருகிறார்கள். இவர் கொட்டம் இனி ஆரியர் சகியாராதலால் அவரும் பத்திரிகைகள் பிரசங்கங்கள் புத்தகங்கள் என்னும் வழியால் இவரை ஒருவாறு அமிழ்த்த முயன்றுவரும் இச்சமயம் யாமும் வீணிற் காலங்கழித்தல் கூடாதெனக் கருதி யாமும் சிறிதுதவ முயன்றோம். இவ்விஷயத்தில் விக்கினேசுவர பூஜையாக ஜனம் வில்ஸன் பாதிரியார் எழுதிய வழுநூல் ஒன்றைக் கண்டிக்க முயன்று இறங்கேப்போம். ஐய! சிறிது கவனிக்கவேண்டும். இதுமுதல் அவர் புத்தகத்துள்ளவற்றையும் வடமொழியாற் கூறி மறுத்து மறுத்தே வருவாம்.

வரும.

கலியுக வலிமை.

ஓ ஆரிய மகாஜனங்களே! இப்பெரியதோர் ஆச்சரியகரமான கலியுக வலிமையைச் சிறிது செவிசாய்த்துக் கேட்பீர்களாக.

இப்பொழுது செந்தமிழ்ப் பெருங்கடலுள் ஓர் சிறிது கற்ற சில சூத்திரர்கள் சுருதி, ஸ்மிருதி, இதிகாச வேதாங்கமுதலிய எவ்வித்தைகளிலும் சுதந்திராதிகாரமுள்ள அந்தணரைக்காட்டிலும் தங்களை உத்தமர்களென்று யுக்தியில்லாத தம் வாக்கிறுல் வியஞ்சன விருத்தியாக வெளியிட்டுவருகின்றார்கள். அங்ஙனம் எழுதுவதாலும் எங்கேனும் ஓர் மூலையிற்கிடந்து உளறுவதாலும் எம்போல்வார்க்குச் சிறிதேனும் கோபம்ஜனித்திலதாயினும், "வைக்கோலெடுத்தவழி" என்னும் முதுமொழியின் நியாயம் போல மகான்களிடத்தும் அவர்கள் தொடராவண்ணம் அவர்களைக் கண்டித்தற்பொருட்டே இப்பொழுது இதனை எழுதினோம். இஃதேயன்றி அவர்களைப் பிரதிவாதித்தன்மைக்கு யோக்கியர்களாக மதித்து இப்பிரமவித்தியா பத்திரிகையில் இக்கடிதம் எழுதத்தொடங்கிற்றிலேம். இனி அவர்களோ சரீர தர்மத்தால் ஈனகாம் வருணத்தவர்கள். ஆகையால் சகல சுருதிஸ்மிருதி

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

முதலான பிரமாண சம்மதமாகவும், முன்னோர் கட்டுப்பாட்டின்படியும அவர்கள் அடங்கி நடக்கின அவர்களுடைய வருணத்திற்கேற்ற தொழில் தமக்கு மேலாகிய முதன் மூன்று வருணத்தவர்க்கும் சிச்ருஷை செய்தலேயாம். இவர் அவைகட்கு அடங்காது அசாரியரான இதிருந்தவர் முதலாயினோர்போல் மீறி நடப்பாரேல் அவர் மூகாபலாகனஞ்செய்தற்கும் இவ்விதி கூறற்கும் இதுவும ஒரு ப்பிரமாணம். இதுநிற்க. பிராமணர்களுக்குள்ளும் வித்துவான்களாயுள்ளோர் ஓர் விஷயத்தை யுபந்நியாசஞ்செய்யப்புகுந்தால் அவ்விஷயத்தைப் பிரதிபாதிக்கும் கிரந்தங்களின பிரமாண வாக்கியசகிதம் அவ்விஷயத்தைத் நிர்ணயிப்பாரகளேயன்றி, தம வாக்கினாற் புதுவதாகக் கற்பித்த பாவில்லாயுக்திகளை ஓர்போதும் கூறத்துணியார்கள். இங்ஙனமிருக்க, சிச்ருஷையைத் தவிர வேறொரு விஷயத்திலும் அதிகாரமற்ற சூத்திரரொருவர் ஜகத்குரு பூமண்டலாசாரியரான ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கு 'ஜகத்குரு'வென னும்பெயர்பொருந்துவது எப்படி என்பது முதலிய கேள்விகளால் தம் அறியாமையை வெளியிட்டதுமன்றி, அண்டகோடிகளனைத்தையும் தம் பஞ்சகிருத்திய திருநடனத்தால அநுக்கிரகியாநின்ற கிருபாசமுத்திரமாகிய ஸ்ரீசிதம்பர நடராஜமூர்த்தியை ஆராதிப்பவரும் நடராஜமூர்த்தியை ஒப்பவருமாகிய உலகெலாம் புகழ்பெற்ற மகிமை பொருந்திய உத்தம வைதிகப்பிராமணராகிய ஸ்ரீதில்லைவாழ்ந்தணரென்னும் தீக்ஷிதசுவாமிகளே ஜகத்குருவென்பதில்யெங்கள்சம்மதமபோலஅவரும் ஜகத்குருத்துவத்துக்கு உரியவர்களென்று தாம் அங்கீகரிப்பவர்போல அபிநயஞ்செய்து தம் நெஞ்சத்தில் நெடுநாளாக அடக்கிவைத்திருந்த உள்ளக்கருத்தாகிய அபிப்பிராயமான மேற்கண்ட தீக்ஷிதர்களின் கிந்தாஹேதுவான ஆதிசைவ சாம்மியத்வதையும சமான நாமம், சமான பூஜகத்துவம முதலிய மதங்களையறியாதெழுதிய போலிவசனங்களால் வெளியிட்டார். வைதிக மதஸ்தர்கள் அவ்வைதிக வழி பூஜிக்கப்படும தேவதா சந்நிதியில் பிரசாதங்களை ஏன் கிரகிக்கமாட்டார்? அப்பிரசாதத்தைக் கிரகிக்கத்தகாத அநதிகாரிகளுக்கே அவ்வைதிகப் பிரசாதம் கொடுக்கப்படமாட்டாது. இங்ஙனமிருக்க அவ்விஷயத்தில் தாம் புகுந்து தீக்ஷிதசுவாமிகளின் வேதோக்தமானதகரோபாசனையைக் கெடுத்திசெய்ய நினைத்த இச்சூத்திரர் தந்திரச்சூழ்ச்சி அம்மம்ம! மிக அதிசயிக்கத்தக்கதாம்!! இக்கொடுஞ் செயலைக் கேள்வியுற்ற நாம் "வைதிகசைவ"ரென்பவர் எழுதிய தமிழ் வாரத்தையான வச்சிரலேபத்தை இவ்வாக்கிய ரசனையாகிய வச்சிரகுலிசத்தால் அழித்து இனி அவர் வாய் திறவாவண்ணம் செய்வோம. அவர் இனிமேலாவது மௌனமாயிராமல் வேறேதேனும் தூஷிக்க எழுவரேல் அப்பொழுதே நம் வாக்காகிய வச்சிர முசலத்தால் அத்தூஷணைகளைத் தூள் தூளாம்படி சிந்தவடிக்கச்சித்தமாயிருக்கின்றோம

இங்ஙனம,

சிதம்பரம் ஸ்ரீமத், ப்ரம்மஸ்ரீ

பரமேசுவர தீக்ஷிதரவர்களுடைய

சிஷ்யர்களில் ஒருவன.

Koviloor Digital Library

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMA VIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

சு புத்தகம்] சிதம்பரம். கரஙு பங்குனிமீ" கஎ-உ [இலக்கம் க

ஜகத்குரு தூஷண தூரீகரணம்.

வைதிகபாநுவாய் உலகெலாம் புகழ்பெற்ற ப்ரம்மவித்தையின் ௫-ம் புத்தகம் உக-ம் இலக்கப் பத்திரிகைக்கண் "மடாதிபதிகளும் ஜகத் குருக்களும்" என்னுமகுடத்தின் கீழ் ஸ்ரீஜகத்குரு சங்கரபகவத்பாதாசாரிய சுவாமிகள்மகிமையை யாவர்க்குந் தெரிவிப்பான ப்ரம்மவித்தியா பத்திராசிரியர் சிலவசனங்களெழுதியிருத்தலை நம்வைதிக மகாஜனங்களனைவரும் அறிந்திருப்பார்களன்றே. அவரங்ஙனமெழுதிய வாசகங்களை "வைதிகசைவ"ரென்னு நாமந்தாங்கிய வொருவர்கண்டு அழுக்காற்றுற்று, கரஙு பங்குனிமீ" கஉ யிற்பிரசுரமான ஞானாமிர்தம் உ-ம் இலக்கப்பத்திரிகையிற் பற்பலவசனங்கள் பகர்வாராயினர். அவர் கூறியஅவ்வசனங்களனைத்தும் அழுக்காற்றின் மீதூரலினுற் கிளர்ந்த பயனில் சொற்களாமன்றி நியாயம் பயப்பதொரு நல்லுரையாகாவா மென்பதனை நம் வைதிகமேன்மக்கள் உணருமாறு சண்டதூரீகரணம் செய்யுமுகத்தாற் காட்டுமென்றும்.

ஜகத்குரு நாமவிசாரஞ் செய்யவெழுந்த அந்நண்பர் தாம்வைதிக சைவரென்கின்றார். இவர்வைதிக சைவரெனின், இவர் சமயக்கொள்கை யாதோ? அக்கொள்கையை விளக்கும் நூல்கள் எவை? அந்நூல்களின் வழி வைதிகசைவ சமயக்கொள்கையை நிறுத்திய நல்லாசிரியர் பரம்பரையாது? அவர்கள் இப்பொழுது ஆசரிக்கும் ஆசாரங்கள் எவை? அவைகட்குப் பிரமாணத்தன? என்றித்தொடக்கத்த வாசகங்கட்கிறைவிடுக்கவொணாதின்றார். என்னை? வைதிகர், சைவர் என்னும் இருவேறுநாமங்கள் தனித்தனி மதத்தார்க்குச் சிறப்புப்பெயராய்ப்பெருவழக்காய் வழங்குவதாக, அவ்விருவேறு சொற்களையும் ஒருசேரத்தொடுத்து இவர்போல்வார் நவீனர்சிலர் இக்காலத்துச்சிறுவழக்காய் வழங்குவதன்றி ஏனையோர் வழங்காமையானென்க. இனிஅவர்வைதிகசைவராவார் ஆதிசைவரும் மகாசைவரும் வேறுபல பகுதியரும் எனமுன்னர் விளக்கினாரெனின், அற்றன்று, அதுவும் நவீனவழக்கேயாய் மேலையவிசாரத்துளடங்குதலின்,இவர்இவ்வாக்குப்பிறன்றும்ஆசங்கை விளைப்பதொன்றேயாம்.அன்றியும்ஆதிசைவர்மகாசைவராதியோர் சித்தாந்தசைவரென்றலேபெருவழக்குமாம். மேல் இவர்வைதிக சிரேஷ்டர்களாகிய ஸ்ரீ தில்லைவாழந்தண முனீந்திரர்களை ஆதிசைவர் மகாசைவர் போல்வதொருசைவரென்கின்றார். ஆதிசைவர் மகாசைவராவார் ஆகமநூற்படிசமய விசேட நிருவாண தீக்ஷைகள் பெற்று அபிடேகம்புரிந்து சித்தாந்த சைவத்திறம் பேணுபவர். தில்லைவாழந்தண முனீந்திரர் அங்ஙனஞ் சமய விசேடாதி தீக்ஷைகள் வேண்டாராய்வேதோக்தமான நித்தியகருமங்களையும் யாகாதிகளையும் நடைவறப்புரிந்து வைதிகசிரராய் அத்துவித சித்தாந்தத்தே பணிப் புகழ்பெற்றோங்குபவர். இவ்வுண்மை கண்சிதம்பரபுராணமுதலிய வற்றால் இனிதுவிளங்கும். இங்ஙனமாக, இவர் இருவேறு வகைப்பட்டமதத்தினராய அவர்தம்மை ஒருசேரவைதிக சைவரென வகுத்தற்கு அவர் உடம்படுவரா? மற்றோர் தாம் ஒப்புவரா? ஒருபோதும் ஒப்பாரென்க. அங்ஙனமாயின் இவர்காமும் ஆதிசைவர் மகாசைவரும் தில்லைவாழந்தணரும் வைதிகசைவராமெனவழங்கிய சொல் பயனில் சொல்லாமன்றிப் பிறிதென்னுங்கொல்! இனி இவர்வைதிகர்சைவரென்னும் இருவேறுபெயரை ஒருசேரவைத்துத்தாபிக்கப்புகினும் அப்பெயரை மேற்கூறிய இருசாராருள் ஆதிசைவர் மகாசைவரிற் சார்த்துவரோ? அன்றித்தில்லைவாழந்தணரிற் சார்த்துவரோ? எவர்பாற்சார்த்தினும் அதுவும் பெருவழக்கிற்கேயிடனாமென்க. இனி இவர் தில்லைவாழந்தணரையே வைதிகசைவரெனக் கூறித்தாமும் அவர்கொள்கையினரென்பராயின், தில்லைவாழந்தணர் சங்கராசாரியார் கொண்ட மதமாகிய அத்துவிதசித்தாந்திகளாதலால், இவர் அவர்கொள்கையினராவரோ? அக்கொள்கையினராயின் அத்துவிதமதத்தையும் அம்மதபிரதிஷ்டாபனாசாரியராயசங்கரரையும் நிந்திப்பரோ? இவர்அவ்வாறுநிந்தித்தமையாலும் அப்பத்திரிகையிற்கூறும் பலவசனங்களாலும் சித்தாந்த சைவக்கொள்கையுடையாரென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. ஆகவே, தங்கொள்கைக்கு மாறுபட்ட மகிமைபொருந்திய ஸ்ரீ தில்லைவாழந்தணரைத் தம்மவரும் தாமும் பெருங்குரவர்களாகக் கொண்டு வழிபாடுசெய்து போதருகின்றோமென்று நண்பர் கூறித்துக் கூறிய சொற்சம்பிரமம் சண்டியோதாய்முடியுமோ! இனிநண்பர்கூறிய அவைபற்றி எழுந்த இன்னோரன்ன நியாயங்கள் இவர் தம்பெயராற்பிழைபடுதலை இனிது விளக்குமென்க.

இனி இவர் பத்திராசிரியர் பகவத்பாதசங்கராசாரிய சுவாமிகளை ஜகத்குருவென்று கூறியதன்மேல் விசாரஞ்செய்வாராய், அவர்க்குப்பெயர் பொருந்துமாறெங்ஙனமென்கின்றார். அப்பெரியர்க்கு இப்பெயர் பத்திராசிரியர் புதிதாக இடத்தொடங்கினன்றே அதுபொருந்துமாறு யாங்ஙனமென இவர் ஆசங்கிக்கவேண்டும். ஜகத்குருவென்னும் சிறப்புப்பெயர் அவர்க்குப்புதிதன்றே. இவ்வுலகெங்கும் அவர்க்கப்பெயர் பெருவழக்காகவழங்குவதொன்றாம். அதுமட்டோ, எத்திசையோவரசர் சமஸ்தானங்களிலெல்லாம் பூர்வசாசனங்களில் நிலைபெற விளங்குவதொன்றாம்; அதுமட்டோ, மேற்றுத்தேசமதவேத்தராகிய மாட்சிமைபொருந்திய ஆங்கிலேயரசினர் தாமும் ஒத்து மதித்து வழங்குவதொன்றாம்; அதுமட்டோ, அவ்வரசினர் தம் சாசனங்களிற் பதித்து வைத்திருப்பதொன்றுமாம்; அதுமட்டோ, பூர்வகாலத்திருந்த நால்வி

Koviloor Digital Library

ப்ரம்மவித்தியா அநுபந்தம்.

கள் பௌத்தர் முதலியோராலும் இடைக்காலத்தேவந்த மகமதியராலும் ஒத்துக்கொள்ளப்பட்டதொன்றும்; அதுமட்டோ, பத்தினியோ வெளிசாசனங்களிலும் செப்பேடுகளிலும் துலங்குவதொன்றும்; அதுமட்டோ, பத்தினியோமலைகளிலும் இமாலயருஷ்யத்திலும் காட்டப்பட்டுப்பிரகாசிப்பதொன்றும்; பொருட்படக்கூறின் உலகெங்கணும் வியாபகமுற்று விளங்குவதொன்றும். இங்ஙனம் அவர் திருவடியாரத் தொண்டர் முதல் இக்காலகாறும் பலராலும் மதிக்கப்பெற்று விளங்குவதாய ஜகத்குருவாசகத்தை இந்நண்பர் இன்றி விசாரமுற்றுவிலக்கவென்றுதல், விக்கடல் குழ்க்குவலயத்தை முப்பியவாயான் விழுங்கவெப்போன் கருத்தினைக்கொத்தும் பிறுயர்தமக்கும் பெருக்கலை விளக்குமென்க.

இனி அவர் இன்னும் பற்பல மடாதிபதிகளும் உளராக அவர்தம்மை ஜகத்குரு வென்றல் அநீதியாமென்பன்றுர். பனைய மடாதிபதிகளையும் ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகளோடு சமப்படுத்தி வழங்க நண்பர்க்குப் போவாவனதேபோலும். சங்கராசாரியசுவாமிகள் இப்பாரதகண்டமெங்கணும் பன்முறை திக்குவிஜயஞ்செய்து நாஸ்திகர் பௌத்தராதியாம் புறமதத்தரை வாதில்வென்று ஜெயக்கொடிகாட்டி எம்மதத்தரும் தம்முன்முனைத்துநிற்க வாற்றலின்றிப்புறந்தொடைக்கீழ்க்கவிழ்ந்தபோல் நமக்கோரிணையின்றித்திகழ்ந்து, எவ்வாசாரியர்க்கும் எம்மடத்தவர்க்கும் கிட்டுதற்கரிய விருதுகள் பலபெற்றுவிளங்கி, இன்றும் அவைகளைமாறுமற்பெற்றுவருகின்றனரே. அதுபோல் மற்று எந்த மடாதிபதிகள் உளரோ? அவர்போல "ராஜாதி ராஜகுரு பூமண்டலாசாரியர் என்னும் விருது பெற்றுடையார் எவரோ? இன்னும் குடைக்குப்பல்லக்கிட்டு செல்லல், கயிலமெண்டாரால் குங்கிலியமுதன் முதலாம் மரியாதையோடு உபசரித்தெதிர்கொள்ளப்படல், ராஜாதிராஜகுரு பூமண்டலாசிரியர் என்னும், ஷட்தர்சனஸ்தாபனாசாரியர் என்னும் விருதுபூண்டுசெல்லல் ஆகியஇவை எவ்வாசிரியர்க்கும் மடாதிபதிக்குமுளதாமோ? இவையெல்லாம் நமது சங்கராசாரிய சுவாமிகட்கு உளதாதலை இவர் எப்போதும் கண்டேனுங்கேட்டேனுமிரார் போலும்! இன்னும் சங்கராசாரியசுவாமிகள் திருமடாலயத் தெருவழியே ஏனைமடாதிபதிகள் பல்லக்கேறிச் செல்லப்படாதிருத்தலையும், அவர் குடைக்குப்பல்லக்கிட்டு வருங்கால் பிறமடாதிபதிகள் எதிர்ப்பல்லக்கு விருதுகளோடு வரமாட்டாதிருத்தலையும் அந்நண்பர் கேட்டிலர்போலும். இவையெல்லாம் ஏனைமடாதிபதிகளினும் சங்கராசாரியசுவாமிகள் மேம்பட்டவர் என்பதைக்காட்டுதலை இந்நண்பர் உணராததென்கொல்லோ! இன்னும் இந்நண்பர் சங்கராசாரியர் ஜகத்குருவாயது தத்துவப் பிரபஞ்சத்துட்பட்ட புவனகோடிகளனைத்திற்குமோ அன்றி இவ்விந்தியதேசத்திற்கு மாத்திரமோ. அன்றிப்பரதகண்டத்துள்ளார் யாவர்க்குமோ, ஆரியமகாஜனங்களனைவர்க்குமோ எனத்தமதே சிலவினாக்களெழுப்பி, விடையும் விடுத்து, முடிவில் இத்தன்மையெல்லாம் அகப்படுத்திச் சங்கராசாரியர்க்கு ஜகத்குருப்பிரயோகம் வழங்கியிடமுமில்லது பெரிதேயா ... எனத்தீர்ப்புமளித்திட்டார். இவைகட்கெல்லாம் விடைபதிராக எடுத்துக் கூறவேண்டியதின்றாம். சங்கராசாரிய சுவாமிகள் பெற்றுள்ள விருதுகளின் அவை யடங்கியிருத்தலால், அதனை இப்பத்திரிகையின் முற்பக்கத்தில் பதிப்பித்திருக்கின்றோம். நண்பர் அதனைத்தரிசித்து அதன்பொருளை உள்ளவாறுணர்ந்துய்வாராக.

இனி நண்பர் மடாதிபதிகள் விஷயமாக வந்த இவ்வழக்கில் உதாரணமாக ஓர் மடாதிபதியையேனும் எடுத்துக்காட்டாது இவ்வழக்கிற்கு யாதொரு சம்பந்தமுமில்லாத ஸ்ரீ தில்லைவாழந்தணமுனிந்திரர்களையும் ஆதிசைவ மகாசைவரையும் எடுத்துப்பேசியோ இழித்துப்பேசுகின்றார். மடாதிபதிகட்குதாரணமாக மற்றோர் மடாதிபதியை எடுத்துக்காட்டுதலே முறையாம். தில்லைவாழந்தணமுனிந்திரர்களும் ஆதிசைவரும் மடாதிபதிகளன்றே! அங்ஙனமிருக்க அவர்தம்மை இவர் இங்கெடுத்துப்பேசியது என்னபயன்குறித்தோ! இனித்தில்லைவாழந்தணமுனிந்திரர் தம்மை வைதிகராவார் பலரும் வணங்கற்பாலரா மென்றார். வைதிகசிரேஷ்டர்களாகிய அவர்தம்மை வைதிகர்மாத்திரமோ மற்று எத்திறத்தவரும் என்றும் வணங்கற்பாலரேயா மென்பதை இவரினும் நாம் பன்முறைமுற்பட்டு நின்றுசொல்வோம். சைவசமயாசாரியருள் ஆதிசைவசிகாமணியாகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளே "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்று திருவாய்மலர்ந்தருளியமையால், வைதிகர்மாத்திரமா, ஆதிசைவர் மகாசைவராதியோரும் அவ்வைதிகரவர் திருவடிமுடிமேற்சூட்டி வணங்கற்குரியாரென்பது தெற்றென விளங்குமென்க.

இனி ஷை ப்ரம்மவித்தியா பத்திரிகாசிரியர் சிருங்ககிரியில் தற்காலத்தெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சச்சிதானந்த நரசிங்க பாரதியவர்கள் பெருமையை எடுத்துப் பேசுமிடத்து அவர் ஒழுக்கங்களைப்பாராட்டி இவர்கள்செய்யும் நித்தியாசாரங்களையே மற்றவர்களும் குருவாகக்கொண்டு ஆசரிக்கத்தக்காரெனக்கூறுவாராக, நண்பர் அதனையும் விசாரிக்கப்புகுந்து சைவவைஷ்ணவ அநுஷ்டானம் பேணும்மடாதிபதிகளும் இவர் ஆசாரத்தினைக் குருவாகக்கொள்ளல் எவ்வாறு எனவினர்; அவைபற்றிப் பயனில்லாத பலமொழிகள்புகன்று மிகஅதிசயித்து அளவுகடந்த நகையும் நகைத்திட்டார். அதைக்கண்ணுற்றபொழுது இவர் அறிவு கடந்தவாறிதுவேயோ வென எமக்கு யிருக்கையெழுகின்றது! யாதினுலெனில், சங்கராசாரியாரது வைதிகமத சித்தாந்த மடாலயங்கள் இத்தேசத்தில் எத்தனையோவுள்ளன. அவைகட்கெல்லாம தலையாயது இச்சிருங்ககிரிமடாலயமாம். ஆதலின், தலையாய இம் மடாதிபதியின் ஆசாரமே மற்றையமடாதிபதிகளும் ஆசரிக்கத் தக்காரெனக்கூறின், அது அவர் மதத்தைச்சார்ந்த மடாதிபதிகட்கே சொல்லத்தக்கதாமென்பது இனிது விளங்குவதாக, அதன்மேல் இவர்விசாரமின்றி வலித்து தலையிட்டுக்கொள்வது நியாயமாமோ? இவ்விஷயத்தில் இவர்மதி இவ்வாறுயதென்கொலோ! பத்திராதிபர் பிறமதமடாதிபதிகளை எங்கேனும் சுட்டிக்காட்டியிருப்பினன்றே இவர் இவ்வாறு வாதிக்கவெழல்வேண்டும்.

இன்னும் ப்ரம்மவித்தியாபத்திரிகாசிரியர் கலிமகிமை மிக்கஇக்காலத்து மற்றெத்தனையோ மடாதிபதிகளெல்லாம் தங்காலத்தைத் துஷ்கிருத்தியங்களில் செலவிட்டொழிப்பாராக, இவர் நல்லொழுக்கத்தோடு தம் ஆசாரியத்துவத்துக்குரிய கடமையைக்கைவிடாது அநுஷ்டித்து வரும் தன்மை நோக்கி அப் பெருமை பேசவந்து அவர்க்குள்ள சிறப்புக்களையும் கூறிவிட்டாரே யன்றி மற்றுள்ள மடாதிபதிகளைக்குறித்து வாக்குவேண்டுமென்பது அவர் கருத்தன்று. அங்ஙனமாக, நண்பர் ஓர் எதுவுமின்றி வலித்துபுகுந்து சொற்களைத் திரித்துப்பொருள் கொண்டு இல்லாதனவும் பல புகன்று, சைவர் வைஷ்ணவர் ஸ்மார்த்தர் மாத்துவரென்னு மித்திறத்தார்க்குள் கலகம் விளைத்துக் களிகூர எண்ணங்கொண்டே இவ்வாறு எழுதிவிட்டாரென்பது பத்திரிகைகள் இரண்டிலுமுள்ள "மடாதிபதிகளும் ஜகத்குருக்களும்" "ஜகத்குரு விசாரம்" என்னும் இருவிஷயங்களையும்படித்தறிவோர்க்கு இனிதுவிளங்கும்.

இனி நண்பர் இம்மட்டிலடங்காது மேலும் வருவரேல் சங்கராசாரிய சுவாமிகளது அளவிறந்தபெருமைகளை இன்னும் நன்கு விளக்கிக்காட்ட முன்வரச்சன்னத்தமாயிருக்கின்றோம்.

ஓர் நாவலர்

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீ ஜகத் குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீ முகத்தின் நகல்.

ஸ்ரீ
வித்யா
ஶங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதி பூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையை

ஆதரித்து வருவதர்க்குக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீராமஸஹாயம்.

நமது பிரியமுள்ள வைதீக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ ஹூ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸம்ஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்தலிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

ராமேஸ்வரம்,
துவாரவி உஅஉ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,

ஸாஸ்ரபௌதபதி:.

Koviloor Digital Library

[illegible]

பஞ்சாங்கம்.

ஜப சிதிதகவனியுங்கள்.

இக்காலத்தில் இருவகையாய் பஞ்சாங்கங்கள்வெளியாகின்றன. "பாமிதகனிதம்" என்றும் "திருக்கித்தம்" என்றும். இதன் முற்பகுதியில் உட்பிரிவு அளவற்றது. அதில் எங்கும் வெகுகாலஞ்சென்ற ஓர் வைணவர்பெயரே போடப்பட்டிருக்கிறது. இவ்வகைக்கணிதம் செய்பவர் எவ்வளவும் கனிதவிஷயத்தை யறியாதவரே. இக்கணகர் எவரும் "கிரகம் இது" என்றும் அவை சுழலும் வழியையும் க்ஷத்திரம்,ராசிஇவற்றின் வேற்றுமையையும் சிறிதும அறியார். அவர் என்னுவதுமட்டில் கனிதசாஸ்திரம் முற்றிலும் அறிந்திருக்கிறோம் என்று. ஒருசமயம் எவரேனும் பதார்த்தங்களைச்சோதித்து உண்மையையறிந்து இவரைஏதேனும்கேட்கநேர்ந்தால், இவர் தம்மட்டில் அவ்வஞ்ஞானத்தை நிறுத்தாது பெம்மேலும் ஓட்டி எம்முதறிஞரிடமும் செலுத்திவிடுகிறார்கள். இனி திதி என்பது யாது எனில், சிலர் அவை!சிலசக்தி தேவதைகள் என்றும் சிலர் கனிதத்தால் அறியக்கூடிய தேவதைகள் என்றும் அவர்கள் புத்திக்கெட்டியபடி சொல்லுவார்கள். மற்றுஞ்சிலர் "மேற்றிசையார்கண்டபடிஎழுதவதே திருக்கித்தகனிதம்எனப்படும்'ஆகையால் அதை எம்வைதிகராய்இருப்பதெம்புதல்கூடாது;எமமவர் தப்பாகக் கனித்தாலும் அதே எமக்குவேண்டும்" என்பர். இதை எல்லாம் தவிர கிராமவாசிகளின் அவிவேகத்தை இவ்வளவெனச் சொல்லமுடியாது. அவர் "இது காகிதத்தில் அச்சிட்ட முக்காலனுப் பஞ்சாங்கம்;எட்டேப்பஞ்சாங்கத்திற்கீடாகுமா,என்று அதட்டிஎட்டேப்பஞ்சாங்கமே சுத்தமென்கிறார்கள். கிராமாந்திரங்களில் ஏதோ சிலபண்டிதர் கனிதத்தைச் சிறிதும் அறியாது கூட்டக்கூடி "எங்கள் பாட்டனார் காலத்தில் இந்தப்பஞ்சாங்கந்தான் அனுஷ்டானம்"எனச்சொல்லுகிறார்கள். இவர் பாட்டனும் மற்றவரும் அனுஷ்டித்ததால் மட்டில் அதுசுத்தமோ? அவர்க்குக்கனிதம் தெரியுமோ? அந்தோ! . இவ்வசமபுத்திகள் கனித்ததாகச்சொல்லும் பஞ்சாங்கம் மெய்யென்று விளில்நம்பி கெடுங்காலம் நம்மவர்க்கு வந்ததே. அம்மம்ம! கலிகாலக்கொடுமையாதுரைப்போம். ஊமையன், வேதோச்சரண விஷயத்திலும் முடவன் கலாத்துவித்தையிலும் செவிடன் சங்கீத வித்வதயிலும் குருடன் சோதிடத்திலும் தேறியவராய் மதிக்கப்படுகிறார்கள்.

Koviloor Digital Library

[illegible]

இங்கு இதுவரையில் சோதிடம் காசுபாய் அறியக்கூடிய சாஸ்திரமாக விருந்தது. அது பிரத்யக்ஷமாவதற்கு சூரியனும் சந்திரனும் சாக்ஷிகள். இவ்விதப் பெருநூல் இக்கால கணகப்போலிகளால் அடியோடு கெடுக்கப்பட்டது. அந்தோ! இக்கால கணகர்களுக்கு கோளவிஷயம் சிறிதும் தெரியாது. ஒழிந்தாலும் ஏதோ எவரோ கட்டிவிட்ட ''இர்ணச்சி ரேவ'' முதலிய வாக்கியங்களைப் படித்து அதுகொண்டே தாம் இனி கணிதத்தில் அறியவேண்டியது ஏதுமில்லை என்றும் தாம் அறிந்ததினும் அதிகம் மற்றவர் அறிந்தாரில்லையென்றும்,நம்மவருள்பண்டிதர்தர்க்க வியாகரணங்களைப் படித்தாரே ஒழிய இவர்க்குக்கணிதவழி சிறிதும்தெரியாதாகையால் அதை முற்றிலும படித்தவர் தாம் பொய்ப்பெயர் தரித்து அவரிடம் யோக்கிதா பத்திரிகை பெற்று சந்தோஷிக்கிறார்கள். உதாரணமாக, சிறிதுகாலத்துக்கு முன் கணிதம் சிறிது தெரிந்தவரும் மற்றவரால் பெரிய கணகர் என நம்பப் பட்டவருமான ஒருவர் புராணங்களால் தானறிந்திருக்கும் கோளத்தை ஒன்று எழுதி எனக்குக் கொடுத்தார். அது நலா மேஷமாசச் சாலைகளுக்கு முற்றிலும் மாறாக முடிந்தது. அவருக்கும் இப்பொழுதுள்ளவர் அறிவிற்சிறியவரே பொறியவேறில்லை. இவர் மனதில் உலகம் கோளமென்பதும் கூடப்படவில்லை. இனி திருக்கித்த பஞ்சாங்கம் காசியில் ப்ரம்மஸ்ரீ பாபுதேவ சாஸ்திரிகளால் கணிக்கப்பட்டுவருகிறது. பூனாவில் கணித்துவந்த ப்ரம்மஸ்ரீ லக்ஷ்மணசத்திரே என்பவரால் கணிக்கப்பட்டது. அவர் இப்பொழுதில்லையாதலால் ஷைபார் சிடர் ப்ரம்மஸ்ரீ பலவந்தராவு கேத்கே அவர்களால் நடத்தப்படுகிறது. சந்தேயத்தில் திருவையாற்றில் ப்ரம்மஸ்ரீ வெங்கடேசதீக்ஷிதர் அவர்கள் கணிக்கிறார்கள். இவர்கள் கணிதப்பயிற்சியைவிரைந்துரைக்கப் புலவரில்லை. அவர் எழுதும் பஞ்சாங்கத்தில் அறிஞர் பரிக்ஷிக்கத்தக்கதும் அறிந்து வியக்கத்தக்கதுமான விஷயங்கள் பலவுள. இவரும் பஞ்சாங்கத்தை எம்பாலனுப்பிய அப்பஞ்ச கர்த்தனுக்கு அனேக வந்தனமகமகிழ்ந்தளித்தனம். மற்றது மற்றொரிடம்.

"ரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கமும்"
"ஸ்ரீ நடராஜர் தினசரி ப்பஞ்சாங்கமும்"

ஜய, இப்பெயர்வாய்ந்தபஞ்சாங்கங்கள்இரண்டுமிப்பொழுதுவெளிவந்துளவாயதைக்காணலாம். இவைகளில் பஞ்சாங்கமட்டுமல்ல- தினசரி எழுதவும் தசாபுக்தி முதலிய சோதிட விஷயங்களையும் பலவிதப் பொருத்தங்கள் முதலிய அனேக வேறுவிஷயங்களையும் தனது திருமேனியிற்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ளுடேத்துலாவும் இது, தன் கையிலிருப்பின் அனேக ளங்கதிகள் அடுத்த தோழன் ஒருவன் கூடவிருப்பதாக நினைக்கலாம். இவற்றுள் முதன்மை பெற்ற பஞ்சாங்கம் சுமார் ஏழு எட்டு வருடங்களாக நடைபெற்றுவருகிறது. இதன் சாயலாக தெலுங்கு நாட்டவர்க் குபயோகமாகும்படி ஒருசெதலுங்கு பஞ்சாங்கத்தையும் தமக்குள்ள அனேபாய்ப்பெற்றது. இது மேது நாட்டின்பரமோகாரியாயெரியுவன் பிரின் படத்தை முன் வைத் தமைக்கப்பட்டது. மற்றது ஸர்வலோக பரமோபகாரியான ஸ்ரீமதானந்த நடராஜன் திருவுருவத்தையும் தன் அவயவமுகத்தவிர்த்து நிற்கின்றது. இவ்விரு பஞ்சாங்கங்களும ஒரு மாதிரியாயும் ஒரே விலையாயும் தகப்பன் குமாரர்களால் வெளியிடப்பட்டன. இவ்விரு பஞ்சாங்கங்களையும் எமக்கு அனுப்பிய அவற்றின் சொந்தக் காரர்களுக்கும் அவர் பஞ்சாங்கங்களுக்கும் பல்லாண்டு கூறிப்பாமேசுரனைபிரார்த்திப்போம்.

விக்கிரகாராதனம்

தொடர்பு.

பவப்பிணியை நீக்க இக்கலியில் வேறு யாதொரு மருந்துமில்லை. கலியை வெல்ல வெவ்வேறு மார்க்கமும் கிடைக்காது. இக்கலியோ, உன்னை மதமாகிய வைதிகமதமிருக்க,பல பரமதங்களில் ஆரியர்களையும் இயக்குகின்றது. அந்தணர்களே! பெரும்பாலர் காலைமாலைகளில் சூரியனுக்குச் செய்யுந்தர்ப்பணத்தை மாற்றி அச்சந்தியைக்கே தர்ப்பணஞ் செய்துவிடுகிறார்கள். அவர் திருநாவில் இருபத்தி நான்கு எழுத்துள்ள காயத்திரிக்குப்பதிலாக இருபத்தாறு எழுத்தடலமைந்த ஆங்கிலேயர் பாஷை உலாவுகின்றது. இக்காலம் லோபமென்னும் புரசிற்குழியைவெளிப்பருவமும், காமமென்னும்பாதிரிமாதத்திற்கு தழைவெளிப்பருவமும், கோபமென்னும்கடம்பத்திற்குகார்ப்பருவமும், மோகமென்னும் சணலுக்குகூதிற்பருவமும், மதமென்னும்பனிபெய்யு முன்பனிப்பருவத்திற்கும்மாத்ஸரியமென்னுஞ்ஜாதிப்புஷ்பத்திற்குப்பின்பனிப்பருவமுமாக முடிந்தது. இக்கலி நமது பூர்வாராய்ப்பத்துடன் கூத்தாடுமிவ்விடத்திற்றான் யாம் குடியிருக்கவேண்டியது. ஆதலால் அறிஞர்களே! இக்கூத்தைக் கண்டுத்தாக்காது விழித்திருங்கள்! இவ்விதப்பெருத்திக்குகளை விலக்கப்பிம்பங்களில் கடவுளை வழிபடுதலன்றி வேறு வழி இல்லை.

ஒப்பம்.

இலத்தூர்ச்சக்ர ராஜசாஸ்திரி.

மொழிபெயர்ப்பு.

Koviloor Digital Library

[illegible]

உத்தரராமசரிதம்.

ஹநுமத்விஜயநாடகம்.

[illegible]

அநுமத் விஜயநாடகம்.

இப்பெயர் வாய்ந்த ஓர் நாடகம் ஸ்ரீசுந்தரராஜகவியென்னும் ஓர் கவி மன்னனுலியற்றப்பட்டது. இவர் மலைநாடென்னும் தர்மராச்சியத்தில் இலத்தூர் என்னும் அக்கிரகாரத்தில்வாழ்பவர். ஸ்ரீராமபத்திரவிஜயமுதலியபலபிரபந்தங்களை இயற்றி அதனுலும் சற்கவியெனப் புகழ்பெற்றவர். அவரியற்றிய இந்நாடகம் வீர ரசத்தை விஜய ரசமாகக்கொண்டது. அதில் நாயகன் சகலவீரசிகாமணியாகிய அநுமந்தர். இதிலுள்ளசரித்திரம் தத்துவசங்கிரக ராமாயணமென்னும் ஓர் கிரந்தத்தில் அடங்கியுள்ளதாம். இதில் அநுமான்செய்த மயிராவணவதம் கூறப்படுகின்றது. இவ்விஷயத்தைப்பற்றிய நாடகம் இதுவரையில் யாவரும் செய்திலர். இந்நாடகம் சொற்சுவை பொருட்சுவை முதலிய பிரபந்த லிலக்கணம் நிறையப்பெற்றது. இக்கவி இயற்றிய வைதர்ப்பீ வாசுதேவம் முதலிய சில பிரபந்தங்கள் அச்சிடுவிக்கப்பட்டும் பத்மினிபரிணய முதலிய சில அச்சிடப்படாமலுமிருக்கின்றன. அவற்றிலும் இந்நாடகம மிக உயர்ந்த நடையோடமைந்ததென்பதற்கு யாதும் தடையில்லை. ஆராயப்புகின், இது இங்ஙனம் அமையவேண்டியதற்குத் தக்க காரணங்கள் பலவுள. ப்ரம்மவித்யா சம்பிரதாயத்தில் தனதாசிரியனும் பரமாசிரியனும் ஓரிடம் சேர்ந்திருந்தால் அவ்விடம் தம்மைநேரில் ஆட்கொண்டு தமக்குநல்வழிகாட்டிய அவர் தம்மாசிரிய ராதலால் அவரையே முதற்கண் வழிபடல்முறையாம். இனிஅவர்க்கு அவராசிரியர் ஞானதாதாவெனக்கொண்டு அவரை நாம் வழிபடுவோமாயின், அவர்க்கோராசிரியர்மற்றவர்க்கோராசிரியரெனஉலகசிருஷ்டிவரையில் தொடர்ந்து நிற்றலால் வழிபடவேண்டியவராயினர் முறைவரம்புடைத்தோடி அநவஸ்தாதோஷமெய்திடும் ஆதலால், இவர்க்குநேரில் உபாஸ்யமூர்த்தியாயுள்ளவர் அநுமான். அவர்க்கு ஸ்ரீராமமூர்த்திமுதலிய ஆசிரியர் இருக்கினு மிருக்க. தமது உபாசனுமூர்த்தியிடம அவரருளால் தமக்குக் கிடைத்த அற்புதசாமர்த்தியத்தை விவியோகிப்பதுசியாயமன்றோ. இனி இப்புத்தகம் தெலுங்குலிபியில் கல்லகடிதத்தில் மிக அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தைச்சோதித்தவர் மட்டும் புத்தகத்தைப் பிழை மலிய வைத்துவிட்டார். இப்பகா காவியத்தைப் பார்த்து மனதிற் சுவை சார்ந்து பெருகிவருங்காலத்து ஓர வழுச்சொல் குறுக்கிட்டு அச்சுவை வழியை மறைத்துத் திருத்தப் பக்க மிருக்குமிடம் மனதைத்திருப்பி விடுகிறது. இவ்விதம்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அச்சிடுபவர் செய்யும் அநீதி அநேக புத்தகங்களில் உண்டாகின்றன. இனி அறிஞர்கள் இப்புத்தகத்தைப் படிப்பாராயின் சந்திரவிடத்தமைந்த களங்கத்தை லக்ஷியஞ் செய்யாதொழிவதுபோல் இக்குற்றத்தையும் பாராதொழிவர். இனிஇவ்வைகாசை கவிமணி பற்பல நவீன காவியங்களைச் செய்து இக்காலத்தும் நற்கவிகளுளரென்னும் புகழை உண்டாக்குவாரெனவும், நிலைத்துக்கோர் நாடகம் நிட்டமாயியற்றும் நாவன்மை பெற்ற மற்றைய கவிவாணருடன் கலந்து தாமும் அவருமாய்ப்பல நவீன நற்காவியங்களை இயற்றி இப்பாதகண்டத்தை அலங்கரிப்பாரெனவும் எதிர்பார்க்கின்றோம்.

ஆரியசித்தாந்த சந்திரிகை.

இப்பெயர் பூண்ட தோர்பத்திரிகை சிறிதுகாலமாய்ப் மலைநாட்டிலுதித்து வெளிவருவதை அந்நாட்டவர் நன்கறிந்திருக்கலாம். அஃது பற்பல முறை பலவழிகளாய் வெளிவந்து மலைநாட்டவர்க்குப் பரமோபகாரம் புரிந்து ஆங்காங்கு பற்பல சபைகளைத் தோற்றுவித்துப்பற்பல துண்டுப்பத்திரிகைகளாலும் பற்பல உபந்யாசங்களாலும் உற்சவ காலங்களிலும் ஜனங்கள் கூடும் மற்றெவ்விதக்கூட்டங்களிலும் மதாபிமானத்தை வளர்த்தற்குப்பெருங்காரணமாயிருக்கிறது. இப்பத்திரிகையை நடத்தும் ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகளென்பவர் பல நன்முயற்சிகளைச்செய்து ஆரியமதோத்தாரணம்செய்யமுயன்று வருகின்றார். அவர் விடாமுயற்சியால் "பாரதி" என்னும் பெயருடைய ஓர் சபை பாலக்காட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சபையின் விதிகளும் நோக்கங்களும் ஆரியர் மனதைக் கவராதொழியாது. நம்பிரபுக்களும் மற்றவரும் அதை ஆதரிப்பாராயின் புறமதப்பெருங்காற்றால் வாடிய ஆரியமத நற்பயிருக்குக் காலத்திற்பொழிந்த நன்மழையாய் அது முடியுமென்பதில் யாதும் தடையின்றாம். அச்சபையின் உத்தேசங்கள் பலவிருப்பினும் முக்கியமாக இரண்டு அம்சங்களுள்ளன. அவையாவன:— வேதங்களை முறையே கற்பித்தலும் அவைதிக பாஹ்ய மதங்களைக்களையும் வழிகளைப்பலர்க்குப் பயிற்றுவித்தலுமாம். இவ்வுத்தேசம் பயன்படுமேல் எம்மவர்க்கு உண்டாகும் ஆனந்தம் ஓரளவிலடங்காதாதலின், இப்பத்திரிகையும் சபையும் வளர்ந்தோங்க, மன்றிலாடும் இளம்பிறை சூடிய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]

அத்வைத மஞ்ஜரி.

அத்வைத ஸித்தாந்தத்தைக் கொண்டொழுகும் ஆரியர்க்கு ஓர் ஆனந்த வார்த்தை.

தஞ்சைமா நாட்டைச்சார்ந்த மாயூரத்துக்கருகில் சிவபிரான் சாவான்மாக்களுக்கும் அநுக்ரஹித்தற்பொருட்டு எழுந்தருளியிருக்கும் திருநல்லம என்னும் க்ஷேத்ரத்தில் ஆரியரை ஆதரிக்கும சீலராய் ப்ரம்மஸ்ரீ சாம்பசிவஐயரென்னும் ஓர் அந்தணரிருக்கின்றார். அவர் இக்கலிகாலக்கொடுமையை நன்காராய்ந்து அதை ஒருவாறு விலக்கக்கருதி வடநாடுகளில் வழங்கும் காவியமாலையைப்போன்ற அத்வைதமஞ்சரி யென்னும் ஓர் பத்திரிகையை நடாத்த முயன்றிருக்கின்றார். அப்பெயர்க்கிணங்க அப்பத்திரிகையின் கண் பல அத்வைதக்ரந்தங்கள் வெளியாகும். இனிப்பழைய சமஸ்கிருதங்களும் படுசோம்பேறிகளும் ஓரிடத்திருந்து எல்லாம் பொய்தானே ஏகம் பிரமந்தானே என்று பேசிவரும் போலி வேதாந்தமன்று. மற்று இப்பத்திரிகையில் வருவது ஸ்ரீமத் பரமஹம்சமது ஸூதனானந்த சரஸ்வதி, ஸ்ரீமத் பரமஹம்சகௌட பிரமானந்த சரஸ்வதி, ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதேந்திர சுவாமிகள், ஸ்ரீபரமஹம்ஸ கல்பதருசுவாமிகள்முதலிய பலபெரியோர்கள் இயற்றிய நன்னூல்களே இப்புத்தகத்தில் வெளியாகும். பண்டிதர்காள்! இந்தச்சமயம் வாய்த்ததை விடாது ஆன்றோர் அன்று அவருடலை விட்டும் இன்றுவரையில் தம்புகழுடம்போடிருக்கின்றாராதலின், அவர் புகழுடம்பாய இக்கிரந்தங்களை வாங்கிப் படித்து அதனால் நல்வழிபடையுங்கள். இதற்கென ஏற்பட்ட ஓர் சிறு பொருட்டொகையைக் கொடுக்கப்பின்னிடாதீர்கள். பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள் அருளிய சிவாத்துவித ஸித்தாந்தத்தைபபற்றி நிற்போர்க்கு இஃதோர் நற்காலமாம்.

இப்பொழுது தென்னாட்டிற் குடிகொண்டதுவைதிகர்களெல்லோரும ஒருங்கு சேர்ந்து "மத்துவஸித்தாந்தோத்தாரிணி" என்னும் ஓர் சபையை நாட்டி நடத்திவருவதை யாவரு மறிந்திருப்பார்கள். மற்றவரும் அவ்வாறு தத்தம் மதவிஷயங்களை முன்னுக்குக் கொண்டுவரலன்றோ சிறப்பாம். அங்ஙனம் ஸ்ரீராமாநுஜ முனிவர் கண்டவிசிஷ்டாத்துவைதஸித்தாந்தத்தை எவ்விதத்திலும் முன்னுக்குக்கொண்டுவர வேண்டி சென்னையில "வேத வேதாந்த வர்த்தனி"யென்னும் பெயருடன் ஓர் சபை ஸ்தாபிக்கப்பட்டு அங்கு பல வைணவர்கள் உபசரிக்கப்படு

[illegible]

ன்ருர்களன்ரு. அங்கு ஆரிய திராவிடமஹாப்ரவா கங்களில் பல புத்தகங்களை வெளியிடுவதும் பலர்க்குப்பாடங்கள்கற்பிப்பதுமாய் அவர்மதம் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இங்ஙனம் மற்றைய ஆரிய சகோதரர்கள் தத்தம் மதங்களை முன்னுக்குக்கொண்டுவர முயன்றுவிற்க நாம் அம்மதங்கட்கும் பழமையான நன் மதத்தைக் கைக்கொண்டும், பேசாது உறங்குவோமேல் நாம்செய்யும் குருகாரியம் தான் யாது? ஆன்மலாபகாரியந்தான் எது? நாம் படும் இத்துயரத்தை இவ்வத்வைத மஞ்சரி நிதொழிக்குமென்றுதோன்றுகின்றது. இவ்வத்வைத மஞ்சரியில் வெளியிட உத்தேசித்திருக்கும் கிரந்தங்களிலொன்ருவது முற்றிலும் அகப்படுவதரிது. அகப்படினும் கையொடியப் பனையோலைகளில் எழுதிவைக்கவேண்டும். ஒரு சமயம் அப்பனையேடு கை தவறினல் அதுபோன்ற மற்ருெரு புஸ்தகம் கிட்டுவதரிது. அப்புத்தகத்தை மற்ருெருவரைக் கொண்டு எழுதுவித்தால் ஆயிரங்கிரந்தங்களுக்கு ரூபா 2—8—0 வரையிற் செல்லும். அதே புஸ்தகம் அச்சில்வரின் எவ்வளவு திடமான கடிதத்திலும் அதன் விலை 0—அணுவுக்கு மேற்படாது. ஆதலால், அறிஞர்காள்! கும்பகோணத்துள்ள ஸ்ரீவித்யா யந்திரசாலையில் மேற்கண்டவருக்கு அதன் கட்டணத்தை யனுப்பி அப்பத்திரிகையை ஆதரிப்பீர்களாக. தங்களைப்போன்ற அறிஞர்களின் அபிமானத்தாலும் அப்பத்திராதிபர் விடாமுயற்சியாலும் நம்மவர் பாக்கியத்தாலும்இப்பத்திரிகை நீடூழிநிலைபெற்றுவாழும்படி நுதல் விழியார்க்கருணை மாரிபொழியப் பிரார்த்திக்கின்ருேம்.

கலிகாலக் கலியாண கோலா கலம்.

இவ்விஷயத்தைப்பற்றி ஆரிய சித்தாந்த சந்திரிகையென்னும் பத்திரிகை சமீபகாலத்திலே நடந்த ஓர் விவாகத்தை உதாரணமாகக்காட்டிச் சிலபாகம் எழுதியிருக்கின்றது. அதை உற்று நோக்கின அவர் எழுதியது போதாததாகக்காணப்படுகின்றது. இவ்விஷயத்திலெழுதத்தக்கனபலவுள. இப்பொழுது இத்தேசத்தில் விவாக மென்ருென்று நடக்கின்றதே யன்றி விதிவழி நடத்தல் ஒழிந்ததென்றே சொல்லவேண்டியிருக்கின்றது. அப்பத்திரிகையில் இக்காலத்து விவாகங்களில் முறைதப்பியின் செலவு செய்யப்படுகின்றதென்றும் முறையுடன் நடக்கு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

முடிவதில்லை யென்னும் இருகுற்றங்களை யெடுத்துப்பேசியிருக்கின்றது. இவற்றுள் முறை மீறிச்செய்விடுதலால் இவர் செல்வங்குறைந்து வறுமை மீறிப்பெண்கள் மணங்களிக்க முன் செலவழித்த கைகளால் அறக்கூழ்ச்சாலைகளிலே கூழ்வாங்கியுண்ண நேர்கின்றது. ஆரியராய்ப்பிறந்த நம்மவர்க்கு முக்கியமாய் கர்மாநுஷ்டானமே பெருமை கொடுக்கும் கருவியாதலை இவர் சிறிதுமறியாது வீணாகின்றார். இவர்களுக்குக் கர்மத்திற் சிறிதும் சிரத்தையே யில்லை. இக்காலத்தாரியர் இருவகுப்பினர். அவருட்சிலர் ஆங்கிலேயர் பாடை கற்று அவர் நடைகொண்டவர். மற்றுஞ்சிலர் வைதிகம் லௌகிக மிரண்டுமெழியார். இதில் முற்பகுதியார்க்குச் சிறிதேனும் கர்மத்தில் அன்பில்லை யென்பது சொல்லவேண்டா. பிற்பாலார் அவர்களின்மேலாய் அஞ்ஞானக்கடலுள் அமிழ்ந்தவர். முற்பகுதியார்க்கு ஆங்கிலேயர் முதுமொழிகளும் பிற்பகுதியார்க்குப் பெண்கள் பழமொழிகளுமே பிரமாணமாம். பாருங்கள் இப்பரதகண்டத்தில வறுமை மட்டில் தோன்றி நிலைபெற்றதன்று. நல்லுதரம்பெற்ற மனிதனே அகப்படுவதரிதாயிற்று. இக்காலத்து ஜனகணிதப்பட்டிகையை ஒருவாறு அனேகர் கிரப்பினும் இவர்களுள் முன்னோரைப்போல் வீரியம் விலாசம் ஆயுள் ஆரோக்கியம் முதலியவை பெற்றோர் எவருமிலர். இக்காலத்தே பால் மணம்மாறுவதன் முன்னரே பாட்டனாகிவிடுகின்றார்கள். இப்பொழுது சம்போகவயது நிர்ணய சட்டத்தால் 12 வயதிற்குட்பட்ட பெண்களிடம் புருஷ சம்பந்தம் ஒருவாறு விலக்கப்பட்ட போதிலும் அச்சட்டம் கற்புடைய மங்கையர்க்கும் அவர் கணவர்க்கும் தடையாய் ஏற்படுமேயன்றி ஊர் பெயர் தெரியாவொருவனிடம் தாம் சம்மதித்துக் கலந்து அதனாற் கற்பந்தரித்து 11—வயதுள்ள பெண் ஆஸ்பத்திரிக்கு வருமாகில் அவளைத் தடுக்காது அவளுக்குச் சர்வவித உபசாரமும் செய்விக்கும். கிராமாந்தரத்தவர் படும்பாட்டைப் பாருங்கள். அவர்கள் பெண்கள் வார்த்தைக்கு இசைந்து கோத்திர சூத்திரங்களை அறியாமலும் குலதோஷத்தைச் சிறிதும் பாராட்டாமலும் முறைகளை மதியாமலும் ஏதோ ஒரு பெண்ணுக்கு ஒருஆணைக்கட்டிவிடுகின்றார்கள். இவர்களுக்குத் தாய்முறையில் ஐந்து தலை முறைகள் தள்ளவேண்டு மென்றும் தகப்பன் முறையில் ஏழு தலைமுறைகள் தள்ளவேண்டு மென்றும் ஆசௌச சம்பந்த முள்ளவரையில் விவாகம் கூடாதென்றும் எவ்வகையிலும் மூன்று வயதேனும் குறைந்தவளாயிருக்கவேவேண்டுமெனவும் அவள் புஷ்பவதியாயினும் ஆருமங்கலையாயிருப்பினும் கூடாதென்றும் ஜாதக தோஷ முத

[illegible]

விபவை உதவாதென்றும் பக்ஷத்துவம் ஆவசியகமென்னும் கூறும் எவ்வித விதிவிலக்குகளையும் நோக்காது ஒரிது பணமுமிருந்து பெண்களும் ஒரிது உட்பிவிட்டால் உடனே காரியத்தை முடித்து விடுகின்றார்கள். பெண்பிராக பிடித்த இவர்கள் செய்யும் வேலையைப்பாருங்கள். பெண்களை விற்கின்றார்கள். மணக்கக்கூடாத படிக்காயாரை மணக்கின்றார்கள். ஓர் சமயம் எவரேனும் இங்ஙனம் செய்பலாமோவென வினவின் "ஓகோ! இதில் ஏதும் குறைவு வாரது. குழந்தைகள் பிறக்கும்." அடுத்த வீட்டில் நடந்த கலியாணத்தில் இவ்விதமே ஓர் பிராமணன் சொன்னான். அவர்களிப் பொழுதிருக்கு மொற்றுமையைப் பாரத்திர்களா. அப்பெண்ணும் பின்னையும் குதாசாத்திகல்வியாணத்துக்கு முன்னேயே—— அன்றோ" என்பதாதி சில வார்த்தைகளைச் சொல்கின்றார்கள். இவ்வாறு துணிந்து கூறுபவர் ஆடவர்களன்று; பெண்களேயாம். இனி தன்கோத்திரத்திற்றானே தான் ஓர் பெண்ணை மணக்க நேர்ந்தால் ஏதோ அந்தப் பெண்ணை மற்றவர்க்குத் தத்துக்கொடுத்து வேறு கோத்திரமாக்கி விவாகம் செய்வதாம். பாருங்கள்! இக்காலத்துக்குமுன் ஒருவருக்கொருவர் புத்திரகாமம் செய்தால் அப்புத்திரனைப் பெற்றவன் சுவிகாரப்பிதாவென்னும் புத்திரியைக்கொடுத்தால் பெற்றவன் பர்த்தாவென்னும் ஆரியர் பெருவழக்கண்டாம். இப்பொருளேபெடுத்தோதும் "கன்னியலா" என்றுதொடங்கிய மந்திரம் கன்னிகை தானசம்ஸ்காரத்தால் தன் பிதிர் குல சம்பந்தத்தை விட்டு பர்த்திருசம்பந்தத்தை எய்துவதாகக்கூறிநிற்க, ஸ்திரீ சுவிகாரம் கொடுக்கும் வழியைக் கண்டுபிடித்தவன் எவனோ! இனி அவ்விதம கொடுக்கப்பட்ட பெண் சுவிகாரஞ்செய்துகொண்டவனுக்குச் செய்யவேண்டிய சர்வசடங்குகளையும் செய்து முடித்தும் புத்திர பாவத்தை முற்றிலும் நிறைவேற்றுகின்றனள். மந்திராதிகார மற்று மணவாளன் கைப்பட்ட மங்கையர்க்குச் சுவிகாரமென்னும் புதுவழி தன் தன் கோத்திரநிற்பிறர்தவன் கலக்கக்கருவியே யன்றி வேறில்லை. இனி இவ்வழியை ஆரியர் ஆசிக்கத்தொடங்கின், தன் பெண்ணையும் உடன் பிறந்தாளையும் கூட விவாகம் செய்யலாம். அஃதெங்ஙனமெனில், வழியிற் போகும் ஓர் பிராமணனுக்கு அவளைத்தத்தாகக் கொடுத்து அவனிடம் பிரதிக்கிரகம் செய்தே, இனிக்கொடுத்தவனே வாக்தாதாவெனின், தான்கொடுத்துத் தன் பின்னைக்குச் செய்தற்கு யாதும் தடையில்லையே. அது மட்டோ! தாய் அல்லது தம்பான் இறந்தால் அப்பான்

Koviloor Digital Library

[illegible]

“ [illegible] ”

[illegible]

பெண்ணை விவாகம் செய்யலாமாம். இஃதென்ன விபரீதம்! தாமிறந்த பிறகு அரமனிறந்தால் அவனுக்கு ஆசௌசம் கொள்ளுமோ! மகாளயகாலத்து அவனுக்குக் கொடுக்கும் பிண்டமும் தொலையுமோ! தகப்பனிறந்த பிறகு பெற்றப்பன் பாட்டனிவர்க்குள்ள சம்பந்தமும் ஒழிக்குமிடமே. இவைகளெல்லாம் கபிலக் கொடுமை யால் சேர்ந்தவையாதலால், இனி இவர்க்கு முன்னோர் பெறு பெரும் பேறு கிடைப்பதெக்காலமோ! இனி விவாகத்திற்குச் சந்தானமே பிரயோசனமாயின் மிருகங்களுக்குத் தாயிடத்துக் கூடினும் சந்தானமுண்டாவதைக் கண்டலால் சிவ சிவ!! இனி——விவாகமும் டைக்குமோ வென மனம் பதறுகின்றது.

சமய விசாரம்.

ஆரியமணிகாள்! இவ்வுலகத்தில் தோன்றி நின்று ஒடுங்கும ஜீவவருக்கங் களெல்லாவற்றிலும், இம்மானுடத்தோற்றமொன்றே மிகச்சிறந்த தென்பதை நாம் விரித்துச் சொல்லவேண்டிய தில்லையே! இவ்வரிய ஜன்மத்தைப்பெற்ற நாம் இப்போதே விரைந்து இந்த ஜன்மம் எமக்கு வருதற்குக்காரணம் யாது? என்பதை விசாரிக்க வேண்டும். அங்ஙனம் விசாரிக்குங்கால் அதுவே “சமய விசாரம்”—எனப்படும். சமயமென்றாலும் மதமென்றாலும் ஒன்றே. இவ்வுலகத்திலே சமயங்கள் எண்ணிறந்தனவாயிருக்கின்றன. அவ்வெண்ணிறந்த சமயங்களும் சுத்தஷாட்குண்ணிய பரம்பொருளாகிய எமது இறைவனது சங்கற்பத்தினாலேயே நிலைத்து நடைபெறுவனவாம். எங்கும் நிறைந்தவனும் எல்லாம் அறிபவனும எல்லாம் வல்லவனுமாகிய இறைவன் சங்கற்பத்திற்குமாறாக, வேறொருவர் ஒரு சமயத்தைக் கற்பிக்கவாவது நடத்தவாவது வலியுடையராக மாட்டார். இது பற்றியன்றே “அவனன்றி அணுவசையாது” என்று உண்மை நூல்கள் முழங்குகின்றன. இனி அங்ஙனம் ஒன்று இரண்டென்றெழியாத அனந்தசமயங்களை இறைவன் சங்கற்பித்து

[illegible]

ஸ்ருதி.

டத்துவரோ வெனில் கூறுதும். இவ்வுலகத்தில்தோன்றிபொடுங்கும் ஆன்மாக்களனைத்திற்கும அறிவொழுக்கம்முதலியனபலவேறுவகைப்பட்டிருக்குமன்றிஒத்தவில்லாது. நாம் பார்த்த இவ்வுலகத்தில் இரண்டுமனிதரையாவது (சிறிதும் பேதமில்லாது) ஒரே ரூபமாய் ஒத்திருக்கக் கண்டோமா! இல்லை. அது போலவே ஏனைக்குணங்குறிகளெல்லாம் வேறுபடுமென்க. அங்ஙனம் வேறுபடுதற்குக் காரணம் அவ்வவ்வாத்மாக்களின் பரிபாகவிசேடங்களே யாம் "பரிபாகம்" என்பது யாதெனில், அது மற்றோரிடம் விரிக்கப்படும். நிற்க. அங்ஙனம்பல வேறுபட்ட அறிவு தொழிலாதிகள் நிமிஷந்தோறும் மாறிபோடுவதே யன்றி ஒரு தன்மையால் நிற்பனவுமல்ல. ஆதலின் அவ்வான்மாக்களெல்லாம் பந்தத்தினீங்கி உய்யும பொருட்டே பெருங்கருணை நிதியாகிய இறைவன் சமயங்களை ஏகதேச தத்துவநிலைகளை விளக்குவனவும் விசேட தத்துவ நிலைகளை விளக்குவனவும் தத்துவாதீத நிலையை விளக்குவனவுமாய எண்ணிறந்தனவாக நிறுத்திபருளினர். இது பிள்ளைகட்குப் பாலூட்டும் பருவத்திற்பாலூட்டியும் சோறூட்டியும் வளர்ப்பது உசிதமாவது போலென்க. ஒரு வித்தியாசாலையிலே பயிலும் மாணாக்கர்கள் பிறப்பினால் ஒத்தவரேயாயினும் அறிவின் மந்தவிளக்க தாரதம்மிய பேதத்தினால் பல வேறுவகைப்பட்டிருத்தலால் கல்வியைச் செம்பொருளுடைய சாமானியக் கல்வியாகவும் பருப்பொருளுடைய விசேடக்கல்வியாகவும் பகுத்து அவர்க்குமுறையே கற்பிக்கப்படுதல் போலச்சமயங்களையும் இறைவன் நடத்துவனென்றுணர்க. தத்வங்கள் குறைந்த சாமானிய சமயத்தில் தோன்றி அதையே முடிவாக நம்பியிருந்த ஒருவன் அந்தச்சமய நெறி தவறாது ஒழுகிவருவானாயின் அதனால் புண்ணியம் வளர, அதன் வழி பரிபாகமுண்டாக அதனால் அந்நிலைக்கு மேலுள்ள தத்வங்கள் அறிவுக்குத்தோற்ற அவன் அதைக் கொண்டொழுகுவன். இவ்வாறே ஜனனங்கள் தோறும் மேம்பட்டுச் சென்று முடிவிலே தத்வாதீத உண்மைநிலை யெய்தி முத்தனாவன். இதற்குச் சோபான முறை யென்று பேர். ஆகவே தத்வாராய்ச்சியிற்சிறந்த மேற்சமயிகள் அதனிற்றாழ்ந்த சாமானிய சமயிகளுக்கு அவ்வுண்மையை அன்போடு போதித்து அவர்களை மேலேறச்செய்வதும், தத்வநிலையில் தாழ்ந்த சமயிகள் அவ்வுயர்ந்த சமயிகளிடத்து அன்போடு அவ்வுண்மைகளை விசாரித்துணர்ந்து மேலேறுவதும் விவேக நெறியாகிய பெரிய நியாயம்.

வரும்.

Koviloor Digital Library

[illegible]

ப்ரம்மவித்யா

செப்டம்பர்; நந்தன ௵ புரட்டாசி௴ 1௳

ஆரியாசார ரகசியம்

புண்டரம்.

தொடர்ப்பு.

இனி ஊர்த்துவபுண்டர விஷயத்தைப் பற்றிச் சிறிதெழுதுவாம். இவ்வூர்த்துவபுண்டரத்தில் அவ்வமதத்தவர் அணியும் வழி பலவேற்றுமைகள் தோன்றி நிற்றலால் அவைகளின் பயனை இன்னதெனத் துணிந்தெடுத்தோதற்கு எமக்கெளியன்றிலதாயினும், எட்டியவரையில் அதன் பயனை எடுத்துக்காட்டுவாம். இங்கு ஊர்த்துவகதியை விரும்புவோம். ஊர்த்துவ புண்டரத்தைத் தரித்தல்வேண்டுமென வேதத்தில் ஓர் வாக்கியமுண்டு. அங்கு ஊர்த்துவகதியென்பது பரமுத்தியெனவும் க்ரமமுத்தியெனவும் இருவகைப்படுமே. [ஊர்த்துவம்—மேனோக்கல்.] ஊர்த்துவமுகமாயிருத்தலால் எல்லாவித திருநாமங்களையும் ஊர்த்துவ புண்டரமெனவே வழங்குவர். ஆயினும் பெயருளும் அமைப்பும் ஒவ்வொன்றற்கும் வேறுபடும். இதற்குரிய பொருள்கள் இருவகைப்படும். அவையாவன:—திருமண்ணும் சந்தனமுமாம். அத்திருமண்ணும் வெண்ணிறம் பெற்றதும் பொன்னிறமுள்ளதுமென இருவகையாம். சந்தனமும் வெண்சந்தனம் செஞ்சந்தனமென இருவகைப்படும். அஃதின்றி மஞ்சட்பொடியும் குங்குமமும் இப்புண்டரத்துக்குபயோகமாவது முண்டு. இங்குள்ள ஊர்த்துவபுண்டரங்களெல்லாம் வைஷ்ணவமதத்தின் அதை விஷ்ணுபக்தர்களே தரிக்கற்பாலர். இனி திருமண்ணினால் அணியும் திரிபுண்டரம் ஏழுவிதமும், சந்தனத்தால் அமைவது இரண்டுவிதமுமாம். அதனுட்பிரிவு வெண் திருமண்ணால் நான்கும் பொன்னிற மண்ணால் மூன்று விதமுமாம். அவற்றுள் வெண்மண்ணாலமைந்த நான்கு பேதங்களாவன:—வைஷ்ணவருட் சிலர் நடுவிற்றாவும் மஞ்சட்பொடியின்றி ஓர் சாக்கையில் தரிக்கும் நேர்த்திருநாமம் ஒன்று; அதையே சிறிது பெரியதாய் இரண்டாக்கவு சிறு கிளைதீட்டி நடுவில் மஞ்சட்பொடி இடுவது ஒன்று; ஓர்விரலகலத்தில் அடிபிற்பிறைபோல் வளைந்து அவ்வளவிற்றுனே இருபுறமும் இருகிளைகள் தோன்ற நடுவில் திருச்சூர்ணம் அமைந்த வடகலைத்திருநாமம் ஒன்று; நாசியடியில் ஓரங்குலக்கமலப்பீடம் இட்டு அதன்மேல் கண்ணன் திருவடியினைத் திருவுருவம் பெற்றுத் திருச்சூர்ணத்துடன் விளங்கும் தென்கலைத்திருநாமம் ஒன்று; பொன்னிற மண்ணாலமையும் திருநாமத்தின் வேற்றுமைகளாவன: இடைவெளியுள்ளதும் அஃதில்லதும் வட்டவடிவானதும் என மூவகையாம்.

வரும்.

[illegible]

[illegible]

[illegible]

ஏகத்குருத்துவ நிராகரணம்.

தொடர்ச்சி.

இனிமேற் பதின்மூன்றாம் நூற்றாண்டின் [illegible] அவர்கள் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகட்கு ஏகத்குருத்துவ நாமம் [illegible] காட்டினோம். இனி அப்பெயர் அவர்க்கு உரியதாம் முறைமையை சற்று காட்டுவோம்.

இனி அத்தன்பர் சைவர், மாத்துவர், வைஷ்ணவர், ஸ்மார்த்தர், [illegible] பலர் இவ்வுலகத்திருந்தவர்களும், அவர்க்குச் சங்கராசாரியர் குருவன்மையாலும், ஸ்மார்த்தரென்றும் ஒருசாரார்க்கு மட்டுமேயுரியராகிய அவர் ஏகத்குருவாயவதெங்ஙனமென்றும். வைஷ்ணவர் மடாதிபதிகளாயுள்ளோர் அகோபில [illegible] முதலியோர் [illegible]. வைஷ்ணவருள் மடாதிபதிகளாயுள்ளோர் ராமானுஜ பாரம்பரியத்து வந்தோர். மாத்துவருள் மடாதிபதிகளாயுள்ளோர் மத்துவாசாரியர் வழிவந்தோர். [illegible] வழிவந்தோராவர். சங்கராசாரிய சுவாமிகள் காலத்தே இம்மடாதிபதிகள் [illegible] இருந்திலர். இம்மடாதிபதிகள் சங்கராசாரிய சுவாமிகளுக்கு எவ்வளவோ காலத்துக்குப் பின்னிட்டுத் தோன்றினர். இது யாவர்க்கும் இனிதுவிளங்கும். இனி சங்கராசாரிய சுவாமிகள் காலத்தே இப்பரதகண்ட [illegible] முதலிய அவைதிகமதங்கள் [illegible] வைதிக சமயத்தை [illegible] சங்கராசாரிய சுவாமிகள் [illegible] இப்பரதகண்டத் [illegible]. அதனால் அவர் இப்பரதகண்டத்து நாற்றிசைகளிலும் சென்று பன்முறை திக்விஜயஞ்செய்து எம்மதத்தவரையும் தம்முன் [illegible] எங்கும் வைதிகக் கொடி நாட்டினார். அக்காலத்துச் சைவ வைஷ்ணவ மாத்துவ மடாதிபதிகளின்மையாலும், அவர்க்கு மாறுபட்ட கொள்கையுடையார் எவரும் தோன்றி அவர் கொள்கையை மறுத்திடாமையாலும், அவர் கருத்துக்கு மாறுபட்ட கொள்கையுடைய [illegible] தம்மை, [illegible] இன்றும் பல [illegible] ஏகத்குருவென்று [illegible] அவர்க்குச் [illegible] இப்பரதகண்டத் [illegible]. [illegible] இப்பொழுது [illegible] ஆசாரியராயினர். இனி அச்சங்கராசாரிய சுவாமிகளின் பின்னர் உண்டாய எம்மடாதிபதிகள் ஆசாரியர்களும் அவர் போல் எங்கணும் சென்று திக்விஜயஞ்செய்து அவர் கொள்கையை மறுத்து, அவர் ஏகத்குருத்துவத்தையும் விருதுகளையும் நீக்கவராதலின், அவர் வழிவந்த மடாதிபதிகளாய ஆசாரியர்களும் ஏகத்குருவென்று அழைக்கப்படுவென்றார். இனி பின்னர்த் தோன்றும் மடாதிபதிகட்காக முன்னரே அவர் ஏகத்குருத்துவங் கொள்ளலாகாதென்பதும் முறையன்றாம். பின்னர்த் தோன்றினரும் அவர் தம்மை வெற்றிகொண்டாலன்றி அவர் ஏகத்குருத்துவம் நீங்கவுமாட்டாதாம்.

இனி அத்தன்பர் இவ்வுண்மைகளெல்லாம் ஓராது சங்கராசாரியசுவாமிகளை வறிதே நிந்திக்க வெழுந்தது மிக அறிவும் அறியாமையுமாம்.

இனி அன்பர் இவைகட்கு ஏதேனும் விடை பகரவெழுவரேல், அபிமானமின்றி இவைகளனைத்தையும் பதுமுற அமைவோடு சிந்தித்து நியாயமான விஷயங்களை மட்டில் எழுதுவாராக.

ஓர் நாவலர்.

ஞானாமிர்த பத்திராதிபரை வினவும்வினாக்கள்.

வடமொழியையும் தென்மொழியையும் மிகவுற நிலைகண்டுணர்ந்து சகல வேதாகம புராணேதிகாசங்களினும் மிக வல்லராய் வைதிக சைவ சமயஸ்தாபனஞ் செய்துவரும் ஞானாமிர்த பத்திராதிபரே! அடியில் வரும் வினாக்களுக்குத் தக்க விடையளித்து எம்மனத்தின் நெடுநாளாகக் குடிகொண்டிருந்த ஐயங்களை நீக்குமாறு வேண்டுகின்றேன். அவ்வினாக்கள் வருமாறு:—

1\. வைதிகவாரணமாகிய திருஞானசம்பந்த சுவாமிகளைச் சைவ சமயாசாரியரென்று நம் பத்திரிகையில் வரைந்திருக்கின்றீர். அவர் வைதிகசமயாசாரியரென்று வைதிகர்கள் சொல்லுகின்றார்கள். பெரிய புராணமும் அவ்வாறே ஓதுகின்றது. அவர் வேதோக்தமான ஆசாரங்களையும் யாகாதிகளையும் குறைவற அநுஷ்டித்தும் அநுஷ்டிப்பித்தும் நிலை நிறுத்தினரேயன்றி, சைவர்க்குரிய ஆகமாநுஷ்டானங்களை அநுஷ்டித்து வந்தாரென யாண்டாயினுங் கூறப்பட்டுளதா? இல்லையே. அன்றி, அவர் ஆதிசைவ மகாசைவ குலத்தவருமன்றே. பிராமணகுலோத்தமராகிய அவர் தந்தையரும் சுற்றத்தாரும் வைதிகராயினரே. திருஞானசம்பந்தரும் தம்மவர் கொண்ட அவ்வைதிகாசாரங்களையே தாம் பேணி நிறுத்தினராக, அவர் தம்மை வைதிகரென்னாது சைவரென்று கூறவந்ததென்னை? அவ்வாறு கூறுதற்கு ஏதேனும் பிரமாணங்களுளவா? உளவேல் அவையாவையென்ன?

2\. கோசமத்தனிலே சைவர்க்குச் சந்நியாசம் விதிக்கப்பட்டிருக்கின்றதா? இருக்கின் அவர்க்கேற்ற ஆசாரங்களென்னை?

அவை எங்கே சொல்லப்படுகின்றன? அவ்வாசிரமத்தைக் குறிக்கும் சின்னங்களெவை? இப்பொழுது எங்கேனும் அவ்வாசிரமத்தருளரா?

3. வேதங்களிலே விதிக்கப்படுகின்ற நித்திய நைமித்திக கர்மங்களையும் யாகாதிகளையும் சைவர்கள் அநுஷ்டிக்கற்பாலரா? அன்று?

4. போகமோக்ஷமான சமய விசேடாதி நிலைகளைப் பெறுதற்குரியாரெவர்? யோகமாசாரங்களை அநுஷ்டித்தற்குரியாரெவர்? அவர் வைதிகாசாரங்களை அநுஷ்டிக்கற்பாலரா? கைவிடற்பாலரா?

5. தருமபுரம், திருவாவடுதுறை, காஞ்சிபுரம், மதுரை, குன்றக்குடி, சொக்கபுரம், பரிதிபுரம் முதலிய விடங்களிலுள்ள சைவாதீன வேளாள மடாதிபதிகள் பிரமசரிய முதலிய நால்வகையாசிரமிகளுள் எப்பகுதியர்? பிரமசாரிகளெனின், அவருட்பலர் விவாகம் புரிந்து புத்திரப்பேறடைந்தோராகலின், அது பொருந்துமாறில்லை. கிருகஸ்தர், வானப்பிரஸ்தரென்பது பிரசித்தமாம். இனிச் சந்நியாசிகளெனின், ஆகமங்களிலே சைவர்க்குச் சந்நியாசம் விலக்கப்பட்டமையானும், சந்நியாசிகட்கு ஆசாரியத்துவம் கூடாமையானும், இவர் தாம் ஆசாரியரென்பதானும் பிறவற்றானும் அதுவும் அமையாதாம். இனி இந்நால்வகை ஆசிரமங்களுள் அடங்காத ஆசிரமந்தான் யாதோ? அவர் எந்நூல் பற்றியொழுகற்பாலரோ? அன்றி, இவர் தம்முறவினர் ஜனனமரணங்களுற்றகாலத்து ஆசௌசாதிகள் காக்கற்பாலரோ? அன்றோ? தந்தை தாயர்க்குச் செய்யும் அந்தியேஷ்டி, சிராத்தமுதலிய பிதிர்க்கருமங்கள் செய்யற்பாலரோ? அன்றோ? சந்நியாசிகளல்லாதார் அவற்றை விட்டால் அதனுல் தோஷம் உளதாமோ? இன்றோ?

6. திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர், திருநாவுக்கரசநாயனுர், சுந்தரமூர்த்திநாயனுர் முதலிய மூவரும் அருளிச்செய்த தோத்திரங்கட்குத் தேவாரமென்றும் திராவிடவேதமென்றும் பெயரிட்டவர் யாவர்? அவர்களோ? பிறரோ? அவரே யெனின், அதற்குப்பிரமாண மென்னை? அஃதெங்குக் கூறப்படுகின்றன. பிறரெனின், அவர் பெயர், ஊர், காலம் முதலியன எந்நூலில் யாண்டுக் குறிக்கப்படுகின்றன.

7. மாணிக்கவாசக சுவாமிகளை அறுபான் மும்மை நாயன்மாரோடு சேர்க்காத தென்னை? அவர் அருளிய திருப்பாடல்களைத் தேவாரமென்னுது திருவாசகமென்று பிரித்து வழங்கியதென்னை? திருவாசகமென்னும் பெயர் யாரால் இடப்பட்டது. அதற்குப்பிரமாண மென்னை?

8. திருவாசகம் முன்னரும் தேவாரம் பின்னரும் உண்டாயதாக, அவற்றினை ஓதுவோர் தேவாரத்தினை முன்னரும் திருவாசகத்தினைப் பின்னருமாக ஓதற்குக் காரணம் யாது?

9. சுத்தாத்துவிதம், வைதிக சைவம் என்னும் பெயர்களும் அம்மத சித்தாந்தங்களும் ஆகமங்களில் உள்ளனவா? உள்ளனவேல், அவை எவ்வாகமத்தில் எப்பாகத்தில் எவ்விடத்தில் எச்சுலோகத்திற் கூறப்படுகின்றன?

10. சைவ வேளாள மடாதீனங்களிலுள்ள சிஷ்யர்களுக்குத் தம்பிரானென்றும், முனிவரென்றும் வழங்கும் பெயர்கள் எந்நூற்பிரமாணம்பற்றி உண்டாயின?

11. புதியஞானாமிர்தம் 2-ம் இலக்கப்பத்திரிகையிலே சங்கராசாரிய சுவாமிகளை மாயாவாதியென்று எழுதியிருக்கக் கண்டேன். உலகத்துக்கு முதற்காரணம் காலமே யென்பார் காலவாதிகளென்றும், பூதமே யென்பார் பூதவாதிகளென்றும், பிரதானமென்றும் முக்குணமேயென்பார் பிரதானவாதிகளென்றும், அழைக்கப்படுதல்போல, மாயையே முதற்காரணமாமென்போரன்றோ மாயாவாதிகளெனப்படுவோர் சங்கராசாரியர் பிரமமே முதற்காரணமாமென்பவரன்றோ? அங்ஙனமாக அவர் தம்மைப் பிரமவாதிகளென்னுது மாயாவாதிகளென்றது யாதுகாரணம்பற்றி? இனி மேற்கூறிய முறைபற்றி ஆராயப்புகின், சைவர் மாயையே முதற்காரணமெனக்கூறுவோராதலின், அவரன்றோ மாயாவாதிகளாகின்றார்? இவற்றை ஓராது நீவிர் அவர்தம்மை அங்ஙனம்பேசத்துணிந்த துணிபென்னை?

மேலெழுந்த வினாக்களொவ்வொன்றற்கும் வேதாகம புராணப்பிரமாண வாக்கிய சகிதமான விடை தக்கவாறு அளித்தல்வேண்டும். பிரமாணமற்ற வீணயுத்திகளை எழுதிப் பத்திரிகையை நிரப்புவதாற் பயன் யாதுமின்றாம்.

இங்ஙனம்,
ஓர் நாவலர்.

ஸ்ரீஜகத்குரு வைபவ விசாரம்.

ஆரியர்காள்! சென்ற பங்குனிமீ" 1உ வெளிப்பட்ட 'ஞானாமிர்தம்,' என்னும் பத்திரிகையில "ஜகத்குருவிசாரம்" என்னும் தலைப்பின் கீழ் "வைதிகசைவர்" என்பவர் சிலகடாக்கள் கிளப்பி விட்டார். அக்கடாக்கள் வேலிதாண்டிக்குதித்துப் பயிர்களை அழிக்காதபடி தடுத்து இறை கொடுத்து அடைத்துவைப்பாம். ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளுக்கு ஷட்தரிசன ஸ்தாபனாசாரியர்: பூமண்டலாசாரியர் என்பனாதி பிருதாவளிகள் இக்காலத்து எம்போல்வார் கொடுத்ததன்று. அவர்கள்தாமே புனைந்து கொண்டதுமன்று. அவர்கள் சேதுமுதல் இமாசல பரியந்தமான பரதகண்டமெல்லாம் வியாபித்த பௌத்தர், சமணர், நாஸ்திகர் முதலிய புறச்சமயிகளை வென்று ஜயஸ்தம்பம் நாட்டி அதனுல் வேதவேதாந்த விற்பன்னர்களாலும் வேந்தர்களாலும் அவ்வாறு சிறந்த பிரு

சுவாமிகள் பெற்றார்களென்பது அநேக லொகசாஸனங்களாலுங்காலத்துங் மாறுதலில்லைபெற்றன. ஆரியருள்ளே முதல் வருணத்தாராகிய அந்தணர்களாயுள்ள யாவரும் வணங்கும் தர்மாசிரியர்களாயும் விளங்கும் ஸ்வாமிகளை ஜகத்குருவென்று வழங்குவதில் ஞானமிர்த பத்திராதிபர்க்கு அழுக்காறு ஜனித்தது. அம்மம்ம! சாலவியக்கத்தக்கதே. இனி ஆரியருள்ளே துவைதம், விசிஷ்டாத்துவைதம் முதலிய மத வேறுபாடுகளிருப்பினும் அவ்வவமதங்களில பிரதமாசாரியரொருவரும் சாமான்ய ஆசாரியர்கள்பலரும் [அரசனுக்குக் கீழ்ச்சிற்றரசர்கள் போல] விளங்குவதுண்மையால் "மடாதிபதிகளும ஜகத்குருக்களும்" என்ற பிரயோகம் தத்வாதீதமில்லைபெற்ற அக்காவைத மதஸ்தர்களையே குறிப்பதாக அதனைச்சிந்தியாது வேறுமடாதிபதிகளைக் குறிப்பதாகக் தாமே வலிந்து வருவித்துக்கொண்டு பலவாறு கூறினர். கவைக்குதவாத விசாரகர் இதென்கொலோ! ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளை இதரமதஸ்தர்கள் "ஜகத்குரு" வென்று கூற ஒருப்படமாட்டாரேயென்கிறார். இனி நாஸ்திகர்கள் கடவுளைச் சர்வவல்லவரென்றும் சர்வஞ்ஞரென்றும் கூற ஒருப்படுவதில்லையே! அதனால் இவர் கடவுளுக்கும் இவருக்குங் குறைவு வந்ததுண்டோ! வருமாயினன்றோ அவ்வழியினும் காரணைக் கிளக்கவேண்டும். ஆகவே ஏகாங்கியென்றொருவனிடையர் பிரபணத்துவேஷங்கொண்டு பாமர் நிறைந்த சபைகளில் தானே பிராமணனென்று கூறித் திரிவதுபோல் ஞானமிர்தத்தாரும் ஏதோ எழுதிவைத்தாரென்றுணர்க.

இங்ஙனம்,

ஓர் சைவசித்தாந்தி.

பரமாசாரிய விசாரம்.

சா௵ பங்குனிமீ ௭வெளிவந்த புதியஞானமிர்தம் ௨-ம் இலக்கப்பத்திரிகையிலே அப்பத்திராதிபர் "பரமாசாரியசுவாமிகள் சர்வப்பிரபாவம்" என்றுந்தலைப்பின்கீழ், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமிகள் என்போரைத்தாம் அவர்மீதுகொண்ட அளவுகடந்த அபிமானத்தால் பரமாசாரியர் என்று புகழ்ந்திட்டார். அவர் தம்அபிமானத்தான்மட்டும் அளவுகடந்து மெய்மறந்து அவ்வாறுபுகழ்ந்திட்டாரெனின், அதுபற்றி யார்க்கும் வாக்கடைபெறு ஐயங்கையாதுமில்லையாம். அங்ஙனமின்றி அவர்அதனைமெய்யுரையெனக்கொண்டு சாதிக்கப்புகுவாராயின் அது அவர்போல்வார் சிற்சிலரன்றி, நியாயநெறி கடைப்பிடித்தொழுகும் ஏனையோரால்எட்டுணையும் ஒப்பற்பாலதன்றாம். என்னை? பரமாசாரியரென்னுஞ்சொல ஆசாரியரானவர்க்கும் மேலாயஆசாரியர் எனப்பொருள்பயக்கும். இவ்வுலகத்தே வைதிகர், சைவர், வைணவர், மாத்துவர், பௌத்தர்,சமணர், பாரசியர், ப்ரம்மசமாஜியர், வேதசமாஜியர், கிறிஸ்தவர், மகமதியர், எனுமித் தொடக்கத்த பலசமயிகளிருக்கின்றார்கள். அவரவர்க்கு ஆசாரியர்களும் பலரிருக்கின்றார்கள். அவ்வாசாரியர்க் கெல்லாம்ஆசாரியராயினன்றோ இவர்கள் பரமாசாரியராவார்கள். அவர்க்கெல்லாம் இவர்கள்ஆசாரியர்களாவதெப்படி? இவர்அங்ஙனம் சொல்லினும் திருஞானசம்பந்தாதியோர்தமக்கு ஆசாரியரென வைணவாசாரியர்க ளொப்புவாரா? மாத்துவாசாரியர்களொப்புவாரா? பௌத்தர், சமணர், பார்சியர், ப்ரமசமாஜியர், வேதசமாஜியர், கிறிஸ்தவர், மகமதியர், என்னும் இவர்தம்ஆசாரியர்களொப்புவாரா? ஒருபோதுமொப்பாரே. அங்ஙனமாக, அவர்தமக்கெல்லாம் இவர்கள் ஆசாரியர்களென்னும பொருந்தா இவர்தம்மைப்பரமாசாரியரென ஞானமிர்தக்காரர கூறத்துணிந்த சொற்சமர்த்தியம் அம்மம்ம! மிக அழகுடைத்தென்க! இனிமேற்கூறிய இவர்க்கெல்லாம அவர்கள் பரமாசாரியர்களெனபது அவர்கருத்தன்று; சைவாசாரியர்கள் பலர்க்கும அவர்கள் பரமாசாரியர்களென்பதே அவர்கருத்தாகுமெனின், நண்பர்தாம் எழுதியபரமாசாரியவாசகத்தில் "சைவசமயபரமாசாரிய" ரென்று குறித்தெழுதாமையால், அதுபொருந்தாதாம். இனி அவர் அங்ஙனம் குறித்தெழுதாதொழியினும் அவாகத்திருந்த கருத்திதுவேயாமென்னின், அக்கருத்தை வெளியாக்கும் சொல் அங்கெழுதிடப்படாமையால், அக்குற்றம் அவர்தம்மைப்பற்றாது விடாதென்க. இனி அவரங்ஙனம் விடுத்திருப்பினும் அறிவுடையார் அதனை அமைத்துக் கொடலே நன்றுமெனின், ஜகத்குருவிசாரம் பிரசுரிக்கப்புகுந்த அப்பத்திராதிபர் இந்நியாயங்களை அதில் ஒட்டியடங்காததென்னோ? முதற்பக்கம் எழுதியஅவர் மறுபக்கம் எழுதுமுன் அந்நியாயங்கடம்மை மறந்துவிட்டார்போலும்! நண்பர் இம்முறை அங்கு எடுத்தாளாமையால் இங்கும் அது ஒப்பற்பாலதன்றாம். இனிநண்பர் இவைதம்மையெல்லாம் ஆலோசியாது துரிதப்பட்டு இங்ஙனம் வரையத்துணிந்தது சிறந்தமுறையன்றாம்.

நியாயவாதி.

சிருங்கேரி ஸ்ரீ ஜகத் குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீ முகத்தின் நகல்.

[illegible]

[illegible]

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதி பூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை

ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த ௧௮௯௨௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

கரஸம்வத்ஸரம்
[illegible]
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,

[illegible]

Koviloor Digital Library

[illegible]

விக்கிரகாராதனம்.

தொடர்பு.

"அறிவினர்க்குப்பிரதிமைகளிலும் யோகிட்கு உள்ளத்தும் ஹரியிருப்பார்" என்னும் ஓர் வசனம் ஆரியர்களுடைய உள்ளத்தை ஒருவாறு கலக்குகின்றது. ஒருக்கால் கடவுளைப் பிம்பத்தில் ஆராதித்தாலன்றோம் அறிவினைசாயப்பெறுவோம் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். இவர்கள் அவ்வசனத்தின் உண்மைப்பொருளை உணர்ந்தால் அவ்வாறு எண்ணத்துணியார்கள். அதன் பொருள் கடவுள் கருணாமூர்த்தியாதலின் தியானத்தில் வலிமையுள்ளார்க்கு உள்ளகத்தில் தோன்றுவான்; அவ்வித ஆற்றலற்றவர்க்குப்பிரதிமைகளில் ஆவிர்ப்பவித்து அருள்புரிவான் என்பதே. இதனால் நல்ல புத்திமான்களும் பிரதிமைகளில் ஆராதிக்கலாமென்கிற ஏற்பாடன்றி வேறில்லை. அநேக பெரியோர்களும் பிரதிமைகளிலே கடவுளைவழிபட்டு நற்கதிபெற்றிருக்கின்றார்கள். இஃதொரு புறமிருக்க. தற்காலத்துச் சிலர் கோவில்களிலே தேவதாசியென்னும் சிலர் இருப்பது அடாதென ஆக்ஷேபிக்கின்றனர். அஃதுண்மையே. பரமேசுவர ஆலயங்களில் பரிசாரகம் பாட்டு ஆட்டம் முதலியவை அவர்களுக்கு உண்டெனச் சில ஆகமநூல்கள் கூறுகின்றன. சக்கரம் சூலம் முதலிய சம்ஸ்காரங்கள் அவர்களுக்குண்டு. சில நியமங்களும் தர்மங்களும் ஆசாரங்களும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. அவ்வழி அவர்கள் நடந்தால் அவர்கள் கடவுளுக்குப் பரிசாரகம் செய்யலாம். அவர் கலிக்காலத்தில் அவ்வாறு நடப்பதில்லையென்பது எம் மனதுக்கும் ஓர் பெருந்துயரமே. கலிகாலராஜன் ராச்சியபரிபாலனம் செய்யும் இக்காலத்து எவர் தான் தம் தம் குலதர்மத்தை அநுஷ்டிப்பார்கள். ஆலயங்களில் முதலிற்பூசைசெய்பவரைப்பற்றிச்சிந்திக்கவேண்டும். இதிற்பெரும்பான்மையோர் வேதாக்ஷரங்களை உச்சரிக்கவேனும் ஆற்றலற்றவர். அவரைத்தான் குற்றங்கூறிப்பயனென்னை? ஆலயத்தின் சர்வநடபடிக்கைகளும் தர்மகர்த்தன் ஸ்வாதீனமாகலின், தன்னை அடுத்திருப்பவரைப்பூசகனாகவும் பரிசாரகனாகவும் சமையற்காரனாகவும் நியமிப்பான். அவ்விதத்தின்பப் பிரியராயின் அவ்வாலயத் தேவதாசிகள் காலந்தப்பாது வந்து ஆடுவார்கள். இவர்களுக்குப் பெரும்பொருள் தேடும் வழி தெரியும். ஏதேனும் ஒரு பெரிய உற்சவம் நேர்ந்தால் விலை விலையாய்த் திவர்த்திகளை வீதிகளிற்கொணர்ந்து சனங்களை மகிழச்செய்வதால் அவர்களால் அகற்றப்பட்ட இருள் ஒருங்கு கூடி

[illegible]

வந்தொளித்தது போல் நின்றுவாசின்றித் திடீர்களெல்லாம் அவிய அங்கு இருள் குடிகொள்கின்றது. தர்மகர்த்தரைச்சேர்ந்த அதிகாரிகளுக்கு அகமும் புறமும் அன்னம் ஆபரணங்கள் அதிகமாய் அளிக்கப்படினும் கடவுளுக்கு வேகாத உலராத ஒரு சிறு கவளம் அன்னம் கிடைப்பது மிக அரிதாயிருக்கின்றது. அவரவர் எனக்கிந்த அன்னம் வேண்டுவதில்லையென அரிசியாகவேகொண்டுகொள்கின்றார்கள். இனி அருச்சகர் புண்ணியாவாசனத்துக்குச் சிறிது அரிசி வேண்டுமென்றால் அது கிடைப்பதரிது. கிடைக்கினும் சிறு கொய்யேகிட்டும். மேளகாரர் தாசிகளுக்குக் கொடுக்கும் படியரிசியோ சிரகச் சம்பாவுக்குக் குறைவதில்லை. அவர்களுக்கேற்பட்டசம்பளத்தில் அரைக்கால்சம்பளமும் அத்தியயன பட்டருக்குக் கிடையாது. அந்தோ! வைதிகம் இப்படியா ஒழியவேண்டும்! சீரத்தை இவ்வழியா தொலையவேண்டும்! நாம் ஒருவரைத் தூஷிக்க வந்ததாய் எண்ணக்கூடாது. இக்காலத்துச் செய்கைகளைக்கண்டே ஆற்றாது மனத்துயா முற்றுப்புலம்புகின்றோம். ஐயன்மீர்! ஆலயவிசுவாசத்தைக் கைவிடாதீர்கள். ஆலயம் வாழ்ந்தால் ஆருயிர் வாழும் என்பதை நீங்கள் அறியாததனறு. இனியேனும் ஆலயவிஷயமாகச் சிந்தியுங்கள். மிக்க பொருளாசையற்றவரும் தேவ திரவியத்தில் அச்ச முள்ளவரும வேதாகமங்களிலே விசுவாசமுள்ளவரும் கடவுள் பக்தியுடையோரும பற்பல நூல்களின் உண்மையுணர்ந்தோரும நற்குலத்தே பிறந்தோரும் ஆகிய சத்புருஷரை தர்மகர்த்தர்களாகவும், வேதாகமங்களையறிந்து அதிற்கண்ட விதி கடவாது ஒழுகும் இயல்பினரையே தேவகைங்கரியார்ச்சனைகளுக்கு அதிகாரிகளாகவும், ஞான சாஸ்திரங்களிலும் ஆகமங்களிலும் நற்பயிற்சியுடையோரையே ஆலய பண்டிதர்களாகவும் நியமிக்கத்தக்க முயற்சிசெய்யுங்கள்! பூர்வஜன்மத்தில் நாம் செய்த ஈசுவராராதனைத்திரு பலனாலேயே இப்பொழுது நாமசுகமனுபவிக்கின்றோம். இப்பொழுது அக்கடவுள் வழிபாட்டை மறப்போமேயானால் பின் எவ்வித ஜென்மம் வருமோ. முற்காலத்திலே பல தேவாலயங்களைப் பிரதிஷ்டை செய்த புண்ணிய சிலர் பெயர்கள் பற்பல தேவாலயங்களிலும் மலைகளிலும் விளங்குவதை நீங்கள் கண்டதில்லையா. தன் வயிற்றை நிரப்புவது மிருகங்களுக்கும் இயல்பாதலின் மனிதராய எமக்குக் கடவுள் வழிபாட்டினுலன்றோ மேன்மையுண்டாம். எமக்கு நல்ல சரீரத்தைக் கொடுத்தருளிய கடவுளைவழிபடாவிடில் அவர்க்கு நாம் பெரும் கடனாளியாவோமல்லவா. அது எமக்கு அழகுமா! ஒவ்வொருகிராமங்கள் தோறும் அநாதியானதென்றவர்கள் ஆலயங்களைக்கட்டு

[illegible]

...லை நீங்கள் காணவில்லையா. சம்மடாதிபதிகள் உலகவிய லறியாது நித்திராநிஷ்டையிலிருப்பது உங்களுக்குத்தெரியாதா? அவர்கள் திருமடாலயங்கள் கருங்கற்களாலமைக்கலவாதலால், நீர், நெருப்பு, கள்வர் முதலிய உபத்திரவமின்றிச் சிட்சு விசுவ வெண்சாமரக்காற்றுந் தம்மீது படப்பட்டு மெத்தைகளிலே அவர்கள் படுத்துறங்குகின்றார்கள். எவர் எம்மதமானாலும் அவருக்கென்ன. நாமும் தம்மினத்தாரும்உண்டுடுத்துச்சுகிக்கப் பணம்போதாதாயின் பிஷ்பார்ச்சனஞ்செய்ய வெளியில் விஜய யாத்திரை செய்வார்கள். அல்லது ஏதேனும தேவாலயங்களிலே தமக்கு மரியாதையாக வேண்டுமென்றும் அல்லது சிவிகை வெண்சாமரம் குடைமுதலிய எடுபிடிசாமான்கள் செய்யவேண்டுமென்றும்——

என்றும் கிளைத்து வெளியாத்திரை செய்கின்றார்களேயன்றி வேறில்லை. இனி ஆலயங்களையும் ஆரியமதத்தையும் ஆதரிப்பவர் யாவர். எவ்விதத்தேனும் ஆலயங்களைச்சுவாதீனம் செய்து அங்கு சில மரியாதைகள் பெறவும் அவ்வாலய திரவியங்களைக் கைகண்டபடி செலவழிக்கவும் வேண்டிய முயற்சியேயன்றி அவர் விடுவதில்லை. ஆரியமதத்தைக்காக்கவும் அசாரியமதத்தைப் போக்கவும் ஆலயங்களைப் பரிற்றுவிக்கவும் ஆகமங்களை ஆதரிக்கவும் இவருக்கு அவகாசமேயில்லை. அந்தோ! இம்மடாதிபதிகள் தங்கள் காரியங்களைச் சரியாக நடத்திவந்திருப்பரேல் இவ்வளவு ஆரியஜனங்கள் இதிஸ்தவராய்ப்போயிருப்பரோ! அவர் களைச்சொலவித்தான் பயனென்னை! யாவும்கலிகால வைபவமேயாம்! இக்கொடிய காலத்தும் ஏதோகடவுளின்கிருபையால் சம்மத பத்திரிகைகளும் சிலதோன்றிவெளிவருகின்றன, அவற்றைப்பலர் வாங்குவதேயில்லை. இனியேனும் தேவாலங்களில் விசுவாசமுற்று அநேகரும் சம்மவர்கடவுளுடைய அநுக்கிரகத்தைப் பெறுவாரெனக்கடவுளுடைய திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

சுந்தராஜய்யங்கார.

இலத்தூர்.

தர்மசாலஸ்திரம்

தொடர்ப்பு.

நண்பர்கான்! சிறிது கவனித்துக் களிகூர்ந்து யாம் எடுத்தோதும் விஷயங்களைப் பலருக்கும் போதித்து நல்லுத்திகளைக் கைக்கொண்டு மற்றவற்றை நீக்கி எனக்குண்டாய சந்தேகங்களை நீக்குங்கள்.

Koviloor Digital Library

[illegible]

மாகமாசச்சுக்லபக்ஷஸப்தமி ரதஸப்தமியென்னப்படும்" அக்காலத்தில் ஸ்நான தான முதலியவை செய்தால் நற்பயன் கிடைக்குமென அறநூல்கள் கூறுகின்றன. அந்நீதி உதயத்தே வியாபரித்திருக்கவேண்டுமென்பது விதி. அது கொண்டே தர்ம சாஸ்திரங்களெழுதிய விஷ்ணு முதலாயினோர் அடியில் வருமாறு கூறியிருக்கின்றார். "சூரியகிரகணத்தைப் போன்றது இம்மாக சுக்ல சப்தமி. அருணோதய வேளையில் அன்று செய்யும் ஸ்நானம் மிகு பயனைத் தரும்" என்றும "அருணோதயகாலத்தில் மாக சுக்ல சப்தமி ஸ்நானம் பிரயாகையில் கிடைக்குமானால் கோடி சூரிய கிரகணத்திற்கு அது சமானமாமெனறும், மாகமாசத்துச் சுக்லபக்ஷத்துச் சப்தமி உதயகாலத்தில் ஸ்நானார்க்கிய தானங்களால் ஆயுர் ஆரோக்கியங்களைக் கொடுக்கும" என்று கூறும் வசனங்களாலும், இச்சப்தமியைப் பதினான்கு மனுவாதி புண்ணிய காலங்களி லொன்றாகவும, எடுத்தோதப்பட்டது. "ஐப்பசிச் சுக்ல பக்ஷ நவமி, கார்த்திகைச் சுக்ல பக்ஷ துவாதசி, சித்திரைச் சுக்லபக்ஷ திருதியை, புரட்டாசி பங்குனி மாசங்களின் அமாவாசை, தைச் சுக்ல பக்ஷ ஏகாதசி, ஆடித்தசமி, மாகமாச சப்தமி, ஆவணிக் கிருஷ்ணாஷ்டமி, ஆடிப்பௌர்ணிமை, கார்த்திகை, பங்குனி சித்திரை, ஆனிமாசங்களின் பௌர்ணிமை இப்பதினான்கும் மனுவந்தரங்கள் தொடங்கிய காலங்களாதலின் "இவை மகா புண்ணிய காலங்கள்" எனறு மாதவாசாரியர் மச்சிய புராண வசனங்களால் எடுத்துக்கூறுகின்றார். நிர்ணய சிந்துக்காரர் மனுவாதிகளிற் செய்யும் சிராத்தம் பிதுர்க்களுக்கு மிகத்திருப்தியைப்பிறப்பிக்குமென்றுபிரமாணமாய்"மனுவாதிகளிலும்யுகாதிகளிலும்முறைப்படி செய்த சிராத்தம் இரண்டாயிர வருஷமளவையில் பிதாக்களுக்குத் திருப்தியைத் தரும்" என்று ஓர் மச்சபுராண வசனத்தை எடுத்துக்காட்டினார். இச்சிராத்தம் நித்திய கருமமே. அதைவிட்டவர்க்குப் பிராயச்சித்தம் "தொம்புவகா" என்னும் மந்திரத்தைத் தண்ணீரில் நின்று நூறு முறை ஜெபித்தால் மனுவாதி சிராத்தங்கள் விட்ட குற்றங்களொழியும்." என்று குக்கிதாவம் கூறுகின்றது. பிராயச்சித்தங்களை அதிகமாய் எடுத்துக் கூறுவதும் கன்மம் நித்தியமென்பதைக் காட்டும். மனுவாதிகளில சுக்ல பக்ஷத்திதிகள்முற்பகலைப்பற்ற வேண்டுமென்றும், கிருஷ்ணபக்ஷ திதிகளை பிற்பகலைப் பற்ற வேண்டுமென்றும "மனுவாதி யுகாதிகள் சுக்லபட்சமானால் முற்பகலை வியாபித்ததே யுதவும்" என்றும பாத்மம் காருடங்களில் கூறப்படுகின்றன. இதனைத் திபிகை யென்னும் கிரந்தம எழுதியவரும ஒப்பியிருக்

[illegible]

ன்றூர். இத்துணிபையே ஸ்மிருதியார்த்த சாரஞ் செய்தவரும் அநுசரித்தாராதலின் ரதசப்தமி என்பது மூற்பகலே பற்றி நின்றவன்றே புண்ணியகாலமென்பது துணிபாம். இங்ஙனமிருக்க, சென்ற தையாதத்தில் உ௩௨ டு-நாழிகைக்குமேற் பிறந்த சப்தமி உசஉ ௫-நாழிகை வரையிருந்தது. அதில் அருணோதய வியாப்தியிருந்த உ-வது தினத்தன்றே ஸ்நான தான சிரார்த்தாதிகளை அநேக விசிஷ்டர்களநுஷ்டித்தார்கள். மற்றும் சிலரோ களைமொழித்த மற்றைய எவ்வித சிரார்த்தங்களும் பிற்பகலிற்றான் செய்ய வேண்டுமெனக் கருதி முற்கூறிய வசனங்களை அறியாதவர்போல் முதற்றினத்திற்றானே முடித்தார்கள். இவாநுஷ்டானங்களில் எது நியாயமென றமுந்த என் சமூசயத்தை அறநூலுணர்ந்த ஆரியர்கள் நீக்குவாரென எதிர் பார்க்கிறேன்.

காஞ்சியந்தணன்.

"ஜீவகாருணியம்"

"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும், செந்தண்மைபூண்டொழுகலான்" இ - ள்.

அந்தணரென்பவர், [அம்—தண்—அர்-] அறவோர் தருமவடிவானவர்கள் [எதினாலெனின்-] எவ்வுயிர்க்கும் [சரம் அசரமாகிய] எல்லாவுயிர்களிடத்தும், செம்- தண்மைபூண்டு ஒழுகலான்- நல்ல காருணியமுடையராய் ஒழுகுவாராதலினால் என்பது. இதனால் பொதுவகையால் யாவரும் பெறுதற்குரிய ஜீவகாருணியம் சிறப்பு வகையால் அந்தணரிடத்தே நிலைபெறுமென்பதாயிற்று.

ஜீவன் ஆன்மா- அணு- புத்கலன்- உயிர்- பசு- சேதனன் என்பன ஒருபொருட்கிளவி———இம்மை மறுமை இன்பங்களையும் வீடுபேற்றையும் ஒருங்கே பெறுதற்குரிய பரிபாகிகள் யாவரோ அவர் மேற்கொள்ளற்பாலனவாகிய அறங்கள் எண்ணிலவாயினும், அவற்றுள் ஒப்புவமையின்றி மிகச்சிறந்து நிற்கும் பேறமாவது ஜீவகாருணியமென்பேபாம். கொல்லாமை வெகுளாமைஇன்னாசெய்யாமை மன்னுயிர்க்குறுதி பேணல் முதலியனவாகப் பகுத்துச் சொல்லப்பட்ட அங்கங்களெல்லாம் "ஜீவகாருணிய" மெனும் பொதுச்சொல்லில் அடங்கிநிற்கும். இதற்குமேற்சிறந்த அறம் ஒன்றுண்டென்று எந்நூலினும் கண்டு கேட்டறியோம். அதுபற்றியே—"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று"—என்றது தமிழ்வேதம். கொல்லாமையொன்றே தலையாகிய அறம், மற்றிரண்டாவது

Koviloor Digital Library

[illegible]

பொய்யாமை என்பது நற்பொருள். இதனால் ஏனைய அறங்களெல்லாம் ஒருவனிடத்து உளதாயினும் ஜீவகாருணியம் ஒன்றில்லாத போது அவை பயனற்றதாகிவிடும் எனவும் ஏனைய அறங்களெல்லாம் இல்லையாயினும் இச்ஜீவகாருண்ணியமாகிய பேரறம் ஒருவனிடத்து உளதாயின் அஃது எல்லா நன்மையுந்தரும் எனவும் நிச்சயிக்கப்படுகின்றன. இனி புண்ணியம் என்பது யாது? பாவம் என்பது யாது? என்று தீர்க்க விசாரஞ்செய்து ஓரே வார்த்தையில் முடிவுகாக்க சேருங்கால் உயிர்க்கு உறுதிபயக்கும் தொழில்கள் யாவை? அவை புண்ணியம். அங்ஙனமல்லாது மன்னுயிர்க்குத் துன்பமேற்றும் தொழில்கள் யாவை? அவை பாவம் என்று முடிவதன்றி வேறில்லை. துன்பங்களெல்லாவற்றினும் முடிந்தது மரணத்துன்பமேயாதலாலும் இன்பங்களெல்லாவற்றினுஞ் சிறந்தது அதுதவிர்தலே யாதலாலும் கொலை ஜீவகாருண்ணியம என்னுமிரண்டையேபாவம்புண்ணியமெனச்சிறந்தெடுத்துக்கொள்ளப்பட்டது. இனிஇச்ஜீவகாருணிய சீலம் ஒருவரிருவர்க்கன்று. எச்சமயத்தார்க்கும் எச்சாதியார்க்கும எவ்வாசிரமிகளுக்கும் எத்தேயத்தார்க்கும்பொதுவாகி மறுக்கொணுநிலையில் விளங்கும் பேரறமாம்.

இப்பொழுது வரும் இவ்வளப்பாத சாதிசமய ஆசிரமங்கள் பற்றிச் செய்யுவகையால் மேற்கொள்ளப்படும் அறங்கள் எத்துணையுளவாயினும அத்துணையும் பயன்படாது அவலப்படுமென்றுணர்க. ஆகலின இவ்வறத்தை மறுப்பார் ஒருவருமிலலை. ஆயின இக்கால கிறிஸ்தவர்களுள்ளே சில பகுதியார் மட்டும் மனிதரையொழித்து ஏனைய உயிர்களைக் கொல்லுதல் கொலைப்பாவமாகாதெனக்குறியழிகின்றார்கள். அது மனிதர்க்கு மட்டுமே ஆத்மாவுண்டென்றும ஏனையவுயிர்கட்கு ஆத்மாவில்லையென்றும இறந்தவுயிர் மீளப்பிறத்தலில்லை யென்றும் இங்ஙனம் குருட்டறிவாற் கொண்ட கொள்கையாதலின், இது சுருதியுக்தி அனுபவ விரோதமான அவல சித்தாந்தமென்பதை மற்றோரிடம் விரித்துவிவகரிப்போம். ஆண்டுக்காண்க. இது நிற்க,—இனிச் சீவன் என்பது யாது? அதனிலக்கணமென்னை யெனின், அஃது சித்தாந்தவிசாரம செய்யுமிடத்தே விரித்துக் கூறப்படும். அது நிற்க; இக்கால ஆரியருள்ளே அநேகர் இப்பேரறத்தின் பெருமையை உணராதவர்களாய் அந்தோ! பிறவுயிரைக் கொல்லுதல் துன்புறுத்தல் முதலிய பாதகவழிகளிலே செல்லுகின்றனர். இங்ஙனம் ஜீவகாருணியத்தை இழந்து வாழ்பவர் யாவரோ . அவர் தம்முயிர்க்குறுதி செய்துகொள்ள மாட்டாதவராதலின் அவர் தங்களுக்குத்தா

[illegible]

ங்களை அப்ராப்தெங்களாயிருக்கின்றனர். இந்த இடத்திலே பலர் பலவிதமாக ஆக்ஷேபிப்பதனால் தலையாய அவைகளை யெடுத்துக்காட்டி மறுத்துவாம்:—

ஈனமு முக்கியமாய்ச் சுத்தக்ஷர்பாவது யாதெனில். ஜீவகாருண்ய ஒழுக்கமே. பேசவும் உய்ந்து கூடவிருப்புகிற ஒருவன் தனக்குப் பிறவுயிர்களால் நிகழும் செய்திகளில் எவையெவை துன்பங்களாகத் தனக்குக் காணுகின்றனவோ அவை பிறவுயிர்கட்கும் துன்பமாம் எனவும், தனக்கு எவ்வெவையின்பமாகக் காணுகின்றனவோ அவை பிறவுயிர்க்கும் இன்பமாமெனவும் இங்ஙனம் அறியாநுய்த்துணர்ந்து கொள்ளக்கடவன். பிறவுயிரைக் காயித்தல் துன்புறுத்தல் கொல்லுதல் செய்ய மனமெழும் பொழுது அவ்வெழுச்சியை மீறவிடாது அறிவினால் தடுத்து இறந்தப்பிறவுயிர்கள் தன்னிடத்து அங்ஙனஞ்செய்யமுயலுங்கால் அது தனக்கு எவ்வாறிருந்தது எவ்பதைச் சிந்திக்கக் கடவன். அப்படிச் சிந்தித்தால் அம்மனவெழுச்சி அங்ஙனே அடங்கிப்போம், போகவே ஜீவகாருணிய குணம் தலைப்படும், படவே பேரறம் பெருகுமென்க.

இனி சம்மவர் இங்ஙனம் விசாரியாது தினந்தோறும் எண்ணிறந்த வுயிர்களை வருத்தியும், வஞ்சித்தும், கொன்றும், பவக்கடலில் மூழ்குகின்றார்கள். அநேகர் ஆத்ம சுவரூபத்தைச் சிறிதும் விசாரியாது முகட்டுப்பூச்சி பேன் முதலியவை அற்ப செந்துக்கள் தானே அவைகளைக் கொல்வதும் ஓர் பாவமாகி விடுமோ என அசட்டைசெய்து விடுகிறார்கள். ஈண்டுப்புத்திமான்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களிவை. அதாவது, ஆன்மாக்களிலே சிறிய ஆத்மாவென்றும் பெரிய ஆத்மாவென்றும் பேதமில்லையா. எல்லா ஆத்மாக்களும் ஒரே தன்மையுடையன. அவைகள் அனுபந்தம் நீங்கி விடுபேறெய்துதற்குரிய பரிபாகம் வரும் வரையில் அவைகளை எல்லாம் வல்ல இறைவன் சிருட்டியாதிகளில் விடுத்து நடத்துகின்றார். அவையவ்வாறு நடைபெறும்போது தத்தங்கன்மத்துக் கிடான தேருடல்களை மாறி மாறி யெடுத்துக், கொள்ளிவட்டம் போலும் காற்றாடிபோலும் காலசக்கரத்திற் சுழன்று வருகின்றன. அங்ஙனமெடுக்குஞ் சரீரங்கள் நால்வகை யோனி [அண்டஜ ஸ்வேதஜ உத்பிஜ ஜராயுஜம்] எழுவகைத்தோற்றத்தில் (தேவர் மக்கள் புள் விலங்கு ஊர்வன நீர்வாழ்வன தாவரங்கள்) என்பத்துநாலிலக்ஷ பேதமாய்க்காணப்படுவன. இவை ஓரறிவுமுதல் ஆறறிவுவரையில் பாகுபாடுடையன. அதாவது, பரிசவுணர்ச்சியொன்றேயுடைய ஜீவன்கள் தாவரங்களேயாம் (மரஞ்செடி

Koviloor Digital Library

[illegible]

கொடியாதிகள்) தொட்டாற்சுருங்கி முதலிய செடிகளில் இது சாமானியர்களும் உணர்ந்து சொல்லலாம். இனி சங்கு சிப்பி முதலியவை பரிசத்தோடு சுவையுணர்ச்சியுமுள்ள ஈரறிவுயிர்களாம். எறும்பு கறையான் முதலிய அனந்தவுயிர்கள் அவ்விரண்டனோடு கந்தத்தையுமறிகிற மூவறிவுயிர்களாம். வண்டு தும்பி ஈ முதலியவை அம்மூன்றனோடு உருவத்தையுமறிகிற நாலறிவுயிர்கள். இனி பசு பக்ஷிபாதி ஏனைய விலங்குகளெல்லாம் அந்நான்கினோடு சத்தத்தையுமறிகிற ஐயறிவு உடையனவாம். இனித்தேவர் மக்கள் நாகமுதலினோர் ஞானேந்திரியங்களாலிய அவ்வைம்புணர்வேயன்றி மனமதி அந்தக்கரணங்களும் கலைபாதி புள்ளர்த்தக்கரணங்களுமுடையராய் அதுகொண்டு யோகக்காக்ஷி முதலிய விசேஷப் பகுத்தறிவுடையார்தன்மையர் ஆதலால் இன்னோர் ஆறறிவுடையாரெனப்படுவர். இதனுள்ள உயிர்கள் உயர்திணை அஃறிணையென இருவேறு வகைப்பட்டன. ஆகவே கன்மானுகுணமாக ஓரே ஆன்மா இன்று கடுகினும் சிறிய சூக்குமவுடலெடுக்கவும் நாளை யானையினும் பெரிய தூலவுடலெடுக்கவுங்கூடும். உயர்திணையாயிருந்த ஒருயிர் கன்மபேதத்தால் அதுவொழிந்து அஃறிணையாகவும், அஃறிணை உயர்திணையாகவும் மாறுதல் கூடும். இதன் விரிவு பின் விரிக்கப்படும். ஈண்டைக்கு. இங்ஙனம் தோன்றி நின்றழியுந்தன்மையது உடல்களேயன்றி உயிரன்று; அது நித்தப்பொருளாம். இங்ஙனம் விசாரித்தறிந்த விவேகிகள் சிறியவுயிர்களேயென்று அசட்டையாகப் பேன் மூட்டை எறும்பு முதலியவுயிர்களைக் கொல்லத்துணிவரோ? தம்மைப்பெரியவுயிரெனவும், அவை அற்பவுயிரென்றும்மதித்திருக்கின்ற இவர் தாம் சிறிது காலத்தின்முன் எவ்வாறிருந்தனர்? கன்மத்திரயத்தால் கட்டுண்டு தாபத்திரயத்தால் நொந்துண்டு காலத்திரயத்தில் சிக்குண்டு புவனத்திரயத்தில் சுழலுண்டு சரீரத்திரயத்தால் புக்குண்ணுமிவர், தமது தாயுந்தந்தையுஞ் சேர்ந்த சமயத்து ஆண்டுக்கூடிய சுக்கில சுரோணிதத்தில் அணுவின் நுண்ணிய பனித்துளிபோற்றங்கிக் கிடந்தவரன்றோ? அதன் பின்னன்றோ பிண்டமாய் முண்டமாய்ப் பேருடலாய் வெளிவந்துழைந்துழுழுப வளர்ந்தனர். இதனைச்சிந்தியாது ஏனையவற்றை அற்பவுயிரென நினைப்பதென்னை? இனி அவை நம்மைக் கடித்துத் துன்புறுத்துகின்றனவே! ஆதலால் அவைகளைக் கொல்லுதல் பாவமன்று எனின் அதுபற்றிச் சிந்திப்பாம். அவ்வுயிர் தம் கன்மத்திற்கிடாக அவ்வுடலைத்தாங்கியது. சிறிதாகவோ பெரிதாகவோ ஒருடல் வந்தபோது அதனைக்காத்து வளர்வதற்கு ஆகாராதிகள் இன்றியமையாதன: ஆகவே அதுகொள்ளக்கூடிய பசி முத

[illegible]

விபரைவிட்டு நீங்குதலின்று. அதனால் அதன் பரிபாலனமாற்ற இவர் பேதமெவது அதற்கியல்பாயிற்று. இனி இவ்வழியில் பிரமாபேதிடினுல் அது இன்னவுயிர்க்கு இவ்விதத்துன்பமாம் என்று பிரித்துணர்ந்து தெரியாது அதனாலே அது மனிதர் முதலியோரைக் கடித்து உதிரங்குடிப்பதாயிற்று. அதனால் மனிதருக்குத் துன்பமாம். அவ்வழி தனக்கு அழிவு வரும் என்று அது உணர்ந்தால் மனிதரை வருத்துமோ? ஒருமனிதன் ஒருகாரியத்தைச் செய்யும்போது அக்காரியத்தால் தன்னுயிர்க்கிறுதி வருமென்று தெரிந்தால் பிறகு அக்காரியத்தைச் செய்வானே? இதுபற்றியன்றே "தான் சாக மருந்துண்பாருண்டோ"? என்று பழமொழி வழங்குகின்றது. இனி அவ்வுயிர்களால் நமக்கு வருந்துன்பமதாபத்திரியங்களில் ஒன்றன்றி வேறன்றே? பழயகடனைக் கட்டி ஒழித்து அக்கடனால் வருந்துன்பத்துல்நீங்க நினைக்கும் ஒருவன் பின்னும் கடன்வாங்குவனே? அதுபோல் தாபத்திரயத்தில் மொத்துண்டு சலித்து இனி இக்கன்ம பந்தத்தில் நீங்க வேண்டுமென நினைக்கும் புத்திமானொருவன் பின்னும் ஆகாமியம்விளையுமாறு அவ்வுயிர்களைக்கொல்லத்துணிவானுமோ? இனி மூட்டை முதலியவுயிர்களை நாம கொன்றழிப்பதினுலே அவை இவ்வுலகத்தில்லாதொழியுமோ? அவற்றால்வரும் துன்பம் நீங்குமோ? வெற்றரையான நிலத்தில் மழை பொழிந்த வழி அனந்தம் தாவரங்கள் இளைத்து,பிறிதொருகால் ஒருங்கே யழிந்து பின்னும் இளைப்பது போலவே "ஸ்வேதஜம்" முதலிய வுயிர் ஓரோர் காலத்துமிக்குத்தோன்றி நின்றழிவதன்றோ? அதனைத் தடுக்க எவர் வல்லார்! அப்படி வல்லாரொருவருளராயின் அவரே கடவுளாவரன்றிப் பிறிதோர் கடவுளைக் கொள்ளல் மிகையா மென்றொழிக. ஆகவே (பாசப்பிணிப்புற்ற சிவரெல்லாம் பசித்துண்டு பின்னும் பசிப்பவரே யென்பது கருத்து.) இவ்வணம விசாரித்துணர்ந்த விவேகிகள் அவை புல்லுயிர்தானே யென்று, மறந்தும் கொல்ல நினையாரென்க. நிர்ஷ்டாந்தத்திற்காகப் பேன், மூட்டை முதலியவற்றை இங்கெடுத்து விவகரித்தோம். இதனை மற்றெல்லாவுயிர் களிடத்தும் அது வயமாக்கி ஒட்டிப் பொருள் கொள்க—வரும்.

சாமக்குளத்தான்.

"கலிகாலகல்யாணகோலாஹலம்"
தொடர்ப்பு.

ஓய!

திருமணமென்பது எம்மவர்க்குக் கேவலம் இன்பமாத்திரத்துக்கேயன்று, மிலேச்சர்க்கேஅவ்விதக் கலியாணம்

[illegible] ம் பிசேஷ்ட்ரிஷும் மேவுமா ஆரியராயிற்றே! நம்மவ

[illegible]

ருள்! விவாகமென்பது பெண்களுக்குச் செய்யும் ஓர் ஸம்ஸ்காரம் [ஞாதிச்சடங்கு] அச்சம்ஸ்காரத்தாற்றான் அப்பெண்கள் ஆரியத்தன்மையை முற்றிலுமடையப் பெறுவர் சிற்க; இச்சம்ஸ்காரத்தை விதித்த நூல்கள் அவ்வளவும் விலக்கிய ஸகோத்திரவிவாகம், தாய் தங்கைமுறை விவாகம், இவைகளைச் செய்யத்துணிபவரை பிராமணர் முதலிய நால்வகையாரியருள் எங்ஙனம் சேர்த்துக்கொள்ளலாம்? இவ்விதம் சாஸ்திரங்களை நம்பாத இவர்கள் தான் எதற்குக் கலியாணம் என்று வைதிகர்க்கு மிகவில் காசையும் கொடுத்து நல்லுணவுக்குபயோகமாய் செய் செற்பொரி முதலியவைகளைத் தீயிலிட்டழிக்கின்றார்கள். ஏன் இவர் மற்ற தேயத்தவரைப்போல் மோதிரம் மாற்றுவதாவது அல்லது எழுத்து மூலமான ரிஜிஸ்தர் செய்வதாவது கூடாது? இவர் ஆரியர், இவர்பிராமணர், இவர் சூத்திரர் என்பதாதி, பகுதிக்கட்டிவிவர் அடங்கி மநு முதலிய தொல்லாசிரியர் நன்னூலை நம்பினால் அதிற்கண்டபடி கன்மங்களை நடத்த வேண்டும். அதில் சிறிது பாகம் உசிதமானால் எடுப்பார். இல்லாது விட்டுவிடுவேல் இவர் எங்ஙனம் சாஸ்திரத்தை நம்பிய ஆரியராவர். பாருங்கள்! சாஸ்திரத்தில் விவாகம் செய்யக்கூடாத கன்னிகைகளைப்பற்றிய வசனங்கள் பலவிருந்தாலும் அவற்றுள் சில தீங்கு எடுத்துகாட்டுவோம். ஸகோத்ராம் வா ஸமாநப்ரவராம் வா ஸமுத்வஹ்ய | தஸ்யாமுத்பாத்ய சண்டாளம் ப்ராஹ்மண்யாதேவ ஹீயதே' (இதன் பொருள். தன் கோத்திரத்திலேனும் தனது பிரவரத்திலேனும் பிறந்த பெண்ணைக் கலியாணஞ்செய்து அவளிடம் ஒரு குழந்தையைச் சண்டாளனாகப் பிறப்பித்துத் தானும் பிராமண்யத்தை விட்டுச் சண்டாளனாகிறான்.) [illegible] (இ-ள். தாய் வழியால் ஐந்துக்கும் தகப்பன்வழியில் ஏழுக்கும் குறைந்தபெண்ணையும் ஸகோத்திரப்பெண்ணையும் விவாகஞ்செய்பவன் குருபத்தினீசங்கம மகாபாதகத்தையடைவான்) என்பது. '[illegible]| இ-ள். தகப்பன் வழி ஏழு தலைக்குள்பட்டவளும் தாய் வழியில் ஐந்து தலைக்குட்பட்டவளும் ஸகோத்திரத்துட் பிறந்தவளும் ஸமானப் பிரவரத்தில் பிறந்தவளும் விவாகத்துக்கு அனருகள்" எ-று. [illegible]

[illegible]

"இ-ள். தாய் வழியில் மூன்றாவது பெண்ணை விவாகஞ் செய்தவரும் தகப்பன் வழியில் ஏழாவது பெண்ணை விவாகஞ்செய்தவரும் எவ்வளவு சத்கருமங்களைச் செய்பவராயினும் அவர் கர்மப்பிரஷ்டராய்ச் சூத்திரர்க்குச் சமானராவர் எ-து. [illegible]

இ-ள். தாய்வழி தகப்பன்வழி முறையில் தாய் முறை தங்கை முறையானாலும் எச்சமயத்திலேனும் ஒருவன் ஒரு பெண்ணைத் தாயே என்றாவது தங்காய் என்றாவது அல்லது ஒரு பெண் ஒருவனை 'பின்னாய்' என்றாவது 'அண்ணா' என்றாவது கூப்பிட்டிருந்தாலும் அவர்களுக்கெப்பொழுதும் விவாகம் கூடாது. அப்பெண்களைப் பெற்ற தாயாகவே எண்ணவேண்டும்" எ-து. [illegible] இ-ள். வழக்கத்தில் தாய் தங்கையாயினும் கூடன்தர் முதல் எவ்வித முறையில் தாய் அல்லது தங்கையானாலும் அவளை விவாகஞ்செய்யக்கூடாது" என்பதாகும். இனி வைதிகராயுள்ளவர் சாஸ்திரங்களைச் சிறிதும் ஆராயாது பாட்டிகள் பகர்க்கதே பிரமாணமெனின் அதையும் சாஸ்திரம் விடாது. [illegible]' சாஸ்திர விருத்த வுலக வழக்கத்தை முதிக்கவேண்டும் என்று மறுக்கின்றது. வைத்திகாதிஷிதீபம் என்னும் புஸ்தகத்தில் '[illegible]' ஆயின் ஏனைய மூன்று ஜாதிகளில் செய்யும் விவாகம் முட்டாள்தனத்தாற்றான் என்றும், [illegible] தாய் வழியில் ஐந்தைத்தள்ளி ஆறாவது பெண்ணையும், தகப்பன் வழியில் ஏழுதள்ளி எட்டாவது பெண்ணையும் விவாகிக்கவேண்டும் என்றும் எழுதப்பட்டுள்ளது. இவர் விசேஷமாய் சந்தானம் உற்பத்தியே நல்ல விவாகத்தின்பயன் என என்னுகின்றார்கள். ஆயின் மகமதியருள் சிற்றப்பன் மகளைக் கலியாணம் செய்வதும், கிறிஸ்தவருள்தனக்கு இரண்டொடங்கு வயதுள்ளவளைக் கலியாணஞ் செய்வதும வழக்கம். அதினும் பின்னை பிறக்கபார்க்கிறோம். மேற்குநாட்டில் சில நாகரிக ஜனங்கள் கூடப்பிறந்த தங்கையையே விவாகஞ்செய்து பின்னை பெறுகிறார்கள். (பைபிளில் "லோத்தென்பான் தன்மகள் இருவருடன் கூடி இரண்டு பிள்ளைகளைப்பெற்றான்" என்று சொல்லியிருக்கி

Koviloor Digital Library

[illegible]

றது.) பிராமணனுக்கும் பறைப்பெண்ணுக்கும், பறை யனுக்கும் பிராமணப் பெண்ணுக்கும் விவாகமாகிறதும் பின்னோறிறக்கும். பாலிய விதவைகளிடம் பிள்ளைகள் வெகு பிரியம் உண்டாகின்றன. ஆதலால் இவைகளெல் லாம் விவாகஞ் செய்யலாம்போலும்; இனி இவர் செய் வது பியாயமிருக்கமென்றும் ஆரியருக்குரிய தலைமையென் றுமசொன்னால் நம்மைப் பாவி எனவும், நல்ல சம்பந்த த்தைக் கெடுக்கிறவன் எனவும், நமக்கு சம்பந்தவீட்டில் வரும் லாபத்தைக் கெடுக்கிறான் எனவுங்கூச்சலிடுவா ர்கள். இவர் இவ்விதஞ் சொலவதால் நாம் பயப்படவி ல்லை. இப்பொழுதெல்லாம் பேண்சொல்லை மேலாய் நடப்பவாகளும்நமதுசொல்பயன்படாதாயினும பின்வரும் பயனை எடுத்துரைப்பது எமது கடமையாகலாலும் இவ்வளவுரைத்தோம். உலகத்தில் எவனோ ஒருவன் தாயுடன் பிறிபதாயார், அவன் மகன், அல்லது தகப்பனுட டன் பிறந்தவள், உடன்பிறந்தான்மகன், உடன்பிற ந்தாள் அல்லது பெண்,இவர்களிடங்கலந்துகாமிடாப்பிள் ளையும்பெற்றிட்டால் அதுவும் விவாகவிதியாமோ! இனிக் கிழவிகள் நமது வீட்டுப் பூசையிடம் சீட்டுப்போட்ட கப்பட்டால் செய்துவிடுவாம் என்பார்கள். இதொரு கொடுமை! "கிழக்குக்கோபுரமும் மேற்குக்கோபுரமும் ஒன் றுசேருமா? தெனபுறக்கோபுரமும் வடபுறக்கோபுரமு மொன்றுசேருமா?" என்றுஎழுதி இரண்டு சீட்டிட்டு ஒன் று அகப்பட்டால் இருகோபுரமும் ஒன்றுசேருமே."இனி இரண்டு தங்கைகளில் மூத்தவளைவிவாகஞ்செய்யலாமா? இளையவளை விவாகஞ்செய்யலாமா?" என்று இரண்டு சீட் டிட்டுஒன்றகப்பட்டால் யாதுசெய்வது வெகு அழகு! இப்பாவி விவாகத்தைச்செய்து அப்பெண்களைப் புணர் ந்து மறுமையில் பாவத்தை அனுபவித்து இம்மையில் இப்பெண்களால் தாக்கும் கிடைத்த அக்கினியில் பிதுருக் கிரியைகளைச் செய்து இம்முறை தப்பியபெண்களுடன் யாகாதிகர்மம் கன்மங்களைச் செய்தாசசந்தானங்களைப் பெற்று இவர் வாழும் வாழ்வே பெருவாழ்வு! இவர்க்கு க்கிடை இருகன்மாசிரமத்தின் பயன் பெண்ணுறவே யன்றி வேறொன்றுமில்லை. அது மிருகங்களுக்கும் உள்ளது. இதில் இனி கனியகாதானஞ் செய்யவேண்டி யது யாது அவன் கருப்பமா கட்டி முடித்தான். இவன் வாயில் ஒரு சொல்லைச்சொன்னான் இவ்விதஞ் செய்தான். இனி இருதிருமணமாகும் விவாகம்வைபிற் செய்விக்கத் தடையாது? இவனுக்குள்ள வயது அநேக வருஷங்கள். அவற்றுள் அநேக ஆயிரமுமாகவில்லை. அம்

[illegible]

ஜ்ஞாநஸித்தி

[illegible]

மம்மா! போதும் போதும்! இவன் துன்பம். இதுமட்டோ! தெலுங்கு நாடுகளில் ஓர் விசேஷம். அந்தேயத்தவர் ஏதேனும் ஒரு கோவிலில்போய் ஒரு நிமிஷத்தில் கலியாணத்தை முடித்துவிடுகிறார்கள். இதில் கிரியை எங்கே! ஹோமம் எங்கே! நாகவல்லி சேஷஹோமங்கள் எங்கே? எல்லாம் அழிகின்றன. இவ்விதம் தெலுங்கர் கெட்டார். இவ்விதம் தமிழர் ஒழிந்தார். இச்சமயம் மேனாட்டுப்பண்டிதர் இப்பொழுதே விழித்துப்பார்த்து வெகுவாய் நமது தேச விவாக சம்பிரதாயத்தைப் புகழ்ந்து வருகிறார்கள். அவர் கூற்று: உலகத்தில் ஓர் நிலத்துக்கு வேறுநிலத்து மண்ணுரமாவதுபோல ஒரு குலத்து ரத்தம் சம்பந்தித்துள்ள ஒரு சரீரத்தில் மறுகுல சம்பந்தமுள்ள சரீரமே சேர்ந்தால் நல்லகுழந்தைகள் பிறக்கவும் சரீராரோக்கியமுண்டாகும். அவ்விஷயத்தில் ஒரு சரீரத்தவியல் எவ்வளவு தலை முறைகள் வரையில் வருமென்பதை யறியார்! ஸகோத்திரம் முறை முதலியவைகளை விவாகத்தில் விலக்குகிறார்கள். உற்பத்தியில் தகப்பன் பக்ஷம் பிரதானமானதால் தகப்பன்வழி ஏழும் தாய் வழி ஐந்தும் தள்ளப்பட்டன. கண்டபடி கண்டவரைக் கலியாணஞ்செய்யலாம் எனனும் [illegible] கேற்பாட்டிற்கு எவ்வளவோ மேலானது ஆரியர் ஏற்பாடு என்பது. இந்நாளைய நம்மவரை அவர் அதிக்க [illegible] நவீன நாகரீக சிரோமணிகள் ஸ்திரீ 'ஸகல பெண்களுக்கும் கலியாணம் வேண்டும்' விவாகம் என்பது வாக்குத்தத்தம் மாத்திரம் போதும். 'எல்லா வர்ணத்திலும் ஆண்பெண் விவாகமாகலாம், சிறு பெண்களைக் கலியாணம் செய்யக்கூடாது." என்பதாதிகளைத்தான் இயவாறு சொல்லி வருகிறார்கள். இனி நமது சாஸ்திரங்கள் சத்தியமானால் கடவுளே இதற்கு ஒரு சமாதானம் செய்வாரென எதிர்பார்க்கிறோம். இவ்விபரீத முன்னேறில் ஒருவரான ஸ்ரீ நீலகண்டசாஸ்திரிகள் அவர்கள் [illegible]. "யாண்டுப்பெண்கள் செல்லவேபோராமம் பொருவிட்டும் வழியேபோறமாம். தன்மனமோன்றே தனியளவையாம். அக்கலிக்காலத் தவந்தனம்" என்பது அங்ஙனமிருக்க 'ஆரியசித்தாந்தசந்திரிகை எழுதியது எவ்வளவோ குறைவு என்பது திண்ணம். அதிகம் மற்றொரிடம் குறிப்பாம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

[illegible] சித்திரைமீ 16உ

ஆரியாசார ரகசியம்.

புண்டரம்.

தொடர்ச்சி.

போசன முதலிய காலங்களில் வெண்சந்தனத்தால் சிலர் தரிப்பதும் செஞ்சந்தனத்தால் வல்லபமதத்தர் தரிப்பது மென இருவகைப்படும். பெண்களுக்குப்புருவநடுவிற்றரிக்கும் பிறைபோன்ற புண்டரம் ஒன்று. ஆகவே இப்புண்டரந்தரிப்போர் வணங்குங் கடவுளைப்போல் இதுவும் தசாவதாரம் பெற்றதாம். இனி இதன் நடுவில் மஞ்சள்பொடியில் ஓர் குறியுளதேனும் அப்பொடியைத் தரித்தலின்மையால் அதனை இவற்றுளடக்கிக் கூறிலு மென்க. ஸ்மிருதிகளில் கன்மங்களின் அங்கமாய் நீரினால் ஓர் செங்குறி விதிக்கப்பட்டது. இப்பதினொருவித புண்டரங்களில் முறையே வைதிகம் ஸ்மார்த்தம் தாந்திரிகம் என மூவகைப்படுத்தி அவற்றின் அமைப்பையும் அவற்றின் பிரயோஜனங்களையும் குறித்து ஈண்டுக் கூறுவாம். வேதங்களிலே சாமானியமாய்ச் சிலவிடங்களிலே ஊர்த்வபுண்டர விதியும் வாசுதேவோபநிடதத்தில் அதற்குப் பொருள் அமைப்பு முதலியவைகளும் கூறப்பட்டுள்ளன. அதன் சுருக்கமாவது:—கோபீசந்தனமென்னும் ஓர் திருமண்ணை நெற்றிமுதலிய விடங்களில் இடவேண்டுமென்பதும் நீரினால் ஓர் ஊர்த்வபுண்டர முண்டென்பதும் அவ்வூர்த்வபுண்டரம இடைவெளியுள்ளதும் இல்லது மாகிய இருவகைப்படுமென்பதும் விஷ்ணுப் பிரீதியை அவை தருமென்பதுமாம்.

வரும்.

ஸம்ஸ்கிருதபாஷை

கல்பஸூத்திரம

வேதாங்கங்கள் ஆறனுள் கல்பசூத்திரங்களொன்றென்பது வைதிகர் யாவர்க்குந் தெரிந்ததாம். அவைகளின்றிச் சிரௌதம் ஸ்மார்த்தமென்னும் இருவகைக்கிரியைகளும் நிலைபெறுவாம். தர்மசாஸ்திரங்களை வேதாங்கங்களிற் கணக்கிடாது இதைக்கணக்கிட்டதற்குக் காரணம் யாதெனில், ஸ்மிருதிகளில் பற்பல தர்மங்கள் தனக்கே உபயோகமாவதும் மற்றைய சில தர்மங்கள் உலகப்பொதுவிற்குபயோகமாவதுமாய்ச் சொல்லப்பட்டன. அவற்றுள்

[illegible]

பொதுஸ்ம்ருதியைப் பற்றிக் கூறியவை அவ்வக்காலத்து நீதக [illegible] வர்களால் மாற்றப்பட்டுச் செருகப்பட்டிருக்குமே க்கொழிந்தும் மற்றைய பகுதிகளை முற்றிலும் படித்து, நித்திய நைமித்திக காமிய மென்னும் பாகுபாடுகளை நிக்கு ஒத்த காலங்களுக்கேற்றவாறு, ஓராதியிலுள் நடக்க முயலினுமே இத்தகைய வாழ்வில் அந்தணர்க்குபநயனம் செய்விக்கவேண்டு மென்பதான வசனங்கள் மட்டுமே ஸ்மிருதிகளில் அகப்படுமேயன்றி அவற்றை நடத்தும் முறையே தும அமைக்கப்படா. அவ்வழிகளிவைகள் கல்பசூத்திரங்களிற்றானுள்ளன. உதாரணமாக, உபநயனமென்பது வேதத்திற் கூறப்பட்டதாயின் இக்காலத்தில் இவ்வளவு வயதுள்ளவனுக்கு இம்முறை கொண்டு பநயனம் செய்விப்பான் என்பதாது வேதத்திலகப்படுவதில்லை. அது கற்பங்களிற்றானிருக்கும். அக்னிஹோத்ரமுதலியவைதிக காரியங்கள் மட்டில் வேதத்தில விதித்திருக்க அவைகளை அவ்வாறே அநுஷ்டிக்காது கற்பசூத்திரங்களிற்கூறியவற்றைக்கலக்கியநுஷ்டிக்கச்செய்கிறது. இதுமட்டோ! தர்மசாஸ்திரங்களில் கண்டதும் கற்பங்களிற் காணுதமான கர்மத்தை விட்டால் அதற்குப் பிராயச்சித்தமுண்டேயன்றி அதனாற்சாதி கெடுவதல்லை. கற்பசூத்திரங்களிற்கூறியசமஸ்காரங்களை ஒருவன் விடுவானேல் அவன் சாதியைவிட்டு நீங்குவானென்பதிற்றடையில்லை. ஆகலால் தர்மசாஸ்திரங்களிலும் கற்பசூத்திரங்கள் சிறந்தவேயாம. தர்மசாஸ்திரங்கள் காமியகர்மங்களைச் சிலவிடத்தும் தாந்திரிக கர்மங்களைச்சிலவிடத்துங்கூறிநிற்கும். கற்ப சூத்திரங்களோ அங்ஙனமின்றி வைதிகத்தையே தழுவிநிற்கும். ஸ்மிருதிகளிலேனு புராணங்களிலேனும் வேதவிருத்தமிருந்தால் அதைத் தாந்திரிகமென்று கூறற்பாலதாமென்பது ஆன்றோர்கருத்து. இவைகளையெல்லாம் கணக்கிடவெழுந்தவிடத்து இக்கற்பசூத்திரம் இறுதியினுள்ளதாயினும் பயனவழிப்படுத்தலைநோக்கின் இறுதிமுதலாயதாகக் கொள்ளப்படும். விசேஷமாய் இக்கலிகாலத்தில் அந்தணர் பூரணங்களையோதாது அறநூற்பயிற்சிபெற்றுத் தம் கருத்துக்கிசைந்தவாறு திரிவதால் இவர்களுக்கு இக்கற்ப சூத்திரமின்றி வேறெவ்விதக்கதியுமின்றாம். இவர்கள் வேதத்தையேனும் தர்மசாஸ்திரங்களையேனும் மற்றைய பெருநூல்களையேனும் கற்றறியாரேல் இக்கற்ப சூத்திரம் இவர்க்கைப் படாவிடில் இவர் கர்மங்கள் நிறைவேறுவது மிக அரிது. ஆதலின் கற்பசூத்திரங்கள் இத்தேசத்தவர்க்கும் மேது சாத்திரங்களுக்குமோர் பேரொளியாய் விளங்குவதென்பதற்குத் தடையில்லை.

வரும்.

Koviloor Digital Library

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA.

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

௪ - புத்தகம்.] சிதம்பரம்: நந்தன௵ சித்திரைமீ ௧௯௨ [இலக்கம் - ௫.

அறிவிப்பு.

பத்திரிகா நண்பர்காள்! சென்ற இரண்டு மூன்று பத்திரிகைகளாய் ஞானசித்திப்பத்திரிகையும் ப்ரம்மவித்தியா பத்திரிகையும் ஏதோ சில வாசகங்களால் வேற்றுமைப் பட்ட அபிப்பிராயம் கொண்டுவருவதாய் உங்களுக்குத் தோற்றுகின்றதல்லவா? அதனுண்மை உங்களுக்கு அறிவிக்குமாறு சிறிதுரைப்பாம்.

உலகத்தில் உற்று நோக்கில் வேதாந்தமும் சித்தாந்தமும் ஒரு பொருள் கொண்டு முடியும் ஒரு முதல்வனருளிய நன்னூலாவதுபோல், ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல ராஜமூர்த்திவிஜய ரகுநாத பாஸ்கர சேதுபதி மகாராஜன் என்னும் ஓர் மன்னவனுதவினை பெற்று ஒரு முடிவுள்ளதாய் எவ்விதத்தும் நமது நாட்டில் புறச்சமயங்கள் ஒழிந்து நற்சமயம் நிலைபெறவேண்டியே வெளிக்குவந்தன இவ்விரண்டு பத்திரிகைகளும். ஆயினும் நம்நேயத்தாரும் வேதாந்த சித்தாந்தங்களின் உண்மைப்பொருளை நன்குணருமாறு யாதிருவரும் வாதியும் பிரதிவாதியுமாய் அவ்வம்மத வுண்மைகளை எடுத்துப் பூர்வபக்ஷ சித்தாந்தவாயிலாக எழுதிவருவோம் இதனால் நீங்கள் இரண்டுமதங்களிலும் உள்ள வேற்றுமை ஒற்றுமைகளை அறிந்துண்மையைக் கைப்பிடித் தொழுகுவீர்களென்பதே எமது கருத்து. நாம் சுத்த வைதிக சைவாத்துவித சித்தாந்தத்தை அன்றுமற்று ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியர் ஸ்ரீநீலகண்ட சிவாசாரியர், ஸ்ரீமத் அருணகிரிநாதாசாரியர், ஸ்ரீமத்அப்பைய தீக்ஷிதர்கள்முதலிய யோகிகள் எடுத்து தேசித்தவாறு கொண்டொழுகுபவரும் ஞானசித்திபத்திரிகாசிரியர் ஸ்ரீமெய்கண்ட சிவாசாரியர் ஆதியோர்கொண்ட சைவ சித்தாந்தத்தைக் கைப்பிடித்தவருமாக இருவர்க்கும் விரோதமுண்டாக வழி ஏதுமில்லை. மற்றவர் விரோதம் பாவிக்காவண்ணம் இங்ஙனம் குறித்தோம். தத்தம் மதவுண்மையைத் தாமறிந்து மற்றவர்க்கும் புகட்டுவதே ஆன்றோர்படிபென்க. இவ்விரு விஷயங்களிலும் இருபத்திரிகைகளிலும் நடக்கும் விவாதம் உபகாரமாகும் என்பதை நன்குணர்ந்து நீவிர் மனத்திருத்தி இரண்டையும் பொறுமையுடன் படித்து உண்மை அறிந்துய்வீர்களாக. இதுவே எங்களுக்குப் பத்திரிகையின்பயன். கைகூடாது எனக்கருதும் சிலரை நோக்கியே இவ்விவாதம் முடியுமளவில் பத்திரிகையில் ஓர் அநுபந்தமாக இவ்விஷயங்களை வெளியிட உத்தேசித்திருக்கின்றோம். விவாதத்தை விடோம்! தர்மக்ஷேத்திரத்திடங்கொடோம்! கொடோம்!!

பத்திராதிபர்.

அத்துவித விசாரம்.

நண்பர்காள்! பரமபுண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்தின்கண்பற்பல மதசமயங்கள்தோன்றிசோபானபரம்பரையாய் நிலைபெற்றுத் தம்மைச்சார்ந்தோர் கருத்தியலுடைய மதங்களாகி நிற்கின்றன. இச்சமயங்களிற் பலவித வேற்றுமைகள் அமைந்திருப்பினும் அவற்றுட் சிறப்பாய் நிற்பது 'துவிதம்' 'அத்துவிதம்' எனப்படும் இருசமயங்களே. இவ்விரு சமயங்களுள் அத்துவித சமயம் நால்வகைப்பட்டது. அவ்வேற்றுமைகள் கேவலாத்துவிதம், விசிஷ்டாத்துவிதம், பாஷாணத்துவிதம், சுத்தாத்துவிதம் என்பன. இவற்றுள் சுத்தாத்துவிதம் மையாருதிகரண சுத்தாத்துவிதம் வியநிகரணசுத்தாத்துவிதமென இருவகைப்படும். இவைகளின் பொருள்களை அவ்வச் சமயத்தவர் கொண்டபடி எடுத்துரைத்துப் பின்னர் அவற்றுள் எமக்குத்தோன்றும்ஆசங்கைகளை எடுத்துக்காட்டுவோம்.

கேவலாத்துவிதம் என்றுஞ் சொல்லும் மேற்கண்ட மற்றைச் சொற்களும் வடசொற்களாதலின் வடவியல்கொண்டு அவைகட்குப் பொருளுரைத்தலே மரபாம். கேவலாத்துவிதம் என்னும் சொல் கேவலம், அத்துவிதம் என்னும் இருசொற்கள் சேர்ந்து பண்புத்தொகையாய் அமைந்த ஒருசொல். சண்டுக் கேவலம் என்பது 'தனித்தது' எனப்பொருள்கொண்டு தமக்கிணையாய்த் தன்னினம் பிறவினம் அமையப்பெறாத ஏனும் பொருளிற் குருபெயராய் முடியும். அத்துவிதம் என்னுஞ்சொல் 'அ' 'துவைதம்' என்னும் இருசொற்கள் சேர்ந்த கூட்டுறவாற்பிறந்தது. 'த்வி' என்பது இரண்டைக்

ருகிறது. 'த்விதா' என்பது இரண்டின்தன்மையைக் குறிக்கும். 'த்வைதம்' என்பது மேற்கண்ட விரண்டின் தன்மையைக் குறிக்கிறது. (த்விதா என்றும் இரண்டாம் தன்மையே த்வைதம் என்பதும் என்க.) இனி அதன் இன்மை 'அ' என்னும் சொல்லின் பொருள். ஆயின் தனக்கிணையாய்த் தன்னினும்பிறவிலாம் இரண்டில்லாதது என்பது கேவலாத்துவிதச் சொற்பொருள். (த்வைதம் என்னும் வடமொழி தென்மொழியில் மருவி துவிதம் என வந்தது.) தனக்கிணை [illegible] இன்மையைப்பெறுமென்பதால் [illegible] உள்ள விரிகள் அனைத்தும் சேதனாசேதனம் [illegible] பிரமத்திற்குத் தம் வேறான அவையெல்லாம் அதுவே யென வேதாந்த மகாவாக்கியங்களாற் றுணியப்படுவதால் [illegible] அத்வியமென்பதாம் (வேதாந்த மகாவாக்கியங்களில் பிரமம் என்னும் பொதுச்சொல்லை நீக்கிச் 'சிவன்' என்னுஞ்சொல்லை யமைப்பின் அதுவே சிவமகாவாக்கியம் என்பது அன்னோர் கருத்து) பிறவித்தும் தமக்கிணையமையப் பெறுவதில்லாத பிரமமே ஜடங்கட்கு முதற்காரணமாய்க் காணப்படுகிறது பொய்ம்மையாய் நிற்றலாலும், அச்சடங்களும் பிரமமன்றிவேறாதல்பற்றி ஜடபேதமும் அசத்தியம் என்பதாம். பொதுவாய் வேற்றுமையில்லது என்பதால் 'ஆன்ம ஜடபேதம், ஜீவசுவகதபேதம், ஜடசுவகதபேதம் இம்மூன்று வேற்றுமைகளில்லது என்பதாம் இயலாமையை ஐவகை வேற்றுமைகள் இல்லது பிரமம் என்பது அவர் கூறிய சொற்பொருளாம்.

இனி விசிஷ்டாத்துவிதம் என்னுஞ் சொல்லை விசாரிப்பாம். அச்சொல்லினும் அத்துவிதம் என்பதுமட்டில் முற்கூறிய பொருளதே. விசிஷ்டம் ஒரு பொருளுடன் கூடியது எனப்பொருள்படும். ஆயின் சித்விசிஷ்ட ஜீவான்மாக்கள். (சித்துவம் தன்னினத்தால் அறியப்பாலது. இனத்திருள் என ஒரு ஆன்மா [illegible] அறியாதலால் சித்து அறிவு) சித்துவசித்து தன்னினமான கருவிகளால் அறியப்பாலது. (சித்துவம் - தன்னினமான பாத்திரமென [illegible] பண்பினைக் கருவியாகக் கொண்டு [illegible] அறியப்பாலதாதலால் அசித்து - ஜடம்) இரண்டையும் [illegible] வேதாகமாதி சப்தப்பிரமாணமன்றி வேறொன்றினும் அறியப்படாதது. சித்து அசித்து (இங்கு [illegible] என்றது மேற்கண்ட சித்துவ [illegible]) [illegible] மேற்கண்ட பிரமாணத்தாலன்றி வேறொன்றும் அறியக்கூடாதது (இதுவும் [illegible]) இரண்டையுங்கூடிய இம்மூர்த்திகளுக்குள்ள அத்துவிதம் வேற்றுமையின்மை. அதாவது விசேஷ [illegible] நீக்கி நோக்கில் பொருள் ஒன்றே. அதுவே உலகிற்கு முதற்காரணமாதலால் [illegible] மற்றிலும் வேறுபடா [illegible] பிரமம் இரண்டுக்கும் வேற்றுமையில்லதெனப் பொருள்படும். பாவருத்துவிதம் என்றும் [illegible] உண்மை [illegible] வேற்றுமையிருக்க அவை இல்லை பாவிக்கப்படுவதே [illegible] பொருளாகும்.

இனி சுத்தாத்துவிதம் இரண்டாவன் ஸமாநாதிகரண சுத்தாத்துவிதம் என்பது சுத்தம் அத்துவிதம் என்னும் இருசொற்களும் பண்புத்தொகையாய்ச் சேர்ந்த வொரு சொல்லே அதனிடத்தும் அமைந்த அத்துவிதச்சொற்கு முற்கூறியதே பொருள். ஆயின் வேற்றுமையில்லாத ரூபம் அத்துவிதச் சொல்லுக்கமைந்தபொருள். அங்ஙனமாயின் சுத்தம் என்னும் சொல் பொருந்தும்வழி யாதோவெனில் கூறுதும்: முழுமுதலுக்கு நான்கு திருவுருவமும் நான்பெயரும் உள்ளன. அவை ஜடம், ஆன்மாக்கள், அந்தர்யாமி, பரமென்பன நான்கு திருவுருவங்கள். சத்து சித்து ஆனந்தம் அகண்டம் என்பன நான்பெயராவன. இவற்றுள் எல்லாவியல்களும் அமையப்பெற்ற திருவுருவம் பரம், அகண்டத்தன்மை ஒன்றை மறைத்து மற்ற சத்து சித்து ஆனந்தமென்னும் மூவியல் பெற்றது. அந்தர்யாமி அகண்டம் ஆனந்தம் இரண்டும் மறைத்துநின்றது. சத்தாய்ச் சித்தாயுமுள்ளது ஜீவத்திருவுருவம். அகண்டம் ஆனந்தம், சித்து இம்மூன்றும் மறையப்பெற்றது ஜடத்திருவுருவம் எனச் சித்தாந்தமாதலால் இவற்றுள் மறைத்தன்முதலிய வுபாதியின்றிச் சுத்தமானது உபாதிநீக்கிய விடம் அத்துவிதம் வேற்றுமையின்மை என்பதே அவர் கருத்து. சுத்தம்-உபாதிஹீனம், அத்துவிதம்-வேற்றுமை யில்லாதது. அதாவதொன்று என்று பண்புத்தொகையாதலால் அதைச் சமாநாதிகரணம் என்றது (சமாநாதிகரணம் ஒருபொருள்கொண்டு முடியும் இரண்டு விசேடணங்கள்) வியதிகரண சுத்தாத்துவிதம் என்பது சண்டு அத்துவிதமென்னுஞ்சொல் அன்மைபொருள் அமைந்த நகரத்துடன்கூடி இரண்டற்றதெனப் பொருள்கொடுக்கும். சுத்தர்கள் ஜீவபரர்கள் தமக்கு பாதியாய்ச் சேர்க்கையில் அமைந்த பாத்தன்மையும் அங்ஙனமே அப்பசுவை நோக்கி முதல்வனிடம் அமைந்த உபாதியாய பதித்தன்மையும் ஒருவாறு மறைய இயற்கையான ஆன்மசிவருபர்கள் இரண்டறக்கலத்தல் சுத்தாத்துவிதச் சொற்பொருளெனச் சில சித்தாந்திகள் சாதித்தலால் முற்கூறிய சமாநாதிகரணவிலக்கணம் இங்கு பொருந்தாமைபற்றி இச்சுத்தாத்துவிதிகளை மேற்கண்ட சுத்தாத்வைதிகளுடன் வேறுபடுத்தி வழங்குமிடம் வியதிகரண சமாநாதிகரண சப்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. சிறக.

மேற்குறித்த ஐவகை அத்துவிதிகளின் சித்தாந்தங்களின் தாரதம்மியங்களைப்பற்றி விசாரிக்க யாம் எழுந்தோமில்லை. அவரவர் தத்தம் சித்தாந்தங்களுக்கேற்பப் பெயரிட்டார்களென்பதே எமது விசாரத்தின் முதற்கருத்து.

இக்ஙனமாகச் சித்தாந்திகளில் நால்வர் கொண்டது அத்துவிதச்சொல்லின் நகரத்தின்பொருள் இன்மையாக ஒரு சித்தாந்தி அன்மைப்பொருள்கூறியது எப்பிரமாணத்தாலோ அறியேம். வடநூலாசிரியரெவரும் நகரப்பொருள் அன்மையெனக் கூறிற்றிலர். அங்ஙனம் நகரம் அபாவப்பொருளினுணர்த்துவதாகும், அவ்வபாவம் முன்னபாவம், அழிவுபாட்டபாவம், முழுதும்அபாவம், ஒன்றினொன்றபாவமென நால்வகைத்தாகவுணர்த்தப்படுமே அன்மையாகவது மத

Koviloor Digital Library

யே நகரப்பொருளாமெனில் அற்றன்று. நகரப்பொருள் கூறவிடத்து ஆசிரியர் பதஞ்சலியார் தத்ஸாத்ருஶ்யமபாவஶ்ச ததந்யத்வம் ததல்பதா। அப்ராஶஸ்த்யம் விரோதஶ்ச நஞர்தா: ஷட் ப்ரகீர்த்திதா:॥ என்று நகரப்பொருளை அளவிட்டமையானென்க. இதன்பொருள். தத்ஸாத்ருஶ்யம் தத்ஸாதிருசியம் - அதுபோன்றதென்பது, (உதாரணம். அஶ்வ-அச்வ:- குதிரைபோன்றதுகோவேறுகழுதைமுதலியன) அபாவ:-அபாவம்-முழுதுமின்மை, (உ-ம்) ஸம்ப்ரம: நாஸ்தி:- அரிருங்கம் மநுஷ்யஸ்- மனிதன் கொம்பில்லாதவன்) ததந்யத்வம்- ததந்யத்வம்-வேற்றுமை, (உ-ம். அநாகாஶ: பூமி:- அகாசம் பூ:-பூமி ஆகாயத்திலும் வேறு) ததல்பதா-ததல்பதா-குறைவு, (உ-ம் அநுதரா கந்யா- அநுதரா கன்யா-வயிறு சிறுத்த கன்னி) அப்ராஶஸ்த்யம்- அப்ரசஸ்த்யம்-பொறுமையின்மை, (உ-ம் அஸுரா: தேவா: அமரா: தேவா:-தேவர் மரணமில்லாதவர் எனில் மனிதரைப் போல் கடுந்துயரம் படுவதும் இடையிடையே கேடுவதுமான சாக்காடு அவர்க்கின்மையான்) விரோத:- விரோத: எதிர்மறை. (உ-ம்- அபுண்யம்- அபுண்யம்-புண்ணியத்தின் எதிர்மறைப்பொருள் பாபம்) என்பது. ஈண்டு இரண்டாம் பொருளாகக்குறித்த அபாவத்தின் பகுபாட்டின் அன்மையென்றுமழிவுபாட்டபாவமு மடங்காதோவெனின் அடங்காது. என்னை? அபாவம் என்னுஞ்சொற்குப் பெருவழக்காய் முழுதுமபாவமே (இன்மையே) பொருளாதலினும் அதனுட்பிரிவுகளில் ஒன்றாய வேற்றுமைபெனும் ஒன்றிலொன்றபாவத்தை வேறுபொருளாக ததந்யத்வம் ததந்யத்துவம் என்று வேறுபடுத்திபோதியமையானும் ஈண்டு அபாவம் தமதுட்பகுதிகளை விட்டு உலகவழக்கைத்தழுவி இன்மைப் பொருளையே பயக்குமாறறிக. அற்றேல் ஒன்றிலொன்றபாவம் வேறு பொருளெனத் தனித்தமையால் அஃதொழிந்த மற்றைய மூன்றபாவங்கள் ஈண்டு அபாவம் என்னுஞ் சொல்லாற் கொள்ளற்பாலதன்றோவெனில், அற்றன்று; அபாவம் என்னும் ஒருசொல்லாற்றானே நான்கையும் குறித்தலொழித்து அச் சொற்கருக்க விரதம்பூண்ட வடவிலக்கண நூலாசிரியர் தனித்தெடுத்தோதியமையான் அவ்வபாவச் சொல்லில் இவ் வேற்றுமைப்பொருள் அடங்காவழி ஈண்டுப் பெருவழக்கிற்றிய இன்மைப்பொருளே கொள்ளற்பாலது என்பது குறிக்கப்படுதலினும், அபாவச்சொற்கு அவர் உரைக்கும் முப்பொருள்களும் இவ்வியலாசிரியர் கொண்டதாயின் நஞ் என்னும் நகரத்தின் பொருள்கள் ஆறு என வகுத்தெண்ணுதிய நலமாமாதலினும் என்க. மேல் சொற்கருக்க விரதம்பூண்ட வடவியலாசிரியர் அபாவம் என்னும் ஒருசொல்லால் இன்மை வேற்றுமைகளை உணர்த்தாதொழிந்த தென்னையோவெனில், கூறுதும்: அபாவம் என்னுஞ்சொல் பெருவழக்கின்முறையின் இன்மையெனும் முழுதுமபாவத்தையுந் தருக்கநூலார் துணிபு

வழி முன்னபாவம், அழிவுபாட்டபாவம், முழுதுமபாவம், ஒன்றிலொன்றபாவம் என நால்வகையபாவங்களையுமே உணர்த்தும் ஆற்றலுறப்பெற்றமையான் அதைமட்டிற் பொருட்கூட்டத்திற் சேர்த்திடின் ஒரோவழி உலகவழக்கைத் தழுவி 'இன்மைப்'பொருள்மட்டில்அஃதொழியின் குறைவும், தருக்கநூற்றுணிந்தவாறு கொள்ளின் அதிகமும் ஆதலின், முன்னபாவம் அழிவுபாட்டபாவங்களொழிய மற்றிருவகை யபாவமே நஞ் என்னும் நகரப்பொருளாமாறு அங்ஙனம் ஆசிரியர் வகுத்தருளினர்.

பல வேதாந்தங்களிலும் நிகண்டுகளிலும் இந்நகரத்தின் பொருள் இவ்வாறே கூறப்பட்டதென்பதை விரிவஞ்சி இங்கெடுத்தோதாதொழிகின்றாம். இனி நஞ், ந, அ, என்னும் மூன்று சொற்களும் அத்துவிதச்சொல்லிற் பொருந்துமாக வின் நகர வகரங்களுக்கும் இவ்வன்மைப்பொருள் பொருந்தாதோவெனில், ஆராய்வாம். ஙஞ, ஙா, நோ, நா:, ப்ரதிஷேதே "அ, மா, நோ, நா, ப்ரதிஷேதே" என்று வடவியலாசிரியருட்சிறந்த ஸ்ரீபதஞ்சலியார் கூறியிருத்தலின் அவைகளுக்கும் அப்பொருள் அமையாமையறிக. இனி அழிவுபாட்டபாவத்தைக் குறிக்கும் சொற்றான் யாதெனின், வடமொழியில் ப்ராகபாவ ப்ரத்வம்ஸாபாவ வாசகா: 'த்வம்ஸநாசநசப்தாப்ரத்வம்ஸாபாவவாசகா:' என்னும் வடநூலார் திருவாக்கின்படி த்வம்ஸம் நாசம் என்றற்றொடக்கத்தக்க சொற்களே அழிவுபாட்டபாவத்தைக் குறிப்பதாய் காட்டப்படுமென்க. இனி வடமொழியில் இப்பொருள் இச்சொற்கு அமையாவிடினுந்தென்மொழியிலக்கணப்படி அமைப்பாமெனில், அஃதங்ஙனமமையாது. அமைப்பினும் வேதாகமங்களில் வழங்கப்பெற்ற விச்சொற்குத் தென்மொழியிலக்கணத்தால் வழக்குற்றமிக்குதல் முறையன்றாம். பிறகு இச்சொல் சைவசித்தாந்தத்துக்குப் பெயராக வழங்குவதின்றேயன்றி மற்றில்லை. இது தென்னூலாசிரியர் சைவசித்தாந்தத்திற்கிட்டபெயரோவாமெனில், எமக்கதில் எதுமாறுபாடில்லை-அங்ஙனமாயின், நகரத்துக்கன்மைப்பொருள் மட்டும் தென்னிலக்கணத்தாலமைய அத்துவிதச்சொற்கு வேற்றுமைப்பொருள் வடவிலக்கணத்தால் அமைய இரண்டு மொழிகளும் ஒருசொல்லாயமையவும் இலக்கணங் காட்டுங் கடமை அவர்க்கேமத்தமையாகும். மற்று நகரம் அகரமாக நஞ், நஞ் என்னும் வடநூற்சூத்திரம்போன்ற ஒரு சூத்திரமுந் தென்மொழியில் எழுதவேண்டும். அவ்வின் இவைகளை ஈண்டு காராய்ந்து இதற்கு எவினர் வழக்கையே விடையளித்தொழியாது மூலாகம வசனங்களாவதும் வேத வசனங்களாவதும் வடநூல் தென்னூல் இலக்கணச்சூத்திரங்களாவதும் தமது கொள்கையை நிலைநாட்டிக்கொள்ளும்படி இரண்டு மொழிகளையு மொருங்குணர்ந்த ஞானமிக்க பண்டிதரவர் ஸ்ரீமத் சபாபதி நாவலரவர்களை எதிர்நோக்கி நிற்கின்றோம். இனி நிற்க இன்மைப்பொருளுக்கு இலக்கணப்பிரமாணஞ் சொல்லியவாறன்றி வேறு சொல்லவில்லையோவெனில், இம்முறைப்

Koviloor Digital Library

பத்திரிகையில் இடமின்மையால் விடுத்து இச்சொற்றொடரினிது இயல் சொற்கள் தநகாசேர்ந்த இல்லாத புராண பாகவதாதி யாப்புலக்ஷியங்களிற் பிரயோகிக்கப்படாமல் பிரமாணங்களை மறுத்திருக்க தொடங்கிக்காட்டி. மேலே இச்சொற்கு இவர் கொண்ட சொன்னையின்படி பொருட்பொருத்தமின்மையையும் விளக்கமைதியிப்பிரயோகத்தையும் அவ்வேறு வாக்கும் ஆராய்வகைகளும் ஒப்பியலில் சுத்தமைதிசொல்லியவிரு சித்தாந்தத்தலைமையை விளக்குவாம். கோத்துக்கு 'இன்னைப்' பு நருணாக்கியதன மற்றவரும் மறுக்காமைபற்றும் அவர்மொண்ட பொருள் பொருத்தமாது என்சொல்வியக்கணங் காட்டவேண்டியது அவசியமாமைசே யவரும் இச்சாமம் இவ்வாறாய் கிறுத்துவாம். உலகவழக்கின்படி கேவலாத்வைதம் ஸ்ரீசங்கரபகவத்பாதர் முதலியோராலும், விசிஷ்டாத்வைதம் ஸ்ரீபகவத்ராமாநுஜாசாரிய ராதியோராலும், பாவருத்தவிதம் பட்டேசுவராதியோராலும் சைவாத்வைதசித்தாந்தம் ஸ்ரீ வைஷ்ணவர் விட்டலாசாரியோராலும், சுத்தாத்வைதசித்தாந்தம் மெய்கண்ட சிவாசாரியாதியோராலும் வெளியிடப்பட்டிருக்கவுமையும். (தொடர்ச்சி.)

ப்ரம்மவித்யா பத்திராதிபர்.

வருடப்பிறப்பு வித்தியாசம்.

தொடர்ச்சி

திருக்கணிதமானது கணிக்கப்பட்ட தேசத்தைத்தவிர அன்னிய தேசங்களுக்குத் தேசாந்தர சம்ஸ்காரத்தை அநுசரித்ததாயிருக்கிறது. வாக்கியம் அவ்வாறல்ல. அது இன்ன தேசத்திற்குத்தான் கணிக்கப்பட்டதென்பது எவருக்குந்தெரியாது. எவ்வாறெனில் வாக்கிய பஞ்சாங்கப்படி சித்திரை வருஷ சங்கிராந்தியானது உதயாதி நாழிகை ௩௧ விநாடி ௫௰ ஆகிறது. இதையே இந்தியாவின் மேற்புறத்திலிருக்கும் பம்பாய்க்கும் கிழக்குப்புறத்திலிருக்கும் கல்கத்தாவுக்குங் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் கிழக்குமேற்குத் தேசாந்தர வித்தியாசம் உ நாழிகை ௩௰ விநாடியாம். சங்கிராந்தியானது சூரியாஸ்தமயத்துக்குச் சமீபத்தில் உண்டாகும் பக்ஷத்தில் வாக்கியப்படி பம்பாய்க்கு மறுமாத முதல் தேதியும் கல்கத்தாவிற்கு முதல்மாசக் கடைசித்தேதியுமென்று கொள்ளவேண்டியது. இந்த நியாயங்களெல்லாம் திருக்கணிதக்காரர் மாத்திரம் அநுசரிக்கிறார்கள். வாக்கியக்காரர் அநுசரிப்பதில்லை.

இந்தத் திருக்கணிதமானது பிரத்தியக்ஷத்திற்கும் சாஸ்திரத்துக்கும் ஒத்திருப்பதால் இப்பஞ்சாங்கத்தைப் புத்திமான்கள் யாவரும் அபிவிருத்திசெய்வார்களென்று நம்புகிறோம். இத்திருக்கணிதத்தைக் கவர்ன்மெண்டாரும் னைத் தொண்டே பிரசித்தஞ்செய்திருப்பதால் உயில் முதலிய சாதனங்களுக்கும் கணக்கு வகைகளுக்கும் மற்றவைகளுக்கும் திருக்கணித பஞ்சாங்கத் தேதியே அங்கீகரிக்கப்படுகின்றதென்க.

இத்திருக்கணிதப்பஞ்சாங்கமென்று திருவையாற்றில் ஜோதிஷ தந்திரமகா வித்துவான்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஜோதிஷ மகா பரிஷத்து முக்கியஸ்தரான ப்ரம்மஸ்ரீ கோபால் வெங்கடேசுவர தீக்ஷிதர், ப்ரம்மஸ்ரீ கந்தசுவாமி செட்டியாரவர்களால் தமது சொந்தக்குடும்பமாக வருஷா வருஷம் கணித்துப் பிரசுரிக்கின்றார்கள்.

சென்னையிலே பிரசாரமாகும் சிப்பன் பாக்கெட் பஞ்சாங்கமும், யாழ்ப்பாணத்துக்கடப் பிரசாரமாகும் பெரும்பான்மை திருக்கணிதப் பஞ்சாங்கமும் மேற்படி சபையின் அங்கத்தினரான ப்ரம்மஸ்ரீ பி. சிதம்பரநாத ஜோதிஷரவர்கள் ப்ரம்மஸ்ரீ ஏ. கார்த்திகேயஐயரவர்களால் இயற்றப்பட்ட திருக்கணிதங்களாம். மகாப் பிரசித்திபெற்ற நுங்கம்பாக்கம் ஸ்ரீமான் சிந்தாமணி ரகுநாதாசாரியாரவர்கள் சந்ததியாரால் பிரசுரஞ்செய்யப் பட்டுவரும் பஞ்சாங்கமும் திருக்கணிதமேயாம்.

சென்ற ௨ பஞ்சாங்கக் கூட்டத்தில் தென்னிந்திய மாகாணமென்னும் சொல்லப்பட்ட கும்பகோணம் ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள், ஜோதிஷ வித்துவான்களை மத்தியஸ்தராக நியமித்து வாதஞ்செய்வித்ததில் மேற்படி சபையின் அங்கத்தினரான ப்ரம்மஸ்ரீ வெங்கடேசுவர தீக்ஷிதர், ப்ரம்மஸ்ரீ கந்தசுவாமிசெட்டியார் இவர்களுடைய கட்சியே ஸ்தாபிக்கப்பட்டது. பின்பு மேற்படி சங்கராசாரிய சுவாமிகள் யோக்கியதா பத்திரம் ஒன்று சம்பிரதாயமாகச் செய்து அளித்தார்கள்.

பஞ்சாங்க க்ஷேத்திரத்தில் மேலாக பூஜ்யராய் விளங்கும் ஸ்ரீமத் பரமஹம்ச கோவிந்தாநந்தஸ்வாமிகளவர்களும் இராஜமன்னார் கோவிலில் வசிக்கும் மகாமகோபாத்தியாய ப்ரம்மஸ்ரீ இராம சாஸ்திரியாரவர்களும், திருவிசைநல்லூர் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீமான் ஸ்ரீநிவாசாச்சாரியாரவர்களும், ஆனந்த சபையில் சதாசேர்ட்டு பண்டிதரான ப்ரம்மஸ்ரீ திருவிசநல்லூர் இராமசுவாமி சாஸ்திரியாரவர்களும், பச்சையாம்பேட்டையில் வசிக்கும் ப்ரம்மஸ்ரீ சுப்பராம சாஸ்திரியாரவர்களும் ௧௮௯௨ மார்ச்சு ௨௯-உ முதல் கோயமுத்தூரில் பஞ்சாங்க வாத சபைக்கு வந்திருந்த ப்ரம்மஸ்ரீ வல்லம்பட்டி சுப்பராம சாஸ்திரியாரவர்களும் இன்னும் பலரும் யோக்கியதா பத்திரிகைகள் கொடுத்திருக்கிறார்கள்.

ஓர் ஜோதிஷர்.

Chidambaram—Printed and Published for the proprietor at the Brahmavidya Press No 38 Sunkalloo-neerpilliarkoil street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் நமது பிரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

No. 6 செ. ௬

ஸ்ரீ
வித்யா
ஶங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை

ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாசனர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த ௧௮௯௨ஆம் முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஷேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

கரஸம்வத்ஸரம்
துலாரவி௨அ௨
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
[illegible]

[illegible]

[illegible]

தத்தாக சோதனம்.

இப்பெயர்வாய்ந்த ஓர் புஸ்தகம் எமக்குக் கிட்டியது. இதை இயற்றியவர் ஸ்ரீமைஸூர் மகாராஜா அவர்கள் தாபித்துள்ள ஸம்ஸ்க்ருதபாடசாலையின் தலைமை உபாத்தியாயர்; வடமொழி இலக்கணக்கடலைக் கரைகண்டவர். ஸ்ரீராமாநுஜமத சாஸ்திரப்பயிற்சி மிகவுடைத்தவர். பல தர்மசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவர். ஸ்ரீவேதாந்ததேசிகர் எனும் ஓர் வைஷ்ணவாசிரியர்கண்ட ஸம்பிரதாயத்தைக் கடைப்பிடித்தவர். இப்புஸ்தகம் நமது தேசத்தில் அநேககாலமாய் ஆன்றோர் [illegible] ஒருவித ஆசாரத்தைத் தற்காலத்தொருவர் மறுக்க, அதை மறுத்து உண்மையை விளக்குவது. கலியாணஞ்செய்துகொண்ட பின்னைக்கும் அவள் பிறந்தவிடத்தல்லது சேர்ந்தவிடத்தும் உள்ள ஞாதிகளுக்கும் தீட்டுச் சம்பந்தமில்லை என ஒருவர் எழுதினர். அதற்கு அநேக மூலதருமசாஸ்திர வசனங்களாலும் பெரியோர் எழுதிய நிபந்தனங்களாலுமே இப்புத்தகத்தில் மறுப்புக் கூறப்பட்டதேயன்றித் தமது சொந்த வசனங்களாலல்ல. ஆயின் இப்புத்தகத்தைச் சிட்டர் அனைவரும் ஆதரிப்பார். அன்றி இப்புத்தகம் அளவிற்சிறிதேனும் விஷயங்கள் பலவற்றைத் தம்முள் அடக்கியதுபற்றி மிகவும் அநேகர்க்கு அகமகிழ்ச்சி விளைவிக்கும். நடையும் அற்பவிற்பன்னரும் அறியத்தக்க நிலையில் உள்ளது. இக்காலத்துள்ளார் அதிகமாய் வடநூற்பயிற்சியற்றவராதல்பற்றி இவர்க்கு இவ்விதப் பிரபந்தங்கள் இன்றியமையாதன. இனிப் பண்டிதர்க்கும் இக்காலக்கொடுமையாலெழுந்த புதிய சித்தாந்தத்தைச் சிதைத்தமையால் அவர்களுக்குள்ள சிரமத்தை விலக்கியதுபற்றிப் பரமோபகாரமென்றுகொண்டாடப் பின்னிடார். இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டவர் திருநெல்வேலி வக்கீல் ம-௱-௱-ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயரவர்கள். இவர் எவ்விதத்தும் சிட்டரை ஆதரிக்கும் சீலர். அவர்கள் இவ்விதம் பெரியோர்க்குச் செய்யும் உபகாரம் அளவியலாதலின் அதைப்பற்றி யாம் பன்முறை புகழ்வது முறையன்றாம். இனி இவ்விதம் பல நூல்களும் அவர்களால் வெளியேறுமென்றனம். சுபம்.

பத்திராதிபர்.

காசி மான்மியம்.

ஐய! இஃதுவோர் [illegible] பாக்கியமே. மேற்கூறியவந்த [illegible] ஐயரவர்கள் கர்மகாண்டத்தில் மட்டும் தாம் பட்டில்லா ஆசைவைத்தாண்டுவருவதாக நினைக்கவொட்டாது ஞானகாண்டத்தும் அவ்விதப்போன்பைப் பாராட்டிவருவதற்கறிகுறியாய் இப்புத்தகத்தையும் வெளியிட்டனர். இப்புத்தகத்துள்ள விஷயமோ இக்கலிகாலக்கொடுமையால் உலகெங்கும் நிலைபெயர்ந்த நன்மை [illegible], பண்டிதர் பலர் [illegible] வீடுபெற்றதும் [illegible] [illegible]. இதையியற்றியவர் ஸ்ரீஜகத்குரு சங்கரா

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

காசிவ ஸ்வாமிகள் பெருள் முதன்மைபெற்றவரும் "ப்ரம்மவித்யா வார்த்திகம்" என்னும் வேதாந்த முதனூலாசிரியருமான ஸ்ரீஸதாசேகரஸ்வாமிகள். இப்புத்தகத்துக்கவிட்ட பெயர் ஸ்ரீகாசிமிருத்யுமோக்ஷ நிர்ணயம் என்பது. இப்புத்தகம் மிகச்சிறிதேனும் சுருதிஸ்மிருதி இதிகாசம் புராணம் முதலிய கல்வனவைகளால் ஸ்ரீகாசிமாக்ஷேத்திரத்துக்குள்ள பெருமை சொற்சுருக்கமாய்ப் பொருள்விளக்கமாய் எடுத்துக் காட்டுகின்றது. இதன் துணிபு ஸ்ரீகாசிமாக்ஷேத்திரத்தின் புல்பூண்டாயினும் அவ்விருடலை விடுங்கால் அமலனாய சிவபிரான் திருவருட்பிரசாதத்தால் அத்துவித முத்தியடைவது திண்ணம் என்பது. இப்புத்தக கர்த்தா மஹாயோகி. பூமியில் என்றுளது அருடன்கள் யோகவலியாற் சஞ்சரித்தவர். பிருகதாரண்யக தைத்திரியங்களுக் குரையாசிரியர். ஸ்ரீசிருங்கேரி திவ்யபீடத்தின் முதற்பட்டவர்த்தனர். நித்யபோதகனுசாரியரின், ஆசிரியர். இறுதியில் ஸ்ரீஜகத்குருஸ்வாமிகளிடம் ஸ்ரீகைலாசத்துக்குச் சரீரத்துடன் சென்றவர் எனப் பெருவழக்கு. இப்புத்தகங்களை அச்சிட்டெம்பாலனுப்பிய மேற்கண்ட ம-௱-௱-ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயரவர்கட்கு யாம் பல்லாண்டு கூறப் பின்னிடோம். பத்திராதிபர்.

ஜீவகாருண்ணியம்
தொடர்ச்சி.

இனிப் பேன் மூட்டை கொசு முதலிய புல்லுயிர்களால் நமக்கு நேருந் துன்பமோ மிகச்சிறிது. அதனுல் யாம் மரணம் முதலிய பெருங்கெடுதிகளை யாங்ஙனம் அடைவதில்லை. இங்ஙனமாக, அவற்றை வேரோடு கொன்றுவிடுவது புத்தியாகுமா? இனிப்பெண்சாதி பிள்ளை முதலிய பாசத்தாரால் நமக்கு ஒவ்வோர்போது நிகழுந் துன்பமோ அதனிற்பலமடங்கு பெரிதாயிருக்கின்றன. இருந்தும் அவர்களை நாம் அதற்காகக் கொன்றுவிடாமற் சகிக்கின்றோம். நிற்க. நாம் நமது சரீரத்தில் மிக்க அபிமானமுடையராய் ஏதேனும் ஆபத்து நேருங்கால் நம்முடனுயிரானிலைக் காத்துக்கொள்ள முயலுதல் போலவே அந்த "மசகம்" முதலியவைகளும் கட்டில் முதலிய சாமான்களைக் கிலக்கும்போது தம்முடனுயிரைக் காத்துக்கொள்ளப் பரபரத்தோடிச் சந்துபொந்துகளில் நுழைந்து கொள்வதை நாம் காணவில்லையா? இதனைச் சிந்திக்குங்கால் அவைகளைத் துடிதுடிக்கக் கொல்லுதற்குக் காரணம் விசாரணையின்மையும், இரக்கமில்லா வன்கண்மையும், மௌட்டியமுமேயாவதன்றி நியாயங்காரணமாக மாட்டாதென்க. இது நிற்க. இனிப் பாம்பு தேள்முதலிய விஷசெந்துக்களால் நமக்கு மரணம்முதலிய பெருந்துன்பம் நேருகின்றதாதலால், அவற்றைக்கொல்வது பாவமாகமாட்டாதேயெனின் அதைப்பற்றிச் சிறிது சிந்திப்பாம். மனிதர்க்கு வரும் இன்பதுன்பங்கட்குக் காரணம் கன்மமேயாம். அக்கன்மம் தனது பயனைத் தப்பிக்குமிடத்து மூவகை வழியால் புசிக்கும் ஆதிபௌதிகம் (பூதங்கள் அல்லது ஜடம் வாயிலாக வருவது) ஆதி ஆத்மிகம் (சேதனம் வாயிலாக வருவது) ஆதிதெய்விகம் (இவ்விருவாயிலுமன்றித் தெய்வத்தானே காரணமாக வருவது) இதன் விரிவு மற்றோரிடம் வரும். இதனுல் பாம்பு

Koviloor Digital Library

[illegible]

தேள்முதலியவற்றால் யாவருக்குமே கண்டம் வருவதில்லை. பாம்புமுதலியன ஏராளமாய் வசிக்கும் புதர்களிலும் மலைகாடுகளிலும் அனேக ஏழைக்குடிகள் பிள்ளைகுட்டிகளோடு நெடுங்காலம் வசிக்கின்றார்கள். அவர்கள் தினந்தோறும் விஷக்கடிபட்டிறப்பதில்லை. செல்வவான்களோ அங்ஙனமல்லாத நல்ல இடத்திலே வலிய கற்களால் அமைந்த மாடமாளிகையிலுள்ளே வசிக்கின்றார்கள். அவர்கட்கு அத்துன்பத்தைப் புரிப்பிக்கும் கன்மம் உத்தொத்துக்கொண்டால் அப்போது புகை நுழையவுங்கூடாத அவர்கள் பள்ளியறையினுள்ளே பாம்புமுதலியவும் வந்து நுழைந்து பெருந்துன்பப்படுத்துகின்றன. இது நாம் அநுபவத்தி லுணர்ந்ததுதானே. (இங்கு முனிவர் சாபத்தால் தக்ஷகனுக்கிரையாகிய பரீக்ஷித்தின் பாரதக்கதையையும் நினைத்துக்கொள்க) இனி நாம் நித்திரைசெய்யும்போது ஓர்நாள் மார்பின்மீது ஏதோவொன்றுவைமாய்ப் படுத்திருக்கக்கண்டு அது வீட்டிலுள்ள பூனையென்று நினைத்துக் கையாலெடுத்து அப்பாலெறிந்து பின்னும் உறங்கினோம். விடிந்தநேரத்தின்பின் அவ்வாறே கண்டு அதைக் கையில் தூக்கிக்கொண்டு கோபத்தோடு வாசலிற் கொண்டுபோய்ப் போட்டபின் அது பூனையல்லவெனத்தெரிந்து இறைவன் திருவருளை வியந்துநின்றோம். அங்ஙனம் வீழ்ந்துநின்ற கிருஷ்ணசர்ப்பம் மெல்லெனப் படம்விரித்து வழிபார்த்துத் தன்னிருக்கைபோய்ச் சேர்ந்தது. இனி மாபாரதம் அநுசாசனிகபர்வத்தில் பீஷ்மயுதிஷ்டிரசம்வாதத்தில் கௌதமபுஜங்கசம்வாதமாய் வரும் கதையையும் ஈண்டுச் சிந்திக்கற்பாலதென்க. இனித் துஷ்டஜந்துக்களைக் கொல்லலாம் என்பது சாமானியவிவேகிகள் கொண்டதோர் தருமம் ஆயினுமாகுக. கன்மபந்தத்தில் நீங்கி நிரதிசயானந்தம் பெறற்குரிய சமயத்தில் உரியநேயத்தில் உரிய மரபிற்றோன்றிய திவ்விய ஜன்மிகளாகிய நமது ஆரியமணிகள் கொள்ளற்குரிய முக்கியதர்மம் அதுவாகமாட்டாது. இதுபற்றியன்றே "தன்னுயிர்நீப்பினுஞ்செய்யற்கதான்பிறிது இன்னுயிர்நீக்கும்வினை" என்றார். "நான்மறையின்மெய்ப்பொருளைமுப்பொருளாய் நான்முகத்தோன்-தான்மறைந்தவள்ளுவனாய்த்தந்துரைத்த - நூன்முறையில்" இத்தமிழ்வேத வாக்கியத்தில் இன்னுயிர் என்றது ஒவ்வொரு ஜீவர்களும் தமக்குத்தாம் இனியராயிருத்தல்பற்றி யென்க. அது "என்னிற்யாருமெனக்கினியாரில்லை, என்னிலும் இனியானொருவனுளன்" எனவருந் தேவாரத்திருவாக்கினும் காண்க. இனி உடல்பெருத்த ஒரு பிராணியைக்கொல்வது பெரிய பாவமென்றும் உடல்சிறுத்த ஒரு பிராணியைக்கொல்வது சிறிய பாவமென்றுங்கொள்வது யாண்டும் பொருந்தாது. அப்படிக்கொள்ளில் சிறிய வுருவுடைய மனிதனைக் கொல்வதினும் பெரியவுருவுடைய யானையைக் கொல்வது பெரிய பாவமென்றன்றோ சொல்லவரும். இது சுருதியுக்தி அநுபவ விரோதமாம். இனிப் பொதுவாக எவ்வகைத் தோற்றத்தன வப்பிராணியைக்கொல்வதும் கொலைப்பாவமே யாயினும் எல்லாம் ஒரு சமமான பாவமாகாது. அவ்வவ்வான்மாக்கள் கொண்ட சரீரத்துவங்கட்குத் தக்கபடி அறிவும் பக்குவப்பட்டிருத்தலால் மரணத்துன்பங்களும் அவ்வாறு

Koviloor Digital Library

[illegible]

வேறுபட்டிருக்கும். ஆகவே கொலைப்பாவங்களும் ஒருவும் வருமாய்ப் பலவேறுபடுமென்க. இனி அசரவுயிர்கள் முதலியவுடையனவாதலானும் அவைகளை வெட்டியழிக்குங்கால் அடித்தல் புடைத்தல் முதலிய மனைத்துன்பங் காணுமையும் வெப்பு உதிரஞ் சொரித லில்லாமையானும் அதனுல் வரும் கொலைப்பாவம் அதிருக்குமுடை யதாயிற்று. இவ்வாறே மற்றவைகளையுமொட்டிச் சிந்தித்துக்கொள்க. இனி ஒருயிரைக்கோபித்தல் துன்புறுத்தல் கொல்லுதல் எல்லாம் பாவமெனப் பொதுவிற்கூறப்படினும் அவற்றுட் பாவமாகாதனும் புண்ணியத்தை விளைவிப்பதுமாகிய வேறுபாடுகளுள. அவ்விதிவிலக்குகளிற் சிறிது காட்டுவோம். தம்வழி வாராத மக்களைத் தாய்தந்தையர் கோபித்தடித்துத் துன்புறுத்துதலும், கோபாளை வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும் தம்மாணைவழி யொழுகாத மாந்தரை அரசர் காவலிட்டும் தளைபூட்டியுங்கொன்றுந் துன்புறுத்தலும், இன்னோரன்ன பிறவுஞ் செயல் வகையால் பாவம்போலக் காணப்படினும் கருத்து வகையால் அச்செயல்கட்கு இரக்கம் காரணமாவதன்றி வன்கண்மை காரணமாகாமையால் அவை பாவமாதலின்றிப் புண்ணியமாய்ச் சிறக்குமென்க. தீயோனொருவன் நல்லோனொருவனைத் துன்புறுத்தக்காண்புழி அத்தீயோனை யொறுத்து நல்லோனைக்காக்க முயல்தலினுல் கொலையாயினும் நேரினும் அவை பாவமாகமாட்டாது. நல்லோர் தத்தாத்துமாக்களெனப்படுவர். தீயோர் அகத்தாத்மாக்களெனப்படுவர். அஃதிலைகளிலும் இவ்வாறு பகுத்தறிந்துகொள்க. இதுபற்றியன்றே மூவாசையற்ற முனிவோர்களும் ஒரோர்கால் சிலரைக் கோபித்துச் சபித்தழித்தலும் அதுபாவமாகாமல் அவர்க்குப் புண்ணியமாவதும் என்க. இதுபற்றியன்றே கள்வர் முதலினோர் எம்மில்லம் புகுந்து அல்லல்விளைப்புழி யவரை எதிர்த்துப் பிறர் கொன்றுவிடினும் அது கொலைக்குற்றமாகாதெனச் சட்டஞ்செய்து வேந்தர்களும் நீதிசெலுத்துவாராயினர். இது பற்றியன்றே

> "வலியார் மெலியார் தம்மாட்டிருமாப் புய்க்கிற்
> புலிபோற் சினவப் பொறுமை—வலியாகும்
> வீரத்தனிவாட்கை வேந்தருக்கு மெய்யருட்சீர்க்
> காருக்குமாகாக்கடை"

என்றுரைத்தார் நீதிநூலுடையார். இதுபற்றியன்றே அறவிளைவிய தபோதனர்க்கும் பயிர்ப்புலங்காக்கும் குடிகட்கும் துன்புறுத்துவனவாகிய துட்டவிலங்குகளை வேட்டமாடி மறுப்பது உலகத்தையாளும் வேந்தர்க்குக் கடப்பாடாகுமெனத் தருமநூல்கள் முழக்கமிடுகின்றன. இனி அப்பொருட்டன்றி உணவின் பொருட்டும்,விநோதப்பொருட்டும் வேட்டையாடி மன்னுயிர்களை வதைத்தல் அரசர்க்குப் பாவத்தொழிலேயாமென்பது வெளிப்படை. இனி சம்தேயத்துள்ள பல மாந்தர் காளி கூளி காட்டேறிமுதலிய தெய்வங்கட்கு ஆடுகோழி பன்றி முதலிய உயிர்களைப் பலியிடுகிறார்களே. அதவும் பாவந்தானோவெனில் அறிந்தோதேகமென்னை? உயிர்க்கொலையும் உதிரப்பலியும் விரும்புவதே தவோ அது பேய்க்கணங்களிற் சேர்ந்ததேயன்றித் தெய்வமாகமாட்டாது. "காக்கை யின்கண்ணூர்குப் பிக்கப்புப்போக்கினும்" என்பதுபோல

Koviloor Digital Library

[illegible]

மெய்யுணர்வில்லா வினைர்களுக்கே அது தெய்வமாய்த் தோற்றும். இரக்கஞ்சிறிதுமின்றி மன்னுயிர்களை வதைத்துண்ணும் வன்கண்ணர்கள் நிங்ஙனஞ்செய்து கெடுகின்றார்கள். அப்புல்லறிவாளர் "அஹிம்சையே பரமதருமமென்று" நமது வேதங்கூறுவதை அறியாத அபரிபாகிகளேயாம். அந்தோ! வாழைப்பழம் சர்க்கரை பால் நெய் தேன் சக்கரைப் பொங்கல் அப்பமுதலிய நற்பொருள்கொண்டு தெய்வத்தைப் பூசிக்க அறியாப்பேதைகள் அந்தோ! கொலை செய்கின்றனர். இவைகட்கு மகிழ்ந்து வரங்கொடுக்காத தெய்வமா ஆட்டிரத்தம் கோழிக்குடல் பன்றியிறைச்சி கள்ளுச் சாராயங்களில் மகிழ்ந்து வரங்கொடுக்கும். பாவம்! பாவம்! இந்து இவ்வளவாயின் பசுபக்ஷமுதி யாகங்கள் செய்ய நமது வேதம் விதிக்கின்றதே. அதுவும் பாவமாகுமா? பாவமாயின் நமது வேதத்தின் பெருமை என்னும் எனின், அதுபற்றிச் சிறிது சிந்திப்பாம். அங்ஙனம் வேதத்தில் விதிக்கப்படினும் வேதத்தில் விதித்த தருமமெல்லாம் ஒர்நிலையுடையனவாகா. பசுவைக்கொன்று யாகஞ்செய்ய விதித்த அவ்வேதமே "புல்லுள்ளவிடத்தில் மூத்திரம் விடலாகாது" என்று கூறுகின்றது. இவற்றைச் சிந்திக்குங்கால் முன்கூறியது ஏகதேச பரிபாகிகளுக்கும் பின்கூறியது முக்கிய பரிபாகிகளுக்குமாம் என்பது வெளிப்படும். பிள்ளைகட்குப் பாலூட்டும் பருவத்தில் பாலூட்டியும் சோறூட்டும் பருவத்திற் சோறூட்டியும் வளர்ப்பது உசிதமல்லவா? இதுபற்றியன்றே 'கன்மோபாசனை ஞானம்' என வேதம் முக்காண்டங்களாய் விளங்குவதென்க. இதுபற்றியன்றே நமது வேதம் அனைத்துசமயங்கட்கும் இடங்கொடுத்து நிற்பதென்க. தான் விதித்த ஓர் தருமத்தை மற்றொரு இடத்தில் தானே மறுத்துரைக்கிற நமது வேதம் எந்தவிடத்தில் தான் கூறியதை மறுக்காது நிற்குமோ அது அவ்வேதத்தின் உண்மைப்பொருளாம். அஹிம்சையை விதித்த வேதம் அதை மறுத்து அஹிம்சையைக்கூறமுடிந்தமையால் இது பரமதருமமென்பது முடிந்தும் மறு யாவராலும் மறுக்கொண்ணு சிறப்பெற்றது. இதுபற்றியன்றே

'கொலைகுறுமாக்கம்பயந்தனிதுமசான்றோர்க்குக்
கொலைகுறுமாக்கங்கடை."

"அவிசொரிந்தாயிரம்வேட்டலிலொன்ற
னுயிர்செகுத்துண்ணாமைநன்று"

என்று இங்ஙனஞ் சித்தாந்தப்படுத்தோதியது தமிழ்வேதம். இந்நுபாதார் பலவாறு கூறுப. இனி வேதத்தில் விதித்த யாகக்கொலைக்கும் பிறவழிகளாற் செய்யப்படும் கொலைகட்கும் தம்முள் வேற்றுமை பெரிதாகலான் அதுபற்றி ஆசங்கித்தல் அவசியமன்றென விடுக்க. இனித் தருமசாஸ்திரங்கள் சிலவற்றிலும் அந்தணர் சிரார்த்தாதி கன்மங்களில் மாமிசம் புசிக்கக்கூறியதேனெனின் அதுபற்றி முக்கிய ஆறுதல் பலநெறியிலும் அசங்கித்துப்பரிசீலிக்கப்பட்டிருத்தலால் யாமீண்டு விரிப்பது அவசியமன்றென விடுத்தாம். இதுபற்றியன்றே

"கொல்லான்புலாலைமறுத்தானைக்கைகூப்பி
யெல்லாவுயிருந்தொழும்"

என்றது தமிழ்வேதம்.

இன்னும்வரும்.
சாமக்குளத்தான்.

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

விக்கிரகாராதனம்.

தொடர்ப்பு.

ஐய!

கடவுளை வழிபட விழைக்கும் ஆஸ்திகர்களுக்கு உபாசனை என்னும் பெரிய வழியிற் கடவுள் விக்கிரகம் என்னும் ஓர் மரமுண்டு. அதை அவர் அடைவரேல் அவருக்கு உள்ளமும் உடலும் குளிர வேண்டியபடி நிழலைத்தருவதன்றி இவ்வுலக வாழ்வென்னும் பெருவெப்பத்தை நீக்கி அவரவர் கருதிய பயனையுந்தரும். ஆதலின், ஆரியர்காள்! அக்கன்மரத்தைத் தேவாலயமென்னும் பாத்தியில் வைத்து அன்பாகிய நீரால் அடிக்கடி குளிரச்செய்து வாருங்கள். அதற்குண்டாகும் பல விடையூறுகளினின்றும் அதைக்காக்க முயலுங்கள். அங்ஙனஞ்செய்யின் அதில் தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னும் நால்வகைக் கனிகள் தோன்றும். அவைகளை நாம் பெற்றுய்யலாம். அவ்வரிய வஸ்துவை வளர்க்கும்வழி ஆகமங்களுள் விரிவாகவிருக்கின்றன. அவ்விருக்ஷத்தை முற்கூறியவாறு போஷித்தால் அது அவசியம் நல்ல கனிகளைக்கொடுக்கும். அதற்குச்செய்யும் பூஜை நைவேத்தியங்கள் நற்கற்பகத்துக்குச்செய்யும் உரம்போலாம். இவ்வித நன்மரத்தால் முன் எம்முன்னோர் பல நற்பயன்களைப் பெற்றனர். இக்காலத்தும் இவ்வுண்மையறிந்தோர் அங்ஙனம் பெற்றே வருகின்றனர். இம்மரத்தையே பாஷண்டர் ஒழிக்க முயல்வது. இதையே அறிவிலிகள் பயனற்றதென்பர். நிற்க. தற்காலத்து ஆரியருட் பெரும்பான்மையோர் சிறிதுகாலத்துக்குள்ள சிற்றின்பத்தொழிலும் அற்பசங்கதிகளிற் பணங்களைச் செலவிட்டு நல்வழியிற்செலவிடப் பணமிலராய் ஆகின்றனர். பாருங்கள்! தன்னகத்துப்பிறந்த ஒரு பெண் பிறர்வீட்டிற் செல்லவேண்டியதற்குரியதோர் ஸம்ஸ்காரமான கலியாணத்திற் போடும் பந்தல் எவ்வளவு? அதிற்கட்டும் கண்ணாடிவிளக்குகளும் மற்றுமுள்ள அலங்காரங்களும் எவ்வளவு? அவற்றை யமைக்க வேலைக்காரருக்குக் கொடுக்குங் கூலிப்பண மெவ்வளவு? வெகுதூரத்திலிருந்து மேளகாரரை வரவழைக்கவேண்டி எவ்வளவு ரூபாய் செலவிடுகின்றனர். இரிச்சம்பந்திகளுக்குச்செய்யும் சம்பாவனையும் பல்லக்கு முதலியவைகளுக்குள்ள செலவும் மணமகளுக்குக்கொடுக்கும் ஆபரணங்களும் அதிகாரிகட்கு இத்தச்சமயம் செய்யுமுபசாரமும் இச்சமயஞ் சம்பந்திமுதலியோருக்குச் செய்யும் விருந்தும் இராக்கண்விழித்து உடலை வெதுப்பும் தேசியர் கூத்தும் எத்தனை பொருட்செலவால் அமைகின்றன. அவ்வேசி இளம்பருவத்தவளாயின் அவளுக்குக்கொடுக்கும் பொருள் அளவில்லை. அவள் ஏதோ கையை அசைத்துக் காலில் சதங்கை ஒலி மிஞ்சி மயக்குமியல்பினளாய் இருக்கவேண்டும். அங்கு பார்க்குஞ் சபையார் பெண்பாலைக் குறிப்பவரேயொழிய தாளம் லயம் ஸஞ்தம் பாவம் ரஸம் இவைமுதலிய விஷயங்களைக் கவனிப்பதேயில்லை; கவனிக்கவுந் தெரியாது. அந்தோ! இவ்விதம் இவர் பணம் பலவழிகளிலும் செலவாய்வரினும் இவர் களிலுஞ்

Koviloor Digital Library

[illegible]

கடவுளை நினைத்து வழிபடுவதில்லை. இவற்றுள் மகா [illegible] காரியஞ்செய்பவர் பெரிய சுபகாரியங்களுக்குமுன் கடவுளுக்கு அபிஷேகாதிகள் செய்ய வெகு தாராளமாய் ஒரு படியரிசி, கால்சேர் எண்ணெ, ஓர் தேங்காய், இரண்டு வாழைக்கனி, இரண்டு பாக்கு, ஐந்தாறு வெற்றிலை, உயர்ந்தால் ஒரு அரூ கவர்ணபுஷ்பம் கொடுத்தனுப்புவார். இவர் கலியாணச்செலவு ரூபீரத்துக்கு மேற்படினும் இதற்கிவ்வளவு செய்வதே பரிதிலுமரிது. இவ்வளவு வசெல்லா முழங்கக் கலியாணத்தை நடத்தினும் ஒரு மணமகனுவது மாமன் செய்கையால் மகிழ்வதில்லை. சம்பந்திகளுக்கேது செய்யினும் செய்ததாகச் சொல்வதேயில்லை. தாசிகளுக்கு எதுகொடுத்தாலும் திருப்தியில்லை பாடகர்க்கோ கொடுப்பதற்களவில்லை; இனி தரித்திர வைதிகர் அரைக்கால்ரூபாய்கைக்கு வந்தவுடன் மகிழுஞ்சிலராக அவருக்கு அவர் விரும்பிய இச்சிறுதொகை கொடுக்கக் கையிலகப்படுவதில்லை, ஒருசமயம் அவருக்குக்கொடுத்துவிட்டுக் கணக்குப்பார்க்குங்கால் (ஓகோ வைதிகச்செலவு வெகு அதிகம் பார்த்தீரா! கலியாணம் எல்லாம் சேர்ந்து செலவு ரூபா 2000; இதில் வைதிகளுக்கு மட்டில் மொத்தம் 100 ரூபாய். அதில் வாத்தியாருக்கு 15 ரூபாயாம்! என்ன அநியாயம்! ஏதோ நடந்துபோய்விட்டது. அந்த ஊரிலிருந்து வரவழைத்த தாசி மேளகாரன் பாடகன் இவர்களுக்குத்தான் கொடுத்தது போதாது. அவர்கள் சாமானியரல்ல; வெகு வித்துவான்கள். அவர்களுக்கெவ்வளவோ கொடுக்கலாம் என்பதாதி வம்பளந்து) வெகு வருத்தப்படுகிறார்கள். இனி இவ்வித அபாத்திரங்களிற்கொடுப்பதால் ஏதேனும் பயனுண்டோ? ஆரியர்காள்! ஆங்காங்கு கூடியேனும் சிடித்தகாலமாய் நம்மவருள் நிலைபெற்ற இத்துர்வழக்கத்தை அகற்ற முயலுங்கள்! அனேகர் அதிகச் செலவால் ஆண்டிகளாகிறார்கள். இனி மேற்கூறியவரிடம் கொடுக்கும் பணம் அவ்வளவும் மத்தியமாம்சங்களை வாங்கவே உபயோகமாகின்றது. இச்சமயங்களில் எவரேனுமோர் அதிவிற்சிறந்த பண்டிதர் வரின் அவரை லட்சியமே செய்யார். சிலர் அவருக்கு ஏதேனும் காலணாக்கொடுத்து வெருட்டி உள்ளேவந்து வீண்செலவு செய்தோமென்று வருத்தமுறுவார். அந்தோ! காலத்தின்கொடுமையைக் கண்டீர்களா? ஆரியர்காள்! அதமர் நிறைந்து ஆமோதிக்கின்று நின்னவும் ஆலைகளில் பிதப்பிற்சிக் குடிக்கவும் உபயோகமாகும் பணமே உபயோகமான பணமென்றும் கடவுள் தேவாலயத்தில் உபயோகமாகும் பணம் அநாவசியமானதென்றும் நினைத்தவரமாகிறார். இவ்விதம் வரையின்றி இவர் செலவழித்தபோதிலும் ஒரு சிறுபான்மையும் தேவாலயங்களுக்காகவிவ்வோடுப்பதில்லை. சில ஊர்களில் தேவாலய சம்பாவனை என்று கலியாணங்களிற் செய்கிறார்கள். அது ஏழைகள் முதல் பணக்காரர்வரையில் ஓரேமாதிரியே. எல்லோரும் கால் என்றால் கால், அரை என்றால் அரையே கொடுத்துவிடுகிறார்கள். மேளம் தாசிகளாயின் ஏழையிடம் ரூபா 10 ஆவல் தவறாவிடம் ரூபாய் நூறு பெறுவதற்கேதுமில்லை. கீற்க. இவ்வ

[illegible]

னவுடன் இன்றும் ஒரு பெரிய அநியாயம்! பாருங்கள்! இப்படி வீணில் பணங்களை ஒழிக்கும் [illegible] தையின் அந்தியேஷ்டியில் ஏதேனும் [illegible] வின் சிறிதுஞ் செலவிடார். இவர் சிரமே [illegible] அதை நினைப்பதில்லை. அவர் தேடிய பொருட்குவியல்களைத் தாம் சிறிதுஞ் சிரமமின்றிப்பெற்றும் பெற்றோருக்குச் செய்யுங் கடமையை ஒழித்து மகாபாவிபாகின்றார். இனி உண்மையில் ஒருகுழந்தையை முன்றுக்குக்கொண்டுவர ஒருதாய் தந்தைகள் படுந்துயரத்துக்குப் பிரதியுபகாரஞ்செய்யப் புத்திரன் எவ்வளவு ஜன்மங்கள் எடுத்தாலும் முடியாது. இங்ஙனமிருக்க, உண்மையைச் சிந்திக்காத பாவிகள் பாவையர்கைச் சிக்குண்டு பெற்றோரையும் மறந்து பிள்ளைகளின் திருமணத்தில் எல்லை கடந்து செலவு செய்யத்துணிகின்றார். ஏதுமிதில் வியப்பில்லை. தமக்குத் தநுகரணபுவனபோகங்கள் அவ்வளவையும் கொடுத்தருளிய கடவுளையே மறந்து மயங்கும் இப்பாவிகள் பெற்றோரைத்தானு மறவார். கடவுள் பெயரை உச்சரித்தல் தமது கௌரவத்துக்கு மிக்க குறைவெனவு மென்றுமிருப்பர்கள். இவரா கடவுளிடம் அன்பு செலுத்துவர். இவையெல்லாம் ஒழிய எமதபிப்பிராயமிது: ஒவ்வொரு கலியாணுதி சுபங்களிலும் முன்னே தேவாலயங்களிற் கடவுளைத் தமது சக்திக்கேற்ப வழிபட்டு அவர் திருவருளைப்பெற்று அதன்பிறகே எவ்வித சுபமும் செய்யற்பாலது. உலகத்தில் வெருவாய்ச் செலவுசெய்து கலியாணுதிகளை நடத்தினவர் அனேகர் மாண்டார். அவர்பெயரை அறிந்தவர் எவர்? கடவுள் நிவ்வியாலயங்களில் பலவிடங்களில் ஆலயங்களைக் கட்டியவர் பெரும் திருவுருவமும் இன்றைக்கும் எழுத்துவடிவாயும் கல்வடிவாயும் காணப்படுவதை எவர் கண்டிலர்? அப்புண்ணியவான்கள் உடலொழித்திடினும் புகழுடல் ஒழித்திலர். அனேகர் பிறந்தும் மானிடப்பிறப்பின் மேலான பயனைப்பெருது மாண்டனர். இவர்களை மனிதரென்போமா! பூச்சிகள் என்போமா! ஒழிக்தொழிக. இனி எமக்குக் கடவுள் கொடுத்தருளிய தேகம் தனம் இவைமுதலிய சௌகரியம் இருக்குமளவிற்றானே வேண்டிய முயற்சிசெய்து கடவுளை வழிபடவேண்டும். ஏதேனும் நாம் அக்கறையுடன்தேடிய பொருள் நம்முடன் மறுமையிற் பிரவேசிக்குமா? ஏதேனும் கொடுத்ததே உபயோகமாமன்றி வேறில்லை. கொடையினுஞ் சிறந்தது தேவாலயம். தொழுது கொடுப்பது 'ஆலயந்தொழுவது சாலவுநன்று' என்பது ஆன்றோர் திருவாக்கெனவறிந்தொழுகுக.

(மொழிபெயர்ப்பு.)

இலந்தூர்ச் சுந்தரராஜசாஸ்திரிகள்.

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—ரக்தாக்ஷி ஞூ சித்திரை மீ 31உ

ஆரியாசார ரகசியம்.

ஊர்த்துவபுண்டரம்.

தொடர்பு.

யாம் இங்கு தொடர்ந்து ஊர்த்துவபுண்டரவிஷயம் எழுதி வரும் பிரகரணமிது. இனி இவ்வூர்த்துவபுண்டர வுள்வேற்றுமையை விடுத்துப் பொதுவாய் அவைகளுக்குரிய பயனை விளக்கிட முன்வருவோம். "ஊர்த்துவகதி விரும்புவோர் ஊர்த்துவபுண்டரந் தரித்தல்வேண்டும்" எனவுபநிடதங்கூறியிருத்தலின், இந்த ஊர்த்துவபுண்டரம் ஊர்த்துவகதியெனப்படும் நற்கதியைக்கொடுக்குங் கருவியாயிற்று. இவ்வூர்த்துவபுண்டரம் எதுவுந் திருமண்ணாற்றான் தரிக்கப்படும். இனி மண்ணும் வெண்மை செம்மை கருமையாகிய மூன்னிறம் பெற்றது. "வெண்மை 'சத்துவம்' செம்மை 'இராஜஸம்' கருமை 'தாமஸம்" என்பது நூன்மேற் றுணிபு. கருமைமண் தமோகுணமேயாதலின் அஃதொழித்த இரண்டுவகைமண் திருநாமத்து அமையும் பொருளாம். இப்புண்டரங்களில் கோபீசந்தனத்தாற்றரிக்கும் திருநாமம் வைதிகம் என்றேம். அக்கோபீசந்தனம் என்பது பொன்னிறம்பெற்றதோர் ரஜோகுணமலிந்தபொருள். ஆதலாற்றான் ரஜோகுணம்நிறைந்த பிரமதேவரே அப்புண்டரத்தைத் தரிப்பவருட்சிறந்தாரென ஓதப்பட்டதென்க. மேலும் கோபீசந்தனவுற்பத்தி சொல்லுமிடத்து "கோபிகைகள் கழுவினநீர் ஆக்கோபீசந்தனம் ஆயிற்று" என்றனது. இங்கு கோபிகைகள் என்றது ஓர்ஜாதி மடந்தையர்களையல்ல. மற்று வல்லபாசாரிய ரெழுதியவாறு கோபிகைகள் எனப்படுவோர் உபநிடதங்களே. அவ்வுபநிடதங்களாய பேதைகளால் ப்ரம்மம் ஜீவருபமாய் நின்று தம்பியலில் 'அகண்டம் ஆனந்தம்' இவற்றை ஒளித்திருக்க அவனிடத் தோன்றும் விருப்ப முதலிய சந்தனங்கள் கழுவப்படுகின்றன. அங்ஙனம் உபநிடதஞானத்தான் மறைந்த மலம் ஒழியப் பரம்பொருள் தன்னியல்பெறும் என்பதவர்கருத்து. உலகத்தில் சந்தனம் இன்பப்பயனுக்கங்கம் என்பது எல்லோருமறிந்ததோர் விஷயமே. அன்றி வேதத்திலுங் கடவுள்திருமேனியில் அநுபந்தி ஏதோ அவர் நின்மலத்திருமேனியழகை ஒளித்திட அவர் உண்மையுருவத்தைக் கண்டெளிக்கக்கருதி அவ்வுபநிடத மடந்தைகள் கழுவினர் என்றதன்மையாம். இங்குள்ள முறை இது: கடவுள் எங்கும் நிறைந்த வானந்தமாயுள்ளவர். அவருக்கு வித்தியாசம்பந்தத்தால் அமைந்த திருவுருவம் ஒன்று. அவித்தியாசம்பந்தத்தால் அமைந்தது ஜீவத்திருவுருவமாம். அச்சீவனுக்குப் பெண்ணாசை முதலிய பாசங்கள் நிறைந்த அநுபவம் இங்கு கோபீசந்தனமெனக் குறிப்பிடப்பட்டது. அம்மலம் ஒழியவேண்டி அம்மங்கையர்களே கடவுளைக்காணத் தியானித்தல்வேண்டும். ஆயின்

Koviloor Digital Library

[illegible]

கடவுளது மகாபுருஷத்தன்மை விளங்க இவரும் அத்திலை னை நோக்கித் தலைவியாய் நின்றொழுக, இறுதியிற் பேரானந்த மடைவான் என்பது. இனி "இவ்விதக்கோபிகள் ஜலியது கோமதிநதியிற் சக்ரதீர்த்தில் உறைந்து மண்தன்மை பெற்று மாற்றுமடைந்து திருமால் சக்ரத்தால் அடையாளஞ்செய்யப்பெற்றது" என்று சொல்லப்படுமேனின் கருத்து யாதெனில்: உலகத்தில் அழுக்கை பலம்புவது ஜலத்தாலென்பது இயற்கை. ஜலம் என்பது இங்கு பாசஞானம் பசுஞான மிரண்டும். இதனுல் மலம் ஒழிந்து ஆன்மாவைவிட்டு விலகியும் மலக்கூட்டத்திற் சேர்ந்து சக்திகுன்றிக்கிடக்கும். அதைச் சக்ரங்கொண்டு ஸர்வானுக்ரகஞ்செய்யுங் கடவுள் அழித்திட அது அழிந்து மண்ணுருவதின்னம். இனி மலம் எவ்விதம் பரிபாகம்பெறினும் அவனுளையின்றித் தன்னிடமமைந்த வாசனை மாறப்பெறுதாகச் சந்தனமெனக் கூறப்பட மலத்தினிடமமைந்த இனிய வாசனை அதை அவன் ஆழியாற்சங்கரிக்கவே மண்ணுனவிடம் மாறியொழிந்தது. அவனருளால் வரும் வாசனையழிவே முக்தியென்பது ஓர்வகைச்சித்தாந்தமாதலால் என்க. அதுகொண்டே கோபிசந்தனத்தைப் பிரார்த்திக்குமிடத்தில் "பாவனிக்கக் கடவுட்டிருமேனியிற்றோன்றித் திருவாழியமையப்பெற்ற கோபிசந்தனம் என்னை நல்வழியிற்சேர்க்கும்" என்று ஓர்வசனம் வாசுதேவ உபநிடதத்திலுள்ளது. இனி இக்கோபிசந்தனம் தரித்தற்குரியவிடங்களும் எவ்விடம் சதைக்கடினம் எவ்விடம் மாம்சம் அதிகம் அவ்விடமே என்று எற்படுகிறது. இது நெற்றியும் அதிகமான சோஷணசக்தியுள்ளதாகவே இதைச் சிரமெங்கும் தரித்தல் விலக்கப்பட்டது. இதைச்சந்திகளில் நெற்றியைப்போல் தரித்தல்கூடாது; தரித்தால் அக்கிலேசனக் கபமற்றதாக்கி மிகவும் துர்மலமாக்கிவிடும். நெற்றியின் ஆற்றல் வெருசிக்கிரம் வெளிவருவது. மண்ணின் ஆற்றல் மெதுவாய் வெளிவரும். சிறு சிறுபான்மையிலக்கும். மண் கதிரவன் கிரணவலியால் பெரும்பான்மையிலக்கும். நெற்றி சிரத்தில் நிற்கிறாது. மண்ணிற்கும் சிரமுதலியவிடங்களில் அது நியமமாகவிருந்தால் புத்தியின் நிலை குலையும் என அதுபோன்றவிடங்களிற்றரிப்பதில்லை. இனி எவ்வித மண்ணுக்குமிவ்வியதுண்டு. வெண்டிருமண் இதிலும் அதிகக் கமொற்றல் பெற்றது. ஆதலாற்றான் அதைத்தரித்தவிடம் வெண்மைகாட்டும். நிறம் அதிற்சிறிது காரமதிகம். இனி அது விஷ்ணுபாதம் எனத் தியானிக்கப்படுதால் எக்காலமும் அதைக்கண்டபொழுதெல்லாம் அறிவுக்குச் சுகம் விட்டொழியாது அவ்வாழி யேந்தியபிரான் திருவடிகள் நிற்குமாயின் பெரும் புண்ணியம் இதனுலமையுமெனச் சொல்லவும்வேண்டுமோ? இனி இவ்விஷயம் அறிந்தவன் தான் இப்புண்டரக்தரித்தவ னல்லனுயினும், மற்றவர் தரிப்பதைப் பார்த்தவனவினவது அவன் ஸ்ரீநாராயணசரணுரவிந்தங்களைத் தியானிக்காதொழிய வனைறிவு இடங்கொடாது. சிலவிடம் தாமரை மொட்டும் போன்றதும் சிலவிடம் தீபசிகைபோன்றதுமாய்த் தரிக்கப்படுகிறது. அதன் பயன்கள் அவைகளைப்பற்றிச் சொல்லுமிடத்திற் சொல்லுவோம். இப்புண்டரத் தருமசாஸ்திரங்களிலும் சிறுபான்மை

Koviloor Digital Library

[illegible]

புராணங்களிலும் சொல்லப்பட்டது. இனி வாசுதேவோபதி டத்தில் இது அந்தணர்களுக்கு மட்டில் விதிக்கப்படினும் தந்திரங்களுள் மற்றையவருக்கும் விதிக்கப்பட்டமையின் அவர்களும் இதைத்தரித்தல் குற்றமாகாது. இதுவரையிற் செந்திற புண்டரங் குறிக்கப்பட்டது. இனி மற்றைய ஊர்த்துவபுண்டரங்களையுங்குறிப்பாம். வெண்டிருமண்ணுலமைக்கும் ஊர்த்துவபுண்டரம் ஆசியாசாரத்தைக்குறிக்கும் வேதங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் புராணங்களிலும் நூல்வெண்டிருமண்ணுற் குறிக்கப்படும் புண்டரம் எங்குஞ் சொல்லப்படவில்லையாயினும் பாஞ்சராத்திரம் வைகானஸம் முதலிய தந்திரங்களிற் சொல்லப்பட்டமையால் அதையும் எடுத்து எவ்விதத்திலும் பெருமையுள்ள வஸ்துக்களைக்கூறுமிவ்விடத்துக் கூறிவருவாம். இங்கு இப்புண்டரம் இடைவெளியுள்ளதும் கண்ணன் திருவடிவம் எய்தியதுமே. இதில் ஒரு திருவடி வடிவமும் இருதிருவடி வடிவமும் என்று இருவகையிருக்கின்றது. இவ்விஷயத்திற்சிறிதும் எமக்காக்ஷேபமில்லை. இவருள் வேற்றுமை எதுவோ அதைக்குறிப்போம். இவ்விரு திருநாமங்களில் ஒன்றுக்குக்கமலம் நன்றாய்த்தெரியும். மற்றொன்றில் நன்கு தெரியவராது. நிற்க. எதுவும் ஆரியர் அனுஷ்டிப்பது ஒரு நற்பயனைக்கருதியேயன்றி வேறிராது. ஆகையால் இதன் பயன்களை அடியில்வருமாறுகாண்க. உலகளந்தபெருமான் திருவடிகள் உலகெங்கும்பட உலகத் திருவுருத்திருமண் அவன் திருவடி சம்பந்தம்பெற்றமையான் இத்திருமண்ணைத் திருவடிகள்போற் பாவித்து அவ்வடிவமாகத்தானே தரிக்கவேண்டும். அத்திருவடிப்பெருமை இருவித சக்திகளாகவுளது. ஒன்று ஸ்தாவரம், மற்றது சங்கமம். ஸ்தாவரத்தைப் பூமியெனவும் சங்கமத்தை லக்ஷ்மியெனவும் உபசரித்துச்சொல்லலாம். அன்றி அசேதனம் பூமிதேவியெனவும் சேதனம் இலக்குமிதேவி யெனவுங் குறிக்கற்பாலன. ஆதலாற்றான் பூமி சலிப்பதில்லை, இலக்ஷ்மி என்றுஞ்சலிப்பவள் எனப்பெருவழக்கு. இங்கு அவ்விரு சக்திகளில் திருமண் வடிவம் பூமிதேவியார் எனவும் திருச்சூர்ணம் இலக்குமி வடிவமென்றும் பேற்படும். இவ்விரு தேவிமாரும் திருமால் திருவடி சேவை செய்பவராதலின் இவ்விருதேவியர் காதலுக்கிலக்கான கண்ணன் தமக்குக் தெய்வமெனக் குறிப்பது. இங்கு உட்கருத்து: வெண்டிருமண்ணாப்பின் இடையிற் திருச்சூர்ணமிடுதல் இம்முறையாற்றான். பாருங்கள்! மாந்தர் விரும்புவது ஆரோக்கியமும் முத்தியுமாகிய இம்மை மறுமை இன்பங்களே. எல்லா ஔஷதிகளையும் தம்முடைக்கப்பெற்ற பூதேவியார் அருள் ஆரோக்கியத்தையும் எவ்விதவறிவுந் தம்மிடமடக்கிய பெரியபிராட்டியார் திருவருள் வீடுபேற்றையுமெனவும் அவ்விருகுறிகளும் அடங்கிய நாமம் தரிப்பது. ஆயின் ஆரோக்கியம் வீடென்னும் இருபயனளித்துலகாளும் சராசரப்பிரபஞ்சத்திருவுருவம்பெற்ற இருதேவியார் பற்றிக்கொண்டமெய் திருவடிமாண்மியமுள்ள முழுமைகாதன் முதல்வன் திருவடி ஒன்றேனும் இரண்டேனும் எமக்குச்சரணம் என்பது சொல்லாலமையாது அமைப்பாலமைந்த ஓர்பெருவன் வெண்திருமண் திருச்சூர்ணக்கோலமைந்த புண்டரத்திற்றென்பது மனதில் வைக்க. இனிப்பெண்கள் மற்றவர் அடைந்த அமைப்பின் வேற்றுமைகளின் பயனை எடுத்துரைப்பாம்.

வரும்.

Koviloor Digital Library

[illegible]

ஸம்ஸ்க்ருதபாஷை.

கல்பஸூத்ரங்கள்.

தொடர்ப.

கற்பசூத்திரங்கள் வேதங்களுக்குக் கைகள் என உருவகப் படுத்தப்பட்டன. இவற்றிற்குக்கற்பசூத்திரமென்னும் பெயரும் ஒவ்வொரு கன்மங்களின் முறையைக் கற்பத்தில் கம்மவை நல்வழிபொழுகச்செய்தலால் கற்பம் எனவும், சுருங்கிய சொல்லுடைமையால் சூத்திரங்கள் எனவும் இருபெயர்கள் ஒன்றுசேர்ந்தமைந்த ஒரு சொற்பொருளிற்று. இக்கலிகாலத்தில் எல்லோரும் இக்கற்பசூத்திரங்களை கம்பினவர்களேயன்றி வேறு கற்கறியவிக்கும் கருவியிவர்க்கில்லை. வேதங்களிற் குறிக்கப்பட்டனவும் தருமசாஸ்திரங்களில் விதிக்கப்பட்டனவுமான கன்மங்களை நடாத்தும் வழி மந்திர தந்திரங்களுடன் முறையாய் இக்கற்பசூத்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது.' அங்ஙனமே தேவலர் என்னும் இருடி தமது தருமசாஸ்திரத்தில் "மனுமுதலியோர் தர்மசாத்திரங்களை வகுத்தவர். அவர்கூறிய கன்மவழிகளை விரித்தவர் கற்பசூத்திரக்காரர்" எனத்தமதபிப்பிராயத்தை வெளியிட்டார். வேதங்களிலும் கற்பசூத்திரங்களிலும் கண்ட கன்மங்கள் எல்லோரும் அநுஷ்டிக்கற்பாலனவேனும் அவற்றை யநுட்டிக்கவேண்டிய முறைகளை விதித்தலான் முறையில் மிக முக்கியமானது கற்பசூத்திரங்கள். இவைகள் ௧௬. இவற்றுள் பூர்வசூத்திரங்கள் ௧. அபரசூத்திரங்கள் ௧. அவையாவன:— போதாயனம், ஆபஸ்தம்பம், ஸத்தியாஷாடம், திராக்கியாயனம், ஆகஸ்தியம், சாகல்யம், ஆசுவலாயனம், சாம்பவியம், காத்தியாயனம்" என்பன பூர்வசூத்திரங்கள். "வைகானஸம், சௌனகேயம், பாரத்வாஜம், ஆக்னிவேசியம், ஜைமினியம், மாதுன்யம், மாத்யந்தினம், கௌண்டின்யம், கௌஷீதகம்" என்பன அபர சூத்திரங்கள். இங்ஙனம் அக்னிவேசியரே கூறினர். இனிக் கோபிலர் சாண்டில்யர் முதலியமுனிகள் செய்த கற்பசூத்திரங்கள் பலவிருப்பினும் அவற்றை அநுட்டிப்பவர் இத்தேயத்திலில்லை யாதல் பற்றி அநுஷ்டானத்திலுள்ள பதினொன் சூத்திரங்களே அக்னிவேசியர் எடுத்துக்காட்டியபடி இக்காலத்து வழக்கப்படி கற்பசூத்திரங்களாம். இங்குள்ள சூத்திரங்கள் ஒரே முறை புணர்த்துவனவல்ல. வேதங்களுள் பல சாகைகளிருத்தலாலும் அச்சாகைகளுக்குரிய வந்தணராதியோர்க்கு அவ்வச்சாகை மந்திரங்களாற்றுனே சம்ஸ்காரம் நடக்கவேண்டியது முறையாதலாலும் அவரவர்க்கு வேண்டிய கன்மமுறையை விதிக்குமாறு அங்ஙனஞ்செய்யப்பட்டதென்க. இதன் பகுபாடு 'சாகைப்

[illegible]

ஸூத்ரம்' எனும் நூலில் அறியலாம். இப்பதினெண்சூத்திரங்களும் இப்பரதகண்டத்தில் எங்கும் கலந்து செறிந்திருக்கின்றன. வடதேசங்களில் பதினெண் சூத்திரங்களும் வழங்கிவருகின்றன. நமது தென்னாட்டிலோ அனேகர் போதாயனீயர். பெரும்பான்மையோர் ஆபஸ்தம்பர். அங்ஙனமே ஸத்தியாஷாடரும். திராக்யாயனர் வெகுபெயர்கள். ஆச்வலாயனிகள் சிறுபான்மையர். காத்தியாயனரும் அங்ஙனமே. இன்னும் வைகானசர், பாரத்வாஜர், அக்நிவைசியர், ஜைமினியர், மாத்தியந்தினர் என்பதுங்கூட்டிப் பதினொரு சூத்திரங்கள் இத்தென்னாட்டில் உள்ளன. தெலுங்குநாட்டிலும் கன்னடதேசத்திலும் சாம்பவீயம், கௌஷீதகம் என் இரண்டு சூத்திரங்கள்தென்னாட்டிலும்அதிகமுண்டு. ஆயின் தென்புறம் பதின்மூன்று சூத்திரங்களும் வடநாடுகளில் பதினெண்சூத்திரங்களும் உலாவுகின்றன. இங்ஙனமிருக்க, தற்காலத்தொருவர் ஆரணங்களுண்மைப்பாராயாது சரணவ்யூகத்தைக் கனவிலுங் கேட்டறியாது கற்பசூத்திரங்களியலறியாது ஜைமினிமுதலியவான்றோர் கண்டவழி வழுவற ஆரணங்களுக்கு அசம்பிரதாய வர்த்தஞ் சொல்லி வேதபரிசயமிலரிடம் தமது சாதுர்யமையைக்காட்டிச் சாஸ்திரியென்னும் பெயரைச் சுமந்த அந்தணர் வெங்கடகிரிசாஸ்திரிகளென்பவர் 'இப்பதினெண் சூத்திரங்களுள் ஆறு சூத்திரங்களே அநுஷ்டிக்கற்பாலன" வென ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் ஸ்தாபித்தார் எனவும், அதனாற்றான் அவர் ஷட்தர்சனஸ்தாபநாசாரியர் எனும் விருதுபூண்டார் எனவுங்கூறிநிற்கின்றனர். இவர் நமது வேதசித்தாந்தங்களைப் படித்தாராயாதவராயினும் மேற்றிசையார் மூலபுஸ்தகத்தை முற்றிலும் அறிந்து அவைகளை அவலமாக்கும் சாதுர்யமையுண்டு இவரைப்போல வெகு பொருட்சொற் பொருத்தங்களுடன் பிரசங்கிக்க வல்லவர்தான். பரோபகாரி, புன்மதப்புரட்டர்களை வெருட்ட இவர் வெகு தீரர்; இவர் தாம் அறியாவிஷயங்களிற் புகாது புதியவழிகளைக் கைப்பற்றாது வேதங்களையும் அதன் வழிநூல்களையுந்தழுவி நிற்பரேல், இவர்செய்யும் பரமோபகாரம் நமதுதேசத்துக்கு ஓரளவடங்காப் பெருமை பெய்திடுமென்பதில் ஐயமின்று. அவரை ஒருவர், மதம் ஆறு என்பனவைவை எனவினவ, அதற்கவர் ஆறுசூத்திரங்களே என்றார். சூத்திரங்கள் பதினெட்டாயிற்றே என மறுத்துரைக்க, வைதிக புரோகிதர் 'ஷட்சூத்திரம்' எனச் சொல்லுஞ் சொல்லுக் கறியாதோ? என ஓர் கடாவிடுத்தார். அங்கு [illegible] தமட்டில் ஆறுசூத்திரங்கள் எனவபிப்பிராயம் என்று விடைதந்து மறுத்துங் கற்பசூத்திரங்கள் ஆறே ஆறு மதங்களெனச் சொல்லி வருவாராயினர். [illegible] இவர் [illegible] அறிந்தவர் என அபிமானித்து ஓர்சமயம் ஒருவர் [illegible] [illegible] என வினவ, அவர் சத்தியாஷா

Koviloor Digital Library

[illegible]

டமென்றும் வாஜஸநேய ஸூத்திரகாரர் என்றும், அச்சூத்திரானுஷ்டானம் பெறுபவர் சுக்லயஜுர்வேதி என்றும் விடையளித்தனராம். இஃதோர் வியப்பல்ல. மேற்கூறிய பதினெண் சூத்திரங்களில் விதிக்கப்பெற்றதும் வேதங்களில் கன்மகாண்டங்களில் எடுத்து விரிக்கப்பட்டதும் அந்தணர்க்குரிய நாற்பது சம்ஸ்காரங்களுள் அடங்கியதுமான யாகாதிகளையும் அனேக வேதாந்தங்களில் வியந்து பாராட்டிய சந்நியாசாசிரமத்தையும் கிந்தித்து அயோக்கியம் அநர்த்தம் என விலகித்த முன்வந்த இவர், வைதிகர்களை கிந்திப்பது ஆச்சரியமல்ல, இவர்சொல்லுமிதுபோன்ற விஷயங்களை அனேகமாய்அறிஞர் கொண்டாடிக்காதொழிவாராயினும், அவர் என்னுரைவாதலால் மற்றவர் கேட்டென்னையென நம்பிவோர் என்பதுபற்றி இவ்விடம் சேர்ந்த சந்தர்ப்பத்திற்சிறிது நமது பத்திரிகாநேயருக்கெடுத்துக்காட்டினும். பாருங்கள்! நமது தேசத்தின் தௌர்ப்பாக்கியம் நல்ல பிரசங்கிகள் அகப்படுவதேயில்லை. அகப்படினும் அவரும் வேதமார்க்கங்களைச் சிறிது நழுவிவோராயின் யாது சொல்வோம்! கஷ்டம் இனி இத்துன்பக்கடலின் கரைகண்டிட கைக்கண்டக் கடவுள் என்று அருள்புரிவாரோ அறியேம். நிற்க. பிரக்ருத விஷயத்தை விசாரிப்பாம்: இத்தென்னாட்டிற் கிருஷ்ண யஜுர்வேதிகள் போதாயனம், சத்தியாஷாடம், ஆபஸ்தம்பம், ஆக்னிவேசியம், பாரத்வாஜம், வைகானஸம் எனும் ஆறு சூத்திரங்களை யநுட்டிக்கிறார்கள். சுக்ல யஜுர்வேதத்தவர் காத்தியாயனம், மாத்தியந்தினம் இரண்டு சூத்திரங்களை அநுஷ்டிக்கிறார்கள். சாமவேதிகளுக்குள் திராஹ்யாயணம் ஜைமினீயம் என இரண்டு சூத்திரங்கள் உண்டு. ருக்குவேதத்தில் ஆஸ்வலாயனம் ஒன்றே. இதனுள் சத்தியாஷாடம் ஹிரண்யகேசியம் என்றும் இருவகை வேறு ஸூத்திரங்கள் என்னும் மயக்கம் ஒழியுமென்றறிக. பெரியோர் நிபந்தனங்களில் நான்கு ஸூத்திரக்கார மகரிஷிகளைச் சில அடைசொற்களால் அழைப்பதுண்டு. போதாயனருக்கு பகவான் என்றும் "ஸத்யாஷாடருக்கு ஹிரண்யகேசியர்" என்றும் ஆபஸ்தம்பருக்கு சூத்திரக்காரர் என்றும் யாஜ்ஞவல்கியற்கு யோகி என்றும் அடை சேர்ப்பது வழக்கம். இவ்வடைச்சொற்றுடன் இப்பெயர்கள் போதய சூத்திர ரிஷி தர்ப்பணத்திலும் ஸத்யாஷாட சூத்திரத்தில் ரிஷி தர்ப்பணத்திலும் உள்ளன. சில சூத்திரங்கள் நீண்டகாலம் கண்டன. சில அங்ஙனவுகாலங்களுதவை. அவற்றின் காலநிர்ணயமும் அதன் பிரமாணமும் அவற்றால் எமக்குள்ள உபகாரம் இடவாமெனவும் இவற்றுள் சிரௌதம் ஸ்மார்த்தம் இருபகுதிகளின் பெருமையும், இவைகளுள் ஒன்றும் கொண்டுள்ள சம்பந்தமும், கன்மங்களில் அவை யுபயோகிக்கும் வழியும், இங்கிதன்றியமையாதென்பதும் பின் முறையே விரிக்கப்படும்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

"வேதாகம பிராமாண்யம்"

ஐயா!!

இத்தேயத்தில் உள்ளவர் பெரும்பான்மையில் வைதிகர்கள் பதும், இவர் கொண்ட முதநூல் வேதமே என்பதும் அதிற்கண்ட வருணாச்சிரமங்களுள் கட்டுண்டவர் என்பதும், அஃதோதியவாறு கர்மங்களை அநுஷ்டிப்பவர் என்பதும் நமது பத்திரிகை வாசகர்கள் அறிந்தேயிருப்பார்கள். இங்கு மேற்கூறிய விடயமறியாத சிலர் தமது மதவன்மையினாலேனத் துணியாது (அளப்படிப்பில் அம்பலம் ஏறினாலுங்கொண்டு கடவாழும்பார்ப்பவராய்) ஏதோ ஆகமங்கள் வேதங்களினுஞ் சிறந்த பிரமாணங்கள் என்றும் திருமறைகள் அந்யமாகாவெனவும் வாதிடுகின்றனர். அவர் கூற்றின்வழி மற்றவர் புகாவண்ணம் இவ்வேதாகம பிரமாண தாரதம்மியத்தை ஈண்டு எடுத்துரைப்பாம். யாம் எழுதப்புகும் விஷயங்கள்

௧. வேதங்கள் பிரமாணங்களுட்சிறந்தன.
௨. ஆகமங்கள் வேதங்களை விஷயங்களுள் அபேக்ஷிக்கும்.
௩. ஆகமங்கள் மந்திரபாகத்தில் வேதங்களை அபேக்ஷிக்கும்.
௪. வேதப்பிரமாணத்தன்மையைத் தழுவிய பிரமாணங்களே ஆகமங்கள்.
௫. வேதங்களுடன் முரண்பட்டவை அப்பிரமாணங்களே
௬. ஆகமங்களுள் மோகசாஸ்திரங்களும் உண்டு என்பன.

இங்கு யாம் சைவமுதலிய உள்மதத்தவர் கொள்கையைக் கொண்டு மற்றவர் கொள்கையை மறுக்க எழுந்தோமில்லை. மற்று ஒவ்வோர் ஆகமவாதிகள் கொண்டபடி அவரவர்சித்தாந்தங்களை எடுத்துக்காட்டி அவர்கூறும்வழியில் எங்ஙனமவை எல்லோரும் ஒப்பும் பிரமாணங்கிடைக்கின்றதோ அங்ஙனமுங் கலந்து மற்றதை ஒழித்து ஒருவிதத் தனிப்பொருள் கூறவேண்டுமென்பது எமது கருத்து. இனி நிகமம் வேதங்கள், சுருதி அநுச்சிரவம் என்பனாதி சத்தங்கள் வேதங்களின் பெயர். ஆகமம், ஸ்மிருதி, தந்திரம், பூர்வச்சிரவ முதலிய சொற்கள் ஆகமங்களின் பெயர்களாகும். வேதங்களாவன: ரிக்குமுதலிய பகுப்புடைத்தாய் ஒருபொருளை புணர்த்துந் தன்மையதாய் அவாய்நிலைபற்றி ஒன்றுக்கொன்று துணையாய் நித்தியமாய்த் தம் முதல்வன் திருவாக்காய் நிற்கும் சொற்றொடர்த்தொகுதி. ஆகமங்களாவன: பாஞ்சராத்திரமுதலிய உட்பகுதிகள் பெற்று ஒன்றையொன்று மருவாது இயல்பினவாய் சிவன் மால் முதலிய பலகடவுளரால் வெளிப்பட்டதோர் சொற்றொடர்த்தொகுதி. வேதங்கள் எல்லைப்படியும் ஒரேவித யாகாதி கிரியைகளில் ஒவ்வொரு அங்கமாய் நின்று ஓர் கன்மத்தை நிறைவேற்றுவதாலும் ஞானகாண்டத்தும் எம்மதத்தவர் எப்பொருளுரைக்கினும் எல்லா வுபநிடதங்களும் அப்பொருட்கிணங்க நிற்றலும் அவரவர் உரைகளிற்றெளிவே காணப்படுதலால் அங்கும் உள்ளே பேதமடைந்து ஒருபாகமாவது மற்றைய பாகத்தைத் தூஷிக்காது.

வரும்.

Koviloor Digital Library

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்நியா பத்திரிகையின்
அநுபந்தம்

௬- புத்தகம். சிதம்பரம்: நந்தன௵ சித்திரைமீ ௩௧௨ இலக்கம் - ௬

அத்வைத விசாரம்.
தொடர்ச்சி.

உலகவழக்கின்படி கேவலாத்துவிதம் முதலியசொற்களுக்கு முற்காட்டியபடி பொருளுரைத்தாமன்றி வேதங்களில் எங்கும் இப்பெயர்கள் வழங்கப்படவில்லை. எவ்வுபவிடங்களிலும் "அத்துவிதம்" என்னும் தனிச்சொல்லே வழங்குகின்றது. அச்சொல்லையே பல புராணங்களும் வேதங்கட்குப் பொருள் உரைக்குமிடத்தெல்லாம் உபயோகிக்கின்றனவேயன்றி எங்கும் "அத்வைதம்" என்னும் சொல்லுக்கு முன்னும் பின்னும் ஒருவாசுடை வைத்துரைப்பதில்லை. இடைக்காலத்தே இம்மதங்களெல்லாம் சில நூற்றுண்டுகளுள் தோன்றினவாகையால் அக்காலத்துதித்த வாசிரியர் முன்மதங்களினும் பின்மதங்களை வேறுபடுத்தவேண்டித் தாம் கொண்ட பொருளுக்கிணங்க இங்ஙனம் பெயரிட்டனர். அங்ஙனமின்றி மேற்கூறிய "அத்வைதத்" தனிச்சொல்லின்றி எத்தவுபவிடத்திலேனும் மற்றைய புராணங்களிலேனும் காளிதாசன் முதலிய பழையகவிகள் வழக்கிலேனும் எவராயினும் விசிஷ்டாத்வைதம் முதலிய சொற்களைக்காட்டுவரேல்,யாம், அவையும் அவாந்திமதங்களைக்கொண்டே அங்ஙனம் காட்டும் காலவிடத்தே அவர் மதத்துள்ள வாசங்கைகளைக் கேட்டொழிப்பாம். மிற்க; வேதங்களில் வேறு சொற்களேயில்லாது அத்துவிதச்சொல் தனித்தே உபயோகப்படுதலாலும் அங்கு 'அ' காரம் இன்மைப் பொருளைக்கொடுப்பதாய் எப்படியும் மற்றெங்காவது இப்பொருள் கொடுப்பதாய் வேதவழக்குண்டா? வேறு பொருளில் உண்டாயினில், இன்மைப்பொருளில் வேதங்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிடல் போல மற்றெதனையேனும் அதற்குப்பொருளென வெளியிட்டதில்லை. இனிஅத்வைதம் என்னும் சொல் 'நிர்த்வைதம்' என்று இருந்தால்அன்மை இன்மை இருவகைப்பொருளும் அதற்கமையுமே யன்றி 'ந' காரத்துக்கு அப்பொருளில் பிரயோகம் இதகாறும் எத்தக்கவிகடாலும் பிரயோகித்திலரெனில், ஆன்றோர் வழங்கவும் ஆரணங்கள் வழங்கவும் அப்பொருளுக்குப் பாக்கியம் ஏதும் இல்லை. வேதங்களும் வைதிகர் பலரும் ஒப்பாத இப்பொருளை ஒப்பி வேதங்களும் வைதிகர்பலரும் ஒப்பியபொருளாம் ஒருபொருளை விட்டொழித்தல் வைதிகராக விரும்பும் சித்தாந்திகட்கழகுடையதாமோ? இனி ஏதேனும் இவர் குறிக்கும் வடசொற்களுக்கு வடவியங்வழி குற்றங்கூறினர், அதை இங்கு இருமொழிக்கடலை நிலைகண்டுணர்ந்த மாபாடியகாரர் அருளிய மறுக்கவொண்ணுத் திருவாக்கு என்பதாதி சொற்சம்பிரமபிரயோகங்காஸ்திரத்தால் மறுத்திட வியலாது. பின் இலக்கணநூற்றுணிபே இங்கு முக்கிய பிரமாணமாதலின், அதன்வழியே சமாதானம் அளிக்கவேண்டும். மிற்க. வேதங்களில் 'அஜர:' 'அமர:' முதலிய உத்தமருணங்கள் கடவுளிடஞ் சொல்லப்படுகின்றன. அவ்விடங்களிலெல்லாம் எவ்வழியினும் அன்மைப்பொருள்கூறவொண்ணாது. 'சுஹ்ருதா:' 'அல்பப்கா:' தேவர் நித்திரைபற்றவர்; இவர்க்கு ஒருசமயம் நித்திரை இருந்து விலகியதன்று; அங்ஙனமாயின் இவ்விடமும் இன்மையே நகரப்பொருளாயமைந்தது. இனி எவ்வளவு தேடினும் வேதங்களில் அன்மைப்பொருள் கொண்டு முடிபக்கூடியதாய்ச் சம்சயிக்கவும் இடமின்மையாலும் சொல்லுக்குப்பொருளுரைப்பதில் இலக்கணங்களே முக்கிய பிரமாணமாதலின் ஆகமங்களுள்ளும் அத்வைதச் சொற்பொருள் இதுவேயென எடுத்து அதில் நகாரத்துக்கு அன்மைப்பொருளென எங்கும் தனித்தோதப்படாமையாலும் அத்வைதச் சொல்லிலமைந்த நகாரத்துக்கு எவ்வளவைகளுடனும் மூன்றுவழி இன்மைப்பொருளேயெனப் பகமரத்தாணிபோல் காட்டப்பட்டதென்க.

மற்றது வரும்.

ஞானமிர்தத்துள்ள ஆசங்கை.

ஐயா! நமது நண்பர் ஞானமிர்த பத்திராதிபராகிய நாவலரவர்கள் "சமயதாரதம்மியவியல்" என்னும்பிரகரணத்தில் மதங்களைப் பிரித்தவருமிடத்து 'சிவஞானசித்தியார் பரபக்கம்' முதலிய நூல்களிற் கண்டபடியே எழுதுவாராயினும் இவர்தாம் அவைகளை யெடுத்து மற்றவர்க்குப்போதிக்கச் சித்தமானமட்டில் அவைகளுள் தோன்றும் ஆசங்கைகளைக் கிளைய வேண்டியது அவர் பாரமேயாகையால் அவரிடம் கேட்கவேண்டிய விஷயங்களைக் கேட்கலாம் எனவுத்தேசித்து அவரெழுதுவது அனேகமாய் வேதாகம புராணேதிகாசங்கட்கு முரணா

வனவாயிருத்தலால் அவற்றுட் சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

இவர் புதிய வாருபீடத்தில் கூ-வது இலக்கத்தில் 'சாமஜாதம்பிரேயவல்' என்னும் மகுடமிட்ட விஷயத்தொடரில் "ஏகாத்மவாதநூல் செய்தவர் வியாசமுனிவர். இது மாயாவாதம், பாற்கரியவாதம், கிரீடாப்பிரமவாதம், சத்தப்பிரமவாதம் என ஐவகைகள்" என்று எழுதினார். இவ்விதம் வேதவியாசர் ஏகாத்மவாதஞ்செய்ததாக எவ்வேவர் கேட்டறிந்தார்? அல்லது படித்தறிந்தார்? அங்ஙனம் எப்பிரமாண புராணாதி நூல்கள் கூறுகின்றன. எவ்வாசிரியர்கள் கூறுகின்றனர்? எந்தாசிரியர் கூறினார்? இனி நமது நண்பர் கூறியபடி வியாசமுனிவர் ஏகான்மவாதி என்பதை அவர் சூத்திரத்திற்கு பாடியஞ்செய்த ஸ்ரீகண்டசிவாசாரியர் கண்டிலரோ? ஸ்ரீராமாநுஜமுனிவர் அறியாரோ? மத்துவாசாரியருக்குத் தெரியாதோ? மற்றைய மதாசாரியரும் அறியாரோ? அல்லது அறிந்தும் மற்றவரைக் கெடுக்க வெண்ணங்கொண்டு பொய்ப்பாஷ்யங்கள் இயற்றினரோ? இனி வியாசர் செய்த மாயாவாதம் முதலிய நான்குபகுபாடுள்ள ஏகான்மவாதத்தில் எப்பகுபாட்டைப்பற்றியவர் ஸ்ரீநீலகண்டயோகிகள்? மற்றெப்பகுபாட்டைப்பற்றி புரை செய்தவர் ராமாநுஜாசாரியர் முதலியோர்? இனி மேற்காட்டிய பாடியங்களும் ஏகான்மவாதமேயோ? அங்ஙனம் எல்லா வைதிகபாடியகாரரும் ஒப்பியதாயின் ஏகான்மவாதம் அதை இவர் கண்டிக்கவெழுந்ததும் புறச்சமயத்தைச்சேர்த்ததும் [illegible] முற்றிலும் ஒழிக்கப்போமோ? ஒரோர் சமயத்தில் ஸ்ரீநீலகண்டசிவாசாரியார் ஓர் [illegible] அச்சமயமேனும் ஏகான்மவாதியாமோ? [illegible] இவர் கொள்கை எவ்வளவு நன்னிலையிலிருக்கும் என்பதே. மற்று "[illegible]" என்று தம் சித்தாந்தத்தில் 'உண்மையில் போதபுரியைக் காட்டுகின்ற வியாசசூத்திரம்' என ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் வியாசசூத்திரத்தை வியந்து பாராட்டியது இவர் அறியாரோ? இனி வேறும் புறமத பாஷ்யகாரர் வரும் தத்தம் சித்தாந்தத்தில் வியாசமுனிவர் பெருமையை விளக்கி [illegible] அவரையும் புறச்சமயமென நிறுத்திக்கொள்ளலாமோ. [illegible] "மீமாஞ்சகர் கன்மகாண்டமாகிய வேதமாத்திரம் பிரமாணமெனக்கொண்டு ஞானகாண்டமாகிய உபநிடதங்களை இகழ்வர்; ஏகான்மவாதிகள் ஞானகாண்டமான உபநிடதங்களை மாத்திரம் பிரமாணமெனக்கொண்டு கன்மகாண்டமாகிய வேதத்தினை இகழ்வர்; மற்றைய சாங்கிய மதத்தாரும் யோகமதத்தாரும் பாஞ்சராத்திரமதத்தாரும் தத்தம் தத்தம் மதநூல்களைப் பிரமாணமாகக் கொண்டு மற்றைய [illegible] பிரமாணங்கொள்ளார். அன்றியும் வேதப்புறமாய நூல்களைப் பிரமாணமெனக்கொண்டார்" என்று எழுதியிருக்கின்றார். மீமாஞ்சகர் ஞானகாண்டத்தை இகழ்ந்தது எவ்விடத்தில்? ஏகான்மவாதிகள் கன்மகாண்டத்தை இகழ்ந்ததெங்கே? இவ்விருவரும் ஒன்றைக்கொன்று முரணுங் கொள்கையுடையவராயின் ஸ்ரீநீலகண்டசிவாசாரியரும் ஸ்ரீராமாநுஜாசாரியரும் இவ்விருகாண்டங்களையும் விசாரிக்க வெழுந்த ஒரு சாஸ்திரமே மீமாஞ்சையெனவும் அதில் முற்பகுதி ஜைமினியாலும்பிற்பகுதி வியாசராலும்செய்யப்பட்டது என்றும் காட்டியது எங்ஙனம்பொருந்தும்! இனி இவ்விருவர்கொண்ட கொள்கை எமக்குடன்பாடில்லை என விடையளிப்பினும் ஜைமினிமகரிஷி 'ஸங்கர்ஷண' காண்டத்தும் ஏகான்மவாதிகளுட்சிறந்த சங்கராசாரியசுவாமிகள் ஈசாவாஸ்யஉபநிடதபாஷ்யத்தில் இரண்டுமுதல் நான்குவரை மந்திரங்களின் பாடியமருளியவிடத்தும் ஆராய்ந்தெடுங்கொள்வாராக. இனிச்சாங்கியர் யோகிகள் பாஞ்சராத்திரிகள் தமக்கு விரோதமானவிடம் வேதம்அப்பிரமாணமெனச் சொன்னதாகச்சொல்லலும் அவர் வேதப்புறம்பாய நூல்களைப் பிரமாணமாகக்கொண்டார் என்பதும் இவர் கண்டனவே. இதற்குப்பிரமாணம் அவர் மதத்திலுள்ளபடி காட்டமுடியாது. அவர்கள் வேதங்கள் பிரமாணமெனவும் அவை தாம்கொண்ட பொருளையே தனித்துணர்த்துகின்றனவெனவும் பாஞ்சராத்திரம் வேதத்தைத்தழுவிய வைதிக தந்திரமேயெனவும் வேதபாஹ்யமதம் தமக்குடன்பாடில்லையெனவுமே வாதிக்கு; அவரிடம் குற்றங்கூறுமிடம் அவர் சித்தாந்தத்தைமாற்றிக் கூறுதல் அறிஞர்க்கழகாகாது. அவைகளை அவர்கண்டபடியே எடுத்து அவற்றுட் சொற்பொருத்தமின்மைகளைப்பற்றி ஆராய்ந்து அவைபுரை கூறுவதே சற்சித்தாந்தியார்க்கழகு. ஆதலின் இவ்வித விஷயங்களில் தமிழில் அமைந்த இரண்டொரு சித்தாந்தங்களைமட்டில் கற்றுக்கொண்டு அதைக்கொண்டே மற்றவர் சித்தாந்தங்களைத்தாம் கண்டிக்கத்தக்க நிலையிலமைத்துக்கொள்ளாது இனியேனும் அவ்வச்சித்தாந்த நெறிகளை அறிந்தோர்பால் அறிந்து அவைகளைப் பகுத்துண்மை நிலைநாட்டப் பின்னிடாரென நம்புகிறோம். இவ்விஷயத்தில் உள்ள மற்ற விஷயங்கள் பின் வரும்.

கேள்விகள் எட்டு.

ஸ்ரீஞானமீர்த பத்திராதிபர் அடியில்வரும் கேள்விகளுக்குச் சமாதானஞ் சொல்லுவாரென நம்புகின்றேன்.

1. பதிக்குப் பசு பின்னமா? அபின்னமா? பின்னாபின்னமா? பின்னமாயின் பதிக்குப் பூரணத்துவம் குறையும். அபின்னமாயின் பதியே பசுவாகிப் பசுவுக்குள்ள பாசம் பதியையுஞ்சாரும். பின்னாபின்னமாயின் மேற்படி இருவித தோஷமும் பொருந்துவதனோடு சேர்மறுதலையான இருவித தர்மம் ஒருபொருளின்கண் இருத்தல் அமையாது. அன்றிப் பதிபசு ஆகிய இரண்டு பொருள்களின் ஆதாரமெது? அபேதமெது? [illegible] அபேதங்களுக்குத் திருட்டாந்தமொன்று கூறவேண்டும்.

2. பதிக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்னாபின்னமா? பின்னமாயின் பதி பரிபூரணப்பொருளாகாமற் போகும். அபின்னமாயின் பதியே உலகாய் உலகத்திலுள்ள சடத்தவப் பதியைச்சாரும். பின்னாபின்னமாயின் மேற்படி இரு

வகைத் தோஷங்களும் பொருந்தலோடு சேர்மானுள இரு வகைத் தர்மம் ஒருபொருளின்க ணிருத்தல் அசம்பவமாம்.

3. மாயைக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்னா பின்னமா? மாயையினிடத்து உலகுண்டாதல் மாதாவினிடத்துப் பிள்ளையுண்டாதல்போலா? வித்திலின்றும் மரமுண்டாதல்போலா? பால் தயிராவதுபோலா? மண் கடமாவதுபோலா? கயிற்றினிடத்து அரவுண்டாதல்போலா? இவைகளல்லாவிடில் வேறெதுபோல்? மாயையின்கண் உலகம் பொருளா? குணமா? தொழிலா?

4. ஞானமிர்தத்தில் ஆன்மா வியாபகமென்று கூறப்பட்டிருக்கின்றது. வியாபகமெனின் சரீரத்துக்குள் மாத்திரம் வியாபகமா? சரீரத்துக்கு வெளியிலும் வியாபகமா? சரீரத்துக்குள் வியாபகமெனின் அவ்வியாபகத்தின் அளவு எவ்வளவு? அது ஓரே அளவா? பல அளவா? ஓரே அளவெனின் எறும்பு சரீரத்துக்கும் யானை சரீரத்துக்கும் ஓரே அளவாயிருப்பதெவ்வனங்கூடும்? பல அளவெனின் ஆன்மா விரிதல் சுருங்குதல்களான இலக்கணம் பெற்றிருக்கவேண்டும். சரீரத்துக்கு வெளியிலும் வியாபகமெனின் இச்சாஞானக் கிரியைகளோடுகூடிய ஆன்மா, சரீரத்துக்கு வெளியிலும் இருந்து அறிதல் மயமாயிருக்கவேண்டும். அவ்வாறிருக்கின்றதென்பதற்கு அநுபவஞ் சிறிதுங்காணோம். அவ்வாறிருக்கிறதாக வைத்துக்கொள்ளினும் ஒவ்வொரு ஆன்மாக்களும் வியாபகமாயிருக்கின்றமையால் அனேக ஆன்மாக்கள் ஒரு இடத்தில் இருக்கின்றனவென்று சொல்ல நேரிடும். ஒரு இடத்தில் இரண்டு பொருளிருத்தலே கூடாதெனின் பலபொருளிருக்கின்றனவென்பது அசங்கதமாம்.

5. ஆன்மா ஞானவடிவாயிருக்கின்றதென ஞானமிர்தப்பத்திராதிபர் உரைத்திருக்கின்றனர். அஞ்ஞானத்தால் மறைப்புண்டிருக்கின்றதென்றுங் கூறுகின்றனர். இது எப்படிப்பொருந்தும்? ஞானத்தை அஞ்ஞானமெப்படி மறைக்கும்? ஒளியை இருள் மறைக்குமா? சூரியனை இருள் மறையாதே.

6. வியாசமுனிவரியற்றிய வேதாந்தசூத்திரத்துக்கு நீலகண்டசிவாசாரியார், சங்கராசாரியார், இராமாநுஜாசாரியார், மத்துவாசாரியாராகிய இந்நால்வரும் தனித்தனியே பாடியஞ் செய்தருளினார்கள். இதில் சைவபாடியம் நீலகண்டசிவாசாரியாரியற்றியது. இப்பாடியத்தை யிப்போதுள்ள ஞானமிர்தத்தைச்சார்ந்த சைவசித்தாந்திகள் தங்கள் பாடியமாக ஒப்புக்கொள்ளுகின்றனரா? ஒப்புக்கொள்கின்றார்களெனின் நீலகண்டசிவாசாரியார் உலகத்துக்குப் பிரமம் அபின்னநிமித்தோபதான காரணமாகக் கூறுகின்றனரே. அதை மேற்படி சைவசித்தாந்திகள் அங்கீகரிக்கின்றனரா? நீலகண்டசிவாசாரியார் பிரமத்தை யெப்போதுஞ் சகுணமாகவே கூறுகின்றனரே. நிர்க்குணத்துக்குத் தோஷமுங் கூறுகின்றனரே. அது இச்சைவசித்தாந்திகளுக்கு உடன்பாடாமா? அந்நீலகண்டசிவாசாரியர் பாடியம் விசிஷ்டாத்வைதமா? சுத்தாத்வைதமா? அல்லது வேறா?

7. ஆதிசைவர்களான குருக்கண்மார், உலகிற்கு மாயையை முதற்காரணமாகவும், சிவத்தைநிமித்தகாரணமாகவும், [illegible]யைத் துணைக்காரணமாகவும் கொண்ட சிவஞானபோத[illegible] சித்தாந்தமாக அங்கீகரிக்கின்றனரா?

8. வைதிக சைவரென்றும் தாந்திரிக சைவரென்றும் ஞா[illegible] இருவகையாகக் கூறியுள்ளாரே; இப்போது [illegible] வைதிக சைவர் யார்? தாந்திரிக சைவர் யார்? [illegible] பிரமாணமா? தாந்திரிகசை[illegible] பிரமாணமா? இவ்விரு சைவங்களைப் பிரித்துக்காட்டும் பிரமாணநூல்களெவை? அந்நூல்களில் இவற்றைக்காட்டும் சுலோகங்களின்னவெனத் தெரிவித்தல் வேண்டும்.

ஆரியன்.

மகாமேன்மைதங்கிய ஸ்ரீ பாஸ்கரசேதுபதியவர்கள் சமஸ்தானத்து வித்துவானும், வைதிகமத ஸ்தாபகருமாகிய ஸ்ரீமத் வைத்தியநாதையரவர்களுக்குந் திருவாவடுதுறை சமஸ்தானத்து வித்துவானுஞ் சைவமதஸ்தாபகருமாகிய ம-௱-௱-ஸ்ரீ சபாபதிநாவலரவர்கட்கும் வைதிக சைவமத வாக்குவாதங்கள் நடந்ததாகவும் இன்றும் அவ்விஷயங்களைப் பத்திரிகைவாயிலாக வெளியிடப்போகிறதாகவும் ஞானமிர்தம் முதற்பத்திரிகையிற் பார்வையிட்டேம். இவ்விரு வித்துவான்கள் முன்னிலையி லெனக்குத்தோற்றுஞ் சந்தேகவினாக்களை வினவி விடைபெற்றுக்கொள்ளக்கூடிய சமயம் வாய்த்ததற்காக மிக மகிழ்ச்சிகொண்டு கீழெழுதும் வினாக்களுக்கு அவ்வித்துவான்களிருவரும் சீக்கிரம் விடைகொடுப்பார்களென் றெதிர்பார்க்கின்றேம்.

சந்தேக வினாக்கள்.

1. ஆயிரம் வருஷத்துக்குட்பட்ட சரித்திரத்தையுடைய பெரியபுராணத்துட் கூறப்பட்ட கண்ணப்ப நாயனாரையும், சைவசமயாசாரியர்களென்னும் நால்வரையுந் துதித்தற்காகக் கலியுகாதி (௨000) வருஷமுஞ்சென்று மூன்றுவதாயிரந் தொடங்கி (௨௧) வது வருடத்திலவதரித்த ஆதிசங்கராசாரியசுவாமிகளவர்களால் சௌந்தரிய லகரியுஞ், சிவானந்தலகரியுஞ், சிவபுஜங்கமுஞ் செய்யப்பட்டதென்றுஞ் சைவர்கள் சொல்லுகின்றார்களே? ஷை நூல்களில் கண்ணப்பநாயனாரையும் நால்வரையுந் துதித்தற்காகச் செய்யப்பட்டதென்பதற்குப் பிரமாணமுண்டா?

2. துவாபரயுகமுடிவிலும் (௩000) வருஷத்துக்குமுன்னுமிருந்த பஞ்சபாண்டவர்களிலொருவனுகிய அர்ச்சுனன்பாண்டியனாடாகிய மதுரைக்குச்சென்று பாண்டியனுடைய மகளை விவாகஞ்செய்தகாலத்தில் மதுரை ஸ்தலங்கட்டப்பட்டிருந்ததா? அர்ச்சுனன் மதுரைஸ்தலத்திற் சுவாமிதரிசனம் பண்ணினான் தமிழ்ச் சங்கத்தைப் பார்த்தான் தமிழ்ச்சங்கத்தின் சரித்திரத்தைக் கேட்டானென்றவர் சரித்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றதா?

3. ஆதிசங்கராசாரியஸ்வாமிகளவர்கள்சங்கிரந்தபாஷையை விருத்திசெய்தற்குஞ், சுயமதஸ்தாபனஞ் செய்தற்குந் திக்குவிஜயஞ் செய்தகாலத்தில் தக்ஷிணதேசத்திலேயுள்ள மதுரையென்னுமூருக்குப் பாண்டியனு லழைக்கப்பட்டபோது தமிழ்ப்பாஷையின் பெருமையையும் வித்துவான்களின் திறத்தையுங் காட்டுதற்குத் தமிழ்ச்சங்க மிருக்குமிடத்திற்கு ஆதிசங்கராசாரியசுவாமிகளவர்களைப்பாண்டியனழைத்துநுழையப் பண்ணினதுண்டா?

4. இற்றைக்கு ஐயாயிரவருஷத்துக்கு முன்னுள் துவாபரயுக முடிவிலும் நடந்த பாரதயுத்தத்துக்கு முன்னமேதோன்றிய[illegible]ாகிய வேதவியாசரால் வேதங்களை நான்காக வகுப்பட்டகாலத்தில் [illegible] சைவசமயத்தவர்களென்பவர்களைத் [illegible] மென்றுந் நூல்களிருந்ததுண்டா?

5. கலியுகாதி 1600 வருஷத்துக்குள் பிறந்தவனாகிய புத்தனாலே பண்ணப்பட்ட புத்தசமயத்திலே வே

தக்கொள்கையினராகிய பிராமணரும், க்ஷத்திரியரும், வைசியருஞ் சோதரிருந்தலே மற்றவருணத்தவரைச் சேர்த்துக்கொண்டு சமயவிருத்திக்காக புத்தரேற்றுமையினைச் சேர்த்தவாறும் பௌத்தாகமம் பிடகாகமம் முதலான வாகமங்களையுண்டு பிரித்துவதற்கு முன்னே தற்காலத்திலே சைவசமயத்தவர்களென்பவர்களாற் கைக்கொள்ளப்படும் காமிகம் முதல் வாதுளமீறாகிய உ.அ ஆகமங்களும் உபாகமம் உ0அ-ம் உண்டாயிருக்கப்பட்டிருந்ததா? அதற்குத்தக்க பிரமாணமுண்டா?

6. புத்தருடைய காலத்திலின்றும் வெகுகாலத்திற்கு முற்பட்டவைகளும் வேதத்துக்கு வழிநூல்களுமாகிய ஸ்மிருதிகளிலாவது அவைபோலுக் கடமையில் மிஞ்சவர்களாற் செய்யப்பட்ட எந்த நூல்களிலாவது ஆகமத்தைப் பிரமாணமாகவெடுத்துக் காட்டப்பட்டிருக்கிறதா?

7. ஆகமங்களிலே கூறப்பட்டபடி வேதமுமாகமமும் முதனூலாயிருப்பின் இந்தியதேசமுழுவதும் வேதம் வழங்கவும் ஆகமம் வடதேசங்களில் வழங்காது தெட்சணதேசத்திலுஞ் சிலவிடங்களில் மாத்திரம் வழங்குவதற்குக் காரணமென்னோ?

தெட்சணதேசத்திலேயுள்ளதும் இற்றைக்கு ௬௫00 வருஷத்துக்குமுன் இரணியவர்மனென்னுமரசனால் புதுப்பிக்கப்பட்டதும் வேதப்பிராமணருநிலைமுமாகிய தெம்பரஸ்தலத்தில் வேதவிதிப்படி பூசை யுற்சவம் நடத்தப்படுவதற்குஞ் சிதம்பரஸ்தலத்திருப் பிற்பட்டவைகளுந் தெட்சணதேசத்திலேயுள்ளவைகளுமாகிய திருவாரூர், திருப்பெருந்துறை, காஞ்சி, மதுரையென்னுமாலயங்களில் ஆகமவிதிப்படி பூசை யுற்சவம் நடத்தப்படுவதற்குக்காரணம் யாதோ? இந்தியாவிலேயுள்ள வாலயங்களிலிரண்டுவகுப்பேனோ?

9. வேதத்தின்வழி நடப்பவர்களுஞ் சங்கராசாரியசுவாமிகளை வழிபடுபவர்களுமாகிய பிராமணர்கள் வைதிகவாரணர்களாகிய தம்மவர்களை வடதேசத்திலுள்ள காசி முதலான ஸ்தலங்களிலும் பூசை யுற்சவநடத்துதற்கு நியமித்துக்கொண்டனரன்றோ? அவ்வாறு தற்காலத்திலே சைவசமயாசாரியர்களென்றுஞ் சமயிகளுடையவர்களென்றுஞ் சைவர்களாலே சொல்லிக்கொள்ளப்படும் நால்வருள் அப்பரமூர்த்திகள் வம்சத்திலுள்ளவர்களாகிய தம்மவர்களைச் சீகாழி, திருவாரூர், திருப்பெருந்துறை வென்னுமாலயங்களிற் பூசையுற்சவ முதலிய கிரியைகளைச் செய்தற்கு நியமிக்காது ஈவரவர்களுக்குச் சமமுரமாகிய யாழ்ப்பாணத்திலுள்ள வெகு ஆலயங்களில் பூசையுற்சவம் முதலிய கிரியைகளைச் செய்தற்கு நியமிப்பிருப்பது யாதுபற்றியோ?

தாங்களும் பிராமணராக வேண்டுமெனனும் விருப்பமோ அல்லது நடையுடை பாவனையில் பிராமணருக்குச் சமானமாய்த் தோற்றியவர்களைக் கெடுக்கவேண்டுமெனனும் நினைப்போ? தற்காலத்திலே நூதனமாக வெளிப்பட்டிருக்கும் அபிஷேகஸ்தர்கள் என்பவர்களுக்கும் பிராமணர்களுக்கும நடையுடை பாவனையில் வித்தியாசமென்னோ? யாழ்ப்பாணத்திலே வசிப்பவரும், சன்காம்வருணத்தவரும், ஆகமவிதிப்படி தீட்சைபெற்றவரும், சம்ஸ்கிருதம் வாசித்தவருமாகிய பண்டிதரொருவர் பிராமணரல்லாத வெகு சனக்கூட்டத்திலே வேதருக்குகளுக்கு அர்த்தஞ்சொல்லிப் பிரசங்கிக்கின்றாரே. அவ்வாறுசெய்வது வேதவிதியா? ஆகமவிதியா? கலியுகவிதியா?

10. சைவசமயத்தவர்களென்பவர்களாற் சிரோபூஷணமாகக்கொள்ளப்படுஞ் சைவாசாரியர்களென்னும் நால்வருள் தேவாரம்பாடினவர்கள்தேவாரங்களில் வேதத்தைப்பிரமாணமாக வெடுத்துக்காட்டியிருப்பதுபோல் ஆகமத்தைப் பிரமாணமாகவெடுத்துக் காட்டாமல் விட்டதற்குக் காரணமென்னோ?

11. ம-ள-ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் வீரசோழியத்திற் றமிழைப்பற்றித் தானெடுத்துக்கொண்ட விஷயங்களுக்கு மாறாய் வருவனவற்றையெல்லாம் கூடாதென்று மறுக்க அவர் மறுப்பை ம-ள-ஸ்ரீ சபாபதிநாவலர் பிறழ்வையென்று கூற அவர் கூற்றை யின்கூற்றெனக் கூகுரலிட்டுப்புத்தகங்கள் பத்திரிகைகளிலச்சிட்டுப் பரப்புவதெல்லாம் அவர்கள் புத்தகங்களைப்பார்க்கும் ஜனங்கள் சம்ஸ்கிருதம் ஈனமானதென்றுந் தமிழ் மேலானதென்றும் நினைத்தற்காகச் செய்யப்படுகின்றதா? வேறோ? உண்மையின்வழி சம்ஸ்கிருதத்திற்குத் தமிழ் மேலானதென்பதற்கு நியாயமுண்டா?

12. சிலர் வேதமுமாகமமுமொன்றெனக்கூற அதை மறுத்துச் சிலர் ஆகமம் முதனூல் வேதம் பொதுநூலென்றுரைக்கச் சிலர் வேதமுழுதும்போதின சங்கரர்களுடியர்கள் வேதத்தில் முடிவெடுக்காமலாகமத்திற் றெளிவெடுத்தார்களென்று மொழிவதெல்லாங்கேட்கும் ஜனங்கள் வேதந்தாழ்ந்ததென்றும் ஆகமம் மேலானதென்றெண்ணுவதற்காகச் சொல்லப்படுகின்றதா வேறோ? உண்மைப்பிரகாரம் வேதத்தினின்று மாகமம் மேலானதென்பதற்கு நியாயமுண்டா?

கொழும்பு, குருசர்மா.

Chidambaram—Printed and Published for the proprieter at the Brahmavidya Press No 38 Snekalloo near pilliarkoil street.

Koviloor Digital Library

NO. 7

ஸ்ரீ [illegible]

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை

ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீராமசாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் திர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

கரஸம்வத்ஸரம்.
துலாரவி உஅஉ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,

[illegible]



ब्रह्मविद्या.

[illegible]

[illegible]

[illegible]

ப்ரஹ்மவித்யா.

சிதம்பரம்:— நந்தனஞு வைகாசிமீ 13உ புதவாரம்.

வேதாகமப் பிராமாண்யம்.

தொடர்ச்சி.

ருக்குவேதம் யஜுர் வேதத்தையும், யஜுர்வேதம் சாமவேதத்தையும் சாமவேதம் மற்றிரண்டையும், ருக்கும் தன்னினத்து வேறாய இருவேதங்களையு மன்னமே யஜுர்வேதமும் தன்னினத்து வேறாய மற்றிருவேதங்களையும் எவ்விடத்தும் நிந்திக்கவில்லை. வேதங்களைத் தழுவிய மதங்களெதுவும் மூன்றிலுமவேதங்களில் அப்பிராமாணம் என எப்பாகத்தையும் எடுத்துதாகரிக்கவில்லை. இதற்கு மாறாக வாகமங்களுள் ஒன்றை ஒன்று நிந்திக்குமியல்புண்டு. உதாரணமாக, ஸ்ரீபாஞ்சராத்திரம ஸ்ரீசைவாகமங்களை மிக்க தாழ்வாகக் கூறிநிற்கின்றன. ஸ்ரீசைவாகமங்கள் பாஞ்சராத்திரத்தை மிகவும் இழிமொழிகளுக்கிலக்காக்குகின்றன. சக்தியாகமங்களோ தமக்குச் சித்தாந்தம் எனும் பெயர் கொடுத்துத் தம்முட்சாமே துணிபு என ஆரவாரித்துப் புறவாகமங்களை வெகு அற்பங்களெனச் சொல்லுகின்றது. இம்மட்டோ! ஒரே வைணவாகம உட்பகுதிகளாய பாஞ்சராத்திர வைகானசங்களுக்கும் ஒன்றையொன்று தூஷிக்குமிலக்கணம் மாறவில்லை. சிவாகமங்களிலும் காமிகத்தில் வாமபைரவ தந்திரம வாதுளம் இவைகளை நிந்தித்தவசனமும்காணலாம். சக்தியாகமங்களும் 'தக்ஷதந்திரம்' வாமமார்க்கத்தையும் அஃதல்லா அர்க்காசரிரத்தையும் மறுத்தோதும் செய்யுட்களமைக்கன. நிர்கு புராணங்களோ சிலவிடம் பாஞ்சராத்திரங்களைப் பழிக்கின்றன. சிவாகமங்களைப் புகழ்ந்துரைக்கின்றன. சிலவிடங்களில் வைணவாகமங்களைப் பேணிச் சிவாகமநிந்தை செய்கின்றன. சிலவிடம் எல்லாவாகமங்களும் மோகசாஸ்திரங்கள் என்றும் சொல்லுகின்றன. இனி ஒவ்வொரு ஆகமத்தைப்பற்றி மற்றதை நிந்திக்குமிடம் தம்மால் கொள்ளப்படுமாகமம் வைதிகம் எனச்சொல்வது புராணசுபாவம். தந்திரங்கள் தம்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

முன் தாம் கலகப்படுவதுடன் பிழ்லாது பிலயிடம் வேதங்களையும் நிந்திக்கின்றன. யாம் மேற்கூறிய விஷயங்களில உங்களுக்குச் சமுசயமுண்டாயின் அடியிற் குறிக்கும புத்தகங்களைப் பார்த்தீராகுல் அவைகளுண்மையென உங்களுக்கேற்படும். அவை: ஸ்ரீமத் ஆளவந்தார் செய்தருளிய தந்திரப்பிராமாண்யம், ஸ்ரீவேதாந்தாசாரியர் செய்தருளிய ஸ்ரீபாஞ்சராத்திர ரக்ஷை, பவபூதவர் திருவாக்காய தைவித்தாந்தபாலினி. புராணத்துட் சிவபுராண வாயுசங்கிதை, கூர்மபுராணத்தும் பத்மபுராணத்தும் தந்திரோத்பத்திப்பிரகரணம, பாரதம சாந்திபர்வத்துள்ள மோக்ஷதர்மத்து பஞ்சமதசித்தாந்தா த் தி யா யம்: ஸ்ரீபாஸ்கராயர் இயற்றிய சௌந்தரியலகரியுரை. இனி கௌளசாக்தர் எழுதிய சித்தாந்தவைபவம, சோமநாதருத்திரர் திருவாய்மலர்ந்த லிங்கதாரண சந்திரிகா, அப்பயதீக்ஷிதசுவாமிகள் செய்தருளிய சிவார்க்கமணிதீபிகை, சிவதத்துவவிவேகம் என்பன. இவ்வளவும் ஒன்றைபொன்று மறுத்திடினும் இப்புத்தகங்களில் ஒன்றேனும வேதங்களை அப்பிரமாணமெனச்சாற்றினதில்லை. வேதங்களிலோ ஆகமங்கள் பெயருமில்லை. அதன் நிந்தையுமிலலை. ஆகமங்களுக்குள் ஒன்றன் சாற்றம் மற்றொன்றிற்காகாது. மற்று அதில் உள்ள ஒரு சிறுபான்மை எடுத்து அனுட்டித்தால் அவன் பதிதன் எனபதே ஆகமங்களிற்கண்ட கருத்து. இனி வேதமென்னும் சாயகனுக்கு வாழ்க்கைப்பட்ட சக்கழத்திகளாகிய இத்தந்திரசுக்திகள் ஒன்றையொன்று நிந்திப்பதியல்பாயினும் இவர் பிணக்கின்மேலீட்டினுல் தன்வழி சாயகன் இருக்கென்னவெனவெறுத்து அவனுயிர்க்கும் ஊறுதிட நேருவதே எமக்குப் பெருந்துயரம் விளைக்கின்றது. ஆயின் நம்மவர் தந்திரங்களால் அடையவேண்டிய உபகாரங்களையும் அத்தந்திரங்களுள் உள்ள வேற்றுமைகளையும் அவற்றை ஆக்கியோர் பெருமையையும் அவையே பிரமாணம் என்பார் சொல்லும் பிரமாணங்களையும் அவற்றுள் கொள்ளற்பாலன தள்ளற்பாலன இவை என்பதையும் எடுத்து முறையே கூறுவாம். வரும்.

ஆரியாசார ரகசியம்.

ஊர்த்துவபுண்டரம்,

தொடர்பு.

ஐய,

பெண்களுக் கூர்த்துவபுண்டரம் சந்திரகலைபோன்றதாகவிருக்கவேண்டும். அவர்களுக்கு சிரத்தில் சந்திரன் கலைபதிகமாம். இனி மாத்துவர் எனனும் ஓர் சா

[illegible]

சார் கோபிசந்தனத்தாலேயே புண்டரம் இடுவார். அவர்களுக்குப் பல முத்திரைகளும் உண்டு. அம்முத்திரைகள் ஐம்பாலது ஐவகை ஆயுத முத்திரிகைகளே. இவைகளைத் தரியாதார் அவர்மீதுள்ள அன்பின் மிகுதியாலன்றி வேறுகாரணம் இல்லை. உண்மையறிந்தவன் ஒவ்வொருபிறவும் பஞ்சாயுதத்தரித்த பாவாசுமேதவினை நீக்கம்கருவுந்த அதனுல் வரும் ஏற்பயன். இங்கு வெண்டிருமண்ணால் இடுந்தசத்தில் வெகு சிறிய திருநாமம் ஒன்று "சித்துநாமம" என்று ஸ்மார்த்தருள் சிலர் தரிக்கிறார்கள். அது மட்டில் எவ்விதத்திலும மூலமில்லாதத. என்னை எனில், வெண்டிருமண்காப்பே வேதங்களில் எங்கும சொல்லப்படாது. ஸ்ரீபாஞ்சராத்திரம் எனும் தந்திரத்திலுள்ளதாக அத்தந்திரம் அப்புண்டரத்தின் அளவை இவ்வளவெனக்குறைந்தது இரண்டங்குலமாகத்துணிந்தோத, இவர் அவ்வளவு குறைத்திடும் இச்சிறு திருநாமம் அங்கு விதிக்கப்படத்தகாது. மிக்க; ஸ்ரீபூர்ணபிரஞ்ஞாசாரியர் அவதரித்த காலம் முதல அனுஷ்டானத்துக்குவந்த புண்டரம் பலவித அமைப்புகள் உள்ளது. அது நீடக்கோது மாறுபாடுள்ளது-அதற்கு ஐவகை முத்திரைகளுமுண்டு. இவ்வித புண்டரமும் பாஞ்சராத்திரத்தில் சொலலப்பட்டதே. இந்த புண்டரம் கோபிசந்தனத்தால் அமைவது மாத்திரையில் வைதிகமேயன்றி மற்றவிஷயத்திற் ஜுக்திரிகமே. ஆனந்ததீர்த்தமுனிவர் கண்டுபிடித்த வழி ஊர்த்துவபுண்டரம் பலவிதங்களும் உடைத்தானது. எவ்வளவு ஊர்த்துவபுண்டரங்கள் எங்கெங்கு விதிக்கப்பட்டனவோ அவ்வளவு வேற்றுமைகளும ஒருங்கமைந்த புண்டரம் இவ்வானந்த தீர்த்தியபுண்டரம்ம இதில் முத்திரைகள் அதிகம். அவர் கொண்டகொள்கையிது. வேதத்தில் ஓரிடம் உள்ளதொரு வசனத்துக்கு அவர் கொண்ட பொருட்பிரகாரம் அவசியம் ஐந்து முத்திரைகளைக் காச்சிரதரித்து அதன்மேல் சில கோபிசந்தன முத்திரைகளைத் தரித்தல்வேண்டும் என பொருள் ஏற்படுவதால் அதை அவ்விதம் செய்ய வேண்டியது" என்பதே. ஆதலாற்றான் ஐவகை முத்திரைகளைக்கொண்டு நித்தியம அவர் புண்டரம் தரிக்கின்றார். இக்குற்று நோக்கில் ஆதிகாலத்திற்றானே அச்சியற்றும் வழிகண்டுபிடிக்கப்பட்டதாயும் அது ஸ்ரீபாஞ்சராத்திரத்திற்றானே இருப்பதாயும் வெளியாகிறது. பாருங்கள்! எதிர்மறையாய் அமைந்த வடிவெழுத்தைஎங்கேனும் அழுத்தினுல் முறைமாறாது விழுவதே அச்சியற்றலின் மூலரகசியம். இவ்விஷயம் மாத்துவர் தரிக்கும் நாராயண முத்திரையிலுள்ளது அம்முத்திரை

Koviloor Digital Library

[illegible]

சில கட்டங்களுள் ஈராயனாராமம் அமையப் பெற்றது ஆயின முத்திரை என்பதும் எமக்கு மேற்றிசையாரிடமி ருந்தே முற்றிலும் வந்ததில்லை. இதுவும் ஸ்ரீ மத்துவாசாரியர் அவதரிப்பதற்குமுன் புஸ்தகத்துள் தூங்கியது இச்சமயம் வெளிவந்து அவர் மதத்தவரால் அநுஷ்டிக்கவேண்டியதாய் அமைந்தது. இனி செஞ்சனத்தால் தரிக்கும் ஊர்த்துவபுண்டரத்தை இங்கு நோக்குவோம். அப்புண்டரமும் வேதங்களில் எவ்விடத்திலேனும் சொல்லப்படவில்லை. மற்றுஸ்ரீபாஞ்சராத்திரத்துள்ளது. ஆயின் பாஞ்சராத்திரத்தில் உருண்டைவடிவம் பத்மவடிவம், சங்குவடிவம், சக்கிரவடிவம், தீபசிகைவடிவம், மூங்கில் இலை வடிவம், இளம்பிறைவடிவம், சூலவடிவம் அரவத்தின் படக்குறி வடிவாதி பல வடிவங்கள் சொல்லப்பட்டனவுமன்றி கோபிசந்தனம் வெண்டிருமண் செஞ்சந்தனம் முதலிய பொருள்களும் விதிக்கப்பட்டன. பிராமணர் அரசர் முதலியவதிகாரிகள் வேற்றுமை அங்குள்ளதே. அப்பாஞ்சராத்திரவிதிகள் ஆதிகாலத்தில் வெகுவாய் அநுட்டானத்துக்கு வாராதிருந்து இற்றைக்குச் சில தினங்களுக்குமுன்னரே அநுட்டானத்துக்கு வந்தன. ஸ்ரீமந்நாதமுனிகள் திருவவதாரம் செய்த பிறகே வெண்டிருமண்காப்பு இத்தேசத்துட் பரவவாரம்பித்தது. உருண்டைவடிவமுதலிய கோபிசந்தனபுண்டரம் ஸ்ரீமதானந்ததீர்த்தமுனிவர் அவதாரத்திற்குப் பிறகே. செஞ்சந்தனத்தாலமைந்தது ஸ்ரீவல்லபாசாரியருக்குப்புறகே. இவர்களுக்குமுன் இவ்வித புண்டரங்கள் அநுட்டிக்கபட்டனவென்பதற்கு எந்தப்புராணமும் இதிகாசமும் பிரமாணமில்லை. கன்மங்கள் அறுவகை. அவையாவன: விதிக்கபட்டு அநுட்டிக்கப்பட்டன, விதிக்கப்பட்டும் விடப்பட்டன, விதிக்கப்படாது அநுட்டிக்கப்பட்டன, விலக்கப்படாது விடப்பட்டன, விலக்கப்பட்டும் கொள்ளப்பட்டன, விலக்கப்பட்டு விடப்பட்டன என்பன. இவைகட்கு முறையே உதாரணங்கள். 1. விதிக்கப்பட்டநுட்டிக்கப்பட்டன காலைக்கடன்முதலியன. 2. விதிக்கப்பட்டு விடப்பட்டன குழந்தை பிறந்து குழவிக்கும் தாய்க்கும் வபனமுதலியன. 3. விதிக்கப்படாது அநுட்டிக்கப்பட்டன வடதேசங்களில் நடக்கும் காமோத்ஸவ முதலியன. 4. விலக்கப்படாது விடப்பட்டன முன்னங்கிபருந்தல்முதலியன. 5. விலக்கப்பட்டும் அநுட்டிக்கப்பட்டன அம்மான் பெண்ணைமணத்தல்முதலியன. 6. விலக்கப்பட்டுவிடப்பட்டனறவிம்லைமுதலியன. இவற்றுள் இவ்வூர்த்துவபுண்டரம் இரண்டாம்வகுப்பைச் சேர்ந்தது. இது பல தர்மசாஸ்திரங்களிற் சொல்லப்பட்டதேயாயினும் அன்றோரிதை அநுட்டித்தாரில்லை. எந்த ரிஷி சரித்திரத்திலும் எந்தப்

[illegible]

புராணத்திலும் ஒருவர் இப்புண்டரக் தரித்ததாகப்புராணங்களில் இல்லை. இனி சாஸ்திரங்களில் அனேக கன்மங்கள் விதிக்கப்படுவதாய் ஒன்றுடனொன்று முரணுமிடம் எல்லாவற்றையும் ஒருவனே அனுட்டிக்கச்சாத்தியமில்லை. விதித்தவா கருத்து எதுதான் எனில், உலகம் இரமத்தில் பரிபாகபேதத்தால் இதையனுட்டிக்குமென்பதே. ஆதிகாலத்தவர் வைதிகாசதலாறும் பலபுராணங்களாற்றுதிக்கப்பட்டமையாலும் மூன்றென்றும் பரிசுத்த வெண்ணைலம்க்தமையாலும் பிறவாற்றாலும் திருநீற்றையணிந்திட்டார்கள். மேற்கூறிய ஊர்த்துவபுண்டரத்துக்குக் குங்குமம் நீர்முதலியவற்றைப் பொருளாகக் கொள்வதுண்டு. ஆயினும் அவைகள் தனிமையில் புண்டரமாகாது மற்றொரு புண்டரங்களுக்கங்கமாகவே நிற்றலால் அதை இங்கு விட்டோம். வெண்ணிறம் பொன்னிறம்பூண்ட திருமண்ணுல் புண்டரம் இடுவோர் நீறையும் செஞ்சந்தனப் புண்டரத்தவர் குங்குமத்தையும் உபயோகித்துவருகிறார்கள். ஆதலால் அவ்வித உபபுண்டரங்களைப்பற்றி இங்கு எழுத வேண்டியதவசியமில்லை. இங்கு காட்டிய பலவர்ணத்திருமண்காப்புகளும மக்களுக்கு மண்ணே முதற்காரணமென்றும் ஆதலாற்றான உயிர்க்கின்றார் என்றும், இனி மடித்தாலும் அதிலேதானே மடிந்திடுவார் என்றுங் குறித்தலால் அப்புண்டரம் எமக்குச் செய்யும் உபகாரம் அளவு கடந்தது. உலகத்திற்பிறக்கும் எவ்வுடலும், சாம்பலுமண்ணுமாய் மடிவதேயன்றி வேறுவழியிற் செல்லுவதில்லை. அவற்றுட்சாம்பலாய் மடியுந்தன்மையை முற்குறித்த குறியும், மண்ணாதலை யிக்குறியுங்குறிக்கிறதுண்மை. மண், மேலும உலககட்டைக்கொடுக்கும ஒருதொழிலதிகமாய்ப்பெற்றது. அதாவது மண் பாகம்பெறுமையின் அது சுப்பிருக்காதாரமாம். சாம்பல் இனிப் பெறவேண்டிய பாகமின்மையால் தன்னிலைமையை கடைநிலையாய்ப்பெற்றது. இனிமுன்னரேகிருதேலகுமிர்யமென்றேயெயல்லவா. மண்மிருதுவீர்யமாதலின அதைச்சூரியவில்லாச்சிதளகாலத்திலணிதக்பபனற்றதெனவும் அதிகவுஷ்ணகாலத்திலணிதல் விபரீதமெனவும்பலதாதுவர்க்கவாற்றல்பற்றிய சரிதக்குக்கும் இதனால் நிக்குண்டெனவும இவைகளைத் துணித்த பெரியோர் 'எண்ணெயிட்டாலும் கடலாடினும் பிற்பகலிலும் இரவிலும் சந்திகளிலும் கோபிசந்தனம் கூடாது' என்றாரேபாலும். முற்காலத்துச் சாம்பவர், கோஷ்டியிலிபக்புண்டிருத்தலைவன்றும், சேர்த்திவிளைமைப்பும் அதை ஒத்ததே என்றும் அறிந்திருந்தனர். ஊர்த்துவதிலை விரும்பும் வைணவர் ஊர்த்துவபுண்டரம் தரிப்பார். இவ்விஷயம் சாஸ்திரங்களிற் கண்டது. இப்புண்டரங்கள் சில ரோகங்களிலும சில பெரும்பாவ

[illegible]

[illegible]

[illegible]

ங்களிலும் பிராயச்சித்தமாயும் உபயோகப்படுகிறது. க்ஷய ரோகப் பிராயச்சித்தங்கூறியவிடம் ஆசிரியர் 'க்ஷயத்தால் வருந்தியவன் திருமண்ணை ஒருமாதம் தரித்தும் பிறகு சாந்திராயணவிரதமிருந்தும் கிலாத்தினதானமும் செய்தால் அது ஒழிந்துவிடும்' என்றுசொன்னர். அங்ஙனமே 'அபஸ்மாரரோகம் உள்ளவன் மகாபாதகங்களுள்ளான் இவர்கள் பன்னிரண்டுவருடம் திருநீற்றுப்பூசுதலுள்ள விரதம்நிறைவேற்றினல்அப்பாவங்கள்விலகப்பெறுவான்'என்றும் விதித்தார். இவ்விஷயத்தில் இதுபோன்ற பல வசனங்களுள. ஆயின் எக்கன்மங்கட்கும் இவ்வித புண்டரம் அங்கமே. இதைத்தரிப்பது அவரவர் குலாசாரத்துக்கேற்ப அவரவர் வழிபடுகடவுளுக்கேற்பத் தரிக்கவேண்டியது. இவ்விதப்புண்டரத்தைத் தரித்து உதயத்திற்கு முன்னுவது பின்னுவது அந்தந்த வருணங்களுக்கேற்பக் கடவுள் வழிபாடென்னுஞ்சந்தியையனுட்டிக்கவேண்டும். இச்சந்தியை என்னுங் கிரியை வெவ்வேறு பயனளிக்கத்தக்க வெவ்வேறங்கம் நிறைந்ததோர் பெருங்கிரியை. அதின்னே ஆசிரியசித்தாந்தமவ்வளவும் கட்டுப்பட்டது. அந்தை ஒன்றையனுசரித்தமையாற்றானே ஆரியர்க்குரிய எவ்வா சத்கருமங்களும் அனுட்டிப்பதால் ஆய பயன் முற்றிலும் இல்லாதொழியினும் ஏகதேசம் கைகூடும். அதை விட்டால் ஆரியத்துவந்தொலையும்என்பது உண்மை. அதனுற்றான் எம்மை வைதிகர் என வழங்குவது வைதிக தாந்திரிக தீக்ஷைகளைப் பெறுவதும் அதற்கெனவே கலிகாலத்தில் ஆரியர் செய்யவேண்டிய ஸர்வ சத்கருமங்களும் இஃதாகவே பொருந்தின. இதிற்றானே அவரவர் வழிபடும் கடவுளது சித்தாந்த ரகசியத்திருவுருவம் அடங்கியுளது. அஞ்ஞானவிருதத்தின் பாவநிவிர்த்தியதனுற்றான் என்பதாதி அதன்மகிமை அளவுகடந்தது. அவ்வனுட்டானம் ஒவ்வொரு வருணங்கட்கும் உள்ளதாயினும் செய்யும் முறையடியில் வேறுபடினும் அவற்றுள் ஆசமனம், பிராணயாமம், அர்க்கியம், மூலமந்திரஜபம் என்னும் நான்கு கிரியைகள் எல்லோரும் செய்தவாத்தக்கதும் செய்யவேண்டியதும்இச்சான்கங்களில்ஆசமனியத்தில்பிரயோஜனம் முன்னரே விரிக்கப்பட்டமையால் பிராணயாமம் முதலிய கன்மங்களின் பயனைப்பற்றியே இங்கு விரிப்பாம். இதைச் சந்தியாவந்தன வர்த்தமா விவகரிப்பார். மற்றவர் வேறுசொற்களால் சொல்வர். ஆயினும் ஆரியர் அனைவர்க்கும் இஃதின்றியமையாததே. இவ்விஷயத்தில் பிராமணராயின் உபநயனம் பெற்றிருக்கவேண்டும். வேறு வர்ணத்தராயில் அவ்வவ்வர்ணத்திற்குரிய தந்திர தீக்ஷையாவது பெற்றிருத்தல்வேண்டும். இனிப் பிராணயாமம் என்பது அற்பகாரியமல்ல. அது மிகவும் பெரித

[illegible]

இது எக்தத்தேசத்து பெத்தரும் அறியாத ஆரியகுலதனம் இதில் யோகநூலின் உண்மையடங்கியது. இனி ஸ்திரீகள் முதலிய மக்களுக்குப் பிராணாயாமம் இல்லையாயினும் அதனால் அடையவேண்டிய பயனை வேறுவழியில் அவர்கள் பெறுவதால் அது அவர்களுக்குத் தேவையில்லையென்க.

அதிகம்வரும்.

ஸம்ஸ்கிருதபாஷை.

கற்பசூத்திரங்கள்.

தொடர்ப்பு.

மேற்குறித்த சூத்திரங்களின் காலம் இஃதெனத்துணிதல் கூடாதாயினும் கூடியவரை காணலாம் என நமஸ்முயற்சித்தோம். பாருங்கள்! இதில் புகுந்தால் எவர் மனதும் ஒருவாறு மயங்கும். இங்குண்டாகும் மயக்கமறத் துணிந்தோதுவது அசாத்தியம் ஆயினும் ஒருவாறு செத்திப்பாம்.

"ஸ்ரீகீதாசாஸ்திரத்தில் விசுவரூபம்முதலிய பலயோகங்கடங்கிய யோகசாஸ்திரத்தைக் கண்ணன் சூரியனுக்குபதேசித்ததாகச்சொல்ல, அர்ச்சுனன் மேற்றுப்பிறந்த நீவிர் எவ்விதம் சூரியனுக்குபதேசித்தீர் எனவினவ, யான் அநேகஜன்மமெடுத்தேனுதலால் அவைகளை முறையே அறிவேன்" என்று விடையளிக்கப்பட்டது. பிறகு விபூதியத்தியாயத்தில் "மாஸங்களின் மார்கழிமாதம்" என்ற சொல் ஒன்றுண்டு. இதனுல் கீதைமுதலில் வெளிவந்த காலம் அநேகவாயிர வருடங் கண்டதாய் வடநாட்டுக் கணித பண்டிதர் ஒருவர் சொல்லுகிறார். அவர் சொல்லும்வழி ஆதியில் வருஷத்தொடக்கம் மார்கழிமாசத்திருந்தது. அது வருஷத்துக்கு ஒரு விகலைவிதம் கணக்கில் ஏறிவர இப்பொழுது சித்திரைக்குவந்தது. வருஷம் ஒரு விகலையாக மூன்றுமாசங்கள் ஆகவேண்டுமானுல்காலத்தை அளந்துபார்க்க(19440000) வருஷங்கள் ஆகிறது. இதற்கு வேறுகாரணமும் உண்டு. எங்ஙனம் எனில், வடமொழியில் மார்கழி மாதத்திற்கு அக்கிரகாயணம் என்று பெயர். அதாவது வருடத்திற்கு முதல்மாசம் என்பது பொருள் (அக்ரம்-முதல், ஹாயனம்-வருடம்) ஆயின் வடமொழி வழக்குத் தொடர்ந்த தேதிமுதல் இவ்வழக்குள்ளதாக ஏற்படுகிறது. இதனுடம் வருஷத்திற்கு ஒருக்கால் மார்கழி மாசமாய் இருந்ததாக நிச்சயிக்கப்படுகிறது. இப்பொழுது சித்திரைமாதமாகவிருத்தலால் சம்பவிக்கக்கூடியவித்தியாசத்தில் நான்

Koviloor Digital Library

[illegible]

மிஷொருபங்கு கடக்கலாகக் கணக்கிட்டிருப்பாம். ஆயின் நடக்கு மன்வந்தரத்தில் ஈன்கிலொருபங்கு கூடுபொழுது முடிந்திருக்குமேயாகுல் அது எத்தனையோ வருடங்களா கின்றன. அத்தனை வருடங்களுக்கு மேற் சூத்ராசங்கிர முண்டானதாக ஏற்படுகின்றது. அந்த கண்டதுபோல ஸ்ரீமத் ஹிரண்யகேசிய மகரிஷி செய்திய சூத்திரத்தினும் வருஷமுதலில் செய்யவேண்டிய பௌர்ணிமை மார்கழிமாதத்தில் செய்யக் குறிப்பிடப்பட்டது. இதனை உத் துரோக்கில் கேதையைப்போல இதுவும் அநாதிகாலத்தைத் தோன்றியதாகப் புலப்படுகிறது. மேற்கண்ட ஹிரண்ய கேசியென்னும் சத்தியாஷாடமகரிஷியும ஆபஸ்தம்பமக ரிஷியும் ஒரேகாலத்திலிருந்தவர்களென்பதாயிட்டுக் அவ் விருவர்கள் சூத்திரங்களால் வெளியாகின்றது ஆபஸ்தம் பமுனிவரியற்றிய சூத்திரத்தில் “ஹிரண்யகேசியர் இவ் வாறு கூறுவர்” என்றும் ‘இவ்வணம் சத்தியாஷாடர் கூற்’ றென்றும சிலவிடத்துச் சத்தியாஷாடமகரிஷியினது பெ யரை எடுத்தோதுவதும் ஹிரண்யகேசிய மதியத்தில் வேதோத்தரக்கப் பிரகரணத்தில் சூத்திரகாரரென ஆப ஸ்தம்ப மகரிஷியைக்குறித்ததும் மேற்கண்ட விஷயத்தி ற்குப் போதிய சான்றாகும். ஆபஸ்தம்பர் தாமெழுதிய சூத்திரத்தில் ஸ்ரீபோதாயன சத்தியாஷாட மகரிஷிகளி ன பெயர்களைச் சிலவிடங்களிற் குறித்தாரேயன்றி மற் றையவிடங்களிற் குறிக்கப்படவில்லை. இனி போதாயன பகவானைத் தமது ஸூத்திர ப்ரம்மயக்ஞபத்தில் போ தாயன சத்தியாஷாட ஆபஸ்தம்ப யாக்ஞியவல்கியர்களுக் குத் தர்ப்பணம் விதித்திருக்கின்றார். தத்தஞ்சூத்திரங் களில் தநதமக்குத் தர்ப்பணம் விதித்திருப்பது உசிதமே யாயினும் யாக்ஞியவல்கியர் பெயர் அதற்காகக்குறிப்பிடப் படவில்லை என்பதுநிண்மை. இனி யாக்ஞியவல்கியரிஷி யின் பெயரை எடுத்தமையால் அச்சூத்திரம் சுமார்5000 வருடங்களுக்கு உட்பட்டே உண்டாயிருக்கவேண்டுமெ ன்று வெளிப்படுகிறது. யாக்ஞியவல்கியர் பிறக்குங்கால த்தில் மகாநக்ஷத்திரத்திரத்தில் சப்தரிஷிமண்டலமிருந்த தென வெளியாவதால் அதுகொண்டு கணக்கிட்டால் இது வரை சுமார் 5000 வருடங்களுக்குமேற்படுகின்றது. அம் மகரிஷிக்குப்பிறகு செய்யப்பட்ட இச்சூத்திரம் 5000 வருடங்களைக் கண்டிருக்கலாமேயன்றி அதற்குமேல்இரு க்திருக்கமுடியாது. இங்கு குறித்த யாக்ஞியவல்கியர் வே றெவரெனில் அதுவும் பொருந்தாது. ஏனெனில்? வாஜஸ னேயர் என்னும சிறந்த பெயர் அவ்விருவிடங்களிலும் அடையாய் ஒலித்தலாலென்க. இதனால் சூத்திரங்கள் சமீபகாலத்தில் தோன்றியதெனப் புலப்படுகிறது. தர்ம சாஸ்திரங்களில் தன் சிரேயத்திற்கண்டதைச்செய்யவே

[illegible]

ண்டுமெனப் பற்பலவிடங்களிற்காண்டலால் அந்நூல்களு க்குமுன் மெய்யசூத்திரம் இருந்ததாகத் தெரியவருகிறது. இவ்விதக் குளறுபாடயில் எமக்குத்தோன்றும் அபிப்பிராயம்: கற்பசூத்திரங்கள் வேதாங்கங்களாவதுபற்றி வியாகரணம் பதினான்குசூத்திரங்களி லடங்கியதுபோல் ஆதியில் சூக்ஷ்மமாயிருந்து ஆரணங்களை முற்றுமறிந்து அக்காலத்து அந்தணர்களுக்குப் பயன்கொடுக்கக்கூடியதாயிற்றென்றும், அச்சூத்திரங்களை அக்காலத்தில் விரித்துரைத்தவர்கள் ஆபஸ்தம்பமகரிஷி என்றும் அவர்கள் சூத்திரத்திற் குறிப்பிடப்பட்ட யாக்ஞவல்கியரென்பவர் சுக்லயஜுர்வேத வோர் சாகைக்குரியவரென்றும், அவரே மற்றொருகாலத்தில் யோகபலத்தால் ஜீவித்து லோபமடைந்த சுக்லயஜுர்வேதத்தை மீண்டும் பரவச்செய்தாரென்றும் பொருந்தும். அவ்விதங் கூறுவதே உசிதம். கிருஷ்ணவம்சத்தவரும் குருவம்சத்தவரும் சூரியவம்சத்திலுதித்தஸ்ரீஇராமசந்திரன்முதலிய அரசர்களும்ஸ்ரீஇராமதாஸ் கொமணியாய அநுமானும் சுக்லயஜுர்வேதியென வெளியாகின்றது. திரேதாயுகத்திலவதரித்த ஸ்ரீஇராமசந்திரமூர்த்தியே சுக்லயஜுர்வேதத்தையநுட்டித்தாரெனின், அவ்வேதத்தின் சாகைகளைக் கண்டவர்களாகிய கண்வர், யாக்ஞவல்கியர், மத்தியந்தினர், (வியாக்ரபாதமகரிஷியின் பிதா] இவர்களை இக்காலத்தவரெனக்கூறலெவ்விதம் பொருந்தும்? வைசம்பாயனமுனிவரிடம யாக்ஞவல்கியர் படித்ததாகவும், அங்கு அவர்க்கொரு சாபங்கிடைத்ததாகவும் தற்காலத்தவர் சொல்லும் ஓர் கதை அவ்வேதத்துவேஷத்தாற் கற்பிக்கப்பட்டதேயன்றி வேறொன்றுமில்லை. சூத்திரங்களை இயற்றிய போதாயனர், பாரத்துவாஜர், காத்தியாயனர், ஆபஸ்தம்பர் ஆகிய இவர்கள் தர்மசாஸ்திரங்களையும செய்தருளினார்கள். ஆதலால் தர்மசாஸ்திரங்களைப்போல இக்கற்பசூத்திரங்களும் அநாதிகளெனப் பெறப்பட்டது. அவைகளால் எமக்குண்டாகும் பயன்களாவன:—வேதங்களில் ஆங்காங்கு பற்பல கன்மங்கள் விதிக்கப்படுகின்றன. ஒருவன் அவ்வேதங்களைக்கொண்டே முற்றிலும் எல்லாவிஷயங்களையுமறிவது கஷ்டம். அக்கன்மவழிகளைச் சுருக்கிக்காட்டியமைந்துள்ள சூத்திரங்கள் ஒவ்வொருவரையும் சன்வழியில் நடாத்தி இருமைப் பயனையும் பெறச்செய்யும். வேதங்களுள் கன்மமோரிடம், அதன்காலமோரிடம், அதன் பயன் ஓரிடம் அதன் முறையோரிடமெனக் காணப்படுமாதலால், அவைகளைஒருங்குசேர்த்து மீமாஞ்சாவிதிகளால்அதனுட்கருத்தையறிந்து ஒவ்வொருவரும் நடக்க வியலாது. இக்கிரியைகளை அவாவும். இதில் ஸ்ரௌதமென்றும் ஸ்மார்த்தமென்றும இருபகுதிகளுண்டு. அவற்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

துன் ச்ரௌதமென்பது வேதங்களெடுத்து விதித்தோதிய யாகங்கள் முதலிய நற்கருமங்களை நடாத்தும் வழிகூறி நிற்பது. ஸ்மார்த்தமென்பது அவ்வவ்வருணங்களுக்குரிய உபநயனமுதலிய கிரியைகளைக் கூறுவதுமன்றி வேதங்களில் குறிப்பாகவமைந்த பல கருமங்களையும் காட்டும். இவற்றுள் ச்ரௌதம் பெரியது. ஸ்மார்த்தம் சிறியது. யோகிகள் ஸாலம்பயோகத்தைக் கைக்கொண்டு நிராலம்பத்தைப் பெறுவதோர் ஸ்மார்த்தாநுஷ்டானத்தைக் கொண்டே ச்ரௌதாநுஷ்டானத்திலதிகாரங்கிடைக்கும். ஸ்மார்த்த கர்மத்தையநுஷ்டித்தால் சுவர்க்க மோக்ஷங்களைக் கைக்கூடச்செய்யும். யாகாதி ஏற்கிரியைகளிலும் அதிகாரமுண்டாம். "அந்தணர் வேதம், யக்ஞம், தானம், தபம், உபவாசம் இவைகளால் பரம்பொருளையறிய விரும்புவாரென விருத்தலால், எக்கன்மங்களும் இக்கிரமமில்லாது கைகூடாதெனக் கண்டு கொள்க. யஜுர்வேதத்தைச் சார்ந்த ஸூத்திரங்களெல்லாம் யாகத்தில் அத்துவர்யுபாகத்தைக் குறிக்கும். ஆசுவலாயன ரெழுதிய ஸூத்திரம் ஹோதாவின் தொழிலைக் குறிக்கும். திராஹ்யாயனருடைய ஸூத்ரகாத்திரத்தை மிகவிரித்துச்சொல்லும். அதர்வணவேதத்தைச் சார்ந்த ஸூத்திரங்கள் சாந்திகளை விசேஷமாகக் குறிக்கும். ஒவ்வொரு பிராமணர்கள் செய்யவேண்டிய சகல கிரியைகளும் இக்கல்பஸூத்திரங்களுக்குள் தான் அடங்கியிருக்கின்றன. "ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்களை அந்தணன் படிப்பான்" எனவிதி காண்டலால் இவைகளைப்படித்தறிதல் அந்தணர்களுக்குக் கடமை. இச்ஸூத்திரங்களிலொன்றாய போதாயன ஸூத்திரம் தேர்த்தச்சன் [இரதகாரசன்]எனவோர் ஜாதியார்க்குபநயனத்தை விதிக்கின்றது. அச்சாதியார் இக்காலத்தவரென வரையறுக்கப்பட்டாரிலர். தச்சன் கருமான் முதலிய தற்காலத்தவர் பதிஷ்கிருத ஸூத்திரர்களென ஆசிரியர் பதஞ்சலியார் "[illegible]" என்றற்றொடக்கத்தின் ஸூத்திரத்தில் விசாரித்தெழுதியிருக்கின்றார்.

மற்றது வரும்.

குருசிஷ்யன்மாருபாடு.

ஐய, இக்கலிவிலாசத்தின் பெருமையைச் சிறிது கேண்மின்! இச்சமயம் குருசிஷ்யக்கிரமம் வேருடனழிந்தது. முற்காலத்திய ஆசாரியர்கள் பணத்தில் பேரவா இல்லாதவர்கள் அக்காலத்தில் எவரேனும் சிறிது உபகாரத்திரவியம் பெற்று வேதசாஸ்திரங்களைக் கற்பிப்ப

[illegible]

னேல் அவரை பிருதகாத்தியாபகரென எவரும் பரிகசிப்பர். முற்காலத்தில் வேதாத்தியயனஞ்செய்யுமாணுக்கர்கள் அந்தியத்தில் குருவுக்கு ஏதேனும் ஓர் தக்ஷிணை கொடுப்பது வழக்கமுண்டு. சிடர்களிடம் குருமார்கள் எவ்விதப்பிரயோஜனத்தையும் எதிர்நோக்காது கிருபையால் மாத்திரம் படிப்பிக்கும் விஷயத்தை எற்றுக்கொள்வதால் அவரது தயையைப் பெறவேண்டிச் சிடர்கள் அவர்களிடம் வணக்கத்துடன் அவரிட்டதொண்டு புரிந்து அவர் ஆணையைக் கனவிலுமீறாது நடப்பர். அங்ஙனமாயின் "தேவனிடத்தும் ஆசாரியனிடத்தும் போன்புள்ளோர்க்கும் எல்லாப்பொருள்களும் தாமே உண்டாகும்" என வேதமிட்ட கட்டளையின்படி அவர்கள் நல்லறிவு பெற்றே வாழ்ந்தனர்கள். அக்காலத்திய கல்வி அவரவர் ஆவி உடல் விட்டு நீங்குமளவும் ஓரே நிலைமையில் நிற்பதே யன்றி மாறுபடாது. அக்காலத்துக்குருக்களுக்குச் சிடர் ஏதும் கொடுக்குந்தன்மையைப் பெற்றிலாதலால அவர்களிடத்தில் சுவதந்திரமதிகமுண்டு. குருக்கள் தங்கள் சிடர்களை அடித்தும் அதட்டியும் பலவாறு கண்டித்து நல்வழியிலேயே நடாத்துவார்கள். சிடர்களும் குருக்களிடமுள்ள பயத்தால எவ்விதாசாரங்களையும் வழுவாது நடாத்தி வந்தனர். அவர்கள் அதனுண்மையை யறியாமலநுஷ்டித்த போதிலும் அக்னி என்று அறிந்தும் அறியாமலும் அதைத்தொட்ட இருவர்களையும் அது சுடுவதுபோல அவர்கள் எவ்விதம் நடந்துவந்தாலும் அக்கன்மங்கள் நற்பயனைக் கொடுத்து வந்தன. அதனுலவர்களுக்கு நல்லறிவும் விருத்தி பெற்றது, சரீரமும் ஆரோக்கியமடைந்தது. அவர்கள் எவ்வளவு கல்விப்பயிற்சியில் முதிர்ந்தவராயினும் அவ்வித்தியாவிருதத்தை முறையுடன் முடிக்காது விவாகஞ்செய்துகொள்ள மாட்டார்கள். அவர்கள் வேதவிரதங்களை முடித்து முப்பது வயதிற்கு மேற்படுத்தான் விவாகஞ்செய்துகொள்வார்கள். 30 வயதுள்ள பிள்ளைக்கு 12 வயதுள்ளபெண்ணை விவாகம் பண்ணவேண்டும் என்ற மனுவின் திருவாக்கு அவர்களிடம் தான் பயன்பெற்றது. அவர்களுடைய குழந்தைகளும் திடகாத்திரமாகவேயிருக்க நேர்ந்தது. அவர்களை மணஞ்செய்துகொள்ளும் சிறுபெண்களுக்கும் அவரிடம் கௌரவபுத்தியும்பதிவிருதாசாரமுமிருந்தது. இல்லறத்திருள்ளவர்க்கு இலவசத்தில பணிவிடைசெய்யுஞ் சிடர்களும் தமது நோக்கமறிந்து நடக்கும் இல்லாளுமிருப்பின் அதற்கு மேற்பட்ட சுகம் எத்துளது? ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நியமமிருந்தமையால் படிப்பின் பூர்த்தியும் பிக்ஷாபோஜனமுதலிய சௌகரியமிருந்தமையால் அன்னவிசாரமின்

[illegible]

ளையும், விவாகமின்மையால் குடும்பக் கவலையின்மை
யும், படிப்பவர்களுக்குப் படிப்பைப் பரவச்செய்யும் சத்
கருவிகளாகவமைந்தன. இவர்கள் உடைந்த ஆண்பெண்
வழக்கமுடியாதுபடித்து வந்தமையால் அவர் மனம் நிர்
கல்மஷமாய் அக்கல்வியைப் பயிற்சிப்பதிலேயே தோய்ந்து நின்
றது. இவர்கள் ஆச்சிரமங்களில் வாசஞ் செய்தவர்களா
தலால், இளம்பருவப்பெண்களையே கண்டறியார். "குரு
வின் பத்தினி இளம்பருவம்பெற்றவளாயின் அவளை வந்
தன வழிபாடு செய்யக் கூடாதென தருமசாஸ்திரவசன
மிருந்ததால் அவர்களிடத்தும் இவர்கள் பழக்கம் ஒன்று
மில்லை. மேற்கூறியபடிபார்த்த பற்பல ஏதுக்களால் சரீர
பலம் புத்திபலம் இவைகள் கிடைத்தபொழுது வேறுவே
ண்டியது ஒன்றுமில்லை. ஆயின முற்காலத்தில் சற்கும
க்களில் சிரத்தையும் கல்லாசிரியன்மாட்டு அதிக பக்தியும்
சற்சக்திகளும் சரீரசுகமும் பெரியோரிடம் சிரத்தையும்
கல்லறங்களும் எங்கும் நிறைந்த சத்தியமும் இதரரிடம்
தயையும் அகப்புறக்கருவிகளடக்கமும் ஓங்கிவளர்ந்தது.
இக்காலம் குருசிஷ்யபாவம் புரண்டுபோக, அவைகளும்
வேருடன் மாறின. இக்காலத்தவர் வேதங்கள் முதலிய
சத்வித்யைகளிற் சற்றும் பயிலும் முயற்சியற்றவராயிருப்
பினும் அவர்கள் பயிலும் வித்தையிலாவது குருபக்தியுண்
டோவென விசாரிப்பின், அவ்விஷயமுற்றிலும் சூன்னிய
மாகவேயிருக்கிறது. முற்காலம், படிக்கக்குருக்களிடம்
சிடர் செல்வது வழக்கம், இக்காலத்திலோ சிடர்களைப்
படிப்பிக்கக் குருக்கள் வலிந்துபோவது வழக்கமாயிருக்கி
றது. குருக்கள்வீட்டைச் சிடர் காத்துக்கொண்டிருப்ப
தற்கு மாறாகச் சிடர்கள் வீட்டைக் குருக்கள் காக்கவே
ண்டி நேர்ந்தது. இக்குருமார் வாசற்காப்போனிடம்
விடைபெற்று உட்புகுந்து வெகு அச்சத்துடன் படிப்பி
த்து வெளிப்புறப்பட்டால் அன்றைய ஆபத்து நீங்கியதா
கவெண்ணவேண்டியிருக்கிறது. குருமார் வருவதற்குச்
சிறிது நேரஞ்சென்றால் சிடர் அதட்டுவது மிகக்கடுமை
யாயிருக்கும். ஆரோக்கியக் குறைவானால் அவகாசம்
கேட்டுக்கொள்ள நிருபமனுப்பவேண்டும். இத்தகைய
துரவஸ்தையும் இக்காலத்துக் குருமார்க்கு மிகமிஞ்சின
பொருளாசையால் நேர்ந்தது. இவ்வளவு பயபக்தி அடக்
கத்துடன் உபாசிக்கும் வித்தையும் சிடர்களுடைய
மனதில் அடங்கப்படாமல் மறைந்துவிடுகிறது. குருக்க
ளோ சிடர்களைப் பழிக்கக்கூடாது. அவர்களுக்குத் தண்
டனைவிதிக்கும் அதிகாரமேயன்றி வேறில்லை. குருவு
க்குக்கிடைப்பது அர்த்தம். சிடருக்குக்கிடைப்பது அனர்
த்தம். குருக்களிடம் சிடர்களுக்குச் சிரத்தையில்லையா
னால் அவர்களுக்குக் கிடைக்கும் வித்தையும் கைகூடக்

Koviloor Digital Library

[illegible]

தான். இந்த சிஷ்யவியாபாரத்தில் குருவென்பவர் இடன் எய்தி வந்து கற்பிப்பதில்லை. இது பெரியவர்வேலை. இங்கு குருமார் வேலைக்காரர், சிஷ்யர் எஜமானர். அவர்கொடுப்பது கூலி. முற்கூறிய சிஷ்யவிடம் வித்தைக்குவினோதமான விஷயமனைவையிலுமென்றேமோ, அவையெல்லாம் இக் காலத்துச் சிஷ்யர்களுக்குண்டு. முற்காலத்துக் குருவுக்கும் இக்காலத்துக்குருவுக்கும் எவ்வளவோ வித்தியாசம். இதை. மடாதிபதிகளிடத்தும் இவ்விதமே குருசிஷ்ய பாவமடைந்ததைப்பற்றி எமதானம் ஆராய்ந்துபார்வையி றது. இவ்விஷயத்தை விரிதுச் சொலலின் மற்றவரதி க்கு பரிகலிப்பாரென மனதிற்குப் புலப்படினும் இதனை எடுத்துக்காட்டாவிடில் அது மாறுபாடு அடையாதென றெண்ணி எப்பத்திராதிபரும் இதனை எடுத்து ஆங்காங்கு வெளியிட்டுவருகின்றார்கள். இனி இவ்விதம் அடிக்கடிவிடா முயற்சியுடன் அங்கதிகளை வெளியிட்டே வந்தால் எக்கா லத்திலாவது மடாதிபதிகள் அவைகளைக் கண்ணுற்றுத் திருத்திக்கொள்ளச் சித்தமாவார் என்பது எமது கருத்து. இக்காலத்தில் ஒவ்வொரு மடங்களிலும் குழந்தைப் பருவம் அல்லது இளம்பருவமுள்ள குழந்தைகளை பட்டத் திலமைக்கப்படுகின்றனர். இவர்கள் செய்துகொண்ட சந்நியாசமாவது சத்தியமோ! இல்லை! இல்லை! இவர் எப் பொருளுணர்வறைமையாலே அவற்றைத் துறந்தார். இவர் "ஸந்நியாசம்" என்கிற சப்தமாத்திரத்தையாவது உச்சரிப் பார்களா? உச்சரிப்பினும் அதற்குப்பொருள் இன்னதெ ன்றறிவாரா? இவர் குலமுதலிய செருக்கை? இவர் அவற்றின் குற்றங்கண்டறிவதெவ்விதம்? அதை ஒழித்து விட்டாரா! இவர் கருப்பமடையிருந்த உலகத்துறந்த காமக்ரோதமுனிவரைப்போலவா! இனிப் பாலரைத் தங்காமுமடைவிக்க அப்பக்குவப் பராமன் ஏதவியாராதிரு முடிப்பாலமுந்த அன்றே வேதாகம மெய்ப்பொருளு ணர்த்த சமயபத்தாரதவன்னலேப்ப விவரும் இளமையிற்று மிளை இறையவருள் பெற்றனரோ! அவதி உபமன்னியு மாமுனிவர், ஹரதத்தாசாரியசுவாமிகள், துருவன், பிர கலாதன் முதலிய தவச்செல்வரைப்போல் இவரும் குழந் தைகள் இருந்தனரா! மடாதிபதிப்பால, பிறந்தபருவத்தி லேயே இவரும் திருமாலருள் நிறைபப்பெற்றனரோ! அந் தோ! விபரீதம்! இவருக்குப் போதித்தவர்களிடமும் அவ் வளவாம்! இவர்கள் ...வருவதெக்காலம்? இவ ர் ...த்த சந்நியாசம் காஷாயமோ, தண்டமோ, கமண்டல மோ, ருத்திராக்ஷமோ, ஜடையோ, குடுமியோ, சிக்கமோ, முத்த ண்டமோ, ... இவையெல்லாம் சந்நியாச ... இனிச்சந்நியாச மென்பது பெண் ஞாசை பொருளாசை மண்ணாசைகளை ஒழித்திடலல்ல

Koviloor Digital Library

[illegible]

கார்! இவ்வுண்மை சந்நியாசம் வேதாகமவிசார நூலினருக்கு ஒருசமயமும் போதா. மூன்றுவர்ணத்தவரான வர்ணங்களில் ஒருவருக்குச் சந்நியாசம் பெறுவர் கொடுத்தல் கூடாது. அவனவன் விசாரணையால் பொருளுண்மையறிந்து அவற்றை பொழிந்திடவேண்டும். ஒருவன் சந்நியாசி வேஷம் பூண்டதால் சந்நியாசியாவதில்லை "பிரேஷமட்டில் உச்சரித்தால் அவன் பிராமணனாவான்" என்பதால் அம்மந்திரத்தையாவது புத்திபூர்வமாய் உச்சரிக்கவேண்டுமல்லவா? அப்படிச் செய்யாது இவர் சந்நியாசியாவதெப்படி! வேறு வர்ணங்களில் ஆசாரியன்செய்யும் சம்ஸ்காரத்தால்மட்டில் ஒருவன் ஆசிரியன் ஆவனேயன்றி வேறு தானே யாசாரியனாகவேண்டிச் செய்துகொள்ள வேண்டியதொரு ஸம்ஸ்காரம் யாதுமில்லை. அங்கு கடவுளுக்கு வேலை ஏதுமில்லை. கடவுள் பரிபாகத்தைப் பரீக்ஷித்தும்பாகம்குருவின் சிரமேற்கொண்டதேயன்றிவேறு சம்பந்தமில்லை. குருவே கடவுளது மூலமலபாகத்தை பரீக்ஷித்து அதற்கேற்ப அவர்க்குத் தீக்ஷைகளை (வேதாமிலணி மிலாகமிலணிகளில் எதற்கவனுரியவன் என்று சோதித்துப் பெண்ணுக்கு வகுத்துகப் பகுபாடறிந்து) செய்விக்கவேண்டும். அந்தணர் சந்நியாசிகளது தன்கிரியையால்; மற்றவர் ஆசிரியர் ஆவது ஆசிரியன் கிரியையால். இக்காலத்து சந்நியாசிகளும் ஆசாரியர்களுக்குமட்டிலுமல்லாமலும் அவர்களைமுந்த கடர்கதியாது? அவர்க்குத்தான விதிப்படி ஆசாரியத்துவம் ஏது? எவராயினும் குழந்தைகளைப் பட்டங்கட்டிவைத்தால் அக்குழந்தைகள் பரித்திடலுரின துக்காலம் அது மற்றவர்க்கு என்ன உபதேசஞ் செய்யும்? இப்பொழுது நடக்கும் விதியெல்லாம் அவலமாயிற்று! பாருங்கள்! சுக்கிராசாரியர் கொண்ட அறமறத்தை யாமும் அனுட்டிக்கின்றோம்" என விளையாமம்வைத்து செருக்குபெயர்கள் பெரிய கொள்கைத்தக்காராகின்றார்கள். பாருங்கள்! ஆசிரமங்களில் பலவித தீக்ஷைகள் விதிக்கப்பட்டன. அவ்வித தீக்ஷைகள் ஆருறு ஆசிரமங்களை மறுக்கவில்லை. தீக்ஷாமுறையில இன்னவர் சந்நியாசத்தை ஏற்கிறப்பது தீக்ஷை என எங்கும் வசனமுமில்லை; அனுஷ்டானமுமில்லை. ஒருவன் பிரமசாரி தீக்ஷைபெற்றதனால் கிரகஸ்தனாவான். கிரகஸ்தன் தீக்ஷைபெற்றதனால் அவன் சந்நியாசியாய் விடுவதில்லை. மேற்கண்ட தீக்ஷைகளைப்பெற்ற ஆத்மசைவர்கள்தாமுதலியோருக்கு அந்நிலைக்கு, ஸ்ரீபாதாபலமுனிவர், ஸ்ரீமத் அகோர சிவாசாரியார் இவர்கள் உரைத்தபடியே நடக்கிறது. மேற்கண்ட சம்ஸ்கார விசேஷங்களில் எங்கும் வர்ணாசிரமங்களைத் தீக்ஷை ஒழிக்கும் என்றுவது அத்தீக்ஷைபெற்றவன் வரு

[illegible]

ஞாபிரமப்பாவன் இருக்கக்கூடாதென்றுவது சொல்லவில்லை. நிலைபெற்ற ஆசாரியாபிஷேகாசாரியருக்கெல்லாம் தண்டம்ம விதிக்கப்பட்டது. இனிப் பிராமணருள் ஆக்கிரவருணத்தவர்க்குள்ள பிராயசித்து விதிக்கப்பட்டதாப்போல் தண்டகமண்டல காஷாய ஜடாமுடிக சிகைகள் இவர்களும் விதிக்கப்பட்டமையால் இவருக்குச் சந்நியாசம் இதனுல் எவ்விதஞ்சித்திக்கும். ஞாதிகள் ஜனன மரண ஆசௌசம் ஏங்கோடிமே? தகப்பன் முதலிய எவரும தனமே வணங்குவது எவ்வளவுசிதம்? இறைவனருளிய இருபத்தெட்டு ஆகமங்களிலும நிலைபெற்றவர்க்கு ஆசௌசமில்லை எனறும், நிலைபெற்றவனைத் தகனஞ்செய்யக்கூடாதென்றும சொல்லப்படவேயில்லை. இக்காலத்துள்ளார் செய்யும விளுட்டம்பாமே இது. இவர்கள் ஏதேதோ விதிக்கு மாறுகச்செய்துவருகிறார்கள். இவர்களுக்கும் நிலையிலும் கிரகஸ்தருக்குச்செய்யும் நிலையிலும் வேற்றுமை ஏது? இவர் பிரேஷமந்திரத்தை உச்சரிக்கவில்லையா? ஆத்மசிராத்தஞ்செய்துகொள்வாரா? அக்கினித்தியாகஞ்செய்வாரா? பிராயச்சித்தஞ் செய்துகொள்வாரா? ஏதுமில்லையே! இனி இவைகளைச்செய்து சந்நியாசம் கொள்ளவும் ஆகமங்களுள் விதிகளில்லை. அவ்விதமிருப்பின் தயைசெய்து எந்தவாகமத்தில் இருக்கிறதென்பதைத் தெரிவிக்க மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். மேலும ஒருமுறை நிலைபெற்றவரே காஷாயம கட்டினுல் மறுத்து நிலைபெறுகின்றார். ஒவ்வொரு சம்ஸ்காரமும் மறுத்துச்செய்வது பிராயச்சித்தமாக நடத்தும் வழக்கு வைதிகர்களினுண்டேயன்றிக்காரமின்றி சம்ஸ்காரம் இரட்டிக்காது. மேலும் சிலர் இயற்கையில் ஒருமுறைசம்ஸ்காரம்பெற்றுமறுத்துக்காஷாயங்கட்டிப் பிறகு ஓர் சம்ஸ்காரம்பெற்று அதையுமறுத்து ஓர் இடத்தைச்சார்ந்து மீண்டும் ஓர் சமஸ்காரத்தையும்பெறுவார். [ஒருமுறை சிரோநிலை, அதைத்தள்ளி வேறு ஞானநிலை] இவ்விதம் பலதடவை ஒருவருக்குச் சம்ஸ்காரத்தைப் பிரமாணமின்றி அதிவிர்ப்பிராந்த மடபதிகளே செய்தால் யாரவர் செய்பத்தடையென்னே? முதலில் சிவசின்னமாகத் தாங்கிய திருஜடாமுடியை மழுங்கச் சிரைத்துப் பின்பும் அவர் சிவாகமவிதிமுறையாது நடப்பவர்போல் அபிநயிக்கக்காண்கிறோம். இவர் சௌகரியத்துக்காக அக்ஞானத்தைச்செய்தேனென்பாரேல் இவரை சாந்தி ட்சேந்தும் சிவபிரானுவமானம் செய்தகென்றும வேதாகம விசுவாசமிலாச்சுயவப்போலியென்றுஞ்சொல்ல அதிஞான சிவாகமவிசுவாசிகள் பின்னிடுவரோ?

இன்னும்வரும்.

Koviloor Digital Library

ஓ॥

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

சு- புத்தகம்.] சிதம்பரம்: நந்தனவரு வையாசிமீ கடஉ [இலக்கம் - எ

ஞானாமிர்தக் கடிதமறுப்பு.

புதிய ஞானாமிர்தம் மூன்றாமிலக்கத்தின் கடிதக் கலத்தில் நமது நண்பர் ஸ்ரீமான் வித்துவான் சித்தாந்தக்காட்டு ஸ்ரீசிவாலாசாரியார் அவர்கள் எழுதிய கடிதத்தைக் கண்டேவித்தோம். அவர்கள் எழுதிய கடிதத்தில் அனேக விஷயங்கள் உள்ளனவாதலால் அவைகளை விளக்கி அவற்றில் எமக்குத் தோன்றுமாசங்கைகட்கு அவ்வித நல்ல வித்துவான்களைக் கொண்டே விடை எதிர்பார்த்தல் உசிதமாதலின் இதனை இங்கு எழுதுகின்றோம்.

அவர் "சங்கராசாரியர் ஜகத்குருவென்பதை மறுத்தவோர் உபந்நியாஸம்" என நீண்டநாமஞ்சாத்தி ஓர் பெரிய விஷயம் எழுதியதனும் அந்த ஞானாமிர்தத்தின் திருமேனியில் மூன்றில் ஒன்றைத்தகமர்ந்தார். இவ்வித்துவான் ஆரிய திராவிடங்களில் மிக சற்பயிற்சி பெற்றவருமன்றி பரிகாச விகடசாஸ்திரங்களிலும் இவர்க்கிணை எவருமில்லை. அதுகொண்டே மேற்கண்ட நீண்ட நாமக் கடிதத்தில் நமதாசாரியார் பரிகாச விகடாஸ்திரங்களால் ஓர் பெரும் சாக்கடு கட்டி வைத்திருக்கிறார். இனி இச்சாக்கட்டை உண்மை வாய்ந்த நன்மொழிகளால் ஒருவாறு துளைத்துள்நுழைந்து மெல்லமெல்லவிஷயங்களைக்கண்டு அவைகளுக்கு விடைகளையும் எமது அறிவுக்கெட்டியவரையில் ஈண்டெடுத்துதவிப்பாம்.

ஆசாரியார் அவர்கள் தொடக்கத்தில் ஏதோ இவ்விஷயத்தில் ஞானாமிர்த பத்திராதிபரே விடையளித்து விட்டதாகவும் தமக்கு அதுவிஷயத்தில் ஏதும் ஆக்ஷேபமில்லை என்றும் ஏதோ அவர்கள் எழுதாத சில விஷயங்களைத் தாம் எழுதப் புகுவதாயும் தொடங்கினார். இவர் போகும் பிடிகையால் 'சங்கர பகவத்பாதாசாரியரைச் சப்தமஞ்சரியுந் தெரியாத வழிவிலியென ஸ்தாபித்திடுவாரோ' என வத்துவிதிகள் மயக்கமுறுவண்ணம் 'சங்கராசாரியர் பெரிய பண்டிதர் என்பதிற்சந்தேகமில்லை' என்று அத்துவிதிகளுக்கோர் அபயப்பிரதானஞ்செய்து பிறகே விஷயத்தைத்தொடங்கி எழுதிவந்தார். இவ்விஷயம் மிக வியக்கத்தக்கதே! மேற்கண்ட ஆசாரியஸ்வாமிகளுளிய பாடியத்தை இவர் குலாசாரியரும் இக்காட்டு விசிஷ்டாத்துவித பாஷ்ய கர்த்தாவுமாகிய ஸ்ரீராமானுஜாசாரியரும் துவிதாசாரியரும் யாதவப்பிரகாசர் அச்சுதப்பிரேக்ஷர் முதலிய சதாசாரியரிடம் தொண்டுபுரிந்து படித்தறிந்தார் என அவர்கள் எழுதிக்கொண்ட சரித்திரமே சொல்லிநிற்பதால் அவ்வாசாரியர் மூவர் ஆசாரியரும் மற்றொரு ஆசாரியர் வழி அறியற்பாலதான பொருளமைந்த நவியத்தியரும் அவருக்கும் எவ்வளவோகாலம் முந்தியவருமாவது நன்மேலெழுத்தாவதால் சுமார் 1000 வருடங்கள்வரை இத்தேசத்தில் அவர் எழுதிய பாஷ்யம் நிலைபெற்றோங்கினமையாலும், ஸ்ரீசிவரகசியம் வைமாம்சத்தின் அநுபத்துமூன்று காயன்மார் நிருபவதாரச் சரித்திரம் சொல்லவெழும் பிரகரணத்தில் "ஷஷ்டிவிம்ஸ மஹாநாமவதாரா நடார்த்யமம" என்று குறிப்பாய் ஸ்ரீசங்கராசாரியரவதாரஞ் சொலப்பட்டமையாலும், இது அப்பிரமாணம் எனச்சொல்லவும் இவர் சித்தாந்தப்படி ஸாத்விக புராணமான விஷ்ணுபுராணங்களுடன் மூராறும் வசனங்களே சிவபுராணங்களில் அப்பிரமாண மன்றி மற்றது அங்ஙனமாகாமையாலும், சைவராதியோர் சிவரகசியத்தைப்பிரமாணமெனக்கொண்டமையாலும், அவர் ஏதோவொரு தேவாரம் சம்பிறைந்தவர்எனச்சொல்வதவசியமாகவிருக்க, மதுதர்மதேசவாசிகளாய்வேதாகமேதிகாசபிரமாணங்களைநம்புமியல்பினராய்உள்ளஇவர்மேற்திசையாருள்ளே 'டேவிட்ஸிங்கள் 'எம். ஏ.' சொல்லியதுபோல் இத்தேசத்து மதாசாரியர் எவரும்மகா வித்துவான்கள்தான் எனக் குறித்தெழுதவது அழகன்று. நிற்க. "இப்பொழுதன்ன அத்வைதிகள் சங்கராசாரியரை ஜகத்குருவென்று கட்டியங்கூறுகின்றனர். இதற்கு இதரமதஸ்தர்களுடைய கையெழுத்தைக் காணேம்" என்றனர். "இப்போதன்ன" என்றவிடம் 'இப்போது' என்றுஞ்சொல்லுக்குப்பொருள் 500 வருஷங்களுக்குக் குறையாது. என்னையெனின், கர்ணாடராஜ்யத்தில் நரசிம்மராஜன் ஆண்டகாலமுதல் இந்த விருதுடன் ஏற்பட்ட ஆகேக செட்டேசன் இருத்தலாலும், கோபாலம் பகபத்சன் இவ்வியாலயத் திருப்பனிக்காலத்துக்ிடைத்த ஒரு பழய சாஸனத்தாலும் வெளியாகுதலால் என்க. 'இதற்கு இதரமதஸ்தர்கள் கையெழுத்தைக் காணேம்' எனஇராஇவ்விஷயம்எத்தமதஸ்தர்களுக்கும்இராது.ஒவ்வொருமதஸ்தர்க்குள்ள ஒவ்வொரு விருதுக்கும் இதரமதஸ்தர் கையெழுத்திடார். ஸ்ரீவைஷ்ணவர் குருபரம்பரையில் பெரியாழ்வாரென்றும் விஷ்ணுசித்தர் சங்கப்புலவரை ஜயித்துக்கிழித்து விஷ்ணுபரத்துவத்தைப் பாண்டியன் திருச்சபையில் நிலைநாட்டினர் என்றும், அங்ஙனமே வாள்விசம் பாராலன் என்னும் திருநாமம்பூண்ட திருமங்கை மன்னன் வைதிகரானரான ஸ்ரீஞானசம்பந்தரை ஜயித்ததாயும் கொண்டு விருதுகூறிப்பிடித்துச் செய்யும் உற்சவங்களுக்கு இதரமதஸ்தராய சைவராதியோர் இட்ட கையொப்பம் இதற்கில்லையாயினும் இவ்வித வேற்றுமதங்கள் எமது தேசத்துண்டாவதற்கு முன்னே இம்மதங்கொண்டவர் முதாதைகள் கையெழுத்தன்று. இனி 'இதர மதஸ்தர்' என்பதால் நமது நண்பர் ஆசாரியர் அவைதிகரைக் கொண்டனரா? வைதிகடப்பிரிவினரைக் கொண்டனரா? அவைதிகரைக் கொண்டோம் என்பிரேல், ப்ராம்மண மதத்தை முன்னிருவோது முன்னுக்குக்கொண்டுவந்தவர் சங்கராசாரியர் என எவ்வளவு மேற்றிசைச் சரித்திரக்காரரும் இத்தேசத்துப் பௌத்தர்தையொழித்தவர் அவரேயெனக் கீர்த்தியைச் சொல்லிவைத்திருப்பதும் அத்தேச சரித்திராசிரியரும் கூறுவதாலும், மேலும் இத்தேசமண்ட பாஷைக்களில் பலராக (அதாவது நாலவகைகள்) இவ்வாசாரியருக்கு 'ஜகத்குரு' என்னும் பெயருடன் அநுப்பிய

பல நிருபங்கள் இருத்தலானும், கண்டனாட்டியல் மிக்கொடு ங்கோன்மையுள்ளதாயமைதல் [illegible] இவர்கொடுத்த கடிதங்கள் உள்ளதானும் [illegible]யாது. ஒருவாறு 'வைதிக உன் மத்தனை அப்[illegible]ளாகக் கொண்டோம்' என்போம், [illegible] அவர்கள் தத்தம் மதங்களை காட்டமெழுமனமே அவர் [illegible]கொண்டிருத்தலின் அவர் கைவிட்டுத் திட்டார். இவரும் இப்பிரசங்க வைபவத்தால் பற்றிப் பயன் படாததாலின் இக்கேள்வி விடைக்கடிதங்களையே. இவ்வித க்கேள்வி மேற்கு சாஸ்திரங்களை அறிந்தவர் கேட்டறிக்குரிய தன்று.

பிறகு எமது பத்திரிகை 5 ம் புத்தகத்தில் 'சங்கராசாரியர் [illegible]' என எழுதியது பொதுநோக்குள்ள பத்திராதிபர்க் கழகாகுமோ' என்பது அது இதுவரையில்தார்க்கு மனங்குடிகா ளென்றும் பொருளை [illegible] பல சொற்களைக் கையாளுதிப் பரவியிலால் எழுதியிருக்கின்றார். அவ்விஷயத்தில் அவர் பத் திராதிபர் கொள்கையிலிருந்து இன்றில்லாதுபற்றியவரின், அவ்வ [illegible] பல்வளவுபுறுமாகதம்பர்கரு டன் [illegible] அவ்வளவிடமே பத்திராதிபர் கூட் டாதும் [illegible] கொண்டிருப்பதுமேயன்றி அவ ர்களுக்கு அவர்கள் பிடிக்கள் மெய்க்காலமாய் வழங்கிவரும் [illegible] மேற்குமதஸ்தர் மனஸ்தாபத்துக்காக இனி த்தன பத்திராதிபர் தர்மமல்ல. எந்தமதத்தர் சித்திரத்தை யும் அல்லது எந்த ஆசாரியர் சரித்திரத்தையும் எழுதப் புகுந்தால் அவரவர்க்குரிய பழக்கமைந்த விருது களுடன் எழுதுவதே உசிதம். அதுவே பத்திராதிபர் க்கழகு. அவ்விதம் ஒவ்வொரிடத்து அவ்வமதாசாரியருக் குரிய புதிய விருதுகளைப் பத்திராதிபர் தானே அமைப்பினும் [illegible] விட்டொழிப்பினும் அவர் ஒருமதப்பக்ஷபாதி யாகாதிருப்பர். இனி எந்த விருதினும் இதரர் மனஸ்தாபம் நேரும் என நினைத்திருமாது ஒவ்வொரு மதாசா ரியரையும் பெயர்மட்டில் எழுதவில் அது எல்லா மதஸ்தர்க் கும் மனஸ்தாபத்தை விளைக்குமாதலின், பத்திராதிபர்எம்மதா சாரியரைப்பற்றி எழுதினும் அம்மதத்தவர்போல எழுதவேண் டியதே அவர் கடமையென்பது இவர் [illegible]. இத் தமிழ்த்தில் எழுதியுமிர் தம்மாசாரியரைப் புகழ்ந்தார் என்றார். எதையடுத்த ஸ்ரீகுமாராசாரிய பதஞ்சலி முனிவர் ஸ்ரீராமாநுஜ முனிவர் முதலியோரைப்பற்றி யாம் எழுதியவி டத் [illegible] வைதிகமத்தர் என்றுவது [illegible] தாக்தாசாரியர் எனவும் யாம் எழுதியவிடத் தம்மை வடகலை [illegible] இவர் சொல்லவுஞ் சொல்லுவார். சொல் வதால் யமக்கென்ன குறையில்லை. அவ்விஷயங்கள் எழுதிய ப்ரமவித்தியா பத்திரிகையின் சஞ்சிகைகள் இவர் கண்ணி லும் [illegible] கண்டார் [illegible] கண்ணிலும் படாதபத [illegible] ஸ்ரீசங்கர தவேவும் [illegible] தான். [illegible] [illegible] [illegible] இவர்க்கு உட [illegible] சமயமில்லாதவராலும், [illegible] அவைகளை [illegible] [illegible] இரண்டுக்கம் [illegible] சித்தா [illegible] இறுதி [illegible] மறுக்கவேண்டியது. 'அத [illegible] [illegible] [illegible] ஒப்பம் சார்வாகமதஞ்,

என்று மறுக்கின்றார். பிறகு பேதவாசனை அத்வைதவாசனை யினாலே கழித்தபின்பு நிவர்த்தகஞானம் பிறக்கும் என்றும் அத்வைத சித்தாந்தத்தால் அதுவும் மறுக்கப்படலாம்" எனத் தாமே வினவி அநேக ஜன்மகோடிகளில் அமைந்தவாசனை கழித்தல் ஒவ்வாது எனவும் அநேககாலம் கண்ட வாசனை யை அற்பகாலத்து கல்வறிவு மாற்றுதென்றும் கதையுடன் கூறித்துணிந்தார். இவ்விஷயம் ஆராயவேண்டிய பழமுடைத் தே. இவர் சொல் பொருத்தமுளதாயின் வெகுகாலமாய்க்கட் டிய வீட்டை அற்பகால அக்கினி இடிமுதலியன ஒழிக்கக் கூடாது. அநேக வருடங்கள் சென்ற ரோகத்தை அற்ப கால மருந்து மாற்றக்கூடாது. வெகுகாலங்கண்ட சரீரத்தை அற்பகால விஷம் ரோகம் கொல்லக்கூடாது. அநேககாலங் கண்ட விஷயின் முனைக்குமாற்றலை அற்பகாலத் தீ ஒழிக்கக் கூடாது. அநேககாலம் குயவன் செய்த குடத்தை ஒரு பெருதடி அற்பகாலத்தில் உடையச் செய்யப்ப டாது. இத்தியாதி பல திருஷ்டாந்தங்களால் மறுக்கக்கூடிய இச்சிறு விஷயத்தைப் பரமசித்தாந்தமாகக் கொண்டு குரு சிஷ்யபாவத்தை மறுத்து அத்வைதிகளை ஜயித்ததாக நினைத் தது வெகு விச்சை! இவ்வித விஷயங்கள் நிறைந்திருப்பதால் தான்போலும், சமதாசாரியர் ஞானமிர்த பத்திராதிபர் எழு தியதை முற்றிலும் ஒப்பியிருக்கும்அப்பத்திராதிபர்கடிதத்தில் கண்ட வைபிரசாயத்தில் தமதுத்திரவாதத்தை விலக்கிக்கொ ண்டார்! மேலும் அத்வைதமதத்தில் இன்றும் ஒரு குதர்க்கவசனம் ஒன்றுளது' அஃதாவது மகாவாக்கியத்தால் பிறக்கும் அபரோக்ஷஞானமே பந்தநிவர்த்தகம். அதுபிறந்தா ல் பிரபஞ்ச பிரதிபாஸம் கழித்துவிடும். 'சங்கரர்க்காவது மற் றெந்த அத்வைதிக்காவது இதுகாறும் அபரோக்ஷ ஞானம் பிறக்கவில்லை. ஆதலால் சங்கரர்முதலிய குருபரம்பரைக்குப் பயோபதேசமுதலிய வியாபாரங் கூடுமென்பதேயாம். இது வும் வீண் கட்டுரை. சாக்ஷாஸ்லினாலே சப்தசாக்ஷாஷம் பிறக்குமாயின் சப்தத்தாலே வந்து சாக்ஷாத்காரம் பிறக்கக் கூடும். இஃது எங்கும் கேட்டறியாத புதுமையாயிருக்கின் றது' சாக்ஷாத்காரோதயத்தில் இந்திரியங்கள் காரணம் என்பது யாவராலும் ஒப்பப்பட்டவிஷயம். சப்தம் சாக்ஷாத் கார காரணம் என்பது பண்டிதர் கோஷ்டியில் நிலைபெறுத. ஆகையால் அபேதஞானம் சப்தத்தாலேயே பிறக்கவேண் டும் என்று எடுத்தபிறகு மறுக்கப்புகுந்தார். இவ்வசனத்துட னிப்பக்கம் நிறையவேண்டி 'ஒரு குதர்க்கவசனம் ஒன்றுளது. சக்ஷுஸ்ஸினாலே சப்தசாக்ஷாஷம்' என்று கூறியதுகூற இசைந்தார். நிற்க. இவர் சப்தத்தால் வந்து சாக்ஷாத்கா ரம் பிறக்காதென்றும் பிறக்கும் எனும் சித்தாந்தம் பண்டிதர் முன்னில்லாத என்றும் கூறியது இவர் தம்மைமட்டில் பண் டிதராகவெண்ணியே. பாருங்கள்! அப்புறக் கருவிகளால் அறியக்கூடாத பரம்பொருளை வேதாகம மகாவாக்கிய விசா ரங்களால் அறியலாம் என வைதிகர் சைவர் ஆதியோர் ஒப் பி அநுபவத்தையும் அதற்குரிய திருஷ்டாந்தங்கள் பலவற்றை யுங்காட்டியிருக்க இவர்கூறும் இவ்விஷயம் இவரிலும்வேறான பண்டிதர் கோஷ்டியில் நிலைபெறுதல் எப்படி? நிற்க. இந்தி ரியங்களாற்றான் சாக்ஷாத்காரம் பிறக்குமெனச் சர்வசம்மத மென்றனரே. இது எவருக்குச் சம்மதம். தார்க்கிகருக்குச் சம்மதமா? அவர் யோகக்காட்சிக்குப் புலன்கள் கருவிக ளாகாவென்றனரே. சைவர்க்குச் சம்மதமா? அவரும் யோக கக்காண்டதுக்குப் புலன் காரணமல்லவென்றனரே. வைதிகர் ஒப்புவாரா? [illegible] [illegible] என்பதாதி சுருதிவசனங்கள் பர ம்பொருளையறிதல் புலன்வழி கூடாதென மறுக்கின்றனவே. இங்ஙனமெல்லாம் இருக்க இவர் இறுதியில் 'ஆதலால்' என முடித் தது [illegible] தம்கொள்கைக்கு மாறாக 'சப்தத் தாலேயே பிறக்கவேண்டும்' எனமுடித்தார். இதன்பொருத்

Koviloor Digital Library

தும் அவரேயறிவார். இனி இஞ்ஞானம்பெற்ற ஆசிரியருக்குப் பேதவாசனை பிராரத்தசரீரம் உள்ளவளவில் இருக்குமாயின் அக்காலங் குருசிஷ்யபாவங்கூடுமென அத்வைதிகளின் வாதத்தை இவர் முன் மறுத்தவழி மறுத்தோமாதலால் இங்கு அதுவே விடையாகக்கொள்க.

இனி சங்கராசாரியர் ஏகாத்மவாதியாதலால் அவருக்குக் குருசிஷ்யபாவம் ஒவ்வாதென்கின்றார். அவ்வாசிரியர் ஏகாத்மவாதியாயினும் அந்தக்கரணங்களில் வேற்றுமை ஒப்பியதுகொண்டே அவ்வந்தக்கரணம் சுத்திபெற்றவிடம் சுகானுபவ விசேடமெய்தியவன் தனதுடலில் கிரமபாகமான கைமுதலியன மலசம்பந்த பாகத்தின் மலமகற்றுவதுபோல இதுவும் அமையும் எனக்கொண்டடங்காது மீறியது எதனாலோ? அத்வைதிகளில் பிம்பப்பிரதிபிம்பபாவம் ஏகதேசத் திருட்டாந்தமாக, அதைச் சித்தாந்தமாக்கி அதன்மேற் குற்றங்கூறியதையும் அத்வைதசித்தாந்தமறியாதார்கூற்றெனவிட்டொழித்தோம். உலகம் மித்தையாயின் அதற்கு அவர் குருவாவதெப்படி என்றார். அவரும் உலகத்தில் ஒருவராய் இருந்து இதன் ஸதஸத்தன்மையாகிய மித்தியாத்துவத்தை ஒப்பினரேயன்றி முற்றிலும் இல்பொருள் என்றாரில்லை. சதசத்தென்பதே இல்பொருள் எனின் இதனுண்மையை ஆன்மா சதசத்து என்றும் அது உள்பொருள் ஆகும் என்றும் பொருந்தக்காட்டும் வழியைச் சைவசித்தாந்தமறிந்தோரிடமிவர் அறிந்துய்வாராக. இனி "உலகம் மித்தை" "அறிவு பிரம்மம்" என்பது யோகாசாரன் என்பவன் [பௌத்தன்] கூறி என்றுசொல்லியதை யநுசரித்தமையால் சங்கராசாரியர்மதம்யோகசாரபௌத்தபேதம் எனலாம் என்றும்,பௌத்தர்களைச்சங்கராசாரியர் வாதில்வென்றதருசவற்ற பேச்சு என்றும் சிலவரி கீட்டினார். இங்கு உலகம் பொய்யென்றவன் யோகாசாரன். சங்கராசாரியர் சதசத்தென்றவர்; அநிர்வசனீயம என்றவர். க்ஷணிகவறிவு பிம்பம் என்றது யோகாசாரன். நித்தியவறிவு பிரமம் என்றது சங்கராசாரியர். இரண்டையும் ஒன்றுபடுத்திய சமர்த்து மேது ஆசாரியாக்கும் அவர் மூதாதைகட்குமமைந்ததருமையே; நிற்க. ஏகதேசசாமியத்தால் இவர் சொன்னவழி ஆன்மா நின்மலன் எனபதால் சைவரைச் சாங்கியரென்றிகர் என்றும் பிரமாணங்களுள் பிரத்தியக்ஷம் சிறந்ததென்பதால் வைணவரைச் சார்வாகர் உட்பிரிவார் என்றும், முக்தியிலுஞ் சரீரமுண்டு; பிரமப்பிராயைத்தன்றே முத்தி; மத்தியஸ்தனாகிய பாகவதனைக்கொண்டே சத்திபெறவேண்டும் என்பதாதி வாதசாம்யத்தால் இவ்வாதிகள் கிறிஸ்தவரைச் சார்ந்தார் என்றும் தாய்க்குள்ள அவயவங்கள் பெண்டிர்களிடமும் இருத்தலால் அவர்களை மணப்பது————கமனக்குற்றமென்றும் சொல்ல எந்த வைதிகனுந் துணியான். இனிப் பரவஸ்து ஸாக்ஷாத்காரத்தில் மந்திரதந்திரோபதேசரூப வேதாகமங்களே பிரமாணமென வாதிக்கும் வைதிக மணிகள் உள்ளவிடத்தில் இவர்கூற்று மணமபெறுதொழிய இவர் வைதிகருட்புகுந்து சண்டைசெய்வதுசிதமல்ல. இனிப் 'பௌத்தரை ஜயித்தது ருசவற்ற பேச்சு' என்றார். இவர்க்கு ஊர்க்கதை ஏதும் தெரியாது. பாவம் ஏதோ எழுதினார். இவர் சீயதேசச் சக்கிரவர்த்தி எழுதிய பௌத்த சரித்திரத்தைப் பார்த்தாவது பார்த்தவரிடம் கேட்டறிந்தாவது தெளிவாராக. அவ்வாசகர் 'பௌத்தரை வாதில்வென்று இத்தேசத்தை விட்டகற்றினார்' என்று எழுதியதால் பௌத்ததேச சக்கிரவர்த்தியுமின்னுமுள்ள இதரமதச் சரித்திராசிரியரும் பெரிய குசக்கொடுக்க 'ருசவற்ற பேச்சு' என்பது எவ்விதம ஒவ்வும். எவரை ஜயிக்கவில்லை என இவர் சம்சயிக்கின்றாரோ அவருடைய சக்கிரவர்த்தியே குசக்கொடுப்பதைவிட இவர் நியாயஸ்தலத்தில் எவ்வித வக்தல்துடையவர் சாக்ஷியம்வேண்டுமோ அறியோம். நிற்க. அவர் ஷண்மதஸ்தாபனத்தைப் பொய் என வலைப்புகுந்து இப்போதியகாலத்துநித்த மதவாதிகளைத் திருஷ்டாந்தமாகக்காட்டி அவர்கள் ஆசாரியத்துவத்தைக் கண்டித்ததாக எண்ணினார். இதுஇக்காலக் கதையல்ல. [1921] வருடங்கடந்த கதை. அன்று இவர் கூறும் மதமும் மதாசாரியரும் இருந்ததற்கு குசக்கொடுக்கவேண்டிய பாரம் இவர்மேற்சுமந்தது. கலியாதி மூவாயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்துநான்காம் வருடம் பிறந்த நாதமுனிகள்போய்ப் பின்னேயின் சொய்ந்தோன்றிய ஸ்ரீராமானுஜாசாரியரும் அதன்பின் வந்த மாத்துவசைவாதியோரும் இவ்விஷயத்தை யொப்புக்கொடில் இது அவர் விருதைக்கெடுக்கும என்பது எவ்வளவு பொருத்தமுடைத்து என்பதை இவரே ஆலோசிப்பாராக. இனி வியாஸர் கூறியபடி 'ஸாங்க்யம்யோக: பாஞ்சராத்ரம் வேதா: பாசுபதம் ததா| ஞாநாநயேதாநி நஹந்தவ்யாநி ஹேதுபி:' என்னும் வசனத்தால் 'ஸாங்கியம், யோகம், பாசுபதம், பாஞ்சராத்திரம், வேதம் என்னும் ஐந்தும் வெவ்வேறு மதங்களாய் வெவ்வேறு முடிவுள்ளதாகத் தோன்றிய தோற்றத்தையகற்றி அவற்றுள் வேதவிரோதங்களைக் களைந்து மிகுதியைத் தழுவிச் சித்தாந்தம இயற்றிய வைதிகமணியை ஷண்மதஸ்தாபகரென அத்வைதிகள் கூசாதுரையாது நிற்கார். இனி 'ஆசாரமுதலாகிய எந்தவிஷயத்திலும் ஒத்துவராத அத்வைதமத பிரவர்த்தகரான சங்கராசாரியரை ஜகத்குருவென்கிற வீண் கட்டியத்தை இனியாவது வெளியிடாதிருக்க ப்ரம்மவித்யா பத்திராதிபரைக்கேட்டுக்கொள்ளுகிறோம்' என்றார். வெகுநன்று! 'கட்டியத்தை ஆசாரியரை வெளியிடாது' என்பதால் இவர் சொல பொருந்தியவாறே பொருளும் பொருந்தும் என்பவத அறிஞர் அறிந்திடாதொழியார். மேல் சங்கராசாரியர் விசேஷஞ்ஞர் அல்லவென்றும் மற்றவர் விசேஷஞ்ஞரென்றும் எழுதினார். இவருக்கு சர்வமதாசாரியர் ஞானங்களையளக்க அகப்பட்ட கருவி எமக்ககப்படவில்லையாதலால்யாம் அவ்விஷயத்துக்கும் ஏதும் பதில்சொல்லவில்லை. 'ஆசார முதலிய எந்த விஷயத்திலும் ஒத்துவராத' என்றாரே, எந்தவாசாரத்தில் இவர் மற்றவருடன் கலந்தார்; சங்கராசாரியர் எந்தவாசாரங்களில் மற்றவருடன் கலந்தாரில்லை. இவ்விஷயத்துக்கு முன் ஆசார பத அர்த்தமறியாது ஏகாத்மவாதம் முதலியது ஆசாரமென மயங்கி னாறுமிர்த்தத்தாருரைத்தவாறுரைக்காது மறுவசனம் ஆசாரியர் அளிப்பர் என எதிர்பார்க்கிறோம்.

Koviloor Digital Library

இனி அத்வைதிகளுக்குக்குரு சிஷ்ய சம்பிரதாயம் இல்லை என்பதற்கு அப்பாஷ்யத்தில் குருவணக்க மின்மையே போதுமானகாரணமாமென்றார். வியாஸசூத்திரமகளுக ளுக்குத்தாம் வாஷ்யினி ருசுதிரம பதஞ்சலிஸூத்ரம பதஞ்சலி மகாபாஷ்யம பாணினீயம இவைகளிலும அங்ஙனம் கிற்றலால் அங்கும் குருவணக்க சம்பிரதாயம் இல்லைபோலும்! உண்மையில் குருவணக்கம் மெய்யுரைகளிலிருக்கவே வேண்டியவசியமில்லை என்பது ஆசாரியர் கருத்து. மிக்க, இதன் பிறகு தாம் பித்துடன் அத்வைதத்தைக்கண்டித்து விசிஷ்டாத்துவிதத்தை ஸ்தாபிப்பதாக சில வசனங்களை எழுதி "உபதேசமே "சாகாரவிஷயம்" என்றார். இது யாவனைவதிகட்கும் சம்மதம். வேதாந்த சித்தாந்தக்கிரந்தவாதிகள் எவரும் பாவித்து ஞானத்தையும் உபதேசத்தையும் நிராகாரவிஷயமாகவே ஒப்பிசிற்க இவர்கூற்று எங்கு பரிமளிக்கும்? இவர் கோஷ்டியில் உதயம 'ப்ரம்மம் ஸாகாரம் என்பது ஏனைய மதஸ்தர் கொள்கை' என்றார். இவர் சைவசித்தாந்தமதியார்; அவர்க்கும் சிவம் நிராகாரமே. இனி குருவிடம் சிஷ்யன் ஞானத்தை அறிவது ப்ரம்மத்தையா? அதன் வேறான பொருளையாமென விகற்பித்து அதையேயெனில் அது அறியப்படுவதால் மித்தையாமென்றும அறியப்படாவிடில் உபதேசம் பயனற்றது என்றுங்கூறுகிறார். இங்கு அறிவது ப்ரம்மத்தின் வேறான சதசத்தான பொருள்களையே. அவ்வனையாயின் அவையெல்லாம் நிருக்கிபப்பட்டு ஒழிந்தவிடம் தாமே தன்னறிவாய் நிற்றலால அறியப்படும தன்மை பரமாத்துவுக்கு இல்லை என்பது ஆசாரியர்கருத்து. அறியப்படுவதெல்லாம் பொய்யென்றது பௌத்தவாதம். அறியப்படுவதெல்லாம சத்தியம் என்பது நையாயிக வாதம். ஆன்மஞானமொழிய மற்றவை யாவுமெல்லாம அறியப்படும்பொருளுடன் மித்தை என்பது அத்வைதி கொள்கை. இக்கொள்கையே வேதத்துக்கும் உண்டு. அகண்டாத்தாகாரம் முத்தி என்பதில் பல பரிகாசஞ்செய்துப் பிரயோகஞ்செய்தார். அதுநிற்க. சைவசாதியோடு மிவரொழிய ஆறுங்கரை முன்பட மலத்தடக்கி அதுமோக்ஷத்தில் விலகிவிடும் என்பதை ஒப்பினர். நிற்க. இந்த மோக்ஷத்தைக்கேட்டவன் அக்கரை கடக்கும் வழியும் இல்லாதொழியாறுமிரும் என்றைக்கும் சரீரத்திற்கட்டுண்டு பாசக்கிரிய துக்கம் நீங்காது நிற்றலே முத்தி என்றும் கதைகடக்தும வழியில் பூரணமாய்க் குடிகொள்வாளுதலம் பிரமாணங்களின் பிடைபொழிந்தது. இங்ஙனமிருக்க, பிறப்பில் தாழ்ந்த சாதியில் சாதிவைப்பற்றிவரும் ஆசாரியத்துவத்தை வழக்கம்போல் சிந்தித்து பின்னத்துவிதிகளின் சிஷ்யகுருநம்பவத்தை அநுமதமென்பது எமக்கு டங்காதகை விளைக்கின்றது. முடிவில் அத்வைதிகளான மடாதிபதிகள் கவுரவத்துக்காகவே குருசிஷ்யக்ரமம் என்கிறார். இந்து அத்வைதிகள் என வேறுபடுத்தியதட்டிலே யிலாது அத்வைத துவேஷத்தால் வெளிவந்த சொல்லாயினும் எல்லா மடாதிபதிகளும் இக்காலத்தப்படியே. ஒருசமயம் நமதாசாரியர் சுயமாசாரியராக விருத்துவிரதிப்பிரயோஜனமில்லாது அனுக்கிரகார்த்தமாய்ப் பஞ்ச சமஸ்காரங்களுக்கு இந்த சமஸ்காரத்துக்கு இவ்வளவு என திட்டம்போட்டுப் பொருள் பரிகரிக்காதிருப்பின் இச்சொல்லுக்கிலக்காகாது ஒழிவார். மற்றவர் இச்சயமிலக்காவார். பிறகு பிராதிபாதிகசத்தைப் பாரமார்த்திகசத்தை வியாவகாரிகசத்தை என மூவகைச்சத்தைகளை ஒப்பி அவற்றுள் ஒன்றான வியாவகாரிகசத்தையில் குருசிஷ்யபாவ வமர்த்தனஞ்செய்வது அத்வைதிக்குப் பெருஞ்சுமையல்லவென்பதை நினைத்து அவ்விதசத்தாவிபாகஞ்செய்தல் சாஸ்திரவிகாரவிரோதம் என்றும் யுக்திக்கொவ்வாதெனவும் மேலே விண்வார்த்தைகளையும எழுதிமுடித்தார். இம்மூவகைச் சத்தைகளையொப்பியது எந்தவித வேதவசனங்கட்கும் விரோதம்வாராது பொருட்படுத்தவேண்டியே என்பது அத்துவிதசித்தாந்த நூல்களைப்பார்த்தோரறிவார். இனி அத்வைதம் எனும் ஒருசொல்லே வேதங்களிற்கண்டிருக்க அதை விசிஷ்டாத்துவிதம் என்றும் மற்றதென்றும் எழுதிய அத்துவித பேதம் ஒப்புவதற்குள்ள ஆதாரங்கள் இச்சத்தாபேதம் ஒப்புவதற்குண்டு என்பதை அறிவாராக. விவகாரத்தில் அத்வைத மதத்தில் விதேக கைவல்யம் வரை குருசிஷ்யக்ரமம் உண்டென்பதுகாட்டியதையும் எவோர் வைதிகமத இடையூற்றை இத்தேசத்துக்கு முதலில் தொலைத்து வெற்றி விஜயம் செய்தவராக யாம் அவரிடம் விண்துவேஷம் வைத்து அவருக்குள்ள லோகாசாரியத்துவத்தை மறுக்க வெழுவது அவ்வளவு நமது ஆசாரியரைப்போல அறிஞர்க்கழகல்லவாதலால் இனியேனும் இம்மட்டோடு இவ்விவாதத்தை நிறுத்திவோம். எமக்கு விசிஷ்டாத்துவிதத்தைக் கண்டிக்கவும் அத்துவிதத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்பதும் கருத்தல்ல. பின் யாம் பொதுவாய் அவ்வம் மதத்தவர் விவகாரத்திலிருந்து அவ்வவ்விஷயங்களை எழுதவேண்டிய முறைபற்றி இவ்வளவு எழுதினோம். இனி இதற்குப் பதில் ஏதேனும் எழுத விரும்பின் நமது ப்ரம்மவித்தையிலாவது அல்லது ஞானசித்தியிலாவது விண்வார்த்தைபால் பத்திரிகையை நிரப்பாது எழுதுவாரென நமது வித்துவான் ஆசாரியரவர்களை வேண்டுகிறோம்

பத்திராதிபர்

Chidambaram—Printed and Published for the proprieter at the Brahmavidya Press No 38 Senkalloo near pilliarkoil street.

Koviloor Digital Library

[illegible]

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA

பூர்ணிமை அமாவாஸ்யைகளிற் பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible]

௬ புத்தகம்] சிதம்பரம். நந்தனஹு வைகாசிமீ ௩௦-உ-இ 1892ஹு ஜுன்மீ 10உ [இலக்கம் அ

[illegible]

[illegible]

[illegible]

இந்தியாவிற்கு	வருஷம்	1 - [illegible]	3	0	0
ஷை	மாசம்	6 - [illegible]	1	8	0
ஷை	மாசம்	3 - [illegible]	0	14	0
ஷை	1-காபி		0	3	0
இலங்கைக்கு	வருஷம்	1 - [illegible]	3	8	0

உபாத்தியாயர் அநுமதியின் பேரில் எழுதிக்கொள்ளும் பள்ளிக்கூடத்து மாணாக்கர்களுக்கும், தர்மபாடசாலை உபாத்தியாயர்களுக்கும் ரு 1-8-0 செலக்ஷ ஓ-ய-சொசைட்டி சார்ட்டர்பெற்ற பிரசங்கிகளுக்கும், கிராமத்தில் பதின்மர் கையொப்பமிட்ட விண்ணப்பத்தின்பேரில் படித்துப்போதிக்கும் வித்துவான்களுக்கும் ஹு 1-க்கு அணா 12 க்குக்கொடுக்கப்படும்.

This Journal devoted to Arian Religion, Philosophy Literature &c. Conducted by Pandit C. R. Srinivasa Sastriar. Under the kind patronage of
H. H. Raja Baskara Sethupathi Ramnad.

All rights reserved.

Koviloor Digital Library

பதிபசுவாதம்.

“கோயமுத்தூரார்” என்பவர் நந்தனவருஷம் சித்திரை மீ கூ பரமவித்தையின்கண் இட்டிய விஷயத்தைக் கண்ணுற்றோம்.

ஒளியானது எல்லாப்பொருள்களிலும் இருக்கின்றதென்றும் பொருளுக்குத் தக்கவாறு ஏற்றக்குறைத்தும் இருக்கின்றதென்றும் யாம் கூறியதற்கு, அவர், அங்ஙனமாயின் அபரபக்ஷத்துச் சதுர்த்தசி ராத்திரியில் வீட்டிற்குள் புத்தகத்தை வாசிப்பீர்களா என்று கேட்கிறார். அவர் கேட்டதுண்மையே. அப்படி வாசிக்க முடியாதுதான். நாம் கூறியது தவறென யாமே யொத்துக்கொள்ளுகின்றோம். ஒளியினது இன்மையே அல்லது குறைவேயிருளானதால் ஒளியானது எங்குமிருக்கின்றதென்று சொல்லலாமென்றாலும் அது பொருந்தாது; ஏனெனில் ஒளியென்னுஞ் சொல்லைப் பிரயோகித்து அது எங்குமிருக்கின்றதென்று சொன்னமையாலென்க. இக்குற்றத்தை மன்னிக்கும்படி கோயமுத்தூராரை வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இனி அதை விளக்கச்சொல்வாம். ஒளியுள்ள பொருள்கள் சூரியன், அக்கினி, சில நக்ஷத்திரங்கள், மின்மினிப்பூச்சியின் வால், அக்கினிபாஷாண அம்சமான வொளியுள்ள மீன், பூரான்வயிறு, ஜோதிவிருக்ஷமுதலிய பொருள்களாம்.

ஒளியானது சில பொருள்களின்மீது விழுந்தால் பிரதிபலிக்கின்றது. சில பொருள்களின்மீது விழுந்தால் ஊடுருவிச் செல்லுகின்றது; சில பொருள்களின்மீது விழுந்தால் இலயித்துவிடுகின்றது. ரசம்பூசின கண்ணாடியின்மேல் சூரியனொளி விழும்போது அவ்வொளி யூடுருவிச் செல்லவொட்டாமல் ரசமானது தடுத்துவிடுகின்றமையால், சுவரின்மேல் விழுந்த பந்து, எப்படிச் சுவரின்மேல் பட்டு எதிரில் பாய்கின்றதோ அப்படியே ரசம்பூசினகண்ணாடியின்மேல் பட்டவொளியெதிரில் பாய்கின்றது. ரசம்பூசாத கண்ணாடியின்மேல் விழுந்தால் உள்ளே யூடுருவிச் செல்லுகின்றது. கரியின்மேல் விழுந்தால் இலயித்தேவிடுகின்றது. இம்மூன்றில் எதைப்போல் கண்ணை வைக்கலாமென்னில் ரசம்பூசாத கண்ணாடியைப்போல் வைக்கலாம். ரசமில்லாத கண்ணாடியில் எப்படியொளி ஊடுருவிச்செல்லுகின்றதோ அப்படியே கண்ணிலும் ஒளி ஊடுருவிச்செல்கின்றது. இதனால் கண்ணுக்கு ஒளியில்லையென்றும் ஒளியுள்ள பொருள்களிலிருந்து ஒளிதானிக்கண்ணுக்குள் புகுந்து ஊடுருவிச் செல்கின்றதென்றும் விளங்குகின்றது.

சூரியனிடத்துள்ள வொளி சூரியனைவிட்டு விலகிச் சூரியனில்லாப் பலவிடங்களிற் பரவி, பல பொருள்களின்மேல் விழும்போது, ரசம்பூசாத கண்ணாடியின் மீதும் விழுந்து அதனுள் ஊடுருவிச்செல்கின்றது. அவ்வாறே ரசம்பூசாத கண்ணாடியையொத்த கண்ணின் மேலும்விழுந்து ஊடுருவிச்செல்லுகின்றது. சூரியன், கண்ணாடியாதி இவைகளைப்போல் பதியையும் பசுவையும் கூறுவோமானால் சூரியனிடத்துள்ள வொளியானது சூரியனில்லாத பலவிடங்களிற் பரவிப் பலவிடங்களிலுள்ள பொருள்களிலொன்றான கண்ணுக்குள்ளுஞ் செல்கின்றது. பதியினிடத்துள்ள ஏதோவொன்று பதியில்லாத பலவிடங்களில் இருக்கும் பொருள்களிலொன்றான பசுவினிடத்துஞ் செல்கின்றதாகவேண்டும். இவ்வாறு கூறுமிடத்துச்சூரியனைப்போல அபரிபூரணனோ அப்படியே பதியும் அபரிபூரணனாகவேண்டும். இவ்வாறு சொல்வதில் பின்னுமொரு தோஷமுமுளது. அதையும் விளக்குவோம். சூரியனிடத்திலிருந்து ஒளி வெளியில் வந்துகொண்டிருப்பதில எவ்வளவு வந்துவிடுகின்றதோ அவ்வளவு பாகம் சூரியனுக்குக் குறைவுண்டாகவேண்டும். (குறைந்து கொண்டு வருவதாக வானசாஸ்திரிகளுங் கூறுகின்றனர்.) இதையொட்டி யுவமேயத்தை நோக்குவோமாயின் பதியினிடத்துள்ள ஏதோவொன்று வெளியில் வந்துகொண்டேயிருப்பதால் பதியுங்குறைவுபடுகிறதாகச் சொல்லவேண்டும். சூரியனானவன் குறைந்துகொண்டே வந்து காலாந்தரத்தில் எப்படி நசித்துப்போவானோ (நசித்துப்போவானென வானசாஸ்திரிகளும் தத்துவசாஸ்திரிகளும் ஒத்துக்கொள்ளுகின்றனர்) அப்படியே பதியும் நசித்துப்போகவேண்டிவரும்.

சூரியன் கண்டப்பொருளானமையின் அவனிடத்திலிருந்து நீங்கிய வொளி மற்றொரு இடத்திற் செல்லுதல் கூடும். பதி பரிபூரணப் பொருளானதால் அதனிடத்திலின்றும் ஒன்று பிரியவும் வேறு இடத்திற் செல்லவும் ஆகா.

கோயமுத்தூரார், சூரியனொளியும் கண்ணொளியுமென்று கூறுவதில், சூரியனைப்போல் கண்ணுக்கும் ஒளியுண்டென வொப்பவேண்டியதாய் வருகின்றது. அது பொருந்தாது. கண்ணுக்கு ஒளி யில்லவேயில்லை யென்பதறியலாம். ஒளியிருப்பது உண்மையாயின் பிறிதொரு பொருளினது ஒளியை வேண்டாமலே யொளிசெய்து இருளிலுள்ள பொருளை விளக்கலாம். அவ்வாறில்லாமையால் கண்ணினிடத்து ஒளியில்லையென்றே கூறவேண்டுவது. கண்ணுக்கு ஒளியில்லாவிடினும் சூரியனொளியானது ஊடுருவிச் செல்லுதற்குக் கண்ணாடியே

Koviloor Digital Library

NO 8

ரு. அ ·

ஸ்ரீ
வித்யா
ஸங்கர

[illegible]

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை ஆதரித்து வருவதாக்கொடுத்த நிருபத்தின் நகல்.

ஸ்ரீராமஜயம்.

நமது பிரியமுள்ள வைதிக ப்ராமணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு.

அடுத்த கஅகூஉ௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸம்ஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

ஸம்வத்ஸரம்.
விகாரி உ௲உ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
[illegible]

[illegible]

ஜீவகாருண்யம்.

முன்தொடர்ச்சி.

இனி நாம் புசிக்கும் போஜன பானாதிகளில் [தண்ணீர் முதலியவற்றில்] அதிசூக்கும வுருவுடைய எண்ணிறந்த உயிர்கள் இருக்கின்றன. அலகிடல், மெழுக்கிடல், விறகு பிளத்தல், நடத்தல், கிடத்தல் முதலிய தொழில்களால் எண்ணிறந்த வுயிர்கள் அழிகின்றன. இவைகளெல்லாம் பாவமன்றோவெனின், நன்றுச் சிந்திக்கற்பாலதிது. எல்லாம்வல்ல இறைவனருளிய வேதாகமங்களில் அமைந்த விதி நிஷேதங்களெல்லாம் நமக்குள்ள கருவி கரணாதிகளால் அறிந்து சாதிக்கக்கூடிய எல்லை எதுமட்டுமோ அதுமட்டுமேயன்றி அவைகளால் அறியவும் சாதிக்கவும் கூடாமல் அதீதப்பட்டு நிற்குமிடத்தில் அவ்விதி நிஷேதம் பாராட்டுவ தவசியமன்று. மேலும் அதுதற்சங்கற்ப மன்றியே நிகழ்வதாதலால் அதன்வழி வரும் பாவமும் மிக நுண்ணியதேயாம். நுண்ணியதாயினும் அதுவும் பந்த ஹேதுவாதல்பற்றியன்றோ அதன் பரிகாரப்பொருட்டு, அவ்வப்பொழுது மனோவாக்குக் காயங்களால் ஈசுவரோபாசனையாகிய எண்ணிறந்த கருமங்களைப்புரிய (ஆரியராகிய நமக்கு) நூல்களில் தண்ணீருகுத்தல் கிருக்குதல் சமைத்தல் முதலியவைகளால் சம்பவிக்கும் பாவம் நீங்கவைசுவதேவாதிகளைப் போன்ற பலகன்மங்கள் விதிக்கப்பட்டன. இதுபற்றியன்றே, "பொறியின் மையார்க்கும்பழியன்றறி வறிந்தாள் வினையின்மைபழி" என்றது தமிழ்வேதம். இதன்பொருள்: சாதித்தற்குரிய சாதனமில்லாமை ஒருவர்க்குப் பழியாகமாட்டாது. சாதனமிருந்தும் சாதியாதொழிவதே பழியென்பது. இதுபற்றியே பிரபஞ்சத்தை முற்றத்துறந்த முதறிஞர் நியதியாக ஓர் வசிப்பிடமுங்கொள்ளாரென உண்மைநூல்கள் கூறுவதென்க. இனி ஊனருந்துதல் கொலைக்குக் காரணமாதல்பற்றியே [மாம்சபோஜனம்] மகா அநுசிதமென்று மேலோர் அருவருத்தொதுக்கினரென்க. அங்ஙனமாயின் உயிர்வதை செய்யாது தானே இறந்தொழிந்த ஊனுடலைப் புசித்தல் கூடுமேயெனின், அஃது கொலைக்குக் காரணமாதல் மட்டுமன்று; அகக்கரண புறக்கரணங்களில் மலங்களை விளைவித்து அதனாலடையப்படும் பெரும் பயன்களை அடையவொட்டாது கேடுறுத்துந் தன்மையுமுடையதாதலால் புலாலுணவு எவ்வாற்றானும் வெறுக்கத்தக்கதேயாயிற்று. இதுநிற்க. புன்புறச்சமயிகளாகிய சிலர் பலர் நம்மாரிய மைந்தர்களைப்புத்திகலைத்து ஊன் விரும்பப்போதிப்பதும் அவர் மறப்பரேல் ஓகோ! பசுவின்பால் யாது? அதன் இரத்தக்காயமே! மிருகங்களின்

[illegible]

உதிரமாமெ பாய்முதலியவற்றைப் புசிக்கிறார்கள் அதன் இறைச்சியைத் தின்னலாகாதோவென்று பரிகசிப்பதும் அதற்கு விடைகூறத் தெரியாது நம் புத்திரர்கள் திகைப்பதும் பலவிடத்திற்கண்டோம். இம்மூடர்கள் கொள்கைப்படி பாலும் இறைச்சியும் ஒன்றுமாயின் தாயின் முலைப்பாலுண்டு வாழ்ந்தவரே உலகர் பலருமாதலால் அதுபற்றித் தாயின் இறைச்சியையும் தின்னலாமே! இனி இங்ஙனம் கூறும் புறச்சமயிகளை எதிர்த்து நம் புதல்வர் இக்கேள்வியைக்கேட்டு அவரை முன்னம் அங்ஙனம் நரிறைச்சி புசித்துக்காட்டச் சொல்வார்களாக. மாட்டேமென்பாராயின் ஏன் என காரணங்கேட்பாராக. இனி உயிரைக்கொல்லாது விலைக்கு ஊன் வாங்கி யுண்ணுதல் பாவமாகாதெனச் சிலர் பிதற்றுவர். அது "தினற்பொருட்டாற்கொள்ளாதுலகெனின்யாரும் - விலைப்பொருட்டாலூன்றருவாரில்" என்னும் திராவிடசுருதியால் தலைசாயுமென்க. இதுகாறும் கொலை புலை யென்னுமிரண்டைப்பற்றிப் பேசினோம். இவ்விருநீதியும் பேணுவார்க்கு வரும் பயன் யாதோவெனில், "கொல்லான் புலாலை மறுத்தானைக்கைகூப்பி-யெல்லா வுயிருந் தொழும்" என்னும் வேதவாக்குட்காண்க. இறைவன் எட்டுவிதத்திருமேனி கொண்டானென்பது. அதாவது எட்டுப்பொருள்களில் எட்டுத்திருநாமங்களால் அதிஷ்டானமும் சைதன்னியமுமாக விளங்குகிறானென்று மேது வேதங்கூறும். அவற்றுளொன்று ஆன்மாக்களென்க. "வ்யாப்யவ்யாபக" என்று தொடர்ந்து 'ஞுத நஃபஶுபதி:' என வருதல் காண்க. இங்ஙனமுணர்ந்தோர் மறந்தும் ஒருயிரைக் கொல்லார். இதுநிற்க, இவ்விரண்டு தருமங்களோடு "மன்னுயிர்க்குறுதிபேணல்" என்னும் பெருங்குணமும் ஒருவனிடத்து உளவாமாயின் அவன் தோற்றத்தால் மனிதன்போன்றிருப்பினும் தன்மையால் தெய்வமென்றே மதிக்கப்படுவனென்க. மன்னுயிர்க்குறுதிபேணலாவது 'ஜீவகாருண்யமென்னும்" பொதுச்சொல். கொல்லாமையும் பிறவுயிர்கட்குத் தீங்குசெய்யாமையும் பிறவுயிர்களால் தனக்கு நேரும் தீங்குகளைச் சகித்தலும் பிறவுயிர்க்கு நேரும் தீங்குகளை நீக்கி ஆதரித்தலுமென நான்குவகைப்படும். கடையிற்கூறியதே மன்னுயிர்க்குறுதி பேணுதலாம். இதை விரிக்குங்கால் மன்னுயிர்க்கு வரும் தாபத்திரயங்களைக் காயத்தாலும் வாக்காலும் மனத்தாலும் நீக்குவது. பசிதீர்த்தல், தாகந்தீர்த்தல், பயந்தீர்த்தல், நோய் தீர்த்தல், இனியனகூறல், அறிவைவிளக்குதல முதலியவாய்ப் பலதிறப்படும். எவ்வுயிர்க்கும் இவ்வாறு செய்தல் பொதுவகையால்அறமேயாயினும் அசத்தாத்மாக்கட்குச் செய்வதினும் சுத்தாத்மாக்கட்குச் செய்யும் அறமே பெரும்பயன்தரவல்லதென்க. இனி [illegible]

[illegible]

ஆன்மாக்களுள் பசுமுதலியன சுத்தாத்மாக்களாம். சேமித்திக்கரகப் பார்ப்பவர்க்குங்கூட இவ்வுண்மை விளங்கும். எங்ஙனமெனின், இப்பசுக்கள் எவ்வகையினும் இப்படிக்க குணமுள்ளனவாய் உலகர்க்குத் தம் வாணுள்ளெல்லாம் இழுத்துமகாக்கும் பயன்படுகின்றன. இப்பசுக்கள் உலகத்திலில்லாதபோது உலகம் வேரோடு அழிந்துபோம்! ஏனெனில் அவையில்வழி வியாபார வியவசாய உத்தியோகாதி யத்தொழிலும் நடைபெறுவாதலாலென்க. இனித் தேவாமிர்தத்திற்கும் சிறந்த பால் தயிர் நெய்முதலிய உதவுகின்றன. அதுமட்டோ! அதன் சாணம்மூத்திரமுதலியவும் நம் வாழ்க்கைக்கு இன்றியமையாதன. அதுமட்டோ! உயிர் நீங்கிய பின்னும் உடற்கருவிகளாகிய தோல் நரம்பு எலும்பு முதலியவும் நமவாழ்க்கைக்கு இன்றியமையாதன. இனிச் சுத்தப்பொருளாகிய மூல்வுக்கங்களை அது புசிப்பதேயன்றி வேறு சிலவற்றைப்போல இறைச்சி முதலிய அசுத்த வஸ்துக்களை அது முகர்த்தும் பாரா. இன்னும் இதன்பெருமை யிவ்வளவேயெனக் கூறிமுடிக்க எவராலாகும்? அம்மம்ம! இதுபற்றியன்றே நமது தெய்வநூல்களெல்லாம் இப்பசுக்களைத் தேவஸ்வரூபமென்றும் அவற்றைப் போஷித்துப் பூசிப்பவர்க்கு இருமை யின்பமும் பலிக்குமென்றும் அதைச் சிறிதும் வருந்தலாகாதென்றும் அது தானப்பொருள்களுட் சிறந்ததென்றும் பலபடியாக எடுத்து மிகக்கூறுகின்றன. அன்றியுமிதனைக் கொல்லுதல் ஏனையவஃறிணையுயிர்களைக் கொல்வதுபோலாகாமல் மிகப்பெரும் பாவமாகும் என்பது தோன்றவே பிரம்மஹத்தி சிசுஹத்தி என்பனவற்றோடு "கோஹத்தி" என்று சேர்த்துக்கூறுவதாயிற்று. இதனால் இதற்குச் சிறிது துன்பமியற்றினோர் பெருந்துன்ப மடைவரென்பதும், இதற்குச் சிறிது இன்பம் புரிந்தோர் பேரின்பமடைவரென்பதும் மெய்க்கடவுள் கட்டளையென விவேகிகள் கூறுவர். உலகில் பசுக்கள் எப்போது கொலைமுதலிய துன்பமடையுமோ அப்போது மழைமறுத்து மன்னுயிர் பலவும் வருந்துமெனவும் அவைகள் நன்கு பரிபாலிக்கப்படும்போது உலகுயிர் செழித்தோங்குமெனவும் உண்மைநூல் கூறுவதை அவ்வக்கால அனுபவத்தோடொட்டி மேன்மக்கள் அறிவர். நல்லறிவும் ஜீவகாருண்யமும் எட்டுணையுமில்லாப் பெரும் பாவிகள் பலர் பல்லிளமையிலே "எட்டிபோடு கூடிய நிவேதிப்பட்டதென்ன" எல்லாவுயிரும் இங்ஙனம் வருந்தநேர்ந்த அனுபவமுமே மேலோர்க்கு விளங்குமென்க. இதனால் பசுக்கொலையையும் உயர்திணைக் கொலைபோலக்கொண்டு அது உலகில் நிகழாவண்ணம் தடுத்து உலகோரம்புதல் நிதிமன்னர்க்குக் கடப்பாடென்பதுமுண

Koviloor Digital Library

[illegible]

க. ஓர் பசுக்கன்றைத் தேருர்ந்து கொன்றமைக்காகத் தமது அருப்புதல்வனைத் தேர்க்காலூர்ந்து அரிய பெரும் புகழ்பெற்ற திருவாரூர் மநுநீதிகண்ட சோழமகாராஜாவினுடைய புண்ணியசரிதத்தை யாது விரிப்போம். இங்கு விரித்திடுக.

இனிப் பசுவைச் சுத்தாத்மாவென்று காட்டியபடிப் பன்றிமுதலியவற்றை அசுத்தாத்மாவென எதிர்வைத்துக்கண்டுகொள்க. உயர்திணையாகிய மாந்தருள்ளும் இங்ஙனம் “ஜீவகாருணியமுதலிய” பண்புகொண்டொழுகுவோர் சுத்தாத்மாக்களெனப்படுவர். அவர் செப்புவகையால் பக்தரென்றும் அடியவரென்றும் ஞானிகளென்றும் தாபதரென்றும் அந்தணரென்றும் சொல்லப்படுவர். அங்ஙனமல்லாதார் அசுத்தான்மாக்களோராம். இனி நல்ல நிலத்திட்ட விதைகள் விளைந்து மிகப்பயனளிப்பதுபோல இந்நலமேலார்க்குச் செய்யும் தானமுதலியவை பெரும் பயன் கொடுக்கும். களர்நிலத்து விதைபோல் ஏனையோர்க்குச்செய்யும தானாதிகள் பயன் குறைவுமெனக. இனி ஜீவகாருணியமுடையார் மன்னுயிர்கட்குச் செய்யும் இதங்கள் பலவுளவாயினும் அவற்றுள் மிகச்சிறந்தன சில. அதாவது பசிக்குணவளித்தல் முதலியனவாம். இனி உயிர்கட்கு வருந்துன்பங்களில் இப்பசித்துன்பமொன்றே மிகக்கொடியதும் சகிக்கொணாததும் என்றும் மாறாததும் எதிலுந்தீராததும் உடனே பரிகரியாவிடில் மரணத்தைப் புரிவதுமாம். இதுபற்றியன்றே

“ஒருநாளுணவையொழியென்றாலொழியாய்
இருநாளைக்கேலென்றாலேலாய்—ஒருநாளும்
என்னோவறியாயிடும்பைகூரென்வயிறே
உன்னோடுவாழ்தலரிது”

“மானங்குலங்கல்விவண்மையறிவுடைமை
தானந்தவமுயற்சிதாளாண்மை—தேனின்
கசிவந்தசொல்லியர்மேற்காமுறுதல்பத்தும்
பசிவந்திடப்பறந்துபோம்.”

என்றிங்ஙனம் பெரியோர் பணித்தாரென்க. இனித் தாகத்தால் வருந்துன்பமும் இத்தன்மைத்தாமே. இதுபற்றியன்றோ நம் பெரியோரும் முன்னைய மன்னரும் இக்காலத்துப் பல பெரியோரும் அளவிறந்த அன்ன சத்திரம் தண்ணீர்ப்பந்தர்களை நியமித்துப் பெரும் புண்ணியந்தேடுவோராயினர். இனி மாந்தரெல்லாரும் பொதுவில் தானபாத்திரராயினும் இந்தத்தேகாதி பிரபஞ்சஅநித்திய வாழ்வை விரும்பாது தமமுடனுயிர்க்குவரும இன்பதுன்பங்களையும் சட்டைசெய்யாது நிராசையராய்த்திருவருளை நாடிநிற்கும் மெய்த்தவராகிய ஞானிகளே முதற்பாத்திரராவர். இவர் பசிக்குதவிய அன்னம எண்ணத்தொலையாத

Koviloor Digital Library

[illegible]

றும் அது மலையினும் பெரிதாய் வளர்ந்து பெருநலம் பய க்குமென இறைவனால் புகலும். இவர்பெருமை சாலப் பெரிது. இனித் தொழில்செய்து ஜீவனஞ்செய்யச் சக் தியில்லாத குருடர், செவிடர், மூடவர், நோயாளர், வயோதிகர், பாலர், அநாதைகளென்னும் இன்னோரன்ன பிறரெல்லாம் இரண்டாம்பாத்திரராவர். இனி இடம்பெ ருள் ஏவல் அமைப்பெற்றும் ஆசையால் பிறர் பொ ருள் விரும்புவாரும் சமயநெறி நில்லாது ஒழுக்கம் பிறழ் ந்து நிநெறிச்செல்வாருமாகிய பிறரெல்லாம் அபாத்திரரெ ன்பது நிர்ணயமாம்.

இனி இந்தியாவிலுள்ள சத்திரபதிகளாகிய பெரியவர் விதி விலக்குகளை ஆராய்ந்து தருமம் புரிவரேல் மிகப்பயன் பெறுவர். இதுநிற்க; மேலே "முற்காலமன்னர் என்று காட்டினமையால், இக்காலமன்னர் அது செய்வதின்றோ வெனின், இக்காலமன்னர் அன்னந்தண்ணீர் அளிப் பதைக்காட்டிலும் நோய்தீர்ப்பதும் கல்விகற்பிப்பதுமே சிறந்த தருமமெனக்கொண்டு, வித்தியாசாலைகளையும் ஆஸ்பத்திரிகளையும் மிகுதியாய் நடத்திவருகின்றனர். இவைகள் சிறந்ததருமமேயாயினும், இது முன்னையதைக் காட்டிலும் சிறந்த தருமமாகாது. தொழில்செய்து ஜீவ னஞ்செய்யச் சக்தியில்லாதவர்களும் குருடர், மூடவர் வயோதிகர், அநாதைகள் முதலினோர் அறக்கூழ்ச்சாலை யை அவாவுவதுபோல் வைத்தியசாலை வித்தியாசாலை களை ஒர்போதும் விரும்பார். இனிக் குருடர் முதலியவர் கட்காக (லங்கர்கானா வென்கிற) ஓர்வித அறக்கூழ்ச்சா லை ஏற்படுத்தியவிடத்தும் அது பசிக்குணவுதேடி உட லோம்புவதின்மட்டுமே நோக்கமுடைய அவ்வறியோர்க்குப் பயன்படுமேயன்றி, அங்ஙனம் வயிறோம்புகிற மிருகா திகளுக்கும் தங்களுக்கும் வேறுபாடு பெரிதாதலைத் தெரி ந்து அங்ஙனம் உயர்ந்த இம்மானுட ஜன்மம் பயன்படு வது அநித்தியப்பிரபஞ்சத்தில் வேறொரு நித்தியப்பயன் ஒன்றுண்டென்று தெரிந்து அதை அடைய முயல்வதால் தானென்றும் அங்ஙனமடைவதற்குச்சமயநெறியே ஆதா ரமென்றும் இவ்வுலகில் சமயங்களனேகமென்றும் யாதா யினுமோர் சமயநெறிபற்றி அதற்குரிய பயனடைய முய ல்பவன் அச்சமயவொழுக்கத்தோடு மாறுபட்ட ஆசாரங் களுடைய வேற்றுச்சமயத்தாரிடத்தில் கலந்து புசித்தல் சமயவொழுக்காகாதென்றும் இங்ஙனம்விசாரித்துணர்ந்த சமயப்பற்றுடைய ஏழைகள் பசியினால் தங்கள் உயிர் இற ப்பினும் அதனைச் சட்டைசெய்யாது வருங்கால இன்பத் தையே விரும்புவாராதலால் அவர்கள் (சமயவொழுக்கங் களை முழுதும் நாசப்படுத்துவதாகிய) மேற்கண்ட அறக் கூழ்ச்சாலைகளைக் கனவிலும் விரும்பாரென்பதை அநுப வத்தாற் பலருமறியலாம். ஆதலின் இக்கோகலாழ்வி

Koviloor Digital Library

[illegible]

னும் பாமேலாகவாழ்வே மிகச்சிறந்ததெனத் தெரிந்து அதனை விரும்பியிருக்கும் ஆரியர்களாகிய நாம் அங்ஙனமதற்குரிய பரிபாகம் வராது இகலோக போகப் பெருஞ்சுகம் அனுபவிக்கக்கிடைத்த பாக்கியசாலிகளாகிய நமது தற்கால மன்னவர் நமக்கு எல்லாவிதத்திலும் வேறுபட்டவராக விருப்பதை அறிந்திருந்தும் இதுவிஷயமாய் அம்மன்னரைக் குறைகூறுதல் சிறிதும் உசிதமல்லவென்றொழிக.

இனி அன்னர் தன்னிரவித்து மன்னுயிர்களை ஆதரிப்பதோ ஒப்பில்லாப் பெருந்தருமமென்றிருநாலும் கூறினோம். இனி அதனினுஞ் சிறந்ததொரு பெருந்தருமமுண்டென்பதை இங்கு விளக்குவாம். அதாவது "வித்தியாதானமென்றுணர்க." வித்தையென்பது எல்லாத் தொழிலுக்கும் பொதுவாய் நிற்கும் பெயராயினுஞ்சிறப்புவகையால் கல்வியென்றற்கே நிலைக்குமென்க. அன்னந்தண்ணீர் ஓர்போதுள்ள பசிதாகத் துன்பத்தை நீக்கும். கல்வியோ உடலுள்ளமட்டும் அவற்றைப் பரிபாலிக்கத் தக்க ஆற்றலையும் அறிவையுந்தரும். அது சற்று மிகுந்தால் நோய்செய்யும்; இதுமிகுக்குந்தோறும் இன்பமிகும். அதைச் செலவுசெய்யக் குறையும்; இது செலவுசெய்ய வளரும். இதனுள்தனிடையே வேற்றுமை பெரிதாம். இனிச் சிவஞானோபாய உணர்ச்சியைப் பயந்தநிற்கும் சாமானிய லௌகிகக் கல்வியே இத்தனை சிறந்ததாயின் ஆத்மலாபோபாய சமயவுணர்ச்சியைப் பயந்துநிற்கும் வைதிகக் கல்வியின் பெருமை அம்மம்ம! எமமாலளவிட்டு முடிக்கப்போமோ? கடவுருண்மை, ஆத்மவுண்மை, கன்மவுண்மை, பந்தமோக்ஷவுண்மைகளை உணர்த்துவது சமயக்கல்வியாம். கொலை, களவு, கள், சூது, பொய், பொறாமை, பேராசை, கோபம், தாக்காமம், டம்பம், லோபம், மயக்கம் முதலிய நிக்குண நிஷேதொழுக்கங்களை மாற்றுகொல்லாமை, கள்ளாமை, கள்ளுணாமை, சூதபுரியாமை பொய்யாமை பொறுமை, நிராசை, சாந்தம், இந்திரியமடக்கல், அடக்கம், உதாரம், ஞானம் முதலிய சற்குண நல்லொழுக்கங்களை விளைவிப்பது சமயக்கல்வியாம். பிரமாண்கொண்டு மேலோச்சினும் மனநிம்மா ஆக்கிதருவது சமயக்கல்வியாம். நாலம், ருக்குமம், அதிருக்குமம், நித்தியம், அநித்தியம், கண்டம், அகண்டம் என்பனவாதி பண்புகளமைந்த தத்வதாத்விகப் பொருள்களின் நிலைமைகளுணர்த்துவது சமயக்கல்வியாம். சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் பாகுபாடுகளையும் அவற்றின் பயன்களையும் தெளிவமைப்பதுசமயக்கல்வியாம். இந்தச் சரீரத்தையே அழிப்பொலாக்கவும் பலபோலாக்கவும் அளவில்காலம் அழியாதிருக்கவும் கொண்ட தகமைந்த இடம்

Koviloor Digital Library

[illegible]

பொருள் எவலாதிகளை அடையவும் ஆற்றல் தருவது சமயக்கல்வியாம். ஆஸ்திகருமாகாமல் நாஸ்திகருமாகாமல் வேறு விசாரம் யாதுமின்றி உண்டுறங்கிக் காலம்போக்கி யுலாவுஞ் சோம்பர் சிலர்தவிர இவ்வுலகத்திலுள்ள மற்றெல்லா மனிதரும் ஒவ்வோர் சமயச்சார்பினையுடையவர். சமயங்கள் எண்ணிறந்தன. எல்லாம் ஒரு நிலையுடையனவல்ல. அவற்றுள் தத்துவதாரதம்மியங்களின் உண்மை நிலையை உள்ளவாறுணர்த்தி மேம்பட்டு நிகழ்வது ஆரியராகிய நாம மேற்கொண்ட மெய்ச்சமயமாம். காண்டல் கருதல் உரை யென்னும் அளவைகள் கொண்டளந்து மெய்ப்பொருள் காண்டற்குரிய நம் சமயச்சார்பால் எய்துதற்கரியதாவது உலகில் யாதொன்றுமில்லை. இவ்வுண்மையெல்லாம் பின்னர் விரிவுவிரிதாக வெளிப்படுத்தப்படும். சமயவிசாரமில்லாத மாந்தர் எத்துணைப்பெருஞ்செல்வம் பெற்றவராயிருப்பினும் அவர் தம்முயிருக்குறுதி செய்துகொள்ளமாட்டாதவராதலால் அவர் தோற்றத்தில மனிதர்போன்றிருப்பினும் உண்மைத் தன்மையில் இருகால் விலங்குகளென்றே நிச்சயிக்கப்படுவரென்க. இதனால் சமயவுணர்ச்சியைத்தரும் வித்தியாதானமொன்றே ஏனைய அறங்களிலெல்லாம் தலைபாய்ச் சிறந்ததென்பதும் "ஜீவகாருண்ய மியர்கள்" கடைப்பிடித்துச் செய்யத்தகுவது அதுவேயென்றும் நிச்சயிக்கப்பட்டது. உத்தமோத்தமசமயமாகிய நம்மாரியசமயம் தழைத்தோங்கும்பொருட்டு அச்சமயவுண்மைகளை வித்தியாசாலைகளிற்படிப்பிப்பதும் புத்தகங்கள் பத்திரிகைகளால்வெளிப்படுத்துவதும் அதுநெறிநேராக்கொண்டு ஏனையோர்க்குப் போதிப்பிப்பதும் இன்னோரன்ன காரியங்கட்குப் பொருளுதவி செய்வதும் ஆகிய சமயபரிபாலனம் மற்றைய, தேவாலயம் அன்னசத்திரம் தண்ணீர்ப்பந்தர் வைத்தியசாலை முதலிய எல்லாத்தருமங்களிலும் மேலாய்ச்சிறந்ததே ஆத்மலாபம் பயக்கத்தக்க பெரும் புண்ணியமாயிருக்கின்றதென்க. சமயவுணர்ச்சியுதித்துமில்லாதார் கோயிலுக்குஞ் செல்லாராதலால அதனினும் இதுவே சிறந்ததென்பது வெளிப்படை.

இஃதுணர்ந்தன்றோ கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த மகாபுருஷர்களாகிய நமது ரவிகுல ராஜா பாஸ்கர சேதுபதி வள்ளல் முதலியோர் இப்பெரும் புண்ணிய முயற்சியை மேற்கொண்டார்கள். சமஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டுபாஷைகளே நமதாரியசமயவுண்மைகளை நிறைந்து அக்கமயச் சிறந்ததும் அவ்விருபாஷைகளில் வல்ல இரண்டு பண்டிதர்கள் இத்தென்னாட்டிலவதரித்ததும் அவ்விருவரும் இரண்டு பத்திரிகைகளைத் தோற்றுவித்ததும் அவ்வண்ணமே நமக்களுட்சேர்த்த 'புண்டரீகபுரத்தி'

Koviloor Digital Library

[illegible]

விஷ்ணு நடைபெறுவதும் அவ்விரண்டும் 'ப்ரம்மவித்யா' ஸுதாரஞ்ஜினி' என்னும் காரணக்குறியீடு பெற்றதும் அவ் விரண்டிக்கும் பாஸ்கரசேதுபதி வள்ளல் பெருங்கொடை வள்ளலாராய் மகிழ்ந்ததுமாகிய இவ்வொற்றுமைகள் நம் மைக்காக்கும் நடராஜன் திருவருளால் சேர்ந்ததன்றோ? இது நம்மவர்க்கோர் நற்காலமன்றோ? மற்றும் நம் நாட்டில் அநேக செல்வப்பிரபுக்கள் இதனைக் கவனிக்காமலி ருப்பது வியக்கத்தக்கதே. இனி எல்லாப் புண்ணிய புரு ஷர்களும் இக்காரியத்தில் முந்துவார்களென்று திருவருளைச் சிந்திக்கின்றோம். இதுநிற்க; "ஜீவகாருண்யம்" என்பது கொல்லாமை முதலான அங்கங்களை உடைய தென்றும் அது எல்லாத் தருமங்களிலும் முதன்மைபெ ற்றதென்றும் அது சிறப்புவகையால் நம் சமய பரிபாலன த்தில் வந்து விலக்குமென்றுங் கூறிமுடித்தோம்.

இனி விதவாவிவாகம்நடைபெறுவித்து விதவைகளின் துன்பங்களைத் தீக்கவந்த நமது சில இக்காலப் பிரபு க்களும ஜீவகாருணியசீலரன்றோ? வேவின் அவர்களும் ஜீவகாருணியர்களே!———ப்பவரும் ஜீவ காருணியர்களே! ஏன்? குடியர் குடிப்பதினலன்றோ கன்ட்ராக்டர்களுக்கு லாபமுண்டாகி அவர்கள் பெண் டாட்டி பிள்ளைகளோடு சந்தோஷமாய் வாழ்கின்றார்கள். இவர் குடியாவிட்டால் அவர்கள் கஷ்டமடைவார்களல்ல வா? தேவடியார் வீடு காத்திருக்கும் நம்மூர் விடபுருஷர்களும் ஜீவகாருணியர்களாம். இவர் பணங்கொடாவிட்டால் தேவடியார் உண்டி உடை முதலியவற்றிற்கு முட்டுப்படுவோர்களல்லவா? இனித் தனது வைப்பாட்டிகள் கன்னுக்காரர் முதலியவருடைய கஷ்டத்தைத் தீர்க்கும் பொருட்டே திருடர்கள் கொள்ளையடித்துச் சம்பாதிக்கி றபடியால் அத்திருடர்களும் இம்முறையில்ஜீவகாருணிய முடையவரேயென்று முடிவுசெய்க. இனிச் சிதிக்தவர் கள் பசுவி மிருகங்களுக்குஆத்துமாவில்லையென்று கூறும் ஆபாசத்தைப்பற்றி மற்றோர் பத்திரிகையில்விசாரிப்பாம். இனி இப்பத்திரிகையில் அநேக விஷயங்கள் தொடர்ந்து வருமாகையால் நமது நண்பர்கள் தங்களிஷ்டர் பலருக் கும் இப்பத்திரிகாபிவிர்த்தியைப்பற்றிச்சொல்வார்களாக.

சாமிநாதன்.

விக்கிரகாராதனம்.

ஐயா! எவர் வேதவாக்கியங்களில் விசேஷ விசுவாசம் வைத்திருக்கின்றார்களோ அவர்க்கு அவசியம் பிம்பவழி பாடுண்டு. அதற்கு வேண்டிய பிரமாணங்களையும் முன் னரே எடுத்துக்காட்டினோம். அவைகளில் வேதப்பிர

Koyiloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

மாணங்களும் ஸ்மிருதிப்பிரமாணங்களும் காட்டப்பட்டன இவி மேற்றிசைப் புன்மதத்தர்களில் ஓர் சார்பார் சில பொம்மைகளைப் பூசைசெய்வதுபோல் ஆரியராகிய நம்மவர் செய்வதில்லை. பின் வேதாகமங்களில் உள்ள மந்திர பூர்வ சம்ஸ்காரங்களால் பகவத் ஸாந்நித்தியம்பெற்ற திருவுருவங்களையே யாம பூசிப்பது. எமக்கு மந்திரங்களே குலதனம். அம்மந்திரங்கள் வைதிகம என்றும் தாந்திரிகம் என்றும் இருவகைப்படும். அவைகளை முறைப்படி அனுஷ்டித்தால் அதனுல் மனிதர் அடையும் பயன் இவ்வளவென்று சொல்ல முடியாது. இமமந்திரங்களாற்றான் முற்காலத்து வைதிகர் அளவற்ற பெருமை பெற்றார்கள். இக்காலத்தும வெகு சிரமப்பட்டுச் சிற்சில மந்திரங்களைச் சிற்சிலர் கண்டுபிடித்து ஸாதித்து அதனுல் சில வற்புதங்களையும் செய்துவருகிறார்கள். அம்மந்திரங்களுள் வைதிக மந்திரங்கள் கடவுளாது உயிர்த்தல்எனவுபசரிக்கப்படுதலால் அநாதிசித்தமாய் அபௌருஷேயமாய் உள்ளன. இவ்விஷயத்திற் சிலர் ஐயமுற்றுச் சில கூறுவதுண்டு. அவர் கூற்று வருமாறு "வேதங்களில் கண்ட பொருள் என்றும் மாறுதலையுள்ளது. சொற்கள் அப்பொருள்களுக்கேற்ப அவ்வக்காலத்துப் பண்டிதர்களால் சேர்க்கப்பட்டிருக்கலாம். (இங்கு பண்டிதர் எனக்குறித்தது ஆதிகால மகரிஷிகளையே) ஆதலாற்றான் "கடவுள் பிரமனுக்கு வேதங்களையும் பொருளையும் உபதேசித்தருளினார்" என வேதமே சொல்லுகின்றது. அவ்விதம் பரமனிடம் பிரமன் கற்ற சொற்களிலாப் பொருள்களுக்கேற்பச்சொற்களமைத்தகாலம் சொற்பமே" என்பது. இது மிக அவலம். என்னையெனில், இவ்விதங்கூறுதற்கு இடையூறு வெகுவாயுளது. வேதங்களுக்குத் திருவுருச்சொல்லேயன்றி வேறில்லை. அவைகள் "சப்தப்பிரதானம்" என்று பெயர்பெற்றன. அவைகளுள் சொல்லே பிரதானம் என்பதற்குச் சாக்ஷியம் வேண்டுமேனுல் அம்மந்திரங்களையுச்சரிப்பதில் எழுத்துக்கள் மாறி உச்சரிக்கப்பட்டால் அதனுல் வருங்கேடுதிதே போதுமானதாகும்" இவ்விஷயம் வைதிக தாந்திரிக இருவகை மந்திரங்களுக்கும் உளதே. இனித் தாந்திரிகமந்திரங்களில் இக்காலம் அநுபவவிஷயத்தில் வரக்கூடியது இது. கேளுங்கள்! கருடன் என்னும் தேவனைக்குறிக்கும் பஞ்சாக்ஷரம் என்னும் மந்திரம் ஒன்றுண்டு. அது சர்ப்பம்முதலிய விஷங்களின் பிரயோகங்களுக்கு விசேட உபயோகமாகும். அமமந்திரத்தைப் புரச்சரணஞ்செய்து அமமந்திரம் சிந்தித்தால் பிறகு சில வெழுத்துக்களை மாற்றுதலாலும் வேறுவிதமாகவுச்சரித்தலாலும் விஷங்களை இடம்மாறச்செயல் ஏற்றல் இறக்கல் தடுத்தல்முதலிய பல பிரயோகங்கள் செய்யலாம்.

[illegible]

இம்மந்திரத்திற் பிரதானம் எழுத்தே என்பது நிச்சயம். வேதமந்திரங்களும் அவ்விதமேயாவதில் தடை ஏதுமில்லை. இனி வேதங்களில் மந்திரபாகங்கள் அவ்விதமிருந்தாலும் மற்றைப் பாகங்கள் அநாதியல்லவேயெனவுங் கூடாது. அவ்விதஞ் சொல்லின் விதிபாகம் பிரமாணம் எனவும் விதிஅப்பிரமாணம் எனவும் சொல்லலாகாது. சில விடம் விருத்திராசுரவதம் முதலிய கதைகள் வேதங்களிற் காணப்படுவதும் அவைகளுக்கு எக்காலத்து சம்பவமும் விஷயமேயாதல்பற்றி யென்றறிய வேண்டும். வேதம் முக்காலத்தும் உளதாதலால் சில நிகழ்வதுபோலவும் சில காரியங்கள் நடந்தனவெனவும் சில வருவனபோலவும் கூறுவது அதனியல். இனி வேதவாக்கியங்களும் புருஷர் எழுதியதாயின் "எழுதாமொழி" என அவைகளை வடநூலார் வழங்கும் வழக்கம் எங்ஙனம் ஒவ்வும்? அவைகளைப் படித்திடில் நற்பயனுண்டாம். அவைகளைப் படிக்காதொழியின் கருதியபயன் கைகூடாது. மேலும் வேதங்களிற்கண்ட பொருளையே வெளியிடும் இயல்பினவான தருமசாஸ்திரங்களுக்கும் வேற்றுமையும் ஒழியும். இப்பொழுது அவை பௌருஷேயங்கள் எனவும் மற்றவை அங்ஙனமல்லவெனவும வேற்றுமை உண்டு. வேதங்கள் என்றும் கேள்வியில் முதல்படுவதால் "சுருதி [கேட்கப்படுவது] என்றும் தருமசாஸ்திரங்கள் நினைக்கப்படுவதால் ஸ்மிருதி (நினைக்கப்படுவது) என்றும் வழங்கப்பட்டுவரும் அநாதிவழக்கும் ஒழிந்திடும். வேதவாக்கியங்களைக் கேட்பதாலும் பாராயணம் செய்வதாலும் பற்பல நற்பயன்களைக் கூறும் நூல்களும் வீண்வாக்கியங்களாகும். வேதங்களுள் ஒரு மந்திரத்தை பலதடவை உச்சரிப்பதில் அதிகப்பயனுண்டு. பொருளே முக்கியமாயின் ஆவர்த்தி செய்வதில் அதிகப்பயன் எப்படிக்கூடும். படிப்பதில் சுவரம் கெட்டால் பொருளுக்கு ஏதும் குறைவில்லையாயின் சுவரங்களை நியமப்படுத்திய நூல்களின் பயன்தானேது?

அசனுற்றுன் வித்தியாருதர் முதலிய கவிவாணர் 'வேதங்கள் சப்தப்பிரதானம் பிரபுபோன்றன" எனவும் எழுதினர். அதிகம் எழுதுவதில் பயன் ஏதுமது. வேதங்கள் சப்தப்பிரதானம் என்பது கண்மேலெழுத்து. ஆதலாற்றான் ஆகமங்களில் பிரதிமைகளில் தேவதா ஸாந்நித்தியம் உண்டாகவேண்டிப் பல வைதிகமந்திரங்கள் ஹோமங்களில் விநியோகப்படுகின்றனவன்றிப் பல மந்திரங்கள் ஆவர்த்தியும்செய்யப்படுகின்றன. பிம்பங்களில் பிரவேசம் கும்பங்களில் பிரவேசம் இவைகளும் செய்வது வேதமந்திரங்களாற்றான் அதனுலே கும்பிரோக்ஷணங்கள் அநேகம் செய்யப்படுகின்றன. மந்திரங்களின் மகிமையிரக்ஷம் என்னும் விசேஷங்களால் சிறப்பு. சங்காரதிகள் சோக

Koviloor Digital Library

[illegible]

ஸ்ரீவத்ஸவம்ஶ ஸம்பூதாநாம் [illegible]

ஸப்படுகின்றன. மேலும் மூலயந்திரங்களைக் கொண்டு செய்யும் வினைகளில் சில பிரயோகங்களைச்சேர்த்து அவற்றையும் செபித்தால் அவை வெவ்வேறு பயன்களைத் தருவனவாகின்றன. உலகத்தில் ஒவ்வொரு ரோகங்கள் ஒழியவேண்டுமாயின் ஒவ்வொரு பதார்த்தங்களைச் சேர்ப்பதுபோல் ஒவ்வொரு பயனுக்குமாறு ஒவ்வொரு பீஜங்களைச் சேர்த்து ஜபிக்கவேண்டுவதுசிதம். இனி ரோகவியலறியாதான் ஒருவித மருந்தைக் கூட்டினும் குறைப்பினும் அது பொருள்படா தொழியுமாறுபோல் அவ்வக் கருமங்களினியலறியான் ஏதோ சில பீஜங்களைச் சேர்த்தும் குறைத்தும் விடுவானேல் அது விபரீதப்பயனளிப்பதில் சந்தேகமில்லை. இத்தேசத்தில் வைத்தியத்தில் சிறிதும் பயிற்சியற்ற இழிகுலத்தவர் செய்யும் வைத்தியம்பயனற்றதாக லௌகிக சாஸ்திரம் பொய்யென மாந்தர்நினைத்தலைதுபோல் மந்திரவியலறியாத மாந்தர் செய்யும் விபரீதப்பிரயோகத்தால் அடியுடன் ஜனங்களுக்குமந்திரவிசுவாஸமே ஒழிந்துவருகின்றது. இக்கலிகாலத்தில் சோம்பலுறைந்தவனேகர் வேதங்களின் விசுவாஸமின்றிச் சிறிதும் சம்சயமுள்ளவராய்மந்திரங்களை ஒருவாறு உச்சரித்து உடனே ஸித்தியைக்காட்ட விரும்புமுன்னவராய் வீண்காலப்போக்குச்செய்து மந்திரங்களை அவமதிக்கிறார்கள்; பொய்யெனவும் சொல்லுகிறார்கள். பரபாஷைப் பயிற்சி மிகுந்த பலரிடம் இவ்விஷயம் எளிதில் அகப்படும்.

மற்றது வரும்.

இங்ஙனம்,

மொழிபெயர்ப்பு

இலத்தூர் சுந்திர ராஜசாஸ்திரி

[illegible]

ப்ரஹ்மவித்யா.

[illegible]

சிதம்பரம்:— சந்தஜனுா வைகாசி மீ 30உ

[illegible]

ஆரியருக்கு ஓர் அறிவுறுத்தல்.

[illegible]

ஐய,

இக்காலத்தில் ஆரியருள் தோன்றும் பலவிதவாபத்துகளில் தமது பிள்ளைகள் மதாந்தரத்தில் வீழ்வது பெரி

[illegible]

தாய் இருக்கிறது. இதற்குக்காரணம் இன்னதெனத் அறியாதத் தெரியாத பல புலவர் வீணில் தாறுமாறாய் ஏதேதோ சொல்லிக் கூடிகங்களை பிதற்றுகின்றனர். ஏதோ குடி அதிகரிப்பதைத் தடுக்கச் சர்க்காருக்கு அதிகத்தீர்வை கள்ளின்பேரில் விதித்தல்வேண்டும். விபசாரம் அதிகப்படுவதைத் தடுக்கக் கைம்பெண்களுக்குக் கலியாணம் செய்விக்கவேண்டும் என்றும் நமது நாட்டில் தோன்றும் வறுமையைத்தடுக்க உள்ளவர் நம் நாட்டை விட்டு மேனாட்டுக்குக் கடல்கடந்து பிரயாணஞ்செய்யவேண்டும் என்றும் எமது தேகவலி குன்றிவருவதைத்தடுக்கப் பெண்களின் சம்போகவயதை நீளப்படுத்தவேண்டுமென்றும் திருட்டு அதிகப்படுவதைத் தடுக்க ஏழைகளுக்குக் கஞ்சித்தொட்டி வைக்கவேண்டும் என்றும் ஆலோசிப்பதுபோல் இக்காலத்தில் பிள்ளைகளைக் கெடுதியினின்று தப்பவைக்க எங்கும் பிரசங்கங்களும் பத்திரிகைகளும் வேண்டும் என்கிறார்கள். இவைகள் வேண்டுவது ஓர்புறமிருக்கமற்றோர்புறத்தில்ஆலோசிக்கவேண்டியது ஒன்றுண்டு. மேற்கண்ட பிரசங்கம் பத்திரிகை முதலியன புறமதப்பயிற்சி யுண்டானபிறகு அந்நோயைத் தொலைக்கும்வழியேயன்றி வேறில்லை. உலகத்திற் புத்திமானுமுள்ளவன் தனக்குண்டாகும்நோய்களை யறிந்து உண்டாகும பருவத்தே தொலைத்திட முயலுவானன்றிஉண்டானபிறகு அதற்குமருந்துதேடிப்பத்தியமிருந்து கஷ்டப்பட்டு பின்னிட்டு அந்த ரோகம் அசாத்தியம் என்று வைத்தியர் சொல்லிட, உள்ளவரையிலும் துன்பப்படுவோனுமி கிற்கமாட்டான். ஆகவே இக்காலத்துதித்த வாலிபர் தமது அருமைப்புதல்வரை புறச்சமயப்படுகுழியில் சேர்க்காவழி தேடுவதே உசிதம். இனி இளங் குழந்தையை ஓரிடமிருத்தி அங்கு பாஷாணக்கட்டியையும் கற்கண்டையும் கலந்து பாஷாணமென்று அக்குழந்தை யறியாமையால், அருந்தி வருந்திடஉடனே பாஷாணவைத்தியர்தேட முயன்று வைத்தியம் அச்சமயம் கைகூடாதுபற்றி குழந்தை உயிர்துறந்திட நேரிடின் பிறகு பிதற்றுவதுசிதமா? அது போல் பிள்ளைகளைப் பெற்று அவர்களைச் சீராட்டி ஏதோ சிலவித சுகத்தை அவனால் பெறலாம் என விரும்பி அந்தோ! இம்மை மறுமை இருமையும் பயக்கும் புத்திரப்பேற்றை அடிபட விழக்கவழியாய் மேற்றிசைப்பாதிரிமார் வைத்தாளும் பள்ளிகளில் விட்டுவிடுகிறார்கள். அந்தோ! என்செய்வோம்! இவ்வாரிய ஜாதியாருக்குப் பிள்ளைகள் என்பது இருமைப் பயனை விளைவிக்கும் பெருங்கருவி. இவருக்குப் பிள்ளையில்லாவிடில் வேறு பிள்ளைகளைக் கடன்

Koviloor Digital Library

[illegible]

வாங்கிபோவது (அதிகாரம் பண்ணிக் கொண்டாவது) அவளால் தாம் பெரும் பேற்றடைவதாய் எண்ணியிருக்கிறார்கள். அவ்விதமே அநுஷ்டித்தும் வருகிறார்கள். மிக்க. இவர்களுக்குப் பிள்ளைகள் உயிர்துறந்த பிறகும் செய்யவேண்டிய மறுமையுபகாரங்கள் பலவுள. அவர்கள் செய்யும் சம்ஸ்காரத்தால இவ்வாரியர் நல்லுலகம் பெறுவதாய் ஆமோதிக்கத்தக்க நூல்கள் பலமுறையிடுகின்றன. "நாபுத்ரஸ்ய லோகோஸ்தி" என்பதாதி பல வசனங்கள் புத்திரரில்லாருக்கு நல்லுலக மில்லை எனப் புத்திரரில்லாரை நிந்திக்கவும் நிந்திக்கின்றன. இத்தேசத்தவர்க்கு புத்திரவாத்ஸல்யம் மிகவதிகம். பெற்றபிள்ளை எவ்வளவு மந்தனும் முட்டாளாயினும் அவன் கைக்கொள்ளி கிடைத்தால் போதும் என்று அவனைபாதரித்து நடத்துவது பெரும்பான்மையில் வழக்கம். இனித் தகப்பன்பிள்ளைகளுக்கு எவ்வித மனஸ்தாபங்கள் நேரிடினும் ஒவ்வொருபிள்ளையும் பிதாவும் ஒருவர்க்காபத்து நேர்ந்தால் மற்றவர் அதற்குச் செய்யவேண்டிய சடங்குகளைச்செய்தே தீரவேண்டியதாய் ஏற்பட்டிருக்கிறது. மிக்க. இங்ஙனம் பெண்களும் பிறந்ததுமுதல் அருமையாய் காப்பாற்றப்படுவதுமன்றி அவர்களை நல்லவரனுக்குக் கன்னியாதானம் செய்தால் அதனால் வரும் பயன் அளவற்றதெனவும் இருபத்தியொரு தலைமுறை கரை ஏறும் எனவும் மற்றும் பெற்ற பிள்ளைகள் இல்லாதவர்க்குப் பெண் வயிற்றுப் பிள்ளைகள் செய்யும் சம்ஸ்காரமும் சற்கதியளிக்கும் எனவும் அப்பெண் ஒரு சமயம் கெட்டால் அதனால் அவள் பிறந்தவிடமும் புகுந்த விடமும் இரண்டும் வீணில் கெடும் எனவும் மற்றும் பல வழியாலும் பெண்கள் இவ்வாரியருக் குபயோகமானதுபோல் மற்றெத்தேசத்தாருக்கும் உபயோகமாகமாட்டார். இனிப் புருடன் பெண்டிர்களுக்கும் உதவுவது மிருகாதிகளுக் கொப்பான ஓர் சங்கதி மட்டில் மற்றவற்கு. சம்மதத்தே அநேக சங்கதிகளில் ஒருவர் இறப்பினும் மற்றவரால் அவர்க்கு மறுமையிலும் உபகாரம் உண்டாவதாக வேத மதசாஸ்திரங்களியம் அவ்விருவர்க்கும் உண்டாகும் சம்பந்தத்தையும் அதமிருமையும்விளக்கும்என்பதையும்ஆரியசாஸ்திரங்களேயமைத்திகப் படலத்துட் காணலாம். இங்கு விரிக்கிற்பெருகும். இவ்விதம் குடும்ப சம்பிரதாயம் என்று ஒன்று இத்தேசத்தில் நடைபெற்று வருவதால் ஒருவருக்கொருவர் பலவித பந்தம் உண்டாகி ஒற்றுமையுடன் சுகமாய் வசிக்க வழியுண்டு. தேசாந்திரங்களில் இக்குடும்ப சம்பிரதாய மின்மையால் பலதிக்கிலப்போல் ஏதோவிருப்பினாலும் கூடியும் பிறகு பிரிந்தும் திரியவேண்டியவ பகை அதனிடம் வாய்க்கமுடியாதது ஓங்கிவளர்கின்றது.

Koviloor Digital Library

[illegible]

ஆனால் கலிகாலத்தில் ஒருவன் பணம் சம்பாதித்தால் அதற்கு எவனேனும் பாத்தியஸ்தன் தோன்றுவானேயன்றி அது வாரிசற்று அரசனிடம் சேராது. எங்கேனும் சேர்வது மிகப்பிரயாசை. ஆயின் கலிதோஷத்தில் பணஞ்சம்பாதித்தால் அது பலருக்குப் போகுமா பெருக்கப் படுமாதலால் அது ஒரு பெருநிதியாய் தோன்றுவதில்லை. பாருங்கள் ஒரு தகப்பன் பத்துப்பிள்ளைகளைப்பெற்று அவன் பிள்ளைக்கும் பத்துப்பிள்ளைகள் பிறந்தால் அவன் சம்பாதித்த ரூபா 1000000மானுலபேரனுக்குப்பதினுயிரம்தானிருக்கும். ஆனால் தகப்பன் சம்பாதித்த ரூ-1000மும் தாய் அனேகருக்கு வாழ்க்கைப்பட்டுச் சம்பாதித்த ரூ-10000மும் ஆக வெல்லாம்சேர்ந்து ஒரே குமாரனுக்கே கிடைப்பதால் அவனுக்குச் செல்வம் பெருகவும் அவனுடன் பிறந்தவரும் மற்றுமேசொந்தக்காரர்களில்லாது சாகவும் நேரிடுகிறது. இனி ஒரு ஆண் அல்லது பெண்பிள்ளையற்று இறந்தால் அவர் சொத்து அரசனிடம் சேருவதால் அரசர் மூலநிதி பெருகி வருகிறது. இதுமட்டோ! அனுயத்தயச் சொத்துகள் பல வகைப் பெண்களால் பல மணவாளரிடம் சம்பாதித் தகப்பட்டு கடைசியில் அவர் மிகுதனுக்குக் கொடுக்கப்படுவதால் அதுவும் ஓங்கிவளருகிறது. இங்ஙனம் பிள்ளைகளிடம் பேரன்புடன் இருக்கும் நம்மவர் பிள்ளைகள் கெட்டால் அச்செய்தி யவருடன் ஒழிபாது வீணில் அவர் தாய் தந்தையையும் கெடுக்கும். இங்ஙனமாக தானும் கெட்டு தன் பிள்ளைகளும்கெட்டுதன் குடும்பமும் குலைந்து தன்பெயரற்று தன் வம்சமற்று தனக்குள்ள காலத்தில் மாறாத துன்பமளிக்கும் ஒரு பெருந்தீச்செயல் இவரிடம் இருக்கின்றது அதுவே பிள்ளைகள் புறமதத்தில் வீழ்ந்தொழிவதற்குக் காரணம். அதாவது இளமைபருவத்தே பிள்ளைகளைப் பாதிரிமார் பள்ளியிலனுப்புவதே என்றேம். "ஏதோ இவர்க்கு அங்குள்ள வெள்ளை உருக்கள் பிள்ளைகளை நன்றாகப் படிப்பிப்பார் என்றும் அவரிடம் படித்தால் அவர் பெரிய செய்து தகுந்த வேலை ஒன்றுடனே கிடைக்குமென்றும் திராதமயக்கம் ஒன்று நம்மவர்க்கு இருக்கின்றது" என்று ப்ரம்மஸ்ரீ வெசங்கரபண்டியாஜி அவர்கள் ஓர் இங்கிலிஷ் பத்திரிகைக்கெழுதினர். அஃதுண்மையே. சமீபகாலத்தில் மதுரை கோயம்புத்தூர் திருநெல்வேலி செங்கற்பட்டுகளில் நடந்த புறமதப்பிரவேச விஷயங்களில்யாம் செய்த விசாரணையால் எமக்குக்கிடைத்த வுண்மையிதுவே: "இளமையிற்கல்வி சிலைமேலெழுத்து" என்னும் முதுமொழிவாக்கைச் சிதிரும் உத்தமோக்தானம் பருவத்தே பாதிரிப்பள்ளிக்கெம் மையனுடத்தாய்களனுப்பிய கொடுமையாற்கெட்டோம் என அச்சிறுவர் சொல்லக்கேட்டோம்.

Koviloor Digital Library

[illegible]

இவ்வுண்மை எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. இத்தீச்செயல் செய்த பிறகு ஏதேனும் பிராயச்சித்தமருந்து தேடினுல் பலிப்பதும் உண்டு. சிலவிடம் காலம் கண்டு சாதிகலந்து கள்ளுண்டு கெட்டு கண்ட புலால் புசித்து நிமித்தமத சோகம் முதிர்ந்தபின் அவர்களுக்கு பிராயச்சித்த மருந்து பலிக்காதொழிய, ஐயோ! வீணில் அழுதுகாலம் கழிக்கிறார்கள். மிக்க மேது சுதேசபண்டிதர்கள் மோககாலத்திற்குட்பட்டு பிராயச்சித்த யோக்கிய நிலையில் உள்ளவரையும் பிராயச்சித்தம் செய்துசேர்க்க மிகவும் பின்வாங்கிறார்கள். ஒருசமயம் இவர் பச்சாத்தாபம் பெற்று பிராயச்சித்தாயோக்கிய காரியம் செய்யாத மதப்ரஷ்டரை மட்டில் இருப்ப அவரவரினத்துச் சிலப்பிராயச்சித்தங்களால் சேர்த்திடுவரேல் அது மட்டிலே பாதிரிகள் கொட்டம் ஒழிந்தடங்கும். இந்துலகுலேகசங்கத்தாரால் மறையோர்முதல்பறையோரீறாக இவ்வருஷம் மதப்ரஷ்டரானவர் சுமார் ௨0 குடும்பங்கள் திரும்பவும் பிராயச்சித்தங்களால் தன்னினம்சேர்க்கப்பட்டமையால் அதுமட்டிலே ஒழிந்தடங்கிவருகிறது இத்தேசத்துப்பாதிரிபடாடோபம். இவ்வுண்மைகளை இனியேனுமறிந்து நம்மவர் பிள்ளைகளை அரசாங்கத்தார் பாடசாலைகளிலாவது நம்மவர் ஸ்தாபித்துள்ள பாடசாலைகளிலாவது அனுப்பவேண்டும். பாதிரிபள்ளிகளில் அனுப்பாதிருப்பார்களாக. இவர் அவ்விதம் எக்காலம் சற்புத்திபெறுவார் அக்காலமே இவ்விந்தியாதேசத்துக்கு ஒரு பெரும்பாக்கியம். இல்லாமல் இப்பொழுதுள்ள துர்ப்புத்தி விலகாது இவ்வாறே நடந்து வந்தால் காலக்கிரமத்தால் ஆரியகணக்குக்குறைய மிலேச்சர்கணக்கேபெருகி ஆரியவம்சம்குறைந்துஉத்கிரசம்ஸ்காரந்தக்கும்புத்திரர் உதவாநிலையிலிருக்க நேரிடும் என்பது உண்மை என்பதை இடைவிடாது நினைத்து அதற்கிணங்க நடக்க அவர்க்கு கடவுள் அருள்புரிவாராக.

வரும்.

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்.

சு - புத்தகம்] சிதம்பரம்: நந்தன௵ வைகாசிமீ ௩௦௨ [இலக்கம் - அ

திராவிடப்பிரகாசிகை.

"ஞானாமிர்தபத்திராதிபர் தம்புதியஞானாமிர்தத்தில் 'திராவிடப்பிரகாசிகை' யெனத் தலைப்பெயர் தந்து ஓர் விஷயமெழுதிவருகின்றார். இவ்விஷயத்தைப் பழையஞானாமிர்தத்தின்கணும் இவ்வாறே வெளியிட்டிருக்கின்றார். அக்காலமுதல் இக்காலமளவும் அந்நண்பர் கொண்டகருத்து எவ்விசாரணையாலும் மாறுதலில்லாது நிற்பதாய்த் தெரியவருகின்றது. அவர் தென்மொழிக்கு வடமொழிச் சம்பந்தம் உளதாதல் பெரியதோர் குறையாமெனக் கொண்டு அச்சம்பந்தத்தை நீக்கிக்கொள்ள நினைந்து பிரயோகவிவேக நூலார் இருமொழியும் சம்பந்தமுடைத்தெனக் கூறிய கூற்றுக்களை மறுத்துச் சிலவிஷயங்கள் எழுதுவாராயினர். இது அன்பின் மிகுதியால் அன்னைதன் கற்பை வர்ணிக்கவெழுந்த கவிவாணர் "கனவிலேனும் காதல்கொண்டு புணராதலின் தன்கணவனையும் கருத்தில் வையா உத்தமி" என வர்ணித்தவாறிருக்கின்றது. இதற்குதாரணமாக:— அவர் கூறிய பலவிஷயங்களுள் இருவிஷயங்களை மட்டில் இப்பத்திரிகையிலே எடுத்துக்காட்டுகின்றும். திராவிடப்பிரகாசிகையின் ஒன்பதாம் பக்கத்திலே 'தமிழ்மொழி அகத்திய முனிவர்க்குமுன் சிருஷ்டிமுதலில் சிவபிரானுந் தோற்றமுற்று நிலைபெற்று நடக்கும் தொன்மொழி' என்று எடுத்து இது 'வேத வழக்கு' எனவும் கூறினர். நண்பர் தாம் கூறிய இவ்வாக்குத் தம்வாக்கன்றெனவும் வேதவழக்காமெனவும் கூறினமையான், இவ்வாறு எந்தவேதத்தில் எவ்விடத்திலே ஓதப்பட்டிருக்கின்றதென்பதனை வெளிப்படுத்தல் அவர் தமக்குப் பெருங்கடமையாம். இனி நண்பர் அகத்தியநூல் சிருஷ்டிமுதலிலே தோன்றியதன்றெனக்கூறினும் மதுரைத்தலைச்சங்கத்திலே அது இருந்து நிலவியதெனவும் அச்சங்கம் தோன்றுதற்கு முன்னரே அந்நூல் உண்டாயிற்றெனவுங்கூறுதலாலும், தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்னு மூன்றனுள் தலைச்சங்கம் தோன்றி இற்றைக்குப் பதினாயிரவருடங்களுக்குமேல் ஆயிற்றென உரைப்பதாலும், அகத்தியநூல் பன்னெடுங்காலத்தின் முன்னர் உண்டாயிற்றெனச் சாதிக்க முயலுதலே இவர்கருத்தாமெனத் தெற்றெனஅறியக்கிடக்கின்றது. இவரும் இவர் சார்பினரும் கூறும் இவ்வுரைகள் எட்டுணையும் பொருந்தாதன வென்பது துராபிமானமின்றி நியாயநெறியைப்பிடித்து நின்று விசாரித்தறியவிரும்பும் நல்லோர்க்கு அங்கை நெல்லிக்கனிபோல் இனிது விளங்கும். அவைவருமாறு காண்க:— சிவபிரான் வடமொழியிலக்கணத்தைப் பாணினி முனிவர்க்கு அருளிச்செய்து அதன் பின்னரே தென்மொழி இலக்கணத்தை அகத்தியனார்க்கு அறிவுறுத்தினரெனத் தென்மொழி நூலார் பலருங்கூறுவர். இங்ஙனந் தென்மொழி இலக்கண நூலார் எவரும் ஒத்துக்கொண்டதேயன்றி மறுத்தோத ஓர் பொருளுந் தமியார். "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" என்று கூறிய ஞானாமிர்தத்தர் ஆசிரியராகிய சிவஞானப் புலவர் உரையும் இதனை வலியுறுத்தும். இவ்வாறு கூறினோர் இன்னும் பலருளர். இவை இங்ஙனமாகலின், நாம் மேற்காட்டிய அக்கருத்தே இவர் தங்கருத்தென்பது நன்கு வெளியாகின்றது. இனிப் பாணினிமுனிவர் இக்கலியுகாதியிற் பிறந்தவராதலால் அவர் பிறந்தகாலம் சற்றேறக்குறைய 5000 வருடங்களே ஆகின்றன. அவர் செய்த சூத்திரங்களே இதற்குப் போதுமான சாக்ஷியாகின்றன. அவர் சூத்திரங்களில் «வாஸுதெவார்ஜுநாப்யாம்வுந்» «[illegible]» «த்ரோணபர்வதஜீவந்தாதந்யதரஸ்யாம்» «[illegible]» «[illegible]» «[illegible]» என்று தொடங்கி யுதிஷ்டிரன், பீமன், அர்ச்சுனன், வாசுதேவன், அந்தகன், விருஷ்ணிகள், குருக்கள், துரோணர், பாண்டு முதலிய பாரதகாலத்து மன்னர் முதலியோர் பெயர்களுக்கு இலக்கணம் எடுத்தோதியமையால் இவர் பாரதகாலத்தின் பின்னர் கலியுகத்திலேயே உண்டாயினரென்பதற்கு வேறு சாக்ஷியங்கள் தேடவேண்டாம். இனி வடவிலக்கண நூலாருள் பாணினி முனிவரே விசேடத்தன்மையைப் பெற்றவராகி ஓதியவர். இவரையே அகத்தியனார் 'வழியன்முறையதே திரிபுவேற்றுமை செய்தனவிளம்பான் பெயரா விலோச மென்னேறிய புலவருமுனிவரேவகையானிந்திரனொட்டாம் வேற்றுமை செய்தனன்' என்று தமது சூத்திரத்திற் குறித்தோதியிருக்கின்றார். இதை ஞானாமிர்தத்தாரும் அவர் குருவாகக்கொண்ட சிவஞானப் புலவரும் அவ்வாறே 'அப்புலவன்' என்னுஞ்சொல்லுக்குப் பொருள் கூறினர். அந்தக்க

[illegible] பாணினி முனிவர்க்குப் பின்பு அகத்தியனாருனி வர் அகத்தியம் இயற்றியுள்ளாரென்பது பாணினிமுனிவர்க்க [illegible] அகத்தியனார் [illegible] இக்கணத்திற்குரிய [illegible] தொல்காப்பியரையுமென் பது வெள்ளிடைமலைபோல் விளங்கிக்கிடக்கின்றதன்றே. [illegible] அகத்தியனார் [illegible] இவர் [illegible] பொருந்தாதென்பதன்றோ? இவரும் அகத்தியம் [illegible] 5000 வருடங்களுக்குமுன் [illegible] சங்கங்களில் அது [illegible] இவர் [illegible] காலம் தோன்றி [illegible] இவ்விய [illegible] தக்க விடைய [illegible] எழுதினமையாம்.

இனித் தமிழ்மொழிக்கு இலக்கண முதனூல் அகத்தியமே யென்றும் அதன் முன் இலக்கணநூல் செய்தோர் எவருமில ரென்றும் [illegible] ஓர் பாவை [illegible] 5000 வருடங்களின் [illegible] இலக்கணநூல் [illegible] காட்டுகிறது. [illegible] வடமொழிக்கு [illegible] பாணினியமேயன்று [illegible] காசிகை, [illegible] முதலாய இலக்கணநூல்கள் செய்துள்ளாரெனப் பாணினி முனிவர் தம் சூத்திரத்திற்காட்டியவையாலும், ஆசிரியர் பத ஞ்சலியார் "[illegible]" என வேறுவிதிகளையும் [illegible] எடுத்தோதுவதாலும் [illegible] முந்தைய [illegible] மேற்காட்டிய [illegible] பாவலர் [illegible] சாத்திரம் முதலிய நூல்களி [illegible] காலங்களும் [illegible] மக்கள் [illegible] இலக்கணநூல்களைக் கற் [illegible] வடமொழியை [illegible] வழங்கி [illegible] பாணினி முனிவர் பாமே [illegible] பெற்று [illegible] தெய்வ [illegible] செய்தனர். [illegible] நிரூபன் [illegible] பதஞ்சலிமுனிவரும் [illegible] எடுத்து [illegible] வியாபித்து [illegible] இவரும் மேற்காட்டிய [illegible] வடமொ ழியை [illegible] இப்பாணினியம் தோன்றியகாலத்து [illegible] என்றும் ஓர் முனிவர் [illegible] இப்படியாக [illegible] இரு [illegible] பாணினிமுனிவர் மேற்கோளாக [illegible] என்றெழுதினர்.

[illegible] பாணினிய வடமொழியிலக்கணத்திற்குத் [illegible] அகத்தியனார் இலக்கணத்தைச் செய்விக்க [illegible] எழுதினார். அகத்தியம் [illegible] அம்மொழியின் [illegible] மாபாடியகாரர் வாக்கிய மெனவே அவர் எடுத்துரைக்கின்றார். அவ்விஷயம் முந்திய [illegible] எழுதினார். அச்சமயம் 'அது வடமொழி வழங்கறியார் உரை" என்று யாம் உரைத்தோம். அதை இங்கு எட்டி மறுத்ததாய் ஓர் வாக்கியம் எழுதினார். இவ்வாக்கியத்தையும் முற்கூறியவாறே வடமொழி வழங்கறியார் உரை என்றே நிரூபித்து மறுத்திடுவோம். அவர் எழுதியவைகளை அடியில் விரித்துப் பிறகே அதை மறுப்பாம். புதிய ஞானியின் தம் [illegible] நிராவிடப்பிரகாசிகை பதினான்காம்பக்கத்தில் அடியிலுள்ளன இவை எழுதப்பட்டன. "இனி ஆசிரி "யர் அகத்தியனார் தனக்குத்தான் மனத்துயராய் முக்குணங்களை "யும் கடந்து கறைமிடற்றிறையனார் அருள்பெற்றுடையரா "கலின் அவரியற்றி நடாத்திய முத்தமிழ் இலக்கண முதனூ "லாகிய அகத்தியம் இறைவனூலொப்ப எத்திறத்தானும் "குறைவுபாடின்றி மெய்ந்நிலையுடைத்தாகி விளங்கிய தெய்வ "நூலேயாம். இனி மாபாடியகாரர் வடமொழியில் ஆசிரியர் "பாணினியார் தொல்காப்பியர் சூத்திரங்களுட் சிலவற்றைத் "தம்முடைய சூத்திரங்களால் எடுத்தோதிமறுத்து வேறுவிதி "கூறுவர். அவர் சூத்திரங்களுட் சிலவற்றை ஆசிரியர் வர "ருசியார் எடுத்தோதி மறுத்து வேறுவிதிகூறுவர். அவ்விரு "வரையும் பலவிடங்களில் ஆசிரியர்பதஞ்சலியார் எடுத்தோ "தி மறுத்து வேறுவிதிகூறுவர், என்பராகலின், அகத்தியனார் "உரை யாண்டும் மெய்ந்நிலையுடைத்தாதல்போல அவருரை "யாண்டும் மெய்ந்நிலையுடையவாகா வென்றுணர்க. அங்ஙனேல் "ஆசிரியர் பதஞ்சலியார் உரைகள் யாண்டாண்டவ்வாறு மெய் "ந்நிலையுடையவாகவேயும் வருங்கொல்லோவெனின், பதஞ்ச "லியார் ஆசிரியர் அகத்தியனார்போலத் தனக்குத்தான் மனத்துய "ராய் முக்குணங்களையுங்கடந்து கறைமிடற்றிறையனார் அரு "ள்பெற்றுடையராகலின் அவருரையும் யாண்டும் மெய்ந்நி "லையுடையவேயாம் என்க. இனி ஆசிரியர் கையடயோகிகள் "[illegible] நிலைகள் [illegible] இம்முதனூலை "வடமொழி வழங்கறியார்உரையென்று புறங்கூறுவாருமுளர். "அவரைச் [illegible] சித்தாந்தகௌமுதியுள் "யதோத்தரம் முனீனாம் பிராமாண்யம்" என்று எடுத்துரைத் "தவும் வடமொழி வழக்கறியவராத மடமைபற்றிக்கொல் "லோவென்று கடாவி மறுக்க" என்பன.

இனி அகத்தியரும் ஆசிரியர் பதஞ்சலியாரும் கறைமிடற்றிறையனார் அருட்பெரும்பேறடைந்த முனிவர் சிகாமணிகள் என இவர் எழுதியது மெச்சுதற்பாலதே. ஆயின் அகத்தியம் இறந்திடவும் பதஞ்சலி பாடியம் வழங்கிவருவதானும் [illegible] புலப்படும். ஆயின் கையடயோகிகள் என்பவர் பாணினியம் தொல்காப்பியர் சூத்திரங்களை எடுத்து மறுத்து வேறுவிதி கூறியதாய்ச் சொல்லாது 'வடமொழிவழங்கறியார் உரையே' [illegible] இந்நூல் [illegible] கறைமிடற்றிறையனார் அருள்பெற்ற பதஞ்சலிமுனிவர் '[illegible]' [illegible] என்றும் [illegible] தொல்காப்பியர் அநேகர் அபிப்பிராயங்களைத் தழுவிப் பலவிடத்தில் மேற்கோளாக வெடுத்துக் [illegible] சேர்த்துப் பாணினியார் ஒரு

நூலாசிரியரேயன்றி வேறுவிதி கூறித் தொல்லாசிரியர் சூத்திரங்களில் எதையும் மறுத்தாரில்லை. இனி அவ்வாசிரியர் இயற்றிய மூவாயிரத்துத்தொளாயிரத்து எண்பத்திரண்டு 3982 சூத்திரங்களில் ஒன்றேனும் தொல்லாசிரியர் சூத்திரத்தை மறுத்ததாக வில்லை. அங்ஙனம் ஒரு சூத்திரமாவது இவர் எடுத்துக்காட்டாதவரை இது "வடமொழி வழக்கறியார் உரையே" எனக்கூசாது சொல்லத்தடையேன்னே? இங்ஙனமே ஆசிரியர் வரருசியாரும் ஆசிரியர் சூத்திரத்தை மறுத்ததும், வரருசிமுனியர் பாணினீயத்தின் உரையாசிரியராகவும் அவர் அப்பாணினீயத்தட்குறிக்கப்படும் பொருளையே எடுத்துரைப்பாராகவும், அவர் சூத்திரக்காரரைமறுத்து வேறுவிதி கூறியதாகச்சொன்னதும் அமையாது. இனி அவர் எழுதியவார்த்திகத்திற்குளே "வாக்யே—பொ மாது ஸமிதி விதிருவ ஸ்யாதிலை—துப நபு—கவைாக" என்று சூத்திரங்களைத்தும் பயனுளதேயென விபக்தோதியதறியாது அவர் சூத்திரங்களைமறுத்து வேறுவிதி கூறுவர் எனப்புகன்றதும் வடமொழி வழக்கறியார் உரையே. மேற்கூறிய வார்த்திகம் பாணினீயம் முதலாம் அத்தியாயம் சம்ஞாதிகாரத்தில் உள்ளது. இதன்பொருள்:—வாக்யேப்பொமாக சொற்களுக்குப்பொருள் விளக்கப்பெருமை பெற்று நிற்றலால் ஸ்ரூ லைஸ்ரூ நமிலிரு நபு—கம் வஸ்யாதி இச்சூத்திரங்களுள் எதையும் பயனற்றதென யான் கண்டேனில்லை யென்பது. இதுவும் நிற்க; ஆசிரியர் பதஞ்சலியார் இவர் கூறியபடி மெய்யிலேயுடைய நூலியற்றினாரதலின், அவர் சொல் மிகவும் இவருக்குப்பிரமாணமன்றே? ஆதலால் அம்முனிவர் திருவாக்கை ஈண்டு எடுத்து விரித்து அவர் கொண்டபடியும் அவர் சூத்திரவார்த்திகங்களை மறுத்ததாக்கூறுவதும் வடமொழி வழக்கறியார் உரை என்று எடுத்துக்காட்டுவோம். அவ்வாசிரியர் நூன்முகத்துள் "ஸூலோ நகவை . நடுஸ லைதி லைஸ்ரூ—கவைலமி ஸஹோது ஒருதிவஷ்யமெ பொஸ்யா—ஸ ௦ ஸ்ரூ௦கயபெநூ ரொஜஸ்யமெஸ்ய க' என்றார் இதன்பொருள்:— "அறியாதார், சூத்திரத்திலும் வேறுவிதியிலக்கியச்சித்திக்கெனத்தேடுவர். சூத்திரத்தாற்றானே அறிஞர் இலக்கியங்களை அறிந்திடுவோர். இனிச் சூத்திரவிரோதமாக எது எழுதப்படினும் அது பிரமாணமாகாது" என்பது. இதுமட்டோ! மற்றோரிடம் அதே பிரகரணத்தில் தாம் ஓரிலக்கியத்துக்குப் புது விதி ஒன்று கூறிப் பிறகு "ஸுஷ்ய தெஸ்யவாகவைாணி நியஜ—ஸ்வதி" என்றுதாம்சொன்னவை பொருத்தமுடையதாயினும் பாணினீய விரோதம் வருதலால் விட்டோம் எனப்பொருளுடைய வாக்கியத்தைப் பிரயோகித்தார்.

இதே வாக்கியம் மாபாடியத்துள் அநேகவிடத்துள்ளது. 'விருத்தி' சூத்திரபாஷியத்தில் "க ஸ்ரூாஸஷ்யம் வணொ—நாவாசு நபு—கெநலி தஷ்ய" என்றுள்ள வசனத்தை யாராயவேண்டும். [இதன்பொருள்] "பாணினியார் சூத்திரங்களுள் ஒரு எழுத்தளவும் வீணாகாது" என்பது. இவ்விதம் ஏரக்குறைய முப்பது வசனங்கள் மாபாடியத்துள் இருப்பதையும் இதைச் சத்தகௌத்துபநூலாரும் இங்ஙனம் உரைத்த பொருளதாயேகூறியிருப்பதையும் அந்நூலாரும சத்தகௌத்துபமுகவுரையில் "வஸ்யாவ ரஸ்ய ஸ்வை—க:" என்பதுபோல் "கலியுகத்துக்கு வியாகரணம பாணினீயமே; அதன் விரோதம் கன்மேழி வேறேதும் பிரமாணமாகாது" என்றெழுதியதையும் "வைஸ்ரூவைவமிதவைக வ—பெஸ்ய—தொபஹுவா வி—நிக" "வார்த்திகத்தும்பாஷியத்தும் உள்ளதெல்லாஞ்சூத்திரத்திலுள்ளதே" எனவும் வையாகரணமணியாய நறிபர் எடுத்துரைத்த சொல்லுரையையும் அறியாதுரைத்தது வடமொழி வழக்கறிந்தவருரையாவதெப்படி? இனி அவரும் மாபாடியகாரர்; சிவஞானமுனிவரும் மாபாடியகாரர் என்றும், அவரும் வடமொழிக்கடலை நிலைகண்டுணர்ந்தவர், இவரும் அங்ஙனமேயாகலின், இவர் கூறியதே எமக்குப்பிரமாணமென நமது தோழர் சாதிப்பரேல், அவ்விதம இவர் அச்சிவஞானயோகியார்க்குக்கொடுக்கும் பெருமபட்டம்,புராணுதிகளில்.ஆசிரியர்பதஞ்சலியார்க்குமஅவர் அருளியமுதநூலுக்குமமைந்தவாறுஅமையாது,ஆடிப்பட்டமாய்க் காற்றிற்பறந்துவிடுமென்க. வடமொழியல்லார் எவரும் கொண்டாடப்பெறுக அவர்வடமொழிப்பயிற்சி, நமது நாவலர் வசனத்தால் நிலைபெறுவது "கண்ணில்லாதான் கன்னியின் ரூபத்தை வருணித்தலால், அது சிறப்பதை ஒக்கும்" அற்றேல் "யமொதுஸ—நிநாவஷ்யாஜெ ஜஷ்ய௦" என்பது எகனுலோவெனின், அதன் பொருளை அச்சித்தாந்தகௌமுதியினுரைகள் பலவற்றினும், அன்னம்பட்டீயத்திய சத்தகௌத்துபநூற்பாயிரத்தும் கண்டு தெளிக. (அதன் பொருள்) சூத்திரம் வார்த்திகம் பாடியம் இவை ஒன்றுக்கொன்று விரிவுற்றமையால் சூத்திரத்திலவியக்தியமாக அமைந்து விருத்தியில்விரிந்தும், அதில் குறிக்கப்பட்டது, பாடியத்தில் விரிந்தமை நிற்றலால் விரித்த பிரமாணத்தை அற்பவறிஞரும் அறிவாராதலின் பாடியத்தைக்கொண்டே எல்லாவற்றிற்கும் இலக்கணம் கூறலாம்" என்பது. இவ்வுண்மையறியாது ஏதோ "வடமொழி வழக்கு அறியவராத படமைபற்றிக்கொல்லோவென்று கடாவி மறுக்க" என்றுவிட்டு முழக்கிக் கடாக்களைக் கிளப்பி எமது குலதனமான வடமொழிக் கற்பினை அழிக்க இவர் நினைத்தமையால் யாம் அவைகளைக் காக்கவேண்டி அவர் விடுத்த வக்கடாக்களை நியாயதண்டக்கொண்டு புடைத்து நல்வழி நடாத்தி மேற்காட்டிய ஆன்றோர் நன்மொழிக் கயிறுகளாற்கட்டி யடக்கிப் பட்டியிலடைத்திட்டாம். இனி எழுதமிடமெங்கும் திராவிடப்பிரகாசிகை எழுதவதில் எமக்கு எதும் விரோ

தமிழின்மையால் வடமொழியிலக்கணவிலக்கியவழி வாராது வழுவுவித்த இவர்க்குமேனை நாம் மேலது கண்டாக்குணர்த்தி முன் பட்டிலைவிடப்பட்ட கடாக்கள் வெளிவாரவன்னமையேயிலைகண்ட விடைக்கவனைத்து அவை மிதி வெளிவின் மதமது. மேயாயதன்டித்தாற்புடைக்க அவை களிற்பல சேர், மிர்சயமயம விரிவஞ்சி உள்வைத்திருக்கின்றோம்.

இனி அவர் "ஆயினதேல் ஆசிரியர் பதஞ்சலியார் உரைகள் அவ்வண்டவ்வாறு மெய்க்கியேயுடையவாகவேயும் வருங்கொல்லேயெனின், பதஞ்சலியார் ஆசிரியர் அகத்தியமுனிபோலத் தவத்தான் மனத்தூயராய் முக்குணங்களையுங்கடந்து கறைமிடற்றிறையருள் அருள்பெற்றுடையாகலின், அவருரையும் யாண்டும் மெய்க்கியேயுடையவேயாம் என்க" என்றுங் கூறினார். அங்ஙனம் யாண்டும் மெய்க்கியேயுடையன அவருரையென்பதால், அவரியற்றிய யோகமதமும் மெய்க்கியேயுடையதாக வேண்டும். ஞானசித்தியார் அவ்வாறு யோகமதத்தை மெய்ம்மையுடையமதமென்று கொள்வரோ? இவர் யோகமதத்தை சாமனைம் பொத்த முதலியவற்றோடு ஒன்றாக்கிப் புறச்சமயமென்று ஞானசித்தியில் இகழ்ந்தனரே. அங்ஙனமிருக்க, இவர் மேல் இவ்வாறு கூறியதென்னோ? இந்த விடத்தில் அதனை மறந்தனரோ போலும்! இனி அகத்தியர் கறைமிடற்றிறையவனருள் பெற்று அகத்தியநூல் செய்தனரென்கின்றார். அவ்வாறு அகத்தியநூல் செய்தவர் எந்த அகத்தியர்? சதாசிவருகோர்ப்பவராகிய அகத்தியரா? வருணனென்றுமிருந்து கும்பத்திலுதித்த மைத்திராவருணியென்னும் அகத்தியராகியித்துமவோர்கள், சோமவாரகள், சாம்பவாகள், பஞ்சுருவர்கள் இந்நால்வர் கோத்திரங்கட்கும் மூலபுருஷர்களைப்போலாயன மூலவராற்றிராவகண்டுத் திருத்திக்கப்பட்ட பிரம்மபேதத்திராகிய அகத்தியரா? பல வைத்தியநூல்களும் சோதிடநூல்களும் பாடிவைத்திருக்கும் சித்த அகத்தியரா? "குடமுனி சதுமறைமுழுதுஞ்சொலமெட்டுத்தப்பாகர" என்று இவர் சாக்கனைக் கூறியதனுல், மற்றொருவரென்றல் பொருந்தாது. மேலிக்குடமுனிவர் சரித்திரங்கூறும் ஸ்காந்தம், மகாபாரதம், இராமாயணமுதலியவைகளிலே தமிழிலக்கணஞ்செய்தாரென்பதே கற்றதும் தமிழிலக்கணநூல் இயற்றியதுமகத்தியத்திருந்ததும் ஆகிய கதைகளை ஒரிடத்தேனுங்கூறக் காணவில்லை. அவ்வாறு அகத்திற் கூறப்படாத காரணமென்னை? இனி ஒரே அகத்தியர் பல அவதாரஞ் செய்ததாக புராணமிருக்க அவ்வித எப்பிரமாண நூலினும் காணப்படாதிருக்க அவ்வாறனைப்பது அப்பிரமாணமேயாம். மேற்கூறிய இவைகட்கெல்லாம் தக்கவிடையளித்தலன்றோ ஞானிக்கதகு கடனாம்.

அத்துவித விசாரம்.

முன்தொடர்ச்சி.

இனி அன்மைப்பொருள் கூறியதனுல் தமது சித்தாந்தத்துக்கும "அத்வைதம்" எனவும் அதனுடன் சுத்தச் சொல்லைச்சேர்த்துச் சுத்தாத்விதம் எனவும் பெயரிட்டு அழைக்கேட்டுறி, இஃதும் சமதுவைதிகக்கோட்பாட்டில் ஒரு பிறரான்மை ஒவ்விவிற்கும் சித்தாந்தமோவென அத்துவிதிகள் மயங்கச்செய்வது உண்மைச் சமயத்தவர்க்கு அழகாகாது. சிறந்த ப்ரம்மவாதிகளான அத்துவிதிகள் முதலியோர் இச்சொற்குரைக்கும் பொருள் இன்மை. மாயாவாதிகளான அவிதிகள் இதற்குச் செய்யும் செம்பொருள் அன்மை. ஆயின் இங்கு மாயாவாதிகள் கூற்றுப் பிரமாணமற்றதெனத் துணிந்தோம். அற்றேல், அஃதங்ஙனமாகுக. அன்மைப்பொருளைச் செம்பொருளாகக் கூறியவாமில்லே. மற்று ஆகுபொருளாயாதல் குறிபொருளாயாதல் கூறிடுவோம். ஆயின் செம்பொருள் குறிக்கும பிறப்புநிறைந்தவடவியற்றிருமொழி எமது வாதத்தை மறுப்பது யாங்ஙனம் என்பீரேல், நன்கு! நன்கு! செம்பொருள் குறிக்குமிடல்லினதே மயலென நமக்குபதேசித்தவாசிரியர் "ஆகுபொருட்கோடல் செம்பொருட் பொருக்கமின்மைபற்றியே" என்றும் "குறிப்பொருள் வழக்கம் பயனுள்ளவிடமன்றிமறைக்காப்பியங்களிலேயன்றி மற்று வேதாகமங்களில் இல்லை" என்றும் "அவை சத்தப்பிரதானமாதலின் அவற்றிற்சொல் செம்பொருளைக்கொண்டே முடியும்" என்றும் "இனி அச்செம்பொருட்சொற்கொள்ளாவிடம் அச்செம்பொருட்சேர்க்கைபெற்ற பொருளை ஆக்கலாற்றலால் குறிக்கும்" என்றும் பூர்வமீமாஞ்சை நூலார் முதனூற்பொருட்படுத்தும் வழி கூறியதை அவரிடம் படித்ததிலர் கொல்லோ? அறிந்தவராயின் இவர்க்குபதேசிக்காது ஒளித்துவைப்பாரா? செய்மை முதல் ஈலித்தல் ஈறாக நால்வகையாற்றல்களைச் சொற்களுக்குப் பிரித்து அவைகள் தேற்றத்திற்கு ஹேதுக்களையும் காண்பித்துச் சொல்லணி பொருளணிவகுத்த வடமொழியிலக்கண நூல்களில் இவ்வுண்மைகண்டு இனித் தெளிந்திடவேண்டும். "பொருட்பொருத்தமில்வழி ஆகுபெயராகக் கோடற்பாற்று வன்மைப்பொருளை யாகுபொருளாக்கிக்கொண்டோம்" எனின் அதவும பொருந்தாது. என்னையெனின், "அத்துவிதம்" என்னுஞ் சொல்லுக்கு எப்பொருட் பொருத்தமின்மையால் ஆகுபொருளாக வன்மையைக் கொண்டீர். "இரண்டான் இலேசெப்பொருள்கள் ஒன்றாகாதுபற்றி" என்பீரேல் இந்த சொற்றொடர் பொருட்படுத்தும் வழி மதியாமை

Koviloor Digital Library

யாறுநித்த கூற்றும். உணர்மின்! ஓர் சொற்றொடரில் முன்பின்னமைந்த சொற்களின் செம்பொருள் பொருந்தாவழி ஒரு சொற்றொடரில் ஓர் சொல்லுக்கு ஆகுபொருள் கோடலே கன்னூலார் துணிபு. உமக்கோர் உதாரணங்காட்டிடுவோம். "கங்கையின்கண் ணிடைச்சேரி" என்னுஞ் சொற்றொடரில் கங்கையென்பது பின்னமைந்த 'இடைச்சேரி' என்னும் சொல்லின் செம்பொருளாய வாயினத்தார் குடியிருப்பு "கங்கை" என்னுஞ் சொல்லின் செம்பொருளாய தண்ணீரின் மாட்டமையாதுபற்றி அக்கங்கை எனும் சொல்லை அதன்செம்பொருளாய தண்ணீர் சேர்ந்த கரையின்கண் ஆக்கியதனால் 'கங்கை' எனவுபசரிக்கக்கூடிய குளிர்ச்சி புனிதம் முதலிய நற்குணங்களை அக்கரையின் உணர்த்துவதைப் பயனாகக்கொண்டு ஆகுபெயரெனக் 'கங்கையை' வழங்குவாம். மற்று "தயிரைக் காக்கையினின்றும் காக்க" என்னுமிடம் முன்னமைந்த தயிர் சொல்முதலிய சொற்பொருள், சொற்றொடர் கருத்து 'இவைகளுக்கியையப் பொருள்கொள்ள நேர்ந்தமையால் 'காக்கையை' ஆகுபெயராக்குவாம். இனி "அத்துவிதம்" என்னுஞ்சொல்லை யெந்தச்சொற்றொடரில் ஆகுபெயராக்க நேர்ந்தது. அத்தொடர் நுமது பிரயோகமா? நுமதாசாரியர் பிரயோகமா? மூலாகமப் பிரயோகமா? வேதப்பிரயோகமா? நுமது பிரயோகமும் நுமது ஆசிரியர் பிரயோகமும் நுமது கோஷ்டியில் மணம்பெறினும் அஃது வைதிகவறிஞர் கோஷ்டியில் மணம்பெறாது. மூலாகமத்தில் "ஶிவேந ஸஹ ஐக்யம் ஆகும்" என்று மோக்ஷநிலையை 'ஐக்யம்' என்று (அதாவது ஒன்றன்தன்மை) குறித்திருக்கிறது. அதன்பொருத்தம்பின்னர்க்கூறுவாம். வேதங்களிலோ யாம்முற்கூறியபொருளுடைத்தாய் உபயோகிக்கப்பட்டதேயன்றி நீவிர்கூறும் பொருள் அதற்கில்லை, 'அத்துவிதச்சொல்லின் 'அகரத்தையாகுபெயராக்குவீர். இனி ஆகுபொருள்கோடலே இவ்வளவுசங்கடத்திலிருக்கக் குறிப்புப்பொருள்முதலிய பெயர்ப்பொருள்கள் இவ்விடம் மலைமைந்தனும் எங்க. ஓர்சமயம் நமதாசிரியர் வழக்கைமணப்பிக்கத் தமதுகோஷ்டிமட்டில் தமது சித்தாந்தத்தை 'அத்துவிதம்' என இவர்வழங்கிடினும்வெளியில்வேஷவார்த்தையாய்த்தாமும்அத்துவிதனெனவழங்காதுடன்மையில்இவர்கொண்டசித்தாந்தப்படிதாம் 'துவைதி'எனவாவது"சுத்தம்"என்னும்சொல்லைச்சேர்த்து 'சுத்தாத்துவிதி' என்றாவது உண்மைநெறி கடைப்பிடித்து வழங்கிவோராக. மற்று இச்சித்தாந்தியார் 'அ'கரத்தின் செம்பொருள் அன்மை எனில் அதற்கு வடவிலக்கணிகண்டுகள் முரணுகின்றன. அதற்கு ஆகுபொருள் 'அன்மை' எனின் அங்கு 'சொற்றொடர்ப்பொருட் பொருத்தமின்மை,சொற்றொடர்கருத்தின்மை, அன்மைப்பொருட் பொருத்தம், அதனுலமையும் பயன், ஆகுபெயருக்கும் செம்பெயருக்கும் ஒருங்கு சேர்ந்த பண்புத்தொகைச் சொல்லாய் அமையும் 'அத்துவிதச்' சொல்லுக்குத் தொகையிலக்கணங்கூறல்"என்பதாதி பல சங்கடங்கள் சொல்வார் தலையில் சுமருகின்றது. இச்சங்கடங்களுக்கிலக்காகாது தாம துவைதி என வெளிப்படையாய் உண்மை பேசுவதேயுசிதம. இனிப் 'பொருட்பொருத்தமநாதோதாம் என்னும் வாதத்தையும் பொருட்பொருத்த மின்மையை எடுத்து விரித்து மறுப்பாம்.

வரும்.

வைதிகசைவரான ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரவர்களும், தாந்திரிகசைவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும்.

யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ சோபா சபாபதி நாவலரவர்கள், தாம் வைதிகசைவரென்றும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தாந்திரிகசைவரென்றும் திருச்செந்தூரிற் பிரசங்கித்ததாகத் தெரிகிறது. இதுமாத்திரமன்று. சபாபதிநாவலரவர்கள் போகுமிடங்களிலெல்லாம் வைதிகசைவ சமயிகள் விரும்பினபடி பிரசங்கஞ்செய்ததாய்க் காணப்படுகிறது. தாந்திரிக சைவர் ஒரு இடத்திலாவதிருப்பதாய் அவர் பிரசங்கத்திலாவது எழுத்திலாவது கண்டோமில்லை. இதற்குமுன் ஆறுமுகநாவலர் பக்ஷமான சைவசமயிகள்தா னெங்கு மிருப்பதாக நினைத்தோம். இப்போது சபாபதிநாவலர் வைதிக சைவ மென்றும் தாந்திரிகசைவமென்று மிரண்டுவகையாகப் பிரித்தார். இது அதிசயமாயிருக்கிறது. ஆறுமுகநாவலர் கொள்கைக்கும் ஆசாரத்துக்கும் சபாபதிநாவலர் கொள்கைக்கும் ஆசாரத்துக்கும் பேதமென்னை? சபாபதிநாவலர்க்கு ஆறுமுகநாவலர் குருவென்றுங் கேள்விப்பட்டோம். எந்த விஷயத்தில் குருவாயிருந்தாரோ தெரியாது. சபாபதிநாவலர் வேதவொழுக்கத்தை அநுசரிப்பதென்னை? ஆகமவொழுக்கத்தைவிடுத்ததென்னை? ஆறுமுகநாவலர் வேதவொழுக்கத்தை விடுத்ததென்னை? ஆகமவொழுக்கத்தை அநுசரித்ததென்னை! திருவாவடுதுறை, தருமபுரம் முதலியமடாதிபதிகள் ஆறுமுகநாவலர் பக்ஷமான தாந்திரிக சைவரா? சபாபதிநாவலர் பக்ஷமான வைதிகசைவரா? தமிழ்நாட்டிலுள்ளவேளாள சைவரெல்லாம் சபாபதிநாவலர் பக்ஷமான வைதிக சைவரா? ஆறுமுகநாவலர்பக்ஷமான தாந்திரிகசைவரா? ஆறுமுகநாவலர் சபாபதிநாவலர் ஆகிய இவ்விரு தாந்திரிக சைவர் வைதிக சைவர் இ்தியா

வந்து வருவதன் முன்னர் இத்தொழிலைத் தடுத்துவிட்டு வேளாள ரெல்லாரும் வைதிகசைவர்களாயிருந்தார்களா? தாந்திரிகசைவர்களாயிருந்தார்களா? அப்போதைக்கும் இப்போதைக்கும் [illegible] சைவசம்பந்தமான ஆசாரங்களிற் பேதப்பட்டார்களா? ஷை இருகவிகளும் [illegible] வேளாள விஷயத்தில் மாறுதல் செய்தார்களா? முன்னிருந்த ஆசாரங்களை விட்டுவிட்டுப் புதியதை மேற்கொண்டு [illegible] நூதனமாகச் செய்துகொண்டார்களா? வேளாளரெல்லாம் வைதிகசைவரா? ஆகமோக்தமான தாந்திரிகசைவரா? இருவித சைவருமா? அப்படியாயின் அவர்களில் வைதிகசைவர் யார்? தாந்திரிகசைவர் யார்? தேவார திருவாசகங்கள் வெளியானதன் பின்னர் வைதிகசைவரா? தாந்திரிகசைவரா? வைதிகசைவராயின் தாந்திரிகசைவர் ஆசரிப்பதில்லையா? தாந்திரிகசைவராயின் வைதிகசைவர் ஆசரிப்பதில்லையோ? [illegible] ஸ்ரீஞானப்பிரகாச சுவாமிகளது [illegible] வைதிகசைவரா? தாந்திரிகசைவரா? ஆறுமுகநாவலர் பகுத்தரான தாந்திரிகசைவர்களுக்கு ஞானநூல்களை உபதேசித்து வைத்தவர் யார்? அம்பலப்பிரவர்த்தகர் பூர்வத்தில் யவர்? வைதிகசைவரான சபாபதிநாவலரவர்களும் அவரைச்சார்ந்த வர்களோடு [illegible] வைதிகசைவர்களும் வேதவேதாங்கங்கள் ஓதிவருகின்றார்களா? வேதவிதிப்படி நித்திய நைமித்திக பிராயச்சித்த கருமங்களும் யாகாதிகளும் செய்கின்றார்களா? [illegible] கிரியைகளுஞ் செய்கின்றார்களா? காயத்ரி மந்திரோபதேசஞ் செய்துகொண்டு அதைத் தினஞ் ஜெபிக்கின்றார்களா? பிராசாபத்யம், கிருச்சிரம், சாந்திராயணம், சந்நியாசம் ஆதிய [illegible] வேதமார்க்கப்படி அநுசரிக்கின்றார்களா? இவைகளைத் தாந்திரிகர்களான ஆறுமுகநாவலரவர்களும் அவரைச்சார்ந்த ஏனையோரும் அநுசரிப்பதில்லையோ? அதனைப்பற்றிக் கூறுவோர்?

குறட்சிறை

[illegible]
[illegible]
[illegible]
[illegible].

இவர் வைதிகமார்க்கப் பிரவர்த்தியில்லாததற்கு [illegible] ஆறுமுகநாவலர் ஆகமசைவராகும் அவர் வைதிகமார்க்கப் பிரவர்த்தியில்லாதவரோ? சபாபதிநாவலர் வேதோக்தசைவமென்றும் வைதிக சைவரானும் வேதசம்பந்தமான வைதிகமார்க்கப் பிரவர்த்தியுடையாரோ? உடையாரென்னில் சபாபதிநாவலரவர்கள் வேதாத்தியயனஞ் செய்தற்குரியரோ? ஆறுமுகநாவலரவர்களும் அவர் பகுத்தாரும் உரியரல்லரோ? வேதாத்தியயனஞ் செய்தலுஞ் செய்யாமையும் ஜாதியைப்பற்றி வந்த விஷயங்களே? ஷை இருபாலாரும் வேறுவேறு ஜாதியினரோ? சபாபதிநாவலரவர்கள் விப்பிரரும் ஆறுமுகநாவலரவர்கள் விப்பிரரல்லாதவருமா? அன்றே, அவ்விரு நாவலரும் ஓர்ஜாதியினராயிற்றே. அதாவது வேளாளஜாதியினராயிற்றே.. அங்ஙனமாக ஒருவர் வேதமார்க்கத்துக்கு அதிகாரியாதலும் ஒருவர் அதனையும் அதற்கு யாதுகாரணம்?

திருச்செந்தூரில் காளயுக்தி ஆடிமீ 4உ சேதுபதி மகாராஜா அவர்கள் சபாநாயகராயிருக்க, அவர் சமுகத்தில் ஷை சபாபதிநாவலரவர்கள் பிரசங்கஞ் செய்தபோது, ஆறுமுகநாவலரவர்கள் வேதத்தை நிந்திப்பவரென்றும் தாம் அவ்வாறு நிந்திப்பவரல்லரென்றுங் கூறினார். இப்படியிருக்கவும் ஷை விதமான நிந்தகரென்றுபல பிராமணர்கள் பிதற்றுகின்றாரென்றுங்கூறினார். இதனால் இவர் வேதநிந்தகரல்லரென விளங்குகின்றது. இதற்கு மாறுபடச்சொல்லுதற்கிஷ்டமில்லாவிடினும் சமயம் நேர்ந்தபோது சொல்லாது விடுதல் நன்றல்லவென்றே கருதி, ஷை சபாபதிநாவலரவர்கள் வேதநிந்தனை செய்ததைப்பற்றிக் கூறுவாம். இவர், சென்னைப் பவழக்காரவீதியில் ஸ்ரீகாளத்தீச்வராலயத்தில் சுமார் நாலஞ்சு வருஷங்கட்கு முன்னர் ஒருநாளிரவு பிரசங்கஞ்செய்தபோது தேவாரதிருவாசகங்கள் மிகவுநுட்பமுள்ளனவென்றும் வேதம் அப்படியல்லவென்றுங் கூறி, வாயைக்கோணலாக்கிக்கொண்டு, ஆ! ஊ! ஏ! என ஒருவித வெறுப்பான குரலோடு சப்தித்து, இவ்வாறு வேதத்தை ஓதுகின்றார்களென்று சொல்லியதோடு, இன்னும் பல விதமாக வேதத்தைக் குறைகூறிப்பேசினார். இவர் வேதத்தை நிந்திக்கின்றாரென்பதற்கு வேறே யொருவரையுங் கேட்க வேண்டாம். இவரே தாம் வேதத்தையிகழ்வதாய்ப் பிராமணர்கள் பிதற்றுகின்றார்களெனச் சொன்னதே போதுமான சாட்சி.

உண்மைவிரும்புவோன்.

Chidambaram—Printed and Published for the proprietor at the Brahmavidya Press No 38 Senkaloneerpilliarkoil street.

ப்படிவிடக்தருகின்றதோ, அப்படியே கண்ணுமிடந்தருகின்றது; கிரணப்போல் ஒளியை விரிக்கப்பணணிக்கொள்வதன்று. அதுதான் விசேஷம் கண்ணிலிடத்து.

பதிபசுவாதியர் பூரணமான பதியிலிடத்துப் பசு இருத்தலெங்ஙனமெனக் கேட்டமைக்குச் சூரியனொளியையும் உவமானங்கூறுதல் பொருந்தாது. பதியும் பசுவுமாகிய பொருளுக்குப் பொருளுவமானங்கூறாது ஒளியாகிய குணவுவமானங் கூறுகின்றமையாலெங்க.

ஒளியானது ஒரு சக்கிண்டில் 186000 மயில் தூரம் செல்லுகின்றது. இந்தக்கணக்கின்படி சூரியனிடத்திலின்றும் புறப்படும் ஒளியானது பூமியிற்பட 8 மினிட் செல்லுகின்றது. கண்ணும் பூமியிலுள்ளதானதால் கண்ணிற்படவும் அதே காலமாகும். அவ்வாறு பதியினின்றும் ஞானமோ இன்னுமேதோவொன்றோ பிரிந்து பசுவினிடத்திற் செல்ல ஏதோ ஒருகாலஞ் சொல்லவேண்டி வருகின்றது. இவ்வாறு சொல்வதனுல் சூரியனும் கண்ணும் வேறு வேறு அபரிபூரணமான கண்டப்பொருளாவதுபோல் பதியும் பசுவும் வேறு வேறு அபரிபூரணமான கண்டப்பொருளாகவேண்டும். இந்தச்சித்தாந்தத்தைப்பதிக்குப் பரிபூரணத்துவம் சொல்லுகிறவர்கள் ஒருபோதும் ஒப்பமாட்டார்கள்.

பரிபூரணலட்சணத்துக்குக் குறைவு வாராமல் பதிக்கு லட்சணஞ்சொல்லி, அதிற்பசுக்களுமிருப்பனவாகக்காட்டவேண்டும். அவ்வாறு காட்டும்போது யுக்தி அநுபவங்கட்கு விரோதமில்லாமலுமிருக்கவேண்டும். அதனோடு சுருதிப்பிரமாணத்தையுங் காட்டவேண்டும். இவ்வாறு செய்யும் வாதந்தான் அறிஞராற் கொள்ளற்பாலது.

ஒரு சுருதிக்குப் பலர் பலவிதமாய் உரைசெய்கின்றார்கள். அவற்றுள் உண்மை யாதென அறியவேண்டின் எது யுக்தி அநுபவங்கட்கு மாறின்றி யிருக்கின்றதோ அதையே யுண்மையென்று கொள்ளவேண்டும்.

சுபேதிலோசனவோன்.

பிழைதிருத்தம்

சென்ற சித்திரையீ ௧௯௨ வெளியான ப்ரம்மவித்தியா௯-ம் புத்தகம் ௬-ம் இலக்கப்பத்திரிகையின் அறுபத்தெட்டாம் பக்கத்து 20-ம் வரியில் "சித்தாந்தத்தை அன்று. மற்றுஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியர்" என்பதை "சித்தாந்தத்தை, அன்று ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியர்"எனவும், 24-ம் வரியில் "கொண்டொழுகுபவரும் ஞானமிர்த பத்திராதிபர்" என்பதை "கொண்டொழுகுபவரும் மற்று ஞானமிர்த பத்திராதிபர்" எனவும் திருத்தி வாசிக்க.

புத்தக விளம்பரம்.

புத்தகங்கள் மிகச் சொற்பமாயிருப்பதால் அதிசீக்கிரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

[illegible]	௧	௮	௦
[illegible]	௦	௯	௦
[illegible]	௦	௩	௦
[illegible]	௦	௯	௦
ஶிவபூஜாஸ்தவ:.	௦	௧	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧௨	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௯
[illegible]	௦	௩	௦
[illegible]		௦	௯
[illegible]	௦	௦	௯
[illegible] வே.		௦	௯
[illegible]	௦	௯	௦
[illegible]	௦	௦	௯
[illegible]	௦	௦	௯
ஶிவராத்ரி நிர்ணய:	௦	௨	௦
[illegible]	௦	௦	௩
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௯
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௯
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧௨	௦
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௮	௦
[illegible]	௧	௦	௦

Transmigaraion of souls, (English)	0—2—0
Vedanta Catechism	0—8—0
யாதர்சிதி	0—6—0
சிதம்பர ரகசியம்	0—0—3
சிதம்பர மான்மியம்	0—8—0
அஷ்டாங்க யோகமும் உடற்கூறு தத்துவகட்டளையும் சாடிகதியும்	0—3—0
ஆத்துமாவும் சரீரமும்.	0—0—6

Koviloor Digital Library

விஜயத்துவஜம்.

இப்பெயர் வாய்ந்த தமிழ்ப்பத்திரிகை [illegible] மாதம் ஒருமுறை [illegible] பிரம்மவித்தியா பத்திரிகாலயத்திலிருந்து வெளியாகின்றது. [illegible] ஒருபாகங்கொண்டது. இதில் [illegible] மதத்தின் உண்மைகளும், [illegible] சங்கதிகளும், [illegible] சாஸ்திர [illegible] விஷயங்களும் எழுதப்படும். முக்கியமாக [illegible] பொருட்டே இப்பத்திரிகை பிரசுரிக்கப்படுகின்றது. இதனை [illegible] யாவரும் [illegible] கொண்டே இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. இதன் விலையைப் பார்க்கும்பொழுதே [illegible] வெளியிடப்படுகின்றதென்று நன்றாக விளங்கும்.

[illegible] விபரம்.

8 [illegible]	வருஷம்	1-க்கு	அணா 4.
இலங்கைக்கு	ஷை	1-க்கு	அணா 7.
10 பத்திரிகைக்கு	ஷை	1-க்கு	1—0—0
15	டிடோ.	டிடோ.	1—5—0
25	டிடோ.	டிடோ.	2—5—0
50	டிடோ.	டிடோ.	4—4—0
100	டிடோ.	டிடோ.	8—2—0

தனிப்பத்திரிகை விலை ஒரு அணா.

முன் பணம் [illegible] பத்திரிகை அனுப்பப்பட மாட்டாதென்பது [illegible].

[illegible] அனுப்புவோர் [illegible] அனுப்பவேண்டும். [illegible] பத்திரிகை [illegible],

வி. [illegible]
விஜயத்துவஜ பத்திராதிபர்
பிரம்மவித்தியா [illegible] சிதம்பரம்

விஞ்ஞாபனம்.

M. [illegible] பிரம்மவித்தியா [illegible] டிடோ. பத்திரிகை. [illegible] பிரம்மவித்தியாவிற்குச் [illegible] கொள்ளவும்.

பத்திராதிபர்.

THE GREATEST PAIN CURE EXTANT

SAVE YOUR LIFE.

உன் ஜீவனை இரக்ஷித்துக் கொள்.

சொஸ்தப்படுத்துகிற தன்மையில் மகத்துவமுள்ள [illegible] ஓரியண்டல் பாம் என்னும் தைலம், மற்ற பரிகாரங்கள் [illegible] சமயத்தில் இது சொஸ்தப்படுத்துகிறது. [illegible]



[illegible] வியாதிகள் பேரில் இது [illegible]. வலியுள்ள [illegible], உன் [illegible] வியாதிகள் தவிர, மற்றவியாதிகள் எல்லாம் என்று நாம் சொல்லவில்லை. சமயமிருக்கும்பொழுதே கவனி. [illegible] சொஸ்தப்படுத்தின இந்த மருந்தை இன்று பரிசோதிப்பாயானால் உன்னையும் சொஸ்தப்படுத்தும். [illegible] வாதத்தினால் கை கால் [illegible] வதைக்கப் படுகிற



இந்த [illegible] பிரயோகிப்பாயானால் அப்பொழுது உன் நோய் மாயாஜாலத்தைப்போல பறந்து விடும். [illegible] அவயவம் முன்னிருந்த வலுமையை பெறும். நீ முன் அடைந்திருந்த சுகத்தை இப்பொழுது அடைவாய். [illegible] ஆயிரமாயிரமானபேர் பரிசோதித்து சொன்ன சத்தியம். உனக்கு தலைநோய்

முகநோவலி, அல்லது தேக நோய் ஏதாகிலும் உண்டா? அந்த [illegible] ஓரியண்டல் பாம் என்னும் தைலம் [illegible] உன்னை நோயிலிருந்து நீக்கிவிடும். [illegible] இராப்பகலாய் [illegible] படுகிறதுண்டா? எவ்வளவு [illegible] முள்ளதாயிருந்தாலும் சரிதான். இந்த [illegible] ஓரியண்டல் பாம் உனக்குச் சௌக்கியத்தையும் பூரண சுகத்தையும் கொடுக்கும். [illegible] உள்ள இருமலினால் சகிக்கிறதுண்டா? அப்படியிருக்குமேயானால் இரண்டொருநாள் இத்தைலத்தைப்பிரயோகித்தால், உன் நோயும் [illegible] பூர்ண சௌக்கியம் அடைவாய்.

விலை டப்பி க-இ ரூபா 1—0—0

வேண்டியோர் சிதம்பரம் ப்ரம்மவித்யா பிரஸ் மானேஜருக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

Chidambaram—Printed and Published for the proprietor at the Brahmavidya Press No 32 Sunkaleeneerpillaikoil street.

Koviloor Digital Library

சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 9

ஸ்ரீ
ஸ்ரீ வித்யா
சங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையை ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்.

ஸ்ரீ ராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்நனாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகஉ௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச் செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த வேத ஸம்ஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்க லாயிற்று.

சேதுஸம்வத்ஸரம்.
துவாரவி உஅஉ
முகவையம்பதி.

(ஒப்பம்) நம்கள்,
[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

பிரம்பரம்:— கந்தனகுரு ஆனிமீ 12௳.

குருசிஷ்யன்மாருபாடு

(12௭-ம்பக்கத்தொடர்பு.)

இங்ஙனம் நல்லறங்களை விட்டு வேதாகமவிதிவழி நடவாது புத்திக்குத் தோன்றியவாறு நடந்து சைவவேடத்தால் உலகத்தைப் புரட்டுமிவர்களை, உண்மைத்துறவினர் எனவும் சிவாகம விசுவாசிகள் எனவும் சிவசின்னவன்பு பூண்டவர் எனவும் நம்பும் சாம்பவரும் அநேகரிருப்பதை யறிந்து உண்மையில் சிவனிடமும் அவன் தொண்டரிடமும் அவன் திருச்சின்னங்களிடமும் அன்புள்ளவர்போல் நடந்துகொண்டு வருகிறார்கள். இவர்க்கு வேதாகம விசுவாசமின்மையை முன்னரே எடுத்துக்காட்டினோமல்லவா? இனி இவர் தரிக்கும் சிவசின்னங்கள் பூர்வாசாரமேயாகுமேனும் இவர் மட்டில் அங்ஙனமாவது சம்சயமே. இனிக்கல்வியுங்கைமிடத்குன்கழலியைப்பற்றறியார். அவர் தொண்டர் பெருமையைக் கடந்திலேயு மருந்தினதில்லை. உலகப்பற்றையும் முற்றிலு மறவடித்தவரல்லர். இவர் குருக்களும் பூர்ணவிசுவாசம் வைப்பது நம்மிடம் இவர் குற்றம் கூறுகிறதுக்கவேண்டியதே. சைவர் வைணவர் ஸ்மார்த்தராதி எப்பகுதி மடாதிபதிகளாயினும் அவர்கள் இக்கடாவுக்கு யாது விடையளிப்பார் பார்ப்போம்! ஐய, நமது தூய்மை நிறைந்த சந்திரனைந்தின் மூலவாசிரியர் புதியநற்சித்தாந்தங்களை வெளியிட்டனரா? வருணாசிரம தர்மங்களை மாற்றிடவும் புதியவாசாரங்களைக்கொள்ளவும் உபதேசித்தனரா? இவ்வித செய்வது நமது பூர்வாசாரியன் கட்டளையாகுமோ? பிராமண சத்திரியாதி முதலிய பல்லக்கேறவும் பலவாத்தியங்களைத் தலையாட்டிக் கேட்கவும் நாட்டியங்களைப் பார்த்து மகிழவும் நல்லுடை யுடுத்திக் கொள்ளவும் நல்லுண் டுபுசிக்கவும் நல்லணிகள் தரித்துக்கொள்ளவும் மஞ்சங்களில் சுகப்படுக்கைகளிற் படுக்கவும், சந்தனத்தைச் சமுத்திரங்கள் பூசவும் இரண்ட மிருதுவைச் சேர்க்கு அளிக்கவும் மடமாளிகைகளில் விளையாடவும் காமமின்றி புன்னைவும், சேவகர்களை நடிப்பிக்கவும் தருக்கரை வாயிலில் அமைக்கவும் பெரியோர்களைத் திட்டவும் தனது பரமார்த்த பூசையை அன்னியரைக்கொண்டு செய்விக்கவும் தன்னைக் கடவுளுக்கும் மேலான மூர்த்தமாகக் கொண்டு முறையமுறையாது பூசை செய்விக்கவும் பொருள்களைப் பொருளாக் செலவழிக்கவும்

[illegible]

[illegible]

[illegible]

நீவிர் பயின்றது பாருங்கள்! பிராமணமடபதிகளுள் ஸ்ரீசங்கரமடத்தைச் சார்ந்தார் அவர் பாதக்குறட்டிற்கு அர்ச்சனை செய்யும் அந்தியும் சைவமடத்தில் சிவோபசாரங்களுடன் திருக்கோலப் பூசை செய்வதும் மிக நல்வழியன்றோ? பக்கோ ஜீவன் முக்திபெற்ற பெரியோரிடம் உலகத்தார் செய்ய வேண்டிய பூசையைத் தமது வேலையாட்களைக்கொண்டு தமக்குச் செய்வித்துக்கொள்ளல் எட்டுணையுங்கூடாது! இது கலியின் கொடுமையே. இனிச்சிலருக்குக் கல்வி நல்லொழுக்கம் கடவுளிடமன்பு இவையின்றிச் சிறிது குலத்திற் பிறந்த மாத்திரையில் குருவாவதும் அவை நிறைந்தும் பிறர் வீட்டிற் பிறக்காததனால் அவனுக்குச் சிடத்தன்மையும் சைவர்களை வாதிபோர் அநுஷ்டானத்திலுண்டு. எவ்வித யோக்கியதை யில்லாவிடினும் ஐந்து வயதுக்குழந்தைக்கு ஆசாரியாபிஷேகம் செய்தால் அவர் குருவாவராம். ஸ்மார்த்த மாத்துவருள் மடாதிபதிகளுக்கு குருத்துவம் என்றுமோர் வழக்கமிருக்கிறது. இஃதோர் குருடன்வழி. இவர்கள் எவருக்காயினும் ஏதேனும் உபதேசித்தாயினும் ஒரு சம்ஸ்காரத்தைச் செய்தாயினும் இருப்பின், அவர் குருவாகலாம். அங்ஙனமின்றி ஏதும் அவரிடம் பெறாமல் இருப்பவரும் அவர் சிடராயின் இதுபெருங்கொடுமை. இக்காலத்தில் இது பணந்தேடும்வழியில் ஒரு நல்வழியாக வமைந்ததே யன்றி வேறிதனாற் பயனேதுமில்லை. ஏதோ சில சம்ஸ்காரங்களைச் செய்து அதன் வழிபோகுங் கட்டுமைப்பினராயினவிவர்எல்லாச்சாதிகளிலும் எல்லாவிடங்களிலும் அனேகமாவுண்டாயினர். என்றுபோனபோதிலும்புதிதுபுதிதாய்மடங்கள் தோன்றுகின்றன. அங்ஙனமே மடங்களை ஸ்தாபித்து பிறருசிறுவரிடம் ஒப்புவித்து அவர் காலஞ்செல்லின் அவரைத்தொடர்ந்து வரும் குழந்தைகள் குருத்துவம் சிஷ்யத்துவமாகின்றன. ஆராயுங்கள்! 'அம்மடத்துச்சர்வாதிகாரி மடாதிபதி குழந்தையைத் தனித்துக் கண்டு "பெரியோர்கள் வரும்பொழுது இப்படி உட்காரவேண்டும், காலில் முழுகவேண்டும், இவ்விதம் ஜபிப்பதுபோல் இருக்கவேண்டும், பூசை இவ்விதம் செய்யவேண்டும், இவ்விதம் அநுஷ்டானம் செய்யவேண்டும், இவ்விதம் பேசவேண்டும், இவ்விதம் ஸம்மானிக்க வேண்டியது, இவ்விதம் சாப்பிடவேண்டும், இவ்விதம் வாங்கவேண்டும், இவ்விதம் கொடுக்கவேண்டும்," என்பதாதி வசனங்களை உபதேசிக்கிறதுமன்றி, ஏதேனும் சாஸ்திரப்பிரசங்கம் நடக்குமிடம் ஏதும் பேசக்கூடாது; சிறிது தலையைமட்டில் அசைக்கவேண்டும் என்றும் சொல்லி வைக்கிறார்கள். இவர் குருக்களா? சொல்பவர் குருக்களா? வைதிக வெளமிகர்களும் ஏதும் அறியாத சிலர், உள்ளவர் செய்யும் கிரப்பந்தத்தால் பெரியவிடங்களைப் பெறுவாராயின் அவர் எல்லாரும் சொல்வதைக் கேட்பதனால் எல்லோருக்கும் சிடராகவே இருக்கவேண்டிவரும். இம்மடாதிபதிகளுள் எவரைப்புகழ்வது? எவரையிகழ்வது? இவர்களுக்குள் உள்ள குருசிஷ்யமாறுபாடு ஒருவாறு கெட்கத்துவாசாரியர் சொகாசாரியர். இருவருள் உண்டாகிய வேற்றுமையைப்பற்றிப் பின் தெரிவிப்பாம்.

ஞேக்.

[illegible]

வேதாகமப்பிராமாண்யம்

தொடர்ச்சி

வைதிகருக்குத் தந்திரபேதம் உண்டா இல்லையாவென விசாரிப்பாம். வேதங்கள் தேசிந்தந்திரங்களின் பெருமையை யாவது அதன் ஆக்கியோன் பெருமையையாவது அதனுப யோகத்தையாவது எடுத்ததில்லை. உலகத்தார் பெரியோர்அனு ஷ்டானத்திலமட்டில் வேதாகமதருமங்கள் கலந்தநுஷ்டிக்க ப்பட்டுவருகின்றன. இவ்விஷயத்தில் வைதிகர்கூறுவதாவது: வேதங்களில் உபாசனாகாண்டத்தும்கர்மகாண்டத்துமேசிறி து ஆகமவிஷயத்தை அனாவசியதன்மையுளதாகத்தோற்றும் மற்றது அங்ஙனம் சம்பந்தமற்றேகிற்கின்றன. இனி முற்கா ண்டங்களில் ஆகமசம்பந்தந்தோற்றமும்போலியேயாம். பா ருங்கள்! காயத்திரியின் இருபத்திரண்டு முத்திரைகள் சிவ பூஜைமுதலியவிடம் லிங்கசானக்கிரமமாதிலக்ஷணம் நியாசி லக்ஷணம் இவைகளே ஆகமசம்பந்தமென்பது. இவ்விஷயங்கள் ஆகமங்களைக்கொள்ளப்பட்டனவேயல்ல. இவையின்றியமை யாமையிலன்றோ வேதங்களுக்காகமசம்பந்தம்வேண்டும். கா யத்திரிமந்திரத்தின்முத்திரைகள்வாசிஷ்டம்முதலியகற்பங்க ளிலும் லைங்கிருதிகளிலும் மற்றுஞ்சிலபுராணங்களிலும் இரு ப்பதால்அவையின்றிக்காயத்திரியால்பெறத்தக்கும்விப்ரத்துவம் விளங்காதியாது. வேதவிதிபூஜையில்லிங்கசானக்கிரமாதிவி லக்ஷணம்வேண்டுவதேயில்லை.எங்கும்அதைப்பாவித்து ஆராதிக் கலாமென்பதும் ஆராதனமின்றிப்புசித்தல்கூடாதென்பதுமே ஸ்ம்ருதி முதலியபுராணவிதிவசனக்கருத்து. ஆயின்லிங்க பிரதிஷ்டாதிகள் வேதமுதலிய கற்பசம்பந்தமிருத்தலால் அங்கேயும்ஆகமங்கள் அவசியப்படாதேயெனின், அங்கும் அவ்வாகமசம்பந்தம் வேதங்கட்கும் வைதிகதன்மங்கட்குமி ல்லை. வேதியத்திருபாத்திரம்புரமுதலியவற்றிற்குச்சிற்பம் எங்கெனில் வேதாங்கங்களெனப்படும் சிக்ஷை வியாகரணம் நிருக்தம் சோதிடம் சந்தம் கற்பமெனப்படும் ஆறனுள்ளொன் றாயதும் இச்சமயம் போதாயனர்முதலிய முனிவர்களுக் கினாகவே எடுத்த மாமெருந்திரங்களிற்றானே கல்பம் என்றும்பாகத்தின் வெவ்வேறுவேதசாகைகளிலிருந்து எடுத் தொருங்குசேர்த்துச்சொல்லப்பட்டிருப்பதால் அதைப்பற்றிய யாகமத்துவார்த்தையும் ஒழிந்தது. இனிப் புராணங்களெல்லாம் "[illegible] ஸ்ரு தெளபக்ஷ" என்பதாதி வசனங்களால் வேதங்களின் பொருள் விளக்க விரித்துவரையாய் நிலைப்பட்டிருந்தலுடன் அமைத் தனளுமின் அவை வைதிக நூல்களே. அதாவது:—வேதங்க ளால் முதலியித்தலுமிய வழிநூல்கள். அவற்றுள்ளும் பல பிரமாணசணங்கள் லிங்கலக்ஷணம் சானக்கிரம லக்ஷணம் ஆலயப்பிரதிஷ்டை கர்வருமித்திரங்கள் முத்திரலக்ஷணம் இவை 'வேண்டியவரை சொல்லப்பட்டனவென் அவற்றை எடுத்தே (வேண்டுமாயின்) கொள்வோம். அன்றி ஆகமங்க ளின் சம்பந்தம் வைக்க வேண்டுவதேயில்லை. இனி வேதங்

[illegible]

க்ஷேத்ரத்தாருக்களித்தபரமசிவ ஆகமங்களையும் மக்களுயர அவற்றை நீர் ஒழுக்கி வேதவழி நடத்தல் உசிதமோவெனவி னு விகழின், கூறுதும்: வேதங்களின் சாரமாய பலபுராணங்கள், வேதங்கள் முதல்(அவ்வக்கன்ம பரிபாகமெருக்கேற்பச் சர்வஜ்ஞ தயாபரருயகடவுளால்)உபோதாயதம்மனை பரமனெயருளிருன் எனச்சொல்வதால் அவை எல்லாம் ஒவ்வொரு அதிகாரிக்குபதேசிக்கப்பட்டமையால் சுத்தவைதிக மதஸ்தராய எமக்கு அதன் சம்பந்தம் வேண்டுவதில்லை. மேலும் புராணம தருமசாஸ்திரம் வேதங்கள் இம்மூன்றும் முதல்வனே முற்காலம் அருளிருன் எனப்புராண விதிகாசங்கள் ஓதாநிற்க அவற்றுள் தாரதம்மியமும் ஒன்றுக் கொன்றுஅங்கமாவதும் ஒன்றை நோக்கியொன்று பிரமாணத்தன்மைப்குறைந்துநிற்றலும்போல இவ்வேதாகமங்களும் என்க. இனி ஒருமுதல்வனருளியதே ஒரு பெருமையாகாது. அப்பெருமை காத்திகருல் முதல்வியபிசரித்தலால் என்க. மேலும் ஆகமங்கள் பலவகைப்பட்டன. பாஞ்சராத்திரம் பாசுபதம் திரிபுராதந்திரம் என்பதாதி. இவற்றுள் ஆகமம் எனும்சொல்மட்டும் பொதுவாயிருப்பினும் ஒன்றை ஒன்றுதூஷிப்பது அவற்றின் இயல்பாயமைந்தது.புராணங்களோஇக்காலவழக்கத்துள்ளஆகமங்கள் எல்லாம் அப்பிரமாணமெனவும்அவைதிக மெனவும் முழக்குகின்றன. ஸ்ரீசிவபுராணம் வாயுசம்ஹிதை யுத்தரபாகத்தில் துவக்கத்திற்றுனே ஆகமங்கள் வைதிகம் அவைதிகம்என இருபகுபாடுடையன வென்று பிரித்து பிறகு காமிகாதிவாதுளாந்தமிருபத்தெட்டாகமங்களை அவைதிகம் என்று ஒழித்திட்டமையாலும் ஶிவப்ரோக்தா ஸ்த்ரைவர்ணிகாநாம்ஶ்ருதிபாஹ்யா:" என்று சக்திதந்திரத்திற் சொலப்படுதலாலும், மேலும் கூர்மம் முதலிய புராணங்களிலும் வேதாதிகாரம் இல்லாதவரான சிலரை நோக்கியே யாகமங்கள் சொல்லப்பட்டன என்று குறிக்கப்பட்டமையாலும், ஆகமங்கள் வைதிகர்க்கவசியமில்லை என்பார். இனி வைதிகம் எனக்கூறப்படும் சிலவாகமங்கள் மட்டில் புராணங்களுடன் முரணுவழி பிரமாணமே. இனிப் பரமேசுவரனது முகமைந்தனில் முக்கியமான ஈசானியமுகத்தில் தோன்றியதாதலாலும் ஆதியில் அறிவிற்சிறந்த சத்தியபாதர்களாகிய திருநந்திதேவர் சனகாதியோருக்குபதேசிக்கப்பட்டமையாலும் வேதாந்தசாரமாய் நிற்றலாலும் சிறப்புவகையாய் சிவனேபரம் எனத் தனித்தோதும் சித்தாந்த சாஸ்திரமாதலாலும், சிவாகமங்கள் வேதங்களுக்கு மேலான தெனவும், அல்லது வேதசமமாகவாம் என்றும், சர்வவேதங்களிலும் பொதுவகையாற்றுணிந்தோதிய பரம்பொருளை"இஃது"எனச்சுட்டியோதி அன்பர்க்கு அனுபவமாக்கச்செய்வதாலும் பிரமமுகத்தினின்றும்வெளிப்பட்டவழி வந்துள்ள வேதங்களுக்கெதிர்மறை சாதுர்ய நாராயணனே நிருவகம் சாற்றியதாதலாலும் அதுவும் வேதங்கள் ஒழிந்த காலத்துச்சவதந்திரமாகச்சில வேதாந்தங்களும் தெளிய வெளிவந்தமையாலும் சர்வவேதங்களிலும் அடையாப்பெரும்பேற்றைச் சண்டிகேசர் இதனுல் அடைந்தமையாலும் ஆதியில் இதையும் முறைகளுடன் வகுத்தசாராம்பத்திஶ்ருத்யுதாஹ்ருதாஸ்'

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வனக்காரணமாந்தன்மைப் பெற்றமையாலும், வேதங்களிலும் [illegible] என்கின்றபடி திருவாய்மொழியைப் படிப்பார் அவர் சோமனை (சோமயாகப்பயனை என்பது பாஞ்சராத்திரிகள்கொண்டபொருள்) அடைவார். பக்தியுள்ள ஆயிரம் பெயர்களைப்புனிதப்படுத்துவார். என்றிருத்தலாலும் மாபாரதத்தில் உபரிசரவஸு உபாக்யானத்தில் பாஞ்சராத்திரம் பெருமைப்படுத்தப்பட்டமையாலும் மற்றும் பலவாற்றானும் வேதங்களிலும் மேலாகவாவதுவேதங்களுக்குச்சமமாகவாவது ஸ்ரீபாஞ்சராத்திரத்தைக் குறிக்கவேண்டும் என்றும், வேதங்களிலும் புராணங்களிலும் உண்மைப்பொருளாய்அமைந்த சத்திதத்துவத்தைக்குறிப்பதாலும் "பரமோபநிஷத்" என்னும் உபநிடதத்திற் கண்டபொருளை விளக்கமெழுந்தமையாலும் போகமோக்ஷங்களை ஒன்றுக்கொன்று விரோதமின்றித்தருதலாலும் சகத்தைக்கொண்டு சகத்தை விளைவித்தலாலும் சுலபசாத்தியக்கிரியைகளைக்கூறியதும் [illegible]த்தலாலும் மான்மழு ஆழியான் திரிசூலமுதலியன தாங்கிய கோரமூர்த்திகளல்லாப் பரமசிங்காரவடிவம் பெற்ற திவ்விய வித்தியாமூர்த்தியின் பெருமையை விளக்குதலாலும் [illegible] என்பதாதி ஸ்தலங்களிலும் ஸர்வோபாக்கியானத்தும் சப்தசதியிலும் புகழப்பட்டமையாலும் அக்தரங்கமோக்ஷ சாதனமந்திரமாக நிரமத்தையும் பூர்ணாபிஷேகத்தில் முடியும் தேவிசாமயதீக்ஷையால மனமலம்வாட்டியப்பினதாகையாலும், நாலேதத் புஷ்ச்சியாகச் சேரும் விஷ்ணுவும் மற்றவரும் ஏற்றிய சைவ வைணவ தந்திரங்களைப் போலல்லாது பரசிவனும் நேரில் உலகத்தார் அறிந்துய்யுமாறு வெளியிடப்பட்டமையாலும் மற்றுமபலாகசிய வழியாலும் வேதங்களுக்கும் உயர்நிலையிலாதல் அவைகளுக்குச் சமநிலையிலாதல் சத்தியாகமத்தை வைக்கவேண்டும் என்றும் சைவரும் வைணவரும் சாக்தரும் கூறுவது பொருத்தமேதாமெனிற் கூறுதும்:

வரும்.

ஸங்க்ஷிருதபாஷை
கல்பஸூத்திரம்.

தொடர்ப்பு.

ஐய, இக்கற்பங்களுள் ஆதிகாலமுறையில்லவர் குத்திரத்திருக்கின்றபடி சம்ஸ்காரத்தை அதாவது கர்ப்பாதானத்தைப் பெற்றோர் அவர் அச்சூத்திரத்தைவிட்டாச் பதிதராவாரென்றன்ஸமனாத்தினைகுத்து[illegible]—[illegible]சூத்திரங்கள் அடங்கியம் ஓர்அந்தணர் செய்துகொள்ளவேண்டிய எல்லாச் சம்ஸ்காரங்களையும் சொல்வதால் அவைகள் எத்தச்சாகையினின்று எடுக்கப்பட்டனவோ அச்சாகை அச்சூத்திரத்தால் எடுக்கப்பட்டமையின் ஒரு

Koviloor Digital Library

[illegible]

சாகையிற் பிறிதும் மதுராகையிற்பிறிதும் சங்கலிக்கப்படு தும் அவன் சம்ஸ்காரம் ஒருவழியிலும் முற்றுப்பெறாது பிறு ம் ஆதலாலும் தந்திர சங்கரதோஷமுண்டாமாதலாலும்பிறப் பால் அவரவர்க்கு விதிக்கப்பட்ட விதியைவிட்டொழித்துப் பொதுவாயுள்ளதைக் கொள்ளலாமாயினும் வேறொரு சார் பாருக்குச் சிறப்பாக விதிக்கப்பெற்ற மற்றொருவிதியைக்கை க்கொள்ளக் கூடாதாதலாலும், அது பொருந்தாதென்பதே. இனிப் பொதுவாயுள்ளது எதுவெனில், போதாயனரே வரை ஸ்மிருதிக்காரர் பலவிடம் புகலுகின்றார். மேலும் போதாயன மாமுனிவர் குருவென்றும், மற்றச்சூத்திரக்காரர் சீடரென் றும் அப்போதாயன முனிவர் எல்லாச்சாகைகளிலுமுள்ள வெல்லாவிஷயங்களையும் அடக்கிச்சூத்திரம் செய்திட்டார் எ ன்றும் அச்சூத்திரத்தில் அகப்படாததொன்றுமில்லையென்றும் அவர் சொன்ன பொதுவிஷயத்தை அறிஞர் தாமே பதிந்து அதன் வழி நடப்பாராதலால், அவ்விஷயம் வேண்டுவதில்லை என்று கருதியே மற்றச்சூத்திரக்காரர் யக்ஞோபவீத தாரணம் உதகசாந்தி விருஷோத்ஸர்ஜனம் திருமாங்கலியதாரணம்சிவா ர்ச்சனம் பிரதிஷ்டை விபூதிதாரணம் இவைபோன்ற பல விஷயங்களை விட்டுவிட்டார். இவ்விஷயங்கள் மட்டில் இன் றும் இதரசூத்திரிகள் போதாயனத்திடமே கொள்வாராயி ற்க ஓர் சமயம் வேறு சூத்திரம் அகப்படாவிடம் அப்போ தாயனத்தைக்கொண்டு எந்தக் கிரியைசெய்யினும்செய்யலாம் என்று பெரியோர் சம்மதம். அதுவும் கிடைக்காவழி வேறு அங்கு கிடைக்கும் சூத்திரங்களைக்கொண்டேனும் கிரியையை நடத்திப் பிறகுதன் சூத்திரம் கிடைத்தபொழுது மந்திராவிரு த்தியாவது செய்துகொள்ளவேண்டும். இனி எந்தச்சூத்திரமா வது ஒன்றைக்கொண்டே சம்ஸ்காரம் செய்துகொள்ளவேண் டியிருத்தலால் அவைகள் அந்தணர்க்கு முக்கியம்என்பது பசுமரத்தாணியாயிற்று. போதாயன சூத்திரம் மிகவிரிந்தது அதில் அடங்காப்பொருளில்லை. விரியில் அதற்கடுத்தது இர ண்யகேசிய சூத்திரம் எனப்படும் ஸத்யாஷாட சூத்திரம். ஆயின் சூத்திரசாங்கர்யம் வராது கூடுமானவரையில் காக்க வேண்டும். அவ்விதம் சூத்திரங்களைப் பரிபாலித்துவந்தமையா ற்றான் இவ்வளவு காலம் பிராமணர் வேதாதிகளை விட்டொ ழித்திடினும் வைதிக சம்ஸ்காரங்களைமட்டில் பெற்றுவரு கிறார்கள். மிற்க. அவற்றில் இக்கற்ப சூத்திரத்தால் மட்டில் இக்கலிகாலத்தவர்வர்ணாசிரமம்சிதறிஇருக்கின்றது. அந்தோ! இவ்வளவிலே இச்சூத்திரங்களில் உள்ளசிரத்தையும் ஒருப டுங்குறைந்துவருகிறதைப் பார்க்கமனம்நொந்துவிடுகிறதுபாரு ங்கள்! இக்கலியின்ஐந்தாயிரத்திறுதியிற் பிறந்தவர் களுபாவராய வைதிகரும் லௌகிகரும் இச் சூத்திரங்களைச்சற் றும் கவனியாது அலக்ஷியஞ்செய்து வருகிறார்கள். இங்ங னம் [illegible] வி...

[illegible]

குப்பிரயோகம்என்று எவரோ ஒரு விற்பத்திஹீனர்எழுதியதை யைத்துர்சொல்லு எழுத்துக்கூட்டித் தந்திரத்தைவிட்டு மந்திரத்தைப் புரட்டி பேசிமுடித்துவிடுகிறார்கள். இவரை எதேனும் ஒரு விஷயத்தில் ஸூத்ரத்தில் என்னவிருக்கிறது என்று கேட்டால் இதுதான் இதிலிருக்கிறதென்று ஏதேனும் ஒருபழம்சுவடியைக் கொண்டுவந்துபோட்டிடுவார். இவருக்குச் ஸூத்திர மிருதிவ; சுற்பம் இதுவே; பாஷ்யம் இதுவே; காரிகை இதுவே; எல்லாம் இதுவே. ஆனால்இக்காலத்தில் பெரும்பான்மையில் எல்லோரும் அறிவீனராயினும் பலர் பாபபயத்தால்ஸூத்திரபாஷ்ய காரிகாவிருத்திகளைப் பார்த்தும் செய்வித்து வருகிறார்கள். அவர்கள் 1000க்கு ஒருவர் இருப்பார். மற்றவைத்தியார் எவரும் ஒன்றும் அறியார். அவர்களுக்கு விற்பத்திவிருப்பதே இல்லை. ஒரு சிறு சங்கதிசொட்டுகிறன். கேளுங்கள்! அந்தணராதியோர்செய்யும் மகாளயத்தில் காருணிகபிதுருவருணம் என்று ஒன்றுண்டு. அவ்வருணம் செய்வது சித்தப்பன் பெரியப்பன் அம்மான் முதலிய பெருக்காக. அவர் உயிருடனிருப்பினும் அவருக்குத் திவசம் பண்ணிவைக்காதொழியும் உபாத்தியாயர் ஒருசிறுபான்மையே. இங்ஙனம் அமாவாசி தர்ப்பணத்தும் மற்றுமுன்னவிடத்தும் சிந்தித்தறிக. இக்கிலையில் இந்தச் ஸூத்திரங்களை உபேக்ஷை செய்தல் பெரியோர்களுக்குசிதமல்ல. ஆகையால் உபாத்தியாயர்களைச் சீர்திருத்தும்பொருட்டு ஓர் சபையை ஏற்படுத்தி அந்தச்சபையில்பரீக்ஷையில்தேறினவர்களைக்கொண்டே நம்முடைய கர்மபத்ததியைச் செய்துகொள்ளவேண்டியது. இங்ஙனம் ஓர் வியவஸ்தை நியமித்து எந்தச்ஸூத்திரங்களால் நமக்கு யுக்தியான லாபமும் புகழுமுண்டாமோஅந்தச்ஸூத்திரங்களை வெளிப்படுத்தக்கடவர்களென்றறிக.

இன்னும் வரும்.

கடிதம்.

கடித கர்த்தர்களபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச்சாரமாட்டா.

கைம்பெண்களுக்கு மறுமணம் "அவைதிகம் என்பது"

ஐயா:

இம்மறுமணம் பிராமணர்களுக்கு முன்னரே கண்டிக்கப்பட்டதாயினும் அடிக்கடி மறுபடியும் இம்மறுமணம் இந்தேசத்தில் பேசிவருவதால் அதை வைதிகம் என்றும் சிலர் நம்பியிருக்கிறார்கள். இது உண்மையில் செய்யத்தக்கதே என்றும் சிலர் நம்புகிறார்கள். அநேகர், கைம்பெண்கள்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

ரித்தால் அவர் பாவைவது அசிப்பேன்மேம். எவ்வாறெயத்தி
ற்கும் பெரியோர் மௌனமுத்திரை தரிக்கிறார் பத்
திரிகாசிரியர்கள் எல்லோரும் நீர் சொல்லும் விதவா
விவாகம் அசாஸ்திர சித்தம் எனவுரையாதொழியார். இத
ற்குமுன் பல தடவைகளில் நாம் கேட்ட கேள்விகளுக்
குப் பதில் ஏதும் எழுதாது தோன்றியபடி மனதுக்கேய
க்கவாறு புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் எழுதுவ
துசிதமா? இவ்விஷயத்தை உம்மைக் கேட்டவரேவர்?
எனவதட்டி விஸில ஏழைகள் மனவருத்தப்பட பந்து
ஜன துவேஷங் கற்பிப்பது உமக்கு எவ்விஷயத்திலும
நியாயமெனக் கொள்ளக்கூடாது. நீவிர் பணத்திலுங் கல்
வியிலும் பெற்ற பெருமையை ஒருவாறு உலகோபகாரம்
செய்ய வேண்டியிருந்தால் புன்மதங்களைக் கண்டித்து
நன்மதங்களைத் தாபிப்பதிலும் நமது பொதுஜன க்ஷே
மார்த்த சபைகளை நிலைபெறச்செய்வதும் நற்பத்திரிகைக
ளை யாதரிப்பதுமன்றோ உபயோகப்படுத்தும் நல்வ
ழி அங்ஙனம் செய்தால் கடவுளுமக்குக் கிருபைசெய்
வார். உலகத்தார் உம்மை இகழாது புகழ்வார். மறுமை
யிலும் இம்மையிலும் நீவிர் நற்சுகம் பெறுமாறு இனிமே
லும் இரங்க உமக்கு உமாகாந்தக் கடவுள் கருணையை
வேண்டிவருகிறோம். இனிச் சில ஸ்மிருதி வசனங்களில்
விதவாவிவாகம் விதிக்கப்படுகின்றதெனில் அவற்றை
அடியில் வரித்து அவற்றின் உண்மைப்பொருள்களை விள
க்கி உங்கள் கொள்கையை அவலமாக்குவோம். பராசர
முனிவர் இயற்றிய தர்மசாஸ்திரத்தில் ஒரு சுலோகம்
புனர்விவாக விதியைக் காட்டுவதாய்ச்சொல்லுகிறார்கள்.
அதாவது "நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபேச பதிதே
பதௌ | பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரன்யோ விதீ
யதே" என்பது. இதை விசாரிப்பாம். இப்பராசரமுனி
வர், மனுமுதலியோர் சொன்னதைப்பின்பற்றினாரா?
அல்லது தற்காலத்துச் சீர்திருத்தக்காரப் போலிகளைப்
போல் தமது புத்தியிற்றோன்றியபடி சொன்னாரா? அல்
லது முன்னோர் அனுஷ்டித்த இத்தருமம் இக்காலம்
ஏதாவதொரு நோயால் விடுபட்டது, அதை மறுத்து
நிலைநிறுத்தவேண்டுமெனக் கருதியோ? அல்லது [illegible]
பெண்கள் காதலடங்கவேண்டியோ? இவற்றுள் முதற்
கூற்றுப் பொருந்தாது. மனுஸ்மிருதியில் அடியிற்கண்ட
வசனங்களால் இவ்விதவாவிவாகம் மிகக்கொடிய பாவம்
என மறுக்கப்பட்டமையால் என்க. அவ்வசனங்களும்
அவற்றின் பொருள்களும் அடியிற்காண்க. "காமந்து க்ஷ
பயேத்தேஹம் புஷ்பமூலபலைஸ்ஸுபை:| நது
நாமாபி க்ருஹ்ணீயாத்பத்யௌ ப்ரேதே பரஸ்யது

[illegible]

[illegible] ௨. [illegible] இவற்றுள் முதல் வசனப்பொருள்: புருடனிறந்தால் பெண்கள் தம் சரீரத்தை மெல்ல மெல்லக் கனிகள் கிழங்குகளாதிகளைப் புசித்து ஒடுக்கிவரவேண்டுமென்றி வேறு புருடன் பெயரை எடுக்கக்கூடாது எ-து. இரண்டாம் வசனப்பொருள்: புருடன் இறந்தபிறகு பிரமசரியவிரதத்தில் இருக்கும் பதிவிரதாஸ்திரீ அவ்வியம் பிரமசாரிகள் பெறும் நல்லுலகம் பெறுவாள் என்பது. மூன்றாம் வசனப்பொருள்: விவாகவிதியில் நியோகமும் விதவாவிவாகமும் சொல்லப்படவில்லை என்பது. [illegible] என்பதாதி பல வசனங்களை விரிவஞ்சி விடுத்தனம். இனி யாஞ்ஞவல்கியரும் [illegible] என்றார். இதன்பொருள்: கன்னிகாதானம் செய்வது ஒருமுறையே, இரண்டாம் முறை எவனேனும் பெண்ணைக்கொடுத்தால் அவனைத் திருடனெனத்தண்டிக்கவேண்டியதே என்பது. பின்னும் அவரே [illegible] என்றும் சொல்லினார். இ-ள். புருடன் இருக்குமளவிலாவது அவனிறந்தபிறகாவது வேறு புருடன்முகம்பார்க்காதமங்கையிம்மையில் நற்புகழ்பெற்று மறுமையில் உமாதேவியாருடன் கலந்து வாழ்வாள் என்பது. இனி வைத்தியநாததீக்ஷிதர் எழுதிய புத்தகத்துள்ள ஆச்வலாயனவசனம் [illegible] இவற்றின் பொருள் முறைப்படியே. க. "அறிவின்மையால் கைம்பெண்ணை விவாகஞ்செய்துகொண்டவன் அவளை உண்மையறிந்தவுடனே விட்டுப் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளவேண்டும்." ௨. "மனுசத்திற் கைம்பெண் படுத்தால் அவள் புருடன் நரகமடைவான். ஆயின் அவன் சௌக்கியத்துக்காக எவளும் பூமியிலே படுக்கவேண்டும். ஒருமுறையாவது அந்த விதவையைச் சம்பந்தித்தவனுக்குக் காரிஷகமென்றும் மகாப்பிராயச்சித்தமன்

Koviloor Digital Library

पत्रिका:

पत्रिका... प्रतिज्ञा:

विधवाविवाहस्य वैदिकत्वनिरसनम्

[illegible]

காதலடக்கிப் படுந்துயரம் மிகக்கொடிதெனவாலோசித்து அதை எவ்விஷயத்தும் எவ்வளவுபணச் செலவாவது செய்து ஒழித்திட வேண்டுமெனத் தயையுடையார்போல் முயன்று வருகிறார்கள். இங்ஙனமிருக்க, இப்பிரபுக்களுக்குத்தக்க உபாத்தியாயர் சிலருண்டு. இவர் தர்மசாஸ்திரங்களை ஓர் சிறிதுமறிந்திலர். அறிஞர் கூடிய கூட்டத்தின் நாட்டமறியார். மூதறிஞர் ஆசாரங்களின் உண்மைதெரிந்து கொண்டாரில்லை. வேதங்களின் உட்பொருள்களை அறிந்தவரல்லர். அவர் கையிலேந்திய புல்மாத்திரைப்பால் புரோகிதப்பெயர் வகித்துஎல்லாமறிந்துகொண்டவர்போல் நடித்துப்பணவாசைப் பிசாசின் கைச்சிக்குண்டு மறுமணநாடக சூத்திரதாரராய் நடிக்கின்றார். அந்தோ! இக்கலிசங்கடத்லைதக் கண்டீர்களா! ஓ! கருணைக்கடல்காள்! நீவிர் கைம்பெண்களுக்குக் காட்டுங்கருணை அவர்கள் இம்மையில் ஓர் மணவாளனை மணக்கும் பெருஞ்சுகம்பெறவேண்டியோ? அல்லது மறுமையில் ஏதேனும் சுகம்பெறவேண்டியோ? முதலில் கூறியது முற்றிலும்கூடாது. ஏன்எனில், அவர்களை நடத்தும் வழியால் அவர்களுக்குக் காதலுண்டாகாவழி தேடவேண்டும் என வேதமுதலிய நன்னூல்கள் விதிக்கின்றன. வேதத்தில் "மணவாளன் இறந்தால பெண்களுக்கு ப்ரம்மசரியம், அல்லது உடன்ஏற்றம்" என்று காணப்படுதலால் என்க. அதில் ப்ரம்மசரியம் என்பது தாம்பூலம் கந்தம் முதலியவைகளை ஒழித்துப்புருடர்முகம் பாராது தரையிற் படுத் திருத்தலாம். இந்த விரதம் கொண்டவர்களுக்கு இவ்விரத விரோதமானவைகளைத்தேடிக்கொடுப்பது தங்களுக்குசிதமோ? இரண்டாம் வழியைப்பார்ப்போம் எனில், அதுவும் பொருந்தாது. என்னை? அது மிகக்கொடிய நரகத்தைக் கொடுக்கும் தீச்செயல் என்பது ஸர்வப்பிரமாணங்களும் ஒப்பியது? ஆயின் உங்கள் சிரமம் இருமைப்பயனுக்கும் விரோதம் எனவறிவீர்? எவ்வழியில் அது கொடிய நரகத்தைக் கொடுக்கும் என வறிந்தீர் எனில், வேதங்களாலும் தர்மசாஸ்திரங்களாலும் என்று நிரூபித்திடுவோம்.

வேதம்:— [illegible] என்பதுஇதன் பொருள்- [illegible] - எக்காரணத்தால் [illegible] ஒரு [illegible] யூபமெனும் கம்பத்தில் [illegible] - இரண்டு கயிறுகளை [illegible] - கட்டுகிறார்கள். [illegible] - அநேககாரணத்தால் (அதுபோல) [illegible] - ஒருவன், [illegible]

யதா ஶ்ருதி: | யதேகஸ்மிந் யூபே த்வே ரஶநே பரிவ்யயதி தஸ்மாதேகோ த்வே ஜாயே விந்ததே யந்நைகாம் ரஶநாம் த்வயோர் யூபயோ: பரிவ்யயதி தஸ்மாந்நைகா த்வௌ பதீ விந்ததே, [illegible] || யஸ்மாத் காரணாத் ஏகஸ்மிந் யூபே [illegible] பரிவேஷ்டயதி தஸ்மாத் ஏக: புருஷ: [illegible] ப்ராப்நோதி. [illegible] | யஸ்மாதேகாம் ரஶநாம் உபயோ: யூபயோ: ந பரிவ்யயதி தஸ்மாதேகா ஸ்த்ரீ த்வௌ பதீ ந விந்ததே - ந ப்ராப்நோதி [illegible] அக்நிஹோத்ரம் ஜுஹோதி - ஆகாரமாகாரயதி - ஆத்ரேயாய ஹிரண்யம் ததாதி - இத்யாதி [illegible]

இரண்டு மனைவிகளை - விந்ததே-விவாகஞ் செய்துகொள்வான் யந்ந - எக்காரணத்தால் ஏகாம் ரஶநாம் - ஒரு கயிற்றை, த்வயோர் யூபயோ:-இரு கம்பங்களில் ந பரிவ்யயதி - கட்டுவதில்லை. தஸ்மாத் - அக்காரணத்தால் ஏகா -ஒருத்தி, த்வௌ பதீ - இரண்டு பதிகளை ந விந்ததே - அடையமாட்டாள்'' என்பது. இதனால் ஒருத்திக்கு இரு திருமணங்கூடாதென்பது நன்கு புலப்படுகின்றது. இனி இது விதியல்ல; விதியின் இலக்கணமான 'லிங்' முதலிய விகுதிகள் இங்கு காணப்படவில்லை எனின், அவ்லிங் என்னும் விகுதியன்றி வேறு விகுதியான லட் என்னும் விகுதியும் பலவிடத்து விதியைக் குறிப்பதாய் மீமாஞ்சகர் கொள்கை. உதாரணமாக அக்நிஹோத்ரம் ஜுஹோதி- ஆகாரமாகாரயதி- ஆத்ரேயாய ஹிரண்யம் ததாதி என்பதாதி பல. (லிங் எனும் விகுதி ஆணைப்பொருளைக்கொண்டுமுடியும்)எதிர்காலவிகுதிலட் என்பதுநிகழ்காலத்தைக்கொண்டுமுடியுமது. இச்சுருதிவாக்கியத்துக்கவர் சொல்லும் பொருள் யாதோ அறியோம். இவ்விதமான பல வேதவாக்கியங்களுள. நிற்க. ஸ்மிருதிகளோ இவ்விஷயத்தைப் பலவிடத்தில் மறுத்துவருகின்றன. அவைகளையும் எடுத்துக்காட்டுவோம். முன் உங்களை வினித்து ஓர் சங்கதியறிந்து மேலே எழுதவேண்டியிருக்கிறது. உமக்கு வேதங்கள் பிரமாணமா? இல்லையா? ஸ்மிருதிகள் உமக்குப் பிரமாணமா? இல்லையா? நீவிர் சிஷ்டாசாரத்தை ஒப்பினீர்களா? இல்லையா? இனி வேதங்களைப் பிரமாணமெனக் கொண்டீராயின் வேதங்களை நீர் படித்தீரோ? அல்லது எவரிடமேனுங் கேட்டறிந்தீரோ? படித்தறிந்தீராயின் தயைசெய்து எந்த வேத வாக்கியம் புனர்விவாகத்தைவிதிக்கிறது என்பதைக்காட்டுவீராக. நிற்க; எமக்கு நீங்கள் அறிந்த வேதார்த்தம் தெரியவில்லையாதலால் அவசியம் எங்களுக்குத் தயவு செய்து அந்த வேதவசனத்தையும் அதன் பொருளையும் காட்டவேண்டும். ஏதோ ஒரு வைதிகன் ஏதோ எழுதுகிறான் அதை நாம் எதற்குக் கவனிக்கவேண்டும் என உதாசினமாகவிருத்தல உண்மையை உலகத்தாருக்குபதேசிக்கவந்த உமக்கு அழகாகாது. மனுமுதலிய மூதறிஞர் எழுதிய ஸ்மிருதிகளில் எதைப் பிரமாணமாகக்கொண்டு இந்த விதவாவிவாகம் நடத்துகிறீர்கள். அதையும் தயை செய்து தெரிவிக்கவேண்டும். எவருமறியாத அதிரகசிய ஸ்மிருதிவாக்கியத்தை நீவிர் எமக்குக்காட்டாது உள்வைத்தொளிக்கலாகாது. இனி எந்த வைதிகர் சிஷ்டர் இதை அனுஷ்டித்தார் அதைத் தெரிவிக்கவேண்டும. அவர் பெயர் ஊர் முதலியவைகளும் எமக்குத் தெ

[illegible]

றி வேறு ஏதுமில்லை என்பன. இப்படிப் பல மகரிஷிகளால் நிந்திக்கப்பட்ட விஷயத்தில் மகரிஷி பாராசரர் தமது அபிப்பிராயத்தை வெளியிடாராகவே அவர் கருத்து இவ்விடம் வேறு உண்டு. அதைப் பின்னர் வெளியிடுவாம். இனிக் கருணைபால செய்விக்கின்றோம் என்பீரேல் கருணை என்பது ஏது? தயையால சுகத்தையல்லவோ பெருக்கவேண்டும். இத்துர்க்கர்மம் இருமையிலும் துன்பத்தையே விளைவிப்பதாகவிருக்க இதை ஸர்வவேதங்களும் நிந்தித்திருக்க இவவிஷயத்தில் பிரவேசிபபது இருமைத்துன்பத்தையும் தருவதாயிருக்க இவ்விஷயத்தில் தயையால் பிரவேசித்தோம் என்பது தகாது. மூன்றாவதும் பொருந்தாது. முற்காலத்தில் மகான்கள் மகரிஷிகள் ராஜாக்கள் முதலிய எவரும் இதை யனுஷ்டித்தாரில்லை யாதலால் ஆசாரத்திற்கிது முற்றிலும் விரோதமே. இனிச்சதாசாரங்கள் காலத்தால் கெடுமாயினும் வேதங்கள் கெடா. அங்ஙனமாக இக்கால அற்ப அறிஞரும் அறிந்த முற்குறித்த சுருதிகளை முன்னோரறியாதிரார். ஆகவே இது வைதிகமாக வேண்டின் இதற்கு வேதமூலம் வேணடுவதவசியம். வேத வசனங்கள் ஸ்பஷ்டமாய் இம்மறுமணத்தை நிஷேதித்துவர இதை வைதிகமெனல் எவ்வாறு பொருந்தும்? ஆயின் இது முன்னோர் கொண்டாடிய கருமமல்ல. மற்று துர்க்கமமேயாயின் அனுஷ்டிப்பது எவ்வாற்றானும் கெடுதியே விளைவிப்பதாதலால் இதைப்பாராசரர் எந்த வபிபபிராயத்தாலும சொல்லார். இனிக் கைம்பெண்களின காதலடங்கிடாவ அங்ஙனம் கூறுவதெனின், வெகு விநதை! இக்கலியில பெண்கள் பருவமடையதற்கு முன்னரே தோன்றி மரணம் வரை நிலைபெற்றுவரும காமம இதனொலொழியுமெனல எவ்வளவுசிதம! ஆராயுஙகள்! இதில் ஒரு வரையிலலாவிடில எங்கப்பெண்தான் எனக்கு இனிக் காதலில்லை, மறுமணம் வேண்டாம என்பாள், தங்கள் சித்தாந்தத்தைக் கைக்கொள்ளாதவள் எவளாயினுமிருப்பாளா? இருக்காள்! ஸ்வதந்திரத்துள் அடஙகுவாளா? அடங்காள்! இக்காலத்தில் மற்ந்து சிறிது கல்விகற்று அளவை மீறின சுவதந்திரம பெற்ற சில பெண்கள் ஏதோ மனுமுதலிய சில வாடவர் தமக்கனுகூலமாய் எழுதிவைத்த புத்தகத்தை காம நம்போம் என்கிறார்கள். இங்ஙனம் கலியிலஎமதுமதத்துக்குநேர்ந்த துபாத்துக்கு ஓர் அளவில்லை. பாருஙகள்! ஓர்புறம் விதவாவிவாகம; ஓர்புறம் பெண்கல்வி; மற்றோர்புறம் சம்போகவபோநிர்ணயம், எங்கும் கிறிஸ்தவர்உபத்திரவம். இவ்விதமுபத்திரவங்கள் ஒருங்குசேர்ந்து நமமைச் சூழ்ந்தன. இனி அந்தச்சுலோகத்தின் பொருள்யாதெனில் கூறுதும். இச்சுலோகம் வாக்தாள முதலியவைகளால்

[illegible]

[illegible]

[illegible]

...டட்டும் பழிபாயுள்ளவளிவிலக்குமேயன்றி மற்றச் சத்த பதிவனையிலுள்ள ஸம்ஸ்காரத்தை விலக்குவதல்ல. மறுபகவான் வாக்குதானம் செய்தவுடன் பதிமரித்தாலும் அவள் விதவையே என்று சொல்வதால், அதைச்சுருக்கி இவ்வித நூதன ஆபத்துக்களில் என்று வேறு விதி கூறினர். பராசரர் கலியுக தர்மம் என்பதுண்மை. இவ்வழி எப்பெரியோர்களும் ஒப்பியவழி. இனி யாம் ஆஸ்திகரும் சிஷ்டரும் வைதிகரும் ஆகவிரும்பின் எவ்வழியிலும் இவ்வனைகாசாரத்துக்கிடம் கொடாமலே நடக்கவேண்டும்.

திருவேங்கட இராமம்,

[மொழிபெயர்ப்பு.] திருமலைசாஸ்திரி.

ப்ராம்மணஜாதியின் உட்பிரிவை மறுப்பு.

ஐய, இவ்விஷயத்தை அனுசரித்து அநேக பண்டிதர்கள் பற்பல யுக்திகள் கூறி இதனால் விளையும் அனர்த்தங்களைச் சொல்லி இப்பத்திரிகையில் முறையிட்டார்கள். அப்படியிருந்தும் இவர் உண்மைபதிபாதும் காலத்தின்றுபலதிபாதமிருக்கின்றார்கள். அவர்களை நோக்கியே அடிக்கடி எழுத நேரிடுகின்றது. இக்காலத்தவர் கொண்டாடிவரும் இவ்வேற்றுமைகள் வேதங்களிலேனும் ஸ்மிருதிகளிலேனும் புராணங்களிலேனும் மற்றுள்ள இதிஹாஸங்களிலேனும் எந்தப்பிரமாண நிபந்தனங்களிலேனும் காணப்பட்டதில்லை. அறிஞர் இதனால் ஒற்றுமை கெடும் என்பதை அறிந்தேயிருக்கிறார்கள். ஒரு ஸ்மிருதிவாக்கியமாவது இவ்விதவேற்றுமைகள் அநாதி என்றாவது இருக்கவேண்டியது அவசியம் என்றாவது சொன்னதில்லை. இக்காலத்திலோ வடமர் சோழியர் முதலிய உட்பிரிவுகள் பிராமணர்களில் பலவிதம் காணப்படுகிறது. இவ்வேற்றுமை இவர்களாலேயே கற்பிக்கப்பட்டதென்பதற்கு இங்கொரு யுக்தி எடுத்துரைப்பாம்.— ஓர் வடமப்பிராமணனைக்கண்டு உனது கோத்திரம் எது என்றினவில் அவன் கௌண்டின்ய கோத்திரம் என்கிறான். சோழியனும் அதே கோத்திரத்தவனாயிருக்க இருவருக்கும் கோத்திரம் ஒன்றாக ஜாதி வேறாம். இவ்விருசாதியாரும் ஒருசமயமும் சம்பந்தம் செய்யப்படாதாம். அறிவுள்ள ஒருவன் இருவர் கோத்திரம் ஒன்றாயிருக்கக்கண்டால் அவர் இருவரும் ஒரு வம்சத்தர் என நிச்சயிப்பானாதலால் அவ்வித நிச்சயமில்லாதவனாயின் ஒரு கோத்திரம் பொருந்தாதென்க் இவ்விருவருள் எற்பட்ட ஜாதிபேதம் இல—

[illegible]

பிற்போக்கியரெனப் பிரசிக்கவேண்டியிருக்கிறது. இக்காலத்தவர் பற்பல தர்மங்களை ஒழித்து, அநேகமாய் விதவாவிவாகம், பெண்கல்வி, உடன்பிறந்தவள் குமாரியை விவாகித்தல், குழந்தைகளைக் கலியாணம் செய்தல் முதலிய பலவித துர்க்கிரியைகளைக் கைக்கொண்டொழுகுபவராயினர். இவ்விஷயங்களைப் பலவிதத்தில் தடுத்தும், இவர் மேலும் மேலும் அதில் அதிகம்பாக்கஞ்செலுத்தி வருகின்றார்கள். இக்காலத்துக் கலியாண கோலாகலத்தைச் சிறிது ஆலோசியுங்கள்! உபநயனஞ்செய்த நான்காம் தினமே பிள்ளைகளுக்கு விவாகஞ்செய்விக்கிறார்கள். அந்தோ! இவர் பிடித்த பிரமசரிய விரதம் எங்கே? தண்டு எங்கே? மேகலை எவ்விடம்? ஒருடை உடுத்தல் எவ்விடம்! பிக்ஷை எங்கே? ஸமிதாதானம் எங்கே? குருகுலவாசம் உண்டா? ஊருக்குப் போகுங்காலது வேதாரம்பமுண்டா? இவர்க்குப் பன்னிரண்டுவருஷம்பிரம்மசரியக் கிரமம் உண்டா? எல்லாம் தலைகீழ் புரண்டது. இக்கலியின் கொடுமையை ஏதுரைப்போம்! எல்லாம் சரி சரி எனப் புரோகிதர் பின்பாட்டுப் பாடுகிறார். இவர்களுக்கோ எந்தத் தருமசாஸ்திர வாராய்ச்சியும் இன்று. இவ்வித துஷ்கர்மம் செய்யத் துணிந்தவர் சற்கருமமாகிய இவ்விஷயத்தைச் செய்ய விரையாது காலக்கொடுமையாற்றான் ஏதேனும் ஒரு புத்திமான் அவ்விதம் இப்போய்க் கட்டுப்பாடு மீறி வேறே ஏற்பாடுசெய்தால் தன் வீட்டுக்குராப்புலிகளான இக்காட்டுப் புலிப்புலவர் 'அவன் கெட்டவன்' என்று பழபாட்டிகளுக்குபதேசிக்கிறார்கள். பாருங்கள்! ஸகோத்திரவிவாகம் விதவாவிவாகம்போலகளும் சாஸ்திரோக்தமமாம். இச்சாதிமுறை கடந்தால் சந்ததிவிருத்தியாகாதெனப் பலர் கூறுவர். முற்கூறிய ஏர்விவாகங்களால் சந்ததிகள் பெருக விதமுலே அது ஒழியும். ஐயோ பாவம்! இவர் புத்தி வெகு கூர்மை! இச்சாதி வேற்றுமையை ஒழித்திட்டவர் உத்தமர் என்றிட யாம் பின்னிட்டோம். மற்றெவ்விதயும் பின்னிடான். அவர்க்கு அநிஷ்டத்துவமும் சிறிதுமில்லை. ஆரியர்காள்! வீண்மயக்கம் ஒழித்திடுங்கள்! பிரமாணசாஸ்திரங்களைப் பாருங்கள்! உலகத்தாருக்குண்மையை யுரோசியுங்கள். இவ்வவாந்தர வேற்றுமையை ஒழித்திட வேண்டி யாம் கங்கணங்கட்டி முன்னின்றோம். எம்மையநுசரிக்கும புருஷோத்தமர் அநேகர் உண்டு. இவ்வேற்றுமைகள் பிரமாணமாகில் அதற்குள்ள பிரமாணத்தைப் பத்திரிகை வாயிலாகவெளியிடுங்கள். இவ்வேற்றுமையை யநுசரித்தால் பல சங்கடங்களுள. சில வகுப்புகளில் பெண்கள் அதிகம், பிள்ளைகளதிகமில்லை. சிலவிடம் பிள்ளையதிகம், பெண்கள் இல்லை. பெண்களதிகமாகுங்

Koviloor Digital Library

[illegible]

வரன் தேடவேதே அவர்க்குக்காரியம். உன்வகுப்பில கொடுக்கவியாவிடில் வேறிடம் கொடுக்கப்படாதாம். அவ்விதம் கொடுத்துவிட்டால் பிரஷ்டரென வெளியிடும் பாட்டிகள் அநேகர் உண்டு. வரன்களுக்கு ரூபா 100-300-1000 என்று கொடுத்துப் பெண்ணைக் கொடுப்பார். பாருங்கள்! ஆச்சரியம்! என்செய்வோம்! மனத்திடுக்கிடுகின்றது. ஒரு குடும்பத்தில் 17 கன்னிகைகள் இருக்கின்றார்கள். அவரோ நற்குலத்தவர். அவர்கள் வரன்களுக்கு எப்படிப்பணம் கொடுப்பார்கள். தன் குடும்பத்தையே சௌக்கியமாய்க் காப்பாற்ற அவர்க்குப் பணம் போதுமானதில்லை. பெண்களைப் பெற்றவர் கதியிது. ஜாதிப்பதம் இல்லாவிடில் எவருக்கேனும்இப்பெண்களைக் கொடுத்துச் சுகம் பெறுவார். இனிப் பிள்ளையைப் பெற்றவர் அவஸ்தை இன்னதென்பதைச் சிறிது விசாரிப்பாம். அவர்கள் பெண்களுக்கு 500 1000 என்று கொடுத்து வருந்துகிறார்கள். அவர்களோ வெகு சிரமப்பட்டு அன்னம் பருத்தி கிலி உப்பு முதலிய விற்கக்கூடாத பொருள்களை விற்பனைசெய்து நெற்கடிமைப்பட்டுச் சம்பாதித்த பெரும்பொருளைக் கலியாணத்துக்கெனச் செலவழித்துப் பிறகு தாசிகள் முதலியோர்க்கு மிகுதியும் விநியோகித்துவிடுகிறார்கள். இவர்க்கு வைதிகக்கிரியைகளுக்குமட்டும் இனித் தாசிகள் உத்திரவானுற்றான் கலியாணபூர்த்தியாம். இவ்வுள்வேற்றுமைகளில்லாவிடில் கன்னிகைகளை மணக்க இவ்வளவு பணம்செலவழிக்க நேரிமோ? நல்ல குலத்திற்பிறந்த ஓர் கன்னிகையைக் கலியாணஞ் செய்வான். ஆதலின் அறிஞர்காள்! இனியேனு மிவ்விதவின் வேற்றுமையை விட்டுவிடுங்கள். நல்லறமோங்க வழிதேடுங்கள். ஆரியர்காள்! சென்ற சித்திரை வைகாசி மாதங்களில் எமது இஷ்டபந்துக்கள் காரியமாய்ப் பலவிடஞ் சென்றோம். அவ்வவ்விடங்களில் இவ்வவாந்தர சாதி பெருங்கேடு விளைவிக்கும் என்பதை நன்றாய்ச்சொல்லித்தெரிவித்தோம். யான் எடுத்துக்கொண்ட இவ்விஷயம் கூடிய சீக்கிரம் தக்க பலமுற்றுத் கருத்த மனிதர் சகாயத்துடன் சித்திபெறும் என்பதிற்றடையில்லை. இக்காரியங் கைகூடவேண்டி ஸ்ரீசீதைப்பிராட்டியார் சமேதரான ஸ்ரீராமபிரானை வணங்குகிற்கின்றேம்.

திருவேங்கடக்கிராமம்,
திருமலை சாஸ்திரி.

Koviloor Digital Library

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின் அநுபந்தம்.

௬ - புஸ்தகம்] சிதம்பரம். நந்தன௵ ஆனிமீ˚ ௧௨-௨ [இலக்கம் - ௬

உ

திருச்சிற்றம்பலம்.

ஜகத்குருதூஷணை தூரீகரணம்.

ஞானாமிர்தபத்திரிகையிலே வைதிகசைவரென்பவர் ஜகத்குருதூஷணஞ் சில செய்தனர். அது கண்ட நாம் நியாயதண்டமேந்தி நின்று அத்தூஷணைகளைத் தூரீகரணித்தனம். வைதிகசைவர் அதன்பின் இன்னும் தலைநீட்டிற்றிலர். அவர்க்குச் சார்பாக மற்றோர் வைதிக சைவர் நாகைநீலலோசனியிலே தோன்றிப் போலியுரைகள் சில வழங்கினர். அவர் தூஷணைநிறைந்த போலியுரைகள் சில வழங்கினரேயன்றி நாம்கூறிப்போந்த நியாயகோடிகளுள் ஒன்றனையேனும் எடுத்துத் தக்கநியாயங்காட்டி மறுத்திலர். அன்றியும் எடுத்துக்கொண்ட வழக்கிற் சிறிதெழுதி விட்டுப் பின்வருவமெனச்சென்றார். அன்றொழிந்த அவர் இன்னும் தலைகாட்டிற்றிலர். அங்ஙனம் அவர் பதுங்க நேர்ந்தது தம் வலியின்மையை யோர்ந்தன்றியோ, இவ்விஷயத்து நாம்தலையிடலாகாதென்று அமைவுகொண்டோ நாம் காட்டிய உண்மைகளை மீட்டுச் சிந்தித்துணர்ந்து உண்மை கடைப்பிடித்தோ, யாதுகொண்டோ அறிகிலம். அவர் பதுங்கியபின்னாச் சூளைச் சோமசுந்தரநாயகரென்பாரொருவர் அந்நாகைநீலலோசனியிலே அவர்க்குச்சகோதரராகத் தலைநீட்டினர். அவர் நம் தூரீகரணத்தை நிராகரிக்கப்போகின்றதாகப் பிடிகையிட்டு அதன் கீழே சில விஷயங்கள் எழுதுவாராயினர். அவர் எழுதிய அவ்வுரைகளெல்லாம் போலிவெற்றுரைகளாயினவேயன்றி, நம்நியாயகோடிகளுள் ஒன்றனையேனும் எடுத்து நியாயபூர்வமாகக் கண்டித்தில. அது நாம் பின்வரும் விளக்கமுகத்தால் இனிதுபெறப்படும். அன்றி இச்சூளையாரும் இவர் சகோதரராய்த் தோன்றிய ஓர் வைதிக சைவரும் நியாயத்துக்கு நியாயமும் விஷயத்துக்கு விஷயமுங் காட்டித் தங்கோளை நிறுத்துதலே தருக்கமுறையும் நல்லார் செயலுமாக, அதைவிடுத்து "வாய்மாண்டபோக" "வஞ்சித்துழன்ற சங்கராசாரியர்" "புன்மொழி" "இவரதுபுன்மை" என்றும், "நாவிலி" "பிதற்றுரை" "பிதற்றினார்" என்றும் இன்னும் பலவுமான தூஷணாஸ்திரங்களையும் சிதறி பிரயோகித்துத் தம்மை இன்னரென வெளிப்படுத்திக்கொண்டார்கள். நியாயதண்டங் கையில் வலியுடைத்தாக விருக்குமேல் இன்னோரன்ன தூஷணைப்படைகளை ஏவ ஆவசியகமில்லை. நியாயமற்றவிடத்தே பதில் சொல்லமாட்டாது தூஷிக்கத் தொடங்குவது கீழோரியல்பு. இவர் இதற்கு இலக்கியமாயினார். நாம் இப்பொழுதும் அப்படிப்பட்ட இழிமொழிகள் புகலாது நியாயமுகத்தாற் றூரீகரிப்பாம். சூளைச்சோமசுந்தரநாயகர் கூறியவற்றுள் "ஓர் வைதிகசைவர்" உரைகளும் அடங்குதலின், இவரைத் தூரீகரிக்கும் வழி அவரும் ஒழிந்திடுவரென அவரை வேறாகவைத்திலம். இதுவே சாலுமாதலினென்க.

இனி ஞானாமிர்தத்தெழுந்த குருதூஷகர் தாம் வைதிகசைவரென்றமையால் நவீனநாமங்கொண்ட நீர் யாவரென நாம விசாரித்தோம். அவர் அதற்கு இன்னும் இறைதந்திலர். இவர் அவ்விஷயத்திற் றலையிட்டுக்கொண்டு சில கூறுகின்றார். இவர் தம்மை வைதிகசைவரென்றுவது பிறரொருவரென்றுவது கூறக்காண்கிலம். வைதிகசைவத்தைப் பரிவோடு நாட்ட வெழுதலால் இவர் வைதிக சைவராதல் வெளிப்படாதோ வெனின், இதன்முன்பு யாண்டேனும் இவர் தம்மை அன்னரெனக் கூறியவரல்லர். இப்பொழுது இவர் கூறினும் இவரைத் தாந்திரிகசைவரென்று முன் இகழ்ந்து ஒதுக்கிய வைதிகசைவ ஞானாமிர்தாசிரியர் தங்கோஷ்டியுள் வைதிகசைவரெனச் சேர்த்துக்கொள்ளார். இவரை அந்தரகதியிலேயே விட்டுவிடுவர். இதனால் அது பொருந்தாதென்க. இனி ஞானாமிர்தகாரர் வேதாத்தியயனஞ்செய்திலர்; வேதப்பொருளை அறிந்திலர். இவர் வேதங்களை நன்கோதிப் பற்பல பிரசங்கங்களிலும் வேதவாக்கியங்களைத் தம்வாயினால் உச்சரித்துங் கூறிப் பொருள்விளக்கியும், புஸ்தகங்கள் பலவற்றில் வேதவசனங்களையுதகரித்தும் வருகின்றாராதலால், வேதம

றிஞர்ப்பொருளுணர்த்திவரே வைதிகசைவராதல்போலுடைத்து; ஞானாமிர்தக்காரர் கூறியதுபொருந்தாது. அவர் வேதத்தைச் சூத்திரர் ஓதலாகாதென்கின்றார். அவர் கொள்கைக்கு இவர் கொள்கை வேறுதாம். ஆதலால் அந் ஞானாமிர்தக்கர் அவ்வாறு சித்திக்கிறார் இவரோவைதிகசைவராதல் பொருந்தாதெனின், அற்றன்று; இவர் தாஞ் சூத்திரகுலத்துதித்தவராயும் அதுவேதங்களைப் படிக்கின்றார். ஆதலால் வைதிகரென்றாவது சைவரென்றாவது இவரைக்கொள்ளக் கூடியதாகவில்லை. இவர் முக்கியப் பிரமாணமென்று சொல்லும் ஆகமங்களிலும் புராணங்களிலும் பிறசாஸ்திரங்களிலும் சூத்திரர் வேதமோதலாகாதென்று விதியிட்ட ஆக்ஞையைக் கடந்து இவர் வேதத்தைப் பிராமணர்களிலையாயினும் படிக்கின்றார். இது இவர்க்குத் தருமமாகுமா? இவர் ஆகமங்களில் கம்பீரமுடையவராயின் அவைகளிட்ட ஆக்ஞையைக்கடக்கத் துணிவரோ? அவ்வாறு கடக்கலின் இவர் ஆகமத்தை அவமதித்தவரென்று சொல்ல நேருகின்றது. சமயாசாரிய ஆசிரியரையுமடக்கால் அப்பாவத்துக்கும் சாதண்டனைக்கும் இவர் ஆளாகாரோ! இப்படிச் செய்யுமிவரை நாம் சைவரென்றுகொள்வதெப்படி? இவர் சூத்திரரன்றோ வேதமோதலாகாது; அவர் க்ஷத்திரியர்; வணிககுல க்ஷத்திரியராகும்; அம்முறையால் அவர்க்கு வேதாதிகாரம் உள்ளதேயாமெனின், இவர் க்ஷத்திரியரென்றால் க்ஷத்திரியர்க்குரிய வைதிகக் கருமங்களை இவர் அநுஷ்டித்து வருகின்றனரா? இவர் முன்னோர் அநுஷ்டித்தனரா? தாய்தந்தையர் அநுஷ்டித்தார்களா? இவர்க்கு க்ஷத்திரியவருண முறைப்படி வைதிகமந்திரங்களால் உபநயன முதலியன நடத்தினரா? யஞ்ஞோபவீதம் க்ஷத்திரிய முறைப்படி தரித்தனரா? ஓர் குருவினிடத்தில் வேதாத்தியயனஞ் செய்துகொண்டனரா? வேதத்தின்பொருளைக் குருவினிடத்தில் முறைப்படி கேட்டனரா! ஒன்றேனுமின்றே. இப்படிப்பட்ட இவரை க்ஷத்திரியரென்று கொள்வதெப்படி? இனி அவர் ஆகம முறைப்படி அநுஷ்டானங்களின், வைதிகக்கிரியைகளை வேண்டாதுவிலக்கி, ஆகமோக்தமான தீக்ஷைகளைச் செய்துகொண்டு சைவாசாரம் பொருந்தினரெனின், ஆகமத்தைக்கொண்டொழுகுவோர் வைதிககர்மங்களைச் செய்யக்கூடாதென்று எங்கே சொல்லப்பட்டிருக்கிறது? ஆதிசைவர் முதலியோர் அவைகளைச்செய்து வருகிறார்களே. அதற்கென்னசொல்? இனி ஆகமமுறைப்படி இவர் தீக்ஷைபெற்றதும் அநுசைவர்க்குரிய தீக்ஷையா! அவாந்தரசைவர்க்குரிய தீக்ஷையா! இவர் தாம் க்ஷத்திரியரென்பதில் இத்தகைய சந்தேகங்கள் உண்டாகின்றனவே. இவர்

றால் இவரை க்ஷத்திரியரென்று ஒப்புதல் பொருந்தாமையாகின்றது. க்ஷத்திரியரல்லாத இவர் வைசியருமன்று. பின்னேசூத்திரராமென்றார். சூத்திரரோ சற்சூத்திரர் அசற்சூத்திரர் என்றிருவகைப்படுவதும் சற்சூத்திரரையுள்ளோர் வேளாளரென்றும் அவரே அவாந்தரசைவரென்றும் மற்றவர்கள் பாமரரென்றும் ஞானாமிர்தத்தார்வகுத்தலால், வேளாளரல்லாதஇவரை அவாந்தரசைவரென்று ஞானாமிர்தத்தாரும் மற்றைய அவாந்தரசைவரும் ஒத்துக்கொள்ளார். மற்று இவர் என்னசைவரோ? எந்தமுறைப்படி தீக்ஷைபெற்றவரோ? இவர் சங்கதி இப்படியிருக்க, இவர் வைதிகசைவவிவகாரத்தில் தலையிட்டுக்கொண்டது அநியாயமேயாம். இவர் தம் நிலையை ஆராயாமல் வேதத்தை உச்சரித்த அபராதம் இவரைச்சூழ்தலால், இவர் வேதாகமவழிவந்த வைதிகசைவ கோஷ்டிகளில் விலக்கப்பட்டு அவைதிகரென்றாக, அசைவரென்றாக ஆகவந்த நிலை பரிதபிக்கத்தக்கதாகின்றது. அவர் இதனைப்போராமல் எம்மை அசைவரென் றழைக்கவந்தது பெருநகைக்கேயிடமாயிற்று. அவ்வவ்வருணங்களுக்குரிய ஆசாரவரம்புகளைவரும்கடக்கலாகாதென்பதுசிறுபள்ளிப்பிள்ளைகளுக்குந் தெரிந்தவிஷயமாம். அப்படியிருக்க இவர் அதனை அறியாதுபோனது விநோதமேயாம். தம் சாதிவரம்புகடந்து வேதத்தை ஓதுமிவர் ஆரியாசாரா? அநாரியராய நிஷித்தவரன்றோ இப்படிச்செய்பவர். இவரை நல்லோர் நிஷித்தர்போலான மற்றொருவரென்றன்றோ எண்ணிக்கொள்வர். இப்படிப்பட்ட இவரோடு நாம் முகங்கொடுத்து நின்று பேசுதலும் அழகன்றென ஒதுங்கத்தக்கதாகின்றதே. இப்படியெல்லாம் நாம் சொல்கின்றோமென்று நம்மேல் இவர் கோபங்கொள்ள வேண்டாம். நாம் உள்ள நியாயத்தையே கூறுகின்றோம். வேதாகமவிதிகளுள் ஒன்றிலேனும் அடங்கி நடவாத இவர் இந்த வாதத்தில் தலையிட்டு என்னபயன்? இவர் செயலினை அறிந்த எந்த வைதிகசைவர்களும் இவரை அருவராதொழியார். முன்புஞானாமிர்தத்தார்தான் சூத்திரராகிய இவர்வேதமோதுவது பாவமென்றும் பாபமன்றென்றும் ஒத்துக்கொள்வாராமடாதிபதிகள்தாம்ஒப்புவாரா? ஞானாசாரியர் இனியேனும் உண்மைகடைப்பிடித்து நன்னெறியில் ஒழுகி உய்வாராக. இனி அப்பால்நடப்பாம்.

ஞானாமிர்தத்தில் வைதிகசைவர் தாம் வைதிகசைவரென்று கூறுமையால் அவரை நீர் வைதிகசைவரென்றால், தங்கொள்கையாது தங்கொள்கையை விளக்கும் நூல்களெவை? அந்நூல்களின் வழி நடந்தசமயக் கோஷ்டிகளிற் சிறந்த நல்லாசிரியப் பரம்பரையாது? அவர்கள் இப்பொழுது அநுசரிக்கும் ஆசாரங்களெவை? அவை

Koviloor Digital Library

எந்நூற்பிரமாணத்தனை? என்கின்ற வினாக்கட்கெல்லாம் ஞானாமிர்தகாரர் இவைகளை மறுப்பார்போன்று வெறும்போலியுரைகள் வழங்கினர். அவை அத்தன்மையவே வெற்றுமொழிபாவிற்றேயன்றி, வெற்றுரைதானும் ஆகிறதில்லை.

1. நாம் நும்வைதிக சைவ சமயக் கொள்கையாதென்றேம். அதற்கு அவர் யாதுங்கூறிற்றிலர்.

2. அக்கொள்கையை விளக்கும் சமய நூல்கள் எவையென்றேம். அதற்குமவர் ஏதுங்கூறினாரில்லை.

3. அந்நூல்களின் வழி வைதிகசைவ சமயக்கோள்களை நிறுத்திய நல்லாசிரியர் பரம்பரை யாதென்றேம். அதற்கவர் "இனிபஞ்வைதிக சைவநெறியின்றாவதென்பது தோன்ற "விண்ணவரிந்திரன் பிரமனாதி விளங்குமந்திரிவழி கல்கணவிவேலவல்லோ,ரெண்ணரிய சித்தர்மநுவாதிவேந்தர் இருக்காதிமறை முனிவரெல்லா மிக்கக், கண்ணகன்ஞாலம மதிக்கத்தாமே யுள்ளங்கைநெல்லிக்கனிபோலக் காட்டியாகத், திண்ணிய நல்லறிவாலிச் சமயத்தன்றே செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தாரென்றும" எனவிருத்ததிருவினர்தாயுமானவ,,ரென்றார். இதுபட்டிக்கோட்டைக்கு வழி யாதென்றால் கொட்டைப் பாக்கு முந்நூறென்பதுபோலிருக்கிறது. சமயாசாரியர் யாரென்றால், இவரெல்லாம முத்தியடைந்தாரென்கின்றார். இதுவாறோ பண்டித லக்ஷணம் !

4. அவர்கள் இப்பொழுது ஆசரிக்கும் ஆசாரங்கள் எவை யெனறேம். அதற்கு ஒருபதிலும கூறிற்றிலர்.

5. அவை எந்நூற்பிரமாணத்தனவென்றேம். அதற்கும் ஏதும் விடையில்லை.

6. வைதிகம சைவம் என்பன இருவேறுமதங்களின் பெயரென்றேம். அதனை அவர்மறுத்திலர். வைதிக சைவமென்னும் வழக்கு நவீனமாவதன்றிப் புராதனமாகாதென்று கூறினேம். அதற்கிறைபாக வேதவாக்கியங்களையாவது ஆகமம், புராணம், இதிகாசம், சித்தாந்த சாஸ்திரங்களென்றிவைகளின்வாக்கியங்களையாவது மற்றெந்தச்சமய நூல்களின் வாக்கியங்களையாவது எடுத்துக்கூறிற்றிலர். "அபூர்வதச்செக்கியிற்றில் வைத்து ஈனுரங்கத்திலமர்ந்தது வைதிக சைவமுழு தழ்தோ" என்று தாயுமானவர் கூறினரென்கின்றார்.

தாயுமானவர் பாடல் வேதமா? ஆகமமா? ஸ்மிருதியா? புராணமா? இதிகாசமா? சித்தாந்த சாஸ்திரங்களுள் ஒன்றா? வேதாந்த நூலா? சமயநிலையைக்கூறுவது சமயசாஸ்திரமாகவேண்டும். சமயத்தினியல்பைச் சமயநூலிற்காட்டுவதே உத்தமப் பிரமாணமாம். நும்பர் சமயநூல்களை வாசித்திலரோ? அன்றி வேதம் ஆகமம்புராணம் சித்தாந்தநூல் வேதாந்தநூல் என்றிவற்றில் அறிமுகப்படுத்துந் தெரியும் ஓர் பிரமாண மேனுமகப்படவில்லையோ? இவரேனும் இவர்க்குச் சகோதரராய்த் தோன்றியபழைவைதிக சைவரேனும் ஆய்வசமயங்களுள் ஒன்றனையேனுமெடுத்துக்கரியாமையானும் இருவரும்தாயுமானவர் கூறியவொரேவசனத்தையேயெடுத்துக்காட்டுதலானுமிருவர்க்கும் இவ்வொருவசனமேயன்றி வேறொன்றுமகப்படவில்லையென்பது நன்றாக வெளியாகின்றது. அப்படிப்பட்ட சொல்லை எந்தச்சாஸ்திரங்களிலும் சோராதநவீன வழக்கென்று சொல்வதற்கு யாதுதடையுளதோ! இனித்தாயுமானவர் கூறியவதனால் அது புராதன வழக்காகாதோவெனின், தாயுமானவர முன்னையவழக்கலாதவதனை எவ்வாறு எடுத்துக்கூறினார்? அவர் கூறுவதற்குப் பிரமாணம் யாது? அவர் வாக்கென்ன வேதமா? ஆகமமா? அவை யொன்றுமின்றே. சமயநூலல்லாததுதோத்திர நூல்தானே. அத்தகையநூலில் இந்தச்சமயவழக்கை என் கூறுகின்றார்? அன்றியும் அவர்வேதாந்தியா? சித்தாந்தியா? வேதாந்திகள் அவரை வேதாந்தியென்கின்றனர். சித்தாந்திகள் அவரைச்சித்தாந்தியென்கின்றனர். இரண்டிற்கும் பொதுவில் அவர் "வேதாந்த சித்தாந்தசமரச நன்னிலைபெற்றவ" ரென்று தம்நிலைதாமே கூறுகின்றார். அப்படிப்பட்ட அவரை இருவரும்பிடித்திழுப்பதால் யாதுபயன்? அவர் கொள்கை வேதாந்தமும் சரியானசமயமே, சித்தாந்தமும் சரியானசமயமே, இரண்டும் ஒப்புடைய சமயங்களே என்பதன்றோ? அதனை ஞானாமிர்தத்தர் ஒப்புவரா? ஞானமிர்தத்தரும் அவர் ஆசிரியரான சிவஞானப்புலவரும் வேதாந்தசமயம் தாழ்ந்த புறச்சமயமென்றும் அதன் வழிபொழுகினோர் மோக்ஷமடையாரென்றும் கூறுவதால், வேதாந்தத்தைச் சமத்துவமாகக் கொண்ட தாயுமானவர் சித்தாந்தத்தையும் அவர் உரையையும் போலியுரையென்றே ஞானாமிர்தத்தர் இகழ்ந்தொதுக்கிவிடுவர். இனி இவர் தான் ஒத்துக்கொள்வரா? வேதாந்தமும் சித்தாந்தமும் சமத்துவமுடையனதாமென்று மனமொப்பிச்சொல்வரா? இவர் வேதாந்தத்தைப் பலமுறையிலும் மிகக்கொடுமொழிகளால் நிந்தித்திருப்பதால், அதனைச்சமத்துவ முடையதென்று கூற ஒருப்படார். ஆகவே சமத்துவங்கூறும் தாயுமானார் உரையையும இகழ்ந்தொதுக்குவரேயன்றிப் புகழ்ந்து கைக்கொள்ளார். அப்படிப்பட்ட இவர்க்குத்தாயுமானார் "வைதிக சைவமழகிது" என்றதனாற்போந்த பயனென்னே? இனி "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்று சேக்கிழார் வைதிகத்தையும் சைவத்தையும் இரண்

Koviloor Digital Library

டாகவே பிரித்துக் கூறியதனும், தாயுமானுர் உரையை யும் வைதிகமும சைவமும் என்றே அவர் வழக்கு க்கும் செய்யுள் வழக்கிற்கும் முரணுதவாறு உடைமைத் தொகையாகக்கொண்டு விரித்துப்பொருள்கொள்ளக்கிடப்ப தன்பர். அப்பர்ப்பா துவைதிகசைவமென்பதுமோசொல்லை யெனையங்கிளதுபடப் பொருள்கொண்டிடப்பட்டார். இவ் ஆசிரியிடத்தாடுமோவ்வோ? இவ்வெளிப்பொருள் இரு பக்ஷிப் பின்னொட்டுக்கிழ தெரியக்கிடப்பஅதின்மே லானுகோகாய்தா அறியாமற்போனதுபொருவியப்பே. இனி அதனை ஒருசொல என்றே வைத்துக்கொள்வோம். தா யுமானுர் வைதிகமுஞ் சைவமும் சமத்துவமுடையன வெனது கோடலால் தம் அர்த்தாக்தம் வெளித்தோ ன்ற இரண்டினையும் ஒருங்குசேர்த்து வைதிகசைவமெ ன்றிருக்கலாம். அவர் போன்ற கருத்துடையாரும்அத னை ஒத்துக்கொள்வர். அதனுல் அவர்க்கு அது ஒரு வாதுபொருக்கலாம். அதனுல் இவர்க்கு ஆகக்கிடப்ப தென்னே? ஒன்றுமில்லையே. இனி மேற்கூறியபோந்த ஐன்றோரவன நியாயங்களால் அவர் வைதிகசைவ வழ க்கிற்காட்டிய பிரமாணம் போலியாயொழிந்ததுமிக.

இனி வைதிகசைவம் என்பன இருவேறுமதத்தர்பெ யரென்கின்றும். அதனை இவர் மறுத்தொதாமையால் இவ ருடன்பட்டுக்கொண்டவராகின்றார். அன்றிமுன்புஞானமிர் தக்காருமஅவர் தமமான வைதிகசைவர், பாசுபத கோ ளரி என்போரும் மற்றைச்சைவர்களும், வைதிகர்களும யாவரும் ஒத்துக்கொள்ளும இவ்விஷயத்தை இனி இவர் மறுத்திடினும் பயன்படாதாம். மற்று வைதிகசைவமெ ன்பதனை நியாயமுகத்தாற்றுபிக்கத்தொடங்கிச் சிலவுரை த்தார். அவைகளையும் விசாரித்திடுவாம். அவர் வைதி கர் என்னுஞ் சொல் வேதநெறி நின்றுரெனவும், சை வர் என்னுஞ்சொல் சிவனை வழிபடுவோர் எனவும் பொ ருள்படுதலால், வைதிகசைவரென்பவர்கள் வேதநெறி நின்று சிவனை வழிபடுவோர்கள் என்று வெளியாக நிற் பர்" என்றார். இந்த வியாக்கியானம் முன்னோர் கருத்தோ? இவர் கருத்தோ? முன்னோர் கருத்த தெனின், அது எந்த நூலிற் குறிக்கப் பட்டிருக்கிறது? வேதத்திலா? ஆகமத்திலா? புராணத்திலா? இதிகா சத்திலா? சித்தாந்த சாஸ்திரங்களிலா? வேதாந்தசா ஸ்திரங்களிலா? அதனையெடுத்துக்காட்டவேண்டும். மூல த்திற்கே பிரமாணங்காட்டாமல்தமக்குத்தோன்றியவர் விடாமெயனைத்துக்கும் பிரமாணங்களெடுக்க யாது செய்யப்போகின்றார். இனி அது அவர் சொந்தக்கருத்த தோமெனின், முன்னோர் கொள்ளாத ஒன்றனை இவர் தாமாகப்படைத்துக்கொள்ளலாமோ? முன்னோர் விதி லும் நல்ல சொல்லாயிருத்தலால் இதனைப்படைத்தே கொள்கின்றேமெனின், நல்லசொல்லாயிருக்கின்ற வித மேனமுன்னோர் கூருதுவிட்டதென்னே? அறிந்துவிட்ட னரா? அறியாதுவிட்டனரா? அறிந்தே விட்டனரெ னின், ஏன்விட்டார்? பிரயோஜனமற்றதென்று கருதி யோ? பிரயோஜனமுள்ளதாயின் தாமே அப் பெயரிடலாமே? இனி அறியாதுவிட்டனரெனின், இவர் அறிவு அவர்க்கில்லையோ? அவரினும் இவர் நுண்ணறி வாளரோ? ஆசிரியர்க்கு மடமை ஏற்றும் இவர் அறிவு எப்படிப்பட்டது? ஆசிரியர்க்கு மாத்திரமா? வேதாகம ங்களிலே இப்பெயர் குறிக்கப்படாமையால் அதனையும் குறையுடையதாக்கி அதையருளிய சிவபெருமானையும் அறியாதுவிட்டாரென்று நிந்திக்கின்றதாகின்றது. இது தானோ நுண்ணறிவு! இது தானோ நாவலத்துவம்! இது தானோ பண்டிதத்துவம்! நன்று! நன்று!! மிகநன்று!!! இந்நாவலத்துவத்தை யார்தான் வியர்திடார்!

இனி ஞானமிர்தக்காரர் வேதநெறி மாத்திரம் நின் றோர் வைதிகரெனவும் ஆகமமென்னும் தந்திரநெறி மா த்திரம் நின்றோர் சைவரெனவும் வேதம் ஆகமம் என் னும் இரண்டின் உண்மைகளும் ஒன்றுமுறையைச்சமத் துவமாகக்கொண்டு ஒழுகுவோர் வைதிகசைவரெனவும் வகுத்திடுகின்றார். வைதிக சைவச் சொற் குஅவர்வே தாகமநெறி நின்றோரென்று பொருள் கூற, இவர் வேத விதிப்படி சிவனைவழிபடுபவரென்கின்றார். அன்றியும் வைதிகமென்றால் வேதசம்பந்தமுடையதென்றும் சைவ மென்றால் ஆகமசம்பந்தமுடையதென்றும் பொருள் கொள்வாரைச் ஞானநாயகர் மறுக்கின்றார். இதனுல் இரு வரும் ஒருவரையொருவர் மறுக்கின்றவராகின்றார்கள். இப்பொருள்களுள்எவர்கூறும்பொருள் உசிதமுடைத்து? இருவரும் முன்பு வாதாடி ஓர் தீர்மானஞ் செய்துகொ ண்டு பின் நம்மிடம் வழக்குக்கு வந்தால் அப்பொழுது நாம் அதுபொருந்தும் பொருந்தாதென்றுதீர்ப்பிடுவோம்.

(தொடர்ச்சி.)

ஓர் நாவலர்.

Chidambaram=Printed and published for the proprietor at the "Brahmavidya Press" No. 38 senkalooneer pilliarkoil street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

N010 நெ-கூ௦.

ஸ்ரீ
வித்யா
ஶங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையை ஆதரித்து வருவதாகக்கொடுத்த நிருபத்தின் நகல்.

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிகவாசணர்களாகிய ரு. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகஉ-ஹு முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த வேஸது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் திர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காளையுத்தரம்.
அலாரவிஉஅ-உ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
ஸ ர ஸ ர ெ ஸ த ு வ தி:

[illegible]

விக்கிரகாராதனம்.

தொடர்பு.

—:0:—

ஐய,

சிலர் பிரதிமைகளிற் கடவுளைப்பாவித்தலால் அது கடவுள் பாவனையாமா? எனச்சங்கிக்கின்றார்கள். "மாத்ருதேவோபவ" "பித்ருதேவோபவ" "ஆசார்யதேவோபவ" என்பனவாதி சுருதிகள் தாய் தந்தைகளிடத்தும் ஆசாரியனிடத்தும் தேவதாபுத்தி செய்யவேண்டும் எனப்பொருள் தருகின்றன. இவ்விதமே பலர் இந்தவேதவாக்கியத்தை யநுசரித்துத் தாய் தந்தைகளிடத்தும் ஆசிரியனிடத்தும் அழியாப் பேரன்புவைத்து அவர்களை கடவுளர் எனப்பாவித்து நற்கதிபெற்றனனார். மனிதரிடமே தேவதையைப்பாவித்தல் நற்கதிகொடுக்குமானால் வேதிக்கப்படும் நின்மலமுமான சிலைகளிற் கடவுளைப்பாவித்தால் ஏன் நற்பயனளிக்காதொழியும். ஆகலாற்றான் "ஆசிரியனை சாமான்ய மனிதன் எனவும் மந்திரங்களை வெறும் எழுத்துக்கள் எனவும் விக்கிரகங்களைக் கேவல சிலைகள் எனவும் பாவித்தால் அவனுக்கு எச்சமயமும் நற்பயன் கைகூடாது" என ஆசிரியர் கூறுவர். நம்மவர் ஆசாரிய சிரத்தில் தேவபுத்தி செய்ததனால் பெரும் பேற்றைப் பெற்றார் என்பது மாத்திரமன்று; குருவின் சாயலில் அமைந்த வேறு பிரதிமையிலும் கடவுள் பத்தி செய்து நற்கதிபெற்றிருக்கின்றார். இது நிற்கப்பாரதத்தில் ஓர்கதையுண்டு. "ஏகலைவயன் என்னும் ஒரு வேடன் துரோணாசாரியரைத்தனக்கு வில்வித்தையுபதேசிக்குங் குருவாக வேண்டிக்கொள்ள அவர் அதை ஒப்பாது மறுக்கவுடனே அவரையே மனதாற் குருவாகப்பாவித்து அவர்போன்ற ஒரு திருவுருவம் செய்து அதைத் துதித்து அதனால் வில்வித்தையில் நற்பயிற்சி பெற்றான்" என்பது. இதனால் எவ்வெவ்விடத்தில் எவனெவன் பாவிப்பினும் ஸர்வாந்தர்யாமியாகிய பகவான் அவனவன் கருதியபயனைக் கைகூடச்செய்வார் என்பதிற் சந்தேகமில்லை. இனி அமிர்தமென விஷத்தைப் பாவித்தால் அதுவும் சிரஞ்சீவித்துவங் கொடுக்கும் என்பீரோ எனில் ஆம்! உண்மையாய்த் திடமாய்க் கடவுளை நம்பி அவரருள் எனக்கொண்டு விஷத்தை உட்கொள்ளின் அதுவும் அவனைக் கொல்லாது காக்கும் அமுதமே ஆகும் என்க. "அவனின்றி யணுவுமசையாது" என்பதைக் கேட்டதில்லையா? இதற்குதாரணம்:—திருவனந்தபுரம் என ஓர் திருப்பதியுண்டு. அங்கு செங்கண்மால் பள்ளிகொண்ட திருக்கோலமாய் அன்பர்களை ஆண்டுவருகின்றார். அங்கு அப்பெருமானை பத்மநாபனென்னும் திருநாமத்தால் அழைத்துவருகின்றார் வழக்கம். அத்தேசத்தில் ஸ்ரீராமவர்ம்மமகிபன் என ஓர் அரசன் இருந்தான். அவன் க்ஷத்திரசிரேஷ்டன்; அன்பர்தமன்பன்; அனைவரும் பணிசீலன்; அவனாண்ட தேசமே தானனந்தபெருமான் திருவடிதாசன்; இக்குணசீலன் [illegible] வைத்தான். அப்பெரியோருடனிருந்துப் ஓர் துரோணி மகாவைரம் பெற்றிருந்தான். "உலகத்தில் புகழ், புகழ், புண்யம், நினைவிலிருந்தே

[illegible]

ன்டு பிழைக்கும் மான் மீன் கொண்மாக்களுக்கும் வேடுவன், வலையன், வஞ்சகன் என வைரிகள் அகாரணமாகவுந்தோன்றுவோர்" என்பதுஅங்கு பொருளுடைத்தாயிற்று. அப்பாவிமன்னனை மாளவைக்கவேண்டி வெகுகாலம் ஆலோசித்துக்கொண்டு இறுதியில் ஸ்ரீபத்பநாபன் பூசை செய்யும் ஓர் அர்ச்சகனுக்கு சில சங்கதிகளைச்சொன்னான். "நான் பணமும் வெகுமதியும் உமக்குக்கொடுப்பேன்; அந்தப்பணத்தை நீர்வாங்கிக்கொண்டு அவ்விஷத்தைக்கடவுள் திருவடித்தீர்த்தத்தில் கலந்துகொடுத்துவிடு" என்று கேட்க, அச்சண்டாளனும் அப்படியே என ஒப்பினான். அதிகப்பணப்பேய் பிடித்தவர் செய்யாதது யாதுளது. இவ்விதம் அந்தப்பாதகன் விஷத்தை கீழ்த் கலந்து வைத்துக் கடவுள் சந்நிதியின்முன்னே இருந்தான். அம்மகாராஜன் காலையில் நீராடிச் சுசியாய்க்கடவுள்தரிசனார்த்தமாய் வந்தான். வந்து கண்ணன்திருவடி மலர்களை வணங்கி மிக மகிழ்ச்சியுடன் அவர் திருமேனியை மனதில் தியானித்துத்திருவடிதீர்த்தத்திற்காகக்கையை நீட்டினான். அக்காலம் அம்மகாபாவி விஷம் கலந்த நீர் நிறைந்த சங்கைக் கையில் கூசாதெடுத்துக் கொண்டு சமீபத்தில் வந்தான். உடனே அத்திருவடி தீர்த்தத்தை மிகவும் புனிதமெனப்போற்றி அம்மகாராஜாவின் கைமலரில் கிரணமாய் வார்த்தினான். அக்காலம் அந்தப்பாவிப்பிராமணன்கை நடுக்குற்றது. அதைக்கண்ட பூதேவேந்திரன்மனத்திலச்சமுற்றுக்கடவுள் பாதாரவிந்தத்தைத் தியானித்து ஒருவாறு கேட்டான். ஐய, "ஏன் உமது கைநடுக்குற்றது" என உடனே நடுக்கமுற்று அப்பாவிப்பிராமணன்உண்மையைச் சொல்லிவிட்டான். அவ்வரசன் உண்மையைச்சொன்ன பிறகும் கடவுள் பாதநீர்த்தத்தை அவமதித்தல் கூடாதென்றுகையிலே வைத்திருந்தான். இது திருவமுதே எனவுட்கொண்டு உடனேதனது அந்தப்புரஞ்சென்றான். அவ்விஷம் அவனை ஏதும் செய்யாது விலக ஒழிந்தது. கடவுள் கருணையிருந்தால் ஆகாத சங்கதி என்னவிருக்கிறது. இனி விஷமும் அமுதமாகும் மேலே எந்தச் சித்தி யிதனுக் கைகூடாது. ஆதலால் கடவுளை எங்கு பாவித்தாலும் அங்கு அவரருள்புரிவார்.

முற்கூறியபடி விஷம் முதலிய கொடும் பொருள்களும் பாவனையால் நற்பயனை யளிக்கும் அமுதமாமெனில் சிறந்த வியசுத்த பதார்த்தங்களிற் கடவுளைப் பாவித்தல் எக்கதியிலும் நற்பயனை கைகூடச்செய்யும் என்பது சொல்லவும் வேண்டுமோ. ஆகமங்களில் கடவுளைப் பிரதிமைகளிற் பாவிக்க வேண்டி மனோபாவனைமாத்திரம் ஸம்ஸ்காரமாகக் கூறப்பட்டதில்லை. அதில் பூபரிக்ஷை என்பது ஒரு கிரியை. அது கடவுள் திருச்சந்நிதியமையவேண்டியஸ்தலத்தைச்சோதித்தல். அதன் இலக்கணத்தை மரீசி கூறிக்கின்றார். "இனிப்பு முதலியஅறுசுவை நிறைந்த உருமணம் பெருகி வளர்ந்துதும் திருத்தம்பெற்று பால்மரம் தளிர் தர்ப்பை வில்வபத்திரம் முதலிய நற்பயிர் விளைந்து நலங்கும் பூமியைத் தேடியெடுக்க வேண்டும். அதைப்பரிட்சித்தறியவேண்டும்"என்றும்,பாலத்தமரம் முளைத்தவளருமிடம் உவர் நிலம் சுகோதி கள்பு முதலி

[illegible]

யவை உள்ளவிடம் கற்கள் சக்கை இவை நிறைந்தவிடம் புற்று சந்தியோகள் பேய்ப்புல்சாம்பல் கரி மயிர் உமிகள்கொட்டப்பட்டவிட. திரிகுலத்தார் வசிக்குமிடம் இவைகள் ஒழிக்கற்பாலன' என்றும் ஆங்காங்கு மண் அதிகமாய் நிற்றலாலும் மணலுடன் சமமாய் நிற்றலாலும் குறைந்து நிற்றலாலும் சுபாசுபப் பல பேதங்கள் உரைக்கப்பட்டன. அங்கு வேண்டியவிடத்தைக் குழியாக்கி அதே மண்ணைக்கொண்டு நிரப்பவேண்டும். நிரம்புவதில் மண் மிகுதி யிருப்பதற்கும் மண் குறைவதற்கும் சரியாவதற்கும் கூட பல பயன்கள் உண்டு. அதில் ஏதேனுங் குற்றங்கண்டால் அக்குற்றம் விலகப் பிராயச்சித்தம் ஒன்றுண்டு. மேற்கூறிய கிரியை கர்ஷணம் எனப்படும். அதற்கு வேண்டிய ஏர் கலப்பை முதலிய கருவிகளைச் செய்யும் வழியும் ஆகமங்களிற் சொல்லப்பட்டன. இக்கருஷண கிரியையால் பூமி சுத்திபெறுவதாகும். 'சுத்திபெற்ற பூமியில் விதைவிதைக்கவேண்டும்' என்றும், விதைகள் முளைத்துவளர்ந்தால் அவைகள் ஆவினத்திற்குக் கொடுத்திடவேண்டும்' என்றும் விதிக்கப்பட்டது. (இங்கு செய்யும் ஒவ்வொரு கிரியைகளுக்கும் வேதமந்திரங்கள் உண்டு) ஒரு கிரியையும் மந்திரமின்றி நடவாது. இனி இவ்விதம் சுத்தி பெற்றுச் சமபூமியாக்கித் திசையறிவதற்காக ஒரு சங்கு ஸ்தாபனம் அங்கு செய்யவேண்டும். அச்சங்குவின் நிழலாற் றிசைகள் அறியப்படும். இச்சம்ஸ்காரத்தினுற் றிசையறிந்தபிறகு கடவுள் திவ்வியாலயம் கட்டிவைக்கவேண்டிய முயலவேண்டும். அங்கு தேவாலயம் கட்டுமிடத்தில் ஏற்றத்தாழ்வுண்டாமெனக்கருதி அவற்றிற்கு அளவு ஆங்காங்கு சொல்லப்பட்டது. மேற்குறித்த இலக்கணம் வழுவாது ஓர் ஆலயங்கட்டுதல் அது ஓர் புருஷன் சரீரம்போன்றதாக முடியும். அதில் கர்ப்பக்கிரகம் என்பது ஆன்மாவின் முக்கியஸ்தானமாகிய இருதயம்போன்றது. இந்த இருதயம் இயல்பில் கீழ்நோக்கி நிற்றலால் பிராணயாமத்தால் அது மலர்ந்து நிமிர்ந்தால் அதை இப்புவமானமாகக்கொள்ளவேண்டும். அது உபானம் முதல் ஸ்தூபி வரையிலங்கங்களால் அமைந்தது. அதனுட் கடவுள் வசிப்பவராகிறார். இவ்வுண்மை வேதத்தில் 'தாமரை மலர்போன்ற இருதயம் கீழே நோக்கியிருக்கும்' என்று தொடங்கி 'அங்கு பரமாத்மா வசிக்கிறார்' என்பதாதிவசனங்களால் வெளியிடப்பட்டது. நாகரம் வைசரம் திராவிடம் முதலிய பல வேற்றுமைகளுடன் விமானங்கள் உள்ளன. ஆலயத்தைத் தாமரைப் பூவாகவும் மதிப்பதுண்டு. அதில் பிராகாரங்கள் இதழ்கள். கர்ப்பக்கிரகம் மொட்டு. ஆலயம் யந்திரமென்பாருமுளர். அவர் கூற்று: அதில் பூபுரம் வெளிப்பிராகாரம், உட்பிராகாரங்கள் விருத்தங்கள் கோணங்களின் குவிந்தவிடத்து கர்ப்பக்கிரகம் என்பது. யந்திரம் என்பது ரேகைகளிற் கோணங்களாக அமைக்கப்பட்டுக் கடவுள் வழிபாட்டின் கருவியாய் உள்ளதாகும். அதில் பூபுரம் விருத்தம் கோணம் தளம் பீஜமுதலிய பலவுறுப்புக்கள் அமைக்கப்படுகின்றன. அவ்வியந்திரத்தின் நடுவிற் கடவுளைத் தியானிப்பது வழக்கம். அதில் அவ்வவ பரிவாரதேவதைகளை அர்ச்சிப்பதும் உண்டு. இவ்வியந்திரங்களிற் கடவுளை வழிபட்டு

[illegible]

[illegible]

[illegible]

அநேகநற்பேறு பெற்றவர்பவர். நம்முன்னோர் பற்பல விதமாக்மனத்தைச் செலுத்தி அதன்வழிதேவாலய நிர்மாண பத்ததியை வகுத்து முடித்தார்கள். அதன்கொள்கையின் உண்மையையறியாப் பாமரர்கள் பித்தர்கள் அவர் தம். அவ்விதம் கடவுள் இவ்வாலயத்தில் வசிப்பதில்லையாயினும் காருடலுக்கல்லவேயன்றி மற்றையவர்க்கு அவசியம். ஆதலின் அறிவினர் 'அதில் பயனில்லை' எனில் அதனால் அறியருக்கு மரும் கெடுதியாது? இயானவிசாத்தியாத் கடவுளைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டவரும் கடவுளைப் பிம்பங்களில் ஆராதித்த புண்ணியத்தாலேயன்றி மற்றேதுமில்லை. அநேக யோகீந்திரர் வெங்கானகங்களில் வசித்துக் கடவுளை மனத்தினிடையிடாவிருத்தி இருவினை நீக்க ஆனந்தம் பெறுவாரியாக அறில் மூழ்கியிருக்கின்றார். ஆயினும் அவர்கள் தன் வயிறு நிரம்பப் பார்த்தவர். இனி எவர் இவ்வுண்மையறிந்து போதித்துப் பிறர் அறியத்தேவாலயங்களைக்கட்டிவைத்து அங்கு அவனையே வழிபடச்செய்வார் அவர்களே சிவபக்தர். மற்றவர் அங்ஙனமாகார். இவர் இங்ஙனம் செய்ததால் அதுவெகுகாலங்கடந்தும், ஜனங்களுக்கு இன்றைக்கிருப்பதுபோலத் திருப்தியைக் கொடுத்துவருமல்லவா? இங்கும் அனேகருக்குச் சமுமற்றோ.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இதிலறியவேண்டியது மற்றொன்றுமுண்டு. மனது சர்ப்பம் போன்றது ஒரு பட்டணம். அதன் முற்புறம் போன்றவன் பிராமணன். அதன் மற்றைய அவயவங்கள் மற்றவர். அந்த

[illegible]

ரிற் குடியிருக்கும் ஞானங்கனி நிவான்மாக்களைக் கொள்க. அவர்களின் அந்தர்யாமி பரமாத்மா ஆலயத்தமைந்த கடவுளது திருமேனியாமெ பிம்பம். அதில் சாதுக்கள் புலன்களைப்போல் அன்மோபகாரிகள். வியாதிகளே துஷ்டர். மனம் பிரபு. புலன்களுட் கள்போல ஞானங்களுள்ளிருந்தவான். மயிர் கழுதலியனவகளை பொப்பவர் சாமராதியோர். மல்லிரம் ஆபரணம்போன்றது விழுதலிய சுகாலங்காரங்கள். அரிக்குஞ்சன்போன்றவர் இருடர். உலகத்தில் மூவகைமனிதர்கள் உத்தமர் மத்திமர் அதமர் என்று. எவர் பரமான்மா எங்கும் உள்ளவன் என்று நம்பி அவனைப் பிம்பாதிகளில் வழிபட்டு அவனருள்பெற்றுப் பொய்மொழிந்து பின் சொல்மொழியாது கள் களவு கண்டவர் மனைவிகளின் மேற்காதல் முதலிய குற்றமற்றவராய் இருப்பாரோ அவரே உத்தமர். இனித் தேவாலயங்களுள்உள்ள பிம்பங்களிற்றான் கடவுள்இருப்பாரெனவென்னைக்கொண்டு எவர்அப்பிம்பங்களின்சந்நிதியில் மட்டும் பொய் களவு முதலிய கொடுஞ்செயல்களை ஒழித்தயிருப்பர்களோ அவர்கள் மத்திமர். இனி அவ்வாண்டவன் திருக்கோயில்களுட் சென்றும் அங்கு கடவுளைச் சிறிதும் பாவிக்காது பொய்ச்சத்தியம் முதலியன செய்வாரோ அவர் அதமர். அத்திவ்வியாலயங்களிற் புகுந்து திருட்டுத்தொழில் செய்பவர் அவரினும் கேவலரகவே அவர் சொரூபத்தை இங்கெனை நாம் சொல்லத் துணிந்தோமில்லை. இவருடைய கயமையைப்பற்றி யாம் சொல்லவேண்டியதென்ன? இங்ஙனமிருக்கச் சிலர் "நமது திவ்வியாலயத்திலும் திருடரைக் கண்டித்துத்தண்டிக்காத கடவுளரடங்களைக்காக்கப் போகிறார்" என்கிறார்கள். அது உண்மையில் நியாயமாகாது. பரமான்மா எங்கும் அந்தர்யாமியாய் இருப்பதை யறியாதவர் வெகுமிலர். அங்கங்கு பாவஞ்செய்பவரை என் உடனுக்குடன் தண்டிக்கின்றாரில்லை எனில், அதனால் எங்கும் அவர் நிறைந்தாரில்லை எனலாமா? அதுபோல் எக்கன்மமும் பரிபாகிக்குமளவு உடனே சாக்ஷியாய் நின்று பின் பயனளிப்பான். அது கொண்டே "அரசன் அன்று கொல்லுவான், தெய்வம் நின்று கொல்லும்" எனப்பழமொழி உலாவுகின்றது. எங்கும் நிறைந்த எல்லாயகளுக்குத் தன்பொருள் பிறர் பொருள் என்னும் அபிமானமின்மையால் ஏதோ எவன் செயல் எவ்விதமாயினும் சாக்ஷியாய் அவர் இருப்பார். அதனாற்றான் [illegible] [illegible] ॥ (இதன்பொருள்: நான்கண்ணாவற்றிலும்சமபுத்தியுள்ளவன்; எனக்குப்பகைவனுமில்லை, பிரியனுமில்லை. என்னை எவ்வித [illegible] அவரிடமுள்ளேன் நானும்) என் றெம்பெருமான் ஸ்ரீகீதையில் தன் திருவாய் மலர்ந்தருளினர். ஆயின் ஒரு பட்டணம் சர்வஞானியார் களிக்கப்பெற்றும் பல பொருள் நிறைந்தும் பற்பல [illegible] [illegible] கடவுளது சந்நிதானத்தே [illegible] பாத் என்

[illegible]

றே சொன்னவென்பேம். தாம் நிருட்டித்த புண்ணிய தர்ம அத்தப்யாமியாய் அல்லவோ பிரவேசித்தார் என்பது வேத வழக்கு. [illegible] என்பதாதி வேதவாக்கியங்கள் இவ்விஷயத்திற்குச் சான்றாமென்றறிக. ஆரியர்காள்! மேற்கூறிய விஷயங்களைக் கருதி இனியாவது பழைய தேவாலயங்களைப் புதுப்பிக்கவும் புதியதாகக் கட்டவும் முயலுங்கள்! கோவிலில்லா வூர்களிற் குடியிருக்கும் பாபத்துக்காளாகாதீர்கள். வேறு வீண் செலவுகளைச் சிறிது குறைத்திடுங்கள். இந்த கலிகாலம் என்பதை நீவிர் அறியீரோ? இக்காலத்தில் யக்ஞம் முதலிய கர்மங்களைக் குறைவின்றி முற்றுப்பெறுவது அசாத்தியம். யஜமான் ரித்விக்கு நியர்களுக்குச் சிரத்தை மிகத் துர்லபமாயிருக்கிறது. அவரவர் புகழுக்கெனவே செய்துவருகிறார். தக்ஷிணை முதலிய சம்பத்தி இக்கால யாகத்திற் குறைவென்பது ஏதும் ஆக்ஷேபிக்கக் கூடாத விஷயம். யக்ஞத்தின் ஆயுள் தக்ஷிணை என வேதமோதுதலால் அவ்வித தக்ஷிணையற்ற யாகம் கேவல சிரமமாம். கடவுள் திருக்கோயிலமைக்கப்பொருள் அவ்வளவு சக்தி பெற வேண்டிய அவசியமில்லை. திருட்டுப் பொருளைக்கொண்டும் கடவுளை வழிபட்டுப் பெரும்பேறு பெற்றவர் அனேகருண்டென அனேகசைவவைஷ்ணவ பக்தசரித்திரங்கள் சொல்லுகின்றன. இனி கடவுள் வழிபாடு ஏதோ கற்பனை அளிக்குமேயன்றி வீணாகாது. ஆதலாற்றான் கண்ணபிரான் கீதையில் "அபிசேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் | ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோ ஹி ஸ:" என்று (இதன் பொருள்: ஒருவன் துராசாரமுள்ளவனாயினும் என்னையே இடைவிடாது பஜிப்பானாயின் அவன் துணிவுள்ளவனாதலால் அவனைச்சாது வெனவேண்டுமென்பது) சொற்றார். கேவலம் அன்னதானமுதலிய பதார்த்தங்கள் தத்கால நுகர்ச்சிக்கு இம்மையில் ஒரு திருப்தி கொடுக்குமாயினும் மறுமையில் பெறுவோருக்கு ஏதும் பயன்தரா? இவ்வாலய தருமம் செய்வோருக்கும் பெறுவோருக்கும் இம்மை மறுமை இரண்டையும் விளைவிக்கும். இவ்வாலயத்தைப் பிரதிஷ்டித்துக் கடவுளுக்கு நிவேதனஞ்செய்த அன்னத்தை மற்றவர்க்களித்தலால் பகவதாராதனம் அன்னதானம் என இரண்டு தருமங்கள் கைகூடுகின்றன. கடவுள் நிவேதனத்தை உட்கொள்வதால் உண்போருக்குஞ்சிறிது அகத்தமைந்த பாவம் விலகிப் புண்ணியம் சித்திக்கும். இதுவே அன்னதானத்தின் அமையாப்பயன். இனித் தன் வீட்டிற்குறைந்த பகவதாராதனம் செய்து அங்கு நிவேதனம் செய்த அன்னத்தைக்கொண்டு சந்தர்ப்பணம் செய்வதே போதுமானது. ஆலயப்பிரதிஷ்டை வேண்டியதில்லையெனின், ஆலய பூஜையைப்போல் கிருகபூஜையில் நடக்கும் சிறப்பும் கற்பனை கைகூடுவது கஷ்டசாத்தியம். தேவாலயத்தில் பலர் கடவுளை வழிபட்டுப்போவர் என்றோம். கிருகத்தில் கடவுளை வழிபடுதல் ஒருவர்க்கோ பலர்க்கோ

[illegible]

[illegible]

[illegible]

தேவாலயாராதனம் பலர்க்குப்பல பயன்களைத்தருவது. அது கொண்டே ஆகமங்களில் "பிரத்யக்ஷ ஸர்வார்த்தம், ஆலயஸ்ரேஷ்டபரார்த்தம்" எனச்சொல்லப்பட்டது. "பரம் எனில் உயர்ந்தது" அர்த்தம்- பொருள், அல்லது பயன். உத்தமப்பயனைப் போதுமளிப்பது "பரார்த்தம்" என அச்சொற்குப்பொருளும் உரைக்கப்பட்டது.

ஷ்ரும்.

(மொழிபெயர்ப்பு) இவர்க்கு,

சுந்தரராஜசாஸ்திரிகள்.

சோதிடம்.

ஐயா!

இவ்விஷயத்திற் சிறிது திருச்செவிசாய்த்திட வேண்டுமென உங்கள் உதவியை எதிர்பார்த்திருக்கிறோம். இப்பஞ்சாங்க விஷயமாய்ச் சில வரிகள் சென்ற ஏப்ரல் மாசத்திய பத்திரிகையில் வரையப்பட்டன. அவைகளைக் கண்ணுற்ற யாம் எமது அபிப்பிராயத்தையும் வெளியிட முன்வந்தோம்.

"வேதங்கள் யஜ்ஞம் முதலிய சத்கருமங்களைக்கூறிவருகின்றன. அவ்வேள்விமுதலிய சத்கிரியைகள் காலத்தைக்கண்டே செய்யற்பாலன. அக்கால நியதியும் ஜோதிடத்தாலன்றித் துணியப்படாது. அதனாற் சோதிடம் வேதாங்கம் என்ப" என்பதாலும் "இது வேதத்தின் கண்" என்பதாலும் வேதாங்கங்களுள் இது மிக முதன்மைபெற்றது என்பது வெளிப்படை. இப்பாரதகண்டத்தில் வெகுகாலத்துக்குமுன் அனேகர் இச்சோதிடத்தில் மிகப்பயின்றுவந்தார்கள். அதில் அனேக வுண்மைகளை அறிந்தார்கள். அம்மகான்கள் பெயரைக்கேட்டவுடன் இக்காலத்துப் புறத்தேச கல்விமான்களும் தலைவணங்கி வருகிறார்கள். அவர்கள் அக்காலத்திற்சோதித்து நல்ல பஞ்சாங்கங்களை எழுதி அதன்வழி நல்ல கருமங்களை நடாத்தித் தாமும் அநுஷ்டித்து நல்லுலகஞ்சென்றார்கள். பிறகு யவனர், மிலேச்சர்முதலிய புறத்தேயத்தவர் இத்தேயத்தை ஆண்டிட நேர்ந்தது. உடனே இத்தேசத்து நல்லோர் வழித்திருப்பிறப்புக்குமுரித்தி அதைத்தேகேதே அவர்களுக்குப் பரம்பிரையாகவாய்முடிய கல்லூரலாய்ச்சி மிகுந்து புறநூற்பழக்கம் மலிந்து உண்மை யொழிந்திட நேர்ந்தது. இவ்விதம் அஞ்ஞானம் மலிந்து வருவதைக்கண்ட கருணைமலிந்த வாழ்வி பகவான் ஜோதிடநூலிலற்ற ஜனங்களிடம் கிருபையாலும் பிராமணர்த்தியார்க்குப் பஞ்சாங்கமின்றியமையாமையாலும் அக்கால நிருகணிதநிச்சயதுக்கமாக பஞ்சாங்கமெழுதும்" எனப்பதாதி வாக்கியங்களை எழுதியருளினார். இக்காலத்துக் கணக்கர் வைரும் உண்மையிற் பூர்வோன கவோன விஷயமறியாதவராயினும் ஜோதிட ஒருவழி முற்கூறிய வாக்கிய வழியாய் திதி நக்ஷத்திராதிகளை எழுதிவைத்திருவோர்கள். அவ்வாக்கியங்கள் இப்பொழுது வாரக் கண்பார்வைக்கு ஒத்துவரா

[illegible]

தொழிய சேர்த்தது. [illegible]" "கண் பார்வையுடன் மாறும் கணிதத்தாற் சித்திக்கும் லக்ந பிரகமும் ஸ்நான மாதலால் அது கர்மங்களில் உபயோகமாகாது" என்று சோதிடம் முறையிடுகின்றது. ஆகையால் இக்காலம் இந்த ஸ்நான வபுத்திகள் செய்யும் ஸ்நான கணிதத்தாற் கர்மங்கள் தமோது வதை நோக்கி வைதிகருட்சிறந்தவரும், மகாவம்சத்துதித்தவரும், ப்ராசீன நவீன கணித தந்திர வல்லவரும், சோதிடவிஷ்ணுக்ஷேம கறியதித்தவரும், வேத பௌத தர்மசாஸ்திரானுஷ்டானுஷ்டாபன துரந்தருமான திருவையாற்றில் வசிக்கும் ப்ரம்மஸ்ரீ சுந்தரேசுவர சிரௌதிகள், ப்ரம்மஸ்ரீ வெங்கிடேச தீக்ஷிதர் இவர்கள் சுத்தமானதும் திருக்கணித சித்தங்கள் ஒத்தவரக்கூடியதுமான ஓர் சௌரமான பஞ்சாங்கம் வெளியிட்டுவருகிறார்கள். இப்பஞ்சாங்கத்தை ஜனங்கள் பெரும்பான்மையிற் றிருக்கணிதபஞ்சாங்கம் என்பார். இதில் சிறி விஷயத்திற் பூமத்தியந்துன்ன பமத்திய நீருக்லித்நம் செய்க்கவேண்டும் (பூமத்தியம் - இப்பூமியை நர் விளாங்கனியாய் வைத்து அதிலமேலுங் கீழுமாய் ஒரு தமிர் யிட்டுப்பக்கத்துத் தனியிட்டு இரண்டிலும் ஒவவோர் ரச்சை விட்டால்இரண்டும்சேரும் நடுவிலிருக்கும்பாகம் பமத்தியம்-(அசுவினிமுதல் ரேவதிவரையிலுள்ள நக்ஷத்திர சக்கிரத்தின் நடு) சிலநூல்களிற் பூபிருஷ்ட நிருக்கித்தமே. (பூபிருஷ்டம் - பூமியின்மேல் ஜனங்கள் வசிக்குமிடம்) பூமத்தியமும் பமத்தியமும் ஒன்றென்பதற்குப்பிரமாணம்.ஸித்தாந்தசிரோமணிகோளாத்தியாயத்தில் [illegible] இதன்பொருள்: இந்த அசுவினிமுதலிய நக்ஷத்திரங்கள் அமைந்த இந்த நக்ஷத்திர சக்கிரத்தின்நடுவும் பூமத்தியமும் ஒன்றென்பது. இதன்கருத்துரை- இப்பூமியைச்சுற்றிச் சமானவளவில் நக்ஷத்திரம் இருத்தலால் அதன்நடு இதன்நடுவேனைவ் ஒக்கும் என்பது. இவ்வுண்மையறியாதநாட்டுப்புறத்துப்பஞ்சாங்கிகள் சிலர்இச் சோதிடநூல்களைப் படிக்காமலும் படித்தோர்பாற் கேட்டறியாமலும் வீணில்அகங்காரங்கொண்டு உண்மையைவிட்டேவிலக் பூமத்தியம் வேறு, பமத்தியம் வேறு என்கிறார்கள். இவர் சோதிடநூலறியார். இவர்க்குச் சில தமிழ்ப்பாட்டுகளே தெரியும். இவ்வளவுகாலமாய்க் காஷ்டவாதம் பண்ணுமிவர் ஒன் பிரமாணம் ஒன்று காட்டக்கூடாது. இருந்தாற் காட்டாரோ? இருக்கப்போகும். இக்கணித வுண்மையறியாதாரிடஞ் சென்று ஏதோ சுத்த பஞ்சாங்கங்களாம் உலகம் கெட்டுப் போவதுபோல அபிநயித்துக்காட்டித் தாமும் அவருடன் அசாவத்திற் செய்யுங் கர்மம் நிஷ்பலமாதலாற் கெடுகின்றனர். இதுமட்டோ! பண்டிதர் நிறைந்த சபையைக்கண்டாக் விட்டாற் போதுமென வெடுப்பார் ஓட்டம். அந்தோ! இவர் வீணில் இருக்கலாகாதா. இனி வேப்பத்தூர் ப்ரம்மஸ்ரீ்கவாமி சாஸ்திரிகள் அவர்கள் எழுதிய திருக்கணிதபாலத்திருபணம் என்னும் சிரந்தத்தைக் கண்ணுற்றோம். மெத்த அளவிலாவானந்தமயிர்த்தது. எழுந்து அச்சாதுக்கும் தவாசிரியருக்கும் ஒரு வந்தனமுஞ் செய்தோம். அச்சாஸ்திரிகள் எழுதிய சோதிடக்கிரந்த மாஹாத்மியத்தை அம்மம்ம! யாதோ

[illegible]

ரியார். வராகமிகிரர் முதலிய தொல்லாசிரியரும் அறியாத உண்மை அதில் அமைந்திருக்கிறதாக வெண்ணுகிறாராக் கியோர். அவர் எழுதும் மகோபந்நியாசத்தைச் சிறிது எடுத்து வெளியிட்டுப் பிரகடிக்குவாம். அவர் கூற்று: கிரகணம் அநுஷ்டேயம் என்றும் (அநுஷ்டிக்கவேண்டியது) அனநுஷ்டேயம் (அநுஷ்டிக்கக்கூடாது) என்றும் இருவகைப்படும். [illegible]

என்பதனுல் சூரியனைச் சந்திரன் மறைக்கிறான் என்பதும் சந்திரனைப் பூமியின் நிழல் மறைக்கும் என்பதும் சோதிடத்திற் சொல்லப்பட்டது. இவ்விதஞ் சம்பவிக்கும் கிரகணம் அநுஷ்டிக்கத்தகாது. தருமசாஸ்திரங்களில் '[illegible]

[illegible]"

என்று இராகு பிடித்தகாலத்தே ஸ்நானமும் தானமும் சிராத்தமும் செய்யவேண்டுமென விதித்தலால் ராகுபிடித்த கிரகணமே அநுஷ்டிக்கவேண்டும் (இந்தத் தருமசாஸ்திர கிரகணம் கேதுவுக்கில்லையோ அந்த ராகுவைக்கண்டாலல்லவோ ராகு தரிசனம் கண்டதெவர்? கண்டவர் அதன் வடிவத்தை வர்ணிக்கட்டும் பார்ப்போம். ப—ர்.) என்பது.

ஆயின் பூமியின் சாயையால் சேர்ந்த சந்திர கிரகணம் அநுஷ்டிக்கத்தக்கதல்லவென்றும் ராகுக்ரஸ்த சந்திரகிரகணம் அநுஷ்டிக்கத்தக்கதென்றும் ஆகின்றது. ஓய் சாஸ்திரிகாள்! வலசிச் சுற்றிப் புலாலருந்தும் புன்னியாசாரத்தை யொத்தது உமது கொள்கை. நீவிர் மீமாஞ்சை நியாயங்களைக் காட்டிய பெருஞ் சித்தாந்தத்தை எதென்றுரைப்போம்.

சாஸ்திரிகாள்! உம்மிடம் தெரிவித்துக்கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. அது யாதெனில் உமது மதத்தில் கேது கிராந்தக் கிரகணம் அநுஷ்டிக்கவேண்டியதில்லையே. ராகுதர்சனம் என்று இருக்கின்றதேயன்றிக் கேதுதசனத்தில் அநுட்டிக்கவேண்டும் என்றில்லையே. அந்தோ! கலிகாலக்கொடுமைக்கு எதுரைப்போம். ஒவ்வொருவரும் சோதிடம் அறிந்தவராக நினைத்துக்கொண்டு பஞ்சாங்கங்களைத்தாரதம்மியப்படுத்த நினைக்கிறார்கள். இவர்கள் தமக்குத்தெரியாத சாஸ்திரம் உண்டென நினைப்பரோ நினையாரோவெனச் சமுசயமுண்டாகின்றது.

அந்தோ! பஞ்சாங்கங்களிற் சாரங்களில் ராகு கேது சாரங்களைப் பார்த்தும் அவற்றின் இயல்பும் சம்பந்தத்தையும்அறியாது எதேதோ கிரகணத்தைப் பற்றித் தோன்றியவாறு எழுதுவதை மறுக்கவேண்டி நாமும் எதும் எழுத வேண்டுமென்ற கௌரவத்தைக் குறைத்துக்கொள்வதுசிதமல்ல.

இனிப் பர்வாந்தமோக்ஷம் பிரதிபதாதிஸ்பர்சம் என்பது எதுவோ? சித்தாந்தசிரோமணியில் எமது சித்தாந்தியார் இவ்வுண்மைகளைப் பலவாறு எடுத்து விரித்திருக்கின்றார். 'சந்திரகிரகணத்திலும் விசேடங்கூறுகின்றார்' என்று தொடங்கி [illegible]

[illegible]

[illegible] என்றும்,

சூரியசித்தாந்தத்தில் [illegible]

[illegible] என்று

Koviloor Digital Library

[illegible] ॥ [illegible] ॥ [illegible] ॥ [illegible] ॥ [illegible] ॥ [illegible]

[illegible] ॥ [illegible] ॥ [illegible] ॥’ என்றும் இருக்கின்றன. இவ்வசனங்களில் அமைந்தவட்சருத்தை இஃதெனத் தனித்தறியாதார் தத்தம் புத்திக்குத்தோன்றியவாறு பிதற்றுவர். ஆயினும் அவரிடங்கேட்க வேண்டியது ஒன்றுண்டு. இக்குற்றம் வாக்கிய சித்தாந்தம் என இருவகைப் பஞ்சாங்கங்களிலும் வராதோ? என்பதே. வராதெனின், அதன் வேற்றுமை அடியிற்கண்டவாறு அமைந்ததென்னை? பாருங்கள்! இவ்வேற்றுமைகள் அமையும் வழி அடியிற் காண்க.

[illegible]

	[illegible]	[illegible]	உ	கிழமை	[illegible] நாழிகை	[illegible] காலம்	[illegible] காலம்
[illegible]	[illegible]	மார்கழி	8	வியாழம்	11 - 11	4 - 39	10 - 36
	[illegible]	ஆனி	26	திங்கள்	5 - 22	[illegible] 29 - 22	[illegible] 3 - 36
	[illegible]	வைகாசி	26	வியாழம்	7 - 30	[illegible] 59 - 40	[illegible] 5 - 14

[illegible]

[illegible]	[illegible]	புரட்டாசி	26		25 - 51	26 - 58	[illegible] 3 - 10
	[illegible]	ஆடி	5	சனி	20 - 31	22 - 48	26

[illegible]

ஓய் சாஸ்திரிகாள்! இக்குற்றம் இருவகையிலும் நிறைந்ததோ? இதுவும் நமது பஞ்சத்திற் குற்றமென்று இன்றே அறிந்தோம் என்பீரேல் இனியேனும் வாயடங்குவீர். இனி உம திறமை கடத்தாதொழிவீர். உண்மை அறிவீர். நியாயம் பிறழீர். நல்வழி நடப்பீர். நண்பரே! எம்மிடம் கேட்பீன் யாம் உரைக்குஞ்சமாதானம் இஃதென வறிவீர். அதாவது: “இக்குற்றம் பஞ்சாங்கத்ததல்ல. மற்றுக் கிரகணத்துக்கும் திதிகளுக்கும் வெவ்வேறு நிருக்கித்தத்தைக்கொண்டு முடித்தலால் அது வேற்றுமை காண்பிக்க நேரிட்டது” என்பது. [illegible] என்பதால் கிரகணம் தவிர மற்றவிடம் ழுபிருஷ்ட நிருக்கித்தத்தை நிஷேதித்தமையாலும் [illegible] என்பதால் திதியாதிகளுக்குப் பூர்வத்திய நிருக்கித்தமே கிராஹ்யமென விதித்தமையாலும் என்க. இனிப் பர்வாந்தத்தில் ஸ்பர்சம் பிறிதந் [illegible] ந்தம் என்பது ழுபிருஷ்ட நிருக்கித்ததினையப் பற்றியது. அத்திதி கிரகணாதிகளுக்குதவாது. அதுகொண்டே பஞ்சாங்க

[illegible]

வில் அந்த திதிகள் எழுதப்படவேயில்லை. [illegible]' என்பதால் தன் தேசத்துள்ள நிருவயித்த திதிகளிற்றானே சாத்தாரிகளை அனுஷ்டிக்கவேண்டும் என்று சொல்லப்படுதலால் அதுவே பஞ்சாங்கயோக்ய திதியாம். இதையும் சிறிது மேலே நோக்குவாம். திதிகளின் விருத்திக்ஷயங்களைக்குறித்து பலரே எழுதியிருக்கிறார். அதற்றிலே விசாரிக்கவேண்டியதுண்டு. [illegible] என்னும் வசனத்தை வியாக்யானஞ்செய்யுமிடம் ஸ்ரீமாதவாசாரியரும் வைத்தியநாததீக்ஷிதரவர்களும் 'இந்த மூன்று முகூர்த்தங்கள் விருத்தியால சம்பவிக்கும்' என வெழுதினமையால் மூன்றுநாழிகைக்குமேல் விருத்தி யில்லை சம்பவிக்காதென்பது காட்டப்படும் என்றனர். இவர் தர்மசாஸ்திரங்கள் பொருளறிந்தவரல்லர். நண்பர்காள்! இச்சாஸ்திரிகள் அறியாமையைப் பாருங்கள். திதிகள் எவ்வளவு குறையுமோ அவ்வளவு விருத்தியடையாதென்பது சோதிடங்கற்றவர் எவர்க்கும் தெரிந்தது. அதை இவர் அறிந்திலர். மேலும் இவர் கூறும் வாக்யபஞ்சாங்க வழியில் மூன்று முகூர்த்தம் விருத்தியுண்டென வெழுதியதும் அசம்பவம் என்பதறியார். சுலோகார்த்தம் முற்றுமாறு பொருளாத்ததன்று. உண்மையில் அவ்வசனப்பொருள் யாதெனில், இந்த வசனத்தில் விருத்தி இவ்வளவுகாலம், க்ஷயம் இவ்வளவுகாலமென வரையறுக்கப்படவில்லை. இரண்டுதினங்களில் ஒரு திதி அபராஹ்ணம் (பிற்பகல்) வியாபித்தல் விருத்தியினாலுண்டாகும் என்றும், அந்த விருத்தியும் எவ்வளவெனில் இரண்டொன்றானால் போதாது பத்தி மூன்றுக்குக் குறையலாகாதென்றும் ஏற்படுகிறதேயன்றி உலகத்தில் திதிவிருத்தி மூன்றே நாழிகையென ஏதும் அச்செய்யுளில் வெளிப்படவில்லை.

இனி மூன்றே சுலோகத்தால் சந்தேகக்குறைய ஒரு யாமம் விருத்தியுண்டு என்பதையும் நிரூபிக்க வல்லமை எமக்குண்டு. அன்றியும் அது கணிதமறிந்தவர்க்குப் புலப்படாமையாலும் விரியுமாதலாலும் இம்முறை விட்டோம். (அதை மறுமுறை அவசியம் வெளியிடவேண்டும். பத்—ர்.) மேல் [illegible] என்பதாதி சில வசனங்களைத் தனக்குச்சாதகமெனமயக்கி எழுதினார். ([illegible] இரண்டு தினங்களிலும் அபராஹ்ணவியாப்தியில்லாவிடில் சாயங்காலத்தில் மூன்று முகூர்த்தமுள்ள திதியே க்ரஹிக்கவேண்டியது என்பது பொருள்) இதனால் இவர் கருதியது யாதும் நிறைவேறவில்லை. எக்காரணத்தாலோ நம் சாஸ்திரியார் இவ்வசனப்பொருளை ஆராய்ந்து தமக்குச் சாதகமென கூறுகிறார்.

இங்ஙனம்,

ஏ. என். ராமசேஷய்யர், பி. ஏ.

Koviloor Digital Library

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின் அநுபந்தம்.

௪ - புத்தகம்] சிதம்பரம். நந்தன௵ ஆனிமீ ௨௮ [இலக்கம் - ௧௦

ஜகந்குருதூஷண தூரீகரணம்.

௧௪௪-ம் பக்கத்தொடர்ச்சி.

மேல் அவர் வைதிகரென்றால் சிவனை வழிபடுபவரென்று பொருள் தராதெனக் கூறினார். வேதநெறி நிற்போரே வைதிகரென்று இவரும் ஒத்துக்கொள்கின்றார். வேதநெறி நிற்போரென்றால் வேதமாகிய நூல்காட்டும் வழி ஒழுகுபவர் என்று பொருளாகின்றது. வேதமானது சிவபெருமானை வழிபட்டு முத்திபெறும் வழியைக்காட்டலால் வேதநெறி நின்றோர் சிவனை வழிபடுபவராகின்றார். வைதிகரென்னும் சொல்லே சிவனை வழிபடுபவரென்று பொருள் தரத்தக்கதாகவிருக்க வைதிகரென்னும் சொல் சிவனை வழிபடுபவரென்று பொருள் தராதென்று கூறுவதெப்படி? அச்சொல்லே சிவ வழிபாட்டைக் குறிக்கும் பொழுது வேறோரடைமொழி அதன் பொருட்டுக் கொடுப்பதெற்றுக்கோ? வேதந்தன்னை பல சமயங்களுளவாதலால் அப்பகுதியில நாம் சைவக்கொள்கையரென்று காட்டற்கு அவ்வடைமொழி வேண்டுமெனின், வேதத்தின் முடிந்த முடிபு சிவவழிபாடென்பது வெளிப்படையாதலால், அதனை மற்றொன்று கொண்டு விசேடித்தல் வேண்டா. இனி அப்படி ஒத்துக்கொள்ளினும் வைதிகசைவர் என்று இவர் வாயெடுக்குமுன் நாம் "வைதிக வைஷ்ணவர்" என்று இவர் பங்காளிகள் பங்கு பிரிக்க வந்துவிடுவர். நண்பர் தாம் தேடிக்கொள்ளும் ஏது தமக்கே சங்கடமாய் வந்துமுடியும். இனி வேதத்திலே கூறும் வழிபாடெல்லாம் சிவ வழிபாடேயாதலால், வைதிக நெறி நிற்போர் சிவவழிபாடு செய்பவரேயெனப்பட்டு, அவரை வேறுபிரித்துச் சைவரென்றும் அடைமொழி கொடுத் தழைக்கவேண்டு மென்பது பிரயோஜனமற்ற வாதமாய் முடிந்தது. மேல அவர் "தெய்வ சம்பத்தொழிந்த வைதிகம் வாளை மேற்கொள்ளாத விவாகச் சடங்கு மாத்திரமாயொழிந்தது" என்றதும்மேற்காட்டிய நியாயங்களால் நிராகரிக்கப்பட்டது. இனி வைதிகத்துக்கு வேறுபுள்ளது சைவம் என்று நாம்புகன்றது போல் நாம் சைவத்துக்கு வேறுபுள்ளது வைதிகமென்று சொல்வதில்லையெனகின்றார். இதனால் இவர் வைதிகமென்பதும் சைவமென்பதும் ஒன்றேயென்று ஒத்துக்கொள்கின்றார். இது எமக்கும் சம்மதமே. வைதிகமென்பதும் சைவமென்பதும் சிவவழிபாட்டையே குறிக்கும் ஒருபொருட்சொற்களாக அதனை மறுத்து இரண்டென்பது நன்றன்றே. நாம இவ்வாறு வைதிகமென்பதும் சைவமென்பதும் ஒன்றேயென்று கூறும் இயல்புடையேம். அவ்வாறுநாம் முக்காலும் சொல்வோம். இவரோ தம்மை வைதிகரென்று கூற ஒருபோதும் ஒத்துக்கொள்ளார். வைதிகமென்றால் உயிரில்லாத உடம்புபோலாமென்று நிந்திக்கின்றவர். வைதிகரல்லாத இவர் அவைதிகர் போலும்! இவ்வைதிகர் அது மாத்திரமா! வேதம் மோக்ஷந்தராதென்றும், வேதம் சிவவழிபாடு கூறினதில்லையென்றும், வேதம் பசுநூல் எனறும், வேதமயக்கஞானத்தைக் கொடுப்பது என்றும், வேதம் மோகத்தைத் தவிராதென்றும், வேதம் சாமானிய ரிஷிகளாற் கொள்ளப்படுவதென்றும், வேதம் பிரமனிடத்தன்றிச் சிவனிடத்தில்லையென்றும், வேதம் பல தெய்வங்களைக் கூறுவதென்றும், வேதம் பூர்வ பக்ஷமேயன்றிச் சித்தாந்தமாகாதென்றும் கூறும் வேதநிந்தகர். இவர் மாத்திரமா! இவருடைய சகோதரராகிய ஞானமிர்தத்தாரும் அத்தகையரே. வேதத்தை நிந்திக்குமிவர்கள் வேதத்திருட்பொருளாகிய சிவபெருமானை நிந்திப்பவராகாரோ? சிவபெருமானது திருவாக்காகிய வேதத்தை நிந்தித்து விட்டுச் சிவபெருமானிடத்தே அன்புடையார்போல நடிக்கும் இக்கலிபுருஷர்கள் சைவாபிமானம் மிக அழகுடைத்தாம்! இவர் போலொத்த வேதநிந்தகர்களாகிய அவைதிக தாந்திரிக சைவர்களையே வைதிகரினும் வேறாகிய சைவரகளென்று நாம் வேறுபிரித்தோம். தேவாரத்தின் சிறப்புரைக்க வெழுந்த நாவலரொருவர் வேதங்களை இகழ்ந்தது போல ஆகமச்சிறப்புரைக்க வெழுந்த இவர் வேதநிந்தனை பண்ணினாலன்றி ஆகமத்துக்குச் சிறப்புண்டாகாது போலும்! நல்வழி வந்த நல்லாசிரியர்

Koviloor Digital Library

தவித ர்! வாய்மையில்லா கைவாத தாம் தோன்றித் தம் பிரான்கள் இங்ஙனஞ் செய்யாது யாது செய்வார்? விபூதி யுருத்திராக்ஷந் தரித்துக்கொண்டுவேத நிந்தனை செய்யும் இவ்வேஷதாரரை நாம் யாரென்று சொல்வோம்! சாபமோ சொல்வோமா? சிரிக்கவேசெய்வோமா? இவர்கள் உண்மையான சைவர்களாலும் வேதத்தை நிந்திப்பார்களா? சைவவேடம் பூண்டு சமயத்தைக்கெடுக்க வந்தவர்களென் றன்றோ நாம் இவர்களை நினைத்துக்கொள்வோம். இவர்கள் கூறும் வேத நிந்தனைகள் அன்றாம்? இவர்கள் எழுதிவரும் விஷயங்களைத் தார்கிக்கு முகத்தாற்கண்டிக்கப்படுமாதலின், நம்மி அவை தமையாவிடுத்து எடுத்த விஷயத்திற் செல்வாம்.

வைதிகம் உயிரில்லாத உடம்பென்பதாய் வேதத்தில் சிவவழிபாடில்லையென்பது இவர் கருத்தாகின்றது. அதனை மற்றோரிடத்தும் விளக்கியிருக்கின்றார். ஆதலால் இவர் கூறிய இவ்வார்த்தை உண்மை வார்த்தையே யென்றும் வேதம் கூறுவதெல்லாம் சிவவழிபாடே யென்றும் பல பிரமாணங்கொண்டு காட்டுகின்றாம்.

கைவல்யோபநிஷத்.

[illegible]| என்றும்,

கடோபநிஷத்.

[illegible] என்றும்,

வாயுசம்ஹிதை.

[illegible]| என்றும்,

காந்தம்.

[illegible]|| என்றும்,

சிவபுராணம்.

[illegible]|| என்றும்,

ஸ்ரீகண்டபாஷ்யம்.

[illegible]| என்றும்,

ஹாரதத்தர்.

[illegible] || என்றும்,

அப்பயதீக்ஷிதர்.

[illegible] என்றும்,

காளிதாச கவி.

[illegible]| என்றும் கூறுமாற்றால், சர்வவேதங்களும் சிவ வழிபாட்டையே கொண்டுள்ளன வென்பது நன்கு காட்டப்படுகின்றது. இவைபோன்ற பிரமாணங்கள் இன்னும் அனந்தமுள்ளன. தேவார திருவாசகங்களைத்தும் வேதங்களையும், அவ்வேதங்களின் உட்பொருளாகிய சிவபிரானையுமே துதித்தல், அதிலும் சிவபிரானைத் துதிக்கு மிடங்களில் வேதப்பொருளாயுள்ளவர் சிவபிரானென்று நன்று காட்டுகின்றன. இன்னும் இதற்கு யாது வேண்டும்? அப்படியிருக்க நண்பர் வைதிகம் உயிரில்லாத உடம்பென்றும் வைதிகத்தில் சிவ வழிபாடில்லையென்றும் கூறியது அவர் அறிவின்மையையே காட்டிற்று. நண்பர் மற்றோரிடத்தில் தாம் முன்பு கூறிய அவைகளை மறந்து "வேதமும்சிவாகமும் சிவோபாசனையையே கூறுகின்றன" என்றும் "வேதவழியாலும் சிவாகமவழியாலும் சிவனை வழிபடுவோர் சைவரேயாவர்" என்றும் "வேதவழியின்று சிவனை வழிபடுவதும் சிவாகமவழியின்று சிவனை வழிபடுவதும் ஒன்றேயாகும்" என்றும் கூறுகின்றார். ஓரிடத்து இகழ்ந்தவர் மற்றோரிடத்து ஒத்துக்கொள்வதென்னோ! நண்பர் இன்னும் இதுபோன்ற பல வசனங்களை முன் பின் முரணக்கூறுகின்றார். நண்பர்க்கு ஓர் நிலையில்லைப்போலும்! அன்றது அடிக்கடி முன் சொன்னதைப்பின் மறந்து பின் சொல்வதை முன் நினைவின்றி இப்படிக்குளறுகின்றாரோ அறியேம். நண்பர் இனியேனும் நிதானமாக நின்று பேசுவாராக. இனி மேற்காட்டியவியாயங்களாலும் இவரே யொத்துக்கொள்ளு முறையாலும் வேத வழி சிவபிரானை வழிபடும் வைதிகரை இவர் நிந்தித்தது பயனற்றதாகும் மிகுந்த பாவத்துக்கிடமுமாய் முடிந்தது. விரிக்கிற்பெருகும்.

இனி வைதிகராவாரும் சைவராவாரும் ஒருவரேயென்று வைத்துக்கொள்வோம். அது எமக்கும் சம்மதந்தான். ஆனால் நீர் மாத்திரம் வைதிகரும் சைவர் வேறென்று பொருள்பட "வைதிகர் சைவரென்னும் இரு வேறு சமயங்கள் தனித்தனி மதத்தக்குச் சிறப்புப்பெய

ராய்ப் பெருவழுக்காய் வழங்குவதாக" என்று கூறலாமோ வெனின், அஃதுண்மையே, நாம் வைதிகரைச்சைவரன்றென்று கூறிலேமல்லேம். தற்காலத்திலே சைவரென்று பெயர் வைத்துக்கொண்டு வேத நிந்தனை செய்யும் இவர்போன்ற போலிச்சைவரையே வேறுபிரித்து அங்ஙனம் கூறினோம். அச்சைவரே நாம் வைதிகரென்று முன்வர அஞ்சுபவர். இனி அவரைத்தானும் எவ்வாறு பிரிக்கலாமெனின், சிவவழிபாடுடையார் போல நடிப்பினும் அவ்வழிபாட்டைக் கூறும் வேதங்களை நிந்திக்கும் அவ்வவைதிகரை வேறென்செய்வோம். அவ்வைதிக தாந்திரிக சைவர் வேத நிந்தனை செய்யாது அதன் வழி நடப்பாராயின் அவரை நாம் வைதிகரென்றாவது சைவரென்றாவது ஒத்துக்கொள்வதில்யாதுந்தடையில்லை. இனி அவ்வவைதிக தாந்திரிகசைவர்வேறு; அவரை நாமும்இகழ்கின்றோம். அத்தாந்திரிக சைவரை வேறுபிரிக்கும் பொருட்டே நாம வைதிக சைவரென்கின்றோம்; ஞானாமிர்தத்தரும் இவைகளை நன்றாக விளக்கியிருக்கின்றனர். அவரும் நாமும் வைதிகமும சைவமும் ஒன்றேயெனக் கருதியே வைதிகசைவரென வழங்கிடுகின்றோமென்னில், அதுவும் பொருந்துவதன்றாம். என்னை? ஞானாமிர்தத்தரும் இவரும் வாயினால் மாத்திரம் வேதமும் ஆகமும் சமமேயென்று ஒரோர் பொழுது சொல்லுவாராயினும் வைதிக நிந்தனை பல கால் செய்கின்றனர். இனி வேதம் சிரேஷ்டமானது தான் என்று சொல்லிக்கொள்ளினுமென்னை? வைதிக கர்மங்கள் மோக்ஷந்தருவனவாமென்று கொண்டு அநுஷ்டிப்பரா? அது செய்யாதபொழுது இவர் எவ்விதத்தால் வைதிக சைவராவர்! வேதம் நல்ல நூல்தானென்று வாயினாற்சொல்லுமதனால் வைதிக சைவராய் விடுவரோ! அப்படியானால் இவர் கொண்ட சைவம் நல்லது தான் என்று சொல்லுமதனால் ஒருவன் சைவனாய் விட்டானெனஇவர்ஒத்துக்கொள்வரா?தீக்ஷைபெற்றுச் சிவாகமாசாரங்களை அநுஷ்டித்தாலன்றிச்சைவராகாரெனக்கூறுரோ? அது போல வைதிகர் வேதாசாரங்களை அநுஷ்டிக்காதவர் வைதிகராகாரென்று பிடித்துத்தள்ளாரோ? நண்பர் இவைகளை யோசியாது வறிதே தம்மை வைதிக சைவரென்று சொல்லிப்பெருமை பாராட்டிக்கொள்வதில் யாதுபயன்? இனிச்சுலோசனர் "வைதிக சைவம்"என்பதற்குப் பொருள்கூறும்பொழுது "வைதிக சைவரென்போர் வேத நெறி நின்று சிவனைவழிபடுவோர்" என்று கூறினரே. அப்படியானால் வைதிக சைவராகிய இவர்இருவரும்"ஓர் வைதிகசைவ" ரென்றும் குட்டிவைதிகசைவரும்,மற்றிவரைச்சார்ந்தவைதிகசைவர்களும் வேதநெறி நின்றேவழிபடுகின்றார்களா? வேத நிந்தகராகிய இவர்களா அப்படி வழிபடுவோர்? அந்தோ பாவம்! வைதிக சைவப்பெயருக்கு ஆசைப்படுமிவர்கள் வேத நிந்தனைசெய்யாதொழிக்கலாகாதா! வைதிகச்சொல்லிலும் ஆசை; அதின்படி நடக்கவுமுடியாதென்றால், அதற்கு யாரென்செய்யலாம்!"தன்றாலே தான் கெட்டா"னென்பது போலத்தம்வாய்ச்சொல்லால் தாமே மாட்டிக்கொண்டார். இவர் கதி இப்படியாயது மிக்க பரிதாபமேயாம்! நண்பர் தம்மை வைதிக சைவரென்று சொல்வதிலும் இனி ஆகம சைவரென்று சொல்லிக்கொள்வாரேயானால், இப்படிப்பட்ட சங்கடங்கள் வரமாட்டா! நண்பர் இவைகளை யோசியாமல், வைதிக சைவர் வழக்கிலிழிந்து வாய் மாண்டு போக நேர்ந்தது பரிதாபமென்று பரிகசித்தார். இவர் மாத்திரமா, "ஓர் வைதிக சைவ" ரென்னும் குட்டி வைதிக சைவரும் எங்கேயோ லோடுக்கு போய்விட்டதென்றார். இவர்கள் இப்பொழுது என் சொல்வரோ! அனுதநுவைப்பிரமாணமுங்காட்டாதுஅம்மட்டில்மகிழ்கூர்ந்ததுஇவர்போன்ற பண்டிதர்க்கேஅழகாம்.இனி இவர் நாம் வைசவரென் று வெளிவர அஞ்சுகின்றதாகக் கூறினார். இவர் போன்ற வேதநிந்தக தாந்திரிகசைவரென்று வெளிவரப்பலகாலும் அஞ்சுகின்றோம். மேல் இவர் நமக்கு ஆகமம் கசப்பாய்ப்போயிற்றென்றார். நண்பர்க்கு வேதம் கசந்ததுபோல நமக்கும் ஆகமம கசக்கு மென்று நினைந்தார் போலும். நாம் ஆகமத்தை எங்கே நிந்தித்தோம். வேதத்துக்குமாறில்லாத வழி ஆகமும் நமக்குச்சம்மதமேயாம். எந்த இடத்தில் வேத விருத்தம் வருமோ, அந்த விடத்தில் அது எதுவாயிருந்தாலும் கசக்கத்தடையில்லை. இவர் ஆகமங்களை வேத விருத்தமென்று ஒப்புக்கொள்வரா? அப்படியானலன்றோ அது நமக்குக் கசக்கும். மேல்அவர் வேதத்திலும் சிவாகமத்தில் சிவனாது புகழ்மிகுந்து கிடக்கின்றதென்றார். இதனால் வேதத்திலே சிவனார் புகழ் குறைந்து கிடப்பதாய்க் கூறுகிறார். அதனுண்மை மேற்காட்டிய பிரமாணங்களைக் கடைப்பிடித்தறிந்துய்வாராக. இவை இம்மட்டிலிருக்க, இனித்தில்லை வேதியர் மகிமையை இவர் விளக்குவதாகச் சொல்வது எப்படியிருக்கிறதென்று பார்ப்போம்.

ஞானமிர்த வைதிக சைவர் தில்லைவாழந்தணருந்தீக்ஷிதர் மகாசைவரும் தாமும் சமத்துவமுடைய வைதிகசைவரென்று எழுதினர். அது கண்ட தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய ப்ரம்மஸ்ரீ பரமேசுவர தீக்ஷிதரவர்களுடைய சிஷ்யராகிய மற்றொரு தீக்ஷிதஸ்வாமிகள் அவர் கூறியவைகளை மறுத்துத் தீக்ஷிதஸ்வாமிகள்

யாவரும் உத்தமமானவர்கள் பிராமணர்களென்றும், ஆதி சைவர்களைத் தங்களுக்குச் சமத்துவமாகக் கூறுவதும் தங்களை ஆதிசைவரென்றுவது மகாசைவரென்றுவது அவர்களோடு சமத்துவமுடையவர்களென்றுவது கூறுவதாகிய சமரச ஞானமும், இவர்களும் ஆகம வழியாகப் புகின்றார்கள், அவர்களும் ஆகமவழியாகப்புகின்றார் என்று கூறுவதாகிய சமரச பூகத்துவமும்மன் றும் இவை கூறுகளும் நில்லைமூர்த்தனர்களாகிய தங்களை நிந்திக்கின்றதென்றும், வைதிக வழியாகச்செய் யும் தங்கள் சமயோபாசனையைத் தந்திரமாக அவர் கெடுக்கப்பார்க்கின்றாரென்றும், தாங்கள் செய்யும்கிரியையானது புனித வைதிக வழியினதேயென்றும், அவர் இவ்வாறு தங்களை நிந்திக்க வெறுங்கதை பேசுகின்றாரென்றும், சிவாகமத்திரிகர்களை நிந்திக்கவேண்டுமென்றுமேயெ ண்ணக அபிப்பிராயங்கொண்டிருந்து இதன் வாயிலாகவு ம் வெளிப்படுத்தினரென்றும், தாங்கள் அதனை அங்கீகரிப்ப தில்லையென்றும் கூறும் பத்திரிகைகள் வெளிப்பட ப்ரம்மவித்யாவிலே வெளியிட்டார். இவ்வாறு ஞானு மித்த வைதிக சைவரும் கு. சாயக் முதலிய பிறரும் கூறும் வாதம் நியதிசுவாமிகளுக்கே அங்கீகாரமற்றதாய் முடிகின்றது. அப்படியிருக்க இவர்கள் அவ்வாதத்தில் தலையிட்டுக் கொள்வது அவர்களை நிந்திக்கவேயிருக் கிறது. இந்த வழக்கு இப்பொழுது மாத்திரமல்ல, பல வருஷங்களின் முன்னும் ஒருமுறை ஆரம்பமாயிற்றென பலரும் ஐயப்பட்டு சொல்லிக்கொண்டு பின் நியதிசுவாமி களோடு மிக நெருங்கி வந்தும் வழக்கும் ஆடத்தொடங்கி னர். அப்பொழுதும் நியதிசுவாமிகள் தாங்கள் ஆதி சைவர் போல் பலர்களைச்சேர்த்தும் வைதிகர்களையென் றும் பத்திரிகைகளாலும் பிரசங்கங்களாலும் வெளி யிட்டார்கள். அது அப்படியிருந்தும் போன வழக்கை மீண்டும் ஞானுமித்த வைதிக சைவர் புதுக்கிக்கொள்ளவிட்ட டமை வெளிப்படவேண்டுமே, கு. சாயகர் அதைத்தூக் கிக்கொண்டு எழுப்பிவிட்டுக் கூறுவதாலும் நியதிசுவாமி களுக்குத் தொந்தரவுண்டாகவே யிடமாகின்றது. இவ ர்கள் இப்படிக்கூறுவதால் அவர்களுக்கு ஓர் குறைவுமில்ல ையாதாயினும் பெரியோர் சமூகங்களிலும் இம்முறை நிறுத்திவிட்டுத் நியதிசுவாமிகளின்மேல் விபரீத வெண்ணம் கொள்ள வைப்பதால் அதன் உண்மையை வெளிப்படுத்தல் அந்நியதிசுவாமிகளுக்கும் மெய்யறிக்கும் கடமையாயிற்று. அதுமுதற்கொண்டே பக்கத்திற் பிரமதநியதிசுவாமிகள் சிஷ்யரான நியதிசுவாமிகளுக்கு அப்பிரசுரங்களையெல்லாம் வெளியிட்டார்கள். ஞானு மித்த வைதிகசைவர் அந்நியதிசுவாமிகள் வார்த்தையை க்கேட்டு அடங்கி இதுவரையில் வெளிவரவில்லை. இச்சோம சுந்தரநாயகருள்ளும் ஞானுமித்த பரசமயம்கோளரியுமட்டும் அந் நந்நியதிசுவாமிகள் கூறியது பொருந்தாதென்று கூறி, நியதிசுவாமிகளையும் எதிர்த்தோதிநிற்கின்றார்கள். அது பற்றி அவர்கள் பேசிக்கொள்ள வேண்டுமேயன்றி நாம் அ தில் தலையிட அவசியமில்லை. நாம் கூறிய இவற்றை இவர்கள் மறுத்துப்பேசியவதன்றே எப்படியிருக்கிறதெ ன்று இப்பொழுது விசாரித்துத் தீர்மானம் செய்வாம்.

ஞானுமித்த வைதிகசைவர் வைதிக சைவராயினவரென யருக்குமிடத்துத் தில்லைமூர்த்தனருள் நிர்மாயநியதி சுவாமிகளையும் ஆதிசைவர் மகாசைவர்களையும் ஒன்றுக் கிவைதிக சைவரென்றார். ஆதிசைவர் மகாசைவர் தந்தி சநூற்படி நிலைத்துப் பெறுபவர்களானதாலும் இவர்கள் அந் நனம் பெறுமையாலும், நியதிசுவாமிகள் வேதவேள்வி செய்பவர்களானதாலும், ஆதிசைவர் மகாசைவர் வேத வேள்விசெய்யாவிடமுண்டெனினும் அதனைச்செய்பவரல்ல ரென்றும் அது கொல்லைப்பாவத்துக்கு ஏதுவாகின்றதென் றும் நிந்திக்கு நோரானதாலும், நியதிசுவாமிகள் ஆதி சைவர் மகாசைவர்களிலும் வேறானவர்களென்றும், அ வர்கள் அத்வைதசித்தாந்திகளென்றும் கூறினோம். அன்றித் தம்முன்சொன்னபடி இவ்விருதலத்தார்களில்வைதிகசைவர் வரேயவரென்றுங்கடாவியிருக்கும். இக்காயகர் அவ்வாதத்தில் தலையிட்டுநாம்கூறியகிபாயங்களுக்கு எட்டுணையும்பதில் கூறாது தில்லைவேதியரை மகாசைவரென்கின்றார். ஞானு மித்தவைதிகசைவரும் பரசமய கோளரியென்று வைபெ ருத்திட்டவரும் இவர்போலவே வெற்றுரை பேசுகின்று ர்கள். இவர்கள் ஆதிசைவர்களுமகோற்பவர்களென்றும் அவர்களிலும்மற்றப்பிராமணர்கள் தாழ்ந்தவரென்றும் எல் லாரிலுமுயர்ந்த ஆதிசைவவேதியரிடத்தே தீக்ஷைபெ ற்று அவர்க்குச்சிஷ்யராகிய மற்றைப்பிராமணர்களே மகா சைவரென்றும், இம்மகாசைவர் ஆதிசைவரினும் மிகத் தாழ்ந்தவரென்றும்கூறுகின்றார்கள். தில்லைமூர்த்தனர் மகாசைவரென்றால் ஆதிசைவரிடத்தே தீக்ஷைபெறுபவ ர்களென்றும், ஆதி சைவருக்குத் தில்லைமூர்த்தனர் சிஷ் யர்களென்றும், ஆதிசைவருக்குத் தில்லைமூர்த்தனர்கள் தாழ்ந்தவர்களென்றும் கூறுவதாகின்றது. ஓகோ! இப்படித்தில்லைமூர்த்தனர்களைத் தாழ்த்தவதற்குத்தானோ தங்கள் தார்மிகவசைவ பேசாஷ்டியர் அவர்களையும் இழு த்தது! சரு! சரு! மிகநன்று!! இவையறிந்தே வ்வோ நியதிசுவாமிகள் இவர்களை மறுக்கத்தொடங்கி னார்கள். இதைத்தான் போலும் "செசெசோவாக அடக் கியிருந்த யன்னார்தப்பக அபிப்பிராயமான நியதி த்வேஷ" என்று ஞாபகமூட்ட நியதி சிஷ்ய நியதி?

Koviloor Digital Library

கூறியது. தில்லைவாழந்தணர்கள் மகாசைவரென்று எத்தப்புராணத்திற் கூறியிருக்கின்றதோ? மகாசைவராகில் தாந்திரிக தீக்ஷைபெறவேண்டுமே? அப்படி அவர்கள் பெற்றுவருவதாகவாவது பெற்றதாகவாவது இவரேனும் ஞானாமிர்த வைதிக சைவரேனும் நிரூபிப்பார்களா? அப்படிப்பெறாத விடத்து இவர்களை மகாசைவரென்பதெப்படி? உமாபதி சிவாசாரியர் மெய்கண்ட சந்தானத்தில் தீக்ஷை பெற்றதாக ஞானாமிர்தத்திற் பரசமய கோளரியாரெழுதியமையால், அம்மெய்கண்ட சந்தானத்தர்களாகிய திருவாவடுதுறையாதீனத்துச் சுவாமிகளுக்குத் தீக்ஷிதசுவாமிகள் சிஷ்யர்களென்றும் அவர்களிடத்தே இவர்கள் தீக்ஷை பெறுபவர்களென்றுங்கூற இவர்கள் வருவார்கள்போலும்! இவர்கள் இப்படி வருவார்களென்றே வியாயமூசலம் தயாராயிருக்கின்றதென்றோ?—அந்தச்சிஷ்யர். தில்லைவாழந்தணரை மிகப்புகழ்வார் போன்று இப்படியாக்கிய ஞானாமிர்த வைதிகசைவரும் ரு-ராயகரும் ஞானாமிர்தப்பரசமய கோளரியும் இந்தத்தந்திரங்களை எங்கே கற்றார்களோ. ஆஹா! இவர் போன்ற சமர்த்தரை யாம் எங்குங் கண்டிலம்! இவர் தில்லைவாழந்தணர்கள் மகாசைவரென்பதில் அணுத்துணைப்பிரமாணமேனும் காட்டவல்லாரா! இதற்குத்தான்போலும், வைதிக சைவரென்று ஓர் புது நாமம் அவர்களுக்குங் கற்பிக்கத்தொடங்கினார்கள். நேரே மகாசைவரென்றால் ஒத்துக்கொள்ளார்கள்; மெல்ல வைதிக சைவரென்றால வைதிகச்சொல்லைக்கண்டு மயங்கி ஒத்துக்கொள்வார்கள்; பின் மகாசைவராக்கிவிடலாம்; பின் தீக்ஷைபெறவும் அழைக்கலாமென்று இப்படி எண்ணினார்கள் போலும்! தீக்ஷிதசுவாமிகள் வேளாளரை வணங்குவதற்குச் சாக்ஷி தில்லைவாழந்தணராகிய உமாபதிசிவாசாரியர் வேளாளராகிய சேக்கிழாரைத் தோத்திரம் பண்ணியதும், வேளாளராகிய மெய்கண்டருக்குச் சிஷ்யரானதுமே யென்று ஞானாமிர்தப் பரசமய கோளரி கூறியதும் இன்னும விபரீத எண்ணங்களை மனத்தடைத்தே போலும்! இவைகளை யெலலாங் கேட்ட தீக்ஷிதசுவாமிகளின் மனம் புண்படாமல் என்படும். இவர்கள் வஞ்சகம் இவர்களுக்கே கேடாய் முடியுமன்றித் தீக்ஷிதசுவாமிகள்பாற் கிட்டவுமாகாது. தீக்ஷிதசுவாமிகள் மகாசைவரென்பதற்கு ஓர் பிரமாணமுங்காட்டாது தம்வாயினால்வதியேயுரைக்கும் உரைநல்லோர் ஒப்பத்தக்கதன்றென்க. இனி முற்கூறியபடி தீக்ஷிதசுவாமிகள் வைதிக சிரேஷ்டர்களே யென்பதை அவர்களேவெளிப்படுத்தலால், அதுபற்றியாம் பிரயாசைப்படவேண்டா. ஆயினும் மற்றுள்ள அறிஞர்களும் அதனை ஓர்ந்துய்யும் வண்ணம் அவர்கள் வைதிகர்களே யென்பதற்கு வேண்டியபிரமாணங்கள் காட்டுவாம்.

க. ஆதிசைவர் மகாசைவர்களாகிய தாந்திரிகர்கள் தந்திர தீக்ஷை பெறுபவர்கள். இவர்கள் அதுபெற ஒருப்படமாட்டார்கள்.

உ. அவர்கள் வேதவேள்வியைநிந்தனைசெய்பவர்கள். இவர்கள் வேதத்திலே நுதிக்கப்பட்ட அவ்வேள்வியை முழு விருப்போடு செய்து அதனாலேயே "கற்றாங்கெரியோம்பிக் கலியைவாராமே செற்றார்" என்றும், "பறப்பைப்படுத்தெங்குமபசுவேட்டெரியோம்பும்சிறப்பர்" என்றும்" நிகழ் வேள்விபாவுநெதிபலசெய்யும் பானமையராய் மேன்மையராம் என்றும், "திகழ்முனிவர் மூவாயிரவரை முதுவேள்விக்கென்றன்றயன் வேண்டிக் கொண்டான்" எனறும்,, மூவாயிர மாமுனிவோர் முப்பனூர், நாவாதமகந்தனிலுண்டு பொருத, தேவாடல் பணிந்தருள் சேர்கரத், தோவாதகவிப்பினரும்பரெலாம்" என்றும், "மூதணர்மறையோர் வேள்விப்புகையண்ட முகடின்றீமிவெழுவடவரைபோற்றோனறும்" என்றும், "முடியாமுத்தீவேள்வி மூவாயிரவர்" என்றும், 'ஓவாமுத்தீயஞ்சுவேள்வியாறங்க நான்மறையோர், ஆவே படுப்பார்சுருளாராகுதி வேட்டேர்வார், மூவாயிரவர்' என்றும், 'வேதநான்முறைவழுவாமே நிலம், வேள்வியாலெழிற்புனை மூவாயிர-மேன்மை வேதியர்' என்றும் இன்னும் பலவாறும் புகழப்படூஉம் பெருங்கீர்த்திபெற்றவர்கள்.

௩. அவர்கள் தாந்திரிக ஒழுக்கம்பெறுபவர்கள். இவர்கள் வைதிக ஒழுக்கம் பெறுபவர்கள். இதற்கு வேறு பிரமாணங்கள் சம்பாதிக்க அவ்வளவேண்டுவதில்லை. மேற்காட்டியவைதிகாசாரங்களை அவர்கள் இன்றும் அநுஷ்டித்து வருதலுமே தங்கள் வாயினால் தங்களுக்கு என்றும வைதிக ஒழுக்கமே உரியதென்று அவர்கள் கூறுதலுமே போதியதாம். தாந்திரிக ஒழுக்கங்களை எட்டுணையும் இவர்கள் கொள்பவர்களல்லர்.

ச. ஆதிசைவ மகாசைவர்கள் சித்தாந்த சைவம் கொள்பவர்கள். தில்லைவாழந்தணர்கள் வேதாந்தமுடிபாகிய அத்வைத சித்தாந்திகள்.

இன்னும இவர்களுக்கும் அவர்களுக்கும் பலவித்தியாசங்களிருக்கின்றன. அப்படியிருக்கச் ரு-ராயகரும் ஞானாமிர்தகாரரும் இவர்களிருவரையும் ஒன்றுக்க நினைத்தல் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடநினைத்தல் போலாம்.

மேல அவர் தில்லைவாழந்தணர்களை அத்வைத சித்தாந்திகளன்றெனறும், தாந்திரிகர்கள் கொள்ளும சித்தாந்தசைவரெனறும் கூறினார். தில்லைவாழந்தணர்கள் தாங்களே தங்களை அத்வைதிகளென்றும் பொழுது அதை இல்லையென்று இவர் தம்மட்டில் கூறிச்சாதித்துக்

கொள்ளலாமே யன்றி, அது பிரயோசன முள்ளவாதமாகாது. இப்படி 'தில்லைவாழ்ந்தணர் சங்கராசாரியர் கொண்ட மதமாகிய அத்வைத சித்தாந்திகள்' என்று எங்குமிருப்பதை யறிந்து, அது பெருவஞ்சகமென்றும் இன்னும் பலவிதமாக எழுதுகின்றார். சங்கராசாரியர் கொண்ட மதத்தையே தாங்கள் கொண்டிருப்பதாக அவர்களே கூறுகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு யாதும் குறைவில்லை. சங்கராசாரியர் கொண்ட அத்வைத சித்தாந்தத்தைத் தில்லைவாழ்ந்தணர்கள் கொள்பவர்களென்பதற்குப் பிரமாணமென்ன வென்கிறார். அவர்கள் கூறிய வுத்தரங்கொள்வதே அதற்குப் பெரும் பிரமாணமாக வேறொரு பிரமாணம் தேடி யலைவதென்னகொ? கும்பகோண மடாதிபதி யொருவருக்கும் தில்லைவாழ்ந்தணர்களுக்கும் சேர்ந்தமுறைக்கொண்டதை யெடுத்துக் காட்டி இதனால் அவர்கள் சங்கர்க்குடன்பாடான மதத்தைக்கொள்ளாரென்கின்றார். அந்த வழக்கு எது பற்றி நடந்ததென்று அதன் உண்மை கண்ட தில்லைவாழ்ந்தணர்களிடத்திலேயே கேட்டுத்தெளிந்து கொள்வாராகில், அதன் மேல் இவர் இவ்வாறு கூறத்துணியார். அதற்கு விடை நாம் கூற வேண்டியதும் ஒன்றுமில்லை.

இனி அவர் தில்லைவாழ்ந்தணர் சிதம்பராலயத்திலே சிவாகம முறைப்படிப் பூசைவழிபாடு முதலியன செய்கின்றார்களென்றார். ஞானசித்தப் பரமய மெனவியாரும் இவர் போலவே கூறி இவ்வாதத்திற்கிது முனைந்து பல பிரமாணங்கொண்டு அதனை நாட்டியேயென்றுங்கூறினார். ஆனால் நாம் எடுத்துக்கொண்ட வாதத்துக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமையால், இதுபற்றி நாம் வாதப்போரில் முற்பட வேண்டியதில்லை.

இதனாலும் கூறிப்போந்தவாற்றால் தில்லைவாழ்ந்தணர் சிவமதாசாரரென்பது கூடாதென்றும், அவர்கள் அத்வைத சித்தாந்தம் பேணும் வைதிகர்களே யென்றும் உச்சிதமாய் மேலே காட்டப்பட்டதென்க.

அப்பால் அவர் சங்கராசாரிய குருத்துவம் பல பேசுகின்றார். அவைகளையும் நிராகரணம் செய்வாம்.

வைதிக சைவரென்பவர் சங்கராசாரியரை ஜகத்குருவென்பது பொருந்தாதென்றார். அவர் திருவவதாரஞ்செய்த அன்றுமுதல் இன்று வரையும் யாவராலும் ஜகத்குருவென்று வழங்கப்பட்டு வரும் அப்பெயரைப் பெருக்காமெனை மதிக்காது இவர் யாவரென நாம் கடாவின், அது இவரால் முடியாத காரியமென்றேனும். ஞானசாகரரும் அந்த வாதத்தைத்தாம் விட்டேயின்றி குருத்துவம் பல புகல்கின்றார். இவர் இருவரும் இவ்வாறு தம் வீட்டிலிருந்து பேசிக்கொள்ளலாமே யன்றி இவ்வாதத்தால் ஆவதொன்றுமில்லையாம். இவர் இவ்வாறு தம் வீட்டிலிருந்து பேசிக்கொள்ளுமதனால் அவர்களது ஜகத்குருத்துவம் அணுவளவும் அசையமாட்டாது. இவர்கள் வாதத்தைக்கேட்ட அறிவுடையோர் இஃதென்னே பெரும் பித்தம் என்று நகையாடுதற்கே இடமாகின்றது. இன்னும் பெரியாரைப் பிழைத்த பெரும்பழி இவர் தலைமேல் வந்து சுமத்தலே முடிக்கலாமாம். இவர்கள் குருத்துவம் ஒன்றிற்கே பேசிக்கைக்கும் ஆளாகின்றார்கள். சங்கரபகவத்பாதஜகத்குருநாதன் திருமகிமைகளை அறியா தம்தோஷத்தினாலேயே இவர்கள் இப்படிப்பெரும்பழி சுமக்க ஏதுவாகுறார்கள். அவர் பெருமையை அறியவாராத தன்மையினாலேயே அவரை ஜகத்குருவென்னலாமா என்றார்கள். சிவபெருமானது திரு அவதாரமாய் விளங்கிய அவரை அதுபட்டோமோ சொல்லத்தகும். பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே அறுபத்துமூன்று நாயன்மார் பெருமைசொல்வது போல நம் சங்கர குருமூர்த்தியின் பெருமை குறிக்கப்பட்டிருக்கிறது. அதில் பரமேஸ்வரன் அம்பிகைக்குப்பார்த்துக் கலியுகத்திலே பாதகண்டத்திலே கேரளதேசத்திலே சங்கராகத்தாம் திருவவதாரஞ் செய்து புத்தமுதலிய புறச்சமயங்களை யொழித்து அத்வைத மதத்தை விளக்கப் போவதாய்த் திருவாய்மலர்ந்தருளிய திருவாக்கினால் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் ஈஸ்வராவதாரமூர்த்தியென்பது பிரகாசமாகின்றது. அப்படி ஈஸ்வர அவதாரமாகிய அவரை நிந்தித்தால் அது சிவநிந்தனையன்றோ? இப்படி இவர்கள் சிவநிந்தனைசெய்வது எவ்வளவு அதிபாதகமாம். பரமேஸ்வர அவதார புருஷர் சங்கராசாரிய சுவாமிகளென்பதற்கு அதுமாத்திரமோ? மார்க்கண்டேய புராணத்திலே ஞானோபதேச ஆசாரியர்களாய் யுகங்கடோறும் ஒவ்வொருவராக நான்கு யுகங்கட்கும் நால்வர் ஆசாரியர்கள் அவதாரஞ் செய்வார்களென்றும், அவருள் கலியுகத்திலே ஸ்ரீசங்கர முனிவர் பரமேஸ்வர அவதாரமாய் உதிப்பரென்றும் கூறப்பட்டிருக்கின்றது. அது மாத்திரமா! சிவபுராணத்திலே லோகாநுக்கிரகத்தின் பொருட்டுப் பரமேஸ்வரன் நூறு அவதாரம் பூமியில் செய்வாரென்றும், அச்சிவாவதாரங்களுள் சங்கராவதாரம் ஒன்றென்றுங் கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் மகாபுராணங்களாலும் பரமேதிகாசமாகிய சிவரகசியத்தாலும் பரமேஸ்வரனே சங்கராசாரிய ஜகத்குருவாக அவதாரஞ்செய்ததாகக் கூறியிருக்க, அவரது பெருமையை அறியாது நாஸ்திக்கிய இவர்கள் அதிபாதகத்துக்கு இலக்காகியது பூர்வ வினைப்பயனேயாம். பரமேஸ்வர அமிசமாயுள்ள அப்பெருமானை ஜகத்குருவென்று சொல்வதற்கு யாது தடையுளது. வைதிகசைவர் தத்துவப்பிர

பஞ்சமலத்தர்ருமவர் குரவரோவென்றுமுன்பு வினவினுர். இம்முறையில் அவரை அவ்வாறு சொல்லுதற்குத் தடையில்லை. இனி அவர் எந்த அவதாரத்தாராலும் எங்கள் சைவ சமயங்கொள்ளாமையால் அவரை நாம் புகழ்ந்திட ஒருப்படோமெனின், இந்த முறையாவிடத்தும் வைக்கவேண்டும். பெரிய புராணத்திலே கூறப்படுமோ நாயன்மார்கள் யாவரும் சித்தாந்த சைவரா? திருஞானசம்பந்தர், அப்பூதியடிகள், சண்டேசுரநாயனுர், உருத்திரபசுபதியார், குங்குலியக்கலயர், திருநீலநக்கர், நமிநந்தியடிகள், சோமாசி மாறர், சிறப்புலியார், கணநாதர், பூசலார், முருகநாயனுர், சிறுத்தொண்டர் முதலானவர்கள் யாவர்? வைதிகப்பிராமணர்களேயன்றே. அவர்களை மாத்திரம் சைவசித்தாந்திகள் துதிப்பதெப்படி? அவர்களுக்குத் தாந்திரிக தீக்ஷைவைக்க இனி முன்வந்தாலும் வருவர். சமயம் சேர்ந்துழி அவர்களது வைதிகப் பெருமையை விளக்காதிருக்கின்றனம். இனி மேற்காட்டிய பிரமாணங்களால் ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரிய சுவாமிகள் மகிமை மிகப்பெரிதும் போற்றப்படுவதாய், அவரை ஜகத்குருவென்றுவது இன்னும் மிகப்பெரியதொன்றுவது கூறுவதை எவரும் மறுக்கவியலாதென்று காட்டப்படுகின்றது. இனிச் சிவதீக்ஷையை விரதமாகக்கொண்ட வைணவச்சார்புள்ளவர்களும், சிவசம்பந்தமுடையவர்களும் நாற்ற முன்வருவரேயன்றித், தாமசமற்ற சிவபக்தர்கள் அவரை நிந்திக்கவாக்காரணமில்லை. அவர் பெருமை கேட்டேனு மதியாதனுனுமிர்த வைதிக சைவரும ரு, நாயகரும தம் அறியாமையை விளக்கி ஏதேதோ குளறிவழிந்தார்கள். அவர்கள் இப்பொழுதேனும் அவர் பெருமையை ஓர்ந்து தாமியான மின்றியடங்கக்கடவர்.

இனிச் சூ- நாயகர் அங்கிலேயாதிபோர் ஒத்துவழங்குவதென்றே யென்றுர். சங்கரமடத்தார்க்கு அவர்கள் எழுதும் நிருபங்களிலும் மற்று விவகாரங்களிலும் ஜகத்குருவென்றே யெழுதுவதையும், அவர்கள் வெளியாத்திரை போகுங்காலத்து அவர்களுக்கு அவ்வவ்வூர்களிலே மரியாதைகள் செய்யுங்காலத்தும் ஜகத்குருவென்றே வழங்குவதை நண்பர்கேட்டேனுமறியார் போலும். மகமதியராசாங்கத்திலும் அவ்வாறே நடந்ததென்க. நாஸ்திகர்கள் புத்தர்களும் பலர் அவ்வாறே அவர் பெயரை வழங்கியதைச் சிவதேச சரித்திரமுதலியவைகளிற் கண்டு தெளியக்கடவாராக. ஆதி சங்கராசாரியர்க்குப் பல்லக்கு முதலியவைகளும் விருதுகளுங்கிடையாதென்றுர். காசி மகாராஜன் அவரைப்பல்லக்கிலேற்றிப் பல விருதுகளோடு தன்பட்டணத்தே கொண்டு வந்து வழிபாடுசெய்ததும் பிறவும் மாதவீயமாதிய சித்திவிலாச சர்வஜ்ஞ சுவாமிகள் எழுதிய சரித்திரத்திலும் சங்கரவிஜயத்திலுங் கண்டு தெளியக்கடவர். கும்பகோண மடாதிபதிகளைப்பற்றிச் சிறிது எழுதினுர். அவர்கள் தம்மை ஜகத்குருவென்று ஒருபோதும சொல்வதில்லை. மற்றச்சங்கராசாரிய மடத்தாரொவ்வொருவரும நானே பெரியவன் நானே பெரியவனென்ன, கும்பகோணத்தார் மற்றச் சங்கராசாரிய மடத்தார்களைத்தங்கள் சிஷ்யர்களென்று வழக்கிட்டுவருவதாகக்கூறினுர். அந்த வழக்கு இவரிடத்தில் தான் வந்திருக்கிறது போலும். சங்கராசாரியாது சிஷ்யர்களின் பரம்பரையிலுள்ளது நான்கு மடம். அவர்கள் ஒருவர் மடவீதியிலே மற்றொருவர் தம் விருதுகளோடு செல்ல யாதுந்தடையில்லை. தெருவழியே போவதுமாத்திரமா? ஒருவர் மடத்தில் தம்விருதோடு மற்றொருவர் சென்றிறங்கியிருந்து செல்வர். அவர்கள் அதுவிஷயத்தில்ஒருவரோடொருவர்மாறுவதில்லை. அப்படியிருக்க, நாயகர் சங்கரமடத்தார்கள் ஒவ்வொருவரும் ஒருவர் மடத்துவழி ஒருவர் விருதோடு போகாரென்றது அறியாமையேயாம். சிருங்கேரி சங்கராசாரியர் எங்கேயோ பரிபவப்பட்டதாகக்கூறினுர். எந்தவருஷம் எந்தமாசம் எந்ததேதியில் அது நிகழ்ந்ததென்று சொல்வாராயின் பின் அதுபற்றி விசாரிப்போம். பெருமான் கோவில்களிலே சடகோபம் வைக்க ஏற்றுக்கொள்கின்றுரென்றுர். ஸ்ரீநாராயணமூர்த்தியினது திருவடியாய அதனை அவர்கள் சிரமேலேற்றலால், அவர்கள் ஜகத்குருத்துவத்துக்கு வந்த குறையென்னே? ராஜாதிராஜகுருவென்றால் எந்தராஜனுக்குக் குருவாயிருந்தனர் சங்கரரென்றுர். இத்தேசத்தின் தலைநகரமாகிய காஷ்மீரத்து மகாராஜனுகிய சுதன்வா மகாராஜன் காசிமகாராஜா விக்கிரமாதித்த மகாராஜா முதலாய்ப்பல ராஜாக்கள் அவருக்குச்சிஷ்யராயிருந்ததையும் காஷ்மீர மகாராஜன் திக்விஜயகாலத்துக்கூடவேயிருந்து சுற்றியதுமாகிய பலவைபவங்களைச் சங்கரவிஜயத்தேகண்டு தெளியக்கடவர். சங்கராசாரியர் தாமே பிரமமென்று சொல்லித்திரிந்ததாகக் கூறினுர். சமுத்திரத்திற்றோன்றிய அலைக்குமிழிபோலப்பிரமத்தில் அந்த அமிசமாக உள்ளவர்கள் ஜீவர்களென்று கூறியவரேயன்றி ஜீவர்களே பிரமங்கள் என்று கூறுவது சங்கரர் கொள்கையன்று; சங்கரர் தானேபிரமமென்று கூறியதாய் ஓர் வசனமேனும் எடுத்துக்காட்டுவாரா? அவர் கூறிய உ௧- பாஷ்யங்களிலும் காணுத அதை இவர் எங்கே கண்டாரோ? தம்மைத்தவிரக் கடவுளில்லையென்பவர்கள் புத்தர்கள். அவ்வாதத்தை மறுத்த சங்கரரை அவ்வாறு கூறினரென்றல் அறியாமையே

Koviloor Digital Library

யாம். இன்னும் அவருக்கு விருதுகள் கொடுத்தவர்களு ம [illegible] பட்டங்களும் கொடுத்தவர்கள் இன்னுமென் ற அவைகளைச்சார்ந்த சாசனவாசகங்களையெல்லாம் [illegible] காட்டவேணுமென்றார். சங்கராசாரிய மடத்தார் கள் அவைகளை விவரமாகக்குறித்துப் புத்தகமாக அச்சி ட்டிருப்பதால் அந்தமடத்தாருக்கு எழுதி அப்புஸ்தகத் தருவித்து வாசித் தறிந்துகொள்வாராக. இன்னும் அவரது அளவிறந்த பெருமைகளைச் சங்கரவிஜயம் [illegible] முதலியவைகளால் தெரிந்துகொள்வாராக. ஆதி சைவர்களைக்குறித்து அவர் பல எழுதினார். சைவசமய த்திலே கூறிய ஆதிசைவர் பரம்பரை இப்பொழுது எங் கும் [illegible] ஆகையால் அவர்களைப்பற்றிய விவாதத்தி ல் இப்பொழுது நாம் முற்பட்டுநின்று பேச அவசியமி ல்லை. அவ்வாறு ஆதிசைவர் பரம்பரை உலகத்தில் இப் பொழுது இல்லையென்பதை மெய்கண்டவிஷயமாய் விளக்கி த்தகாட்டுகின்றோம்.

இக்காலத்திலே பலவிடங்களிற் சங்கராசாரியசுவா மிகளது பெருமையையறியாத பாவத்தாரும் அவருடை ய [illegible] இல்லையென அவரைப்பற்றிய நூல்களைக் கொ [illegible] கேட்டறிந்து தெரியாமையாலும் [illegible] பல நூல்களை எழுதித் தருக்குகின்றார். வாதமி டத்தொடங்கினால் [illegible] விஷயங்களைப் பேசவே ண்டுமேயொழிய வீண்தூஷணை பேச அவசியமில்லை. அவ்வாறிருக்கப் பெரியோர்களைப்பற்றி புன்மொழிகள் கூறி [illegible] இவருக்கு [illegible] யாரோ [illegible] வைத்து [illegible] பேச ஆரம்பிப்பது அவர் [illegible]. இத்தூஷணைகளை மறந்து விதிப்படி முன்னேறுவர் இவருக்குச் சங்கபுத்தி படிப்பித்தார். அ [illegible] அவைகளைத்தை மறந்து இப்பொழுது பழமைபடை யை விடாக் குரங்கின்றார். [illegible] அதற்கும் வ [illegible]. சங்கர [illegible] மென்று புராணங்கள் [illegible] நாம் [illegible] சிவதூஷணஞ் செய்த அவர்க்கு அதன்பயனைக்கொடுப்பது அவர் கட வுளென்று அவரிடத்து ஒப்பித்துவிடுதலே நம்மோர் செய்யத்தக்கதாம்.

சங்கராசாரிய சுவாமிகள் விஷயமாய் மேற்காட்டிய புராணங்கள் கூறும் பெருமைகளை இன்னும் தெரியாமல் [illegible] இவ்வகை பேசியவர்களுக்கு அறுக்க [illegible]. [illegible] ஒப்பாத அநு [illegible] அவர்களுக்கு [illegible] ல்லினும் பயனில்லையாம். அவரைக்கொல்லவர்க்குநினை த்தவரென்று ஒதுக்குதலே அறிவுடையார் கடமையாம.

ஓர் நாவலர்.

"அருவா நிக்கிரகம."

ஜூ, யாழ்ப்பாணத்திலிருந்துவெளிவரும் "இந்துசாத னப்பத்திரிகை" எதோ மிகவும் அருவாவேசங்கொண்டு "சேதுபதிமகாராஜா அவர்கள் சோறு" என்று தொட ங்கிய பல நிந்தாவசனங்களால் ப்ரம்மவித்தியாவையும் ஞானசித்தத்தையும் முறையே ஆகமநிந்தைவேதநிந்தை களைச்செய்வதாய் எழுதப்பட்ட விஷயத்துடன் வெளி வந்தது. இதுவரையிற் பிரமவித்தியாவில் எழுதப்படுவ தெல்லாம் உலக கதையல்லாத வைதிக விஷயமேயாதல் பற்றி அதில ஒருவாக்கியமாவது ஆகமங்களைத் தூஷித் ததாகப் படிப்பவர் கண்டறியாதிருக்கவும், வேதாகமங்க ளுள் வேதம் முதனூலும் ஆகமம் வழிநூலும் ஆமெனவும், அவை யிரண்டும் முதல்வன் திருவாக்கே எனவும், அவற்றில் வைதிகர் ஆகமங்களையும் ஆகமிகர்கள் வைதி கத்தையும்அவாய்நிலையுள்ளவிடம் கொள்ளலாமெனவும, வேதங்களுடன் முரணடையா வாகமவசனங்கள் பிரமா ணமே எனவும், மற்று வேதங்கள் சிவாத்துவித சித்தா ந்தத்திற்றான் நிலைபெற்றனவெனவும், அது லோககுரு ஸ்வாமிகளாதிபோத் சம்மத மெனவும், ஆகமங்களும் அதே பொருள்கொண்டு அருவ பாசிவபாசாம்யம் என் னும் கொண்டு, அதற்கிணங்க விஷயங்களை எழுதித்தன் திருமேனியிற்கொடுத்த ஆறுவருடங்களாகவெளிபுலாவ, அதை ஆகமதூஷணமெனக் குறித்துக் காரணமின்றித் தூஷித்தது எந்தப் பாசிவ வேதாகமப்பிரமாணத் துவே ஷிகளின் அன்னப்பிரபாவத்தாலோ அறியோம். எமது சேதுபதி மகாராஜன் ஆதரவுபெற்ற பத்திரிகை எக்கால மும் தர்மசேது கடவாதென்பதை இனியேனும் அப்பத் திராதிபர் மனத்திலிருத்தி மேலும் தோன்றியவாறு அரு வாமொழிகள் மொழியாதொழிவாராக.

பத்திரிகையைப் படிப்பவரில் ஒருவன்.

Chidambaram —Printed and published for the Proprietor at the "Brahmavidya Press" No. 38 Senkaleeneer pilliarkoil street.

Koviloor Digital Library

[illegible]

NO 11

[illegible]

ஸ்ரீ [illegible]

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமந் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையை

ஆதரித்து வருவதாகக்கொடுத்த திருபத்தின் நகல்.

ஸ்ரீராமஜயம்.

[illegible] ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ-ஆம் முதல் நாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த விதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

ராமநாதபுரம். [illegible] முகாம்.

(ஒப்பம்) தங்கள்,
[illegible]

Koviloor Digital Library

[illegible]

சோதிடம்

தொடர்பு.

இது முழுதும் கேட்காதொழிந்த விவாதம். என்சொல்வோம்! "ஸாயங்காலத்தில் மூன்று முகூர்த்தமில்லாவிடில் செய்வதுயாதெனில், கோபிலர் கூறுகிறார்: "[illegible]" (இதன் பொருள்: முதற்றினத்தில் ஸாயங்காலத்தில் மும்முகூர்த்தங்களும் இல்லாவிடில் அடுத்த தினம் குதபகால ஸம்பந்தம் உளதாகையால அதையே கிரஹிக்க வேண்டியதென்பது) அங்ஙனம் காத ஸ்மிருதிவசனமும் இவ்விஷயத்தில் அநுகூலமாகக் காணப்படுகிறது. இங்ஙனமிருக்க, இவைகளையெல்லாம் தமக்கநுகூலமாக ஆளையிட்டுப்பொருள் படுத்தும் அறிஞர் மயிபாய ஸமது சாஸ்திரிகளை அடியிற்கண்ட வசனங்களின் பொருள்களை விரித்தெழுதவேண்டுகிறோம். அவ்வசனங்களாவன:—

[illegible] "என்பதும்' [illegible]"என்பதுமே"

இனிச்சோதிடத்துக்கும் இவர் தொட்ட விவாதத்திற்கும் ஏதும் ஸம்பந்தமிராத வசனங்களை எழுதி ஏட்டை நிரப்பும் ஸமது சாமிநாதசாஸ்திரிகளுக்கு இனி ஒருசமயம் ப்ரமத்தியமும் பமத்தியமும ஒன்றென ஸ்தாபிக்கவேண்டுமேயாம்முன்வரில் "பூஷாணுர" என்னும்விபரகாண குத்திரமிருத்தலால் அதுபொருந்தாதென வெழுதும் சித்தாந்தத்துக்கு யாம் சொல்லும் ஸமாதானம் ஏதுவது? இங்கு குறைநிறைத்தேயன்றி குணஞ்சிறிதுமில்லை.

இனிப்பூமி சுழல்வதைப்பற்றி யாம் இங்கு ஏதும் எழுதுகிறோமில்லை. அவ்விவாதம் பஞ்சாங்கங்களின் உண்மையறிவதற்கு எவ்வாற்றானும் உபயோகப்படாது நிற்பது. ஒருசமயம் நிரூபித்தாலும் அது மிக மேலானதும் கணிதருக்குமம் அறியாதவிவர்க்குப் புத்திபிற்படாததாயுமிருக்குமாதலால் அதை விரிவஞ்சி விட்டோம்.

எதோ பிரகிருத ஸம்பந்தமில்லாத மிமாஞ்சாவாக்கியங்களால் கணித சோதிடங்களைப் புரட்டிப் பொருள்செய்யவெழுந்த மன்னவர் ஸமது சாஸ்திரியார் தந்திரம் அறிஞர்க்குப் பெருநகை விளைக்காதொழியுமோ? ஒழியாது.

[illegible]

[illegible]

[illegible]

சதுர்ஹோத்ரமுறைய பத்திராதிபதி! உமயிடம் யாம் செய்யும் விண்ணப்பம் ஒன்றுண்டு. இதுபோன்ற ஸம்விஷயங்களை விசாரித்துண்மையைப் பலரும் அறியுமாறு உமது பத்திரிகையில் வெளியிடவேண்டும் என்பதே. இவ்விதம் அஞ்ஞானம் நிறைந்த இச்சுவாமிநாதசாஸ்திரிகள் சித்தத்தை அறிவிற்சிறந்த வத்தனர்பன்னவரான மகாமஹோபாத்தியாயாதிகளும் ஒப்பினரென ஓர் வதந்திபுலாவுகின்றது. அது எவ்வளவுவரை சத்தியம் என்பதையட்டுல் அடுத்தமுறைப் பத்திரிகையிற் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அநேகர் பெரியோர் பெயரை முன்னிட்டு அறிவிலிகளை மயக்குவது வழக்கம். இவ்விஷயம் உபேக்ஷிக்கத்தக்கதன்று. நீவிர் லோகோபகாரார்த்தமாய் முன்வந்து வருக இவ்விஷயத்தை சன்காரமாயவேண்டும். அந்தோ! நமது தேசமாகிய ஆரியர்க்கு வந்த குறைவை யாதெனப்போம். நம்மவருள் ஆஸ்திகர் எவருமில்லையா? வேதோக்த கர்மங்களை அவர் அனுஷ்டிக்காதிருக்கின்றனரா? அனுஷ்டானத்தை விடுவதும் அகாலத்தில் அனுஷ்டிப்பதும் சமமேயாதலால் அவ்வனுஷ்டாதாக்கள் இதை அறியவேண்டியதவசியம் இல்லையா? ஆரிய ஆரியர்காள்! அருபாவிண்ட விதண்டைகளை ஒழித்திடுங்கள்! உதாசீனம் செய்யாதீர்கள்! உண்மை நிலைகளைத் தீர விசாரியுங்கள்! பெரியோர் புகழை வெளியிடுங்கள்! பாஸ்கரர் வராகமிஹிரர் முதலிய ஆசிரியர் கண்டவழி கண்டு கர்மங்களை அனுஷ்டியுங்கள்! சத்காலங்களிற் கர்மங்களை அனுஷ்டியுங்கள்! நற்புகழ் பெற்றுய்யுங்கள்! இவையெல்லாம் சீக்கிரத்திற் கைகூடிச் சிறைக்குமிடக்கும் சித்தர்கள் நல்வழி சேரவேண்டி ஸர்வஜ்ஞனைப் பிரார்த்திக்கின்றோம்.

(மொழிபெயர்ப்பு.) இங்ஙனம்:

A. S. ராமசேஷய்யர் B. A.

கைம்பெண்களுக்கு மறுமணம் அவைதிகமென்பது.

ஐயா! சிறுவயதிற்றானே மணவாளனை யிழந்த பெண்கள் காதல் மிகுந்து விதிகடந்து கற்பிழந்து திரிவதால் அவர்களை ஓர் ஆடவர் வசமாக்கிடின் அவரிடமிருந்து மனுகாதேனச் சிலர் சொல்லுகின்றனர். இதைப்பற்றிச் சிறிது விசாரிப்போம்.

இவ்வுலகத்திற் கைம்பெண்களெவரும் கற்பிழந்தவரெனச் சொல்லத்துணியார். யாமெங்குமக்ஙனங் கண்டதுமில்லை. அந்தோ! இப்பழிச்சொற்கேளச்செய்தோம். எத்தனையோ கைம்பெண்கள் விதிவழுவாது நன்னெறியிற்

[illegible]

கன்னி மங்கையிடமுந் தமிசெனும்? பெயபான்மையிற் பெண்ணும் குற்றத்தைய கற்ற அனையதிக விதவாவிவாகத் திற்கு இடங்கொடுத்தல் நன்றோ? இனி மேல் எடுத்தோ தும் பழிச்சொற்களால் உலகத்துள்ள ஏனைய பெண்களுங் கற்பிறந்த கைம்பெண்களாவரோ? உலகத்தில் ஓர் புரு டன் இறந்தபின் தொரிதுள்ளமறுபின் அத்தேசத்தவரும் அவ்வினத்தவரும் கள்ளரென்னலாமோ? இக்கள்ளிக ளைக் கண்டிக்கக் கடவுளில்லையோ? சொகுக்களுக்குப் பயந்து குடிபோவதுண்டோ? "பெண்களுக்கு கல்லுரு வாகியபருவம் எதும் வேண்டுவதில்லை; காதலுக்குக் கவலையென ஒருவன் கிடைத்தாற் போதும்" என மனு வாக்கியப் பிரகாரம் ஆடவரானவிலை பெண்களுக்கெ யலையாயின், இவ்வியல் கைம்பெண்களைமட்டும் இலக்கா க்கி மற்றயவரை யொழித்திட எவ்வாற்றானும் இயையாது. மனையாளிறந்த மங்கை மற்றவனைத் தேடுவதில்லை யோ! அவர்பொருட்டு இவ்விவாகத்தினை செய்வாரோ? எதுபாகிப்பார்! எவனே பலருக்களித்து அவன் காதல் மாற்றுவரோ? "எக்காலமும் பெண்களைப் பாதந்திரராக் கவேண்டும். இளம்பருவத்திற் பெற்றோரும், மங்கைப் பருவத்திற் கணவனும், பூர்ணப்பருவத்து புத்திரர்களுங் காப்பாராதலின் பெண்கள் எங்கும் பாதந்திரரவர்" என் று மனு கூறியிருத்தலால் அவர்களைக் காக்கவேண்டியது புருடர் கடமைப்பாலதே. அற்றேல், தகப்பனும் பின்னைக ளுமற்ற கைம்பெண்களைக் காப்பவரேவர்? அவருக்காயி னும் மறுமணம் வேண்டாதோ வெனின், அற்றன்று; அவர்களைக் காக்க அரசாங்கமொன்றும் இருக்கிறதே? அவ குலத்தவரிடன் தன்னைத்தானே காக்கவேண்டுமே. இனி மேற்கூறிய விதிகளைக் கடந்து எப்பெண்ணேனும் நடப் பாளாயின் அவளைச் சிட்டர்கள் கோட்டியினின்று விரட்ட வேண்டுமே. எவ்வழியிலும் இம்மறுமண வாதம் மன ம்பெறாது.

இனி இம்மறுமணங்கூடாதென்பதற்குச்சில சாத்திரவி திகளெடுத்துக் காட்டுவோம்: "கைம்பெண்களுக்கு மற்றவி வாகிடல். [illegible] மலர்சூடல், அபரணந்தரித்தல் கூடாது. தன் புருடன், அவளைப்பெற்றவன், அவன் தக ப்பன் இம்மூவர்க்கும் திலோதக தர்ப்பணம் செய்யவே ண்டும்" என்பது பல வசனங்களிருக்க இக்காலத்தி ல் அவ்வாசிரியர் அருமொழிகளைச்சிறிது முற்போக்கா க நண்பர் சில ரெயவர்களைக்கூடிக் கைம்பெண்களையு நம் [illegible] பவித்திரம் தரிக்கும் இவர் கைக ளுக்குப் பொன் மோதிரம் கிட்டுவதும் வியக்கத்தக்கதே. "இக்காலத்தில் வைதிகரெவரும் அக்கினிஹோத்திரம், ஜோதிஷ்டோம முதலிய உத்தம கர்மங்களைச் செய்யாது

Koviloor Digital Library

[illegible]

அகாரியங்களை அகால ஸ்நானம் அன்னியபோஜனயா தி களைச் செய்து வருதலால் அதுபோல் யாமும் அவைதீக விதவாவிவாகத்தைக் கைக்கொண்டோம்'' என்பரேல் என்சொலுவோம். அம்மம்ம! இக்காலம் அந்தணர் நான்மறையோதியும் கன்னூற்பயின்றும் நல்வழி ஒழுகியும் வயிற்றுச் சோற்றுக்கு வழிகாணுமையின் இப்புதுப்பணப் பிரபுப்போலிகளிடம சென்று உள்ளகாலமெல்லாம் ஒழித்திடநேரிடுவதால் அவர் சத்கருமங்களைவிடச் சம்பவிக்கிறது. அவர்களுள்ளபடி அதனுல் தனக்கு நேரிடும் குற்றத்தையறிந்து அதைபொழிக்கக்கடவுளைப்பிரார்த்திக்கிறுர்கள். அவர்களுக் கன்னத்துக்கிடமாயிருப்பின் இக்குற்றமணுகாது அவர் தமக்கு நேரத கர்மலோபத்தைப்பற்றி அவ்வப்பொழுது கடவுளிடம் முறையிட்டு வருவதில் சம்சயமில்லை. இவர்க்கு அன்னமட்டில் கிடைத்தால் ஒருக்காலும் தன்கருமத்தைவிடார்.

இவ்வைதிகர் தாம் மிகுதி பொருளடைந்திருப்பரேல் ஒருக்காலும் கன்மலோபத்துக்கிடங்கொடார். அவ்விதமவர்க்குப் பொருளில்லாவிடினு மிவ்விதவகாரியங்களில் அவர் பிரவேசியார். அவர்போல் யாமுமக்கிரமத்தைச் செய்வோமெனக்கூறி இடம் பொருள் ஏவல் பொருந்திய நீவிர் இவ்வவைதிககாரியத்தைச்செய்வதுஉசிதமில்லை. இனி எவ்விதத்திலாவது இவ்விவாகத்தை முடிக்கவேண்டுமெனப் பிடிவாதங்கொண்டவுமக்கு பத்திரிகைகளில் பலவாறு எழுதுவதால் நேர்ந்த பலன்யாதுமில்லை. இவர் செய்யுமாடம்பரத்தால விதவாவிவாகம் வைதிகமென நம்பும் சிலரை நோக்குவதற்கு விரோதமான பல வேதவாக்கியங்களைவெளியிடச்சித்தமாயிருக்கிறேன், வேதவாக்கியங்களைப்பத்திரிகைகளிலவெளியிடுதல்உசிதமன்றெனச்சிலர்சொல்லுகின்றுர். இக்கலிகாலத்தில் பிரமாண வசனங்களை யொளித்துவைத்து வெளியிடாதிருந்தால் பிறர் நமது கொள்கைப்பிரமாணமற்றதெனப்பரிகசித்திடுவாராதலின் அவைகளை வெளியிட்டே தீரவேண்டியிருக்கிறது. இதுவரை அவ்வேதவாக்கியங்களை வெளியிடாதிருந்தது பெரியோரனுமதி பெருவதற்கே.

வடதேசத்தில் ஏதோ வொருபண்டிதன் விதவாவிவாகத்தை ஸ்தாபித்து ஓர் புத்தகம் எழுதி இருப்பதாகக் கேள்வி. அப்புத்தகத்தை யான் கண்டேனில்லை. ஆகையால்அதன்மேல் ஏதுஞ்சொல்லவியலவில்லை. [illegible] பிரம்மவித்தையைப் படிக்கும் எவரேனும அதை அதிவ சேல் எனக்கு ஒரு புஸ்தகம் வாங்கிபெறுப்பின் அதன்விலையைக் கொடுத்தனுப்பிவிடுவேன். அதைப்பார்த்தபிறகே எனதுதாத்பரியத்தை அதனிஷ்பமாய்ச்சொல்லுவேன். [illegible]

Koviloor Digital Library

[illegible]

இக்காலத்தே சீர்திருத்தக்காரர் எனச் சிலர் வெளிவருகிறார்கள். அவர்கள் எதைப் பரிஷ்கரித்துச் சீர்திருத்தப் போகிறார்களோ அறியேம். முதலில் அவர் செய்யும் சீர்திருத்தம் இனைறுவெட்டப் பூதம் புறப்படுவதுபோல் இவர் செய்த சீர்திருத்தம் விதவாவிவாகம் ஸ்திரீவித்தை இவை யேயன்றி வேறில்லை. இவை இந்துதேசத்தைப் பாழாக்க வந்த வாசாரங்களே. ஓ, சீர்திருத்தக்காரர்காள்! உங்களுக்கு ஏதேனும் பிரதிஷ்டாகரமான சீர்திருத்தம் செய்ய வேண்டுமானுல் இப்பொழுது நீவிர் செய்துவரும் சீர்திருத்தத்தினும் மிகவற்பச்செலவில் முடிவெய்துவதும் இம்மை மறுமை இருவகைப்பயன்களையும் தருவதுமான அனேக சீர்திருத்தங்கள் இருக்கின்றனவே பாருங்கள். வேதபாடசாலைகள் ஸம்ஸ்கிருதபாடசாலைகள் வைதிகாசாரியம் வித்துவான்களுக்குச் சம்பாவனைகள் விக்கிரகாராதனம் ஸல்லாரியாசாரானுஷ்டானம் என்பதாதிகளை நிலைநிறுத்தினுல். அதுபெருந்தருமமன்றோ? அதனுல் நீவிர் நல்லபெயர் பெறுவீர். இம்மையிலும்மறுமையிலும்சுகமுண்டு. ஈசன் அருள்பெருகும். இனியேனும் பரமேசுரன் அங்ஙனம்இவர்க்கு இரங்குவானென அவன்திருவருளை எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்

மொழிபெயர்ப்பு- திருவேங்கிடம் திருமலைசாஸ்திரி.

சங்கரநாராயணதேவஸ்தானகும்பாபிஷேகம்.

ஐய! ஆரியர்காள்! நல்வார்த்தையைக்கேளுங்கள்! பூமியிற்கைலாயம் எனத்தென்னுட்டார் வழங்கும் சங்கரநாராயண தேவஸ்தானம் என ஒரு மகாஸ்தலம்திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளதை யறியாதார்ஆரியருள்இரார். இத்திருப்பதியில் அத்துவித சித்தாந்தமே சத்தியம்எனக்காட்டுதற்பொருட்டே பகவான் ஓர் புறம் நாராயணனும் ஓர் புறம்ஸ்ரீசிவபிரான்திருவுருவமும்ஒருங்கமையப்பெற்ற திருவுருவங்கொண்டுதொண்டர்க்குஆனந்தத்தையளித்து வருகிறார். அதுமட்டோ! அந்தோ! கோமதிதேவியின் மான்மியத்தை இக்கலியிலும்என்சொல்வோம்! இக்காலத்தும் ஆஸ்திகருக்கு ஓர் பெரிய அவலம்பமாயுள்ளது இத்தேவியார் செயலே. பாருங்கள்! இத்தக்காலத்தில்ஊமைகளும் விக்கிரகாராதனம் உபயோகமில்லையென மிலேச்சமதஸ்தர் இகழ்ந்துவருகிறார்கள். இச்சமயம் ஊமைகள் பேசவும் நொண்டிகள் நடக்கவும் நோயாளிகள் ஸ்வஸ்திரவும் குருடர் கண்பெறவும் மலடி நன்மகவைப்பெற்றுய்யவும் சேர்த்தால் அதிலும் எமக்கு வேண்டியது யாதுளது! இச்சமயம் பிரத்தியக்ஷமல்லாதயாவுமபாமரர் ஒப்பாராகவே இந்த உலக ஏகமாதாவாகிய தேவியும் இவ்

Koviloor Digital Library

[illegible]

வித பிரத்தியக்ஷ ஸித்திகளைக்காட்டியே தமது மக்களை ஆளசேர்த்தது. அந்தோ! எமது நாயின் நாயகனைத்தை க்கண்டீர்களா? உலகத்தில் அமிர்தஞ்சேவிளி முதலிய மகௌஷதங்களால் நிராதநோய்களை அவ்வாலயார் அபிஷேகத்தீர்த்தமும் விபூதி திருமண்ணும் அகற்றுகின்றது. ஸ்ரீநாகதீர்த்தவைபவம் அங்கு வெகு விசேஷமாய் அமைந்தது. இப்பெருந்திருப்பதிக்குச் சென்ற ஆனிமீ உஉஉ யன்று கும்பாபிஷேக மகோத்சவம் நடக்கப்பெற்றது. அக்காலத்தில் அனேகர் ஜமீந்தார்கள் பிரபுக்கள் வைதிகர்கள் மற்றும் அனேக அடியார்கள் வந்து எங்கும் திருநீறு திருக்கண்மணிமாலைமயமாகத்தோன்ற சிவகணம்நிறைந்த சிவலோகமோவென கண்டவர் மனம் கொண்டு நின்றது. அக்காலத்தில் கோமதி தேவியார் சங்கரேசுவரர் திவ்வியோற்சவம் கொண்டருளிய வைபவத்தை யாம் சொல்லவல்லேமல்லேம். இரவில் ஸ்ரீகோமதி தேவியாருடன் ஸ்ரீசங்கரேசுவரன் விடைஏறித்திருக்கோலம் கொண்டு திருவீதி வலம்வந்தார். இம்மகோற்சவம் கண்ட கண்ணே உலகத்தில் கண்ணெனலாம்.

ஓ ஆரியர்காள்! ஒவ்வோரிடத்தும் இதுபோல் அவ்வத்தேவாலய விசாரணைகர்த்தர் அவ்வவ்வாலயங்களுக்குத்தக்க முயற்சியுடன் கும்பாபிஷேகங்கள் செய்வித்து வருவாரேல் எங்கும் ஈசன்திருவருள்நிறையக் கலிவலியும் ஓர்புறம் குன்றும். என் மனம் ஆங்காங்கு கடவுளை அவரவர் மனத்தைப்பிரேரிக்க வேண்டுகிறது.

ஐய, நமது மதம் முன்னுக்கு வரவேண்டியதற்கு இரண்டே மூலகாரணம். ஒன்று தேவாலயம். மற்றது மடம். இங்கு ஒவ்வொரு கோவிலதிகாரிகளும் அந்தந்தக்கோயில்கட்டில் பூஜைகள் முறைப்படி நடக்கவேண்டி அவ்வவ்வாலயத்தின் மூலதனத்திற்கேற்ப ஒரு சிறு பாடசாலையாவது வைதிகோவாராயின் அவ்வவ்விடமும் மந்திரதந்திரங்கள் லோபிக்காது. அங்ஙனமாயின் நம்மவர் மதம் பெருகவும் பிறர் துர்மதம் ஒழியவும் நேரிடும். இக்காலமோ இனேதினே புறமதப்படுகுழிக்கிரையாகிவரும் நம்குமாரர்கள் பலவுளவென்பதை நாமறிந்திருக்கின்றோமல்லவா! இங்ஙனம் காலத்தால் நம்மவர் எல்லோரும் புறமதத்தவராயின் நமது தேவாலயங்களாலும் மடத்தாலும் ஆகும் பயன் என்னை? ஆதலால் நம்மவர் எவ்வழியிலும் புறமதம் புகாது காக்கவேண்டியது நமது கடனாதலின் அவசியம் ஆங்காங்கு மந்திரதந்திரங்களை வெளியிடவேண்டுவதே இக்காலத்துக்கின்றியமையாதது. அம்மம்ம! என் சொல்வோம்! எத்தனைமுறை முறையிட்டாலும் எம்மடாதிபதியும் எட்டுணையும் தமது நித்திராபோக விஷ்டை

Koviloor Digital Library

[illegible]

யை விடாது மென்மேலும் விருத்தியாகி வருகிறார்கள். எம்மதத்துக்கு சேர்ந்த வாபத்தை அவர் அறிவதில்லை அவர்களுக்கெக்காலம் தயை வருமோ? எக்காலம் தமது பீடனைச் சீர்திருத்துவார்களோ அறியோம். சுவாமிகாள்! தயைசெய்யுங்கள்! எங்கள் மதங்களைக் காத்திடுங்கள்! இக்காலத்தில் வேதத்தை யோதியவர்க்கு மறுமைப்பயன் கைகூடேவதில் ஆக்ஷேபமில்லையான் அவருக்கு இம்மைப்பயனும் பிறிது கைகூடச்செய்வது உமதுகடனன்றோ? இங்கிலிஷ் படிப்பவர் பெற்ற B. A. B. L. முதலிய பட்டங்களுக்கு ஏற்றபடி நல்ல பொருள் பெற்றுவர இவர் உண்ணபடி உழைத்து ஒருகாசும் பிரதிப்பிரயோஜனமின்றி மிற்றனும் நீவிர் வைதிகத்தையபிமானிக்கவேண்டிப் பெருநிதியைப்பெற்றுச் சுகிக்கவும் நியாயமுண்டோ? இவ்விதம் நீவிர் பிறிதும் கவனியாது விட்டால் இனிச் சிறிதுகாலத்தில் இவரும் வணர்பாடை பயிலுமுபவின், நமது பாடை முயற்கொம்பாகத் தடையேது. ஆசலின் மடபதிகாள்! ஆங்காங்கு உமது பொருட்பெருமைக்கேயைய உமது மதக்காப்பணிபோடு ஒவ்வொரு மடத்தும் ஒவ்வொரு பாடசாலை வைத்தருள்வீராக. தேவாலய வுற்சவகாலங்களில் வேதபாராயண வியாசத்தாலாவது ஒவ்வொரு தேவாலயத்தும் வேதம் ஒதிய வேதியர்க்குச் சிறிது உபகாரம் செய்யுங்கள்! எவ்விதத்திலும் உபகாரமின்றி யிருப்போமாறுல் தேவப்பிரமனை வேதங்கள் உலகத்தில் இல்லாதிருக்க நேரிடும் என்று நினைக்க எமது மனம் அடிக்கின்றது. இத்தென்னாட்டின்கண் பல தேவாலயங்கள் முள்மூளைத்துக் கிடக்கின்றன. அவைகள் எல்லாம் நந்நிலைபெறப் பரமேச்வரனைப் பிரார்த்திக்கிறேன். இங்கு கோமதிதேவியார் சந்நிதியில் ஆகமபாடசாலை ஒன்று இருந்தலால் அதில் படித்து இங்கு பூஜைசெய்பவர் எவரும் நன்றாய் மந்திரங்களோடு பூஜைசெய்து வருகிறார்கள். இவ்வித வாகமவழி பூஜிக்கப்பட்ட பரமாத்மா சங்கரேசுரர். இங்குள்ள எவர்க்கும் உண்மையாய்த் தருதிய பயன் கைகூடச்செய்துவருவதை யறியாதார் எவர். இனி மேன்மேலும் நல்லறம் பெருக ராயகியுடன் கூடிய நாதத்தட்பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

(மொழிபெயர்ப்பு.) இங்ஙனம்,

திருவேங்கிடம் - திருமலைசாஸ்திரி.

Koviloor Digital Library

[illegible]

ப்ரம்மவித்யா.

புஸ்தகசாலை.

ஐய, சிறிது செவிசாய்த்துக் கேண்மின்! இக்காலத்து வடமொழிப்பயிற்சி மிகக்குறைந்து இருக்கின்றதென்பதை அறியாதார் யாருமிலர். ஆதிகாலத்துத் தெய்வங்கள் பல மறைந்து நல்வழிப்பயிற்சி ஒழிந்து கன்றாலுழந்து திரியும் நாஸ்திகர் இக்காலத்தில் அதிகமென்பதும் கடைநக்கற்றோர்க்கு இக்கலிகாலமே காலனே என்பதும் எமது அருந்தவச் செல்வராகிய முதறிஞர் பெரும்புகழ் நிகழ்வது இக்காலத்தில் சிறுபான்மையே என்பதும் யாமறிந்ததே. அங்ஙனமிருப்பினும் இக்காலத்திய சிலபுண்ணியபுருஷர்கள் நமது தொல்லாசிரியர் புகழை வெளியிடஉத்தேசித்தும் கலியுகக்கொடுமையைத் தவிர்க்க முயன்றும் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டக்கருதியும் ஆங்காங்கு சிற்சில புத்தகசாலைகளை ஸ்தாபித்து அதன் வழி எல்லோரும் முதகுன் குரவர் முகமலர்ந்தருளிய முத்திவழியான முதல்நூல்களைப்படித்துப் பயன் பெறுமாறு தயமாவியன்றவரை முயன்றுவருகிறார்கள். நம்முன்னோர் தம் ஊன் உடலை ஒழித்தாராயினும் இப்பொழுதும் அவர்கள் நூல் திருமேனி தாங்கிற்பாராயின் அப்புத்தகசாலை அம்மகான்கள் திருமடாலயமென எண்ணத்தகுந்ததால் அங்கு சென்று அவர் திருநோக்குநிலைந்த பெற்றவர்க்குமோக்ஷம்கைகூடாமலின் போகாது. இதற்கு உதாரணமாக:—திருவாலங்காடு என்னும் ஓர் அக்கிரகாரத்தின்கண் அக்கிரவர்ணத்திற் பிறந்த வெங்கிடராமன் எனப்பெயர் தாங்கிய ஓர் மகாபுருடன் "வேதவேதாந்தாதிவர்த்தினி" எனப்பெயரிட்டு அந்தவிடத்திலோர் புஸ்தகசாலையை ஏற்படுத்தியுள்ளான். அது நம்காட்டிப்புறத்து அறிவிலிகளுக்கும் புத்தகங்களைச்சேர்க்கும் பயன் இன்னதென்பதைக்காட்டியது. அதில் சந்நியாசிகள், ஏழைகள் விருத்தாப்பியர்கள் எவரும் எக்காலத்திலும் உள்நுழைந்துசுதந்திரத்துடனும் ஆவலுடனும் புஸ்தகங்களை எடுத்துப் படித்து உண்மையறிந்து உள்ளங்களித்து அச்சாலையைப்புகழ்ந்து வருகிறார்கள். இம்மட்டோ! நமது முன்னோர் பெருமையையறியாத சிறுவர்களும் அச்சாலையுள் பிரவேசித்து புத்தகங்களின் பெயர்களைப்படித்து அவற்றின் பெருமையை நோக்கி அந்தோ! "எவ்வளவு மகிமையுள்ள எத்தனை புத்தகங்களைநமது முன்னோர்கள் எழுதினார்கள், இவரறிவு எப்படிப்பட்டது, யாம் அவர் குலத்துதிக்க முற்பிறப்பில்செய்த தவம் யாதோ" என ஆச்சரியப்படுகிறார்கள். முதலில் நமது நண்பர் வெங்கிடராம சாஸ்திரிகள் எடுத்த முயற்சி ஒருவாறு கைகூடியதைப்பார்த்த மற்றவர் தாமும் அவ்வித புத்தகசாலை ஏற்படுத்துவதினால் சிலபுகழ் பெறலாமென்றெண்ணி முன்வந்து தாபிக்கின்றார்கள், தாபிப்பார்கள், தாபித்திருக்கிறார்கள். அவர்களுள் ஸ்ரீஸுப்பிரமணியத்தம்பிரான் என்னும் ஓர் வைசியாபணி ஸ்ரீமகாலிங்கப்பெருமான் திருவருள் நிறைந்த திருவிடமருதூர் என்னும் திருப்பதியில் அந்தணர்கள் அருளாக்

[illegible]

[illegible]

[illegible]

"வேதாகம புஸ்தகசாலை" என்னும் ஓர் சாலையை ஏற்படுத்தியுள்ளார். மற்று சைவ வேளாள மடாதிபதிகளுள் சிறந்த திருவாவடுதுறை ஆதீனத்தின் தற்கால பட்டாபிஷேகம் பெற்ற பண்டாரசந்நிதிகள் தாமும் ஆரியதிராவிட வேதாகமபுராணமான வோர்புத்தகசாலையைஸ்தாபிக்க மனமுவந்தாரெனக் கேட்டு ஆனந்தமடைகின்றோம். ஸ்ரீமயூர க்ஷேத்திரத்தில் இரண்டு விப்ரர்கள் முயற்சியால் இருபுஸ்தகசாலைகள் ஏற்படுவதாக ஓர் வதந்தியுலாவுகின்றது. அவற்றுள் ஒன்று பரமபாவனயதிபதிகள் சைவாசார்யவருக்கும் பெருமை பெற்று நின்று இன்று அப்பாவனத்துவம் இரட்டிக்கத் தென்திசைப்ப்ரபாணிபாக விளங்கும் மகாமகோபாத்தியாயர் திருநாம மகுடாபிஷேகம் பெறுமென்பீகள்வி, மற்றது ஆரியசெல்வோர்க்கும்பொதுவாய் ஈடேசாஸ்திரிகளென்பவரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதாம். இருபட்டே! ஸ்ரீமத் ஆளுடையபிள்ளையார் அவதாரத்திருப்பதியான சீர்காழியில் ஐர்துபாஷைகள் நிறைய ஓர் புத்தகசாலையை ஸ்தாபிக்க மற்றோர் அந்தணர் வெகு ஆடம்பரத்துடன் கங்கணம் பூண்டிருக்கின்றார். இவ்வித மனவிருப்பம் நம் நாட்டவர்களுக்குண்டாக முதலில் அவ்வழி சென்று அச்சாலையை நாட்டின ப்ரம்மஸ்ரீ வெங்கிட்டராம சாஸ்திரிகள் நீடுழிவாழ ஜகதீசனருளைப் பிரார்த்திக்கின்றோம்.

வாவதந்திகவைப்னம்.

ஐய, இங்கு விசாரிக்கவேண்டியது இது. வடமொழி நிலையில்லாவலர்காள்! நமக்கு ஓர்சுபவார்த்தை தசொல்வாம். முன்னொருக்கால் தேவகியார் கருவில் வளர்ந்த கருவை சேவன் திருவை ஒருவாறு தேவகியினிடமிருந்து ரோகிணியின் கருக்குழியிற்புகுத்தமைத்தது. அதுபோல் இத்தேச நன்னூல்களெல்லாம் கப்பலேற்றப்பெற்று மேற்றிசை நோக்கியதிற்கெதிர்மறையாக இன்றதிழ்காற்றுபேல காற்றுப் திரும்பி நமது நாட்டைநோக்கி மேற்றிசையாருள்ளுமெய்த்த சொற்சாதுரியப் பொருளை இழ்கரைசேர்த்தது. உலகத்தால் மாத்திரமல, கடவுளாலும் சாத்தியமாகாத விஷயம் ஒன்று அதாவது: கன்னியினிடம்தோன்றும்சமஸ்த குணங்களையும்தாயிடம்உண்டாக்கி ஏற்றுதல் என்பது. எப்படியெனில், உலகத்துள்ளபாஷைகளைத்தாக்கும் தாய்ப்பாஷையாய் நிற்பது வடமொழியே தனிமொழியன்றிமற்றவை அக்ஙனமல்லாதனவென்பதைநித்தாந்தமல்லவோ? இதுவரையில் பிறந்த கவிவாணர் எவரும் காரணபாஷையின் பெருமைகளைக்காரியபாஷையில் அமைத்தாரல்லர்காரியத்தினிடமமைத்த ஒருகுணத்தைக் காரணத்தினிடம அமைத்ததில்லை. நாடகாந்த சாகித்ய சக்தி பெற்ற கவிவாணர் எங்கே? இவர் வடமொழி நன்னடை எங்கே? இவர் தன்மொழியிலமைத்த போனி கவனங்கே? இவர்க்கு ஆங்கிலேயர் பாஷையிலமைத்த சம்புகழ் எங்கே! வெகு நன்று! யாம் இவரை வடமொழி வல்லார் என்பேமாறுல் அவர் எம்மொழி வல்லார் எனவெகு எதிர்கள் தோன்றியதற்கவர் B. A. பட்டத்தைக் காண்பிக்கின்றார்கள். (அவர்க்கெதிர்கானதிடமைக்கிற்றுட்டக் கொடாதகெந்த) உலகத்தில் முற்றியும் ஆர

Koviloor Digital Library

[illegible]

யது. விர்த்தியாவது கைவிலிருந்தியாவது நிறைந்த காவியம் சுகங்கொடுப்பதில்லை. மத்தியமாயிருப்பதே சுகம். பெங்காரமும் கேவலம் விப்ரலம்பமுமே சுகமல்ல. சம்போகமும் அங்ஙனமல்ல. இரண்டின் தொடர்பே சுவை என்பார் அந்நூலார். குழந்தைப்பருவமுமல்ல தளர்ந்த பருவமுமல்ல மங்கையர்க்கு அழகளிப்பது. மத்தியமோட் கமே.

வேதங்களில் வைதிகர்க்குப்பற்றுடைதாத்திலுமல்ல அநுதாத்திலுமல்ல, மற்றுச்சுவரிதத்தே. சைவர்பற்று சிவன்பட்டிலுமல்ல, தேவிபார்பட்டிலல்ல, மங்கைபாகன் திருவுருவத்தே. இக்காவியம் வடநூற்சுவையைமட்டிலமைந்ததல்ல. மேனாட்டவர் நூல்சுவையைமட்டிலமைந்ததுமல்ல. மற்றுஇரு நூற்சுவை ஒருங்குசேரப்பெற்றது. இக்காப்பியத்தை ஆங்கிலேயபாஷையைக்கற்றவர் இது மேது காப்பியர்சுவையை முற்றிலும் பெற்றதாவேனப் பரிக்ஷிக்கவேண்டியும் வடநூல்மாத்திரம் பயின்றவர் வடமொழியில் மேற்றிசையார் கற்பனை அமைந்தது எவ்வாறு? எவ்விதம் மேற்றிசையார் மனோதர்மம் காவியங்களுள் வளைவுதிய விரும்பிய, இருதிறத்துப்பண்டிதரும் கண்டுகளிக்கவிடங்கொடுக்கின்றது.இதன்மாண்பைஅநேகர் எழுதினர். ஆதலின்அதை யாமடக்கியுலாப்பது யாதெனில கடவுள் திருவருளால் புதிய கவிகளும் புதிய காவியங்களும் எங்கும் ஒங்குமாறு அருள்புரியவவனையே ஆதரவுடன் வேண்டி, எமது பிரஸ்தாபங் கவிஞர்க்குப் பூர்ணாயுளையும் மேன்மேலும் பற்பல நற்காவியங்களை இயற்றும் பேராற்றலையும் அன்பர்களன்பாரப அம்பிகாபதி திருவருள்மாரி பொழிவர் எனபதே.

வேதாகமப் பிராமாண்யம்

தொடர்பு.

இனி முறையே தந்திரப்பிராமாண்யவாதிகளின் வாதங்களை எடுத்து விரித்தும், பின்பு சமுச்சயவாதிகளின் [வேதங்களும் தந்திரங்களும் சமானப்பிரமாணங்கள் என்பவர்] மதத்தை விரித்தும், அதன்பிறகு கேவல வேதப்பிராமாண்ய வாதிகளின் கொள்கைகளை விரதிசரித்தும் இறுதியில் எமது சித்தாந்தத்தைச் சொல்வோம். சைவசாக்த வைணவசமயங்களில் சைவமுந்தியதாதலானும்; வைதிகர் அவைதிகர் இருதிறத்தவரும் கைக்கொண்டு ஆளுவதாதலாலும் மிக விரிவுடையதாதலாலும் வெகு விஷயங்களை எடுத்துரைப்பதாதலாலும், மற்றைய தந்திரங்களின் அவாவிலையைத் தடுக்கத்தக்க பல சிப்பாதிவிஷயங்களைத் தம்முட்டாமே அடக்கியதாதலாலும் அத்தந்திரோத்தமத்தை வேதத்திலும் மேலாவதெனக் கூறுபவர் வாதத்தை எடுத்துக்காட்டி மறுத்திட முதலில் அவர் வழியே நடப்பாம்.

இக்காலத்தில் நால்வகை ஆகமிகர்களுண்டு. சைவர், பாசுபதர், சோமசித்தாந்தி, லாகுளர் என்பவர். (இங்கு குறிக்கும் ஒவ்வொரு விஷயங்களுக்கும் பின் புராணவசனங்களிலிருந்த பிரமாணங்களையெடுத்துக்காட்டுவோம்) காளாமுகர்முதலிய மற்றவர் சிறிதும் வேதசம்பந்தமற்ற ஆகமங்களிலே அதிகாரிகளாதல்பற்றி அவர் வாதங்களை யாமிங்கு எடுத்தோமில்லை. முற்கூறிய சைவாதி நால

[illegible]

வர் வேதாகம விஷயங்களிற் கூறும் தாரதம்மியங்கள் வருமாறு.

1. பரமபதியாகிய ஸ்ரீபரமேசுவரனது சத்யோஜாத முதலிய நான்கு முகங்களில் வேதங்களுண்டாயின. காமிகமுதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டு ஆகமங்களும் ஈசானமுகத்திற்றோன்றின. ஆதலால் அது உற்பத்தியிற் சிறந்தது.

2. வேதங்களில் சிவன்முதலிய எல்லாக்கடவுளர் மகிமையைக்கலந்து ஓதப்படுகின்றது. ஆகமங்களோ அங்ஙனமல்லாது அதிசிவனையே பரம்பொருளென்கின்றது. ஆதலால் இஃது தனிப்புரையாகின்றது.

3. வேதங்களில் கன்மம் பிரமம் இரண்டும் நிரூபிக்கப்படுகின்றன. ஆகமங்கள் பிரமம் ஒன்றையே நிரூபித்து அதன் வழிபாடொன்றையே கன்மமாகக்காட்டுகின்றது. ஆதலின், இது பிரமகாண்டம் எனப்பட்டு உபநிடதம்போலாகுமென்க.

4. வேதங்கள் பிறப்புணர்த்தவருக்கே உரியன. ஆகமங்கள் எல்லா வருணத்தவருக்கும் உரியன. ஆயின், ஆகமத்தால் நற்கதிபெறுவர் அனேகர். பயன் பெறுபவர் தொகை பெரிதாதலின் பயனை நோக்கி இதற்கு ஓர் பெருமையுண்டு.

5. வேதங்களைச் சித்தாந்தமென வழங்குவதில்லை. இவைகளைச் சித்தாந்தமென வழங்குவதால் இது சித்தாந்தமாய் நிற்றலும் புலப்படும்.

6. வேதங்களுள் கூறப்படாத பல விஷயங்கள் ஆகமங்களிற் காணப்படுவதால் ஆகமம் வியாபகமாகும்.

7. சனகாதியோகிகள் நான்குவேதங்களிலும் பெறாத பேற்றை ஆகமங்களிற் பெற்றார். ஆகமங்களிற் பெறாததை வேதங்களிற் பெற்றிலர்.

8. வேதங்களில் உயிருடன் தன் சரீரத்தைச் சிவமாக்கும் சற்சம்ஸ்காரம் யாதும் குறிக்கப்பட்டிலது. ஆகமங்களிலோ ஜீவனைச் சிவனுக்கும் பல சற்சம்ஸ்காரங்களுள.

9. வேதங்கள் சாமான்னிய அக்கினியில்பசுவேட்டல் முதலிய கொடுங்கிரியைகளைச் சொல்லுகின்றன. ஆகமங்களோ ஜீவகாருண்யம் நிறைந்த சற்கிரியைகளைச் சிவாக்கினியின்கண் விதிக்கின்றன. இதினும் வேறான உத்தமமாண்பு வேறுளதோ?

10. வேதங்களை நிகமமென்பர். சிவசாஸ்திரங்களை ஆகமமென்பர்.

11. சிவசாஸ்திரங்களைப் பூர்வச்சிரவமெனவும், ஏனையவைகளை அநுச்சிரவமெனவும் கூறுவர்.

12. வேதங்களில் ஒலிகளும் எழுத்துக்களும் ஒருவாறு சிதைந்தால் கற்பவரை வினையில் ஆபத்திற்கிடமாக்கும். சமது ஆகமங்களின் அருமொழிகளோ அங்ஙனமாகா.

13. வேதங்களில் சொல்வன்மையும் சிவசாஸ்திரங்களில் சொல்மென்மையும் இயற்கையிலமைந்தன. நிற்க. இருநூல்களும் ஒரு முதல்வனருளினவையாதலாலும் ஒன்றையொன்று பற்றிநிற்கும் மந்திரதந்திரங்கள் நிறைந்தனவையாதலாலும், ருத்திரமும் பாடியமும் போன்றவையாதலாலும் இவை இரண்டும் சமப்பிரமாணமாயாவது கொள்ளோமென்பன. இவைகளை முறையே பிரமாணத்தோடுடன் விரித்துத்தக்க சமாதானமளிப்பாம். எ-ம்

Koviloor Digital Library

நூல்களும்மாயை யைப்பின்னசத்தியென்றும்பரிக்கிரகசத்தியென்றுங் கூறுகின்றன. பின்னசத்தியென்றாலும் பரிக்கிரகசத்தியென்றாலும் ஒன்றுதான். வேதாந்திகள், பிரமத்திற்கு மாயைஃபரர்வித சத்தியாதலால் சத்தியைச்சத்தனான பிரமத்தினிடத்தில் அடக்கி ஒருபொருளாக்கி, உலகத்திற்குப் பிரமம் முதற்காரணமென்றுசொல்லுகிறார்கள். சித்தாந்திகளோ சிவத்தையும் மாயையுமவேறுபிரித்து உலகத்துக்கு மாயையே முதற்காரணமெனறு சொல்லுகிறார்கள். வேதாந்திகள்பிரமத்தையும் மாயையும் பிரித்து மாயையை முதற்காரணமென்றுஞ்சொல்லுவதுண்டு. சொன்னாலும் அது பூர்வபக்ஷந்தான். சித்தாந்தம் பிரமமே முதற்காரணமென்பதுதான். சித்தாந்திகள் எக்காலத்தும் சிவம் முதற்காரணமென்று சொல்வதில்லை. இந்த இரண்டு சித்தாந்தங்களும் சொற்களில் பேதமேயன்றிப்பொருளிலில்லை. கடத்துக்கு முதற்காரணம் மண்ணென்பவர் போல வேதாந்திகள். கடத்துக்குமுதற்காரணம் கடசத்தியென்பவர் போலச் சித்தாந்திகள். ஆனாலும் மாயையொருபொருளல்ல. பொருளென்று சொல்வோமாயின் சிவம் ஒருபொருளும் மாயையொருபொருளுமாகி இரண்டுக்கும் பின்னத்துவமுண்டாய்க் கண்டப்பொருளாய்விடும். ஆகலால்அது பொரு

...து. சிவத்தினிடத்தில் அவார்தரமாயுள்ள ஓர்விதசத்தி

...சொல்லவேண்டும். இவ்விதமான சத்தியொ

...ல் சிவத்துக்கு யாதொரு பாதகமில்லை. சொ

...திற்கு முதற்காரணம் மனம். அம்மனத்தி

...ரப்பனவுலகமுண்டாயது. மனம் காரணம்;

...கங் காரியம். காரியம் உண்டாதற்குமுன்

...ரணத்தில் சத்திருபமாயிருந்திருக்கவேண்டும்.

...ட சத்தியில்லாவிடில் காரியந்தோன்றுதற்கி

...மண்ணினிடத்துக் கடசத்தியில்லையாயின் கட

...ல. பழுதையின்கண் பாம்புபோல் தோற்றுஞ்

-மதான்று ...ன்றிருந்தமையானே பாம்புதோன்றுதற்கிடனு

சத்தியொ ...ந்தப்பொருளின்கண் எந்தச்சத்திகளிருக்கின்

யிற்று. ... அவைதான் தோன்றும். அவ்வாறே மனத்தி

றனவோ ... சொற்பன வுலகந்தோன்றுதற்கேதுவான சத்

விடத்துச் ...திருக்கிறது. அந்தச்சத்தி அவாந்தரமாயிருக்கி

தியொன். ...ந இருப்பதால் மனத்திற்கு யாதொரு பாதகமு

றது. அ... அந்தச்சத்தி பின்னசத்தியாகும். பின்னசத்தியா

மில்லை. அ... யினமையின் அதனாலுண்டான சொப்பனவுலகத்தில் பல

ஜீவர்கள்படும் சுகதுக்கங்கள்மனதைத்தாக்கவில்லை. எது பின்னசத்தி அல்லது பரிக்கிரகசத்தியினது காரியமோ அதற்குவரும் ஈஷ்டங்கள் காரணத்தையடையா. அவ்வாறே சிவத்தினிடத்துள்ள பின்னசத்தியான பரிக்கிரக சத்தியின் காரியமான வுலகால் அதாவது ஜீவர்களால் வரும் ஈஷ்டங்கள் சிவத்தையடையா. அவ்வாறே இவ்வுலகில் ஜீவர்கள் படும் சுகதுக்கங்கள் சிவத்தைச் சாருவதில்லை. சொப்பனவுலகில் பல ஜீவர்களனுபவிக்கும் ஈஷ்டங்கள் என் மனத்தைச் சாருவதில்லையென்னில் சொப்பனவுலகம் பரிக்கிரகசத்தியின் காரியமாதலால் வேறாகவேயிருக்கின்றது. வேறாயிருக்கிறபடியால் அதனால்வரும் ஈஷ்டங்கள் காரணத்தைச் சாருவதில்லை. அப்படியே சிவத்தினிடத்துள்ள பரிக்கிரகசத்தியின் காரியமான இவ்வுலகு சிவத்திற்கு வேறாயிருக்கிறபடியால் இவ்வுலகிலுள்ள ஜீவர்கள்படும் சுகதுக்கங்கள் சிவத்தைச்சாரா. சிவமில்லாவிடத்தி லிவ்வுலகமிருந்தாலல்லவா உலகத்தின் ஈஷ்டங்கள் சிவத்தைச்சாராமலிருக்கலாமென்று சங்கைபண்ணக்கூடும். அது உண்மைதான். சிவத்தைப்போல் இவ்வுலகம் சத்தாயிருந்தால் அந்த ஆக்ஷேபம் பொருந்தும். இவ்வுலகம் தோற்றமாத்திரமாயிருப்பதால் ஆக்ஷேபமாகாது. கயிற்றிற் பாம்புதோன்றுவதால் கயிற்றுக்கு என்ன ஈஷ்டம். காரணத்துக்கும் காரியத்துக்கும் அபேதமே. காரணத்தைத்தவிர காரியம் ஒரு அணுக்கூடப்பிரிந்திராது. மனத்தினிடத்துச் சந்திரத்தியானமுண்டாமாயின் சந்திரன் ஆகாயத்திலிருப்பதாய்ப் புலப்படுகிறது. தியானிப்பவன் பூமியிலும் தியானப்பொருளான சந்திரன் ஆகாயத்திலுமிருப்பதாய்த்தோன்றினாலும் உண்மையில் சந்திரன் மனத்திலேயே யிருக்கிறான். சந்திரன் பேதமாய்த் தோற்றினும் உண்மையில் அபேதமேயாம். அவ்வாறே சொப்பன வுலகம் மனத்துக்குப் பேதமாய்த் தோற்றினும் அவ்வுலகிலுள்ள பல ஜீவர்களுடைய லாபநஷ்டங்கள் மனத்திற்குச் சம்பந்தமில்லாதிருப்பினும் அபேதமேயாம். அங்ஙனமே சிவத்துக்கு இவ்வுலகம் பேதமாய்த்தோற்றினும் ஜீவர்களுடைய லாபநஷ்டங்கள் சிவத்தைச்சாராதிருப்பினும் சிவத்துக்கு இவ்வுலகம் அபேதமே. இவ்வித ஆக்ஷேபத்துக்கெல்லாம் சமாதானஞ்சொல்வதற்குக் காரணம் உலகத்தைச் சத்துப்பொருளாயெண்ணாமையே. சத்தாய்ச்சொல்வோமானால் ஆக்ஷேபங்கள் ஆக்ஷேபங்கள்தான். இனி மாயையினிடத்து உலகமுண்டாவதைப்பற்றி ஆலோசிப்பாம். மாயை யொருபொருளல்லவென்று முன்னமே கூறியுள்ளோம். சித்தாந்திகள் சொல்லுகிறபடி யொருமுதலாக வைத்துப்பார்த்தாலும் உலகம் தோற்றமேயன்றிப் பொருளல்ல. ஒருபொருளினிடத்து மற்றொருபொருள் உண்டாமென்று சொல்வது பிரயோசனமற்றதாயிருக்கிறது. மண்ணினிடத்துக் கடமென்னும் பொருளுண்டாயிற்றென்று வியவகாரமாய்ச் சொல்லினும் உண்மையில் ஒருபொருளிடத்து வேறொரு பொரு

ண்டாதலில்லவேயில்லை. காரணத்தின் மாறுதலையான கு
ணத்தையே காரியப்பொருளென்று சொல்லிக்கொள்ளுகி
ன்றார்கள். மண்ணினிடத்துண்டான சில மாறுதலையே
கடமென்று சொல்லுகிறார்கள். மண்ணின் மாறுதலையன்
றிக் கடமென்னும் மொழிக்குப்பொருளில்லை. மாயையி
னிடத்திலிருந்து உலகமுண்டாயிற்றெனின் மாயை பால்
தயிர்போல் தன்வடிவங்கெட்டு உலகாயிற்றா? தன்வடிவங்
கெடாது ஆயிற்றா? இக்கேள்விக்குக் கெட்டு ஆயிற்றெனி
ன் பின்பு மாயையே யில்லையென்று சொல்ல நேரிடும்.
மண்கடம்போல் கெடாமல் ஆயிற்றெனின் மண்ணைத்த
விரக் கடத்துக்குப்பொருளில்லை யாகலின் மாயைத்தவிர
வுலகிற்குப் பொருளில்லையென்று சொல்லவரும். ரச்சு
சர்ப்பம்போலென்னின் சர்ப்பம் பொய்யாம். வேதாந்தப்
படிபார்த்தாலும் சித்தாந்தப்படிபார்த்தாலும் யுக்தி அநு
பவங்களாகப் பார்த்தாலும் உலகம் பூர்வபக்ஷமாக அசத்
தும் சித்தாந்தமாக அநிர்வசனியமுமாம்.

(இன்னும்வரும்)
ஓர் இந்து.

அத்துவிதவிசாரம்.

தொடர்பு.

இனிப்பொருட்பொருத்தவின்மையைப்பற்றிவிசாரிப்பாம்.
இவர் கூறும்பொருள் அன்மை. அது அழிவுபாட்டபாவமே.
சிலவிடம் வேற்றுமை எனப்படும் ஒன்றின் ஒன்றபாவத்திலும்
அன்மைச்சொற்குப்பயோகமுண்டு. உதாரணமாக 'தொடர்பற்
றது' 'கடமல்லாதது' என்னுமிடங்களில் முறையே அழிவு
பாட்டபாவம் ஒன்றினொன்றபாவங்களைக் குறிக்கின்றது கா
ண்க. அற்றேல் (அப்ராஹ்மண:) 'அப்பிராம்மணன்' என்றற்
றொடக்கத்தனவான சொற்களும் வேற்றுமையடங்கியஒப்புப்
பொருளைக்கொண்டு முடிவுபெறுதலின் அங்குதோன்றும் நக
ரப்பொருளாய வன்மையே ஈண்டும்பொருளாகக் கோடலா
காதோவெனின், ஆகாது; வேற்றுமையை மற்றொன்றிலட
க்காது தனிப்பொருளாயும் ஒப்பைத் தனிப்பொருளாயும்
'தத்ஸத்ருஶம்' 'ஸாத்ருஶ்யம்' 'ததன்யத்துவம்' 'ஸாதிருசிய
ம்' என வேறுபிரித்து நகரப்பொருளாக ஆசிரியர் கூறியதால்
என்க. இனி வேற்றுமைப்பொருளடங்காத ஒப்பின்மையின்
(தத்ஸத்ருஶம்) 'ததன்யத்துவம்' என வேறு கூறிய வேற்று
மையும் இதினடங்கிய பொருளை விரித்துக்கூறியதேயெனின்,
அதுவும் பொருந்தாது. ஒப்பென்பது வேற்றுமை தம்முளட
க்கியது (பேதகடிதம்) 'பேதகடிதம்' என்றும், வேற்றுமை
தம்முளடக்காதது (பேதாகடிதம்) 'பேதாகடிதம்' என்று
ம். இவற்றுள் பேதகடிதம் என்பதேநகரப்பொருளென நஞ:
என்னுஞ்சூத்திர வியாக்கியானத்திற்றானே (நஞிவயுக்த
ந்யஸத்ருஶாதிகரணே) என்று ஆசிரியர் பதஞ்சலியார்
கூறுதலானும். (அநாகாஶ:) 'அனாகாசம்' முதலிய சொற்க
ளில் வேற்றுமை தனித்து ஒப்பின்றிப்பொருளாதலாலும் வே
ற்றுமையை ஒப்புமையில் அடக்காதெடுத்துவிடுத்தார் என்க.
மேலும் வேற்றுமை தனிப்பொருள். அதைத் தம்முருவத்தட
க்கிய ஸாதிருசியம் விசிஷ்டப்பொருள். ஆகவே ஓரோ 'ந' என்
பது (ஶுக்லம்) 'சுக்லம்' முதலிய சொற்களைப்போலச் சுத்தத்
தையும் விசிட்டத்தையும் கூறிநிற்கும் என்பது ஆசிரியர் உட்
கருத்து. அற்றேலங்ஙனமாக விஶிஷ்டம் ஶுத்தாந்நாதிரிச்
யதே' 'விசிஷ்டம் சுத்தத்திலும் வேறுபடாது' என்றும்,
(அதிகஞ்ச விஷயம் நதோஷாய) 'அதிகம் அடைசேருவ
தால் அது கெடுவதில்லை' என்றும் தருக்கநூல்முதலிய விட
வியலாற் சாதிப்பதால் விசிட்டப்பொருளாய ஸாதிருசியமே
போதாதோவெனின், இது பொருளியலறியாப்புறமொழியே
யாம். என்னையெனில், கூறுதும்: விசிட்டம்-வியாப்பியம்.
சுத்தம்-வியாபகம். உதாரணம்: (வஸ்த்ரவிஶிஷ்டகட:) ஆடை
யுடன் சேர்ந்த குடம்' விசிட்டம். தனித்த குடம் சுத்தம்.
ஆடையுடன் சேர்ந்ததும் குடமேயாதலினும், ஆடைச் சேர்க்
கையில்லாவிடத்தும் குடம் இருத்தலினும் என்க. வியாப்பிய
வியாபகபாவங்கொண்ட விசிட்ட சுத்தங்களை ஒன்றுபடுத்தி
யது விசேடியத்தை நோக்கியே என்பது அன்னோர் கொள்
கை. இதனால் பண்டிதர் சிலர் விசிட்டாத்துவிதம் சுத்தாத்து
விதம் என்னும் இருசொற்களும் தருக்கநூலார் வழங்கும் 'விசி
ஷ்டசத்தை' 'சுத்தசத்தை' என்னுஞ் சொற்களைப்போல் ஒன்
றுக்கொன்று எதிர்மறைப்பொருளை உணர்த்தும் சொல்லெ
னப் புகன்றதும் 'விசிட்டம் என்னுஞ் சொல்லடை
யையும் சுத்தம் எனுஞ்சொல் அஃதற்ற நிலையை
தால்' என ஏதுவுரைத்ததும் மேற்காட்டிப்போ
த வேறுபாடின்மை வாதத்துணிபுரையானவிசிட்
ப்பிய வியாபகப்பாவ சித்தாந்தத்தாற் சிதைந்த
அவர் கூறியவாறொப்பின் விசிஷ்டசத்தை சுத்த
இருசொற்றொகுதிகளினும் அடங்கிநிற்கும் சத்
சொல் ஓரோ பொருள்கொண்டு முடியும் சொல்
ல் ஓர் அடைசேர்த்திடவிசிட்டமும் இல்லாவிட
ஆவதுபோல் விசிஷ்டாத்துவித சுத்தாத்துவிதச் சொற்
அடங்கிய 'அத்துவிதம்' என்னும் விசேடியச்சொற்குப்பொரு
ள் ஒன்றாதல்வேண்டும். ஈண்டு விசிட்டம் துவிதவின்மையும்
சுத்தம் துவிதவன்மையுமாதலின்அடைசேர்ந்தவத்துவிதவின்
மைக்கு வியாபகமும் சுத்தாவஸ்தையும் துவிதவின்மையாகு
மேயன்றித் துவிதவன்மையாகாது. இனி விசிஷ்டாத்துவிதம்
என வொன்றிருக்கச் சுத்தாத்துவிதந்தான் ஏது எனில் கேவ
லாத்துவிதமே எனக்கூசாதுரைக்கத் தடையாது? கேவலம்,
தனித்தது, விசேடணமில்லாதது என்பன ஒருபொருட் சொ
ற்கள். இனிப் பொருள்வேறுபடினும் சொல்லொன்றாதல்
பற்றி அங்ஙனங்கூறினும் எனில், நன்று! நன்று!! விசிட்டசுத்
தாவத்தைகள் சொல்லினிடமா,பொருளினிடமாவமைந்தன?
இவ்வேற்றுமையைச் சற்றுமறியாதார் நுண்ணறிவாளர் செய்
யும் இப்பெரும் சொற்போரிலெதிர்ப்படுவது அறிஞர்அபஹா
ஸத்துக்கிடமாம். மற்றுத் தார்க்கிகர் சத்தை என்னுஞ் சொற்

Koviloor Digital Library

குச் ‘சாமான்னியம்’ எனும் ஒருதன்மைப்பொருள் என்பர். வேதாந்திகள் பிரமமே உண்மைப்பொருளாதல்பற்றி அதைச் ‘சத்தை’ என்பர். பொருள் வேறு; சொல்லொன்று. ஆயின் விசிட்டசத்தை சுத்தசத்தை என்றும் நியாயநூல் வழக்கில் ஒன்று வைசேடிகசத்தை ஒன்று வேதாந்தி சத்தை என்பது ஒவ்வுமேல் மேற்கூறிய பண்டிதர் வாக்கியமும் மணம்பெறும். ஆயின் அன்மைப்பொருள் நகரத்துக்குளாத்திடின் அது ஒருபொழுதும் விசிட்டச்சொல்லுக்கு எதிர்ச்சொல்லாகாது. இது மட்டோ! இப்பண்டிதர்கொண்ட திருட்டாந்தம் ஒவ்வாமை மற்றொருவழியிலுங் காட்டுவோம். விசிட்டம் அடைசேர்ந்தது, சுத்தம் அஃதில்லாதது என்பதே இவர் கருத்து. ஆயின் நிர்விசேஷம் சுத்தப்பொருளாயிற்று. அங்ஙனமமையச் சுத்தாத்துவித கேவலாத்துவிதங்கள் ஒருபொருள்கொண்டு முடியுஞ் சொற்களாயின். கேவலம், சுத்தம், நிர்விசேஷம் என்னுஞ் சொற்கள் ஒருபொருள்கொண்டு முடியும் சொற்களே. ஆயின் சுத்தாத்துவித கேவலாத்துவிதங்களுக்கு வேற்றுமை ஏதுமில்லையென ஏற்படும். அது இப்பண்டிதர்க்கு அசம்மதமேயன்றோ? அற்றேல் நீவிர் சுத்தம் என்னுஞ் சொல்லுக்கு ரைக்கும்பொருள் இதுதானே. அங்ஙனமாயின் உமக்குத்தான் வேற்றுமை எங்ஙனம் அமையும் எனில், யாம் சுத்தமான வத்துவிதம் எனப் பண்பு பண்பிகளை உணர்த்தும் சொல்லாக வியாக்கியானஞ்செய்யாது ‘சுத்தர்களின் அத்துவிதம்’ எனப் பொருள்படுத்தி அதுமட்டில் கேவலாத்துவிதிகளினும் இவர் வேறுபட்டவரெனக் காட்டி அன்மைப்பொருளை மட்டில் நகரத்தினகண்ணுபேக்ஷித்தாம். ஆயின் பண்டிதர் பக்ஷத்தில் வேற்றுமைத்தொகைவகையால் தொக்கியது முதல்வேற்றுமை. எமது பக்ஷத்திற் தொக்கியது ஆறும்வேற்றுமை. ஆகவே விசிட்டாத்துவித சுத்தாத்துவிதச்சொற்கள் ஜீவபரன்களது விசேடண விசேடணவின்மைகளுடன்கூடிய வவத்தையின்கண்ணமைந்த வதத்துவிதத்தைக் கூறுமாதலின், இன்மைப்பொருள்கொண்டு முடியும் அத்துவிதச்சொல் கூட்டுறவாற் பிறந்ததென்பதே நல்வழி. ஆயின் பண்டிதர் கூறிய திருட்டாந்தம் விஷமமாயும் அசாதகமாயும் முடிந்தது. இனி விஷயத்தைப்பற்றிச்செல்வாம்.

முற்கூறியவாறு பொருள்களில் எப்பொருள் கொள்ளின் இவ்விடம் பொருந்துமென்பதை விசாரிக்கவெழுந்தோமாகலின், அங்குள்ள வின்மைப்பொருள் ஒன்றைத் தவிர மற்றைய பொருள்கள் பொருந்தாவழி முறையே உதாரணங்களுடன் காட்டுவோம்.

முதலில் ஸாதிருசியம்-ஒப்புமை, ஒவ்வுமா? என்பதை விசாரிப்பாம். ஒப்புமை என்பது வியாகரண நூலார், அலங்கார சாஸ்திரிகள், வேதாந்திகள், மீமாஞ்சகர் முதலிய பல சித்தாந்திகள் கொண்டவழி தார்க்கிகர் குறித்த பொருள் ஏழனுள் அடங்காத தனிப்பொருள். தார்க்கிகர் கண்டபடி அது ஏழனுள் அடங்கிய ஓர் தன்மை. தார்க்கிகர் ஒப்புமையிலக்கணங் கூறுவது “அதனிலும் வேறாய் அதன்கண்ணமைந்த பல தன்மைபெற்று நிற்றல்” என்பது. மற்றவரிலக்கணம் ‘அதுவோ என மயக்கம் பயக்கும் தன்மையுளது’ என்பது. இவற்றுள் தார்க்கிகர்கூறிய விலக்கணவழியில் அடங்கியது வேற்றுமையேயன்றி அன்மையல்ல. முற்கூறிப்போந்த பண்டிதர் கொள்கையின்படி அன்மை தனிப்பொருளாகாது ஒப்புமையில் அடங்கியல்லவோ நிற்கவேண்டும். இனித் தன்வாக்கியம் பொருந்தவேண்டி ஒப்புமைக்கு அன்மையடங்கிய விலக்கணமொன்றுசொல்லி அதை எவரும் இதுவரையில் ஒப்பாமையால் அது தன் சித்தாந்தமெனவுங்கொண்டு தன் சித்தாந்தத்தையே எல்லோரும் ஒப்பும்படி ஆணையிடவும் வேண்டிவரும். மிக அழகு! இனி ஞானாமிர்தத்தார் இவ்வன்மைப் பொருள்கொண்டு முடிந்த திருஷ்டாந்தமாக “அப்பிரமாணம்” என்னுஞ்சொல்லை எடுத்துக்காட்டினார். இது பொருந்துமாறெங்ஙனம். ‘அப்பிரமாணம்’ என்னுமிடத்தில் வேற்றுமைப்பொருள்கொண்டு பிரமாணத்தினும் வேறு என்று ‘அனுகாசம்’ முதலிய சொற்களைப்போலாவது, எதிர்மறைப்பொருள்கொண்டு பிரமாணவெதிர்மறையென அபுண்ணியம் முதலிய சொற்களைப்போலாவது பொருள்படுத்தக் கூடுமாதலால் என்க. நிற்க. இவர் ஒப்பியவாறு அன்மைப்பொருள் ஒப்புமையில் அடங்கி அதனிலும் வேறுபடாத பொருளாயிற்றே. அங்ஙனமாக, அப்பிரமாணம் என்னுஞ்சொல்லில் அகரம் அன்மையைத் தனித்துக்குறித்தது எக்காரணத்தாலோ? அவ்விதம் அன்மையே பொருளாகுமிடம் இஃதென இவர்காட்டிய உதாரணத்தில் ஒப்புமையிலடங்காது அன்மைதனிப்பொருளாகத் தோன்றியதுதான் எதுபற்றியோ? இனிச் சொற்சுருக்கமாய் பதஞ்சலியார் இருவகைத் தனிப்பொருள்களை ஒன்றாகக் கூறினார் என்பரேல் அவர் கொள்கையை மறுக்க ஆசிரியர் ‘நஞுயடு ஷடுகீதிடுகா:’ ‘நஞ்ஞின் அர்த்தங்கள் ஆறு’ என எண்ணல் எடுத்து வகுத்தமை கண்டொழிக. முன் அப்பிரமாணம் என்னுமிடம் ஒப்புமையிலடங்காத வன்மைப்பொருள் எனவும், பிறகு நகரப்பொருள் ஆறனுள் ஒப்புமையிலடங்கியது அன்மை. அவ்வொப்புமை அவ்வன்மையை அடக்கியே நிற்கும் என்றும் இஞ்ஞானாமிர்தத்தார் எழுதியது முன்பின் முரண்பட்டும் உதாரணமற்றும் ஒழிந்தது. நிற்க, அவ்வன்மையும் ஈண்டு அத்துவிதச் சொல்லின்கண்ணமைந்த அன்மையும் ஒன்றேயென வாராயினும் அஃதுமில்லை. அத்துவிதம் என்னுடத்தில் இவர்கூறும் அன்மை அழிவுபாட்டபாவம். அப்பிரமாணம் என்னுமிடத்துள்ளது ஒன்றில் ஒன்றனபாவம் எனும் வேற்றுமை. ஆகவே திருஷ்டாந்த தார்ஷ்டாந்த விரோதம் தெற்றெனப்புலப்படும். ஆகவே அதுவும் பொருந்தாது. இனி ஒப்புமை எவ்வழியிலாவது அத்துவிதச் சொல்லினகரப்பொருளாமோ எனின்? ஆகாதெனக்காட்டுவாம்: அத்துவிதம் என்னுஞ்சொல்லில் அமைந்த துவிதம் என்னுஞ்சொற்பொருள் எண்; அது இரண்டின்தன்மையைத் தான் குறிப்பதாயினும் ‘விசிட்டச்சொன்மேலமையுந்தன்மைச்சொல் விசேடணத்தையே குறிக்கும் என்பது பிரமாணநூற்றுணிபாதலின் ஈண்டு என்னுடையபொருளின்கண்ணமைந்த தன்மை என்னுகவே யிருத்தல்வேண்டும். உதாரணம்: ‘தண்டித்துவம்’ இங்கு தண்டம் விசேடணம்; அதையுடைய

Koviloor Digital Library

வன் தண்டி விசிஷ்டன். அவன்தன்மையைக் குறிப்பது த்வம் எனும் விகுதி. இங்கு ஐத்தண்டித்துவம் தண்டுள்ள காலம்தோன்றுவதும் இல்லாவிடம் தோன்முறொழிவதும் பற்றித் தண்டித்துவம் என்பது தண்டே. ஆகையால் துவிதம் என்பது இரண்டு எனும் எண்ணுக்கிடமாகத்தோன்றும் விசிட்டப்பொருட்டன்மையைக் குறித்தலின் அது விசேடணப் பொருட்டாய் முடியவேண்டி எண்ணேயே குறிக்கின்றது. ஆயின் இரண்டெனும்என்னுடன் ஒப்புமை அத்துவிதச்சொற்பொருளாகும். ஆகவே முக்தியிலுள்ள வத்துவிதாவத்தை எச்சித்தாந்தியும் ஒப்பாத வெண்ணெப்புமையாய் முடியும். ஆதலின் அது மிகவும் பொருந்தாமையறிக. இனி எணணின் கண்ணமைந்த சொற்களுக்கு அவ்வெண்ணுடைய பொருளும் பொருளேயாதலின் அதன் ஒப்புமையே அத்துவிதச் சொற்பொருள் எனில், அதுவும் பொருந்தாது. அவ்வித ஒப்புமை என்றுமுளதாதலானும் அது முக்தியிற்றான் உண்டெனக் கூடாமையானும் என்க. மேலும் இங்குள்ள துவிதச்சொல் எண்ணைக்குறிக்கும் சொல்லேயென ஷ ஞானமிர்தத்தார் ஒப்பியே "என்னுப்பெயர் மேல் வந்த நகாரம் அன்மைப் பொருண் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன் றி, ஏனைய சொற்களின்மேல் வந்த நகாரம்போலஇன்மைமறுதலைப்பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கணின்மையின்,, என்றார். அற்றேல், எண்ணுப்பொருள்மேல் நகாரமே இதுவாதலின் அவர் கூறியபடி யன்மைப் பொருள்கொள்ளத் தடையாதெனின், அற்றன்று. யாம் முற்கூறியபடி எண்ணின் ஒப்புமை 'பொருளாயின் பயனில்லாமையானும் அன்மை தனிப்பொருளாக நகரப்பொருளாயின் எண்ணென்னும் பண்பின் அன்மைமட்டில்(அன்மைப்பொருண்மாத்திரையேஎனஎச்சத்தால் வற்புறுத்தியமையால்) பொருளாகும்மாகலின் பண்பு அற்றுப்போதல் பண்பியழிவிடம் கூடாமையினும் எண்ணெழிதலே முத்தியாய் முடியச் சித்தாந்தவிரோதம் வருமாதலானும் 'ஏகனேகி' என்னும் மூலவாக்கியமும் 'வெனசூ௱மஉ:' என்னும் பரமமூலவாக்கியமும் விரோதிக்குமாதலானும் பிறகு இவரே எடுத்து விரிக்கும்வழி 'தத்ஸாதிருசியம் என்னும் ஒப்பின்பாற்படும் என்க' என்பதால் ஒப்பின்றியன்மையமையாவிடம் இரண்டற்று இரண்டன் ஒப்புமை முத்தியென முடித்தல்வேண்மோயின், சிவ சீவர்களுக்கு முத்தியில் சர்வசாமியங் கூறுஞ் சிவசமவாதச்சைவராய் இவர்முடிவதானும் இவர்காட்டும் வேதாந்த சித்தாந்த மகாவாக்கியங்களும் அங்ஙனமே ஓதி நிற்றலானும், இங்கு எண்ணைக்குறிக்கும் சொல் ஆகுபெயராய்ப் பண்பியிடம் நிற்கவேண்டுவதுமோர்புறம் இவர் கூறும் சிவசீவசாம்யவாதச்சாயைக்கு இன்றியமையாமையின் என்னுப்பெயர் என இதைக்குறித்ததும் கௌணமேயாதலினும் இவர் வழக்கின்மையின் என்றது வடமொழியில் அன்மைப் பொருளில் நகரப்பிரயோகம் எங்குமின்மையானும் என்னுப்பெயர்மேல் நகரம் எனக்குறித்தலால் நகரத்துடன்சேர்ந்த சொற்றொகுதி வடமொழிச் சம்பந்தமற்ற தென்மொழியில் இன்மையானும் இது வேறு எந்தப்பாஷை வழக்கோ என ஒதுக்கிட வேண்மோதலானும் பொருந்தாமையின் என்க. இதனால் 'வடமொழியில் மற்றைப்பொருட்கு இலக்கணம் அமையாதென்றப்பத்திராதிபர் கூறியது பொருந்தாமையறிக' என்று நமது ஞானமிர்தத்தார் எழுதியது பயனில்சொல்லானதறிக. இனித் தென்மொழி வழக்கைக்கொண்டேதேனும் நிருபிப்போம் என இவர் வெளிவரினும் இவரோ 'அத்துவிதம் என்னுஞ்சொல் வேதங்களில் உள்ளது' என்பராதலின் வேதத்தைப் பொருட்படுத்துமிடம் இவர் தென்மொழி வழக்கை உபயோகிக்கக்கூடாது என்பதையும் போகத்தியம் முதலிய நூல்கள் வேதாகமங்களுக்கு இலக்கணங் கூறவந்தனவல்ல; அவை தென்மொழி முதனூல்களுமல்லவென்பதையும் சொல்லிக்காட்டுவோம். ஆயின் நகரப்பொருளான ஒப்புமையில் அழிவுபாட்டடாவமெனத்தார்க்கிசர் துணிந்தவன்மையை யடக்கியதூஉம்,விசிஷ்டசத்தை சுத்தசத்தை என்னும் நியாய நூல் வழக்கின் திருஷ்டாந்தம் விசிஷ்டாத்துவிதம் சுத்தாத்துவிதங்களுக்குறைத்ததூஉம், நகரத்துக்கன்மைப்பொருள் கொண்டதூஉம் வடமொழி வழக்கறியார் உரையே.

இனி ஒப்புமை ஒவ்வாவிடினும் வேற்றுமை என்னும் தஉநூக்ஷம் பொருள் இங்கொவ்வாதேயெனின், ஒவ்வாமை காட்டுவோம். இரண்டெனும் எண் என்றும் அநித்தியமும் 'அபேக்ஷாபுத்தி விசேஷம்' என நையாயிகர் வழங்கும் ஓர்வகை அறிவாலன்மயும் பொருளாயும் நியாயநூலார்கூறுவதால் இரண்டின்வேற்றுமை ஒன்றிலும் மூன்றுமுதலிய பலவேறு எண்களிலும்அமையுமாகவே வேற்றுமையைப்பொருளாயுரைக்க, நாநேசுவரவாதிஎனவும் அத்துவிதியைச்சொல்லநேரிடும். ஆயின் அது கூடாது. அன்றிச் சிவசிவன்களே இங்கு இரண்டெனக் குறிக்கப்படுதலால் அவரினும் வேறு ஜடமேயாதலின் ஜடமாய் நிற்றலே முத்தியெனப் பொருள்தந்து அசாதகமாயும்ஆபாசமாயும் அத்துவிதச்சொல்முடியும். அதுகொண்டே எச்சித்தாந்தியும் அவ்வேற்றுமைப்பொருள்கூறுதொழிந்தது. மேலும் வேற்றுமை என்பது இஃது எனத்துணிந்திலக்கணங் கூற இவ்வன்னியபாஷா நாவலராலியலாது. இனித் துவிதக்குறை அத்துவிதம் எனக்கொண்டு குறைவுப்பொருள் ஈண்டு நகரத்துக்குறைப்பாம் எனில், நன்கு! இரண்டின் குறைவு என்பதால் குறைவு நிறைவுள்ள பொருளாகவேண்டியதாகின்றது. சிவசிவன் என்னும் இருபொருளும் அவயவப்பகுபாடில்லாப் பொருளாகவவைகட்குக் குறைவு நிறைவு தோன்றல் இரிதல் கூடாமையான் எனக. ஆயின் அப்பொருளும் பொருந்தாது.

மேல் "போறையின்மை,, எனும் அப்பிராசஸ்த்யம் பொருளாமோவெனின், இரண்டின் அப்பிராசஸ்தயம் என அத்துவிதச்சொற்கிப்பொருளுரைத்தால். இருபொருள் தன்மைகளிடமும் இந்நகரப்பொருள் வியாபித்தலால் சிவத்தினிடமும் இவ்வப்பிராசஸ்தியம் தோன்ற நேரிடும். அது பெருங்குறை. 'இருவர் சிறுவர்' எனின் ஒருவன் பெரியோனெனப்புலப்படாதாகையாலென்க.

எதிர்மறைப்பொருள் கொள்வோமெனின் இரண்டின் எதிர்மறை ஒன்றேயாதல்வேண்டும். துவிதவிரோதம் அத்துவிதமெனவாகும். இனி ஒன்றே துவிதவிரோதியல்ல, மூன்று முதலியதும் அங்ஙனமேயெனின், நாநேசுவரவாதமாம் ஆகலின் அதுவும் பொருந்தாது. ஆகவே அபாவமென்னும் இன்மையே நகரப்பொருள் என்பது அபேத்தி வயிரக்கோட்டையாயிற்று.

வரும்.

Koviloor Digital Library

ஞானாமிர்தமறுப்பு.

ஐயா, பத்திரிகாநண்பர்காள், சிறிதுகவனம் தரல்வேண்டும். புதியஞானாமிர்தம் 5-ம் இலக்கப்பத்திரிகை தம்முள் எட்டு விஷயங்களை அடக்கி வெளிவந்தது அவ்வளவும் நமது ப்ரம்மவித்தியாவை மறுப்பதாகவே யிருக்கின்றது. அப்பத்திரிகை அவ்வளவுதீவிரத்துவேஷங்கொண்டெமதுபத்திரிகையின்மீது படை எடுத்து தமக்கு அனேகரைப் படைசேர்த்து அதேவேலையாய் வெளிவரினும் யாம் எமது நித்திய கன்மத்தைமுடித்து அநுபந்தமாய்இச்சொற்போரை மிருதுவாயுதங்களால்தடுக்க, அன்று விசுவாமித்திரமகாராஜன் கோபித்து விடுத்த நாநாஸ்திரங்களையும்எங்கள் கௌணியர்குலமூலபுருடனான அருந்ததிமணாளன் பிரமதண்டத்தாலுந் தர்பையாலும் மறுத்ததுபோல் எட்டுவிஷயத்துக்கும் எட்டுவாக்கியங்களாலேயே மறுத்திடுவாம்.

I. 'அத்துவிதவிசாரம்' அதிற்கண்டவிஷயம் எமது அத்துவிதவிசாரத்து மறுக்கப்பட்டது.

II. 'நியாயவாதியின் வாயை யடக்கல்' இவ்விஷயம் நியாயத்தையடக்கி வெளிவருவதால் நியாயவாதி அதற்கு விடையளிப்பார். ஆயினும் இவ்விஷயம் எழுதிய சாமகுளம். சுப்பிரமணியசர்மா என்பவர் வெகுகாலமாய் எமதுபத்திரிகைக்கெழுதிவரும் ஒரு நண்பர். இவர் ஓர் வைணவர் என்றும் பிறகு ஏதோ ஜன்மாந்திரபாக்கிய புண்ணிய வசத்தால் சிவனிடமும் அடியாரிடமும் அன்புமேலிட, சைவசின்னந்தரித்து இருப்பவர் என்றும் எமக்குத்தெரியும். இவர் இதற்குமுன் நமது பத்திரிகை. 6-ம் புஸ்தகம். 4-ம் சஞ்சிகையின் அநுபந்தத்தில் 'ஜகத்குருவிசாரம்' எனத்தலைப்பிட்டு இங்ஙனம் ஓர் சைவசித்தாந்தி என கையொப்பமிட்டு இன்று எழுதியவைகளுக்கு விரோதமாய் எழுதினவர், ஏதோஇப்பொழுது இவ்விதம் எழுதுகிறார். இவர் சித்தாந்தம் ஒரு நிலைப்பட்டபிறகே இவரை எதிர்நோக்கி விஷயஞ் சொல்லவேண்டும். இவர் எச்சமயம் எவராதரிப்பினும் அச்சமயம் அவ்வழி நிற்பார்போலும்.

III. கலிபுருஷமகிமை. இது நாகைநீலலோசனியினின்று நமது ஞானாமிர்தத்தார் அவசியமான விஷயமெனவெடுத்தது பலரால் பலபத்திரிகைகளில் மறுக்கப்பட்டது. நமது தூஷணமும் நமது பத்திரிகா தூஷணமும் நிறைந்து நிற்கும் இவ்விஷயமும்இரண்டாம்விஷயமும், எமக்கு ஒரு தக்க வடமொழி தென்மொழிகளில், சித்தாந்துக்காட்டு-ஸ்ரீநிவாஸாசாரியர் ஞானாமிர்தத்தார்போன்ற பண்டிதர் எழுதாத விஷயமாதலின் ஒருபொருட்டல்ல; சாவகாசமானபொழுது கவனிப்பாம்.

இதற்கு அவர் எவ்விதம் தாறுமாறுமாய் எழுதினாலும் எமக்கு அதுலட்சியமில்லை. கடுஞ்சொல் எமக்குவேண்டாம். விஷயமேவேண்டும். இவற்றுளோ விஷயமில்லை. கடுஞ்சொல்லேயுண்டு.

IV. 'கேவலாந்துவிதவிசாரம்' இவ்விஷயத்தை அத்துவிதவிசார வழியிலேதானே முறையே பொருட்கூற்றுப்பிரகரணத்தில் மறுப்பாம்.

V. அந்வைதிகள் வைதிகர்களா? என்பது. இதில் மூன்றாங்கற்பத்தில் "அத்வைததரிசனத்திற்கு வேதத்தைப் பிரமாணமென்றங்கிகரித்தா?" என்று கேழ்விகேட்டு மறுத்திட்டதுபோல் சில எழுதினார்கள். அவர் வேதப்பிரமாண்யவாதம் அத்வைதிகளுக்குக்கூடாதென இன்று வாதித்தால் அதற்குவிடையளிப்பதற்குமுன்னரே இவர்வைதிகர்களா? எதனால் என்பதற்கு விடையளிக்க வேண்டியதே முக்கியம். பாரதம் பஞ்சமத சித்தாந்தியாயத்தில் பாசுபதம், பாஞ்சராத்திரம், சாங்கியம், யோகம் இவற்றின் வேறாய வேதமதத்தைக்குறித்தமையாலும், அதை யநுசரித்து காளிதாஸாதி கவிஞர் வழக்காலும், ஜையாயிகாதியோரும் சாமானிய சாஸ்திரப்பிரவர்த்தகரும்,மத்துவாதி வடநூற்பாடியகாரமுக்கியரும், தென்னூலாசிரியர் பலரும் வேதாந்திகள் எனவும் ஔபநிடதரெனவும்இவரைக் குறித்தலாலும், சைவாதியோர் பாஞ்சராத்திரத்தவராதியோரைக் கேவல தந்திரவாதி எனக்கணக்கிட்டு கேவல வேதாந்தி என வத்துவிதிகளைச்சொல்லிவருதலாலும், அத்துவிதிகள் அத்துவித முக்திநிலையை அறிவது வேதத்தாலன்றி மற்றெப்பிரமாணத்தாலும் அறியக்கூடாதெனச் சாதித்தலாலும், வேதங்கள் உபக்கிரமநியாயத்தால் நிர்க்குணச்சுருதிகளைப் பிரபலமாகக்கொண்டுமுடிதலாலும், அபச்சேதாதிகரணம்ப்தார்த்தோதபத்தியின் பௌர்வாபர்யத்தைப் பற்றியதாதலால் அது பதார்த்த நிர்ணயவிஷயத்துக்கு அவ்வளவு உபயோகப்படாமையாலும்,உபக்கிரமாதிகரணம்பதகௌரவத்தைத்தரும்எனப்பிறரும்பலவிடத்துச்சிறப்பாய்ராமானுஜீயரும் ஒப்பியமையாலும், வேதாந்த மகாவாக்கியங்களையேபிராமணமாகக்கொண்டு ஆகமசம்ஸ்காரலேசமின்றி வேதததனுசாரி சாஸ்திர மாத்திரோக்த சமஸ்காரங்களையே செய்துகொண்டு அவ்வழி அநுஷ்டிப்பதாலும், வைதிகமாயகிரியைகளைநிர்விவாதமாய்செய்வதாலும்வைதிகர் இவரே. மற்றவர் கேவலவைதிகரல்லர். அவர்களுக்குத் தந்திர சம்பந்தமுமுண்டு. நாம் இங்கு மததாரதம்மியம்வகுத்திட்டாமில்லை அத்துவிதிகள்வைதிகரோ என்றும்.

VI. மறுப்பின்மேல்மறுப்பு. என்பதுஅதில்நம்மைப்பற்றி எழுதிய துர்வசனங்களை யகற்றிப் பதிலுரைக்கவேண்டியவையைத்திரட்டிடின் மூன்றுளது. அதாவது 1. யாம், இவர் எழுதிய வாக்கியம் ஒன்று பொருத்தமில்லை என்றேம். அதற்கேதோவித்துவான்கூடி சபைசெய்தாலன்றிப்பொருளுரைக்கமாட்டோமெனக்குறித்தார். அந்த ரகசியத்தை மறுப்பதெப்படி? 2. உலகம் ஸதஸத்தென்பது அத்துவிதிமதம் என யாம் சொன்னமையால் எமக்கு அம்மதம்தெரியாது என்றார். மிகச் சந்தோஷம்! இவர்தெரிந்துகொண்டவராயிற்றே. இனியேனும் 'மித்தை என்பது ஐவகைப்படும்' என விரித்தவத்துவிதநூலைக் கண்டு தெளிவாராக. மேல் 3. 'நேபாளம் முதலான விடங்களிலிருந்தும் கர்ணாடராஜாங்கங்களிலிருந்தும் பெற்றவைகளும் காலாவதியால்பாழானவைகளுமானசிலவைப்பேடுகளிருப்பதாய் பயங்காட்டினார்' என்றார். இவர் 'சங்கரா ஜகத்குரு என்பதற்குஇதரமதஸ்தர்கையொப்பமில்லைஎன்றதால் யாம்அவைகளைக்காட்டினோம். இவர்அவைகளுக்குங்காலாவதிச்சட்டம் ஏற்படுத்தியது யாம் அறியோம். அதுகளுக்குச் சற்றேரக்குறைய முன்னும்பின்னும் எழுதிய பாஷியங்களுக்கு இச்சட்டத்தில்ஏதேனும்விலக்கவிதியுண்டோஇல்லையோ அறியோம்-இவ்வித வசனங்கள் சாஸ்திரார்த்தவசனங்களாம். இறுதியில் 'மசகத்துக்கு மாதங்கம் பெரிதாயினும் அதுசிங்கத்துக்குமுன் வெளிவராதென்பதை இனியாவதுநண்பர் அறிவாராக' என்றார். ஐயோபாவம்! இவர் தமக்குத்தாமே கொடுத்துக்கொள்ளும் சிங்கப்பட்டமாவது ஜகத்குருப்பட்டம்போலாகாது நிலைக்கவேண்டித்தாமே தமது உபாஸனாமூர்த்தியை வழிபடுவாராக. ஆயினும் இவர் ராமதத்துவதீபிகைமுதலிய கிரந்தங்களில்மட்டில் இவர் சிங்கமாக, மற்றொருசாபம்எங்கிருந்தோவந்து புகுந்து கிடைக்கட்டும். எல்லாம் ஒருகாலவசம். அவருக்கு பரிகாசமும் விசடமும்இயல்பு. அவர் எழுதியதைப்படித்தவர் அதை அறிவார்.

Koviloor Digital Library

VII. 'அபவாதநிக்கிரகம்' இது எனது தாயார் மவுடி என்பதுபோல்வெளிவந்துஞானமிர்தத்தின் திருமேனியை விளக்கியது. சாமகுளத்தார் நாகைநீலலோசனியில் எழுதியதையும் இதையுமே படித்தால் சாமகுளத்தார் கூட்டியதும் குறைத்ததும் தெரியுவரத் தானே இவ்வபவாதநிக்கிரகம் ஓர் அபவாதஸ்தாபனமாய்முடியும். அவற்றைப்படித் தொத்துப்பார்த்துத் தெளிக. ஆனால் அதில் அதிகப்பிரசங்கம் என்றும் வேறு சிலவும் காணப்பட்டது. அது அப்பத்திரிகைக்கழகே. அவ்விதச்சொற்களைப் பதிப்பிக்க யாமர்கரல்லர்.

VIII. அசத்தியநிராகரணம் இவ்விஷயத்தில் அங்குநடந்த விஷயத்தை, யுண்மையறிந்து நடந்தபடி எழுதினால் பிரசுரிப்போம் தடையில்லை.

'பிரமவித்தியாவினால் நேர்ந்த ஒற்றுமை.'

VIII. ஐய! நமது பத்திரிகை ஆஸ்திகருக்குப் பொதுவாய் அவ்வப்பொழுது ஆஸ்திகருள் எந்தமதத்தைப்பற்றியும் பேசி வந்து ஒருவருக்கொருவர் கலகமின்றி ஒற்றுமை விளைவிக்கப் பிறந்தது என்பதுஉமக்குத்தெரிந்ததேயன்றோ! இப்பொழுது சிறிதுகாலமாய் வேதாந்த சித்தாந்தங்களில் ஒருசார்பாய் நமது பிரமவித்தியானுபந்தம் எழுதிவருவதும் ஒரு ஒற்றுமை செய்யவே. பாருங்கள்! ஞானசம்பந்தாவதாரவிஷயத்தில்பிணக்குற்று மகாவிரோதியாய் நின்று புஸ்தகங்கள் இயற்றிய ஞானமிர்தத்தார்,சூளைச்சோமசுந்திரநாயகர்இவர்களும்-ராமதத்துவதீபிகை அதனுபாஸ்விளக்கம், இவைகளை யெழுதிப்பிக்குணறற் ஸ்ரீமான் - உ.வே. ஸ்ரீநிவாசாசாரியார் மேற்படி சூ-சோமசுந்திரநாயகரும், வைஷ்ணவமதத்தை வேருடன் ஒழித்திட்டவரும் சைவருமான சாமகுளம்-ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணியசர்மாவும், சைவத்தை அழித்திடுவோம் எனப் பெரும்விருதுகூறும் சிவமதத்துவேஷம் நிறைந்தபண்டிதர் சித்தாத்துக்காட்டாரும் ஒருங்குசேர்ந்து ஒருவரை ஒருவர் புகழ்ந்து கலந்து ஏகசித்தாந்தியாகிப் புறமதக் கடிதங்களைப் பிரசுரிக்கவிடங்கொடாத ஞானமிர்தாங்கத்தில்எமது ப்ரம்மவித்தியாவை ஜெயிக்கக்கூட்டங்கூடி எழுதிவருகிறார்கள். இதுவே ஒருபெரும் ஒற்றுமையாகவின் 'இதுவும் நமது பத்திரிகையின் பயனுள் ஒன்றே.

பத்திராதிபர்.

சூறாவளிக் காறுவிளக்கம்.

வரலாறு.

திருவாவடுதுறைச் சிவஞானமுனிவரர் தமிழிற்சிறந்த விலக்கணமாகிய இலக்கணவிளக்கத்தை யிழித்துரைத்து இலக்கணவிளக்கச் சூறாவளியென வோர்நூலியற்றினர். அவ்விடத்திழித்துரைத்தனவெல்லாம் அவர் தமக்கன்றி வைத்தியநாத நாவலர்க்கு ஆகாமை இலக்கணவுணர்ச்சியின் முதிர்ந்தார்க்குப்புலனாம். அவ்வைத்தியநாதநாவலரை இச்சிவஞானமுனிவரரினும் நன்னுணர்ச்சி மிக்க ஸ்ரீசுவாமிநாததேசிகர் 'தமிழ்க்கிலக்காகிய வைத்தியநாதன்' எனப் புகழ்ந்ததுங் காண்க. இன்னோரன்ன பலகாரணங்களைக்கண்டு இலக்கண விளக்கத்துக்கிருந்த வோர்குறையை முடிப்பான் றொடங்கினேனேயன்றி முன்னோர்க்குக் குற்றங்கூறத் தொடங்கினேனல்லன்.

அன்றியும் யாவர்க்கும் மறவி உண்மையானும் அகத்தியர் தொல்காப்பியர் முதலாயினார்போல தவத்தான் மனந்தூயராயினாரல்லாதலானும் ஓரோவிடங்களிலே ஆசிரியர் இலக்கணவிளக்க நூலார்விட்ட வழுக்களை வழுவாகவே கொண்டேனல்லது பிடித்தது சாதிப்பான் றொடங்கினேனல்லேன்.

பாயிரம்.

"முன்னர்ப் பாயிரத்தைவைத்து இது பாயிரமென்றுரைத்
"துப் பின்னர் அதுகேட்ட மாணாக்கர்க்கு நூலுரைப்பான்
"றொடங்கினார் - இப்பாயிரமுரைக்க வேண்டுவதென்னைவெ
"ன்னுங்கடா நிகழ்தற்கு இடனுள்ளதாயவழி இவ்விவ்வேதுக்க
"ளான் முன்னர்ப்பாயிர முரைக்கவேண்டுமென் றிறுத்தல
"மையும். அவ்வாறோ ரியைபுமின்றித் "திருவிளங்கியமாநக
"ரம்' முதலாக வெடுத்துரைக்கு முத்தரஞ் செப்புவழுவும்
"மற்றொன்று விரித்தலுமாய் முடியுமென்க' என்றார். "வல
"ம்புரிமுத்திற் குலம்புரிபிறப்பும்" என்ற ஆத்திரையன் பேரா
"சிரியனுக்கு மிக்குற்றமுளதாகச் சூத்திரவிருத்திக் கட்டாமே
"யனுசரித்தலானும் இடனுளதாயவழி யெனவே இடன் இல்
"லாதவழியும் உண்டெனப் பொருள்படுதலானும் அவர்க்கு
"மது கருத்தென்றுபோலு மென்க.

"வடநூலாரும் மேற்கோள் முன்னர்க்கூறியே பின்னர் ஏது
"முதலிய நான்குறுப்பும் ஒன்றன்பின் ஒன்றியைபுபடக் கூ
"றுமாறறிக" என்றார். அது தமிழ்நூற்குப் பொருந்தாமை திருவள்ளுவர் முதலிய நூல்களிற் காண்க.

"பரிமேலழகர் உரையாளர் பாயிரமியம்புதல் கடனென்பதுபற்றி "இந்திரன்முதலிய" முதலாகச் சிறப்புப்பாயிரமே உரையாற் கூறினார்' என்றார் இது பயனில் கூற்றுமாறு சிற்றறிவினார்க்கும்புலனாம், ஆசிரியர் பரிமேலழகர் "பாயிரமில்லது பனுவலன்றே. யென்பதனை யுட்கொண்டு கூறினாரன்றிப் பாயிரமியம்புதல் கடனென்பது பற்றியன்றென்க.

"அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூலடங்காதென்றார். அவற்றியல்புணராமையி னென்றார் அவயவத்துள் அவயவியடங்காமை தெள்ளிதிற் புலப்படும். 'நூனுதல் பொருளைத் தன்னகத்தடக்கி' யென்றது நூனுதல் பொருளையன்றி நூலையன்றென்க. பாயிரத்தை யவயவியென்றும் நூலையவயவம் என்றுங் கூறினார், தொல்காப்பியத்தின் மெய்ப்பொருளுணராமையின்.

'சிறப்புப்பாயிரத்துள் ஆக்கியோன்பெயர் முதலியவற்றிற்கெடுத்துக்காட்டியவற்றுள் சிலபொருந்தாமை தொல்காப்பிய பாயிரவிருத்தியில் விரித்துரைத்தாம், ஆண்டுக்காண்க' வென்றார், அவை பொருந்துமாறு இளையனாரகப்பொருளுரையிற் காண்க.

(வரும்.)

இங்ஙனம்
நந்தனவருஷம் ஆடிமாதம் ௩உ } ச - பரமசாமிதீக்ஷிதர்.
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை.

Chidambaram:—Printed and published for the proprietor at the Brahmavidya Press No. 38, Senkalooneer pilliarkoli street.

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 12

நெ. கஉ.

ஸ்ரீ
வித்யா
ஶங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையை

ஆதரித்து வருவதர்கக் கொடுத்த நிருபத்தின் நகல்.

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதீகவாரணர்களாகிய த. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ ௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காஸம்வத்ஸரம்.
துலாரவி உஅ-உ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
[illegible]

Koviloor Digital Library

[illegible]

பிராமணரின் உட்பிரிவை மறுத்தல்.

ஐயா!

முற்காலத்தில் பரத்துவாஜர், கௌசிகர், கௌதமர், சாண்டில்யர், கண்வர், பராசரர் முதலிய மகரிஷிகள் இருந்தார்கள். இவர்போன்ற பிரமரிஷிகள் அனேகர் உண்டென்றும் அவர்களே ஆதிப்பிராமணர் ஆனவரென்றும் அவர்கள்மகிமை அளவுகடந்து புராணங்களிற் கூறப்பட்டுள்ளது. அவர்களைப் பற்றி எழுதுமிடமெல்லா மிக்காலத்துக் கிழவிகள் வழங்கிவரும் ஜாதிபேதம் ஏதுங்குறிக்கப்படவில்லை. வசிஷ்டர் எச்சாதியார்? ப்ரத்துவாஜர் வடமரா? கௌதமர் சோழியரா? இவ்விஷயங்களை நிச்சயிப்பதெப்படி? நமது பிராசீனமகரிஷி சரித்திரங்களைப் புரட்டிப்புரட்டிப் பார்த்தாலும் எங்கும் இந்த உட்பிரிவு காணப்படுவதில்லை. வேதங்களைப் பொருட்படுத்தவேண்டிய கருவிகளெனப்படும் புராணங்களுளாவது இவ்வுட்சாதிக் கதையுண்டா? இல்லை. இனி ஸ்மார்த்த தர்மங்களைக் குறிக்கும் மநுமுதலியோர் நூல்களிலும் இது வடமாசாரம், இது சோழியாசாரம் என்று எழுதப்பட்டதைக்காணோம். தர்மசாஸ்திரங்கள் எல்லாம் சாமான்னியமாய்ப் பிராமணர்க்குள்ள தருமங்களைமட்டில் விதிக்கின்றனவேயன்றி மற்றெவ்வேற்றுமையும்அவரிடங்குறித்ததில்லை.இவைகளால் இவ்வுள்வேற்றுமை எவ்வித மூலமும் இல்லாது வெளிவந்ததாக நிச்சயிக்கத்தக்கது. இங்கோர் சங்கையுளது. "அவசியம் வெகுகாலமாய்ச்சிஷ்டர் ஆசாரத்துட்பட்டனுஷ்டிக்கப்பட்டமையால் சிஷ்டாசாரமும் பிரமாணம்.ஆகவே அவசியம் இதை ஒப்பவேண்டியதே" என்பது. இதற்குச்சமாதானம் சொல்வதற்குமுன் சொல்லவேண்டுவது வேறுளது. இக்காலத்துச் சிஷ்டர் என்பவர் புதிய கன்மங்களை அனுட்டித்து அதை வைதிகம் எனவும் சொல்லுகிறார்கள். 'அந்தோ! இவர் கொண்டவழி கொண்டால் ஸகோத்திரவிவாகமும் மூக்குப்பொடி போடுவதும் கூட வைதிகமாகத்தடையாது. இக்காலத்தில் சிட்டர் எவரும் போடுகிறார்கள். இது சிலகாலம் அனுட்டிக்கப்பட்டால் அது காலஞ்சென்ற சிஷ்டானுட்டானமென்று நிச்சயமாய்ச் சொல்ல நேரிடுமே; (அங்ஙனமேயன்றோ வடதேசங்களில் பாங்கு குடிக்கும் துராசாரம் ஏற்பட்டது.) ஆதலால் அறிஞர்காள்! இதைச் சிட்டர் எனத்தற்காலத்தவரைக்கொண்டு சிட்டாசாரமெனலாகாது. இனி, பிறகு ஒருக்கால் ஒரு வித்துவான் ஸகோத்திரவிவாகம் கூடாது என்பானானல் அது சிட்டாசாரம் என்றல்லவோ சொல்ல நேரிடும். அம்மம்ம! வைதிகம் அவைதிகமாவதூஉம், அவைதிகம்வைதிகமாவதூஉம் அஸத்கருமம் சத்கருமமாவதூஉம் சத்கருமம் அசத்கருமம் ஆவதூஉம், சதாசாரம் அசாதாரமாவதூஉம், அசாதாரம் சதாசாரமாவதூம் கலியின் பெருமையன்றோ? இனிச் சிட்டாசாரம் என்பது தான் எது? என்பீரேல், கூறுதும்: எவ்வாசாரம் வேதங்களிலாதல் ஸ்மிருதிகளிலாதல் விலக்கப்படாது எதையும் அங்கீகரித்தால் குற்றமேதுமில்லை. எதனால் எமது மதம் கெ

Koviloor Digital Library

[illegible]

டாது அஃதே சிட்டாசாம் எனல் ஓவ்வும். இவ்விதமே ஒப்ப வேண்டுவதும் ஆன்ருேர் ஒப்பியதூஉம் என்க. பாருங்கள்! நமது சாஸ்திரங்கள் எல்லா வருணத்தாருமறிய வேதங்களை ஓதலாகாது என விதிக்கின்றன. 'விக்கிரகாராதனம்' வேதங்களில் சொல்லப்பட்டால் காட்டலாம். இன்றேல் அதை அவைதிகமென்போம் என்று சொன்ன அவைதிகளைநோக்கிப் பல வேதவசனங்களை விக்கிரகாராதன சாதகமாக ப்ரம்மஶ்ரீ சுந்தரராஜ சாஸ்திரிகள் முதலாயினோர் வெளியிட்டார்கள். அது மதத்துக்கு நேர்ந்த வாபத்தைக்காக்க வெளிவந்தமையால் குற்றமாகாது. நமது மதம் போய்விட்டால் பிறகு வேதாதிகளுக்கு ஏதும் பயனில்லையாதலால் அதைக் காக்கவேண்டியாம் ஏதுஞ்செய்யலாம். அது நீச்செயலாகமட்டு மிருத்தல் கூடாது. அதுபோல் வேதாதிவிரோதம் வந்தாலும் இவ்வேற்றுமையைக்காப்பாற்றுவதால் மதபரிபாலனம் வருகிறதென்று எண்ணவும் இடமில்லை. இவ்வவாந்தரபேதம் ஒப்புவதால் நேரும் மத அனர்த்தமளவில்லை. பட்டணங்களில் பல உள்வேற்றுமையுள்ள சாதியார் குடிகொண்டிருக்கிறார்கள். வேறு சாதியில் ஒருவன் புறமதம் புகுவானாயின் மற்றவன் சந்தோஷிக்கிறான். அவன் கெடுவதைத் தடுப்பதில்லை. ஏதோ நமது சாதியான் கெடவில்லை. மற்றைய சாதியான் கெட்டால் எமக்கென்ன? என்றிருந்துவிடுகிறான். இவ்விதமே உட்சாதியபிமானத்தால் ஒருவருக்கொருவர் உபகாரமின்றி வீணாகப் பொதுப்பிரயோஜனம் கெடுகிறது. இவ்வுள்வேற்றுமை அற்றால் இவர் ஒருவருக்கொருவர் சகாயஞ்செய்யவும் ஒருவர் கெட்டால் அதைத்தடுக்கவும் நேரிடும். இதுநிற்க. காலகதியறியாப் புல்லர் சிலர் செய்யும் அக்கிரமங்கள் இவ்வளவெனச் சொல்லவடங்காது. அவர்களைச்சொல்வதிற்றான் பயன் யாது? ஒருவன் புறமதத்தில் வீழ்ந்தால் நமது சரீரம் ஓர்புறம் கெட்டதாய் அல்லவோ பாவிக்க வேண்டும். புறமதத்தில் பறையரல்லவோ வீழ்கிறார்கள். நாம் அதைப்பற்றிக் கவனிக்கவேண்டுவதில்லையே என நினைப்பதுசிதமல்ல. ஒருசமயம் நீசர் எவருமில்லாது கிறிஸ்தவனாகி .விவிலியமேற்றிவீதியில் நுழைந்து உமது அகத்துட்புகுந்தால் நீவிர் அக்காலம் செய்வதேதோ? நமது தேசத்தில் பறையோர் மட்டிலாப்புறமதப் படுகுழியில் வீழ்கிறார்கள். மறையோரும் எவ்வளவோ உண்டு அம்மறையோரும் அங்கும் பறையோரும்சேர்ந்தேகணக்கிடப் படுகின்றார். பறையோர்முதல் மறையோர் ஈறாக எல்லோருமொருங்குசேரவேண்டும் என்று யாம் சொல்வதாக நினைக்கக் கூடாது. எவரிடமும் தயையுடன் அவரைப்பாதுகாக்கவேண்டும் என்பதே எமது அபிப்பிராயம். ஐய பண்டிதர்காள்! உண்மையை அறிந்துலகத்துக் குபகரியுங்கள்! இவ்வேற்றுமை அவைதிகம் என நாட்டுங்கள்! இவ்விருதாபிமானப் பேயையோட்டுங்கள்! எமக்கு பிடித்த பிடி நிறைவேற்றவேண்டும் என்கிற பிடிவாதமில்லை. இவற்றிக்குப் பிரமாணம் ஏதேனுமிருந்தால் அவசியம் தெரிவியுங்கள்! நம்மவர் பலர் வேதங்களைப்படித்தும் நூல்களைக்கற்றும் தர்மரகசியமறிந்தும் உலகத்துக்குபகாரம் செய்வதேயில்லை. இவர் புறமதத்தைக் கண்டிப்பதில்லை. அவைதிகாசாரத்தை ஓட்டுவதில்லை. இவர்

[illegible]

கள் படிப்பு இவர்க்கும் ப்யன்படுவதில்லை. மற்றவர்க்குமில்லை. ஏதோ இக்காலத்தில் இருவர் மூவர் தமது நாவலிமையை உலகோப்காரமாக ஆங்காங்கு காட்டிவருகிறார்கள். ப்ரம்மஸ்ரீ ப்ரம்மவித்தியா பத்திராதிபர், ப்ரம்மஸ்ரீ வெங்கிடகிரி சாஸ்திரிகள் இவர்கள் புறமதங்களை முறையே உள்நாடெங்கும் மலைநாடெங்கும் ஒழித்துவருகிறார்கள். இந்துலகுலேக சங்கத்தைச் சார்ந்த பிரசங்கிகள் எல்லோரும் ஏதோ செய்துவருகிறார்கள். இவ்விரண்டுமூன்று மகாபுருடர்களால்மட்டும் துர்மதம் ஒழிந்திடுமோ? எல்லோரு முயன்றாலன்றி ஒழிவது கடினம். ஆரியர்காள்! உங்கள் அதிசிலாக்கிய வாக்தோரணியை உலகத்துக்குப்யோகப்படுத்துங்கள். சிலர் இக்காலத்தில் வேதசாஸ்திராப்பியாசத்துக்குப் பயனேதுமில்லையென நினைக்கிறார்கள். இவர்மட்டில் பிரதிபபிரயோஜனத்தை எதிர்நோக்காது தன் மனதிற்பட்ட சித்தாந்தங்களைவெளியிற்பிரசங்கித்து லோகோபகாரம்புரிவாராகில் அவர்விஷயத்தில் பல பிரபுக்கள் நன்றியறிதலுள்ளவராகவிருந்து பொருளுபகாரம் செய்யவும் செய்வார். இனி விஷயத்தைப்பற்றிச்செல்வாம். இத்தேசத்தில் சைவர்சாக்தர்வைணவர்முதலியபலஉட்பிரிவிருக்கவில்லையா? அவர் நடையுடையாசாரங்கள் வேறுபட்டிருக்க, அவருள்ஒருவருடன் ஒருவன் சம்பந்திப்பது எப்படியெனில், கூறுதும்: வைணவசாதி சைவசாதியென இருவகைச்சாதி . சாஸ்திரங்களில் உள்ளதல்ல. அவரவர் வழிபடுகடவுளைப்பற்றி அவ்வப்பெயர் அமைந்தது. உடைகளில் ஏதும் தேசாசாரத்தால்மட்டில் நடக்கிறது. இக்காலத்திற்சில ஸ்மார்த்தர் வைணவமதத்தை யனுசரிக்கிறார்கள். அவர் வெண்டிருமண் புண்டரமும் தரிக்கிறார்கள்.அவர் பெண்கொடுத்து வாங்குவது ஸ்மார்த்தர்களுக்குள். அவர் ஸ்மார்த்தரா? வைணவரா? இங்ஙனம் வைணவர் சிலர் சைவராவதுண்டு. இதனால் இவர் சாதி கெடுவதில்லை.இதனால் சைவவைணவம் என்பதில் ஒரு கெடுதி யாது? அது பெரியோர் ஏற்படுத்திய புதிய ஏற்பாடே. இனி இவ்விதவுள்வேற்றுமைகளை ஒழித்து மென்மேலும் ஒற்றுமையை வளர்த்திடுவாரேல் அது அதிக குணத்தைக் கொடுக்குமாதலால் பெரியோர் இவ்விஷயத்தில் அகப்படும் பிரமாணங்களை அவ்வப்பொழுது நமது ப்ரம்மவித்தியாபத்திரிகை மூலமாகவெளியிடவேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வுள்வேற்றுமை எவ்விதப்பிரமாணத்தாலும் ஏற்படாது கேவலக்கட்டுப்பாடென்பது எமது மதம். இதற்கு ஏதேனும் பிரமாணமிருந்தால் வெளியாகலாம் அன்றோ? அதற்குத்தகுந்த பிரமாணம் கிடைத்திடின் அது விஷயத்தில் யாம் பின்பற்றப்பின்வாங்குவதில்லை.

(மொழிபெயர்ப்பு.) மற்றது வரும்.

இங்ஙனம்:

திருவேங்கிடம்-திருமலைசாஸ்திரிகள்.

Koviloor Digital Library

[illegible]

ப்ரஹ்மவித்யா.

[illegible]

ஶ்லோ:

[illegible]

ரஸிகரஞ்ஜநீஸஹித:

"குவலயாநந்த:"

ஶ்லோ:

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—ஈச்தன வரு ஆடிமீ 26வ

மதிமகோல்லாஸ மஞ்சரி.

இப்பெயர்வாய்ந்த ஓர்தோத்திரமுளது. இது தேவிஸ்தோத்திரம். இதன் பெயருக்கியைய மனிதன் மதிக்கு மகோல்லாசம் கொடுக்கத்தடையில்லை. எல்லோருள்ளத்தையும் நல்வழி நடத்தல் அப்பரம்பொருளுக்கேயுள்ளதாகவே அவ்வுண்மையறிந்தோர் இதன் பெருமையும்அறிவார். திருக்குடமூக்கிற்பிறந்த.அந்தணர்மணி சுப்பிரமணியர் என்பார் இதை இயற்றியவர். இவர் தேவியார் சௌந்தரியலகரியை இடைவிடாது சிந்தித்துத் தெளிந்தாராகையால் அதுபோன்ற சொன்னயம் பொருணயம் பொருந்தியிருக்கின்றது இந்தத் தோத்திரம். அக்கவிவாணர் குலத்திலுத்தமரும், வேணுவாத்தியகாரருட் சிறந்தவரும், அலாக்ஷிணவகங்கொண்ட காயகர் . சிங்கக்கூட்டத்துக்கேற்ற சரபமூர்த்தியும் வேணுவாத்தியத்தில் கண்ணனெனக்கண்டோர் கேட்டோர் மதிக்கப்பெற்றவருமானசாபேசுவரசாஸ்திரிகள் அவர்களால் பெரியோர் புகழை வெளியிடல் தந்தொழிலெனவறிந்து அச்சிலியற்றப்பட்டது. இது தேவியார் திருவடியிலன்புள்ள எவருக்கும் மனங்களிப்புறச்செய்யும் என்பதிற்றடையில்லை. இப்புத்தகத்தை எம்பால் அனுப்பியதற்கு·எமது நன்றியைச் செலுத்தவேண்டி மிக ஆவலுற்றவராயிருக்கிறோம்.

ரஸிகரஞ்சனி.

உரையுடன்கூடிய குவலயானந்தர்.

ஐய ரஸிகர்காள்!

சுவைநூல் படிக்க விரும்பும் எவரும் வடமொழியில் முதலிற் கற்றுவருவதும் பொருளணி வகுத்துரைப்பதும் காப்பியங்களுள் உள்ள நல்லணிகள் இவையேயெனத்துணிந்தோதுவதுமாளா குவலயானந்தம் எனும் ஒரு முதுநூல் நம்தேசத்து வடவியற்சுவைப் பகுதியறிந்தவர் அறிவுக்கெட்டாததல்லவே. இப்பொருளணிகளே காப்பியங்களி லமையவேண்டியவையென ஒன்பான் சுவைக்குறிப்பொருட்பெருமையறியாத பலர் கூறிநிற்பர். இச்சொல்லணி பொருளணிகள் இச்சுவைநூல்களில் விரிவாய்க் காணப்படுதலின் இதை அணிநூல்என வழங்குவார் பலர். இது குவலயம் என்னும் இவ்வுலகத்தை மகிழச்செய்வதுகொண்டு குவலயானந்தமெனப் பொருட்பொருந்த பெயர்பெற்றதுகாண்க. இந்நூலாசிரியர் அணிநூல் வகுத்தவர் எனவே கொண்டாடவேண்டியவரல்ல.

[illegible]

இவ்வறிஞர்வேள் இயற்றிய நூல்கள் நூற்றுநான்காமெண் பொருந்தியன. இவ்வாசிரியர் சிவாத்துவித சைவசித்தாந்த மூதருட்குரவருள் முன்னெழுந்த ஸ்ரீநீலகண்டசிவாசாரிய பாடியகாரபிரான் திருவருட்டிருவாக்கினுரையாசிரியர் எனச் சைவர் பலர் பணியும் பதமலரார். இந்நூலுக்கு உரைகள் பலவுள. அவை ஒன்பான்சுவை ஒழிக்கும் சிலரும் குறிப்பொருட்கூற்றுவனுமான நையாயிகப்போலிகள் எழுதியவையாகலின், அதில் அதனுண்மைப்பொருள் ஏதும் புலப்பட்டிலது. இங்ஙனம் அறிஞருமறிதற்கரிய பல நற்பொருளமைந்த நன்னூலொன்று நாள்வரையிற்குன்றிவருவதையறிந்த நாவலனொருவன் 'கங்காதர வாஜபேயி' எனப்பெயரியன் பெரியோன் 'இவ்விரஸிகரஞ்சனி'' எனும் விருத்தியுரையியற்றிப் பொருண்மயக்கப் பெரும்பேயகற்றினன். அவ்வுரை இதுகாறும் அணிநூலவாயிலைபெற்ற அறிஞரிடமேயிருந்தது. அதன் சுவை நாற்சுவையருந்திய எவரும் கண்டுமகிழவேண்டி யலைக்குடியில் பிறந்து மாயூரத்தருகிற்குடிகொண்ட பண்டித, ஈ. ஹாலாசியநாதசாஸ்திரியெனவோர் வடவணிப்புலவன் நாகரலிபியில் அச்சிலியற்றினன். மற்றுமுள்ள வடநூற்புலவரும் வழிமாறாது நன்னூல்களை அச்சியற்றிட முயல்வரேல் அற்பகாலத்தில் அங்கைநெல்லிக்கனிபோல் அலங்காரவுண்மை புலப்பட நன்னாட்டில் இன்றைக்கும் மேற்பெரும்புகழ்பெற்றுவடமொழி வழங்கநேரிடும். ஆதலின் இப்புத்தகத்தை வெளியிட்டவர்க்கு இவ்வித நன்முயற்சி குன்றாது நீடூழிவாழ்வு பெருகவேண்டி நீலகண்டப்பிரான் திருவருளைச்சிந்திக்கின்றோம்.

ஆரியாசார ரகசியம்.

விடியற்காலப்படலம்.

தொடர்பு.

இதுநடுவிற் சிறிதுகாலம் வேறு விஷயத்தில் சித்தத்தைச்செலுத்தியதனால் வெகு அவசியமான பிரகிருத விஷயத்தில் இறைநடாத்தாது உதாசீனஞ்செய்த குற்றத்தை மன்னிக்கவும்.

இப்பொழுது பிராணாயாமத்தின் பெருமையைப்பற்றி எழுதவேண்டும். இப்பிராணாயாமம் எனும நற்கிரியை எல்லாக்கன்மங்களுக்குமங்கம். ஒவ்வொரு கன்மங்களிலும் தருமசாஸ்திரக்காரர் 'பிராணனை அடக்கி' எனத் தொடக்கத்திற்றானே சொல்லுகிறார்களேயன்றி, ஓம்பூ: முதலியமந்திரங்களைச்சொல்லி, என்று சொல்வதில்லை. ஆகலால் இதன்பயன் பிராணனை அடக்குதலேயன்றி வேறில்லை. இப்பிராணாயாமத்தால் மனிதருக்காயுள்

Koviloor Digital Library

[illegible]

விருத்திபாகும். எங்ஙனமெனில் உலகத்தில் மனுஷியர்கள் பிரார்த்திக்கவேண்டிய வஸ்துக்களுள் ஆயுளே முதன்மைபெற்றது. அஃதொன்றில்லாதவழி மற்றேதும் பயன்படுவதில்லை. ஆகலாற்றான் வைத்தியத்தில் 'ஆயுளையே முதலில் பிரார்த்திக்கவேண்டும். "தானில்லாவிடம் மற்றேதிருந்தென்ன" என்று சொல்லப்பட்டது. ஆகலால் பிராணாயாமத்திற்கு நியதமான பயன் ஆயுட்பெருக்கமே. உலகத்தில் யோகிகளும் வைத்தியருமாராய்ந்து நிச்சயித்தபடி சுவாஸம் அதிகஞ்சிலவழியாவழி அதுவே ஆயுட்பெருக்கத்துக்கிடம் எனபதுண்மை. உலகத்தில் ஒவ்வொரு ஜந்துவும் பிறக்குங்காலத்திற்றானே அவனுக்குக் கன்மத்துக்கேற்றபடி ஒருவித வாயுள் ஏற்பட்டிருக்கிறது. ஆயின் ஆயுள் என்பது யோகிகள் நிச்சயித்தபடி ஒரு தினத்துக்கு இருபத்தோராயிரத்து நூறு 21100. இவ்வளவு சுவாசமே ஒருதினமாக ஆயுளிற்கணக்கிடப்படுகிறதேயன்றிச்சூரியன் சஞ்சாரத்தைக்கொண்டாயுளுக்குக் கணக்கேற்படவில்லை. இந்தச்சுவாசத்தைப்புத்திமானாகவுள்ளவன் கிரமமாய்க்காப்பாற்றிவருவானானால் அது அவனுக்கு ஏற்பட்ட ஆயுள் வெளிக்கணக்கான தினங்களில் அதிகம் இருக்கக்கூடுமாகையால் அவன் தீர்க்காயுளுள்ளான் எனக்கணக்கிடப்படுவான். இவ்விதம் நாடோறும் அப்பியாசஞ்செய்து மிகுதிபிடித்த சுவாசங்கள் எண்பெருகி இவனது ஆயுளை வளர்க்கும். ஒரு பிராணாயாமத்தை முறைப்படி சாமான்யமாய அனுட்டித்தாலும் அதனால் பதினாறு சுவாசங்கள் சங்கிரகிக்கப்படுகின்றன. இனி தின தோறும் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட நற்கருமங்களைப்பூர்ணமாகவனுஷ்டிக்கும் அந்தணர்க்குத்தினந்தோறும் நூறுபிராணாயாமம் ஆகும். எல்லாக்கன்மங்களை விட்டும் சந்தியாவந்தன மட்டில் செய்துவருபவனுக்குத் தினம் மூன்றுதடவைகளில் தடவைக்கு (14) பதினான்காக நாற்பத்திரண்டு ஆகும். இனி நூறு பிராணாயாமங்களுக்கு இருபது விநாடிகளும் மூன்றில் ஒருபாகமும் ஆயுள் கிடைக்கிறது. இவ்விதம் ஏழாவது வயதுமுதல் தனது ஆயுள் மற்றவரைப்போல் நூறுவருடத்துக்கு 3 தினங்கள்சுமார் கிடைக்க, சுமார் நூறுவயதுகன்மத்தால்பெற்றவன் மறுபடி வருடம் ஒன்று ஜீவிக்கலாம். இது அதிசுலபத்தில் ஆயுளைச்சம்பாதிக்கும்வழி. அனேக யோகிகள் அப்பியாசபலத்தால் தினக்கணக்காக சுவாசத்தைக் கட்டித் தமக்குக்கன்மவசத்தால் கிடைத்த சொற்பவாயுளை வெகுகாலம்வரையில் காத்துவந்து அதேசரீரத்திற் பல சித்திகளையும் பெற்றுவருகிறார்கள். கண்டீர்களா! அநாரியர் அறியாததும் ஆரியர்மட்டும் அறியக்கூடியதும்

[illegible]

[illegible]

[illegible]

அனுட்டிக்கக்கூடியதுமான இந்த ஆயுளிக்குங்கற்பகத்தை ஒழித்திடல் அறிஞர்க்கழகோ? இஃதிங்ஙனமிருக்க சிலர் இதன் உண்மையறியாது கூறும் கூற்றுகளாவன: உலகத்தில் சுவாசத்தை அடக்கிவருவதால் ஆயுள் விருத்தியடைவது நிச்சயமல்ல. மேன்மேலும் ஓடித்திரிந்து கொண்டிருப்பவனும் நீண்ட ஆயுளைப்பெறக்காண்கிறோம். பிராமணர் அல்லாத மற்றவர்க்குப் பிராணாயாமமின்மையால் அவர்களிலும் அனேகர் தீர்க்காயுளைப் பெற்றமையாலால் அது சம்பத்தக்கதல்ல என்பதும், பிராணாயாமஞ் செய்கிறவர் நீடித்து ஜீவிப்பதும் நியமமல்ல என்பதுமே. இதற்கு விடை வருமாறு: உலகத்தில் அவரவர் சம்ஸ்காரங்களுக்கேற்றபடி கன்மாக்களும் அதிகாரங்களும் ஆன்றோர்களால் அன்றே பிரிக்கப்பட்டு வழங்கிவருகின்றன. இவற்றுள் அரசர்க்கும் வாணிபர்க்கும் பிராணாயாமம் உண்டு. மற்றவர்க்கு வேறுவழியில் தொழிலதிகமாகவே, அதுகொண்டே பிராணாயாமமன்றியே ஆயுள் கிடைக்க வழியிருக்கிறது. அங்ஙனமே பெண்களும் தன்னறத்தை விடாதொழுகின் அவருக்கு அது மிகவும் நற்கதியும் நல்லாயுளும் கொடுக்க வல்லதே. உலகவியல் இது. எவனுக்குச் சித்தத்தில் சிந்தை அதிகமில்லை அவனுக்குச், சுவாசம் துயில்வோனுக்குச் செல்வழிவதுபோல் செலவழியும். மனதில் சிந்தையதிகரித்தால் உஷ்ணம் பெருகிச்சுவாசம் மிகவும லேசாய் ஓடும். அது அறிவுக்குப் புலப்படாது. நறுமணம் வீசும் நன்மலர்களை முகர்ந்தாற் சுவாசம் சிறிது தடைப்படும். கடுமையான வேலைசெய்யுமிடமும் சுவாசங் கட்டுப்படும். ஓடுவதாலும் ஓடுகிறவனாயினும் சுவாசம்கட்டுப்பட்டுநிற்கின்றது. ஓடுவது குதிப்பதுநீந்துவது இவையெல்லாம் மூச்சையடக்கியே முடிக்கவேண்டியவை. ஓடுவதால் சுவாசம் அதிகந்தொலைவதாகவெண்ணி அவனுக்கு ஆயுள் குறையவேண்டுமெனப் பூர்வபக்ஷிபார் கூற்றவலமானதறிக. இனி ஓடினின்றவுடனே வேகமாகச் சுவாசம் ஒழிந்துபோகவில்லையோ வெனில், ஆராய்ந்துணர்த்தாய்! அக்காலத்திற் செல்லவேண்டிய சுவாசத்துக்கு வேகமட்டும் அதிகமாவதால் ஓடினகாலத்துத் தடைப்பட்ட சுவாசங்கள் அவ்வளவும் தொலையாது மிகுதிபடத்தடை ஏது? ஓரோவேளையில் இரண்டு சுவாசம் வெளியேறுதலுண்மையல்லவா? ஆயின் சிலகாலங்கணக்கிட்ட ஓட்டம் ஆயுளைக் கொடுக்கத் தடையில்லை. இனி எதையும் ஓர் அளவுமீறிச்செய்தால் அது விபரீதப்பயனைக்கொடுக்கச் சுவாசக் குழல்களை அலங்கோலப்படுத்திவிடும். நல்லுணவுகிடைத்தழி அதை அளவுமீறி அகாலத்தில் உட்கொண்டால் அது விபரீதப்பயனைத்தாவில்லையா? ஆகையால் எதற்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

கும் ஓர் அளவும் காலமும் வேண்டும். ஆயின் முற்கூறிப பூர்வபக்ஷிபார் முதல் ஏது இனி ஒப்பத்தத்தக்கதல்லவென முடிந்தது. இனி முன் வருணத்தவரின் வேறுணவர்க்குப் பிராணாயாமப்பயனும் வேண்டுமோனல் பிராணாயாமம் அவர் செய்யவுஞ் செய்யலாம். செய்வதும் உண்டு. ஆயின் பிராணாயாமத்தால் ஆயுள் பெருகத் தடை ஏதுமில்லை. எவ்வித வழக்கமும் பாலியத்தில் செய்தாலன்றிப் பயன்படாததலால் அதைப்பாலியத்தில் அதாவதுஏழாவதுவயதிற்குனேதொடங்கும் வழக்கம் நன்னாட்டில் ஏற்பட்டுவருகிறது. வயதாய்ச் சரீரம் திடப்பட்டால் பிறகு மேல்வழக்கஞ் செய்வது சாத்தியமல்ல. குழந்தைப்பருவம் ஒழிந்தவுடனே குமாரப்பருவத்திற்குனே இதைத் தொடங்கிவைக்கவேண்டியே ஏழாவது வயதில் உபநயனம் செய்வித்தல் ஆரியர் வழக்கம். அக்காலமே புத்திபரிபாகமடைந்துவரத் துவக்கி மெல்ல விஷயங்களைக் கண்டறிய அவாநிலையுற்றுத்திரியும். அச்சமயம் அதற்கு சேர்ந்த எவ்விஷயமும் அனுஷ்டானத்திற்குவந்து புத்தியில் நன்கு பதியும். ஆயின் அதிசுலபமாய் ஆயுள் பெருக்கம், ஆரோக்கியமிகுதி, ஆன்மரக்ஷைமுதலிய பல பயன்கள் அடைவதை எப்புத்திமான் தவிர்த்திடுவர்? அப்பிராணாயாமம் ஸகர்பம் என்றும் அகர்பம் என்றும் இருவகைப்படும். அதில் மூன்றம்சங்களுண்டு. அவை ரேசகம், பூரகம், கும்பகமெனப்படுவன. இவ்விருவகைப் பிராணாயாமங்களின் இயல்பும் அதன் பயன்களும் அதனுள் வேற்றுமைகளும் பின்வரும்.

வேதாகமப் பிராமாண்யம்.

தொடர்பு.

முற்கூறிய முதல் ஏதுவைப்பற்றி விசாரிப்பாம். பரசிவத்தினது சத்தியோஜாதம்முதலிய ஐந்துமுகங்களினும் கலைகளின் வேற்றுமையால் சாந்தியதீத கலையிலமைந்த ஈசானமுகத்திற்பிறந்த ஆகமங்கள் ஸத்யோஜாதம் முதலிய முகங்களிற்பிறந்த வேதங்களினும் சிறந்தது' என்பது முதல் ஏது. இதனால் வேதங்கள் ஊர்த்துவஸ்ரோதஸ் அல்லவென்றும் மற்றவை ஊர்த்துவஸ்ரோதஸ் என்றும் ஏற்படுகிறது. இதற்குச்சமாதானம்: வேதங்கள் பரமேசுவரனது ஐந்து திருமுகமண்டலங்களில் ஈசானமுகம் ஒழிந்த மற்ற முகத்தில் உண்டானதாகப் புராணாகமங்களில் வசனங்களிருக்கின்றன. புராணங்களில் மகாபுராண வசனமில்லை. உபபுராணவசனமேயுள்ளது. நிற்க. ஏதானாலும் சரி. எப்பிரமாணம் அங்ஙனம் உரைத்தபோதிலும் அதனால் பிரமாண தாரதம்மியம் சித்திக்குமா என்பதைசுட்டில் ஆலோசிக்கவேண்டும். இதனால் யாதொருபிரமாண தாரதம்மியமும் ஏற்படுகிறதாக எமக்குத்தோற்றவில்லை. எதனாலேவெனின் 'நெய் உறைந்தாற்போல் சச்சிதானந்தங்கள் உறைந்ததே பரமபதியின் திருமேனி' என்பதாதி பல பிரமாணவசனங்களால் சதாசிவத்தின் திருவுருவமான அமலத்திருமேனியில் அடிமுதல் முடிவரையில் அவிவருட்டாரதம்மியஞ் சொல்லப்பிர

Koviloor Digital Library

[illegible]

மாணமும் இல்லை. சொல்வது உசிதமும் அல்ல. அதில் ஸ்வேரூபேதாபேதமும் ஒவ்வாது. பஞ்சபூத சரீரங்கள் இயற்கையில் அசேதனங்கள். அவைகளை அதிஷ்டித்து நிற்கும் ஜீவசைதன்யம அவ்வியாபகமாகவே அது ஒவ்வோரவஸ்தைகளில் சரீரத்தில் ஒவ்வோரிடத்து அறிவு வடிவமாய்த்தோன்றும் என நான்கு ஸ்தானங்களை நான்கு அவஸ்தைகளுக்கென நாபிகந்தாபிஹிய முதலிய உடயிடங்கள் கூறியிருத்தலால், அவைகளில் சிவசைதன்னியம் கார்யகாரியாகுமிடங்களும புறப்பொருளறியும் புலன்களுள் பெரும்பான்மையைத் தன்னிடம் அமையப் பெற்ற சிரம்முதலிய உறுப்புகளும் தாரதம்மியப்படும் என்க. பரமேசுவர சரீரம் கேவலம் அருண்மயமாய் நிற்றலாலும் அது தனித்த முற்றறிவே ஆதலாலும் முக்காலத்தும் அழியாநிலைபெற்றதாதலாலும் ஆனந்தமாத்திரமானமையாலும் அத்திருமேனியில் பாதத்தில அருள் குறைவு அறிவின்குறைவு எனவும் கூற மனந்துணியவில்லை. அப்பரமபதியின் அருட்டிருமேனியைத் தாரதம்மியப்படுத்துவதற்குத் தகுந்த பிரமாணமின்மையால் என்க. இனி அவ்வருண்மய அப்பிராகிருத சரீரத்தும் சித்து தாரதம்மியப்பட்டு ஈசானமுகத்தே அதிகமாமெனில், அந்தோ! அவ்வற்புதத் திருமேனியின் திருவடியைச் சார்ந்தவர்க்கும் சார விரும்புவோர்க்கும் முற்றறிவும் வியாபகத்துவமும் கூடாதொழிய ஈசானமுகத்தை உபாசித்தவருக்கே வீடுகூடுமே” என்றுமசொல்ல நேருமாதலின் சித்தாந்தம் சிதையும் என்பதைப் பூர்வபக்ஷியார் சிந்தித்தடங்குவாராக.

பாருங்கள்! வேதாந்தத்தில் தைத்திரீய உபநிடதம் அதைப்பண்ணித்து உபாசிப்பானுக, அவனிடம் விரும்பியது கைகூடும்’ என்பதாதி வசனங்கள் இருத்தலாலும் மற்றும் அநேகவிடங்களில் அடிபணிதலை முதற்சொற்பொருளாய்க்கொண்ட திருமந்திரமே வீடுகூட்டிவைக்குமெனச் சைவாதியோர் முழுநம்பிக்கையுடன் அதையே அனுட்டித்துவருவதாலும அமலனார் திருமேனியில் எவ்விடமும் முற்றறிவுமாத்திரையே அன்றி வேறெதுவும் அவ்வமலவருட்டிருமேனியில் சம்பந்திக்க நியாயமில்லை. ஆகவே எவ்விடத்துத்தோன்றியது எதுவாயினும் அது பரமேசுவரன் திருமேனியிலவதரித்தமாத்திரையில் முற்றும் பிரமாணமாகவே இருக்கவேண்டும்.

மேலும் சிவாகமங்களுள் எல்லாம் ஈசானமுகோற்பவங்கள் எனச்சிலவிடத்துள்ளதுபோல் தத்புருடம் முதலிய மற்ற முகங்களிலும் அவை உற்பவித்ததாகவும் சில ஆகமவாக்கியங்களுள. இனி சிவத்தியானத்தில் காமிகம் முதல் மகுடாகமம வரையிலுள்ள ஆகமங்கள் பரமேசுவரனது திருவடி முதற் திருமுடிவரை அங்கங்களாகத் தியானிக்கப்படுகின்றன. சிவாகமங்கள் சிவமூலம் ருத்திரமூலம் என இருவகைப்படும் எனவும் ஆகமங்கள் தாரதம்மியப்படுத்தப்பட்டன. ஆதலாற்றான் சைவபாடியகாரர் ஸ்ரீகண்டசிவாசாரியார் ‘வைதிகசித்தாந்தம் சுருதி யுக்தி சுவானுபவங்களுக்கொத்த’ தென்றும் ‘வேதங்களிற் சொல்லப்பட்ட அபின்ன நிமித்தோபாதான வாதமே நியாயசம்மதம்’ என்றும் ‘கேவல நிமித்தகாரண வாதம்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸர்வவேதவிருத்தமாதலால் அதை யங்கீகரிக்கக்கூடாது' என்றும் 'அவ்வித கேவல நிமித்தகாரண வாதம் யோகத்தில்மாத்திரமிருத்தலால் அது அப்பிரமாணம்' என்றும் (சிவாகமங்களும வேதங்களும் சித்தாந்தவிஷயத்தில் வேறுபடாமையால்) 'யாம் வேதசிவாகமங்கட்கு வேற்றுமை கண்டிலேம்' என்றும் 'வேதாகம தாரதம்மியவாதத்தைக் கண்டித்தருளினார்' என்க. அவ்வாசிரியரே இம்மட்டோடு விடாது 'வியாசசூத்திரங்கள் வீடுகைகூடச்செய்யும்' எனவும் 'கருமமீமாஞ்சை ப்ரம்மமீமாஞ்சை இரண்டும் ஒரு நூல்களாகையால் வைதிகமாகிய யாகாதிகருமங்களால் சித்தம் சுத்தியெய்தபிறகே ஞானத்தில் அவர்களுக்கதிகாரம் பிறக்கும்' எனவும் சொற்றார். இம்மட்டோ! தமது பாஷியக்காப்பில் '[illegible]' என்று கூறுவதாலும சோதிதாகம்பதார்த்தம் சிவனெனக்கூறுவதாலும் ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியர்கள் கொண்டபடி இவரும் ஏகாத்மவாதானுசாரியாகின்றார். அதுமட்டோ! தமது பாடியத்தில் '[illegible]' என்னும் ஸூத்திரத்தை வியாக்கியானஞ்செய்யுமிடம் 'வேதத்தாற்றான் அப்பொருளைக்கேட்கவேண்டும்' என்றும் 'அப்பொருளை அந்தணர் வேதங்களால் அறிவார்' என்றும் 'வேதமறியாதான் அப்பொருளையறியான்' என்றும் பல வேதவாக்கியங்களை உதகரித்து வேதங்களாற்றான் சிவஞானம் பிறக்கும் எனத்துணிந்தோதினர். ஈமதாசாரியருக்கு வேதசிவாகமப் பிராமாண்ய சமுச்சயவாதம் சம்மதமேயானாலும் வேதங்களில் விதிவாக்கியார்த்தவாத வாக்கியங்களுக்குள்ள தாரதம்மியம்போல் இங்கும் உண்டென அவர் கொண்ட உட்கருத்து அப்பாடியத்தைக்கண்டோருக்குத் தெற்றெனப்புலப்படும். அவர் பாடியத்தில் சித்தாந்தத்துக்காவது மற்றெதுக்காவது ஒரு சிவாகமவாக்கியத்தையும் உதகரித்தாரில்லை. சிவாகமங்கள் வேதங்களிலும் சிறந்தனவெனச் சித்தாந்தப்படுத்தவுமில்லை. ஆயின் மேற்கூறிப்போந்த பல நியாயங்களால் வேதானுசாரிப் பிரமாண முக்கியங்கள் ஆகமங்களாகலாம் என்பது ஸ்ரீசிவாசாரியர் கருத்தாகின்றது.

மற்றது வரும்.

சம்ஸ்கிருதபாஷை.

தொடர்ப்பு.

வைத்தியம்.

இதுவரையில் வேதங்கள், தருமசாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் இராமாயணம், வேதாங்கங்கள் இவைகளைப்பற்றி எழுதினோம். இதுநடுவேற்றானே மந்திரசாஸ்திரயோகசாஸ்திரங்களைப்பற்றியும் எழுதினோம். இனிப்பிரத்தியக்ஷ சாஸ்திரங்களில் வைத்தியசாஸ்திரத்தைப்பற்றி எழுதப்புகுவாம். இச்சாஸ்திரம எந்த ஜந்துவுக்கும் வேண்டியது. இதை வடநூலார் ஆயுள்வேதம் என்பர். இவ்வாயுள்வேத சங்கிதையை ஆரியர் வேதம்போலவே காத்தார்கள். இதன்பயனை நன்கு அனுபவிக்கவேண்டியது

Koviloor Digital Library

[illegible]

எல்லாப் பிராணிகளுக்கும் இன்றியமையாதது. இது தேவவாக்கெனவே நம்மவர் மிக ஆதரிப்பது வழக்கம். அச்சங்கிதை நாற்பகுதியுள்ளது. இதில் முதற்பகுதி சூத்திரஸ்தானம். இரண்டாவது சாரீரம். மூன்றாவது நிதானம். நான்காவது சிகித்சை, இவ்வியவஸ்தை ஸர்வ வைத்திய சாஸ்திரங்களிலும் உள்ளது. அவற்றுள் சூத்திரஸ்தானப் படலத்தில் சிருட்டி முதற் பிண்டோற்பத்திவரையிலுள்ள விஷயங்கள் அடங்கின. மேல் சாரீரபடலத்தில் சரீரயந்திர அமைப்பும், அகளிபல்டும், பிரகிருதி சத்துவம்முதலிய பகுபாடுகளும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டன. மூன்றாவது நிதானபடலத்தில் ரோகங்களின் வேற்றுமைகள், அவற்றின் இயல், அவற்றின் சாத்திய சாத்தியநிலை, அவைகளின் இளமை முதுமைமுதலியன சிலயந்திரங்கள் இவைவிஸ்தரிக்கப்படுகின்றன. நான்காவது சிகித்சையில் முன் நிதானபடலத்துட் கூறப்பட்ட ரோகங்களுக்கு நால்வகைச் சிகித்சைகள் விரித்துரைக்கப்படுகின்றன. சிகித்சை தைவம், ஆசுரம, சித்தம், மாநுஷம் என நான்குவிதம். இவற்றுள் 'தைவம்' என்பது சத்தால் சாதிப்பது. ஆசுரம் என்பது காரம் கத்திமுதலியவற்றால் செய்வது. 'சித்தம்' என்பது மந்திரத்தால் முடிவது. 'மாநுஷம்' என்பது தழை வேர்முதலியவற்றாலாவது. இவற்றின் இயலும் வரலாறும் சமயம் நேர்ந்துழி தெரிவிக்கப்படும். இங்கு வைத்திப் பொதுவியலே கூறவெழுந்தாமாகையான் என்க. அதில் வைத்தியனுக்கு அவசியம் நால்வித சிகிற்சையுமறிந்திருத்தல் இலக்கணம் எனப்படுகிறது. இக்காலத்து வைத்தியர் எவருக்கும் முதல் முப்பகுதிகளின்பொருள் ஏதும் தெரியாது. இனி நான்காம் பகுதியாகிய சிகித்சையில் சிறிது தெரியும். இதைக்கொண்டே இவர்தாமே வைத்தியர் எனச்சொல்லிக்கொள்வது. இவரே இவ்வாயுள் வேதகால மிருத்யு எனப்படுபவர். அந் "தோ! முன்னோர் ஸுச்ருதம் கேளாதான், சரகம்பாராதான், வாகடம் வாசியாதான் வைத்தியனுவதுண்டோ" என்றதும் பொய்யாய் அவற்றையறியாதவரை வைத்தியர் எனப்படும் காலம் வந்ததே. இக்காலத்தில் வயிற்றுப் பிழைப்புக்கெனக் காலத்துக்கேற்ற கோலங்கண்டு திரியும் மற்றவர்மற்றையசாஸ்திரங்களை ஒழித்திட்டார்போலஇவர் இக்கன்னூலையும் ஒருவாறு ஒழித்திட்டார். நிற்க. வேதாதிஸர்வவித்தியாஸ்தானங்களையும் முதலில் அருளியதுபரமேசுவரனேயெனஸித்தாந்தமாகவேஇவ்வாயுள்வேதசங்கிதையும் கண்ணுதற்பிரான் கண்டருளியமுதனூல் என்பார். ஆதலாற்றான் முனிவர் வாதராயணர் மாபாரதத்தில் சாந்திபருவத்து மோக்ஷதருமப் பிரகரணத்தில் 'திரும்பவும் அப்பகவான் தியானித்து 'என்றுதொடங்கி' அம்மகாதேவன் சர்வசாஸ்திரங்களையும்சிருஷ்டித்தான்' என்றுங்கூறிப் பிறகு அவர் சிருஷ்டித்த முதநூல்களைச்சொல்லுமிடத்து 'ஆயுள்வேதம் தனுர்வேதம்காந்தர்வவேதம்எனமூன்று' என்றவசனத்தையும் உபயோகித்தார். இங்கு குறித்த முக்கட்பிரான் அருளிய முதநூலாகிய வைத்திய முதநூல்க்கு வழிநூலாக ஆசிரியர் பதஞ்சலியார் ஆதியோர் பல நூல்களை இயற்றிவைத்தார்.

வரும்.

Koviloor Digital Library

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்.

௪-ம் புஸ்தகம்] சிதம்பரம். நந்தன௵ ஆடி உசூஉ [இலக்கம் - ௧௨.

ம-ா-ா-ஸ்ரீ, சூளை. சோமசுந்தரநாயகரது

ஆபாச விடை

1892௵ மேமீ 11௳ வெளியான ப்ரம்மவித்தியா வின்கண் ஞானாமிர்த பத்திராதிபரை யெட்டுவினாக்கள் வினவினோம். ஞானாமிர்த பத்திராதிபர் இதுவரையில் ஏதும் விடையளித்தாரில்லை. இனி யளிப்பாரோ என்னமோ அறியேம். இங்ஙனமாக நாகைநீலலோசனியில் "ப்ரம்மவித்தியா ஆரியன்" வினாவின் அழிவுபாடு" என நாமந்தந்து, ஞூ. சோமசுந்தர நாயகரெனக் கைபொப் பமிட்ட வொருவர், பதிலளிப்பார் போன்று வெளியேறி, விளக்கெண்ணெய் வார்த்துச் சௌசம் செய்வார்க்கொக்கச் சில பலபேசிக்குழப்பி, அதுவரையில் பதில் அளித்துவிட்டதாக மனப்பாலருந்தி, தாம் ஏதோ சாதித்துவிட்டதாகக் களித்து, வினாவை அழிவுபாடு செய்ததாகப் பொலிவிருத்தி கூறி, "ஏகவாதத்தின் தலையில்இடி விழும்" முதலிய நாஷணைச் சொற்களைப் பிரயோகித்து வீண்காலம் போக்கினார்.

இவர், நாம் விடுத்த வினாக்களைத் திருப்பியொழிப்பாமென்று தொடங்கி, நம்மைக்கேள்வி கேட்கிறார். நாம் ஞானாமிர்தத்தார், சைவமதஸ்தாபகராகவும் புறமதத்தை நிராகரிப்பவராகவும் பேசுவதாலும் அதற்காகப் பத்திரிகை நடத்துவதாலும் அவரைக்கேள்வி கேட்க வெழுந்தனம். அவ்வாறு நாம் அந்தஸ்தானத்தை யடைந்து எமது மதசித்தாந்த மின்னதெனக் காட்டும்போது எம்மைக் கேள்வி கேட்டால் சொல்வோம். அவ்வாறில்லாதபோது எம்மைக் கேட்கவேண்டிய தென்னை? இவரது ஏகவாதத்தின் தலையிலிடி விழும் என்றும், பிரமத்தின்மொழி யென்பது பேதமையேயாம் என்றும் இன்னுமிவ்வாறு பலவிதமா யிகழ்ந்து தருக்க வரம்புமீறிப் பேசுவதழகோ! நாமின்ன மதஸ்தரென் றுரையாடாதிருக்கவும் எம்மை யொரு மதஸ்தராக்கி அம்மதத்தவரை யிகழ்ந்து கூறவேண்டியவைகளை யெமதுமேல் கூறினாரே! இப்படிப்பேச இவருக் கெந்தத் தருக்கநூல் இடந்தந்தது? இவருக்கும் தருக்கநூற்கும் எவ்வளவுதூரம்! தருக்கநூலேற்பட்டதி யார்க்கு? இப்படி வரம்பிகந்து பேசும் வாதலக்ஷணந் தெரியாதவர் பொருட்டல்லவா! வாதலக்ஷணந்தெரியாது ஒன்றிருக்க வொன்று தடுமாறிப்பேசுவோர்க்காகத் தருக்கநூல் ஏற்பட்டும் அதை லக்ஷியஞ் செய்யாது தம்புத்திபோனமட்டில் பேசும் இவருடனே வாதஞ் செய்வதிற் பயனில்லையேனும் பொதுஜன நன்மையின் பொருட்டுப் பேசக்கடமைப்பட்டோம். நாம்கேட்ட கேள்விக்கு இவர் சொன்ன சமாதானம் சமாதானமாகாமல் ஆக்ஷேபத்தைப் பின்னும் பலப்படுத்தி விட்டது.

ஷை ஞூ. சோமசுந்தர நாயகரென்பார், "புறச்சமயத்தவர்க்கிருளாயகச் சமயத்தொளியாய்ப் புகலளவைக்களவாகிப் பொற்பணிபோலபேதப், பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமுமின்றிப் பெருநூல் சொன்ன, வறத்தினால் விளைவதாயுடலுயிர் கண்ணருக்கனறிவொளிபோற் பிரிவருமத்துவிதமாகுஞ், சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ்சைவசித்தாந்தத்திற னிங்குத் தெரிக்கலுற்றாம்" இந்தப் பாட்டைத்தான் கேள்விக்கு உத்தரவாகச் சொன்னதோடு, அதற்குரை தாமே சொல்லாது, "நல்லாசிரியரையடைந்து அவருக்கேவல் செய்து கேட்டுத் தெளிந்தின்புறுவாராக" என்று வழிகாட்டி விட்டார். ஆசிரியரின்னாரென்றுஞ் சொன்னாரில்லை. ஓராசிரியரைக் கேட்டு அதைக்கொண்டு இவருடன் பேசும்போது அது தமக்கு விரோதமானால் அவருக் கேவல் செய்து தெரிந்துகொள்ளவில்லை யென்பாராக்கும்! ஏவல் செய்து கேட்டுத் தெரிந்துகொண்டாலும் அவர் நல்லாசிரியரல்ல வென்றாலென்னசெய்கிறது! ஓர் சபையில் மத்தியஸ்தர் முன்னிலையில் வாதலட்சணப்படி வாதப்போர் செய்யும்போது அதற்கு இவ்வாறு விடைதருவாரா? தந்தால் அச்சபையாரும் மத்தியஸ்தரும் சபாநாயகரு மிவரைப்பற்றி இன்னது சொல்வார்களென்று இதைப்படிப்போரே அறிந்துகொள்வார். நாம் கேட்ட கேள்விக்குத் தாம் விடைகூறி,

Koviloor Digital Library

பின் மேற்கோளாகச் செய்யுளைக் காட்டாமல் பொத்தமாய்ச்செய்யுளைக் காட்டிவிட்டதினால் இவ்விஷயத்தில் வாயைத்திறந்தாலென்ன அனர்த்தம் வருமோவென்று பயந்து ஒளித்ததாய்த் தெரிகிறது. ஷை பாட்டில் பொன் மணிபோல் அபேதமும், இருள் வெளிபோல் பேதமும், சொற்பொருள்போல் பேதாபேதமு மல்லவென்று கூறியிருக்கிறது. அது நியாயந்தான். ஏனென்றால் நாம்கேட்ட கேள்வியில் ஷை மூன்றுக்கும் தோஷங்காட்டியிருக்கின்றோம். அந்தத்தோஷத்தை யிவரும் ஒத்துக்கொண்டே ஷை பாட்டை மேற்கோளாகக் கொண்டு, உடலுயிர்போலும் கண்ணொளி சூரியனொளிபோலும் பிரித்தற்கரிதாயும் அநந்யமாயு மிருக்கிறதென்றார். பதிமுதலியவைகட்குப் பசு முதலியவைகள் பின்னமா, அபின்னமா, பின்னாபின்னமா வென்று கேட்டு, அம்மூன்று வகையினாலும் குற்றங்கூறிமறுத்தனம். அது சரியென்று இவரும் ஒப்பினாரென்பதற்கு இவர் கூறிய பாட்டே சாக்ஷியாகும். அதன்மேல் இப்படிப்பட்ட குற்றங்கள் நிகழாதபடி கூறவெழுந்தார் போன்று உடலுயிர், கண்ணொளி சூரியனொளி திருட்டாந்தங்கூறினார். உடல் உயிரும், கண்ணொளி சூரியனொளியும் பின்ன முதலிய மூன்றையும் கடந்து எப்படியிருக்கும்? உலகில் எந்தப் பொருள்களும் பின்னமாகவாவது, அபின்னமாகவாவது பின்னாபின்னமாகவாவது இருக்கவேண்டும். இம்மூன்றையுங்கடந்த இலக்கணமுள்ள பொருள்கிடையாது. மேற்சொன்ன மூன்றிலும் பின்னாபின்னப்பொருள் அகப்படவேமாட்டாது. பின்னாபின்ன இலக்கணத்திற்கே இடமில்லாதபோது அதனுடன் மூன்றிலக்கணத்தையுங் கடந்து சொல்லவருவது எவ்வளவு ஆராய்ச்சியில்லாமை. அப்படித்தான் சொல்லவந்தாரே; என்ன சொல்லுகிறாரென்று பார்த்தால் "பழைபகுருடி கதவைத்திறவடி" என்றதுபோலப் பின்னம் அபின்னமாகிய இரண்டு குற்றங்களுக்கே யிலக்காகின்றார். உடலும் உயிரும் இரண்டு பொருளென்று ஒவ்வொரு ஆஸ்திகருமொப்புவர்; உடலும் உயிருமொன்றென்பவர் நாஸ்திகர். பின்னையது இவர்க்குடன்பாடன்று; இவர் வேறென்று கொள்பவரே. இப்படிக்கொள்பவர் பிரிவருமத்துவிதமாகுமென்றுங் கூறுகின்றார். இதற்குவமேயம் ஷை பாட்டினுரையில் "கர்த்தாவையும் பிரபஞ்சத்தையும் தன்னிற்பிரித்தற்கரிதாய் அநந்யமாயிருக்கிற சிறப்பினையுடைத்தாகிய" என்கிறார். அத்துவிதமென்னுஞ் சொல்லுக்கு ஒன்றுமல்லவாம்; இரண்டுமல்லவாம், பிரிவருமத்துவிதமென்பதில் பிரிவரும் என்பதற்குப் பிரித்தற்கரிது என்கிறார். உடலும் உயிரும் பிரித்தற்கரிதோ? உடலும் உயிரும் வேறாயிருக்க, அதைப்பிரித்தற்கரிதென்று சொல்வதென்னே! உடலுமுயிரும் தன்னிலொன்றுபட்டறியு மென்றுங் கூறுகின்றார். இதனால் இவர்க்கு வந்தலாபமென்னை? இராமனும் லட்சுமணனுமொத்து எந்தக்காரியங்களுஞ் செய்கிறார்களென்னில் இராமனும் இலட்சுமணனும் ஒருவராவரா? அத்துவிதமென்னுஞ்சொல்லுக்குப்பொருள் ஒன்றுமல்ல; இரண்டுமல்லவென்றால் பின்னையெத்தனை? உடலும் உயிரும் ஒன்றுமல்ல, இரண்டுமல்லவென்றால் பின்னை எத்தனையோ? உடலும் உயிரும் என்பது இரண்டு பொருள். அதை ஒன்றல்லவென்று கூறுவது நியாயமாயேயன்றி இரண்டுமல்ல வென்று கூறுதல் எப்படி நியாயமாகும்? இரண்டுமல்லாவிடில் மூன்று நான்கு ஐந்து முதலிய வெண்களிலொன்றனைக் கூறலாமா? உவமானமிவ்வளவு இலக்கணத்தைக் கொண்டிருக்கும்போது உவமேயமும் இப்படித்தானேயிருக்கும். உடலும் உயிரும் தன்னிலொன்றுபட்டு அறியும் அறிவைப்பிரிக்கவொண்ணாதெனவும் வியாக்கியானத்திலிருக்கிறது. அறிவு உயிரினது குணம். உடலினது குணமன்று. அறிவைப் பிரிக்கவொண்ணாது என்பதில் எதைவிட்டுப் பிரிக்கவொண்ணாது? உடலைவிட்டா? உயிரைவிட்டா? உடலைவிட்டுப் பிரிந்துபோவது யார்க்குங் கண்கூடு; உயிர்க்கு அறிவு குணமாகலின் பிரிந்துபோகாது. வேறு என்ன விசேஷமிருக்கிறதோ அறிந்திலம். இதுபோகக் கண்ணொளி சூரியனொளித்திருஷ்டாந்தத்தையும் சற்றுப்பரியாலோசிப்போம். ஷை பாட்டின் வியாக்கியானத்தில "கண்ணொளியும் ஆதித்தப்பிரகாசமும் தன்னிலொன்றுபட்டு நிற்கும்" என்று கூறியிருக்கின்றது. சூளை நாயகரோ இப்போது இதற்குத்தாவாதி. சூரியனுக்குப் பிரகாசமிருப்பது உண்மைதான். அவ்வாறு கண்ணுக்கும் பிரகாசமிருக்கிறதா? கண்ணுக்குப் பிரகாசமிருக்கிறதுண்மையானால் இருளில் பொருள்களையறியவேண்டுமே. உலகில் பிரகாசமுள்ள பொருள்களித்தனைவகையென விரலால் எண்ணிவிடலாம். சூரியன், சில நக்ஷத்திரங்கள், அக்கினி, சில மச்சங்கள், அக்கினி பாஷாணம் சோதிவிருக்ஷமுதலிய சில பொருள்தான் பிரகாசமுள்ள பொருள்கள். கண் அப்பிரகாசப்பொருள்களிலொன்றாம். இங்ஙனமாகக்கண்ணைப் பிரகாசப்பொருள்களிலொன்றாக வைத்து, கண்ணொளியென்றெழுதியது ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. கண்ணுக்குச் சொற்பமாய்ப் பிரகாசமுண்டு. அத்துடன்சூரியப்பிரகாசத்தையுங்கொண்டு விஷயங்களையறிகின்றதென்னின், கண்ணுக்குப் பிரகாசம் சொற்பமாயிருக்கின்றதென்பதற்கு அநுபவம் யாது? உலகத்திலிருக்கும் பல வஸ்துக்களில் சிலவ

Koviloor Digital Library

ற்றிற்கு அதிகப்பிரகாசமும் சிலவற்றிற்குச் சொற்பப்பிரகாசமும் இருப்பதுண்மையே. எங்ஙனமென்னின் சூரியனுக்கு அதிகப்பிரகாசமும் அக்கினிபாஷாணமுள்ள மீன்முதலியவைகளுக்குச் சொற்பப்பிரகாசமுமிருக்கின்றன. சொற்பப்பிரகாசமிருக்கின்றதென்பதற்குச் சாக்ஷி சூரியன் அக்கினி முதலியவைகளில்லா இருட்காலத்தில் அவைகள் பிரகாசிக்கின்றன. ஜோதிவிருக்ஷமும் முற்றுமிருண்டகாலத்தில் ஜோதியாய் விளங்குகின்றது. அதில் இருட்காலத்தில் புத்தகங்களை வைத்துக்கொண்டு பிள்ளைகள் படிப்பதுமுண்டு. அவ்வாறு இருள் நிறைந்தகாலத்தில் கண்ணினிடத்துப் பிரகாசம் காணப்படுகின்றதா? இல்லையே. அன்றி ஒளிநூல்களிலே வல்ல சாஸ்திரிகளும் கண்ணுக்கு ஒளியிருப்பதாய் ஒப்புக்கொள்ளுகின்றாரில்லை. கண்ணினது ஒளியும் சூரியனது ஒளியும் ஒன்றுபட்டுநிற்கும் தன்மையதென்றும் அது பிரிக்கவொண்ணாதென்றும் வியாக்கியானக்காரர் கூறுகின்றார். கண்ணுக்கு ஒளியே இல்லாமையால் சூரியனொளியோடு கண்ணொளியொன்றுபடுமென்பதும் அது பிரிக்கவொண்ணாதென்பதும் வாய்வார்த்தையேயாம். கண்ணுக்கொளியிருப்பதாகவே வைத்துக்கொள்வோம். அதனாலிவர்க்கு வந்த ஆதாயமென்ன? இருவொளியும் ஒன்றோடொன்று மோதும். ஒருகாற்றோடு மற்றொருகாற்று மோதுவதுபோலாம். இந்த வுவமானத்தினால் இருபொருள்களும் கண்டப்பொருளாகின்றன. பூரணமான பதியின்கண் வேறொருபொருளெவ்வாறிருக்குமென்று கேட்டால் கண்ணொளியும் சூரியனொளியுமென்கிறார். உவமானப்படி பார்க்கின் பதியுங் கண்டப்பொருள்; மற்றப்பொருளுங்கண்டப்பொருள். இப்படியானால் கேட்டகேள்விக்கு என்ன சமாதானங்கொடுத்ததாயிற்று? சூரியனது அகண்டவொளியில் கண்ணொளி கலந்ததென்னின் ஒளியுள்ள பொருள் சூரியன்மாத்திரமன்று. அனேகபொருள்களிருக்கின்றன. அவ்வவற்றினின்றும் புறப்படுமொளியானது ஒன்றோடொன்று மோதுமேயன்றி யொன்றிலொன்றடங்காது. வயிற்றில் ஆகாரமடங்குவதுபோல் அடங்குமென்னின் அதனால் அடங்க இடங்கொடுத்த பொருளும் அடங்கிய பொருளும் ஒன்றாகா; வேறுவேறுதான். கலத்தலினால்பூரணஞ்சித்திக்குமென்னின் வெள்ளைமண்ணும் கறுப்புமண்ணும் கலந்தவிடத்து ஒரு மண்ணிருந்தவிடத்தில் மற்றொருமண்ணிராது. இந்தவுவமானப்படி பரிபூரணமான பதியின்கண் பசு இருத்தலும் உலகிருத்தலும் கூடா. கூடுமென்னில் வயிற்றிலாகாரமிருத்தல்போலும் வெள்ளைமண் கறுப்புமண் கலத்தல்போலுமாகும். கண்ணொளி சூரியனொளி திருட்டாந்தத்தால் பதியும் பசுவும் வேறுவேறு கண்டப்பொருளென்றும் பதி பூரணமாகாதென்றும் நியாயமுகத்தானேற்படுகின்றன. கண்ணுக்கொளியென்பது கிடையாதென்று முன்னமே கூறியுள்ளோமாகலின் அது ஆபாச திருட்டாந்தமெனவறிக. அப்படிப்பட்ட ஆபாச திருட்டாந்தமும் பொருத்தமில்லாமற்போனமைக்கு நாயகர் யாதுசெய்வார்? 'பதிபசு ஆகிய இரண்டு பொருள்களில் ஆதாரமெது? ஆதேயமெது? ஆதார ஆதேயங்களுக்குத் திருட்டாந்தமொன்று கூறவேண்டும். எனக்கேட்ட வினாவுக்கு விடைகூறாது நழுவவிட்டார் நாயகர்.

3-வது இலக்கமிட்டு "மாயைக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்னாபின்னமா? மாயையினிடத்து உலகுண்டாதல் மாதாவினிடத்துப் பிள்ளையுண்டாதல் போலா? வித்தினின்றும் மரமுண்டாதல்போலா? பால் தயிராவதுபோலா? மண் குடமாவதுபோலா? கயிற்றினிடத்து அரவுண்டாவதுபோலா? இவைகளல்லாவிடில் வேறெதுபோல்? மாயையின்கண் உலகம் பொருளா? குணமா? தொழிலா?" என்று கேட்ட கேள்விக்குப் பதில் வாய்திறக்கவில்லை. மற்றொரு வாதியையேதோ கேட்கிறாரேயன்றி இவர், தம்மதப்படியேதும் விடையளித்தாரில்லை.

4-வது இலக்கமிட்டு ஆன்மாவிஷயத்தில் பல கேள்விகள் கேட்டோம். இந்தக்கேள்வியினாலே எமது மதத்துக்கே நேத்திரபங்கந் தேடிக்கொண்டதாகச் சொல்லுகின்றார். எமது மதமின்னதென்றும் எமதுமத சித்தாந்தமின்னதென்றும் எமது மதத்தில் ஆன்மாவினது இலக்கணமிப்படிப்பட்டதென்றும் நாம்கூறவில்லையே! அங்ஙனமாக அவ்வாறு கூறவேண்டிய அவசியமென்ன? 'பேசப்போனாயோ, சாகப்போனாயோ' என்கிற பழமொழியை இவர் கேட்டேனுமிராரோ! வாயினால் பேசுவதினும் கையினால் எழுதுவதில் மிகுசாக்கிரதையா யிருக்கவேண்டுமென்று இவர் புத்தியிற்படவில்லையே! யாராவது கேள்விகேட்கும்போது அவரைத் தம்மனம்போல் ஒருமதஸ்தராக வைத்து அவரைத்திட்டாத திட்டுகளெல்லாம் திட்டிப் பேசாத பேச்சுகளெல்லாம் பேசி அவமதிப்பதில் இவர் முதற்றரப் பரீக்ஷை கொடுத்தவர். இந்தப் பரீக்ஷைக்குத் தக்க பரிசும் பெற்றவரெனக்கேள்வி. மத்தியஸ்தர் சரியென்றங்கீகரிக்கும்படி பேசவேண்டுமென்கிற நியமமிவர்க்கின்றுமில்லை, அன்றுமில்லை, என்றுமில்லை.

ஷை 4-வது இலக்கத்தில் கேட்ட கேள்விகளுக்குமிவர் சரியாய் உத்தரவு சொன்னாரில்லை. 'ஆன்மா வியாபகமெ

Koviloor Digital Library

லின் சரீரத்துக்குள் மாத்திரம் வியாபகமா? சரீரத்துக் வெளியிலும் வியாபகமா? சரீரத்துக்குள் வியாபகமெனின் அவ்வியாபகத்தினளவு எவ்வளவு? ஓரே அளவா? பல அளவா? ஓரே அளவெனின் எறும்பு சரீரத்துக்கும் யானை சரீரத்துக்கும்ஓரே அளவாயிருப்பதெங்ஙனங்கூடும்? பல அளவெனின் ஆன்மா விரிதல் சுருங்குதல்களான இலக்கணம் பெற்றிருக்கவேண்டுமே' என்று சரீரத்தை முன்னிலைபாக வைத்துக் கேட்டகேள்விக்கு ஒரு சிறிதும் விடைகூறினாரில்லை. ஆனால் வேறுவிதமாய் அடியில் வருமாறு கூறினார். 'ஆன்மா சிற்றறிவும் சிறுதொழிலும் உடையதெனவும் அது மாயையை நோக்க வியாபகமும் சிவவியாபகத்தில் வியாப்தியமாகத்தக்கதெனவும்" என்பதாம். இவர் விடை, இராமேஸ்வரத்துக்கு வழி யெப்படியென்றால் வடக்குத்திசையைக் காண்பிப்பதுபோலிருக்கிறது. நாம் 'சரீரத்துக்கு வெளியிலும் வியாபகமெனின் இச்சாஞானக்கிரியைகளோடுகூடிய ஆன்மா, சரீரத்துக்கு வெளியிலுமிருந்து அறிதல்மயமாயிருக்கவேண்டும்' என்றதற்கு நாயகர், 'அதன் அறிவு தொழில்கள் வியாப்பியமாகிய ஆணவத்தாற் கட்டுண்டிருப்பனவெனவும் கூறுவதுண்மை' என்றார். மேல் 'ஞானமயமான ஆன்மாவை அஞ்ஞானமெப்படி மறைக்கும்? ஒளியையிருள் மறைக்குமா? சூரியனை யிருள் மறையாதே" என்றோம். அதற்கவர் 'ஆன்மா ஞானவடிவமென்றது அதனது சிற்றறிவை. அச்சிற்றறிவுதானும் அறிவித்தாலன்றித் தானேயறியாது. இச்சிற்றறிவினை அநாதியே மலம் அல்லது அஞ்ஞான மறைத்தது சகஜம். இது என்போலுமெனின், கண்ணொளியைப் பூதவிருள் மறைத்ததுபோலாம்" என்று பகர்ந்தனர். ஆன்மா சரீரத்துக்கு வெளியிலேன் அறியவில்லையென்றால் ஆணவத்தால் கட்டுண்டிருப்பதே காரணமென்றார். இதனால் உள்ளேயிருக்கிற ஆன்மாவைக் கட்டவில்லை போலும். அங்ஙனமாயின் உள்ளேயிருக்கிற ஆன்மா ஆணவத்தாற் கட்டுப்படாமையால் மோக்ஷத்துக்கு முயற்சிசெய்யவேண்டிய அவசியமில்லை. அநுபவமெப்படி யிருக்கிறதென்னில் உன் ஆன்மாதான் மோக்ஷத்துக்கு வழி தேடுகிறதாயிருக்கிறது. ஞானமயமான ஆன்மாவை அஞ்ஞானமெப்படி மறைக்குமென்றதற்கு 'ஆன்மா ஞானவடிவமென்றது அதனது சிற்றறிவை' என்றதென்னை? மறைத்தகாரணஞ்சொல்வதை விட்டு அதனது சிற்றறிவை என்பானேன்? ஆன்மாவுக்குப் பேரறிவென்ப தொன்றுண்டோ? அதனை ஆணவமறையாதோ? சிற்றறிவு பேரறிவுஎன்னுமிரண்டறிவும் ஆன்மாவுக்குச்சொந்தமா? ஒன்றுசொந்தமா? ஒன்றுசொந்தமானால்இரண்டாம்அறிவுகற்பிதமா? ஆணவம்கற்பித்ததை மறைத்ததா? யதார்த்தத்தை மறைத்ததா? சிற்றறிவானாலுஞ்சரி, பேரறிவானாலுஞ்சரி அறியாமை யெப்படி அறிவை மறைக்கும்? மேலே நாயகர் 'கண்ணொளியைப் பூதவிருள் மறைத்ததுபோலாம்' என்கிறார். கண்ணுக்கு ஒளியுள்ளதென்பதை இந்தச்சன்மத்தில் மறக்கமாட்டார். குருட்டுப்பாடம் மூளையில் நன்றாய் ஏறிவிட்டது. எத்தனை பிரத்தியக்ஷாநுபவங்களை யெடுத்துக்காட்டினாலும் தான் பிடித்த முயலுக்கு மூன்றேகாலென்பதைப் பிடித்தபிடி விடமாட்டார். விடமாட்டாரேனும் கண்ணுக்கு ஒளி யில்லையென்பதை யிவர்க்கு நாமிச்சமயத்தில் உறுத்திச் சொல்லவேண்டியது நமது கடமை. கண் ஒளியுள்ளதாயின் அதை மறைக்க இருளாலாகாது. விளக்கு எவ்வளவு சிறியதாயினும் அதை இருள் போய் மறைக்குமென்பதை யொருவரு மொப்பமாட்டார். கண்ணுக் கொளியுண்டெனவும் அதையிருள் மறைக்குமெனவும் சொல்வது பொருத்தமில்லாமையால் இந்தத் திருட்டாந்தம் பயனற்ற திருட்டாந்தமாயிற்று. ஆகவே ஞானமயமான ஆன்மாவை ஆணவ மறைக்குமென்று சொல்வது யுக்தி யநுபவ விரோதம். கண்ணொளியைப் பூதவிருள் மறைக்குமென்றும் அவ்விருள் சூரியனை மறையாதென்றும் உவமானங்கூறி, அஞ்ஞான இருள் ஆன்மவொளியினை மறைக்குமென்றும் சிவவொளியை மறைக்காதென்றும் எழுதினார். ஒளியையிருள் மறைக்குமென்பது அநுபவவிரோதமாதலாலும் கண்ணுக்கொளி யில்லாமையாலும் இருள் அதை மறையாமையாலும் ஆன்மவொளியினை அஞ்ஞான மறைக்கவில்லையென்றே சொல்லவேண்டியதாகிறது.

ஆன்மாக்கள் வியாபகமா யிருத்தலால் பல ஆன்மாக்கள் ஒரு இடத்தி லெவ்வாறிருக்குமென்று நாம் கேட்டதற்குச் ஸ்ரீ சோமசுந்தர நாயகர் விடையளிக்கும் விநோதம் இது:

"ஒரு சந்திரனை யேககாலத்திலுள்ளார் யாவரதுகண்களும் பார்த்ததாகக் கொள்வோம். அப்படிப் பார்க்குங்கால் யாவரது கண்ணொளிகளு மிடைவெளியிலொன்றோடொன்று கலந்து வியாபித்தலும் அத்தனையும் அந்தச் சந்திரனை முற்றும் பரிசித்து இன்புறுதலுங் கூடுமாகையால் எமது வியாபகம் சாமஞ்சமேயாயிற்று." கண்ணொளி கண்ணொளியென்று விடாமல் கெட்டியாய்ப் பிடித்திருக்கிறவரையில் இவர் வாதங்களெல்லாம் ஆபாசத்தின்மே லாபாசமாகத்தானிருக்கும். சந்திரனு

க்கும்மொளியிருக்கிறதென்று சொல்லுகிறார். அதற்கு இயற்கையில் ஒளிகிடையாது. சூரியனது ஒளியைப்பெற்றுத் தான்ஒளிசெய்கின்றது. ஷெ சூரியனது ஒளிசந்திரனிற்பட்டுஅங்கிருந்து எங்கும் பரவிப பலருடைய கண்களுக்குள்ளும் செல்லுகின்றது. அந்த ஒளியைப்பெற்ற கண்கள் பல வஸ்துக்களையும் பார்ப்பதுபோல்சந்திரனையும்பார்க்கின்றன. மொத்தமாய் ஒளியொன்றேயாம் அந்தஒளிதான் எங்கும்பரவியிருக்கின்றது. ஒரேகாற்று எங்கும் வீசுவதுபோல ஒரேயொளியெங்கும்பரவியிருக்கின்றது-ஒளியினது அணுவைத் தனித்தனிநோக்குழி பொரு அணு இருந்த இடத்தில் மற்றொரு அணு இல்லை. ஒளி கலந்து வியாபித்தல் என்பது சமுத்திரத்தில் ஜல ரூபமான பல அணுக்கள் ஒன்றோடொன்று கலந்து வியாபித்திருத்தல் போலாம். இதனால் ஒருபொருளிருக்குமிடத்தில்மற்றொரு பொருளிராதென இந்த நாயகர் காண்பித்த வுவமானத்தினாலேயே விளங்கியொரு ஆன்மா இருந்தவிடத்தில்மற்றொருஆன்மா இராதென ஏற்படுகின்றது. பல ஆன்மா ஒரு இடத்திலிராதென்பதற்கு "ஒரு இடத்திலிரண்டுபொருளிருத்தல் கூடாது' என்றோம் அதற்கு நாயகர் "அது உருவப்பொருள்களிடத்தன்றி அருவப்பொருள்களிடத்திற் சிறவாது." என்றார். இதுவெகுவிந்தை! உருவப்பொருளில் சிறவாதபோது கண்ணொளி திருஷ்டாந்தமேன் எடுத்துக் கூறவேண்டும்? இவ்வாறு எழுதிய்கால் முன்கூறியகண்ணொளி வியாபித்தல் திருட்டாந்தமும், கண்ணொளி சூரியனொளி திருட்டாந்தமும் ஆபாசமென இவரே பொத்துக்கொள்ளுகின்றவராகின்றார். உயிர் உடல் திருஷ்டாந்தத்திலும் உடல் உருவதிருஷ்டாந்தமாதலால்உண்மையில்அதுவுந்திருஷ்டாந்தமாகாதெனவிளங்குகின்றது. சிறவாது என்று கூறினதுகொண்டுதிருஷ்டாந்தமே தன்னுபடி யல்லவென்பாரானால் சிறவாத திருஷ்டாந்தமென்றிவரே கூறிவிட்டமையால் நியாயவாதத்தால் தகர்ந்து போய்விட்டமை காண்க.

இனிச்சிறக்கும் அருவப்பொருள் திருட்டாந்தந்தான்யாது? அது இன்னதெனக் கூறவில்லையே. உருவப்பொருள் திருட்டாந்தந்தான் இவர் கூறியவாறு சிறவாதுபோயிற்றே; இனி தம் கூற்றைப் பலமாக்கிக்கொள்ளஅருவப்பொருள்திருட்டாந்தத்தையாவது சொன்னாரா? இல்லையே! பின்னையெப்படி அருவத்தில் ஒருபொருளில் மற்றொரு பொருளிருக்குமென்று சொல்வது? நாம் கூறுவதியாதெனின் உருவத்தில் ஒருபொருளில் மற்றொருபொருள் எப்படியிராதோ அப்படியே அருவத்திலும் ஒருபொருளில் மற்றொரு பொருளிருக்கவேமாட்டாது. இராமையினாலேதான் நாயகர் திருட்டாந்தம் யாதுங் கூறாது வாய்வார்த்தையாய்க் கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார். இப்படிக்கெல்லாம் ஆபாசமாய்ப் பேசிவிட்டு நமக்கு வியாபக இலக்கணந் தெரியாதென்றும் அதனால் கண்டகண்டவாறு பிரசங்கித்துக் கழிக்கிறோமென்றும் கூறினார்- இவருக்குத் தெரிந்தமாதிரி வியாபக இலக்கணம் நமக்குத் தெரியாமற்போனது குறைவுதான். இதன்மேல் நமது தெளிவை விவேகிகள் யூகித்தறிவது சுலபம் என்றார். இவருடைய தெளிவுக்கு முன் நமதுதெளிவு குறைவுபட்ட சங்கதிக்குவேறுவிவேகிகள் வேண்டாம்; இந்த விவேகியே யூகித்தறிந்து கொள்ளட்டும்.

இவர் நம்மைக்கேட்குங் கேள்வியில் உலகம் உருவமுடையதென்றும் ஆதலால் தொழிலல்லவென்றுங் கூறியிருக்கின்றார். இதைச் சற்று ஊன்றிப்பார்ப்போம். உலகம் என்பதன் பொருள் பஞ்சபூதத்தின் கூடுதலையே. பஞ்சபூதத்துக்கும் தனித்தனியே பெயரிருக்கின்றது. பஞ்சபூதத்தின் கூடுதலுக்கு உலகமென்று பேர். பஞ்சபூதம் தனித்தனியே யிருந்தால் அதற்கு உலகமென்னும் பேரில்லை. மனிதனுடைய அவயவங்களெல்லாம் தனித்தனியே வேறு வேறு இடத்தில் இருந்தால் அதாவது ஒன்று சிதம்பரத்திலும் ஒன்று சீர்காழியிலும் ஒன்று கடலூரிலும் இவ்வாறு பல விடங்களிலிருந்தால் மனிதனென்று சொல்லப்படாது. பஞ்சபூதமு மொன்றாய்க் கூடினால் அப்போது உலகமென்று சொல்லப்படுகின்றது. அவயவங்களெல்லா மொன்றாய்க்கூடினால் அதற்கு மனிதனென்று சொல்லப்படுகின்றது. கூடுதலாகிய தொழிலே பொருளாகவும் பெயர்ச்சொல்லாகவும் சொல்லப்படுவதனுபவம்- மண்ணாயிருக்குங்கால் கடமுளதெனக்கூறார் எவரும்- மண்ணினிடத்து வனைதலாதித் தொழிலேற்பட்டால் கடமுளதெனக் கூறுவர்- கடமுருவமென் றிவரும் மற்றொரு மங்கீகரிப்பர்- உருவென் றங்கீகரிக்குங் கடம் மண்ணினிடத்து வனைதலாதி தொழிலேயன்றி வேறன்று- நூல்தனித்தனியே யிருக்கும்போதுஆடையென்னும் பேரில்லை- நூல் குறுக்கு நெடுக்காக மாறும்போது ஆடையென்னும் பேர் பெறுகின்றது. மாறுதல் தொழிலன்றோ? அத்தொழில் நிகழாவிடத்து ஆடையென்பதேது? இவ்வாறெதை நோக்கினும் தொழிலுக்கே பொருட்பெயர் வந்திருக்கின்றது- அன்றி அத்தொழிலே யுருவமாகவுங் கொள்ளப்படுகின்றது. தொழிலைத்தவிரப் பொருளும் பெயருமில்லை- இது தத்துவசோதனையால் நிச்சயிக்கப்படுகின்றது- ஸ்தூல விசாரணை புரிவோர்க்கிது தெரியாதாயினும் சூட்சுமவிசாரணை செய்வோர் சரியென்றே அங்கீகரிப்பர்- ஸ்தூலபுத்தியுள்ள இந்நாயகர்க் கிஃது விளங்காவிடில் யாம் யாது செய்வோம்!

இந்நாயகர், வேதாந்திகளைச் சில கேள்விகள் கேட்கிறார் என்று முன்புரைத்தோம். அந்தக்கேள்விக்கு இவரபிப்பிராயப்படி அவர்கள் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர்கள் பொய்வாதிகளென்றும் பிரமம் ஒன்றே யுண்டென்றும்மற்றவைகள் பொய்யென்றுசொல்லுகிறவர்களெனப் பலவிடங்களிலும் இந்நாயகர் சொல்வதினாலேதான். பதிக்குப் பசுவும் உலகமும் பின்னமா, அபின்னமா, பின்னாபின்னமா வென்னும் கேள்விக்கு உத்தரம், பதியொன்றே யுள்ளதெ

ன்று சொல்லுகிறவர்கள் சொல்லவேண்டியதா? பதியினிடத்தில் பசுவும் உலகமும் இருக்கின்றனவென்று சொல்லுகிறவர்கள் சொல்லவேண்டியதா? ஒரு மரத்தில், கிளியிருக்கிறதென்று ஒருவனும், மரமொன்றே யுள்ளது, கிளி யில்லையென்று ஒருவனுஞ்சொல்லுகிறானென்றும் வைத்துக்கொள்வோம். மரத்துக்குக் கிளிபின்னமா, அபின்னமா, பின்னாபின்னமா வென்று கேள்வி கேட்க வேண்டுமானால் கிளியுள்ளதென்கிறவனை கேட்கலாமா? கிளியில்லையென்பவனைக் கேட்கலாமா? கிளி யில்லையென்பவனைக் கேட்கப்படாதென்றும், கிளியுள்ளதென்று சொல்பவனையே கேட்கவேண்டுமென்றும் பாமரர்கூடச் சொல்லுவார்கள். இதன்படியே பதியினிடத்தில் பசுவும் உலகமு முள்ளனவென்று சொல்பவர்களையே கேட்கவேண்டும். அவர்கள் உத்தரவுஞ்சொல்லவேண்டியது தான். பசுவும் உலகமும் இல்லையென்கிறவர்களை ஷை கேள்வி கேட்கவும் படாது; அவர்களுத்தரவு சொல்லவேண்டிய அவசியமுமில்லை. அவர்களை அந்தகேள்விகேட்பதுஎப்படி யிருக்கிறதென்றால் குதிரைக்குக் கொம்பு பின்னமா அபின்னமா பின்னாபின்னமா வென்று கேட்பதுபோலிருக்கிறது. இந்நாயகர்ஆன்மாவிடத்துக்கேட்கும்கேள்வியு மிவ்விதந்தெரியாமையையே காண்பிக்கின்றது. நாம்வேதாந்திகளுடைய சித்தாந்தத்தில் பசு உலக மிவைகள் சத்தென்றாவது அசததென்றாவது அல்லது வேறொன்றாவது நாம் சொல்லவரவில்லை. இந்நாயகர் பொய்வாதிகளென்று சொல்வதைக்கொண்டே நாயகர்மீது குற்றஞ்சுமத்தினோம்.

மற்ற 6, 7, 8, இலக்கத்தைப்பற்றிய விஷயங்களுக்குப் பதில் பின்னர் எழுதக்கடவோம்.

ஆரியன்.

அத்துவிதவிசாரம

(தொடர்பு)

அத்துவிதம் யென்னும் சொல்லின் நகரம் இன்மைப்பொருளைத்தவிர்த்துமற்றைப் பொருளும் கொண்டுமுடியாது என்பதைமுன்னரே நிரூபித்தோம்.இப்பொழுதுஅங்கு'ந'கரத்துள்ள பொருள்இதுவேயெனக்காட்டிடுவோம். இங்கு அத்துவிதச் சொல்லில் உள்ள "ந" என்பதும் வடசொல்லென்பது எவருக்கும் தெரிந்ததே. இச்சொல்லுடன் கூடிய அத்து விதச்சொல் வேதங்களில் உள்ளது என்பதும் அறிஞர் அறிவார். இவ்விஷயத்தை ஞானமிர்தத்தாரும் ஒப்பினர். வேதங்களுக்குப்பொருளுரைப்பது நிருத்தம் முதலிய வேதாந்தநூல்களைக்கொண்டே யெனஎல்லோரும் ஒப்பவேண்டும். அவ்விதம்ஆராயுமிடத்து இவ்வத்துவிதச்சொற்கு நிருத்த வியாகரணங்களைக்கொண்டே பொருட்படுத்தவேண்டுமாகிறது. அதை முறையே விசாரித்து அந்நகரத்துப் பொருளிது எனக்காட்டுவோம். நிருத்தம் 'யாஸ்கர் செய்தருளியது. அதில் பதகாண்டத்தில் சொற்களை நாற்பகுதிகளாக ப்பிரித்து" அப்பகுதிகளில் நிபாதப்பகுதியில்சேர்ந்த 'ந'கரத்துக்குப் பொருள் உரைக்குமிடம் அவ்வாறுபொருள்களை முற்கூறியவாறு கூறி பிறகு "ஆரோபம்" எனவொரு பொருள் அதிகமும்சொன்னார். அப்பொருள் பொருந்துமோவென விசாரிப்பாம். 'ந' கரம் ஆரோபப்பொருளைக்கொண்டு முடியுமாயின் இரண்டு எனும் எண்ணின் 'ஆரோபம்' அத்துவிதச்சொற்பொருளாகும். ஆயின் ஆரோபம் என்பது ஒரு பொருள் இல்லாவிடம் அதைப்பாவிப்பதே- உதாரணம்:—'இப்பியில் வெள்ளி' இப்பியிடம் இல்லாதபொருளை அதனிடம் அதனியலுடன் மாற்றி ஆரோபித்தலால்என்க- இவ்விதவாரோபம் பொருளாயின்,இரண்டெனும் எண்ணில்லாச்சிவ சீவர்களிடம் அதை ஆரோபித்தல் பொருளாகவே,என்றும் ஒருபொருளாய சிவசீவர்களை வேறாகப்பாவித்தல் அத்துவிதம் எனப்பொருள்பட்டுச் சித்தாந்தம் குலைந்திடும்- அற்றேல் ஆசிரியர்யாஸ்கமுனிவர் கூறியவாறுஆரோபம் தனிப்பொருளாயின் ஆன்றோர். நஞுய-டூாஷ்ஹ்ரு சீதி-டூதா: என்றுஎண்வகுத்தது அவலமாகாதோவெனின்,அற்றன்று-ஆசிரியர் கூறிய ஆறுபொருள்களையும் சொற்சுருங்க வுரைத்தால் 'ஆரோபம்.எனலாம்' என்பதேயாஸ்கமுனிவர் கருத்தாதலின், வையாகரண சித்தாந்த மஞ்சூஷா சாஸ்திரத்தின் ஸ்ரீநாகேசபட்டர் எனும் வடவியலாசிரியர் துணிபுரை யுரைத்தமையால் என்க- அங்ஙனமாயின் முற்கூறியவாற் பொருட்பொருத்தம் எவ்விதம் எனின் கூறுதும்- ஆசிரியர் பதஞ்சலியார் பாடியத்துரையில்கையடனர்இந் நகரப்பொருளாறையும்ஆரோபத்தடக்கலாம் என்றார். அவ்விதமே வாக்கிய பதீயம் என்னும் பெருநூலில் 'பர்திருஹரி' எனும் வையாகரணரும் சொல்லிமுடித்தார்-கையடத்துக்குரை செய்த நாகேசபட்டரும்அதை விரித்துஅறுபொருளும்ஆரோபத்தடங்குமெனவழிகாட்டினர். அதேவழி சிறுபான்மை வையாகாரண பூஷணத்தில் ஸ்ரீகொண்டபட்டராலும்,பிரகத்தர்ப்பணத்தில் ஸ்ரீஹரிதீக்ஷிதராலும். போதகாரிகையில் ஸ்ரீபட்டோஜி தீக்ஷிதராலும், நிபாதவிசாரப்பகுதியில் வாக்கியபதீயக்காரராலும், மற்றும் ஸ்போடசந்திரிகைமுதலிய பல நூலாசிரியர்களாலும் ஆங்காங்குவிரிக்கப்பட்டது- இனிபேதஇக்காரம் எனும் பெருநூலில் இதன்விரிவைக்காணலாம். மேலும் இவ்வறு பொருள்களையும் ஆரோபத்தடக்கும்பொழுதுஆரோபத்திடமாகவே அத்துவிதம் தோன்றி அது கற்பிதமாகித் துவிதம் கற்பிதம் எனப்பொருள்தந்துஅத்துவிதம் உண்மையெனப்புலப்படுத்தும் சொல்லாக வத்துவிதச்சொல்லமையும். இனி ஆறுபொருளும் ஆரோபத்தடங்கும் வழியையும் அவைகட்குத் தனியே உதாரணங்களும்அவற்றின் பொருட்பொருததமும் அத்துவிதச்சொல்லின்கண்ணமைந்த 'ந' கரப்பொருளாய வின்மை, ஆரோபத்தடங்கியும் அன்மைப்பொருளடங்கா வழியும் இன்மையன்றி வேறுபொருளைக்கொண்டு ஆரோபம் அத்துவிதச்சொல்லில் நிறைவேறுதென்பதையும் அடியில் முறையே விரிப்பாம்

வரும்

Chidambaram—Printed and published for the Propri-
etor at the "Brahmavidy Press" No- 38 Senkalooneer pillarkoil street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்யாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 13 நெ. கங.

ஸ்ரீ வித்யா சங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையை ஆதரித்து வருவதர்கக் கொடுத்த நிருபத்தின் நகல்.

ஸ்ரீராமநாதசகாயம்.

மது பிரியமுள்ள வைதிகவாரணர்களாகிய து. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுந்த,

அடுத்த கஅகூஉஹு முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் திர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காலம்வத்ஸரம்.
அவாரவிஉசு-வ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
ஹாஸ்கர ஸேதுபதி:

ब्रह्मविद्या.

नन्दनसंवत्सरः श्रावणमासः २८

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—நந்தன ௵ ஆவணி௴ 8உ

குருசிஷ்யமாறுபாடு.

௧௯௯-ம்பக்கத்தொடர்ச்சி.

ஐய, இப்பாதகண்டத்தில் இருவகை குலாசாரியருண்டு. சிலர் சில சம்ஸ்காரங்களைச் செய்து காசுபறிப்பவர். ஏதும்செய்யாது பெயர்பட்டில்வகிப்பவர் சிலர். இவற்றுள் முற்பகுதிவைணவசம்பிரதாயத்துளது. இரண்டாவதுகம்மியர் ஆதியோரிடம் உளது. இவருள் எவரும் முன்போல் அவரவர் தொழிலை நடத்துவதில்லை. இக்காலத்துக்குருக்களுக்கு அஞ்ஞானம் பூர்ணவியாபகம். முற்காலத்தில் சீடர்களை ஒருங்குசேர்த்துக் கூட்டங்கூட்டி இந்த சம்ஸ்காரத்துக்கிவ்வளவென திட்டம்போட்டுப் பொருள் பறிப்பது வழக்கமாக இருந்தது. இக்காலத்துச்சீடருக்குச்சம்ஸ்காரமே வேண்டுவதில்லையாகையால், அவரிஷ்டப்படி வீட்டுப் பொருளீட்டுங்காலம் அவர்க்கு நேர்ந்திடவேகுருசிஷ்யபாவம் இங்கு மாறியது வெளியாயிற்று. மற்றப்பகுதிகளிலோ வருடாவருடம் குருக்கள் மாறுபடுவார். ஆகவே குருசிஷ்யமாறுபாடு அங்கும்பரவியதன்மையே. இக்கதையும் ஓர் புறங்கிடக்க; வீட்டாசாரியர்களெனப்படும் புரோகிதர் செய்யும் வேலை மிகப்புகழத்தக்கதே. இவர்களோ தத்தமனுஷ்டானத்துக்கு வேண்டியவைகளை முற்றுமறியாது அறிந்தவரையில் சந்தோஷமடைந்து ஏதோ சிலகன்மங்களை வழுவற நடத்திவைப்பவர்போல் அபிநயித்து கிருகஸ்தர் கருதியவாறு காரியத்தை முடித்துவிட்டொழிக்கின்றார்கள். அனேக தினங்களில் நடக்கவேண்டிய கிரியை சிலவினாடிகளில் ஆகவேண்டும் என்றுசிஷ்யர் சொன்னால் ஆயிற்றென முடித்துவிடுகிறார்கள். இஷ்டப்படி மந்திரங்களையும் தந்திரங்களையும் ஒடுக்கிவிடுகிறார்கள். எடுத்தவழியெல்லாம் நடத்த தக்ஷிணை மட்டில் கொடுக்க வேண்டும் என்பர். சீடர் அகார்யத்தில் கொடுத்தாலும் வாங்குவார். காரியத்தில் கொடுக்காதொழியினும் அக்ஷதையைக்கொண்டுகாரியத்தை முடிப்பார்.

Koviloor Digital Library

[illegible]

இவ்விதம் சமயத்துக்குத் தக்கபடி ஒடர் மனம்போனபடி நடப்பவரே யோக்கியர் எனவும் சமயாசிந்தவரெனவும் புகழப்படுவார். அங்ஙனமல்லாதார் இகழப்படுவார். அந்தோ! ஆசாரியக்கூட்டத்திற் கதிகாரம் அடியோடொழிந்தது. இங்ஙனமாகவே சாஸ்திரப்படி நடக்க எவராலும் முற்றிலும் கூடவில்லை. இவ்விதம் இக்கலிகாலத்தின் முதிர்ச்சியால் இச்சமயம் ஆசாரியசிஷ்யபாவம் அடியோடு இலாதிருக்க இதைச்சீர்திருத்தாது "ஜகத்குருத்துவம் சங்கர பகவத்பாதாசாரியருக்குக்கூடுமோ கூடாதா? ஆசாரியர் என்னும் பெயர் வைணவர்க்கும விசுவ வம்சத்தாருக்கும் உளதாயிற்றே, எப்படி அதுஸ்மார்த்தருக்குக்கூடும்? ஸ்ரீகண்டசிவாசாரியர் வைஷ்ணவரா? சம்பியரா? அவரை ஆசாரியர் என்றதெப்படி?" என்பதாதி வீண்கலகத்தால் காலம் போக்கிவருகிறார்கள் சிலர். இதுவும் நிற்க; குருக்கள் எனச்சிலர் இருக்கின்றார். அவர்களைச் சிவாசாரியர் என்கின்றார்கள். அவர் சிவ ஸ்ருட்டியில் பிறந்தவர் எனவும் பரமபதி ஐந்துமுகத்துக்கும் ஐவர்பிறந்தமையால், அவர் கோத்திரம ஐந்து என்றும், பல புராணங்களிலும் சிவாகமங்களிலும் சொல்லப்படுகின்றார்கள். அம்மூலப்பிரமாணங்களில் அவர்களுக்கு எந்த ஆசாரம் எந்த கோசரம் எந்த கோத்திரம் எந்தசூத்திரம் எந்த மடம் குறிக்கப்பட்டனவோ; அவற்றுள் ஒன்றும் இக்காலத்துக்குருக்கள்களிடமில்லை. இவரிடம் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள சிவத்துவிஜலக்ஷணம் பொருந்தாமையான் இவர் ஆதிசைவர் அல்லவென்பதும் அவர் நடுவில் விருத்திலாபத்துக்கெனச் சைவரானார் எனவும் சோதிடப்படிய சிவத்துவிஜர் இக்காலத்திலில்லை எனவும் கிரமமான காரணங்களால் சிவாகம மூலவசனங்கட்கும் புராணங்கட்கும் ஒத்தபடி நிரூபிப்பாம்.

ஆகமங்களில் பரமபதியினது ஐந்துதிருமுக மண்டலங்களினின்றும்காசிபர், கௌதமர், பரத்துவாஜர், கௌசிகர், அகஸ்தியர் என ஐவர் பிறந்தார் எனவும் அவர்க்குக் கறைமிடற்றிறைவனே உபதேசித்தார் என்றும், பரமேசுவர லிங்கப்ரதிப்ரதிஷ்டாதிகாரம் பெற்றவர் அவரே என்றும், ஆன்மார்த்த பரார்த்த உபய விதலிங்கபூஜைசெய்யும் பூர்ணாதிகாரிகள் என்றும சிலவைதிக மந்திரங்களையும் ஆகமங்களின் அவாந்திலைக்கெற்ப பெற்றவர் என்றும் சிவாகமத்தை மட்டில் அனுஷ்டிப்பவர் என்றும், வைதீக ருத்திராதித்யபதங்களையொழித்து ஸ்கந்தசண்டகணாதிசபதங்களை உபயோகிப்பவர் என்றும், யஜுர்வேதம் ஒன்றே அப்பியசிப்பவர் என்றும், அவற்கு போதாயன சூத்திரம் ஒன்றே என்றும், அவர்களுக்கு இன்ன மடத்தில் இன்ன இன்ன ஆசிரமம் என்றும், சிவசாஸ்திரமார்க்கத்தி

[illegible]

[illegible]

க்ஷையா லும்இவரபிஷேக பலத்தாலும்சிவத்துவம் விலகி சிவத்துவம் பெற்றவர் என்றும் சொல்லப்படுகிறது. இக்காலத்தவருள் இவற்றின் பொருத்தமின்மையை அடியிற் காட்டிடுவாம்.

இக்காலத்திலுள்ள குருக்கள்மார் சிவத்துவிஜர் எனவும் ஆதிசைவரெனவும் வழங்கப்படுகிருர்கள். இவர்களுள் எவரும் முற்குறித்த இலக்கணம் அமைந்தவர்களல்ல. ஆகமங்களில், காசிபர், கௌசிகர், பரத்துவாஜர், அகஸ்தியர், கௌதமரென் ஐந்து மகரிஷிகள் பரமசிவனிடத்திலுதித்ததாய்க் கூறப்படுவதால், இக்காலத்திலும் அவர் வம்சத்தவரே சிவத்துவிஜர்களாக இருக்கவேண்டியதாக ஏற்படுகிறது. இக்காலத்திலோ, லோகிதர், காக்கர், ரௌக்ஷாயணர் முதலிய பல மகரிஷிகளின் வம்சத்தவர்களும் தாமும் ஆதிசைவரென சிவாலயங்களில் பரார்த்தபூஜை செய்து வருகின்றுர்கள். இம்மட்டோ! பரம்பரையிற் சிவத்துவிஜர் எனப்பெயர் பெற்று முற்கூறிய ஐந்து வம்சத்தவரென்று சொல்லப்படுபவரும் சிலவிடம் ஆபஸ்தம்பங்கொண்டும் ஆசுவலாயன சூத்திரத்திற்குரிய ருக்வேதத்தைக் கொண்டிருக்கிருர்கள்.

"அம் தெவ்வீதமாயினு மாகுக. இவருள் கலந்து நிற்கும் ஐங்குலத்தவர்களும்,ஆதிசைவராவதில் தடையாது?" என நீவிர் வினவலாம். உண்மையறிந்தவிடம் அவ்வினு தோன்றியவிடத்திலே ஒடுங்கிவிடும். இக்காலத்திய ஆதிசைவரெவரேனும தாம் சிவகோத்திரமென்பரேல், நீவிர் கூறும் கூற்று ஒருவாற பொருத்தமிருக்கும். அவர்களெல்லாரும் தாம் அனுட்டித்துவரும் சந்தியாவந்தனத்தில் தாம் பிரமகுலத்திலுதித்த கோத்திரப்பிரவரத்தைச்சொல்லிவருகிருர்கள். அதில் கௌதமவம்சத்தார் "ஆங்கிரஸ ஆயாஸ்ய கௌதம" வென்றும், காசியப்பர் "ஆபஸ்தார நைத்ருவ" வென்றும், கௌசிகர் "வைசுவாமித்திர அகமர்ஷண கௌசிக" வென்றும் பாரத்துவாஜர், "ஆங்கிரஸபாரகஸ்பத்திய பாரத்துவாஜ" என்றும் தத்தம்பிரவரங்களைச்சொலவிவருகிருர்கள். அகஸ்தியர் கோத்திரம் உலகத்தில்லை என போதாயனமாமுனிவர் கூறியவாறு குருக்கள்மார் அகத்தியகோத்திரத்தார் பிரவரமுதலிய ஒன்றுமில்லாத இடுகுறிச்சொல்லாகிய "அகத்தியகோத்திர" மென்னும் சொல்லைவழங்கிவருகிருர்கள். அவரை யொழிந்த ஏனைய நான்கு கோத்திரத்தவர்களை எண்ணுவிசாரிப்பாம். இவர்கள் தாம சிவமுகஉத்பன்னரென வாக்கினுல்மாத்திரமுரைத்துக் கிரியைகளில ப்ரம்மமுகத்திலுதித்த ஏழுமகரிஷிகளின் சம்பந்தத்தையே சொலலிவருகிருர்கள். இவர் சிவன்முகத்திற்பிறந்ததண்மையானுல் ப்ரம்மமுகோத்பன்ன பிராமணர்களின் கோத்திரம் இவர்க

[illegible]

ளிடம் வரக்காரணம் என்னை? இனி எவ்வித ஸம்ஸ்கார த்தாலும் ஒருவனிடத்தமைந்தவோர் கோத்திரம் மற்ற வனிடமமையாது. பெண்களுக்குத் திருமணச்சம்ஸ்கார த்தாலும், பிள்ளைகளுக்குத் தத்தம் ஹோமத்தாலும் கோத்திர மாறுமென்பது மேற்கண்டபொது விதிக்குவில க்கு. சிவாகமோக்த சம்ஸ்காரங்கள் அவ்வப்புருடர்கோ த்திரத்தைமாற்றுது. கோத்திரம், ஸந்ததி, ஜனனம், வம் சம் என்பனவுமொக்கும். கோத்திரமென்பதும் பிரவா மென்பதும் அந்தணர்க் கத்தியாவசியகம். அவர்கள் யாக முதலிய காரியங்களைச் செய்யுமிடம் தேவப்பிராமணரிவ ரெனக்குறித்துக்காட்டி தேவர்களை விளிக்கநேரிடும. அக் கடவுளர்க்கு உறுதிபயக்குமாறு இவன் பிரமன்முகத்துதி த்த இம்முனிவர் கோத்திரத்தவன் எனக்குறிப்பது வழ க்கம். உதாரணமாக:—இக்கௌணியவந்தணன் கேட்கி கின்றான் எனவொருவன் கூற, மற்றவன் எவ்விதமென் பான். அதற்குமற்றவன் கௌணியர்போல், மித்திராவருண ர்போல்வசிஷ்டர்போல்லன்பான். ஆதலால்வேள்விகளில் தம்வசத்தின்மூலபுருடரானமூவருக்குக்குறையாமல்எழு வர்வரையில் எடுத்துக்காட்டவேண்டுமென்றுவேதம்விதி க்கின்றது. சிவயாகமாத்திரத்தைக்கொண்டுபசுயாகங்களை அகிருத்தியமெனவொழித்த இவர்க்குக் கோத்திரத்தால் பயன் ஏதுமில்லையாயினும்பயனில்லாக்கோத்திரத்தை இ வர்பலவாறுகூறியிருப்பது இவரைச்சுட்டிப் பிரம்மவம்சக்கயி ற்றினுற்கட்டி இவரிடம் சிவவம்சப்பிறப்பை அகற்றுதொ ழியாது. ஆகமவசனம் '[illegible]' என்பது. இதன்பொருள்: பரமாத்மாவாகிய பரமபதியின் திருமண் டலத்தில் அந்தணர், காசிய கௌசிகாதிகள் பிறந்தாரெ ன்பது. அங்ஙனமாயின் காசியகௌசிகாதிகள்கண்ணுதற் பிரான் திருமுகமண்டலத்தி லுதித்தமையால் அவரை அம்முனிவர் கோத்திரத்தவரெனக்கூறுதல் குற்றமுடை யதோவெனில்? ஆம். எமக்குக் காசியபரிடமும் கௌசி கரிடமும் வம்சந்தோன்றி அதுவழியில் இவ்வாதிசைவர் கலந்துநிற்பதில் எமக்காக்ஷேபம் ஒன்றுமில்லை. அங்ஙன மாயின், அங்குதித்த கௌசிகாதியோர் சிவமுகோற்ப ன்னராதலால் ஆதிசைவகோத்திரத்தவர்க்குக் கௌசிக ராதியோரே முதல் ரிஷிகளாகவேண்டும். அவர்கள் நேரி ல் சிவபுத்திரர்களாதலால் அவர்கள் பிதாக்கள் பரமபதி எனவே குறிக்கப்படவேண்டும். இவ்விடத்திலோ முறை. யே பாரத்துவாஜர், கௌசிகர், கௌதமர்களுக்குப் பிரக ஸ்பதி அகமர்ஷணர், ஆயாஸ்யர் என மூவரும் பிதாக்க ளெனக் குறிக்கப்படுகிறார்கள். இனி இப்பெயர்களும் பர மேசுவரனுக்குரித்தென லீர் சாதிப்பீரேல்; நுமது ஆகம

[illegible]

சித்தாந்த நுண்ணறிவு மிக வியக்கத்தக்கதே. சப்தப்பிரபஞ்சமெல்லாம் எம்பிரான் திருமேனி எனக்கூறினும்எமக்கு ஆக்ஷேபமில்லை. மற்று எவ்வாகமங்களிலும்ஆரணங்களிலும் கேள்விப்படாத இருவர் பாசிவத்திற்குப்பிதாக்களென வழங்கப்படுகிறார் களே! அவர்களும் இன்னாரெனக்காட்டவேண்டியது நமது தலைப்பாரமாயிற்றே! அந்தோ! 'வட்டிக்காசைப்பட்டு முதலை இழந்ததுபோல்' சிவத்துவிஜப்பெருமைக்காசைப்பட்டுச்சிவ ரபகர்ஷங்கூறிச்சிவநிந்தைக்கேதுவாய் இவ்விஷயங்களைக்கூறுவது சிவசிவ! சைவர்க்கழகன்று. ஆகையால் இக்காலத்தாதிசைவர் சிவமுகோற்பன்னருமல்ல; அவர் வம்சத்தவருமல்ல.

இனிக் காசியபகௌசிகாதிகளென்னும் சொல்லுக்குக் காசியபகௌசிகர்களுக்கு 'ஆதிக' ளெனப்பொருள் கூறி அம்முனிவர்க்கும் மூலபுருடரோபரசிவமுகோற்பவரெனக் கூறுவாமெனில், அந்தோ! அதுவும் பொருந்தாதொழிகின்றது. காசியபர்,பிரான்முகத்திற்பிறவாது அவர் தகப்பனல்லது பாட்டனேனும் பிறந்திருப்பரோல், காசியபகோத்திரத்து ஆதிசைவர் காசியபரைக்கோத்திர மூலபுருடராகவைத்து' காசியபஆபஸ்தாரஸைத்துருவ' வெனப்பிரவரங்கூறுதலமையுமோ? இனிக் காசிய கௌசியர்களுக்கு 'ஆதி' எனப் பண்புத்தொகைகூறுது காசிய கௌசிகர்களை ஆதியாகக்கொண்டவரென அன்மொழித்தொகையாக ஆக்கிடுவோமானால் கௌசிகர் கோத்திரத்தின் முதலாகவேண்டி நேரிடும். அவ்விதமுமில்லாது அச்சொலிற்குக் காசியபரும் கௌசிகாதியும் (கௌசிகருக்குமுன்னோர்) பிறந்தாரெனப் பொருள்படுத்துவோமானால் இவ்விருவரன்றி மற்றவர் பிறந்தது இதன்பொருளாயமையாதுபற்றி மேல்பிறந்த ஐவரென எண்வகுத்தோதியது அவலமாய் முடியும். அம்மட்டோ! பரத்துவாஜர், கௌதமர், அகஸ்தியர் இவர்கதிதான் என்ன? அம்மட்டோ! 'காசியபர், கௌதமர், பரத்துவாஜர், கௌசிகர், அகஸ்தியரென ஐவரும ஆதியிற் சிவமுகத்தில் உற்பவித்தார்' என்னும் காரணாகமவசனங்கள் இதனோடு முரணுதொழியுமோ! ஆகையால் இக்காலத்திலுள்ள சிவத்துவிஜர் சிவமுகோற்பன்னரல்லதென்பதூஉம், ப்ரம்மமுகோற்பன்னரோ என்பதூஉம் பசுமாத்தாணிபோல் காட்டப்பட்டது. அங்ஙனமாயின் இவரைச் சிவத்துவிஜர் என வேறுபடுத்தி வழங்கியது யாதுபற்றி எனின், சிவசாஸ்திரங்களில் சிவசம்ஸ்காரம்பெற்ற அந்தணர்க்குச்சிவனென்னும் அடைமொழி கொடுத்தல்வேண்டுமென விதியிருத்தலாலென்க. சிவசம்ஸ்காரம்பெற்றமட்டில் இக்காலத்தில் குருக்களென வழங்கப்படும் அந்தணர் வைதிகரே என்பதும் பிரமசிருஷ்டியிலகப்படாத வேறொருவரல்லவெனபதும்பிராயண

[illegible]

தர்மங்களேயும் கோத்திரசூத்திரங்களேயும் நன்குணர்ந்தவருக்குப் புலப்படாதொழியாது. அங்ஙனமாயின் ஆதிசைவஸாச் சிவமுகோற்பன்னமென வழங்கும் சிவாகம வசனங்கள் அப்பிரமாணமோவெனில் அது விரோதிக்காவழியும் உள்ள ஏதுக்களும் பின்வரும்.

வேதாகமப் பிராமாண்யம்.

தொடர்ச்சி.

ஐயா!

சாமபவர்களுக்கு மூலமான பிரமசூத்திரபாஷ்யம் வகுத்தருளிய ஆசிரியர் 'வேதங்கள் பரமாப்தசிகாமணியாகிய பரமசிவத்தினது திருவாக்கே' என மூன்றாவது அதிகரணத்தில் பூர்வபக்ஷம் செய்து அவை அபௌருஷேயமெனவே சித்தாந்தமுங் கூறியுள்ளார். அன்றி அதேவிடத்துப் 'பரசிவனது வாக்கியமென வேதங்களைக் கூறிய பிரமாணம் பொய்யோ' என ஒரு ஆசங்கையை நிகழ்த்தி 'ஸ்வரம' வருணம், சொற்றொடர் இவைகள் மாறாது ஒரேவழி ஒவ்வொருகற்பத்தின் ஆதியிலும் முற்கற்பத்திற்றன்னுள் அடங்கிய வேதங்களைக்கண்ணுதலார் வெளியிடுவாராதலாலும் அவ்வேதங்களைச் சிருட்டித்தல் அப்பரமனது முயற்சியின்றியமைவதாலும் அவ்வேதங்கள் இயற்கையில் அபௌருஷேயங்களும் சேற்கையில் பரசிவமுகோற்பன்னங்களுமாகின்றன, எனவும் மற்றையவைகளெல்லாம் பௌருஷேயங்களேயாதலால் அவை வேதத்திற் பிந்தியபிரமாணங்களே' எனவும், 'சாஸ்திரயோநித்துவாத்' என்னும் சூத்திரத்திற்குப் பொருளுரைக்குமிடத்துத் துணிபுறக் கூறியிருக்கின்றார். மேலும் அதேசூத்திரத்தில் பிரமஞானத்தை விதித்தலும், பிரம அறிவை விதித்தலும் ஒவ்வாது. சோதனைசெய்த 'அகம்' எனனுஞ்சொற்பொருளே பிரமமாதலாலும் அது எம்மாலறியப்பட்டதும் என்றுமுளதாதலாலும்? எனப்பூருவபக்ஷஞ்செய்து 'மேற்கண்டஉண்மை சப்தப்பிரமாணமின்றி வேறெப்பிரமாணத்தானுமறியக்கூடாமையால் அவ்விஷயத்தில் சாஸ்திரம் அறிதற்கரிய விஷயத்தைக் கூறியதாகப் பயன்படுமெனச் சித்தாந்தஞ் செய்துவருமிடம் 'அப்பரம்பொருள் வேதமின்றி மற்றெப்பிரமாணத்தானுமறியற்பாலதன்றென ஆசிரியர் வற்புறுத்தினர். இனிப் பிரமஞானமின்றி வீடுகைகூடாதெனவும், 'அப்பிரமஞானமும் வேதாந்தவிசாரமின்றித்தோன்றாதெனவும் தொடக்கமுதல் இறுதிவரையில் அந்நூலுரைசெய்ததொல்லாசிரியர் ஸ்ரீகண்டமாமுனிவர் 'வேதங்கள் முக்கியப்

Koviloor Digital Library

[illegible]

பிரமாணமும் மற்றவை தததனுசாரிப்பிரமாணமும், எனக் கொண்டாரென்பது அம்முதநூலை முற்றும்படித்தறிந்த அறிஞரறிவிற்குப் புலப்படாதொழியாது. இதில் அதிகமறிய விரும்புபவர் ஆசிரியர் ஸ்ரீகண்டமாமுனிவரருளிய திவ்விய பாடியத்தில் முதல் அத்தியாயம் 3. 4. சூத்திரங்களின் பேருரையைக்கண்டு தெளிவாராக. அச்சிவாசாரியசிரோமணி எழுதிய திவ்விய சூக்தியை ஆராயின் முதநூல் வேதங்களெனவும், அவ்வேதங்களையருளிய வேதநாயகனாற்றானே அவ்வேதங்களுக்கு வழிநூலாக ஆகமங்களியற்றப்பட்டதென்பதும் புலப்படும். அங்ஙனமாயின் அவ்வாசிரியர் இரண்டாமத்தியாயம் மூன்றும்பாதத்துள்ள 'பத்திக்கொவ்வாமையால்' என்னுஞ்சூத்திரத்திற்குரை செய்யுமிடம் 'யாம் வேதசிவாகமங்கட்கு வேற்றுமை காண்கிலேம், என முன்பின் முரணுமாறு கூறியது யாது பற்றியோவெனின்? கூறுதும்: அம்மகான் 'பதிக்' கென்று தொடங்கிய சூத்திரத்தில் 'கேவலநிமித்தகாரணவாதம் சிவாகமங்களுள் காண்டலால் அவைவேதங்களுடன் முரணுமாதல்பற்றி அப்பிரமாணமெனத் தொல்லாசிரியரிட்டவுரை' என்றற்றொடக்கத்தின் சிலவசனங்களையெழுதிப்பிறகு 'யாம் வேதசிவாகமங்கட' கென்றுதொடங்கிய வசனத்தை எழுதினர். மேல் 'கேவல நிமித்த காரணம் வேதவிருத்தமாயின் அது சிவாகமத்துள் காணப்படாவிடில் இச்சூத்திரத்திற்கிலக்கியம் தான் யாது' எனவோர் ஆசங்கையை நிகழ்த்தி உடனே 'இவ்வதிகரணம் ஹிரண்யகர்ப்பர் கூறிய யோகஸ்மிருதியை இலக்காக்கியதென முடிபுரை கூறுகின்றார். ஆதலாற்றான் அதே அதிகரணத்தில் தொடக்கத்திற்றானே 'வேதங்களால் பரமேசுவரன் உலகத்திற்கு நிமித்தமும்உபாதானகாரணமுமாக கேவலதந்திரவாதிகளாகிய ஏகதேச சிவாகம நிஷ்டர் சிலர் அவற்றின் உட்கருத்தறியாது பரமபதியை உலகத்திற்கு நிமித்தகாரணமே என்பார். அஃது ஒவ்வும் ஒவ்வாதென்பதை ஈண்டு விசாரிப்பாம்' என அவதாரணிகையிட்டுப் பின்னெழுது முறையில் சில ஆகமவசனங்களையும் வாயுசம்மிதா வசனங்களையும் எடுத்துக்காட்டி' என்பதாதி ஆகமப்பிரமாண்யத்தாலும்பரமசிவனே உலகத்திற்கு உபயகாரணமென்பது குற்றமற்ற கூற்று' என்று கூறி' அதுமட்டில் ஓயாது 'ஏதேந யோக:' என்னுஞ்சூத்திரத்தால் ஒருவனை யோகமதம் மறுக்கப்பட்ட மீண்டும் அந்த மறுக்கவே இச்சூத்திரமெனவுரைசெய்தல் பிஷ்டபேஷணமாமெனக்கருதி இறுதியில் 'இவ்வதிகரணம் பரசிவத்தை உலகிற்குக் கேவலம்நிமித்தகாரணமெனக்கூறும சிவாகமப்பகுதியை மறுக்க வெழுந்ததெனக்

[illegible]

கொள்ளினுங்கொள்ளுக. அதுவும் ஓர் சித்தாந்தியின் கொள்கையே' என ஒரு முடிவுகூறி 'யாம் எவ்வாற்றானும் ஈசுவரனைக் கேவலநிமித்தம் எனமாட்டோம்; அவர் உபாயகாரணமென்பதே எமது கொள்கை' எனப்பரமோபசம்ஹாரவாக்கியத்தைச் செய்தருளினார். மீண்டும் 'ஒரே முதல்வனருளினான் ஆதலாலும ஒரு பொருளைக்கொண்டு முடிவதாலும் விரோதமின்மையாலும் வேதாகமங்கள் பிரமாணங்களே' என அம்முனிவரே கூறிநிற்றலால வேதங்களுடன் முரணும்வழி அவ்விடம் அவ்வாகமங்கள் ஆர்த்தவாதங்களென்பதே அவர் கருத்தாக வெளிபட்டது. ஆகலாற்றான வாயுசங்கிதையில் இவ்வாகமங்கள்வேதசாரமென ஓதப்பட்டன. ஆயின் 'பரமாப்தனாகிய பரமசிவபரான் திருமுகமண்டலத்தில் தானேயுதித்து உலகத்தில அஞ்ஞானவிருளை நீக்கும். வேதங்களினும் ஆகமங்களதிக பிரமாணமாவதில்லை' என்று ஆசிரியர் கருத்தாகமுடிவதால் இங்குணாத்தமுதற்காரணம் பயன்படாதென்க.

இரண்டாவது ஏதுவைப்பற்றி விசாரிப்பாம்:—வேதங்கள் பல தேவர்களைப் பிரமமெனக்கூறுமெனவும், ஆகமங்கள் சிவத்தையே பிரமமெனத்துணிந்தோதுமெனவும், வேதம் பொதுவென்றும் ஆகமம்சிறப்பென்றுங்கொண்டு ஆகமங்கள் சிறந்ததென்பது. இதுவும் விசாரிக்குங்கால் நிலைபெறாதென்பதைக் காட்டுவாம். இத்தேசத்திலுள்ள எவ்வகைச்சித்தாந்தியும் வேதங்கள் பலபொருள்கொண்டுமுடிந்தனவாகையால் அதை அப்பிரமாணமெனச்சொல்பவரில்லை. சைவர் வைணவர் சாக்தராதியோர் எவரும் தாம்கொண்ட பொருளையே வேதப்பொருள் என்கிறார்களேயன்றி மற்றவைகளை வேதப்பொருளென்பதில்லை. அவை பலபொருள் கூறும் நூலாயின் அப்பிரமாணமாகவே முடியும். அதுகொண்டே சைவபாடியம் வகுத்தருளிய சிவாசாரியஸ்வாமிகளும் சர்வவேதாந்த வாக்கியங்களும் பரசிவத்தினிடமே நிலைபெறுமெனத் துணிந்தோதினார்.

அவரே வேதாந்த வாக்கியங்களில்எவைகளைவிசாரித்தபோதிலும் அவை கண்ணுதலானையே குறிக்கின்றனவெனப் பலவழியாலும் காட்டினார். ஆதல்கொண்டே கைவல்யோபநிடதத்தும் 'வேதங்களெல்லாவற்றாலும் அறியத்தகுந்தவன் யானே, வேதாந்தம் செய்பவனும்யானே வேதாந்தத்தை யறிந்தவனும் யானே' என்பதாதி பல வசனங்களிருக்கின்றன. இவைகளெல்லாம் விரிவஞ்சி இங்கு எழுதாதொழிந்தோம். நிற்க. எல்லாத்தேவர்களுக்கும் பெருமையைக்கூறுவதும், அவ்வத்தேவரை வழிபடும் ஆன்மாக்களுக்கு நல்வழிகாட்டுவதும், வேதமாதல்பற்றி அதை நீவிர் வெறுப்பீரேல் காரணமின்றி எல்லாப்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

பொருள்களிடமுங்கருணைமாரிபொழியும் கடவுளும் பொதுவகையால் சிறப்பை விரும்பும் உமக்கு வேண்டப்படாமையிலொழிவனோ? அந்தோ! ஏனைய கடவுளர்தம்மையடுத்தவர்க்கன்றி மற்றவர்க்குபகரிக்காது நிற்க எம்பிரான் கொண்டருளும் பஞ்சகிருத்தியங்களால் எல்லா ஆன்மாக்களும் தனுகரணாதிகளைப்பெற்று உபகரிக்கப்படுவாராயின் தம்மையடுத்தவரையுபகரிக்கும் கடவுளரிலும் அவ்வியாஜ பரமோபகாரியாகிய அமலன் குற்றங்கூறப்படுவதும் நியாயமாமோ? இச்சாமான்யவிசேஷ பாவம் பிரமாண அப்பிரமாணங்களுக்கு ஏதுவாகமாட்டாது. இனி சிவன் சிவதர்மமுதலிய நற்பொருள்களை மெல்லிய சொற்களால் உலகத்தோர்க்கெடுத்துப்புகட்டுவது ஆகமங்களே. யானாலும் அவை சொல்நயமற்ற வேதங்களிலும் மேன்மைபெறுமோவெனின்? அற்றன்று. சொன்னயம் அஃதின்மை ஒன்றைப்பிரமாணமும் மற்றொன்றை அப்பிரமாணமுமாக்காது. பிராசாதம் பிரணவமுதலிய மகாமந்திரங்கள் ஓர் விரிந்த உரையின்றி எவ்விதக்கோசாதிகளாலும் பொருள்படாமையால் சாமுண்டி மாலாமந்திரம் சொல்மென்மைபெற்றிருப்பின் அவைகளை மேற்கண்ட மந்திரங்களிலுமதிகப்பிரமாணமெனலாமோ? இனி வேதங்கள் பல தேவர்களைக்கூறி முடிவுபெறுமென்பது வேதவியலறியார் வழக்கென ஒழிந்திடுக. வேதங்களில் கன்மகாண்டம் ஞானகாண்டம்முதலிய பகுதிகளிருத்தலால் அவற்றிலும் ஆகமங்கள் சிறக்காதோவெனின், நற்பகுதியுள் ஆகமங்களிலும் அக்குற்றம் அணுகாதெனவொழிக. வேதங்கள் அறிவை யொன்றையே புகட்டுமாதலாலும் ஆகமங்கள் சிற்பமுதலிய பலவற்றுடன் உண்மையையும் விரிக்குமாதலாலும் வேதங்களினும் ஆகமங்கள் அநுசாரிப் பிரமாணங்களேயன்றிச் சுவதந்திரங்களாகமாட்டா. ஆதலாற்றான் சைவசிகாமணியாகிய ஸ்ரீமத் ஹரதத்தாசாரிய சுவாமிகள் தாம் மழுவேந்தியருளிய திவ்விய சத்திப்பிரபந்தமாகிய 'சதுர்வேததாத்பரியசங்கிரகம்' என்னும் சுருதி சூக்திமாலையின்கண் 'வேதங்களிலும் அவையனுசரித்த தந்திரங்களிலும்' என்றும் 'வேதம் உமது திருவாக்காவது, சுவயம்புவாகவாவது' என்றும, வேதம் சுவதந்திரப்பிரமாணமென்றும் உறுதிகூறியதறிக. இனி அதற்குரைசெய்த சிவலிங்கபூபால மகாராஜாவும் வேதங்கள் அபௌருஷேயமெனச் சாதித்ததையும் அப்பெருநூலிற்றானே கண்டறிக. ஆயின் வேதங்கள் சோபானமுறையில் பல கடவுளரது பெருமையைக் காட்டி இறுதியில் வீடு கைகூடச்செய்யும் விரூபாக்ஷர்வழிபாட்டையேமுடித்ததெனவறிக. இவ்விஷயம ஆகமங்களிலும் இருக்க வேதங்கள் முதல் மூன்று வருணத்தவர்க்குரியதெனவும்

Koviloor Digital Library

[illegible]

ஆகமங்கள் நான்குவருணத்தவருக்குரியதெனவும் வேற்றுமைப்படுத்தத்தக்க தயனறி வேறுவழியில்லை. ஆயின் ஆகமங்கள் எல்லாவருணங்களுக்கும் சாதாரணமாய்ப் பொதுநூலாயும சிலவருணங்களுக்கு வேதம் சிறப்பாயும் ஏற்படுகின்றமையால் முற்கூறிய சாமான்னிய விசேஷ பாவம் புறண்டதறிக. ஈண்டு உலகவிலக்ஷணமாய் முன் விசேஷசாத்திரமும் பின் சாமான்னிய சாத்திரமுந் தோன்றியது. இனி இவ்விரண்டனுள் சாமான்னிய விசேஷ பாவம் எவ்விதமிருப்பினும் அதனுல் ஒன்றுக்கொன்று அதிகப் பிரமாணமாகாதென்பதைப் பின கூறுவாம்.

வரும்.

ஆரியாசாரரகசியம்

விடியற்காலபடலம்.

பிராணுபாமம்

(தொடர்பு)

ஐயா

பிராணுபாமம் சகர்ப்பம் அகர்ப்பமென விருவகைஎன்றுமல்லவா? அவற்றுள் சகர்ப்பத்தின் சுபாவத்தைச்சொல்லுவாம்.— சகர்ப்பமெனபது மந்திரோச்சாரணத்துடனும், அல்லது தேவதாத்தியானத்துடனுங்கூடியது. இவ்விஷயத்தில் போகிகள்கண்ட சித்தாந்தமாவது, ஏற்றந்தாழ்வில்லாது ஒரேவழிபாகப்பிராணனை ஒளவிலொடுக்கி அப்பியாசப்படுத்தவேண்டியதற்காக, சங்கீதவித்தைக்குச்கால நியமனத்திற்காக அக்ஷரகாலமேற்படுத்தியதுபோல் இதற்கும் சிலஅக்ஷரகாலங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளும் மாறுபாடின்றி ஒரேகணக்காயிருத்தலால் ஒவ்வொரு பிராணுபாமத்தால் இவ்வளவு கலைகள் கணிக்கப்படுமென த்தீர்மானிக்கப்படுகின்றது. அதற்கு வேண்டியமந்திரம் சகலவேதமாதாவாகிய காயத்திரியைகியமித்திருக்கிறார்கள். அதற்குமுன் ஏழுமகாவியாகிருதிகளையும் பின் காயத்திரி சிரசையும் சேர்த்திருக்கிறார்கள். இவ்விடம் மந்திரங்களையுச்சரிக்குங்காலத்தில் சுவாசம் தடைப்படுவது மாத்திரம்அதன்பயனல்ல.அதன் பொருளை அறிந்தவர்க்கு அச்சமயம் பிராணுபாமத்தால் இருதயம் சுத்தி பெற்றிருக்க அவ்விடம் நற்பொருள்தோன்றுதொழியாது. மேற்கண்டபடிபிராணுபாமம்செய்தால்மனம் மந்திரார்த்தத்தைத் தியானிக்கவும்வாக்கு மந்திரத்தை யுச்சரிக்கவும் காயம்பிராணனைத்தடுக்க நாஸிகாக்ரகணமுத்திரைசேர்க்கவும் வியாபித்து நிற்றலால் திரிகரணங்களும் அச்சமயம் ஒருங்குசேர்ந்த தறிக. அக்காலத்தில் கண்கள்நாசியின் நுனியைநோக்கி வேறெப்பொருளையுங்கவருதிற்கும். இவ்விதம் முக்கரணங்களும் விஷயங்களைநோக்கிச்செல்லாதொடுங்கிடின் அச்சமயம் அவரவர்கள்பாக்கியத்திற்கியைய பரம்பொருள் தியானமும் அதனுல் ஆயுள்பெருக்கமு முண்டாவதி

[illegible]

ல்தடையில்லை. இங்குள்ள மந்திரங்களில், வியாகிருதி மந்திரமென்னும் 'பூ' முதலிய ஏழுவியாகிருதிகளின் பொருளை முன் மறுமை என்னுமதிகாரத்தின்கீழ் கூறியிருக்கின்றோமாதலால் அங்கேதான் கண்டுகொள்க. காயத்திரியின் பொருளை ஜபப்பிரகரணத்தில் குறித்துரைப்பாம்.

சிரஸின் பொருளையும் மறுமை என்னும் விஷயத்தில் கூறியிருக்கின்றோம். இதில் உலகசிருஷ்டியின் இயல்பைக்கூறுவது வியாகிருதிகள் ஏழுகூடியமுற்பகுதி. நடுப்பகுதியாகிய காயத்திரி சமஸ்தப்பிரபஞ்ச சாக்ஷித்தன்மையைக்கடவுளிடங்கூறிமத்தியாவஸ்தையைத் தெரிவிக்கின்றது. சிரஸெனும் பிற்பகுதி உபஸம் ஹாராவஸ்தையைக்காட்டுகின்றது. இங்குள்ளமுப்பகுதிகளாலும் மும்மைப்பொருள்களெல்லாம் சொற்சுருக்கமாய்க்கூறப்பட்டனவறிக. இதன்பொருளைக்கேட்டு இடைவிடாது சிந்திப்பவர்க்குஞானமும்வைராக்கியமும் கைகூடுமென்பது சொல்லாதமையும். ஆயின் இச்சகர்ப்பப்பிராணாயாமத்தின் பயன் மிகப் பெரிதெனக்கவனிக்கத்தக்கது. அகர்ப்பப்பிராணாயாமவியலைப்பற்றி ஈண்டுவிரிப்பாம்.—அகர்ப்பமென்பதுமந்திரமந்திரார்த்தானுசந்தானங்களில்லாததும், வெகுகால அப்பியாசத்தால் அடையக்கூடியதும் அளவைகடந்ததும் நினைத்தபொழுதெல்லாம் நடாத்தக்கூடியதும் முத்திரையற்றதுமாம். அதுநீண்டகாலம் சகர்ப்பப்பிராணாயாமத்தை அப்பியசித்தவனுக்கே கைகூடுமாதலால் அதனைத்தெரிந்துகொண்டவன் சித்தனெனக்கூறப்படுவான். அதில் யோகிக்கதிகாரமேயன்றி அப்பியாசிக்கு அதிகாரமில்லை. யோகசாஸ்திரத்தில் இவ்வகர்ப்பப்பிராணாயாமத்தையே விசேஷமாகப்புகழ்ந்திருக்கின்றது. சகர்ப்பப்பிராணாயாமத்தில்கடவுள்திருமேனியின்தியானம்இன்றியமையாமையால்அத்திருமேனியின்தியானவழி ஸ்ரீபாஞ்சராத்திரத்தில்விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றது. அகர்ப்பப்பிராணாயாமத்தில்அரூபபரவஸ்துவைத்தியானிக்கவேண்டியமுறைகள்சிவாகமங்களில் விரித்துக்கூறப்பட்டன. சகர்ப்பமென்பது பன்னிரண்டல்லது பதினாறுகலைகளிலடங்கும். அகர்ப்பத்திற்களவில்லை. ஒரே அகர்ப்பப்பிராணாயாமத்தை ஒருயுகமுற்றிலும் நடாத்தும்வலிமை சில யோகிகளுக்குண்டெனஅவர்களின்சித்தாந்தத்துணிபு. இக்காலத்திலும் மூன்றுதினங்கள் அப்பிராணாயாமம் செய்பவர்களைப்பார்கலாம். ஆயின் சகர்ப்பமென்பது எல்லோராலும்சாதிக்கக்கூடியதும் அகர்ப்பமென்பதுகஷ்டசாத்தியமென்பதும் மேற்கூறிப் போந்த நியாயங்களால்பெறப்பட்டது. சகர்ப்பமென்பது எல்லோராலும்சாதிக்கக்கூடியதாதலால்அதன்முத்திரைமுதலியசர்வாங்கங்களின்பயன்வருமாறுகாண்க.

வரும்.

Koviloor Digital Library

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்

அநுபந்தம்.

௬-ம் புஸ்தகம்] சிதம்பரம். நந்தன ஸ்ரீ ஆவணிமீ ௨௨ [இலக்கம் - ௧௫

அரக்கோணவாசியார்க்கோர் மறுப்பும் அந்தணர் விளக்கமும்.

சென்றவைகாசிமீ 12உ வெளிப்பட்ட நாகைநீலலோசனிப்பத்திரிகையமது பார்வைக்குவந்தது- அதில் அரக்கோணவாசியார் என்பவர் ஒருவர் "ப்ரம்மவித்தியாகவிபுருஷர் மகிமை' யென்றுமகுடஞ்சூட்டி அளவற்ற ப்ராமண நிந்தனைகளை வரைந்துவிட்டு, தாம் குரு சிரேஷ்டர் என்பதைப்ரகாசப்படுத்திக் கொண்டனர். அவ்வியாசகளஞ்சியத்தில் நாம் கவனிக்கத்தக்கனபலவுள- அவற்றைத் தள்ளிக் குறிக்கொள்ளத்தக்கசிலவற்றை யெடுத்துக்காட்டிச் சமாதானம் சொல்வாம்.

[1] "அந்தணரென் போரறவோர்.' என்னுங்குறளை இனியேனுஞ் சிந்திக்கப்பார்த்துச் சுகிப்பாராக. முதற்சாதியாரிடமே யது சிறக்குமெனின், அம்முதற்சாதியினரிக்காலத்திலில்லை யெனத்துணிந்திடுக. கும்பத்திற் பிறந்த கலசயோனியும் கரிக்குருவியினிடம் பிறந்த பாரத்துவாஜரும், கோவினிடம் பிறந்த கௌதமனும் வேசிவயிற்றிற்பிறந்து சக்கிலிச்சித்தோள் புணர்ந்த வசிட்டனும், மீன் வாணிச்சி வயிற்றிற்பிறந்த வியாசனும், கழுதையினிடம் பிறந்த கர்க்கனும் ஆகியபலரிறந்து அந்தணரது பெருக்கேயன்றோவிப்போது உலகிற்பிரசித்தியடைந்திருப்பது' என்றுபிராமணர்களையும் அவரது கோத்திர பிதாக்களையும் நிந்தை கூறிப்பேசினர்.' அந்தணரென்போரறவோர் என்பதுகர்மத்தால் மேம்பட்டதம் போலிய சூத்திரர்களையென்பது அவரது கருத்து. அறவோர் பூசுரர் அறுதொழிலாளர், இருபிறப்பாளர் எரிவளர்ப்போரே ஆதிவருணர் வேதியரந்தணர், வேள்வியாளர் மறையவர் விப்பார், மேற்குலத்தோர் முற்குலத்தோரையர், வேதபாரகர்முப்புரிநூலோர், தொழுகுலர்பார்ப்பார் தொல்பெயராகும் என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தில் அந்தணர் அறவோர்முதலிய பெயர்கள் பார்ப்பாருக்கே யுரிய பெயராகக் கூறப்பட்டுள்ளன. அந்தணரென்பது பங்கயம், முக்கண்ணனென்பன போலப் பார்ப்பாருக்கே காரண விடுகுறியாய்ச் சிறந்திருப்பதொன்று; ஏனையோர்பாற்சொல்லாது. காரணம் பற்றிச்செல்வதாயினும் பிரமம் என்றபெயர் சிவபெருமானுக்கே யுரிமையாகி, ஏனைய பிரமன், விண்டு, உருத்திரன், இந்திரன் முதலியோர்க்கு உபசாரமானாற்போல் மற்றையவருணத்தார்க்குஉபசாரமட்டிற் கிரகிக்கப்படுமேயன்றி உண்மையிற்கொள்ளப்படாது. அந்தணரென்பதற்கு அழகிய தண்ணிய அளியினையுடையாரென்று பொருள் படலால் அத்தன்மையுடையார்க்கெல்லாம் செல்லாதோவெனின் அத்தன்மையைநிஜமாகக்கொண்ட ப்ராமணரில்வழிப்பிறர்க்குச் சொல்லாம்- முத்தீயோம்பி முவெழுமகங்களு முறைமையின் முற்றித் தேவர்க்குத் திருப்தியாக்கி வான்முகில்வழாது பொழியச்செய்து, சமஸ்த ஜீவராசிகளையும், இரட்சிக்கும் பெருங்கருணையுடையார் பிராமணரேயாதலால் அவரேயந்தணரெனப்படுவார். திருவிளையாடற் புராணம் உலவாக்கிழியருளிய படலத்தானுமுணர்க. ஏனையவருணத்தார்க்கு யாகாதிகிருத்தியஞ் செய்யுமதிகாரமில்லாமையால் அவர்களருளையுடையாராதல் யாங்ஙனம் என்க. கும்பத்திற் பிறந்த கலசயோனியும் என்று அகஸ்தியர் முதலாயினோரைத் தூஷித்தாரன்றோ? அதனையுமாராய்வாம். கும்பத்திற் பிறந்தாரென்றதனாலேயே அவர் அயோநிஜரென்னுமகிமை சித்தித்திருத்தலைநோக்கியே வேதபுராணாதிகள்இவரைப்புகழ்ந்திருக்கவும், இவர்க்கு மட்டுமது குறைவாகத் தோன்றினதவரது ஆராய்ச்சிக் குறைவேயாம். கும்பத்திற் பிறந்த சரித்திரத்தையுற் றுநோக்குவார்க்கு அது தெய்வத்தன்மை யென்று காணப்பட்டு ஆச்சரியம் விளையாமற்போகாது. சுக்கில சோணித ஸம்பந்தத்தாலேயே மனிதர் சரீரோற்பத்தியுண்டாதல் ஸர்வஜனசம்மதம். சுக்கில சம்பந்தமின்றிச் சோணித மொன்றாலேயும், சோணித ஸம்பந்தமின்றிச் சுக்கிலமொன்றாலேயும் மாத்திரம் சரீரோற்பத்தி யுண்டாதல் யாண்டுமில. ஆதலால் கும்பத்திற் பிறந்த முனிபுங்கவரது பிறப்புத் தெய்விகமே யென்பதற்கையமில்லை. பாரத்துவாஜர்கரிக்குருவியினிடம் பிறந்தாரென்பது மிவ்வாறே வியக்கத்தக்கது! கரிக்குருவியை மனிதன் சேர்ந்து மகவைப் பயந்தானென்றாற் சிறு பாலருநகையரா? அது அஸம்பாவிதமன்றோ? இனிப்புராணங் கூறியதற்கென்ன கதியெனின் கிளியினிடம் சுகர்பிறந்ததும், கரிக்குருவியினிடம் பரத்துவாஜர் பிறந்ததும் மலநசிக்கப்பெற்றுப்பிரமத்தோடேகீபவித்து நின்ற முனிபுங்கவர்கள் கடாட்ச மகிமையென்று புராணங்கூறுவதைக் கூர்ந்துணர்வாராக. கௌதமர், கர்க்கர் முதலானவர்களையு மிவ்வாறே கொள்வர் மேலாயினரென்க. வசிட்டர் வேசிவயிற்றிற் பிறந்து சக்கிலிச்சித்தோள்புணர்ந்தாரென்று கூசாமற் கூறினாரன்றோ? அதற்கு வேதாகம புராணங்களி லெங்காயினும் பிரமாண மெடுத்துக் காட்டுவாரா? அவரது பிறப்புப்பார தாந்தர்க்கத மாகிய அகஸ்தியோபாக்கியானத்திற் செவ்வனே விளக்கப்பட்டிருத்தலையுய்த்துணரப் பெறுவார்க்கு வசிட்டர் அயோநிஜரென்றும். தெய்விக முடையாரென்றும் விளங்காமற்போகாது.

"ஒத்தவர் தம்மையில்லா வுருப்பசி நிமித்தமாய, மித்திரவருணனிட்ட வீரியந்தன்னை யெய்திக், குத்திரயோனியில்லாக்கும்பமாக் தெய்வயோனி, புத்திரனாகவந்து தோன்றுநீபோதியென்ற" என்னுமிச்செய்யுளைக் கண்டினியேனும் அடங்குவாராக. பரிமள கந்தியை மீன் வாணிச்சி யென்றிகழ்ந்தார். க்ஷத்திரிய வம்ச சிரோமணியாகிய வசுராஜன் வீரியத்தால் மச்சத்தின் வயிற்றிற் கருத்தரித்துப் பிறந்ததெய்விகப் பிறப்புடையாள் பிறகு தனது சொந்தக் குலத்தோடு கூடிக்கொண்ட புண்யவதி. அதனால் வலைச்சியென்பார் மதம் அநாதரணிய மாயிற்று. முன்னைய யுகங்களில் ஜாதிமேன்மைக்கு க்ஷேத்திரம் பிரதானமன்று. பீஜமே பிரதானமென்பது ஸ்மிருதி இதிகாசபுராணசம்மதமும், அவற்றையோதி உணர்ந்த மெய்ஞ்ஞானிகள் துணிபுமாம். அப்படியே பிரமன் முகத்திலுற்பவித்த ப்ர்ம்மகுலபுங்கவராகிய வசிட்டர்

Koviloor Digital Library

வழித்தோன்றிய பராசரமகாரிஷியா னவர் உலகக்ஷேமார்த்
தமாகத் தெய்வத்தன்மையுள்ள வோர் புத்திரனைப் பெறநிக
குதி, நெடுங்காலந்தவமிருந்து, அதற்குத்தக்க காலத்தையெ
திர்பார்த்துக்கொண்டிருந்து, இரண்டாவது வருணகுல மணி
யாகிய யோஜனை கந்தியைச் சேர்ந்து வியாசனைப் பெற்ருர்.
இதனால் வியாசனை வலையரென்று கூறியது பயனற்றதாயி
ற்று. வியாசரோவிஷ்ணு வவதாரம்;மகாவிஷ்ணுவைப்பூலோ
கத்தில் வியாசராக அவதரித்து வேதத்தைச் சீர்படுத்துக வெ
ன்று சிவபெருமான் கட்டளையிட்டருளினர். "காதலினருளு
முன் கலியின் பான்மையில், கோதறுமோர்கலை கொண்டு நே
டிதும், மேதினியதனிடை வியாத னென்றிடு. போதகமுனி
யெனப் போந்துவைகுதி" என்ற கந்தபுராணச் செய்யுளானு
முணர்க. இதனால் வியாசர் பிறப்பதற்கு முன்னமே போதக
முனிவரெனப் பரமசிவமூர்த்தியளித்தருளியதிருநாமமுடைய
பெருந்தகையா ரென்பதினிது புலப்படுகின்றது. அவர் பிற
க்கும்போதேபூணூலும், தண்டுகமண்டலந்தரித்துப்பிறந்தாரெ
ன்று புராணாதிநூல்கள் பலவுஞ் சான்று கூறுமாற்றால் வியா
சர் பூஸ்பரிச மாகுமுன்னமே பிராமண திருமேனியுடைய
ராயின ரென்பது பாமரருங்கொள்ளக் கிடந்தமையை யாரா
ய்ந்தறியாதுதமது மனம்போனவாறே நிந்தைமொழிகளை நிரப்
பிவரைந்து விட்டுப் பெரியோர் பாலபசாரப்பட்டு, நரக பூமி
யை யுரிமைகொள்ள முயல்வது ஸஜ்ஜனர்களுக்கு அழகன்
றாம். இவ்வாறு எழுதிவிட்டபடியினாலே, வேதபுராணாதிசம
ஸ்தநூல்களாலும் புகழப்பட்டுள்ள வெம்பெரியோர்களுக்கா
வது, எமக்காவது யாதொருகுறைவும்நேரிடாது- பின்னென்
னெனில், நமது அரக்கோணவாசியார் பிரா
மணர்கள் மேலேற்றிய குற்றங்களெல்லாம் மூங்கிலிற் பிற
ந்த அமல மூர்த்தியாகிய பரமசிவப் பிரபுவின் பாலும், சரவ
ணத்திற்பிறந்த எமது சிற்குணானந்தத் தெள்ள முதாகிய சண்
முகக் கடவுள் பாலும், மான்வயிற்றிற் பிறந்த ஜகன்மாதாவா
கிய வள்ளிநாச்சியார்பாலும் எறிவிடுமோவென்றே யஞ்சுகி
ன்றோம். துரியப் பரம்பொருளாகிய சிவபெருமான் விடச
ங்கம் வடிவுகொண்டு வந்து, யாதவராஜன் பணிப்பெண்ணை
ப்புணர்ந்தாரென்று காளத்திப்புராணங் கூறுவதையும் யோ
சித்துப் பார்ப்பாராக.

இனிப்பிரமன் முகத்திற் பிறந்த பிராமணரிக்காலத்திலி
ல்லையென்றும், 'பிரமன் முகத்தில் பிராமணர் பிறந்தார்களெ
ன்றும் பிரமாணத்தை மேற்கொண்டு அந்தணர். முதல்குல
த்தவராக வாதிக்கலாம். அங்ஙனமாயின் பிரமனிட முதற்பி
றந்த பிராமணன் யாவன்? ஒருவன் பிறந்தானா? பலர் பிற
ந்தார்களா? அவர்கள் தனியே பிறந்தார்களா!ஸ்திரீகளோடு
பிறந்தார்களா? இவர்கள் பேரைப்பிரஸ்தாபித்து இவர்களைத்
தமது அந்தணர் குலத்து மூலபுருஷராக வெடுத்துக்காட்டி
வெளிவருவாராயின் அப்போதிவரொருக்கால் முதற் குலத்த
வராகலாம்." என்ற சில கேள்விகளைக் கேட்டார். பிரம
தேவரது முகத்திற் பிராமணன் பிறந்தானென்று வேதபுரு
ஷன் சாட்சி கூறிச் சாதிப்பதை யோசியாது, வேறு பிரமா
ணங்கள் வேண்டினார். வேதப்பிரமாணத்தை நம்பாத இவ
ர்க்கு இன்னும் எத்தனை பிரமாணங்கள் காட்டினாலும் விழலு
க்கிறைத்த நீர் போற் பயன்படுவதில்லை. 'ஒருக்கால் முதற்கு
லத்தவராகலாம்' மென்றாரே; இவர் ஒப்புக்கொண்டதனாலே
ஒருவன் பிராமணனாய் விடுதலும், ஒப்புக்கொள்ளாமையாற்
பிராமணனாகாமற் போதலுமில்லை. ஆதலாலதற்கு இவரது
கைபொப்பம் வேண்டுமென்பதோர் அவசியமில்லை. ஆயினுஞ்
சிறிது கூறுகின்றோம். பிரமாவின் முகத்தினின்றும்,தம்பதி
களாகவே, மரீசி,பிருகு,அங்கிரசு,புலஸ்தியர்,புலகர்,கிருது,தட்
சன், அத்திரி, வசிட்டராகிய இவர்கள், பிறந்தாரென்று வா
யுசம்ஹிதை கூறுகின்றது. இவர்களில் தட்சன் கிருது புல

ஸ்தியர் புலகர் இவர்கள் ஸந்ததியில்லை யென்றும், ஏனைய
ஐவர் வழித்தோன்றிய அநேக குலங்களிருந்தன வென்றும்
அவற்று ளிக்கலியுகத்திற் பல குலங்கள் குறைந்தன வென்
றும் எஞ்சி நின்ற கோத்திரத்தொகை யிவ்வளவென்றும்போ
தாயன சூத்திரம் பிரவர கண்டத்தும் மற்றுமுள்ள வாபஸ்தம்
பாதி பிரவரகண்டங்களிலும் [பிரவரம்-வம்சம்] விளங்குகின்
றது. பிரமன் முகோற்பவர்களாகிய மரீசி, பிருகு, அங்கி
ரசு, அத்திரி, வசிட்டர் ஆகிய ஐவர் வழித்தோன்றிய அந்த
ணர்களே இக்காலத்திலுள்ளார் என்று ஏற்படுகின்றது. அந்
தணர் நாடோறும் செய்து வரும், ஸந்தியாவந்தனாதி கிரு
த்தியங்களிற் சொல்லபபடும் வந்தனமந்திரமாகிய அபிவாதன
மந்திரத்தில் மேற்கூறிய ஐவருள் தமது கோத்திர முற்பவி
த்த ரிஷிபுங்கவரின் பெயரை முற்கூறிப் பின்னர்த்தமதுகோ
த்திரப்பெயர் கூறிவருகின்றனர். இதனாலிக்காலத்திலுள்ள
அந்தணர்களே, பிரமன் முகத்திற் பிறந்தவர்களென்பது தெ
ற்றெனப்புலப்படும். இவற்றையாராய்ந்தறிய அவகாச மில்
லாமையாலோ, பிராமணரிடங் கொண்டதுவேஷத்தினாலோ,
இன்னும் யாதுகாரணத்தாலோ நமது அரக்கோணவாசியார்,
அவசரப்பட்டு வெளிவந்து, தமக்கு மேற்பட்டவராகிய முதற்
குலத்தாரிக்காலத்தில்லையென் றுப்பிரமாணஞ்செய்துவிட்டார்.
அப்பத்திரிகையிற் கண்ட வேறு சிலவிஷயங்களை நோக்கு
ங்காலிவர் வைதிக சைவரென்று தோன்றுகின்றது- தாம்
வணங்கத் தக்க அந்தணர் குலத்தை நிந்தித்துப் புறக்கணி
த்து விட்டு வைதிக சைவம் வளர்க்கு மிவரது புலமைக்கு
மெச்சுகின்றோம்- கிறிஸ்தவர் மகமதியர்களாகிய புறச்சமயிக
ளிவருடைய வேத புராணங்களை யிகழ்ந்து பரிகாசிப்பார்க
ளே யென்று சிறிதும் யோசியாது, தமது புலமையைப் பிர
காசப்படுத்துவதையே பொருளெனக்கொண்ட அரக்கோண
வாசியாரோடு வாதாடுதலெமக்குத் தகுதியன்றாயினும்,முதல்
வருணத்தாருள்ளும் அநேகர் தமது குலமகிமையை யுண
ராமல் மயங்குவாராகையால், அவர்களுக்குணர்த்துமாறே யா
மிங்ஙன மெழுதத்துணிந்தாமென்க-

இவர் கருத்துப்போலப்பிரமன் முகோத்பவராகிய பிரா
மணரிக்காலத்திலில்லையென்றுகொள்ளின்,அநாதிநித்தியப்
பழம்பொருளாகிய மகாதேவன் கூறிய வேதம், பிரமன
முகத்திற்பிராமணன் பிறந்தானென்று கூறும் வாசகம் தவ
றுபடும்; வேதவாக்கியப்பொரு ளென்றும் நிலைபெற்றிருக்க
வேண்டுமாதலால். அன்றியும் பிரமன் சிவபெருமான்
திருமுடியைக்கண்டதாகப் பொய்பகர்ந்ததனால்அவருக்குப்
பூமியில் ஆலயமில்லாமற்போகப் பரமேசுவரர் சபிக்கப்,பிர
மன் தன்குற்றத்தை மன்னிக்கவேண்டி யிரந்தகாலையில்
பூலோகத்திற்செய்யப்படும்பிராமணபூஜையெல்லா முனக்
கேயாகுகவென்றும், பிராமண கிரகங்களெல்லாம் உனக்
காலயமாகவென்றும் வரமளித்தது புராணப்பிரசித்தமன்
றோ? அதுபற்றியேயன்றோ அன்றுமுதலிதுகாறும், உல
கத்தாரெல்லாரும் பிராமணர்களுக்குப் பலவகை தானங்க
ளையுஞ்செய்து பிரமனுக்குத் திருப்தியுண்டாக்கிச் சிவவா
க்கியபரிபாலனஞ்செய்துவருகின்றார்கள்· பிராமணரில்லை
யாயின் சிவவாக்கியம் தவறுபட்டதாமன்றோ? இவற்றை
யோசித்துப் பார்ப்பாராக. சிவபெருமான் கூறியபடி நம்

Koviloor Digital Library

யைப்போலக் கருமத்தால் மேம்பட்ட சனிமாலப்பிராமணனாயேயென்பாராயின் அது கூடாது. பிராமணனென்பது முதல்வருணத்தார்க்கே யுரியதாக நிகண்டுவிற்பெறப்படுவது; அதுபிறர்க்காமாறில்லை. ஆமென்பாராயின் பிறவருணத்தார்க்கு நிகண்டுவில் பெறப்படாத பெயரைக்கூறுதலிசையாது. ஆதிசைவப்பிராமணரென்று கொள்வாமேல் அவர் சிவப்பிராமணர் சிவத்துவிஜரென்று அடைமொழிகொடுத்துவழங்கப்படுகிறார்களேயன்றி அடைமொழியின்றி வழங்கப்படுவதில்லை. தம்மைப்போல யோக்கியதையால் மேம்பட்ட சூத்திரத் துறவிகளுக்கும் அன்னதானமுதலிய செய்து வழிபடுதலுலகத்திற்கண்டாமெனின் அது மகேஸ்வரபூஜையென்று கூறப்படுவதேயன்றிப்பிராமண பூஜை என்று பிரசித்தியடையவில்லை. இவைமுதலிய பல காரணங்களால் பிரமன்முகத்திற்பிறந்த அந்தணர், முற்காலத்தும் தற்காலத்தும்இனிவரும் பிற்காலத்துமாகிய எக்காலத்து முள்ளாரென்பதே யுத்திபமெனத்துணிந்திடுக. பிரமன்முகத்துதித்த பிராமணர்க்காலத்தில்லையென்றிவர் துணிந்து கூறியதுபோல அவரது பாதத்திற்பிறந்த சூத்திருமிக்காலத்திலில்லை யென்று கூறுவார்களாயின் அதற்கென்செய்வர்? கலசயோனியென்றதனால் கும்பமுனிவரை யிகழ்ந்த இவர் கங்காபுத்திரர், பூமிபுத்திரர் என்னும் தமது குலப்பெருமையைக் கண்திறந்துபார்த்து மகிழ்வாராக. இவைகளையெல்லாம் போஜித்துப்பாராமல் கருமத்தால் மேம்பட்டதனாற் பிராமணர் நாங்களேயென்று வீண்வம்பாடுமிவர், தாமே பிராமணரென்று கூறும் மேற்றிசையார் முதலியவரைப் போல மதிக்கப்படுவர் பெரியோராலென்க.

'வேதமுதலிய கலைகளில் பிராமணரென்றது ஜாதிவேதியரையன்று என்று வஜ்ரசூசிகோபநிஷத்திற்கூறப்படுகிறதென்றார். அதனால் ஜாதிப்பிராமணர்களுக்கு வேதாதி கலைகளில் அதிகாரமில்லையென்பது இவரது கருத்துப் போலும். இதென்ன அதிசயம்! சமஸ்த கலைகளிலும் ஜாதிப்பிராமணர்களுக்கே அதிகாரமுண்டென்று வேதபுராண இதிகாசங்களும் மற்றுமுள்ள உபப்பிரம்மணங்கள் யாவும் முழங்குவதறியாது ஜாதிப்பிராமணர்களுக்கு அதிகாரமில்லையென்று சுருதிகூறுமென்றது சாஸ்திராராய்ச்சியில்லாமையேயாம். வேதமே ஜாதிவேதியரை முதல்வருணத்தாரென்று கூறிற்றன்றோ! அங்ஙனம் விதந்து கூறிய ஜாதிவேதியரை ஏன் அந்தச்சுருதி விலக்கியது? இதை வேறு பிரமாணங்களால் ஸாதித்துக்கொள்வாரா? வினை வஜ்ரசூசிகோபநிஷத்தில் கூறப்பட்டதென்றால் கேட்பவார்களா? கூறினும் சாதிவேதியரையன்றென வொதுக்கி, இவர்போன்ற கர்மப்பிராமணர்களை மட்டுங்கூறுது. அன்றியும் வேதமுன்னோடு பின் மலையக்கூறுது. ஸ்மிருதிமுதலிய நூல்களில் வேதாதிகாரம் முதல்வருணத்தார்க்கென்றே விதித்திருக்கின்றது. சூத்திருக்கு ஸ்மிருதியேயன்றி ஆகமங்களிலும் வேதாதிகாரம் விதித்ததில்லை. ஆகமபுராணங்களாகிய கலைகளையோதச் சூத்திருக்கதிகாரமுண்டென்பதிலெமக்கொரு ஆக்ஷேபணையுமில்லை. இவர் தமது கட்சியை ஸ்தாபித்தற்கு வியாசர் விதுரன் முதலாயினாரைத் திருஷ்டாந்தங்காட்டினார். வியாசர் ஜாதிவேதியரென்பதை முன்னரே விளக்கிக் காட்டினோமாகையால் விதுரர் யோக்கிதை யாவருக்குமினிதுபுலப்படும். வால்மீகியைக் காவியகர்த்தாவென்று புகழ்ந்ததேயன்றி அவரை பிரமரிஷியென்று யாண்டுங்கூறப்பட்டதில்லை. தர்மவிரதனாகிய வேடுவன் குலாசார தர்மந் தவறலாகாதென்று தன் குலத்துக்குரிய ஒழுங்கந்தவறாது நடந்தானென்றமையால் அவன் பிராமணரை வணங்கி வாழ்ந்தானென்றே கொள்ளப்படும். கௌசிகன் ஓர் பதிவிரதாசிரோமணியை யவமதித்த குற்றநிவாரணத்திற்காகத் தர்மவிரதனிடஞ்சென்றான். தர்மவிரதனும் அம்மாதுசிரோமணியின் கருத்தூர்ந்தேயுபதேசஞ்செய்தான். அது பிராமண குலமாதாகிய அகலிகைக்கு க்ஷத்திரியகுலோத்துங்கராகிய ரகுநந்தனர் பாததாமரையால் சாபவிமோசனம் விதிக்கப்பட்டது போல்வதொன்று. அதனால் தர்மவிரதன் பிராமணனாய்விடமாட்டான். தர்மவிராதனை ஞானக்கலையுணர்ச்சி மாத்திரைக்கே யெடுத்தாண்டதெனின் திருநாளைப்போவார்க்கு ஞானநிகழ்ந்ததுபோலப் பூர்வஜன்ம தபோபலத்தால் நிகழ்ந்தது. அது ஏகதேசம். இதனாலே வேதங்களுக்கு அவர்களேயதிகாரிகளாவாரென்பது பயன்பெறாதென்க. அதுதர்மவிரதன் தன் குலாசாரப்படி மாமிசம் விற்று ஜீவனஞ்செய்தாரென்றுகூறப்படுகையாலினிதுவிளங்கும். சூத்திரனாகிய ஜம்புகன் தன்குல ஒழுக்கத்துக்கு விரோதமாகத் தவஞ்செய்து சிநாகாந்தனாகிய இரகுநாயகனால் வெட்டுண்டு நிர்மூலமான கதை ராமாயணத்திற்கூறப்பட்டுள்ளதை நமதன்பராகிய அரக்கோணவாசியார் தமது ஞாபகத்துக்குக்கொண்டுவருவாராக. இவை தமது தலைக்குப்பேரிடியாய் வருமென்று யோசித்து அடங்கியில்லாது 'இப்படி தலைபிலிடிவருமென்று தெரிந்தால் நமதுதிக்ஷிதர் சிஷ்யர் இவ்வளவுதூரத்துக்கு வரமாட்டார்' என்றுகூறித் தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டார்.

Koviloor Digital Library

இனிப் 'பிராமணஸ்திரீயைப்போலவே சூத்திரனும் பிராமணனுக்கபேதம் பாராட்டத்தக்கவனென்று' கூறினர். பிறவிசேஷத்தால் மேம்பட்ட பிராமணஸ்திரீயும், பிறத்தாழ்மையால் இழ்ப்பட்ட சூத்திரனும் ஸமனாயிடுதல் யாங்ஙனம்? உபநேதாதிகளை இருவருக்கும் சமமாகச் சாஸ்திரங்கள் விதித்தமையாலென்னில் அங்ஙனமாயினும் வேதமந்திரங்களாற் செய்யப்படும் சாந்திமுதலான சடங்குகள் செய்யப்பட்டுப் பரிசுத்தம் பெற்றிருக்கும் பிராமண ஸ்திரீக்கும் அங்ஙனஞ்சுத்தம் பெறுமதிகாரமில்லாத சூத்திரனுக்கும் பேதமிகவுண்டு என்க. ஆதலால் வேதாதிகாரியாகிய பிராமணனிருவரையும் சமானமாகக் கொள்ளுதல் சாலாது. யாவரும் பிரமனிடம் பிறந்த சகோதரபாவத்தாரென்னில் தமையனிடத்தில் தம்பி நடக்கவேண்டிய முறைதவறாது நடந்துகொண்டகாலையில் தமையனுந் தம்பியையாதரியாமற்போகான். அங்ஙனமின்றி வரம்புகடந்து, அண்ணனுக்கேயுரிய சுதந்தரமாகிய வேதாதிகாரம் தங்களுக்குமுரிமையென்று வீண் வியாஜ்ஜியந்தொடுப்பது இக்காலத்துச் சூத்திரரில் மிகச்சிலர் கொள்கையாதலால் மூத்தோராகிய பிராமணர் அவர்களையெப்படி நேசிப்பார்கள்? இனியேனுமிவற்றைக்கூர்ந்து யோசித்துத் தமையன்மார்களிடம் நடக்கவேண்டிய முறைப்படி நடந்துகொண்டு சமாதானமாக வாழக்கருதுவாராக.

இதுமாதிரி யொன்று நாகைநீலலோசனிப்பத்திரிகைக்கு அனுப்பப்பட்டது.

இங்ஙனம்
ஓர் மஹாசைவர்.

அத்துவிதவிசாரம்.

தொடர்பு.

ஐய!

முற்கூறிய அறுபொருள்களையும் ஆரோபத்தடக்கும் வழியைகாண்டுவிப்பாம். முதற்பொருள்ஒப்புமையைஆரோபத்தடக்கிக்காட்டுவாம். அதற்கு உதாரணம்! அப்பிராமணனென்பது. ஈண்டு "ந"கரத்திற்கு ஆரோபம்பொருளெனக்கொள்ளின் பிரமாணத்தன்மை கற்பிதமாகமுடியும். இப்பியின்கண் வெள்ளியைக்கற்பிக்க ஏதுவானவெண்மைப்பளபளப்புமுதலியனபோல்இங்குஅவ்வந்தணத்தன்மையையாரோபிக்க ஏதுவானது அந்தணர்க்குமிவர்க்குமமைந்தபொதுத்தன்மையானமானிடத்தன்மைஉளதாதலால் அவரைஅப்பிராமணரெனப்பிராமணத்தன்மையைஆரோபித்துக்கூறலாயிற்றேயன்றி கல் மண் முதலியவுதாசினவத்துக்களை அப்போதத்தன்மை பற்றாமையால்அச்சொல்லால்வழங்குவதில்லையென்க. ஆதலாற்றான் ஆசிரியர் பதஞ்சலியார் "நஞிவயுக்தமந்யஸத்ருஶாதிகரணே ததாஹ்யர்த்தகதி:" (இதன் பொருள்:—கடையில்லிருக்குங்கபியதற்பெற்றவ[illegible]வனும் அந்தணனென உவமிக்கத்தகுதியான்)என்றனர். இனிஇரண்டாவது பொருளை ஆரோபத்திலடக்கும் வழிகூறுவாம். இரண்டாம் பொருள் இன்மையாகும். அதற்குதாரணம்—அபாவமுதலியன. அஃதில்லாவிடத்து அஃதென வழங்குவதே ஆரோபமாகையால் அவ்வத்தன்மையின் ஆரோபவழக்கு அஃதில்லாவிடத்தே அமையுமாதலின் ஆரோபமென்பது இன்மைப்பொருளையும் வியாபித்துநிற்றல் காண்க. மூன்றாவதுபொருளாய்வேற்றுமையும், நான்காம்பொருளாய குறைவும் ஆரோபத்திலடங்கும் வழியும் முற்கூறியவாறென்றொழிக. அவ்விடத்துவேற்றுமைக்குறைவுகளின்எதிர்மறைப்பொருள் அனுயோகியிட மாரோபிக்கப்படுதலால் அதன்வேற்றுமையையும் அதன்குறையையும் ஆரோபம்வியாபித்ததென்க. இவ்விதமேஅப்பிராசஸ்தியம் விரோதமென்னும்பொருள்களும் அமையும்வழியறிக. அற்றேல்அன்மைப்பொருளையும் ஆரோபத்திலடக்கிக்கூறுவாமெனின்அதுபொருந்தாது. யாம்முற்கூறித்துணிந்தவாறு அன்மையென்பது அழிவுபாட்டபாவமேயாதலின் அழிந்தபொருளை அவ்வழிவென்னும் அன்மையின்கண் அல்லது அது தோன்றியவிடத்தின்கண் ஆரோபித்தல்வேண்டும். ஆரோபமென்பது, எக்காலமும் ஒருதன்மையைப்பெறாத ஒன்றினிடம் அத்தன்மையைக்கற்பிப்பதே யாதலால் அன்மை தோன்றியவிடம் அப்பொருள் நிகழ்காலவெதிர்காலங்களில் அத்தன்மை யற்றதாயினும் இறந்தகாலத்தில் அத்தன்மைபெற்றதாலானும் "ந"கரத்தாற்றோன்றும் எப்பொருளையும் அடைச்சொல்லின்றிகாலம்வரைந்து காட்டமையானும், அன்மைஆரோபத்தடங்காதென்க. மேலே அத்துவிதமென்னுமிடத்துத்துவிதம் கற்பிதமென்றுதல் ஆரோபிதமென்றுதல்பொருள்கூறி இன்மையைஆரோபத்திலடக்கி ஒதுவது ஆன்றோர்கூறிய அறுபொருள் துணிபிற்கு எவ்விதத்துமுரணுமாதில்லையெனவும் அன்மைப்பொருள் எவ்வழியும் ஆரோபத்திலடங்காதெனவும் கண்டுணர்க. இனி "ந" என்னுஞ்சொல்தனக்கெனவோர்செம்பொருளை யறிவிக்காதுதன்னுடனிகழ்ந்த சொற்பொருட்டன்மையைக்கற்பிதமெனவே குறிக்குமென்பதை அடியிற்பிரமாணத்தோடுகாட்டுவாம்.

வரும்.

Chidambaram—Printed and published for the Proprietor at the "Brahmavidya Press" No 38 Senkalceneer Pilliarkoil Street.

Koviloor Digital Library

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியா பத்திரிகை

BRAHMAVIDYA PATHRIKA

பூர்ணிமை அமாவாஸ்யைகளிற் பிரசுரஞ் செய்யப்படும்.

ஸ்ரீ ஸதாஶிவேந்த்ரஸரஸ்வதீ ப்ரணீதா: | ஸர்வம் ப்ரஹ்மமயம் ஜகத் ||

கா புஸ்தகம்] சிதம்பரம். நந்தன ௵ ஆவணி ௴ அ-உ ௵ 1892 ௵ ஆகஸ்டு ௴ 22உ [இலக்கம் கச

குருஸ்துதி:

ஓம் நமோ ப்ரஹ்மாதிப்யோ ப்ரஹ்மவித்யாஸம்ப்ரதாயகர்த்ருப்யோ வம்ஶரிஷிப்யோ

மஹத்ப்யோ நமோ குருப்ய: | ஸர்வோபப்லவரஹித: ப்ரஜ்ஞானகன:

ப்ரத்யகர்த்தோ ப்ரஹ்மைவாஹமஸ்மி ||

பத்திரகிரயம்.

இந்தியாவிற்கு	வருஷம்	1-க்கு	3	0 0
ஷை	மாசம்	6-க்கு	1	8 0
ஷை	மாசம்	3-க்கு	0	14 0
ஷை	1-காபி		0	3 0
இலங்கைக்கு	வருஷம்	1-க்கு	3	8 0

உபாத்தியாயர் அறுபதின் பேரில் எடுத்துக்கொள்ளும் பள்ளிக்கூடத்து மாணாக்கர்களுக்கும், தரப்பட்டாளே உபாத்தியாயர்களுக்கும் ரூ 1-8-0. சென்னை இ-டி-சொஸைட்டி சார்டர்பெற்ற பிரசங்கிகளுக்கும், கிராமத்தில் பதின்மர் கையொப்பமிட்ட விண்ணப்பத்தின் பேரில் படித்துப்போதிக்கும் வித்துவான்களுக்கும் ரூ 1-க்கு அ 12 க்கு கொடுக்கப்படும்.

THIS JOURNAL DEVOTED TO ARIAN RELIGION, PHILOSOPHY LITERATURE &c. CONDUCTED BY PANDIT C. R. SRINIVASA SASTRIAR. UNDER THE KIND PATRONAGE OF

H. H. RAJA BASKARA SETHUPATHI RAMNAD.

Allrights reserved.

Koviloor Digital Library

நாகைநிலலோசனியும். ஓர்சைவரதுபொய்ம்மத்தியஸ்தமும்.

நந்தன ௵ ஆவணி மீ ௮-௨ நீலலோசனியில் "ஓர் சைவன்" எனக் கையெழுத்திட்ட வொருவர், "ஏகத்குருவிசாரவிவகாரவிஷயமாய் மத்தியஸ்தர் தீர்மானம்" என அதுவிஷயமாகப் பெயர்கொடுத்து எழுதியிருக்கிறார்.

௧-வது. இதுவரையில் ப்ரம்மவித்தியா, ஞானாமிர்தம் நாகைநீலலோசனி இம்மூன்று பத்திரிகைகளையும் சம்ஸ்கிருதம், தமிழ் இருபாஷைகளிலும் வல்லசில சைவர், ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்துவர் ஆகிய நாற்பிறத்துப் பண்டிதர்களிடத்து ஷை ஓர் சைவர் வாசித்துக்காண்பித்ததில் அவர்கள் நெடுநேரம் சிந்தித்து முடிவில் ஞானாமிர்த பக்ஷமே சரியென்றும் ப்ரம்மவித்தியா பக்ஷத்தார் ஒன்றுக்காவது தக்க ஞாயஞ்சொல்லவில்லையென்றும் இனி இவ்விவகாரங்களைப் பரப்பாமல் இதோடு முடிவுகட்டுவதே நன்மையென்றும் சொன்னார்களாம். ஷை நாற்பிறத்துப்பண்டிதரும் ஷை அக்கடிதமெழுதிய ஓர் சைவருடைய நண்பரென்றுஞ் சொல்லுகிறார். அன்றி ஷை சைவர் "எனது அபிப்பிராயமும் அதுவேயாம்" என்கிறார்.

௨-வது. ப்ரம்மவித்தியா பத்திராதிபரையும் அவரைச்சார்ந்தாரையும் அவர் சொன்னவைகளையும் சங்கராசாரியாரையும் இதுவரையில் அவரவர் தூஷித்ததூஷணைகளையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்துத் தூஷித்துவிட்டார். அதில் இது நியாயம், இது நியாயமல்லவென்று காரணங்காட்டிப் பேசியதொன்றுமில்லை.

இவ்விரண்டின் பேரில் யாம் சிலபேசுவாம். அக்கடிதமெழுதியவர் ஞானாமிர்தத்தார் கட்சியைச்சேர்ந்தவரென அவரே தெரிவிக்கிறார். அன்றி அக்கட்சியார் இதுவரையில் எவ்வளவு தூஷித்தெழுதினார்களோ அவ்வளவையுந் திரட்டியெழுதியிருக்கிறார். அன்றி அன்னியரைக்கண்டனமாற வேண்டாமென்று சொல்லி அதற்காகத் தம்மவருக்குப் புத்தியுங் கூறுகின்றார். இதனால் ஞானாமிர்த கக்ஷிக்காரரென விபரீதமாய் ஏற்படுகின்றது.

மத்தியஸ்தர் எப்படியிருக்கவேண்டுமென்னின் வாதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சிலரும் பிரதிவாதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சிலரும் இருவராலுந்தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒருவருமாயிருக்கவேண்டும். அவர்கள் அறிவிப்புப்பத்திரமெங்கும் விடுத்துக்குறித்ததேதிகளில்பொதுஜனசமுகத்தில் வாதஞ்செய்வித்து பேசும் வாதங்களை அந்தந்தப்பிரகாரம் இருவரைக்கொண்டு எழுதுவித்து அவ்விரண்டிலும் அன்றாடம் இவ்விருபாலாருடைய கையெழுத்தும் வாங்கி, அதன்பேரில் ஒவ்வொரு மத்தியஸ்தரும் "வாதிப்பிரதிவாதிகள் பேசிய விஷயங்களெல்லாவற்றையுங்காட்டிக்காட்டி இது நியாயம், நியாயமற்றது, இதுசுருதிசம்மதமானது, இது அங்ஙனமல்லாதது, இது யுக்தி அநுபவங்களுள்ளது, இது அங்ஙனமல்லாதது எனவொவ்வொன்றையுமெடுத்தெழுதி முடிவில் இந்தப்பக்ஷத்திற்ஜெயம், இந்தப்பக்ஷத்தில் அபஜெயமெனக் காட்டவேண்டும். அதன்பேரில் எல்லாமத்தியஸ்தரும் ஒன்றாய்க்கூடி யெல்லோருடைய தீர்மானங்களையும் ஆராய்ந்து பார்த்து முடிவில் ஒருவித தீர்மானஞ்செய்து, அந்தத்தீர்மானத்தை அச்சிட்டுப்பலருக்குக் கொடுக்கவேண்டும். சென்னையில் ஹைகோர்ட்டில் நடக்கும் விதமும் இதுவே. இது யுக்தியநுபவங்கட்கு பொருந்தியிருக்கிறது. வாதம் நடக்குங்கால் ஒருவரை யொருவர் மரியாதைக்குறைவாகவாவது தூஷிக்கவாவது கூடாது. மத்தியஸ்தர் தக்கபடி போலீசாரை வைத்துக்கொண்டு வாதத்தை நடத்தவேண்டும். இவ்வளவுக்கும் சம்மதப்பட்டு வாதிப்பிரதிவாதிகள் முன்பே உடன்படிக்கை யெழுதித்தரவேண்டும். இந்தத் தீர்மானந்தான் மத்தியஸ்த தீர்மானமாகும். இந்தத்தீர்மானத்தின் பிறகு தோற்றவர் தோற்றவரே; ஜெயித்தவர் ஜெயித்தவரேயாம். இது நியாயம்.

ஓர் சைவர் எழுதிய விஷயத்தில் இவைகளொன்றையுங்காணோம். வாதிப்பிரதிவாதிகள் அம்மத்தியஸ்தர்களை நியமித்ததாகவுமில்லை; அதிலும் ஒருவர் சபாநாயகராகவுமில்லை; வாதிப்பிரதிவாதிகள் உடன்படிக்கை யெழுதிக்கொடுத்ததாகவுமில்லை; மத்தியஸ்தர் அறிவிப்புப்பத்திரம்விடுத்து பொதுஜனங்களைக்கூட்டி வாதஞ்செய்வித்ததாகவுமில்லை; நடந்தவிஷயங்களை யெழுதியதாகவும் அதில் வாதிப்பிரதிவாதிகள் கையெழுத்து வைத்ததாகவுமில்லை; மத்தியஸ்தர்கள் ஒவ்வொருவிஷயங்களையுங் காட்டிக் காட்டி இது நியாயம், இது நியாயமற்றது, இது சுருதியுக்தி சம்மதம், இது அங்ஙனமல்லாதது என எழுதி அதன்பேரில் மொத்தமாய்த் தீர்மானப்படுத்தி இன்னார் பக்ஷம்வெற்றி, இன்னார் பக்ஷம் தோல்வி யெனத்தீர்மானஞ்செய்ததாயுமில்லை. இப்படிக்கெல்லாமில்லாவிட்டாலும் இவர் படித்துக்காண்பித்ததைவைத்துக்கொண்டாவது பார்ப்போம். இவர் ஞானாமிர்தக்காரர் பக்ஷமாயிருப்பதால் இவர்சரியாய்ப்படித்துக்காண்பித்திருப்பாரென்று நம்புதற்கிடமில்லை. இவர் பொதுவானவர் போல் காட்டி யெழுதியிருப்பாரானால் ஒருவாறு இவரை நம்புவதற்கிடமுண்டு. "நாய்வேஷம் போட்டால் குலைத்துத்தீரவேண்டும்" எனவோர்பழமொழியுண்டல்லவா! அப்படியே மத்தியஸ்தராயிருந்து ஒருவிஷயத்தை யெழுதவேண்டுமானால் அதுவரையில் முற்றும் மத்தியஸ்தரென்றே காட்டிக்கொள்ள வேண்டாமா? மத்தியஸ்தரை யிவருடைய சிநேகிதரென்றாரே. இவருடைய சிநேகிதர் இவர் பக்ஷமாய்ச் சொல்லாமல் எதிர்பக்ஷமாய்ச் சொல்வாரா! மத்தியஸ்தரை நாலுமதஸ்தராய்க் காட்டினார். அதிலும் சில என்று சொல்லியிருப்பதால் ஒவ்வொரு மதஸ்தரிலும் குறைந்தது இரண்டுபேராக ஆக எட்டுப்பேராவதுமிருக்கவேண்டும். இந்த எண்மரும் கேவலம் சம்ஸ்கிருதமாத்திரம் தெரிந்தபண்டிதர்களாயிருக்கக்காணோம்; சம்ஸ்கிருதம் தமிழ் ஆகிய இருபாஷாபண்டிதர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இருபாஷாபண்டிதர்களிந்த ஓர்சைவரிடம் வருகிறதானால் இவர் கொஞ்சம் பிரபுவாயிருக்கவேண்டும். அவர்களுக்கிவரிடத்தில் கொஞ்சம் தாக்ஷிணியமுமிருந்திருக்கவேண்டும். ஓர் சைவர், ஞானாமிர்தக்காரர் பக்ஷத்தாரென நன்றாயுணர்ந்திருப்பார்கள். அவர்பக்ஷப்படிச்சொல்லாவிடில் பிரபுவின் தாக்ஷிணியத்துக்குக்குறைவு வருமென்று சைவர்கருத்தின்படியே சொல்லி

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமது பிரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 14

[illegible]

(முத்திரை: ஸ்ரீ வித்யா ஶங்கர)

[illegible]

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை

ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிகவாரணர்களாகிய து. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉஞு முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

சுபம் வந்தனம்.
கலாவிடகஅ-வ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
பாஸ்கர ஸேதுபதி:.

Koviloor Digital Library

மஹாநிர்வாணதந்த்ரஸங்க்ரஹ:

க. [illegible]

உ. [illegible]

ங. [illegible]

ச. [illegible]

ரு. [illegible]

சு. [illegible]

மகாநிர்வாணதந்திர சங்கிரகம்.

1. மனிதன் எவ்வளவு ஜன்மங்களெடுப்பினும், தனது நல்வினை தீவினைகளாகிய விருவித கன்மங்களை யொழிக்கச் செய்யும் வரையில் மோட்சமடையான்.

2. இருப்புச்சங்கிலியாயினும் பொற்சங்கிலியாயினும் மனிதனைக்கட்டுவது எப்படி நிச்சயமோ, அவ்வாறேசத் கன்மமாயினும் துஷ்கர்மமாயினும் மனிதனை (பிறவித் துன்பத்திற்கு)ப்பூட்டுவது நிச்சயம்.

[கன்மங்கள் நமது ஆசையால் விளைகின்றன. இக்கன்மங்களுள்ள வளவும் இப்புவியின் கண்ணேனும் எவ்வுலகின் கண்ணேனும் புனர் ஜனனம் தப்பாது. ஏனெனில், ஆசைகள், கன்மங்களுக்கு வாஹனமாயுள்ள கர்மங்கள் பிரவர்த்திக்கக் காரணமாயுள்ள லிங்கதேகத்தை யுண்டாக்குகின்றன. இந்த லிங்கதேகமே (ஆசையால் விளைந்த தேகமே) நம்மோக்ஷம் பெறவொட்டாமல் குறுக்கே நிற்கின்ற பிரதிபந்தகம்.)

3. ஒருவன் எப்பொழுதும் ஸத்காரியங்களையே செய்துகொண்டிருக்கக்கூடும்; அனேக தபசுகளும், வெறுப்புகளும், உலகவிஷய விலக்குகளும் சாதித்திருக்கக்கூடும். ஆயினும், ஞானோதயமின்றி அவனுக்கு மோட்சமில்லை.

4. வித்யாவிவேக சாதனையால் மனதைக்களங்கமின்றி சுத்திசெய்து, மாளிடத்தன்மையையும், குணங்களையும், போக்குகளையும் அடக்கி அவைகளை க்ஷீணிக்கச் செய்து, ஸ்வலாபாபேக்ஷையின்றி காரியங்களைச்செய்து கொண்டு, நிருச்யமானமாயுள்ள இப்புவித் தோற்றத்தின் தன்மையை சங்கித்து ஆராய்பவர்களுக்கே ஞானோதயமாகும்.

5. சதுர்முகப்ரம்ம முதல் துரும்பீறாகவுள்ள இந்த ஜகத்துமாயையினுலுற்பத்தி(ஆகலின்பிரபஞ்சம்பொய்.) பரபரம்மமே சத்தியமென்றும் அதையன்றி வேறொன்றில்லையென்றும் அறிவதேமோக்ஷானந்தத்தைக்கொடுக்கின்றது

[illegible] சுகரகஸ்யோபநிஷத்.

6 மாயாப்ரபஞ்சத்திலடங்கிய நாமரூபங்களை யிகழ்ந்து, சாஸ்வதமாயும், அசஞ்சலமாயும், எவ்வகைத்தோற்றத்திற்கு மப்பாலுள்ள ப்ரம்மத்தின்கண் மனதை நிறுத்துபவன் `கர்மவிலங்கினின்றும் தப்பித்துக்கொள்ளுகிறான்.

[குறிப்பு:— இந்த ஜகத்தை, வேற்றுமை யற்றதெனறும் வேற்றுமையுள்ளதென்று மிரண்டு பாகங்களாகப்.

[illegible]

௭. [illegible]

௮. [illegible]

௯. [illegible]

௧௦. [illegible]

ப்பிரிக்கலாம். வேற்றுமை யற்றதே இந்திரியங்களுக்குப் படாதமுதல் பொருள். அது ஸத்து, சித்து, ஆனந்தம எனமூன்று பாங்குடைத்து. வேற்றுமையுள்ளதாகிய மற்றொன்று தோற்றம், அதாவது, க்ருபமான ஜகத்தெனப்படும். இது நாமம், ரூபம் என்னுமிரண்டு தன்மையுமமைந்தது. இவ்விரண்டு குணங்களும் மாயையின் உத்பத்தி. ஊன்றிப்பார்க்கின், இவ்விரண்டும் சேர்ந்தே ப்ரபஞ்ச மெனப்படும். நாம ரூபங்களின் ஆதியேஸிருஷ்டி முதலாகும். வேற்றுமைப்படாத பொருளே பரப்ரம்மமாகும். அது ஒரு பொழுதும் மாறுவதில்லை. யாருக்குண்மையுள்ள அம்சத்தை நம்மனதினின்றும் துலக்கி, மாறுபாடில்லாத அசஞ்சல வஸ்துவில் மனதை நிறுத்த பரமாத்ம சாந்நித்தியம் ஸித்திக்கும். அந்த நிர்விகலபப்பொருளேபரப்ரம்மம். [illegible] ||கைவல்யோபநிஷத். [illegible] ||

(சுவேதாசுவதரோபநிஷத்)

7. வைதிக கர்மங்களினாலும், ஸதாபகவன்னாம உச்சாரணத்தினாலும்அனேககோடி விரதங்களினாலும்முக்தியென்னும் முடிவு, பெற முடியாது. தானே ப்ரம்மமென்று அறியதினாலேயே முக்தி.

[குறிப்பு:—தோற்றப்படாநின்ற நாம ரூபசஹிதமான மனிதன் உண்மையான மனிதனினின்றும் வேறு. ஆகையால், அசத்தியாம்சத்தைத்தவிர்த்துப்பார்த்தால், உண்மையான மனிதன் ஸத்து, சித்து, ஆனந்த ஸ்வரூபியாயிருக்கிறான். இம்மூன்றும் சேர்ந்ததே ப்ரம்மம்.]

8. ஆத்மாவானது ஸமஸ்தத்திற்கும் சாக்ஷியென்றும், எங்கும் நிறைந்ததென்றும், பரிபூரணமென்றும், இரணடற்ற தனியென்றும், ப்ரபஞ்சாதீதமென்றும், எல்லாவற்றினிடத்து முள்ளதென்றும் ஆனால் அவற்றிற்குட்படாதென்றும், எவன் அறிகிறானோ அவனே முக்தியடைந்தவன்.

9, குழவிப்பருவத்தில் விளையாட்டுப் பண்டங்களாக வைத்துக்கொண்டிருந்த அநேக நாமரூபங்களுடையபொம்மைகளைஎப்படிவயது முதிர்ந்தகாலத்தில்தள்ளிவிடுவார்களோ, அப்படியே, ப்ரம்மஸ்வரூபத்தியானாராய்ச்சியில் மூழ்கியிருப்பவர்களும் பலவித நாமரூபபேதங்களோடு கூடிய தோற்றப் ப்ரபஞ்சத்தை யிகழ்ந்து முக்திபெறுகிறார்கள்.

10. நமது இஷ்டப்படி செய்யப்பட்ட விக்ரகங்களைப்

[illegible]

௧௧. [illegible]

௧௨. [illegible]

௧௩. [illegible]

௧௪. [illegible]

௧௫. [illegible]

பூசிப்பதால் முக்தி சித்திக்குமாயின், ஸ்வப்பனுவஸ்தையில் தாங்கள் அரசர்களாயிருந்ததாகக் கண்டவர்கள் விழித்துக்கொண்டபொழுது ஜாக்கிராவஸ்தையில் ராஜாங்கத்தையனுபவிக்கலாமே.

குறிப்பு:—அஸத்தியத்தில் ஸத்தியம் பிரக்காது. முக்தி சத்தியம்; நம்மனப்படி செய்யப்பட்ட விக்ரகங்களோ அஸத்தியம். ஆகையால், அஸத்தியமான மனோப்ராந்தி சம்பந்தமானவைகளைப் பூசிப்பது ஸத்தியமான முக்தியைப்பயக்காது.

11. மண், கல், லோகம், மரம் முதலியவற்றால் செய்யப்பட்ட விக்ரகங்களை ஈசுவரன் அல்லது கடவுளாகக் கருதிப்பூசிப்பதினாலும், விரதங்களினால் ஆகாராதி விஷயங்களைத்தவிர்த்து நிற்பதினாலும், மனிதர்கள் துன்பமே அனுபவிக்கிறார்கள். ஞானம் விநா மோக்ஷம் சித்திக்காது.

[குறிப்பு:— [illegible] என்று மைத்ரேயோபநிஷத் வாக்கியத்தையும் உதாரணமாகக்கொள்க.

12. மெல்லுதல், உறிஞ்சுதல், குடித்தல், நக்குதல், ஆகியநான்குவிதங்களிலும் ருசிகரமான உணவை உண்டும் ப்ரம்மஞானமில்லாதிருப்பவர்களைவிடத் துன்பத்தையனுபவிக்கும் பாவிகள் யாருமில்லை.

13. வாயுபக்ஷணம், சருகு புசித்தல், உஞ்சவிருத்தி, உதிர்ந்த தான்யங்களைப் பொருக்கித்தின்னல், தண்ணீர் குடித்தல் முதலிய இவைகளால் மாத்திரமே ஜீவித்துக்கொண்டு இப்பேர்ப்பட்ட விரதங்களினாலும் மறுத்தல்களினாலும் மனிதர்களுக்கு மோட்சம் கிடைக்குமாயின், பாம்பு, பக்ஷி, ஜலஜந்துக்கள் இவைகளை முக்தர்களென்றே சொல்லவேண்டும்.

குறிப்பு:—[illegible]' என்னும் கைவல்யோபநிஷத் வாக்கியத்தைக்கவனிக்க.

14. பலவித பூஜைகளிலும், தன்னையே [ஜீவாத்மாவையே] ப்ரம்மமாகப்பாவித்தல் உத்தமபூஜை; ப்ரம்மத்தின் பரிணாமங்களையும் குணநிசயங்களையும் குறித்துத் தியானிப்பது மத்யமபூஜை; மந்திரம் ஜபித்தல், ஸ்தோத்ரம்பாடல், நாமோச்சாரணை செய்தல், இவை அதமம். பாஹ்ய, வெளிப்படையான பூஜை, அதமாதமம்-

[illegible]

கசு॥ [illegible]

கஎ॥ [illegible]

கஅ॥ [illegible]

க௯॥ [illegible]

உ௦॥ [illegible]

உக. [illegible]

குறிப்பு:— [illegible]

மைத்ரேயோபநிஷத்-

15. ஜீவனுக்கும் தனக்கும், ப்ரம்மத்திற்கும், ஐக்கியமே யோகமாகும். பிரம்மேசுவர்களின் அதாவது, சிவ, கேசவ என்னும் ப்ரபஞ்ச ஸிருஷ்டிக்குரிய ஆதிசக்தியாகாரங்கள், பூஜையபூஜை. எல்லாம்ப்பரம்மமயம் என்று அறிந்து ஸ்வாநுபூதிபடைந்தவனுக்கு யோகமுமில்லே, பூஜையுமில்லை.

குறிப்பு:— [illegible] மைத்ரேயோபநிஷத்து

16. திவ்பஜோதிமயமாக ப்ரம்மஞ்ஞானமானது எவனுடைய மனோவெளியில் விளங்குகின்றதோ அவனுக்கு ஜபம், யக்ஞம், தபஸு, இன்னும் மற்றுள்ள கர்மங்கள் அவசியமில்லே.

[illegible]

என்றதனுல், ப்ரம்மஞ்ஞானமில்லாத நாமும் எல்லா கர்மங்களையும் விட்டுவிடவேண்டுமென்றல்ல. அப்படிச் செய்தால், புலியைப்பார்த்து நரியானது தனக்கும் புலியைப்போல் கோடுகளிருக்கவேண்டுமென்று தன் உடம்பைச்சுட்டுக்கொண்டது போலாகும்.

17. ப்ரம்மமே சத்தியம், அதுவே ஞானம், அதுவே ஆனந்தம், அதுவே ஒப்பற்றது, என்ற ஸ்வாநுபூதியடைந்தவனுக்குப்பூஜையேது? தியானமேது? தாரணையேது?

18. எல்லாம் ப்ரம்மமே என்றறிந்தவனுக்கு நற்கருமமுமில்லே, கெட்டகர்மமுமில்லே, ஸ்வர்க்கநரகமுமில்லே, புனர்ஜனனமுமில்லே, அவன் தியானிக்கவேண்டிய விஷயமுமில்லே, வஸ்துவுமில்லே.

ஸ்வபாபேனகூடின் காரியங்களைச் செய்தலால் நாம் கர்மத்தையுண்டு செய்கிறோம். எல்லாம் ப்ரம்மமென்றும், ஆகலால் தானே ப்ரம்மமென்றும் அறிந்த ஒருவனுக்கு எந்தக்காரியம் செய்யினும் ஸ்வபாபேனகூடியவனுக்குக்கிடையாது. ஏனெனில், அவனுக்கு ஆசையில்லே. ஆகையால், அவன் இருவகைக் கர்மங்களும்செய்வதில்லே. இத்தன்மையுடையவனுக்குத் தியானமாவது தியானிக்கும் பொருளாவது வேறு இல்லே. தியானிப்பவனுமவனே தியானிக்கப்படுபவனுமவனே.

Koviloor Digital Library

௨௨॥ [illegible]

௨௩॥ [illegible]

௨௪॥ [illegible]

௨௫. [illegible]

௨௬. [illegible]

19. அறியாத மூடர்கள் முக்தியைத்தேடி அலைகிறார்கள். ஆனால் ஆத்மாவானது எப்பொழுதும் தன்னிஷ்டமாயும் ஒன்றிலும் ஒட்டாததாயுமிருக்கிறது. அதற்கு பந்தமாவது என்ன? அந்த பந்தம் எங்கிருந்து வந்தது?

குறிப்பு:—முக்தி என்னும் பதத்தின் பொருள் பந்தவிமோசனம். மூடர்கள் அறிவின்மையால் முக்தியடைய முயலுகிறார்கள், அதாவது, ஆத்மாவை பந்தத்தினின்றும் விடுவிக்க முயலுகிறார்கள். ஆத்மா எப்பொழுதும் தன்னிஷ்டப்படியிருக்கிறதென்றும் அதற்கு பந்தமேயில்லை என்றும் அவர்கள் அறியார்.

20. இந்த ஜகத்தைக்கடவுள் தன்மாயையினின்றுந்தோற்றுவித்தார். அம்மாயையின் இலக்ஷணத்தை தேவதைகளுமறியார். அவர் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறார். ஆனால் ஒன்றிலும் ஒட்டாமலும் ஒன்றுக்குஞ்சம்பந்தப்படாமலுமிருக்கிறார்.

21. ஆகாசமானது எல்லாவஸ்துக்களிலும் உள்ளும் வெளியும் நிறைந்திருந்தும் அவற்றிற்குச் சம்பந்தப்படாதிருப்பது போல அவர் [கடவுள்]எல்லாவற்றிலுமிருந்தும் ஒன்றையும் சாருவதில்லை.

22. ஆத்மாவுக்கு வாலிபமாவது, யௌவனமாவது, மூப்பாவது இல்லை. அது விகாரமற்றது, ஞானஸ்வரூபம். எப்பொழுதும் ஒரே தன்மையுமாயுள்ளது.

23. வாலிபம், யௌவனம், முதிர்காலம், முதலிய காலவித்தியாசங்கள் நமது தேகத்தை யொட்டினவேயன்றி ஆத்மாவையல்லவென்று மாயாபத்தமான மனிதர்கள் அறிவதில்லை.

24. சட்டிகளில்நிரப்பிய தண்ணீரில்பாதிபிம்பத்தினால்அனேகசூரியப் பிரதிபிம்பங்கள்காணப்படுவதுபோல,ஆத்மாவும்மாயாகல்பிதமான சரீரங்களில் அப்படியேகாணப்படுகின்றது. [illegible] ‘திக்ருதபிந்தோபநிஷத்.’

குறிப்பு:—பரமாத்மா (பெரியஆவி)வானது மாயாகல்பிதமானபுத்தியில் பிரதிபிம்பிப்பது. ஜீவாத்மா (உயிர்த்தள்ள ஆவி) எவ்வாறு சரீரங்களில் புத்தி வேறுபட்டிருப்பதுபோல, ஜீவாத்மாவும் அவ்வாறேயிருக்கும். ஆகையால்,பரமாத்மா அனேகமென்றும், வெவ்வேறு சரீரங்களில் வேறு வேறென்றும் தோற்றுகிறது. உண்மையில் ஒரே பரமாத்மாவே வேறு வேறு சரீரங்களில் பிரதிபிம்பித்தது.

25 சூரியன் அசைவுள்ள ஜலத்தில்பிரதிபலிக்க அந்தச்சூரியனே அசைவற்றதாகக்காணப்படுவது போல புத்தி

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

யின் சஞ்சலத்தால், அறிவினர்களுக்கு, [அந்தப்புத்தியில் பிரதிபலிக்கும்] பரமாத்மாவே சஞ்சலப்படுவதாய்க் காணப்படும்.

26. ஒரு சட்டியினுள்ளடங்கிய ஆகாசமானது [கடாகாசம] அச்சட்டிஉடைக்தக்கால், வெளியிலுள்ள ஆகாச வெள்ளத்தில் கலந்துபோவதுபோல, நம்மில் பிரதிபலிக்கப்பட்டு, அதாவது, நமது தேகத்தில் அடங்கியிருக்கும் ஆத்ம பிம்பமானது, இந்தச்சரீரம நசிக்கும்பொழுது பரவெளியாகிய அளவற்ற பரப்ரம்மத்தில் கலந்து ஐக்கியமாகின்றது.

குறிப்பு:—[இந்தச் சூத்திரத்தில் சொல்லப்பட்டதேகமானது சூக்ஷமசரீரமென்னும் லிங்கதேகத்தைக்குறிக்குறிக்கின்றது. மனிதர்கள் ஆகாசத்தின் பாகங்களடங்கிய மட்பாண்டங்களுக்குவமை. உபாதிவித்தியாசத்தால் சட்டிகளிலுள்ள பின்னாகாசங்கள் வெளி ஆகாசத்திற்கும், ஒரு சட்டியின் ஆகாசம்மற்றொன்றின் ஆகாசத்திற்கும்வித்தியாசப்படுவதாய்காணப்படுவதுபோல, ஜீவாத்மாவும் பரமாத்மாவினின்று வேறு போலவும், ஒரு ஜீவாத்மா மற்றொன்றிற்குப்பிறிதுபோலவும் காணப்படுகிறது. உபாதி நாசத்தாற் சட்டிகளிலடங்கிய ஆகாசப்பங்குகள் ஒன்றோடொன்று கலப்பதுன்றி வெளியாகாசத்திலேயேப்படிச்சேர்ந்துபோகிறதோ, அப்படியே ஜீவாத்மாக்களும் சூக்ஷமசரீரமென்னும உபாதி நசித்தால் ஒன்றுடனொன்றும் பரமாத்மாவுடனும் ஐக்கியமாகின்றன. கர்மங்கள் (இருவினை) நசித்தால லிங்கதேகம் நசிக்கும். கர்மங்களை நசிப்பிக்கச்செய்யும் வகை மேல் சூத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இன்னும் இதரமார்க்கங்கள் பகவத்கீதையில் விவரிக்கப்பட்டுள்ளன. ப்ரம்மத்தின்கண் ஐக்கியமே முக்தி அல்லது மோக்ஷமென்னப்படும்.

அ-சுவாமிநாதையர், பல்லாரி.

விதவாவிவாகம் அவைதிகம் என்பது.

ஐயா! கைம்பெண்களுக்குத் திருமணம் செய்வது யுக்திக்கேனும் ஒவ்வுமா? என்பதைப்பற்றிச் சிறிது விசாரிப்பாம். எவனேனும் ஒருவன், எவனுக்காயினும் ஏதேனும்கொடுக்கவிரும்பின் அவன் தன்னிடமுள்ளதிபாயமார்க்கத்தில் சொந்தமான சொத்தை மற்றவனுக்குக்கொடுப்பதே கிரமம். அவ்விதஞ் செய்வதே பெரும்புகழை விளைவிக்கும். அதனால் புண்ணியமும் உண்டு. சுவர்க்கவாசம்கிட்டுவதிலும அவருக்குத்தடையில்லை. அங்ஙனம் செய்பவனை ஆரியர்நல்லாரென்பர். அங்ஙனமின்றிமேற்கண்

Koviloor Digital Library

[illegible]

டவைகளுக்குமாறாக நடப்பவனுக்கு மேற்கண்ட புகழ் முதலியனவும் விரோதமாகவே அமையுமென்க. அவ்விதம் வியாபம் மீறி நடப்பவர் நரகத்தையடைவார் என்பதூஉம் அவனுக்குப் பாவம்பெருகும் என்பதும் ஆரியர் கண்ட துணிபே. அந்த வியாயத்தை இங்கு சேர்த்துத் ஆலோசிப்போம். முதலில் ஒருமுறை ஒரு ஸ்திரீயை ஒருவன் ஒருவனுக்குத் தானம் செய்திட, அத்தானத்தால் அவனுக்கும் அப்பெண்ணுக்கும் உள்ளதோர் சம்பந்தம் ஒழிந்திட்டது. மறுபடி அவ்விதம் கொடுபட்ட பொருளைப் பின், வாங்கவாவது அல்லது மற்றவனுக்கு கொடுக்கவாவது பிதாவுக்கதிகாரம் சிறிதுமில்லை. ஆதலாற்றான் யாஞ்ஞவல்கியர் ஸக்ருத்ப்ரதீயதே கந்யா 'கன்னிகையைத் தானம் செய்வது ஒரேமுறை' என்றனர். இதனால் மறுமணத்திற்குக் கன்னிகையைக்கொடுப்பது கொடிய தீச்செயலாகின்றது. எமக்கு நடக்கும் விவாகச்சடங்கை கன்காராயினும் இம்மறுமணம்கன்மணம்பெறுதொழிந்திடுமே. அங்கு அக்கினி அந்தணர் பந்துக்கள் எல்லோரையும் சேர்த்து அவர் முன்னிலையில் வானது கோத்திரத்தையும் தன் குலத்தையுந் தெரிவித்துத் தனது கன்னிகையைக் கொடுக்கிறது விதியும் வழக்கமும் வாக்குத்தத்தமும்செய்யத் தவறினால் அதிலும் மேலான வேறு பாவம் இல்லையென்பர் மேலோர். மேலும் பாருங்கள்! அவ்விடம் உள்ள அக்னியையும் ப்ரம்மதேவன் விஷ்ணுமுதலிய ஏனைய தேவர்களையும் சாக்ஷிகளாகக்காட்டி "கந்யாம் கநகஸம்பந்நாம்" என்னும் மந்திரத்தால் தாரையிட்டுக்கொடுக்கிறான். 'யான் ப்ரம்மலோகத்தைக் கருதி உமக்கு இப்பெண்ணைக்கொடுக்கிறேன்' எனக் கொடுத்த பெண்ணை மறுபடி வாங்குவதும் கொடுப்பதுமாயின் அவன் அசத்தியவாதியாகாதொழிவானோ? அன்று தொடங்கி ஏற்படும் சம்பந்தம் இரண்டு சரீரங்களும் இருக்குமளவும் விடாதெனக்கொண்டேமெது தருமசாஸ்திரங்கள் வெளிவந்தனவாதலாலன்றோ, சற்கால ஜீவித்து லாவிலும் ஒரு தம்பதிகளில் ஒருவர்போக மற்றவர் அவ்விருவர் சொத்தையும்சேர்த்தடைவார்' என்று துணிந்தனர். இக்கால மன்னவர். கைம்பெண்களுக்கு மறுமணஞ் செய்பலாம் எனின் ஜீவிந்தலாவை அடியுடனே தள்ளநேரிடும். உலகசங்கதியறிந்த தற்கால பி. எல். பட்டவர்த்தனரும் இதுகுற்றமென்றுரைக்கத்தடையில்லை. ஆயின் இம்மறுமணம் எவரும் இகழத்தக்கதே. இதற்குஇவ்விவாகபக்ஷத்தார்கூறும் யுக்திகளை முன்னரேமறுத்தோமல்லவா? இது வைதாதாரமுள்ளதுமல்ல, சிஷ்டர் ஒப்பியதுமல்ல. 'வேதம் பிரமாணம்' 'பரலோகம் உண்டு' இந்

[illegible]

[illegible]

வினைகள் பயனுள்ளன' என கற்புமேவார் இம்மறுமணத்திற்கு இடங்கொடார். இவ்விதவைஎன்பவளே 'தலைவன்' என்னும்பெயரைமகளைவிழந்தவளாதலால் அவளுக்கு மறுமணத்தில் "தேவரால் மணந்தவன் பிறந்தான்" என்பது போலவே, மேலும் குருவாகுக்கு இவளை மறுமணஞ்செய்வித்தால் அவள் முந்திய புருடனுக்குச் செய்யவேண்டிய பாலோகக் கிரியைகளை எவர் செய்வார். அக்கடன் ஏதும் செய்யவேண்டாம் எனபிறால் இவ்விவாகம் அவைதிகமென்பதில் தடை என்னே? சிரார்த்தம் முதலிய காரியங்களை விட்டொழிக்கத் துணிந்தவருக்கு இதுவைதிகம் இது அவைதிகம் என விசாரிப்பதில் பயன் ஏது. செத்தவனுக்கு என்ன செய்தால் என்னவென்பாரும் வைதிகரா? புருஷனுக்கும் பெண்களுக்கும் ஒருவருக்கொருவரே கர்மாதிகாரிகள் என ஸ்மிருதிகள் கூறுகின்றன. அவ்விதமே வைதிகர் அனுட்டிக்கிறார். இவ்வைதிகாநுஷ்டானத்தை அசாஸ்திரீயமெனக்கூறுதல் யாவராலும் முடியாது. இத்தகைய கர்மபாபங்களை ஓர் கைம்பெண் செய்திடில் அதற்குப் பரிஹத்விதாயகப் பிராயச்சித்தமே விதிக்கப்பட்டது அதில் கைம்பெண்களுக்குப் பாபமெனக்கூறப்பட்டுள்ளனவை மேல்வருமாறு விரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதச் செயல்களையே கைம்பெண்கள் செய்யக்கூடாதெனின் அவர்களுக்கு மறுமணத்தின் மணமேனும் கூடுமோ!

கைம்பெண்கள் செய்யக்கூடாத பாபங்களாவன:—

1. நீராடாது உண்டல்
2. பருவத்தில் இரவுபுசித்தல்
3. தாம்பூலந்தரித்தல்
4. பழைய உண்டியருந்தல்
5. தண்ணீர்ப்பந்தலில் நீருருந்தல்
6. தலைமயிர்வளர்த்தல்
7. தீர்த்தயாத்திரை செய்யாதிருத்தல்
8. சந்தனம்பூசுதல்
9. கஸ்தூரிதரித்தல்
10. புஷ்பந்தரித்தல்
11. வெண்கலப்பாத்திரத்தில் போஜனஞ் செய்தல்
12. எச்சில் உபயோகித்தல்
13. சுறக்காய்சாப்பிடுதல்
14. கட்டிலிற்படுத்தல்
15. தான்செய்யவேண்டிய நியமம் முதலியவற்றை விடுதல்
16. அசத்சாஸ்திர கதைகளைக் கேட்டல்
17. சற்புராணங்களைக்கேட்காதிருத்தல்
18. வெள்ளி முதலிய பிறருச்சிஷ்ட பாத்திரங்களில் தண்ணீர் அருந்தல்
19. சிகப்பான அல்லது சாயம் போட்டவஸ்திரம் உடுத்தல்
20. கழுத்தில் பொன்னாபரணம் அணிதல்
21. பரபுருடர்முகம் நோக்கல்
22. பரபுருடருடன் உட்காரல்
23. சங்கீதம்கேட்டல்
24. கூத்துப்பார்த்தல்
25. சாளக்கிராம தீர்த்தமில்லாமற்போஜனஞ்செய்தல்
26. மனம்போனவாறு ஊரைச்சுற்றுதல்
27. தகப்பன் பந்துக்கள்முதலியவர்களுக்கு அடங்காதிருத்தல் என்பன.

மேற்கண்ட பாபங்கள்நிவிர்த்திக்குப் பொருட்டுமகாப்பிராயச்சித்தம் கைம்பெண்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சில பாபங்கள் எல்லோராலும் தள்ளத்தக்கனவாயினும் கைம்பெண்களுக்கு அவைகள அத்தியாவசியகம் நீக்கற்பாலனவென ஸ்மிருதிகளின் கருத்து. மேற்கண்ட 22. 23. 24 கலத்திற்கண்ட பாபங்கள் கைம்பெண்களால் அவசியம் ஒழிக்கத்தக்கனவென்பது அறிஞர்களுக்குத் தெரிந்த விஷயமே. நல்ல சங்கீதத்தைக் கேட்குங்கால் புருடர்களுக்கேனும் பெண்களுக்கேனும

[illegible]

[illegible]

[illegible]

மனம் பரவசமாவது அநுபவஸித்தம். மனம் ஒருவாறு விகாரப்பட்டால் பரபுருடர்களை இச்சிக்கும்படி நேர்வது இயற்கை. இவ்விஷயம் பெண்களுக்கெல்லாம் பொதுவாகிலும் அஃது கைம்பெண்களிடம் சிறப்பாக நிற்குமென்க. அவர்களுக்குக் கேசங்களை ஒழித்திடலும் அவர்களுக்குத் துன்மார்க்கமுண்டாகாவழி தடுத்தற்பொருட்டே. அக்கேசங்களை ஒழித்தலினால் அவர்களுக்கு ரூபங்குலைந்து போவதால் அவர்களிடம் பெரும்பான்மையில் ஆடவர் அணுகார். இதற்கெனவே அவர்களுக்கு எவ்வித அணிகளும் கூடாதென்பது. வைதிகமாயினும் லௌகிகமாயினும் எவ்விதப்பிரமாணமும் கைம்பெண்களுக்கு மறுமணம் செய்யக்கூடுமென்பதற்கு அகப்படாதென்பது திண்ணம். யான் இதுவரையில் கூறிப்போந்த பிரமாணங்களை மறுக்க உத்தேசிப்பவர் எவரும் ப்ரம்ம வித்தியாபத்திரிகை வாயிலாக வெளிப்படுத்த யாதுந்தடையில்லை. எமது பக்ஷத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்கிற அபிப்பிராயமுடையவரும் இதில் இடம்பெறுவார்கள். ஐயமுற்றவர்க்கு இதுவே போதும். வைதிகர்களுக்கோ இது மட்டிற்கு மிஞ்சினது. மற்றது பின்வரும.

விக்கிரகாராதனம்.

தொடர்பு.

ஐயா, வெகுகாலமாய் ஆசாரியனை வழிபட்டு அவர் கருணை மிகுதியால் உபதேசித்தருளிய மந்திரத்தை நன்கு கேட்டபடி சிந்தித்துந்தெளிந்து, ஆகமங்களின் உட்கருத்தறிந்து பரமனிடத்தன்பும் பற்றும் நிறைந்துய்யும் புலன்களை யடக்கும் புண்ணியவான்கள் செய்யும் பாவனாசம்ஸ்காரத்தால், பிம்பங்களில் எழுந்தருளும் கடவுள் அப்பிம்ப மூலமாய் அனேக நற்பயன்களை அப்பிம்பத்தைச் சேவிப்பவர்களுக்குக் கொடுத்தருள்வார். இனி ஒருவர்செய்யும் பாவனையால் கடவுள் ஓரிடம் எழுந்தருள்வாரேல் அதற்கு ஓராசிரியனை ஏன் வழிபடவேண்டும், ஏன் அவர் இவர்க்கு மந்திரம் உபதேசிக்க வேண்டும் எனில், கூறுதும்:— பாவனை என்பது மனிதன்வேலை. மந்திரங்களை யுச்சரித்தல் வாக்கின்தொழில். மற்றந்தொழில்கள் எல்லாம் சரீரத்தில் அமைவன. எவ்விஷயத்தில் முக்கரணங்களும் ஒருதொழில்கொண்டு முடிகின்றனவோ அதே விஷயம் முற்றுப்பெறுமாதலாலும், அது மந்திரத்தாலின்றியமையாமையாலும் அதற்கு மந்திரங்களை அவசியம் சம்பாதித்துக் காக்கவும்வேண்டும். மந்திரங்களை எவ்வளவு ரகசியம் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதற்குப்பயன் அதிகம். வெளியிட்டால் மந்திரங்கள் உலகநடைச்சொற்களுள் ஒன்றாகவே மதிக்கப்படும். இனி அதில் நம்பிக்கை பிறவாது. நம்பாவிடில் பயன் ஏதுமில்லை. மந்திரங்களை ஒரு ஆசிரியன் உபதேசத்தாலும் அதற்குக்காலம் இன்மையாலும் தேசமகிமையாலும் சீடன் பரிபாகவேற்றுமையாலும் பயனும் வேறுபடும். சூரியசந்திரக்கிரகணகாலங்களில் மந்திரங்களைக் கிரகித்தால் அவைகளுக்குப்பயன் அளவிடங்காதென்பர். அவ்விஷயமட்டில் எமக்குசிதம் எனத்தோற்றவில்லை. நம்முதறிஞர் அனேகர் அனேககாலம் ஆசிரியர் தொண்டுபுரிந்து அவர் அருள்புரிந்துபதேசித்த மந்திரத்தை மிகவும் சிரத்தையுடன் காத்து, வெளிவிடாது கேட்டபடி சிந்தித்து, அதன்வழி பல நற்பயன்களைப் பெற்

Koviloor Digital Library

[illegible]

ருர்கள் என்பது எல்லோருமறிந்த விஷயம். இங்ஙனமிருக்க, இக்காலத்தில் சிலர் ஆங்கிலேயர் பாடை, நடையுடைகள் தமக்கமைந்த பொன்பால் பலவிதம் ஆக்ஷேபிக்கிறார்கள். உலகத்துள்ள பொருள்கள் எதுவும் கடவுளாலே உபகாரார்த்தமாகவே சிருட்டிக்கப்பட்டன. அவைகளுள் ஒன்றான மந்திரங்களை வெளியிடாது உள்வைத்தல் பயனற்றதென்பது அவர் ஆக்ஷேபம். மேலும் அம்மந்திரங்களை ஏன் அந்தணர்மட்டில் ஜபிக்கவேண்டும்? மற்றவர் ஏன் ஜபிக்கக்கூடாது? என்பவருமுளர். அந்தோ! இவர் மனக்கலக்கத்திற்கு யாம் என்செய்வோம். அம்மந்திரங்களின் முக்கியாதிகாரியான அந்தணர் அவற்றைச் சாதித்திடின், அம்மந்திரங்களால் உலகத்துக்குபகாரம் இல்லாதொழியுமோ? மந்திரங்களைச் சித்திசெய்து கொண்டு கருணைநிறைந்த அந்தணர் அம்மந்திரங்களால் மற்றவர்க்கும் விஷநிவிர்த்தி செய்துகொண்டு கழலினைநிறைந்த வந்தணர் அம்மந்திரங்களால் மற்றவர்க்கும் விஷநிவர்த்தி முதலியவற்றைச் செய்ய நாம்பார்க்கவில்லையா! மேலும் இம்மந்திரங்கள் எல்லாருக்கும் சாதாரணமாக இருந்தால் புலாலருந்துபவரும், ஓயாது உலகவாழ்க்கைகளை வதைக்கும்சிலரும், கொள்ளல் தள்ளல் இல்லாது அவ்விஷயத்தில் பிரவேசிக்கும் புலையரும், அம்மந்திரங்களை அப்பியசித்து அதனுல் உலகத்துக்கு அபிசாரம் (சூன்யம்) முதலியதீச்செயல்களைச் செய்து உலகத்துக்குக் கெடுதியுண்டாக்குவரேயன்றி நன்மைஏதும் செய்யார் "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்" என்று தமிழ்வேதங்கூறியவாறு அந்தணர் கையில் இம்மந்திரங்கள் கிடைத்திடின் அவற்றைக்கொண்டு அவர் மற்றவரைக் காப்பாரேயன்றி ஒருவரையும் கொல்லார். அவர் செயலெல்லாம் மற்றவர்க்குபகாரமாகவேயிருக்கும். முற்காலங்களில் சாபத்தைக கொண்டு பிறர்களைக் கொல்லக்கூடிய ஆற்றல்பெற்ற முனிவர்கள் பலர், தமக்கு நேர்ந்த வரக்கர்முதலிய கொடுஞ்செயலார் தீமைகளை விலக்க ஆசாரியர்களைவேண்டி அவர்களைக்கொண்டே தம்மிஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்வர் என்பதாகக் கேள்விப்படுகிறோமல்லவா? ஐயா! நமது முன்னோரிட்ட வழியைக்கவனியுங்கள்! பிராமணர் குலத்திற்பிறந்த எவனுக்கும்உபநயனம்என்றுவேதங்களைஓத வேண்டியதற்குச் சம்ஸ்காரஞ்செய்யப்படுவதைக்காணலாம். அது காயத்திரி மந்திரோபதேசத்துக்காகவேசெய்வது. முன்காலருணைத்தைக்கவனித்துப்பின் அதற்குள்ள பூர்வாங்கங்களைச்செய்து பிறகு அவ்வவ்வருணங்களுக்குரியபடி பட்டினுல்பலரறியாவண்ணம் மூடிக்கொண்டு சமீபத்திலுள்ளவரும் கேட்காதநிலையில் உபதேசித்திடுவது வழக்கம். அம்மகாமந்திரத்தைக்காலக்கலிபுகாவதார மகாபுருடர் அச்சிட்டுப்பணத்துக்குப் பலரறியக்கடையில் விற்கிறார்கள். இவர் எவ்விதஞ்செய்யினும் அதன் பெருமைக்கோர் குறைவுமில்லை. எல்லோரும் படித்து மறைபோர்காப்பாற்றியஇவ்வுண்மை மந்திரத்தைப் பறையோர்வரை அறிந்திடினும் பரம்பரையில் அம்மந்திரத்தைச் சம்ஸ்காரத்துடன் உபதேசிக்கப் பெற்று அதனுல் அளவில்பெருமையடைந்த அந்தணர்க்கவர் ஒப்பாவரோ? ஆகவே ஆகார். நிற்க. உலகத்தில் உயர்குலத்தவரும் உபதேசக்கிரமமின்றி ஒரு மந்திரத்தை ஏட்டில் படித்தறிந்தால் அது சுகம் தராது துனபத்தை

[illegible]

[illegible]

விளைவிக்குப் பயனில்லாதொழியும். இவ்விழிஞர் தமக்குத்தகாத அக்காரத்தை அவாக்காகப் பற்றிக் கொடுத்துவாங்கிக்கொண்டோம் என்று பெற்றிடுவாரா? அரசர் திருமுடிக்கேற்றதோர் பொன்முடியை ஒருவன் தன்செலவால் பெருங்காசு வாங்கித் தலையில்வைத்துக்கொண்டு அதனால் சுகம் பெறுவானோ? அவனுக்கு அப்பெருமைதான் உண்டா? அந்தோ! கலிகாலக்கொடுமை! இக்காலவுண்மையறிந்த முன்னோர் இக்கலியின் நிலையைப் பலவாறு எடுத்து ஓதினூர் அன்றோ? "அன்னத்தைவிற்கும் அந்தணரும் மந்தரம் விற்கும் பட்டணமும் அக்குல் விற்கும் மங்கையரும் கலியில் தோன்றுவார் என்றது சத்தியமாயிற்று. இப்போது இவ்விதம் சேருமென முன்னோர் எதிர்பார்த்தபடியே எவ்வித அநாசாரமும் காணலாம். மந்திரங்கள் கடையில் விற்கின்றன. கைம்பெண்களும் மறுமணமடைந்து நறுமணம் வீசும் நன்மலர்சூடிய நாயகருடன் கொண்டாட்டமடிக்கின்றார்கள். அந்தணர் குலம் எனும் வீண்பெயர் தாங்கி மதுமாமிச லவண தைல வியாபாரஞ்செய்பவரும் இக்காலத்திலுண்டு. சாதிபாசாமெல்லாம் புகைவண்டியில் மறையோர் ஆடைமேல் பறையோர் ஆடையிட்டு உட்காருவதால் அவமாயிற்று. அங்கு மாதவிடாயடைந்த மாதரைத் தீண்டவும் நேரிடுகிறது. மிலேச்சர்குடிக்கும் புகை நமது முகத்தில் வீசுகிறது. ஈண்டுக்கூறிய கூற்றால் பயன் யாது? போதும்! போதும்! ஆகையால் எப்பொருளையும் உள்வைத்திருந்தாற்றான் அதில் அன்பு மிகும் என்பதிற்றடையில்லை. ஊன் முதலியவைகளால் அமைந்த மற்றையவுறுப்புகளுடன் ஒப்பான கொங்கைகளை மூடிபிருக்கின்றவன்றோ விசேஷ ஆசையுடன் அதை யனுபவிப்பவர் அனேகர். எதுவும் உள்ளிருந்து கிடைத்தால் ஆனந்தம் மேலிடுவது வழக்கம். ஆதலாற்றான் மந்திரசாஸ்திரங்களில் அரனார் அம்பிகையாருக்குபதேசித்தது. "ஓ பார்வதி! இம்மகாமந்திர மானது மார்பஸ்தலம்போல மூடிவைக்கவேண்டியது" (இதன்கருத்து. உலகத்தில் ஆண் பெண் அலிகளை அறியுங்குறி இன்னதென்பது எவரும் அறிந்திருப்பினும் அதை வெளியிடுவது உலகத்துக்கு எப்படி அயோக்கியமோ அப்படியே இதுவுமென்பார்") என்பது. மற்றும் பலவிடங்களில் "வெளிக்காட்டாது காத்தலாற் சித்திக்கும் சித்தி அளவிலடங்காது" என்றும் உளது. தமது கருணைக்கிடமான சிடருக்கும் ஆசிரியர் பொருந்திய மந்திரத்தையே உபதேசிப்பர். பொருந்தா மந்திரங்களைப்படித்த பலர்பெரிதப்படன்களையனுபவிப்பர். ஆதலாற்றான் "[illegible]" என்று மந்திரசாஸ்திரங்கூறுகின்றது. எம்மந்திரத்தை எவன் சாதிக்கவிரும்பினும் அம்மந்திரத்துக்கும் அவனுக்கும் உள்ள குணகுணிபாவம் என்னும் மற்றொரு பொருத்தமும் அவசியம்பார்க்கவேண்டும். முற்காலக்கவிகள் அனேகர் அனேக தேவர்களை மந்திரமூலமாய் வழிபட்டு நற்கவிகளானார்கள்" என்பது அவரவர் நூல்களால் தெரியவருகிறது. ஸ்ரீஹருஷகவி சிந்தாமணி மகாமந்திரத்தாலும், ஸ்ரீகர்பகநதி ஸ்ரீபிராசாதபஞ்சாக்ஷரத்தாலும் சித்திபெற்றதாகவல்லவோ பெருவழக்கு.

(பொழிபெயர்ப்பு.) இலக்குமி-சுந்தரராஜசாஸ்திரி.

[illegible]

Koviloor Digital Library

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்

அநுபந்தம்.

௪-ம் புத்தகம்] சிதம்பரம். நந்தனஹூ ஆவணிமீ ௨௰௨ [இலக்கம் -௧௨

ம-ள-ள-ஸ்ரீ ஜெ-சோமசுந்தரநாயகரும் மாயாவாதமும்.

பிரமம் சத்து, சித்து, ஆநந்தம், நித்தியம், பூரணமென்றும், மாயை அசத்து, சடம், துக்கம், அநித்தியம, கண்டமென்றும், அம்மாயை பிரமத்தினிடத்துப் பின்னாசத்தியென்றும முன்னர்க்கூறினாம். இவ்வாறாக நாயகர், 'யாம் மாயையெனக்கொண்ட பொருளையே இவர் பிரமமெனக் கோடலால்' என்று கூறுவதென்னோ! அதன்மேல் 'எமது மாயையைத்தவிர விவருக்குப் பிரமமென்பதொரு பொருளில்லை' யென்றுங்கூறினார். இவ்வாறு இவர் கூறிவிட்டதினாலே அவ்வாறு அவர் வைத்துக்கொள்ளவேண்டுமொக்கும், இவர் கூறும் மாயை சடம்; அன்றி ஓர்வித சத்தி; அன்றிக் குணமுமாம். வேதாந்திகள் கூறும் பிரமம் ஞானவடிவாயுள்ளது; அன்றிச் சத்தியையுடையது; அன்றிக்குணியுமாம். சத்தியினிலக்கணத்தை முன்னரே திருட்டாந்தவாயிலாக விளக்கிக்காட்டினாம். அன்றிவேதாந்த சித்தாந்தத்திற்குள்ள வொற்றுமையையும் பகர்ந்தாம்' இங்ஙனமாக 'எமது மாயையைத்தவிர விவருக்குப் பிரமமென்பதொருபொருளில்லை' என்று வரைவது நியாயமாமோ! இது கலியாணகாலத்தில் எங்கள் உப்புப்பானைக்கும் உங்கள் பருப்புப்பானைக்கும் சரியென மைத்துனர்மார் சொல்வதுபோல் இருக்கின்றது. இதுவன்றி நியாயத்தோடு பேசுகின்றதாய்த் தோன்றவில்லை. நாயகர் 'மாயோபாஸகனாகாத சைவசித்தாந்தி மாயாவாதியாகமாட்டான்' என்று கூறியது ஒருவித மொவ்வுமேயன்றி முற்றுமல்ல. மாயையை உபாஸியாதபோது மாயாவாதியாக வேண்டுவதில்லை யென்பது நியாயமேனும் மாயையை முதற்காரணமென்று கொள்ளும்போது மாயாவாதியாகவேண்டுவது நியாயமன்றோ? கொள்ளென்றால் வாயைத்திறப்பதும், கடிவாளமென்றால் வாயை மூடிக்கொள்வதும் சரியன்றே. நாயகரவர்கள், மாயாவாதம் தோலோ தோலோ வேண்டாம் வேண்டாம் என்று ஓடினாலும் அது அவரது நிழல்போல அவரைப்பின்றொடர்கின்றது; யாது செய்யலாம்! அவ்வாறு வேதாந்திகளைச் சொல்வதற்கிடமில்லை. அவர்கள் பிரமத்தை யுபாசிக்கின்றார்கள். நாயகர் சொல்லுகிறபடி மாயையை யில்லையென்றும் சொல்லுகின்றவர்களாகின்றார்கள். அன்றி அவர்கள் உலகிற்கு மாயையை உபாதாளகாரணமாகக் கொள்வது மில்லை; பிரமத்தையே உபாதானமாகக் கொள்ளுகின்றார்கள். ஆகலால் வேதாந்திகள் மாயாவாதிகளாக நியாயமேயில்லை அவர்கள் மாயாவாதிகளாக வேண்டுமென்று வேண்டித் தவம புரியினும் அவர்களுக்குக் கிடைக்கமாட்டாது. குதிரைக்குக் கொம்புண்டாகவேண்டுமென்று எவ்வளவுகோரினாலும் எப்படிக்கிடைக்கமாட்டாதோ, அப்படியே வேதாந்திகளுக்கு மாயாவாதியென்னும் பேர் கிடைக்கவே மாட்டாது. இயல்பாகவே வேதாந்திகள் பிரமவாதிகளாயிருக்க, அவர்களை மாயாவாதிகளென்றும் போலிப்பிரமவாதிகளென்றும் பகர்ந்தது கிறிஸ்தவர், ஆரியர்களை அஞ்ஞானிகளேயென்று கூப்பிடுவதுபோலாம். அதனோடு 'பெரியோர்கூறுவரென்ப' என்றும் எழுதினார். இவர்கொண்ட பெரியோர் அங்ஙனம் கூறியிருப்பர். சில ஆண்டுகள் சென்றால் இவரும் பெரியோராவர். அக்காலத்தில் இவரைப் பெரியோராகவைத்துப் பெரியோர் கூறினரென இவரைச்சார்ந்தார் பின்னர்க்கூறுவர். யாம் கூறுவதியாதெனின் சுருதி யுக்தி அநுபவங்கட்கு மாறின்றிக் கூறுவோர் யாரோ அவரே பெரியோரென்பதாம். அங்ஙனமல்லாதாரை யந்தந்தக் கொள்கையினர் பெரியோர் எனக் கூறுவதைப்பற்றி எமக்கேதுமாக்ஷேபமின்று. ஒன்றுக்கொன்று நேர்பகையாகக்கூறும் சித்தாந்தத்தைக்கொண்ட வொவ்வொரு மதவாதியரும், தம் தம் மதக்கிரந்தங்களெழுதினோரைப் பெரியோராகக் கொள்ளுகின்றனர். மற்றையோர் அதை அங்கீகரியார். இது நியாயமே. அங்ஙனமாக அவரைப் பெரியோரென வாதசமயத்தில் வாதி பிரதிவாதியிடத்திலும், பிரதிவாதி, வாதியிடத்திலும் கூறிப் பெரு

Koviloor Digital Library

மைப்படுத்திக்கொள்ள வருவது பயன்படாது. பயன்படாதிருப்பதும் நியாயந்தான். ஒவ்வொருவரும் தம தம சித்தாந்திகளைப் பெரியோரெனக்கூறின் யாரைப்பெரியோரென அங்கீகரிப்பது? ஒருவரைக்கூறினால் மற்றவர்க்குக் கோபமுண்டாகும். ஆதலால் அவரவர் தம தம் பெரியோரைத் தம தம மட்டில் வைத்துக்கொண்டு, வாதசமயத்தில் எல்லோரு மொப்புக்கொண்ட பெரியோரையே பெரியோரெனப் பேசுவது அழகும் நியாயமுமாம். இது மாத்திரமல்ல; பிரமாணமாக எடுத்துக்காட்டு நூல்களும் அங்ஙனமே. எல்லோராலும் பொதுவாகப்பிரமாணமாகக் கொள்ளப்பட்டவைகள்: வேதம் 4. வேதாங்கம் 6. நியாய நூல் 1. மீமாம்சம் 1. ஸ்மிருதிகள் 1. புராணங்கள் 1. ஆகப் பதினான்கு வித்தைகளாம். இவற்றினுடனே உபவேதங்களைச்சேர்த்து 18 வித்தைகள் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. (புராணங்கள் 18-ம் சேர்ந்து ஒன்று; ஸ்மிருதியு மங்ஙனமே)

கூர்மபுராணம்.

திருக்கலியாண அத்தியாயம். சஙு-வது செய்யுள்.

அங்கமாறுமறைநான்கு மீமாங்கிசமென்றருள்கொழித்தாத், தங்குநீதிநூலொன்று புராணமொன்றுதவநெறிந்த,
பொங்குதருமநூலொன்று புகன்றவீரேழ்விஞ்சையினை அங்கணுலகின்றவனளித்தா னிவற்றையுணர்ந்தோரறிவுடையோர்.

வாயுசங்கிதை புராணவரலாறுரைத்த அத்தியாயம்.
சு - வது செய்யுள்.

பொன்னவிர் சடையோனன்னவரகனைப் படைத்து முன்புரையறவகுத்த, மன்னிடுபதினெண்விஞ்சையுமறிய வழங்கினன் மற்றவன்விரித்துப்,பன்னிபவகையாலெவர்க்குநன் குணர்தலரிதெனப்பால்விடையண்ணல்,கன்னவிறிறடோன்மாயனையழைத்துச் சுருங்கநீகேழுறுதியென்றான்.

ஸ்ரீவிஷ்ணுபுராணம், ஆறாம அத்தியாயம், சாமவேத அதர்வணவேத புராணங்களின் வரலாற்றில்

'ஆத்துமகோடிகள் அறியவேண்டிய சகலதருமங்களை 'யும் பிரதிபாதிக்கின்ற சாஸ்திரங்களெவையென்றால் மு 'ன் சொல்லப்பட்ட இருக்குமுதலான வேதங்கள் நான்கு 'ம், அவற்றின் அங்கங்களாகிய சிக்ஷை, வியாகரணம், சந் 'தம், நிருத்தம், சோதிடம், கற்பம் என்கிற ஆறும், மீமா 'ஞ்சையும் நியாயநூலும் இதிகாசபுராணங்களும்தருமசா 'ஸ்திரங்களுமாகிய இப்பதினான்குமாம்.இவைகளுக்கு வி 'த்தியாஸ்தானங்களென்றும் பெயர். அன்றியும்ஆயுர்வே 'தம் என்கிற வைத்தியசாஸ்திரமும் தனுர்வேதமென்கிற 'ஆயுதசாஸ்திரமும்,காந்தருவவேதமென்கிற சங்கீதசாஸ் 'திரமும், அர்த்தசாஸ்திரமென்கிறஇராஜநீதிசாஸ்திரமும் 'உபவித்தைகளென்று சொல்லப்படும். ஆகப்பதினெட்டு 'வித்தைகளுண்டென்பார்கள்"

இந்த வித்தைகள் தவிர, வாதிகள், பிரதிவாதிகளுக்குரியோரியற்றிய நூல்களையும், பிரதிவாதிகள் வாதிகளுக்குரிய நூல்களையு மெடுத்துக்காட்டுவது மிகவிசேஷமாம். அத்துவைதிகள் விசிஷ்டாத்வைதிகளுடன் வாதஞ் செய்யும்போது, இராமாநுஜர் முதலியவர்கள்சொல்லிய நூல்களை யெடுத்துப் பிரமாணமாகக் காண்பிப்பதும், விசிஷ்டாத்துவைதிகள், சங்கராசாரியார் முதலியவர்கள் சொல்லிய நூல்களை யெடுத்துப் பிரமாணமாகக் காண்பிப்பதும் விசேஷம்.

பிரமம் உலகத்திற்கு முதற்காரண மென்பதற்கும்
பிரமத்தினிடம் உலகம் கற்பிதமென்பதற்கும்
பிரமாணங்கள் வருமாறு.

சூதசங்கிதைசாதிவிதியுரைத்த அத்தியாயம்
15 - வது செய்யுள்.

மறைமுடியினடைவினு மாதேவனொருவனே,
யறைதருநித்தியனுலக மவனதுமாயாசொரூப,
முறையுமிந்நவனிடத்தே யுதிக்குமொடுங்கிடுமெனவுட்
குறைவறவெண்ணுதலுடையோன் கூடுவான்முத்தியினை.

ஷை முத்திநிலையுரைத்த அத்தியாயம்.
32 - வது செய்யுள்.

விரியுடனூழ்துய்த்தாகாமியமுறுதொழித்தெவர்க்குந்,
திரிசியமாம்பவஞ்சத் தேய்ந்துசொப்பனம்போற்றோன்ற,
வுரியவெம்பால்விழித்தோனொருவனேசிவன்முத்தன்,
றுரியமேல்விளங்குமமைத்தோய்ந்தவனவனென்றோர்தி

ஷை பஞ்சாக்கரமந்திரமுரைத்த அத்தியாயம்.
9 - வது செய்யுள்.

இத்தனையுமுயர்பரமசிவனுக் கியான்வணங்குகிறேனென்பதாகுஞ், சித்தநிலவுறுபரமசிவசொருப முணரவவாஞ் செய்பசிவற், சுத்தமவப்பரசிவசொரூபத்திற் கன்னியமாயுள்ளவெல்லா, மித்தையாவதினாலேயெய மூபாதேயமோன்றுமேவலில்லை.

ஷை 14 - வது செய்யுள்.

ஏயபிரத்திப்க்கபிரபஞ்சமிலை யென்றுரைப்பதெவ்வாறென்னிற், பாயவெலாஞ்சிவசொரூபமென்றுரைப்பர் சிவன்முத்தர்படாஞ்ஞான, மேயதிசையிற்பவஞ்சமதிரிசியமாகாதிம்மையேயாகுந், தூயசிலஞானதிசையினின்முழுப்பொய் யாகுமந்தத்தொகுபவஞ்சம்.

Koviloor Digital Library

பிரமகிதை.

தேஹோபாயுபநிடநார்த்தமுரைக்கும் அத்தியாயம்.

14 - வது செய்யுள்.

ஆதலால்விஞ்சையாலறிவுறுதற் காவதன்றுகிலப்பரர்த்தரனைதினுலறியப்படுமெறிவுறுதற் கேவனுலாமினமயவர்காள், காதலாற்பரத்திற்கற்பிதமாயை கழியுமேற்பரம்பரன்கண்ணே, ரேதமாமாயையில்லையுண்டாகிலிருக்குமோ விரவிமுன்பிருடான்.

ஷை 27 - வது செய்யுள்.

எப்பொருளுமாயையினு லெனச்சிலவரியம்புவர்கண்
மெய்ப்பரமன்றனையொழிய வேறொருமாயையுமில்லை
பொய்ப்பரியபரனொழிய வொருமாயையுண்டாகி
லப்பரமன்றன்பெருமைக் கதனேயொழிவன்றே.

ஷை 29 - வது செய்யுள்.

இதுவேமுடிக்க நிலமெல்லாத்தர்க்கங்களுக்குங்காட்சியே, முதலாம்பிரமாணங்களுக்கு மொழியும்வேதாங்தங்களுக்கும், விதமாம்புராணமனைத்தினுக்கு மிருதிகளுக்கும் வேதத்தின், மதமாம்விச்சையனைத்தினுக்கு மன்னுமாபாரதத்துக்கும்.

ஷை 30 - வது செய்யுள்.

ஐயன்சைவாகமங்கட்கு மரியாகமத்துக்குமெனது
பொய்யின்றியவாகமத்துக்கும் புத்தாகமங்கட் குமருகன்
செய்யுமாகமத்துக்குஞ் சித்தரியக்கர்கந்தருவ
ருப்பும்பரிசுமற்றுள்ளோ ருரைத்தவாகமங்கட்கும்.

கூர்மபுராணம்.

சாங்கியயோகமுரைத்த வத்தியாயம்.

25 - வது செய்யுள்.

ஆதலாற்பிரமமொன்றே நித்தியமலகைத்தேரிற்
பேதுறத்தோன்றுநீரிற் பிரபஞ்சமருண்டுதோன்றுந்
திறுமனத்தர்நிப பிரபஞ்சம்பிரமம்வேறென்
றோதுவரொக்கநோக்கும் போகிபரோன்றுய்க்காண்பர்.

ஷை புராணம்.

சம்பிரதாய வத்தியாயம்.

1 - வது செய்யுள்.

அவ்விபத்தந்தனிற்காலம்பிரதானம்புருடனிவ்வயமையத்தோன்றுஞ், செவ்விபெறுமிவைகடமிற் சிறந்தசகத்தோன்றியிடுமெதனாலந்த, வெவ்வமறுபிரமத்தினுருவாகுஞ் சகமிதனைச்சகமென்றெண்ண, ஒவ்வாதுமென்கிப்பியினை வெள்ளியெனமருண்டெண்ணுநோன்மைத்தாமால்.

மைத்திராண்ணியுபநிஷத் - 35.

ஜீவாத்துமாக்கள், பிர்மத்தினுடைய தேஜஸின் பிரதிபிம்பமாக விருக்கிறார்கள்.

சர்வசாரோபநிஷத்.

மித்தையெது? இல்லாத பிரபஞ்சத்தைப் பிர்மத்தில் ஆரோபிப்பது.

நிராலம்போபநிஷத் - 37.

பிர்ம்மம் சத்தியம்; ஜகத் மித்தை.

ஆத்மபோதோபநிஷத்.

பழுதையில் பாமபுமுதலியனபோல் (பழுதையில் பாம்பு என்கிற பிரமைக்குக்காரணம் பழுதைபோல) பிரபஞ்சத்திற் காதாரரூபமாய்ப் பிர்ம்மசத்துமாத்திரமேசூழ்ந்து கொண்டிருக்கிறது.

பைங்களோபநிஷத் 1 - வது அத்தியாயம்.

அதனிடத்தில் மருபூமியில் (பாலைநிலத்தில்) ஜலம், கிளிஞ்சில் வெள்ளி, கட்டையில் புருஷன், ஸ்படிகத்தில் வர்ண முதலியனவைபோலச் சிவப்பு, வெளுப்பு, கறுப்பு இந்தக்குணமயமானதும் ஏற்றக்குறைவன்றி ஒவ்வொன்றும் சமமாயிருக்கிற குணசுவரூபமானதும் வாக்குக்கெட்டாததுமாகிய (என்றால், மித்தையானதுமாகிய) மூலப்பிரகிருதியிருந்தது.

பதினுறுவித்தைக்கு மேற்பட்ட பிரமாணங்கள்.

திருவாசகம்.

மாயப்பிறப்பறுக்கும் மன்னனடிபோற்றி
பொய்யாயினவெல்லாம் போயகலவந்தருளி
இந்திரஞாலங் காட்டியவியல்பும்
இந்திரஞாலம் போலவந்தருளி
இருமுச்சமயத் தொருபேய்த்தேரினை
நீர்த்தரும்பொய்கைப் புனலிதுவேயெனக்கருதிப்
பேய்த்தேர்முகக்குறும் பேதைகுணமாகாமேதீர்த்தாய்
மாயவாழ்க்கையை மெய்யென்றெண்ணி
மதித்திடாவகை நல்கினன்
இந்திரஞாலவிடர்ப்பிறவித்துய ரேகுவதாகாதே.

சிவாநுபூதிவிளக்கம்.

பார்த்தேனுலகப் பரப்பெல்லாம்பார்த்தளவில்
பேய்த்தேர்போலில்லையாய்ப்போததிவேகண்டனமே.

திருவம்மானை.

மெய்யானதொன்றுமே மெய்யானதம்மானை
மெய்யன்றிமற்றெல்லா மித்தைகாணம்மானை.

சிவாநந்தமாலை.

எங்குஞ்சிவமொழிய இல்லையவன்றன்னுனை
அங்கத்திரள்கருவி ஆணவமாம் - பொங்குமிருள்
மைசெய்தமாமாயை மாயவினைமற்றனைத்தும்
பொய்பொய்பொய்பொய் பொய்பொய்பொய்.

Koviloor Digital Library

காசிகண்டம்.

கானவிடைத்தெண்ணிரும் கயிற்றினில்வாளரவும்அலை கடலிற்பட்ட, கூன்முதுகிப்பியிற்றோன்றும் வெள்ளியுமம்முதலுண்மைகுறிக்கிற்றிரு, மானவைபோலிலேயமியிற்றோன்றுசகமனைத்துமில்லாதழியுமாற்றுற், றேனவிழ்பூநங்கடுக்கையணி செல்வகினதறைகழற்றுள் சென்னிசேர்ப்பாம்.

பாடுதுறை,

பொய்க்கனவும்பேய்த்தேரும் போலுமுடல்போமளவும்
சிக்கெனவேகாதன் திருவடியை - நெக்குருகிப்
பூண்டுவிடாதேகிடந்து போற்றியிடுநெஞ்சேநீ
மீண்டுபிறவாதே விட.

பட்டணத்துப்பிள்ளை.

மையாடுகண்ணியும் மைந்தருமவாழ்வு மனையும்செந்தீ
ஐயாகின்மாயை யுருவெளிததோற்றம் அகிலத்துள்ளே
மெய்யாயிருந்தது நாட்செலநாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப்பழங்கதையாய்க்கனவாய்மெல்லப்போனதுவே

மாயப்பேய்த்தேர்போன்று நீப்பருமுறக்கத்துக், கனவேபோன்று கனவுபெயர்பெற்றமாயவாழ்க்கையைமதித்து

போதாத்நாகாம்

காயநீர்க்குமிழிபதினுறுமின்பங் கானலிற்புலலறுதனக்கிங், காயவத்துபாமளவிலைபது நீபாய்வுறுமையினழிந்தற்றுய், நீயினிக்கவலை மயல்களைத்தவிர்ந்து நெஞ்சமேவக்தெனக்குடன்பட், டாயவச்சொரூபற்கன்பதே புரியிலரிய தேதார்சமக்கெதிரே.

திருப்போநர்சந்நிதிமுறை

பாம்பாகத்தோன்றிற் பழுதைசற்றுந்தோன்றாதாம்
பாம்பின்றுத்தோன்றிற்பழுதையே-மேம்பாடாய்ப்
பொய்தோன்றின் மெய்தோன்று போரூராநின்னருளாம்
மெய்தோன்றிற்பொய்தோன்றுவிடு.

குமாரதேவர்

இல்லாமாயை தானிருந்தென்னிறந்தென்னவைபந்தமதாகா, இல்லாமாயைதனை மெய்யாயெண்ணுமதியேபந்தமதாம், இல்லாமாயைதனைப் பொய்யா யெண்ணுமதியே முத்திபதாம், இல்லாமாயையில்லையென்றே யியல்பாய்த்தோன்றுந்தன்னிலையில்.

அமிர்தசாரம்

போதக்கண்பூதங்கள் பொய்யாமவைமெய்யாம்
பேதக்கடாதிப்பிறழ்வுகளிற்-பேதங்கள்
சுத்திகையின்வெள்ளியின்மெய்த்தோன்றப்படுங்கனவு
நித்திரைபைப்பாரன்னிலை.

ஞானவாசிட்டம் கசன்கதை

பிரமமாஞ்சுத்தவேலை நுரைகளாம் பிறங்கலெல்லாம்
ரமவாதித்தன்முன்னர்க்கானலாம் - பாலைஞாலந்
திரமதாமிதனைமுன்னேசெப்பினன்வியாழன்றந்த
வரமகன்கசனும்பேரான்மற்றதுவள்ளல்கேட்பாய்

சிவஞானசித்தியார்

பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரியபராபரனைப்பதிஞானத்தாலே, நேசமொடுமுள்ளத்தேநாடிப்பாதமுற்றேற்றில்லாதேகீழ்ப்போதி- ஞானசதருமுலகமெலாமலகைத்தேரா மென் றறிந்தகலவந்நிலையேயாகும் பின்னும்- ஓசைதருமஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க வுள்ளத்தே புகுந்தளிப்பனூனமெலாமோட.

வைராக்கியசதகம்

அகனுமிவ்வுடன் மினின்விரைந்தெனின் விரைந்தாற்றெழுதலநிங்கே, சகலமுஞ்செயகினை குதறணியிளித்தடப்புனலிறுவென்றே- பகலினுல்விரிகானலைநெஞ்சமேகருதிநெற்பயிராதி-யிகலினுற்செயகினைபவர் நினைவையொத்திடுமெனவிடுவாயே.

சிவாகமார்ந்ததரிசனம்

சட்டெனத்தெளிந்தான்சர்ப்பமிரச்சுவிற்காணுதாற்போற்
கட்டினபாசம்விட்டாற்கண்டிலன்பெத்தம்பின்பு
சிட்டகற்சுபாவமேயாஞ்சிவன்முத்தன் றேகத்தை
விட்டபின்பரமமுத்தன்வியோம்போற்கடாசத்தில்.

சிந்நாந்தசிகாமணி

கயிற்றாவிப்பிவெள்ளிகுற்றியிற்கள்வன்மிக்க
வெயிற்படுகானற்றெண்ணீர்விண்ணிற்கந்தருவவூர்போல்
இயற்படுநித்தசச்சிதானந்தசிவத்தின்கண்ணே
செயப்படுபொருளாய்த்தோன்றுஞ்செப்பியவுலகமன்றே.

விநந்தாம்பிகைதுதி

பழுதையென்றுணரினதின் முனர்த்தோன்றும்பாம்புமப்
பழுதையானதுபோன், முழுதுணர்ந் தறிவாந்தனையே
காணின்முனுறுசராசரமெனவையு, மெழுதருமறிவாய்
விளங்குமென்றிசைத் தென்னெழுபவந்துடைத்தென்
யளித்தாள், கெழுமணிமுத்தாகதி செறிவிருத்தகிரியமர்
பெரியநாயகியே.

கந்தாநுபூதி

இல்லேயெனுமாயையிலிட்டனைநீ
பொல்லேனறியாமைபொறுத்திலையே.

சிவஞானவள்ளலார்
பதிபசுபாசவிளக்கம்

இப்புவியிற் பிராந்தியாலேயிரசிதந்தோன்றுமாபோல்
மெய்ப்படுமென்னிலிந்தவியன்சகமுதித்ததென்றே
யிப்படியாவனேனுமெழின்மறைமுடிவினாலே
யற்புதவறிவுணர்ந்தோனவன்ஞாச்சிரமியாவான்.

ஷை அந்துவிதக்கலிவெண்பா

மறுபிறப்பை, யாற்றென்றுனிதொழிய மாயச்சமயத்தார்
பேய்த்தேரை மித்தையெனப்பேணென்றுன்.

Koviloor Digital Library

ஷ பாராங்கை

ஒரு வேதம் பஞ்சபாசங்களும் அநித்தியமென்று சொல்லிற்று; பின்னொருவேதம் கானற்சலம்போலத் தோற்றரவுமாத்திரமேயென்று சொல்லிற்று; பின்னொருவேதம் ககனாரவிந்தம்வந்தியாபுத்திரனசசவிஷாணம்போல அநுபவத்திலே பஞ்சபாசமில்லையென்று சொல்லிற்று; நாலாம் வேதம் மாயையேயில்லை; இருக்கிறதெல்லாம பிரமமே.

தாயுமானவர்பாடல்.

இந்திரசாலங் கனவு கானலின்னீரெனவுலகமெமக்குத்தோன்ற, மனமாடமாளிகைமேடைசதுரங்கசேனையுடனேவந்தோர்வாழ்வுமிந்திரசாலக்கோலம், நிஐந்துபூதமொரு கானலின்னொடங்கவந்தபெருவானமே.

தேன்முகம்பிலிற்றும்பைந்தாட்செய்யபங்கயத்தின்மேவும்
நான்முகத்தேவேயின்றுநாட்டியவகிலமாயை
கான்முயற்கொம்பேயென்கோகானலம்புனலேயென்கோ
வான்முகமுளரியென்கோமற்றென்கோவிளம்பல்வேண்டும்

கடத்தையுண்மையெனவுடைந்தபோதேவிக்கருமச் சடத்தைப்பொய்யென விறந்தபோதே சொலத்தகுமம் உண்டுபோலின்றும்உலகைச்சித்திரமெனவுட்கொண்டுநான் பெற்றபயன் கூறாய்பராபரமே.

அண்டபிரண்டமுமாயாவிகாரமே யம்மாயையில்லா மையேயாம.

திருநாவுக்கரசு சுவாமிகள்தேவாரம்.

பொய்ம்மாயப்பெருங்கடலில்புலம்பாநின்றபுண்ணியங் காளவினைநாடிருமேவீங்கள், இம்மாயப்பெருங்கடலையரித் துத்தின்பிர்க்கில்லை.

வேதாந்தசூடாமணி.

விளங்குறுமான் மாவுருவுயல்லாம லன்பாவின் வேறாத்தோன்று, துளங்கொள்வியோ மாதிகா ரிபங்கடமைத் தோன்றுவா றொடுக்கி நின்று, துளங்கலக டிதகடனு சாமர்த்தி யாகியுமே!தோன்றுநின்ற, வளங்கடரு காரணமா மதுவாகுந் திரிசியமா மாயா சத்தி.

பின்னமொடு சத்துச்சாவயமுமெதிர் மறையுமவைபிரிந்துதம்மின், மன்னியவு மொழிந்த நிர்வாச் சியமாகுநவிதமா மாயை யெய்து, முன்னவருஞ் சுருதிசம பந்தமுத்தி சம்பந்தமுமேலாகசம்பந்த,மென்னவருஞானங்கண் முறையேயம் மாயைபடி மியல்பு கூறின்.

பொய்யாகிச்சத்துருவப் பொருளின்வே றாகி யொரு பொருளாய்த்தோற்றல், செய்யாமை யாலுளதில் சுதந்தரஞ்சான் றாபவொரு சேதனன்பா, லுய்யாத சிவாதியக் குதலாற் சுதந்தரமு முளது மாயை, பெய்பானதல தென்றல் விசுமபலர்போலிலையென விளம்பலன்றே.

பலவில்கனவிடைக்கரி போற்றோன்றி விசாரந்தோன் றப்பொன்றும்பொய்யாநிலவுதல்செய்சுத்தசத்துவடிவமா மாயையொடு நிகழ்த்துகின்ற, மலினசத்துவவடிவ வித்தைதமப் பிரதானவடிவமாகு, சவமில்பிரகிருதியென விருந்திறன்றுத்து முனாகவின்றமாயை.

கைவல்யம்.

ஆரோபமத்தியாசங் கற்பனையாவவெல்லாம், ஒரோர் வத்துவினில் வேறேயோரோர் வத்துவினையோர்தல், நாருடிபணியாய்த் தோன்ற னாறுநித்தியமிற்றோன்றல், நிருமகானற்றோன்ற லிறந்தலம் வெளியிற்றோன்றல்.

கான்னீர் கிளிருசில் வெள்ளி கந்தர்ப்ப நகர்களுஞ், வானமை கயிற்றிற் பாம்பு மலடி சேய் முயலின்கோடு, பிணமாந்தரிபு மாவிற்பிரபஞ்சமெல்லாம் பொய்யே, ஞானமெய் மகனே யுன்னை நம்மானை மறந்திடாதே.

மாயையென்பதே துடையாரெப்படி வந்தது வருவானேன், மாயை யென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்துவுமிரண்டாமே, மாயை யென்பதும் பிரமமுமொன்றெனின் வஸ்துவும் பொய்யாமே, மாயை யென்றமேகங்களுக் கொரு சண்டமாருத குருமூர்த்தி.

அதனை யின்னதென்றுரைத்திடப் படாமையாலவாச்சியவடிவாகும், இது தனக்குள துடலியானுலகுமெய் யெனுமவருடையோர்கள்,கதையிலாதபொய்வந்ததெப்படி யென்று கண்டபேரிலே யமைந்தா, விதனமாயை யேன் வந்ததெப்படியென்றுற்புத்தி விசாரமற்றதனாலே.

அருவமாகுமாயாவி வித்தைகள் விளையாடுமுன்றெரி யாவே, உருவமாம்பல கந்தர்ப்பசேனையா யுதித்தபின் வெளியாகும் பிரமசத்திகளநந்தமா மதைக்கண்டுபிடித்திடல் கூடாதே, பரவு பூதங்கள் கண்டநு மானத்தாற் பலருக்கும் வெளியாமே.

காரியங்களுஞ் சத்தியாதாரமுங் காணுமற்றதுமாயம் பாரினின்றமாயாவியுஞ் சேனையும்பார்ப்பவர்கண்காணும் வீரியந்திகழ் வித்தையாயின சத்தி வெளிப்படாததுபோலே, பேரியற்பிரமத்துக்கு மூலருக்கும் பிறிது சத்திகளுண்டே.

சத்திசத்தனைத்தவிரவே றன்றுகாண் சத்தனுமாயாவி வித்தை காட்டிய விந்திரசாலம் பொய் வித்துவான் மெய்போலப், புத்திமைந்தனே சத்தியானகிய பூரணவான்மாவின், வத்துநிர்ணயஞ் சொன்னதிட்டாந்தத்தின் வழிகண்டு தெளிவாயே.

இல்லையாகிப் சத்தியையுண்டென்பதெப்படி யெனக் கேட்கில், புல்லையாதியா மசேதனப் பொருளெலாம் பூத்துக்காய்ப்பனவாராய், கல்லையாமகனேயதிற்சிற்சத்தி நடந்திடாதிருந்தக்கால், தொல்லையாய் வருஞ்சராசரவுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறாமே.

மெய்மொழி

மன்னுநற்சிவத்துச்சத்திபதித்திடினிருவகைத்தாம்
பின்னமற்றிருப்பதொன்றுபின்னமாயிருப்பதொன்று
மன்னியசிவத்தபின்னமாசில்சிற்சத்தியாகும்
பின்னமாவதுசடந்தான்பேர்சொல்லின்மாயையென்றே
சித்துடன்சித்துமாயே சிவசத்தியிருப்பதென்றும்
சித்துடன்சித்திடத்தேசெகத்தினுற்பத்திதானும்
சித்துடன்சித்துமாகுஞ்செகத்தினிற்சராசரங்கள்

Koviloor Digital Library

சித்துடன்சித்துமாயேசிவசத்தியிருப்பதென்றும்
சித்துடன்சித்தாயுள்ளசிவசத்திமபஞ்செகத்தே.

பொதுவாய்ப் பதினான்கு வித்தைகளே வாதிபிரதிவாதிகள் எடுத்துப் பிரமாணமாகக்காட்டவேண்டியவைகள். அவற்றுடனே எதிரிகளுடைய பிரமாணநூல்களை எடுத்துக்காட்டுவதும் தகுதியாம். அங்ஙனமின்றி நாம் எடுத்துக்காட்டும் மற்றப்பிரமாணங்கள் வேதாந்தத்திற்கு மாத்திரமுரிமையாம்.

(மற்றவை பின்வரும்.) ஓர் இந்து.

வேதாகமப்பிரபலதுர்ப்பலவிசாரம்.

எல்லாநூல்களுக்கும் மூலமாய்நிற்றலின் வேதமேமுக்கியப்பிரமாணமாம். திருவிளையாடலில் "தெக்ஷிணாமூர்த்தியாகியசிவபெருமான்வேதியர்வடிவங்கொண்டெழுந்தருளிக் கண்ணுவர்முதலிய முனிவர்க்கு வேதப்பொருளை உபதேசித்துத் தந்திரபேதங்களிற் சொல்லியதருமத்தினும் மிருதிகளிற்சொல்லிய தருமத்தினும் மிருதிகளிற் கூறியதருமமுத்தமம். மிருதிகளிற் புகன்றதருமத்தினும் சுருதியிலுரைத்ததருமமுத்தமம். அதனினுமுயர்ந்ததருமமில்லை. தருமாதரும விபாகத்திலும், சிவபெருமானேபரமகாரணரென்பதிலும் சுருதியே பிரமாணமாம். ஈசனெல்லாஞ் சிவனென்றறியும் ஞானம் போகமோக்ஷங்களைக்கொடுக்கின்றது. இந்தஞானத் தூகொப்பாயது வேறொன்றுமில்லை" என்று சித்தாந்தஞ்செய்ததனாலும், காந்தபுராணம்பிரமகீதையில், "உருத்திரர்நாரணர்முதலியதேவர்களையும் உலகிற்குக்காரணமாகக் கூறிப்போந்த தந்திரங்களெல்லாஞ்சுருதிமிருதிகளுக்கு விருத்தங்கள். இவற்றிற்பாவிகளுக்கு விருப்பமுண்டாம். அவர்களுங்காலபரிபாகத்தாலும், அவ்வத்தேவர்கள் செய்யுமருளினாலும், முக்கியமாயும் புராதனமாயுமுள்ள இவ்வேதமார்க்கத்தைச் சோபானமுறையாக அடைகின்றார்கள். வேதவாதத்தை விட்டுப்பிறமார்க்கத்தையனுசரிப்பவன் உள்ளங்கையிலுள்ளபாயசத்தையொழுகவிட்டு முழங்கையைநாவால் வருடத்தொடங்கினோன்போலாவான். வேதத்தாலன்றிப் பிறநெறியால் ஜீவர்கட்கு முத்திசித்திக்குமேல், விளக்கின்றியிருளைக்கொண்டு கடமுதலியவற்றை அவர்கள் பார்ப்பார்கள்." என்றுகூறியிருத்தலால் "காமிகமுதலியவாகமங்களினுயர்ந்ததொன்றுமில்லை. இச்சைவநூலே மூலமாம் சதுர்வேதங்களும் இதினின்றுபிறந்தன" என்றுபிறர்செய்தஉபந்நியாசம் நிராகரிக்கப்பட்டது.

"ஜீவர்கட்குஅபேதவாதமேசித்தாந்தம் மற்றதெல்லாம்பூர்வபக்ஷம்" என்றசூதசங்கிதையின் வசனத்தாற்பேதத்தைப்போதிக்குமாகமாந்தமேபூர்வபக்ஷமென்றறிக. உலகத்தார்கள்ஆகமநூலுணராமலே ஈசன்வேறு, யாம்வேறு என்று விவகரித்தலால், அவ்வாகமநூற்பயிற்சியாற் புதிதாயடையும்பயனொன்றுமில்லை. இப்பேதத்தை, ஆகந்துகமென்றநுவதித்து, அதுநீயாகின்றாயெனப் போதிக்கும் வேதாந்தமகாவாக்கியமன்றோ ஐக்கியமான பயனைத்தருவது! ஆதலால் ஆகமங்கள் அவைதிகர்க்குரியனவாம். இனி ஆகமம் வேதவிசேஷமாதலால் வேதபாகியத்தன்மையுமின்று. வேதவிசேஷமென்று ஆலாசியமான்மியத்தும், சுப்பிரபேதத்தும் சொல்லப்பட்டது எனவும்வரைந்தது வரையத்தக்கதேயாம். ஆலாசியமான்மியத்திலிவ்வாறு காண்கிலம்.

வேதத்தில் மூன்றுவருணத்தாருக்கும் ஆகமத்தில்நான்குவருணத்தாருக்கும் அதிகாரமுண்டென்று ஸ்ரீகண்டாசாரியாரவர்கள் கூறியிருத்தலாலும், "உவவீதாவொத்ரீய ஸ்ரீ ஸௌராணாவிஷஜுபெஸ்வெடீ3 தெத்ருஷ்ஷீவாஸ்வ தூஸெ ஸரொ ராயாரணோதுகஃ|| வெவஸீத்ருஞ் ஊதொதுந ஸா ஊராஸ்ருவிநாஸநஸ்" என்றகாலோத்தரவசனத்தால் சூத்திரர்கள் வேதத்தையுச்சரித்தல்கூடாதென்றுகாணப்படுதலாலும், ஆகமம்வேதந்தானென்று சாதிக்கப் புகுந்தவர் வட்டிக்காசைப்பட்டு முதலுமிழந்தவர்போல் ஆகமப்பயிற்சியிலுள்ள அதிகாரமுமிழந்தவராயினர். மோக்ஷரோத்தரத்தில், "புராணம்வேதங்களாலும், வேதங்கள்ஆகமங்களாலும் பாதிக்கப்படுமென்றும், விருத்தாசலமான்மியத்தில், "சிவாகமம்விசேஷமார்க்கமென்றும்", அருணாசலபுராணத்தில், சிவாகமத்தினுயர்ந்த சாத்திரமில்லையென்றுங் கூறியவசனங்களும், "நான்குவேதங்களிற் பயன்பெறாது சாண்டிலியனென்பவன் இந்தநூலையோதினான்" என்று வேதநிந்தை கூறியபாஞ்சராத்திரம் பிரமாணமாகாதென்று உத்தரமீமாஞ்சையில் நிச்சயித்ததுபோல் வேதநிந்தகமான மோக்ஷரோத்தரமும் பிரமாணமாகாதென்றறிக,

"மகாதேவருக்கொப்பான தேவரும், சிவஞானத்துக்குச் சமானமானஞானமும், காசிக்குநிகரானக்ஷேத்திரமும், பஞ்சாக்ஷரத்துக்கிணையானமந்திரங்களும், எப்படிச்சுருதிமிருதிகளிலில்லையோ, அப்படியே, வைதிகருக்குச்சமானமானவன் தந்திரத்தையனுசரித்தவருளில்லை. எப்படிமகாதேவர் யாவராலும் பூசிக்கப்படுகின்றாரோ அப்படியேவைதிகனும் பூசிக்கப்படுகின்றான்.' என்றுமகாபுராணமானசூதசங்கிதையிலும், 'ஆகமங்களினும் வேதமுயர்ந்ததென்று, ஆலாசியமான்மியத்திலுங் காணப்படுதலால் அவ்விருவகைத்தலமான்மியங்களுங் கூறியவை முகமன்களேயாம். பதினெண்புராணங்களையும் வியாதமுனிவர்செய்தார், காமிகமுதலியவற்றைப்பரமசிவனே செய்தார் என்றதுதிர்மூலம். சங்கரசங்கிதையில் "ஏறுமதாகியமறைக்கும்யாமுனஞ், சாற்றியவாகமந்தனக்குமாங்கது, விற்றுறவருவதுமன்றுமேன்மையா, லாற்றவுநமதியலறையுநீரதே" என்பெயரதற்கெனிவினிது தேர்ந்துளோர், துன்பமதகற்றிடுந்தொல்புராணமா, மொன்பதிற்றிருவகையுண்டவற்றினை. அன்புடைநந்திமுன்னறியக்கூறினேம்"

"ஆதியினந்திபாலளித்ததொன்மைசேர், காதைகள்யாவையுங் கருணையாலவன், சோதறவுணர்சநற்குமரற்கீந்தனன், நீதியோடவனிடைநிலத்திற்கேட்டியால்' என்னுஞ்செய்யுள்களில், ஏற்றமதாகிய மறைக்கும் யாமுனஞ்சாற்றிய வாகமந்தனக்குமென்றும், தொல்புராணமென்றும், ஆதியினந்திபாலளித்ததொன்மைசேர்காதைகளென்றும், காணப்படுதலால், எல்லாவற்றினுமேற்றமுடையது வேதமென்பதூஉம், ஆகமம்பவுருஷேயமென்பதூஉம், புராணங்கள் அபவுருஷேயமென்பதூஉம், சிவபெருமானிடதது நந்திதேவரும், அவரிடத்துச் சநற்குமாரரும், அவரிடத்து வியாதமுனிவரும், முறையேபுராணங்களைக் கேட்டுக்கொண்டார்களெனக்காண்டலால் வியாதமுனிவர் புராணங்களைச்செய்தவரல்லரென்பதூஉம், பெறப்படுதலினென்க.

சிவதத்துவவிவேகவிருத்தியில், 'பதிக்குப்பொருந்தாமையின், என்னும்வியாசசூத்திரத்தில்பதிக்குங்கேவல நிமித்தத்தன்மைகூறும் அசிரவுதாகமங்கள் நிராகரிக்கப்பட்டனவன்றி, அபின்னநிமித்தோபாதானத் தன்மையைச் சொல்லுஞ்சிரவுதபாகபதங்களல்லவென்று தீக்ஷிதபாதஸ்வாமிகள் கூறுமுகத்தானே, வேதத்தோடுவிரோதித்தவைதிக ஆகமம் பிரமாணமாகாதெனப்பெறப்பட்டது. இதனாலும் ஆகமம்வேதத்தினுமுயர்ந்ததென்னும் பிறரெண்ணம் பயன்படாதாயிற்று. சாமவேதம்பிரபலப்பிராமணமந்திரத்திலும், மந்திரோபநிடதத்திலும், ஜனனமரணங்களுக்கஞ்சிப்போந்தபிராமணர்கள் பிராமணநிபதியும், பிறப்பிலியும் ஆனபரமசிவனைச் சரண்புகல் வேண்டுமென்று, கூறினமையானன்றோ சனகாதியர்கள்சிவபெருமானையே சரணமடைந்தார்கள். இவர்கள் வேதாகமங்களையோதி,

Koviloor Digital Library

அவற்றால் அபரோக்ஷஞானாநுபூதியை யடைந்தார்களில்லை யென்று சிவபெருமான்குருவேடங்கொண்டு மவுனியாய் வியவகாரசித்தமான திரிபதார்த்தங்களைக் கனிட்டிகைமுதலானமூன்று திருவிரல்களால் நீட்டிக்காட்டிப், பரமார்த்தமான ஏகசைக்கியத்தை மற்றுள்ள இரண்டுதிருவிரல்களைச் சேர்த்துணர்த்தச் சுவாநுபூதிமான்களாயினார்களென்று காந்தபுராணத்தால் விளங்கவும், சனகாதிகள் வேதத்தாலநுபூதியடையாமல் ஆகமோபதேசத்தாலடைந்தார்களென்று காந்தத்திற்கூறியிருப்பதுபோலப்பிறர்மயங்கினர்.

பிரமகீதை [கூ.] அத்தியாயத்தில் „அதுசிவனென்னும்வேதாந்தப்பதால் தான் சிவனுயிருத்தலே எனறிமின்ஞானே அவன் சாக்ஷாத் குருவாவான். மற்றவனுகான்" என்றும் கைவல்லியோபநிஷத்தில், சிவனதிற்குணசொரூபத்தையறிந்தாலன்றி முத்திக்குவேறுவழியில்லை என்றுங்கூறுதலால் சிவசாத்திரத்தைப்பயிலும் நான்குவருணத்தாருமே ஆசாரியராவர். சிவாகமத்திற்கூறப்பட்டஞானமே மோக்ஷசாதனம்; என்றசிவபுராணவசனம் முரசமனேயாம். சூதசங்கிதையில், வேததெரிவழுவியமாந்தர்க்குச் சிவபெருமான் தந்திரத்தைமொழிந்தருளினரென்றும், பெரியபுராணத்திலும், பாரதத்திலும், உபமன்னியுமுனிவர் கண்ணபிரானுக்குக்குருவாயினரென்றும், அவர்-வேதாந்தநூலாகிய பகவத்கீதையை அருச்சுனனுக்குபதேசித்தாரென்றுங் காணப்படுதலின், கவேதர்உபமன்னியு, கிருஷ்ணர் அருச்சுனர்முதலியோர் சிவசித்தாந்தமார்க்கச்சிரவணாசாரணஞ் செய்தாரென்று ஒருபிரமாணமுங்காட்டாதெழுந்தது கலையாய்ந்தார் முன்பு நிலையாதென்க. இன்னும்" [illegible] என்றுசிரோரகசியமெனப்பிசத்தின்வசனங்களால்நான்குவேதங்களினுமுண்டான சிவஞானமான திருமுலைப்பாலைப்பிள்ளையாருண்டருளியே சிவஞானஸம்பந்தமூர்த்திகளாயினரென்று காண்டலினால் சதுர்வேத மகாவாக்கிய ஜன்னியசிவஞானமே உயர்ந்ததென்றுணர்க- இன்னும்பிரமமீமாஞ்சைக்கு நீலகண்டாசாரியரியற்றியபாஷியத்தில் வேதசிவாகமங்களுக்குப்பேதங்காண்கின்றிலமென்று கூறியது- யாம்ஹரிஹரர்களுக்குப் பேதங்காண்கின்றலமென்றது போலுபசாரமேயாம் அதுபற்றியன்றோ- உள்ளத்தன்மையுபதேசித்தலின் என்னுஞ்சூத்திரத்திற்கு விடவாக்கியங்கள் சாந்தோக்கியத்திலுள்ளனுதூரியதயத்தில் பொன்மயமான புருஷன்காணப்படுகின்றான். அவற்குமலர்ந்த புண்டரிகங்கள் போன்றிரண்டுகண்கள் என்பன. மலர்ந்தபுண்டரிகங்கள்போலிருகண்களுள்ளவர் நாராயணராகலின் அவரேபரமான்மாவென்று பூர்வபட்சஞ்செய்து சிவபெருமானுக்கு மலர்ந்த புண்டரிகம்போன்றன இருகண்கள். முகுளமான தாமரையையொத்தது மூன்றாவது நெற்றிக்கண்ணாகலின் கண்டுக்கூறியது சிவபெருமானையென்று சித்தாந்தஞ்செய்தனர். இருவருமொருபொருளென்பார்க்கு-ஒருபொருளைப்பரமான்மா அல்லரெனமறுக்கவேண்டாமையினென்க.

சிவபெருமான்திருவருளால் இங்ஙனம் எழுதியது-

வாழ்கவந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெலாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே- திருச்சிற்றம்பலம்

பஞ்சநதக்ஷேத்திரவாஸி.

வேதாகமப்பிராமாணியவிசாரம்.

[illegible]|
[illegible]||
[illegible]|
[illegible]||

தொடக்கத்தில் வேதாகமப்பிராமாணியமென்று மகுடம்புனைந்தமையால் ஆகமத்தினும் வேதமே பிரபலப்பிரமாணமென்றாயிற்று. என்னை? வியாகரணநூலுடையார் உம்மைத்தொகையில் உயர்ந்தவாசகம் முன்னிருத்தல்வேண்டுமென்றுகூறியசூத்திரத்தானென்க. [illegible] என்பதுசூத்திரம்.

(க) பரமபதியாகிய பரமேஸ்வரனதுசத்தியோஜாதமுதலிய நான்குமுகங்களில் வேதங்களுண்டாயின. காமிகமுதல் வாதுளமீறாக விருபத்தெட்டாகமங்களும் ஈசானமுகத்திற்றோன்றின ஆதலால் அது உற்பத்தியிற்றானே சிறந்ததென்றது பொருந்தாது. சிவபெருமானதுபஞ்சமுகங்களுக்கும் ஏற்றத்தாழ்வுண்மைக்கு எட்டுணையேனும் பிரமாணம் பெறப்படாமையினென்க. [illegible] என்று நீகண்டபாதஸ்வாமிகள்காமிகமுதலான வாகமங்களாற் சிறப்பாகத்துதிக்கப்பட்ட பஞ்சப்பிரமமந்திரமானவேதங்களை அங்கமாகவுடையவர் சிவபெருமானென்று சிவமகிமகலிகாஸ்துதியி லுபதேசித்தமையானும்,ஆகமத்தினும் வேதஞ்சிறந்ததென்றுணர்க.

[உ] வேதங்களிற் சிவன் முதலிய எல்லாக்கடவுளர் மகிமையைக்கலந்து ஓதப்படுகின்றது. ஆகமங்களோ அசிவனையே பரம்பொருளென்கின்றது. ஆதலால் இஃது தனிபுரையாகின்றது- என்றது. அஸங்கதம்

[illegible] முளரியான் முதலான தேவர்கள் பூதமுதலவற்றோடுதித்துள்ளோர், அளவிடுந் தலைமையானரென்றவரை யகற்றி மால்விலடையவதினையே, எளமுறுமெல்லாத்தலைமையுமுடையோன் வருமுதற்காரணனல்லோ, ருளமுறுதியானப்பொருளெனச் சிகைதேர்ந்துரைப்புவுஞ்சிலர் மயங்குவரால்.

[illegible]|பாகிவன்றனதுயர்ச்சியேதெரிப்பதிற்பகரொருபாட்டிற்றாய் அரியகால் கதிர்வியூதவூதியர் மொழியால்விளங்கிடு கீர்த்தாய்த் திரிவநாகூறியருளத்துற்தறிகர் செம்பொருட்கோவைத்தாய் விரிந்திருலகினுக்கிதந் தருமுதல் வித்தையோங்குகமாதோ என்று-பரிமளாசாரியர்களான ஸ்ரீ நீகண்டபாதஸ்வாமிகளருளிச்செய்த சிவதத்துவவிவேக வசனங்களாலும் சிவஞானசுவாமிகள் மொழிபெயர்த்த செய்யுள்களாலும்

முதல் வித்தையான வேதம் மற்றைத்தேவரைவிடுத்து முத்தியடையும் பொருட்டுச்சிவபெருமான் ஒருவனே தியானிக்கற்பாலனென்பதூஉம் சிவபெருமானது உயர்ச்சியையே தெரிக்கும் முயற்சியுள்ளது வேதமென்பதூஉம் பெறப்படுதலினென்க. விச்வாதிகரும் விசுவசேவியரும் விமல நீயே யென மறைகள் நிச்சயமாக முழங்கவுமறியா ரீசர்தாம் பிணங்குவரோ என்ற செய்யுளாலுமறிக. வேதத்தை முதல்வித்தையெனவே ஆகமம் உற்பத்தியிற்றானே சிறந்ததென்றுங் குதர்க்கவாதம் மறுக்கப்பட்டது. ஞானாமிர்தமான்மியத்தில்,

ஜீவா கஷேவண வி்ஜாநே நிப தாஸ்வ-லேணவஷி| நக்ஷ கஸ்ரமஃ ஷ்ர்ரீகாஸலுஸவிஜா ஞஸுஸெய்யஆக| ஸ்ரா க்ஷ்ரீகூலெவ்ரூயவிஜா ஞஸுஸலுதெஷ்வ்ருத்யவாமபயம்| கஸ் விஜாநவி காயெராக நிவிருாகூ3-லெவேஷிகம் | வெ தொகஸ்ராஸ்ரெ3யா ஞாயஞு: காரெஜ நநஶ்யதி ||

என்ற வசனங்களால், உலகத்தோரெல்லாரும் சமரசித்தாந்திகராயினர். அம்மதத்தையழிக்காவிடில் அவர் சித்தாந்தம் விருத்தியாம். சுருதியாற்சொல்லப்பட்ட சைவசித்தாந்தம் அழியும். அழியவே வேதோக்தமான அசுவமேத முதலிய சகல கருமங்களும் அழியும்'' என்றுகாண்டலின் சைவசித்தாந்தமென்பது ஆகமந்தானென்னுந் துராசையை விட்டொழிக. இதனால் வேதசப்தத்தைப் பகுதியாகக் கொண்டெழுந்த வைதிகசப்தமும் சிவசப்தத்தைப் பகுதியாகக்கொண்டெழுந்த சைவசப்தமும் வைதிகர்க்கேயன்றி தாந்திரிகர்க்குச் சம்பந்தமில்லையென்பது பெறப்பட்டது.

,,[3]வேதங்களில்கன்மம் பிரமமிரண்டும் நிரூபிக்கப்படுகின்றன. ஆகமங்கள் பிரமம் ஒன்றையே நிரூபித்து அதன் வழிபாடொன்றையே கன்மமாகக்காட்டுகின்றது. ஆதலின் இது பிரமகாண்டமெனப்பட்டு உபநிடதம்போலாகுமென்க,, என்றது நிர்மூலம். ஷ்ருஸா க்ஷ்காஃ நஷஸ்ஷ்டிஂமஹவிஷெஃ| ஸாஜெஉவஸிஂமஹாபதஷாமலஷ:வஸ: வ்ருஷாஜ்ரு: | வாவியஷ்-நமஸ்ஂகாநிவெஷிக ஃ:வெஷஜாஹெகு| ஜெந ஶாஹவிஷுஷ-டிஃஷாஜ்ர்யஶ்ரு தவாஷிபொதெஸ.' மன்னவன்வரிசை யவன் பணிபுரிவோர் மன்னியகுடிகள்பாற்கொளினும், அன்னவன்றனதேயாதல் போன்மிகவுமனலவியேற்பினுமுளதாம், அன்னவிவ்விசயனிசியில்மாயவன்பாற்றுலங்குறநிவேதித்தவவியை, முன்னவனின்பொற்றிருவடியிணைக்கீழ் முன்பவன்கண்டனனன்றே.'' 'கவ்வியத்தாலுஞ் சோமத்தினாலுங் களைசெய்பக்குவச்சருவாலுந், திவ்வியமாச்செய்மகங்கள் முவேழாத்திருத்தகுமுனிவரர்பிரித்தார், நவ்வியங்கரத்தோய் மற்றிவைச்செல்லாநாயகனிபொதுவாக, இவ்வியல்வேள்வித்தொழிலைவனியேயெனுமறைதன்னையாமிசைப்பாம்'' என்றுஸ்ரீஹரதத்தாசாரியசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியசதுர்வேததாத்பரியசங்கிரகவசனத்தினாலும் பஞ்சநதக்ஷேத்திரம் பிர்மஸ்ரீ வைத்தியநாதசுவாமிஐயரவர்கள் அதற்குமொழிபெயர்த்தசெய்யுள்களாலும், வேதத்தாற்சொல்லப்பட்டநித்தியநைமித்திகயாகமுதலானவைகள் சிவபெருமானது வழிபாடுகளேயாமென்ற திருவிளையாடற்பாடல்களாலும், யாகங்களுக்கிறைவனும், அவற்றாலாராதிக்கப்படுகின்றவனும், சிவபெருமானேயென்று துணியப்படுதலினென்க. கருமகாண்டம் பரமசிவனது வழிபாடு கூறவில்லையென்பதற்குப் பிராக்திய மூலமாயிற்றலால் நிர்மூலமுமன்றென்க. இவ்வாறு விளங்கவும் வேதத்திலதிகாரம்பெறாத பொருளையானன்றோ வேதநிந்தை செய்பதென்பதி யெழுந்தது.

4. 'வேதங்கள் சிவகுணத்தவருக்கேயுரியன. ஆகமங்கள் சிவாசுருணைத்தாருக்குமுரியன. ஆயின், ஆகமத்தால் சற்கதிபெறுவாரநேகர். பயன்பெறுப்வர் தொகை பெரிதாதலின்பயனை நோக்கி இதற்கு ஓர் பெருமையுண்டு' என்றது பயன்படாது. 'நீசனுயினும் கோமாமஸங்கீர்த்தனஞ் செய்வானேல், அந்தணனாயினும் அவனோடுபேசாயாக. அவனோடு உண்க, உண்க' என்னுஞ் சுருதி நீசனுமுய்யும் பொருட்டு எளிதான சாதனத்தை யுபதேசித்திருத்தலால் ஆகமத்தினும் வேதத்தால் அநேகர் நற்கதிபெறுவரெனக் காண்டலினென்க.

5. 'வேதங்களைச் சித்தாந்தமென வழங்குவதில்லை. இவைகளைச் சித்தாந்தமென வழங்குவதால் இது சித்தாந்தமாய் நின்றலும் புலப்படும்' என்றது பொருந்தாது. ஷெபாவெஷா ஜ ஃஷாவாக்ஷ்யாஃ விஜ்ஞ்ருதூ நஷவஃவாரா:| வேதாந்தமகாவாக்கியத்தாலுண்டான அநுபவமேசித்தாந்தம் ஸயஜெஷமி விஜாஞ: வஷவஷ்வக்ஷாஸுஷெ தஜெர மற்றவை யனைத்தும் பூர்வபக்ஷம் என்று பிரமகீதையிற் காண்டலாலும், ஷவெஷளவயஸ்ரீவஜ்ஞா நம் வதஷவெஷ்ஷ் ஷஃஷாஷ:ம'' || என்றுதொடங்கிய சௌரகீய வாக்கியங்களால் எம்மையாளுடையபிள்ளையார் நான்குவேதங்களினுமுண்டான சிவஞானமென்னுந்திருமுலைப்பாலை யுண்டருளிச் சிவஞானசம்பந்தமூர்த்திகளாயினாரென்று காண்டலினாலும், வேதாந்தஞானமே சித்தாந்தமென்று பெரியோர்களது துணிபாதலினென்க.

6. வேதங்களுட்கூறப்படாத பல விஷயங்களாகமங்களுட்காணப்படுவதால் ஆகமம்வியாபகமாகும்.

7. 'சனகாதியோகிகள் நான்கு வேதங்களினும் பெறாத பேற்றை ஆகமங்களிற்பெற்றார். ஆகமங்களிற்பெறாதபேற்றை வேதங்களிற் பெற்றிலர்' என்ற இவ்விருவகையுபந்நியாசங்களும் வேதாகமப்பிரபலதூர்ப்பலவிசாரத்தில் நிராகரிக்கப்பட்டனவென்று கண்டு விடுகதனம். ஆதலின் ஆண்டுக்காண்க.

8. 'வேதங்களில் உயிருடன் தன் சரீரத்தைச்சிவமாக்கும் நற்சம்ஸ்காரம் யாதுங் குறிக்கப்பட்டிலது. ஆகமங்களிலோ ஜீவனைச்சிவனாக்கும் பல நற்சம்ஸ்காரங்களுள' என்றது அஸங்கதம். "தேகமே சிவாலயம்; ஜீவன் தேவனான ஸதாசிவன்'' என்று ஸ்கந்தோபநிடதத்தில் இயல்பாகவே ஜீவனைச் சிவனென்றுபதேசித்தலினென்க. இது கருதியே, "ஏற்கமலஞ்செய்புமெழில்மாசிலாமணிநாட், பொற்கமலஞ்சென்னிபொறிவித்தான்-நற்கமலை, யூரிற்குருவினேனோர்மாத்திரையென துரேபரிற்குருவினென்பின்.'' என்று குமரகுருபரசுவாமிகள் கூறியதூஉமென்க.

9. 'வேதங்கள் சாமானிய அக்கினியிற்பசுவேட்டல் முதலிய கொடுங்கிரியைகளைச் சொல்லுகின்றன. ஆகமங்களோ சிவகாருணியம் நிறைந்த நற்கிரியைகளைச் சிவாக்கினியின்கண் விதிக்கின்றன. இதினும்வேறான உத்தமமாண்புவேறுளதோ'' என்றது அஸங்கதம். சிவபெருமானதுகட்டுருவிலொன்றாய் நிற்றலிற்சாமானிய அக்கினியென்றொன்றில்லை. "வேதவேள்வியைநிந்தனைசெய்துழல், ஆதமில்லியமணொடுதேரரை, வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுடனாயபரமனே.'' "மறைவழக்கமிலாதமாபாவிகள்'' என்றுதிருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்வேதவழக்கமில்லாதவரும், வேதத்தையும்அதனுபதேசித்த யாகங்களையும், நிந்திப்பவருமான சமணருண்டை மாபாவிகளென்று திருவாய்மலர்ந்து நிந்தித்து வைதிருப்பது தெரியாமையினன்றோ சற்றும் நடுங்காது, யாகங்களைக் கொடுங்கிரியை யென்றார். திருவாவடுதுறைத்தலத்திலமர்ந்தருளிய சிவபெருமான் ஸ்ரீசிவபாதவிருதயமாமுனிவர் யாகஞ்செய்யும்பொருட்டு ஆயிரம்பொன்னடங்கிய ஒரு பொற்கிழியை எம்மையாளுடையபிள்ளையார்க்கருளிச்செய்த சரித்திரத்தை "மாபிருஞாலமெல்லாம் மலரடிவணங்கும்போதும், பாயி

Koviloor Digital Library

ருங்கங்கையானைப் படர்சடை வைப்பர் போறும், காவிரும் பொழில்கள்சூழ்ந்தகழுமலவூரர்க்கம்பொன் ஆயிரங்கொடுப்பர் போறுமாவடுதுறையரோ' என்ற திருநாவுக்கரசு சுவாமிகளருளிச்செய்த திருநேரிசையும் யாகங்கள் நல்லகிரியைகளென்றுபதேசித்தால் விபரீதமாகப் பிறர்கூறுவது தினைத்துணையும் பயன்படாதெனபது துணிபுரையே.

[10] [11]வது- உபந்கியாஸங்கள் பயனில்லாதன.

[12] 'வேதங்களில்ஒலிகளும்எழுத்துக்களும் ஒருவாறுசிதைந்தாற் கற்பவரை வீணில் ஆபத்துக்கிடமாக்கும். நமது ஆகமங்களின் அருமொழிகளோ அங்ஙனமாகா' என்றது ஆய்ந்தறியாமை. ஆகமங்களையும் மாறுபடக்கூறி அவர்முற் சொல்லப்பட்ட கிரியைகளை மாறுபடச்செய்யின் தேயமும் அரசனும் அழிதற்கேதுவாமென்று காண்டலினெனக. இதனுல் வேதத்தைச் சுரங்கள் மாறவோதில் ஓதினவர்க்கு மாத்திரம் பாபம் விளையுமேயன்றி அநுபோலத் தேயத்திற்கும் அரசனுக்கும் ஒரு கேடும் விளையாதென்றறிக.

[13] 'வேதங்களிற்சொல்வன்மையும் ஆகமங்களிற் சொல்லென்மையும் இயற்கையிலமைந்தன,,என்றது முறைமையன்று. 'வேதமோடேழிசைபாடுவர்''வேதியர் வேதகீதா' மறையோதி' வேதமொழியர்' என்று நால்வர்களும் வேதங்களைச்சிவபெருமான் பாடுவதற்கும் விகரிப்பதற்கும் அவ்வேதங்களினைங்கிநிற்பனவாக மொழிந்தருளினமையாலென்க. வேதங்கள்வன்மையுள்ளன வென்பதற்குப் பொருமையே மூலமென்றறிக. நீர் கூறியவாறு வேதத்திற்கொடுங் கிரியையும் சொல்வன்மையும் அமையுமேல் தேவாரத்திருப்பதிகங்களைத் தமிழாகமமென்றுவழங்காது தமிழ்வேதமென்று வழங்கக்காரணமென்? இதனுல் தமிழ்வேதங்களையு நிந்தித்தவரானிரன்றே. இருவகை வேதங்களையும் மதியாது நிந்தித்தவுமக்கு இவ்வாறு நற்பிரமாணங்காட்டி வரையாவிடில் எமக்குப்பாவம்சம்பவிக்குமென்று வரைந்தோம்.

வேதத்திலதிகாரம் பெருத சில மாந்தர் எழுதிய வேத நிந்தை யாகநிந்தை யதிநிந்தை பிராமணநிந்தை இவைகளைப் பார்த்து நம்மவராகிய வைதிகர் மயங்காமல்தக்கபிரமாணங்களைக் காட்டி யாமெழுதிய உண்மைவசனங்களைக் கொள்வார் என்று நம்புகின்ருேம்.

இங்ஙனம்,

பஞ்சநதக்ஷேத்திரவாஸி.

"தான்தோன்றி மத்தியஸ்தர்."

ஐயா! ஆவணிமீ அ-உ வெளிவந்த 'நாகை நீலலோசனியில்'' ஒருவர் "ஓர் சைவர்' எனக் கையொப்பமிட்டு 'ஜகத்குரு விசார விவகாரவிஷயமாய் மத்தியஸ்தரின் தீர்மானம்'' என்னும் மகுடத்துடன் ஒரு விஷயம் வெளிவந்தது: இவ்விஷயம் எழுதியவர் தாமே தமக்கு மத்தியஸ்தப்பட்டம் பூண்டவர். இவரை "நீவிர் மத்தியஸ்தராக வேண்டும், நீவிர் தீர்மானம் சொல்லவேண்டும். நுமது தீர்மானத்துக்குக்கட்டுப்படுவோம்' என்று வுபயவாதிகளும் வேண்டிக்கொண்டார்களா? இல்லை! "அரசர் விட்டுப் பெண் கல்யாணப்பகுதி நிச்சயம்! புருடனுக்குப் பூர்ணசம்மதம்' என்றபடி வாதிப்பிரதிவாதிகள் இருவரும் கேட்காதிருக்க, தாமே மத்தியஸ்தமுறைத்ததுமிக விந்தை! ம-ாா-ஸ்ரீ சு. சோமசுந்தரநாயகரோ அவரைச்சேர்ந்தவ வேறெவரோ இவ்வினவாதம் பத்திரிகையை விட்டொழியவேண்டி எழுதியிருக்கவேண்டும். இவர் எவராயினுமாகுக. இவர்தான் உண்மையையறியாது ஸ்மார்த்தராதி பண்டிதர் சிலரிடம் காட்டிப்படித்தாரோ, அவரைக்கொண்டேனும் விஷயத்தின்மேல் விஷயம் எழுதி வாங்கி வெளியிடலாகாதா? ஐயோ! அவர் என்செய்வார். இவரோ பண்டிதர் வாக்கை நம்புபவர்; அவர் சாவகாசத்துக்கேற்பச் சொல்லியிருப்பார். போகட்டும்! எப்படியாவது ஒருவரைக்கொண்டு ஏதேனும் எழுதித் தம்முட்டாம் மகிழ்ந்திடுவாராக. இதில் ஏதோ ப்ரம்மவித்தியா பத்திராதிபர்க்கு வெகுவாக அவமானம் வந்ததாய் இவர் துக்கிக்கிருர். ஐயோ பாவம்! இவர்படுந்துன்பம் தான் எம்மால் சகிக்கமுடியவில்லை. பாருங்கள்! சுத்திச்சுத்திச் சுங்கத்தில் வெடிந்தபடி' 'மாயாவாதி பேபன்' என்பதாதி தூஷணச்சொற்களன்றி வேறு யாது இவர் எழுதப்போகிருர். வேறு ஏதேனும் மதவிஷயம் இவர்க்குத் தெரிந்தால் 'சட்டியிலுள்ளது அகப்பையில் வரத்தடையில்லை' நிற்க. இவர் ப்ரம்மவித்தியா பத்திராதிபரினும் வேதசிவாகமங்களைப் படித்ததிலாவது அதன் பொருளையறிந்ததிலாவது இவர் மூலாசாரியராகக்கொண்ட ஸ்ரீகண்டமுனிவர், ஸ்ரீஹரதத்தாசாரியராதிகள் எழுதிய நந்நூலறிவிலாவதுமேம்பட்டவரொருவரைச்சொல்லஇவர்பண்டிதர்களாகநம்பின ஸ்ரீ உ-வே-வித்துவான்சித்தாத்துக்காட்டு ஸ்ரீநிவாஸாசாரியராவது அல்லது ஞானமிர்தபத்திராதிபராவது (எவ்வளவு அவரவர் மதவிஷபத்தில் அவரவர் பாடுபடினும்) சொல்லத்துணிவாரா? இவர்களுக்கு மத்தியஸ்தம் செய்பவந்தவர் இவரினும் சிறந்த பண்டிதராக வேண்டுமே. அவ்விருவாதிகளில் மேபட்ட பண்டிதர் யானே என்று வெளிப்படுவரேல் இது ஏதோ புத்திசுவதந்திரமில்லாச் சொல் என அறிஞர் ஒழித்திடுவார். ஆகலின் இதை ஒருபொருட்டாக வெண்ணுமலும் அவரவர் பிறரைத் தூஷிக்காமலும் அவ்வம்மதத்தார் கொள்கைகளை வெளியிட்டு அவ்வவ்விஷப அவாநிலைகொண்டவரையில் ஆண்டருள்வீராக.

இங்ஙனம்,

ஓர் சைவப்பிரியன்.

அத்துவிதவிசாரம்.

தொடர்பு.

"அத்துவிதம்" என்னுஞ்சொல் வேதங்களில் உள்ளது என்பதூஉம் அச்சொல்லைத் தமது மதப்பெயராய் வழங்குவது ஸ்மார்த்தர் என்பதூஉம் எவருமறிவார். இச்சொல்லைத் தனிச்சொல்லாக வேதங்கள்கூறியிருக்க, அச்சொல்லையே ஸ்மார்த்தர் மேற்கண்ட பொருட்டேயிருக்கின்றமைய பொருட்படுத்தினார் மற்றவர் தமக்கும்வேதசம்பந்தஞ்சிறிது வேண்டுமெனக் கருதி அவ்வத்துவிதச்சொல்லே வேதங்களில் காண்டலால் தமது மதக்கொள்கையைத் தன் பொருளாயமையாதுபற்றி அதுடன் அடைசேர்த்துப்பெயர் வழக்கத்துக்கிட்டு வேதங்களில்காணப்பட்ட சொற்கு அது பொருள் என உபசாரமாகக்கொண்டனர். ஸ்மார்த்தர் ஒழிந்தவர் எவரும் வேதங்களுடன் தந்திரங்கள் சமப்பிரதானமாகக்கொண்டவராகவே, அவர்வேதங்களில் ஒழிது பதார்த்தவிரோதம் வரினும் தந்திரங்கூறிய 'பிரமாணத்துக்கினையப் பொருட்படுத்தி மகிழ்வார். ஆதலால், அவரவர் தத்தம் மதங்களுக்கிட்ட பெயர் விசிட்டாத்துவிதம் முதலியன. இனி மாயோபாதான வாதிகள் கூறுமாறு அவர் சித்தாந்தங்களில் அவர் தமக்கிட்ட பெயர் 'சுத்தாத்துவிதம்' என்பது. அம்மாயாவாதிகளே, தம்மதத்தினும் வேருக வைதிகத்தைக் காட்டவேண்டியதற்கு 'கேவலாத்துவிதம்'எனப்பெயரிட்டு வழங்கினர். ஆகையால், யாம் முற்கூறிய ஐவகைப்பெயர்களுள் விசிட்டாத்துவிதம சுத்தாத்துவிதம் பாஞ்ஞாத்துவிதம் இச்சொற்களை அவ்வம்மதத்தவர் தத்தம் மதப்பெயராக வழங்கினார்கள். சுத்தாத்துவிதச்சொல்லை மாயாகாரணவாதிகளும வல்லபமதஸ்தரும் தமது பெயராக்கிக்கொண்டு பொருள்மட்டில் வேறுபட்டமையால் யாம் அவைகளைப் பிரித்துக்காட்ட அவரிட்ட சுத்த அடைமேல் மற்றோர் அடையை 'ஸமானதிகாணம், வியதிகாணம்' எனச்சாத்தினோம். இந்நான்கியலுடன் வைதிகாத்துவிதத்தை வழங்கிட நேர்ந்தமையால் பிறர்கூறிய பெயராய கேவலாத்துவிதம் எனக்கொண்டே இந்நூலில் வைதிகாத்துவிதத்தைவழங்கினோம்என்க. ஆதலால்,யாம் அத்துவிதம் ஐவகை என்றதூஉம், அவற்றிற்குப்பெயரிட்டதூஉம் ஏதோ புதிதெனச்சிலர் எழுதியது, அவ்வச் சித்தாந்திகளிடமாயினும் அவற்றின் பெயரைக் கேட்காதிருந்திருமாந்து "யாம் ஒதுக்கிட்டோம்" என வீண் வாக்காடம்பரம்போட்டிப்பயனில்சொற்களால் பத்திரிகையை நிரப்பி ஆசிரியர் என்றகங்கொண்டத னுண்மையறியார் மயக்குரை யென்க. அற்றேல் பிறர் இட்ட பெயராயின் அதை ஏன் நீவிர் எடுத்து வைதிகமதத்தின் பெயராக்கி வழங்கி ஆண்டமைந்த கேவலச்சொற்கும் "ஏகம" எனப் பொருளுரைத்தது வழப்பபடும்" எனின் அற்றன்று; வேதங்களில் [illegible] என்றற்றொடக்கத்தனவான பல வாக்கியங்கள் "[illegible]" என்னுஞ்சொல்லாற்குறித்தபொருளையே "[illegible]" [illegible] என்றற்றொடக்கத்துப் பல வாக்கியங்கள் "அத்துவிதீயம், ஏகம், கேவலம், கைவல்யம், அத்துவயம் முதலிய சொற்களால் விரித்துரைத்தலால் அம்மாயாவாதிகள் சேர்த்திட்ட அவ்வடைச்சொல்லாய 'கேவலம்' எனும் சொல்லும் பொருட்பொருத்தமுடையதூஉம் வைதிகவழக்கத்துள்ளதூஉம், ஆகவே,யாம் அச்சொல்லை எடுத்துக்கொண்டோம் என்க. இவற்றால் யாம் புதுப்பெயரிட்டேப்பயனில் பகுபாடுகூறினும் என்பது வெற்றுரையாயிற்றெனத்துணிக. இனியேனும் அகச்சமயம் புறச்சமயம் அகப்புறச்சமயம்புறப்புறச்சமயம் என்பதாதி பகுபாடுகளைப்போல இவையுமூலமல்லவென மாயோபாதானவாதிகள் கண்டு தெளிவாராக. மேல் 'அத்துவிதம்' எனும் சொல்லொன்றே வேதங்களிற்காணப்பட, அதை அதிற்கண்ட பொருளில் அமைத்துத் தம்மதப்பெயராக்கி யழைத்துக்கொண்ட வைதிகர் குற்றமிலார் என்பது வெள்ளிடமலைபோல் விளங்கும். ஆகையால் மேற்கூறிப்போந்த நியாயசதங்களால் அன்மை அகரப்பொருளாய் அமைவது கூடாதெனத்துணியப்பட்டது. அற்றேல் அத்துவிதச்சொல்லை விரிக்குமிடம் 'கேவலம்' எனுஞ் சொல்லிருப்பதுபோல் 'சுத்தம்' என்னுஞ்சொல்லுமிருத்தலால் 'சுத்தாத்துவிதம்' என்பதூஉம் 'வைதிகாத்துவிதமாகாதோ' எனின் அற்றன்று. சுத்தம் என்னுஞ்சொல் வேதங்களில் ஜீவர்களின் இயல்பைக்கூறுமிடம் உபயோகிக்கப்படினும் மூத்தியியல் கூறுமிடம் 'கைவல்யம்' முதலிய சொற்கள் உபயோகிக்கப்பட்டனவேயன்றி இஃதுபயோகிக்கப் படாமையின், வேதங்களிற்கண்ட அத்துவிதம் சுத்தமெனும் அடைசேர்க்கவிடம் கொடாது. ஆகலாற்றான் அத்துவிதம என்னுஞ்சொல்லை யுபயோகிக்கவேண்டியவிடம் கைவல்யம் என்னுஞ்சொல்லைப் பரியாயமாய் உபயோகிக்கின்ற வேதம் 'சுத்தம்' என்னுஞ்சொல்லை உபயோகிக்காது ஒழிந்தது. இதனால் வேதவழக்கிலமைந்த அத்துவிதச்சொல்லைத் தம்மதத்தைக்கூறும் பெயராய் வைத்து வழங்கியவர் வைதிகச்சிரேஷ்டராக அவரை வைதிகர் அல்லவென வெகு ஆடம்பரத்துடன் 'அத்துவிதிகள் வைதிகர்களா' என வினவி ஸ்தாபிக்க முயன்ற தான்தோன்றிப்பட்டகாமம் தரித்த வித்துவான்வாதம் விஞ்ஞியதறிக. மேலே 'ந'கரக்குறிப்பொருளையும் அதனியலான செமபொருளின்மையுமட்டில் விரிப்பாம்.

வரும்.

Chidambaram—Printed and published for the Proprietor at the "Brahmavidya Press" No 38 Senkalooneer Pilliarkoil Street.

Koviloor Digital Library

யுமிருப்பார்கள். மாறிச்சொன்னால் அன்றோ அவர் விரோதியாவர். விரோதியானால் லாபமெல்லாம் நஷ்டமாய்ப்போம். அப்படியானாலும் நடந்திருக்குமாவென்று பார்த்தால் அவர்கள் எழுதிய பல நியாயங்கொடிகளமைந்த தீர்மானத்தைக் காணோம். தீர்மானத்தைப்பார்த்தால் அதிலுள்ள உண்மை பொய்மைகளைக்கண்டுபிடிக்கலாம். சாதாரணமாய் யாதொரு காரணத்திலாகிலும் நியாயம்போல்காட்டி. மாறுபாடு செய்வதுமுண்டு. அப்படிநடந்தார்களோ? உண்மையோடு நடந்தார்களோ என்றுபார்ப்பதற்குத்தீர்மானமில்லையே. இவைகளெல்லாமில்லாமற்போனாலும் போகட்டும். அவர்கள் பேர் ஊர் குலம் கோத்திரம் ஜாதியொன்றும் தெரியவில்லையே. அதுவுந்தெரியாமற் போனாலும்போகட்டும். ஓர் சைவராது பேர ஊர் குலம் கோத்திரம் தொழில் வயது இவைகளேனும் தெரியவேண்டாமா? இவ்வளவுந்தெரியாவிட்டாலும் ஊர் பேர் தொழிலாவது அவசியந்தெரியவேண்டுமே. அதுவுமெழுதினாரென வைத்துக்கொள்வோம். இவரெழுதியவைகளுண்மையென வெப்படிநம்பக்கூடும்? இவர்சொல்வது சரியாயிருக்குமெனப்பலரும் சொல்லவேண்டுமே. சொன்னாலும், ஞானமிர்தகக்ஷியாரைப்புகழ்ந்தும் ப்ரம்மவித்தியாகக்ஷியாரையிகழ்ந்தும் எழுதிய ஒருதலைபக்ஷத்தாராயிருப்பதால் இவரை யிவர்கக்ஷியாரும் உண்மையென நம்புவது கஷ்டமாமே. இவரெழுதியதை நம்புதற்குச்சாக்ஷியும் அவசியமன்றோ? அந்த சாக்ஷிக்காரரும் தக்கமதிப்புப்பெற்றவர்களாயிருந்தால்தான் உண்மையென நம்ப இடந்தரும். அப்படிப்பட்ட சாக்ஷிகள் பலரிருப்பது உத்தமோத்தமம். ஆனால் ஓர் சைவர் எழுதியவற்றில் ஓர் சாக்ஷியேனுமிருந்ததாய்ப்புலப்படவில்லை. இப்படிப்பட்ட விஷயத்தை நம்புதல் யார்க்குமிகவரிதுதான். ஆயினும் கட்டாயத்தின் மீது மிகப்பிரயாசையோடு நம்புதல்வேண்டும். அதுவும் ஷை சைவர்பொருட்டு நம்பினால் அவர்க்குமிகச் சந்தோஷமாயிருக்கும். பண்டிதர்களுடைய தீர்மானத்தைச்சொல்லிவிட்டு எனதபிப்பிராயமும் அதுவேயாம், என்கிறார். இவ்வளவெழுதிய விவர்க்கு வேறு அபிப்பிராயமெங்கிருந்து வரும்? மற்றப்பண்டிதர் கூட்டத்திற்கு இவர் தலைவரோ போலும். அப்படியானால் இன்னும் அந்தச்சபையின் பெருமையையுரைக்கவேண்டுவதில்லை. ஷை பண்டிதர்கள் இலக்கண இலக்கியங்களில் மாத்திரம்பண்டிதர்களா? மதவிஷயத்திலுமா? இலக்கணஇலக்கியங்களில் மாத்திரமென்று சொல்லலாமெனின் இதுமதவிஷயமாதலால் வெறும்இலக்கண இலக்கியங்கள் படித்தவர்கள் இதற்குத் தீர்ப்புக்கொடுக்கமாட்டார்கள். மதவிஷயத்திலும் பண்டிதர்களாகவேயிருக்கவேண்டும். மதவிஷயத்திற்பண்டிதர்களாயிருக்கவேண்டுமானால் வேதமுதல்சகலசாஸ்திரங்களும் படித்தவர்களாயிருக்கவேண்டும். அப்படிப்படித்தவர்கள் பிராமணர்களே. அந்நாடுதமிழிலும் பண்டிதர்களாயிருக்கின்றார்களென்றும் ஓர்சைவர்கூறியிருக்கிறார். அப்படியிருபாஷைகளிலும் பண்டிதர்களாயிருப்பது மிகுதிகஷ்டந்தான். அங்ஙனமாகக்குறைந்தது எட்டுப்பேர்வரையில் கிடைத்தது அதிசயம். அதிலும், சைவ, வைணவ, ஸ்மார்த்த, மாத்துவர்களிலும் அகப்பட்டது மிக அதிசயம். அதிலும் மாத்துவர்களில் அகப்பட்டததிசயத்தையென்னென்று சொல்வோம்! அதிலும்ஒருவிசேஷங்கூறுகின்றார். அது, 'முற்றுங்கேட்டு கெடுமோருந்திருக்குது'' என்பதே. இப்படிச்சொல்லிவிட்டால் தமது சொல்மிகவுண்மையாய் நம்பிக்கைப்படுமென்று கருதினாராக்கும். இதன்மேலில் இந்த ஓர்சைவர் மத்தியஸ்தம் செய்து தீர்மானித்தது ப்ரம்மவித்தியா பத்திராதிபருக்குத்திருப்தியில்லையாயின் சேதுபதிசமஸ்தானத்திலாவது [illegible]விடத்திலாவதுநான்குஉபயபண்டிதரைச்சேர்த்து இருவரும்வாதித்து முடிவுசெய்யட்டுமென்றுகூறுகின்றார். இவர்செய்தமுடிவில் அதிருப்திப்படுவது கூடாதுபோலும். இவரோ இன்னாரென்றுதெரியவில்லை. இவரெழுதியதோ முற்றும் நம்பக்கூடியதல்ல. அன்றி மத்தியஸ்தஞ்செய்ய இவர் பொது மனிதருமல்ல. அன்றி மத்தியஸ்தர் வாதிப்பிரதிகளால் நியமிக்கப்பட்டவருமல்ல. ஆதலால்இவர் மத்தியஸ்தம்மத்தியஸ்தமாகாது. ப்ரம்மவித்தியா பத்திராதிபரை நான்குபண்டிதரைச் சேர்த்துவாதித்துமுடிவுசெய்யட்டுமென்கிறாரே ஞானமிர்த்தார். தான் அவ்வாறுசெய்யட்டுமே. இவர்க்குஞானமிர்தக்காரர்மாத்திரம் வெல்லமும் ப்ரம்மவித்தியாகாரர் மாத்திரம் எட்டியுமானதற்கிவரது அபிமானமன்றி வேறுகாரணமென்னே? இவர் மாத்திரம் பேர் ஊர் குலம் கோத்திரமிவையில்லாத மத்தியஸ்தரை ரகசியமாய் வைத்துக்கொண்டு தீர்மானித்ததாகச் சொல்லி ஞானமிர்தக்காரர்பாலே அவருக்கு ஜெயவிருது கூறிவிடலாம்; அதற்கிஷ்டப்படாவிடில் ப்ரம்மவித்தியாகாரர் மாத்திரம் நாலுபண்டிதரைக் கூட்டிச் சபையில் வாதித்துக் கொள்ளவேண்டுமோ? இது மிக நியாயம்.

ப்ரம்மவித்தியாபத்திரிகையானது ம-ள-ள-ஸ்ரீ சபாபதி நாவலர் ம-ள-ள-ஸ்ரீ சோமசுந்தர நாயகர் ஸ்ரீமான் சிநிவாசாசாரியாரவர்களுடையவாதங்களையெல்லாங் கண்டித்துப்பேசிவருவதையும் அதற்கு அவர்களில் நாவலர் தவிர மற்றவர் மாத்திரம் பதில் பேசுவதையும் அதற்குமேல் ப்ரம்மவித்தியா பாய்வதையும் அதிலும் நாயகர் மீது அதிகமாய்ப்பாய்வதையும் அறியாதவரும் நீலலோசனியைத்தவிர ப்ரம்மவித்தியாவைப் பாராதவரும் ஆங்காங்கு சிலரிருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் மெச்சும்படி. தம்மவரை நோக்கி சபாபதிநாவலர் முதலியவர் கண்டித்துத் துகள் துகளாய்ச் சேதித்து வருகிறார்களே; இவைகட்குக்கண்டனமெழுதி யுங்கள் மதத்தை யேன்நாட்டிக்கொள்ளவில்லை யென்று கேள்விகேட்டுத் தலைகுனிய வையுங்கள் என்கிறார். இவர் சொல்வதை மெய்யென்று நம்பி இவ்வாறு ப்ரம்மவித்தியா பக்ஷத்தாரைக் கேட்கவருவோரிடத்து ப்ரம்மவித்தியாவை முற்றுங்கொடுத்துவிட்டாற் போதும். பிறகு அந்தவூரில் இந்தச்சைவர் தலை காட்டார். அதிலும் சிறிது ஞானமுள்ளவராயின் அவர்கள் முன் உயிர் தரித்து வாழ்தலுமரிது.

பின்னுமொரு விசேஷமுளது; அதைச்சொல்லி முடித்திடுவாம். இப்போது வாதம் முதிர்ந்து வந்துவிட்டமையாலும் ஞானமிர்தத்தார் பல பத்திரிகைகளுக்கு முன்னரே சோர்ந்துபோய்விட்டமையாலும் சோமசுந்தர நாயகருக்கு விஷய பலமில்லாவிடினும் தூஷணாஸ்திரப்பிரயோக வலிமைபெற்றவராதலால் அதைக்கொண்டு வாதப்

போன்ற அநந்தங்கட்போது இனிய நியாய தண்டத்தால் தண்டிக்கப்பட்டு இப்போது வலிமை குன்றியிருப்பதா லும் இனி அவர் வெளியிலும் அநந்தங்களை வெல்லிய நியாயதண்டம் பலமாய் வைத்திருப்பதாலும் விஜயத்வ பாவதி, சிவன் பரமபதியன்றெனச் சுதனைவதிரமென்றெ ச் வாதஞ்செய்யும் சைவர்க்கு தென்மதத்துக்குவதியான ஸ்ரீமான் சித்தாந்தப்பாடு சிவோசாராதி சைவர்கள் எதிரா காலத்தால் சூரணமிழந்திருக்கும் அவ்வையாக எழுதி யதற்கெல்லாம் பதில் வந்துவிட்டமையாலும் பாக்கிகள் ளும் வந்துகொண்டிருக்கின்றமையாலும் சூ. கா. இவர் களைபடித்து, அவர்களுக்குச்சார்பாய் மெலெழுந்த வாரி யாய்த் தூஷணைசெய்யும் சிலர்க்குச்சமயோசிதமானசமா தானங்களும் இணையில்லாமை காரணமாக அவர்களைப் பொருள் படுத்தாது விட்டும் பதில் வந்திருக்கின்றமையா லும் இனி இவரது சைவசித்தாந்த (உண்மையானசைவ சித்தாந்தமன்று) த்துக்கு எங்கே கேடுவருமென்று வெ ன்று பயந்து, "இனி இவ்விவகாரங்களைப் பத்திரிகைகளிற் பரப்பாமல் இதோடு முடிவுகட்டுவதே நன்மையென்றும் (மத்தியஸ்தர்கள்) செப்பினார்கள்" என்று மாப்பிள்ளைத் தோழனைப்போன்ற அம்மத்தியஸ்தர் தலையில் அந்தச்சு மையை வைத்துவிட்டார் ஓர் சைவர்.

மற்றப்படியே ஓர் சைவர் உரைத்த அளவில்லாத்தூஷ ணைகளுக்கு நாம் பதில் கொடாதிருப்பதே நன்றெனமௌ னஞ்சாதிக்கின்றோம்.

சைவபாரு.

விளம்பரம்

பிரமவித்தியா யந்திரசாலையில்

அச்சிடப்பட்டு விற்பனைக்குத் தயாராகவிருக்கும்

ஸம்ஸ்கிருதபுத்தகங்கள்

சிவோத்கர்ஷமஞ்சரி:— இந்த ஸ்ரீமத் அப்பயதீக்ஷித ரவர்கள் பௌத்திரரான ஸ்ரீமத் நீலகண்டதீக்ஷிதரவர்களால் இயற்றப்பட்டது. பரமசிவனது பெருமையை நன்கு எடுத்து ப்புகழ்கின்றமையால், சாம்பவர்களனைவரும்இதனைப்பெறவே ண்டுவது அத்தியாவசியகம். இதன்விலை அணா 1.

வேதஸாரசிவ ஸஹஸ்ரநாமம்:—இந்த பரசிவபரமான பத்து ஸகஸ்ரங்களில் வேதங்களால் படிக்கப்பட்டிருக்கும் திவ்ய நாமங்களைஇனிதுவிளக்கப்பெற்றது. இதன்விலைஅணா-2

புருஷஸூக்தபாஷ்யம்:— இந்த புருஷஸூக்தத்திற்குச் சாம்பவசித்தாந்தாநுசாரிபாஷ்யம் இந்த அச்சிடப்படுவதற்கு முன்னரே பல சாம்பவர்களால் முன்பணங்கட்டப்பட்டுப் புத் தகங்கள் சிலவாயினமையால் வேண்டுபவர்கள் அதிசீக்கிரத் திற்பெற்றுக்கொள்ளவேண்டும்.

இதன் விலை அணா 6.

ரா. நாராயணசாமிஐயர்.

மானேஜர்.

விஜயத்துவஜம்.

இப்பெயர்வாய்ந்த தமிழ்ப்பத்திரிகை சென்ற சித்திரைமாத முதல் மாதம் இருமுறை சிதம்பரம் ப்ரம்மவித்தியாயந்திர சா லையிலிருந்து வெளியாகின்றது. இது சாயல் ஒருபாரங் கொண்டது; இதன் கையொப்பக்கிரயம் மிகச்சொற்பமானது சமயாபிமானிகள் யாவரும் எளிதில் வாங்கி வாசிக்கவேண்டு மென்றெண்ணங்கருதிக்கொண்டே இப்படிச்சொற்பவிலை ஏற்பக்க லாயிற்று. இதன் விலையைப்பார்க்கும் பொழுதே இது வேறெ வ்வித லாபத்தையுங்கருதிவெளியிடப்படுவதன்றென நன்குவி ளங்கும்.

கையொப்ப பணவிபரம்.

இந்தியாவிற்கு வருஷம்		1-ரூ	அணா 4.
இலங்கைக்கு	ஷ	1-ரூ	அணா 7.
10 பத்திரிகைக்கு	ஷ	1-ரூ	1—0—0
15	ஷ		1—5—0
25	ஷ		2—5—0
50	ஷ		4—4—0
100	ஷ		8—2—0

தனிப்பத்திரிகை விலை ஒரு பைசா.

முன்பணம் அனுப்பாதவர்க்குப் பத்திரிகைஅனுப்பப்படமா ட்டாதென்பது கண்டிப்பான வார்த்தையாம்.

கையொப்பக்கிரயம் முதலியவை அனுப்புவோர் அடி யிற்கண்ட எமக்கு அனுப்புதல்வேண்டும். கையொப்பத் தொ கை வேபிலாகவும் அனுப்பலாம்

சி. தாமோதரம்பிள்ளை.

விஜயத்துவஜ பத்திராதிபர்

ப்ரம்மவித்தியாயந்திரசாலை,சிதம்பரம்-

அறிக்கை.

ஐயா!

ப்ரம்மவித்தியா பத்திரிகைக்கு வெளியூர் ஏஜண்டாக K. நா ராயணராவ் என்பவரை நிரந்தரமாக ஏற்படுத்தியிருக்கிறபடி யால் அவரிடம் ரசீதுபெற்றுக்கொண்டு அவரவர்களால் சேர வேண்டிய பாக்கியை அட்டியில்லாமல் நமதுநண்பர்கள் த யைபுரிந்து கொடுத்து அநுகிரகிப்பார்களாக. சென்றமாதம் யாம்விசேஷ அறிக்கையின் கீழ் தெரிவித்தபிரகாரம் அவரவர் கள் பாக்கியைத்தடையின்றிக்கொடுத்துவிடக்கோருகிறோம்.

பத்திராதிபர்.

Chidambaram—Printed and published for the Proprietor at the "Brahmavidya Press" No 38 Senkalooneer Pilliarkoil Street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 15

ஸ்ரீ வித்யா சங்கர

[illegible]

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்

ஸ்ரீராமநாதசகாயம்.

மேஷ பிரியமுள்ள வைதிகவாரணர்களாகிய ரு ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த வேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காலம்வத்ஸரம்.
ஆவணி உ௰-உ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
ஹாஸ்கர ஸேதுபதி:.

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

பத்ராதிபர்:—[illegible]

ஆரியாசாரரகசியம்.

விடியற்காலப்படலம்

பிராணுயாமம்

தொடர்ச்சி.

ஐய, மேற்குறித்தபிராணுயாமத்தில் ஒவ்வொருவருணத்தவர்க்கும் ஒவ்வொரு ஆச்சிரமத்தவர்க்கும் மூக்கைப்பிடிக்கும் முத்திரைகள் வேறுபடுகின்றன. அதற்குக்காரணங்கள் பல. அவைகளை எடுத்து விரிப்பதற்கு முன் பிராணக்குழலியல் அறியவேண்டியது இன்றியமையாது. இவ்விஷயத்தில் யோகநூல்கள், "பிராணுயாமத்தை அறியவிரும்புவோன் பதினான்கு நாடிகளின் இயலை அறியவேண்டும்" எனமுறையிடுகின்றன. அந்நாடிகள் பதினான்கையும்வருமாறறிக:—"இடை, பிங்கலை, சுழுமுனை, ஸரஸ்வதி, வாருணி, பூஷை, ஹஸ்தி, ஜிக்குவை, யசஸ்விநி, விச்வோதரை, குஹூ, சங்கினி, பயஸ்விநி, அலம்புஸை, காந்தாரி, என்பன.

மண்ணில் மங்கின அரசிலையின்கண் தோன்றும் சிறுநரம்புகளுக்கொப்ப, நான்முகத்தாலன்றி மற்றெவ்வனெவயானும் அறியப்படாத எழுபத்திரண்டாயிரம் நாடிகள் சரீரத்தடங்கிநிற்பினும், அவையெல்லாம் மேற்கூறிய இந்த பதினான்கு நாடிகளின் கிளைகளாகையால், பிராணுயாமத்தால் அப்பதினான்கு நாடிகள் சோதிக்கப்பட்டால் மரத்துக்கு வேரில்விட்ட நீரால் கிளைகள் தளைப்பது போல் மற்றெல்லா நாடிகளும் வலியுறுமென்பது ஆசிரியர், யோகீசுரர் கருத்து. இஃதிங்ஙனமாக, தற்காலத்துச் சோதகர் பல பிணங்களை அறுத்துச் சோதித்தவிடம் யோகநூல் சொல்லியபடி அவ்வவ்வமைப்புள்ள நாடிகளை அவ்வவ்விடங்களில் காண்கிலேம்" என்கிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றி முன் யோகசாஸ்திரத்தின் சரித்திரம் எழுதியவிடம் "சரீரத்துள்ள உருப்புகெட்டாலன்றி உயிர் வெளியேறாது" என்பதாதி நியாயங்காட்டி எழுதிமுடித்தோம். இங்கு பிரகாரணமாகவே சுருக்கிச் சிறிதெழுதுவாம். ஐயன்மீர்! சிறிதுணரவேண்டும். சரீரத்தைவிட்டு பிராணவாயு வெளிப்போகவேண்டுமானால், சரீரவுறுப்பின் அமைப்பு ஒருவாறு சிதைந்திடல்வேண்டும். அங்ஙனம் சிதையாதுறின் உயிர் உடலைவிடுவதில்லை.

Koviloor Digital Library

[illegible]

சரீரயந்திரம் நல்லமைப்பிலிருக்கும்வரையில் பிராணன் நிலைபெறுமென்பதும், அந்நிலை குறைய அது வெளிப்படுமென்பதும ஆயுள்வேதவழியுமறிந்த ஆன்றோர் கொள்கை. ஆயின், பிராணன் சரீரத்தைவிடுவது அதன் அமைப்பு குலைந்தமையால் என்றறிந்தவொருவர் அக்குலைந்தவமைப்புற்ற பிணத்தைப்பலவாறு அறுத்துச்சோதித்தாலும உயிருள்ளநிலையில் சரீரத்திலமைந்தவமைப்பை அறிவதெவ்வாறு? ஆயின்பிணமறுத்து அதனால் துணியும் துணிபு உயிருள்ள சரீரநிலையைக்காட்டிய யோகநூலுண்மையைத்துணியவேதுவாகாது. மேல் அப்பிணமறுத்துத் துணியும் சரீரநிலைத்துணிபு எப்பயனைக்கருதி எனின்? ஸ்தூலநாடிகளில் அமையும வாதபித்த கபங்களின் இயலைக்கூறிய வைத்தியசாஸ்திரத்திற்கு இது மிகவும் உபயோகமாகும் என்றறிக. ஆதலாற்றான் தன்வந்தரிபகவான் வைத்தியத்தில் "கண்கூடாக்கண்டதையும், நந்நூற்பயின்றறிந்ததையும் ஒன்றுபடுத்திக்கண்டாற்றான் அறிவு முதுமைபெறும்" என்றார். ஆயின், பிணமறுத்தறியுமஉண்மைபோகத்துக்கெவ்விஷயத்தும்உபயோகமில்லைஎன்றறிக. ஆதலால்நேரில் அறுத்துப்பார்த்துத்துணிந்தவுண்மைசூக்குமயோகவிவரணவிஷயத்தில எவ்வாற்றானும் சேர்ந்திடாதறிக. மேல் வைத்தியசாஸ்திரங்களிலும், உயிருடன் உள்ளசரீரநிலை விஷயத்தில், உள்நோக்கால் உண்மையறிந்து சுவானுபவத்திற்கொண்டு நிற்கும்யோகிகள் கூற்றே பிரமாணமாகவெடுக்கப்படுகின்றமையால் அவர்கண்ட சூக்குமவழியே ஈண்டுப்பிரமாணமாமெனக. மேலே. "யாம நேரில் காணாததும், பொய்யுமான நாடி. ஞானம் நற்பயனளித்தல் ஒவ்வாது" எனப்பிடிவாதம் பேசுதல் அழகன்று. உலகத்தில் கருடனிலும் வேறான எம்மனிதனும் செய்யுங்கருடபாவனை விஷம் ஒழியும் விஷயத்தில் பயன்படுவதால் என்க. சோதித்தறிபவர். பாவனைபயக்கும் பயன் அனைந்தமெலக்கொண்டார். ஆதலால், நேரில்கண்டபடி அமையாதவமைப்புள்ள நாடிகளை யோகீசுரன் எடுத்துக்காட்டிடினும் அவைகளை அவர் கூறியவியல்பினவெனவே நம்பிப் பிராணாயாம முதலிய செயல் நற்பயனளிப்பதில் ஏதும் ஐயமில்லை. இனி அந்நாடிகளை மனதாற்பாவித்து அவைகளைச்சுத்திசெய்பவேண்டி அதே போக நூலாசிரியர் அவற்றின்நிலையை ஒருவாறுவருமாறுகுறித்தார். அவற்றுள்சுழுமுனைஎன்னும்திவ்விய நாடி ஒன்றுளது; அதுமுதுகென்புடன் சேர்ந்து மேலேசெல்வது, அதிசூக்குமமாயுள்ளது, நீர்மயமாயது. அதற்கு வைணவியெனஒருபெயருண்டு. அதை முத்திமார்க்கமென்பர். கபாலத்தின்

Koviloor Digital Library

[illegible]

மேலும் பன்னிரண்டு அங்குலம் சென்று துவாதசாந்தஸ்தானத்துள்ள விந்துசதாசிவன் திருவடிகளில் முடிவுபெற்றது. புலன்களுக்ககப்படாது, யோகிகளின் உயிரிலே சரீரவேதாகமங்களிலும் புகழ்ப்பெற்றது. இந்நாடித்தானம் மேற்றிசையார் எப்பாடுபட்டும் எத்துணைப்பிணம் அறுத்தும் துணியப்பெறாத, சுவாசவித்பாசத்துக்கு மூலகாரணம் (நமது நாசியில் ஒவ்வொருமுகூர்த்தத்துக்கொருமுறை சுவாசம் மாறிமாறி இடதுபுறம் வலதுபுறங்களில் சஞ்சரித்துவருவதனுடவம்) நாசியில் இக்காலத்துப்பாமரரும் அனுபவிக்கக்கூடிய சுவாசவித்திப்ரசத்தால் இதனுண்மையை ஊகிக்கலாம். அதனுற்றுன் பிராணவாயு நாசியில மாறிவரும் என்பதைச்சரீரத்தில் பிராணன் சஞ்சரிக்கும் வழியைச்சொல்லுமிடம்கூறிடுவோம். வேதத்துள் "இருதயத்துள்ள நாடிகள் நூறும் ஒன்றும். அவற்றுள், ஒன்று கபாலத்தைக்கடந்தது. அதன் வழி செல்லுபவன் அமிருதனுவான் (முத்திபெறுவான்) மற்றைவழிசெல்லுபவன் பலவிடம பிறப்பான்"என்பதாதி பல வசனங்களுள், இங்கு கபாலத்தைக்கடந்தது என்றதனுல், இந்நாடி கபாலத்தின் மேலும் வியாபித்தது வெளிப்படை. ஒன்றென்றது, சுழிமுனையைக்குறித்தது. அந்நாடியினிடதுபுறத்துள்ள நாடிகள் நான்கு "இடை, காந்தாரி, சங்கினி, ஹஸ்திஜிக்குவா" என்பன. இவை முறையே இடதுபுறத்து மூக்கு, கண், காது, கால்,இவற்றினளவு நீண்டன. அங்ஙனம் வலதுபுறத்திலும் நான்கு நாடிகளுள. அவை பிங்கலை, பூஷை, பயஸ்வினி, யசஸ்வினி" என்பன. அவை முறையே வலதுபுறத்து மூக்கு, கண், காது, கால் இவற்றை வியாபித்தன. "ஸரஸ்வதி" என்னும் நாடி நாவில் பரவியது. இந்நாடி கந்தம் தொடங்கி நாவரையில் பிராணஸ்தானமாய் லம்பிகைமுதலிய யோகங்கட்கு மிகவும் உபயோகமுள்ளதாயும், நாதோபாஸ்திசெய்பவர்க்கு நாதமார்க்கம் காட்டும் கருவியாயும் இருப்பது. "விசுவோதரை" எனனும் நாடி கந்தமுதல் துந்தம்வரையில் நீண்டது.அலம்புஸை "கந்தமுதல் குதம் வரையில் உள்ளது. குஹூ"என்பது கந்தம்துவக்கி ஆண்குறிவரையில் இருப்பது. "அரணை" என்பது சரீரம் எல்லாம் வியாபித்து நிற்பது. இங்ஙனம் பதினன்கு நாடிகளின் இடத்தைக்குறித்தோம்; இதன் விரிவையறிய விரும்புவோர் யோகசாஸ்திரத்தைக்கண்டு தெளிக. இந்நாடிகள் ஒரு கொடிவடிவங்கொண்டு சரீரத்தைவியாபிப்பதில்லை. இவற்றுள்சுழுமுனையைத்தவிர்த்து மற்றவை எல்லாம் பலகிளைகளால்வியாபிக்கின்றன. இவற்றின் கிளைகள் மிகச்சூக்குமங்கள். கண்முதலியபுலன்களை வியாபிக்கும் நாடிகள் அவற்றின்வழி கவரவேண்டிய விஷயங்களைக்கவர்ந்து மனத்திடம சேர்க்கும்.

[illegible]

ஆயின், நம்முன்னோர் அறியாத நாடிமார்க்கத்தை மேனாட்டார் அறிந்தார் என்பதும் வெற்றுரையேயென்க. பிராணாயாமக்கிரமத்தில் முக்கியமாய் எவரும் இடை, பிங்கலை, சுழுமுனைகளின் சொரூபமறியவேண்டும். அவற்றுள் இடை என்பது, கபப்பிரதானமானதும், சந்திரநாடி எனப்பெயர்பெற்றதுமாம். பிங்கலை என்பது, பித்தப்பிரதானமும், சூரியநாடி எனவும் சொல்லப்படும். வைத்தியத்தில் பிங்கலை வாதநாடி என்றும், இடை வாதநாடி என்றும், சுழுமுனை கபநாடி எனவும் கூறப்பட்டது. ஆயினும், சூரியன், சந்திரன், அக்கினி எனும் மூன்று தேயுக்களுக்கும் ஆதாரமெனவே இம்மூன்று நாடிகளும்யோகத்தில் அணியப்பட்டன. ஆயின் சுவானுபவத்தால்உயிருடன்உள்ளசரீரத்தை நன்குசோதித்தமகானுபாவராகிய யோகிகள் அனுபவம் இவ்விஷயத்தில் பிரமாணமாவது போல் ஸ்தூலசோதனஞ்செய்த வைத்யானுபவம் பிரமாணமாகாது. ஆகலால் யோகிகள் கண்டெடுத்தறிவரத்தினமாகிய பிராணாயாமத்துக்கு பூரணப்பயன்சித்திக்கவேண்டுமாயின், யோகிகள்கண்டவழியே அநுஷ்டிக்கவேண்டும். வைத்தியர் கொண்டவழிகூடாது. அதைஅனுசரித்தே சாஸ்திரங்களில் முத்திரைகளின் பேதங்கள்சொல்லப்பட்டன. பிரமசாரியானவன் பெருவிரலாலும், பவித்திரவிரலாலும், பிராணாயாமமுத்திரையைக்கூட்டுவான் என்றும், கிருகஸ்தன் பெருவிரலாலும், மற்ற நான்குவிரல்களாலும் முத்திரையைக்கூட்டுவான் என்றும் வேதாநுசாரி நூல்கள் விதிக்கின்றன. முதலில் பிரமசாரி கொள்ளும் முத்திரையைப்பற்றி நிரூபிப்பாம்.

மற்றது வரும்.

வேதாகமப்பிராமாண்யம்.

தொடர்பு.

ஐய, வேதங்கள், தருமசாஸ்திரங்கள், புராணங்கள் இவைவியாப்பிய வியாபகபாவங்கள் பெற்றனவென்பது எல்லோரும் அறிந்ததேயன்றோ? அங்ஙனமிருந்தும் ஒன்றை ஒன்றுபாதிக்கவாவது, ஒன்றை ஒன்று சங்கோசிக்கவாவது கண்டோமில்லை. இனிச்சிலவிஷயங்களில் மட்டில் வேதங்கள் பிரபலமும், ஸ்மிருதிகள் துர்ப்பலமும் ஆகின்றனவாதலின் அதன் வழிபோகாது திருஷ்டாந்தத்துடன் வியாப்பிய வியாபகங்கட்கு விரோதாபாவத்தைக்காட்டுவாம். உபநிடம், ப்ரம்மசூத்திரம் இவைவியாப்பியமும் வியாபகமுமாகவிருப்பினும் இதையும், ஞான

டத:ஸ்யாந் நுவ்யாக்யாநம். அத யதி ஸர்வம் ப்ரமாணம் பாஶுபதம், ஹந்த! தந்த்ரம் பாஶுபதம் சைவ பாஞ்சராத்ரம் விமோஹநம்| யோமஸாங்க்யம் வி[illegible] தந்த்ரம் லோகாயதம் ததா. இதிஸர்வா ஸாமேவ வித்யாநாம் ஆதிகர்த்தா பரஶ்ஶிவ: || ஸர்வாஸாம் ஏவ வித்யாநாம் இதிச ஶாஸ்த்ராதிஷு நாத:. பாஞ்சராத்ராதேரபி ப்ராமாண்யம் ஸ்யாத். அத யத்யபி [illegible] புராணாதிஷு ப்ராமாண்யம் ஶிவப்ரோக்தம். பாஞ்சராத்ராதிவத் பாஞ்சராத்ரேஷ்வபி சைவ ததாகாராணாம் ப்ராமாண்யம் || ஸ்ருஸ்யா [illegible] [illegible] ஸ்ம்ருதிப்ராமாணாயாத்ர இத்யாதி [illegible] ஶிவாகமாநாம் [illegible] ப்ராமாண்யம் “இதி ப்ரத்யக்ஷாநாம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] யதா ஶிவவாக்யாநாம் [illegible] ஶிவாகமோக்தா விதய: [illegible] [illegible] ஸர்வஸ்ய:| [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]: | காமிகாதிப்ரமேதேந [illegible] இத்யாதிநா [illegible] [illegible] காமிகாத்யா [illegible] [illegible]. அதபி வேதாந்த [illegible] ப்ராமாண்யம் [illegible] [illegible] பாஞ்சராத்ராதீநாம் [illegible] ப்ராமாண்யம் [illegible]. அதபி “பாஞ்சராத்ரே ச பௌத்தே ச காபாலே பாஶுபதே ததா | ஸ்ருஸ்யா [illegible] [illegible]’ [illegible] [illegible]

காண்டமும் வியாப்பிய வியாபகமாகவிருக்க ஒன்றை ஒன்று பாதிக்கக்காணோம். ஒவ்வொரு சாஸ்திரங்களிலும் விரிந்தநூல் வியாபகமும், சிறிது சங்கிரகநூல்வியாப்பியமும் ஆயினும் அவற்றிற்குஒன்றற்கொன்று பாத்திய பாதகபாவம் இல்லை.ஒன்றுக்கொன்றுபிரமாணத்தன்மையிலும் குறைவில்லை. பாருங்கள்! வியாபகமாய்ச்சதகோடி கிரந்தசங்கியையுடன் இருந்த புராணத்தை நான்குலக்ஷம் கிரந்தங்களாக வியாதமுனிவர் குறுக்கினர்; ஆகவேஇது அப்பிரமாண மென்றுவது, உண்மைநூல் அன்றென்றுவது சொல்வார் உண்டோ? ஒன்று பொதுவும், மற்றது சிறப்புமாகத்துணியப்பட்ட விதிகள் மாத்திரம் விசேடத்தால் சாமான்யம் பாதிக்கப்படுமே; அதுபோல் வேதாகமங்களும் ஆகாதோவெனின், அவைகளில் வேதாகமங்களுக்குள்ளபொது, சிறப்புத்தன்மை துணியப்படாமையின் அதுபொருந்தாதறிக. ஆயின், வேதாங்கங்கள்ஒன்றையொன்றுசங்கோசம்செய்யும்பிரமாணமாகாது. ஆகவேவேதாகமங்களுக்குப்பொதுச் சிறப்புத்தன்மை கூறிஅதனட்டோடு ஆகமங்களைச் சிறப்பிக்க முயன்றது பயன்பெறாதறிக. மேற்காட்டியபடிவேதங்கள்பலதேவதைகளைக்குறிக்கும்என்றதும்வெற்றுரையே. இனிப்பரசிவனருள்வாக்காதல்பற்றியேஆகமங்கள்பிரமாணமுதல்கள்எனக்கொள்ளின் அப்பரமசிவனே திருவாய்மலர்ந்தருளியதாக அவ்வவ்வாகமங்கள் கூறுதலால், வாமம், சோமம், லாகுடம் இவைகளும் மற்றைச்சத்தியாகமங்களும் ஏன் வேதத்தினும்மிக மாயாவது, சமமாயாவது பிரமாணமாகக்கூடாது? மேல் சிவவாக்கியம் எல்லாம் பிரமாணமே எனில் “தந்த்ரம் பாஶுபதம் நாஶைவம் பாஞ்சராத்ரம் விமோஹநம் || யோம ஸாங்க்யம் தந்த்ரம் லோகாயதம் ததா’, என்று பாரதம், பாஞ்சராத்திரம், யோகநூல், உலோகாயதம் இவற்றை எல்லாம் இளம்பிறைசூடியபிரானியற்றினுள் எனப்பெறப்படுதலாலும் ஸர்வாஸாமேவ வித்யாநாம் ஆதிகர்த்தா பரஶ்ஶிவ: | ஸர்வாஸாம் ஏவ வித்யாநாம்” என்றுபுராணங்களில் ஸர்வவித்தைகளையும் முதலில் சிருட்டிப்பவர் என்றும் சர்வவித்தைகளுக்கும் நாயகன் என்றும் கூறப்படுவதால் பாஞ்சராத்திரமாதி தந்திரங்களும் பிரமாணமாமோ? “வேறுபுராணங்கள் நிந்திக்காத சிவவசனமே பிரமாணம்” “பாஞ்சராத்திரத்திலும் பௌத்தத்திலும் காளாமுகத்திலும்பற்றுற்றுத்திக்கைபெறுவீர்” என்று புராணம் பாஞ்சராத்திரத்தை நிந்தித்தலால், அஃதொழிந்த சிவாகமங்கள் பிரமாணமுதலே” எனில் அதுவும்பொருந்தாது. நீவிர் சித்தாந்தமெனக்கூறும் காமி

[illegible]

காதிகளையும் சிவபுராணம் வாயுசங்கிதையில் நிந்தித்திருத்தற்குக்கிரது விடுவீர். சிவபுராணத்தில் வாயுசங்கிதை இருபத்தெட்டாம் அத்தியாயம் [illegible] என்றுள்ள வசனம் சிவாகமம் சிரௌதம் அச்சிரௌதம்என இருவகை. அவற்றுள் வேதஸாரம் சிரௌதமெனப்படும். மற்றது சுதந்திரம் எனப்படும். அது இருபத்தெட்டு. காமிகமுதலியது அதற்குச்சித்தாந்தம் எனப்பெபர் என்றுபொருள்படுதலாமிலன்க. மேல் கௌர்மத்தும் ஆகமங்களை நிந்தித்த பல வசனங்களுள. விரிவஞ்சிவிடுத்தோம. இவ்வளவு வசனங்களுக்குக் கதிசொல்லவேண்டிய பாரம் தாங்கிரிகர் தலைச்சுமை என்க. இனி வேதானுசாரிபாகமே பிரமாணமென்பீரேல், வேதநிந்தைகாண்டலால் பாஞ்சராத்திரம் அப்பிரமாணம் என்பதுபோல வேதத்தையனுசரியாத வேதநிந்தக ஆகமங்கள் அப்பிரமாணமெனல் எவர்க்குஞ் சம்மதமே. சிவவாக்கியங்களாகிய எல்லா ஆகமங்களும் முக்குணங்கடந்து மும்மூர்த்திகளிலும் வேருப தனிக்குறிபெற்ற எமதுபிரான் பெருமையைக் கூறுவன அல்ல; அவர் வழிபாட்டையே கூறிநிற்பனவும் அல்ல. சில சிவவாக்கியமெனப்படும் ஆகமங்களிற்றானே புருடபலி, மயானவாசம், கபாலத்துட்புசித்தல், பைரவவழிபாடுமுதலிய அருவருக்கத்தக்க விஷயங்கள் கூறப்படுகின்றன. இனி இவையெல்லாம் வாமஸோமலாகுடாதி தந்திரங்களிற்றானே காணலாம். அவை அப்பிராமாணம் என்பீரேல் அதற்குப் பிரமாணமேது? சித்தாந்த ஆகமங்களில் அவை தள்ளத்தக்கனவெனக் கூறப்பட்டன என்பீர். அங்ஙனமாயின், அவ்வாகமங்கள் தூஷிக்கின்றமையால் சித்தாந்தமென வழங்கப்படும் நுமது ஆகமம் ஏன் அப்பிரமாணம் ஆகாது? பிறகு "[illegible]" என்றும், "[illegible]" என்றும் புராணாதிகளில் அச்சித்தாந்த ஆகமங்களும் நிந்திக்கப்பட்டமை மறந்தீர்போலும்! இனிச் சர்வஞ்ஞான பரமபதி செய்தருளிய திவ்விய சிவாகமங்கள் எவ்வழியிலும் சிறந்தனவென்றதூஉம், அவற்றை ஏகதேசம் அப்பிரமாணப்படுத்த எந்த வேதங்களாலும் ஆகாது என்றதூஉம் உமது வாதமாயிற்றே. சமயம்நேர்ந்தழிசாணடை

[illegible]

வதும் வேதத்தைத் தமக்குப்பலங்கண்டவழி அதை அப்பிரமாணமென்பதும் அல்லது கைவிடுவதும்தான் ஆன்றோர்க்கழகோ! எச்சமயம்வேதங்களைத்தழுவிநிற்குமபடி. கேரிடுமோ அச்சமயம் எவரும வேதானுசாரியே ஆகமங்கள் என்பார். இனி வேதங்களில் மந்திரம் அர்த்தவாதங்களுக்குத்தாரதம்மியம் இருப்பதுபோல் வாமசோமலாகுடங் காமிகாதிகளும் ஆகாதோவெனின், ஆகாது. அங்ஙனமாயின் பாஞ்சராத்திரத்தும் அங்ஙனமேகூறிடலாம் என்க. அதுடன்நிலலாது வேதங்களைச் சிலவிடம் பாஞ்சராத்திரம பூஷிப்பதால் அது இதிலும் சிறிது அதிகப்பிரமாணமும ஆககேரிடும். இனி "மந்திரம் அர்த்தவாதமிவற்றைப்போல்" என்றதும் விசாரிக்காவிடம் மனம் பெறுமேயுன்றி மற்றவிடம் பெறுது. ஓரோவேதவிதியின் அங்கமாய மந்திரார்த்தவாதங்கள் ஒன்றுக்கொன்று பிரபல துர்ப்பலசித்தியேற்படலாம். இவ்வாகமங்கள் சிவவாக்கியமேயாதலாலும் அவைகள் மற்றவைக்கு அங்கமாகாமையினாலும் அவைகள் சமப்பிரமாணமாதலாலும் அங்கு மேற்கண்ட நியாயமமையாததறிக. பாஞ்சராத்திரத்தும் இந்நியாயம் அமையும். மேற்கூறியபொதுச்சிறப்புத்தன்மையும் முக்கியமாகாது கௌணமேயாதலின் அதுகொண்டு ஒன்றுக்கொன்று வியாப்பியவியாபகபாவம் பெறுவதெப்படி? ஆயின் பொதுச்சிறப்புத்தன்மை யுண்மையில் நிலைபெறுது புரண்டுநிற்றலால் அதுகொண்டு ஒன்றையொன்று சங்கோசஞ்செய்யவும் ஒன்றையொன்று பாதிக்கவும் கூடாது. இனி வேதங்களுக்கு ஆகமயந்திரங்களையும் ஆகமங்களிற்கூறிய சிற்பாதிகளையும் அவாவும் தன்மை இலையாதலால் வேதங்கள் ஆகமங்களை அவாவாவென்பன உண்மையே. இனி ஆகமங்களில் நித்தியபூஜை, நைமித்திகபூஜை, கருஷணம், பிரதிஷ்டை முதலியவிடம் "இம்மந்திரத்தால் இக்கன்மத்தைச்செய்யுக, இந்தருக்குனால் செய்யவேண்டும், இங்கு இச்சூக்தத்தைப்படிப்பான், இங்கு வேதங்களைப்படிக்கவேண்டும், ஆகமத்திற்சொல்லாததை போதாயனசூத்திரத்திற்கண்டு செய்யவேண்டும், நிர்வாணதீக்ஷைபெற்ற சூத்திரன் வைதிககன்மமான சந்தியாவந்தனத்தைச் செய்யக்கூடாது, இக்கன்மத்தில் ஐயாதிஹோமங்களைச் செய்யவேண்டும், அந்தணர்க்குத் தீக்ஷையிங்ஙனம், அப்பிராமணர் தீக்ஷையிங்ஙனம், பிராமணனுக்குச்சிவன் எனுஞ் சொல்லை இறுதியிற்சேர்த்துப்பெயரிடுக" என்பதாதி பலவிடங்களிற்பல வேதமந்திரங்களை ஆகமங்கள் அபேக்ஷிக்குதிற்றலும் வேதபாடத்தை யபேக்ஷிப்பதும், வைதிகர்களையபேக்ஷித்தலும் வேதத்தையனுசரித்தகற்பசூத்திரங்களு

[illegible]

ன் ஒன்றான போதாயனசூத்திரமெனும் வேதாங்கத்தை அபேக்ஷித்தல். விலக்கவேண்டியவிடம் எதிர்மறைப்பொருள் அவாநிலையாலாதல் அபேக்ஷித்தல்' என்பதாகியும். உபநயனம்முதலிய சமஸ்காராபேக்ஷையும், வர்ணதர்மாபேக்ஷையுங்கண்டலால் ஆகமங்களின் வேதாபேக்ஷை நிகழ்ச்சி புலப்படும். இங்ஙனம் வேதங்களிலெங்குஞ் சிறிதும் ஆகமத்தினின்று எடுக்கப்படுவதில்லை. அங்ஙனம் சாஸ்திரோற்பத்திப்பிரகரணத்தில்வித்தியாஸ்தானங்களென வேதாதிபதினான்குவித்தைகளுண்டானதாகவே முன்னர்க்கூறப்படுகின்றன. சிவாகமமும் கூடவே பிறந்ததாகக்காணோம். அச்சிவாகமங்களும் கூடவே வேதங்களுடன் உண்டாயினவெனவும் உணர்க்கப்படவில்லை. ஆகமங்களிலோ ஆகமோற்பத்தி வேதோற்பத்தி இரண்டும்கூறப்பட்டுள்ளது. வேதங்கள் ஸத்யோஜாதம்முதலியநான்குமுகங்களிலும் உண்டாயினவெனவும் ஆகமங்கள் ஈசானமுகத்தெனவுமேசொல்லப்படுகின்றன. இக்காலத்தியதான்தோன்றிச்சைவர் சிலர் கொண்டபடிவேதசிவாகமங்கள்ஒருகாலத்திற்றானே ஒன்றையொன்று அவாவாதுதனிமுதநூல்களாய் முக்கட்பிரான்திருமுகமண்டலங்களில் உற்பத்தியாயினவாயின், ஒன்றை ஒன்று அபேக்ஷிக்காமலாவது ஒன்றையொன்று அபேக்ஷித்தாவது நிற்கலாமேயன்றி ஒன்றுமட்டும் மற்றொன்றை அபேக்ஷிக்கவே மற்றொன்று வேதத்தையும் அபேக்ஷிக்காதுநிற்றல் யாங்ஙனமையும்? வேதங்கள் ஆகமங்களை ஓரிடத்தும் அபேக்ஷிப்பதில்லை. ஆகமங்களோ வேதமந்திரங்களைப் பலவிடத்தும் அபேக்ஷிக்கின்றன. ஆகலாற்றான் நிர்வாணதீக்ஷைபெற்ற சூத்திரனுக்கு வைதிகசந்தியாவந்தனம் விலக்கப்பட்டதன்றிச் சூத்திரர்க்குப் பிரதிஷ்டாதிகாரமும் விலக்கப்பட்டது. "ஆகவின் சூத்திரர்க்கு யஞ்ஞத்தில் அதிகாரமில்லை" என்னும் எஜுர்வேதவசனத்தையநுசரித்தச்சிவயாகத்தும் (பரார்த்தபூஜாயாகத்தும்) அதிகாரம் விலக்கப்பட்டது. இனியும் மூலாகமங்களைப் பரிசிலனை செய்திட்டால் அனேகவிடங்களில் வேதங்களின் மந்திரங்களை அவாவும என்பது புலப்படும். ஆராய்ச்சிமிகுந்த ஆன்றோர்க்கு வேதசிவாகமங்களில் வேதங்கள் முன்னும் ஆகமங்கள் பின்னும் பிறந்தனவென்பதூஉம், வேதானுசாரிகளே பிரமாணங்கள் என்பதூஉம் புலப்படும். மேல் வேதங்களையாகமங்கள் சரியை கிரியைகளில் விரும்பிநிற்பினும் யோகஞானங்களில் அவ்விதம் விரும்பாது சுதந்திரங்களையாகலால் அதுமட்டில் சுதந்திரமும் ஸ்வதப்பிரமாணமும் ஆகாதோவெனின், ஆகாது. எங்குஞ்சிவாகமங்களை முன்பின்னாகச்சிற்சில பாகங்களாய்த் தோன்றினவென்பதுபபனிற்சொல்லும் பிரமாணவிரோதமுமாதலால் என்க.

[illegible]

எந்த ஆகமத்திலாவது எந்தபுராணத்திலாவது வேதங்களுடன் ஆகமங்களின் சரியைகிரியைகளைக் கூறும் பாதங்களின்றி மற்றவை பிறந்தனவென்றும் சரியைகிரியைகள் பின்புண்டாயின வென்றும் பிரமாணம் காணப்படவில்லை. மேற் சிவாகமங்கள் பல வேதமந்திரங்களைத் தழுவி பரமபதி காரியத்தில் அவற்றை யுபயோகித்தலால், அந்தணர்க்குரிய யாகாதி ப்ரம்மகருமங்களில் வேதமந்திரங்களை விநியோகஞ் செய்விக்கும் கற்பசூத்திரங்களைப்போல் (இதுபதிவாக்காயின்இவற்றுள் விசேடமாகலாம்) இவைவேதாங்கங்களாதல் வேதவழிநூல்களாதல் ஆகவேண்டுவது இன்றியமையாது. ஆதலாற்முன்மது சூதனயோகிகள் ஸர்வதர்சனசங்கிரகத்தில்பாஞ்சராத்திரம்பாசுபதம் இரண்டையும் ஸ்மிருதி என்றனர். வேதங்களும் தருமசாஸ்திரங்களும் எப்படியோ அப்படியே இவ்வேதசிவாகமங்களும் என்பது ஆசிரியர் மதுசூதன ஸரஸ்வதியார் கருத்து. இனி "ஆகமங்களை வேதங்களுடனாயினும் வேதோத்பத்திக்கு முன்னாயினும் சதாசிவன் தோற்றுவைத்தானாயினும் அவனது வரம்பிலறிவால் வரும் வேதவாக்கியங்களை அடியெடுத்து ஆகமத்தமைத்தான்" எனல் பொருந்ாதோ வெனின், அதுஎமக்குடன்பாடே. ஆகமங்கள் வேதங்களுக்கு முன்னுண்டாயினவா? பின்னர்ப்பிறந்தனவா? கூடவேபிறந்தனவா? எனவாசங்கை நிகழ, அதற்கு ஏதும் யாம் பதில் அளித்தேம்அல்லேம். மற்று ஆகமங்கள் வேதங்களின் வழிநூல்கள் என்பதே எமக்குத்தாபிக்கவேண்டியது. மச்சபுராணம் கூறியவாறு வேதோப ப்ரம்மணமான புராணங்களும் தருமசாஸ்திரங்களும்வேதங்களுக்கு முன்னுண்டாக, பிறகே வேதங்கள் பிரமதேவன் முகத்துவெளியாயின வென வேறுபடுதலால் அப்புராணங்களும் தருமசாஸ்திரங்களும் வேதவழிநூலாகாதொழிந்தனவோ? ஆயின் மேற்கூறிய நியாயங்கள் "ஆகமங்கள் வேதங்களுக்குவழிநூல்களாமேயன்றித் தனித்தமுதனூலாகா"என நாட்டப்பட்டது. வேதங்களும் ஆகமங்களும் ஒரே காலத்துதித்ததாகச் சிலர்வெற்றுரைகூறுகின்றாரன்றி, பிரபலப்பிரமாணம்காட்டினாரில்லை. ஒரேநிமிஷத்துள் சகலவித்தியாஸ்தானங்களையும் சிருஷ்டித்தருளவல்வரம்பிலாற்றல்பெற்றவமலனுர்க்கு அசாத்தியம்அன்று. ஆயினும் எல்லாஞ்செய்ய வல்லவரான கடவுள் நேரில் தாமே நிமித்தராய் ஒரு பொருளுக்கும் நில்லாது, குயவன் முதலிய அவாந்தர கர்த்தாக்களை அதிட்டித்தேயன்றோ அவ்வக்கிரியைகளை நடாத்துகிறான். அது போல் மீண்டும் தம்முள்நேரில் எப்பொருளையும்ஒடுக்கிக்கொள்ளாதுகுடத்தைமண்ணிலொடுக்கல் என்னும் முறைபற்றியே ஒடுக்கியும் வருகிறான். ஆதலால் முன் மண், குயவன்களைச் சிருஷ்டித்துப் பின்னர் அக்காரணப்பொருள்கள் வழி காரியத்தைத் தோற்றுவைத்தால் அவைகளுக்கு ஈசுர கர்த்திருத்துவம் ஒழியாதுபோல் வேதங்களைத்தமது நான்கு திருமுகமண்டலங்களில்தோற்றுவைத்து அவைகளின் மந்திராதிகளை விநியோகிக்கும் முறையறிந்துமக்கள் உய்யுமாறு சிவாகமபுராணதருமேதிகாசங்களைத் தோற்றுவைத்தார் என்பது நற்சித்தாந்தம் எனக்கொண்டடங்குவது மிக்க நன்று. இக்கொள்கை எச்சித்தாந்த விரோதமும் பெறுத துணிபுரையாம். ஆயின் இவைகள் ஒன்றுக்கொன்று விரோதித்தல், ஒன்றை யொன்று அப்பிரமாணமாக்கல் முதலிய குற்றங்களுக்கிணங்காதுவியாபகவியாப்பிய முதநூல்வழிநூலாய் ஒன்றையொன்று பற்றியே சிவனுற்றோற்றுவைக்கப்பட்டனவாகமங்கள் என்பது வைதிகர் கண்டவாய்மை. அற்றேல் ஆகமங்கள் எல்லாம் வேதவழிநூலாகவே வாமகேசுவர தந்திரமும் பிரமாணமாமோ எனில், அற்றன்று. மேற்கண்டபடி வேதவழிநூலெனத்துணியப்பட்ட தருமசாஸ்திரங்களில் சாங்கியஸ்மிருதி முதலியவை வேதவழி வழுவியதால் அப்பிரமாணமாதல் போல் வேதவிதிவழுக்கள் பெரும்பான்மையில் நிறைந்த அவ்வாகமங்கள் பிரமாணமாகாவெனத்தெ

Koviloor Digital Library

[illegible]

விக்கிடுக. ஆயின் வேதவழிநூல்களே யாகமங்கள் ஆயின. இனி மூன்றும் ஏதுவைப்பற்றிவிசாரிப்பாம். 'வேதங்கள் கன்மகாண்டத்துள்ளும், கன்மங்கள் ஞானகாண்டத்துள்ளும் ஞானத்தையும் விதிக்கும். சிவாகமங்கள் எங்கும் ஞானத்தையும், ததநுசாரிகன்மங்களையுமே குறிக்கும். ஆகையால் வேதங்கள் ஆகமங்களினுஞ்சிறந்தன' வென்பது மூன்றும் ஏது. இதனால் அவர்கொண்ட கருத்தியாதெனின், கூறுதும்: வேதங்களில் பூர்வகாண்டங்களில் அனேக கன்மங்கள்சொல்லப்படுவனநிச்சயம். நித்தியகருமத்துள்ளும் தேவர்கள் அனேகர் பூசிக்கப்படுகின்றனர். ஆகமங்களும் கன்மங்களைப் பலவிதிப்பினும் பிராசாதம், பிரணவம் முதலிய மந்திரங்கள் நிறைந்தமையால் அவை சிற்கருமங்களே என்பதுமே. வேதங்களில் பலகன்மங்கள் சாமானிய தேவதாராதனத்துக்கெனவே ஏற்பட்டன. அது பொதுக்கன்மம். ஆதலாலன்றோ சைவர், வைணவர், சாக்தராதியோர் அவ்வைதிககன்மங்களை அநுஷ்டிக்க ஒருப்படுகிறார். இவர்க்கு வழிபடுங்கடவுள் வேற்றுமைப்படினும் இத்தேவர்களை வழிபடுவது இவர்க்கு யாதும் ஆக்ஷேபமின்மையால் அநுஷ்டானத்தில் சாமானியமாய் ஏற்பட்டுப்போகிறது. இச்சில்லலாத்தேவவழிபாடானகன்மம் எதுவும் தத்தம் வழிபடுகடவுள் கட்டளை என்றே அவ்வம்மதத்தவர் கொண்டொழுகின்றனர். 'ஆயின் வேதம் ஒருதுணிபற்றது; ஆகமங்கள் ஓர்துணிபுள்ளன என்பதுமே. வேதங்களிற்கூறிய கன்மங்களை அநுட்டித்தலால் அற்பப்பயனான சுவர்க்கமே உண்டாகின்றது. கண்ணுதலார் பிரசாதம் இதனால் கிடைப்பதரிது. திருநீறு, சிருக்கண்மணிமாலை, ஸ்ரீபஞ்சாக்ஷரம், சிவார்ச்சனம், தீக்கைமுதலிய நற்கருமங்களை ஆகமத்திலல்லவோ காணலாம். வேதங்கள் வெகுவாகப் பரம்பரையில் கன்மங்களைவிதிக்கின்றனவன்றி நேரில் ஞானத்தைப்புகட்டும் நல்வழியைக்காட்டும் வாக்கியங்கள் அதிகமில்லை. ஆகமங்கள் சரியை கிரியைகளில் உயிருடன் சீவன் சிவனாய், அதன்பெருக்கத்தை மேன்மேலும் நிலைபெறச்செய்துவரவேண்டிய சமயாசாரத்தையும், அந்தியத்தில் வேண்டிய அந்தியேஷ்டிமுதலியவற்றையும், கருஷணப்பிரதிஷ்டைமுதலிய லோகோபகாரபிம்பாராதானவடிவத்தையும் எடுத்து விரிக்கின்றன. ஆனால் சரியைகிரியைகள் அவசியம் சிற்கருமங்களைக்குறிப்பனவாயின. மேல் ஞானயோகங்களோ அவன் திருவருளையடைவதற்கு வழிகாட்டும். ஆகமங்கள் எப்பகுதியிலும் ஞானமயமே. வேதங்கள் அங்ஙனமல்லாததை அறியார் வெருமிலர்' என்று பூர்வபக்ஷஞ்செய்திட, அதற்குச் சமாதானம் வருமாறு: 'வேதங்களிற் பற்பல கடவுளர் வழிபாடடங்கியகன்மங்கள்சொல்லப்பட்டனவென்பதூஉம்ஆகமங்கள் அவ்விதமல்லவென்பதூஉம் அபிமானமாத்திரையால் நேர்ந்த வெற்றுரையேயன்றிவேறில்லை என்பதை அடியில் விரிப்பாம். ஆகமங்களிலும் சமயாசாரங்களைப்பற்றி விதிக்குமிடம் ஆசௌசம் முதலியவைகளும் மற்றுமுள்ளகன்மங்களும் விதிக்கப்படுகின்றன. ஸோமயாகம் முதலிய நற்கருமங்களை வேதத்தில் கண்டபடி அநுட்டிக்க விதிக்கப்படாமலும் பிரதிநிதிஹோமரூபமாய் விதிக்கப்பட்டுமிருக்கின்றன. மேற் சரியைகிரியைகளிலும் சிவனே பூஜிக்கப்படுவதான நியமம் இல்லை. மற்று சூரியன், சண்டன்முதலியபலரைப்பூஜிக்கவேண்டியே விதியுமுளது. பீடபூஜை முதலிய பலரைப் பூஜிக்கவேண்டியே விதியுமுளது. பீடபூஜைமுதலியவிடம் அனந்த ஹரிமுக தேவர்களும் பூதங்களும் பூஜிக்கப்படுகின்றார்கள். அனேக தேவர்களுக்கு ஹோமமும் உண்டு. அங்ஙனம் வேதங்களும் எல்லாக்கன்மங்களைப் பரமன் வழிபாடாகவேவிதிக்கின்றன. இனி சர்வகன்மங்களும் பரசிவவழிபாட்டினையே கூறுமுறையை ஆசிரியர் அரதத்தனார் அருளிய இவ்வியருக்தியாற்கண்டுதெளிக. 'வைதிகத்திக் உள்ள சமஸ்தகன்மங்களையும் பிரம்மார்ப்பணம் செய்விக்கவேண்டுமென விதியுண்டு. இதையில் நீ செ

[illegible]

யும் எவ்வித சற்கருமத்தையும் எனது அர்ப்பணம் செய்திடுவாய்" எனக் கண்ணன் திருவாய்மலர்ந்தருளியதையறியவேண்டும். அங்ஙனம் சிவபுராணத்தும் "யான் அக்கினியிலுள்ளேன், அக்கினியில் வேட்டதெல்லாம் என்னதே' என்பதாதி வசனங்களும் இருத்தலாலும்இவ்வுண்மை சம்மதமாகவே சகல தேவாதிசரீரங்களில் இருந்து அவனே எக்கன்மத்தாலும் ஆராதிக்கப்படுகின்றான் என்னுந் துணிபு ஏற்படுவதாலும் வேதங்களும் சிவகைங்கரியத்தையே ஆகமம் விதித்தவழியிலும் வேறாய மற்றொருவழியில் விதிக்கின்றனவென்பதுண்மை. ஆதலாற்றான் சைவபாடியகாரர் ஆசிரியர்ஸ்ரீகண்டயோகிகள்'வேதங்களில்கன்மகாண்டம் பிரம்மகாண்டவுண்மைகளை விரிக்கவெழுந்த ஓரேநூல் மீமாஞ்சை என்றும், அதில் முற்பகுதி ஒருவராலும் பிற்பகுதி ஒருவராலும் செய்யப்படினும் ஒருபாவஸ்துவையடைய வழிகாட்டுவதே இது 'என்றும் சித்தாந்தஞ்செய்தருளினார். மேற்கூறிய பூர்வபக்ஷியார் கூற்றை நமது ஆசிரியர் அனுசரித்தவராயின், அவர்சிவாகமங்களிலும் வேதங்கள் சிறிது தாழ்ந்தனவென்பாராயின் அவசியம் வல்லபாசாரியர் தமக்குப் பிரமாணமெனநினைத்த பாகவதத்தினின்று விஷயவாக்கிய ப்ரம்மசூத்திரங்களுக்குக்காட்டியதுபோல் ஆகமவசனங்களைக்கொண்டே பாஷ்யம் முடித்திருக்கலாம். வேண்டுமானால் சிவபரமாபாடியத்தை முற்றிலும்பார்க்க 'அந்நூலாசிரியர் 'சாஸ்திரயோனித்துவாத்' என்னும் சூத்திரத்தில் 'சாஸ்திரங்களுக்குமூலம்' எனப்பொருள்படுத்துமிடம் 'சாஸ்திரம்' என்னும் சொல்லுக்கு வேதங்களே பொருளென்றுரையிட்டார். அச்சொல்லுக்கு ஆகமங்களும் பொருளாகவே, ஆசிரியர் ஆகமங்களை ஒழித்துவேதங்களே அதன் பொருள் எனச்சாதிக்கமுயன்ற உட்கருத்தேதோ! அவர்கட்கு ஆகமங்களிலும் வேதங்களுயர்ந்தனவென உட்கருத்தென்பது அவர் நூலைக்கண்டவர்க்குப்புலப்படாதொழியாது. இது நிற்க. சிற்பம், பலி, வாஸ்துஹோமம், மிருத்சங்கிரகம் துவாரபூஜைமுதலியவிடங்களில் பரமபதியின்வேறான பலர் திருவாராதனம் கூறப்படுதல்போல வேதங்களிலும் பலகன்மங்களில் பல சிறுகடவுளர்க்குப்பூஜைவிதிக்கப்பட்டமையான் இதுமாத்திரையால்சகலஜீவதயாபரசகலலோகமாதாவாகிய ஸ்ரீசுருதிதேவியினிடம் எவ்விதத் தும்குறைகூறநினைப்பதும் குற்றமாமென்றறிக. ஆகமங்களில்ஞானத்திற்குச்சிறிதும் சம்பந்தமற்றகேவலகன்மங்கள் (அதாவது சரீரசுத்திவழியில் பரம்பரையில் மனச்சுத்திக்கு ஏதுவான ஆசௌசம்முதலியவெழுதப்படுகின்றன. வேதங்களில் இவ்வித விஷயங்களின் சம்பந்தம் சிறிதுமில்லை. வைதிககன்மங்களைத் தடுக்கஇவ்வற்பசங்கதிகளால் முடியாது. ஆயின்வேதங்கள் கன்மம் பிரம்மம் இரண்டையுஞ்சொல்வது. ஆகமம் பிரம்மத்தையே கூறவெழுந்ததென வெழுந்த மூன்றும் ஏது பயன்படாது. இங்கு குறித்தமுன்றும்ப நமதுக்கப்படியும் வேதசாம்யம் இதனால்கிடைக்காதேவெனின் அதைமற்றோரிடம் தெரிவிப்பாம்.

மற்றது வரும்.

Koviloor Digital Library

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

௬ - ம் புத்தகம்] சிதம்பரம். நந்தன ஹூ புரட்டாசிமீ ௬௨ [இலக்கம் - ௧௫

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மாயாவாதமும், ஞானாமிர்தமும்.

---

1. ஆரியமதாபிமானிகளே! சென்றபுதிய ஞானாமிர்தம் ஏழாமிலக்கத்தில் "மாயாவாதிகள்" என மகுடமிட்டு வெளிவந்த ஓர் உபந்நியாஸத்தை யாவரும் அறிந்திருக்கலாம். அதே விஷயம் முன்னொருமுறை நாகை நீலலோசனியில் வெளிவந்ததே. அதைவேறிடத்தில் எவரும் எடுத்துக்காட்டாத ஓர் அற்புதயுக்தியடங்கியவிஷயமாகச் சிலர் பிரஸ்தாபித்தார்கள். அதுவிஷயத்தில் ஆசைகொண்டு யானும் வாங்கிப்படித்து அதன் பெருமையை அன்றே மற்றவர் கூறியபடி உள்ளதுதான் என்று நம்பினேன். பிறகு அவ்விஷயத்தை, பிராமணநிந்தை, வேதநிந்தை, ஆசாரியநிந்தை, அத்துவிதநிந்தைகள்நிறைந்த பல விஷயங்களை வெளியிடுவதும், இந்நிந்தாவாக்கியங்கள் அகப்படாவிடம் "திராவிடப்பிரகாசிகை" "தத்துவபோதம்" என்றுமுகவுரையிட்டு முன்னோர் சிலர் ஆராய்ச்சியின்றிஎழுதிய சிலவிஷயங்களைப்பார்த்தெழுதி எவ்விதத்தும்வைதிக வேதவத்துவிதங்களையும்,வடமொழியையும் ஆங்காங்கு சிறிது சிறிதாய்த் தூஷித்து எழுதிவருவதுமேதமதியலாய்க்கொண்ட புதிய "ஞானாமிர்தத்தும்" எடுத்து விடுத்திருக்கக்கண்டேன். தென்மொழிப்புலமைத்தலைமைபூண்டநாவலரும்அவ்விஷயம் சிறந்ததெனத் தமதுபத்திரிகையில் வேறுபத்திரிகையினின்று எடுத்தமைத்தமையின், அவர்களைநோக்கியே அதில்எமக்குத் தோன்றும் ஆசங்கைகட்கு விடைஎதிர்பார்ப்பதுசிதமாம் என்றெண்ணுகிறேன். ஆனால் முன் ப்ரம்மவித்தியாவில் தோன்றியவினாக்களுக்கு இதுவரையில் ஏதும் நியாயத்துக்கிசைய விடையளியாத இவர் இனி ஏதளிப்பார் எனக்கருத வேண்டாம். அவைகளுக்குப் பிரமாணங்களுடன் விடையளிப்பதேவித்துவான்களுக்கழகாகலின், அவ்விதப்பிரமாணங்கள் அகப்படாமையாலோ! அகப்பட்டும்அதைவெளியிட்டால்மறுக்கப்பட்டுப்போம் என்னும்கருத்தாலோ! அவைவடமொழியில் உள்ளனவாகவே அம்மொழி விசப்பெறாத தமது பத்திரிகையில் அதைவெளியிடக்கூடாது என்கின்ற எண்ணத்தாலோ! மற்றெவ்விதத்தாலோ அவர் அவைகட்கு விடைபகர்ந்தாரில்லை. 'தம்முட்டாமேபண்டிதர்பட்டம்சூட்டிக்களிக்கும்நாயகர் ஒருவர் ஓர் பத்திரிகையில் இவ்வினாக்களைச்சிறுவரும் விடையளித்திடக்கூடுமென்றனர். இதனால்இவர்இவற்றிற்குவிடையளிக்கவெளிவருங்கால் எக்காரணத்தாலாதல்இவர்க்குச்சிறுமைவரும்என இவர்அறிந்தார்போலும்! நிற்க.தற்காலவிஷயத்துக்கு விடையளிக்காதுஅவர் ஒதுக்கிடினும்எமக்காக்ஷேபமில்லை. கடுஞ்சொற்களால் பத்திரிகையை நிரப்பிடப்ரம்மவித்தியாஅதிபர்இடங்கொடார். ஆயின் அவர்எழுதிய விஷயத்துள்ள மோசம் முதலிய சொற்களுக்கு ஏதும்விடையளிக்காது அவசியம் எடுத்துக்கேட்கவேண்டிய விஷயங்களைக்கேட்பேன்.

2. அவர் ஏதோமாயாவாதிகள்(அத்துவிதிகள்)"பிள்ளையார்சுழி""சிவமயம்""திருச்சிற்றம்பலம்"முதலியசைவர்க்குரியகுறிகளைத்தமது நிரூபங்களில் எழுதிவைத்துச் சைவர்களை வஞ்சிப்பதாகச் சொல்லுகிறார்கள். அதுவிஷயத்தை முறையே முதலில் எடுத்துவிசாரிப்பாம்.

3. "பிள்ளையார் சுழிமுதலியவைசைவர்க்குரிய குறி" என்றனரே,இது எந்நூலாதாரம் பற்றியோ அறிகிலேம். சித்தாந்த சாஸ்திரங்கள் என இச்சைவர்வழங்கும் சாஸ்திரங்களிலாவது, அல்லது சிவாகமங்களிலாவது, அல்லது பிற்காலத்துச் சைவநூல்களிலாவது "சைவர் நிருபம் எழுதிடின் அவர்"பிள்ளையார்சுழி" "சிவமயம்" "திருச்சிற்றம்பலம் இவைகளைஎழுதிமேலேநிருபம் வரையவேண்டும் எனும் விதியுண்டா?

4. அங்ஙனமில்லை. வழக்கமே அதற்குப்பிரமாணமெனில் அத்துவிதிகளிலும் தமிழ்நாட்டில்அவ்வழக்கம்வெகுநீண்டகாலமாய் இருத்தலால் அதையுணராது "சைவர்க்குரியதென உரிமைபாராட்டியது எதுபற்றியோ?

5. இனி"பிள்ளையார், சிவன், சிதம்பரம் இவைசைவர்க்குரியவையாதலின் அங்ஙனம்கொண்டோம் எனின் இவ்வுரிமை மற்றவர் கொண்டாடக்கூடாது என எந்தாஞாக்ஞையுமில்லை; வேதாக்ஞையுமில்லை. ஆகவே பொருள்பொருந்தியே கொண்டோம் எனல்வேண்டும்; ஆயின் இம்முக்குறிகளின் பொருள் இன்னதென விசாரித்திடின் அது சைவர்க்குரிமை பெறுவது கடினமாகின்றது. மற்று இவர் தம்மிடம் உள்ள மாயாவாதித்தன்மையை ஏற்றித்தூற்றப்படும், வேதாந்திகளுக்கே உரியதாகின்றது. அதுவருமாறு காண்க.

6. இம்முக்குறிகட்கும்இதுகாறும்பெருவழக்கின்றிஓர் உரையாசிரியரேனுந்தோன்றிஉரைசெய்திலர். இதுவேதாகமங்களிற்கண்டதன்றாகவேவெளிகயுக்திகளைக்கொண்டேபொருள் கூறவேண்டியிருக்கிறது. அங்ஙனமே யாம் கூறிடுவாம். முதற்குறி "உ" இது-இதைப்பிள்ளையார்சுழிஎனபர்.இதனால்பிள்ளையாருக்கும் இதற்கும், ஏதேனும் சம்பந்தம்வேண்டும். அது வேறுசம்பந்தம் ஏதும் பொருந்தாமையின் எழுத்துக்கும்,பொ

Koviloor Digital Library

குறைக்கும் அமையக்கூடிய ".தற்றல்" எனும்சம்பந்தமே இருத்தல்வேண்டும். அங்ஙனமாயின் இவ்வெழுத்துப்பிள்ளையாரைக்குறித்துத் துவக்கத்தில் இடையூறுநீக்குமிறைவன் திருவடி நிலையைப்புகட்டுவதாகவே மதிக்கப்படும். அவ்விறைவனே முகத்தில் யானைவடிவமும், உடலில்மானிடவடிவமும், நான்கு கைகள்முதலிய விசேடாவயவங்களில் தேவவடிவமும்பெற்றுத் தேவர், மக்கள், விலங்கு எனும்மூவகை ஜந்துக்களுக்கும் ஆன்மா ஒருவனே எனவும், அவனேஅறிவுரும் தமதுதுதிக்கை வடிவமான பிரணவத்தால் என்றும் குறிக்குமற்புதத்திருமேனி தாங்கியவர். அவரதுதுதிக்கையின் அமைப்பையநுசரித்து எழுதப்பட்ட வடிவெழுத்தாகிய பிள்ளையார்சுழி "உ" இவ்விதவமைப்பைப் பெற்றமையின் இதிலும் அவரருட்டிருமேனியால் அமைந்த பொருளமைந்திருக்கவேண்டும். அஃது வருமாறு:- உலகம்பலவகைப்படினும் ஒவ்வொருசித்தாந்திகள் ஒவ்வொரு வழியாய் பிரித்து இலக்கணங்கூறுவதன்றி, சடசேதனங்களை ஒருங்குசேர்த்துப்பிரித்திடச் சேதநாசேதனங்கள் என இருபிரிவு நிச்சயமாயுள்ளது. அவைகளை யோகநூலார் பிந்துவெனவும், நாதமெனவும், விக்ஷேபமெனவும், ஆவரணமெனவுங் கூறியிருப்பர். அவர்கூறுவது மற்றவர்க்கு விரோதமன்று. ஆயின் விந்து என்பது முதல்; பிறகு நாதம் என்னும்அவஸ்தை. இவ்விருபொருட்களில் விந்துவென்பது சேதனமான ஆன்மதத்துவம்நாதம்என்பதுஜடமானபிரகிருதிதத்துவம் அவைகளையே சிவன்சக்தியெனவும் ப்ரம்மம் மாயையெனவும் மற்றும் பலசித்தாந்திகள் கூறுவர். அங்ஙனமாக விந்துவைக்குறிக்கும் பாகம் "ட" இருநாதத்தைக்குறிக்கும் பாகம்—இது. ஆக இரண்டிலும் முனவிந்துவும்பின்நாதமும்அமைக்கப்பட்டது.

விந்துவில் நாதம்கற்பிதம் எனத்தோன்றவே விந்துநாதங்களை வேறுஇருவடிவெழுத்துக்களால்"ஓ"என்றும்"ம்"என்றும் முறை பிறழக்குறித்தது பிரணவம். அதுஒடுங்கும் முறையைக்காட்டும், இதுதோன்றும் முறையைக்காட்டும். இது ஓரே வடிவத்தில் இருதன்மையும்அடக்கிக்குறிக்கும். அதனால்விந்து நாதங்கள் உண்மையில் ஒன்றெனவும் அதற்குத்தனியொலியின்மையால் அவ்விந்துநாதஐக்கியம் சொல்லுக்கெட்டாததுமானதால்மட்டில்லாக்கூடிநின்று"ஐநவெவவெடி'ாவுவு ஒருமநாநாவுிகிஹ ந."என்றும் "யதொவாவொம் வதக்தெ"என்றும் வேதங்கள் மொழிந்த நிலையைக்குறித்ததுகுறி. ஆவே இதைஅத்துவிதிகள் குறியெனலாமா? அல்லது சேதநாசேதனங்களைத் தனிமுதல்கள் என்போர் (சைவர்) குறியெனலாமா? அறிஞர்காள்நாம் இவ்விஷயம் கேட்டால்வேண்டியபடி வீண்வம்புச்சொற்களை பத்திரிகையை நிரப்புவார்பவர். அதனால்பயனென்னை?ஆலோசித்து உண்மைகடைப்பிடித்து இனி எழுதும்பொழுது தமது மதக்குறியாய்க்காட்டிக்கொள்ள இஷ்டமும் பிரமாணவலியுமிருந்தால் லௌகிகப்பிரமாணமாயினும் யாம் இவ்விஷயத்திலறியாதவேதப்பிரமாணமாயினும் அவற்றைக்காட்டித்தமது சித்தாந்தத்தை நிலைநாட்டிக்கொள்ளாது வெறுந்துஷணஸ்திரப் பிரயோகமே செய்தால் அவற்றைநாம் லக்ஷியஞ்செய்யவேண்டியதில்லை. எழுதவேண்டிமுன்வருபவர் இதற்கு ஏன் பிள்ளையார்சுழி எனப்பெயர்வந்தது? இதற்கு அமைந்தவடிவின்கருத்தென்னை? பிள்ளையாருக்கும்இதற்கும்பொருத்தமெவ்விதம்? இதுசைவர்க்கே உரியதா? மற்றவன் ஏன் இடக்கூடாது? என்று பிறர்கேட்குங் கேள்விகளுக்கு உத்தரஞ்சொல்லாது வீணில்காலம் கழித்திட்டால் அதன் பிரமாணபலத்தை அறிஞர்தாமே அறிவார். சிந்த; இங்ஙனமொழிய மற்ற எல்லா மெழுத்துக்களும்ஓர் ஒலியொன்றெச்சரிக்கப்படுகின்றன. இதற்குச்சாரண மின்மையால் இது சொல் என்னும் நாமத்தும், இதன்வடிவமும் இத்தன்மைத்த இப்பொருளுடையது இக்கரைச்சில் அடங்கியது என்றுகுறிக்கப்படாமையின், இரத்தம் இராதநபோல் நனைக்கிடக்கூடியவுபத்தம் வெளுமிகாதவித் துறக்கியத்தைக்காட்டி எக்கிரியைகளிலும் முதலில் அர்ச்சிக்கப்படும், தேவதாநியக், மனுஷ்யஐக்கியத்தைக் குறிக்கும்திருமேனிதாங்கிய இடையூறுநீக்குமிறைவனைக்குறித்து எவ்வாசகத்துக்கும் முதலில் சங்கிரகமாக அமைக்கப்பட்டு "ஒன்றேயுள்ளது" என்னும் வேதப்பொருளுடையதாமென்றது. ஆதலால் இது அத்துவிதிகள் குறியேயன்றிச் சைவர்குறியாகாது. இதுமேல் அவ்வழிகாட்டவேண்டிய பாரம் அவரதே.

7. இனி "சிவமயம்" என்பது வெளிப்படையாய் அத்துவிதத்தைக்காட்டுமென்றது. உலகத்துக்குப்பிரம்மமேமுதற்காரணமென்பது அத்துவிதிகளுக்கும்,மற்றுமுள்ள உபயகாரணவாதிகளான பிரம்மவாதிகளுக்கும்சம்மதம். ஆகமவாதிகள் கேவலநிமித்தம் பரமபதிஎன்பார். ஆதலின் "சிவமயம்" என்னும் சொல் சைவருக்குப்பொருந்தாது. "மண்மயம்குடம், பொன்மயம்குண்டலம்" நூன்மயம்படம், பிரம்மமயம் உலகம்என்பதாதி வழக்கங்களில் "மயம்" காரியம்,என்பதைக் குறிக்கும். அதுபோல் "சிவமயம்"என்னும்சொல் மண்குடத்துக்குக் காரணமாதல்போல் சிவன் "உலகத்துக்குக்காரணம்" எனவேபுலப்படுத்தும். இது உலகத்துக்குநிமித்தமெனக்கடவுள்என்போர்க்குமட்டும்பொருந்தாது. உலகத்தில் மண்மயம்குடமெனவும், பொன்மயம் குண்டலமெனவும் வழங்குவாரேயன்றி"குயவன் மயம்குடம்"என்றும் "கம்மியர் மயம்குண்டலம்" என்றும்எவரும் வழங்கார். ஆகையால் "சிவமயம்" என்பதுவேதாந்திக்கே பொருத்தமுடைத்து. இனி ஓர் நாயகர் அத்துவிதச்சொல்லுக்குட்பொருளுரைப்பதாகப் பீடிகையிட்டுப் பத்திராதிபர் எழுதிய வடவிலக்கணங்களின் இயலறியாது "ஒன்றுமல்லஇரண்டுமல்ல ஒன்றுமிரண்டுமல்ல" என்றுபொருள் உரைத்து அத்துவிதிகள் மாயையை அநிர்வசனியம்என்பதுபோலும்முத்திநிலையைஅநிர்வசனமாக்கிமாயாவாதியானதுபோலும் "சிவமயம்" என்னும் சொல்லுக்கு "சிவனுற்வேற்று விக்கப்பட்டு அவ்வியாத்தியால் அவனினும் வேறாகாதுஅவன்மயம்" என உபசாரமாகப்பொருள் கூறிடின் இதன் உரிமையும் இவர்க்குபசாரமாகவேமுடியும். இனி "சிவ" என்னும்சொல்லும் "மய" என்னும்விகுதியும் எமது வடமொழிச்சொற்களேயாதலால் அதற்கு ஏதோ புது விதிகூறி உமது உரிமையைநாட்டிக்கொள்ளவும்இயலாது.இச்சொல்லின்கண்ணமைந்த 'மய' வென்னும்விகுதிக்கு "காரியம்"பொருளோ! மற்றேதோ வெனச்சம்சயமுமுண்டானால் ஸ்ரீசைவபாடியத்தில் ஸ்ரீகண்டமுனிவர் ஆனந்தமய ப்ரம்மமயசத்தங்களுக்குப்பொருளுரைத்த வுண்மையை அவர்பாடியம் முதலத்தியாயத்துள் கண்டுதெளியக்கடவர். நிற்க, அவரே சிவமயம் உலகம் என ஓரிடங் கூறினர். அன்றிஉலகத்துக்குச் சிவன் உபாதானகாரணம் என்றும்காட்டினர். இனி உலகத்திற்கு மாயை முதற்காரணம் "சிவன்" நிமித்தகாரணம்எனவாதிக்கும் மாயாவாதிகளுக்கும் "சிவமயம்" என்னுஞ்சொல்லுக்குமேதுசம்பந்தம்? உலகத்தில் "குயவன் மயம் குட"மென்றாற்இவர்உலகம் "சிவமயம்" எனலாம். சிவனே உலகமெனும் பிரமவாதிகள், உலகத்தைச்சிவமயம் எனத்தடையதுமில்லை? மாயாவாதிகள் கொள்கையில் உலகம்"மாயாமயம்" அன்றிச் சிவமயமாவதில்லை "சிவ"ப்பொருள் எப்பொருட்டன்மையும்பெறாது பற்றிஅதன்காரியம் ஏதுமில்லை, இலையாகவே மாயாவாதிகட்கும் சிவமயத்துக்கும் சம்பந்தம் சிறிதுமில்லையென்றறிக. தம்மிடமுள்ள மாயாகாரணவாதத்தால் தம்மிடம் மைந்தமாயாவாதித்தன்மையை மற்றவரிடம் தவேஷத்தால் ஏற்றி இவ்வழங்குவதால் எடுக்குவர்தமறையாதுமில்லை.

8 மேல் திருச்சிற்றம்பலம் என்பதும் ப்ரம்மவித்தியாபத்திராதிபர்எழுதியசிதம்பரரகசியத்தும் அதன் மூலமான பாதஞ்சலசாஸ்திரத்திலும் கண்டபடி போகமோக்ஷங்களைக்கொடுக்கும் சகுணநிர்க்குண நிலைகளைக்காட்டும் சொல்லாகவே இதுவும்அத்துவிதிகளின் சொந்தப்பொருளே யென்க.

9. திருநீறுதிருக்கண்மணிமாலே முதலியகுறிகளும்சிவபூஜை களும் வேதங்களில் விதிக்கப்பட்டபடி அநுஷ்டிக்கவேண் டியது வைதிகர்க்கின்றியமையாததாகவே, அதில்கண்டபடி அநுஷ்டிக்கும் அத்துவிதிகளை ஆகமங்களில்கண்ட சைவர்க் குரியவற்றைத் திருடினுர் எனப்பழிசுமத்தல் அறியர் இயலா காது.

10 மேற்கூறிய நியாயங்களால்அத்துவிதிகளுக்கின்றியமை யாததின்னையார்கழி 'சிவமயம்' 'திருச்சிற்றம்பலம்' திருநீறு திருக்கண்மணிமாலே, சிவபூஜை, முதலியவற்றைத் தமதாகக் கொண்டுபோனதும் போதாது "குதிரைசாக்கிப்போட்டதும ன்றிக்குழியும்பறித்ததாம்" என்பதுபோல் மற்றவர்க்குரியதை த்திருடினுர்னைவும் சொல்வதும் பொருந்துமோவெனவறி ஞர் தாமேயறிந்திடுவர். விஷயமின்றி கேவலதூஷணங்களா கவேயிருத்தலால் இவ்விஷயங்களில் அவர்கள் பெருநாவலர் .ஆகவேநாம் அவரை அவ்விஷயத்தில் வெல்வதுமிசக்கடினம். இவர்க்குஒன்பதாம் அஷ்டகம் காப்பேடுமுதல் கடையேடு வரைவரும்.

11. விவேகிகளே! சிநேகசிலர் நேற்று வைணவர் இன்று சைவர் இன்னும்வைணவர் சொல்மாத்திரையிற் சைவராய் ஏ தோவெழுதிவருகிருர்எனவருத்தமுறவேண்டாம். உண்மைஎன் றும் விளங்கும் இதெல்லாம் விவேகிகளிடம் பயன்படாது.

வரும். சிவாத்துவிதி.

வேதசிவாகமப்ராமாண்யமும் ஸ்ரீ. சோமசுந்தரநாயகரும்

சென்ற ஆவணிமீ 22உ வெளிவந்த காசைகீலலோ சனியில் "வேதசிவாகமப்பிராமாண்யம்" என்றுமகுடந்த ந்து ஸ்ரீ. சோமசுந்தரநாயகர் ஏதோ சிலவரிகளையெழு தினுர். அதில் அவர் அறிவிற்கெட்டியமட்டில் விஷய ங்களை எழுதியபோதாது 'ஸர்வாசங்கதம்' அலகை யாவைக்கப்படும், சீனிவாஸநாவலர்சுசிறுமை, தமது மதம் நாற்றமெடுத்துப்போனதுணராது, அவைதிகத்து வசித்தி தம்பான்பணத்திடலே, இவரது மதியினம் மாண ப்பெரிது, இவ்வசம்பாவிதநாவலர்க்கு, வசிட்டன் சொ ன்னது, வியாதன்சொன்னது, மானமின்றி வாய்திறந் தார். அறிவீனத்தை யாம் பலபடியாலெடுத்து அலசி க்காட்டி அதனுலுண்டாகிபவவமானத்தைப் பரிகரித் துக்கொள்ளவே இவ்வசட்டு வழிநுழைந்தார்போலும், அவிவேகபூரண தருவின்குழாத்திடையிருந்து, வெள் ளறிவின் பயன், அறியாமையின்பயன். வாய்மாண் டவாறென்னேயோ, பரிகசித்ததைக்கண்டு நாணி, கய மைச்சொற்களை எல்லாம திரட்டி" என்பதாதி பலவித தூஷணசூத்திரங்களைகிரப்பிச்சிறிது விஷயத்தை முன்எழு தியதையே எழுதியிருக்கிறுர். இவர் இவ்வளவுக்கு மே லும்வைதிடினும் இவர்வைவதற்குப்பதில எழுதி வை வது ஆன்றோர்க்கழகன்று. அதுகொண்டே கொண்ட விஷயங்களுக்கு பட்டில் பதில் அளித்திட்டு ப்ரம்மவித்தி யாதிருபாண்பர்எவரும் மற்றைபவற்றை ஒழித்திட மேற்படி பத்திராதிபர் செய்துவருகிறுர். ஐயோபாவம்! தாம் வைணவத்தைவிட்டகன்று புதிதாய்ச்சைவவேடங் கொண்டவர் விசேடமாக மதவைராக்யங்கொண்டு தன் தந்தைமார்கொண்ட மதத்தவரைச் சண்டாளர்என் றும் திட்டி அசனுல்வரும் குற்றத்தையும் கருதா தொழிவது வழக்கம். அங்ஙனமே சைவத்தைவிட்டுவை ணவத்தைக் கொண்டவரும் வைதிகமதங்கள்மாத்திர மேயல்ல; அவைதிக மதங்களினும் ஒருமதம்விட்டு ஒரு மதம் புகுந்திடுவோர். எவருமிப்படியே. நிற்க; அவர்படி த்தபடிப்புக்கும் அவருக்குள்ள பெரியோரிடத்தன்புக் கும், பரமபதியினிடம் அவர் வைத்தவிசுவாசத்துக்கும் மேற்கண்டபடி திட்டாது அமைதியுடன் எழுதுவாராயின் அவரது பெருமை வெளியாகுமா? ஆகாது. அதுகொ ண்டே மேற்கண்டபடி அவர் செய்வது அவருக்கழகே (——————————இங்கெழுதியவை அவ சியமில்லாத அதிகவிஷயமாகவே ஒழித்திட்டாம்.)

பத்திராதிபர்.

இவர் இவ்விஷயத்தைப்பற்றிப் பத்திராதிபர் முடிவு ரை கூறுவதற்கு முன்னரே வெளிவந்து ஏதோகூறி னர். மேலும் இவர் எழுதுவது முன்பின் முறணுமிய ல்பின வென்பதும் ஒரு முடிவிலாச்சொற்கள் என்பதும் ஈண்டுவிரிக்கப்படும். "வேதங்கள் நேரில் தந்திரங்களின் பெருமையையாவது, அதனையாக்கியோன் பெருமையை யாவது' அதனுபயோகத்தையாவதுஎடுத்ததில்லையென்று, தொடங்கிய பத்திராதிபர் வாக்கை எடுத்து மறுக்கப்புகுந் தார். மேற்கண்ட வாக்கியத்தில் எது இல்லையெனச் சா ஸ்திரியார் எடுத்திட்டாரோ அதுண்டெனக்காட்ட வெழு ந்த இந்நாயகர் அனேகதிட்டுகள் திட்டினபின் ஒருவச னத்தில் ஏகதேசம் பிரமாணங் காட்டினுர். அதாவது:- ஸவ-ர மஜஜபஸ்ரீவஃ "சர்வாகமமயச்சிவ:" என்பது. இது வேனும் அவருக்குச் சாதகமோவெனில் சாதகமாகவில் லேயே. இவர் வெகுபிரயாசத்துடன்காட்டிய இவ்வா க்கியம் கடவுள்திருமேனியை "சாவாகமமய" யென் றதேயன்றிச் சர்வாகமங்களிலும் சிவாகமம் சிறந்ததெ ன்றுவது, அதனையாக்கியோன் பரமபதியே என்றுவது, அதனுபயோகம் இஃதென்றுவது குறிக்காதிருக்க இது மேற்கண்ட விஷயத்துக்கு விடை" எனஎழுதினது எங் ஙனம் பொருந்தும்? நிற்க; மேலே அதேயந்திரமாவது அப்பரமன்திருமேனியில் சிவாகமங்களைமாத்திரம்அமை த்தொழியாது "சர்வாகம"என்றுவைணவாகமம்முதலிய எல்லாவாகமங்களுக்கும் பொதுவாவசொல்லால் ஆகமங் களை உணர்த்தி மேல்ஃஸகஜோவநிஷநபஃ"ஸகலோ

பதிஷண்மய: என்று சர்வவேதாந்தங்களையும் அவர் திருமேனியில் தொடுத்துநிற்றலான் அது மேற்கூறியவைகளுக்குச் சமாதானமாகாது அந்நாயகரது விடையளிக்குமாற்றலை விளக்கியது பெரியோர் தாமேயறிவார். மேலே இவரது இலக்கணப்பாண்டியத்தியத்தைச் சிறிதுகாட்டினார். அவ்வியற்றிறமையை இங்குக்காட்டி விரிக்காது அத்துவிதவிசாரத்திற்காட்டினால் இப்போலிச்சைவர்களுக்குச்சுகமுண்டு. இவர் அவைதிகத்திறமையும் பயன்படும். "வேதமோடாகமமெய்யாமிறைவனூல்" என்பதாதிச்செய்யுளால் "வேதசிவாகமங்கள் பெரியோர்க்கபேதமாமெனவும் "என்றுபின்னர்க்கூறுவதால் இவரைப்பிடித்தாட்டிய வேதநிந்தா பிசாசம் சாஸ்திரியார் எழுதிவரும் "வேதாகமப்பிராமாணிய மகாமந்திரப் பிரயோகத்தால் சிறிது அடங்கி வேதாகமசாம்யவாதத்தில் நிறுத்தியிருக்கின்றது போலும். கூடியசிக்கிரத்தில் ஆகமங்களை வேதங்களுக்கு வழிநூல் எனவும் ஒப்பும்படி நேர்ந்திடுமே. மேலே இந்நாயகர் சாஸ்திரியார் "காயத்திரிமுத்திரை சிவலிங்கலக்ஷணம் முதலியன ஆகமத்திலின்று எடுக்கவேண்டுவதில்லை. அவைகள் வாசிட்டம் முதலிய கர்ப்பங்களிலும், புராணங்களிலும் உள்ளனவென்றதைமறுக்க முயன்று அவர் வழக்கப்படி திட்டிப்பிறகு அவ்வாசிட்ட கர்ப்பம் முதலியன வேதத்தின் வழிநூல்களேஎனத்தாமே ஒப்பி வேதத்தில் தாம் முற்கூறிய நியாயத்தில் ஏதோ சிவாகமப்பிரஸ்தாபம் இருப்பதாய் நினைத்துத்தமது சித்தாந்தத்தைத் தம்முள்தாமே கௌரவித்தார். வாசிட்டம் கர்ப்பமாதல்பற்றியது வேதாங்கமாயிற்று. புராணங்கள்வேதோபப்ரம்மணங்களேயன்றிஆகமோபப்ரம்மணங்களல்லவென்பதை நமதுநாயகருக்கெவரும் சொல்லவில்லைப்போலும். ஆயின்வேதாங்கத்தும் வேதோபப்ரம்மணத்தும் குறிக்கப்படுவதெதுவும் வேதப்பொருளேயாயின் வேதங்களுள் குறிக்கப்பட்டனவே அவ்வழிநூல்களில் விரிக்கப்பட்டனவாதலானும் வேதங்களுக்கு ஆகமசம்பந்தம வேண்டாம் என்பதே நாட்டப்பட்டது. "புராணங்களைச்செய்தவன் வியாதன்' என இந்நாயகர் கூறியது பல புராணங்களைப்படியாமையானோ படித்தும் தூஷணஸ்திரபூஷணரானதமக்குண்மை கூறப்படாதெனுங்கருத்தானோ கூர்மம்முதலிய புராணங்களிலும், ஸ்ரீஹாரதத்ததிவ்யசூக்தியிலும ஸ்ரீமதப்பய்யதீக்ஷிதர்அவர்கள் அருளிய கிரந்தங்களிலும் வெளியிட்டபடி பரமபதியே அப்புராணங்களை இயற்றினரென்றது ஒளித்தார். சிவாகமங்களில் சிவபிரான் சிவாகமங்களை இயற்றினதாகச்சொல்லப்பட்டதுபோல் புராணங்களிலும் புராணங்களைப் பரபதியேயியற்றினர் என்று கூறப்பட்டது. வேதத்தை முதநூலென்றது.ஆகமமே முதநூல் எனத்துணிந்தோத நமது நாயகராலும் முடியாதுபற்றி ஆகமங்களின் உபப்ரம்மணங்களாகப் புராணங்களும்சிவபிரான்றிருவாக்காய வேதவழிநூல்களேயாதலால் அவற்றின் வாக்கியங்கள் வேதங்களின் உட்கருத்தை விரிக்கும். ஆகையால் அது கொண்டே முத்திரைமுதலியவற்றையறியலாம் எனச் சாஸ்திரியார் வைதிகர்கொள்கையை விரித்தார். இனி அம்முத்திரைகள் இல்லாவழிகாயத்திரிபயன்படாதெனக் கூறலும் அமையாது என்றும், சிவபூஜைமுதலியவை ஆகம சம்பந்தமின்றி வேதங்களாற்றானே முடிக்கலாம்எனவும் சாஸ்திரிகள் ஏதுக்களுடன்கூறியதை இவர் நோக்காது தமது புத்திக்குத்தோன்றியவாறெல்லாம் திட்டியது இந்நாயகர் நூலாராயுந்திறமையை நன்குவிளக்கியது. வேதங்கள் சிலரிஷிகளாற்செய்யப்பட்ட பசுநூல், ஆகமங்கள்பதிநூல் என்றுநாலகநீலலோசனியில் 24-ம். சஞ்சிகையிலும் வேதங்களுக்கும், ஆகமங்களுக்கும்சம்பந்தமில்லைஎன அதே பத்திரிகை மற்றோர் சஞ்சிகையிலும் விரிததுத்தாந்திரிகமதம்பெற்றிருந்தவிவர் வேதாகமஸாம்ய வாதம்பேச முன்னிட்டதும் வியக்கத்தக்கதே. மேலே மூலத்திலில்லாது உரையில் இருப்பது சர்வசம்மதம் என்றார். இது இவருக்குச்சம்மதமேயன்றி மற்றெவர்க்கும் சம்மதமன்று. மூலத்திலில்லாது உரையில்இருக்குமேல் அது அநுவுரையன்று; மேல் இவர் சில காமிகாகம வசனங்களை எழுதினார். அவை வருமாறு:—"சித்தாந்தமாவது காமிகம் முதலியனவாம். இதில் உயர்ந்தது பிறிதொன்றுமில்லை. இந்தச்சைவநூல்மூலமாய்ச் சதுர்வேதங்களும் இதினின்றும் பிறந்தனவாம். சைவமே வைதிகம் எனப்படும். வைதிகமே சைவம் எனப்படும். "சைவமானது வைதிகத்திலடங்கியும் அடங்காமலுமிருக்கும். வைதிகம் சைவத்திற்றாழ்ந்தது. முனிவரே சைவம் வைதிகப்பொருளோடு ஒத்துமையாய் இருத்தலால், வைதிகம் என்றும் வேதசாரம் என்றும் கூறப்படும். என்பன. இவ்வசனங்கள் தன் சித்தாந்தங்களுக்குச்சாதகம் எனவிவர்கருத்து. இது முற்றிலும் முரணும்வழி காட்டிடுவோம். "சித்தாந்தமாவது காமிகம் முதலியனவாம். இதில் உயர்ந்தது பிறிதொன்றுமில்லை" என்பது முதல்வாக்கியம். இவ்வாக்கியம் நமதுநாயகர்கொண்டுதகர்த்த வேதாகமசமானபாவத்தைத் துலைத்தது. ஆகமமே சித்தாந்தமெனப்பற்றில்வேதம் பூர்வபக்ஷநூலாய்அதிலும் வெளிவந்த நூல் ஆகமம் என அதுவே ஒப்பிவர, இவர் எதற்கு அவ்விரண்டையும் சபிண்டீகரணம்செய்ய முயலுகின்றாரோ அறியேம். இவர் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அவ்விரண்டை ஒன்றுபடுத்தவியலாது.

Koviloor Digital Library

"செந்தமிழ்ச்சைவநூல் மூலமாம் சதுர்வேதங்களும் இதினின் றும் பிறந்தனவாம்" என்பது இது இரண்டாமவாக்கியம். இதைமது நாயகர் கூறியவாறு சிவமுகத்தில் வேதங்கள் பிறந்ததனையும் மறந்து வேதங்களுக்கு ஆகமங்கள் மூலமென்பதால ஆகமசாரம் வேதமெனச் சொல்லாதமையை, வேதாகமங்கள் இரண்டும் முதநூல் என்றதும் சிதைக்கது. வேதங்களும், ஆகமங்களும் ஒரேகாலத்தில் பிறந்தனென்று இவர் வெகு கஷ்டப்பட்டு நாட்டிட, இவ்வசனம், மூலமும் வியாக்கியானமுமாய் ஆகமவேதங்களை க்கூறி அந்தோ! "குயவனுந் தப்பலநாள் வேலை தடியனுக்கு அரைநாழிகைவேலை" என்பது போல அவர் சித்தாந்தத்தை ஒழித்திட்டது. அதுமட்டோ! காலவேற்றுமையுடன் இல்லாது இரண்டும் முதநூல் அல்லவென் றும், ஒன்றுவழிநூல் என்றும் முடிக்கது. ஐயோ! இவ் வாக்கியங்களை எடுத்துதகரித்து இவரடைந்தபயன் இது தானே? நிற்க; மூன்றும் வாக்கியம். "சைவமே வைதிகம் எனப்படும். வைதிகமே சைவம் எனப்படும்" என்பது. இதனால் நமதுநாயகர் கொண்ட வைதிகசைவப்பெயர்விட கோர்த்தது. "வைதிகமே சைவம்" என்றதனால் அவைதிகம் வேதவிருத்தம் சைவமல்லவென்றும், சைவமேவைதிகமென்றதனுற் சைவத்தைப் பொழிந்தவேதவிதிகங்கள் வைதிகமெனவும்புலப்பட்டது. அங்ஙனமாக வேதவிருத்தாகமங்களும்வைரவவிருத்த வைதிகப்போலிகளாரவைணவம்முதலியனவும் வைதிகமாகாவெனவும் பொருள் கொடுத்தலால், வைதிகமே சைவமாக, வைதிகசைவம் என இருபெயர் தொடுத்தது பயனில்சொல்லும் கூறியகூற்றுமாயிற்று. இனி நான்காம் வாக்கியம். "சைவம வைதிகத்தில் அடங்கியும் அடங்காமலும் நிற்கும்" என்பது. பின்னும இந்நாயகர் "இவர் உள்ளபடிவேதவழிநின்று சிவோபாசனைசெய்யும் சிவனடியாராயிருப்பின யாம் வைதிகசைவர் என்று வெளிவரப் பின்னடையார் என்றும் இவருக்கு ஆகமம் வேம்பாகக்கசந்திருந்ததனால் உண்டாகத்தக்க "ஆகமசைவர்" என்னும பெயரையும் தாங்கவேண்டாம். யாம் சைவர் என்று வெளிவரக்கூடாதா?' என்றும்நாள்திரிகளை வினவியதும விஞ்ஞியிற்று. சைவம் வேதங்களில் அடங்கியும் அடங்காமலும நிற்குமாதலால் வேதங்களிற்கண்ட சிவோபாசனை செய்பவர் சைவர் எனப்பெயரிட்டுக்கொண்டு வெளிவந்தால், ஒருசமயம் ஒருவர் வேதத்திலடங்காச்சைவத்தைக் கொண்டவரோ என மயங்கி அவைதிகர் என ஒதுக்கிடநேருமாதலானும், வைதிகம் சைவமேயாதலானும், அவர் அவைதிகசங்கைக்கொக்காலும்இடங்கொடாது 'வைதிகர்' என்றே சொல்லிக்கொண்டது மிகவுசிதமாயிற்று. மேலும் ஆகமம் மேற்கண்டவாக்கியங்களால் வியாபகமாயிற்க அது பொதுவாமேயன்றிச் சிறப்பாகாது. இங்குதகரித்த காமிகாகமவசனத்தால் இவர் இட்டுக்கொண்ட புதுப்பெயராகிய வைதிகசைவப்பெயரும் அழிந்தது. இனி ஐந்தாவது வசனம் "வைதிகம் சைவத்திற்குழ்ந்தது" இது ஆகமங்களும் வேதங்களும் முக்கட்பிரானருளிய முதனூல் என நமது நாயகர் பிரசங்கித்ததற்கு விரோதமாகின்றது. மேல் 'முனிவரோ அற்றுயினும் சைவம் வேதப்பொருளோடு ஒற்றுமையாயிருத்தலால் வைதிகம் எனவும் வேதசாரமெனவும் கூறப்படும்' என்பது. இதனால் எக்காரணத்தாலாதல் வைதிகம் என்கிற பெயரும் வேதசாரம் என்கிற பெயரும் ஆகமங்களுக்குண்டாவதாகப் பிரஸ்தாபித்தும் இவ்வாகமம் வேதங்களை உபசங்காரத்தில் புகழ்ந்திருக்கிறதாகவே சொல்லவேண்டியிருத்தலால் அது நாயகர் மதத்துக்குமுற்றும்விரோதம். அன்றி ஆகமத்தில்ஒருவசனத்தில் இவ்வளவு வேதப்பிரஸ்தாபம இருக்க வேதங்களில் சிவாகமபிரஸ்தாபம் சிறிதும்காணுதிருக்கும் இதில் எது மூந்தியதென்பது பள்ளிப்பிள்ளைகளு மறிவார். இனி விவாதத்திற்காக இரண்டும் ஒரேகாலத்தில் பிறந்ததென்றாலும் ஆகமங்களில் பிரதிஷ்டாதிகளில்உபயோகப்படுத்தும 'ஸூக்த' முதலிய மந்திரங்களும் சங்கிதாமந்திரங்களும் வேதங்களினின்று அவாங்கி கொண்டு ஆகமங்களில் எடுக்கப்படுவதை மறுக்கவிவராலும் மற்றெவராலும்முடியாதே. நிற்க. சிவாகமம்வழிநூல்என்றதைப்பிரமாணஹீனம எனச்சொலலவெழுந்து வழுக்கம்போல திட்டினா. பிரமாணம்கேட்டாற்பிரமாணஞ்சொல்லவேண்டியது எமதுகடமையாதலின் அதைக்காட்டுவோம். வேதங்கள் முதனூல் என்பது "ப்ரமாணாந்தரநிரபேக்ஷதயா ப்ராமாண்யம்" என்று ஸ்ரீமத் ஹரதத்தாசாரியசுவாமிகள் சதுர்வேததாற்பரியசங்கிரகத்தில் எடுத்து ஓதினமையாலும் வேதங்கள் அபௌருஷேயங்கள் என சிவதாபாபாடியமியற்றியருளிய ஸ்ரீகண்டசிவாசாரியசுவாமிகள் 'ஶாஸ்த்ரயோநித்வாத்' என்னும் சூத்திரத்துரையில் பல பிரமாணங்களால் நாட்டினமையாலும் மற்றும் உள்ள பிரமாணங்களாலுமேயாம். வேதங்கள் உற்பத்தியானகாலத்தைக்குறிக்கும் வேதபுராண இதிகாசங்கள் எவையும் எங்கும் கூடவே ஆகமங்கள் தோன்றினவென உரையாததுபற்றியும் ஒருபொருள்கொண்ட இரண்டுமுதனூல் ஒரு முதல்வனால் அருளப்படவேண்டியது அவசியமன்றாதலாலும இவ்விரண்டிற்கும் தாரதம்மியம் பயன்வேற்றுமையிரண்டற்கும சொல்லவேண்டியதே. அங்ஙனம்

சொல்லவேண்டிவருமிடம் வேதப்பிரஸ்தாபம் நிறைந்து நிற்குமாகமங்களுள் வேதவாக்கியங்களை எடுத்துரைசெய்யப்படாவிடினும் சிவாகமப்பிரஸ்தாபம் சிறிதும் அமையப்பெறாத வேதங்களுக்குச் சிவாகமங்களை வழிநூலெனல் எவ்விதத்தும் குற்றமுறாது.. ஆதலாற்றான் வேதங்களை மட்டில் ஸ்வதப்பிரமாணமெனக்குறித்துப் பிறகு 'வெதெஷாவாதெ நாயாயிஷாவா விவாயடுகம்தெ ஞ்ஷா" என்று ஸ்ரீஹரதத்தாசாரியர் சிவாகமங்கள் வேதங்களுக்கு வழிநூல் என விளக்கியதறிக. மேலும் வேதங்களில் சிவாகமப் பிரஸ்தாபமேயில்லையெனக்கூறியசாஸ்திரிகளை விளித்து 'வேதங்களில் சிவாகமம் வேதவழிநூல் என்பதற்குப் பிரமாணம் கேட்டஅருமையை என்சொல்வோம்! இவர் சிவாகமங்களும் வேதங்களும் ஒரோகாலத்துதித்தனவாகக்கூறுகின்றார். அங்ஙனமாயின் வேதங்களுள் சிவாகமத்தின்பெயரேனுமில்லாது நிற்பதுபோல் ஆகமங்களிலு வேதங்களின் பெயரில்லாதிருக்கவேண்டுமே. அங்ஙனமில்லாது பிரதிஷ்டை அக்கினிகாரியம் கருஷணமுதலிய ஆகமக்கிரியைகளில் வேதமந்திரங்களை ஆகமங்கள் அடியெடுத்து விதிக்கின்றனவாகவேமுதல்வன் முன்னருளியது வேதமென்பதும் எவருக்குந்தோன்றும். அற்றேல் அம்மந்திரங்களும் ஆகமமந்திரங்களே எனவாதிப்பது உசிதமன்றே? ஆகமங்களில் எங்கும்மந்திரங்களைஎடுத்தோதாது அம்மந்திரங்களின் அடியெடுத்து அதுமட்டோடுநிறுத்திவிடுதலால் அவசியம்வேதங்களை ஆகமங்கள் அபேக்ஷிக்கவேண்டும். கிரியைசரியைகளில்வேதமந்திரங்களைஅவாவினும்மற்றவிடம அவாவாதுநிற்றலால் ஞானபோகங்களிலாவது அது ஸ்வதப்பிரமாணமாகாதோவெனின்? ஆகாது. "ஞானகாண்டத்தும் ஆகமங்கள் பிராசாதப்பிரணவமாதி மந்திரங்களையும் ஸம்ஹிதாமந்திரங்களையும் ஸ்ரீபஞ்சாக்ஷர மகாமந்திரத்தையும் வேதங்களிலுள்ளபடி கூறுதலால்" என ஸ்ரீகண்டமுனிவர் பாடியத்துள்ளே மூன்றுமதநியாயத்துள் வகுத்தாராதலின அங்கும் அவ்வவாநிலை நிலைபெறும்என்க. இனிக்கன்மகாண்டத்துள்வேதமும் சிவாகமமும்முத்திரைமுதலியவற்றிற்கென அவாவுகின்றன, ஆகமங்களும்வேதமந்திரங்களைப்பிரதிஷ்டாதிகளுக்கென அவாவுகின்றன. ஆதலால இரண்டும் ஒன்றையொன்றுபற்றும எனின், அதுபொருந்தாது. வேதங்களில் தமது அங்கமாய கற்பங்களிலும் தமது பிரம்மணங்களாயபுராணத்தும காணப்படாது எதும் அவாவப்படாமை முன்னரே தெரிவிக்கப்பட்டமையின் அவ்விஷயத்தை சாஸ்திரியாரும் முன் வற்புறுத்தினர் ஆகலின் என்க. நிற்க. மேல இவர் வேதநூல்வேதமும், சைவநூல் "சிவாகமும் ஆயினமையால், வேதவழிபாட்டை வைதிகமெனவும், சிவாகமவழிபாட்டைச் சைவம் எனவும்கொண்டு கூறுதற்குமாறாக வேதத்தையும்சிவாகமத்தையும் ஒன்றாகலந்து 'வைதிகசைவம்' எனறு நவீனவழக்கைத் தொடுத்தல்யாங்ஙனமெனின் என ஓர் பூர்வபக்ஷம்செய்து, வைதிகசைவமிலைத்தென்பதை முன்னர்க்கூறியிருக்கின்றோம். அதுநிற்க. ஈண்டுச்சில கூறுகின்றோம் 'வேதத்தில் ஒரு விஷயத்தையும் ஆகமத்தில் ஒருவிஷயத்தையும் சொலவதாயிருந்தால் அவ்விரண்டையும் ஒன்றுசேர்த்தல்கூடாது. வேதத்திற்கூறும் சிவத்தையேசிவாகமத்தும் கூறுதலால் வேதசிவாகமங்கள் இரண்டும் சிவவழிபாட்டினையே கூறவெழுந்த சைவநூல்களாயின. அதனால் அவ்விருநூல்களும் வைதிகசைவம் ஆகமசைவம்எனனும்பெயர் பெறும். வேதத்தின்வழிநின்றுசிவனை வழிபடுவதுவைதிகசைவமும், ஆகமத்தின்வழிநின்றுசிவனை வழிபடுவது ஆகமசைவமுமாம். இதனால் வழிபாட்டின்பேதமின்றி வழிபாட்டிற்குரியதெய்வபேதம் பெறப்பட்டதின்று. இவ்விருநூல்களன்றிப் புராணம ஒன்றுகேட்கப்படுகையால் அதில் பெறப்பட்டவாறுசெய்யும சிவவழிபாடுபௌராணிகசைவமாம். இனி இதனால் துணியத்தக்கவுண்மை பௌராணிகசைவமுயர்ந்ததா? வைதிகசைவம் உயர்ந்ததா? ஆகமசைவமுயர்ந்ததா? என்று தெளியத்தக்கதேயாம். புராணத்தினும் வேதமுயர்ந்தது வேதத்தினும் சிவாகமம் உயர்ந்தது என்றமையால் ஆகமசைவமே சர்வோத்தமமென ஒப்பமுடிந்ததாயிற்று. "இவ்வாகமசைவத்தையே சித்தாந்தசைவம் எனக்கூறுவர்பெரியோர்" என்று ஓர்முடிபுரையும் உரைத்து இதுவரைத் தாம் ஞானசீலலோசனியில் பலவாறு எழுதிவந்த சித்தாந்தக்கொள்கைகளையெல்லாம் புரட்டித்தமதுள்ளத்தமைந்தகேவலதாந்திரிகமதச்சித்தாந்தத்தை வெளியிட்டுக்கொண்டார். இவ்வாக்கியங்களை முறையே விரித்து அதனால்புலப்படும்இவர்கருத்தையும், அது இவருடையமுன்சித்தாந்தங்களுடன் முரணுவதையும்குறிப்பாம். இவர் மேற்கண்ட பூர்வபக்ஷத்தில் நவீனவழக்குத்தொடுத்தல் யாங்ஙனம்? என்றதனால் "வைதிகசைவம் என்பது நவீனவழக்கெனத்தானே ஒப்பினர். இங்கு இவ்விதம் ஒப்பிய இவர் முன் வைதிகசைவவழக்குப் பழயதென ஸ்தாபிக்கவேண்டிச்சைவாசிரியர் அல்லாத ஓர் புலவர்செய்யுளைக் காட்டிக்கஷ்டப்பட்டதென்னிற்று? அந்தோ! அம்பட்டோ! தாம் வெகுவாய் வைதிகசைவர் என்றதும இவருக்கும ஞானமிர்தத்தாருக்கும் உற்றதோழரான ஓர் வைதிகசைவர் வைதிகசைவர் ஆகிய இருவரும் இதுபழயவழக்கேயென

Koviloor Digital Library

த்தாபிக்கமுயன்றதும்பயனற்றதாயிற்றே. இருக்க. இது பூர்வபக்ஷியின் அநுவாதமேயெனில், மிகச்சந்தோஷம்! தாமே செய்துகொண்ட கிருத்வாசித்தா பூர்வபக்ஷத்தில இவருக்குப்பாத்தியம் இல்லாது எவ்விதத்தும் ஒழியாது. மேல் சமாதானத்தில் வேதமும் சிவாகமமும் சிவவழிபாட்டையே கூறும் சைவநூல் என்றார். அந்தோ! இவ்வசனம் எழுதுங்கால் முன்னர் ஞானாமிர்தயில் "வேதம் உலகினர்க்குரியது. சிவாகமம் சத்திநிபாதர்க்குரியது. வேதம் "பலதெய்வங்களைக் கூறுவது. சிவாகமம் சிவனைமாத்திரங்கூறுவது. வேதம் சுவர்க்கத்தையளிப்பது. சிவாகமம் "சாலோகாதிகளை அளிப்பது. வேதம் அக்கினிகாரியத்தை "விளக்கியது. சிவாகமம் சிவார்ச்சனையை விளக்கியது. "வேதம் பசுநூல். சிவாகமம் பதிநூல். வேதத்துக்குப்பிர "வர்த்தகர் விஷ்ணு, பிரமன், வியாதன் முதலினோர்.; "சிவாகமத்துக்குப்பிரவர்த்தகர் ஆறு சதாசிவா அஷ்ட "வித்தியேசுரர்முதலினோர். வேதம் மயக்கஞானத்தைக் "கொடுப்பது. சிவாகமம் அதனைத்தவிர்த்துத்தெளிக்ஞா "னத்தைப்பயக்குவது" என்பதாகஎழுதிவைத்ததைமறந்தார்போலும். இங்கு வேதமும் சிவாகமமும் ஒருமுதல்வன் அருளிய முதநூல் எனறும் சிவவழிபாட்டைக்கூறும் சைவநூல் என்றும் கூறும் இவர் வேறு சோமசுந்தரநாயகரோ? இவர் சித்தாந்தவழகு மிக விபக்கத்தக்கது. வேதவழிநின்று வழிபடுவது வைதிகசைவம் என்கிறார். ஆயின் இவர்தாம் முன்னர் வைதிகசைவர் என்றமையானும் ஞானாமிர்தத்தாரும் அப்பத்திரிகைச்சிதக்காருட்பலரும் வைதிகசைவர் எனப்பெயரிட்டுக்கொண்டவராகவே, இவர் எல்லாம் வேதங்களிற் சொல்லியபடியாகாதிகிரியைகளை விதிவழுவாதநடாத்திச் சிவவழிபாடுசெய்பவரேயன்றி ஆகமவழிநின்றுதீக்ஷைமுதலிய சிவகர்மங்களை அநுஷ்டித்திலர்போலும்! ஆகலாற்றான ஆகமசைவம் ஸர்வோத்தமம் என்று முடிபுரைகூறினார்போலும்! முன் ஒரு வைதிகசைவச்சொற்குப்பிரமாணஞ் சொல்லவேண்டிப்பட்ட போதாதென்றெண்ணி ஆகமசைவம் பௌராணிகசைவம் என மற்றிரண்டுசொற்களையும் சேர்த்துக்கொண்டு வெளிவந்தகோலம் மிகவும் சந்தோஷிக்கத்தக்கதே. இதுவுமிருக்க. 'பஞ்சபாண்டவர்களை அறிவீரா? அவர் கட்டிற்கால்களைப்போல மூவர்' என்றவாறு இவா வேதாகமங்கள் சமானமெனபதற்குச் சில பிரமாணங்களைக்கூறவும தமக்கு வைதிகசைவத்தன்மையை ஸ்தாபித்துக்கொள்ளவும் வெளிவந்து இறுதியில் ஆகமசையம் ஸர்வோத்தமம் என்று முடித்து அதையே சித்தாந்தசைவமெனக்கொண்டு தாந்திரிகராகிவிட்ட பரிதாபம் எமக்கடங்கவில்லை. இவரை நம்பி வைதிகசைவப் பெயரைவகித்து வெளிவந்தவர்க்கும் இனிக்கதியென்ன? வைதிகசைவத்திலும் ஆகமசைவமே சித்தாந்தமும் உயர்ந்ததுமாகவே அதைக்கைக்கொள்ளாதவர் இவர் மதப்படிப் போலிச்சைவரன்றோ? இவரை இவ்விதவாதியார் எனக் கண்டே வெகுகாலத்துக்குமுன் வேதப்புறம்பான தந்திரமதத்தவர் என ஞானாமிர்தத்தார் ஒழித்திட்டார். பிறகு வைதிகசைவவிவாதத்தில் தாமும்அவ்வைதிகசைவர் என்னும்பெயரைச்சுமந்த உவமைகொண்டு தமது பத்திரிகையில் ஏற்றினர். இனி அவருங்கைவிட்டு, வைதிகரும் இவரையணுகவொட்டாதடிக்க, இவர் முன்னர் வைதிகசைவர், இன்றுஆகமசைவர்,நாளை எச்சைவராவரோ! இவ் அவாந்திரசைவர் அவாந்தரத்தே நிற்பார்போலும்! இங்கிவர் புதிதாய்க்கண்ட வைதிகசைவ ஆகமசைவ பௌராணிகசைவங்களெனப்படும் மதங்கட்கு முதனூல் எது? ஆசிரியர் எவர்? ஒன்றுக்கொன்று வேற்றுமைஎது? இவற்றுள் சிறந்தது இஃதெனத்துணியக்காரணம்யாது?" என்பதாதிவினவியதற்குத்தோன்றியபடி எழுதநேரிடவும் சாஸ்திரவரம்புகடக்கவும் நேரிட்டது. இதறியாது 'வேதாகமங்களிரண்டும் சாஸ்திரியாரைக் கைவிட்டனவென்றும் அவர் சாஸ்திரவரை கடந்தார் என்றும் வீணில் நாயகர் தூற்றியதறிக. மேல் இத்தாந்திரிகர் வைதிகத்தில் சைவமடங்காது எனப்பிரசங்கித்தவிடத்தே "வைதிகரைச்சைவர் எனல் கூடாதென்றும் வைதிகர் சைவரேயானாலும் சைவர் எல்லோரும் வைதிகர் ஆகார் என்றும் வேதவிதியை விலக்கிநிற்கும் தற்காலப்போலிச்சைவரையே வீணில் புலால்புசிபாதவனைச்சைவன் எனப்பாமரர்வழங்குவது போல் வழங்குவது உலகவியல் எனவும் கூறினும். ஆதலின் பிறகு இவர் சாஸ்திரிகள்மேல் ஏற்றும் குற்றம் குற்றமாகாது. மேலும் இவர்கூறியவாறு அச்சொல் எழுதியது சாஸ்திரியாருமன்று. மேற்கூறிப்போந்த நியாயங்களால் இவரது விவாதம் இத்தன்மைத்தாயதெனப் பண்டிதர்தாமேயறிந்திடுவாராகவே இவர்வாதம்பண்டிதர் அவையின்கண்மணம்பெறுமோ அல்லதுசாஸ்திரியார்வாதம் மணம் பெறுமோ? என்றதைபண்டிதரேயறிவார். இவர்பலபண்டிதர் நிறைந்த சபைகளில் பலராஜாங்கங்களில் சென்று பண்டிதர்வரையில்தோடாவாங்கின வித்துவசிகாமணியாகவே மற்றவரைப்பரிகசிக்கின்றார்போலும்.

ஐயா! பிறகு இவர்"எமதுவிவாதம் எல்லாம் யாம்வைதிகசைவர்என்பதைப்பற்றியேயாதலால்எம்மைவேதாந்திகர்என்றுகூறியது"என்றுதொடங்கித்தமதுகுலதனமான தூஷணாஸ்திரவம்பறாத்தூணியில்கையைவைத்தார்.இம்மாய

Koviloor Digital Library

வாதிஇதற்குஇருபதுவரிகளுக்குமுன்னர்வைதிகசைவம்வே றுவேதாந்தமடமெனக்கூறிச்சமசோஷத்துடனேயாம்வைதிக சைவம் என்றுமுன்பின்முரணுமாறுகூறுகின்றார். அம்மம்ம! இவரது சித்தாந்தவறிவேயறிவு. முன்னர்வேதவழியினாலு சிவனை வழிபடுதலன்றோ வைதிகசைவம என்றார். இவர் வேதவழி சிவனை வழிபடாதவரும் அவ்வேதவழி சிவனை வழிபட அனதிகாரியும அவ்வேதமனைமுடிபுக்குக்கூடா தென வாழ்க்கும் கேவலதாந்திரிகரும ஆகவே இவர் வைதிகசைவம நில்லெபறுவது மலடிமகனபிறக்கும சுபதினத் தேயென்க. மேல் இவர் தொடங்கியபடி பததுவரிகள்திட் டுகொரங்கிரப்பிததிட்டுக்காப்பிட்டுமுடித்தார். மேலும எழுதுவாராம்! முன்பினுமிலாசிக்காது எதேனும் எழுதுவ பவைக்கம்வணடிபசமபதிலகிலமேலாசனிபபத்திராதிபர் இவ்விஷபத்தை வாங்கிப்பதிப்பிப்பார்போலும. வருமாம. வரவரப்பார்ப்போம. சுபம.

ஒரபத்திரிகாபிமானி.

அந்துவிதவிசாரம்.

தொடர்பு.

ஐய, இங்ஙனமிருக்க இக்காலவித்துவான் ஒருவர் "அத்துவித"ச்சொற்கு ஒன்றுமல்ல, இரண்டுமல்ல, ஒன்றுமிரண்டுமல்ல எனப்பொருள் உரைத்து அதனுல் அத்துவிதச்சொற்பொருளை முற்றிலும் வெளியிட்டதாக இறுமாந்தார். இம்மந்தர் மற்மபக்கம் அத்துவிதப்பொருளையும் மயக்கிய விந்தையை மற்றவர்க்குக் காட்டுவாம். யாம் இந்நூலின்கண் வரைந்து விடுத்த வடவிபற்பெருக்கத்தால் அத்துவிதச்சொல்லின்கணமைந்த "ந" காரத்திற்பாய அகரத்துக்குள்ள பொருள் இன்மையேயன்றி, அன்மை செம்பொருள் முதல் குறிப்புப்பொருள் ஈறாக எப்பொருளிலும் அடங்காதுபற்றியும், அது ஆரோபப்பொருளாகாமை பற்றியும், அன்மையட்டில் பொருள் எனத்தாபித்தல் பிரமாணமற்று முயற்கோடாயமைய, அதனுடன் "ஒன்றும், இரண்டும், ஒன்றுமிரண்டும்" என அடைசேர்த்துப் பகர்ந்த புலவர் இலக்கணப் பயிற்சி வியப்பெய்தற்பாலதே. இனி அ-காரத்துக் கன்மைப்பொருள் எனத்தங்கோஷ்டியிலாவது, தமது குழந்தையைத்தாம் ராஜாவென விளித்து மகிழ்வதுபோல் (இவனுக்கு ராஜ்யம் உண்டா? இவனைச் சேவிப்பவர் எவரேனும் உண்டா? ஏதுமில்லை இருந்துமே) மகிழ்ந்திடட்டும். துவிதம் என்னும் பதத்திற்கு 'ஒன்றும்' என்றும, 'இரண்டும்' என்றும், 'ஒன்றுமிரண்டும்' என்னும் பொருளுரைத்தவிவர் எந்நூலாதாரம் கொண்டார்? அந்தோ! "குடம" என்னும் சொல்லுக்கு" படமும், குடமும் படமுங்குடமும்" எனப்பொருளுரைத்தாற்போல இது சாலவியர் அருமை பாராட்டத்தக்கது. "துவிதம்" என்னுஞ்சொல் 'இரண்டு' எனும் எண்ணைக்குறித்து எண்ணைத்திடம் நிலைபெற்றதெனத்தக்க விலக்கணவழிவிரித்தோமாதலின், அங்கு 'இரண்டு' என்னும் பொருளைஉரித்து.மற்றது பெண்பாலர் உரைக்கும் நல்லுரையேயாம் என்க. ஐயன்மீர்! 'ஒன்றுமல்ல இரண்டுமல்ல' ஒன்றுமிரண்டுமல்லவெனப் பொருளுரைத்தல் இலக்கண வழக்கிறைந்த தொன்றாயினும் ஆகுக. எமது சித்தாந்தத்திற்கும் இலக்கணத்திற்கும் வெகுதூரம். இலக்கியத்துக் கேர்ப பொருள் கூறினும்என்று வழுவழுத்த விடையளிப்பாயெல் மிகநன்று. இங்கு மூலமாகிய அத்துவிதச்சொல்லின்கண்ணமைந்த 'அ' என்னும் 'துவிதம்' என்னும் இருசொற்களுக்கும் பொருட்கோடியில் அகப்படாத 'உம்' என்னும் இடைச்சொல்லையும் மூன்று என்னும் பொருளையும் எச்சொற்பொருளாக்குவார்? அஃது ஒரு சொற்பொருளுமல்ல. யாம கண்ட பொருளை எனில் மிகநன்று. இவர் கண்டநற்பொருள் இவர் பரமானந்த சிடர்க்குபதேசிக்கவே யோக்கியம், வேறுவழியில் வெளியிட்டால் அது இயலிசையாதிபுலிந்தார் நிறைந்தசபையில் இவரைப்புறங்காட்டிஓடச்செய்யாதொழியாது. மற்று ஒருசொற்குப்பொருள் உரைத்திடவேண்டின் ஓரிலக்கண நூலாதாரம் பற்றியாதல், ஓர் நிகண்டு வைத்தழுவியாதல், ஓர்ஆப்தவசனத்தைப்பின் பற்றியாதல் பொருளுரைத்தல் நூலறிவுநிறைந்த நல்லோரியல். அங்ஙனம் யாம் இபற்றிறமைபூண்டு இறைவன்தொண்டருட்சிறந்த வாசிரியர் பதஞ்சலியாராதி பரமாப்த சிகாமணிகள் முதுமொழிகளை மேற்கோளாகக்காட்டி இன்மைப்பொருளை அகரத்து நாட்டினும், பிறர் கூறும் அன்மைப்பொருளை அஸங்கதம் எனவோட்டினும், இவற்றை மறுத்து வேறு பொருளாக்க வல்லாரிவராயின் யாம் காட்டியதுபோல் ஏதேனும் பிரமாணம் கூறித்தமது கொள்கையை நாட்டிக்கொள்ளாதொழிந்தது அவரது இலக்கணநூற் பயிற்சியின்மையை விளக்காதொழியுமோ? இதற்கு அவரேதுசெய்வார். எவ்விலக்கணநூற்களிலாவது இவர்கொண்டபொருட்டாய் அச்சொல்லிலக்கணம் கிடைத்தாலல்லவோ சொல்வார். கிடைக்காத குற்றத்தால் இலக்கண நூல் பிரமாணம் ஏதுங்கூறாது தமது பரமானந்த சிடர் தம்மை அவமதிக்காவழி தமது புத்திபுமிறகுஞ் சென்றவாறு சித்தாந்தம்காட்டி மகிழ்ந்தார். எவ்விதமாவது பிழைக்கட்டும். மேல்விஷயத்தைப்பற்றிச் சொல்வாம்.

இவ்வத்துவிதச்சொல்லின் கண்ணமைந்த வேற்றுமைத்தொகை "தற்புருஷசமாஸம்" என வடநூல் வழங்கப்பெறறது. அத்தற்புருஷம் எல்லாவற்றிற்கும் பொதுவியல் 'உத்தரபதப்பொருள் கொண்டுமுடிதல்' இது எல்லாத்தற்புருட சமாஸத்தும் விளங்கும். அப்பொதுவியலே ஈண்டமைக்கவேண்டி வையாகரண சித்தாந்தலகுமஞ்ஜுஷை நூலியற்றிய நாகேசபண்டிதர்பல மேற்கோள்கள் கொண்டு ஆரோபப்பொருளைத் தன்னுடனிகழ்ந்த சொற்பொருட்டன்மையின்கண் குறித்து தமக்கெனத்தனிப் பொருள்கொள்ளாது என முடித்திட்டார். ஆகவேவடவிலக்கணநூலார் எவரும் அந்த பொருள்கொண்டு முடிபுரை கூறிநிற்க, அப்பொருள்களில் எவ்வழியும் அடங்காது ஓர் பொருளுரைத்தல் சித்தாந்திகள் ஹடவாதமேயாம் என நாட்டப்பட்டதறிக. இனிப்பொருட் பொருத்தமின்மையைக் கூறிடுவாம்.

அத்துவிதச் சொல்லுக்கிட்ட அபேத்திய

"க வ ச ம்"

என்னும் "அத்துவிதவிசாரத்தில்" சொல்லிலக்கணப்பகுதி முற்றிற்று.

வரும்.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 16

[illegible]

[illegible]

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியபத்திரிகையை ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிகவாரணர்களாகிய த ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காஸம்வத்ஸரம்.
ஆவாரவிஉஅ-உ
முகவையம்பதி.

(ஒப்பம்) த்ங்கள்,
[illegible]

Koviloor Digital Library

ப்ரஹ்மவித்யா.

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்—நந்தன ௵ புரட்டாசி ௴ 22உ

குருசிஷ்யமாறுபாடு.

தொடர்பு.

ஐயா! ஆகமங்களில் காசிபாதியோர் ஐவர் பரமசிவத்தின் சத்யோஜாதம்முதலிய ஐந்துமுகங்களில் தீக்ஷிக்கப்பெற்றவர் எனக்குறிக்கப்படுதல் அசத்தியமோவெனில்? அசத்தியமல்ல. எங்ஙனமெனில், கூறுதும்: சிவத்துவிஜர் எனவும் ஆதிசைவர் எனவும் தனித்த ஓர்ஜாதியில்லை. மற்று, பரம்பரையில் சிவாகமவிகிததீக்ஷைபெற்றவர் சிவத்துவிஜர் என வழங்கப்படுகிறார்கள். சிவத்துவிஜர்க்குச்சிருட்டிவேறில்லை. அதற்கு அவர் கோத்திரசூத்திரங்களே சாட்சியெனக்காட்டினோம். பிரமாமுதலியவர் சிவாவேசமின்றிச்சிருஷ்டிமுதலியதொழில்களை நடாத்தவல்லாரல்லர். அவரவரை ஆட்கொண்டு அவ்வச்சிருஷ்டிகளை நடாத்துபவன் அப்பரமபதியேயன்றி வேறல்ல. ஆயின் சிருஷ்டி என்பதேல் சிவசிருஷ்டியே. இனிச்சிவசிருஷ்டி வேறுகுப்பக்ஷத்தில்சிவனருளியசிருஷ்டியைக்கூறுமிடம்,, தனதுகுமாரர்களான ருத்திரருடன் சிருஷ்டியினின்றொழிந்துநின்றார்'' என்று கூர்மபுராணத்தும் "அதுதொடங்கி அத்தேவன் சுபமானபிரஜைகளைச்சிருஷ்டிக்கின்றானில்லை'' என்று வாயுசங்கிதையிலும் அதேவசனம் ஆதித்தியபுராணத்திலுங்காணப்படுதலால் சிவசிருஷ்டி சிவகணங்களுக்கேயன்றி வேறெவர்க்குமில்லையென்று ஏற்படுகின்றது. மேல் "முகத்தினின்றும்பிராமணர்பிறந்தார், பிரமனும்பிறந்தான். இந்திரன், விஷ்ணு, க்ஷத்திரியர் இவர் தோளிற்பிறந்தார்.

Koviloor Digital Library

[illegible]

வைசியர் துடையிலும், சூத்திரர் பாதத்திலும் பிறகும் ஏந்தியபிரானிடம் பிறந்தார்'' என்பதாதி லைங்கம்முதலிய வசனங்களால் பெறப்பட்ட சிருஷ்டியே சிவத்துவிஜசிருஷ்டி எனில், சிவத்துவிஜனைப்போல் சிவக்ஷத்திரியாதிகளும் ஏற்படுவாரன்றோ? அவ்விதம் எங்கும் காணேமே. ஆயின் எல்லாச்சிருஷ்டியும் சிவசிருஷ்டியே எனக்கோடலே உண்மை. ஆயின் ஆகமவசனங்கள் அப்பிரமாணமோ வெனின்? சிவசிவ! சிவவசனங்களைப்பிரபலசிவவசனமாய வேதவிரோதம்வராவழி அப்பிரமாணம் எனவுரைப்பான் எந்தச்சிவசாஸ்திர நிந்தகன். பின்னதன் பொருட்டானேது எனில்? கோத்திரம்சூத்திரம்கோசரங்கட்குவிரோதமின்றியாம்கூறும் பொருளைக்கேட்டருளவேண்டும். எச்சொற்றொடரைப்பொருள்படுத்த எவர்முயலினும் அதற்கு மற்ற அனந்தசமப்பிரதானவாக்கியங்களுக்கும் முரணுவழிப்பொருள் படுத்தவேண்டும் என்பது அறிஞர்வழக்கு. ஆயின் இங்கு கௌணப்பொருளாய்ப்பொருள்படுத்தும் வழியைக்காட்டுவாம். சைவதந்திரங்களில் தீக்ஷைசெய்யுமிடம் சிடன் கண்ணை பட்டால்கட்டி மறைத்துக் கையில் சிறிது புஷ்பங்களைக்கொடுத்து, எதிரில் ஸ்தாபிக்கப்பட்ட பஞ்சப்பிரம்மகலசத்தின்மேல் போடும்படிசெய்து அதுஎம்முகத்தில் விழுந்ததோ அம்முகத்துற்பவித்தவனாக அவனை உபசரித்தழைக்கும்வழக்கம் உளது. ஆயின் முற்காலத்தில் நேரில் பரமேசுரனிடமோமற்றெங்கோ சிவதீக்ஷைபெற்றவர் ஐவர் ஐந்துமுகங்களில் பிறந்தவர் எனவுபசரிக்கப்பட்டார். இங்ஙனமுபசாரப்பொருள் கூறிடின் கோத்திரசூத்திராதிகளுக்கெவ்விதவிரோதமும் இல்லை. இவர் ஆதிசைவர் என்பது ஆதிகாலத்தில்சைவதீக்ஷைபெற்றமையான்மாத்திரமெனவறிக. இவர் ஆதிசைவதைமாத்திரையில் இவர் குருவாவதெப்படி? இனி, புராணங்களில்அனேகரைக்குருக்கள்என வர்ணிக்கப்பட்டவர் உண்டேஎனின்? அக்காலத்தவர்உண்மைச்சைவாசாரம்பெற்றவராதலின், அவரைக்குருவெனவழங்கினர் ஆன்றோர் என்க. இக்காலத்தவர் எவ்விஷயத்திலும் சைவனுமாதல் வைதிகத்தால் விதிக்கப்பட்ட சம்ஸ்காரங்களைச்செய்துகொள்ளாதுதேவாலயங்களில் செய்யும்பூஜையைச்செய்வதால்மட்டில் குருவெனக்கோடல் உசிதமன்று. பாருங்கள்! இவர்களைக்குருவென ஸ்தாபித்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

துக்கொள்ளவும் சிஷ்யானுஸரணம் செய்யவும்வேண்டி வருகின்றது. தமது குருத்துவம்வந்தவழியறியாதும் மூலப்பிரமாணமில்லாதும் காலங்கழித்தால் குருசிஷ்யமாறுபாடுவராதோ? இவரி மகாசைவர் என்பதும் ஆதிசைவசிடர் பெயரல்ல. மற்று, பரம்பரையில் சிவசம்ஸ்காரப்பெறுது ஒருவர் பெறின் அவரை மகாசைவர் என்பது. அதிலும்வந்த குறைகளைக்கூறிடுவாம்.

இன்னும்வரும்.

சம்ஸகிருதபாஷை.

தொடர்ப்பு.

வைத்தியம்.

220-ம் பக்கத்தொடர்பு

இவ்வைத்தியத்தில் 'சரகம்' 'ராஜமிருகாங்கம' முதலிய நூல்கள் பதஞ்சலிமாமுனிவர் கூற்று எனப் பலர்வழங்கி வருகிறுர்கள். ஆயுள்வேதசங்கிதையைப்போல் சாகசங்கிதையும் அனாதியென்பார் சிறுபான்மையோர். அங்ஙனமன்று. ஆசிரியர் பதஞ்சலிமாமுனிவரோ அவற்றை இயற்றினர் என்பார்வேறுசிலர். இச்சங்கிதையைச்செய்தவர் பதஞ்சலிமாமுனிவரோ. அவர்யோகமுதலிய நூல்களைச்செய்தவரல்ல; மற்று, பிரகதாரண்ணிய உபநிடதத்தில்பெயர்பெற்ற ஆதிகாரிகபதஞ்சலியே. அங்ஙனமில்லாவிடம் 'பாபத்தினிமித்தம் சரகாசார்யம்'' என்னும்பதம் வேதங்களில் வர ந்யாயமேதுமில்லை. வேதங்களில் ஆதிகாரிகர் அல்லாத மற்றவர்பெயர்வராது. ஆயின் சரகமருளிய பதஞ்சலியார் இவர் ஆகார் என்பார்வேறுசாரார். இச்சரகசங்கிதை சிகிற்சையில் வெகுவாக விரிந்தது. ஆதலாற்றுன் ஆன்றோர் 'சாரீரத்தில் சுச்சுருதம். ஸூத்திரஸ்தானத்தில் வாகடம் நிதானத்தில் மாதவீயம், சிகிற்சையில் சாகம் சிறந்தது.'' என்றுசொற்றூர். ஆதனுற்றுன் வேதத்தும் "பாபியானவன் சரகாசார்யனையடைவாயாக'' என்ற வசனமுள்ளது. பிறகு இச்சரகசங்கிதைக்குச்சார்பாய்த்தோன்றிய நூல்கள் அளவிலடங்காநிலையுள்ளன. அவைகளின்காலம் இத்துணை என அறியக்கூடவில்லை. அப்புஸ்தகவிஷயங்களையும் அதன்கர்த்தாக்களின் உத்தேசங்களையும் பின்விரிப்பாம்.

வரும்.

வஜ்ரஸூசிகா:-

[illegible]

கடிதங்கள்

கடிதகர்த்தர்களபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச்சாரா மாட்டா.

பிராமணர் உட்பிரிவைத் துலைத்தல்.

ஐய! பிராமணத்தன்மை என்பது யாதெனில்; வேட்டல், வேட்டுவித்தல், ஓதுதல், ஓதுவித்தல், கொடுத்தல், வாங்கல் ஆகிய இவ்வறுதொழில்களே. இது எல்லாவந்தணர்க்கும் பொதுவியல்; இவ்விலக்கணமே எக்குற்றமும் தன்னிடமடையப் பெருத நல்லியல். இனி இக்காலத்தவர் கொண்டாடும் உள்வேற்றுமைகளும் வைதிகங்களாயின், இவ்வியலில் அதற்கென ஓர் அடைசேர்க்கவேண்டும். ஓர் இயலறிந்தவன் அதன் இலக்கியத்தையறிவதுபோல் இவ்வறுதொழில் இயலை அறிந்தவன் அவ்வறுதொழிலாளனையும் அறிவான் என்பதில் ஆக்ஷேபம் இல்லை. பொதுவும், சிறப்பும் அமைந்தபொருட்களுக்குப் பொதுச்சிறப்பிலக்கணங்களும் இன்றியமையாவனவாகவே இவ் வுள்வேற்றுமைகளும் வைதிகங்களாயின் அவற்றிற்கு ஓர் சிறப்பியல் வேண்டுமே? அங்ஙனமுண்டா? அஃதின்மையால்இவ் வுள்வேற்றுமை கற்பிதமென்றுரைக்கத்தடை ஏது? இதற்கு ஒரு இலக்கணம் எழுதவேண்டுமானல் அதுவும் கற்பிதமாகவல்லவோ இருக்கவேண்டும். புதியவிலக்கணம் கற்பித்தல் நியாயமாமா? அறுதொழிலாளர் என்று அந்தணர் பொதுவியல் கூறியதுபோல் வடமனுக்கு இலக்கணமிது, பிரகச்சரணத்தாருக்கு இலக்கணம் இது என்பதாதி எங்கேனும் உண்டா? இங்குவியக்கத்தக்கது வேறொன்று உளது. இவ்வுள்வேற்றுமையே அவைதிகமென்று ஒழித்திடுங்கால், தாம்கொண்ட வேற்றுமையே மிகச்சிறந்ததென்கிறர். மற்றவர் கொண்டஅவ்வேற்றுமை முற்றிலும் அயோக்கியம் என்கிறர். இது பெரிய ஆச்சரியம்! அந்தோ! ஒரே வேதசாஸ்திரங்களை அனுசரிக்கும் அந்தணருள் இவ்வேற்றுமை ஏதோ அகாரணமாய்த் தோன்றியதென்றால், அதைக்கொண்டு ஒருவரை ஒருவர் தூஷிப்பதில் இவருக்கு வெட்கமேதுமில்லையே. இவர் புருடசூக்தமாயினுமறிந்திருந்தால், அந்தோ! இப்பயித்தியம் இவரிடம் அணுகாது. இவ்விதவுள்வேற்றுமை முற்றிலும் ஒப்பத்தக்கதல்லவென்றே சொல்வார். புருடசூக்தத்தில் 'இவர் முகத்தில் பிராமணர் பிறந்தார், புயங்களில் க்ஷத்திரியர் பிறந்தார், தொடைகளில் வைசியர் பிறந்தார், காலில் சூத்திரர் பிறந்தார்'

Koviloor Digital Library

[illegible]

திருக்கிறதேயன்றி, வேறுவிதம் பிரமத்திடமிருந்தப்பிராமணர்க்கும் உற்பத்திகூறப்படவில்லை. ஆகலாற்றான், மனுவும் 'உலகம் பருகவேண்டி முகம், தோள், தொடை, பாதம் இவ்வுறுப்புக்களிலின்று பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்களைச்சிருஷ்டித்தார்' என ஒருவித பிராமணஜாதியே உண்டாயிற்றென்றார்; இவ்விஷயத்தில் வேதம், தருமசாஸ்திரம் இரண்டும் ஒருபொருட்டாயது. ஆயின் உள்வேற்றுமை கற்பிதமென்றாயிற்று. மேலும் ஓர் அந்தணர் அச்சாதியை முற்றிலும் பெறுதற்குச்சாதகருமம்முதலிய பலகருமங்கள் விதிக்கப்பட்டன. இக்கருமங்களை விதித்த போதாயனர் ஆசுவலாயனராதி கற்பசூத்திரக்காரர்கள் இவ்வுள்வேற்றுமைகளைப்பற்றி எவ்விதசம்ஸ்காரங்களையும் விதித்திலர். ஜாதிபேதம் உண்மையாயினல் அச்சாதிபேதத்தைப்பற்றி வடமனுக்கு இவ்விதம் சாதகர்மமென்றும் சோழியனுக்கு இவ்வாறென்றும் அவ்வச்சாதிகளுக்கேற்ப ஆன்றோர்களே ஓர் விவஸ்தை செய்திருப்பார்களன்றோ? ஆயின் ஆன்றோர் காணாத இவ்வற்புதவழியில் யாம்பிடிவாதப்பற்றுவைத்துநிற்றல்எமது ஆசாரங்களை முற்றிலும் தொலைக்கவேயென அறிஞராறிவார். நம்மவருள், இவ்வுள்வேற்றுமைச்சண்டைநடக்கும் உண்மையறிந்த சிலோர்தாமும் சமயத்தில் பிராமணரென முன்வந்து தம்மவருள்தாமே தம்பட்டத்தைநிலைபெறச்செய்து அதுகொண்டே திருப்தியடைகின்றார்கள். அவர்களுடைய குயுக்திகளைச்சிறிது மறுப்பாம். இப் பார்ப்பார்முதலிய ஜாதிகள் உலகசிருஷ்டிமுதல் உள்ளவர்களேயன்றி இடையிற்றோன்றியவர்களல்ல. சங்கரப்பகுதிகளைநோக்கி இந் நால்வருணத்தோர் பெருமையும், இவர்களுக்குள் அமைந்த ஏற்றத்தாழ்வும் ஒருவரை நிர்ப்பந்தித்து அவர் கொடுக்கப்பெற்றுக் கொண்டதல்ல; இயற்கையிலுள்ளதே. அக்காலத்தும் வசிஷ்டர், வாமதேவர்முதலிய பல பிரமவிருடிகள் இருந்தார். அவர்கள் இராச்சியாதிபதிகளல்ல, புரோகிதர்களும், போகிகளுமே. அவர்களுக்குக்கிடைத்த மகிமையெல்லாம் மற்றவரைக் கட்டாயப்படுத்திப் பெற்றதல்ல; மற்றவர் கொடுத்தாரென்பதற்குப்பிரமாணம் சிறிதுங்கிடைக்காது. ஆயின், அது அவரியல்பாயமைந்ததென்பதில் தடையேது. அக்காலத்தரசர்கள் இவருக்குப்பயந்து இவருக்குச் சில பெருமையையளித்திட்டாரெனின், அதுவும் பொருந்தாது. சர்வாதிகாரம் பெற்ற அரசன் யாசகஸ்தராயஇவரிடம் பயப்படுவதுஉசிதமோ. முற்காலத்தரசர்களெவரும் அந்தணர்களிடத்து அதிகவிசுவாசம் வைத்திருந்தவர்களேயன்றி வேறுப்பட்டிருந்தவரல்ல. இக்காலத்தில் அவ்வித அந்தணரில்லாமையால் அவரை நாம் மதிக்கவேண்டியதில்லையெனின்? அது பொருந்தாது. இக்காலத்தும் வேதாத்தியயனஞ்செய்து சற்கர்மாநுஷ்டான சதாசாரசம்பத்துகளுடன்கூடிய ஆன்றோர் அநேகரிருக்கிறார்கள். யாகம் முதலிய பெ

[illegible]

ரியகிரியைகள் இக்காலம் நடக்காவிடினும் இன்றியமையாத சிலகிரியைகள் இன்னும் நடந்துவருகின்றன. இக்காலத்தோ அநேக யாகாதிகிரியைகளில் அந்தணர் உதாசினரானதுநற்பொருள்கிடைக்காதகுற்றத்தாற்றான். இடம்பொருள் ஏவல் கிடைக்கின் வேள்விமுதலியநற்கிரியைகளைவிடார். ஓ சந்தேகிகளே! வீண்பிடிவாதத்தை இனி விட்டொழியுங்கள். புண்ணியபுருஷர்களைப் பின்பற்றுங்கள். அந்தணர்செய்யும் நற்கிரியைகளாற்றான் உலகத்தில் நன்மழைபெய்வதறியுங்கள். இக்காலம் மழையின்மைக்குக்காரணமும் ஆசாரியர் அந்தணர் இவர்களை அவமதித்தலே. எவ்விடத்தில் அறுதொழில்நிறைந்த அந்தணர் வசிக்கின்றார் அந்தவிடம் விஷபேதிமுதலியகொடுநோய்கள் அணுகுவதில்லை. தவஞ்செய்து இதுவரையில் அக்கடுநோயால் இறந்தவருள் ஒரு ஆஹிதாக்கினியைக்காட்டுவார்களா. அநாவிருஷ்டிபொவதேயல்ல. மற்றெவ்விதமான குற்றங்களும் அணுகா. ஆதணங்களைத்தமது குலதனமாகக்கொண்ட அந்தணரில்லாவிடில் உலகத்தில நற்கருமங்கள் நடைபெறுவதெப்படி? இனி அந்நற்கருமங்கள் நடக்கவும் அதை அக்கிரவருணத்தார் கைவிடாதிருக்கவும் வேண்டியமுயற்சி செய்யவேண்டும். இக்காலத்துச் சூத்திருட்சிலர் பிரசங்கங்களில் வேதோச்சாரணஞ்செய்கின்றனராம். ஈசன் திருமுகமண்டலம்முதல் திருவடியீறாக நான்கவயவங்களில நான்குவருணங்கள் உண்டானவையும் அவர்களுக்கு அவரே வேண்டிய தர்மங்களை விதித்தருளினதையும் இவரறியாவிடில் அதற்கு நாம்செய்வதியாது? எவ்வருணத்திலுதித்தவராயினும தத்தம வருணத்திற்குரிய தர்மங்களை அனுஷ்டிப்பவர் உத்தமர் மதனையநுஷ்டித்தவன்பெறும் பயனைப்பெறுவரென்பதில் தடையில்லை. அந்தணர் தமக்குரிய கர்மத்தைவிட்டு வேறுகர்மத்தைச்சுவீகரித்தால் அது பெருங்குற்றமாம். மற்றவர் தந்தொழிலைவிட்டு மற்றவர் தொழிலையநுஷ்டிப்பதும் குற்றமே. ஆயின் வேதாத்தியனம் சூத்திரன்செய்தல்இருமையிலும் கெடுதியேயன்றிப்புண்ணியமேயில்லை. அந்தணர்காள்! இனி வீண்விவாதங்களை விட்டுத்தொலைத்து எல்லாரும ஒற்றுமையைப்பெற்றுக் கொடுக்கல்வாங்கல்முதலிய சகல பந்துலக்ஷணமுமுடையராய்த் தத்தந் கிராமங்களில்வசிக்கும் மற்றைய வருணத்தவர்க்கும அவரவர் தர்மங்களை எடுத்துபதேசித்து அவர்களும் நீரும் நற்கதிபெற வழிதேடுவீரென எதிர்பார்க்கின்றோம். ஏதோ சிலர் எது எவ்விதமாயினும் எமக்கென்னவென விட்டில் படுத்திருக்கிறார்கள். இவ்விதம் அவர்கள் உதாசீனஞ்செய்வதே இத்தேசத்துக்கு இவ்வித கேடுபட்டநிலைமைக்கு முதற்காரணம். கடவுளின் திருமேனியிலவதரித்த நானாகுவருணத்தவர்களும ஒருவருக்கொருவர் உபகாரஞ்செய்துகொள்ளவேண்டியநிலைமையிலுள்ளாரென்பது அறிஞரறிந்தவிஷயமே. ஆயினும் எல்லா அவயவங்களுக்கும சிரசே மேலென்பதுபோல ஏதோ அந்தணர்க்குள்ளபெருமை சிறிதிருக்கும்.

மற்றதுபின்.

திருமலைசாஸ்திரி,
திருவேங்கடகிராமம்.

Koviloor Digital Library

[illegible]

கைம்பெண்களுக்கு மறுமணம் செய்தல் அவைதிகமென்பது.

ஐயா! தற்காலத்துச்சீர்திருத்தக்காரர் செய்யும் ஆடம்பரத்தைப்பாருங்கள்! கைம்பெண்களுக்குக் கணவன் தேடுவதற்காகக்கங்கணங்கட்டித்திரியுமிவர் வைதிகோத்தமர்களாகிய அந்தணர்களைக்கருணையற்றவரென்றும், பெண்களைப் பீடிக்கும தூமகேதுக்களென்றும், பெண்களுக்கு மறுமணமில்லாவிட்டாலும் அவர்களுக்குச் சரீரசங்கடமுண்டுபண்ணும் உபவாசாதிகளைக்காட்டுவதும் அவர்கள் உருவங்குலைய முடிகளைதலும் மற்றுமுள்ள இவர் செய்யுங்கொடுமைகளைச்சொல்லச்சாத்தியமாகாதெனப்பலவாறு நிந்திக்கின்றனர். இப்புல்லறிவாளர் விடுக்கும் இப்போலிவினாக்களுக்குவிடையளிக்க எமது இறகைச்சிறிது செலுத்துவாம். இவர்கள்சொல்வதிலுள்ள சந்தேகம் இரண்டு. இவர்களுக்குக்கைம்பெண்கள் உண்டிசுருக்குதல் நியாயமா? அவர்கள் முடியைக்களையச்செய்தல் முறையா? இவ்விருவகைக்கன்மங்களை அநுஷ்டித்தலும் கைம்பெண்களுக்கு இன்றியமையாதெனவும், இது வேதம் ஸ்மிருதி புராணம் இதிகாசம்முதலிய பலநூல்களிற்கூறப்பட்டதுமென முன்னரேசொன்னோம். இவ்விருகன்மங்களும் விதவைகளுக்கு மிக மறுமைப்பயனைத் தருமென இப்பத்திரிகையிற்கூறுவாம். அவர் உடலைவாடச்செய்தல் அன்னத்தின் குறைவாலல்ல. மற்றுத் தேன், பால், சர்க்கரை முதலியநற்பொருள்களுடன் எல்லையின்றி அவர்புசித்திடில் அது அவர்சரீரமிகப்பருக்கச்செய்து காமத்தை மிகஉண்டாக்கி உலகவரைகடக்கநேரச்செய்யுமென ஆன்றோர்கருத்து. எந்தவழியிலாவது கைம்பெண்களுக்குக் காமம்விர்த்தியாகாதவழிதேடவேண்டுமென்பது தர்மசாஸ்திரகாரர்கொண்ட அபிப்பிராயம். ஆதலாற்றான் அவர்களுக்குப்பலவிரதங்களைப்பெரியோர்விதித்தனர். ஆயின் அவர் பரிபடங்கவேண்டி எவ்வளவு ஆகாரம் கொள்ளவேண்டுமோ அவ்வளவுமட்டில் ஆகாரம்கிரகிக்கவேண்டுமேயன்றி அதிகம்கிரகிக்கலாகாது. இதனால்முதற்கேள்வி மாறுபட்டதாகும். இனிமுடிகளைதலும அங்ஙனமே. பெண்களுக்குளெவ்வளவுஉறுப்புகள்புருடன்மனத்தைமயக்குவதாயினும்அவற்றுட்கூந்தலென்பது மிகச்சிறந்தது. ஆதலாற்றான் மங்கையர்க்குச்சுமங்கலிப்பருவத்தில அதுமிகஅவசியமெனக்கொண்டாடப்படுகின்றது. கூந்தலற்றமுகம் கூற்றுவன்முகமே, அதைச்சுவையறிந்த எவரும் நோக்காரெனா சுமங்கலிகளுக்கு அது அவசியமும் அமங்கலிகளுக்கு அது தீயதுமென நிச்சயிக்கப்படுகின்றது. அது இருக்குங்கால் முகத்திற்கு உண்டாகும் ஒரு அழகு. அஃதில்லாதபொழுது உண்டாகாதென்பதுபிரத்தியக்ஷானுபவம்.

இன்னும்வரும்.

திருவேங்கிடக்கிராமம்- திருமலைசாஸ்திரி.

Koviloor Digital Library

ஓம்

SUPPLIMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

கூ - ம் புஸ்தகம்] சிதம்பரம். நந்தனஹு புரட்டாசிமீ உஉவ [இலக்கம் - கசு

"புதியஞானாமிர்தம்" அம் இலக்கம்.

நண்பர்காள்! கடந்த ஆவணிமீ 15வ வெளிப்பட்ட புதியஞானாமிர்தத்தின்கண் அமைந்தவிஷயங்கள் கூ. அவற்றுள் "திவ்வியஸ்தலயாத்திரை" என்பதொன்று நீங்கலாக மற்றதெல்லாம ப்ரம்மவித்திபா பத்திரிகைக்கும் அதன் நண்பர்க்கும் வேண்டியமட்டில் ஒன்பதாம் அஷ்டகத்தால் நிரப்பப்பட்ட கடிதங்கள். இதனையாம் மறுக்க வேண்டுவது அநாவசியம். பத்திராதிபரவர்களே தக்கவிடையளியாது போகார். ஆயின் ஓர் சமயம்பத்திராதிபரே உதாசினமாக விருந்துவிடையளிக்காதுபோனால் அவர்கள் இவ்விஷயத்தில் அலக்ஷியம்செய்தமைபற்றி மீண்டும் பற்பல பிரயோகங்கள் ஞானாமிர்தத்தின் கண் தோன்ற இடமுண்டாகும். அந்தோ! அப்பத்திராதிபர் எழுதத்தவக்கிய "திராவிடப்பிரகாசிகை, தத்துவபோதம்" முதலியவிஷயங்களை எழுதி உலகத்தாருக்கு பகரிக்காது பத்திரிகை முழுவதும் வீணே வேதாந்த தூஷணத்தினால் நிரப்பக்கங்களைம் கட்டிக்கொண்டார். ஆகவே அவாதுகேள்விகளுக்கும் விஷயங்களுக்கும் பத்ராதிபர் விடையளிக்காது அலக்ஷியமாய் ஒதுக்கிட்டாலும், ஓர் நாவலர் முதலியோர் மேற்போட்டுக்கொண்டு விவாதத்தை நடத்த முன்வந்தார்கள். ப்.வி. பத்திராதிபர் இவ்விவாதத்திற்கெல்லாம் பிரத்தியேகமாக அனுபந்தமொன்று சேர்த்து அதில் இடங்கொடுத்துத்தூஷணங்களைக்களைந்து ஷை விவாதத்தை அமைவோடு நடாத்திவருவதைப் பத்திரிகாநண்பர் எவருமறிவார். ஞானாமிர்தத்தாரும் அவர்தொடங்கியவிஷயத்துடன் அமைட்டிருந்தால் நாம் ஏதும் சொல்லமாட்டோம். எவரெவர் எப்பெயர்களுடனும் எவ்விருதுகளுடனும் நீடூழிகாலமாய் நம் ஆரியதேசத்தில் பிரசித்திபெற்றனரோ, அவரவரை அவ்வப்பெயருடனும் விருதுடனும எடுத்துரைத்தலேபத்திராதிபர்க்குஇலக்கணமாமென்க. ஸ்ரீ சங்கராசாரியாரிடம் ஜகத்குரு சப்தப்பிரயோகம்செய்தசிறப்பாகச்சில விஷயங்களைக்குறித்தும் ஏனையமடாதிபதிகளைச்சாமான்யமாகக்குறித்தும் எழுதியவிஷயத்தில், ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளை "ஜகத்குரு" எனறுகூறியதால் மோசம்வந்ததென்றுகோபாவேசங்கொண்டு ஞானாமிர்தத்தார் சிலவரிகளைத்திட்டிப்பிரஸ்தாபத்தில் நடக்கும் விவாதத்தில் தலையிட்டுக்கொண்டார். அப்பொழுது "வைதிகசைவர்" என்றுகைச்சாத்திட்டு விவாதரணரங்கத்தில் முன்னடிவைத்துவீரவாதங் கூறிய ஆண்சிங்கம் இப்பொழுது அமெரிக்காவிற்குப்போய்க்குகையிற் படுத்துறங்கும் அவரிடம் வேலையைச்செய்யவரும் அவர் ஸ்நேகிதரும் இன்னுஞ்சிலர் அதேபத்திரிகையிலும், நாகைநீலலோசனியிலும் ஷை விவாதத்தை நடாத்தமுயன்று இதுகாறும் அவர்பிரயோகித்து வந்த வீரநாமத்தைத் தாபிக்கப்பாடுபட்டும் பயன்படாதுகண்டு அவ்விவாதிகளிலொருவரான ரு-நாயகர் ஒருவர் கடந்த ஆவணி உஉ வ நாகைநீலலோசனியில் "வைதிகசைவம்" என்பது நவீனவழக்கே எனறும், "ஆகமசைவம்" சர்வோத்தமம் என்றும் அது வேசித்தாந்தமென்றும் முடிபுரை கூறி இவரிட்டுக்கொண்ட புதிய திருநாமத்தை அந்தரத்தில்விட்டார். வைதிகசைவர்கதி இங்ஙனமாக, பின்னர் இடையில்சிறிது தொட்டவிஷயத்தை நடாத்துபவர்போல் அபிநயித்த ஞானாமிர்தத்தார் எழுதியசித்தாந்த சைவபோதத்துட் பிரிவான சமயதாரதம்மிய வியலிலும், திராவிடப்பிரகாசிகையிலும் எடுத்துக்காட்டிய வாசங்ககட்கு இதுகாறும் யாதும் விடையளித்திலர். அதற்குவிடையளித்திடலும் சுலபசாத்தியமல்ல. ஞானாமிர்தத்தார்க்கு (கடிதகர்த்தர் வாயிலாகவன்றி) வேறுவழியில் விண்திட்டுகளால் காலங்கழித்திடல் இயலாதுபற்றி இவ்விஷயத்தில் அவர்சாதித்த மௌனம்நியாயமென்க. ஜகத்குரு விவாதவிஷயத்தில் ப்ரம்மவித்தியாபத்திராதிபர் பேசிவாராததற்குக்காரணம் அப்படியோ வெனில், அங்ஙனமன்று; அவர்சொல்லவேண்டிய விஷயங்களையே மற்றவர் எழுதிவருகின்றமையால்தாமும் எழுதிவருவது அனாவசியமெனறுக்கருதி அங்ஙனமின்றூர் ஞானாமிர்தத்தாரும் அங்ஙனம் என்னின், அது பொருந்தாது. கடாவ்யவினாக்களுக்கு இவரேனும் இவரது பத்திரிகாநண்பரேவரேனும் இது காறும்விடையளிக்காமையா

Koviloor Digital Library

லென்க. நிற்க. இற்றைக்குவெளிவந்த விஷயங்களில்யாம சொல்லவேண்டியதை ஈண்டுக்கூறுவாம்:—

1 "பாசுபதாஸ்திரம்" எனப்பெயர்தாங்கி வெளி வந்தது. இவ்விஷயம் சைவம், சித்தாந்தம், என்பனாதி நாமங்களால் வழங்கப்பெற்ற காமிகாதி 28 ஆகமங்களையும் "வைதிகம" எனத்தாபிக்க முயன்று இறுதியில் அவை "வைதிகசைவம்" எனவோர் முடிவு கொண்டு முடிந்தது. இதிலுள்ள சில குறைகளை விசாரிப்பாம்:— இவ்விஷயத்தின் துவக்கத்தில் "வேதாகமங்களெல்லாம் தன்பொருளாகவே திரண்டுகூடி பெரும்பெயராகிய சித்தாந்தமகா வாக்கியமானது நான்குவேதங்களுள்ளும் தலைமையாய்ப் போந்த யஜுர்வேதத்துமத்தியிலே ருத்திராத்தியாயத்தில் அமிர்த ஜீவரத்தினமாகப்பிரகாசிக்கின்றமையாற்றான்" என "வைதிகசைவம் சிவாகமம்" என்பதற்குக்குறித்தமுதல் ஏது. இங்கு வேதாகமங்கள், "வேதத்தைத்தழுவிய ஆகமங்கள்" எனப் பொருள்பட்டு இவ்விஷயத்திறுதியில்இவரே(சிவாகமங்களுக்குவேதாகமங்கள் எனப்பெயரென்று)பெயரிட்டபடி சிவாகமங்கள்எனும்பொருள் கொடுக்கும். இச்சிவாகமங்கள் வைதிக ஜீவரத்தினமாய் ஒப்பற்றுப்பிரகாசிக்கும் மகாமந்திரத்தின் விரிவுரை என்பது. வாயுசங்கிதை:— வம்ஶாக்ஷரஸ்ய ஸூத்ரஸ்ய ஹாஷ்யமேதத்ஸமாஸத:| "பஞ்சாக்ஷர சூத்திரத்திற்கிவையெலாம் பாஷ்யம்"என்று கூறுவதால் அது யஜுர்வேதத்திலுள்ள தென்பது. அன்றி"ஶாகேஷ ஶ்ரோத்ரஸ்ய ஷட்கோடிர்நிபத்தா | ... வம்ஶாக்ஷரம் ..."|| "என்றற்றொடக்கத்தின் "ஸர்வப்பிரமாண சாஸ்திரங்களிலும் வேதமுயர்ந்தது; அவ்வேதங்களுள் ருத்திராத்தியாயம் சிறந்தது; அதைக்காட்டிலும் பஞ்சாக்ஷரமிகவும் சிறந்தது." என்னுஞ்செய்யுளால் பெறப்பட்டதோர்விஷயம். ஆயின் சர்வாகம மூலமாய ஜீவரத்தினம் வேதத்துள்ளமைந்ததென்று பிரசங்கித்தமையால், ஆகமங்கள் வேதங்களுக்கு வழிநூலென்று சொல்லாதமைந்ததுகாண்க. இவர்வேதாகமம் இரண்டும் முதநூலென்பாராகவே இங்கு இரண்டனுள்ளும் ஜீவரத்தினம் மகாமந்திரமென்றது, தமதுரையாய் ஆகமங்களை அமைத்துக்கொண்ட மந்திரம் வேதத்திலுளதென வெரப்பினர். ஆதலால் இவர் இனி வேதத்தினுள் மந்திர ரத்தினவியாக்கியானமே சிவாகமமாக ஒப்பிப்பின்னிடக்கூடாது. ஆதல்கொண்டே சிவாகமம் வேதத்திற்கு வழி நூலாயிற்றெனக. பிறகு ப்ரம்மவித்தியாபத்திராதிபர் இக்காலம் சைவத்தில் அழுக்காறுற்றார் எனவும் முன் பிரசூபராக இருந்தகாலத்தில் எழுதியது தமக்குச் சகாயம்என்றுஞ்சொன்னார். ஷை அதிபர் அன்றும்இன்றும் என்றும் சைவப்பற்றுள்ளவரேயானாலும், இவர் கொண்ட சிவாகமாசார சகித சைவம் அவருக்கன்றுமில்லை இன்றுமிலலை என்றுமில்லை. அவர் சிவாத்துவிதியே என்பது அவர் எழுதிய பலநூல்களையும் அவர் பத்திரிகையையும்முற்றிலும்படித்தவர் அறியாமற்போகார். மேல்,சிவாகமங்கள், காமிகாதிகள் வைதிகம்என்பன சிவதத்துவவிவேகத்திலுதகரிக்கப்பட்ட கூர்மபுராண வாயுசங்கிதா வசனங்களிலும்ஸ்ரீஹரதத்தாசாரியர் திவ்வியசூக்தியிலும் இருப்பதாய்க்காட்டினார். அவைகள்இவர்கொண்டசித்தாந்தமான காமிகாதிகளை அவைதிகமென்று ஒதுக்கி, ஈச கோடி கிரந்தங்களுடன் அமைந்ததும் ருரு, ததீசர், அகஸ்தியர், உபமன்னியு என்னுநான்குமகரிஷிகள்வழி உலகிற்பிரசித்திபெற்றதுமான சிரௌதாகமங்களையே வைதிகம் என்றன. அப்பிரமாணவாக்கியங்களாவன:—வாயுசங்கிதை பூர்வபாகம் உஅ-ம் அத்தியாயம்: "ஶைவம் ஆகமோ த்விவிய:ஶ்ரௌதோ ஶ்ரௌதஶ்ச ஸ்ம்ருத:| ஶ்ருதிஸாரமய:ஶ்ரௌத:ஸ்வதந்த்ர இதரோ மத:| ஸ்வதந்த்ரோ தஶதா பூர்வம் ததாஷ்டாதஶதா புந:| காமிகாதிஸமாக்யாபி:ஸித்தஸித்தாந்தஸம்ஜ்ஞித:| ஶ்ருதிஸாரமயோ யஸ்து ஶதகோடிப்ரவிஸ்தர:|" (இவற்றின் பொருள்: சிவாகமங்கள் வைதிகம் அவைதிகம் என இருவகைப்படும். வேதாசாரமாயுள்ளதுவைதிகம். சுவதந்திரமாயுள்ளது அவைதிகம். சுவதந்திராகமம் இருபத்தெட்டு. காமிகம்முதலியது அது. அதற்குச்சித்தாந்தம்எனப்பெயர்' என்பது) என்பதும் கூர்மபுராணம் வித்தியாஸ்தானங்கூறுமிடம் "நிர்மிதம் ஹி மயா பூர்வம் வ்ரதம் பாஶுபதம் பரம்| குஹ்யாத் குஹ்யதமம் ஸூக்ஷ்மம் வேதஸாரம் விமுக்தயே| அந்யாநி சைவ ஶாஸ்த்ராணி லோகேஸ்மிந் மோஹநாய வை வேதவாதவிருத்தாநி மயைவ கதிதாநி து" என்பதுமே. (இதன்பொருள்"யாம் முன்னரே வேதசாரமாய்ச் சிவாகமத்தைச்சொன்னோம். அது பாசுபதவிரதத்தை விரிப்பது. மற்றைய சைவசாஸ்திரங்களை வேதவாதவிருத்தங்களாகவும் மோகசாஸ்திரங்களாகவும் யாமே செய்திட்டோம்" என்பது. இது சிவவாக்கியம்.) இவ்வசனங்களில்இவ்வாதியாருக்குச்சாதகம்ஏதோ அதை அவரோகாட்டுவாராக.மேலேசிவதத்துவவிவேகநூலுடையார், ஆகமப்பிராமாண்யத்தைப்பற்றிநீண்டவிசாரஞ்செய்து இறுதியில் வேதவிருத்த கேவலநிமித்தகாரணவாதத்தைச்சொல்லும் காமிகாதிகள் அப்பிரமாணமென்பதே,ஸ்ரீகண்டமுனிவர்முதலிய முன்னாசிரியர் கருத்தா

Koviloor Digital Library

ய் முடித்த முடிபுளைப அந்த 'யதஃநொ நாயிகஷ்ம்' என்னும் சுலோகவியாக்கியானத்திற்கண்டுதெளிவாராக. இனி ஸ்ரீமதாசாரிய ஹரதத்தமூர்த்திகளும் காமிகாதிபெயர்களைக் குறிக்காமையானும் தொ க்கத்தில் "வெடெஷுவா தஃநாயாயிஷுகா விவாயஃகம்ஜ்ருஷு" என்று வேதாநுசாரிதந்திரங்களே பிரமாணமென்பதாலும் மூலபுராணவசனங்கட்கும் ஸ்ரீமதப்பயதீக்ஷிதயோகிந்திரர் வ்வியருக்திக்கும் எட்டுணையும் விலகியதன்று. ஆகவே இவர் இங்கு எழுதியதெல்லாம் இவர்க்குச்சாதகமாகாது காமிகாதிகளுக்கு வைதிகத்தன்மையை விலக்கி விபரீதமும் விளைவித்தன. மேல் "காமிகாதியாகமங்களை வைதிகம் என்று சூதசங்கிதை கூறுகின்றது" என்றார். அதை விசாரிப்பாம்: அதுவும் ப்ரம்மகீதைமுதலியவிடம் வைதிகமகாவாகமங்களைத்தூஷித்தேநிற்கின்றன. அவ்வசனங்கள் பலவுள. அவைகளைச் சாயம் நேர்ந்துழி விளக்கிடுவாம். இனி இவர் "மாயையைப் பொய் இருள்" என்று கூறி முற்றிலும் அத்துவிதியான தாயுமானவரைச்சரணடைந்து அவர்திருவாக்கொன்றே தமகுப் பிரமாணமாக்கிநிற்றல் பயன்படாதமிக.மேல் "சுத்தாத்துவிதம்என வும்" என்றனர். இவர்மதத்தில் சுத்தாத்துவிதம் என்று எவ்வாகமத்திலுமில்லையே. இஃதும் ஓர் நவீனநாமமே.இங்ஙனமாக இந்நியாயப்போலிகளைக்கொண்டு சித்தாந்தஞ் செ ய்து மகிழ்ந்து விடுத்த பாசுபதாஸ்திரமும் அஸ்திரப் போலியாய் வெடிவாஹ்யஃகயெதாகஃ" என்ற சிவவசனத்தால்மாயாவலிகொண்ட எமது மகாபாசுபதத்தெவ்யாஸ்திரப்பிரயோகத்தால் ப்ரதிக்கிரியை செய்தமிந்து அடங்கிடுவாராக.

2 இனி ஞானமிர்தத்தார் "தத்துவபோதத்தை"க்கவனிப்பாம். "ஜீவான்மாக்களெல்லாம் ப்ரம்மப்பொருளின் பரிணாமமாய்த்தோன்றி"என்றுபரிணாமவாதிமதத்தைக்கு றித்தார். அந்தோ!சைவசிகாமணிகளாயஸ்ரீகண்டமுனிவர் முதலியபெரியோர்ஒப்பியபரிணாம வாதத்தை முறைபிறழா தறியாக்கொடுமையால்இங்ஙனமெழுதினர். பரிணாமவாதிகளாய விசிஷ்டாத்துவிதிகள் எவரும் இம்மதம்கொண்டாரில்லை. எவர்க்கும் ஜீவான்மாக்கள் அநாதியான தனிமுதல்களே. இவரேதுசெய்வார்! சித்தியார் முதலிய பழைய நூல்களில் கண்டதை எடுத்து எழுதிவைப்பவர் இவர். அந்நூலாசிரியர் இவ்விதவாதிகளை எத்தகர்தர்வகரத்தில் கண்டனரோ அறியோம். பிறகு "பௌராணிகர்ஆன்மாஉருவப்பொருள் என்பர்" என்றனர். இதுவும் வழுவே. புராணங்கள் தனிமுதனூல்களாகாமையானும் வேதங்களுக்குப்பிரம்மணங்களேயாகலானும் எப்புராணத்தும் வேதங்களுடன்முரணுமாறு இச்சித்தாந்தம் காணப்படாமையாதுமென்க.

பிறகு "வைசேடிகர், ஆன்மாசடமென்றும் அது பின் மனத்தோடுகூடிச்சித்தாய் அறியும் என்றுப்சொல்வார்" என்றனர். கணாதர்காணாத புதுமையை இவர் கண்டெடுத்தோதியது எமக்குக்களிப்பைத்தருகின்றது. அந்தோ! கணாதமதத்தில் சரீரம் பரையாதிவிலக்ஷணமான ஆன்மத்தைஎடுத்துரைக்கப்பட்டதும்இவர்காவலிமைக்கெட்டாதொழிந்ததும் விசனிக்கத்தக்கதே.

மேல் "ஆன்மாக்கள் அணுக்கள் என்னும்வாதம் பாஞ்சராத்திரத்துள்ளதாய்க்கூறிப் பிறகு அதை மறுக்கவெழுந்து அது ஒருவழியாய் ஒடிப்போம்" என்றுமறுக்கின்றாரே. அந்தோ! ஓடாநின்ற ஆன்மாவை வெகுகாலம் சரீரத்திலிருக்கக்கண்டவர் எவர்? நிற்க. இவருக்கும் ஆணவத்திலடங்கிய ஆன்மா அணுவேயாகலின் ஆகமங்களில் ஆன்மாக்களுக்கு அணுக்கள் என்னும்சிறப்புப்பெயர் வழங்குதலின் இவர் மறுத்த மறுப்புஇவரைச் சுற்றிப்பிடிக்காதுபோகாது.

மேலே "கொழும்புக்குருசர்மாவுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தல்" என்னும்விஷயத்துக்கு வீண்தூஷணையிலீடுபடுவதில் எழுதவேண்டுவது அவர்தலைச்சுமையே.

"ஆரியஜநாபிமானிபினவலமறுத்தல்" என்னும் விஷயம் எவருக்கும் அருவருப்பைத்தருமொன்றாயினும் இதில் முன் ஒளித்த வைதிகசைவர்வெளிவந்தாராகையால்அவருக்குச்சிலவிஷயமட்டில்கூறிடுவோம். இவ்வைதிகசைவப் புதுநாமதாரி ஸ்ரீசங்கராசாரியர் அவதாரம் சிவரகசியத்தில் இல்லை என்றாரே. நாயன்மார் சரித்திரமத்தியில் ஒன்பதாமம்சம் கசு-ம் அத்தியாயத்தைப் படித்துத்தெளிந்து தாம்செய்த சிவாபசார சிவபக்தாபசாரங்களை ஒழித்துக் கொள்ளவேண்டி ப்பிராயச்சித்தம் செய்துகொள்வாராக. மேலே சிவன் பிறந்ததில்லை என்றார். சிவன் பிறந்ததாக எங்குஞ்சொன்னதில்லை. அவதாரமெல்லாம் ருத்திரமூர்த்திக்கென்பது சிவபுராணம் வாயுசங்கிதையில் சுவேதர் முதல் லகுளீசர் ஈறான ஆசிரியர் அவதாரங்கூறுமிடம கண்டபிறகேனும் வீண்வாதத்தை விடுவாராக. மேல் தாம் சிங்கம் என ஒருவன்சொன்னதைபட்டில் ஒப்பிச் சாஸ்திரிபாரைச்சரபம் என மற்றவர் சொன்னதைமட்டில் சலபம் என ஒதுக்கினேம் என மறுத்தனரே.இவர் மனோராஜ்யத்தில் எவரைச் சேர்த்தாலும் எவரை ஒதுக்கினாலும் எவ்விருதைத்தமக்கு வைத்துக்கொண்டாலும் அது ஸ்வப்னவுலகமாகவே வெளியில் நறுமணம்வீசும் திறம்பெறாது. நிற்க. ஏதோ சாஸ்திரியார் பரமாசாரியதூஷணஞ்செய்வதாகப்பிரஸ்தாபித்து ஏதோ மே

எழுதினார். அவர்கள் தூஷிக்கத்தூஷணை இன்னதென்பதை எடுத்துக்காட்டாது வீண்சொற்களால் நிலவோசனிவை நிரப்பியதுபோதாது "தமது பத்திரிகைக்கேற்றது" என மது ஞானமிர்தத்தார்எடுக்க அதையுங்கெடுத்தது. இனிச்சிதம்பரதிவ்வியக்ஷேத்திரத்தின்சிறப்பும் பூஜையும் விதித்த ஸ்ரீபதஞ்சலிமாமுனிவரும் பாராசரபிதாகாசரின் மயமகாங்கயோமத்தில் அத்தியாஸிக்கப்பட்டது. எம்பிரான் திருமேனியென்று பொருள்படும் கைவல்லியவுபநிடதவாக்கியங்களைப்பூஜையில் நித்தியம் சொல்லிவர விதித்த உண்மையறியாதவர்கூறிய அசப்பியவசனங்களை எடுத்து மறுப்பதும் எமக்குசிதமன்று. ஆகலின்விட்டொழித்தோம். பிறகு "குருகபிஷிற்சை" என்று ஒன்றுதோன்றியது. அதில்யாதும் விஷயமில்லாது "எல்லோரும் ஜயிக்கப்பட்டார், வைதிகசைவர் பலகோடியாயங்கள் சொன்னார்" என்பதாதிவீண்சொற்களால் ஒருபக்கமும், ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் ஜகத்குருவென வாதித்தவரிடம் கும்பகோணமடமா? மற்றமடமா' முதலிய சிலகேள்விகளைக்கேட்டு அதன்விடைகளும் வேடிக்கைகளுமாக மற்றொருபுறமும் நிரப்பியதைப்பற்றி அவர்கோஷ்டியில் அவரே பிரசங்கித்து அவருண்மகிழ்ச்சியடையவேண்டியதே. மேல் சைவசம்பிரதாயவிஷயக்கேள்விகளுக்கு இதுமுதல் இவர் ஜனனகாலம் எல்லாந்தேடி விடையளிக்கமுடியாததுபற்றி அது அற்பமென்றார். இவ்விதம் ஒருவிஷயமுமின்றி வீண்தூஷணசப்தங்களாலும் பயனில்சொற்களாலும் சித்தாந்தப்புரட்டுகளாலும் நிறைந்து ஒன்றொழிய மற்றை விஷயங்களுடன் வெளிவந்த புதியஞானமிர்தம் எட்டாஞ்சஞ்சிகை ஏளனபதவியின் முடியையெட்டாதொழியாதென்றறிக. சுபம். ஓர் வைதிகன்.

சிவமயம்,

ஜகத்குருநிந்தா தூரீகரணம்.

[illegible]

ம ஹோபநிஷத்காசயான சிவரகசியத்தில் ஈவமாம்சத்தில் ௩ம் அத்தியாயத்தில "[illegible]" என்றுதொடங்கி "[illegible]" என்பதிருவவசனங்களால் சிவபெருமான் பெருங்கருணைகூர்ந்து கலியுகமென்னுங்கடலுளழுந்திப் பாபகருமங்களையேசெய்து கற்கருமங்களை விடுத்துநின்ற உலகத்தாரைநோக்கித்திருவுளமிரங்கிக்கேரளதேசத்தில் சிருஷ்டியான தன்னம்சத்தைச் சங்கரனென்னுந்திருப்பெயர்பூண்டு அந்தணர்வடிவங்கொண்டு அவதரிக்கச்செய்தருளினனென்று முழங்கப்படுகின்றது. இதனாற்சிவாம்சமான ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் ஜகத்குருவாவார்களென்பது பெறப்பட்டது. அன்றியும் சூதசங்கிதையில் "[illegible]" என்னும்வசனத்தால் சகலகலைகளுக்குமீசானரானசிவபெருமானே ஆதிகுரு. அவரதுமானுக்காரராயணரென்று விளங்கலின், அவதாரத்திற்கு முன்னரே தக்ஷிணாமூர்த்திவடிவங்கொண்டிருந்த சங்கராசாரியசுவாமிகளைச்சிவசாத்திரமுணர்ந்தமேலோர் ஜகத்குருவென்று முழங்குவதற்கு யாதுமஞ்சார். அவதரித்தபின்னரும் சகலவேதசாத்திரங்களையுமோதி அவற்றின் பொருளனைத்தையுமுணர்ந்தாரென்றும், "[illegible]" என்றதிருவசனங்களால் கலியில வல்லுநரான ஜைனர் புத்தர் மிச்சிரர் முதலிய குதர்க்கமதவாதிகளான மத்தகசங்களைச்சங்கரப்பெயர்பூண்ட உத்தமசிங்கம் வென்று சந்நியாசவேடந்தாங்கிச் சிவபெருமானருளிச்செய்தஞானத்தாற்பூரணசந்திரன்போல விளங்கி வியாசமுனிவர்செய்த துவிதவாக்கியங்களான சூத்திரங்களுக்குப் பல பிரமாணங்களைக்கொண்டு அத்துவிதமேயுண்மைப்பொருளென்றுபாஷ்யஞ்செய்து காசியிலிருந்த வியாசமுனிவரையும் வென்றனரென்றும், பின்னர் விசுவேசரைத்துதிப்ப, அவரெழுந்தருளி, "[illegible]" என்றதுமுதலான வசனங்களால் பேதவாதபானமலைக்கு என்னம்சமாக அவதரித்த நீ வச்சிராயுசமாயினை. உலகத்தில அத்துவிதத்தை நிலைநாட்டினை" யென்றுபஞ்சலிங்கங்கொடுத்தருளப்பெற்றுப் பூசித்துப் பன்மதத்தவரையும வென்று தம்மதத்தை நிறுவிக் காஞ்சித்திருப்பதிக்குச் சென்று சர்வக்யபீடமேறிப்பிறகு திருக்கயிலைக்கெழுந்தருளினார்களென்றுங்காணப்படுதலால், ஆதிசங்கராசாரியசுவாமிக

Koviloor Digital Library

னவதரித்தகாலத்திற்குமுன்னுமவதரித்திருந்தகாலத்தும் எக்காலத்தும் ஜகத்குருவாவாரென்பது துணிபுரையே.

மஹேதிஹாஸமான சிவரகசியத்தில் பிரமாணபுத்தியில்லாதமக்கள் வருணத்தினாலும், ஆச்சிரமத்தினாலும் சிவபெருமானைத் தெய்வமாகப்பெற்ற ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளை நிந்தித்துச் சிவத்துரோகிகளாய் ஆயினாக. இதனாலவர்க்கென்னே குறை. வைணவருக்கும், மாத்துவருக்கும், விசுவகுலத்தவருக்கும் இவ்வாசாரியப்பட்டம் உலகிற்பிரசித்தம்என்றுபிரமாணங்காட்டாதெழுதிப்பின் வாங்கினீர். அகோரசம்புசிவாசாரியார், சோமசம்புசிவாசாரியார்,கச்சியப்பசிவாசாரியர் என்றுஆதிசைவகுலத்திற் பிறந்தவர்கட்குப் புனைந்த பட்டங்களை எங்கொழுகவிட்டீர்? அயல்வீட்டுள்ளானுக்கபசகுனமாகவேண்டித் தன் மூக்கை யரிந்துகொண்டெதிர்செல்பவனை யொத்தீர். எமது ஸ்மார்த்தகுலத்திலவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளை ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் துதித்தமையால்பரமாசாரியரென்று வழக்கிடப்புகுந்த உமதமதியைப்ரம்மஸ்ரீ ப்ரம்மவித்தியாபத்திராதிபரது வாதப்பணி விழுங்கிற்றே? உலகமுழுதும் சங்கராசாரியசுவாமிகளென்று முழங்கவும் நீர் மாத்திரஞ் செவிடானீரோ? "உலகத்தாருண்டென்பதில் லென்பான் வையத், தலகையாய் வைக்கப்படும்" என்னும் திருக்குறளுக்கு உதாரணமாக ஒருவருமில்லையென்று நீரே சேர்கின்றீர் போலும்! இனியேனும் இக்குதர்க்க வாதத்தை விட்டொழிவீராக.

வைணவரும், மாத்துவரும் அங்கீகரித்தால் சங்கராசாரியசுவாமிகள் ஜகக்குரு ஆவாரென்று முன்னர்க்கூறிப் பின்னர் ஜகத்குருவென்னுந் திருப்பெயர் ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கே சொந்தமென்றீர். சங்கராசாரியசுவாமிகள் மொழிந்தருளிய தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தில் "திரிபுவநகுரு, ஆசாரியேந்திரர்" என்று அம்மூர்த்தியை வணங்கியதுபோல், மாத்துவரும், வைணவரும் வணங்காது நிந்தித்தலால் ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கும் ஜகத்குருத்தன்மையில்லையென்றுஇனிப்புலம்புவீர்போலும்! ஏன் யானை மதப்பட்டுத் தானே தன்றலையில் குப்பையைவாரிக்கொட்டிக்கொள்வதுபோலாகின்றீர். ஈண்டுச்சங்கராசாரியசுவாமிகள் பிறப்பதற்கு முன்னும் விதேகத்திற்குப் பின்னும் ஜகத்குருவாயினதில்லை யென்று தொடங்கிய அப்பிரமாண வசனப்பஞ்சுகள் சிவரகசியப்பிரமாணவசன சண்டமாருதங்களால் நின்றுழியில்லாது பறந்து மறைந்தன.

இன்னும் ஸ்மார்த்த குலத்தில் அவதரித்தருளிய ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளுக்கு ஆசாரியத்தன்மையும், அவர்கள் புகழ்ந்தமையால் அக்குலத்திலவதரித்தருளியதிருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளுக்குப்பரமாசாரியத்தன்மையும் முன்னர்க்கூறிப் பின்னர் ஸ்மார்த்தருக்குஆசாரியப்பட்டம் யாங்ஙனமென்பார் பித்தரோ? அறிஞரோ? தேர்ந்தவர் தேர்க.

"அப்பதியிலந்தணர்தங்குடிமுதல்வராசின்மறைக் கைப்படுத்த சீலத்துக்கவுணியர் கோத்திரம் விளங்கச், செப்புநெறிவழிவந்தார் சிவபாதவிரதயரென், றிப்புவிவாழத் தவஞ்செய் யியல்பினருளரானார்" என்று பெரியபுராணத்தில் சிவபாதவிருதயர் வைதிகரென்றும், அவர்மனைவியாரை, "வாய்ந்தமறைமர பின்வரும் பெற்றியினா"ரென்றுங்கூறி,"மாபிரண்டுஞ் சைவநெறிவழிவந்தகேண்மையினார்" என்றமையால்உபக்கிரமத்தில்வைதிகரென்றதற்கிணங்க, "மரபிரண்டுஞ்சைவநெறி" என்னும்மேல்வாக்கியத்தைவேதத்தாற்சொல்லப்பட்ட சைவநெறியென்றே கொள்ளவேண்டும். இதனால் பெரியபுராணத்திற் சைவமென்று யாண்டுக்கூறினும் தந்திரத்தாற் சொல்லப்பட்ட சைவமன்றெனக்கொள்க. அன்றியும், பிள்ளையார் வேதத்தை விருத்திசெய்ய வவதரித்தனரென்றும் மறைவளர்திருவே, வைதிகநிலையேயென்றும், உபநயனகாலத்தில், தொல்லைமுறைவிதிச்சடங்கு மறையோர் செய்யத் தோலொடுநூல்தாங்கினார்" என்றும் "மறைநான்குந்தோமென்றும், ஓதினார் புகலிவந்த புண்ணியனாரெண்ணிறந்த புநித வேதம் என்றும், சுருதியாயிரமோதியங்கமான தொல்கலைகளெடுத்தியம்புந்தோன்றலாரை" என்றும், "கலைமறையோர் கவுணியனார் தம்மைக்கண்முன், வரு தியானப் பொருளென்றிறைஞ்சித் தாமுன் வல்லமறைகேட்டையந்தீர்ந்து வாழ்ந்தார்"என்றும்காண்டலால் ஆளுடைய பிள்ளையார் வைதிகர்க்கே பரமாசாரியராயிருப்பவும் இஃதுணராது. ஊரார் சொத்துக்குப் பேயாய்ப் பறக்கின்றாரென்று வைதிகரைநோக்கிக்கூறியது அகங்காரமிகுதியேயாம்.

"மையறு வேதமார்க்க மறந்து பாஷண்டமார்க்கக், கையான் மயக்கப்பட்டுக் கலியுகந்தன்னிலுள்ளோர், மெய்யுணர்வனந்தாநந்தமேனியாஞ் சிவனைப்பூசை, செய்யவாதரியார்செய்வார் தம்மையுஞ்செய்யவொட்டார், "முன்னான்மறைகளோதி முடிந்திடும்பரமமான, சந்நியாசத்தைச்சாரார் சார்ந்தவர்தமக்குந்திங்கு, பண்ணிடாநிற்பர் வேறுபல பல சொல்லிப்பின்னை, மன்னும்வீடெய்தாதானவழிகளே மருவாநிற்பர். "ஸந்நியாஸம்வரஹ்மஸா வ்யம்நவீக்ஷ்வந்திரோஹிதாஃ| வைதிகஷம்வகநீஷ்யதிவாஷம்ஸெலவஹதாஜநாஃ||"என்னும் காந்தம்

ருதசங்கிதையிலுள்ள பிரமகீதாவசனங்களாலும், 'எந்த காளில் விரக்தியடைகின்றானோ அந்த நாளிலேயே துறக்கக் கடவனென்னும், வேதவிதிவாக்கியத்தாலும், "யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" என்னும்சிவாகமவசனத் நால்கலியுகம்பிறந்து இரண்டாயிரம்வருஷஞ்சென்றபின் சங்கராசாரியஸ்வாமிகளவதரித்துப் பரமஹம்ஸாச்ரமிகளாவார்களென்று பராசத்தியாரை நோக்கிச் சிவபெருமான் அருளிச்செய்தமை பெறப்படுதலாலும், விரோதாதிகரணநியாயம்பற்றிப் பிரத்தியக்ஷ வேதவசனத்திற்கும் உபபிருங்கணமான புராணவசனத்திற்கும், சிவபெருமான் கட்டளைக்கும் விரோதமான "ஸம்வத்ஸரம் ... ..." என்னும் வசனம் பிரமாணமாகாதென்க.

இனி வேதாந்திகளை மாயாவாதியென்றும், மிச்சாவாதியென்றும் புலம்பும் புரட்டுரைகளை மற்றொருபத்திரிகையில் பிரமாணங்களைக்காட்டி நிராகரணஞ்செய்வாம்.

இங்ஙனம்,

பஞ்சநத க்ஷேத்திரவாஸி.

ம-ா-ா ஸ்ரீ சோமசுந்தர நாயகரது மாயாவாத மயக்கம்.

ம-ா-ா ஸ்ரீ. சூளை சோமசுந்தரநாயகரவர்களும் மாயாவாதமும் எனப்பெயரளித்து, முன் ஆடிமீ 10உ ஆவணிமீ 23உ ப்ரம்மவித்யாக்களில் பல விதகியாயங்களால் அவரை மறுத்திருந்தோம். அதற்கு ஒருவித நியாயத்தை மாத்திரமெடுத்துக்கொண்டு சென்ற செப்டம்பர் மீ 17உ 24உ மகா விகடதூதன்பத்திரிகைகளில் சில பேசினர். அவர் பேசியவையாவும் யாம் மறுத்தவிஷயங்களே. சொன்னதைச் சொல்லுங்கிளிப்பிள்ளையென்பதுபோல் சொன்னதையேசொல்லி இடத்தைவிணாக்கினர். அவர் வாய்மூடிராமல் மேலேமேலே எழும்புவதில் பள்ளத்தில் கம்பத்தை நாட்டி அது நிலைப்படுமாறு அதைக் குத்திக் குத்திக் கெட்டிப்படுத்துவதுபோல் அவரது மாயாவாதத்தை இன்[illegible] பல நியாயங்களால்மிகவு நிதிப்படுத்தவேண்டுவது எ[illegible] முடிந்தது. மாயாவாதம் வேண்டாம் வே[illegible] எவ்வளவு ஓடுகின்றாரோ அவ்வளவுக்கும் [illegible] முன்னே நிற்கின்றது.

இப்போது [illegible] வாதஞ்செய்யஎழுந்தவைப்ரம்மவித்தியா, [illegible] இரண்டுமேதப் பத்திரிகைகள். அவ்விரண்டி[illegible]பத்திரிகையின்கண் எழுதாமல் நாதை [illegible] [illegible]பத்திரிகையிற்சென்றெழுதினர். அதைவிட்டு இப்போது விகடதூதன்பத்திரிகையில் எழுதினர். இவரோடு வாதிப்பவர், இவரெந்தெந்தப்பத்திரிகையிலெழுதுகிறாரென்று விசாரித்துப் பார்த்து அந்தந்தப் பத்திரிகைகளைவாங்கிவாசித்துப்பார்க்கவேண்டும். இது சாத்தியமாமா? ஒரு வேளை எதிர்க்கக்ஷியினின்று பதிலெழுதுகிறவர் வாங்கிப்பார்த்துப் பதிலெழுதினாலும் இந்தவிஷயத்தைத் தொடர்ந்து பார்த்து, இதில் நியாயமிருக்கிறது, இதில் நியாயமில்லையென்று தெரிந்துகொள்ளவிரும்புபவர் எப்படித்தெரிந்துகொள்ளுவார்கள்? ஒருவர் ஒருபத்திரிகை வாங்குவார், அல்லது இரண்டுபத்திரிகை வாங்குவார்; எல்லாப்பத்திரிகைகளும் வாங்குவாரா? இதைவாதஞ் செய்வோர் கவனிக்க வேண்டியதன்றா? இதை ஏன் ஷை நாயகர் கவனிக்கப்படாது? இவர் எவ்வளவு எழுதினாலும் ப்ரம்மவித்தியாவில் அல்லது ஞானாமிர்தத்தில் எழுதலாமே. அவ்விரு பத்திரிகைகளையும் வாங்கிப்படியாவிடில் அதுகடிதக்காரர் குற்றமன்று. வாங்கிவாசியாதவர் குற்றமாம். அதற்கென இருபத்திரிகைகளும் ஆரம்பத்தில் தானே ஏற்பட்டு விட்டமையால் அவ்விரண்டிலும் எழுதுவது இருபக்காரர் குற்றமன்று; அதைவிட்டுச் சமயத்துக்கொருபத்திரிகையிலோடியோடி எழுதுவது தகுதியன்று. பத்திரிகையிலெழுதுவது ஜனங்களுக்குத் தெரிவிப்பதற்காம். பலவற்றிலெழுதுவது அவ்வாறு தெரிவதற்கிடமில்லாது போகிறது. பல பத்திரிகையிலெழுதினால் அததுபடிப்போர் அந்தந்தப் பத்திரிகையிலுள்ளவிஷயங்களைமாத்திரமறிந்துகொள்வார்; முன் பின் தொடர்பறியார்கள். இதிலென்னபயன்.

இந்த வாதத்தை யாரம்பித்தவர் ஓர் நாவலர்என்பவர். அவர் ப்ரம்மவித்தியாவில் ஞானாமிர்த பத்திராதிபரைக் கேள்விகேட்டார். அவர் பதில் பேசாமையால் இந்தச் சோமசுந்தரநாயகர் பேசினர். அதன்பேரில்ஷைபத்திரிகையைவாங்கிப் படிப்பவரான நாம், ஓர் இந்து எனப்பெயர் வைத்து மறுத்தெழுதினோம். அதைப் பூர்வபக்ஷஞ்செய்து எழுதவந்தார் இவர். அப்படி யெழுதவந்தவிவர், எமதுபேருக்குப் பதிலெழுதாமல் "ம-ா-ா-ஸ்ரீ சீநிவாசசாஸ்திரியாரும், அவரதுமாயாவாத ஜாலமும்" எனப்பெயர்கொடுத்து, சீநிவாசசாஸ்திரியாருக்கு எழுதினர். இஃதென்ன காரணம்? ப்ரம்மவித்தியா, ஷை சாஸ்திரியார் பத்திரிகையாயிருப்பதால் அதிலுள்ளவிஷயங்களெல்லாமவரே யெழுதினாரென மயங்கினாரோ? அப்படி மயங்கக்காரணமில்லையே. பத்திராதிபரெழுதுவதிதுவென்றும் கடிதக்காரரெழுதுவதிதுவென்றும் பத்திரிகையைப் பார்க்கும்போதே தெரியுமே. அப்படி இவர்க்குத் தெரியுமென்பதற்குச் சாக்ஷி ப்ரம்மவித்தியாவில் "ஆரியன்"என்று கையொப்பமிட்டு

Koviloor Digital Library

ம-ா-ா-ஸ்ரீ சபாபதிநாவலரவர்களைக்கேள்வி கேட்டதற்கு இவர் "ஆரியன்" என்றே பெயர் கொடுத்து நாவைகீல லோசலியில் பதிலளித்தாரே. ஓர் இந்து மாத்திரம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாராயமைக்கும், ஆரியன்மாத்திரம் ஆரியன் ஆனமைக்குங் காரணமென்னோ! இந்துவுக்குப்பதில் ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரை விளித்துப்பேசினுல் "ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் இதுவிஷயத்தைப்பற்றித் தாம் எழுதவில்லையே! எழுதினவர் பதில்சொல்வாரென அவர் சும்மாவிருந்துவிடுவார்; ஓர் இந்துவோ, நம்மை நோக்கிப் பேசவில்லையே, நாமிதற்குப்பதில் கூறவேண்டிய அவசியமென்னவென்று சும்மா இருந்துவிடுவார்; இருவரும் மௌனஞ்சாதித்து வாளாவிருந்து விடின், நாம் எழுதியதே தாபிதமாகிவிடும்" எனச் சூதானவெண்ணங்கொண்டு இங்ஙனம் வரைந்தனரோ? அல்லது இந்த விஷயமெழுதும்போது மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிபோடும்அகடிதகடன சாமர்த்தியமுள்ள மாயையானது அவரது புத்தியை மயக்கிவிட்டதோ? மூல பலராக்ஷசர்க்கு எங்கும் இராமனுயிருந்ததுபோல் இவர்க்கு எங்கும் ஸ்ரீநிவாஸசாஸ்திரியாராய்த்தோன்றிற்றோ? அந்தத்தோற்றத்தில் ஓர் இந்துவும் அடங்கி அவரும் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாராய்த் தோற்றினரோ? "இதுவரையில் ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரை எவ்வளவோ தூஷித்தோமே, அவர் வாயைமூடிப் பொறுமையோடிருக்கிறரே, அப்படி ஓர் இந்து பொறுக்காமல் இராமாநுஜநாவலரைப்போல் போலிசில் இழுத்துவிட்டால் மறுபடியுமன்றோ தண்ட மிறுக்கவேண்டும்? ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரையே விளித்து எழுதிவிட்டால் எத்தனைத்திட்டுத் திட்டினாலும் போலீசு பயமில்லாமல் நிர்ப்பயமாயிருக்கலா"மென்றெண்ணினரோ?"ஒருபெயரைவிட்டு ஒருபெயரைமாற்றியெழுதுவதுமெதுஜன்மசுபாவந்தானே, இப்போது புதிதன்றே" என்று கருதி யெழுதிவிட்டாரோ? "நாமெழுதிய விஷயங்களைச் சிற்றுளிபோல் துளைத்துப் பலபிரகாரங்களாக ஓர் இந்து எழுதியிருக்கின்றமையால் அவருக்குப் பதிலெழுதினல் முற்றும் மறுப்பெழுதவேண்டும், சாஸ்திரியார் பெயரைவைத் தெழுதிவிட்டால் எல்லாவற்றுக்கு மெழுதவேண்டுவதில்லை, எல்லாம் எழுதினதுபோல் குழப்பிடவிலா"மென்றெண்ணினரோ? "ப்ரம்மவித்தியாவைப் படிப்போர்க்கன்றோ ஓர் இந்துஎழுதினுரெனத் தெரியப்போகிறது, விகடதூதனைப்படிப்போர்க்குத் தெரியப்போகிறதா, ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்தான் எழுதினுராக்கும், அவருக்குத்தான் இது பதிலாக்குமென வெண்ணிக்கொள்ளட்டும்" என்று நினைத்தாரோ "ப்ரம்மவித்தியாவில் வெளிவரும் கிரந்தகாரரெல்லாம் தம்சொந்தப்பெயரோடு வெளிவராமையால் அவர்களைத் தூஷிப்பதில் என்னபயன், ஸ்ரீநிவாஸசாஸ்திரியார்தான் வெளிப்படையாய் வெளிவந்திருக்கிறர், யாவரையும் அவராக வைத்து மொத்தமாய்த் தூஷித்துவிடுவோ" மெனநினைத்தாரோ? "ஓர் நாவலரோடு வாதஞ்செய்யும்போது, அவர் நாயகரை எவ்வகைப்பட்ட சைவராகவுஞ் சொல்லிக்கொள்ள இடம் வையாமல் அசைவராக்கி நியாயத்தால் கட்டுப்படுத்திவிட்டமையால், இனி, அசைவரினின்றும் தப்பிச் சைவராக யோசித்து, ஓர் இந்துவைப் பிராமணராக்கிக் கூப்பிடின், (கல்லாலெறிந்தவன் பேரில் குரங்கு விளாங்கனியால் அடிப்பதுபோல்) ஓர் இந்துவும் நம்மைப் பிராமணராக்கிப் பதில் கூப்பிடுவார், அப்போது அப்பெயரைத் தாங்கிக்கொண்டு, ஷை ஓர் நாவலரிடத்திற் சென்று, நீர் எம்மை அசைவராக்கினீரே, இப்போது என் செய்வீர், நாம் பிராமணராய் விட்டோமே, இனி ஆதிசைவராகவாவது, மகாசைவராகவாவது ஆய்விடுகிறோ" மென்று சொல்லக்கருதி,எம்மை ஸ்ரீநிவாசசாஸ்திரியாராக வைத்துப்பேசுகின்றரோ? ஓர் இந்துவைச் சாஸ்திரியார் என்று கூப்பிடின் அவர்பதிலுக்குச்சாஸ்திரியார், பண்டிதர், நாவலர், வித்துவான், புலவர் முதலிய பெயர்களிலேதேனும் ஒன்றைவைத்துக்கூப்பிடுவார், பின் அப்பெயரிலொன்றைத் தம் சொந்த பெயராக்கிக்கொள்ளலாமென வெண்ணினரோ? இன்னும் விரிவஞ்சி நாம் சொல்லாதவற்றுளெதை நினைத்தாரோ? இவையல்லாவிடில் வேறு எதைக் கருதி இவ்வாறு ஆளைப்புரட்டி ஆள்பேரில் போட்டாரோ? நிற்க, இனி விஷயத்திற் செல்வாம்.

சமயிகளுக்குப் பேருண்டாவது அன்னோர் ஜகத்துக்குக் கூறும் முதற்காரணத்தையே ஆதாரமாகக் கொண்டது என்று எங்கே கூறப்பட்டுள்ளது என்று கேட்டு, காலவாதிக்குக் காலத்தைத்தவிர வேறுகடவுளில்லை, பூதவாதிக்குப் பூதத்தைத்தவிர வேறு கடவுள் இல்லை யென்று கூறி அதனால் தனது தெய்வமாகிய பூதத்தின்பெயரடியாகப் பூதவாதியும், தனது தெய்வமாகிய காலத்தின் பெயரடியாகக் காலவாதியும் பிரசித்தி பெற்றுர்கள் என்கிறுர். முதற்காரணத்தைச் சொன்னுல் நாம் மாயாவாதியாகவேண்டுமென்றும், தெய்வத்தைச்சொன்னுல் மாயாவாதியென்னும் பேர் அடிபட்டுப்போம் என்றும் பார்க்கிறுர். அவ்வாதிகளுக்குத் தெய்வமென்பது கிடையாது. அவர்களுக்கு உலகத்துக்கு முதற்காரணமான பொருள் காலமும்,பூதமுமே. அவற்றினின்றே உலகமுண்டாயிற்றென்பது அவர்கள் கருத்து.மாயையினின்றும் உலகமுண்டாயிற்றெனஇவர் கூறுவதுபோல்அவர் காலபூதங்களினின்றும் உலகுண்டாயிற்றெனக்கூறுகின்றனர்.இவர் உலகத்துக்குமுதற்பொருள்மாயையைவிடவேறேயொன்றுமில்லையெனஎங்ஙனம்பார்க்கின்றன

Koviloor Digital Library

ரோ. அங்ஙனமே அவர் உலகத்துக்குமுதற்பொருள்காலமும், பூதமுந்தவிர வேறே யொன்று மில்லையெனப் பகர்கின்றனர். இவர்க்கும், அவர்க்கும் முதற்காரணப்பொருள் வரையில் ஒத்துப்போயிற்று. இவர் முதற்காரணப்பொருளானமாயையைச் சடமென்கின்றார். அவரும்முதற்காரணப்பொருளானகாலபூதங்களைச்சடமென்கின்றனர். உலகத்துக்குமுதற்காரணம் காலம்பூதமென்று சொல்லுங்காரணத்தானே அவர் காலபூதவாதிகளென எல்லாமதத்தினரு மொப்பிப் பூர்விகமாகச் சொல்லி வருகின்றனர். அதனால் அவர்க்கொரு குறைவுமில்லை. இவர் மாயையை உபதானகாரணமாகக்கொண்டு, அதன்மேரில் சிவனை நிமித்தகாரணமாகக் கொள்ளுகின்றனர். அந்தச்சிவனை வணங்குங்காரணத்தான் சைவனென்கிறார். நிமித்தகாரணனான சிவனை வணங்குங்காரணத்தான் சைவனானதல்போல் உபாதானகாரணமாக மாயையைச் சொல்லுகிறவரையில் மாயாவாதியாக ஏனாகமாட்டார்? தெய்வத்தின்பேரடியாகவே சமயிகளுக்குப்பேருண்டாவதுண்மையாயின் பாஞ்சராத்திரமதம், பாதஞ்சலமதம், நையாயிகமதம், மீமாம்சமதம், அருகமதம், பௌத்தமதம், மயம்மதுமதம்முதலிய பல மதப்பேர்தெய்வத்தின்பேரடியாக ஏன்வரவில்லை? இதனால் சமயவான்களுக்குப் பேருண்டாவது தெய்வத்தின்பேரடியாகவேயென்பதுபொய்த்துப்போகின்றதன்றோ? ஆதலால் சமயிகள் பலகாரணங்களால் பலபேர் பெறலாமென்பதே திண்ணமாமென்க. ஒருவனே நியாயத்தைவாதிப்பதால் நியாயவாதியென்றும், கணக்கெழுதுவதால் கணிதனென்றும் பெயர்பெறுவதுபோன்று சிவனையுபாசிப்பதாற் சைவனென்றும், மாயையைமுதற்காரணங்கூறுவதால் மாயாவாதியென்றும் பெயர்பெறயாதுதடை? நாம் மாயாவாதியென்றுமாத்திரஞ்சொன்னாலன்றோ இவர் தடுக்கவேண்டும்? மாயாவாதியென்றுஞ்சொல்லுகின்றோம். சைவனென்றுஞ் சொல்லுகின்றோம். இந்த விஷயத்தை முன் ப்ரம்மவித்தியா 11-வதுபத்திகையிலே "மே கூறியிருக்கின்றோம். இவர், "மாயையொரு "பொருளும், சிவனொருபொருளும் சிவனொருபொருளுமாக மூன்றுபொருள்கள் ஒன்றிலொன்று விஜாதியாயிருப்பனவாக அங்கீகாரமாகையாலும் இவற்றுள் யாம் பெரிய பொருளாக மதித்து வழிபடுவது சிவமொன்றேயாகையாலும் சீவனாகிய எம்மையே யாம் வழிபடுவதும்எம்மிற்கிழிட்ட மாயையையாம்வழிபடுவதும் "அநாவசியமாகையாலும் காலவாதிகள் காலத்தையே பர'மென்றும், பூதவாதிகள் பூதத்தையே பரமென்றும் வாதிப்'பதுபோல், யாம் மாயையை கடவுளென்று வாதிப்பதில்லை'யாகையாலும் யாம் வழிபடத்தக்க சிவத்தின்பேரடியாக'வே சைவர் எனனும் பெயர் எமக்குச்சிறந்ததென்க" என்றார். இது உண்மைதான். நாமுமிதையங்கீகரித்தமையால்தான் மாயாவாதியென்று கூறுவதோடு சைவனென்றுங் கூறுகின்றோம்; இன்னும் பலகாரணங்களால் பல பேருமுண்டென்றுங்கூறுகின்றோம். எல்லாப்பேருமங்கீகரித்து மாயாவாதியென்னும்பேர் மாத்திரங்கூடாதென்பதுதான் பிசகு. இவர் 'சைவரென்னும் பேர் எமக்குச்சிறந்தது' என்பதனால் மாயாவாதியென்னும் பெயர் சிறப்பல்லாததென்றேற்படுகின்றது. நாம் சிறப்பு, சிறப்பல்லவென்பதைப்பற்றிப் பேச வந்தாமில்லை. சந்திரனைப்போல் முகமென்னின் எந்தக்குணத்துக்காக எந்த உவமானம் எடுக்கப்பட்டதோ அதுவரையில் சரியா அல்லவாவென்பதைப் பார்த்துக்கொள்வதைவிட்டு, சந்திரனாகாயத்திருக்கிறானே, முகம்பூமியிலிருக்கிறதே, சந்திரனுக்குக்களங்கமிருக்கிறதே, முகத்துக்குக் களங்கமிருக்கிறதா, சந்திரன்வரவரத்தேய்ந்து குறைவுபடுகின்றானே, முகம் அவ்வாறு தேய்ந்து குறைவுபடுகின்றதாவென இவ்வாறு பலபயனற்ற பிரசங்கங்கள்செய்வது நியாயமன்று. உவமானமெல்லாம் ஏகதேசமாகும். காலவாதி, பூதவாதிகள் கொள்கைக்கும், சைவர்கொள்கைக்கு முற்றும் அதாவது இவரெழுதிய யாவும் ஒத்திருக்கவேண்டுமென்னுமவசியமில்லை. உவமானம்ஏகதேசமென்றறிந்தும் வரைகடந்து பேசுதற்குக் காரணம் மாயாவாதி யென்னும் பேரினின்றும் விலக்கிக் கொள்வதற்கே. காலவாதியையும், பூதவாதியையும் ஒரு புடையொப்பாகச் சமத்துவங் கூறுகின்றோமேயன்றி முற்றுமன்று. சைவருக்கும், கால பூதவாதிகளுக்கும் மற்ற விஷயத்தில்எவ்வளவுபேதமிருக்கின்றதோ, அவ்வளவு பேதம் காலவாதிக்கும்பூதவாதிக்கு மிருக்கின்றது. இருக்கினும்முதற்காரணங் கூறுகிறவரையில் இருவரும் ஒத்திருப்பதுபோல் மாயாவாதியான சைவரும் முதற்காரணங்கூறுகின்றவரையில் ஒத்திருக்கின்றனர். இந்தச்சைவத்தைமாயாவாதமென்று கூறுகின்றோமேயன்றி, நீலகண்டசிவாசாரியாருடைய சைவமதத்தை அவ்வாறுகூற வொருப்படோம். அவர் உலகுக்குச் சிவனை அபின்னநிமித்தோபாதான காரணமாகக்கூறுகின்றார். சிவனைக்கேவலம் நிமித்தகாரணமாத்திரங்கூறுவது சுருதிவிருத்தமென்கிறார். இராமாநுஜமதஸ்தரும் அவ்வாறே. வீரசைவமத சோமநாத பாஷியக்காரரும் அங்ஙனமேயாம். ஆதலால் அவர்களெல்லாம் மாயாவாதிகளாகமாட்டார்கள்.

இனி அத்துவைதிகளை மாயாவாதிகளென்றும் சொல்வதற்கு இவர் முன்னோர் வாக்கியங்களே பிரமாணமென்கிறார். இவர் கோர்ட்டில் ஒருநாளேனுஞ் சென்று வாதி சொல்வதையும் பிரதிவாதி சொல்வதையும் இருவருடைய வக்கீல்கள் நியாயவாதஞ்செய்வதையும்அதன்பேரில்ஜட்ஜி

Koviloor Digital Library

திர்ப்பளிப்பதையும் பார்த்திருப்பாரேல் இவ்வாறு பேசமாட்டார். நமக்கு இவரும் பிரதிவாதி; இவர் முன்னோரும் பிரதிவாதி. எப்போதும் வாதிகள் தங்கள் குற்றங்களை மறைத்துப் பிரதிவாதிகள் பேரிலேயே குற்றங்கூறுவார்கள். அன்றித் தங்குற்றத்தையும் பிரதிவாதிகள் பேரில் கூறுவார்கள். பிரதிவாதிகளு மங்ஙனமே. வக்கீல்களும் அவரவர் பக்ஷத்தையே யுண்மையென்று வாதிப்பார்கள். இது என்றுமுள்ள சங்கதிதான். இதைபாராய்ந்து பார்த்துத் திர்ப்பளிக்க வேண்டியவர் ஜட்ஜி. இது சிறுபாலருக்குந் தெரிந்த விஷயம். இதை விட்டு வாதிகள், அல்லது பிரதிவாதிகள் சொல்வதே மெய்யென்பவருளரோ? அங்ஙனமாயின் இருபாலாரும் நேர் விரோதகமாகப் பேசுவார்களே. அவற்றிலெதை மெய்யென்றங்கீகரிப்பது? இவர்முன்னோர் கூறுவது இவர்க்குப் பிரமாணமாகுமேயன்றி மற்றவர்க்கன்றே. இவர் முன்னோர் கூறுவது மற்றவர்க்கும் பிரமாணமென்னின்? மற்றவர் முன்னோர் கூறுவது இவர்க்குப் பிரமாணமாகவேண்டும். அங்ஙனமாயின் இவர் மதம் நிலைபெறுதலெங்ஙனம்? வைணவமுன்னோர் கூறியபடிபார்க்கின் விஷ்ணுபரத்துவமேயாமன்றிச் சிவன் பரத்துவமாவரோ? அதைஇவரொப்புவரோ? ஆதலால் அவரவர்முன்னோர் வாக்கியங்களை அவரவர் மட்டில் வைத்துக்கொள்வது தகுதியாம். மற்றவரோடு வாதம் புரியுங்கால் மற்றவர்க்கும் இவர்க்குமுரிய பிரமாணங்களை மாத்திரமெடுத்துக்காண்பிப்பது நியாயம். அத்துவிதியான தத்துவராயர், சைவர் மாயாவாதியென்று கூறவில்லையென்றார். இவர்முன்னோர் உலகிற்கு மாயை முதற்காரணமல்லவென்றுவது மாயை அசத்தென்றுவது கூறினரா? கூறியிருப்பின் தத்துவராயர் அவசியமில்லை. இவரை மாயாவாதியன்றென நியாயமே கூறும். அவ்வாறில்லையே. தத்துவராயர் வேதத்தைப் படித்து அதன்பொருளையுணர்ந்து அதன் பயனைப்பெறுதவர் மாயாவாதியென்று கூறினர். அதையிவருமொப்பினர். அதனோடு மாயாவாத விவேகத்தையுங்கூறி மறுத்திருக்கிறார். இவர் முன்னோர் அத்துவிதிகளை மாயாவாதிகளென்றார். அத்துவிதியான தத்துவராயர் மாயாவாதத்தைமறுத்திருக்கிறார். தாம் மாயாவாதியன்றெனவுங் காட்டுகின்றார். இதனால் அத்துவிதிகள் மாயாவாதிகளல்லரெனவாகின்றது. தத்துவராயர் இந்தவிஷயத்தில் தம்வரையில் தாம்பார்த்துக்கொண்டார். இதுவேபோதும். இந்தச்சைவரை மாயாவாதிகளென்று சொல்ல அவருக்குச்சந்தர்ப்பம் நேரிடவில்லை. ஆனால் இவர் சித்தாந்தத்தைமாத்திரங் கண்டித்திருக்கிறார். இவர் முன்னோர் அத்துவிதிகளை மாயாவாதிகளென்றுகூறியிருக்கின்றனரே யெனின்? அது துவேஷத்தால் கூறியது. அதுவும் தங்குற்றத்தைப் பிறர்மேல் ஏற்றியது. அந்தந்த மதவாதியர் கூறுவதைக் கவனிக்கப்படாது. நியாயமொன்றையே நோக்கவேண்டும். நியாயப்படி இவரே மாயாவாதியாகின்றனர். அத்துவிதிகளே பிரமவாதிகளாகின்றனர்.

தத்துவராயர், 'சைவநெறியே யுய்யுநெறியது' என்று சைவமதத்தையே பின்னர் வியந்து உபாதியடைந்தனரென்று கூறி, இவரது சைவத்தைத் தானுய்யு நெறியெனச் சொன்னரென்றார். இவரது சைவத்தையுய்யும் நெறியென அவர் கூறியிருப்பின்,

'ஞானம்போலச் சில சொல்லிநாடற்கரிய முத்தியினும்,
தானுஞ்சிவமும்பாசமுமாஞ்சைவப் பேய்க்கும் வாரீரோ'

என்னும் செய்யுளையும் இதுபோன்ற வேறு பல செய்யுள்களையும் கூறியிருக்கமாட்டார். ஆதலால் அவர் பகர்ந்த சைவம் அத்துவித சைவமாம் என்றறிக.

பின்பு 'பிரமவாதியாகிய விவர், இவரது பிரமத்தைஅப்படியேசுத்தமாக வையாமல், மாயையினுங் கீழிட்டவுலகுக்கு உபாதானமாக்கியவாறென்னை' என்று கேள்வி கேட்கிறார். இதற்குச்சமாதானம் ஷை 11-வது பத்திரிகையிலேயே கூறியிருக்கின்றோம். இங்கும் கூறுகின்றோம். உபாதானமாக்கியதால் என்ன தோஷமோ அறிந்திலம். பாம்புக்குக் கயிறும், வெள்ளிக்குக் கிளிஞ்சலும், கள்ளனுக்குக் கட்டையுமுபாதானமானதினால் கயிறு, கிளிஞ்சல் கட்டை இவற்றினுக்கு என்ன நஷ்டம்? பாம்பு முதலியவற்றிற்குக் கயிறு முதலியன விவர்த்தோபாதான காரணமானதினால் காரணத்திற்கு யாதொரு குறைவுமில்லையே. பால் தயிராவதுபோல் சொன்னால்தோஷமுண்டாம். பால் தயிராவது போலாயின் பால் கெட்டுத் தயிராகவேண்டும். அப்படியே பிரமங்கெட்டு உலகாகவேண்டும். பால்கெட்டுத் தயிராவதில் பின்னுமொரு தோஷமிருக்கின்றது. தயிர் பின்னும் பாலாகாது. அவ்வகையே பிரமங்கெட்டு உலகாயின் பின்னும் பிரமமாகாது. இது பரிணாமவாதம். இது அத்துவிதிகளுடைய சித்தாந்தமன்று. விவர்த்தோபாதான காரணமேசித்தாந்தம். மேல் பிரமம் நிர்மலத்துவங்கெட்டு ஜடவுலகுக்குபாதானமாயினதை நாம் ஒப்பியதாகக் கூறுகின்றார். பிரமம் விவர்த்தோபாதானமாகவொப்பியதால் நிர்மலத்துக்கொரு கெடுதியும் வரமாட்டாதே. உலகு சத்துப்பொருளென்று சொல்லின் தோஷம் தோஷமே. கயிறு, கயிறாயிருக்க அதில் அரவு தோன்றுமானால் கயிற்றினிலைமைக்கு யாதொரு குறையுமின்றியிருப்பதுகண்கூடன்றோ? 'பிரமத்தையுலகமாக்கிய பிடைமதம் பிரமவாதயாவதெங்ஙனம்' என்று துடுக்காகப் பேசி, நாயகரதுஇய

ற்மைகத் தன்மையைக்காட்டுகின்றார். பிரமம் உலகமாவது
இன்னவிதமென மேலே காட்டிய வகையை யறிந்துகொ
ள்ளாத குறைதான் அவரையப்படிப்பேசவிடந்தந்தது.
இவரைப்போன்ற ஆராய்ச்சியில்லாச் சிலர் எழுதிவைத்த
நூல்களை மெய்யென மருண்டு அதுபோல் பேசுகின்ற
னர். இதன்பேரில் துர்மாக்க வார்த்தைகள் சில பேசிமுடி
த்தார். துன்மார்க்கர்கள் சண்டைபோடும்போது பலசாலி
அடித்தால் அடிபட்ட பலவீனன், தான், தோல்வி அடை
ந்த அவமானம் பொறுக்கமாட்டாமல் வாயில்வந்தபடி
திட்டுவதைக்காண்கிறோம். பலமுள்ளவன் கையால் வேலை
தீர்க்கிறான். பலமில்லாதவன் கைவலியில்லாமையால்திட்
டுகிறான். அவ்வாறே விஷயங்களில் நியாய பலமுள்ளவர்
விஷயத்தின் பேரிலேயே திருஷ்டியுள்ளவர்களாயிருப்பார்
கள். ஏனையோர், விஷய பலமில்லாமையால் தூஷணையி
லேயே திருஷ்டியுள்ளவர்களாயிருப்பார்கள்.

இதுவரையில் பேசிவந்த விஷயங்களால் அத்துவிதிகள்
பிரமவாதிகளேயன்றி மாயாவாதிகளன்றெனவும், இச்சோ
மசுந்தரநாயகரே மாயாவாதியெனவும் நியாயத்தால் சித்தா
ந்தமாயிற்றென்க.

இதுவிஷயமாக ப்ரம்மவித்யா பதினோராவது பத்திரி
கையி னநுபந்தத்தில் சூளைநாயகரைப் பலவகையிலும்
மறுத்திருக்கிறோம். அனேக கேள்விகள் கேட்டு அவற்றி
லுள்ள தோஷங்களை யெல்லாம் விளங்கக்காட்டினோம்.
அவைகளையெல்லாம் மறைத்து, நாமே நியாயங்காட்டி ம
றுத்த ஒரு விஷயத்தை மாத்திரமெடுத்து, சொன்னதை
யே சொல்லிக்கொஞ்சங் காகிதத்தை நிரப்பினார்.

ஷைபத்திரிகையில் ‘மாயையைப் பொருளென்கிறாரா?
‘குணமென்கிறாரா? பொருளென்கிறாரென்னில்சிவமாகிய
‘பொருள் பரிபூரண மென்றிவர் ஒப்பியிருக்கின்ற
‘மையாலும் அச்சிவமில்லாதவிடமில்லாமையாலும் மா
‘யையென்னும் பொருளிருக்கவிடமில்லாமற்போம். குண
‘மென்கிறாரென்னில் குணத்திற்குக் குணியெது? மாயை
‘யைப் பரிக்கிரகசத்தியென்றும் பின்னுசத்தியென்றுங் கூ
‘றுகின்றமையாலுஞ் சத்தியென்பது குணமாகின்றமையா
‘லும் இதற்குக் குணி சிவமன்றி வேறு பொருளில்லாமை
‘யாலும் சிவத்தைக் குணியாகவும் மாயையைக் குணமாக
‘வு மொப்ப வேண்டியவராகின்றார். இதைவிட வேறுவழி
‘அவருக்கில்லை. அவ்வாறாயின் மாயைசித்தா? சடமா?சித்
‘தாயின் சிவத்துக்கு ஞானங்குணமாகலின் ஒத்துப்போம்.
‘நாயகரவர்கள் மாயையைச் சடமென்றாராகலின் ஞான
‘மயமான சிவனிடத்திற் சடமிருத்த லெங்ஙனமமையும்?
‘ஒன்றுக்கொன்று பகைக்குணமாகலின் இரண்டு பகைக்கு
‘ணங்களொருபொருளிடத்திருத்தல் கூடாதே’

என்றும், ‘அம்மாயை பிரமத்திற்குப் பின்னமா? அபின்
‘னமா?பின்னமெனின் பிரமமொருபொருளும்மாயையொரு
பொருளுமாயிரண்டாகக் கண்டப்பட்டுப்போவதுமன்றி,
‘பிரமப்பொருள் அபரிபூரணமென்று கூறவரும்,’ என்றும்
இம்மாதிரிப் பலகேள்விகள் கேட்டு அவற்றிலுள்ள பெருந்
தோஷங்களை யெல்லாங்காட்டி, பின் வேதாந்தசித்தாந்த
வொற்றுமையைத் திருட்டாந்த பூர்வமாய்க்காட்டினோம்.
அந்தப்பத்திரிகையைப் பார்த்தால் யாவும் விளங்கும்.ஷை
நாயகர் ஆக்ஷேபங்களுக்கெல்லாம் அதிற் சமாதானம் கூறி
யிருக்கின்றது.

தொடக்கத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் ‘மிண்டிய
மாயாவாதமென்னுஞ் சண்டமாருதம்’ என்று கூறியதாக
க்கூறி, அதனால் தாம் மாயாவாதியல்லாததுபோல் பேசு
கின்றார். மாணிக்கவாசக சுவாமிகள் பரமாத்மாவை தியா
னத்தால், அவர், பரமசிவனுக்கு ஏக சக்கராதிபதித்துவஞ்
சொல்லும் அத்துவிதிகளான முழு ஆஸ்திகரை மாயாவா
தியென மறந்துஞ் சொல்லார்; பரமசிவனுக்குமூன்றிலொ
ருபங்கு இடத்தையும், ஜீவர்களுக்கு மூன்றிலொருபங்கு
இடத்தையும், உலகத்துக்கு மூன்றிலொருபங்கு இடத்தை
யும் கூறி, உலகுக்கு மாயையைமுதற்காரணமாகக்கூறும்
மூன்றிலொருபங்கு ஆஸ்திகரும் இரண்டுபங்கு நாஸ்திக
ருமான இவர் பக்ஷத்தாரையே மாயாவாதியெனக்கூறியுள்
ளார். மற்றப்படி அருணந்திசிவாசாரியார், உமாபதி சிவா
சாரியார் முதலானோர் எமது கக்ஷிக்கு இவரைப் போலெ
திர்க்கக்ஷியாரானமையின் அவரை இவருடனே யொன்
றாக்கிக்கொண்டோம்.இவரது கொள்கையே அவரதுகொள்
கை, அவரது கொள்கையேஇவரது கொள்கையாகலின்இரு
வரையுமொருவராகவேபாவித்துமறுக்கின்றோம்.இப்பாதிரி
மகாவிகடசூதனுக்கு மொரு பிரதி அனுப்பியிருக்கிறோம.

(இன்னும்வரின் பின்னும் வரும்

ஓர் இந்து.

Chidamdaram—Printed and Published for the
Proprietor at the "Brahmavidya Press" No 58.
Sen kalooneer Pilliarkoil Street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 17

ஸ்ரீ வித்யா ஸங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிகவாரணர்களாகிய த. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த ௧௮௯௨௵ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் திர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

நந்தனஸம்வத்ஸரம்.
ஆவணி ௨௨-உ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
பாஸ்கர ஸேதுபதி:.

[illegible]

கைம்பெண்களுக்கு மறுமணஞ்செய்தல் அவைதிகமென்பது.

தொடர்ச்சி.

விதவைகளுக்குச் செய்யும் முடியிறக்கம் கோபத்தா ல் அல்லது அழுக்காற்றால் செய்யப்பட்டதல்ல. ஆயின் நலவிரதங்களையும் காமத்தைத்தடுக்கும் பலவழிகளை யும் கண்டுபிடித்துக் கைம்பெண்களுக்கு உபதேசித்தவர் அவர்களிடத்திற் கருணைநிறைந்தவாகளென்பதே உண் மை. இக்காலத்தவர் முன்னோராசாரங்களை முற்றிலுந் தொலைக்க ஆரம்பித்தவராகவே இவர் எங்கும் இம்மறு மணத்தை நடத்தத்துணிகின்றனர். நற்குலத்திற்பிறந்த பெண்கள் தமது குழந்தைகளுக்குக் கடுமையான ஆப த்து நேர்ந்தபோதிலும் வேறொரு மணவாளனுக்கு மறு மணஞ்செய்விக்க அவர் ஒப்புவதில்லை. இவ்வுண்மையறி யிந்த நவீன சீர்திருத்தக்காரர் அங்கும் நுழைந்து அவர் மதிகளை மயக்க முயல்கின்றாரென்பதை எல்லோருமறிந் திருக்கவேண்டும். இவ்விஷயத்தை எவ்விதத்தும் எல்லா ப்பெண்களுள்ளத்தும் நாட்டவேண்டியே பெண்களுக்கு க்கல்விகற்பிக்கவும் இவர் முயல்கின்றனர். இவ்வுண்மை யை மற்றவரும் அறியவேண்டி ஒருவருடத்திற்கு முன்பே 'பெண்கள் கல்வி,, யெனமகுடந்தந்தோர் விஷயம் ப்ரம்ம வித்தியாவுக்கு அனுப்பினோம். அது இதுகாறும் வெளி வராததற்குக்காரணம்யாதுமதெரியவில்லை. ஆதலால்அவ் விஷயத்தைப்பற்றி இங்கு ஏதும் எழுதாது தொட்டவிஷ யத்தைத் தொடர்ந்து மேலும் செல்வோமாக. அந்த ணர் செய்யும் திருமணசம்ஸ்காரத்திலுள்ள ஓர் மந்திரம் இம்மறுமணத்தை. மறுக்கின்றது. அதாவது:—'சோமன் கந்தர்வனுக்களித்தான். கந்தர்வன் அக்கினிக்கு அளித் தான். அக்கினி செல்வத்தையும் இப்பெண்ணையும் பெ ண்வழியாகக் குழந்தைகளையும் எனக்களித்தான்' என் பது. இதன் பொருள் சோமன் என்னுந்தேவன் கன்னி களுக்கு உரிமை பூண்டவன். அவன் தனது ஆட்சியில டங்கிய கன்னியை அவள் நல்லுருவம்பெற்று நற்கணவனை அணையவேண்டிக் கந்தர்வனிடம் கொடுப்பான். அவன் அக்கன்னிகைக்கு நல்லுருவங்களைக்கொடுத்து பசுபுத்தி ராதிகளுடன் வைதிகாக்கினிக்கு அதிகாரியாக வேண்டி அவளை அக்கினியினிடம் கொடுப்பான். அவ்வக்கினி பசு தன் புத்திரன் முதலிய சர்வசுகங்களுடன் என்னிட த்தில் கொடுத்தான் என்பது. இது ருக்குவேதம் எட் டாவது அஷ்டகம் மூன்றாவது அத்தியாயத்திலுள்ளது. இது வரன் சொல்லக்கூடிய மந்திரம். இதன்பொருளை அறிந்தவர் மறுமணத்துக்கு இடங்கொடார். தேவர்கள்

Koviloor Digital Library

[illegible] [பெண்பாபம் போல்லாது] [illegible]

சத்தியவாதிகளாகவே அக்கினிமுதலிய கடவுளர் 'ஒருவருக்குக் கொடுத்த பொருளை மீண்டும் தன்வசமாக்கமாட்டாரென்பது உண்மை. உலகத்திற்பிறந்த அரிச்சந்திரன் முதலியவர்களோ சத்தியத்தைக்கடைப்பிடித்து நடப்பாராயின் சத்தியத்தைத் தன்னுயிராகக்கொண்டகடவுளர் அதைமீறி நடப்பாரென்பது ஒருவாற்றானுமியையாது. ஆகலால் சத்தியமார்க்கத்தைக் கைகொள்ளும் எந்தச்சிஷ்டரும்இம்மறுமணத்திற்கிடங்கொடார். ஆயின் மேற்கூறிய வேதவாக்கியம்மறுமணத்திற்குப் பெருங்கோடரியென்க. இவ்விஷயத்திற் சிலர் பெண்கள் பருவமடைதற்குமுன் மணவாளன் மரித்திடில் அவர்க்கு மறுமணம்செய்யலாமென்றும் அது குற்றமற்றதென்றுங்கூறுகின்றனர் ஒரு சுருதி மறுமணத்தை விதித்தும் ஒருசுருதி அதைவிலக்கியுமிருக்குமிடம் அது ஒருசம்சயத்தையுண்டாக்கி இருவழியிலும் நியாயமுண்டெனக்காட்டும். அப்படிப்பல வேதவாக்கியங்களிற் பொருள் கூறுவதுமுண்டு. அதுவருமாறுகாண்க:—'எவ்வுயிரையும் புண்படச்செய்யற்க' என்னும் சாமானிய விதி. 'அக்கினீ|சோமிய பசுவை வேட்க' வென விசேடவிதி. இதில் விசேடவிதியானது பொதுவிதியைச்சங்கோசிக்குமென்பது ஸ்ரீமத் ஆசிரியர் வாதராயண முனிவரால் 'அசுத்தமெனப் பொருந்தாது சத்தத்தால்' என்னும் சூத்திரத்தில் துணியப்பட்டது. இச்சூத்திரத்தின் பொருள் 'வேள்விமுதலிய நற்கிரியைகள் அசுத்தமாதல் பொருந்தாது. சப்தப்பிரமாணமென்னும் அனந்தவேதங்கள் அதைவிதித்தலால்' என்பது. இனி ஒன்று பொதுவும் மற்றொன்று சிறப்புமாக விருப்பின் அங்கே சிறப்புவிதிசிறக்கும். மேற்கூறிய விஷயத்தில் வேதவாக்கிய மூலப்பிரமாணம் ஏதுமகப்படாமையால் இம்மறுமணம் அவைதிகமெனக்கூறுவதில் தடைஏதுமில்லை. இது நிற்க; இக்காலத்துப் படித்து இறுமாந்த சில மடந்தைகள் புருடருக்கும் பெண்களுக்கும் எல்லாவிதத்தும் ஒப்புமை பேசவேண்டுமென விதண்டாவாதம பேசுகின்றனர். புருடர்கள் மட்டும் பெண்டிழந்தவுடன் மற்றொருத்தியை மணக்கலாமாம். மங்கையர்க்கு மணவாளனிறந்தவுடன் மறுமணம் கூடாதாம். இஃதென்ன நியாயம்? பெண்பாவம் பொல்லாதென்பதை இவர் அறியாரோ. புருடருக்கு மறுமணத்தை விதித்த சாஸ்திரம மங்கையர்க்கு மறுமணம் விதிக்கமறந்ததோ' என்பாதி பலதுராட்சேப களங்கங்கள் நிகழ்வதால்அவர்கள் சங்கையை நியாயத்துடன் நிவர்த்திப்போம். முதலில் பெணகள் புருடருக்குச் சமானமாகமாட்டாரென்பதை நிருபித்துப்பின்னர் விவாகவிஷயத்தைப்பற்றிப்பேசுவாம். பெண்கள் சரீரம் புருடர் சரீரத்தைப்போல்சுக்

[illegible]

லசுரோணிதத்தால் உண்டானது வாஸ்தவமே. அவைகளுக்கு ஆகாரம் முதலியவைகளுமின்பதுன்பங்களும ஒத்தே யிருக்கின்றன. அதுகொண்டே லோகாசாரிய சுவாமிகள் சூத்திரபாடியத்தில் பசுக்களுக்கும் மனிதர்க்கும் அறிவொன்றே விசேடமென்றனர். இவ்விதம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் பலவிஷயத்திற்பொருத்தமிருப்பினும் பெண்கள் ஜென்மம் பாவமிகுதியாலென்றும புருஷஜென்மம் புண்ணியமிகுதியாலென்றும்அறிஞாக்கு வெளியாகும். லோகாசாரியசுவாமிகளும் விவேகசூடாமணியில் 'உயிர்களுக்குள் மனுஷஜென்மம் மிக அரிது. அதிலும் புருடனாய்ப்பிறத்தல் மிக அரிது' என்றனர். பெண்களுக்குப் புருடரிலும் அதிகமான கடும்பாவமொன்றிருப்பதை மாதந்தோறும் தோன்றும் விடாய்க்காலத்தால் அறியலாமன்றோ. மூன்று தினங்களிலும் அப்பெண் எவ்விதசுத்தியையும் பெறமாட்டாளென நூல்கள்பறைசாற்றுகின்றனவே. இவர்களுக்குள்ளமேற்கூறிய பெருந்தோஷம் நிவர்த்தியாதற்கென ரிஷிபஞ்சமியென்னும் ஓர்விரதமும் கல்பஞ்ஞாரற்கண்டுபிடிக்கப்பட்டது. மேல் பெண்களுக்கு மந்திரங்களெல்லாவற்றிலும் அதிகாரமில்லை. மந்திராதிகாரமிருப்பின் ஒவ்வொருதினத்தின் பாவங்களை அம்மந்திர ஜெபத்தால் நிவர்த்திசெய்துகொள்ளலாம். மனு 'பெண்களுக்கு மந்திரங்களால் க்கிரியைகளுமில்லை' என்பது பொதுவிதி. அவர் வீரியமற்றவர். பொய்யினிடமாயுள்ளவர் அவர்களுக்கு ஜாதகர்மம் முதலியஎக்கிரியைகளும் மந்திரங்களாற் செய்யப்பட்டமையானும் வேதமந்திரங்களை உச்சரிக்கு மதிகாரமின்மையானும் புண்ணிய பாவஞ்சயலையறிந்து தமக்குண்டாகும் பாவங்களை விலக்கிக்கொள்ளுமாற்றல் அவரிடமில்லை. ஆயின் அவர் பொய்போன்ற அசுத்தப்பொருளென மேற்கண்ட மனுவாக்கியத்துக்குக் குல்லூகபட்டர் உரைசெயதார். இதனால் பெண்களும் புருடரும் சமானரெனக்கூறியது அஞ்ஞதையாலன்றி வேறில்லையெனக்கொள்க. ஆயின் புருடர் எவ்விதத்தும் பெண்களினும் அதிகப்பெருமை பெற்றவராகவே அவரிரண்டாவது விவாகம் செய்துகொள்வதற்கேது மாட்சேபமில்லை. ஆகலாற்றான் மனு 'தன்வருணத்திற்பிறந்து தன்னை மணம்புரிந்த பெண் முன்னாமரித்தால் அவளை அக்கினிஹோத்திரம் என்னும் அக்கினியால் ஸம்ஸ்காரம் செய்து எக்ஞபாத்திரங்களையும் அக்கினியிலிட்டுத்தனது அக்கினிகளையும் விட்டுப்பின் வேறு பெண்ணை விவாகஞ்செய்துகொண்டு பஞ்சயஞ்ஞங்களை விடாது வேதவிதிவழுவாத வேழ்விகளைச்செய்து தமது ஆயுள் இரண்டாம் பாகத்தில் இல்லறத்திற்றானே யிருப்பான்' என்று புருடருக்கு இரண்டாம் விவாகத்தைவிதி

Koviloor Digital Library

[illegible]

[illegible]

ஐம்பதுவயதுக்குமேல புருடரும் வேறுவிவாசம் செய்யக்கூடாது. பெண்மணிகாள்! யாம் கூறும் சற்புத்தியைக் கேட்கவேண்டும். உங்களுக்கு ஏதேனும் தெய்வவசத்தால் இக்கொடியவைகம்பெண் தன்மை உண்டானல் மனதில் விஸ்வருத்தத்தைக்கொள்ளாமல் கடவுளைவழிப்பட்டு அவரடியார்களிடம் அன்புவளர்த்து நல்லவிரதங்களை அநுஷ்டித்துப்பதிலோகத்தைப்பெறுவீர்களாக. இல்லாவிடில் மகத்தாகியபாவம் நேரிடும். புருஷர்களுக்குவேறுவிவாகம் செய்துகொள்வதில் யாஞ்ஞவல்கியர் சங்கர்முதலிய பலர் சம்மதிகொடுத்தனர். அவர்களுக்கு உங்களிடத்து ஏதும்கோபமில்லை. உங்களுக்குப்புண்ணியம்வளரவேண்டியே இவ்வழி ஏற்படுத்தியிருக்கின்றனர். இனி இவ்விஷயத்தில் ஏதேனும் சாதகம் பாதகம் எழுதவிரும்பும் எவரும் தத்தமபிப்பிராயங்களைப்பிரமவித்தைபிற்றனே எழுதினல் அவைகளுக்குப்பதில் எழுதச்சித்தமாயிருக்கிறோம். இவ்விஷயத்தில் வேண்டிய பிரமாணங்கள் சித்தமாக விருக்கின்றன.

மற்றது வரும்.

திருவேங்கிடகிருமம்-திருமலைசாஸ்திரிகள்.

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்—நந்தன ௵ ஐப்பசி௴ ௫௨

"குருசிஷ்யமாறுபாடு"

தொடர்பு

ஐய! இதுவரையில் சிவத்துவிஜர் என்னும் இக்காலத்தவர்கோத்திரங்களை உற்றுநோக்கில்அவர் சிவமுக சப்பவர் ஆகார் என்று எழுதிவந்தோம். உண்மை இங்ஙனமிருக்கத் தற்காலத்துத்தாந்திரிகர் ஒருவர் "மேற்கண்ட சிவத்துவிஜர் துர்வாசமுனிவரிடம் தீக்ஷைபெற்றனர்" என்றனர். ஆமர்த்தகம் என்னும் மடத்தில் அவர் இருந்தார்என்றும்சொன்னர். இவர் ஆகமவுண்மையறிவைப்பற்றி வியக்காதார் இரார். இச்சைவர் "தாமேசித்தாந்தநூல்களின் உண்மைப்பொருள் அறிந்தவராகவே, எவர்க்குச் சம்சயம் வருமோ அவர் எம்மிடம் வந்துகேட்டால் உண்மையுபதேசிப்போம்" எனவிளம்பரமிட்டவர். இவர் ஆகமவுண்மைகளை அறிந்து தெளிந்தவராகவே, ஆகமங்களில் சிவமுகோற்பன்னரென வழங்கப்பெற்ற சிவவிப்பிரர்களைத்துர்வாசர் சிடர் என்றுகூறி மகிழ்ந்தார். இது நிற்க இச்சிவவிப்பிரர்களுக்கு ஆகமங்களில் ஜந்துகோசரங்கள் கூறப்பட்டன. காரணாகமத்தில் "கோசரம்

Koviloor Digital Library

[illegible]

சிவசின்னம் கோத்திரம் ரிஷிவம்சம்'' எனச்சொல்லப்பட்டமையால் சிவத்துவிஜர்களுக்கு ''கோசரம்'' என்னும் சின்னம் வெகுமுக்கியம். இக்காலத்துள்ள எந்தச்சிவத்துவிஜரும் தமதுகோசரம் இஃதெனத்துணிந்து சொல்லமாட்டார். ஆயின் இவர்கோசரம் என்னும் சிவசின்னத்தை விட்டொழித்தமையாலும், கோத்திரம் ஒன்றைச் சொல்லிவருவதாலும்; கோசரம் என்னும் சிவசின்ன வுரிமை அற்று அசைவப்பிராமண பரம்பரையிற்றோன்றினர் என்பது சொல்லாதே யமையும்.

மேலும் இக்காலத்துச் சிவவிப்ராரிடம் சிறிதும் ஆகமாசாரானுஷ்டானம் இல்லை. இவருள் அனேகருக்கு வைதிக சந்தியாவந்தனமன்றிச் சைவசந்தியாவந்தனமே தெரியாது. சிலருக்குத் தெரிந்தும் சைவத்தைப்பின்னும் வைதிகத்தை முன்னும் செய்வார்கள். ஆயின் அவர்களுக்கு வேதங்களில் அதிக பிரவிர்த்திபிருப்பது புலப்படுகிறது. அங்ஙனம் பிதுருசிராத்தத்தில் இவர் ஸ்கந்தசண்டகணநீசபதங்களைச் சொல்லாது வசுருத்திராதித்திய பதங்களைப்போதாயன முனிவர் கூறியபடி உச்சரிக்கிறார்கள். இனி அவ்விஷயத்தில் போதாயன முனிவர் கூற்றே பிரமாணம் எனின், இவர்க்கு ஆகமங்களிலும் போதாயனசூத்திரம் அதிகப்பிரமாணம் போலும்! காரணகமத்தில் ''சரியாபாதத்துட் கூறப்படாத விஷயத்தை போதாயனசூத்திரத்தில் கண்டுஅனுஷ்டிக்க வேண்டும்'' என்றுசொல்லப்பட்டமையால் ஆகமங்களில் சொல்லப்படாததல்லவோ போதாயனத்தில் எடுக்கவேண்டும். ஆகமம் ஒன்று விதித்திருக்க, அதைஒழித்திட்டுப்போதாயனங்கொள்ளும் இச்சிவவிப்ரர் ஆகமப்ராமண்யம் ஒப்பியனுஷ்டிப்பவராவதுஎப்படி? மேலும் இக்காலச்சிவவிப்ரர் அந்தியேஷ்டிமுதலியவற்றை ஆகமங்களில் கண்டவழி அனுஷ்டிக்காதுபோதாயனத்துட்கண் டபடியே அனுஷ்டித்துவருகிறார்கள். மேலும்சிலர் சிவத்துவிஜர் வம்சத்தில் பிறந்தமைஒன்றால் தாம் சைவரானதாகக்கொண்டு தீக்ஷை முதலிய எவ்வகைச்சமஸ்காரமுமின்றி உபநயனம் என்னும் வைதிகசமஸ்காரம் ஒன்றைப்பெற்றமட்டில் சிவாலய பூஜாதிகாரிகளாகப்பாவிக்கப்படுகிறார். இவர்பரார்த்தசிவயாகங்களிலும் சிவபூஜைகளிலும் தீக்ஷைசெய்துகொள்ளுகிறார். இவர்க்குத் தீக்ஷைக்குப்பிரதானமான மந்திரரத்தினமாய பிராசாத பீஜமும் தெரியாது. முன்னொருசமயம் ஒரு மடாதிபதியை ''பிராசாதம்யாது'' எனயாம்வினவியதற்கு அவர் பிரணவமே என்றார். காயத்திரிபறியாதவந்தணனும் ஹிருல்லேகையறிபாச்சாக்தனும் பிராசாத மறியாச்சைவனும் வேஷதாரிஎன்பதற்குத்தடையேது? குருக்கள்மாருக்கே அறிவிங்ஙனமாயின் இவர்சீடர் அடையும் கதியாதோ? பாருங்கள்! தீக்ஷாவிதிகளில் பன்னிரண்டு அல்ல

[illegible]

து பதினுறு கலைகளாகப்பிராசாதத்தைப்பிரித்தேவிங்கியோ கிக்கப்படுவதுஎவர்க்குத்தெரியாது? மேற்கண்ட கோசரம் என்னும் சிவசின்னவிபலதியாமையற்முன் "ஸித்தாந்தஸா ராவளிக்குறைசெய்த ஓர்தமிழர் "ஸஹோவராக" என்ப தற்கு "நல்லகோத்திரத்தில்" என்றுரையிட்டார். இவ்விதம் ஆகமங்களைச்சிறிதும் அறியாதவிவர்குருமாராயின்சீடர்செய்ததவக்குறை வென்னே? இக்காலத்தவரிடம்சிவத்துவிஜத் தன்மையின்மையைப்பற்றி வேறு அதிகம்தெரிவிக்கவேண்டுமோ? மேலும் இவர்சைவரேயாதல் இவர் ஆகமவிகிதகன் மங்களை எங்கும்விட்டொழியார். ஆதலால் ஏதோ சிலபிராமணர் இதார்கிர்ப்பந்தத்தால் பிழைப்புக்கெனச் சிவஷிப் பிரவேடங்கொண்டனர் எனத்தோன்றுகின்றது. ஆதலாற்முன் சித்தாந்தசாராவளியின்உரைஎழுதிய ஒருவர் "ஏதோ சோழமகாராஜன்காலத்தில் மந்தரகாளியிலிருந்துசிவத்துவிஜர் தென்னுட்டில் வரவழைக்கப் பெற்றுஅன்றுமுதல்அவர்களே சிவாலயாராதனங்களை ஆகமவழியாய்ச்செய்துவருகிருர்" என்ருர். திருவாலவாய்மான்மியத்தும் குலசேகர பாண்டியன் காசியினின்று சிவத்துவிஜரைவரவழைத்தான் எனக்காணப்படுகிறது. ஆயின் எல்லாத்தேவாலயங்களும் முற்காலத்தில் வைதிகவிதிகொண்டு வைதிகர்களாற்முன் ஆராதிக்கப்பட்டன வென ஏற்படுகின்றது. ஆயின் அக்காலத்தில் எத்தேவாலயத்தும் ஸெளராதிசண்டாந்த பூஜை முறையும் துவஜம்முதலிய ஏற்பாடுகளும் இல்லைஎன்பது திண்ணம். ஆதலால் முற்காலத்தில் எங்கும்வேதவிதிகொண்டே பூஜைநடந்ததென ஏற்படுகிறது. ஸ்தலபுராணங்களில்பழையஸ்தலங்களைக்கூறுமிடம். ஸ்ரீசிதம்பரம், காசி, கோகர்ணம், திருவீழிமிழலை, செய்நல்லூர், திருச்செந்தூர், முதலியஸ்தலங்களில் ஹிரண்யவன்மன் முதலிய அரசர்களால் பலவைதிகர் வரவழைக்கப்பெற்று அவ்வத்தியஸ்தலங்களை யாராதனைசெய்தார் எனச்சொல்லப்பட்டதறிக. சிலவரசர்காலத்தில்சிலக்ஷேத்திரங்களில் சிவாகமவழிபூஜை செப்பப்பட்டதாகவும் ஏற்படுகிறது. இன்னும் காஞ்சிமாதலம் திருவானைக்கா முதலிய பலதலங்கள் மகாசைவரால் ஆராதிக்கப்படுகின்றன. திருவிராமேச்சுரம், திருக்கோயில், திருக்கச்சி, திருச்செந்தில் முதலியபல நற்பதிகளில் இன்னும் தீக்ஷைபெருத சாமான்ய பிராமணரே பூஜைசெய்துவருகிருர்கள். இனி அசைவவிதிபால் ஆராதிக்கப்படும் இடத்தில் ராஜாராஷ்டரம் நசிக்கும் எனவும் அங்குபரமேசுவரன் சன்னிதானமும் இராதெனவும் சிலர்பூர்வபக்ஷம் செய்வார். அதற்குச்சாதகமாக "தீக்ஷைபெருதவன்கர்பகிருகத்தில் பிரவேசித்தால் ராஜாராஜ்யநாசமாகும்" என்றவாக மவசனத்தைக்காட்டுவார். அதற்கிவ்விதம் சமாதானம்சொல்லவேண்டும். மேற்கண்ட ஸ்தலங்களிலும் ஆகமோக்தபூ

Koviloor Digital Library

[illegible]

ஜையேயானால் அந்தஸ்தலமான்மியங்களில் ஏதேனும் ஒரு ஆகமவாக்கியத்தை காட்டியாவதும் அல்லது இந்தவாகமத்தால்பூஜைசெய்யவேண்டுமென்றாவதும்குறிக்கப்படலாமே; அங்ஙனமில்லையே. அதுமட்டோ! தேவர்ஆயினும் முனிவராயினும் ஆதிகாலத்தில் அத்திவ்வியலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்தவர்திக்ஷையை ஆகமவழிபெற்றவர் அல்லர். மற்றுவைதிகதீக்ஷைபெற்றவரே இக்காலத்தில் மாத்திரம்பெரும்பான்மையில் சிவவிப்ரர்கள்பூஜைசெய்கிறார்களேயன்றி முன்னப்படியில்லை என்பதுண்மை. இனி ஆகமபூஜை செய்யப்படாவிதடம்எப்பொழுதும் "சிவசன்னிதானம் இராதெனின் பழபல்தலங்கள்அனைத்தும் சிவசான்னித்தியமற்றதாகவே, அவைகளைவழிபடுவோர்க்கு எப்பயனும் கைகூடாதொழியநேரிடும். ஆயின் இக்காலத்துச்சிவவிப்பிரர் முற்றிலும் ஆதிசைவர்அல்லர். இங்குண்மையிது: ஆதிகாலத்தில் வேதோக்தகன்மங்களில் எல்லாவற்றிலும் வைதிகர் வியாபித்தேவந்தனர். மேல் முறையேதந்திரங்களிலும் மற்றவரை அனுக்கிரகிக்க வேண்டிப்பிரவேசித்தனர். அவரே (வைதிகரே) அக்காலத்தில்சிவாலயவிஷ்ணுவாலயங்களையும் பூஜித்துவந்தார்கள். அவர்பிரதிஷ்டைசெய்ததும் வைதிகமார்கத்தாற்றான். சிலசுயம்புலிங்கங்களும் ஆதியில் தேவர்களாலாதல் இருடிகளாலாதல் வைதிகவிதியாற்றான் பூஜிக்கப்பட்டன. பிறகுகாலத்தால் வேறுவருணங்களை அனுக்கிரகிக்கவேண்டிச்சிவாலயபூஜை செய்துவந்த சிலவந்தணர் கிரமமாகச்சிவாகம தீக்ஷைகளையும் பெற்றனர். அப்புறம் அவரேசிவாலய பூஜைசெய்துவந்தனர். பிறகு சிவதீக்ஷை பெற்று வைதிகத்தை விட்டவர் வைதிகரால் விடப்பட்டார். அக்காலத்தும் வைதிகாசாரத்தைக்கைவிடாதுசிவாலயாராதனம் செய்துவந்தவர் அனேகவைதிகர் இன்னும் அப்படியே பரம்பரையில் செய்துவருகிறார். இங்ஙனமாயின் கோத்திர சூத்திரங்களுக்கேதுங்குறையில்லை. இனி அந்தணர் சிலரைமட்டில் சிவன் ஸிருஷ்டித்தார்எனவோர் புதியஅர்த்தம்கற்பிக்கவேண்டுவதுமில்லை. இனிப்பிடிவாதத்தைவிட்டு மறுபடிவிசாரித்தாலும்உங்களுக்குஇக்காலச்சிவவிப்பிரசேரூடம் புலப்படாதுபோகாது. பாருங்கள் "சரியாபாதத்திற் சொல்லப்படாத விஷயத்தைப்போதாயன சூத்திரத்தில் கண்டனுஷ்டிக்கும்படி காரணாகமம்விதித்தால்சைவவிப்ரர்க்குப்போதாயன சூத்திரம் ஒன்றேஇருக்கவேண்டும். அங்ஙனமாகத் திருச்செந்திலம்பதியில் ஆச்வலாயனரும் ஆளுடையார் கோயிலில் அக்கினிவேசிய சூத்திரத்தாரும் ஸ்ரீராமேசுவரத்தில் ஹிரண்யகேசியும் ஆராதித்தல் எங்ஙனமமையும். தில்லைவாழந்தணருள் ருக்வேதிகளும்உண்டு. மேற்கண்டவர் எவரும்சிவத்துவிஜர் எனவழங்கப்படுவதுமில்லை.

Koviloor Digital Library

[illegible]

அவர் தம்மைச்சிவத்துவிஜர் எனச்சொல்லிக்கொள்வதுமி ல்லே. நிற்க. எவர் தாம் ஆதிசைவர் எனவாடம்பரம் செய்கிருர்களோ அவர்களுக்கே கோத்திரசூத்திரசங்கரத்தை காட்டினேும். இனிக்கோத்திரம் சூத்திரம் கோசரம் வேதசம்பிரதாயம் இவற்றை அறிந்தவர்க்கே இவ்வுண்மை புலப்படுமாதலின் அவர்க்கிக்காலம் சிவத்துவிஜரின்மை புலப்படா தொழியாது. மற்றது வரும்.

வேதாகமப்ராமாண்யம்.

ஐய! இனிச்சிவாகமங்களில் சிவாக்கினியிற்றுனே பல கன்மங்கள் விதிக்கப்படுகின்றன. ஆகையால் ஆகமத்தில் கூறப்பட்டகிரியைகள் அனைத்தும சிவாராதனவிசேடமே என்பர்சிலர். வேதங்கள் சாமான்யாக்கினியில் சாமான்யகன்மத்தை விதிக்கின்றனவாகவே ஆகமங்களிலும் வேதங்கள் குறைந்தன என்பர் அவரே. அவருக்கு யாமளிக்கும்விடைஇது.ஓ! ஆரியமணி! ஆகமங்களில்சிவாராதனத்திற்கங்கமாகாததும சிவாக்கினி சம்பந்தமற்றதுமான கன்மம் எதுமில்லே என்றல்லவோ நீவிர்எண்ணுகிறீர்; அல்லது அசிவாக்கினியில்கன்மங்களே விதித்தலும் சிவாராதனமாகாதகன்மங்களே விதித்தலும் வேதங்களில் இருப்பதாகக்கருதினீரோ! முற்கூறியதுபொருந்காது. ஆகமங்களுக்கு அசிவாக்கினி சம்பந்தமற்றதும் சிவாராதனசம்பந்தமற்றதுமான எக்கருமமும் விதிக்கக்கூடாது என்னும் பிடிவாதமிருந்தால் அவை ஆசௌசமுதலிய வருணாசிரம கர்மங்களே விதிக்கக்கூடாது" என்பதை முன்னரேவிளக்கினேம். இனி ஆசௌசம்முதலியவைகளும் சிவாராதன யோக்கியதையைப் பரிக்ஷிக்கவேண்டிஉபயோகப்படுவதால்அவைகளேயும்ஆகமங்கள் சிவாராதனங்கமாகவே விதித்தனவென்னும் பொருந்தாது. வேதங்களிலும் சித்தசுத்திவழிகன்மங்கள் மோக்ஷசாதனம் எனப்படுதலால் என்க. மேலும் ஆகமங்களில் சிவாக்கினி என்பது வாகீசுவரிடம் தோன்றி மந்திரேசுருக்கு அதிட்டானமாகி ஜாதகர்ணம் முதலியசம்ஸ்காரம் பெற்றுப் பசுகோடியில் சேர்த்தக்கது. வைதிகாக்கினி அங்ஙனமாகாது. "[illegible]" என்றற்றொடக்கத்தனவான பலமந்திரங்களால் பரம் பதியுடன் பாவனைத்துவிதப்பெற்று "பிரமாக்கினி" என உபசரிக்கப்பட்டசிவாக்கினி. இதுநித்யசுத்தம். புராணங்களும் மேற்கண்டசுருதியை "[illegible]॥" என் அக்கினியில் இருப்பேன் என்பதாதிவசனங்களால் விரித்துரைக்கின்றது. ஆதவாற்றான் சுருதிசூக்திமாலே செய்தருளிய ஸ்ரீ சுதர்சனப்பெருமான் '[illegible]' என்றார். இதன்பொருள் "சோமத்தை உமக்கென பிழிந்திடுகிருர்; பசுவை உமது அனுஞ்ஞைபெற்றுவேட்கிருர். ஆஜ்யத்தை ஆவினிடமே உமக்குரிய தாக்கின்றார். ஆபின்வேள்வியில் கடவுளரும்சண்டேசாயனும் கலகம் செய்ய இடம்தோன்றி

[illegible]

யது'' என்பது.நிற்க. இதனால் வைதிககன்மங்களும் சிவாக்கினியிற்றானே நடப்பதன்றி அசிவாக்கினியிலன்று. இனி வேதங்களில் கூறப்பட்டுள்ள எக்கன்மமும் நிஷ்காம்யமானால் சிவப்பிரீதிகரமெனத் தடையாது. ஆதல்கொண்டே ஸ்ரீசுதர்சனாசாரியசரணர் பாசுபதி இலக்கணர் ஜ்ஞானுள் காயத்ரிப்பொருளாதல் யஞ்ஞத்தில் ஆராதிக்கப்படுதல் என்றுமிரண்டியல்களைக் கண்ணுதலாரிடம் அமைத்தார். ஆயின் வேதங்களிலும் ஆகமங்களில் அதிகப்பிராமாண்யம் இதனால் ஏற்படாது. ஆகமங்கள் சிற்பம் கணிதம் சிலாலக்ஷணம் முதலிய பலவிஷயங்களையும் எடுத்து விரிக்கும். வேதங்கள் அங்ஙனமல்லவாகவே, ஆகமவேததாரதம்மியம் ஆன்றோர் அறியாமற்போகார். இனி நான்காம் காரணத்தைக்கவனிப்பாம்; 'வேதங்கள் முதல்மூன்றுவருணத்தவர்களுக்கே உரியது. ஆகமங்கள் நான்குவருணங்களுக்கும் உரியது. ஆகவே ஆகமானுக்கிரகம் பெறுபவர் அனேகர். ஆகவே அவரைநோக்கி ஆகமங்கள் அதிகப்பிரமாணம் என்பது. இவ்விதம் கூறியவர் கருத்தை நன்குவிரித்து மறுப்பாம். அவர்கருத்திது: 'சாஸ்திரங்கள் எவர்க்கும நற்புத்தியுபதேசிக்கவேண்டியே இயற்றப்பட்டமையின் அவ்விஷயத்தில் சிலரைநோக்கிப்பிரவர்த்தித்த சாஸ்திரத்திலும பெரும்பான்மையோரை அனுக்கிரகிக்கவந்த நன்னூல் மேனூல்களே. ஆகமாதிகாரமில்லாத வைதிகன் இல்லை.(அதாவது முதல்மூன்றுவருணங்களும் வைதிகம். அதற்கே வேதாதிகாரம. ஆகமங்கள் நான்குவருணங்களும் பொதுவாகவே அவ்வாகமாதிகாரம் வைதிகரிடமும் உண்டென்பது) வைதிகாதிகாரமில்லாத ஆகமிகள் உண்டு. ஆயின் ஆகமங்கள் வியாபகங்கள், அவற்றின் பிராமாண்யமும் அதிகமே. வேதப்பிராமாண்யம் சங்கோசிக்கத்தக்கது' என்பது. இதன் மறுப்பு வருமாறுகாண்க:—வியாபகமானது அதிகப்பிரமாணம் என்றும் வியாப்யம் பிரமாணக்குறைவென்றும் என்னூலினும் கண்டதில்லை. உண்மையறிவைக்கொடுத்தலே பிரமாண்யம என்பது. இங்ஙனமாக, வேதங்களில் எங்கும சொல்லப்படாத எந்தவிசேஷ உண்மையாவது ஆகமங்களில் சொல்லப்படுமோனால் ஆகமங்கள் அவ்விஷயத்தில் அதிகப்பிரமாணமாகலாம். அங்ஙனமில்லை. இனி மூன்றுவருணத்துக்குரியது, நான்குவருணத்துக்குரியது என ஏற்பட்ட ஒருவேற்றுமைபட்டே ஆகமங்களை அதிகப்பிரமாணமாக்குமேல், வருணவிவஸ்தை ஏதும் கவனியாது சர்வசாதாரணமான உலோகாயதநூல் எல்லாவற்றிற்கும் மேற்பிரமாணமாகநேரிடும். பாஷண்டநூல்களுக்கதிகாரவரையில்லை, இனி ஆகமங்கள் நான்குவருணங்களுக்கும் உரிமைபூண்டனவென்பதுண்மையானால் நான்காம் வருணத்தவர்க்கெல்லாக்கிரிபைகளும் ஆகமத்தாலேதானே நடப்பதுபோல முன்மூன்றுவருணத்தவரும் நடத்திக்கொள்ளலாமாகவே, வேதங்கள் இறைவன் இயற்றியது பயனற்றுப்போம் அல்லவா? அதற்கெனவாகமங்களில அகப்படாத ஏதோ ஒருவிஷயம வேதத்தால் வேதனுபகன் வெளியிட்டான் என்பிரேல், அங்ஙனமாயின் அவ்விஷயத்தில் அவ்வேதம அதிகப்பிராமாண்யத்தையடைய, அதின்வழித்தான்றிய நூலே ஆகமமாகும், இனி ஆகமங்கள் முதல்வருணத்தவாக்குச் சிறப்பாகா

Koviloor Digital Library

[illegible]

மையாலும் வேதங்கள் அவ்வருணங்களுக்குச் சிறப்பாவ தாலும் அதுமிகச்சிறந்ததென்பதற்குச் சான்று வேறெது வேண்டும்? முன்மூவருணத்தவரே வேதாதிகாரிகள் என்பதால் வேதத்தின் மகிமை மலிந்ததறிக. முன்மூவருணத்தவரே அதைக்கொள்ளவேண்டும் என்பதும் ஆகமங்கள் வேதத்தைப்பிரசம்ஸிப்பதும் விசேடமான பெருமையைப்பெருக்கும். வேதாகமங்களுக்குப்பொருள் ஒன்றானால் வேதங்களை வேறு எடுத்தோதிய வேதனுயகன கூறியது கூற்றெனும் குற்றத்துக்காளாகானோ? இனி சரமவருணத்தவர்க்கெனவவசியமசொல்லவேண்டியவாகமத்தானே முதல்மூவருணங்களின் கிரியைகளும் பயன்படவேறாக்கி வேதங்களை வகுத்த வாமதேவன பயனில்தொழிலிற்பயில்வானோ! மேல் வேதங்களை முதல்மூவருக்கென்றே அருளினான் எனில், அவர் விஷயத்தில் ஆகமங்கள்பயன்படாமையின் அவர்மட்டில் ஆகமம் புநருத்தியே ஆகட்டுமெனின் அதன் முடிவு வருமாறாகும். வேதங்கள் முதல்மூன்றுவருணத்தார்க்குச் சிறப்பாகக்கொடுபட்டது. ஆகமங்கள் அவர் வருணத்தவர்க்குச் சிறப்பாய்க்கொடுபட்டது அவர் வருணத்தார்க்குக் குருமாரான முன்வருணத்தார் ஆகமங்களை உணராதுபதேசித்தல் கூடாமைபற்றி அவற்றை இவரும் கற்றுவந்தார்என்பதே. மரத்தின் அடியில் விட்ட தண்ணீர் மரமெல்லாங்குளிரச் செய்வதுபோல் வேதத்துக்கென அவ்வைதிகர் பெற்றதீக்ஷை ஆகமங்களுக்கும் அதிகாரத்தைக் கொடுக்கும் அன்றோ. ஆயின் முன்வருணத்தவர்க்கென ஏற்பட்ட வேதங்களிலும் பின்னவர்க்கென ஏற்பட்ட ஆகமங்கள் பிரமாணபாகத்தில் குறையும் என்பதே முடிவாகும். ஆதலாற்றான் சுருதிசூக்திமாலையில் ஆசிரியர் அரதத்தசுவாமிகள் “[illegible] தாநி” என்றனர். இதன்பொருள். ‘கண்ணுதலானை வித்யாதிபதிஎன்றுவேதங்கள் கூறுதலால் வேதாதிபதிஎன்றுவேறுரைக்கவேண்டுவதில்லை. வேதங்களே எல்லாவித்தைகளுமாதலால் ஓர்நதியிற்பிறந்தசிறுவாய்க்கால்களும் நதியென்றே சொல்லலாம்’ என்பது. இதனால வித்தைகள் எல்லாம் வேதத்தினடித்தோன்றினவாகவே, வேதங்கள் எல்லாவித்தைகளுமவேதமயங்களே. அவைகள் காரியங்களாகவே, காரணப்பொருள் காரியத்துமகாரணபடும் ஆகையால் காரியமுகத்தான் காரணுதிபத்தியமே கண்ணுதற்பெருமானுக்கீண்டுபெறப்பட்டது. ஆயின் எந்தவித்தைக்கும் வேதம முதநூல்என்பது சொல்லாதமையை, ஆகமங்கள் வேதங்களுக்கு வழிநூல்களே என்பது ஆசிரியர் ஸ்ரீஹரதத்தனாகொண்டகருத்தென்பதுவெள்ளிடைமலைப்பாலவிங்கும். அதனாற்றான அவ்வாசிரியர் துவக்கத்திற்றானே ‘ஆகமங்கள் வேதானுசாரிகளாயின் பிரமாணம’ எனக்குறித்ததாக விரித்தோம். இனி அப்பர் வருணத்தவர்க்கெனவே ஆகமங்கள் தோன்றினவாயின் அவ்வாகமங்களில் அந்தணராதி நான்குவருணங்களுக்கும் நல்வழிதருமங்களுபதேசிப்பதெப்படி எனில், வேதங்கள் முதல் மூவ்வருணத்துப்புருடார்களுக்கவே தோன்றினவாயினும் பெண்களி

[illegible]

ங்கன்மங்களையும் நிஷாதர் என்னும வேடுவர் குலபதிக்கு யாகாதிகளையும் விதிப்பதுபோல் அமுக்கிலேயாத்தே ம் எனக்கொள்கவெனவிடையளிக்க. இவற்றால்வேதத்தில் பெண்களும் வேடுவரும் அதிகாரம்பெறுர். அவர் ஞை ப்படிக்கவும கூடாது. ஆயின்மேற்கண்டது அவ்வாவசாதகமல்லவெனத்துணிக. தொல்லாசிரியர் எவரும் வேதானுசாரிப் பிராமாணயம் ஒப்பினுர். ஆகலாற்றான் சிலசிவவிப்பிரர் உபயனம் என்கிற வைதிகசம்ஸ்காரம் நடந்தமாத்திரையில் அவரைக்கொண்டுசைவகாரியங்கள் எல்லாம் நடப்பிக்கிருர்கள். சில வைதிகர்வைதிகதீக்ஷை மட்டில் செய்துகொண்டால் அதுவே ஆகமாதிகாரத்தையும் கொடுக்கும் என்பர். அதன் விரிவைத் தில்லைவாழந்தணர் எழுதிய வைதிகபரார்த்த மீமாம்சையில் கண்டுகளிக்க. இனிச் சிவத்துவிஜர் குலத்துதித்தமாத்திரையில் அவர்க்காகமாதிகாரம கைகூடுமேல் அந்தோ! உபயனமும் இல்லாது அவர் சிவபூஜை செய்யலாமா? அல்லது தீக்ஷைபெற்ற பெண்ணுவதுபரார்த்தபூஜைசெய்யலாமா? ஆயின் வேதங்கள் முக்கியசாஸ்திரம் என்பதும் ஆகமங்கள் வேதானுசாரிப்பிரமாணங்கள் என்பதும் சொல்லாதமையுமன்றோ? மேற்கண்ட ஏது எதுவும் இத்துணிபையே காட்டும். ஆயின் நான்காம் ஏதுபிரயோசனமற்றது.

மற்றதுவரும்,

ஆரியாசார ரகஸ்யம்

விடியற்காலபடலம்

பிராணுபாமம்

தொடர்பு.

ஐயா! முன்னே பிராணுபாமத்தில பிரமசாரிகள் வைக்கவேண்டிய முத்திரையைப்பற்றி எழுதுவதாய்ச்சொன்னேமல்லவா? அதைப்பற்றி ஈண்டுச்சில பேசுவாம். தர்மசாஸ்திரகாரர் "அங்குஷ்டத்தானும் அநாமிகையானும் முத்திரையைப்பிரமசாரி சேர்த்திடுவான்" என்று முத்திரை கூறினுர். இவற்றுள் முன் ஆசமனீயஞ்செய்யுமிடம் அங்குஷ்டத்தைப்பற்றிச்சொன்னேமாகவே அதை அங்கே கண்டுதெளிக. அங்குயாம்கூறியபடி அங்குஷ்டம்பித்தம் நிறைந்தவிடமேயாகையால் அதைத் தென்புறத்தில் சேர்த்தலால் அப்புறம் உஷ்ணம்அதிகப்படும். வலதுபுறம் உள்ள நாடியைச்சூரியநாடி என்பர். அதன்வழி சரீரத்துஷ்ணம் வெளிச்செலவதாக யோகிகள்கொள்கை. அதில் முயற்சியுடன் அதிகம் வலதுமூக்கின்வழியே மூச்சைவிட்டால் இயற்கையில் உஷ்ணம் அதிகமாகும; சரீரத்தின் உட்புறத்திலுள்ள உஷ்ணம்பெருக, அதைச்சுவாசம்வெளியிட்டுத்தள்ள வலதுபுறத்து நாடி வெகுசகாயமசெய்கிறது. இடதுபுறத்து நாடி, சந்திரநாடிஎன்றும் கபநாடியென்றும்பெயர்பெறும் என்று சொன்னேம். அந்நாடியின் நுணியுடன் அனுமிகைநுணிசேர்தால் கபம் அதிகம்வெளிப்படும். தன்னினத்தைத்தாம் இயக்குமாதலின்என்க. ஆதலாற்றான் மூச்சுக்காற்றுப்படும் கண்ணுடியில் இருபுற

Koviloor Digital Library

[illegible]

த்திலும் நிறம் வேறுபடுகின்றது. அங்கு நிறம்வேறுபடுவது கப பித்தவேற்றுமையாற்றான். இவ்விரண்டின் நடுவில் நிர்மலமாயுள்ளது வைணவியான சுழிமுனே. வித்தியாப்யாஸம் இடைவிடாது செய்வதே ப்ரம்மசாரிகளுக்கின்றியமையாததாகவே அவர்க்கு கன்மங்கள் குறைத்து விதிக்கப்பட்டன. போஜனம் வேண்டியபடி என்றும் சொல்லப்பட்டது. அது பக்குவமில்லாமல் எல்லையற்றதாயின் அதிக விபரீதமாய் ரோகங்களையும் விளைவிக்குமாகவே அதனால் உண்டாகும் பெரியசத்தைத் தேகத்தில் ஜரிக்கும்படிசெய்யவேண்டியது மிகவுமவசியம். அவ்விதம் உட்கொண்ட அன்னமெல்லாம் எவ்விதப்புருடமுயற்சியுமின்றி ஜீர்ணமாகிவிடாதென்று கருதி இந்தமுத்திரை பித்தத்தைப்பெருக்கவே ப்ரம்மசாரிகளுக்குவிதித்தது. 'பித்தஞ்சென்றவழி மலம்' என்பதால்பித்தம் நன்னிலையில் இருந்தால் மனமும் நன்னிலைபெறுமாகவே அவர்களுக்கு மேற்குறித்தமுத்திரையால்பித்தசுத்தியும்மனவுல்லாஸமும் கூடும் என்பது கருத்து. இனி வித்தியாப்யாசியே ப்ரம்மசாரியானல் அவனுக்கு அதிக உஷ்ணமுள்ள சரீரமவாவப்படுமாகவே மேற்கண்ட முத்திரை அவனைக்குறித்து விதிக்கப்பட்டது. தேகத்தில் முறையே உஷ்ணம் பெருகுவதால் கேவலம் மனம் சுத்திபெறுவதுமாத்திரமல்ல. மேல் சரீரத்தில் நல்லகுணத்தையும் கொடுக்கும். சுக்கிலம் எனும் வித்து மெதுவாய் அஸ்தியில் அடங்கும். தேகம் வலுக்கும். குருசுச்ருஷைமுதலிய செய்வதற்கும் படிப்பதற்கும் தேகத்தில சோமபல் உண்டாகாது. ஆயின் வருணாச்சிரமங்களை அனுசரித்து ஏற்படுத்தின இந்நிர்ப்பந்தம அதிகப்பயனளிக்கத்தக்கதே. மேற்கண்டபடி சரீரத்தில் சுக்லம் சேரப்பலம் பெருகும். அவர்க்கு புத்திப்பிரகாசமும் கைகூடும். ஆகவே அவர் வித்தையை நன்கு பயில்வதற்குஎதும் தடையில்லை. குருகுலவாஸம் விட்டாலும் ப்ரம்மசாரியாய்விவாகம்செய்துகொள்ளாதவரை சரீரத்தில் சுக்லத்தை உறையச்செய்ய இதேமுத்திரை வேண்டும். சுக்லத்தை ஒருவாறு வெளிவிட்டால் பிறகு அடிக்கடி விட்டேவரவேண்டும். அது யௌவனப்பருவத்தில் அடக்கப்பட்டால் மிகவும்குறைவையுண்டாக்கும். ஆகலால் அந்தச்சுக்கிலத்தைக் கட்டவேண்டுவது யோகிகளுக்கவசியம். அதுகொண்டே இதே முத்திரையை யோகிகளும் சந்நியாசிகளும் அனுஷ்டிக்கிறார்கள். ஆயின் ப்ரம்மசாரிகள்முத்திரை, அங்குஷ்டமும் அனமிகையும் சேர்ந்தது. க்ரகஸ்தருக்கு அங்குஷ்டம் வலதுபுறம். மற்றநான்குவிரல்கள் ஒருபுறமாகவைத்தமுத்திரை ஏற்பட்டது. முன்னே அங்குஷ்டமெனும் பெருவிரலின் பயன் சொல்லப்பட்டது. மற்றவிரல்களை அதற்கெதிரில் சேர்ப்பது. வலதுபுறத்தில் அங்குஷ்டத்

[illegible]

ஸம்ஸ்க்ருதபாஷா

வைத்யகம்

அநுவர்த்ததே

[illegible]

ளைச்சேர்ப்பதினாலுண்டான அதிக உஷ்ணத்தைச்சமான ஞ்செய்யமே. ஆதலாற்றான் அவர்கள் உஷ்ணம் சுக்லத்தை அஸ்திபில் சேர விடுவதில்லை. அவர்களுக்குச்சுக்லம் வேண்டியதாகையால் அவ்விதமுத்திரை கூறப்பட்டது. சந்நியாசிகளுக்கும் ப்ரம்மசாரிக்கும் ஒன்றுபோல் முத்திரை. மேற்கண்ட முத்திரைகளைக்கொண்டு செயயப்படும் பிராணாயாமம் மூவகைப்படும். ரேசகம், பூரகம், கும்பகம் என மூன்று வேற்றுமைகள் அதற்குண்டு. அதில் ரேசகம் என்பது முதலியவற்றின் இலக்கணத்தைக் குறிப்பாம். 'ரேசகம' என்பது பிராணனை மெதுவாக வெளிப்படச்செய்வது. பூரகம் என்பது அந்தப்பிராணவாயுவை நாசிவழி உட்செலுத்துவது. இனிக் கும்பகம் என்பது பூர்ணகும்பத்தில நீர் நிறைந்ததுபோல் சரீரத்தில் வாயு நிறைந்திருக்கும்பிராணாயாமாவஸ்தை. இவற்றின்பயன் வரும்.

ஸம்ஸ்கிருதபாஷை

வைத்தியம்.

தொடர்பு.

ஐய,

வைத்தியத்தில் பற்பலதேசபாஷாபுஸ்தகங்கள் பலவிருக்கின்றன. அவற்றுள் சிகிற்சை ஒன்றேயன்றி நிதானம் சூத்திரஸ்தானமசாரீரம் இவை சிறிதும் இல்லையெனலாம். ஆயின் சிகிற்சைமட்டில் கூறிஒழியும்நூல்வைத்தியத்தில் பூர்ணமல்லவென்று ஆனறோர்கொள்வர். ஆயின் பூர்ணமான பயனை எதிர்பார்ப்பவர் பூர்ணசாஸ்திரத்தையேபார்க்க விரும்புவார். அவரைநோக்கிப் பூரணமானசாஸ்திரங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. சுச்சுருதத்தைப்பற்றி எழுதினோம். சரகமகிமை கூறப்பட்டது. சக்ரதத்தர், மதனபாலர், ஜைபடீயம், வாக்படீயம், மாதவீயம், சல்பதந்திரம், சாலிஹோத்ரம், ஆத்ரேயம், வல்லபேந்திரசிந்தாமணி, ராஜமிருகாங்கம, வாசஸ்பத்யம், லொலம்பராஜீயம், ஸ்திரீசிகிற்சா, அஷ்டாங்கஹிருதயம், பாவப்பிரகாசம், ஷட்ரஸ்நிகண்டு, ரஸரத்னசமுச்சயம், ரஸரத்னாகரம், ரஸார்ணவசுதாகரம், ரஷிபஞ்ஜகர்ப்பம், திரவியசுத்தி, தாதுலக்ஷணம், ஸ்ரீகண்டீயம், ஜீவரக்ஷாமிருதம் முதலிய கிரந்தங்களை முறையே நிருபிப்பாம். யாம் முற்கூறிய வைத்யங்களில் ஒன்றுப ரஸவைத்யம், சிலவிடத்து மானுஷவைத்யம சிலவிடம் ஆசுரம் சிலவிடம் சித்தவைத்தியமும் கூறப்படும். சிகிற்சை வேறுபடினும் இந்நூல்களெல்லாம் வைத்தியம் என்பதிற் றடையில்லை. ஒவ்வொரு பிணிக்கு ஒவ்வொரு வைத்தியசாஸ்திரம் ஒவ்வொருசிகிற்சை கூறும். எதுவும் வைத்தியம் என்பது பொது உத்தேசத்தை நோக்கியே ஒவ்வொரு பாபத்துக்கு ஒவ்வொரு பிராயச்சித்தம சொல்லப்பட்டபோதிலும் எல்லாம் ஸ்மிருதிகளேயல்லவா. இவற்றுள் ரஸரத்னாகரம் முதலிய சில சாஸ்திரங்கள் ரஸவைத்தியத்தைச்சொல்லுகின்றன. இவ்விரஸவைத்தியத்துக்கு பிரவிபாகிபம் எனப்படும் சாஸ்திரத்தின் உபகாரம் வேண்டும்.

அதின் விரிவு பின்வரும்

Koviloor Digital Library

௩௨௩

SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின் அநுபந்தம்

௩ - ம் புத்தகம்] சிதம்பரம். நந்தன ௵ ஐப்பசி ௴ ௩௨ [இலக்கம் - ௪௭

நாகைநீலலோசனிப்பத்திரிகையும், மாயாவாதநிமிர பாஸ்கரமும். சுந்தரர்க்குமறுமொழியுரைத்தல்.

சுந்தரன் என்பவருக்கும், பானுமூர்த்தியென்பவருக்கும்வைதிகசைவ விஷயமாயும், மாயாவாத விஷயமாயும் நாகைநீலலோசனி, சென்னை மகாவிகடதூதன் ஆகிய இவ்விருபத்திரிகைகளிலும் வாதம் நடந்து வருகின்றது. அதுபற்றி ஷை சுந்தரன் என்பவர், நிகழும் நந்தன ௵ ஆவணி ௴ ௰௫ உ நீலலோசனியில் மாயாவாதிகள் எனப்பெயரளித்துச் சில சங்கதிகள் நீட்டியிருக்கின்றார். அதிலுள்ள தோஷங்களைக் காட்டி மறுத்து, அதனுண்மையை யெடுத்துச்சொல்வாம்.

ஷை அத்துவிதிகள் யார்?

அவர், தம்மைச் சுத்தாத்வைதியென்கிறார். அத்துவிதமென்னுஞ்சொல்மாத்திரம் வேதமுதலியகலைகளில் இருக்கிறதேயன்றிச் சுத்தாத்வைதம் என்னுஞ்சொல் இல்லை. அப்படிப்பட்ட அத்துவிதிகள் புராதனமாயிருக்கிறார்கள். அவ்வத்துவிதம் என்னும் பெயரை விரும்பிய ஓர்வித சைவர், அப்பெயர் ஒரு பாலாருக்குரிமையாயிருப்பதால் அதை வைத்துக்கொள்ளின் அவர்க்கும்,தமக்கும் பேதந்தோன்றாதென்றெண்ணி,சுத்தாத்வைதம் என்று பெயர் வைத்துக்கொண்டனர். தேவாரம் என்று பொதுவாய்ப்பெயரிருக்க அதற்கடை கொடுத்துத்திருப்போரூர் தேவாரமென்று பெயர்வைத்துக்கொண்டார்கள் அதனால் பொதுவான தேவாரத்துக்கு ஏதுங்குறைவில்லை.அப்படியே சுத்தாத்துவிதிகள் என ஒருவிதசைவர் பெயர்வைத்துக்கொண்டதனால் அத்துவிதிகளுக்கு ஒரு குறைவுமில்லை. அத்துவிதிகளென்போர் வேதாந்திகளே; மற்ற அத்துவிதிகள் அடைபெற்ற அத்துவிதிகளாம்.

வைதிகர்யார்? தாந்திரிகர்யார்?

சுந்தரர், தாம் ஷை இருவரும் என்கிறார். வைதிக சமஸ்காரம் பெற்று, வைதிகஅநுஷ்டானஞ்செய்து, வேதப்பொருளான பரமசிவனை வணங்குபவர் வைதிகர். ஆகமதீக்ஷைபெற்று ஆகமாநுஷ்டானத்தை யநுசரிப்பவர் தாந்திரிகர். தாந்திரிகரில் அந்தணராயுள்ளார், வைதிகசமஸ்காரம்பெற்று வைதிக அநுஷ்டானமுங்கொண்டு ஆகமதீக்ஷைபெற்று ஆகமாநுஷ்டானமுங்கொண்டிருப்பர்.இவர்க்கு வைதிகஅநுஷ்டானஞ் சுருக்கம்; ஆகமாநுஷ்டானம் பெருக்கம். வைதிக சமஸ்காரம் பெறாத ஏனையோர் ஆகமதீக்ஷை மாத்திரம்பெற்று ஆகமாநுஷ்டானத்தைக் கொண்டிருப்பர். சுந்தரர் எந்த அநுஷ்டானத்தைப்பெற்றிருப்பவரோ அறியேம். வேதத்தைப் பசுநூலென்றும், மயக்கநூலென்றும்உலகநூலென்றும்,சாமானியநூலென்றும் சொல்பவர் ஒருபோதும் வைதிகராகார்; தாந்திரீகரேயாவர். இவர் பின்கூறும் பக்கத்தாராயிருப்பதால் வைதிகராகார்; பின்னைத் தாந்திரீகரேயாவர். தாந்திரீகராயிருந்துகொண்டுவைதிகரும், தாந்திரீகருமென்றுகூறுதல்வீண்மொழியேயாம்.

ஆஸ்திகர்யார்? நாஸ்திகர்யார்?

சுந்தரர் அத்துவிதிகளை நாஸ்திகரென்கிறார். இப்படி வாயால் சொல்லிவிடுவதினாலும் எழுதிவிடுவதினாலும், தாம் ஆஸ்திகராய்விடுவதாக மனப்பால் அருந்துகிறராக்கும். சிலவாரங்களின் முன்னர் ப்ரம்மவித்தியாவின்கண்ணும், மகாவிகடதூதன்கண்ணும் 'ஆஸ்திகம் நாஸ்திகம்' என்னும் விஷயமாய்ச் சுதேசியென்பவர் எழுதியவிஷயத்தை இச்சுந்தரர் பார்த்திருக்கலாம். அப்படியிருந்தும் பின்னும் அத்துவிதிகளை நாஸ்திகரென்றுகூறுவது முழுப்பூசுணைக்காயைச் சோற்றில் மறைப்பதுபோலாம். அப்பத்திரிகைகளில் முற்றுங்கடவுளே பரிபூரணராயுள்ளவரென்பவர் ஆஸ்திகரெனவும், அப்படிப்பட்டகடவுளில்லையென்பவர் நாஸ்திகரெனவும், கடவுள் ஒரு இடத்திலும்,ஜீவர்கள்ஒரு இடத்திலும்,உலகம்ஒருஇடத்திலும்இருத்தலாகச்சொல்பவர்மூன்றிலொருபங்குஆஸ்திகரும்,இருபங்குநாஸ்திகருமாமெனவும், ஆஸ்திகர் நாஸ்திகர் என்னும் பேர் கடவுள் உண்டு, கடவுளில்லையென்றதின் பேரில் வந்ததெனவும். அப்படிப்பட்ட கடவுளுக்கு முழுஇடத்தைக்கொடுத்தவர்முழுஆஸ்திகரெனவும், மூன்றிலொருபங்கு இடத்தைக்கொடுத்தவர் மூன்றிலொருபங்கு ஆஸ்திகரெனவும்,மற்ற இரண்டுபங்கு இடத்தைச் சீவர்களுக்கும் உலகத்துக்குமெடுத்துக்கொண்டமையால் அவரே யிரண்டுபங்கு நாஸ்திகரெனவுங் கூறியிருக்கின்றார். இதன்படியே அத்துவிதிகள் முழுஆஸ்திகராவர்; இத்தச்சுந்தரர் மூன்றிலொருபங்கு ஆஸ்திகரும் இருபங்கு நாஸ்திகருமாவர். ஷை சுதேசி, பிரபலநியாயங்காட்டிச் சொல்லுகிறார்·சுந்தரர்போல்வாய்மொழியாய்ப்பேசவில்லை.மற்றக்குடிகளைநோக்க ஒருமாகாணத்தை ஆளுவோர் அரசராயினும் உலகமுற்றும் ஆளும் ஏகச் சக்கராதிபதியைநோக்கமாகாணஅரசர் அரசராகார்· இவ்வாறே கடவுளில்லையென்பாரை நோக்க இச்சுந்தரர் ஆஸ்திகராயினும் அத்துவிதிகளை நோக்க நாஸ்திகரேயாவர்·

Koviloor Digital Library

மாயாவாதிகள் யார்?

நந்தன௵ சித்திரை௴ 1௳ ப்ரம்மவித்தியாவில் ஓர் நாவலர், உலகிற்குக் காலமே முதற்காரணமென்பார் காலவாதிகளென்றும், பூதமேயென்பார் பூதவாதிகளென்றும்ஆதல்போல் மாயையைமுதற்காரணமென்பார்மாயாவாதிகளாகவேண்டுமென்று கூறியதற்கு, ம-ா-ா-ஸ்ரீ சுவாமி, சோமசுந்தரநாயகரென்றுமொருவர், அதையங்கீகரித்தும் அதன்மேல் அதற்குச் சமாதானங் கூறுவார்போன்று வெளிப்பட்டு, ஆனி௴ ௨௳ ௧௮௳ நீலலோசனியில் பொருத்தமில்லாப்பயனற்ற சொற்பவரிகள் வரைந்தனர். அதன்பேரில் ஓர் இந்து என்பார் ஆடி௴ ௰௳ ஆவணி௴ ௨௩௳ ப்ரம்மவித்தியாக்களில் அவரெழுதியவற்றிலுள்ள பெருந்தோஷங்களையெல்லாங்காட்டி, அவர் சாராரே மாயாவாதிகளென வரைந்திருக்கின்றார். சுந்தரர், அதைப்பாராதுபோல் காட்டிக்கொண்டு, பின்னும் அத்துவிதிகளை மாயாவாதிகளென்று வாளாவரைகின்றார். ஏதும் நியாயங்காட்டினாரில்லை. சுந்தரர் நியாயமின்றி வாளாசொல்லிவிடுகின்றாரேயன்றி, 'இவ்விஷயம் பத்திரிகையிலெப்படி வந்தது, முன்னடந்த விஷயமென்ன? பின்னடந்த விஷயமென்ன? இதுவரையில் பூர்வபக்ஷமாயிருப்பது எது? எது சித்தாந்தமாயிற்று? இனிச்செய்யவேண்டுவதென்ன? நம்முடைய கக்ஷியைத் தாபித்துக்கொள்ளவேண்டுமாயின் இதற்குமுன் சித்தாந்தஞ் செய்ததைப்பூர்வபக்ஷஞ் செய்யவேண்டுமே; அது செய்யாவழிக்கக்ஷிதாபிதமாகாதே' என இப்படிப்பட்ட பரியாலோசனையுஞ்செய்தாரில்லை. பின்னைப்பூர்வபக்ஷத்தையே தமது சித்தாந்தமாகக்கூறி விருது பேசுகின்றார். கீழேவிழுந்தவன் 'பார் என் மீசையில மண்பட்டதா?' வென்றுகாட்டி ஜயங்கூறுவதுபோல் சுந்தரர் கூறும் ஜயமானால் அது நமக்குச்சம்மதந்தான். அதற்கு மறுத்துக் கூறவேண்டிய தவசியமில்லை. இதில் சுந்தரர் கருத்து ஒன்றிருக்கலாம். அது இது: 'ப்ரம்மவித்தியாவைப் பாராத சிலர் நீலலோசனியைப்பார்க்கக்கூடும். அப்படிப்பட்டவர்க்குப் பிரமவித்தியாவில் நடந்த விஷயங்கள் தெரியாமையால் அதுவரையில் தாமெழுதுவதை மெய்யென நம்பிக்கொள்ளட்டும்' என்பதாம். இப்படிப்பட்ட நம்பிக்கையில் சுந்தரர்க்குச்சிறிது ஆதாயமுண்டாமானால் அதை யாம் மறுக்கோம். அதையவரேயடையட்டும். தார்க்கிகசைவரை மாயாவாதிகளென்று விகடதூதனில் பானுமூர்த்தியெழுதியதற்குச் சுந்தரர், பறையர் உவமானமொன்று கூறி, அது தமக்கே வருமென்றறியாது அகமகிழ்ந்து, பின் பானுமூர்த்திகொண்ட அர்த்தம் அனர்த்தமேயென்று உவமானவாயிலாகக் காட்டினம் என்கின்றார். இந்தவுவமானம் மேற்காட்டிய நியாயங்களால்சுந்தரர்க்கேசித்தித்துவிட்டது. பறையன், தான் பறையனன்றென்று சொல்வது தகுதியன்று. அப்படியேமாயாவாதி, தான் மாயாவாதிஅன்றெனக்கூறுவதுதகுதியன்று. இப்போது மாயாவாதி யார்? மாயையையுபாதானகாரணமாகக்கொள்பவர். அவர் யார்? இவரேயாம். இதற்கு வாதம் ஐயமின்றெனக.

மாயாவாதிகளெனப் பெயர்தந்தவர் யார்?

அத்துவிதிகளுக்குமாயாவாதிகளெனப் பெயர்கொடுத்தவர் திருவருட்பெருஞ் செல்வராகிய மெய்கண்டதேவராதியர் என்கின்றார். இது விந்தையிலும் விந்தை! மெய்கண்டாதியோர் வாக்குவேதமா? ஸ்மிருதியா? புராணமா? இன்னும்பதினான்குவித்தைகளில் எந்தப்பிரமாணத்தைச்சார்ந்தது? இப்படிப்பட்ட பிரமாணங்களிலொன்றேனுஞ் சேராத (இவர் பக்ஷத்தாரான) அம்மெய்கண்டாதியர் வாக்கை இவரும், அவர் சித்தாந்தத்தை மெய்யெனக்கொண்டு அவர் வழி நிற்போருமான இவர் நண்பரும் பிரமாணமாகக்கொள்வதிலாக்ஷேபமில்லையேனும் அச்சித்தாந்தத்துக்குத் தோஷங்கற்பிக்கும் பிரதிவாதிகள் ஒப்புவரோ? மெய்கண்டாதியோரும், இவரும், இவரினத்தாரும் சித்தாந்தசைவர். ஷை சித்தாந்தசைவர்க்குள் விவாதம் நேரிடின் அவர் வாக்கைப் பிரமாணமாகக்கொண்டு அதற்குக்கட்டுப்பட்டு ஒழுகவேண்டியது கடமைதான். மற்றவர்க்கு ஆகவேண்டுவதென்ன? வைணவர்க்குள் ஒருவரான மணவாளமகாமுனிகள் வாக்கை அவர்கள் பிரமாணமாகக் கொண்டொழுகுவாரேயன்றி இச்சித்தாந்த சைவர் பிரமாணமாகக்கொள்வரோ? மெய்கண்டாதியோர் வாக்கை வைணவர் பிரமாணமாகக்கொள்வரோ? கொள்வதானால் அந்தந்தமதஸ்தர் வாக்குகளையெல்லாம் வேதமுதலிய பதினான்குவித்தைகளைப்போல் கொள்ளவேண்டும். அப்படிக்கொள்வதானால் வாதிப்பிரதிவாதிகள் சொல்லும் பிரமாணங்களையெல்லாம் சரியென்றங்கீகரிக்கவேண்டும். அப்படியங்கீகரித்தால் கக்ஷியேதுவிவாதமேது? வாதியேது? பிரதிவாதியேது? பூர்வபக்ஷமேது? சித்தாந்தமேது? நியாயஸ்தலத்தில் நியாயாதிபதி வாதிப்பிரதிவாதிகளை விசாரிக்கும்போது வாதிகளாவது பிரதிவாதிகளாவது அன்னியரைக்கொண்டு சாக்ஷிகொடுக்கவேண்டுமேயன்றித்தங்களிலேயேசிலரைச்சாக்ஷிசொல்லும்படிசெய்யலாமோ? இந்தச்சாக்ஷிகளைநியாயாதிபதியொப்புவரோ? தம்மவரில்சாக்ஷிகொடுப்பது மிகப்பலவீனமன்றோ? எதிர்க்கக்ஷியாரை ஜயிக்கப் பிரியாது கொண்டுவருபவர் தாமே சாக்ஷிசொல்வாரானால் எதிர்க்கட்சி தோல்வியடையவே சொல்வார் என்பதற்குச்சந்தேகமா? ஆதலால் சுந்தரர் சொல்லும் மெய்கண்டாதியோர்வாக்கு இவர்க்கும், இவர் இனத்தார்க்குஞ்செல்லுமேயன்றி எதிர்ப்பக்ஷத்தார்க்குச் செல்லாதென்றறிந்தொழுகக்கடவர். சுந்தரர் தம்பக்ஷத்தாரான மெய்கண்டாதியோரைச்சாக்ஷியாகக்கோருவதும் அவர் பிரமாணத்தை எதிர்க்கக்ஷியாரும்மெய்யெனக்கொள்ளவேண்டுமென்று விரும்புவதும் அவர் அத்துவிதிகளுக்கு மாயாவாதிகளெனப் பெயரிட்டாரென்று சொல்லுவதும் அதைக்கொண்டு அத்துவிதிகளைமாயாவாதிகளென்றும்,இவரும் இவரினத்தாரும்அழைப்பதும், கிழக்குமேற்கு அறியார் வழக்குப்பேசப்புகுந்தார்' என்பதற்கினமாமென்க. ஒருபக்ஷத்தார் தங்கள் கக்ஷிக்குப்பலமாகத் தங்கள்குற்றத்தை மறைத்து எதிர்ப்பக்ஷத்தார்பேரில் இல்லாதகுற்றத்தையுங்கற்பித்துச்சொல்வதுமுண்டே. அங்ஙனமே மெய்கண்டாதியோர் தம்கக்ஷிக்குப் பலமாகத் தம்குற்ற

Koviloor Digital Library

த்தை மறைத்து இல்லாதகுற்றத்தைப் பிறர் பேரில் ஏற்றவுங் கூடுமே. அதையொருபிரமாணமாகக்கொண்டுபிரதிவாதிகளை வெல்லப்பார்ப்பது நியாயஸ்தலத்தில், வாதிகள், தங்களைச்சார்ந்தவரையே சாக்ஷியாக எடுத்துக்கொண்டு நியாயாதிபதி தம் பக்ஷமே தீர்ப்பளிப்பாரென நம்பி மோசம்போவது போலாம். சுந்தரர், தம்மவரைச்சார்ந்த மெய்கண்டாராதியோர் கூற்றைப்பிரமாணமாகக்கொண்டு, தம்கட்சியைத்தாபித்துக்கொள்ளப்பார்ப்பாராயின, எதிர்க்கட்சியார், தம்பக்ஷத்தார் கூற்றைக் கொண்டு தம்கட்சியைத்தாபித்துக்கொள்ள ப்பார்ப்பார்களே. அப்படித்தாபித்துக்கொள்ளப்பார்க்கின் சுந்தரர் கட்சிமாத்திரம் நிலைபெறுவதெங்ஙனம்? அவ்வாறு எதிர்க்கட்சிக்காரர் இவர் கொள்கையை மறுக்கும் பிரமாணங்களாவன:—

தந்துவராயர்சூழ்வார்ப்பு.

வேதாகமங்கள்சொன்னபொருள்மெய்யேயறி
வார்போன்றிருந்து, பேதாபேதஞ்சாதிக்கும்பெரும்
பேய்தனக்கும்வாரிரே.

ஞானம்போலப்பலசொல்விகாடற்கரியமுத்தியினும்,
தானுஞ்சிவமும்பாசமுமென்சைவப்பேய்க்கும்வாரிரே. ()

சிவஞானவள்ளலார்துவிதசைவனைமறுத்தல்.

ஒன்றுயுலகனைத்துமானுரென்றப்பமுனி
பொன்றுமொழியாற்புகன்றிருக்கக்—குன்றாத
முத்தியினுமும்முதலுமுண்டென்றுரைத்தலெவன்
பித்தமுறுஞ்சைவர்பேசு.

ஓசையொலியெல்லாமானுய்நீயென்றபினர்ப்
பேசவிரண்டுண்டோ பேச்சைவா—ஆசையெல்லாம்
அற்றவிடமுத்திநிலையோவஃதெல்லாம்
உற்றவிடமுத்திநிலையோ

ஷ அத்துவிதக்கலிவெண்பா.

ஈசன்வேறியான்வேறென்றெண்ணுகின்றபாத
கரை, நீசரைக்கண்டு நீனையென்று, ஞசையொடும்
வேதமுடிவறிந்தவேதியரைக்கூடென்றுன்,
பேதமிலையெல்லாம்பிரியென்றுன்.

இத்தப்பிரமாணங்களை இவரங்கீகரிப்பரா? அங்கீகரிக்கமாட்டாரெனின், அவர் பக்ஷத்தார் கூறியபிரமாணங்களைமாத்திரம் அத்துவிதிகள் எவ்வாறங்கீகரிப்பர்? அங்கீகரித்தால் இரண்டையும் அங்கீகரிக்கவேண்டும்; இல்லாவிடில் இரண்டையுந்தள்ளல்வேண்டும். இவ்வளவு தெரியாத சுந்தரர், தாம் ஒரு கக்ஷியாராக வாதஞ்செய்ய வெளிப்பட்டு வந்தது அவர் பெருந்தகைமைக்கடாதென்க. நிற்க; அத்துவிதிகளுக்கு மாயாவாதிகளெனப்பெயர்கொடுத்தவர் மெய்கண்டாராதியோர் என்கிறுரே; அதுதான் உண்மையோ? உண்மையாயின், மெய்கண்டார் திருவாய்மலர்ந்தருளிய நூல்களில் எந்தவிடத்தில் அத்துவிதிகளுக்கு மாயாவாதிகளெனப் பெயரிட்டனர்? அதைச்சற்றுக்காட்டுவாராக. பிறகு, மெய்கண்டாராதியோரைத் திருவருட்பெருஞ்செல்வர் என்கிறுர். இவ்வாறே பிரதிவாதிகளும் தம் கக்ஷியாரை அவ்வாறே கூறுவார்களேயெனச்சற்றும் யோசித்தாரில்லை. பிரதிவாதிகள், அவ்வாறல்லரென்பாராயின் மெய்கண்டாராதியோரையும் அவ்வாறல்லரென்பார்களே. இதனுல் மெய்கண்டாராதியோரை நாம் ஒன்றுங் குற்றங்கூறவில்லை. ஆனுல் அவரது பெருமையைப் பிரதிவாதிகளிடத்தில் சொல்வதிற்பயனில்லையென்கின்றேம்.

வேதாகமங்களைப்பிரமாணமாகக்கொள்ளுதல்.

இச்சுந்தரர், 'வேதாகமங்களைச் சத்பிரமாணமாகக்கொண்டவரன்றே வைதிகசைவர். வேதத்தைமாத்திரம் உடன்பாடாகக்கொண்டு ஆகமத்தை நிந்திக்கும் அத்யாசவாதிகள் எங்ஙனம் வைதிகசைவராவர்?' என்கிறுர். வேதாகமங்களைச் சத்பிரமாணமாகக்கொள்பவர் வேதாகமசைவராவரேயன்றி வைதிகசைவராவதெங்ஙனம்? வைதிகசைவர், வைதிகசம்ஸ்காரம்பெற்று வைதிக அநுஷ்டானமுள்ளவராய் வேதப்பொருளானசிவனை வணங்குபவராம். இவரே வேதத்தைச் சத்பிரமாணமாகக்கொள்பவர். இவர் வேதத்துக்கு விரோதமில்வழி ஆகமம் பிரமாணமென்றும், அதுவும் வேதத்தைச்சார்ந்தேபிரமாணமென்றும், வேதாதிகாரமில்லாதவர்பொருட்டே ஆகமம்,ஏற்பட்டதென்றும், வேதப்பிரமாணத்துக்கு ஆகமப்பிரமாணங்குறைந்ததென்றும், வேதமார்க்கத்தாலேயே முத்தியுண்டாமென்றுங் கூறுவர். இது ஆகமதூஷணையன்று. வேதத்தைவிட ஆகமம் மேலென்று சொல்லிக்கொள்பவர், அவ்வாறல்லவென்பாரை ஆகமதூஷணக்காரர் என்றுசொல்லுவார். இதற்குத்துரபிமானமும் அருமையுமே காரணம் மற்றப்படியன்று.

வேதப்பிரமாணமே சிறந்ததென்பதற்குப் பிமாணம்வருமாறு:—

சூதசங்கிதை.

எல்லாப்பிரமாணங்களுக்குமியைமுக்கியமாம்பிரமாணம்
வல்லாருரைக்கும்வேதமேமற்றையதற்குத்தன்னுவும்
புல்லாகிற்கும்பிறவாறும்பொருந்துவாதைசற்றுமிலை
யல்லாப்பிரத்தியககமுதலானபிமாணங்களுக்கு

ஒழியாமாயையால்வாதையுண்மேறைக்குவிரோதமுளு
மொழியார்தருநற்புராணங்கண்முற்றும்பிரமாணங்களே
கழியாமறைமூலமாகாக்கசட்டுநூல்கள்யாவுமிகு
பழியார்நூல்கள்பிரமாணப்படாதுபடிமுற்றளந்தோயே.

பிரமகீதை சாந்தோக்கியவுபநிடதத்திறுமத்தியாய வர்த்தத்தையுரைக்கும் அத்தியாயம்.

சத்தியமாகிவேதமொன்றுமேயளவையாகும்
இத்தன்மைப்பொருளையெல்லாவுலகருமறியும்வண்ண
நித்தராமன்பரோத்துநிறைந்தமெய்க்கருணையீசன்
மெய்த்தகுபொருளிதென்றேவிளம்பிடல்செய்யலுற்றுன்

திருவிளையாடற்புராணம்.

மறையேநமதுபீடிகையாமறையேநமதுபாதுகையா
மறையேநமதுவாகனமாமறையேநமதுநூபுரமா
மறையேநமதுகோவணமாமறையேநமதுவிழியாகு
மறையேநமதுமொழியாகுமறையேநமதுவடிவாகும்:

வேதந்தானேநமதாணைச்சத்திவடிவாய்வீதிவிலக்காய்ப்[க்கும்
போதங்கொளுத்திநிலைநிறுத்திப்போகங்கொடுத்துப்பல்லுயிர்
பேதஞ்செய்யும்பிணியவிழ்த்தெம்பிரியாவீடுதருவதே
ஞாதஞ்செய்புந்தார்வேந்தேநமதுசெங்கோலதுவாகும்.

Koviloor Digital Library

வைதிகத்தின் சிறப்பு.

திருவிளையாடற்புராணம்.

மறைவழிமதங்கட்கெல்லாமறைபிரமாணம்பின்சென்
றறைதருமிருதியெல்லாமவைக்கனுகுணமாமின்ன
முறையிரண்மார்த்தமென்றுமொழிவதம்மார்த்தஞ்சேர்ந்த
துறைகள்வைதிகமாமேலாச்சொல்வழிச்சுத்தமார்க்கம்

தெருட்பேறுபோகய்கோரணமாய்ச்சிவமயமாமறைப்பொரு
ளை, யிருட்கெடவுரைத்தேயிப்பொருட்கதிகமில்லையிப்பொரு
ளெலாமுமக்கு, மருட்கெடத்தெளிவதாகெனவிளையவழிவழா
மாதவர்புரத்தை,யருட்கையாற்றடவியிலிங்கத்துட்புகுந்தான
ருள்பழுத்தன்னதேசிகனே.

ஆகமதருமத்தைவிட வைதிகதருமம் விசேடமென்பதற்குப் பிரமாணம்,

சூதசங்கிதை விசிட்டதருமவிசாரமுரைத்த அத்தியாயம்.

மற்றதிற்பிரமாகமமுரை தருமம்விசேடமாமாயஞகமஞ்சொ
னற்றருமந்தானதனினும்விசேடமதனினுநயச்சைவாகமஞ்
சொல், பொற்றருமந்தான்விசேடமாம்புகலீததசுரோதோபவ
மென்றும், பற்றறுசிர்சாஜுர்த்துவசுரோதோபவமென்றுமிரு
வகைப்படுமால்.

முன்னதுகாபாலாதிபேதத்தான்மொழிபலவிதப்படுமதனிற்
பின்னதுகாமிகாதிபேதத்தாற்பேசிடுமிருபதெண்வகையாய்
மன்னிடுமீதுவிசேடமாமிதனின்வைதிகதருமமுத்தமமா
மன்னதிற்சாந்திதாந்திமுன்னுணவறைதருதருமமுத்தமமே.

வைதிகமார்க்கப்பிரவிர்த்தியில்லாருக்கு ஆகமம்சொல்லப் பட்டதென்பதற்குப் பிரமாணம்.

சூதசங்கிதை.

இத்தகுவைதிகமார்க்கப்பிரவர்த்தியில்லாருக்
கத்தனாரணத்தில்வன்னந்தருமமாச்சிரமகல
மொத்தபூசாதியெல்லாமுரைத்தபடியேபற்பல
சித்தநிலவாகமத்துஞ்செப்பியிருக்கின்றனனால்.

ஆகமவிதியை வைதிகர்தழுவவேண்டுவதின்றென்பதற்குப் பிரமாணம்.

வேதவிதியாகமதல்விதியுடையோரனுசரிப்பா
ரேதமிலாகமவிதிவைதிகர்தழுவவேண்டுவதின்
றுதாவினிவையனைத்துமறிதிரேனென்றுரைத்துச்
சூதமுனிவணங்குபுதன்றாயகுரவனைநினைத்தான்.

வைதிகனுடையபெருமையும் வைதிகன்சிவன்போல் போற்றத்தக்கானென்பதும்.

திங்களணிமாதேவற்கொப்பானதேவனுஞ்சீர்
பொங்குசிவஞானத்திற்கொத்தபொலிஞானமும்வண்
கங்கைநதிக்கொப்பானசரிசிலாமாநதியும்
பங்கமறுமைந்தெழுத்திற்கொப்பாகப்பகர்மனுவும்.

வாரணவாசிக்குநிகர்மாநகருமினிதாய
சீரணவுமன்னத்திற்கொப்பாகச்செறியுணவு
மோரணவுதலத்தீரெப்படியிலையோவப்படியே
பேரணவுவைதிகருக்கொப்பாவார்பேசினிலை.

உலகினுகருவைதிகன்செங்கதிரோனையொத்தொளிர்வா
னலர்புகழ்மற்றவன்சிவன்போல்யாவரும்போற்றத்தக்கான்
மலமிலவன்மான்மியம்யான்சொல்லுதற்குவல்லேனோ
பலமறைகண்மிருதிபுராணதிகளேபகருமால்.

வேதமார்க்கத்திற்போருக்கே முத்தியுண்டென்பதற்குப் பிரமாணம்.

சூதசங்கிதை பிரமாணிய விசாரமுரைத்த அத்தியாயம்.

பொலியும் வேதங்கள் தருமசாஸ்திரங்கள் புராணங்கள் மறை
யினங்கள், மலிதரும்உபவேதங்கள் ஆகமங்கள் மற்றும் காபா
லம் வாங்குலமே, கலிவுறு இவற்றின்பேதங்களினின்னு நாடு
பாசுபதமே சோமம், ஒலிபுகழ்மிக்கபயிரவமிவற்றினுடைச்சக
த்திராதிபேதங்கள். ௨.

கருதிருணிறத்து மாயஞகமமே கமலம்வாழ்பிரமஞகமமே.
அருகஞகமமே புத்தஞகமமே யறையுலோகாயிதநூலே,மருவு
சாங்கியமே தருக்கசாத்திர மீமாஞ்சமேயிவைகளுமின்னு,மிரு
நிலத்துள பன்னூல்களுஞ்சுயமே யெம்பிரான் படைத்தனன்
மாதோ. ௩.

அன்னவனருளால் மாலயனுதியமரரும்இயக்கசித்தர்களும்,
நன்னயமருவித்தியாதரரும்நாடிராக்கதமுனிவரும்பன்னலநர
ரும் தத்தம் ஞானத்தின்பண்பினுக்கநுகுணமாவம்,முன்னவன்
வகுத்த நூல்களைவிரித்துஞ் சுருக்கியுமொழிந்தனர் பின்னர். ௪.

கறைகொள் புத்தாதிமார்க்கங்களும்தாங்கண்டிக்கப்படுவன
வல்ல, வறைதருக்கத்தாலொருவனோர்மார்க்கமனுட்டிக்கினவ
னம்மார்க்கத்திற், குறையனுகுணமாவதிற்றிடமாகவுரைத்திட
ப்பட்ட நம்பரமன், மறைவருமருளால் முறைமுறையுயர்ந்து
மறைநலமார்க்கம் நன்கடை.வான். ௫.

வேதமார்க்கத்தின் முக்கியமாக விளங்கிடப்பட்ட நஞ்சிவ
னே, நீதகன்முத்திகொடுப்பவன் கருமகாண்டத்திற் செப்பிட
ப்பட்ட, நாதனுஞ்சிவனன் ஞானத்திற்பத்திநல்குவான் ஞான
காண்டத்தி, லோதிடப்பட்டசிவன் ஞானமூலமாகவொண்மு
த்தியைக்கொடுப்பான். ௭.

முத்திதானேகமாயிருப்பதனால்முயல்பலமார்க்கங்களாலும்,
சித்தியாதுயர் வேதாந்தநன்மார்க்கந்திகழ்நிராகாரமாயபேதம்,
ஒத்தியலசிவனையே சொலுமதனாலுரைத்த விம்மார்க்கத்தினா
லும், பத்தியாஞானம் விதைத்தையாமென்பர் பத்திநூல்வழிச்செ
லியுயர்ந்தோர். ௮.

வேறுமார்க்கங்களாலெழுஞானவினைதவாவவித்தையேயெ
ன்று, கூறுவரறிந்தோர்மாதவப்பெரியர்குறைந்த விம்மார்க்க
ங்களுக்குத், தேறுபிரமாணியமெனப்படுதல்திகழ்முத்திவிடய
த்திலில்லை, மாறுறுவதனால் மறையந்தமார்க்கன் மற்றிம்மார்
க்கஞ்செலல்பழுதே. ௰.

ஆரணமார்க்கமொன்றினுனேயுண்டாகிடும்புத்திமுத்திகளும்
பூரணசிவசொரூபத்தும் பந்தசொரூபத்தும் புகல்பிரபஞ்சகார
ணத்துஞ்சிர்க்கதிச்சொரூபத்துங்கரைஞானசொரூபத்தும் வே
தச், சிரணவந்தத்தினுக்கு மாறுகச்செப்பியதென்னெனிற் கே
ண்மின். ௰௧.

மந்தமார்புத்தியுடையராய் வல்லமாயையால்மூடிடப்பட்ட
பந்தராயினருக்கனுகுணமாகப் பகர்ந்ததல்லால்மறந்தேனும்,
சந்தமாந்துயர்ந்த பரமார்த்தமாகச் சாற்றினதில்லையாதுணர்
விர், கந்தநாண்மலர்ப்பூங்கருங்குழல்பாகக்கடவுடாள் கருதமு
ள்ளகத்திர். ௰௨.

கூர்மபுராணம்.

அருமாமறைகண்முழுவதுமென்சத்தியர்குமாங்கவைகள்,தி
ருமாலுந்தித்தடம்பூத் தசெல்வன்முன்னைப் படைப்பதனில்,
ஒருநான்மறையாம் பெயரோடு நடக்குமன்றூல்வழியொழு
கார், மருவார்முத்திவீடதனின்மம்மருறு நூல்வலைப்பட்டே.

வேதவொழுக்கமிகழ்ந்து புல்லர்விரைகின்றம்போற்றனிபு
னையுந்,நிதனூலின்வழிசென்றோர்செல்வர்நரகக்கதிகளாய்,

ஆதறன்றூற்புன்சமயங்கற்றோர்முகத்தினருமறைகள், ஒதிபு
ணர்ந்தமுதுக்குறைவிஞரவோர்சிறிதுநோக்காரால்.
சாருவாங்கம்பாபாலஞ்சாற்றுப்பாஞ்சராத்திரநூல்
மாறுசெய்யும்வாமமுளமயக்கச்செய்தநூலாகும்
தேறியின்ஞர்ற்படிநின்றோரிவற்றையுலகிற்செப்புவோர்
பாறுஆட்ருநரகத்தினளப்பில்காலப்படிந்திடுவார்.
வேதநூல்களவற்றின்வழிவிராட்டாஞ்சுவாயம்பூமனுமன்
ஓதுநூல்கள்வியாதமுனிபுணர்த்தநூல்களவற்றின்வழி
நிதிலருமாமறைஞ்சியவர்செப்புநூல்களனைத்துமே
நீதிநூல்களிவழிநின்றோர்நெறியினின்றோரே.

எதுபொது எதுசிறப்பு?

இதனுல் இதரமார்க்கத்தில் முத்தியில்லையென்றும் வேதாந்தமார்க்கத்திலுமேயே முத்தியுண்டாமென்றும் அறிகின்றோம். இதரநூல்கள் முத்திவிஷயத்தில பிரமாணமாகா; வேதாந்தத்துக்குச் சாதனமான விஷயங்களில் பிரமாணமாம். இந்தப்படி அத்துவிதிகள்பேசுகின்றார்கள். அவர்கள் பேரில் குற்றமில்லை.

இவர் வேதத்தைப்பொதுஎன்கிறார். வேதத்தைப்பொது என்றும் ஆகமத்தைச் சிறப்பென்றுஞ்சொல்வது இவரது கொள்கையும் இவரது இனத்தார்கொள்கையுமாம். இதைச் சிந்திதாராய்வாம். எது பொதுவோ அது பொதுவாகவேயிருக்கவேண்டும்; சிறப்பாகப்படாது. எது சிறப்போ அது சிறப்பாகவேயிருக்கவேண்டும்; பொதுவாகப்படாது. வேதம் பொதுவென்பதுண்மையாயின் பொதுவில்யாவருமே பிரமாணமாகக்கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்வதில்லை. பௌத்தர், சமணர், பாரஸிகர், மகம்மதியர், கிறிஸ்தவர், யூதர்முதலியவர் வேதத்தைக்கொள்வதில்லை. உலகிலுள்ள 150 கோடிஜனங்களில் வேதப்பிரமாணத்தார் 17 கோடிஜனங்கள்தான். இவர்கள்தவிர மற்றவர் அங்கீகரியாமை மாத்திரமல்ல; வெறுத்திகழ்வுஞ்செய்கின்றார்கள். ஆதலால் வேதம் ஆரியர்களுக்குமாத்திரஞ் சிறப்பாயிருக்கின்றது. அந்த ஆரியர்களுக்குமாத்திரமாவது சிறப்பாயிருக்கின்றதாவென்று பார்க்கின் அப்படியுமில்லை. அவருள்ளும் அந்தணர்க்குமாத்திரஞ்சிறப்பாயிருக்கின்றது. அந்த அந்தணர்க்குமாத்திரஞ்சிறப்பாயிருப்பதால்சிறப்பென்றே சொல்லலாமென்னின், அவ்வாறுஞ்சொல்லக்கூடவில்லை. ஏனெனில் அதுவேபொதுவுஞ்சிறப்புமாயிருக்கின்றது. பூர்வகாண்டம் உத்தரகாண்டமென வேதமிருபகுதியாகி, அவற்றில் உத்தரகாண்டஞ் சிறப்பாயிருக்கிறது. அவ்வுத்தரகாண்டத்திலும் பொது சிறப்பிருக்கின்றது. அதாவது சிரவண மனன நிதித்தியாசனம்சமாதிசாக்ஷாத்காரமாம். அவற்றுள்சாக்ஷாத்காரமே சிறப்பானது. அந்தச்சாக்ஷாத்காரத்திலும் வித்து, வரன், வரியான், வரிட்டன் என நான்குநிலைமையிருக்கின்றது. அந்நான்கு ஞானநிலைமையிலும் வரிட்டநிலைமையே சிறப்பானது. இவ்வகையாகமாத்திரமன்று; இன்னும்வேறு பலவகையாகவும் பொதுசிறப்புச்சொல்லலாம். ஆகலால் வேதம் பொதுவென்றுரைத்தல் தகுதியன்று.

இனி ஆகமம் சிறப்பென்பதைப்பற்றிப்பேசுவோம். ஆகமத்தில் சைவாகமம், வைஷ்ணவாகமம், சாத்தேயஆகமம், இரணியகருப்பஆகமமுதலிய பல ஆகமங்களுள்ளன. அவற்றுள் யாவுஞ்சிறப்பாமா? ஒவ்வொரு ஆகமத்தினரும் மற்ற ஆகமங்கள் பொதுவென்றும் தமதாகமமாத்திரஞ் சிறப்பென்றுங்கூறுகின்றார்கள். அவற்றுள்பொதுஎது? சிறப்பெது? சைவாகமத்தார் சொல்லும்படி சிவாகமமே சிறப்பென்று வைத்துக்கொள்வோம். அதிலும் பொதுச்சிறப்பில்லாமற்போகவில்லை. சைவாகமத்தில் வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவமென அறுவிதபேதமுண்டு. அவற்றில் சைவமே சிறப்புடையதென ஆறுசைவருளொருவரான சைவர் கூறுகின்றார். இந்தச்சைவர்க்குரிய ஆகமங்கள் காமிகாதி 28 ஆகமங்களாம். அவற்றுள் வீரசைவாகமுமுள்ளது. அதை இந்தச்சைவர்கள் சாபாலியமென்று கொள்ளுகின்றார்கள். அதுபோக மற்றைய ஆகமங்களை சிறப்பாகக்கொள்வோம் எனின், அந்த ஆகமங்களிலும் சரியை, கிரியை, யோகம், ஞானமென நான்கு பாதங்களுள்ளன. அவைகளில் ஞானமே சிறப்புடையது. அந்த ஞானமும் பரஞானம் அபரஞானமென இருவகைத்தாம். அவைகளில் பரஞானமே சிறப்புடையது. மற்றொருவகையாகச் சிரவணாதிகளுங்கூறலாம். இவ்வாறு ஆகமங்களிலும் பொதுவும் சிறப்பும் இருக்கின்றன. எது பொதுவோ அது மற்றொன்றினுக்குச் சிறப்பாகவிருக்கின்றது. எது சிறப்போ அது மற்றொன்றினுக்குப் பொதுவாயிருக்கின்றது. இந்த நியாயப்படி வேதத்திலும் பொது சிறப்பிருக்கின்றன; ஆகமத்திலும் பொது சிறப்பிருக்கின்றன.

சில நூல்களில் ஆகமம் சிறப்பென்று கூறுகின்றதேயெனின், அதில் பற்றுண்டாவதற்கவ்வாறுகூறும். ஒவ்வொருதலபுராணமும் தான்தானே சிறப்பென்று கூறுவதுபோலாம். அந்தந்தத்தலத்தில்பக்திசிரத்தையுண்டாவதற்கு அதுவே சிறப்பென்றுகூறினும் எல்லாவற்றையுமாராய்ந்து பார்த்து, உத்தமமான தலம் இன்னதென்க்கணிக்கின்றார்கள். அத்துடனே தாரதம்மியமுஞ்செய்கிறார்கள். சிறப்பல்லாததைச்சிறப்பென்றுசொல்வது பொய்யல்ல; அருத்தவாதமாம். ஒவ்வொரு தலபுராணமும் தான்தானே சிறப்பென்றுகூறினும் அவை யாவுஞ்சிறப்பாகாமல் அவற்றுள் சிறப்பாயிருக்குமொன்றுமாத்திரம் எப்படிச் சிறப்பாமோ அப்படியே வேதமும் பற்பல ஆகமங்களும் அதது சிறப்பென்றுகூறினும் அதது சிறப்பாகாமல்வேதமொன்றேசிறப்புடையதாம். அவரவர் தம்தம் ஆகமங்களைச்சிறப்பாகக்கொண்டு நம்பி வழிபடலாம். அதனால்பயனுண்டு. ஆனால் அதைக்கொண்டு வேதத்தோடு எதிர்த்துப் போர்செய்யப்போவது தகுதியன்று. இது திட்டினமரத்தில் கூர்பாய்வதுபோலாம், வேதம்தானே, சுதந்தரப்பிரமாணம். ஆகமங்கள் வேதத்தைச்சார்ந்தே பிரமாணங்களாம். தாமே சுதந்தரப்பிரமாணங்களல்ல. எங்கேயெங்கேவேதவிரோதங்காணப்படுகின்றதோ அங்கே அங்கே அப்பிரமாணமாம். அப்பிரமாணமாயினும்அதுவேறோரதிகாரிகளுக்குபகாரமாம். அவ்வாறு ஆகமத்துக்கு வேதம் விரோதப்படின் வேதம் அப்பிரமாணமென்றல் பொருந்தாது. பலஆகமஸ்தர்க்குள் விவாதம் நேரிட்டுமுரணப்பட்டவிடத்துவேதத்தைக்கொண்டே தங்கள் முரணைத்தீர்த்துக்கொள்ளவேண்டும். ஒருவர் ஆகமத்தை மற்றொருவர் தமக்குப்பிரமாணமாகக் கொள்ளார். அவ்வாறு வேதத்தைச்சொல்லமாட்டார்கள். சொல்வார்களேல் பௌத்தர் பாரஸிகர் கிறிஸ்தவர் மகம்மதியர்முதலியவரைப்போல் வேதபாஹியராய்ப்போவார். ஆகமத்தைப்பொத் துக்கொள்ளாமையால் ஆகமபாஹியராய்ப்போவாரோயெ

னின் அதற்காகளவருஞ்சிந்தைகொள்ளார். இதனுல் ஆகமஞ் சிறப்பல்லவென்றேற்படுகின்றது. பின்னர் வேதத்தை விப சார நூலெனத்தாம்கொள்ளவில்லையென்கிறுர். ம-ா-ா-ஸ்ரீ சோமசுந்தரநாயகர் முதலியோர் கட்சியினின்றும் இவ்விஷயத்தில் இவர் வேறுபட்டிருப்பது சந்தோஷிக்கத்தக்கதே. இதுவிஷயமாக அவர்களைவிடச் சுந்தரர் புத்திமான்தான்.

பிள்ளையார்சுழிமுதலியன.

பிள்ளையார்சுழி, சிவமயம், திருச்சிற்றம்பலமுதலியவைகளைப்பற்றி நந்தனஹு புரட்டாசிமீ ௩௨ வெளியான கஙு-வது ப்ரம்மவித்தியாவின் அநுபந்தத்திற்கண்டு, அதன் பொருளையுணர்ந்து, அவை அத்துவிதிகளுக்கேயுரிமையாமென்றதைத்தெரிந்துகொள்வாராக.

மாயையென்பதன் பொருள்.

மாயையென்பதற்கு மாணிக்கவாசகசுவாமிகள்கொண்ட பொருள் அத்துவிதிகள்கொண்டபொருள்போலன்று; சுந்தரர் நுபக்ஷத்தார் கொண்டதுபோலென்றுகூறி, ஞானாமிர்தத்தில்காணும்படிசொல்லுகின்றுர். மாணிக்கவாசகசுவாமிகள் கொண்டபொருளிவர் சித்தாந்தப்படியென்பதற்குஆதாரங்காண்பிப்பாராகுல் அவ்வாறல்லவென்பதற்கும் அத்துவிதிகள்கொண்டபொருளேயென்பதற்கும் அம்மாணிக்கவாசகசுவாமிகள்வாக்கைக்கொண்டே ருசுப்படுத்துகிறோம்.

முடிவில் நாயகர் பலசமாதானம் எழுதியிருக்கின்றனரெனக்கூறி, அவற்றைத்திருப்ப எழுதிப்பத்திரிகையை நிரப்புவது அநாவசியகமென்கிறுர். அந்நாயகர்க்கவ்வப்போது மறுப்பு இப்பத்திரிகையிலேயே பிரபலமாய் வந்தேயொன்டேயிருப்பதால் அதுவிஷயமாகப்பின்னும் நாம் எழுதிப்பத்திரிகையை நிரப்புவது அநாவசியகத்தினும் அநாவசியகமெனக்கருதி நிறுத்துகின்றும். இனிபடுத்த பத்திரிகை விஷயமாகப்பின்னர் எழுதப்படும்.

மாயாவாததிமிரபாஸ்கரன்.

சிவராத்திரியும், ஜோதியும், ஓர் சந்தேகம்.

புகழ்பெற்ற தமிழ்தேசத்திலுள்ள பண்டிதசிரோமணிகளுக்குத் தெரிவிப்பதாவது. சிவராத்திரியென்னும் திவ்வியதினமானது எல்லா ஆரியர்களாலும் முக்கியமாய் எல்லா ஆரியர்களாலும் முக்கியமாய் எல்லா சிவவழிபாடுள்ள சைவர்களாலும் சிறப்பாகக்கொண்டாடப்படும் ஓர் விசேஷநாளாக இருக்கின்றது. அத்தினத்தில் சென்னைமுதலிய இடங்களிலுள்ள அனேகபக்திமான்கள் வடஆற்காடுஜில்லாவிலிருக்கும் காளஹஸ்திமுதலிய திவ்விய க்ஷேத்திரங்களுக்குக்கடவுள்தரிசனஞ்செய்துவரப்போவதுவழக்கம். ஆனுல் வேறுசிலர் சென்னைக்குச்சமீபத்தில் சுமார் (15) மைல் தூரமுள்ள எருமுட்டைபாளையமென்னும் ஊருக்குப்போவது உண்டு. இக்கிராமம் சென்னையிலிருந்து செல்லூருக்குப்போகும் பாதைக்கு சமீபத்திலும் ((Red Hills) என்றுசொல்லப்படும் அருக்கல் சத்திரத்திற்கு வடக்கே ஐந்து அல்லது ஆறுமைல்தூரத்திலுமிருக்கிறது. இவ்விடத்தில் காளஹஸ்தியைப்போல அவ்வளவு விநோதவேடிக்கை கண்காட்சிகள் யாதொன்றுமில்லை. ஆனுல் எவர்களைக் கேட்டபோதிலும் ஜோதியைப்பார்க்கப்போகிறேன் என்பார்கள். இந்தக்கிராமத்தில் ஒரு சிறியகுன்று இருக்கிறது. அதில் ஒரு அம்மன்கோயில் உண்டு. பிரதி சிவராத்திரியன்றும் அம்மனைச் சிங்காரித்து ஒருவனை அன்றுவிரதமாக வைத்து அந்தக்குன்றைப்பிரதக்ஷிணஞ்செய்து அம்மனை அக்குன்றின் ஓர் இடத்தில் வந்து நிறுத்தவும், பூசாரிகள் வர்ணிக்கவும் விரதானுஷ்டர்மேல ஆவேசம்வருகிறது. உடனே எல்லாஜனங்களும் அதிக மனம் உருகினவர்களாய்ப் பிரத்தியக்ஷமானகடவுளை இக்கலியில் காணுகிறேமென்று அதிகபயபக்தியுடன் பார்த்திருக்கும்போது, அம்மன் இருக்கும் ஸ்தானத்திற்கு வடகிழக்குப்பாகத்தில் அக்கருமையான இருட்டில் வெகுதூரத்தில் பூமியிலிருந்து எழும்புவதுபோல இரண்டு அல்லது மூன்று அடி அகலமும், எட்டு அல்லது பத்து அடி உயரமுமுள்ளதான ஒரு அதிகபிரகாசமான ஜோதிதோன்றி அடங்குகிறது. இவ்விதம் உடனுக்குடனே மூன்றுதடவைகள் ஜோதிகாண்கின்றது. அப்பொழுது பூதப்பிரேதபைசாசங்களால் சங்கடப்படுகிறவர்களெல்லாம் அதிகமாய்ப்புலம்பி அழுது சுவாமிக்குப்பயந்து வாரோன், வாரோன், இனிப்போகிறேன் போகிறேன் என்கின்றன. பண்டிதமணிகளே! யான் இதுகாறும் இவ்வித அபூர்வத்தைக்கண்டதுமில்லை கேட்டதுமில்லை. போனசிவராத்திரியன்று யான் நேரேபோய்த்தரிசனஞ்செய்துஅப்பலனைப் பெற்றேன், வேண்டியமட்டும் ஆராய்ந்தேன். இது பூசாரிமார்களால் தந்திரமாய்ச்செய்யப்படுகிறதோ என்று பலபல விதமாய் விசாரித்தேன்; அப்படியில்லை, எல்லாம் உண்மையே. இச்சோதியுண்டாகுமிடம் பக்கத்திலுள்ள குடதலையாறு என்று வழங்கும் ஆற்றிற்குச் சமீபத்திலிருக்கும் புண்ணியகோட்டி ஈஸ்வரர்கோயிலிருந்து என்று இதற்கு ஏதேதோ பலர் பலவிதங்களாகப்புராதன கதைகள் சொல்லுகிறார்கள். அவைகள் என்புத்திக்கு எட்டவில்லை. புராதன ஸ்தலமாயிருக்கலாம் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.. இதுபொய்யோ, மெய்யோ, தந்திரமோ, என்கிறவிசாரம் உங்களுக்கு வேண்டியதில்லை. அவ்வளவும் முன்னதாகவே யான் பரிசோதித்திருக்கிறேன் ஆகையால் இதற்குக்காரணமும் புராணப் பிரமாணமும் பரோபகாரபுத்திமான்கள் தடையின்றிக்கூடியசிக்கிரத்தில் எனக்கும் மற்றுமுள்ள ஆரியபக்தர்களுக்கும் தெரிவிக்கும்படிகோருகிறேன். மேலும் எவர்களாவது இதைச்சோதிக்கவேண்டுமானுல் பிரதி சிவராத்திரியன்றும் போய்ப்பார்த்து ஆனந்தித்து மகிழலாம். இன்றைக்கெல்லாம் ஒருவர் தனது தேகத்தைதுண்டுதுண்டுகளாகக்காட்டினாலும் இது சாரடி (கண்கட்டு) வித்தையென்று சொல்லும் "உண்மையை உள்ளபடி அறியாத" நாத்திகர் அபிப்பிராயம் இதற்குச் செல்லத்தக்கதன்று. உத்தம பண்டிதர்களின் அபிப்பிராயங்களை யான எதிர்பார்க்கின்றேன்.

ச. சுப்பராயலுநாயுடு.

Chidambaram—Printed and published for the Proprietor at the "Brahmavidya Press" No 38 Senkalconeer pilliarkoil Street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 18

நெ கஅ.

ஸ்ரீ
வித்யா
ஶங்கர

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜயரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை

ஆதரித்து வருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிகவாரணர்களாகிய த. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉஞூ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காலம்வத்ஸரம்.
அவாரவிஉஅ-உ
மூகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,
[illegible]

Koviloor Digital Library

[illegible]

கைம்பெண்களுக்குமறுமணம் அவைதிகம் என்பது.

ஐய, நம்முன்னோர்நம்மவர்இம்மையிலும்மறுமையிலும் நற்பெயர் பெறவேண்டிப் பற்பல நற்கிரியைகளை நமக்குப் போதித்திருந்தும் அவைகளை விட்டொழித்து அவர்களை த்தூஷிக்கவும் இக்காலத்தவர் முயல்கின்றார். அந்தோ! இங்கு சில பூர்வபக்ஷிகள் இவ்விதம் சொல்லுகின்றார்கள். "தர்மத்தையும்பிரஜையையும்பெறவேண்டிஇப்பெண்களை விவாகம் செய்வேன் என அக்னிப்ராமணர் இந்திரன்முதலிய தேவர்களிடம் ப்ரதிக்ஞை செய்துவிட்டு அங்ஙனம் ப்ரதிக்ஞை பூர்த்திசெய்வதில்லை. அவன் புத்திரன் பிறப்பதற்கு முன்னரே இறந்தால் அவன்கருதியபயன் கைகூடவில்லை. அங்கு அவன் அசத்யப் ப்ரதிக்ஞை செய்த குற்றத்திற்கிடமாகாதொழிவது எப்படியோ அப்படியே ஒருபெண்ணையே முன்னொருமுறைகொடுத்து மறுமுறை மற்றவனுக்குக்கொடுப்போம்" என்பார்கள். அந்தோ! இவர்அறிவீனத்தை என்சொல்வோம். இவர்விவாக முறையறிந்தாரா? "விவாகவழியறியார் செய்தவழியே இது" என்பது எவருமறிவார். உலகத்தில எவனும் தருமம் பிரஜை இரண்டுக்கென்றே விவாகம்செய்து கொள்ளுகிறான் என்பதுண்மையாயினும் நடுவில் தெய்வ வசத்தால் மரணமடைந்தால் அவன் ப்ரதிக்ஞையைக்கடந்தவன் என்பதுநீதியோ? உயிருடன் இருந்து செய்யவேண்டிய வேலையைச்செய்யாவிடில் அவனைத்தான் ப்ரதிக்ஞை தப்பினவன் எனலாம். இங்கோ அவ்விதசம்பவமில்லை. இங்ஙனமிருக்க, இத்திருஷ்டாந்தத்தைக்காட்டிஅது கொண்டே தாம் செய்வதும் சரியென்பதுசிதமல்ல. முடவன் கங்கையில் நீராடாதொழியின் காலுள்ளவனொருவனும் தன்மேல் விழுந்த கங்கையைத்தள்ளவேண்டுமே. ஆயின் மேற்கூறியது பிடிவாதமேயன்றி வாதமல்ல. நீவிர் கொண்டபடி குழந்தைகளைப் பெறாத பெண்ணிடம் விவாகம் முற்றுப்பெறாமையின் அனேக பெண்கள் கணவனுடன் கூடி வெகுகாலம் வாழ்ந்தும் மலடிகளாய் நிற்கின்றார்களே. அவர்களுக்கும் இனி மறுமணம் செய்யவேண்டுமோ? அந்தோ! அஞ்ஞானப்பெருக்கைக்கண்டீர்களா? இது ஓர்புறம் நிற்க.

ஏதோவிவாகமென்று சடங்குமட்டில் இக்காலத்தாரியர் செய்துவருகிறார். அதனியல் அவரறியார்போலும். இவ்விவாகம் இம்மை மறுமைகளில் தம்பதிகளுக்கு ஒருவிதம் நீண்ட சுகம்கொடுக்கும் சடங்கென்பர் ஆன்றோர். அது எட்டுவகைப்படும். ப்ராமம், தெய்வம், ஆர்

Koviloor Digital Library

[illegible]

டிம், பிராஜாபத்யம், ராக்ஷஸம், ஆசுரம, காந்தர்வம் பைசாசம் என எட்டு'' என்று மனுகூறுதலால் என்க. அவற்றுள் பிராமம் என்பது மிகச்சிறந்தது. ஆகையால் அதையே ஆரியர் அனுஷ்டிப்பது. பெரும்பான்மையில்முன் பதின்மர்பின்பதின்மர் தானுமாக இருபத்தொருகுலமீடேற்றமதனுல் உண்டென்பர். இவ்வித நல்விவாகத்தால் ஒருவரனுக்குக்கொடுத்த ஒருபெண்ணைமறுத்து மற்றவனுக்குக்கொடுத்தல் உசிதமா? இவர் செய்யும் இக்கடுஞ்செயலாலயையும் பாவம் எவ்விதத்தும் இவருடன் ஒழியாது. இவர் முன்னேருக்கும் சம்மந்திக்கும். விதவைகளுக்கு விவாகங்கூடாதென்பதற்கோ பலவசனங்களுள. 'தாம்பூலம் எண்ணெய் தேய்த்துக்கொள்ளல் வெண்கலப் பாத்திரத்திலுண்டி இவைகளை எந்தக்கைம்பெண்ணும் பிரமசாரியும் சந்நியாசியும் உபயோகிக்கக்கூடாது' என்றுதருமசாஸ்திரம். இதனுல் பிரமசாரி சந்நியாசி விதவைகள் இவர்கள் ஒரேதருமம உள்ளவராக ஏற்படுகின்றதல்லவா? தாம்பூலம் தரித்தல் கூடாதென்ற சாஸ்திரம மறுமணத்துக்கா இடம்கொடுக்கும்? அந்தோ! இந்தயுகத்தில் எல்லோரும் நித்தியசுமங்கலிகளாய் இனி விதவையென்னும்சொல்லுக்கே பொருள் இல்லாமற்போய்விடும். பெரியோர் வழக்கால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் தெரிந்துகொள்வது வழக்கம். ஓர் கிழவன் குடத்தைக்கொண்டுவா எனில், மற்றவன்கொண்டுவருவதைக்கண்ட குழந்தைஒருவன் "குடம்'' என்னும்சொல்லுக்குப்பொருள் கிரகிக்கிருன். அங்ஙனம்விதவை என்னும் சொல்லுக்கும் பொருள் கிரகிக்கவேண்டுமல்லவா? எல்லாப்பெண்களும் மறுமணம் செய்துகொள்ளும்பக்ஷத்தில் விதவையென்னும் சொல்லுக்குப்பொருளேயில்லை. 'தான் தன்புத்திரைப்போலவே பாபுருடரைப்பார்ப்பது கற்பினியல்' என்பதாதிபிரமாண சத்தத்தால் மறுமணம் அமையாது. அக்காலத்தவர் மதியீனர் என்று இக்காலத்தவர் சொல்லுகிருர். இவரிடம் யாம அவரிலும் பெருமையொன்றையுங்கண்டோமில்லை. துராசாரம் குயுக்தி இவைகளையே அதிகமாய் இவரிடம் கண்டோம். நம்மூதாதைகளைப்போல் யாம் கடவுளைவழிபடுவோமா? காயத்திரிமுதலியமந்திரங்களைஜபிப்போமா? தருமசாஸ்திரமறிவோமா? சாஸ்திரங்களையும மற்றதையும்படிப்போமா? புண்ணியக்ஷேத்திரயாத்திரைசெய்வோமா? யோகாநுஷ்டானஞ்செய்வோமா? பிராதஸ்தானமுதலிய நற்கிரியைகளைச்செய்வோமா? அதிதிகளை வணங்குவோமா? பெரியோரிடம்அன்புசெலுத்துவோமா? நற்பொருளறிவோமா? பிதருகருமங்களை நடத்துவோமா? என்புகூடாதியசரித்தம

Koviloor Digital Library

[illegible]

மற்றவிடத்தும் ஒருவித ஒழிவுபெறுவோமா? நிச்செயல்களைக்கண்டவிடம் அச்சமுறுவோமா? கடவுளுடைய திருநாமங்களையாவதுச்சரிப்போமா? என்சொல்வோம், கலிராஜ ஆடம்பரத்தை! ஏதேனும் கேட்டால் புகைவண்டி தந்திகளைக்காட்டி மயக்குகின்றார். நம்முன்னோரிதையும் அறிந்திருக்கலாம். ஸர்வக்ஞான அவர்களுக்கு அறிவுசிறிதும் குறைவுறுமையால் என்க. அங்ஙனமாயின் ஏன் செய்தாரில்லை. அதனால்நேரிடும்வருணாசிரமதருமங்களின்வேற்றுமையைஆலோசித்திருக்கலாம். மறையோர் முதல் பறையோரீராக எவரும்ஒருங்கடைக்கப்படும்பட்டியல்லவோஅது. முன்னோர் இக்கொடுமையைக் கருதியேஇப்புகைவண்டியைஏற்படுத்த தொழிந்தார்கள். ஓ! ப்ரம்மவித்தாய்! அன்னாய்! இக்கலிக்கொடுமையைஎங்குசொல்லிஅழுவேன். இவ்வாபத்தில்சிறிதுகரையேற்றம் உன்னால் கிடைத்தாலன்றி வேறில்லை. நீயும் உதாஸீனம் செய்வதேன். நீஇருக்குமிடம் எத்தன்மைத்தோ? எங்களோ தாயிடம் தெய்வத்திடம் எங்கும் அன்பற்றவரானோம். எம்மவர்க்குத்தான் கதி ஏது வேறு? நீவிருத்தியடைந்தகாலத்தும் எம்மைப்பரிபாலிக்கலாகாதா? கோபத்தைவிடு. கருணைசெய். கலியில் கரைகள் மழைகளால் உடைந்து சேதம் நேரிடும். 'வேதமார்க்கம் பாஷண்டத்தால் கண்டிக்கப்படும்'என்னும்பாகவதவசனத்தால் அனேகமாய்இக்கலிபுருடர்களுக்குப்பெண்கள்மொழியேவேதமாகின்றது. அவர்பெண்பாலர்சொல்லேகேட்பவர்கள். அதிசீக்கிரம்கிறிஸ்தவர் எங்கும்நிறைந்து எம்மைஒழித்துவிடுவர் என்று தோன்றுகின்றது. நீ பெருங்கேடுவந்த பின் செய்யும் வேலையினால் எதுபயன்படும். மடாதிபதிகளைப்போல் நீயும் மௌனஞ்சாதித்தால் என்எங்கள்கதி அந்தரமாகாது? என்செய்வோம்! எவரைச்சரணமடைவோம். எங்குசெல்வோம். இப்பொழுதுதோன்றிய ஆபத்து மதத்துடன் ஒழியாது தேசத்தையும் பிடித்துக்கொண்டது. இக்காலத்தோ தேதிமழையுமில்லை. அகாலத்தில் மழை பொழிவதும் உபயோகமில்லை. எது எங்ஙனமாயினும் சாரமாயுள்ள ஒருவிஞ்ஞாபனம் உனக்கெழுதுவேன். அதாவது:—எப்படியும் நீ எமது தேசத்திற்குத்தாய். குழந்தைகளைக் காத்தல் தாயின் தலைச்சுமையே யாதலால் இக்கலிக்கொடுமைகளை அடக்கி எங்களைக் காக்கவேண்டும் என்று உனது கழற்கமலங்களைப்பற்றி நிற்பேன்.

சுபம்.

மொழிபெயர்ப்பு.

இங்ஙனம்,
திருவேங்கிடம்
திருமலைசாஸ்திரி.

[illegible]

இக்காலத்தவரதியல்பும் தேவாலயதர்மமும்

ஐயன்மீர்!

சற்றுக்கவனியுங்கள், உய்யும்வழி கடைப்பிடியுங்கள்! எவன் அளவிலடங்காப்பெருமை பெற்றவனும் கருணை பொருந்தினவனுமானவன்; எவன் சகலசற்குணங்களுக்கும் இருப்பிடமும், எங்கும்நிறைந்தபரிபூர்ணவஸ்துவுமானவன், எவன்யாவஞ்ஜீவர்களிடத்து மந்தரியாமியும் சகலலோகேசுவரனுமானவன், எவன்சகல பலப்பிராப்திக்கும் நிருபாதிதியும் பத்தர்களால் துதிக்கப்படுவனுமானவன், அப்படிப்பட்டவனை மனமொழிமெய்களால் வந்தனைவழிபாடுசெய்வோமாக. அவ்வழிபாட்டிற்கு விஷயனும் சச்சிதானந்த சுவரூபியாய் விளங்கும் எம்பரசிவம் தம்பஞ்சகிருத்தியங்களிலொன்றெனப்படுவதும் அவை தம்மில் பெருந்தகையையுடையதுமான அனுக்கிரகசத்தியால் தம்மிடத்தன்புவைத்த வடியார்பொருட்டும் உலகோபகாரப்பொருட்டும் அவரவர் கன்மத்திற்கும் பிரார்த்தனைக்கு மிணங்கமூர்த்திகரித்து பூமியின்கண் பற்பலவிடங்களிலு மாவிர்ப்பவித்து அனுக்கிரகித்து ஆங்காங்கு தேவமானுஷ சிரேஷ்டர்களால் ஆலயங்கணிர்மாணிக்கப்பட்டுத்திரு விளையாட்டுக்கேற்றபடி பூஜையுற்சவாதிகளேற்பட்டு அவனது மகிமை மூவுலகப்பிரசித்தமாயிருப்பதுவேதாகமசாத்திரானுபவப்பிரமாணமாமன்றே. அவ்வாறு திருவவதாரம் செய்தருளிய மூர்த்தியின் நித்தியத்திருவாராதனை யுற்சவம் முதலியவை ஆலயபிரதிஷ்டாபகர்களாலும் வேந்தர்களாலுமுபகரிக்கப்பட்டிராநின்ற பூமி தனம்முதலியனகொண்டு அவ்வக்காலத்து திக்குமன்பர்களால்நடாத்தி வரப்படுவதும் அவ்விருபாலார் பெரும்புகழும் அன்றும் இன்றும் என்றுமழியாநிலையினிற்பதும் உலகப்பிரசித்தமுடையதே யாமன்றோ? இனியவ்வாலயங்களும் அவைபரிபாலிக்கப்பட்டுவரும் முறைமையும் என்னிலைமையிலுள்ளன வென்பதை ஈண்டு விசாரிக்கப்புகுவாம். திருவவதாரம் செய்ததின்காலமும் ஆலயங்கணிர்மாணித்தவன் பெயரும் இது இவரெனக்குறிப்பிடுதல் (தலமஹிமைபற்றிச்செய்யும் விசாரணையில் விளங்குமானதினாலும் எடுத்ததை முடிப்பதிலெமக்கு மெத்த அவசரமிருப்பதினாலும்) அவ்வளவு முக்கியமல்லவாதலால் விஷயவாராய்ச்சியில் மேலே செல்லுவாம். இங்குதேவாலயத்தையும் ஓர் கனிவிருட்சத்தையும் (திர்ஷ்டாந்தமாக) எடுத்துக்கொள்வோம். அவ்விருட்சத்தினிடத்துண்டாகக்கூடிய பலனையடைய விரும்பியொருவன் அதைவைத்துக்காப்பாற்றுகிறான்; அவனது பிரயாசத்திற்குத்தக்கவாறு அது பலனைத்தருகிறது; அதைப்பெற்றுண்டு பேரமானந்தமடைகிறான்; பின்னுமதிகப்லனடையக்கருதி அதை (விருட்சத்தை)யவன்பெருகச்செய்யாதுவிடானன்றோ? அது அசேதனமானவிருட்சம்; இது சர்வஞ்ஞனும் சர்வவியாபகனும் சர்வஜீவ தயாபரனுமான கடவுளென்னும் கனியுடைய ஆலயமாகிறவிருட்சம். அதை நல்லுரம் பரப்பின பாத்தியில் வைத்துத்தண்ணீர் விட்டுக் காப்பாற்றவேண்டும். இது அப்படிக்கன்றுமனமாகியபாத்தியைவைத்து அன்பாகியஜலம்விட்டுக் காமக்குரோதாதிகளாகிய துஷ்டமிருகங்கள்சேதப்படுத்தாதபடி காப்பாற்றப

Koviloor Digital Library

[illegible]

டவேண்டும். அது சரீரபிரயாசமுள்ளவேலே. இது சரீரா ரோக்கியமுள்ளவேலை. அதுபலன் தருவதனிச்சயம். இது நிச்சயமாய்த்தரக்கூடியது..அது.அற்பமாய்த்தரும். இது.அப ரிமிதமாய் தரும்.அது அடைந்துவன்றும்பொழுது மாத்தி ரம் சந்தோஷம் தரக்கூடியது. இது நித்தியானந்த சந்தோ ஷத்தையும் என்றுமழியாப்பதவியையும் தாவல்லது.இதை பொருவன் தேடியடையவேனல், மற்றிலவன்புத்தி செறி தும் செல்ல இடந்தருவதாமோ? இதைத்தான் நம்மதயத்து ப்பூர் விகர்கள் அடையவபேட்சித்து வழிபட்டுக்கருதிய வை கிட்டப்பெற்றானந்தமடைந்து அதற்கறிகுறியாய்ஆலய ங்கள்கட்டுவித்தார்கள். அவ்வாலயங்களின்பாலனமுறைகள் காலம் செல்லச் செல்ல யுகதர்மம்ஒங்கிஙீச்சுவரவாதம் பரவிவரஎம்மவரதுபுத்தியும் அதற்கொத்துநடக்கமிகத்தளர் வுருவனவாயின .சில இருந்தவிடமும் தெரியாமலேதனைமட் டமாயின.அஃதின்காரணம்வருமாறு—:பூர்வகாலத்தவர்கள் எம்மீசனிடத்துவைத்துவந்த அன்பின்மிகுதியால்அவன்கிரு பைபைக்கவர்ந்துதிர்ப்தியுள்ள வரையில்வேண்டியவற்றைய னுபவித்து எவரும் நிகரின்றி வாழ்ந்து திவ்வியசுகம்பெற்று இறுதியில் பேரின்பவீட்டிற்குப்பாத்திரராய் நின்றனர். ஆல யபாலனங்களும் அதையொத்து நடந்துவந்தன. இக்காலத் தவரோ காலசுபாவத்திற்கேற்பப்புத்தியை விபரீதவழியில் திருப்பி, "கடவுளென்பது மித்தை" என்றும் "அப்பிரத்தி யட்சத்தில் நம்பிக்கைவைப்பது அப்பிரயோஜனம்" என் றும் "ஆலயங்கள் ஐசுவரியம் வைத்தாளத்தெரியா மந்தபுத் தியால் கட்டுவிக்கப்பட்டன" வென்றும் "இப்பொழுது வே ற்று மதத்தரின் நடவடிக்கைகளும் ஒழுங்குகளும் திரவியத் தைவிரயம்செய்யும் புத்திசாதுரியமும் எவ்வாறு கொண் டாடத்தக்கதாயிருக்கிற" தென்றும் கூறுகின்றனர். இவர்கூ ற்று இவரையேமடக்கிக்கடாவுந்தன்மையதா மென்பதனை இவர் சிறிதுமறிந்திலரோ! அன்றி அறிந்தும் தம்விபரீதக்கொ ள்கையைத்தகர்க்கின்ற எவருமில்லையென்றெண்ணியோ. நிதானியுங்கள், இவர் கொண்டாடும் வேற்றுமதத்தரின் தெ ய்வவிசுவாசமும்வேற்றுத்தேசங்களில் வியாபித்துத்தெய்வா லயங்கள் தாபித்துவரும் சாமர்த்தியமும் இவர் புத்தியில் படாதுபோன தென்னையோ. வேற்றுமதத்தரின் நடவடிக் கையை இவர் கசடறவிசாரிக்கின் இவரது புத்தி இவரைவி ட்டுபோங்நனமோடிடுமோ.இஃதுமிக்கவியப்புடைய்து.இங்கு இவர் புத்தி பட்டிவழியிற்சென்றிடுவதைத்தடுத்துத் தொ ட்டியுளடைத்திடுவாம். "கடவுள்மித்தை" என்றுசொல்ல இவர்வாக்குவேதமல்லவாயினும்குயவனுக்குப்பலநாள்வேலே தடியனுக்கொருநிமிஷவேலேஎன்பதுபோலஇல்லேஎன்பதிவ ர்க்குச்சுலபமாகுமாருகாமல்உண்டேன்பது (மரத்தைவைத் துக்காப்பாற்றிப்பலனெடுப்பதுபோலேயாமாலலான்) நியயா வாயிலாகவெடுத்துக்கூறப்படவேண்டுமாயினும்அதுஇவரின் மந்தபுத்திபிற்படுவதருமையினுமருமையே. எம்மீசன்திருவி ளையாடல்கள்ஒவ்வொருகாரணம்பற்றிச் செய்திருப்பதையும் அதைப் பற்றியபுராணங்களேயும் பின்னுமவ்வத்தலங்கடோ றுமின்றைக்கும்பிரத்தியட்சமாய்நடந்துவரும்விசேடங்களே யுமாவது இவர் பார்த்தல்லதுகேட்டிருப்பரேல் ஒருபொழுது மவ்வாறுசொல்லத்துணிபார். நாம்பலவிடங்களுக்கும் சே ன்று ஆங்காங்கு நடக்குமற்புதங்களைக்கண்ணுற்றறில் அது

Koviloor Digital Library

[illegible]

ரையில்இவனைப்போலபயக்குமிருக்த அற்பாச்சயமும்அத ாகிஇறைவன்திருவருளிவிபந்துக்ன்மேருமாதலான் அவைக ருளொன்றை இவர்மபக்கம் நீரவெடுத்துரைத்துப்பின்னும் (அம்மயக்கம்) அறுகாவண்ணம் தடையிடுவோம். சொற்ப காலத்திற்குமுன்வைக்கமென்னுமோர்மஹாக்ஷேத்திரத்தி ற்குச்சென்றிருந்தோம். அங்குளம்முடன்வந்திருந்தவொருவ ன்தனக்கொருபிடித்தவியாதியாயிருந்து அதுதீருமாறுபிரார் ததித்து மறந்திருந்தான். பிரார்த்தனை நிறைவேற்றும்தினத்தி ற்கு முதனாளிரவில் திவ்யதேஜோவடிவான நாகசர்ப்பம் ஒன் று அவன் படுத்திருந்த படுக்கையில் அவனுடன் படுத்திரு ந்து அசதியில் அவன் கைபடவே சர்ப்பமெனத்தெரிந்து கு ளிக்கதவிக்கீழேகுதித்தான். அதுவுமவனைப்பின்தொடர்வே அவனுடைச்சர்ப்பமோடவெகுதூரம்சென்று அங்குநின்றவர் மரிக்க, நின்றனன். சர்ப்பமும் அவனுடன்நின்று எதிர்த்து முகத்தை நோக்கிப்பூமியில் அறைந்தது. இதைக்கண்ணுற்ற யாவரும் அச்சமடைந்து சங்கதியை விசாரிக்கையில் அத்த லத்தில் சர்ப்பம் விசேஷமஹிமைபெற்றதென்றும் பகவான் அந்த ரூபமாகவே வெளிப்பட்டு அருள் புரிவதென்றும் தெ ரிந்தது. உடனே துன்பமடைந்தோனை வினவியதில் தான் பிரார்த்தித்துக்கொண்டதுண்டென்றொப்புக்கொண்டுசர்ப்ப த்தைப்பிரதட்சிணம்வந்து நமஸ்கரிக்கவே அந்தர்த்தியான மாயிற்று. பிரார்த்தனையையும் நிறைவேற்றினன். அத்தலத் தில்தானே பின்னுமொரு விசேஷம் நடந்தது. ஒருமுக்கிய தி னத்தன்று பகவற்சன்னிதானத்தில் நடந்தபிராமண சமா ராதனையில் சகலநிர்வாகமும் செய்யக்கடமைப்பட்ட தலத் தின் இராஜாங்கவதிகாரியொருவர் அங்கு தெரிசனத்திற்கு ச்சென்றிருந்தசிலருடன்வர்த்தமானம்விசாரித்துக்கொண்டி ருந்தனர். அச்சமயம் அனேகமாயிரம் ப்ராம்மணுள் போ ஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்பரிமாறுவோர்களுக்குள் சம்வாதமுண்டாய் பந்திவிசாரணை தடைப்படவே ப்ரா ம்மணுளுக்கு கோபாக்கினி ஜ்வலித்தது. தர்க்கத்தைவிசா ரித்துத்தீர்க்கக்கடமைப்பட்ட வதிகாரி கொஞ்சதூரத்தில் ருந்ததனலே அதைக்கவனிக்கக் கூடாமற்போய்விட்டது. பிராமணபோஜனசமயத்தில் அந்தவிசாரணைக்காகவே ஏற் பட்டிருக்கிறஅவர் வேறுவிஷயத்தில் பிரவர்த்தித்ததும் பிச கானதினலே அத்தருணமவரிருந்தவிடத்திற்குப்பின்புறம் ஓர் அறையில் பெருங்காற்றுக்குச் சமதையான சப்தமுண் டாயிற்று. அஃதென்னவென்று கவனிக்கவே பார்த்தவர் எவரும் திகிலடையக்கூடியதாய் திவ்யாச்சர்யமுள்ளதாய் அதி உன்னதமானதாய் படத்தை விரித்தபடி ஒரு நாகஸர் ப்பம் வெளிவந்தது. அப்பொழுதவ்விடத்தில் நின்றவர்களிற் சிலர் நெடுந்தூரமோடினர். சிலர் ஒருவரோடொருவர் தா க்கிக்கீழேவிழுந்தனர். எஞ்சிநின்றவருடன் நாமும் பார்த் திருக்கவே ஸர்ப்பம் அதிகாரியின் முன்வந்து அதி உக்கிரத் துடன் செய்த சீறலினுல் உண்மையில் நாமாயிருந்தால் ஈச னடிசென்றிருப்போம். அதிகாரி விஷயத்தையறியாதவரா னதினுலே திக்பிரமைகொண்டு கரையில்லாத்துன்பத்தை யடைந்து பகவானை நோக்கிப் பிரார்த்தித்தனர். கூடவிருந் தமற்றவர்கள் சங்கதியையறிந்து தெரிவிக்கவே தேகம் பட படக்க வியர்த்துக் கண்ணருவிபெருக இனி என்செய்வோ மென்றேக்கமுற்று ஸ்தம்பாகிருதியாய் நின்றனர். [illegible]

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

சம்பேறுமாறுதலின்றி மகாஉக்கிரத்துடனிருக்கவே இனிக் காலஹரணம் செய்யக்கூடாதென்றும், ப்ராம்மணுள் புகார் அங்கிகரிக்குமென்றும் சுற்றியிருந்தவர்கள் உடனே அபிஷேகிக்குச்சற்று தெளிவுண்டாக்கி அந்தவபசாரத்திற்குத்தக்கஅபராதம் செலுத்துவதாய்ப் பிரார்த்தித்து ஸர்ப்பத்தைவலம் வந்து நமஸ்கரித்துதனக்கனுமதிதரக்கேட்டவுடன், வெளிமடங்கி வந்தவழிசென்று ஸர்ப்பம் அந்தர்த்தியானமாயிற்று. உடனே சம்வாதமும்மொழிந்து பந்திவிசாரணையும் நடந்தது. ப்ராம்மணபோஜனமும் பூர்த்தியாயிற்று. இதை எப்படி நம்புகிறது, சாட்சியுண்டாவென்று விபரீதபுத்தியுடையார் ஒருசமயம் கேழ்ப்பாராயின், குறிப்பிட்டதலத்திற்கு நேரிற் சென்று பார்த்துவருவதே யுக்தமாமன்றி வேறில்லை. இது மாத்திரமன்று; எம்மீசன்மந்திர சுவரூபமென்னச் சுருதி(வேதம்) முறையிடுவதற்கிணங்கச் சிலர் அதைப்பிடித்துப்பிடுங்கிக் கருதியவை கைகூடப்பெற்று வருவதையும் இம்முறை விரிவஞ்சிவிடுத்தனம். மற்றொருமுறைவிரிப்பாம்.

இனி "பிரத்தியக்ஷத்தில் செய்யப்படுவதும் காணப்படுவதும்" மாத்திரந்தான் "நம்பத்தக்கவை" என்று இவருக்குத்தோன்றுமாயின் இவ்வுலகின்கண் பல யாகங்களிலும் நடக்கும்மிகவற்புதமானதும், நடந்திருக்கக்கூடியவைஎன்று நம்புத்திக்கெட்டினமட்டில் படாததுமான அனேக விஷயங்கள் தக்கபிரமாணங்கொண்டுதெரிந்ததாயினும், அதைநம்பாது விடவேண்டுமல்லவோ? அவ்வாறாயின் எருது குதிரை முதலிய மிருகங்களின்றி புகையின்வேகங்கொண்டு வண்டியோடுகிறதென்று இவிடத்திற்கது வியாபிக்கும் முன்னரே கேழ்வியுற்று எவருமதைச்சிறிதும்நம்பிக்கையிலெடுத்ததேயில்லை. பின்பு எங்கும் அதுவியாபகமானபிறகு தாம் முன்பவ்வாறுத்தேசித்தது அபவாதமேயாமென்று நிச்சயப்பட்டார்கள். இனிச் சொற்பகாலம் சென்று இப்புகைதம் அடியுடன் நின்றுபோமாயின் அதின் பின்புண்டாகுமவர் இதைச்சுத்த அபாண்டமென்றே நினைக்கத்தடையுளதோ? இதனால் நடந்ததுஉண்மையேயன்றிப்பொய்வழக்குலகில் பிரசித்தியடையாதென்பதையும் இதேவழி எம்மீசனது திருவிளையாடல்களும் அதைப்பறிவிக்குங்கருவியாயபுராணுதிகள் காரணமாக நம்பிக்கை கொள்ளற்பாலன வென்பதையும் விபரீதபுத்தியுடையார் அறிந்தடங்குவாராக.

"ஆலயங்கள் கட்டுவித்தல் ஐசுவரியம் வைத்தாளத்தெரியா மந்தபுத்தியால்" என்பது பின்னுமிவரது மடைமையைவெளிப்படுத்துகின்றது. ஐசுவரியம்வைத்தாளத்தெரிந்தவரென்றிவர் கொண்டாடும் வேற்றுமதத்தர் இவ்வுலகின்கண் எண்ணிலடங்காவாலயங்கள் மதிப்பிலடங்காது திரவியவிரயம் செய்து கட்டுவித்துத்தொழுதுவருவதிவரதுபுத்தியிற்படாதுபோனதென்கொலோ! ஆலயங்கள் கட்டுவித்த நம்தேயத்துப்பூர்விகர்கள் புத்திமந்தமும் இவரதுபுத்திப்பிரகாசமுமுள்ளதாமாயின் சுக்லபக்ஷ சதுர்த்தசியினிரவும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியினிரவும் முறையே யிருளும் பிரகாசமுமாகத்தடையென்னே? ஆயின் வேற்றுத்தேயத்தவரோ, வேற்றுமதத்தவரோ, தலையெடுத்துப் பாராதபடிசத்துருக்களைவென்று, துஷ்டர்களைக்கொன்று, மனுநீதிதவறாது ஜாதிசமயம் பிசகாது தெய்வபத்திமறவாது ஆறிலொருகடன்வாங்கி மன்னுயிரோம்பச் செங்கோலோச்சிப்பெரும்புகழடைந்தவரின் புத்திமந்தமோ, காமக்குரோதாதிகளையும் பஞ்சமஹாபாதகங்களையும் அனுதினமும் தீர்த்தபானம்பண்ணி பிறவுயிரைவருத்துதலே தொழிலாகக்கொண்டு எவ்

[illegible]

வித ஹீனமார்க்கத்தில்பிரவர்த்தித்தாயினும் தன்னுயிருடலோம்புதலே பெரிதென வெண்ணித் தினே தினே க்ஷீணகதியடைந்து இராச்சியத்தையும் சுவதந்திரத்தையுமிழந்து வேற்றுமதத்தர்க்காளாய் அவர் தயவுக்குச்சுமானவேகத்துடன் போட்டிபோட்டுச் சென்று தட்டுக்கெட்டுத்தெருவில் நின்றலையும் இவரது (விபரீதபுத்தியுடையார்) புத்திமந்தமோ, சிந்தியுங்கள். இதனாலன்றோ தேவாலயங்களும்தெய்வபக்திசிறிதுமின்மையால்நடத்துவோரின்றி அனேகம் பூமிமட்டமாயும் அனேகம் ஆலயம் மாத்திர முள்ளனவாயும் அனேகம் சிலமுக்கிய காலங்களில் மாத்திரம்பூஜாதிகள் நடப்பனவாயும், ஆயின. அது ஒருபுறம் கிடக்க, நித்தியநைமித்திகங்கள் நடந்துவருமனவாயுள்ளவைகளைப்பற்றிச்சற்றுவிசாரிக்கப்புகுவாம். சிலவாலயங்கள்சிலமடங்களின்பாம்பரையாதீனத்திற்குட்பட்டுக்காஷாயம்பூண்டு துறவிகளெனப்பெயர்பெறும்மார்ஜாலத்துறவிகளாலும் சிலதனிதர்மகர்த்தர்களாலும் ஆதரிக்துவரப்படுகின்றன. இம்மூவ்வினத்தாரும் பொதுப்பெயராய் தர்மகர்த்தர்களென வழைக்கப்படுபவராயினும் செய்கையில் பேதநடையுடையோராய் நடப்பவராயினர். எவ்வாறெனில் கூறுதும்: மடாதிபதிகளும் தனிதர்மகர்த்தர்களும் டாம்பீகத்திலும் காமக்குரோதாதிகளிலுமிச்சைகொண்டு தேவாலய பரிபாலனம் செய்பவர் போல நடித்து மாடமாளிகை பெட்டிவண்டி பல்லக்கு இரவு சுகம் இவை முதலிய சரீரசௌக்கியத்திலும், அவைசரிவரநடந்துவர ஏவலாட்களுக்குக்கொடுக்கு மூதியத்திலும் கைகொண்டமட்டில் வாரிச்செலவிட்டும் ஆதீனகர்த்தருத்துவத்தில் ஒருவருடனொருவர் துரஹங்காரப்பட்டுப் போட்டிபோட்டுச் சண்டையிட்டு நியாயத்தலமேறிவிவாதப்பட்டு டாம்பீகத்தையும் இன்சொல்லையும் காட்டி மயக்குமியல்பினரான நியாயவாதிகளுக்கும் ஏனையோர்களுக்கும் மிதமின்றிக் குவியல்குவியலாய்க்கொட்டிக்கொடுத்தும், கைங்கர்யப்பொருளை நாசமடித்து ஆலயத்தின் மேலொருபுறம் கடன்சுமத்திவருகின்றனர். இவர் சரீரசிரமப்பட்டுச் சம்பாதித்த சொத்தாயின் இவ்வாறு செலவழிக்கத்துணிவரோ? அன்றி உண்மையில் தெய்வபக்தி சிறிதும் இவரிடத்துளதாமாயின், இவரது புத்தி துர்விஷயத்திலும் துர்வினியோகத்திலும்பிரவர்த்திக்கஇடந்தருவதாமோ? சர்வாந்தர்யாமியும் சகல புவனகர்த்தாவுமான எம்மீசனைக்கல்லென்றெண்ணி இவர் இவ்வாறு செய்யத்துணிகின்றனரேயன்றி வேறில்லை. பின்னுமிவரது செய்கையை விரிக்கிற்பெருகுமாயினும் அதற்கிம்முறை யெமக்கவகாசம் கொடுக்கவில்லை.

சண்டையிடுமெவ்விருபாலாரிலொருவரபஜயமடைந்து நியாயவாதிகளைப்பார்த்துஒன்றும் பேசவகையின்றி அன்றுதான் தாய் தந்தையரந்தியேஷ்டி நடத்தினதுபோல ஒருவருடனும் பேசாது துக்கமுகத்தினிருப்பிடம் சென்று காலங்கழிக்கின்றனர். ஒருபோழ்து நியாயவாதிகளைக்கண்டு என் அவ்வாறாயிற்றென்று கேட்பாராயின் 'நீர்பார்த்திருக்கவில்லையா, நாமெவ்வளவுதூரம் நியாயங்களை எடுத்துரைத்தோம்; மற்றொருவரானால் அவ்வளவு பேசோம்; உமக்காக மெத்தக் கஷ்டப்பட்

Koviloor Digital Library

[illegible]

டோம்; ஜயமடையாமற்போக நியாயமில்லை, ஏதோகோர்ட்டார் செய்துபோட்டார்; இருக்கட்டும் அப்பீலில் ஒருகைபார்ப்போம்" என்பதாதி முகமலர்ச்சிசொல்லி முன்பற்றினது போதாதென்று பின்னும் பெருமாசைபிடித்து இவ்வழியிலிகளை ஏமாற்றுகின்றனர். அதற்கும் கர்த்துருத்துவாபேக்ஷப்பிசாசுபிடித்தாட்டிவிருட்டப்பட்டுக் கையில்காசில்லையாயினும் பிலைமையடுத்துக்கெஞ்சி ஜயித்தால் ஒன்றுக்கிரண்டு கொடுப்பதாய்வாங்கி மேல்கோர்ட்டேறி அதிலும் தோற்றுக்கரையில்லாத்துன்பத்தில் மூழ்குகின்றனர். பஞ்சாயத்தார்களோவெனில், ஓர் நிலையன்றி அவரவரிஷ்டத்தின்படி தர்மவிசாரணை நடத்துவோராய் பெயர்மாத்திரம் வஹித்துவருகின்றனர். அவரின் செய்கையும் கோவில் பெருச்சாளிகளாகிய மற்றுஞ்சிலரின் செய்கையும் அம்மம்ம! எம்மொருநாவால் சொல்லத்திறமின்று. கடிதமும் போதாது. போனதுபோக ஏதோ சில தலங்கள்மாத்திரம் ஜன்மாந்தர விசேஷத்தால் எம்மீசனருள் பெருங்காரணத்தால் சிலர் தோன்றியொருவாறு ஆதரித்துவருவாராயினர். சிலர் நூதனப்பிரதிஷ்டைகளும் ஜீர்ணோத்தாரணங்களுஞ் செய்தும் வருகின்றனர். அவ்வாறு எவ்விடத்தில் எவர்செய்துவருகின்றார் என நமது விபரீதயுத்தியுடையார் கேளாது விடாராகவே கூறுகின்றோம். பலவிடங்களில் பலர்களால் நடத்திவரப்படுவதை எடுத்துரைப்பதுஅருவசியமாம். அன்றி எமக்கு இவர்போனவழியெல்லாம் போகத்தக்க அவகாசமுமில்லையாகையால்சுருக்கவழியால் ஒன்றைமாத்திரம் இவர் சம்சயமறச்சொல்லி முடித்துவிடுவோம். ஸ்ரீவேதாரண்ணியம் பஞ்சக்குரோசத்திற்குட்பட்டு அதற்கு வாயுதிக்கில் காததூரத்திலிருப்பதும் முள்ளியாறு என்கிறஅகத்தியநதி தீரத்தருகில் அதற்கு தெட்சிணபாகத்திலுள்ளதும் தேவர்கள் வந்திறங்கி அந்நதியில் மூழ்கி திவ்யசுகம் பெற்ற காரணத்தால் அண்டர்துறையெனப்பெயர் பெற்றதும் தர்மசமர்த்தனீசமேத ஸ்ரீபிரணதார்த்திஹரர் திருவவதாரம் செய்தருளியதுமான அண்டகத்துறை என்னுமோர் திவ்யக்ஷேத்திரத்தில் அம்மூர்த்தியினதுலயம் இவ்வளவுகாலமெனத் தெரியாது ஜீர்ணமாயிருந்துவந்தது. அவ்விடத்தில் தெரிசனையை விரும்பிய முதற்குலத்தார் சிலரேயாதலாலும் அதையன்றி வேறு ஆலயமே யங்கில்லையாதலாலும் அதை ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டுமென்றுள்நினைப்பு அக்குலத்துதித்தபெரியோர்களிடத்துண்டாயிற்று. அவர்களில்ஜ்யேஷ்டராயுள்ளோரிடத்துமாத்திரம் அந்நினைப்பதிகரித்துநின்றது. ஆயினும்சொற்பவாஸ்தியிருந்ததுபற்றி அதைக்கொண்டு காலட்சேபம் செய்வதே மெத்தப்பிரயாசத்திலிருந்தமையால் கொஞ்ச திரவியம் கைம்முதலாகச்சேர்த்துக்கொண்டாலயத்திற்பிரவேசிக்கவெண்ணி, தன்னிடத் தன்னினைப்புத்தோன்றிய தற்குறிப்பாய் ஆலயங்கட்டுங்கருவி சில சேகரம் செய்துவைத்திருந்தனர். அங்ஙனமிருக்குங்காலையில் ஜன்மாந்தர கர்மபந்தங்களறுபட்டு பரிபக்குவமடைந்த காரணத்தால் தன்னிடத்தன்புண்டாகித் தன்கைங்கர்யத்தில் மனமுவந்து செய்யத்துணியும் ஆத்துமாக்களுக்குப் பிரதிபலனாக நித்தியானந்தமோக்ஷ

[illegible]

சகத்தைக்கொடுப்பதும் பக்குவமானவர்களிடத்திற் கர்மபூமியின் பற்று பின்னுமுண்டாகாவண்ணம் தடைப்படுத்தி மோக்ஷசாதனத்தின்பொருட்டுச் செய்யவுத்தேசித்த காரியத்தை விரவில் எத்தனித்து நடத்தலாபகப்படுத்துவதும் அவரின் (சனின்) இன்றியமையாக்கடனுமாகலான், அப்போழ்தவ்விடத்தில் வந்திராகின்ற கைங்கர்யவன்பரின் உறவினரொருவர் மூலமாய் ஆவிர்ப்பவித்து விரைவில் திருப்பணியை நடத்த ஆஞ்ஞையுண்டாயிற்று. பின்பு வேதமோதினவரும் சாஸ்திரம் பாண்டித்தியமுடையவரும் வேதாந்தவாராய்ச்சி செய்தவருமானகைங்கர்யப்பிரியரின்ஜ்யேஷ்டகுமாரர்தேவாலயஜீர்ணோத்தாரணம் செய்வதே சகலதர்மத்திலும் மேலானதென்றும் அதுவே மோக்ஷத்திற்கு முக்கியசாதனமென்றுங் கடைப்பிடித்து பிதாமனதிற்கிணங்க நடக்கவிச்சித்து தானே முன்னின்று திருப்பணியை நடத்துவதாயுறுதிசெய்து அதற்கறிகுறிப்பாய் நிசைதயும் செய்துகொண்டிருக்கின்றனர். வேலையில் பிரவேசிக்கையில் பொருள் சிறிதுமில்லாதிருந்ததில் இனி யார்ஜிதம் செய்து துவக்குவது அசாத்தியமும் காலாதீதமுமாகுமென்று இவ்வுடலைக்காப்பாற்றுவது அவன்கடமையும்அவன்கைங்கர்யத்தை நடத்துவது நமதுகடமையுமானதினாலே சொத்தைச்செலவழிப்பதில் பின்னிடக்கூடாதென்றும் நினைத்து காலட்சேபார்த்தமாய் வைத்திருந்த சொற்பவாஸ்தியை விற்றுத்திருப்பணி நடத்தத்துவக்கினர். அந்தத் தனங்கொண்டும் சிலர் உண்மையிலன்பு மேலிட்டதினாலும் சிலர் தாக்ஷண்ணியத்தினாலும் உதவியதனங்கொண்டும் திருப்பணி யனேகமாய் நடந்துவிட்டன. பின்னுமாகவேண்டியதும் விரைவில் நடக்கத்தக்க பிரயத்தினமும் செய்துவருகின்றனர். இவ்வாறு ஜீர்ணோத்தாரணம் பலர் செய்துவரினும் ஜீவனோபாயத்திற்குரியவாஸ்தியை விரயம் செய்து செய்வோர் அரிதினுமரிதேயாதலான் மேற்கூறிப்போந்தவரின் கைங்கர்யமே மிகச்சிறப்புடையதாயெடுத்துக்கொள்ளப்படுவதாயிற்று. பிரத்தியக்ஷப் பிரமாணத்தனவாகிய இவ்வுதாரணங்கள் கொண்டு நம்விபரீதக்காரரின் புத்திதெளிவுபெருதாயின் இனித் தடிகொண்டடித்துத்திருப்பத்தக்க தேகவலிமையைச்சர்வவல்லமையுள்ளகடவுளெமக்குத்தந்தருள்வாராக.

(கடவுள்) உண்டென்போருக்கும் இல்லையென்போருக்கும் அவரவர் நடக்கும்மார்க்கத்தையொத்துப் பயனளிப்பானென்பது இதுகாறும் யாம் கூறிவந்தவைகளால் விளங்கக்கூடியதேயாயினும் பூர்வமன்னர் சிலரின் சரிதையையும் எடுத்துரைத்துமுடிக்க எமது மனம் முன்னிடுகின்றது. ஹிரண்ணியகசிபு இராவணன் முதலான வரக்கர்கள் தாமே சகலலோக நாயகனென்றும் தமக்குமேலொருவன் (கடவுள்) உண்டென்றெவனுவதுரைப்பனேல், வாளுக்கிரையாவானென்றும் பிரசித்தப்படுத்திச் செங்கோல் நடாத்திவந்தும் பரமபாகவதர்களான பிரஹலாத விபீஷணாதியர்களின் பக்திமார்க்கத்தால் சகலஜீவகோடிகளிடத்து மந்தர்யாமியாயஎம்பிறைவனிடத்துத் துவேஷபுத்தியுண்டாய் தோன்றினவாறு தூஷித்து இறுதியில் அவன் (துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனம் செய்யக்கடமைப்பாடு

[illegible]

முடையவன்) இராமனுகவும் நரசிங்கமாகவும் அவதரித்து, முறையே அவ்வரக்கிருவரையும்சங்கரித்துப்பக்தரிருவரையும்தமதுதிருவைவெள்ளத்தில்மூழ்கச்செய்ததும் முடிவில்அவ்வரக்கர்களும்நற்கதியேயடைந்ததும்புராணப்பிரமாணமேயாம். எவ்வாறெனில், எப்படிக்கொத்தசற்புத்திபுகட்டினும்ரிங்காத்துவேஷபுத்தியைவகித்துதூஷித்து வந்தவர்களாயினும் எக்காலத்தும்தேதொழிலாகவுடையவர்களாகலின் அதுகொண்டாயினும்தன்னை என்றுமறவாதிருந்தமையினாலும்முடிவில்தன்னால்சம்ஹரிக்கப்பட்டமையினாலும் அவசியம் நற்கதிதந்தருளல்அவனது இன்றியமையாக்கடனேயாயிற்று. அவ்வாறுதூஷிப்பவர்க்கேஅருள்புரியும் எம்மிறைவன், பூஷிப்பவர்க்கென்னபயனருளானென்பதை நம்மவர்கள் நிதானிக்கக்கடவர். கலிராஜன்இலங்கடோறும்ஓங்கிவருவதையும்வேற்றுமதத்தர்கள்பரவிவருவதையும் நினைக்கநினைக்க எம்மனம் பதறுகின்றது. இனியும் விபரீதபுத்தியுடையார் நல்வழிக்கு வந்து தலையெடுத்துப்பாராராயின் வினைற்றில்விழுந்து தலைமட்டில் தெரியும் நம்மதக்கொள்கை அடியுடனமிழ்ந்திட்போம். அப்புறம் நம்மால் எளிதிலெடுக்க வல்லதன்று. மிக்கபிரயாசைப்படவேணடும். பிரயாசப்பட்டெடுத்தும் அமிழ்ந்திப்போனவை ஜீவித்திருப்பது நிச்சயமல்ல. ஏ! நம்தேயத்தவர்களே !! கண்விழித்துப்பாருங்கள்! நம்மதாசாரமும் தேவாலயங்களும் இருக்கும் கெட்டநிலைமையை யறியுங்கள். அவரவரின்கொள்கைக்கும்யோக்கியதைக்கும் தக்கவாறு அவ்விருதர்மத்தையும் பரிபாலியுங்கள். இச்சமயம் அவைகளை க்ஷீணகதியில் விடுவோமாயின் வேறு நம்மைக்காப்பாற்றுவதொன்றுமில்லைஎன்பதை நிச்சயமாய் நம்புங்கள். சக்திக்குத்தக்கவாறு மதாசாரத்தையனுஷ்டிப்பது ஆலயஜீர்ணோத்தாரணம் செய்வது அவைகளின் நித்திய நைமித்தியகங்களைச் சரிவரநடத்துவது நடத்திவிட்டது முதலியன தவருது நடந்துவரப்பாருங்கள். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்பது போல எவ்வளவுக்கு நாம் அவனை வழிபடுகிறோமோ அதற்கனேக மடங்குபலனடைவோமென்பது நிதரிசனமாயிருப்பதை மறவாதீர்கள். "அவனின்றியணுவுமசையாது" என்றவான்றோர் வாக்கியத்தை எக்காலத்தும் சிந்தித்துநடவுங்கள். வீண்வம்புகளிற்புகுந்து தேவாலயதர்மசொத்தை துர்த்தேவதைகளுக்குபபங்கிட்டுக்கொடுக்கத்தலைப்படாதிர்கள். "எத்தால்வாழலாம் ஒத்தால் வாழலாம்"என்பதைப் புத்தியிலிருத்தி அதற்கிணங்க நடந்தால் அதனால் அறிவு, புகழ், கேண்மை, தெய்வபக்தி முதலியன தனக்குத்தானே ஓங்கிவளர்ந்து இருமையிலும் (இப்பொழுதும் இறந்தபிறகும்) திவ்யசுகத்தையடைவோமென்பதைச் சத்தியமாய் நம்புங்கள். இனியும் ஆலசியம்செய்துமோசம்போகாதிர்கள். எமக்கு வேறுவிஷயத்தில் பிரவர்த்திக்க அவசரமிருப்பதால் இத்துடன் இதை முடித்து எம்மிறைவன் தளர்ச்சியைசற்றுாற்றுவோம்.

இங்ஙனம்,

பிராந்தியங்கனாயான்.

Koviloor Digital Library

ஓம்

SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்
அநுபந்தம்

௬ - ம் புத்தகம்] சிதம்பரம், நந்தனஞு ஐப்பசிமீ ௨கவ [இலக்கம் - ௧அ

உ

வேலுமயிலுந்துணை.

அரக்கோணவாசியார் அந்தணர்விளக்க மறுப்பின்மேல் மறுப்பு.

திருமலிபுவனம்வாழச்சிவபரஞ்சுடரளித்த
அருமறைநெறியின் வள்வியாற்றியெவ்வுயிரும்போற்றும்
கருணையின்முதிர்ந்ததெய்வவந்தணர்விளக்கங்காக்கப்
பிரணவக்களிற்றின்செய்யபிரசமென்மலர்த்தாள்போற்றி.

நிகழும் புரட்டாசிமீ 19வ வெளிப்பட்ட நாகைநீலலோசனி அநுபந்தத்தில் "பிரமவித்தியா அந்தணர் விளக்கமறுப்பு" என நமது அரக்கோணவாசியார் பிரசங்கித்திருந்த விஷயத்தைக்கண்ணுற்றோம். அது சென்ற ஆவணிமீ 8வ பிரமவித்தியா அநுபந்தத்தில் யாம் பிரசித்தப்படுத்திய அந்தணர் விளக்கத்தை மறுக்கவெழுந்ததாகலின் அதனை யாம் சற்று விசாரித்தொழிப்பது அவசியமாயிற்று. அந்தணர் விளக்கத்தை யெழுதி, அடியிலோர் மகாசைவனெனக்கையொப்பமிட்டுப் பிரமவித்தியாவில் பதிப்பிக்கும்படி ஷை பத்திராதிபரைக்கேட்டுக்கொண்டமையால், அவர்களெமது மன்றாட்டுக்கிரங்கித் தமது பத்திரிகையிலிடந்தந்து பரவச்செய்தனர். காரியமிங்ஙனமிருக்கவும், அந்நுணர்ப்பெறாத நமது அரக்கோணவாசியார், தாம் சர்வஞ்ஞத்துவமுடையார்போலவிறுமாந்து பிரமவித்தியாபத்திராதிபரே யதனை வரைந்து வெளியிட்டதாகத் திரிபுணர்ச்சிகொண்டு மயங்கிச்சாஸ்திரியார் அவர்கள் பெயரைப்பலவிடங்களில் பிரஸ்தாபித்துத் தமது மனம்போனபடி வைது சாஸ்திரியாரவர்களிடம் தாங்கொண்டிருக்கும் வீண் துவேஷத்தை வெளிப்படுத்தினர். மகாசைவனென்ற சொல்லுக்கு ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரெனப்பொருள்கொண்ட விவரதுபுலமை சாலவும் வியப்புடைத்து! நிந்தைமொழிகளை வரைந்து நிரப்பிவிடுவதே தர்க்கநியாயமெனக்கொண்டாராகையால் அவரது பெருமையைக் கற்றுணர்மாக்கள் தாமே உணர்ந்துகொள்வாரென அதற்குப்பதிலெழுதாதுவிடுத்தனம். அன்றியும் பிரமவித்தியாபத்திரிகை நிந்தைமொழிகட்கு இடந்தராது. அது பண்டிதரிலக்கணமுமன்று. "நமது பிரமவித்தியாபத்திராதிபர் பல ஜாலவித்தைகளிற்றேர்ந்திருக்கின்றார். என்னெனின் மகாசைவர் ஆகமதீக்ஷைக்குரியாரென்று தூஷித்துவருமிவரது மதத்துக்கு விரோதமாக இப்போது மகாசைவநாமந்தாங்கி வெளிவந்து யாம் நீலலோசனியில் வெளியிட்ட "கலிபுருஷர்மகிமை" க்கு விடைகூறினர். அந்த விடை இடையொடிந்து வீழ்ந்ததை ஈண்டெடுத்துக்காட்டி மெதன்மையை நிலைநிறுத்துவா" மென்று விருதுகூறிப்புறப்பட்டார். அந்தணர் விளக்கம் எழுதி மகாசைவனெனக்கையொப்பமிட்டது ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரவர்களல்ல. யாமே வெளியிட்டோமென்று அக்கிரந்தத்தையெழுதிய நாமே ஒப்புக்கொண்டு வெளிப்பட்டமையால் "பிரமவித்தியாப்த்திராதிபர் மகாசைவநாமந்தாங்கி வெளிவந்தாரென்றது வலியற்றுவீழ்ந்தது. அதனாலே பிரமவித்தியா பத்திராதிபர் பல ஜாலவித்தைகளிற்றேர்ந்திருக்கின்றார்" என நமது அரக்கோணவாசியார் துணிந்துரைத்த உத்தேச லக்ஷணமும் பொய்ப்பட்டொழிந்தது. "மகாசைவர் ஆகமதீக்ஷைக்குரியாரென்று சாஸ்திரியாரவர்கள் கூறியிருப்பினும் சாஸ்திர சம்மதம் பெற்றிருந்தால் அது ஒருபோதுந்தூஷணையாகாதென்க. "அந்தவிடையிடையொடிந்து வீழ்ந்ததை ஈண்டெடுத்துக்காட்டி மெதன்மையை நிலைநிறுத்துவா" மென்று கூறினரோ. நூலெழுதத்தொடங்குமுன்னமே இவ்வளவு ஆபாசங்கட்டிடஞ்செய்துகொண்ட நமதன்பர் அரக்கோணவாசியார் அளித்த விடைகளெல்லாம் அனலாசலத்தெய்த கர்ப்பூராஸ்திரமொத்து நிஷ்பிரயோஜனப்பட்டொழிந்ததும் எமதந்தணர்விளக்கமாகிய வஜ்ரஸ்தம்பம் எவ்வாற்றானும் பேதிக்கப்படாது சலனமின்றி நிலைபெற்றுநிற்றலும் பின்வருவனவற்றால் யாவருமுணருமாறு புலப்படுத்துகின்றாம்.

"யாம் அந்தணரென்பதிவரென்பதுதோன்ற அந்தணரென்போர் அறவோர்" என்று செங்காப்போதர் திருவாய்மலர்ந்திருந்ததை யெடுத்திசைத்திருந்தோம். அதிற்போந்திருந்த அந்தணரைப் பார்ப்பாரஜாதியினராக இவர் தழுவி, பிங்கலந்தையைத்தேடிப் பிடழ்ந்தார். அதற்குரையெழுதிய பரிமேலழகர்க்கு இப்பிங்கலந்தை தெரியாது போலும்! இக்குறள்நீத்தார்பெருமையிலுள்ளது. அதனால் ஈண்டுப்போந்த அந்தணரென்னுஞ் சொல் தவத்தாற்பெரியோரையேயன்றிச் சாதியிற்பெரியாரையுணர்த்தாதென்க." என்றுகூறி "அன்றியும்" எனத்தொடங்கிச் சூடாமணிநிகண்டில் துறவோர் பெயர்கூறும் "துறவர்சார்பில்லார் நீத்தோர்தூய்த்தவர்முனிவர்மெய்யர், அறவர்மாதவர்சடிந்தோர் அந்தணரடிகளியர், உறுவர்தாபதர் விளங்குமிருடிகளுயர்ந்தோர் யோகர், அறிஞர்பண்ணவர் சிறந்தவருந்தவர் முனிவராமே." என்னும்செய்யுளையும் எடுத்துவரைந்து அச்செய்யுளிற்பெறப்பட்ட "அவர் அந்தணர், ஐயர்என்றுகூறியிருபபது ஜாதிவேதியரையன்றென்பது இவரறியாமையால் தலைமயக்கேறித்தடுமாறினாரென்க." என்றுகூறினர். "அந்தணரென்போரறவோர்" என்னுந்திருக்குறள், தெய்வப்புலவர் திருவாய்மலர்ந்தருளியதென்பதும், அது "நீத்தார்பெருமை" என்னுமதிகாரத்திலுள்ளதென்பதும, அதற்குரைசெய்தார் பரிமேலழகரென்பதும், அவர்பிங்கலந்தையினையுணர்ந்துள்ளாரென்பதும், அன்றென்பதும் யாமறிந்து கூறியிருப்பினும் அறியாது கூறியிருப்பினும் அதனாலெமக்கொருபாதகமுமின்றென்க. என்னெனில் "அந்தணரென்போரறவோர்" என்பதைமட்டும் எடுத்தாண்டு, அந்தணரென்றது "முதற்சாதியினடமேசிறக்குமெனின் அம்முதற்சாதியினரிக்காலத்திலில்லையெனத்துணிந்திடுக." என்றுசத்தியஞ்செய்தளித்தாராகையால், அது நீத்தார்க்குமட்டுமன்று; பிராமணஜாதியாருக்குமுரியபெயரென்பதை விளக்குதற்கே பிங்கலந்தைச்சூத்திரம் எடுத்துக்காட்டினும். அச்சூத்திரத்தால் அந்தணரென்னும்பதம் பிராமணரையும் குறிக்கும் என்பதை வெளிப்படுத்தியபின்னர் "எவ்வுயிர்க்குஞ்செ

தன்மைபூண்டொழுகலான்'' என்னுமடுத்தவாக்கியார்த்தத்தையநுசரித்துவான்முகில்வழாதுபொழியச்செய்தலே சமஸ்தஜீவராசிகண்மாட்டும்'' செந்தண்மைபூண்டொழுகுதலாம் எனவும், அதற்கு வேதவேள்வியே சிறந்த சாதனமெனவும், வேதமோதலும் ஓதுவித்தலும், வேட்டலும், வேட்பித்தலும், பிரமன் முகத்துற்பவித்த பிராமணர்களுக்கே உரித்தென்பது ஸ்மிருதி புராணேதிகாச சம்மதமெனவும், அதற்குத்திருவிளையாடற்புராணம் உலவாக்கிழியருளியபடலமும் ஓர்சான்றெனவும் கூறினும். "அந்தண" ரென்பது யாங்காட்டிய பிங்கலந்தைச்சூத்திரத்தால் பிராமணருக்கும் நமதன்பர்காட்டிய சூடாமணிச்செய்யுளால் நீத்தார்க்கும் உரிய பொதுப்பெயராக வெளிப்பட்டது. இதனாலந்தணரென்னுஞ்சொல்லுக்கிருவரும் பொருளாயினர். அழகியதன்மையையுடையாரென்னும் காரணங்கருதியே பரிமேலழகியார் அவ்வாறு பொருள் கூறியவதனால் வேதவேள்விகளானுலகுய்ப்பக்கருணைபூண்டபிராமணரையொழித்துக்கூறாது, கருணைபுரியுங் காரியவினம்பற்றி அவர்களையுமுடன் தழுவுமென்பதுகொண்டே யாம்கூறினும். நமதன்பர்காட்டியசெய்யுளால், நீத்தார்க்கு, அறவர், அந்தணர், ஐயர் முதலியபெயர்கள் பெறப்பட்டனவேயன்றி வேறின்று. "ஐயர்வேதியரேநூலோராறு தொழிலாளராய்ந்தோர், மையில்பூசுரரே செந்தீவளர்ப்பவர்தொழுகுலத்தோர், பொய்யிலந்தணரேயாதிவருணர் முப்புரிநான்மார்பர், மெய்யர்விப்பிரரே வேதபாரகர் வேள்வியாளர், இருபிறப்பாளர் பார்பாரேற்றமேற்குலமுயர்ந்தோர், வருமறையாளர் நாமம்." எனவும் போந்த அச்சூடாமணிச்செய்யுளால், அந்தணரென்பதேயன்றி, வேதியர், அறதொழிலாளர், பூசுரர், ஆதிவருணர், மெய்யர் விப்பரர் வேதபாரகர், வேள்வியாளர், மேற்குலத்தோர், உயர்ந்தோர், அருமறையாளர், எனபிராமணஜாதியாருக்குரைத்த மகிமைப்பெயர்களை நமதன்பர்கண்டும்கேட்டுமிராரர்போலும் அந்தணரென்னுஞ்சொல்லுக்கேயகம்புழுங்கி, மாழ்கியநமதன்பர்யாம்காட்டியமகிமைசிறந்தபெயர்களைக்கண்டு வயிறுப்பிவருந்துவார்போலும். இவர், யாம்எடுத்துக்காட்டிய பிங்கலந்தையைப்பிந்தியதென்று கழித்துச்சூடாமணியைத் தழுவியாண்டாராதலால் யாமும் அதனையே எடுத்தாண்டோம். இதனால் அறுதொழிலும் பிராமணர்களுக்கேஎன்று நிச்சயிக்கப்பட்டன. அன்றியும் பூலோகதேவரெனவும் பெறப்பட்டவதனுக்கென்செய்வார். சூடாமணியில் துறவிகட்குக்கூறிப்போந்த பெயர்களுள், வேள்வியாளர் வேதபாரகர், பூசுரர், அருமறையாளர், மேற்குலத்தோர், உயர்ந்தோர், செந்தீவளர்ப்போர், என்னும் நாமங்கள் காணப்படாமையாலும் அவை ஜாதிவேதியருக்கேயுரிமையாகக் கூறப்பட்டமையாலும்யாம்காட்டியதிருவிளையாடற் புராணத்துக்குச்சாதகமாயிருக்கின்றமையாலும்திருவள்ளுவப்பயனிற் பெறப்பட்டவந்தணர்க்கு யாகயெக்ஞாதி அக்கினிருத்திய மவசியமன்றென்றுபுலப்படுகின்றமையாலும் திருவிளையாட்லிற்போந்த வந்தணர் பிறப்பினாலாய வந்தணர்களென்றே துணியப்படுமென்றும் அதனையன்றென மறுத்தற்குத்தக்க வேறுநூற்பிரமாணம் கிடைக்குமெனவும் நமதன்பர் திருவிளையாடல் ஜோலிக்குவாராதிருப்பாராக. பிராமணோத்தமராகியப்ரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் அவர்களைச் சிவனடியார்நிந்தை, பிராமணநிந்தை செய்பவரென்றொரிடத்திலெழுதியிருக்கின்றார். சிவனடியாராவாரே பிராமணரெனவும், விளக்கியிருக்கின்றார். அப்பிராமணநிந்தகராகிய சாஸ்திரியாரவர்கள் தம்மால்நிந்திக்கப்பட்டவர்களை மறந்தும் பேசுவாரோ? ஒருபோதும் பேசாரன்றோ? அவர் தமதுமாபினராகியபிராமணரையேயன்றோப்ரம்மவித்தியாவிற்பிரஸ்தாபித்திருப்பார். அதனைமறுப்பதற்கே நமதன்பர் அரக்கோணவாசியார் திருக்குறளில் நீத்தார்பெருமையிலுள்ள அந்தணரைக்கொண்டுவந்து போட்டுத்தமோதினார். அத்தமோற்றத்தை நீக்கும்பொருட்டும் ஜாதிபிராமணருண்டெனவும் அந்தணரென்னுஞ்சொல்லுக்குப்பார்ப்பார் பொருளாகாரென்றமயக்கத்தை யொழிப்பதற்கும், அவ்வந்தணரேப்ரம்மவித்தியாவில் பிரஸ்தாபிக்கப்பட்டவர்களெனவும், அவ்வந்தணர் நீத்தார்பெருமையிற் சொல்லப்படும்அந்தணரென்னும்சொல்லைக்கொண்டு நிராகரித்த நியாயம்சாலாதெனவும் நமதன்பருக்குதெருட்டுமாறே யாம் பிங்கலந்தையைமேற்கோள்காட்டினும். அஃதுணராப்பெறும் வன்மையற்ற நமதுதோழர் தம்பார்ப்பொருந்திய குற்றத்தைச்சற்று முணராமல், வீணே "பிங்கலந்தையைக்காட்டிப்பிடழிந்தார்'' என்று தொடுத்த பிறப்பறு சொற்றொடை ஜெகமிகழப்பெற்றதென்க. நமது அன்பர் அரக்கோணவாசியாரிப்போதுநூதனமாகக்கற்று வெளிப்படுத்திய வவரதுமாயாஜாலவிநோதமொன்றை விவகரித்துப்போக்குவாம். "இனி ஜாதிஉண்மையை யோசிப்பாம். ,,ஆதியிற்பிறபினுற் சூத்திரராயிருந்தோரிற் சிலர் அப்படியே சூத்திரராயிருந்துவிட்டார்கள். சிலர்சமஸ்காரத்தினால்துவிஜரானார்கள். சிலர்வேதமோதி,விப்பிரருமானார்கள். வேறுசிலர் ப்ரம்மஞானப்பேறெய்திப் பிராமணருமாயினார்கள். இதனை "ஜன்மநாஜாயதே சூத்திர:'' எனனும் பிரமாணமே நிறுத்தும். இவ்வாறு நான்குவிதமாகப்பிரிந்த கூட்டத்தார் தனித்தனி விர்த்தியடைந்து கலவாமல் நான்கு ஜாதியாய் வாழ்ந்தார்கள்.'' அதற்குப்பிங்கலந்தையில்,ஜாதி பிரிவுகளப்போதிருந்த நிலையின்படிஜாதியின் பெயர்களெழுதப்பட்டன' என்று பிரசங்கித்த விந்தையே விந்தை. ஆதியில் பிறப்பினாலே யெல்லாருஞ் சூத்திரர்களாகவேயிருந்தார்களென்று கூறினாரேயன்றி அதைப்பிரமாணவாயிலாகப் புலப்படுத்தினாரில்லை. நான்குவருணாச்சிரமங்களுண்டு என்பது அனாதிவழக்கு என்பதையுணராமல் இவர் எல்லாரையும் சூத்திரராக்கமுயன்றதுகற்றோர்சபையிற் கனம்பெறாதொழியுமென்க. இவர் சூத்திரரை நான்குஜாதியினராகவகுத்து அந்நால்வருள்சூத்திரருக்கும் பிராமணருக்குமிடங்காட்டி க்ஷத்திரியர் வைசியர்க்கிடந்தர மறந்துவிட்ட அருமையே அருமை என் செய்வார் பாவம்! இல்லாதவழக்கை உற்பத்தியாக்கிக்கொண்டு வாதாடவெளிவந்த குற்றத்தினாலேயே ஜாதி நான்கெனக்கூறும் வேதவழக்கொடுமாறுகொண்டு ஜாதியிரண்டெனமுடிக்கநேர்ந்தது'சூத்திரர்கட்கில்லாத துவிஜர், விப்பிரர் என்னும் தாங்கமாட்டாத சுமையை அவர்கள் தலையில் யோஜியாமலேற்றி மகிழவும் நேரிட்டது. ஆதியிலெல்லாரும் சூத்திரராகவே பிறந்தார்கள் என்பதற்கும் அவர்களே நால்வருணத்தாராயினாரென்பதற்கும்,இவரதுகருத்தேபிரமாணமாயிற்றுப்போலும்! 'ஜன்மநாஜாயதேசூத்திர:' என்றதே பிரமாணமெனின், அது சீர்பெறாது. என்னை, ஜன்மத்தினாலே சூத்திரன் என்பதே யதன்பொருளாவதன்றி எல்லாரும் சூத்திரராகவேயிருந்தார்களென்றும் அவர்களே நான்குவருணத்தாராயினாரென்றும் அவர் சாதிக்கப்புகுந்த பிரமேயத்தை நிலைநிறுத்தும் வலிமையிற்றொழிந்தது. பிறப்பினாலே சூத்திரனென்றதே போதும் எனின்,அறியாது கூறினாய். அது கருமத்தின் பெருமைகூறவெழுந்தது. முத்திவேட்டல் முதலிய கர்மங்களை பிராமணரியற்றவேண்டிய கடமை. அதற்கு வேதமோதுதலவசியம் வேண்டப்படும். உபநயநாதிசம்ஸ்காரங்கள் செய்யப்பெறாமல் வேதமோதுதலும், அவ்வேதம் விதித்தகர்மங்களை இயற்றலுங் கூடாதாகையால் பிராமணனுக்கு உபநயநாதி சம்ஸ்காரங்கள் அவசியம் வேண்டப்படும்என்பேத யதன் கருத்தாமென்று கூறுநிற்பர் உண்மையோர்.

அதுவன்றி யிவரது கருத்துப்போலவே எல்லாருஞ் சூத்திரராயிருந்து அவருட்சிலர் கருமத்தால் பிராமணராயினாரெனக்கொள்ளின் கருமத்தான்மேம்பட்ட சூத்திரரெனவும் அங்ஙனமாகாத சூத்திரரெனவும் ஆகவிருஜாதியே யென்று கொள்ளநேரிடும். அப்படியாயின் உண்மைநூல்கள் பிரம, க்ஷத்திரியர் வைசிய சூத்திரரென்னும் வேதவழக்கு வீண்வழக்காக

Koviloor Digital Library

முடியுமே. அன்றியுமிவர் சூத்திரரே நான்குஜாதியாராயினுரென்னுமிவரது வாதமும்தலைகாட்டாது அடங்கிவிடுமே. இன்னும்பல வசம்பாவிதங்கட்கு மிடனுசெய்யும். ஆதலால் "ஜன்மகாமஜாயதே சூத்திர:" என்றிவர்காட்டிய பிரமாணவாக்கியம் சமதன்பருக்கேபிழைபெருக்கிச்சிறந்ததென்க.

1. தானத்துவலையரத்தச்செறுந்தங்குநாடோட்
டுருவுற்றுநீங்கிச்சுபிலக்கண்ணுறைதல் காறும்
தெருளுற்றதெய்வமறையோர் முதற்செப்புமூன்று
வருணத்தவர்க்குங்கருமங்கள்வகுத்துரைப்பாம்.

2. பூண்டேழெட்டின்மறையந்தணர்ச்சாகுமுக்றால்
ஆண்டோர்பதினொன்றினின்மன்னவர்க்காகுமென்ப
வேண்டிர்பருவமிருநான்கொடுகொன்குசேரிற்
பூண்டாங்குஇன்டோள்வணிகர்க்குப்புனைதல்வேண்டும்.

என காசிகாண்டம், பிரமசரியங்கூறிய வத்தியாயத்தில் போந்த செய்யுட்களால் முதல் மூன்றுவருணத்தார்க்கேயன்றிச் சூத்திரருக்கு பிரமசரியம் மறந்தும் கூறப்படவில்லை. இப்படி பாரதாதி பலநூல்களும் ஸ்மிருதிகளும் கூறுகின்றன.

அவைநான்குவருணாச்சிரமங்களையும்ஒப்பியேஅவ்வவ்வருணங்களுக்குத் தக்கவாறு அவர்களது துவிஜராதற்குரிய பருவங்களையும் அதனடையாள முதலியவற்றை விளக்கின், உபநயன சம்ஸ்காரமின்றி வேதாத்தியானஞ் செய்யலாகாதென்பதும், உபநயனம் செய்தவனந்தரமே முதன்மூவருணத்தவரும் மறையோதும் பேறு பெறுகின்றார்களென்பது மிதனுலினிது புலப்பட்டது. உபநயனகருமஞ்செய்யப்பெறாதபோது வேதாதிகாரம் வகித்த முதல் மூவருணத்தார்க்குமே வேதத்தைக் கண்ணெடுத்துப்பார்க்கவும் அதிகாரமில்லாதிருக்க, உபநயனஞ்செய்யப்பெறுமதிகாரமேயில்லாத சூத்திரர்கள் வேதமோதிப்பிராமணராகிமுதற்குலத்தவாரனுரென்று கூசாதுரைத்து, பிராமணரையும் சூத்திரராக காட்டவெழுந்த விவரது அதிசப்பிரசங்கம் அவலப்பிரசங்கமாயிற்றென்க. இனி 'தெருளுற்ற தெய்வமறையோர்' என்று சிறப்பித்தவதனுல், சுபாவத்திலேயே வேதாதிகார சிரேஷ்டம்பெற்றவனே முதல்வருணத்தானுவானென்பதும், உபநயனம்பெற்ற பின்னரேயதுபிரகாசிக்குமென்பதும் பெறப்பட்டவதனுல் தவத்தான்மேம்பட்டோரே பிராமணராவார்; பிறப்பினுல் வேதியராகார். என்றநமதன்பரது அசடுபெழுத்தமழலைவாசகம்கசடுபட்டொழிந்ததுஎன்க. என்னெனில், அவர்கருத்துப்போல் வேதமோதியதன்பயனுணர்ந்த பின்னரேதவமுயலல்வேண்டும். அதன்பின்னரேபிராமணரென்று பெயர் பெறுதலும் வேண்டும். அவ்வண்ணமின்றி உபநயனம் பெறுதற்கு முன்னமே தானேமறையோனென்றவோர் ஜாதியுண்டென்றும் அவனேநான்குவருணத்தினுமுற்பட்ட வருணத்தானென்றும் பெறப்பட்டவதனுல் ஜாதிவேதியரில்லையெனத் தொடுத்த வீண்விவாதம் விகாதமெய்திச்சாய்ந்தது. அன்றியும் ஜாதியால் அந்தணராகாரென்பதற்கு 'அந்தணரென்போரறவோர்' என்ற குறளையே முதற்பிரமாணமாகவெடுத்தாண்டு, அது நீத்தார்பெருமை கூறியதானுஜாதிவேதியரையன்றென்று பரிகாசித்தார். இதனுலே ஜாதிவேதியரே யில்லையென்று சாதித்துவிட்டதாக அவரது கருத்து. அங்ஙனமாயின் 'மறப்பினுமோத்துக்கொளலாகும் பார்ப்பான்பிறப்பொழுக்கங்குன்றக்கெடும்' எனக்கூறி அத்தெய்வப்புலவரே பிறப்பினுல் வேதியருண்டென்று சாதித்தாராகையால் ஜாதிவேதியரில்லையென்ற அரக்கோணவாசியாரதுவீண்வாதம்அவரதுவாய் வாதமாகவே கிரகிக்கப்படுமோன்றோவெலன்க. உரையாசிரியரும் சிறப்புடையமுதல்வருணத்தார்க்குச்சொல்லுதலினுலே இது மற்றையவருணங்களுக்கும் கொள்ளப்படும்என்று கூறலால், நான்குவருணங்களுண்டெனவும் அவை பிறப்பினுலே கொள்ளப்படுமென்பதும் கரதலாமலகமொத்துச் சீர்பெற்று நிற்றல் கண்டறிந்தார். இவரது போலிப்பிரசங்கத்துக்கு ஒருபோதுமஞ்சாரென்க, ஈண்டுரையாசிரியர் அறியாதுகூறினுரென்பார் போலும். அன்றியும் வியாசசூத்திர பிரதம அத்யாயத்தில் சூத்திரர்கட்கு வேதாதிகாரமின்றெனவே வியாஸமாமுனிவர் கூறியருளினர். இதற்குப்பாஷ்யக்காரர்களும்ஒருவரோடொருவர் மாறுபடாது ஓரேயபிப்பிராயமாகச்சூத்திரருக்கு வேதாதிகாரமில்லையெனவே தீர்மானங்கூறியிருக்கின்றூர்கள். இதனுலும் சூத்திரர் வேதமோதி விப்பிராராயினுர் என்ற வெற்றுரைமுற்று நிக்கிரகம்பெற்று வீழ்ந்தது. இவையெல்லாம் நான்குவருணங்களுண்டென்றும் அவைமுறையே பிரமனது முகம், புஜம், தொடை, பாதங்களினின்றும் பிறந்தார்களென்றுகூறும்வேதவசனங்களை மூலமாகவேகொண்டுபிறந்திருக்கின்றனவாதலாலிவற்றையன்றெனமறுக்கப் புகுவார் அவைதிகராவார் என்பதில் தட்டில்லையென்க. இதனுல் தவத்தான்மேம்பட்டவரைப் பிராமணரெனலாகாதென்பது எமது கருத்தன்று. ஜன்மத்தினுலும், கன்மத்தினுலும், ஞானத்தினுலும் பிராமணராவாரென்பது நூற்றுணிபாதலாலதுவே யெமக்குமுடன்பாடென்றறிக. ஆயினுமவர்கள் முதல்வருணத்தவராகார். ஜன்மப்பிராமணரே முதல்வருணத்தார். இனிஜன்மமெடுப்பதும் பூர்வஜன்மகன்மத்தாலேயாம். அப்பிராப்தகன்மத்தாலேயே உயர்வுந்தாழ்வுமாகிய ஜன்மங்களையாத்மாக்களடைகின்றன. அந்தப்பிராரப்தகன்மத்தைப் புசித்துத்தீருமட்டும் எடுத்த உடலுமழியாது. அவ்வுடலுள்ளபரியந்தம் பிராப்தமும் தொலையாது. அநுபவித்தே தீரவேண்டும் என்பது சாஸ்திரநூல்களின்றுணிவு. பூர்வஜன்மத்து நல்வினைப்பயன்காரணமாகப் பிராமணசரீரமெடுத்த ஆத்மாவும் நல்வினைக்குறைவினுலே எடுத்த சூத்திரசரீரத்தையுடைய ஆத்மாவும் சமனுயிடுதல் எவ்வாற்றானும் பொருந்தாதென்க. இது சித்தியார் சுபட்சம் 2-ம் சூத்திரத்தானுமினிதுவிளங்கப்பெறுமென்க. "வேதியர்க்கழகு வேதமுமொழுக்கமும்" என்னும் நீதிவாக்கியம்சான்றுமென்க.

"இதனுல் செய்கையினுயர்ந்தோரை அந்தணரென்பது உண்மையும் செய்கையை நாடாது அந்தணரது சந்ததியாரை யந்தணரென்றது உபசாரமுமாமென்றூர்." அகாதிதொடங்கி அந்

தணர்வம்சத்திற்பிறந்தவர்க்கு அப்பெயர் சிறவாது உபசாரமாதலும் செய்கையாலுயர்ந்தோர்க்கு உண்மையாமென்றலும் பொருந்தாது. கர்மத்தாற்சிறந்தசூத்திரனைப் பிராமணனென்பது கூடாதென்றும் அவரைச்சற்சூத்திரனென்று கூறுதலே தகுதியுடையதென்றும் பாரதம் ஆரணியபர்வத்தில் தர்மர் கூறியதாக வியாஸமுனிவர்விளக்கியிருக்கின்றாராதலால் கன்மத்தான்மேம்பட்ட சூத்திரர்களைப் பிராமணரென்பதே ஔபசாரிகமென்பது வெள்ளிடைமலைபோல்விளங்கிக்கிடத்தலினென்க. செய்கையை நாடியவழியும், நாடாதவழியும் முதற்குலத்தவர்க்கே சிறந்திருத்தலால் அவர்க்கு உண்மையிலேயேயிரயித்தல் பிழைபடாதென்க. ஆதலின் அது முதற்குலத்தவர்க்குரியதும் ஏனையர்க்குபசாரமென்பதுமே சத்தியமென்க. இனி "பிறப்பினாலாயவந்தணர் தன்னளியுடையாராதலே முட்டிபுகும்பார்ப்பாரகத்தை யெட்டிப்பாரோமே என்னும் கம்பர்வாக்கை யுணர்ந்தவர்களெங்ஙனே கனஞ்செய்வார்கள்." என்று கம்பீரமாய்க்கூறிமகிழ்ந்தார். இதென்ன புராணமா? வேதமா? இதிகாசமா? ஸ்மிருதியா? ஒன்றினுஞ்சம்பந்தப்படாத அவாந்தரகற்பனைவாக்கியமொன்றையெடுத்துக்காட்டினார். அது கம்பன் கஞ்சிக்குக்காற்றாய்ப்பறந்தலைந்து கலங்கித்திரிந்தகாலையில் தன் பசிவேளைக்கன்னம்படையாத பார்ப்பானை வயிற்றெரிச்சலினாலே தான்சொல்வதின்னதென்று தனக்கே தெரியாமல் வாயில்வந்தபடியுளறினானென்றறிஞர்கூறுவதறியாது இவ்வற்பமொழியைக்கொண்டு தமது பக்ஷத்தைநாட்டமுயன்றநமதன்பரது பேராசை வேரோடழிந்ததென்க. இப்பயனற்ற வாக்கியத்தை யொப்பவெளியிட்ட அரக்கோணவாசியார் 'காரணன்பாகமுஞ்சென்னியுஞ்சேர்தருகனியரு,'நாரணனுகமகலாத்திருவுருவுமோர்நான்மருப்பு, வாரணதேவியுமற்றுள்ள தெய்வமடைத்தையரும், ஆரணப்பாவை பணித்தகுற்றேவலடியவரே' என்றதனால் சக்திரியங்களில் உமாதேவியார் கலைமகட்குத்தாழ்ந்தவரென்று அவர்கூறியுமிருப்பதையும், 'முப்பரம்பொருளுக்கு முதலேமூலத்தையிப்பரந்துடைத்தவரெய்துமிணபத்தை,அப்பனையப்பிறுள் அமுதந்தன்னையே ஒப்பனை ஒப்பனையுரைக்கவொண்ணுமோ?' என்றராமாயணச்செய்யுளால் தசரதியை முப்பரம்பொருட்டு மப்பாற்பட்டதரியப் பழம்பொருளாகக் கூறியதையுமொப்பி வெளிவரவேண்டும். அங்ஙனமொப்ப விசையாராகையால் அவர் காட்டிய செய்யுள் சிட்சிக்கப்பட்டொதுங்கியதென்க. அன்றியும் 'இல்வாழ்வானென்பானியல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்றதுணை' என்ற திருக்குறளால் முட்டிபுகும்செயல் ஜாதியந்தணருக்கேயன்றி யாவற்றிலும் பற்றற்றுரையுஞ்சென்றுபற்றிச்சேர்குலைதலால் இவரது நியாயம்வியபசாரதோஷமெய்திப்புறக்கணிக்கப்பட்டதென்க. முட்டிபுகுதலாகிய செய்யுளுக்கும் கருணையாகிய குணத்திற்கும் யாதொருஞ்சம் பந்தமின்றென்க. இத்துணையுங்கூறியவாற்றால்பிறப்பினாலேயே வேதியருண்டெனவும் சூத்திரன் பிராமணனாகானெனவும் கருமத்தான் மேம்படினும் சற்சூத்திரனெனப்படுவதேயன்றிப் பிராமணனாகமாட்டானெனவும் வேதாதிகாரியாவார் ஜாதிவேதியரே யெனவும் பட்டப்பகலிற்கற்றறைவீழ்ந்தபொற்றகடொத்துத்தெற்றெனத்துலங்கும்பெற்றிமையின் நமதன்பரது பிரசங்கமெல்லாம் அவலப்பிரசங்கமாயிற்றென்க. இதுநிற்க, 'இவர் அகத்தியர், பாரத்துவாஜர், கர்க்கர் முதலியரிஷிகளைத்தெய்வத்தன்மையுடையாரென'பூஷித்தார். அதிலெமக்கொரு விரோதமுமில்லை. நமதன்பர்கூறிய பிறப்பினாலாய பிராமணஜாதித்வம் அவர்பாலில்லையென்பதேயன்றோவெமதுவழக்கு! அந்த ரிஷிகள் பார்ப்பானும் பார்ப்பனியும் கூடி பிறந்தவர்களல்லவாகையால்அவர்களை பிராமணரென்றொப்பியது பிறப்பினாலேயே பிராமணத்துவ முண்டென்னுமிவரது மதத்தை நாசப்படுத்தியதென்க.' என்று கூறினார். 'கலிபுருஷமகிமை' யில் கர்க்கன், வசிட்டன், வியாஸனென விழிவுரையாடிப்போந்தவர், சண்டு, கர்க்கர், பாரத்துவாஜர், அகத்தியரெனப்பூஷித்துப்பேசியதே பிழைபட்டுஇவர்க்கே விரோதமாயினதன்றி, முன்னோடு பின்மலையாது, ஒரே தன்மையாக அவர்களைப்பூஷித்துவருமெமக்கு ஒரு குறைவு நேர்ந்ததில்லையென்க. நமதன்பர் பிரசங்கித்துவரும் பிறப்பினாலாய ஜாதிபிராமணத்வம் இல்லையென்பதை மறுத்து, அஃதுண்டெனப் பலபடியாலும் பிரகாசப்படுத்தியிருக்கின்றோமாகையால் மீண்டுமிவர் அவ்விஷயமாகத்தொடுத்தவைகளைவிடுத்து மேல்விஷயத்தை விவகரிப்பாம். மேற்குறித்தபெரியோர்களைக்குறித்து அந்த ரிஷிகள் பார்ப்பானும் பார்ப்பனியும்கூடிப்பிறந்தவர்களல்லவாகையால்அவர்களைபிராமணரென்றொப்பியது பிறப்பினாலேயே பிராமணத்துவமுண்டென்று மிவரது மதத்தை நாசப்படுத்தும்' என்றுரைத்தாரே. முன்னையயுகங்களில் ஜாதிமேன்மை தாழ்வுக்குப் பீஜமேபிரதானம். இக்கலியுகம்போல க்ஷேத்திரத்தை நோக்குதல் நூல்வழக்கல்லவாதலால் அவர்களை க்ஷேத்திரம் காரணமாக விழிவுகூறுதலாகாதென்று கூறினும். அதற்கு நமதன்பர் 'முன்னைய யுகங்களில் ஜாதிமேன்மைக்கு க்ஷேத்திரம் பிராதானமன்று; பீஜமே பிரதானமெனதெரிவித்ததாண்டமையுமெனின்,அதுகூடாது' என்று தொடங்கி நூற்பிரமாணங்கட்கு விரோதமாகத்தமக்குத்தோன்றியவாறே பலபலவரிகளை வரைந்துவிட்டார். அன்றியும் பூர்வயுகங்களில் க்ஷேத்திரம் பிரதானமன்று. பீஜமே பிரதானமென்றிவர் பிரஸ்தாபித்ததும் புதுசன்று; அநாதிவழக்கே யாம். அதற்குக் காரணம் பீஜபிரதானத்துக்காதாரபூதர்களாயிருந்த முனிவர்கள் தவத்தின்முதிர்ந்தவர்களாயிருந்தமையேயாம். என்றும் கூறினோம். வேறுபல தர்க்கயுக்திகளும் காட்டிமகிழ்ந்தார். அவைகளெல்லாம் ஜாதிபிராமணருண்டென்னும் எமது பக்ஷத்தைவெல்லும் ஆற்றலுடையவனல்ல. ஜாதிமேன்மை தாழ்மைக்குப் 'பீஜமேபிரதானமென்பது புதிதன்று. அநாதிவழக்கேயாம்' என்றோமே. அநாதிவழக்கு ஒருபோதும் அழியப்பெறாது. காலத்திரயத்து நிலைநிற்குமென்பது நூற்றுணிபும், அவற்றையோதியுணர்ந்த மெய்ஞ்ஞானிகள் துணிபுமன்றோ! அவ்வநாதிவழக்கை யழிக்கமுயல்வது பேதமையேயாமன்றோ? இவரேயன்றி யிவர்போல்பவர் எத்தனைபேர்கள் கூடியழிக்க முயன்றிடினும் அநாதிவழக்கழியாதென்பதே எமதுடன்பாடென்க.

Caidambaram—Printed and published for the Proprietor at the "Brahmavidya Press" No 38 Senkalooneer Pilliar Koil Street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமதுப்ரம்மவித்தியர்வுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

19

ஸ்ரீ வித்யா ஶங்கர

நெ-ககூ

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை

ஆதரித்துவருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த ௧௮௯௨ஹூ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் திர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காளம்வத்ஸரம்.
துலாரவி ௨-௨
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,

ஸேதுபதி:

[illegible]

அத்தங்கிருமாரதாநாசாரியர்செய்த உபந்நியாசம்.

ஐய, ப்ரம்மவித்தியா பத்திராதிபர்காள்! தம்மிடம் நாம் செய்துகொள்ளும் விஞ்ஞாபனமாவது:—எமது மனத்தில் ஆஸ்திகர் மனங்களிக்க ஓர் விஷயம் தோன்றுகிறது. அதற்குச்சிறிது இடங்கொடுத்துத்தமது பத்திரிகையில்வெளியிட்டருள்வீர் என வேண்டுகிறோம்.

"தேவர், அசுரர், இந்திரர் முதலிய கடவுளர் எவரடிமுடிமேற்கொள்வார், பத்மம் ஆம்பல்களின் சுகதுக்கங்களை ஒருங்களிக்கும் திருக்கண்ணிணைப்பெற்றவன்எவன், அரவமகிபனமைந்த சயனம் பெற்றவன் எவன், எவன் திருவடியிற்றோன்றிய நீர் அந்நிடன்திருமுடிப்பேரணியோ, அப்பகவான் எமக்கழியாப்பேரானந்தமளித்திடுவானாக.

ஆரியர்காள்! இக்காலம் எங்கும் வளர்ந்தோங்கும் கலிமன்னன் செங்கோலோச்சால் ஸம்ஸ்கிருதம் (நன்கமைந்தது) எனத்தனக்குசிதமான பெயர்பெற்ற வடமொழி என்னுந் தேவபாஷையின் வழக்குமிகக்குறைந்து வருகிறது. அப்பாஷையே நம்மவர்க்குக் குலதனம். அதிற்றான் வியாகரணம், தர்க்கம், மீமாம்சம் முதலிய நன்னூல்கள் நிறைந்திருக்கின்றன அதுமட்டோ! அபௌருஷேயமும் சுவதப்பிரமாணமும், இம்மைமறுமை இருமைப்பயன்களையும் ஒருங்களிக்கும்கற்பகமும், ஐம்புலன்களாலறியவியலாதநல் விஷயங்களை அகங்கை நெல்லிக்கனிபோல் விளக்குவதும் பிரமதேவன் திருமுகமண்டலத்திற்றோன்றியதும், உலகத்தார்க்கும் உண்மைவிளக்குமுதுநாலுமாகியவேதம் என்னும் பெருஞ்சொற்றொடரும் இப்பாஷையின்கண்ணே அமைந்ததெனின், இதிலும் வேறு பெருமை ஒன்றுரைக்கவேண்டுமோ? இனி எங்கு ஆனைகள் ஓடி ஒடுங்குகின்றனவோ அங்கு கொசுகுகளுக்குக்குடியிருக்கவிடமேது? மற்றைய பாஷைகளில்சாஸ்திரங்கள் பலவுளவேனும்அவை இப்பாஷையினின்றே வெளிவந்தன. இத்தேசத்துச் சாஸ்திரங்களிற்காணுதவிஷயம்ஏதும் அவற்றிற்காணப்படுவதுமில்லை. இவற்றை அவை மறுத்து வேறு விஷயம் கூறுவதுமில்லை. இதிலுள்ள விஷயங்களையே விரித்தும் குறைத்தும் உபந்நியசிக்கின்றன. ஆயின் அநேககோடிதேவர்களுக்கு ஆதிநாரணன் சக்கிரவர்த்தியாதல்போல், உலகத்துநடைபெற்றதும் பெறுவதுமான பாஷைகள் அனைத்துக்கும்இவ் வடமொழி மிகச்சிறந்ததே. ஆயின் இப்பாஷையன்றி மற்றைப்பாஷையிற்சாஸ்திரங்கள் வழங்கப்படுவதெதுவும்'சுத்

Koviloor Digital Library

[illegible]

திரர்பத்தினி' என்பதாதிவழங்கச் சொற்களேப்போல் உபசாரச்சொல்லாகவே கோடற்பாலதாகின்றது. இவ்வடமொழியிற்றானே "மனுமுதலிய மகனியர்களாற் செய்தருளப்பட்டபௌருஷேபக் கிரந்தங்களே'சாஸ்திரங்க'ளெனவழுங்கப்படுவதுஉபசாரமானல் அதினும்வேருயபாஷையில்தைவிகம் சிறிதுமில்லாதெழுதப்பட்டநூல்கள் சாஸ்திரம் என்னும்சொல்லே உபசாரமாய்த்தான் பெறும் என்பதிற்றடையாதுளது? இவ்விதவுண்மை, வேதாந்திகளால் வேதாந்த சூத்திரங்களில் ஒன்ருய "ஶாஸ்த்ர யோநித்வாத்"என்னுஞ்சூத்திரத்தை வியாக்கியானம் செய்யுமிடம் விளக்கப்படுகிறது. அதை இங்கு விரித்தால் விரியும் என்று அவ்விஷயத்தை விட்டோம். இவ்விதமாகிய இத்திவ்விய பாஷையில் சொற்சுவை, பொருட்சுவை,சொற்பொருத்தம், பொருட்பொருத்தம்,சொல்லணிபொருளணியாதிபலவியலமைந்து பார்ப்போர்மனங்கவர்ந்து பற்பல நற்பயனீய்ந்து ஆனந்தமேவீடளிக்கும்சொற்றொடர்களும் செய்யுட்களும் ஒன்பான்சுவை ஒருங்கு பெருகப்பல்கோடிகவிவாணர் திருமுகக்கமலத்தேனருவியாய்ப் புலவரருந்தும் திருவமுதாய் விளங்கும் காப்பியங்களனந்தம். இவ்வற்புத காவியங்கள் இப்பாஷையிலமைபாவழி எவரும் இக்கிழம் சென்றபாஷையைக்கௌரவிக்கமாட்டார். இம்மட்டோ! வேறுபெருமை ஒன்றும் இதனிடமமைந்துளது. பாருங்கள்! அன்றுவான்மீகிமாமுனிவர் தொட்டு மாதவர் எனும் மகாகவிகள்எழுதியதிவ்வியவிலக்கியங்களேத் தமக்கு விஷயமாக்கி ஸ்ரீமத் அபினவகுப்தர் ஸ்ரீசங்குகாதியோர் எழுதிய திவ்வியகாவியவிலக்கணம் இப்பாஷையிலமைந்திருக்கும்அழகைத்துதிப்பது எம்போலியரால் கூடுமான காரியமோ? எமக்குக்காலிற்றான் கண்ணுண்டோ? (யாம்கௌதமரோ) எமக்குக் கண்கள்தான் மூன்றுளவோ? (யாம் சிவமூர்த்தியோ) எமக்குக்கைள்தான் நான்குளவோ? (யாம் விண்டுவோ) இனி யாம் பிரமன் ஆனல் அல்லது ஆதிசேடனுனல் அக்காவியவிலக்கணவமைப்பின் பெருமையை ஒருவாறு வர்ணிக்கலாம். முற்றிலும் அதைவர்ணித்து அதனியலே வெளியிடாவிடினும் எம்புல்லறிவுக்கெட்டினவரையில் சொல்ல முன்வந்தோம்.ஐய, எந்த நன்னூற்பயிற்சி பெறினும் அதிற்கண்டவாறுஅனுஷ்டித்தாலும் அறம், பொருள், இன்பம், வீடு,ஆகியநாற்பயனிலும்வேருயஒருநற்பயன்எதிலுமில்லையன்றோ? இதேபயன் சர்வ நற்சாஸ்திரங்களுக்கும் என்பது ஆரியர் அநாரியர் சர்வருக்கும் சம்மதம். இந்நாற்பயன்களும் தனித்தனியே சிற்சில நன்னூற்பயிற்சியால் கைகூடும். ஆயினும் நான்கையும் அளித்திடல் காப்பியத்தின் இயல் எனில், அதற்கு வேறெந்தப்பெருமைவேண்

Koviloor Digital Library

[illegible]

டும்! ஆதலாற்றான் ஆன்றோர் ‘அறம், பொருள், இன்பம், வீடு முதலிய நான்குபயன்களும், அறுபத்துநான்கு கலைகளில் தேர்ச்சியும் நற்புகழும் மற்றும் நற்காவியப் பயிற்சியளிக்கும்’ என்றும், ‘காவியம் புகழையும் புருஷார்த்தத்தையும் கொடுக்கும்’ என்றும் வியந்தோதினர். மற்றும் சிலர் பலசாஸ்திரங்கள் பாஷைகளிற்றேர்ச்சிபெற்றவர்க்கேயன்றிப், பயின்றுவருகையிற்றானே இளம்புத்தியுள்ளவர்க்கும் மேற்கண்ட நாற்பயன்களும் கைகூடச்செய்வது காவியமே’ என்றும், ‘காவியத்தால் அறமும், அக்காவியநாயகனாய் அமைக்கப்பெற்ற ஸ்ரீமந் நாரணன்றிருவடியிணைகளைத்தியானித்தலால் வீடும் கைகூடும். இதில் அறத்தையும் விரும்பாதுவீட்டில் பேராவலுற்றவன் அதையேகைக்கொண்டு நற்பயன் பெறத்தடையில்லை. நாரணனார்திருவடிகளில் அவனது மனம் அசையாது நிற்றலால்என்க என்றும், ‘ஓர் சொல்லேனும் நன்கறிந்து நன்குபயோகிக்கப்படின் அதுசுவர்க்கலோகத்தில்நற்பயனை அளிக்கும்’ என்று சொல்லிக்காவியங்களைப்புகழ்கின்றனர். இங்ஙனமாயின் மற்றைய நூல்களாற்கிடைக்கும் பயனே இதனாலும் கிடைக்குமானால் இதையேபடிக்கவேண்டுமென்பது எதனால் எனில் இதிலுள்ள விசேடமிதுவே: ‘கடுமையான பத்தியத்துடன் கூடிய ஔஷதம்போன்று, அஞ்ஞானரோகத்தையழிப்பது சாஸ்திரமும் ‘நல்லமுதமபோல்தீராநோய்களைத்தொலைப்பது காவியமும்’ என்பதே. கிற்ககரும்பருந்தக்கூலிகிடைக்குமாயின் அதைவிட்டுக்கடுந்தொழில் செய்யஎவனும்முயலானாகவே, செவிக்கினிமைதந்து மனத்தைக்கவர்ந்து மாந்தர்க்கிருமைப்பயன்களையும்பயக்கும் காப்பியத்தின்விசேடம்வர்ணிக்கவும்வேண்டுமோ? இனி ‘காவ்யாலாபாம்ஶ்ச வர்ஜயேத்’ ‘காவ்யாலாபங்களைச் செயற்க’ என்னும் வசனத்தைக்காட்டி அறிஞர்மனத்தைக்கலக்கி அதைக்காவியவழிவாரவொட்டாது தடுத்தல் நியாயமன்றோவெனின், அற்றன்று. அசத்காவியவிஷயமே அதுவென வான்றோர்ஒதுக்கினமையானென்க. இவ்விதம் சொல்லாதவரை ஸ்ரீராமாயணம் முதலிய நற்காப்பியங்களும் ஒதுக்கப்படுமாதலால் என்க. இங்ஙனமிருக்க, இவ்வுண்மையை அறிந்துவடமொழிபயில்வோர் எவரும் காவியங்களைப்படிப்பது கிடையாது. இதற்குக்காரணம் வேறு பாஷைகள் இக்காலத்தில் எங்கும் பரவிநிற்றலே என்க. இக்காலத்து ராஜபாஷை படித்தவர்க்கே விருத்திகிடைப்பதால் அவ்விஷயத்தில் தற்காலத்தவர்க்கு விசேஷவாதரவுண்டாய் அதிற்றானே பிரவிருத்திக்கின்றனர். ஐயோ! அதைப்படித்தவர்க்கும் பலருக்குவீணில் தன் சுகமும் கெட்டுப்பரலோக சுகமும் கெட்டுஇடர்ப்பட்டுத்திரிய நேரிடுகிறது. பாருங்கள்! இதுவரையில் இவர்களால் பரீக்ஷிக்கப்பட்டவர் எவ்வளவு? அதில் எவ்வளவு

Koviloor Digital Library

[illegible]

பெயர்கள் தேறினார்கள்? எவ்வளவுபெயர்களுக்குச் சம்பளம்கிடைத்தது? எவ்வளவுபெயர்களுக்கு விருத்தி பிறிது மில்லை. இதுவிஷயம் இக்காலம் எல்லோருமறிந்ததேயாதலால்அதுவிஷயத்தில் எமதுஇறைவி ஞானத்தையவிடாது இத்துடன் நிற்போம். இக்காலத்தில் மற்றதெய்விதமாயினும் இங்கிலீஷ்படிக்கத்தலைப்பட்டவுடனே நமது நித்திய கருமத்தில் இடிவிழுகிறதனுபவம். மேலும் நமது நற்சாஸ்திரங்களில்விசுவாசம் குறைந்தேவரும். இவ்வளவேஇவ்வாங்கிலேயபாஷையால் எல்லோருக்கும் அமைந்தபெருமை. இனி ஏதோ ஒருவர் இருவர் ஸம்ஸ்கிருதபண்டிதராகவிருப்பின் அவர் உலகமறியவுண்மைகளை உபதேசிப்பதில்லை. இவர்களுக்குஉலகம் மிகவும் அலக்ஷியம். இவர் நிகிலாண்டநாதனும் நிகமாகமவேதியனும் நித்தியனுமான ஸ்ரீமந் நாராயணன்திருவுருவத்தையும் தெய்வம் என்று நினைப்பார்களோ! அதையும் விட்டொழிப்பார்களோ! ஏதோஅறியோம்! மற்றுஞ்சிலர் கசடறவாசிரியரிடம் உண்மைகளைக் கற்றவராயினும் உலகருக்குபதேசிக்கும் வழியறியார். அந்தோ! இக்கலியிலும் ஏதோ சில புண்ணியபுருடர்மட்டில் தமக்கும் பிறர்க்கும் உபயோகமாகும்படி நல்லறிவைச்சம்பாதிக்கின்றார்கள். இப்படிப்பட்ட பல வித்துவான்கள் பற்பல நற்சாஸ்திரங்களைப் படித்திருப்பினும் எங்கும் அந்தோ! கவிதை காணுதகாலம் நேர்ந்தது. என்செய்வோம்! இவர் தாம்படித்தறிந்த பொருளையும் செய்யுள்ளாயாதல் மற்றதாயதல்விரிக்கவாற்றலற்றவர். தாமறிந்த விஷயத்தை விரித்தெழுசவாற்றலில்லாவரை அவர் அறிவுநிலைபெறுதல் யாங்ஙனம்? மேலும் அவர்யாதுசெய்வார்? பல்கோடிஜன்ம புண்ணிய வசத்தாலல்லவோ உலகத்தார்க்குமென்மேலும் நல்விஷயங்களைத் தோற்றிவைக்கும் ஆற்றலாய பிரதிபை முதலிய சொற்களால் வழங்கப்படும் பிரஞ்ஞை உண்டாக வேண்டும். இதற்கு மேற்கோள்கள் 'இயற்கையிலமைந்த பிரதிபை என்னும் பேராற்றலும் நல்லநூலாராய்ச்சியும் நல்ல காப்பியப் பயிற்சியும் இக்கவிதையுண்டாகஹேதுக்கள் ஆகின்றன' என்பதும் 'எதைத்தன்னிடம் பெற்று வர்ணித்தலிற் சிறந்தகவி புகழ்பெறுவான். அப் பிரஞ்ஞை மென்மேலும் தோற்றங்களூறும் ஊற்றாயின் அதைபிரதிபை' என்பர் என்பதூஉம், 'ஆற்றலும்,உலகமும்,காப்பியமும்முதுநூல்கள், இவைகளைப்பயில்வதால் நேர்ந்த நிபுணதை; காவியமறிந்தவர் உபதேசத்தால் செய்யும பெருமுயற்சி இம்மூன்றும் கவிதையுற்பவித்தற்கு ஹேது' என்பதூஉம் என்க. இவற்றுள் காரணங்களாய்க்குறிக்கப்பட்ட மூன்றும் சேர்ந்தே காரணமாதலைக்குறித்திடவே, ஈண்டு ஒருமையால் காரணம் குறிக்கப்பட்டது. ஆயினும் பிரதிபை என்பதன்றிக் காவியம் எங்கும் வேறு எவ்விதக்காரணங்கள் இருப்பினும் உதிக்கக் கண்டிலோமாகையால் அதுவே முக்கியகாரணம் என்றும் அதற்கே சுவைக்கப்படும் நிலைகொடுப்பது மற்றொன்றும் கொண்டொழுகுக. இவ்விஷயமும் ஆன்றோராற்குறிக்கப்பட்டது. "மூன்று திருவுருவம்பெற்ற ஸரஸ்வதிதேவியார் உயிர்நிலையாய பிரதிமை என்னும் தேவியைக் கவிஞர் உபாஸிப்பார்" என்பதால் என்க. இவ்விஷயத்தில் ஸ்ரீவேதவியாசமுனிவர் கூற்றிது: "உலகத்தில் மனிதனாகப்பிறப்பதரிது. அதிலும் வித்தை பயில்வது மிகத்துர்லபம். கவியாதல் அதிலும் அரிது. நற்

Koviloor Digital Library

[illegible]

கவிபாற்றல்பெறல் மிகவரிதினுமரிது" என்பது. மேல் இக்கவிதை என்னும் பயிரை வளர்க்கும் தண்ணீர் வியுற்பத்தி எனப்படும். இதைச்சுருக்கிச்சொல்லிடின் அது ஒருவகை 'சர்வஞ்ஞத்துவம்" எனலாம். ஆதல்கொண்டே ருத்திரடர் என்னும் புலவர்மணி "இவ்வியுற்பத்தியைச் சுருக்கியுரைத்தால் ஸர்வஞ்ஞத்துவமாகும்" என்றார். இதன்விரிவோ "யானை, குதிரை, பெண்கள், ஆண்மக்கள், அறுபத்துநான்குகலைகள் சுவைநூல் (அல்லது காமநூல்)முதலிய பல விஷயவியலாராய்ச்சியெனச்சொல்லலாம். ஆயின்பண்டிதரிலும் கவிகள் மிகச்சிறந்தவரே. அவர்கொண்ட நந்நூலுக்குச் "சாஹித்தியம்" என்றுபெயர். ஸாஹித்தியம் என்பது கூடியதெனப்பொருள்கொடுக்கும். கூடியதெனில் குடத்துடன்கூடிய ஆடையும் கூடியதேஎனில், அதன்று; மற்று, மேற்கூறிப்போந்த நந்நூல்களின் தொகுதியே அஃதென்க. ஆயின் எல்லாச்சாஸ்திரங்களும் எல்லா வேதங்களும்மற்றைய எல்லாக்கலைகளும் அதே சாஹித்தியத்தின் அம்சம் என்பது பசுமரத்தாணியாயிற்று. இனிச் சாஸ்திரங்களைத்தனியெனக்கூறிடின் அது அங்கமேயாம் என்க. இவ்விஷயம் எவராலும் மறுக்கொணாதாகவே இதை மறுப்பவரைத் தண்டிக்கும்வேலை எம்பால் அமையலாம். மேற்கூறிய சங்கதிகளை ஸ்ரீமந்நாரணனும் மற்றுமுள்ள வைணவரும்ஒப்பினரென்க. அற்றேல்"அங்கமாறுவேதம்நான்கு" என்றுதொடங்கி வித்தைகளைத்தனித்தெண்ணுமிடம்என் இச்சாகித்தியம் ஒன்றாக எண்ணப்படவில்லை? ஆதலால் இது வித்தையேயாகாது எனின், அற்றன்று. மேற்கூறிப்போந்த நியாயங்களால் அங்கெடுத்தோதிய பதினெண்வித்தைகளும் ஒருங்குசேர்ந்ததே ஸாஹித்தியம் எனப்படுவதால் அங்குவிரித்து அவயவமுகத்தாற்றானே கூறப்பட்டதெனத்தொழிக. இச்சாஹித்யத்தைப்படித்தறியலாம்ஆயினும் அக்கவிஞர் நடை சுவை உயிர்களை அறிவது அன்னோர் நற்பழக்கத்தாலின்றியமையாதுபற்றி அவர்களிடம் சிறிது கற்றே தீரவேண்டும். இச்சாகித்தியவித்தையைப் பருக்க எழுந்தவர் அனேகர். காளிதாஸன் பவபூதி முதலினோர் முன்னிருந்தார்கள். அவர்களை அக்காலத்து போஜன் முதலியமன்னவர் விடாது ஆதரித்து வந்தமையால் அவர்காவ்யவித்தை மேன்மேலும் வளர்ந்தது. இச்சாஹித்யம் என்னும் கொடிக்கு ஆன்றோர் அருமொழிகளே தளிர்கள். முற்கலைபண்டிதர்சேர்க்கை. மலர்கள்நற்புகழ். இதன்பயன் அறம்பொருளாதிகள். இக்காலத்தில் முற்காவியங்களைக் காட்டிலும் நற்காவியமியற்றுமாற்றலுற்றார் பிறந்திலராயினும் ஸாஹித்யசாஸ்திரத்தை யப்யஸித்து அக்காவியவுண்மைகளை அறிந்தானந்திக்குமியலையாவதறிந்திடின் அது கொண்டு தேவியை வழிபட வழிபட சரஸ்வதியார் கடாக்ஷம் எமக்குக்கிடைக்கத்தடையில்லை. உலகத்தில்எவ்வித காலத்திற்கும் எவ்விதவிடத்துக்கும் காவியம் பாண்டித்தியம் இவை கட்டுப்பட்டவையல்ல. இக்காலத்தும் ஏதோ சிலர் அறிவிற்சிறந்த பண்டிதரும் கவிஞருமாகவிருக்கின்றார்களாயினும் அவர்கள் குடும்பபாரணம் செய்வதே அவர்க்குப் பெரும்பாரமாகும்படி மன்னவன் கலிசெய்துவருகின்றான். இவர்கள் அறிவுங்காலக்கொடுமையாலெவ்விதத்திலும் நிகிரகிக்கப்பட்டு சிதையவும் நேரிடுகின்றது. ஆதலாற்றான்

Koviloor Digital Library

[illegible]

இக்கவிதையின் பெரும்புகழ்பணக்காரன் பொழுதுபோக் கும் கருவியாயிற்று. இவ்விதம் காலக்கிரமத்தில் இவர் இவ் விதம் இக்கவிதையை ஆதரியாதொழிவரோல் இவர்கொ ண்ட கவிதைபெனும் குலதனம் எதிர்காலத்தில் எக்கதி பெறுமோவென மனம் பதைக்கின்றது. அந்தோ! இக்கால த்தில் வடமொழிபயின்றுவல்லாரானபாவலர் பலரும் படிக் துபாத்தை எடுத்துப்பேசுவது வன்கண்மை நிறைந்தவர்க் கும்வாக்குத்தழுதழுக்குமாகவே யாம் அதைச் சொல்வதெ ப்படி? ஆரியர்காள்! இக்காலத்தில் வந்த கடுமையைப்பாரு ங்கள்! இக்காலத்து வடமொழி வல்லார் படிக்துபாத்தைப் பார்ப்பார் எவரும் வடமொழியைக்கற்க முயன்றிடார். ஆக வே அதிசீக்கிரத்தில் அதற்கு மோசம் வரும்போலிருக்கி றது. கனவான்களோ தனப்பேய் பிடித்து இறுமாந்திருக்கி றார்கள். இவர்களுக்குத்தம்மவரையுந்தங்குடும்பத்தவரையும் கனப்படுத்துவதே பெரியகாரியமாகிறது. இவர்கள் எப்ப டியோ அப்படியே ராஜமகாராஜப்பட்டம் பெற்றவர்களும். அவர்களுக்கும் காலம் நல்வழியில் போவதில்லை. இவர் கணிதத்தைக் கேழ்பதில்லை. தர்க்காதிகளைக்கேழ்பதில்லை. உலகத்தையும் காப்பதில்லை. இவர்க்குச் சக்தியும் குறைவு. இவர்களுக்கு ராஜ்யமும் சுதந்திரமில்லை. ஆதலாற்றான் இவர்க்கு ராஜா எனும் சொல்லும் இடுகுறியாகின்றது. இங் ஙனமிருக்க எவ்வகையிலாவது பெண்களை வழிபடுவதே எமக்கு வீடு கைகூடும் வழி என்று மனஞ்சலியாது அவ் வழியிற்றானே பிரவேசித்து, காமன் கைவில்லடியுண்டு அதில் அகப்பட்டு, ப்ரம்மன் இந்திரன் முதல் பலகடவுள ரும், நீதியாய் வணங்கி வெற்றிக்கொடிதாங்கிடச்செய்து, இருபொருளைஒருபொருளாக்கிப் பரமானந்த வெள்ளம்பெ ருகி, பாமரர்முதல் பண்டிதர் ஈறுகப்பாதத்தையரடிபணிய ச்செய்தும், மலரெய்தும் மகிமைதாங்கியும்,கரும்புவில்லே ந்தியும் ஆகிய கடவுள் பிரான் கழற்றாமரைகளேகதியென அதற்காக நாற்பயன்களின் நடுப்பயனான இன்பத்தையே விடாது தேடிவருகிறார்கள். இவர் தேடும் பாவம் கற்ப கோடிகாலத்துமழியாது முறையே சர்வ நரகங்களும் இவ ரனுபவித்து ருசிபார்க்கவேண்டியபடி பலனளித்து வரும் படி வேண்டியவரை இதே ஜன்மத்தில் சம்பாதிக்கிறார் கள். இவருக்குள்ள தோழன் கலி. இவருக்குள்ள நண்பன் பாவம். இவருக்காசிரியன் பொறாமை. இவர் பரிசாரிகர் விருப்பங்கள். இவர் குழாக்கள் மோகாதிகள். உயிர் நிலை லோபம் ஆகின்றது. இங்ஙனமிருக்க ஏதோ சிலர் உள் நிறைந்தஉலகப்பற்றைவெளியில்விட்டுக் காமனைவென்றே மென வேடந்தாங்கினமையால் அதுமட்டில் கோபமூண்டு முக்கண்ணன் பகைவோன் மொழிந்த வுத்தாவின்படிமோ ட்டையடிக்கப்பெற்று இருகதியற்று புதுநரகம்புக்கு புன்

Koviloor Digital Library

[illegible]

ணிபஞ்சிறுத்துத் தமதாச்சிரமமிழந்து கலிமகாராஜன்கண் மணிபாய் காலங்கழிக்கிறார்கள். ஆயின் இதன்பேரிலும் கலியென்னவன் செய்யவேண்டிய கடமையாதுளது? நிற்க; இப்பெரும்போகம் அனுபவிக்கும் கலிராஜன் களரியில் எல்லாம் போக நமது நன்னூல்களும் அடியோடொழிந்துவருவதையும் யாம் நேரில் பார்க்கநேர்ந்ததைப்பற்றியே யாமடையும் துயரம் ஆருநிலையில் இருக்கின்றது. அறிஞர்பெருமை அடிகுலைந்தது. உலகம் மிருகத்தன்மை எய்தியது. நல்வார்த்தை அகப்படாது. உண்மை எங்கோ? தன்மத்தைக்கண்டவர்யார்? வேட்டலும் வேதங்களும் ஏட்டிலடங்கின. மரணசிந்தை எம்மனிதருக்குமில்லை. எவ்விதத்தும் இவைகளை எடுத்துரைத்து நல்லோர்மாட்டுபதேசித்து ஒழித்திடுவோம் எனக்கருதி எடுத்துரைக்கப் புகுந்தால் மிகவும் எனதுடல் பதறுகின்றது. நாவெழவில்லை. மனம் வாடுகிறது. இவ்வளவும் கலியின் முதற்பாதமாம். மற்றைய பாதங்கள் எவ்விதம் நடக்குமோ? எத்திங்கு நேரிடுமோ? அறியேம். ஆயின் அறிஞர்மணிகாள்! ஆரியர்காள்! தயையாலாவதுஎம்மிடமன்பினாலாவதுஎவ்வகையாலாவது எவ்வளவும்பெருமைஎனக்கணக்கிடக்கூடாது ஓங்கிவளருமியல்பினதும் நம்முன்னோர் கையாண்டதும் அனுதி என மற்றவர் புகழுமியல்பினதும் மாதவத்தோர் கைஎடுத்துக்கும்பிடப்பெற்றதும் எமக்கு முதுமொழியுமானவடமொழியை எவ்விதத்தும காப்பாற்றவும் அதில் உள்ளநல்லணிகளை விருத்திசெய்யவும் முயல்வீர்களென மிகவும் மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்வடைமொழிகள் தாங்கின இவ்வடமொழிவளர்ந்திட,வரவரக்கலிக்கொடுமை குறையும் என்பது எமதுகருத்து. அங்ஙனமாயின் புண்ணியம் மேலிடும். நூலாராய்ச்சி மிகும். எமக்குச்சுகம்பெருகும். வருணாச்சிரமங்கள் நன்கு செழிக்கும். எம்மைப் பிடித்த பவப்பிணியும் பணியாள்பள்ளிகொண்ட பரமன் அருளால் விலகும். ஆயின் எவ்விதத்தும் பணத்தாலாதல் மற்றப்படி சரீரத்தாலாதல் இவ்விஷயத்தில் முயல்வது உமது கடமை என்பதை தெரிவித்துக்கொண்டேன்.

[illegible] ॥

உலகெலாம்படைத்தளித்து அழித்திடமாற்றலான்
பாற்கடல்பெற்றபாத்தையர்பதியாம்பரமபுருடன்
ஆரணமுடிகளில்அமர்ந்தநாயகன்
காரணன்எமதுகருத்தைநிறைவேற்றுவானுக.

அ. தி. குமாரதாதாசாரியர்.

நாகைநிலலோசனிப்பத்திரிகையும் மாயாவாதத்திமிரபாஸ்கரமும்.

(சங்கரர்க்குமறுமொழியுரைத்தல்)
17-வது அநுபந்தத்தொடர்ச்சி.

இனி ஆவணிமீ உகவ நீலலோசனியிலெழுதிய விஷயத்திற்குப்பதில் வருமாறு:—

உமாபதிசிவாசாரியார், தாமியற்றியசங்கற்பநிராகரணத்தில் ஏகான்மவாதத்தை (அத்துவிதத்தை) மறுத்தவற்றிற்கு மாயாவாதசங்கற்ப நிராகரணப் பெயர் சூட்டியிருக்க, அத்துவிதிகள், தாங்கள்மாயாவாதிகளன்றெனச்சொல்லி ஜாடையாய் நழுவுவது அடாது.அடாது என்று சுந்தரர் கூறியிருப்பதைநோக்கின், சுந்தரர், உண்மையில் "கிழக்கு மேற்கு அறியார், வழக்குப்பேசப் புகுந்தார்" என்பாரக்கினராம் என்பதற்குயாதும் ஐயமின்றெனக. இதுவிஷயமாகப் பதினேழாவது பத்திரிகையிலேயே சமாதானங்கூறினோம். இதிலும் சிலகூறுவாம். உமாபதிசிவாசாரியார் வைதிகசிவா த்துவிதிகளான தில்லைதீக்ஷதரிலொருவராயிருந்து தமது பூர்வகர்மபலத்தால்மாயாவாதநாஸ்திக சைவதுவிதிகளுடைய போதனையால் அம்மதத்திற்சென்று, அதுகாரணமாக தில்லை தீக்ஷிதரினின்றும் வேறுபட்டு, கொற்றங்குடி யே த ம க் கி ட ம ா க ப்பெற்று அம்மதமே தமது சித்தாந்தமாகக் கொண்டிருந்தார். இவர் பாடிய கொடிக்கவியே இதற்குச் சான்றாம். இவரை நீக்கி தில்லைவாழந்தணர் செய்த துவஜாரோகணம் நிறைவேறாதுபற்றி யல்லவோ தாம்கொடிக்கவி பாடும்படி நேர்ந்தது. இவ்வுண்மை அவர்சரித்திரம் அறிந்தஎவருக்கும் புலப்படாதொழியாது. ஆயினும் சுந்தரர்சூக்ஷமம் அறியார்போலும்! இயல்பான மதத்தவரினும் நவீனமதம் புகுந்தவர்க்கு முன்னிருந்த மதத்தில் துவேஷம் அதிகரித்திருப்பது வழக்கமாகவே, அவர்க்குத் தில்லைதீக்ஷிதரிடத்தும் அவர்மதத்தினிடத்தும் துவேஷம் அதிகமாய், அதை நிறைவேற்றக் கண்டகண்டவாறு தூஷித்து நூலஎழுதிவிட்டார். அவரது நூலினாலேயே அவர் அத்துவிதசித்தாந்தத்தை யுணராதவரென்று காட்டுகின்றது. அப்படிப்பட்ட நூலைக்கொண்டே இப்போதுள்ள சித்தாந்த சைவரும் சுயவாராய்ச்சியின்றி அத்துவிதிகளை யிகழ்ந்து வருகின்றார்கள். வேற்றுமதஸ்தர் தமதுமதத்துக்குமாறானதும் மேலானதுமான அன்னியமதஸ்தரையெல்லாம்அஞ்ஞானிகளென்றுகூப்பிடுகின்றார்கள். இதனால்ஒருமதத்தவர், மற்றொரு மதத்தவரைக் குறைவாகக்கூறுகின்றாரென்பது விளங்குகின்றது. அங்ஙனமே உமாபதிசிவாசாரியாரும் அவர்போன்ற பிறரும் அத்துவிதியை "மாயாவாதப்பேயா" என்றும், இன்னும் இவ்வாறு பலவும் கூறியிருக்கின்றார்கள். சுந்தரர், தமமினத்தார் கூறுவதைச்சொன்னால் அத்துவிதிகள், தம்மினத்தார்கூறியதைச்சொல்லுகிறார்கள். இதிற்பயனென்ன? உமாபதிசிவாசாரியார்வாக்குஇவருக்கும்இவர்போன்றாருக்கும் குருவாக்கியமாயிருக்கலாம், மற்றவர்க்குக்குருவாக்கியமாயிருக்கவேண்டிய அவசியமின்றே.நமக்கு உமாபதிசிவமும்இவரும்பூர்வபக்ஷகட்சியிற்சேர்ந்தவர். நமதுமறுப்பு அவர்க்கும் இவர்க்குமே. அங்ஙனமாகவுமாபதிசிவாசாரியார்சொல்லிவிட்டாரென்றும், அவர் மாயாவாதிகளென அத்துவிதிகளுக்குப் பெயரிட்டாரென்றும் அத்துவிதிகள் அதைமறுத்து ஜாடையாய் நழுவுகின்றார்களென்றும் சுந்தரர் கூறுவது எவ்வளவு தெரியாமையைக் காட்டுகின்றது பாருங்கள்! இப்படிப்பட்டவரெல்லாம் வாதஞ்செய்பவரின் வாதமுறைப்படி யெப்படி வாதஞ்செய்யக்கூடும்? ஒருமதவாதிசொல்வதை மற்றொரு மதவாதி ஒத்துக் கொள்ளா விடில் ஜாடையாய் நழுவுவதாய்ச்சொல்லலாமோ? சொல்லலாமென்னின் அத்துவிதிகள் சொல்லுவதை இச்சித்தாந்த சைவர் ஒத்துக்கொள்ளவில்லையே. அதனால சித்தாந்த சைவர் ஜாடையாய் நழுவுவதாய்க்கூறலாமோ? அத்துவிதிகள் சொல்வதை இவர் ஒத்துக்கொள்ளாமையால் இவரும் ஜாடையாய் நழுவுகின்றாரென்றே சொல்லவேண்டுமே. இது எல்லாமதத்தவருக்கும் பொதுவாயிருக்கவும் தமதுபக்ஷத்துக்குமாத்திரம் நியாயமிருப்பதுபோலவும் பிறருக்கு நியாயமில்லாதுபோலவும் காட்டியெழுதுவது சுந்தரர்க்கு எம்மாத்திரமும்சுந்தரமன்று. தாம சொல்லக்கருதிய சொல்லை மற்றொருசொல் வெல்லாமையை முன்னறிந்துசொல்லல்வேண்டும். அதுபற்றியே "சொல்லுகசொல்லைப் பிறிதோர்சொலச்சொல்லை வெல்லுஞ்சொலின்மையறிந்து" என செந்நாப்போதாருங்கூறியுள்ளார். பிரதிவாதிகளுக்கு முரித்தானதைத் தமக்குமாத்திரமுரித்தாகக்காட்டியது பற்றியே "கிழக்கு மேற்கு அறியார் வழக்குப்பேசப்புகுந்தார்" என்னும் பழமொழியை அடிக்கடிப் பிரயோகிக்கின்றாம்.

இதன்மேல் மற்றொன்று எழுதுகின்றார். அதுவருமாறு:—"உமாபதிசிவம் அருளியசிவப்பிரகாசத்தில் உல
'குக்கு உபாதானம் இறைவனென்றெழுந்த மாயாவாதி
'யை (அத்வைதியை) மறுத்த அவசரததில் எழுந்ததிரு
'ச்செய்யுளின்கருத்தைக் காவைத்தம்பிரான்கூறியபோ
'து உலகம் பிரமத்தொடுங்கிடு மென்னுங்கலதி தன்மொ
'ழியைக்கட்டுரைத்தது' என்றனர். இந்தச்சந்தர்ப்பத்தை
'விசாரிக்கின் பாநுமூர்த்தியெடுத்துக்காட்டிய சூதசம்மி
'தைச்செய்யுளுக்கு உரை நன்குவிளங்கும்." என்பதேயாம். சுந்தரர்க்கும் இவரினத்தார்க்கும் அகப்படும் பிரமாணங்களெல்லாம இவரினத்தார் சொன்னவையேயன்றி, வாதிப்பிரதிவாதிகள் அங்கீகரிக்கத்தக்க பதினான்குவித்தைகளில் ஏதுமல்ல. அந்தவித்தைகளில் இவர் கொள்கைக்கு ஏதும் பிரமாணம் அகப்படாதுபோலும்! தம் கொள்கையைச்சாதிப்பார்பேசுவதுஇப்படித்தானோ! அந்தச்சந்தர்பத்தை விசாரித்தால சூதஸம்மிதைக்கு உரைநன்கு விளங்குமஎன்றாரேயன்றி நன்குவிளங்குகின்றதைபெடுத்தச்சொன்னாரில்லை. அதைச்சொன்னால் ஐஈப்பன்வீட்டுக்கோழி தானே அகப்பட்டுக் கொண்டது போல்அகப்பட்டுக்கொள்வாரென்பதற்கையமில்லை. 'நன்கு விளங்கும்' என்று சொல்லிவிட்டதினால் தம் சித்தாந்தம் உறுதிப்பட்டுப்போமா? பாநுமூர்த்தியுமிங்ஙனந்

Koviloor Digital Library

சொன்றெனவைத்துக்கொள்வோம். இருபாலருமிவ்வாறு சொல்லிவிட்டால் ஆவதென்ன? தோல்வித்தானமெது? வெற்றித்தானமெது? இப்போது ஜாடையாய்க்கழுவுவதுயார்? அதனுரையையெடுத்துச்சொலலலாமே. சொலலாமல்கழுவவிட்டவர்யார்? சுந்தரரன்றோ? இவர்கழுவிவிட்டு, அவ்வாறுகழுவாதபிறரைச்சொல்வதென்னையோ? அதினும்எல்லோருக்கும்பொதுவாய் ஒருமதத்தவர்சொல்லும் குற்றத்தைப்பிறமதத்தவர்ஏற்றுக்கொள்ளுதல்கூடாமையாயிருக்கதமக்குமாத்திரமில்லாமைபோலஅபிநயித்துப்பிறர்பேரில் கூறுங்குற்றத்தை அவரொத்துக்கொள்ளாமை காரணமாக அவர் ஜாடையாய் கழுவுகின்றாரென்று சொல்லுவது பின்னும்விசேஷகுணக்கேடான அநீதியன்றோ? இவர் சூதசம்ஹிதைக்கு உரை நன்குவிளக்குவாராயின் இவர்பக்ஷத்துக்கு அணுத்துணையும அநுகூலமின்று; முற்றும் பிரதிகூலமேயாம். சூதசம்ஹிதைக்கு இவர்ஒருஉரை, நாம் ஒரு உரை செய்ய அதுஇடந்தருவதன்று. அதுசொல்வதெல்லாம் அத்வைதமே. அதிலும் இவரது துவிதசித்தாந்தத்தை யாங்காங்கு பலவிடங்களிலும் மறுத்து அத்வைதசித்தாந்தஞ்செய்கின்றது. ஆதலால்தான் அதனுரையை எடுத்துச்சொல்லாமல் 'நன்குவிளங்கும்' எனச்சொல்லிச் சாடையாய் கழுவினார். இத்கழுவுதல் இவர்க்குப்பொருத்தமாமேயன்றி மற்றவர்க்காகாதென்றறிக.

"பெருமானிரண்டறக்கலந்தஞானிகட்கு உலகந்தோன்றாதிருப்பது உண்மைதான். அங்ஙனந்தோன்றாதது கொண்டு உலகம் இல்லாமற்போய்விடுமோ" என்றுகூறி, தமக்குமாத்திரம் மிகப்பெரிய ஆதாரம்போலத்திருமந்திரநூலையெண்ணி, அதனுண்மையை யுணராமலும் முன்பின் அறியாமலும அத்வைதசித்தாந்தத்தின் பொருளையுணராமலும் "பதியினைப்போலப் பசுபாசமனாதி என்ற திருமந்திரத்தின் பொருள் என்னை" எனத்தமக்குத்தாமே ஒருகேழ்விகேட்டு, அதைவிசாரித்ததில் தமதுபக்ஷத்துக்குந்தான் பலமிருப்பதுபோலவும் அத்துவிதிகளுக்குப் பலமில்லாததுபோலவுங்கருதி, இத்துடனே அத்துவிதிகளை ஜெயித்துவிட்டதாக விஸ்ராந்திபடைந்து "விசாரித்தடங்குவாராக" என்றுங்கூறிவிட்டார். இதில்பெருமானுடன ஞானிகளிரண்டறக் கலத்தலென்பதொன்று வரைந்தனரன்றோ? கலத்தலென்பது எப்படி? பொருளும்பொருளும் கூடியிருப்பதுபோலா? பொருளும் குணமும் அல்லது தொழிலும் ஒற்றுமைப்பட்டிருப்பதுபோலா? பொருளும்பொருளும் கூடியிருப்பதுபோலென்னின் இரண்டுபொருள் கூடியிருக்குமானால் இரண்டு இரண்டாகவிருக்குமேயன்றி யிரண்டறாது. இரண்டுகல்லையொன்றாகச்சேர்த்தால் இரண்டு இரண்டாக இருக்குமேயன்றி இரண்டறாது. அவ்வாறே சிவமும் ஆன்மாவும் கூடுமானால் இரண்டு இரண்டாகவிருக்குமேயன்றி யிரண்டறாது இரண்டற்றதென்றேவைத்துக்கொள்வோம். இரண்டற்றதென்றால் அதன்பேரிலெத்தனையாகிறது? ஒன்றாகின்றதா? மூன்று நான்கு முதலியனவாகின்றதா? ஒன்றானாலும் சரி, மூன்று நான்குமுதலியனவாகின்றனவென்றாலும்சரி, இரண்டுகெட்டேயாகவேண்டும். இரண்டில் சிவம் ஒருபொருள்; ஆன்மாவொருபொருள். சிவமும் ஆன்மாவுங்கெட்டு ஒன்று அல்லது மூன்றுநான்குமுதலியபொருளாகவேண்டும். ஆன்மா கெட்டாலுங்கெடட்டும். சிவத்துக்குக் கெடுதிசொல்லலாமா? சிவம கெட்டுப்போனதாக வைத்துக்கொண்டால் அதுகெட்டுப் பின்னையெப்படியாயிற்று? அதன்பேரென்ன? அரும்புகெட்டுப்பூவாய் பூகெட்டுப்பிஞ்சாய், பிஞ்சுகெட்டுக்காயாய், காய்கெட்டு பழமாய்ப் பழமுங்கெட்டுப் பலவிகாரமாயும் அதுவுங்கெட்டு வேறுபலதன்மையாயும் ஆவதுபோல் சிவங்கெட்டு எதுவாயிற்று? அதுகெட்டுஎதுவாயிற்று? அதுகெட்டுஎதுவாயிற்று? இதுவரையில் எண்ணிக்கையிலடங்கா அத்தனைகோடி பிரமகற்பங்களானமையின்ஒருபிரமகற்பத்துக்கு ஒருவிகாரமடைந்தாலும எத்தனைகோடிவிகாரமடைந்திருக்கவேண்டியது? சிவமிப்போதுஎந்தவிதமான விகாரத்தோடுஇருக்கிறது? இனிக்காலாந்தரத்தில்எப்படிப்பட்டவிகாரங்களையடையும்? இரண்டு பொருள்கள் கெடுதலடைந்து ஒன்று அல்லது மூன்றுநான்குமுதலியபொருள்களாகுங்கால் அவை கண்டப்பொருள்களாகவே யிருக்கவேண்டும். ஏனெனில் இரண்டுஎன்கிற வரம்புஏற்படும்போது இரண்டில்லாத இடமிருந்தாலன்றி வரம்பு ஏற்படாது. இரண்டில்லாத இடமேற்படும்போது ஷை சிவம் ஆன்மாவாகிய இருபொருள்களும் கண்டப்பொருளாய்விடும். ஒருபொருள் பரிபூரணமானால் மற்றொருபொருளிருக்க விடமின்மையான் அகண்டமானசிவத்தினிடம் அகண்டமான ஆன்மாஇருத்தலும் அவைகளெலலாம் கெடுதலடைந்து ஒன்று அல்லது மூன்றுநான்கு முதலியனவாதலும கூடாதாகவே கூடுமென்றேவைத்துக்கொள்வோம. வைத்துக்கொண்டாலும் பின்னும் பெரும் அனர்த்தத்திற்கிடமாகின்றது. அதைக்கூறுவாம். இன்றுஒரு ஆன்மாவானது சிவத்தோடு இரண்டறக்கலந்து ஒன்றாகவோ மூன்றுநான்குமுதலியனவாகவோ ஆயிற்றெனவைத்துக்கொள்வோம். இரண்டறக்கலக்கும்போது இரண்டென்னும் தன்மைகெட்டுவிட்டது. ஷை இரண்டில் சிவமொருபொருளானமையின் சிவமும் தனதியற்கைத்தன்மை கெட்டது. நாளைமற்றொருஆன்மா சிவத்தோடு இரண்டறக்கலந்தது. அப்போதும ஒருமுறை சிவத்துக்கு அப்போதுள்ள தன்மைகெடும். நாளைமறுநாள் ஒருஆன்மா சிவத்தோடு இரண்டறக்கலந்தது. அப்போதும் சிவத்துக்கு அப்போதுள்ளதன்மைகெடும். இவ்வாறு ஆன்மாக்கள் முத்தியடையும்போதெல்லாம் சிவத்துக்குச்சிவத்தன்மை கெட்டுக்கொண்டேவரும். ஆன்மாக்களித்தனைகோடியென அளவிடமுடயாது. சமுத்திரத்தின்மணலை யெண்ணினாலும் எண்ணலாம; சமுத்திரமுதலிய ஜலம் இத்தனை துளியென்றெண்ணினாலும் யெண்ணலாம; ஆன்மாக்களித்தனையென்றெண்ண எவராலுமாகாது. அவ்வளவுஆன்மாக்களும் முத்தியடைந்தேதீரும். முத்தியடையும் அந்தக்காலத்திலும் சிவமானதுகாத்திருந்து கெடுதலடைந்து இரண்டறக்கலக்கவேண்டும். இரண்டறக்கலத்தலென்பதில் இரண்டற்றால் ஒன்றேயாமன்றி மூன்றுநான்கு முதலியனவாதல் தமது சித்தாந்தமன்றென்பாராயின் ஷை ஆக்ஷேபத்தில் ஒன்றாதலும் குற்றமென்றுகாண்பித்திருப்பதால் ஒன்றாதலென்பதற்கேனும் சமாதானஞ்சொல்லவேண்டியது அவர்பாரமேயாம்.

Koviloor Digital Library

இனி "இரண்டறுதலென்பதும், ஒன்ருதலென்பதும் உபசாரம், இரண்டுபொருளிருத்தல்தாறுண்மை என்பாராயின் அப்போது சிவம் ஒருபொருள், ஆன்மாவொருபொருள் ஆகவிருபொருள்கள் இருக்கநேர்ந்து, ஒன்றிருந்தவிடத்தில் மற்றென்றில்லை யென்றதற்கிடனுகி, சிவமும் கண்டப்பொருள், ஆன்மாவுங்கண்டப் பொருளாதல் வேண்டும். இனி மற்றொருவிதமாய்ப் பார்ப்போம். அகண்டபரிபூரணமான சிவம, கண்டப்பட்டு, தானென்றும் ஆன்மத்தொகுதியொன்றுமாகி,முத்தியிலேகமாகின்றதென்னின் இங்ஙனங்கூறுவதனுல் பலகுற்றங்கள் நிகழும். சிவம் பலபொருள்களானுல் சிவமும் கண்டப்பொருளாகும்; ஆன்மாவுங்கண்டப்பொருளாகும். மேலும் ஒருபொருள் பலபொருள்களாகிறதானுல்அதுகண்டப்பொருளாகுமேயன்றி அகண்ட பரிபூரணப்பொருளாகாது. கண்டமான கழியொன்றையெடுத்துப் பலவாகச்செய்யலாம். அகண்டபரிபூரணமானஆகாயம் பலவாய்க்கண்டப்படுமா? மேல்மூடியிட்டதும் நீர் நிறைந்ததுமான ஓர் புட்டியிலிருக்குநீர்அந்தப்புட்டிக்குள்ளாகப் பலவாய்ப்பிரியுமா? பிரிகிறதற்குத்தானில்லாஇடம்வேண்டுமே. பிரிகிறதற்கேயிடமில்லாதபோதுபிரிந்துகூடுமென்றுகூறுதலெங்ஙனம்பொருந்தும்?ஆதலால் சிவம்,ஆன்மாக்களாகப்பிரியுமென்பதும் பெயர்த்தும்,ஒன்ருமென்பதும்யுக்திஅநுபவவிரோதமாம். பிரிந்துகூடுமென்பதில்இன்னும் ஒருகுற்றமுளது.அதையுங்கூறிமறுப்பாம்.சிவமானது ஆன்மாக்களாகுமானுல் ஆன்மாக்களெல்லாம் சிவமேயாமென்று சொல்லுதற்கிடனுகி, ஆன்மாக்கள், சஞ்சித ஆகாமியபிராரத்தவசப்பட்டுஎழுவகைத்தோற்றத்திற்பிறந்துஇறந்து, அநுபவிக்கும்சுகம்துக்கம் சுவர்க்கம் நரகமாதிகளெல்லாம சிவம் அநுபவிப்பதாகவேசொலலவரும். இப்படிப்பட்ட கருமங்களை அநுபவித்தற்குப் பூர்வம, சிவத்துக்குக் கர்மம இருந்திருக்கவேண்டும். சிவம் ஆன்மாக்களாவதற்கு முன்கருமமிருந்ததாய்க்கூறவொண்ணுது."சிவமோநிர்க்குண, நிரவயவ, நிர்ச்சல,நிர்மல, நிஷ்கிரிய, நிராகார, நிராமய, நிராதார,நிர்விசேஷ, நிர்த்தொந்த,நித்தியமுக்த, நிர்விகார, நிரஞ்சன நிஷ்கள, நிராலம்ப, நிஷ்பிரபஞ்சப் பொருள். அப்படிப்பட்டபொருள், காம வெகுளிமயக்கவசபபட்டு சர அசரங்களாகப்பிறந்து, புண்ணியபாவங்கள்செய்து, சுவர்க்க நரகங்களையடைவது நியாயமாகுமா? இதுவரையில இரண்டறக்கலந்த ஞானிகள் சங்கதிதான் வெளியாயிற்றே.

இதன்பேரில் "ஞானிகளுக்கு உலகந்தோன்ருதிருப்பதுண்மைதான். அங்ஙனந்தோன்ருததுகொண்டு உலகம இல்லாமற்போயவிடுமோ?"என்று ஒருகேள்விகேட்கிருர். இதுநலலகேள்விதான். நாம் கண்ணை மூடிக்கொண்டால் உருவங்கள் தோன்றவில்லை. தோன்ருவிடில் உருவங்களில்லாமற்போயினவா? இருக்கின்றனவென்றே சொல்லவேணடும். அப்படியேஞானிகளுக்கு உலகந்தோன்ருவிடினும் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். இதுதான அவர்கருத்தெனவிளங்குகின்றது. ஞானிகளுக்கு உலகந்தோன்றவிலலை; ஏன்தோன்றவில்லை; கரணங்களில்லாமையால் தோன்றவில்லை. எங்கெங்கேகரணங்களுளவோ, அங்கே அங்கேஎல்லாம் உலகந்தோன்றும். எங்கே எங்கேகரணங்களிலவோ அங்கேயங்கேயெல்லாம் உலகந்தோன்ருது. கரணமில்லாக்காலத்து உலகு தோன்ருவிடில் உலகு இருந்துந்தோன்றவில்லையா? இல்லாமலே தோன்றவில்லையா? இருந்தேதோன்றவில்லை யென்னின் கரணமில்லாக்காலம் சுழுத்தி, மூர்ச்சை, சமாதிகளாம். இக்காலங்களில்தான் உலகந்தோன்ருமலிருப்பது. சுந்தரர், தோன்ருததுகொண்டு உலகமில்லாமற்போயவிடுமோ, என்றதனுல்தோன்றினுல் உலகமுள்ளதென்றே அவசியஞ்சொல்லவேண்டும்போலும். அங்ஙனமாயினகயிற்றின்கண தோன்றும் அரவும் இப்பியின்கண்தோன்றும் வெள்ளியுமுள்ளனவாமா?"அவைதோற்றமன்றி யுண்மையல்ல; உலகமவ்வாறல்ல; உண்மையாம்" என்னின் உலகங்காரியமென்று சுந்தரரொத்துக்கொள்வார். அந்தக் காரியத்துக்குமுதற்காரணம் மாயையென்றும்ஒத்துக்கொள்வார். காரணமானமாயையின்கண் உலகு உள்ளதா(சத்தா)இல்லதா? (அசத்தா?) உள்ளதில்லதா(சதசத்தா?) இக்கேள்விக்குச் சமாதானமெப்படி? காரணமானமண்ணின்கண் காரியமான குடமெப்படியோ, அப்படியேகாரணமான மாயையின்கண் காரியமானவுலகமாகும். மண்ணின்கண் குடம்சத்தா? அசத்தா? சதசத்தா? சத்தெனின் எதுசத்தோ அதுமுக்காலத்துமிருத்தல்வேண்டும். குடமூக்காலத்துமுள்ளதா? குடம் வனைதற்கு முன்னும அழிதலுக்குப் பின்னுமில்லையென்பது திண்ணம. மத்தியகாலத்திலேனு முள்ளதேயென்னின் மத்திய காலத்திலும் மண்ணின்கண்வனைதலாதிதொழில்மாத்திரமுளதேயன்றிப் பொருளில்லை. தொழில் பொருளாகாது. அந்தத்தொழில்தானுமுள்ளதோ வென்னின் அதுவும் அபாவம்தான். ஏனெனின் எந்த மண் வனைந்ததெனத் தனித்தனியுற்றுநோக்குமிடத்து ஒருமண்ணேனும் வனைந்ததாய்க்காணப்படவில்லை. ஆதலால் கடமென்பதுதோற்றமேயன்றிப் பொருளன்று. "வனைதற்கு முன்னரும் அழிதலுக்குப் பின்னரும்குடமில்லதென்றுகூறப்படாது, உள்ளதென்றேசொல்லவேண்டும். அதாவது காரியமானது கரணத்தில் அடங்கியிருக்கின்றதாகக் கொள்ளவேண்டும்" என்னின் காரணத்திலடங்கி யிருக்கின்றதென்பது பிரத்தியக்ஷமா? அநுமானமா? "கண்ணுக்குப்புலப்படாமையால்பிரத்தியக்ஷமன்று; அநுமானமென்பா"மெனின் அநுமானத்திற்குப் பிரத்தியக்ஷம் வேண்டும். பிரத்தியக்ஷம் கடந்தான். "மத்தியகாலத்தில் பிரத்தியக்ஷமாய்க்கடமிருக்கிறபடியால் உள்ளதுபோகாது" என்னும்நியாயத்தால் வனைதற்கு முன்னும் அழிவுக்குப் பின்னும் தோற்ருவிடினும் காரணத்தில் சத்ரூபமாய் அடங்கியிருக்கின்றதென்றே அநுமானிக்கவேண்டும்; காரணத்திலில்லையென்னின் வனைந்தபின் குடம்வரநியாயமில்லை. "இல்லதுவாராது' என்னும் நியாயப்படி குடமில்லதாயின் வரமாட்டாது. வந்திருக்கையால் இருந்தே வந்திருக்கவேண்டும்" என்னின், வனைந்தபின்னரும் அழிதலுக்கு முன்னரும் குடமிருந்தாலன்ரு அந்தப் பிரத்தியக்ஷத்தைக்கொண்டு, வனைதற்கு முன்னரும அழிதலுக்குப்பின்னரும் காரணத்தில் சத்ரூபமாய் அடங்கியிருக்கிறதென்று சொல்லி அநுமானிக்கத்தகும்? பிரத்தியக்ஷமென்றுசொல்லும் மத்தியகாலத்திலேயே கடத்துக்குப்பொருளில்லையென்றும் வனைதலாதித்தொழிலும்தோற்றந்தா

னென்றும் நியாயத்தால் காட்டிமுடித்தோமாதலால், கா
ரணமான மண்ணின்கண் குடம் சத்திருபமாய் அடங்கி
யிருக்கிறதென்றும், அது அநுமானமென்றும் கூறுதற்கு
அணுத்துணையும் நியாயமின்று. பிரத்தியக்ஷம் சத்தா
யிருந்தாலன்றி அநுமானஞ்சத்தாகாது. புலகைசத்தாயி
ருந்தாலன்றி நெருப்புச் சத்தாகாமைபோல. ஆதலால்
குடம்முக்காலத்தும் அசத்தாம். பிரத்தியக்ஷமான குட
மே அசத்தானபோது, அதுமண்ணினிடத்துச் சத்திருப
மாய் அடங்கித்தோன்றுமலிருக்கின்றதெனறு சொலலி
அனுமானிப்பது எங்ஙனங்கூடும்? இதனால் காரியம் அசத்
தென்றும் வெறுந்தோற்றமேயென்றும அப்படியே குட
மும் அசத்தென்றும் வெறுந்தோற்றமேயென்றும் இத
ன்படியேயுவமேயமானவுலகும் அசத்தென்றும் தோற்ற
மேயென்றும் சித்தாந்தமாயினவாறறிக.

இனித்தோற்றமானவுலகமும் கரணமிருந்தாலன்றிக்கா
ணப்படுவதில்லை. கரணமில்லாக்காலத்து உலகம் உள்ள
தா? இல்லதா? நாம்தினந்தினம் அநுபவிப்பது சுழுத்தியா
வஸ்தை. அந்த அவஸ்தையில் கரணமில்லை. கரணமில்
லாமையால் உலகந்தோற்றவில்லை. இருந்துதோற்றவில்
லையா? இல்லாமற்றோற்றவில்லையா? சுந்தரர், "சுழுத்தி
யவஸ்தையில் உலகந்தோன்றுதாயின் சாக்கிரத்திலிருப்
பவர்கட்கும் உலகந்தோன்றுமற்போய்விடுமோ" என்று
கேள்விகேட்டிருப்பதால் கரணங்களில்லாக்காலத்தும் உ
லகமுள்ளதென்பதேயவர்சம்மதமெனத்தெரிகிறது. சுழு
த்தியவஸ்தையில் உலகமுளதென்பது பிரத்தியக்ஷமா?
அநுமானமா? பிரத்தியக்ஷமென்னின் இந்திரியக்காட்சியே
பிரத்தியக்ஷமானதாலும் சுழுத்தியில் இந்திரியமில்லாத
தாலும் பிரத்தியக்ஷமென்றுரைத்தல் கூடாது. அநுமா
னமென்பாமென்னின் பிரத்தியக்ஷமின்றிஅநுமானம நிக
ழாது. ஆதலால் சுழுத்தியவத்தையில உலகமுண்டெ
ன்பது பிரத்தியக்ஷமுமன்று; அநுமானமுமன்று. சாஸ்தி
ரப்பிரமாணமென்று உரைப்பாமென்னில் சாஸ்திரங்கள்
சாக்கிரத்திலேயே உலகம்பொய்யென்றும் கானனீரென்
றும் கயிற்றரவென்றும் சொப்பனக்காட்சியென்றும் இந்
திரசாலமென்றும் கூறுகின்றமையால் அதுவும் பொருந்
தாது. சாக்கிரத்திலுலகமிருப்பதால் அதுகொண்டு சுழு
த்தியிலுமிருக்கிறதென்றுசொல்வாமென்னின்சாக்கிரத்தி
லுலகம்தோன்றுவதற்கும் சுழுத்தியிலதோன்றுமைக்கும
காரணமேற்பட்டால் இந்தசங்கையொழியும். இதுவிஷ
யமாகப் பானுமூர்த்திஅவர்கள் மகாவிகடதூதனில் வரை
ந்தவிஷயத்தை யிதனடியில் எழுதுகின்றோம். அதைப்
பார்த்தால் யாவும்விளங்கும்.

மகாவிகடதூதன் 92-ஆலத்து நவம்பர்மீ 5வ பத்தி
ரிகை:—

"சுழுத்தியவஸ்தையில் உலகந்தோன்றுதாயின் சாக்
கிரத்திலிருப்பவர்க்கு உலகந்தோன்றுமற்போய்விடுமோ"
என்றார். சுழுத்தியவஸ்தையி லிவ்வுலகு காணப்படாதி
ருப்பது யாவருக்குமனுபவம. அப்படிப்பட்ட உலகுசுழு
த்தியில் இருந்து காணப்படவில்லையா? இல்லாமற்காணப்
படவில்லையா? இந்தக்கேள்விக்குப் பதில் கூறுவாம்.சுழு
த்தியிலுலகு உளதென்பவர் பட்சம்:—நீரிலிருக்கும் அதி
நுட்பமான பூச்சி நம் கண்ணுக்குக் காணப்படுவதில்லை.
சிறிய உருவைப் பெரியவுருவாகக்காட்டும் பூதக்கண்ணாடி
யைக்கொண்டு பார்க்குமளவில் அந்தப்பூச்சி தெரிகின்றத
ல்லவா? அடிகண்ணாடி இல்லாதகாலத்து அடிபூச்சி கா
ணப்படாமற்போயினும், அப்பூச்சி இல்லையென்று சொல்
லுவதற்கு அமையாது. உள்ளதென்றேகூறத்தகுமென்க.
அதுபோல மனமில்லாமலிருக்குஞ்சுழுத்தியவஸ்தையின்
கண் உலகங்காணப்படாதேனும் உள்ளதென்றே சாதிக்
கப்படுமென்க. இவ்விடத்தில் கண்ணாடிஸ்தானத்தில்மன
மும், பூச்சி ஸ்தானத்தில் உலகுமாம. கண்ணாடியில்லாக்
காலத்துப் பூச்சி தோன்றாவிடினும், அது உள்ளதாகக்
கொள்வதுபோன்று மனமில்லா சுழுத்திக்காலத்து உலகு
தோன்றாவிடினும, உலகு உளதென்றே கூறத்தகுமெ
ன்க. சுழுத்தியிலுலகு இலதென்பவர் பட்சம்:—ஒருமனி
தனுக்குபைத்தியம் வந்தவிடத்து அதற்குமுன் இல்லாத
வஸ்துக்களெல்லாம் உள்ளனபோற் காணப்படுகின்றன.
அந்தப்பைத்தியம் போனவிடத்துஅந்தப்பொருள்கள் கா
ணப்படவில்லை. இவ்விடத்தில் பைத்தியஸ்தானத்தில்மன
மும், பொருள்கள் ஸ்தானத்தில் உலகுமாம். பைத்திய
மில்லாவிடத்துப்பொருள்கள் உளவாகிக்காணப்படுவதில்
லையா? இலவாகிக்காணப்படுவதில்லையா? இக்கேள்விக்கு
இலவாகிக்காணப்படுவதின்றென்றே கூறத்தகும். இது
போன்று சுழுத்தியின்கண் இலவாகிக்காணப்படுவதின்றெ
ன்றே கூறத்தகுமென்க. இவ்விரண்டுபட்சத்தாருங்கூறிய
உவமானங்களால் நீரின்கணுள்ள பூச்சிக்குக்கண்ணாடி
துணைக்காரணமாயும், பைத்தியக்காரனுக்குக்காணப்படும்
வஸ்துவுக்குப் பைத்தியம் முதற்காரணமுந் துணைக்கார
ணமுமாயிருக்கின்றன.

அவ்வாறே உலகிற்கு மனம் துணைக்காரணமென்றுசொ
ல்லப்படுமா? முதற்காரணமுந் துணைக்காரணமுமென்று
சொல்லப்படுமா? துணைக்காரணமென்று சொல்லத்தகு
மெனின், முதற்காரணமுந் துணைக்காரணமுமென்றுஏன்
சொல்லப்படாது?

கண்ணாடியில்லாக்காலத்துப் பூச்சியுளதென்று கூறுவ
து பிரத்தியட்சமன்று; அனுமானமே. அனுமானம் பிர
த்தியட்சமின்றி நிகழாது. அதற்குப்பிரத்தியட்சம்யாது?
காரணமாய்ச்சிறிதாய் நம்முடைய கண்ணுக்குப் பிரத்தி
யட்சமாய்ப் புலப்படுஞ் சிறியவுருவைமேற்படி கண்ணாடி
பெரியவுருவமாய்த் தோற்றுவிக்கின்றமையால்இந்தக்கண்
ணாடி சிறியவுருவைப் பெரிதாகக்காட்டும் பூதக்கண்ணாடி
யென்று நாம் பிரத்தியட்சமா யறிகிறோம். அதுபற்றியே
நீரினிடத்துள்ள பூச்சி கண்ணுக்குத்தோற்றாக்காலத்தும்
அது கண்ணால் கிரகிக்கப்படாத அதிநுட்பமான பூச்சி
யாயிருக்கவேண்டுமென்று அனுமானிக்கின்றோம. கண்
ணால் பிரத்தியட்சமாய்க் காணப்பட்ட சிறியவுருவைஅடி
கண்ணாடி பெரியவுருவாகக் காட்டாவிடில் கண்ணுக்குப்
புலப்படாப்பூச்சி கண்ணாடியில்லாக்காலத்து நீரின்கண் உள
தாமென அனுமானம் நிகழாது. கண்ணாடியில்லாக்கால
த்துக் கண்ணுக்குச் சிறியவுருப்பிரத்தியட்சப்படாவிடில்
கண்ணாடியில்லாக்காலத்து நீரின்கண் பூச்சியுளதென அனு
மானம நிகழாது. அவ்வாறே மனமிலலாச்சுழுத்தியவத்
தையின்கண்உலகு உண்டாமென்பதற்கு என்ன ஆதாரம?

மற்றது பின்வரும்.

Koviloor Digital Library

ஓம்

SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்

அநுபந்தம்

௬ - ம் புத்தகம்] சிதம்பரம். நந்தன௵ கார்த்திகை௴ ௬௨ இலக்கம் ௧௧

உ

வேலுமயிலுந்துணை.

அரக்கோணவாசியார் அந்தணர்விளக்க மறுப்பின்மேல்மறுப்பு.

338-ம்பக்கந்தொடர்ச்சி.

இவிபவாதனை யநாதி வழக்குஎன்றுமட்டும்ஒப்புக்கொண்டாரேயன்றி, உண்மையென்று கழுவிக் கொண்டாரில்லை. அதனை உண்மையெனக்கொள்ளின தமதுபக்ஷம் கால்சாய்ந்துவிடுமென்றுன்னினரோ? அநாதிவழக்கென்றதை உலகத்தில் சாதாரணமாய் வழங்கிவரும், ஐதீகத்தோடொப்பக் கண்டுகளித்தனரோவறியோம். யாதாயினுமாகுக. யாங்காட்டியது நூற்பிரமாணமேயாகையால் எமது ஆகமப் பிரமாணத்துக்கு முன்னர், இவரது யுக்திப்பிரமாணங்களெத்தனை கோடிகளாயினும் நிலைகெட்டழியுமென்பதேதிண்ணம். "காசறுமுரையிம்மானத் தடங்கிடாப்பொருளைக்காட்டும்" என்னுஞ்சித்தியாரிற் போந்தசெய்யுளால், ஆகமப் பிரமாணத்தின்மகிமை விளங்கியதுகாண்க.

> ஸ்திரீஷ்வநந்தரஜாதாஸு த்விஜைருத்பாதிதாந்ஸுதாந்
> ஸத்ருசாநேவதாநாஹுர்மாத்ருதோஷவிகர்ஹிதாந்

என்ற மனுஸ்மிருதிவசனத்தை யாதாரமாகக்கொண்டே யாம் பீஜமே ஜாதிமேன்மைக்குக் காரணமென்று துணிந்து கூறினும். இதனைப் பிரமாணபூர்வமாக மறுக்காமல் தமது சொந்தயுக்திகளைக் கொண்டே மறுக்கத் துணிந்தனர் நமதன்பராகையால், அவர் கூறியவற்றை யாம்கவனிக்கவேண்டிய அவசியம் எமக்கின்றாயினும் நூற்றுணிபொடு மாறுகொண்டு உலகத்தைக்கெடுக்கமுயன்றாராகையால் அதனையுஞ்சற்று விசாரிப்பாம். "ஏனெனில் இந்தவியாசர்க்ஷத்திரியப்பெண்களைக்கூடித்திருதராஷ்டிரனையும், பாண்டுவையும் தந்தருளினார். அவர்களுடைய தோழிப்பெண்களைக்கூடி விதுரனைத்தந்தருளினார். க்ஷத்திரியப்பெண்களிடம் பிறந்தவர்கள் க்ஷத்திரியர்களும் சூத்திரமாதினிடம் பிறந்தவர்கள் சூத்திராயிடுதலுநோக்கித்திருதராஷ்டிரன், பாண்டு இவர்களில் பிரித்து விதுரனைச் சூத்திரனென்று உலகம் விதந்தபடி, யாம் வியாசராகியபிராமணப் பீஜத்துக்குத்தோன்றிய மூவரும் பீஜப்பிரதானத்தாற்பிராமணராயிடாமல், க்ஷேத்திரப்பிரதானத்தால், இருவர் க்ஷத்திரியர்களும் ஒருவர் சூத்திருமாயினவாறு என்னை? இதனையுற்றுநோக்குவார்க்குவியாசரைப்பிறப்பினாற் பிராமணரென்று வாதித்த நமது சாஸ்திரியாரது மதம் ஸாமஞ்சஸமாவதெங்ஙனம்" என்று வினவினர். இதனுலிவர் நூலாராய்ச்சியில்லாதவரென்பதே வெளிப்படுகின்றது. என்னெனில், மநுஸ்மிருதியேயன்றி பாராசரஸ்மிருதியும் முதற்குலத்தவராகிய அந்தணர் நாற்குலத்துப் பெண்களையும்பாணிக்கிரகணம்செய்துகொள்ளலாமென்றும் அப்பெண்வயிற்றிற்பிறக்கும் மகவும் அதனது தகப்பன் ஜாதியாகக்கொள்ளப்படுமென்றுங்கூறுகின்றது. இன்னும் பல ஸ்மிருதி வாக்கியங்களுமுள. இவற்றிற்கெல்லாம் விரோதமாக நமது அரக்கோணவாசியார் கூறும் யுக்திப்பிரமாணம் சாலச்சிரிப்புடைத்தென்க. க்ஷத்திரியப்பெண்களுக்கும் வியாசருக்கும் பிறந்த பிள்ளைகளை வியாசபுத்திரர்களென்று கூறப்படுதலை நூலாலாயினும் உலகவழக்கிலாயினுங்காட்டுவாரா? விசித்திரவீரியன் புத்திரர்களென்றன்றோ கூறப்படுகின்றார்கள். வியாசர் புத்திரதானஞ்செய்தனரேயன்றி, தமக்குப் புத்திரப் பேறு கருதியோ அந்தக்ஷத்திரியப்பெண்களைச்சேர்ந்தார்? காங்கேயர் பரிமளகந்தி முதலாயினார் அவரை வேண்டியிரந்து பட்டத்துக்குப் புத்திரதானஞ் செய்தருள்க வெனமன்றாடினமையால் வியாசமாமுனிவர் அவர்கள் மன்றாட்டுக்கிரங்கியேயன்றோ அப்பெண்களைச் சேர்ந்து அவர்கள்வேண்டுகோட்படி உலகையாளுமுத்தம க்ஷத்திரியமக்களையவர்களுக்குத் தந்தருளினார். மறித்தும் தாயாகிய பரிமளகந்தியார் கட்டளைப்படி க்ஷத்திரியப்பெண்களைச் சேரச்சென்று அப்பெண் சூத்திர மாதாயிருப்பதையறிந்தும், அவள்நம்மாலேதாகிலுமோர் நற்புதல்வனைப் பெறக்கருதியே அவருக்கு வந்தனை வழிப்பாடுசெய்து நிற்றல்கண்டே அவள்கருத்துக்கிரங்கி அவளுக்கும் புத்திரப் பேறளித்தருளினார்.

Koviloor Digital Library

புத்திரதானமாகவே யளிக்கப்பட்டமையின் அவருளொருவர் க்ஷத்திரியரும், ஒருவர் சூத்திருமாயினரென்க. ஒருவரது வேண்டுகோளில்லாமல கிளியினிடமாக வியாசர் தந்தருளிய சுகமுனிவரை வியாசபுத்திரரென்றுவழங்கப்படுமுண்மையுங்கண்டுதெளிக. வியாசர் சுகமுனிவரைக் கிளிக்குப் புத்திரதானம் பண்ணியிருப்பாராயின் சுகரைக் கிளிபுத்திரரென்பதேயன்றி வியாசர்குமாரரென்று சொல்லுதற்கிடமிராது. இவரது கருத்துப்போலக்கொள்ளும்பக்ஷத்தில், சுகமுனிவரை யக்கிளிப் பொருளென்றே துணியப்பெறுதல்வேண்டும். அங்ஙனங்கூறிற்புலவர் நகைப்பரென்று அஞ்சினர்போலும். உலகத்தில் புத்திர சுவீகாரஞ்செய்துகொள்ளும் வழக்கமும், அதற்கேற்பட்ட விதிகளுமெமதுபட்சத்தை நிலைநாட்டும் சுவீகாரஞ்செய்யப்பட்ட ஒருவன், தன்னைப் பெற்றவனுக்குப் பிள்ளையாகாமல், தத்துக்கொண்டவனுக்கேபிள்ளையாகி யத்தகப்பனது குலகோத்திரங்களையே தன் குலகோத்திரங்களாக வுண்மையிற் கொண்டுகடப்பதும் இக்காலத்தும் பிரசித்தமாதலால், யாம்கூறிய நியாயமே சிறந்திடுமென்க. வியாசர், திருதராஷ்டிரன், பாண்டுமுதலியவர்களைப் பெற்றதுபோலன்றிப் பராசரர், தமக்கென்றே வியாசரைப்பெற்றாராகையால் வியாசர், க்ஷேத்திரநோக்கித் தாழ்ந்தவராதலும், தவத்தாலேபிராமணராதலுமில்லாமல், பீஜத்தால்மேன்மைகூறியஸ்மிருதிக்குச்சார்பாகயாம் கூறிய நியாயத்தால், அப்பெரியாரைப் பிறப்பினாலே பிராமணராக தவத்தாலேயே மேம்பட்டாரென்று தொடுத்த நமதன்பரது தூர்வாதமும், பீஜத்தால் உயர்வு, தாழ்வில்லை யென்று கூறிய நிர்மூல வாதமும், எமது விசாரணைக்கு முன்னிற்கராணி யொதுங்கின்மையால், எமது பட்சம் வேருன்றிப் பொலிவெய்தியதென்று நமதன்பர் கெம்பீரமாய்ப் பெருமை பாராட்டிக்கொண்டதும் நிஷ்பிரயோசனம் பெற்றொழிந்ததென்க. புராண இதிகாசங்களில் அநேகர் தமது குருவாலும்பிராமணோத்தமராலும், புத்திரதானம் பெற்றார்களென்றுவெளிப்படுகின்றன. அப்படித்தானமளிக்கப்பட்ட புத்திரர்களெல்லாரும், புத்திரதானம் பெற்றவர்களது ஜாதிகளாகவே கொள்ளப்படுதலும் புத்திரதானமளித்த பெரியோர், தமது மனைவிமார் [எந்தஜாதிப் பெண்களாயிருந்தாலும்] இடமாகத்தந்தமக்கள் பெற்ற தகப்பன் ஜாதியையேயன்றித்தாயினது ஜாதியாகக்கொள்ளப்படுதலில்லை யென்பதும் வல்லோர்வாய்க்கேட்டுணர்க. பீஜம்பிரதானமென்றதுபுதுசன்று, அநாதிவழக்கேயாமென்று முன்னோர்கூறியிருக்கின்றாரன்றோ! யாம பீஜபிரதானம்புதுசன்றி அநாதிவழக்காயின் இவர் தொடுத்த பயனற்றவாதம் புதுவழக்கென்று பொருள் தந்துநின்று தமதுபட்சத்தை நிலைகுலையச்செய்வதறியாது, சாஸ்திரியாரவர்கள் வழக்கு “எமது விசாரணையின் முன்னில்லாதடங்கினமையால்” என்று கூறிய விவரது பேதமை, பண்டிதர்பாமரர்கட்கேயன்றி நமதன்பருக்கும் பெருஞ்சிறப்பையேவிளைக்குமென்க. ஆதலாலிவரது அநாதிப்பிரசங்கமும் அநாதரவுபடடொழிந்ததாதலின் இனியநாதிவழக்கென்னும் வாக்கியத்தை முற்றும்மறந்து பற்றறவிட்டொழிப்பாராக. இனி அதற்குக்காரணம பீஜபிரதானத்துக்காதார பூதர்களாயிருந்த முனிவர்கள், தவத்தின் முதிர்ந்தவர்களாயிருந்தமையேயாம்,, என்றாரன்றோ? அதுவும் அசங்கதம் என்க. எவ்வாறென்னில், பீஜபிரதானத்துக்காதார பூதர்களாயிருந்தமுனிவர்கள் தவமுதிர்ந்தவர்களாயிருந்ததேகாரணமாயின், அத்தவமகிமைஎக்காலத்துமொரேதன்மையாக நிலைபெறுதல்வேண்டும். அவ்வாறன்றி க்ஷத்திரியப்பெண்களிடமாக க்ஷத்திரியமக்களையும் சூத்திரமாதினிடமாகச் சூத்திரனையும் தந்தாரன்றோ? அம்முறையே அப்பிணையாகிய கிளியினிடமாகக் கிளியைத்தராது யாவர்க்கு மேம்பட்ட பிராமணரிஷியாகிய சுகரைத்தந்ததேன். இதனாலே, வியாசர் விதுரனைத் தருங்காலத்து அதிக குறைச்சலான தவமுடையாரும, திருதராஷ்டிரன் முதலாயினரைப்பெற்றபோது தவத்தில் கொஞ்சம் குறைந்தவரும, சுகரைத்தந்தபோது தவத்தின் முதிர்ந்துமிருந்தாரென்றேற்படுகின்றது. இதென்னவறியாமை! வியாசரையோர்காலத்திற்றவத்திற் சிறந்திருந்தாரென்றும், ஒருகாலத்திற் குறைவுபட்டிருந்தாரென்றும கூறில் வைதிகர் நகையாரா? நமதன்பரேயன்றி ஏனையர் இவ்வாறு கூறப் பெரிதுநாணுவரென்க! இதனானும் பீஜப்பிரதானமன்றெனனும பூர்வபட்சியாரது தூர்வாதம்திரஸ்கரிக்கப்பட்டமை காண்க.

“இப்பூர்வயுக நியாயத்தைச் சிறிது யோசிப்பாம். பூர்வயுகத்தில் க்ஷேத்திரமுயர்ந்திருக்க வேண்டியதில்லையென்னும் விதி, இந்த யுகத்திலழிந்ததற்குக் காரணமென்ன? காரணங் கருதாது ஒன்றினை ஏற்படுத்துவதனால் வருகிற யுகத்தில் பிராமணனுக்கு நீசஸ்திரீகளையே மணப்பித்தல்வேண்டுமென்றாவது, க்ஷத்திரியஸ்திரீகளைநீசர்களுக்குமணப்பித்தல்வேண்டுமெனறாவதுஒருவிதியேற்படுத்தலுமாவசியகம், அப்போது அதுவுங் குணமாகவே நமதன்பருக்கும், அவரினத்தவர்க்கும, அங்கீகாரமாமன்றோ? இந்தக் கலியில் பார்ப்பானும் பாரப்பனமாதுங் கூடிப்பிறந்தவர்களையே பிராமணரென்று நமதன்பரொப்பினர். பார்ப்பானும் வேறுஜாதிப் பெண்ணும் கூடிப் பிறந்த வொருவனைப் பார்ப்பானென்றொப்பாமல சங்கரஜாதியென்றுரைக்கினர். இப்போது நிஷித்தமாயினது பூர்வயுகத்தில் கௌரவம் பெற்றததிசயமே. பூர்வயுகத்திலே பீஜப்பிரதானமென்ற விவரது வாதம் சரியன்று” என்று கூறினா. பூர்வயுகத்தில விதியாயிருந்தது இந்த யுகத்திலழிந்ததற்கு, ஜாதி சாங்கரியமும், சத்தியக்குறைவும, பாபமிகுதியுமே காரணங்களாமென்று உண்மை நூல்கள்கூறுகின்றன. நான்கு யுகங்களுக்குந் தனித்தனியே விதிகளும, விலக்குகளும் கூறப்பட்டுளன. இதன் விரிவைக்கற்றுவல்ல பெரியோரை யடைந்து அஃதுணர்ந்துகொள்க.

Koviloor Digital Library

இவையநாதி வழக்காதலால் அவற்றையே கடைப்பிடித்தொழுகுமெமக்கு நூதனமாகவோர் விதிவிதிக்கப்படுதல் மிகையேயாம். நூதனவழக்கையே அவாவிநிற்கும் நமதன்பருங்கேயன்றோ வருகிறயுகத்தில் சூத்திர ஸ்திரியைப்பஞ்சமனுக்கே பாணிக்கிரகணஞ்செய்வித்தல் வேண்டுமெனவும், பஞ்சமஸ்திரியைச்சூத்திரனுக்கே மணப்பித்தல்வேண்டுமெனவும் நூதனவிதிகள் ஏற்படுத்தலவசியம் வேண்டப்படும். ஏனெனில், ஆதியிலெல்லாருஞ் சூத்திரர்களாகவேயிருந்து சிலர் பிராமணர்களும், சிலர் க்ஷத்திரியரும், சிலர் வைசியருமாய்ச்சிறந்தார்களென்றும், சிலர் தாழ்ந்தகுலத்தவருமாயினரென்றும் பிரசங்கித்து ஜெயபேரிகை முழக்கினராகையால், சூத்திரருக்கும்,புலையருக்கும் பேதமில்லையென்று ஸ்பஷ்டமாகத்துலங்குகின்றது. நமக்குச்சமானஸ்திதியிலிருக்கும் அப்புலையர்களோடு சம்பந்தஞ்செய்துகொள்ள விதிகளேற்படாதது நமதன்பருக்குக்குறைவாமேயன்றி, யுகங்களுக்குத்தக்க விதிவிலக்குகள் அநாதியிலேயே அமைந்து கிடைக்கப்பெற்றவெமக்கு அநாவசியமாகுமாதலால் அவர்வேண்டியபுதுவிதி நமதன்பருக்கும அவரினத்தவருக்குமேகு தூகலமவிளைக்குமென்க. இன்னுமவர்கேட்ட வினாக்கட்கு முன்னாக்கூறியிருக்கும விடையேபோதுமாதலால் அவற்றைபடிக்கடி பிரஸ்தாபித்தல் அவசியமின்று. "இப்போது நிஷித்தம்பெற்றது பூர்வயுகங்களில் கௌரவம் பெற்றது அதிசயமே" என்றார். இது நூலுணர்ச்சியில்லாருக்கதிசயம விளைப்பதேயன்றிக் கற்றுணர்புலவர்க்கங்ஙனமாகாது. இந்த யுகத்தில் தமையன் தம்பி மனைவியைக்கண்விழித்துப்பார்ப்பினும் அவளது கற்பழியுமென்றிழிவு கூறப்பட்டசெய்கை, பூர்வயுகத்திற்சந்ததிவிருத்திக்காகக்கௌரவம் பெற்றதன்றோ? பூர்வயுகங்களில் தர்மசந்தானம்பெறுதல் மேன்மையெனக்கௌரவம் பெற்றுச்சிறந்திருக்க இக்காலத்திலிழிவாயினதேனோ? நமதன்பரே யிவற்றுக்குவிடைதருவாராக. அவர் கொடுக்கும்விடையே அவரது கேள்விகட்கும விடையாமென்க. நூற்பிரமாணமென்னில் நமதன்பருக்கு எட்டிக்காயையொத்திருத்தலால் அவருக்குக்கடாவிடைதந்தொதாயென்க. இனி "உயர்ந்த பிஐசதிர்றேன்றிய திருதராஷ்டிரனுதியோர், தக்கவாறுதவத்தை முயலாயுல் பிராமணராகாதொழிந்தனர். தாழ்ந்தக்ஷேத்திரத்திற்பிறந்தவியாசர் முதலியோர் தக்கவாறுதவத்தை முயன்று பிராமணராயினர். இந்த வியவஸ்தையால் பிராமணத்வசித்திக்குப்பிறப்புக்காரணமாகாமல் தவங்காரணமாயினதெனவேயமைவுடைத்தென்க" என்று கூறித்திருதராஷ்டிரன், ப்ாண்டு, விதுரன், முதலியோர், தவத்தின் முயலாமைபாலே பிராமணராகாதொழிந்தார். 'திருதராஷ்டிரன் முதலியோரது உற்பத்திக்கு அவர்களது தாய் தந்தையர்கள் ஒத்த புண்ணியமுடையவர்களாயிராமையினுல், அவர்கள் தவங்கைகூடததக்கபிராமணராகாதொழிந்தனர். "இனி வியாசரது உற்பத்திக்கு அவரது தாய்தந்தையர்கள்ஒத்தபுண்ணியமுடையராயிருந்தமையாக அவர் தவச்சிரேஷ்டராகிய பிராமணராயினர்" என்று இவ்வாறு கூறி யிடர்ப்பட்டார். திருதராஷ்டிரனுதியர் தாழ்மைக்கு, அவர்கள் தவமுயலாமையும், வியாசரது பிராமணத்வமேன்மைக்கு அவர் தவமுயன்றமையுங்காரணங்களாயின என்றாரே. இது ஒருவாறு பொருந்தும். அதுவுமிவர்கருத்துப்போலன்று. அவரவர்கள் செய்த பூர்வ கர்மங்களேயாமென்க. பின்னர், திருதராஷ்டிரனுதியருற்பத்திக்கு அவர்களது தாய்தந்தையர் ஒத்தபுண்ணியமில்லாமையையும்வியாசரதுஉற்பத்திக்கு, அவரது பெற்றோர் புண்ணியசமத்துவத்தையுந்தேடியதேன்? தாய்தந்தையரது ஒத்த புண்ணியமே, ஒருவன் பிராமணத்துவசித்தியெய்துதற்குககாரணமாயின், அதுவேபோதுமாகையால், மீண்டுமவன் தவம்புரிந்து பிராமணத்வத்தை யேனடையவேண்டும்? ஒருவன் தான் இயற்றும் தபோபலத்தால் பிராமணனுயிடுதல் திண்ணமாயின் அவன் தன் தாய் தந்தையரது புண்ணியப்பலனை ஏனபேட்சிக்கவேண்டும்? சமஸ்தஜீவராசிகளும் பூர்வஜன்மார்ஜித புண்ணியபாபங்களாலேயே, உயர்வுந்தாழ்வுமான பிறப்பையடைகின்றனவன்றித் தாய்தந்தையரதுபுண்ணியபாபார்ஜிதத்தைநோக்கியன்றென்க. "தாந்தாமுன்செய்தவினை தாமேயனுபவிப்பார், பூந்தாமரையோன் பொறிவழியே" என்னும் நீதிவாக்கியத்தையேனும் கூர்ந்து யோசிப்பாராக. ஒருவன் தவம்புரிந்து மேன்மையடைந்தானேனும் தானெடுத்த சடலத்தாலனுபவிக்கவேண்டிய பிராரப்த வினையைப்புசித்துத்தீருமளவும் அவ்வினையொழியாது என்னும் சாஸ்திரப்பிரமாணத்தால் வினைக்கீடாக ஒருவனெந்தக்குலத்திற்சனித்தானே அந்தக்குலமேன்மையும் தாழ்மையும் அவனை விட்டொழியாதென்பதே சத்தியமென்க. பராசரரும் சத்தியவதியும் ஒத்தபுண்ணியபலமுடையவர்களாயின், அவ்விருவருமே பிராமணராதல்வேண்டும். அப்பொழுது பரிமளகந்தியை வலைச்சியென்றெப்பாதுபிராமணமாதெனவேகொள்ளல் வேண்டும். அங்ஙனங்கூறின்,நமதன்பரதுபிரசங்கம்பயனற்றுப்போம்.மச்சகந்தியையும் பராசரரையும், ஒத்தபுண்யத்தால்பிராமணரென்னுங்கால்,யாங்கூறியவண்ணமேவியாசர் பிறப்பிலேயேபிராமணரெனக்கொள்ள நேரிடுதலாமென்க.பராசரர்தவஞ்செய்துமேன்மையடைந்ததுபுராணப்பிரசித்தம். மச்சகந்தி யமுனாநதியிலோடஞ்செலுத்திக்காலங்கழித்தனளேயன்றிதவம்புரிந்ததாகயாண்டும் பெறப்பட்டதில்லை. பூர்வஜன்மகிருதபுண்ணியமே யென்னில், அது வியாசருக்குங்கொள்ளப்பட்டு, அவர் பிராமணராகவே ஜனித்தாரென்னு மெமதுமதத்தையேநிலைநிறுத்தும். பூர்வஜன்ம புண்ணியம்பூர்வஜன்மபாபமென்றுகொள்ளுதலுமிவரது மதத்தை நாசப்படுத்தும். எல்லாருஞ் சூத்திரராகவேபிறந்து, கர்மத்தாலே மேம்பட்டார்களென்று நமதன்பர் பிரசங்கித்து வருகின்றமையால் கர்மம் அநாதியெனபதொழிந்து,ஆதியென்றுகொள்ளப்பட்டு, பிரபஞ்சசிருஷ்டி புரியும் சிவபெருமானுக்கே குற்றம் கூறுதலாகமுடியும். அநாதியென்றேற்பினுல், நமதன்பரது வாதமடியோடுமெடுபட்டு, அக்கர்மங்காரணமாகவே, நான்குவருணங்களும் அநாதியிலேயேயுண்டென்று சாதிக்கப்பட்டு நமதன்பரது கர்மப்பிராமணத்வம் அதோகதிசேர்ந்துவிடும். ஒருவனது உயர்வு தாழ்வுக்கவனுடைய பூர்வகர்மங்களையே காரணமாகக்கொள்ளின், அவன் தனது நல்வினைக்கீடாகவுயர்ந்தகுலத்திலும்,தீவினைக்கீடாகத்தாழ்ந்தகுலத்திலும்

Koviloor Digital Library

பிறப்பானென்னும் நூல்வழக்கொடு மூராறுதுயிர்பெற்று, வீண்வழக்குகளுக்குஇடமில்லாமற்போம். நூற்பிரமாணங்காட்டித்தர்க்கவரம்புகடவாதுவாதிக்குமேதையர்கேள்விக்கன்றிக்கைஸ்திகளைபொத்த மேதன்பர்போன்றவர்களின்கேட்கும் அசட்டுக்கேள்விகட்கெல்லாம்விடையளிக்கவேண்டுமென்பதோரவசியமில்லையாயினும் மந்தமதிகள்மயங்காதபடி யொருவாறுகூறினும் யாமெடுத்துக்காட்டிய மனுஸ்மிருதிவசனத்தாற்பெறப்பட்ட பீஜப்பிரதானப்பிரசங்கம், அரக்கோணவாசியாரதுவாலுவற்றயுக்திப்பிரமாணத்தாற்சிறிதும் பாதிக்கப்பட்டதில்லையென்க. இதுவிஷயமாக அவரெழுதிவிடுத்த உபயோகமற்றபலபலவரிகளெல்லாங்கற்றோர்சபையிற்களம்பெறுதாகையானும், அவற்றுளொக்கொருபாதகமுமில்லையாதலானும், அவர்கூறியவற்றுள்ஒருசொல்லுக்கேனும்பிரமாணமின்மையானும் அவற்றையொழித்தாமென்க. "நமது அன்பரதுவாதத்தையொப்பினால், பூர்வயுகத்திலிருந்த ஈனஜாதிப்பெண்கள்வம்சமே இப்போதுள்ளபிராமணஜாதியென்றுகொள்ளவேண்டியிருக்கின்றது. பூர்வயுகத்தில் க்ஷேத்திரம் பிரதானமன்று என ஒப்பியவர், மீண்டும் வியாசரது தாயைவலைச்சியென்றதற்காகக் கண்களினீர்விட்டுத்தேம்பியது மிகவும்பரிதாபமென்க." என்றுகூறினார். இதென்னபேதைமை! பூர்வயுகங்களில் க்ஷேத்திரம்பிரதானமன்று; பீஜமேபிரதானமெனவும், இந்தயுகத்தில் அப்படிக்கொள்ளுதல் சாலாதெனவும், இது எமது கருத்தன்று நூற்றுணிபேயாமெனவும் கரதலாமலகம்போல் விளங்கக்கூறியிருக்கவும், அதனைக்கூர்ந்துணர்ந்து அடங்கி நில்லாமல், தமது இஷ்டம்போலப்பூர்வயுகத்து ஈனஜாதிப்பெண்கள் வம்சமே, யிக்காலத்துப்பிராமணரெனக்கொள்ளவேண்டியிருக்கிறதென்று கூறியதுபாமரர்செய்கையேயன்றிப்பண்டிதர் செயலன்றென்க. இவர்க்கு நூற்பிரமாணமென்றால் ஆலாலமொத்திருத்தலால் அதனை முற்று மறந்தொழித்துவிட்டு எப்பொழுதும் தமது சொந்த யுத்தியைப்பரப்பி மகிழ்கின்றார்- முதல் வருணத்தார் நாலுவருணத்திலும் விவாகஞ்செய்யலாமென்றும், அப்பெண்கள் பயந்தமகவும் தகப்பனது குலமாகவே கொள்ளப்படுதல் நூற்பிரமாணமென்பதை மீண்டும் நமதன்பருக்கு நினைப்பூட்டுகின்றோம். இனியவர் நூல்களெல்லாந்தவறென்று கூறமுந்துவாராயினும், அவ்வாறு கூறின், நமதன்பரது யுத்திப்பிரமாணத்தைக்கூட்டிப் பெருக்கிக் குப்பையிலொதுக்கச்செய்வதேயன்றி ஒருபோதுமதியாமென்க. சூத்திரர்களைப்பிராமணராக்கமுயன்று, அவர்களையெல்லாம் புலையரெனச்சித்தரிக்கப்படுத்திவிட்டதமதுபேதைமைக்கேபலகாலுமபரிதாபப்படவேண்டியிருக்க, அதனைக்கவனியாது, பீஜபிரதானப்பிரசங்கத்தையும், முன்னோடு பின்முரணாது ஒரேதன்மையாகப்பிரசங்கித்து வருமெமக்குங்குற்றங்கற்பிக்கப்புகுந்தாராகையால், அவரைத்துர்ப்புத்தியுடையாரெனவே கொள்ளநேரிடுகின்றது. இத்தகைய நமதன்பர் தமதுபுத்திமோசத்திற்கே பரிதாபப்படுவதைவிடுத்து, எம்பால் மிகுதியும் இரக்கங்கொண்டார்போலத்துக்கித்தார். யாம்பீஜப்பிரதானத்தால் பரிமளகந்தியை க்ஷத்திரியவம்ச சிரோமணியென்றும், வலைபரால்வளர்க்கப்பெற்றதேயன்றி அப்புண்ணியவதியியல்பில் வலைச்சியாகாளென்றும் கூறி, நமதன்பரது விபரீதவுணர்ச்சியை விலக்கமுயன்றும், வேம்புக்கு அமுதமூற்றி வளர்ப்பினும் அதன்கசப்பு மாறுந்தன்மைபோல், இவர்தமது மயக்கவுணர்ச்சியை மேன்மேலும் விருத்தியாக்கிக்கொண்டு கலங்கித்துக்கித்தார். வினைமேலிட்டபடியே யிவரதியற்கையானால் அதற்குயார்தான் என்னசெய்யலாம்! யாம்கூறியதும் பாரதத்தில்வியாசர் கூறியிருப்பதனையேயன்றி யெமது சிற்றறிவுக்கெட்டியது கொண்டன்று. இனி நமதன்பர் ஜகத்குருவென்றுபுகழ்ந்து கொண்டாடிய வியாசமுனிவரையும் அறியாது கூறினாரென்பர்போலும்.

வாசவனளித்தவிமான மீதொருவன் வசுவெனுஞ்சேதிமாமரபோன், கேசரனெனப்போம்விசும்பிடைமனையாள்கிரிகையைநினைந்துடல்கெழுமி, கேசமோடிதயமுருகுமக்கணத்தில்நினைவறவிழுந்தவீரியமெய்த், தேசவனளித்தநதியிடைத்தாளத்திரளெனச்சிந்தியதொருபால்.

ஒருமுனிமுனிவாலரமகளொருத்திமீனமாயுற்பவித்துழல்வாள், இரையெனவதனை விழுங்குமுன் கருக்கொண்டுடன் முதிர்சாலையிலதனைப், பரதவர்வலையிலகப்படுத்தரியபாலகனொருவனுமிவளும், இருவருமிந்தமீன்வயிற்றிருந்தாரமுனையுமெமனுகேரெனவே.

மானவர்பதியாம்வசுவினுக்கிவரை மகிழ்வுறக்காட்டலுமகனை, மீனவனெனப்பேர்கொடுத்தனன்கொண்டுபெல்லியளிவனை மீண்டளித்தான், யானுமின்றளவுமென்மகளென்னுமியற்கையாலினிமையின்வளர்த்தேன், கானமென்குயில்போல்வந்து மீளவுந்தன்காவலர் குலத்திடைக்கலந்தாள்.

எனப்பேர்ந்தவில்லிபாரதச்செய்யுட்களாலானுங்கண்டுதெளிந்து மதிமயக்கொழிந்துய்வாராக. வலையரால்வளர்க்கப்பெற்றமைகருதியே உபநிஷத்தும் "வியாச:கைவர்த்தசங்யாயாம்" என்றுகூறியதுமென்றுதெளிக. வியாசபகாமுனிவர்கூறியபாரதவசனமுமெமக்குச்சார்பாக நின்று எமதுபட்சத்தைச்சாதித்தலால் எமக்குத்தூக்கமென்பது காலத்திரயத்து மில்லையென்க.

இன்னும்வரும்.

இங்ஙனம்,

ஓர்மகாசைவர்.

Chidambaram:=printed and published for the proprietor at the "Brahmavidya Press" No, - 38 Senkallooneer Pilliar koil street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமதுப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

20

ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமந்ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை ஆதரித்துவருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ ஹூம் முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் திர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காலம்வத்ஸரம், ஆவணி உ [illegible] (2?)
முகவைப்பதி.

(ஒப்பம்) தங்கள்,

[illegible] ஸேதுபதி:

Koviloor Digital Library

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

𑌨𑌿𑌗𑌮𑌾𑌗𑌮𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌮𑍍.

𑌅𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍍.

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம் ௧௮௯௯௵ கார்த்திகைமீ ௨௰௳

வேதாகமப்பிராமாண்யம்.

தொடர்பு.

ஐய, இனி ஐந்தாம் ஏதுவைப்பற்றி விசாரிப்பாம்:— வேதங்களைச் சித்தாந்தமென வழங்குவதில்லை. ஆகமங்களோ சித்தாந்தங்கள் எனப்படுகின்றன. ஆயின் ஆகமங்கள் சித்தாந்தங்களாதல்பற்றி வேதங்களிலும் சிறந்தபிரமாணங்களே' என்பது ஐந்தாவது ஏது. இக்காரணம் விசாரம் செய்யும் வரையில் மிகநன்காமேயன்றி விசாரித்திடின் நில்லாது. 'சித்தாந்தம்' எனுஞ்சொல்லைஒவ்வொரு தந்திரப்பிராமாண்ய வாதிகளும் தத்தங்கோஷ்டிகளில்ரத்தமாகமங்களுக்குப்பெயராக வழங்குவது அவரவர் மதவியல். சக்தியாகம வாதிகள் 'வைணவாகமத்தினும் சைவம் உயர்ந்தது' 'சைவாகமத்தும் சித்தாந்தாகமம் உயர்ந்தது' என்கிறார்கள். சைவரோ சிவாகமங்களையே சித்தாந்தமென வழங்குகிறார்கள். இனிச் சைவர் கூறுஞ்சித்தாந்தமெனுஞ் சொல்லும் உற்றுநோக்கிடில் ஆகமங்களுக்கிடுகுறியாகின்றதேயன்றிப்பூர்வபக்ஷம்எனும்சொல்லுக்குஎதிர்மறைப் பொருளுணர்த்துஞ்சொல்லாவதில்லை. அங்ஙனமானலன்றிஆகமங்கள் மோகமற்றவை, பூர்வபக்ஷங்களும் அப்பிரமாணங்களுமாகா. ஆதலாற்றான் வாயுசங்கிதையில் „𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌭𑍇𑌦𑍇𑌨 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃' 'காமிகமாதி வேற்றுமைகளடைந்து சித்தாந்தமெனும் பேயர் பெற்றது' எனச்சித்தாந்தச் சொல் அவ்வாகமங்களுக்கு இடுகுறியேயெனத் தெற்றெனப் புலப்படுத்திய வசனமுண்டு. அவ்வசன வுண்மையாராய்ந்திடச் சித்தாந்தமெனுஞ்சொன்மாத்திரையால் மற்றவை எல்லாம் பூர்வபக்ஷங்களாகாமையும் அது அவ்வாகமங்களுக்குப் பெயரே என்று நன்கு புலப்படும். இதற்குதாரணங்கூறுவோம்:—பிரமாண்டமிருகவுள்ள பதினெண் புஸ்தகங்கள் புராணங்கள் எனப்படும. 'இதிகாசபுராணங்கள் ஐந்தாம்வேதம்' என்

[illegible]

பதாதி விவகாரங்களில் புராணம் எனும் பெயர் சிலநூல் களுக்கமைக்கப்பட்டது. அது ஓரோகாரணம் பற்றி அவை களே புராணங்கள் (முதுநூல்கள்)மற்றவை எல்லாம்(வே தாகமாதிகளும்)பழைய நூல்கள் எனவாதித்தல்அழகோ? நியாயத்துக்கடுத்ததோ, அதை ஆகமப்பிராமாண்ய வாதி யேனும் வேதப்பிராமாண்ய வாதியேனும்ஒப்புவரோ?இங் ஙனமே ருக்குமுதலியநான்குஉள் வேற்றுமைபெற்றதோர் பெருநூல் வேதம் என வழைக்கப்படுதலாலும், அதேபெ யரை ஆகமங்களும் எடுத்து அவைகட்கே பெயரெனவழ ங்குதலாலும் அவையொழிய மற்றவை அவேதங்களாகி ஞானக்கருவியாகாதொழிய இவ்வாகமசித்தாந்தி விடுவா ரா? வேதம்எனும் சொல்லுக்கு ஞானக்கருவி எனும்பொ ருள் இல்லை எனமறுத்திடுவாரா? யாதுசெய்வார்? வேதம் எனும் பெயர் எங்கும் மேற்கண்ட நூற்பெயராய் வழங்க ப்படுகின்றது. சித்தாந்தமென இவர்கூறிடுமாகமங்களும் அந்நூல்களுக்கதே பெயரிட்டன. சித்தாந்தம் எனும் பெயர் வேதங்களிலேனும் தருமசாஸ்திரங்களிலேனும்இதி காசங்களிலேனும் காணப்பட்டிலது. மற்றப்புராணங்க ளில் மட்டும்ஓரோவிடம்காணப்பட்டது.ஆயின் இச்சித்தா ந்தச்சொல்வழக்கம்தத்தங்கோஷ்டியிற்றானேமணக்குமா தலின் அதுகொண்டுமற்றவைபூர்வபக்ஷமெனல்எவ்வழியும் துணிபுரையாகாதென்றொதுக்கிடுக. மேலும் உலகத்தில் 'சித்தாந்தம், ராத்தாந்தம், நிகமனம், நிகமம், எனுஞ்சொ ற்கள் ஒருபொருள் (துணிபுரை) என்பதை யுணர்ந்தனுஞ் சொற்களென வான்றோர் வடமொழியில் அவற்றை அப் படியே வழங்குவாராயினர். இவற்றுள் நிகமம் எனுஞ்சொ ல்லை வேதங்கட்கும், சித்தாந்தம் எனுஞ்சொல்லை ஆக மங்களுக்கும் குறிட்டாக்கினராக. அதன்மாத்திரையில் ஒன்று பூர்வபக்ஷமாதல் எவ்வாற்றானும் இயையாதறிக. இனிஇதுகொண்டுவேதங்களைப் பூர்வபக்ஷமென்றும் ஆகம ங்கள் சித்தாந்தங்கள் என்றும்வாதிப்பவர், அகாரணவேத த்துவேஷமும் பூர்ணுகமாபிமானமுமே காரணப்பொரு ளாம் எனல் சொல்லாதமையும். ஆயின் இங்கெடுத்தோ திய இந்தவேத விசாரம் செய்திடும் வித்துவான்கள்முன் நிலைபெறாதாகவே அதை விட்டொழிக. இனிமேல்விஷயத் தைக்கவனிப்பாம்:—'வேதங்களில் ஆகமங்களிற்சொல்ல ப்படாதவிஷயங்கள்எவையுமில்லை. ஆகமங்களில்வேதங்க ளிற்சொல்லப்படாதபலவிஷயங்களுளவாகவேமனிதர்இம் மைமறுமைஇருமைப்பயனைக்கருதிடில் ஆகமங்களைப்பிர மாணம்என அவர்கொள்ளவேண்டுமென்பது அடுத்தவிஷ யம.இங்கு இவர் கருதிய கருத்திது.வேதங்களில்ஆகமங்க ளில்கூறப்பட்டுள்ள தீக்ஷைமுதலிய சற்கருமங்கள் எவை

[illegible]

...யும் சொல்லப்படவில்லை. ஆகமங்களிலோ் வைதிகமெல்லாம் நிறைந்து மேலும் அதிகம் தீக்ஷைமுதலிய பிற்கருமங்களும் ஓதப்பட்டனவாயின் ஆகமங்கள் ஓதிட எவ்விஷயமும் அறியலாம். ஆகவே வேதங்கள் ஓதல் அவ்வளவு பயனுள்ளதெனப்புலப்படாது. இதற்குச்சமாதானம்இது. எந்த தீக்ஷைவேதங்களில் விதிக்கப்படுகின்றனவோ அதே தீக்ஷை ஆகமங்களிலும் விதிக்கப்படுகின்றன. வேதங்களில் தீக்ஷையாகமங்களிலேஉள்ளன. ஆகமங்களில் வேதமந்திரங்களுடனோ தீக்ஷை சொல்லப்படுகிறது. ஆயின் வேதங்களில் உள்ள விஷயமே ஆகமங்களில் சொல்லப்படுகின்றனவாகவேவேற்றுமைஎதுபற்றியெனில், அதிகாரிகளின்வேற்றுமைபற்றி சில மந்திரங்கள் பிரயோகங்கள் விவகாரங்கள் வேறுபடுகின்றனவெனவுணர்க. ஆகமங்களில் விதிக்கப்பட்ட தீக்ஷை எல்லாவருணத்தவர்க்கும் பொதுவாகலின் அச்சாமானிய சாஸ்திரத்தை வேதங்களில்கூறப்பட்டுள்ள தீக்ஷை முதல் மூவ்வருணத்தவர்க்கே உரியதாகவே அது விசேடசாஸ்திரமாதலால் தடுத்திடும். ஆதலாற்றான் ஸ்ரீகண்டசிவாசாரியர் அவர்கள் தமது பிரமசூத்திர பாஷ்யத்தில் பாசுபத்தியாதிகரணத்தில், 'சிவாகமங்கள் இருவகைப்பட்டனவென்றும் அவைகளுள் வேதங்கள் மூவ்வருணத்தவர்க்கே உரியனவெனவும் வேதங்களுக்கு விசேடங்கூறினர். இனி அவ்வாசிரியரே சிவாகமம் எனும் சொல் வேதாகமங்களுக்குப்பொதுப்பெயர் எனவே கூறியிருப்பாராயினர். மேற்கூறியவாறெருப்பினும் வேதங்களில் காணப்படாத தீக்ஷைகள் ஆகமங்களில் காண்டலால் அவைவேதங்களினும் அதிகப்பிரமாணங்களாயின் வேதங்களில் சொல்லப்பட்டவக்கினிஷ்டோமம் முதல்ஸஹஸ்ரஸம்வத்ஸரமீறுகவுள்ளயாகவிசேஷங்களும் அனேக பாக எக்ஞங்களும் ஆகமங்களில் காணப்படாமைபற்றி அக்குறை குடிகொண்ட வாகமங்களினும் வேதங்களே சிறந்தனவெனவும் சொல்லலாம். இனி இவை சித்தாந்திகளான எங்களுக் கவசியமில்லை என்பிரேல, அவரும் வைதிகரான வெமக்கும் நீவிர் கூறிடும தீக்ஷைமுதலியன வேண்டுவதில்லை எனச்சொல்லத்துணிந்திடார்போலும். உண்மையை யாராய்ந்திடில்இவ்விருநூல்களிலும் இருவகைதீக்ஷைகள் சொல்லப்பட்டன. அவை ஒருவிதத்தில் ஒத்திருப்பதை யுற்றுநோக்கிடில்அறியலாம். உதாரணமாக:—வைதிகத்தில் அக்கினிஷ்டோமம் சுவதந்திரமாய் ஓரிடமும் அத்யக்னிஷ்டோமத்தில் அங்கமாக ஓரிடத்தும் விதிக்கப்படும். அங்ஙனமே ஆகமங்களில்சமய தீக்ஷை ஓரிடம் சுதந்திரம் மற்றோரிடம் விசேஷதீக்ஷை

Koviloor Digital Library

[illegible]

யினங்கம். வேதங்களில் யாகதீக்ஷைகள் நித்தியமும் காமியமும். ஆகமங்களிலும் பௌதிகியும் நைஷ்டிகியுமாக தீக்ஷை இருவகை. வேதங்களில் யாசம் உள்ளும் வெளியுமாக இருவகை. ஆகமங்களிலும் கிரியாதீக்ஷை ஞானதீக்ஷை என இருவகையுண்டு. வேதங்களில் தீக்ஷைவம்சத்தில் மூவரிடம் சேரும். ஆகமங்களிலும் சைவர் பரம்பரையில் தீக்ஷைபயன்படும். வேதங்களில் தீக்ஷை இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் தனித்தனியே தருவது. ஆகமங்களிலும் லோகதர்மிணியும் சிவதர்மிணியுமாகின்றது. வேதங்களில் தீக்ஷை உடனே தைவசரீரம் அல்லது சத்தியசரீரத்தைக் கொடுப்பது. ஆகமங்களில் தீக்ஷை உடனே சுத்த சரீரத்தை யாதல் சிவசரீரத்தையாதல் கொடுப்பது. வேதங்களில் வைதிகமந்திரங்களாலேயே தீக்ஷை. ஆகமங்களிலும் கலைகளாகச் செய்யப்பட்ட சங்கிதாமந்திரங்களாலேயே தீக்ஷை. வேதங்களில் பாஹ்ய தீட்சையிற்றான் குண்டமுதலியன அவாவப்படுகின்றன. ஆகமங்களிலும் அங்ஙனமே. வேதங்களில் பிராணாக்கினிஹோத்திரமுதலிய விஷயங்களில் குண்டமுதலியன வேண்டுவதில்லை. ஆகமங்களிலும் ஞானதீக்ஷையில் அவை வேண்டப்படமாட்டா? வேதங்களை முதலில் படித்தறியவதிகாரம் உபநயனத்தாலுண்டாம். ஆகமங்களைப் படித்தற்கு அதிகாரம் சமயதீக்ஷையாலுண்டாம். ஆயின் இவ்விருதிருநூல்களில் கண்டதீக்ஷைகளும் வேறாயினும் ஒருவகையமைப்புள்ளனவாயின் இவைகள் இவ்வதிகாரிக்கிவையெனநியமிக்கப்பட்டன. எவ்வகைத்தீக்ஷையுங்கண்ணுதலாருணிறைவு கோரியேசெய்துகொள்ளப்படுமாகவே அது ஒருமுறைசெய்து அதுமட்டில் ஒழித்திடாது, கேட்டல் சிந்தித்தல் தெளிதல்போல் அவ்வப்பொழுதும் செய்துகொண்டேவரவேண்டும் என்பது பெரியோர்கொள்கை. இங்ஙனமிருக்க வாகமங்கள் வேதங்களைக்காட்டிலும் பலவிஷயங்களில் ஆதிக்கம்பெற்றனவென வாதித்தல் வீண் அபிமானத்தாலன்றிவேறில்லை. இனி ஞானத்திற்குச்சிறிதும் சம்பந்தமற்றசிற்பம்முதலியவை ஆகமங்களில் உள்ளன. வேதங்களில் இல்லாமையால் வேதங்களுக்குக்குறைவுவாதோவெனில், அகோவைத்தியம்முதலியமற்றநூல்களின் அம்சம் ஆகமங்களில் இன்மையால் அதுவும்குறைவாமே? மேல் சிற்பம் சிவபூஜையின் அங்கமாகவே, அதஞானத்தின் அங்கமேயெனச்சாதிப்பாயாகில் அந்தோ! சித்தர் கைவிடாது கொண்டாடும்வைத்திய நூல் யோகத்துக்கங்கமாகாதொழிவதெப்படி? இனி அவ்விதவைத்தியவின்மை எனுங்குற்றம் வேதங்களிலும் உள்ளனவேஎன விதண்டையாடில், வேதங்கள் யோகத்துக்குவேண்டியவரை வைத்தியங்களைச் சொல்லியே ஒழிந்தனவென்போம். காட்டவுங்காட்டுவோம. இனி அவ்விதம் ஏன் ஞானங்கமான சிற்பம் சொல்லப்படவில்லையெனில், வேதத்தில் கூறப்பட்டசுவார்ச்சனத்தில் உபயோகிக்கப்படும் லிங்காதிகள் சுயம்புவேயன்றிக் கற்பிதமன்றாதலின் அவைகட்குச்சிற்பம் உபயோகப்படாதறிக. ஆயின் வேதங்களிலில்லாவிஷயங்களைச்சொன்னமையால் ஆகமங்கள் அதிகப்பிரமாணமெனக்குறித்தது முற்றிலும் தப்பென மறுத்தது பொருத்தமுடையதேயென்க. இனி அக்கிரவருணத்தவர் மூவரு

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

க்கு வேதாகமக்கிரியைகள்இரண்டுமேஉண்டேனின்எப்படிவைதிகத்தையும் ஆகமிகத்யையும் சேர்த்திடுவதெனில் இவ்விஷயத்திலசித்தாந்தம் இருவகைப்பட்டிருக்கின்றது. சிலர்விசேஷவிதியாய வைதிகவிதியால் பாதிக்கப்பட்டுச் சாமான்யவிதியொழியும்என்பர். மற்றுஞ்சிலர் விசேஷவிதியால்கிடைத்ததை முன்செய்துமற்றதைப்பின் செய்யலாம் என்பர். இவர்களுள் வேதங்களின்பெருமையை முற்றுமறிந்தமுதலினுர் இரண்டுநிலைகளையுமொரிடம் சேர்க்கவியையார். ஆதலாற்றான் ஸ்ரீசைவபாடியகாரரும் வேதாந்தவிசாரத்துக்குஅதிகாரம் சந்நியாஸத்தாற்றான் என்றுதுணிந்தோதிட்டார். ஆயின்வேதானுசாரியானவரை ஆகமங்கள் பிரமாணங்களேஎன்றே ஏற்படுகின்றது. இனி வேதவிரோதாகமமும்முற்றும் அப்பிரமாணமல்ல. வேதத்தில் அதிகாரமற்றவரைநோக்கிஅது பயன்படுமாதலால் என்க. கருணைக்கடலாயகண்ணுதற்கடவுள் வேதங்களை அருளிஅத்துடன் ஒழியாதுசர்வாநுக்கிரகார்த்தமாய்ஆகமங்களையுமஉலகத்தார்க்கருளியவற்றில்பலவைதிகதருமங்களைஞ்சுருக்கிஉபதேசித்தும் அவ்வைதிககருமங்களிலதிகாரமற்றவரைநோக்கிக்கருணைமிகுதியால்அவருமமேம்பாடடையவேண்டிச் சுதந்திரமாய் வேதங்களைத்தழுவாத்திருமுறைகள்சிலவுபதேசித்தருளினர். இவற்றுள்சுதந்திரதருமங்கள் காமிகாதிகளிலும் வேதானுசாரிகள்வைதிகாகமங்களிலும் அதிகம். ஆதலாற்றான் வாயுசங்கிதையில் "சுந்திரம் பத்தும்பதினெட்டுமாகும்" எனக்கூறப்பட்டதுகாண்க. இனிஅதனுல் அப்பிரமாண மவையெனப் பொருள் கோடற்பாற்றன்று. வேதங்களைத்தழுவிய வாகமங்களுக்கடுத்தப்பிரமாணமும்,வேதங்களைத்தழுவிநிற்கும் சிவவாக்கியங்களல்லாச் சிலவாகமங்களிலும் பேலானப்பிரமாணமும் ஆம் என்றும் குற்றமற்றதுணிபுரையாம்.

மற்றதுபின்.

ஆரியாசாரரகசியம்.

விடியற்காலப்பிரகரணம்.

பிராணாயாமம்

தொடர்பு.

ஐய! ஈண்டு ரேசகம்முதலியவைகளைப்பற்றிநன்கு நிரூபித்துஅவற்றின்பயனையும் நிரூபிப்பாம். முன் பிராணாயாமத்தின் பொதுவியல் கூறுமிடத்தே, வெளியினின்று நல்லகாற்றுஉட்புறஞ்சென்றுசரீரத்துக்குபகாரம்செய்யும் என்றுகூறினேம் அல்லவா? அங்ஙனமே உட்புறமிருந்து வெளிவரும்காற்று உட்புறம்நிறைந்தமலங்களைவெளியாக்கிச்சரீரத்துக்குபகாரஞ்செய்யும் என்பது யாரும்அறிந்த விஷயமென்றேம். இங்ஙனமியற்கையில் அமைந்திருப்பினும, சிலசமயம் மனிதன்எவனும் பலதொழில் செய்வானுகையால், கெட்டகாற்றை உட்கொள்ளவும் உட்புறமிருந்து நல்லகாற்றைவெள்ளியிடவும் நேர்ந்துவிடுகிறது. இங்ஙனம் வேறுநல்வழியின்றி உலகம் ஆயுளிழப்பதைக்கண்டு கருணாமூர்த்தி உலகத்தாருக்கு இவ்விரேசகம் முதலி

Koviloor Digital Library

[illegible]

யமுப்பகுதிகூடிய பிராணுபாமமருந்தைத்தந்தருளினர். இவற்றுள் ரேசகத்தின்பயன்வருமாற:-உட்காற்றை வெளியிற்செலுத்திடல் ரேசகம்எனப்படும். இதனுல் உள்மலம் வெளியாகும்எனபது எல்லோரும்அறிந்தபயன். மற்றுக்கவிழ்ந்துகுவிந்துதூங்கும் இதயமலரைநிமிர்த்தி மலர்திடல்முதலிய பிலநற்பயன்கள் யோகநன்னூலாலறியலாம. இதுசமபவிக்க்கூடும்என்பதைப் பிரமாணங்கொண்டு விசாரித்திடுவாம. இதயம இருக்குமமைப்பு“ தாமரைமுகுளம்போன்று கீழ்முகமாய்” என்ற வேதவாக்கியத்தால் புலப்படும். அதினுட்புறம்புகுந்த உதிரம் சுத்திபெறும் அன்றி அதனுட்புறம்உதிரம்புகுந்திடஇரு க்கங்களிலும் வழியுண்டு. அவ்விதயத்தில் உயிரனைத்தும் பிழைத்திடவேண்டி கடவுளால் அமைக்கப்பட்டசக்தி ஒன்றுவிரிதல் குவிதல்என ஏற்பட்டிருக்கிறது. அவ்விதயத்தின்இருபக்கங்களிலும்உயிர்க்குழல்கள்இருக்கின்றன. அவைவெளிக்காற்றுநிறைந்திருக்கும்சமயம் பருப்பதால் பருத்த அந்நாடிகளால் இருபுறம் கவரப்பட்ட இதயம் சுருங்குகின்றது. அச்சமயம் அவ்விதயத்தினுள்ளிருந்த ரக்தம் நாடிகள் வழியாய் வெளிப்படுகின்றது. இனிஉட்புறத்திருந்தகாற்று வெளிச்சென்றால்அச்சமயம்சுவாசக்குழல் சுருங்கஇதயம் விரியும். விரியவே அதனுட்புறம்நாடிகள்வழி உதிரம் நிறையும். இங்ஙனம் உயிர்க்காற்று உட்புகுந்தும்வெளியிற்போய்க்கொண்டும் இருத்தலால்சுவாஸக்குழல்கள்பருக்கவும்சுருங்கவும் இதயமமுறையேசுருங்கவும் விரியவும், உதிரம்வெளிவரவும் உட்செலலவும்நேரிடுகின்றது. அதனுல் சரீரம்விருத்திசகின்றது. உதிரத்துடன் மலங்களும்இதயத்தின் உட்புறஞ்செல்ல அங்குரக்தம் சுத்திபெறுவதால் அம்மலங்கள்அங்கேநிற்கஅவறறை உயிர்க்காற்றுவெளியிட்டுவிடுகிறது. அதுகொண்டு பிராணிகள் பிழைக்கின்றன. எங்கும்இயற்கையில்அமைந்தசொழில் நடந்துவருமாயினும் தம்முயற்சியால் நல்லகாற்றுள்ளதேவாலயம் நதிக்கரை வில்வமரத்தடி மலையுச்சி இவ்விடங்களில்நல்லஆஸனங்களிலிருந்து தனதுசரீரத்துட்புறம் அமைந்த வாயுவை வெளியேற்றினுல் இயற்கைக்குச்சிறிததிகமாக இதயம்விரியும்; அதிகம்விரிந்திட அதிகரக்தம் உட்புகும். பின்வெளியில்நிறைந்த நல்லகாற்றை உட்புறம் செலுத்திட இதயம்நெருங்கிக் குவிந்துடரக்தம்உடனேசுத்திபெற்று சரீரமெல்லாம்சுழலும். இனிசிச்றிதுகாலம் உட்புறமேகாற்றைச்செலுத்தி நிறுத்திட வக்காற்று இதயவழிஇரத்தக்குழல்களிலும சென்று காலைநோட்டம் முதலியவற்றுலுறைந்த ரக்தத்தையும்சுத்திசெய்விக்கின்றது. இவ்விதம்சுத்தியெய்திய உதிரம் சிரஞ்சேர்ந்திட அவ்விடம்மூளையில்நல்லுதிரம் தங்கியபொழுது அவடத்துள்ளமனம் நன்குபிரகாசிக்கும். இனிநல்லுதிரசம்பந்தப்பெற்ற மனம் நல்விஷயத்தைச்சிந்தித்தும் புலன்வழிசென்று வெளிப்பொருள் உண்மையையறிந்தும் ஆன்மாவுக்குபாரம்செய்திடும். இக்கும்பகத்திற்றுன் இதயம்நெருங்கிசுருஙகுதல் விரிதல்எனும்தொழிலன்றிநிற்கும. அச்சமயமேநல்லுதிரம்வெளியினின்றுட்சென்ற நற்காற்றினுல்மேனேக்கி மூளையையடையும். அதற்காகவேமனிதர் முயல்வேண்டும். மூளையில்நல்லரக்தம் இருக்குமளவில் எமதுபுத்திநன்னி

[illegible]

லையிருக்கும். புலன்கள்கல்ல விஷயங்களையறிந்திடும் வலி பெறும்; ஆயுள்பெருகும்; உதிரஞ்சுத்தியெய்தும். உள்மலம் ஒழியும்; சரீரம் நிர்மலமாகும். இக்கற்குணங்கள் ஒருங்கு சேர்ந்து வேறெவ்வழியிலும் அமையாவாகவே கும்பகப்பிராணாயாமகுணத்தைச் சொல்லச் சொற்களெல்லாம்போதாவாம். இனி ரேசகம் பூரகம்இரண்டின்காலமும் எவ்வளவு அநுபவம் நிறைந்தயோகிக்குமசமானமே. ஆயினும் கும்பகம்ஒன்றுமட்டில் தனது அப்பியாசத்தின் பலத்துக்குத்தக்கபடி விருத்திசெய்யவேண்டும். அதனாற்றான்ஒவ்வொருசரீரத்துக்குமஆயுள்விருத்திக்குமென்றோம். இனி ரேசகம் என்பதை ஒருபுறத்துநாஸித்துவாரத்தானேசெய்யக்கூடாது. இரண்டுநாஸிவழியும உயிர்ககின்றோம. இரண்டிடங்களிலும் மலம்நிறையும். ஆயின்இருநாஸித்துவாரங்களிலும் ரேசகபூரகங்களைச் செய்தாலன்றி அவற்றின்மலம்ஒழியாது. கும்பகம்ஒன்றுமட்டில் இந்நாஸிவழிகட்டதது. ஆகையால் அதையநுஷ்டிப்பவர் ஒரேவழியில் அநுஷ்டிக்கலாம். இங்ஙனம் அப்பியாஸஞ்செய்துவரவர கும்பகம்எனும்பிராணாயாமம் மலிந்திடவே அதனால்பிராணவாயு, வெளியிற்செல்லாது உட்புறம் தடைப்படும். ஆகவே உள்ளேநிறைந்திருக்கும் நாளில்செல்லத்தொடங்கிகாலக்கிரமத்தில் சுழுமுனையெனப்படும் மகாசூக்ஷ்மநாடியிலும்பிரவேசிக்கும். அச்சமயம் ஜீவன்சரீரத்திலிருந்தும் ஏதுமறியாது மெய்ந்நிலைநாடிநிற்றலானும், சரீரத்தில்ரத்தம்ஓடாது ஆங்காங்குநிறைவுற்றமையானும் அச்சரீரம் வெளிப்பதார்த்தங்களை எவற்றையும் அச்சமயம் உள்வாங்காது. ஆகவே அச்சரீரத்தில் அக்கினியிடினும் அச்சரீரம்கெடாது. இவ்வவஸ்தையைத்தான் '[illegible]' "இவனை அக்கினிகொளுத்தாது" என்றுபுகழ்ந்ததுவேதம்என்க. ஆகலால் மனிதப்பிறப்பைமேம்படுத்தவேண்டி அவசியம் கும்பகப்பிராணாயாமம்செய்யவேண்டும். அதைஒரேசமயத்தில்முடியாதுபற்றி அதைமெதுவாய்காலக்கிரமத்தால் அநுபவிக்கவேண்டும். இவ்வப்பியாசமும் சரீரத்தின்இளமையிற்றானே ஆரம்பிக்கவேணுமேயன்றி வலிமையிலாதல் முதுமையிலாதல் ஆரம்பித்தால்பயன்படுவதுமிகக்கடினமாம். இளமைதவிரமற்றையகாலங்கள் எவ்விதத்தும் சித்தத்தை நிச்சலம்செய்யவிடாது. இனிக்கிரமமாய் அப்பியசிக்கப்பட்டு நூறுமாத்திரைப்பிரமாணமாக உண்ணின்றவாயு கால்முதல் தலைவரைநிறைந்சுழுமுனையுட்செல்லுமென்று கண்டனர் ஆன்றோர். அச்சுழுமுனையில் வாயுநுழையும்வழி இஃதெனயோகநூல் கண்டுரைத்தவாறுரைப்பாம். எங்ஙனம் எனில்கூறுதும். அச்சுழுமுனை என்னும் நாடியின்அடியில் குண்டலினியெனஓர்நாடிவடிவம்கொண்டவாதிசக்திபால் பின்திருவடிவமெய்திநிற்கின்றனள்.

இன்னும் வரும்.

Koviloor Digital Library

ஓம்

SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின் அநுபந்தம்

௩ - ம் புஸ்தகம்] சிதம்பரம். நந்தனஹூ கார்த்திகைமீ உ௰௨ [இலக்கம்-உ௰.

நாகைநிலலோசனிப்பத்திரிகையும் மாயாவாததிமிரபாஸ்கரமும்.

(சுந்தரர்க்குமறுமொழியுரைத்தல்)

350ம்-பக்கத்தொடர்ச்சி.

பொருளும் பொருளுமென்று கூறுவதில் இவ்வளவு ஆக்ஷேபங்களிருக்கின்றமையால்பொருளுங்குணமுமென்று சொல்லலாமென்னின் பொருளுங்குணமுமிரண்டறக்கலந்ததென்பது மிகையாம். நாம்கூறினாலும் கூறாவிட்டாலும் பொருளுங்குணமும் இயற்கையாகவேயிரண்டற்றிருக்கின்றன. குணகுணிகளை யிரண்டற்றதென்று சொலல அவசியமில்லை. இப்படியேசிவத்தையும் ஆன்மாவையும் முறையே குணியாகவும் குணமாகவுங் கூறுவோமானால் இவ்விரண்டும் இயற்கையாகவே யிரண்டற்றேயிருக்கும். அங்ஙனமாக அவைமுன் இரண்டாயிருந்தனவாக வைத்து, பின்இரண்டற்றனவெனச்சொல்வது கூடாது. சிவத்தையும் ஆன்மாவையும் குணிகுணங்களாகச்சொல்லின் அவ்விரண்டும் அபின்னமாகும். அபின்னமாயின் ஆன்மாக்கள் அநுபவிக்கும் சுக, துக்க, சுவர்க்க, நரகங்களெல்லாம்சிவம்அநுபவித்ததாகவேயாகும். சிவத்தினிடத்து ஆன்மாவைத்தொழிலாகச்சொல்வோமானால் ஷடதோஷங்களிதற்கும் வரும். அன்றி நிஷ்கிரியைப்பொருளான சிவத்துக்குக்கிரியை சொல்வதுங்குற்றமாம். இன்னும் அநேகதோஷங்களுண்டாம். ஆதலால் சிவத்தினிடத்தில் ஆன்மாவைத்தொழிலாகவுங் கூறப்படாது.

'பதியினைப்போலப்பசுபாசமநாதி' 'என்ற திருமந்திரத்தின்பொருள்என்னை!' என்று ஒரு வினாபோட்டு, இதற்கு விடை அத்துவிதிகளுக்கு அகப்படாதுபோல் களித்து, 'விசாரித்து அடங்குவாராக' என்றும் கூறி விசிராந்தியடைந்துவிட்டானன்றோ? அத்துவிதிகளுக்கும் பதி, பசு, பாசம் அநாதியென்றே இனியறிந்துகொள்வாராக. அத்வைதிகளுக்குப்பதிசத்தாக அநாதி; பசுபாசங்கள் அநிர்வசனீயமாகஅநாதியாம். பதியை யீஸ்வரனாகவைத்தால் அப்போது பதிபசுபாசங்களான மூன்றும் அநாதியாம்.

கைவல்லியம்.

அதுதானெப்படியென்றக்காலநாதியாஞ் சிவரெல்லாம் பொதுவான சுழுத்திபோலப்பொருந்து மவ்வியத்தந்தன்னில், இதுகாலத்துவப்பேரீசனுட்பார்வையாலே; முதுமூல சுபாபம்விட்டு முக்குணமவியத்தயாமே.

தானன்றிவேறொன்றுமில்லாமைபூரணசச்சிதானந்தகுணமாய், னவின்றவுயிர்தோன்று மொன்றாகுமென்றாலும் நோக்கின்றபடிகண்டிலேன், நானென்றசீவர்கள்சத்தாவகைபொக்குஞானங்கள்வெளிகண்டதால், ஆனந்தமிதுபோலவெளியாக வுதியாதவடைவேதுகுருநாதனே.

வேதாந்தசூடாமணி.

இத்துவினையநாதியடைந்தவதமுழுதுமறையாமலிந்துதன்னு,லந்திறனையொளிர்வித்துக்கொள்களங்கமெனவெனையானறியேனென்னு, மூந்துலகவிவகாரந்தனிலுயிரையடைந்ததனைமூடாதென்று, மந்தவுயிராலறியப்பட்டுமெனறம்பிக்குமந்திரம்போல்.

சிவசேதனமறைத்துத்தமமயலாடயவுலகத்திறத்திற்கெல்லாம், மேவுகாரணமாகிமாயை விபரீதஞானம்விளைத்துமோக, மோவவுணர்வழித்தவித்தைசத்தின்வேறாகிப்பொய்யுருவியாகும், வீவிலாமாயையிதற்கிருகருமம்சங்கோசவிகாசமென்றும்.

பொய்யாகிச்சத்துருவப்பொருளின்வேறாகியொருபொருளாய்த்தோற்றல், செய்யாமையாலுளதிலசுதந்திரஞ்சான்றாபவொருசேதனன்பால்,உய்யாதசிவாதியாக்குவதால்சுதந்திரமுமுளதுமாயை, மெய்யானதலதென்றல்விசும்பலர்போலில்லையெனவிளம்பலன்றே.

முதலிய பலபாடல்களால்பதிபசுபாசங்கள் மூன்றும் அநாதியென்றறிந்துகொள்வாராக.

இன்னும்வரும்
மாயாவாததிமிரபாஸ்கரன்.

சங்கராசாரியாரது அவதார மகிமை.

நாகைநீலலோசனியினது நந்தனஹூ ஆடிமீ 26௨ பத்திரிகையின் நான்காவது பக்கத்தில் "சங்கராசாரியார் பிறப்பின் குழப்பம்" என்றொருவிஷயம். ம-ா-ா-ஸ்ரீ சூ சோமசுந்தரநாயகரெனக்கைச்சாத்திட்டாரொருவரெழுதியிருக்கின்றார். அதில்முற்றும் தூஷணையும், சாஸ்திர ஆராய்ச்சிக்குறைவும், ஆத்திரமும், அபவாதமும், பெரியாரை அவமதித்தலுமே நிறைந்திருக்கின்றன. அணுவேனும்நியாயமென்பதில்லை. அது அடியிலெழுதுஞ்சங்கதிகளால் விளங்கும்.

சங்கராசாரியர் சரித்திரங்கள்.

பிருகத்சங்கர விஜயம்:— சங்கராசாரியர் சிஷ்யர் பத்மபாதர் எழுதியது.

கேரளீயம்:—கேரளத்தில் ஆசாரியர் அவதாரகாலத்தில் இருந்தசேரவமிசத்தரசனது ஆஸ்தானபண்டிதரொருவரால்வரையப்பட்டது.

மற்றொருகேரளீயம்:—அத்தேசத்தில் சங்கராசாரியசிஷ்யர் மடங்களெனவழங்கும் திருசிவபுரம் வடக்கே

மடம் முதலிய மடங்களில் பட்டம்பெற்ற வொருவராலியற்றப்பட்டது.

வியாஸாசலியம்:—வேதங்களுக்கெல்லாம் உரைசெய்தமாதவாசாரியாரென்னும் வித்தியாரணியசுவாமிகளால்செய்யப்பட்டது

சங்கரவிஜயவிலாசம்:—அவ்வாசாரியர் சிஷர்பரம்பரையில் உதித்த சித்விலாசமூனிவர் இயற்றியது.

சங்கரவிஜயம்:— அனந்தாநந்தகிரி என்பவரால் பண்ணப்பட்டது.

சங்கராப்யுதயம்:—இராசசூடாமணிதீக்ஷிதரால் இயற்றப்பட்டது.

பதஞ்சலிவிஜயம்:—ஸ்ரீராமபத்திர தீக்ஷிதரால் எழுதப்பட்டது.

இராஜதரங்கணி:— கல்ஹணமித்திரபண்டிதர் எழுதியது. இதில் விக்கிரமார்க்கன்சென்று விக்கிரமாதித்தனுக்குமுன் சங்கரர் அவதாரங்குறிக்கப்பட்டது.

இவையன்றித்துவாரகா சிலாசாசனங்களிலும் சிறிது சங்கரதிக் விஜயம் சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும்அநேக காவியங்களிலும் சங்கரர் சரித்திரம் உண்டு.

சங்கராசாரியர்சிவாவதாரம்.

ஷை பல சங்கரர் சரித்திரங்களில் சங்கராசாரியர் சிவாவதாரமென்று கூறியிருக்கின்றது. எதிர்கால சம்பவங்களைப்பற்றிச்சொல்லும் சிவரகசியத்தில் சங்கராசாரியர் சிவாவதாரமென்று சொல்லப்பட்டிருக்கிறதாகப் பிரமவித்தியா பத்திராதிபர் சொல்லியிருக்கிறார். ப்ரம்மவித்தியா 16.வது அநுபந்தத்திலும் 17.வது அநுபந்தத்திலும் சிவரகசியம் 15.ம் அத்தியாயத்திலும் 16.ம் அத்தியாயத்திலுமுள்ள சுலோகங்களைப்பஞ்சநதக்ஷேத்திரவாஸி அவர்களும், ப்ரம்மஸ்ரீ பசூர்சேஷகிரி ஐயரவர்களும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.அவற்றையாவரும் பார்த்திருக்கலாம். இவர்களெல்லாமெழுதுவதற்குமுன்பு ஷை சோமசுந்தரநாயகர், ஷை அவதாரத்தையொத்துக்கொண்டு, ஆனால் அந்தஅவதாரம் சிவனடியாராகக்கூறி, அந்த அவதாரம்முன்பேமுடிந்திருக்கலாமென்றும், இனியும் வரலாமென்றுசொல்லி,“அவரதுவரலாறுமுதலியவற்றை யிவருக்கெடுத்தோதவேண்டிய ஆவசியகமெமக்கில்லை” என்கிறார். பிறர் சொல்லும் விஷயங்களைமாத்திரமாக்ஷேபிக்கலாம்; தாம்சொல்லக்கடமைப்பட்டிருக்கிற விஷயங்களைமாத்திரஞ்சொல்லத்தமக்கவசியமில்லையோ! பிரதிவாதியின் வக்கீல், வாதி கட்சியில்மாத்திரந்தோஷம் கற்பிக்கலாம்; வாதிக்குமாறாகப்பேசும் பிரதிவாதிமாத்திரம்,வாதிவக்கீலுக்குப்பதில் சொல்ல அவசியமில்லையாக்கும். இப்படிச்சொல்லிவிட்டால் நியாயாதிபதியென்னசெய்யவேண்டுவது!வாதிபக்ஷத்தில்தான் நியாயமிருக்கிறது.பிரதிவாதிக்கு நியாயமில்லாமையால்தான் அவசியமில்லையென்கிறானென்று வாதிபக்ஷமே தீர்ப்புக்கொடுப்பானன்றோ? அப்படியேநாயகர்தம்கக்ஷிக்குப்பலங்காட்டாதவரையில் தமதுகக்ஷி தோல்வித்தானத்தையே யெதிர்பார்க்குமென்பதற்கையமின்றெனக. இவர்பக்ஷத்தைச்சொல்ல இவர்க்கு அவசியமில்லாதபோது மற்றவர்பக்ஷத்தை இவர்க்குச்சொல்ல மற்றவர்க்குமாத்திரமவசியமென்னோ! அங்ஙனமாக மற்றவர் சொல்வதற்குக்குற்றங்கூறவேண்டுவதேன்? பிறர்பக்ஷத்தைக்குற்றங்கூறின் அதற்குமாறாகக்கூறும்தம்பக்ஷத்துக்கு நியாயங்கூறவேண்டும்.தம்பக்ஷத்திற்கு நியாயங்கூற இயலாதபோது பிறர் பக்ஷத்துக்குத் தோஷங் கற்பிக்கப்படாது. கொள்ளெனின்வாயைத்திறப்பதும் கடிவாளமெனின் வாயைமூடிக்கொள்வதும் நியாயமன்றே. இவர் பக்ஷத்தைச்சொல்லவேண்டிய ஆவசியகமில்லையென்றதனால் அதைச்சொன்னால் அகப்பட்டுக்கொள்வார்போல்தோன்றுகின்றது. “சந்தர்ப்பம் நேரிட்டால் சொல்லுகிறேன்” என்று சொன்னாலும் ஒருவிதத்துக்கொள்வோம். எடுத்தோதவேண்டிய ஆவசியகமேயில்லை யென்றதனால் அது விஷயத்தில் நமக்குச்சந்தேகமாகவேயிருக்கின்றது. சோமசுந்தரநாயகருக்கு நியாயமில்லாமையினாலே ஆவசியமில்லாமற்போகலாம். அவருக்கு ஆவசியகமிருக்கவேண்டுமென்று விரும்புவாருமில்லை. நமக்கப்படிப்பட்ட காரணமில்லாமையாலும் அதையெடுத்துச்சொல்லவேண்டிய ஆவசியம் நமக்கிருப்பதாலும் நாம்சொல்லாமலிருக்கச்சரிப்படவில்லை. ஆதலால் அதற்கவசியமானவற்றை யெடுத்துக்காட்டுவாம்.

இவர்கூறுவதுபோல் சிவனடியார்களாகப்பிறக்கப்போவதாய்க்கூறுவதுண்மையே.தொடக்கத்தில்‘‘ஹவிஷ்யச்சிவஹ க்தாநாம் சரிதம் வக்ஷ்யே’’ என்று “வருங்காலத்தவதரிக்கும் சிவனடியார்சரித்திரங்களைச்சொல்வாம்” என ஸ்ரீகண்டநாதன் திருவாய்மலர்ந்தமையானென்க. “அந்த அவதாரம் முன்பேமுடிந்திருக்கலாம், இனியும் வரலாம்” என்பதுமட்டில் பொருந்தாது. அதே அத்தியாயத்தில் கல்யாதிஷு ஸஹஸ்ரேஷு த்விதயாதீதேஷு என்றதில் கலியுகாதிரண்டாயிரம்வருஷங்கள்சென்றபிறகு” எனக்காலங்குறிக்கப்பட்டமையாலும் கேரளே சசலக்ராமே என்ற “மலைநாட்டில்சசலத்தில்” என இடங்குறிக்கப்பட்டமையாலும்(மலைநாட்டில் திருவஞ்சிக்களத்துக்கு ஈசானியத்தில் காலடியென்றும் ஆலவாய் என்றும் வழங்கப்படும் ஊர்சசலம் எனப் பழைய வழக்கத்தோடிப்போதுமுள்ளது) ஸ்ரீ வ்யாஸஸூத்ராணாம் வேதவாக்யார்த்த நாமபிரே கவேதஸூத்ரார்த்தம் கரிஷ்யதி ஸம்சய: என்பதில் “தனித்தனிவாக்கியங்களாக வியாச முனிவரியற்றிய சூத்திரங்களுக்கு அத்துவிதவுரை யிடுவார்” எனக்குறித்தமையானும்‘‘ அத்வைத வேதிகஸம்ஸித்தம் த்வைதவாதைர்விகல்பிதம் | தச்சைலம் வஜ்ரவத்பேத்தா மதம்சோத்பவ: ஸுத:’’ என்பதில் “வேதசித்தமான அத்துவிதம் துவிதவாக்கியங்களால் வேற்றுமைப்பட்டமையால் அம்மலையையுடைக்க வச்சிரமாய் எனது அமிசத்துடன் பிறந்தவன்” என்ற சிவவசனம் வெளிப்படுவதானும் இன்னும் பல வசன உண்மைகளாலுமாமென்க. “அதில்குறித்தகாலம் முடியவில்லை, இனித்தான் அவ்வவதாரம் வருமென்னின் அங்ஙனமாயின்பரமசிவனது திருவாக்குஅவலமாகும். இனிச்சிவனடியார் என்பதால் சிவாம்சமாவதெப்படியென்னின்‘ஸஜ மதம்சோத்பவ: ஸுத:’என்பதில் “என்னமிசத்தால்பிறந்தாய்” என்று கண்ணுதலார் திருவாக்கு வெளிவந்தமையானும் விப்ரபத்ந்யாம் மதம்சோத்பவ:“பிராமணர் மனைவியிடம் எனதமிசத்துடன்” என்றும்வசனமிரு.

ஸூவஸ்தஸ்யெஷ்யஸ்யரூகஸுலாவ.தஸிஷ்ய கிரான்குசி டர்களுடன் சங்கரர் அவதரிப்பாரென்பதாலும சிவாம்சம்உண்மையாதலுமிக. சிவாம்சமாய்ப் பிறந்தவர் சிவனடியார் திருவேடங்கொடலுரிமையேயாமென்க. அங்ஙனமே அத்துவிதஸ்தாபகரும் சிவனடியார் வேடத்தாருமான சங்கராசாரியாரைச் சிவனடியாரென்றுங்கூறுதற்கு ஏதுமாக்ஷேபமில்லையென்பதாம்.

மாயாவாதியல்லவென்பது.

சூளைவாசி நாயகர், சங்கராசாரியாரையும் அத்துவிதிகளையும் மாயாவாதி மாயாவாதி யென்று பேசுகின்றார். அப்படிப்பேசும் நாவையுள்ளடக்கும்படி, "ஓர் இந்து" என்பவர் எவ்வளவோ நியாயங்களைக்காட்டி, இவரும் இவரினத்தாருமே மாயாவாதிகளென்று வச்சிரத்தம்பமென நாட்டி,இனித்தளர் வுறுவண்ணம் தூணைகாகரியாயஞ்செய்துவிட்டமையால் இனி வாய்திறவாமல் வாளாவிருக்கவேண்டுவதவர்கடமையேயாமென்க. இனிப்பேச நாவுளதேல் அவர் கூறிய வொவ்வொன்றையும் பூர்வபக்ஷஞ்செய்து தம்பக்கத்தைத் தாபித்துக்கொள்வாராக. இதற்கிடையில் வேறே விஷயமெழுதும்போது அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் மாயாவாதி மாயாவாதி யென நியாயமின்றிப்பேசுதல் வெற்றியை விரும்புவோர்க்கழகன்று.

சிவன் சிவனடியாராய் வருதலைப்பற்றியது.

பரமசிவன் திரிமூர்த்திகளுக்கு அதீதமென்றும் அவர் மாதாவயிற்றில் யோனிவாய்ப் பட்டுப்பிறப்பது கூடாதென்றுங்கூறி, தாம் கூறும்சிவனடியாராக மாத்திரம் அவதரிக்கலாமென்று வரைகின்றார்.சிவனடியாராக வருவதானால் அதுமாத்திரமெப்படிக்கூடுமோ ? சிவன் எங்கும் பரிபூர்ணர்; நிர்மலர்; நிஷ்களர்; நிர்ச்சலர்; நிர்க்குணர்; வாக்குமனாதீதர்; ஞாதுருஞான ஞேயங்களற்றவர்; சங்கற்ப விகற்பமற்றவர். இப்படிப்பட்டவர் மாமிச நரம்பு என்பு உதிரம் சீ முதலிய அநுசிதசரீரத்தோடும் ஞானேந்திரிய கருமேந்திரிய அந்தக்கரணங்களோடும் கூடி மானிடவுருவந்தாங்கி வருவதுமாத்திரங்கூடுமா? அப்படிவந்தாலும்வரட்டும். அப்படிவந்தவடிவம்காரணமா?காரியமா? ஏதுமுன்னில்லாதிருந்து தோன்றுகின்றதோ அதுகாரணமன்று; காரியமே. சிவனடியார் உருவம் காரியமான போது அவ்வடிவந்தோன்றுதற்கு முதற்காரணம்யாது? பரிபூரணசிவமென்று சொல்லாவிடில் வேறேமார்க்கமில்லை. காரணமான அந்தச்சிவத்திலிருந்து காரியமான சிவனடியார்வடிவம் வெளிப்பட்டுவந்ததாகவேண்டும். காரணத்தினின்றும் காரியம் வருவதுஎதுபோல்? (1)மாதாவினின்றும் குழவிவருவதுபோலா? (2)பாலினின்றும்தயிர்வருவதுபோலா? (3)விதையிலிருந்து விருட்சம்வருவதுபோலா? (4)பிம்பத்தினின்றும் பிரதிபிம்பந்தோன்றுவதுபோலா? (5)மண்ணினின்றும் கடமுண்டாவதுபோலா? (6)கயிற்றினின்றும் அரவுண்டாதல்போலா?இவைகளில்லாவிடில் வேறெதுபோல்? இந்தவுவமானங்களையெல்லாமுறையே விசாரிப்பாம்.

பின்னவாதம்.

1. மாதாவினின்றும் குழவிவருவது போலென்னின் அது கூடாது. மாதாகண்டப்பொருள் ஆதலால் அவளில்லாத வேறோரிடத்திற்குப்பிள்ளைவரலாம். இவ்வுவமானப்படி மாதாஸ்தானத்தில் சிவனும் குழவிஸ்தானத்தில் சிவனடியாருமாம். குழவியென்பது தாயினதோர்பாகமான சோணிதமும், வெளியிலிருந்துட்சென்ற சுக்கிலமும், வெளியிலிருந்துட்சென்ற ஆகாரமுமாம். இதையாராய்ந்துழித்தாயின் பாகமும், தாய்பாகம் நீங்கலாக வெளியிலிருந்துட்சென்ற சுக்கில ஆகாரபாகமும் எனவிளங்குகின்றது. இவ்வாறே யுவமேயத்தை நோக்குழிச் சிவனடியாரென்பதுசிவனுடைய வோர்பாகமும், சுக்கில ஆகாரம்போன்ற பிறிதொரு பாகம் சிவனுட்சென்றதுமாம். மாதாகண்டிதப்பொருளாகலின் அவளுடைய வோர்பாகமான சோணிதம் குழவிவடிவாய் அவளில்லாவிடத்தில் வரக்கூடும். சிவன் பரிபூரணராகலின் சிவனுடையவொருபாகம் அவரில்லாவிடத்திலெப்படிவரக்கூடும்? அவரில்லாவிடமின்றே மாதாவினது வயிறு கெட்டியல்லாத புரையுடையதானதாலும் மாதாகண்டப்பொருளானதாலும் மாதாவில்லாத பிறிதொரு இடத்திலிருந்து சுக்கில, ஆகாரங்கள், புரையுள்ள மாதாவினுதிரத்திற்சென்று சோணித சுக்கில ஆகாரங்கள் ஒன்று கூடி, குழவியாய்வெளிப்படலாம்.சிவன்கெட்டிப்பொருளன்றோ? புரையுள்ளபொருளோ? அந்தப்புரையில் பிறிதொரு பொருள்சென்று சிவனுடையபாகமுஞ்சேர்ந்துசிவனடியாராய் வெளிப்பட்டதோ? மாதாவின் சோணிதம்போல் சிவனுடையவோர் பாகமானால் சுக்கில ஆகாரங்கள் போலமற்றப் பொருள் வேண்டுமே. அதுவுஞ்சேர்ந்தாலன்றோ சிவனடியாராய் வரலாம். அந்தப்பொருள்யாது? சித்தா? சடமா? சித்தானால்ஞானமயமான சிவனுடன் கூடிடும்;சடமானால் கூடாதே. சிவனடியாராய் வந்த மானிடவுருவில் ஆன்மபாகம்சித்து; சரீரபாகம்சடம். ஆன்மாவும் சிவனும் சித்தாகவிருப்பதால்சிவனே ஆன்மாவாயிற்றென்றுவைத்துக்கொண்டாலும் (இதிலும் அனேக தோஷங்களிருக்கின்றன)சடமெங்கிருந்துவந்தது? தாயில்லாத இடத்திலிருந்துஆகாரம் வயிற்றுக்குட்புகுந்தது போன்று சிவனில்லாத விடத்திலிருந்து சடம்சிவனுட்புகுந்ததாகவேண்டும்.(சித்துவந்து புகுந்ததென்றாலுமிந்தத்தோஷம்வரும்) புகுந்ததென்று சொல்லும் பக்ஷத்தில் சிவனுக்கப்புறம் ஒரு இட மிருக்கவேண்டும். அது பெரிதோ? இது பெரிதோ? இந்தச்சிவனுக்கும் அந்தச்சடத்துக்கும் வேற்றுமைதோன்ற வேலிபோன்ற தொன்றிருத்தல்வேண்டும்.தாயினதோர்பாகமான சோணிதம் குழவியாகக்கழிந்தால் அவ்வளவு பாகம் தாய்க்குக்குறைவுபடும். அவ்வாறே சிவனிடமிருந்து சிவனடியாருருவிற்காக வோர்பாகம் எடுக்கப்பட்டால் சிவனுக்கு ஓர் பாகம் குறைவுபடுமே. இன்னும் அனேக ஆக்ஷேபங்களிருக்கின்றன. சோமசுந்தர நாயகர் இதைப்பூர்வபக்ஷஞ்செய்வாரானால் அப்போது அவைகளைவெளியிடுவோம்.

பரிணமவாதம்.

2. பாலினின்றும் தயிர் வருவதுபோல் என்பதைப்பார்ப்போம். பாலினின்றும் தயிர் வருவதுபோல் சிவனினின்றும் சிவனடியார் உருவந்தோன்றுகின்றதென்னின் பால் தனது ஸ்வரூபங்கெட்டுத்தயிராகின்றது. அன்றித்தயிரானகாலத்தில் பாலில்லாமற்போகிறது. அவ்வணமே சிவன் சிவனடியாரானபோது சிவனே இல்லாமற்போகின்றார்.பால்தன் வடிவமாறித்தயிரானால் பின்னும்பாலாவதில்லை.அங்ஙனமே சிவன் சிவவடிவங்கெட்டுச்சிவனடியாரானால் பின்னும் சிவனாதல் கூடாது. இந்தப்பரிணமவாதத்தால் பாலு

க்குவிகாரமுண்டாவதுபோலச்சிவனுக்கும் விகாரமுண்டாகின்றது. பால் தன்னுருவங்கெட்டுத்தயிரானல் தயிர்தயிராகவேயிராது. அதுவும் தன்னுருக்கெட்டு வேறொன்றாகி, அதுவுங்கெட்டு வேறொன்றாகி,இவ்வாறு கெட்டுப் பல மாறுதல்களையடையும். அரும்பு பூவாதலும்,பூ பிஞ்சாதலும் பிஞ்சு காயாதலும்,காய் கனியாதலும், கனியும் நாட்படத் தன்னுருக்கெட்டுப்போதலும் இன்னு மிவ்வாறு பலப்பல வாதலும் அப்பரிணாமவாதத்தின் குற்றமாம். இவ்வாறு சிவன் தனது வடிவங்கெட்டுச்சிவனடியாராயின், பின் அவ்வடிவங்கெட்டு வேறொன்றாய், பின் அதுவுங்கெட்டு வேறொன்றாய், பின் அதுவுங்கெட்டு வேறொன்றாய் இவ்வாறு பல விகாரங்களையடையும். சிவனடியார் வடிவ மிதற்கு முன்னரே தோன்றி இருக்குமாயின் அதன் பின் அனேக மாறுதல்களையடைந்து இப்போதும் ஒரு விகாரத்தோடிருக்கிறதாய்ச்சொல்லவேண்டும. அப்படியாயின் இப்போது இவ்விதவிகாரத்தோடிருக்கிறதாய்ப்பூர்வபக்ஷியாரே சொல்லக்கடமைப்பட்டவராயிருக்கின்றனர். பால் தயிராகிறதினல்;தானே தயிராவதில்லை. அனேகவகைச்சாதனங்கள்வேண்டும். சிவனே சிவனடியாராகும்பக்ஷத்திலும் அவ்வாறு அனேக சாதனங்கள்வேண்டும். பால்கண்டவஸ்துவாகலின் பாலில்லாத மற்றவிடங்களில்பலவகைச்சாதனங்களிருக்கின்றன. சிவன்பரிபூரணராகலின்வேறுசாதனங்களிருக்கஇடமிராது.

மற்றெருபரிணாமவாதம்.

3. பாலினின்றும் தயிருண்டாவதுபோலென்று சொல்வதில் இவ்வளவு அனர்த்தத்திற்கிட முண்டாகின்றமையால் இதைத்தள்ளி விதையினின்றும் விருக்ஷமுண்டாகும் உவமானத்தைப்பொருத்திப்பார்ப்போம். இதுவும் ஓர்வித பரிணாமமாம்.இதுவும் மிக ஆக்ஷேபத்திற்கிடமாம். விதைவெகுசிறியது. அதினின்றும பெரியவிருக்ஷமுண்டாவதொருபோது மின்று. விதைகால் பலமென்றும் விருக்ஷம் ஒருபாரமென்றும் வைத்துக்கொள்வோம். வைத்துக்கொண்டோர்க்கின் காற்பல எடையிலிருந்துஒருபாரம் எப்படிவரும்? வாராதென்பதுதிண்ணம்.பின்னையெப்படி? கால்பலவிதையோடு நீர், வாயு, பிரிதிவியாதி அணுக்கள் முதலியன 25599¾ பலஞ்சேர்ந்து ஒருபாரவிருக்ஷமாகின்றது. ஆதலால் காற்பலத்திலிருந்தே ஒருபாரமான காரியவிருக்ஷமுண்டாகின்றதென வுரைத்தலமையாது. காரியமானவிருக்ஷம் எவ்வளவு எடையோ அவ்வளவு எடை காரணமான வித்திலில்லையெனத்தெரிகிறது.காரணமான காற்பலத்துடன் 25599¾ நீர் முதலியசேர்ந்து காரியமாகின்றது. காற்பலவித்தும் 25599¾ பலம் நீர் முதலியனவுஞ்சேர்ந்து காரணமாகி, அவற்றின் கலத்தலே காரியமென்று கூறப்படுகின்றது. ஆகலால் காரணத்தின் கூட்டத்தையன்றிக்காரியமென்பதற்குப்பொருளில்லை. இதனால் காரணப்பொருளின் மாறுதலையே காரியப்பொருளென விவகாரநிமித்தஞ்சொல்லப்படுகின்றது. காரணத்திற்கு எப்படிப்பொருளுளதோ அப்படியேகாரியத்திற்குப் பொருளில்லை. காரியம வெறுந்தோற்றமேயாம். தோற்றமானகாரியம் சத்தாகாது; அசத்து அல்லது சத்துப்போலியேயாம. ஆகலால் வித்தும் அதன் சேர்க்கையும் சேர்ந்துகாரணமாகிச்சத்தாயும், விருக்ஷம் காரியமாகி அசத்து அல்லது சத்துப்போலியாயுமாகின்றன.

பிம்பப்பிரதிபிம்பவாதம்.

4. இனிப்பிம்பப் பிரதிபிம்பவுவமானத்தைப் பொருந்திப் பார்ப்போம். பிம்பமசத்துப்பொருள்; பிரதிபிம்பம் அசத்துப்பொருள். சூரியன் சத்துப்பொருள்; பிரதிபிம்பசூரியன் அசத்துப்பொருள்; இவ்வாறு உவமேயத்தில் சிவன் சத்துப்பொருள்; சிவனடியார் அசத்துப்பொருள். பூர்வபக்ஷியார் சிவனடியாரை அசத்துப்பொருளென அங்கீகரியார். அங்கீகரித்தாலும் இத்துடனே போகிறதாயில்லை. துரியசிவனுக்குத்தோஷத்தையுண்டாக்கின்றது. அந்தத் தோஷம் யாதெனின் பிம்பப்பிரதிபிம்பவுவமானங்களெல்லாம் நிறைவுள்ள பொருளில் வாய்க்காது. நிறைவில்லாக்குறைவுள்ள பொருளில்தான் வாய்க்கும்.எப்படியெனின் நமது முகம ஒன்று; கண்ணாடியொன்று. இவ்விரண்டும் கண்டப்பொருள்கள். முகம ஒரு இடத்திலிருக்கின்றது; கண்ணாடியொரு இடத்திலிருக்கின்றது. இவ்விரண்டும்சத்துப்பொருள்கள். கண்ணாடியிற்றோற்றப்படும் பிரதிபிம்பப்பொருள் அசத்துப்பொருள். இவ்விதமே சிவன் ஸ்தானத்தில் முகத்தையும்; சிவனடியார் ஸ்தானத்தில்பிரதிபிம்பத்தையும்வைக்கலாம். கண்ணாடி ஸ்தானத்தில் ஒரு பொருளையுங்காணேமே. இந்த வுவமானத்தில முதலாவது துரியசிவன் கண்டப்பொருளாகின்றார்; 2-வதுசிவனடியார் அசத்தாய்ப்போகின்றார்; 3வது கண்ணாடிபோன்ற ஆதாரப்பொருள் சத்தாய் ஒன்று வேண்டும, இவ்வளவு தோஷங்கட்கிடனாயிருப்பதால் பிம்பப்பிரதிபிம்பவாதமுமொவ்வமாட்டாது.

காரணகாரியவாதம்.

5. இனி மண்ணினின்றுங் கடமுண்டாதல் போலென்னின் கடத்துக்கு மண்முதற்காரணம், தண்டுசக்கரங்கள் துணைக்காரணம், குலாலன் நிமித்தகாரணம். அவ்வாறுகடத்தைப்போல் சிவனடியார், மண்ணைப்போல் சிவன்; தண்டுசக்கரங்களைபபோல் எது? குலாலனைப்போல் யார்? தண்டுசக்கரங்களைப்போலதுணைக்காரணமும் குலாலனைப்போல் நிமித்தகாரணமுமிலலையே.சிவனதுசிற்சத்தியைத்துணைக்காரணமாகச்சொல்லக்கூடும். அங்ஙனமேல் சிவனுக்கும் சத்திக்கும் அபேதமாவதுபோல் தண்ட சக்கரங்கட்கும் மண்ணுக்கும் அபேதமாகவேண்டுமே. அங்ஙனமின்றிப்பேதமாயிருப்பது கண்கூடன்றோ? அன்றி மண்விகாரப்பட்டுக்கடமாகின்றது;அங்ஙனமே சிவன் விகாரப்பட்டுச்சிவனடியாராகின்றனரா? மண்ணானது உனைதற்கு முன்னிருந்த நிலைமைமாறி, வளைதலாதித் தொழிலடைகின்றது. அவ்வாறு தொழில் பெறுதற்குத்தானில்லா இடம் வேண்டும் அசைதலின்றித்தொழில் நிகழாது. அவ்வாறு சிவன், சிவனடியாராகக்காரியப்படுதற்கு முன்னிருந்த நிலைமைமாறி,விகாரமான தொழில் பெறுதற்குச் சிவனில்லாவிடம்வேண்டும். சிவன் அசைதலின்றித்தொழில் நிகழாது. எது அசைதலுடையதோ அது ஏகதேசமான அல்லது நிறைதலில்லாத கண்டப்பொருளாயிருக்க வேண்டும். மண் ஏகதேசப்பொருளாயிருப்பதால் அசைதலுக்கிடமாகின்றது. சிவன் நிறைவுள்ளபொருளாயிற்றே. அது எப்படி அசைதலுற்று விகாரப்படக்கூடும்? இவ்வளவு குற்றங்களிருக்கின்றமையால் சிவனடியார்க்குச் சிவபிரானை ஆரம்போபாதானகாரணமாகக்கூறுதல்போ

Koviloor Digital Library

ருந்தாது. பொருந்தியதாய் வைத்துப்பார்க்கினும் வேறு தோஷமுமுண்டாகின்றது. அதையும் எடுத்து விஸ்தரிப்பாம்.

மண்ணின்கண், கடம், செய்வதற்குமுன்னரும் அழிவுக்குப்பின்னரும் இன்று. செய்த பின்னரும் அழிவுக்கு முன்னரு முண்டெனக்கூறப்படுகின்றது. அந்த மத்திய காலத்தும்வனைதலாதித்தொழிலாலமைந்த அமைப்பின்றிக்கடமென்னும்பதத்துக்குப்பொருளின்று.கடமென்பதுவுந்தோற்றமேயாம். பொருளில்லாவிடினும் தொழிலேனுமுள்ளதே யெனின் அத்தொழிலுந்தோற்றமேயாம். தனித்தனி யொவ்வொருமண்ணையும உற்றுப்பார்க்கின் எந்த மண்ணும் வனைந்ததாய்க்காணோம். இத்தவுவமானப்படியுவமேயத்தைப்பொருத்திப்பார்க்கின்காரியமானசிவனடியார் என்பதற்குப்பொருள் அபாவமாகும்.மண்ணினிடத்து வனைதலாதி சொல்வதுபோலச் சிவனிடத்திலேதேனும் தொழிலமைப்புகள் சொல்வதுங்குற்றமாம். தொழிலானது விகாரம். சிவன்தொழிலற்றவர்; விகாரமற்றவர். காரியம் சிவனடியார்வடிவம்; காரணம் சிவன் வடிவம்; காரியமுக்காலத்து மின்றென்பது துணிவு. காரியம் உள்ளதாகவைத்துக்கொள்ளினும் காரியத்திற்கும் காரணத்திற்கும் அபேதம். அபேதமாகலின் காரியந்தோற்றுவதுபோலக்காரணமுந்தோற்றமுந்தோற்றவேண்டும். காரியமான கடம் தோற்றுவதுபோல் காரணமான மண்ணும் தோற்றுகின்றதைப்பார்க்கின்றோமல்லவா? அவ்விதமே சிவனடியார் உருவம்யாவர்க்குமபுலப்படுகின்றது. அதையபேதமாகவுடைய சிவனுருவம் யாவர்க்கும் புலப்படுகின்றதா? சிவனடியார் வடிவம வாக்கு, மனம், இந்திரியங்களுக்குக்கோசரம். சிவனடியாருருவத்தைப்பக்திமான்கள் நேத்திரத்தால்கண்டுதெரிசிக்கின்றனர்; வாக்கினால்துதிக்கின்றனர்; பார்த்தவுருவை மனத்தினால் தியானிக்கின்றனர்; அவ்வாறு சிவனடியார் வடிவத்திற்கு அபின்னகாரணமானசிவன்வடிவம் கண்ணாற்காணவும் வாக்கால்துதிக்கவும் மனத்தினால் நினைக்கவும படுமோ? படுமெனின், எது இந்திரியத்துக்கும மனத்திற்கும் வாக்கிற்கும் விஷயமோ அது பிரத்தியக்ஷப்பொருளாயிருத்தல்வேண்டும். சிவன் பிரத்தியக்ஷப்பொருளாமா? அன்றி எது இந்திரிய வாக்கு மன களான மூன்றுக்கும் விஷயமோ, அது சடமாயிருக்கவேண்டும்.எதுசடமோ அது அசத்தாயிருக்கவேண்டும். சிவன்சடப்பொருளாமா? அசத்துப்பொருளாமா? சிவன் முக்காலத்துமுள்ள சத்துப்பொருளும் சித்துப்பொருளுமாமே. சிவன் சச்சிதானந்தப்பொருளென்றும் வாக்கு மனங்களுக்குக் கோசரமாகாரென்றும் வேதாகம புராணேதிகாசங்களெல்லாம் கோஷிக்கின்றனவே.

கடத்தைப்பார்க்குங்கண், கடத்துக்கபின்னமான மண்ணை பபார்ப்பதுபோலச்சிவனடியாரைப்பார்க்குங்கண், சிவனடியார்க்கபின்னமான துரியசிவனையும் பார்க்கவேண்டும். பாராதென்னின் சிவனடியார் வடிவத்துக்குத் துரியசிவன் வடிவம்அபின்னமென்றும் முதற்காரணமென்றும் கூறுதலொல்லாது. ஒவ்வாதபோது துரியசிவனே சிவனடியாராய் வந்தாரென்பது பொய்யாகின்றது. சிவன், சிவனடியாராக வருவதானால்சிவனடியார்க்கு மாமிசமுதலிய அசத்தப்பொருள்களோடுங்கூடிய சரீரம் இந்திரியம் அந்தக்கரணாதிகளான இவைகள் இருத்தல் வேண்டும். சிவன், பத்தர்களிடம் பன்முறை மானுடவடிவங்கொண்டு வந்திருக்கின்றாரெனப் புராணேதிகாசங்கள் கூறுகின்றன. அவ்வடிவம் மானுடவடிவமாகவிருந்தமையால் ஈசனென்று தெரியாமல், பத்தர்கள், தங்களைப்போல மனிதராகவே நினைத்தார்கள். நினைத்ததனால் மானுடர்க்குரிய சரீராதிகள் அச்சிவனடியார்க்கிருந்தனவாக ஏற்படுகின்றது. சரீரமுதல் ஜீவன்வரையிலுள்ள தத்துவக்கூட்டங்களில் சித்தும் சடமுமிருக்கின்றன. துரியசிவனே சிவனடியாராக வந்தாரெனப் பூர்வபக்ஷியர் கூறுகின்றமையால் அச்சித்தும் சடமுமான தத்துவக்கூட்டங்களுக்கு அத்துரியசிவன் அபின்னமும் முதற்காரணமுமாயிருக்கின்றனர் என ஏற்படுகின்றது. சிவனோ ஞானவடிவர்; சிவனடியார்வடிவமோ சடசித்து. ஞானத்திலிருந்து சித்தான ஞானமுதிக்குமென்று ஒப்பினால் ஒருவாறு ஒப்பலாமேயன்றி, சடமான அஞ்ஞானமுதிக்குமென்று சொல்லலாகாதே. ஞானத்திலிருந்து அஞ்ஞானமுதிப்பது கூடாதென்றும ஞானமயமான பிரமத்திலிருந்து சடமான வுலகுதிப்பது தோஷமென்றும் சொல்லி, அத்துவிதிகளை இவரும் இவர் போன்றாரும் கேள்வி கேட்டு இகழ்ந்துவருகின்றார்களென்பதை யாவரும் அறிவர். இப்போது இந்த நாயகரோ அதற்குப்பதில் சொல்லவேண்டியவராயிக்கட்டில் அகப்பட்டுக்கொண்டார்.

மண்கடம்போல் சிவனையும் சிவனடியாரையுஞ்சொல்வதில் பின்னுமொரு தோஷமிருக்கிறது. அதையுங்காட்டுகின்றாம். எது காரணமோ அதுமற்றொன்றுக்குக் காரியப்படவேண்டும். ஆடைக்கு நூல் காரணம். அந்நூல் பஞ்சுக்குக்காரியம். இங்ஙனமே சிவனடியார்க்குத் துரியசிவன் காரணம். அந்தத்துரிய சிவன் இன்னொன்றுக்குக் காரியப்படவேண்டுமே. அந்தவொன்று யாது? அது எதைநோக்கக் காரியப்படும்? அது எதை நோக்கக் காரியமாகும்? இவ்வாறு செல்லச் செல்ல அநவத்தாதோடமெய்தும். இன்னுமுள்ள தோஷத்தைக்காட்டுகின்றோம். காரியமெல்லாம் அழிவுடையவென இவர் பக்ஷத்தாரான தூலவிசாரணைபுரிவோர் கூறுகின்றனர். அதன்படிசிவனடியார் வடிவமுங்காரியம். மேலே காட்டியவண்ணம் துரிய சிவன் வடிவமுங்காரியம். இன்னுமெவ்வளவுதூரம் போய்க்காரணஞ்சொன்னாலும் அவைகளெல்லாம்மேலேசொல்லியநியாயப்பிரகாரம் காரியமாகும். காரியமோ அழிவுடையது. எது காரணமோ அது முன்கூறிய முறைப்படி காரியமாகும்.ஆகக்காரிய காரணங்களெல்லாம் அழிவுள்ளனவாம். இப்படியாகுமானால் அழிவில்லாது என்றும் சத்தாயும் நித்தியமாயுமுள்ள பொருள் யாது? ஒவ்வொரு பொருளும் காரியகாரணங்களில் அடங்கி யாவும் அழிந்துபோகின்றமையால் அவ்வாறு அழியாமலிருக்கச்சொல்வது பூர்வபக்ஷியார் கடமையாமென்க. இவர் பக்ஷத்தாரான தூலவிசாரணையுள்ளார் காரியப்பொருளிருந்து அழிகின்றதென்றனர். சூட்சமவிசாரணையுள்ள அத்துவிதிகளோ இருப்பது ஒருபோதும் அழிந்திலது இருக்கிறதாய்க்காணப்படும்போதே அது தோற்றமென்கின்றனர்.

மற்றொரு பின்னவாதம்.

சிவனடியார்க்குத் துரியசிவன் அபின்னமென்பதில் இவ்வளவு ஆக்ஷேபமிருக்கின்றமையால் பின்னமென்று தான் சொல்வோமெனின் இதில் பின்னும் மகத்தான தோஷங்கள் வருகின்றன. பின்னமென்போமானால் சிவனடியார் வடிவத்திற்கு உற்பத்தி ஸ்தானம் வேண்டும். அவ்வடிவம் தோன்றியிருந்து மறைகின்றமையின் தோன்றுதற்கும் இருப்பதற்கும் மறைதற்கும் ஆதாரப்பொருள் ஒன்று வேண்டும். அந்தப்பொருள் எது? அது எங்குள்ளது? அதனிலக்கணம் யாது? சிவன் பூர்ணராகலின் வேறு பொருளிருத்தற்கிடமின்று. சிவனுக்குப் பூர்ணத்துவங்கூறுது கண்டத்துவங்கூறி, வேறு பொருளுமுத

Koviloor Digital Library

ற்காரணமாகக்கூறின் அங்கீகரிக்கப்படும். அவ்வாறு பகர்தற்கியையாது. சுருதி விரோதம்வரும். இப்படிப்போனால் சிசுஹத்தி, அப்படிப்போனால் ப்ரம்மஹத்தி. இதினின்றும் இவர் தப்புவதெங்ஙனோ அறிகிலம்!

விவர்த்தவாதம்.

6. இனிக்கயிற்றினின்றும் அரவுண்டாவதுபோல் துரிய சிவத்தினின்றும் சிவனடியாருண்டாயினர் என்று சொன்னால் தோஷம் என்னை எனின் சொல்வாம். இதையொத்துக்கொள்ளின் சிவனடியார் தோற்றமாத்திரமாய்ப்போகின்றார். மெய்வாதத்தையே யொப்புஞ் சூனியவாதி அந்தப்பொய்வாதத்தை யொப்பமாட்டார். கயிற்றரவு எப்படிப்பொய்யோஅப்படியே சிவனடியார் அவதாரம் முக்காலத்தும் பொய்யாகும். இவைகளல்லாமல் வேறு எவ்வித வுவமானங்கூறினாலும் இப்போது கூறியவுவமானங்களில் அடங்கும். இவைகளைவிட வேறுஉவமானங்கூற நியாயமிருந்தால் கூறித்தம்பக்கத்தை ஸ்தாபித்துக்கொள்ளலாம்.

அகண்டகண்டவாதம்.

அகண்டமான சிவன், கண்டமான சிவனடியாராய் மானுடசொருபங்கொண்டு வருவதுங்குற்றமெனக்காட்டுவாம். போர்போல் அதிக இடத்தைக்கொண்டிருக்கும் பஞ்சையந்திரத்தில் அழுத்திச்சிறியகட்டாய்க் கட்டுவதுபோல் அகண்டமான சிவன்குறுகிச்சிவனடியாராய்வருகின்றாரென்னின்அண்டாண்டங்களுக்குள்ளும் அப்பாற்பட்டும் நீக்கமின்றி எங்குநிறைந்திருக்கும் சிவன், வெகு சிறிதாய் எண்சாணுடம்பில் குறுகிவருவது நிசமென்று நம்பமுடியாதாயினும் வெகு பிரயாசைப்பட்டு நம்புதல்வேண்டும். இதைக்கேட்பவர் மிக அதிசயமும்படுவார்கள். பஞ்சு, போர்போலிருக்கும்போது, இடைவெளியாங்காங்குள்ளதால் சுருங்கிச்சிறிதாகச் செய்தற்கிடனாகின்றது. நீக்கமின்றி நிறைந்திருக்குமாயின் சுருக்கமாகாது. ஒருமலையைச் சிறியகல்லாகச்செய்யவேண்டுமானால் முடியுமோ? ஒருவாறு நீக்கமின்றி நிறைந்திருப்பதால் முடியாது. சிவன் நீக்கமின்றி நிறைந்திருப்பவரா? இடைவெளிவிட்டு நிற்பவரா? நீக்கமின்றி நிறைந்திருப்பவராகலின் எண்சாணுடம்பாகச்சுருங்கிவருவாரென்றுகொள்ளத்தக்கதன்று. போர்போலிருக்கும் பஞ்சுயந்திரத்தால் சுருங்கிடின் முன்னிருந்தமற்றஇடங்களில் பஞ்சுஎன்பதின்றி வெறுவெளியாயிருக்கின்றது. அவ்வாறு பரிபூரண சிவன் எண்சாணுடம்பாகுங்கால் மற்ற இடங்களிலெல்லாம் சிவனில்லையெனச் சொல்வதற்கிடனாகின்றது. எண்சாணுடம்பான சிவன், சிவனடியாராய் வந்து, தமதுகாரியங்களையெல்லாம் முடித்துக்கொண்டு பழையபடி பரிபூரணராய்ப் போகவேண்டியவரல்லவா? அப்படிப்போகும்போது எண்சாணுடம்பளவுள்ளசிவன், எங்கும் பரிபூரணராய்ச்சிறிதும்நீக்கமின்றி யிருத்தல்கூடுமோ? யந்திரத்திலழுத்திய பஞ்சுக்கட்டுமறுபடியும் போர் போலாகுமாயின் கட்டாயிருக்கும்போது எப்படிக் கொஞ்ச இடத்தில் நிறைந்திருந்ததோஅப்படியே போர் போலிருக்கும்போது போர் அவ்வளவு இடத்தில் நிறைந்திருக்குமா? நிறைந்திராதன்றோ? அங்ஙனமே எண்சாணுடம்பில் அடங்கிய சிவனடியார் மறுபடியும் துரியசிவனாகுங்கால் நீக்கமின்றி எங்கும் பரிபூரணராய் நிறைந்திருப்பாரா? இவ்வளவு ஆக்ஷேபங்களிருக்கின்றமையால் துரியசிவன்,சிவனடியாராய் வருவாரென்பதுகொள்ளத்தக்கதன்று.

அருபரூபவாதம்.

அருபம் ரூபமாவதும் ஆக்ஷேபமானதுதான். சிவன் ரூபியன்று; அரூபி. அரூபியானசிவன் ரூபமாய் வருவது ஒருபோதுமடாது. அருபம், ரூபம் இரண்டும் எதிர்மறைகள். ஒருபொருள் அதற்கெதிர்மறையான பொருளாகாது. தன்சாதியாக மாறுமேயன்றி விரோதசாதியாக மாறாது. மாங்காய் தன்சாதியான மாங்கனியாமேயன்றி, பலாக்காய், பலாக்கனியாக மாறாது. அங்ஙனமே அருபம் அருப பேதமாகிறதாகக்கொண்டாலுங் கொள்ளலாமேயன்றி,ரூபமாகவாவது ரூப பேதமாகவாவது ஆகுமென்று கொள்ளப்படாது. அருபம் ரூபமாகுமென்று சொல்வதற்குத் திருஷ்டாந்தமாக வொருபொருளுமகப்படாது. அருபம் ரூபமாயிற்றென நியாயமில்லாமலே சோமசுந்தரநாயகர்க்காகக் கொண்டாலும் அனேக தோஷங்களுண்டாகின்றன. அந்தத்தோஷங்களை யெடுத்துக்கூறுவாம். அருபம் ரூபமாயிற்றெனின் அருபங்கெட்டு ரூபமாயிற்றா? அருபங்கெடாது ரூபமாயிற்றா? அருபங்கெட்டு ஆயிற்றெனின் அருபமேயில்லாமற்போகின்றது. இதன்படி துரியசிவனே இல்லாமற்போகின்றார். அருபங்கெடாது ரூபமாயிற்றெனின் அருபம் அருபமாகவேயிருந்தால்ரூபமாதலெங்ஙனம் அமையும்? உருகி நீராயிருக்கும் நெய், கட்டியாகவேண்டின் நீராயிருக்குந்தன்மைகெட்டுத்தானே கட்டியாகவேண்டும். நீராயிருக்கும் தன்மை நீராகவேயிருந்தால் கட்டியாதல் கூடுமோ? அங்ஙனமே அருப துரியசிவன் அருபமாகவே யிருந்தால் சிவனடியாரான ரூபியாதல் கூடாதே. நீராயிருக்கும் நெய், கட்டியாகவேண்டுமானால் குளிர்ச்சியின்றியமையாது. அங்ஙனமே துரியசிவன், சிவனடியாராய் ஆகிறதானால் குளிர்ச்சியைப்போலொன்றுயாதிருக்கிறது? சிவன் பூர்ணப்பொருளாகலின் வேறொருபொருளிருக்க விடமின்றாம். ரூபியான சிவனடியார் மறுபடியும் சிவனாக அருபியாவதுமிவ்வித ஆக்ஷேபத்திற்கிடனாகின்றது. கட்டியாயிருக்கும் நெய், உருகி நீராவதுபோல் ரூபியான சிவனடியார், துரியசிவனாகின்றாரென்னின் கட்டியாயிருக்கும் நெய், கட்டித்தன்மைகெட்டு நீராயிற்றா? கெடாதாயிற்றா? கெட்டு ஆயிற்றெனின் சிவனடியாரே யில்லாமற்போகின்றார். கெடாதாயிற்றென்னின் கட்டியாயிருக்கும் நெய், கட்டியாகவே யிருந்தால் நீராவது எங்ஙனமாகும்? ஆகாதன்றோ? அதுபோல சிவனடியார் உருவம் சிவனடியார் உருவமாகவே யிருந்தால் துரியசிவனாவது எங்ஙனங்கூடும்? அன்றி எது சத்தோ அது அழியாது; அன்றி முக்காலத்துமுள்ளது. மற்றது அழிந்தும் போகும்; முக்காலத்துமுள்ளதெனவுங் கூறவொண்ணாது.

ஞானஞ்ஞானவாதம்.

துரியசிவன் ஞானமயர்; அவர் சிவனடியாராய் வருங்கால் அவர்க்குச்சரீராதிகளிருந்திருக்கவேண்டும். அவை ஞானமயமல்ல; அஞ்ஞானமயமே. அந்த அஞ்ஞானம் ஞானத்திலிருந்தே வந்திருக்கவேண்டும். ஞானத்திலிருந்து அஞ்ஞானம் வருமென்பது பொருந்தாது. ஞானம் ஒளிவடிவம்; அஞ்ஞானம் இருள்வடிவம். ஒளியிலிருந்துஇருள்தோன்றுமென்பது கூடாது. கூடுமெனின் ஒளிகெட்டு இருளாயிற்றா? ஒளி கெடாதாயிற்றா? கெட்டு ஆயிற்றெனின் பிறகு ஒளியேயில்லாமற்போகவேண்டும். இல்லாமலே போயிறறெனக்கூறல்கூடாது. இருள் போய் ஒளிவரக்காணுதல் தினம் அனுபவமாயிருக்கிறது. கெடாதாயிற்றெனின் ஒளி ஒளியாகவே யிருந்தால் இருள் தலைகாட்டுதற்கிடனில்லை. இதுபோல் ஞானங்கெட்டு அஞ்ஞானமாயிற்றெனின் ஞானமே யில்லாமற்போகின்றது. ஞானமே இல்லாமற்போயின் அதையபின்னமாகவுடைய துரியசிவனே யில்லாமற்போகின்றார். ஞானங்கெடாதாயிற்றெனின் ஞானம் ஞானமாகவேயிருக்குமாயின் அஞ்ஞானந்தோன்றுதற்கிடனேயின்று. இடனே யில்லாதபோது சிவனடியார் வந்தாரென்பது எப்படிக்கூடும்? ஒளி, ஒளிபாட்டிற்கிருக்க இருள் தானாகவே தோன்றுகின்றதென்னில் இருள் எதினின்றுந் தோன்றுகின்றது? அது ஒரு முதலல்லவே. இருளுக்கு முதல்ஒளியை யன்றியில்லை. ஆதலால்தானாகத்தோன்றமாட்டாது. தோ

Koviloor Digital Library

ன்றிற்றென வைத்துக்கொள்ளினும் அவ்விருள் எங்கே விளங்குகின்றது? ஒளியில்லாவிடத்து விளங்கவேண்டும்உவமானத்திற்கு ஒளியில்லாவிடமிருப்பதாய் வைத்துக்கொண்டாலும் உவமேயத்திற்றுரியசிவனில்லாவிடமின்மையால் அஞ்ஞானவடிவான சரீரத்தோடுங்கூடிய சிவனடியார் வடிவமிருத்தற்கிடமின்றென்றறிக.

திரிமூர்த்தியுத்திரனசிவன் சிவனடியாராய்வருதல்.

இனி, மேல் விஷயத்தைக்கவனிப்பாம். திரிமூர்த்தியுத்திரனசிவன் மாதாவுதரத்திற்றங்கி யோனிவாய்ப்பட்டுப் பிறக்கமாட்டாரென்றும் ஆதலால் சிவன் யோனிவாய்ப்பட்டுச் சங்கராசாரியராகப்பிறந்தது பொய்யென்றும் வரைந்திருக்கின்றார். சிவன், சிவனடியாராய் மாத்திரம் அவதரிப்பாரென்றார். சிவனடியாராயவதரித்தால் மாத்திரம் ஒருதாய் வயிற்றிற்றங்கி யோனிவாய்ப்பட்டுப்பிறக்கமாட்டாரோ? யோனிவாய்வழியின்றிச்சிவனடியாராய் வருவாரெனக்கூறியிருக்கின்றதா? யோனிவாய்வழியின்றியேவந்தாரெனவைத்துக்கொள்வோம். மாயாகாரியமான மாமிசாதி அசுத்த தூர்க்கந்தவியட்டி சரீரத்திற்கட்டுப்பட்டு வருவதுமட்டுங்கூடுமோ? பன்றிக்குட்டிகட்குபபால்கொடுக்க அசுத்தத்திலும் அசுத்தமான பன்றியுடலில் கட்டுப்பட்டுவருவதுங்கூடுமோ? 'ஆனாலுமிந்தவுடம்போடிருப்பதருவருப்பே' என்று பட்டினத்தடிகள் கூறியிருக்கின்றனரே. தாய்வயிற்றிற்றங்கி யோனிவாய்ப்படுவது தாழ்மையெனின் யோனிவாய்வரும் மானுடரைக்காட்டிலும் வியர்வையிற்பிறக்கும் கொசுமுதலிய ஜந்துக்களது ஜன்மம் மேலானதோ? மனிதஜன்மம் புண்ணியஜன்மமென்றும்கொசுமுதலிய ஜந்துக்கள் ஜன்மம் பாபஜென்மமென்றும் கூறுவது பொய்யோ? வயிற்றிலுள்ளமலமுதலிய அசுத்தப்பொருள்களிலுண்டாகும் புழுமுதலிய அற்ப ஜந்துக்கள் யோனிவாய்ப்பட்டுப் பிறக்கவில்லையே. அதனால் மனிதஜன்மத்தைவிட அவைகள் மேலான புண்ணிய ஜன்மமோ? இதுநிற்கட்டும். வள்ளியம்மை மிருகவடிவமான மானின் யோனிவாய்ப்பட்டுப்பிறந்தனரே. சிவசமானமுருகக்கடவுள் மதுரையில் வணிககுலத்திலுமைப்பிள்ளையாய் அவதரித்தனரே. இவைகளுக்கெல்லாம் என்னசமாதானம்!

இப்படிஅவதரித்தது ஜீவகருணைநிமித்தமேயன்றிச்சுயலாபங்கருதிக் கருமபந்தத்தாலல்லவெனின் அஃதுண்மைதான். அங்ஙனமே சங்கராசாரியாரும் கர்ம்மபந்தத்தாலல்லாமல் உலகக்ஷேமத்தினிமித்தம் சிவகருணையினால் மானுடரில் ஒருவர் போல யோனிவாய்ப்பட்டுப் பிறந்தாரென்றால்குற்றமென்னை? சிவன் பிறப்பில்லாதவரென்று கூறுகின்றதே யெனின் பிறப்பென்பது உற்பத்தி. அதாவது ஒன்றினின்றுந்தோன்றுவது. சிவனடியாராய் வந்ததும் உற்பத்திதான். மாணிக்கவாசகசுவாமிகளுக்கு வந்து ஞானோபதேசஞ்செய்தருளிய குருமூர்த்தமும் உற்பத்திதான். திருக்காளத்தியில் பணிப்பெண்ணுக்காக எழுந்தருளிவந்ததும் உற்பத்திதான். சுந்தரமூர்த்திசுவாமிக்காகப்பரவையாரிடத்துத்தூதுநடந்தவடிவமும் உற்பத்திதான். இன்னும் உலகு தோன்றியதுமுதலிதுகாறும் தொண்டர் பொருட்டும் ஞானவான்கள் பொருட்டும் தோன்றியவடிவங்கள் யாவும் உற்பத்திதான். இனித்தோன்றும் வடிவங்களும் உற்பத்திதான். உற்பத்தி இருவகைப்படும். ஒன்று அஞ்ஞானகர்மபந்தப்பட்ட ஜீவர்கள், ஞானம்பெற்று முத்தியடையும் பொருட்டு உதிப்பது; மற்றொன்று சர்வஞ்ஞத்துவாதி குணங்களோடுங் கூடிய ஈஸ்வரன், அஞ்ஞானமான கர்மபந்தமின்றி உலோகோபகாரமாகத் திருவருள் கொண்டுதிப்பது. முன்னர்க்கூறியது சாதாரணமாய்ப்பிறப்பென்றும், பின்னர்க்கூறியது அவதாரமென்றும் சொல்லப்படும். அவதாரத்துக்கு ஜனன மரண துக்கமில்லை. பிறக்குந்தோன்றினும் அவர்க்குக்கிடையாது. ஜீவகோடிகளுட்பட்ட சுகர்முதலிய மகா தபோஞானவான்களெல்லாம் பிறவித்துன்பத்தையநுபவியாதுமாயையை வென்று பிறந்தாரென்னின் இயற்கையாகவே ஞானசொரூபராயிருக்குமீஸ்வரர்க்குப்பிறப்புஇறப்புத்துன்பமெப்படிச்சொல்லக்கூடும்.

ஒருமனிதனுக்கு இளமைமுதல் விருத்தாப்பியம் வரையில் பலபேதபருவங்களுண்டாவதுபோல் தேவாமிசமுள்ள வியாசாதிமகரிஷிகளுக்கு ஒருபிராரத்துவம் பத்துதேகம் வரையிலும் அநுபவிக்கப்படுகின்றது. அவர்கள் பிறப்பிறப்புத்துன்பமென்பதின்றி ஞானவடிவாய் மாயாரகிதராய் விளங்குகின்றார்கள். சிவப்பிரகாச சுவாமிகளும் தாமியற்றிய வேதாந்த சூடாமணியில்

"அறைந்தநுகர் வினையநுதா னுலோகயாத்திரைகளதிகரியாதுறுநார்க்கே யோருடம்பு தன்னில்,செறிந்துநுகர்வாமற்றனதிகிருதராகிச்சிறந்தமாபுருடர்க்குத் தசசங்கையுடம்பின்,— உறைந்தலதுதீர்ந்திடாதெனினும் மறைப்பின்றியுறுதலாலொருவனுக்கிங்கிளமைமுதல்பேதம், பிறந்திடினுமவனுக்கோருடம்பேயாய் நின்ற பெற்றிபோலாகுமென வுணர்ந்திடுவர்தெரிந்தே"

எனக்கூறியிருக்கின்றார். வியாசாதிமகரிஷிகளுக்கே ஜனன மரணத்துன்பமுறாதெனின்,சிவன்,தாய்வயிற்றிற்றங்கியோனிவாய்ப்பட்டுத்துன்புறுவாரென எங்ஙனஞ்சொல்லற்பாலது.

உருத்திரரே அவதாரஞ் செய்வாரென்பது.

சிவன், சங்கராசாரியராக அவதரித்தாரென்பதில் பூர்வபக்ஷியார் என்ன ஆக்ஷேபம் செய்கிறாரோ, அவ்வளவு ஆக்ஷேபம், சிவன், சிவனடியாராய் வருவதிலுமுளதெனவும், சங்கராசாரியராக அவதரித்ததினால் பிறவித்துன்பமின்றெனவும் அவதாரம் உலோகோபகாரமாகச் செய்யப்படுகின்றதெனவும்அதனால் மாயாசம்பந்தமின்றெனவும் கூறினோம். அன்றித்துரியசிவன், சிவனடியாராய் வருவதினாலுண்டாகும் அனேக ஆக்ஷேபங்கள் செய்து, அவற்றிலுள்ள மகத்தானதோஷங்களையெல்லாங்காட்டினோம். இந்தத்தோஷங்களெல்லாம் சங்கராசாரியாரவதாரத்திலுண்டாகாவோவெனின் உண்டாகா. சங்கராசாரியாராக அவதரித்தது எங்கும் பூரணராய்நீக்கமின்றிநிறைந்திருக்கும் நிஷ்கள நிர்விகார நிர்ச்சல துரியசிவனன்று; உருத்திரமூர்த்தியேயாம். உருத்திர மூர்த்திக்கு இப்படிப்பட்டஅவதாரமுண்டோவெனின் உண்டென்பதைக்காட்டுவோம்.

சூதசங்கிதை சூதகீதை.

சருவசாஸ்திர சங்கிரகமுரைத்த அத்தியாயம்.

திரிமூர்த்திகளுமவருடையதிகழுமவதாரங்களுநன்
கரியசிவத்தியானஞ்செய்தாலுமவிரும்பரமான்ம
வுரியதாயவிபாகத்தினுறச்சேர்ந்தவரேயல்லாமல்
விரியுஞ்சிவவிபாகத்திற்சேர்ந்தோரல்லர்மெய்த்தவத்திர் (௬)

அண்ணியமும்மூர்த்திகட்குமவரவதாரங்கட்கும்
புண்ணியபாவாதியிலைச்சிவாக்கினையாற்பொலிசிவர்க்
கெண்ணிதத்துக்காகவாவிற்பாவந்திரோபாவ
நண்ணியதேயல்லான்மற்றில்லையானன்குணர்வீர் (௭)

அவர்களுமற்றவர்களவதாரங்களுஞ்சிவராலேயோராலே,
கவர்தருபோகங்கதிக்காவுபாசனைசெயத்தக்கோர்களிலாத,
தவர்களுபாசனுவிடயமதசடிமேனுஞ்சாரங்கபாணி,
துவரார்பூவாணியினுமுருத்திரனேயதிகனென்றுசொல்வார்
நல்லோர். (௮)

வாயுசம்ஹிதை.

கடியதாயகலியுகம்வந்துறுங்காலே
வடிநெடுங்கண்ணிபங்கினன்மாதவம்பூண்டு
முடிவிலான்மறைதழுவியவாகமமுழுது
மொடியின்றுமியேயுறவிரித்துரைத்துறைகுவனல் (௭)

மார்க்கண்டேயபுராணம் பதினாறுவது சந்திரன், தத்தாத்திரேயர் தூருவாசர் அவதரித்த அத்தியாயம்.

"இவ்வண்ணம் பிரமன், விஷ்ணு, உருத்திரன் இவர்கள்கலைகள் அவ்வநுசூயைக்கு மூன்றுமக்களாய்ப் பிறந்தனர். தேவர்கள் கொடுத்த வரத்தின் ஏர்ப்பாட்டினால் பிரமனே சோமனும், விஷ்ணுவே தத்தாத்திரேயனும், உருத்திரனே தூருவாசனுமகாப்பிறந்தனர்."

வாயுசங்கிதை.

தேவர்களுக்குச் சிவாகமம் அளித்த அத்தியாயம்.

விரியுமாகமத்தை யண்ணறன்னருளால்யானுமெய்தெரியகத் தியநும், பொருவிலாருருவுந்ததிசியுமுலகிலுரைசெய்தேங்கலியுகம்பொருந்தி, மருவிடுந்தோறுமறு யோகாசாரியன் மாசறு வடிவாய்க், கரியுரிபோர்த்தோனெய்தி மற்றதனையுய்ந்திடக் கழறுவனன்றே. (௯)

சூநாவர்பெயரும் மாணுக்கர்பெயரும் உரைத்த அத்தியாம்.

அருந்தவச்சுவேதன்சுதாரன் மெய்த்தமனன்சுகோத்திரனருள் பெறுங்கங்கன்,பொருந்துலோகாட்சிசைகிடவியன்சீர்போற்றி டவுறைதிவாகரனற், றிருந்தியவிடபனுருத்திரன்றீதிலத்திரிசுவாலகன்சிறந்து, விரிந்தநூறெரிந்த கௌதமன்வேதசிரன்மிக விளங்குகோகன்னன். (௨)

உறைதுவ சிகண்டி செக்தழல்போலொளிதிகழ்வளர் சடாமாலி; மறைதெரியட்டகாசனும்வணங்குதாருகனிலாங்கலிமாலி, லறிவின்மாகாயன் சூலிமாசண்டிமுண்டிசன் சயிட்டுணுவருளா, னிறைதருசோமசன்மனற்றவத்தினி கரிலாதுறைலகுளீசன். (3)

எனுமிவர்யோகாசாரியாராவாரிவர்தமாணுக்கர்சுவே தன், வினையறுசுவேதசிகனுயர்சுவேதாசியனருண்மிக்க கற்றவத்தாற், றனையுணர்சுவேதலோகிதன்றபங்குதுந்துபிவளர்சதரூப, னனைவரும்போற்றவுறையிருடீசன்கேதுமாலருஷிகோசாவே. (4)

உருத்திரமூர்த்தி எப்படிப்பட்டவரெனின்,அகண்டபரிபூரண ப்ரம்மத்தின் பரியாயநாமம்பெற்ற துரியசிவன்,சத்துவகுணமாயைபிற்பிரதிபலிப்பதேயுருத்திரமூர்த்தியாம். மாயாபிரதிபிம்பர்என்றதால் மாயைபொய்யென்றும்சொல்மாத்திரையான இல்பொருளென்றும் அதனால் பிரதிபிம்பசிவனும் இல்பொருளென்றும் சூளைவாசி கூறுகின்றார். இவர் வேதமுதலிய சாஸ்திரங்கட்குக் கட்டுப்பட்டவரன்று. தான்தோன்றித்தம்பிரான் போன்றவர். ஆகலாற்றான் இப்படிச்சாஸ்திரங்கட்கு முழுமாறுகப்பேசுகின்றார். மாயையென்பதுசொல்மாத்திரமாயுள்ள இல்பொருளென்றிவர்க்குச்சொன்னவர் யார்? அத்துவிதசித்தாந்தத்தையறியாது, அத்துவிதிகளால் கண்டிக்கப்பட்ட பூர்வபக்ஷத்தையே மெய்யென்று நம்பி ஆழமறியாமல்காலையைத்தவர்க்கொப்பானார். மாயையென்பது சத்துக்கும் அசத்துக்கும் விலக்ஷணமென்றும் அநிர்வசனீயமென்றும் கூறி, இவர்க்குத தெளிவுண்டாகும்படி, 'ஓர் இந்து' என்பவர், இப்பத்திரிகையின் 11-வது சஞ்சிகையிலேயே விளக்கக்காட்டியிருக்கிறார். இதற்குப்பிரமாணமும் கூறுகின்றாம்.

சூதசங்கிதை.

வேதார்த்தத்தை யுரைத்த அத்தியாம்.

சாற்றுமாயாநிவிர்த்திதானதிட்டானமாய
தோற்றுசைதனியத்தின்சொரூபமானதுமற்றின்ப
மாற்றுமஃநிவிர்த்திதானுமபாவமாமனையமாயை
மாற்றருஞ்சதசத்திற்குப்பின்னமாய்வயங்குமாலோ

அப்படிப்பட்ட சதசத்விலக்ஷண அநிர்வசனீயமாயையானது சுத்தமென்றும் அசுத்தமென்றுமிருவகை. அச்சுத்த மாயையும், சத்துவம், ரஜசு, தமசு என முக்குணமாயுள்ளது. சத்துவகுணப்பிரதிபிம்பர் விஷ்ணு; இவர்க்குத்தொழில் காத்தல். ரஜோகுணப்பிரதிபிம்பர் பிரமன்; இவர்க்குத்தொழில் படைத்தல். தமோகுணப்பிரதிபிம்பர் உருத்திரர்; இவர்க்குத்தொழில் அழித்தல். அசுத்தமாயாபிரதிபிம்பர் ஜீவர்கள். இவரிலும் மூன்று பிரிவுண்டு. அசுத்தமாயைக்கு அவித்தை யென்று பேர். ஈஸ்வரரும் ஜீவரும் மாயாபிரதிபிம்பராயினும் சுத்தமாயை நிர்மலஜலம் போன்றது; ஆதலால்அதிற்றோஷமின்று. அசுத்தமாயை மலினஜலம் போன்றதாகலின் தோஷமுளது. சுத்தமாயைமோகஞ்செய்யாது; ஆகலின்ஈஸ்வரன் மாயையோடிருந்தும் மாயாரகிதனாவார். தமது முயற்சியினால்ப்ரமஞானம்பெற்ற ஆன்மாக்களே மாயையோடிருந்தும் மாயாரகிதராய்விளங்குகின்றாரென்னின் இயற்கைஞானத்தோடுங்கூடிய ஈஸ்வரன் மாயாரகிதரென்றெங்ஙனம் சொல்லக்கூடும்?

இன்னும் வரும்.

Chidambaram:—printed and published for the proprietor at the "Brahmavidya Press" No, - 38 Senkallooneer Pilliar koil street.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் நமதுப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

21

ஸ்ரீ
வித்யா
ஶங்கர

ரு-உக

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத்ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முதுவிஜய ரகுநாத

ராஜா பாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை ஆதரித்துவருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்,

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகஉ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

[illegible]
தேதி உ.ச.௨
[illegible]

(ஒப்பம்) தங்கள்,

[illegible]

ப்ரம்மவித்யா.

சிதம்பரம்:—நந்தனஸு மார்கழிமீ ௫௨

ஆரியாசார ரகசியம்.

விடியற்காலப்பிரகரணம்

பிராணாயாமம்

தொடர்ப.

[illegible]

அச்சுழுமுனையின் அடியில் எட்டுச்சுற்றுச்சுற்றிக்கொண்டுதனதுமுகத்தை அச்சுழுமுனையில் காற்றுநுழையும்வழியிலடைத்துவைத்திருக்கிறது. அதில்பிராணவாயுநுழைந்திட்டால் அதைப்புசித்துவிடும். இவ்வாயுவைப்புசித்தலாற்றான் இதைப்பாம்பென உருவகப்படுத்தி அழைப்பது வழக்கம். இனி அக்குண்டலினிஎவ்வளவுவாயுவைஉட்கொள்ளக்கூடுமோ அவ்வளவுக்குமேலானகாற்று உண்ணிரம்பஅங்கு சுழுமுனையில் காற்றேறும். ஆகலாற்றான்முதலில்கும்பகத்தால்காயாக்கினிஎன்னும்பித்தகோசத்தைத்தூண்டிப்பிரகாசம செய்விக்க அதனால்கொளுத்தப்பட்ட அக்குண்டலினிமெதுவாய் அவ்விடம் விட்டகலநேரிடும். இனி அக்கினிசம்பந்தத்தால் லேசானவாயு சுழுமுனையில் நுழையும. முதலில்காயாக்கினிவிருத்திசெய்தவுடன் இவனுக்குப்பெரியபசி ஒன்றுண்டாம். அதற்கு நல்லுணவுஏதேனும்கொடுக்கவேண்டும். அங்ஙனமன்றி ஏதேனும்விபரீதமான கள்முதலியஉணவுகளைக் கொடுத்திட்டால் அந்தோ! நெடுநாளாய் வேண்டிப்பாடுபட்டுழைத்துஎதிர்பார்த்தநல்லறிவுகெட்டு மிகக்கடையானவழியிற் சிதறநேரிடும். ஆதலாற்றான் யோகிகளுக்கு ஆகாரநியமமும்சொல்லப்பட்டதறிக. வாயுவை அற்பகாலம் உள்புறம்தடுத்தால்அது சரீரம்எல்லாம் வியாபிக்காது. உட்புறம் எல்லாம் வியாபிக்காதொழிந்தால் அது அதிசூக்ம சுழுமுனையில்நுழையாது. நுழையாதுழி சரீரத்தில் சுவாசம்தங்கி ஆயுட்பெருக்கம்கைகூடாது. ஆயின்கும்பகம்வெகுகாலம் நிற்கும் அப்பியாசம்செய்திடவேண்டும். இனி முடிவாகக்கூறிடில் பிராணாயாமம்என்பதுகும்பகமேஎனமுடியும். அதுமுதலி

Koviloor Digital Library

[illegible]

[illegible]

[illegible]

ற்றுனேசுலபமாகாது. அதையப்பியசிக்கும் முறையான து தொடக்கத்தில் மூன்றுமாத்திரைகள் உட்புறஞ்சுவாசம் இருக்கச்செய்யவேண்டும். அப்புறம் ஆறுமாத்திரைகள்; பிறகுபன்னிரண்டு மாத்திரைகள்; பிறகுஇருபத்துனான்கு என்பதாகிமுறையால் பூர்த்திசெய்திடவேண்டும். இக்காலத்தும்வடநாடுகளிற்சிலர் தண்ணீரில்மூழ்கி ஒருதினம், சிலவிடம்இரண்டு தினங்கள் மூச்சடக்கியிருப்பதாய்க்கேள்வி. முற்காலத்து மாதவத்தோர் அநேகவருஷங்களுக்குப்பிறகு சமாதியை ஒழித்திட்டுத் தன்ரேசகத்தை முடித்தார்களாம். ஆயின் யோகநூல்களுக்குப்பிராணனுப்உள்ளது பிராணுபாயாகசிபமேயன்றிவேறில்லை. பிராணுயாமம்செய்தவுடனேவலதுகாதைத்தொடவேண்டும். அதன்பயனைமுன்னரேவிரித்தோம். இங்குயாம்எடுத்தோதியது பிராணுயாமப்பயனில்ஓர்சிறுபாகமே. அதிகத்தைஅறியவிரும்புவோர்யோகநூல்களையும்வைத்தியநூல்களையும்ஆராய்ந்திடல்வேண்டும். சுருதிஸ்மிருதிபுராணஙகள் ஆகமங்கள் இவைகளிலும்இதன்மாண்பையறியலாம். இவ்வுண்மைகளைக்கண்டே புத்தமதத்திலுள்ளாரும் இப்பிராணுயாமவிஷயத்தில் மிகவும்சிரத்தையுடன்பாடுபடுவாராயினர். இதுநமதுஆரியசிரேஷ்டர் அநுஷ்டிக்கும்சந்தியாவந்தனத்தின் ஒருசிறுஅங்கமாம். ஓரங்கமிங்ஙனமாயின் இவ்வாறுபற்பலஅங்கங்களுடன்கூடிய வங்கியாய ஆரியாசாரத்தின் பெருமை அளவிலடங்கிடுமோ ! ஆரியர்காள்! நமதுபெருமையைக்கண்டு கட்புறுங்கள். இப்பிராணுயாமம்மெதுவாய் அப்பியசித்துவரவேண்டுமென்றேம். ஆயின்இதைக்கைவிடாது கொண்டாடுவீராக. மற்றதுபின்.

குருசிஷ்யவேறுபாடு

தொடர்பு.

ஐய். மார்க்கண்டேயகோத்திரம் லோகிதகோத்திரம் வசிஷ்டகோத்திரம் வத்ஸகோத்திரமுதலியபலகோத்திரங்களில் உதித்தவிப்பிரரும் இக்காலம் சிவாராதனஞ்செய்வதுமட்டில் தாம்ஆதிசைவர்என வழங்குகின்றார். அன்றிவேறுஎவ்விதசோதனையிலும் அவர்ஆகமோக்தவாதிசைவராகார். ஆயின்இக்காலத்துள்ள சிவத்துவிஜர் எவரும்உற்பத்தியில் சிவசப்பக்கம்பெற்றதனுல்பிராமணரிலும் வேறானவரல்ல. அவர்செய்யும் சிவார்ச்சனத்தொழிலாற்சிவவேதியர்எனப் பெயர்பெற்றனரென்பதேயுண்மை. இவரைக்குருக்கள்எனல் நடோளிற்றேன்றிய பெயரென்றேயெனச்சொல்லவும்வேண்டுமோ. இவர்க்குஆக்குருத்துவம்

Koviloor Digital Library

[illegible]

பிறப்பாற்கிடைத்ததல்லவோ? இதற்குப்பிரமாணங்கள்பலவுள. சிலகாட்டுவாம். ஒவ்வொருஸ்தலபுராணத்திலும் ஆதியில் ஸ்தலங்கள் காடாயிருந்ததாகவும் அங்கு நிஷ்டையின் றிப் பிராமணர் ஆராதித்ததும் ஆகமோக்தமே தவாலயவின்மையு ம்நன்கு புலப்படும். இனி ஆகமங்களோ அளவிறந்தவழிக ளால் ஆலயங்களைக்கட்டும் முறைகளை ஓதுகின்றன. அவ்வ மைப்புடன் உள்ளவாலயங்களைப்பாமரர்கண்டாலும அவ ருமத்ருதத்துவத்தை யறிந்துண்மைகடைப்பிடித்துநடப் பார்என்பதுதிண்ணம. ஆயினும் இத்தேசத்தில் அவ்வனுஷ் டானம்மட்டில்வேதாதிகளைப்போல ஆதியிலமைந்ததல்ல. இங்குண்மையிது:--வேதங்களைப்போல ஆகமங்களும் இத் தேசத்தில் ஆதியிற்றானே வழங்கினவாயின் எந்தக்ஷேத் திரமும் ஒருவிமானமின்றியும ஒரு பிண்டிகையின்றியும் இராது. ஒவ்வொருபழையஸ்தலமும் அப்படியேயிருக்கி ன்றது. ஆயின் ஆதிகாலத்தில சுயம்புதேவம் ஆரிஷமெ னும்லிங்கங்கள் எல்லாம்கேவலம லிங்கமாத்திரையாய்பி ண்டிகாதிகளின்றிச்சர்வகாலங்களிலும் சர்வருணத்தவ ராலும் பூசிக்கப்பட்டுவந்தது. பிறகு ஒருசோளராஜன் த க்ஷிணதேசத்தையாண்டகாலத்தில் வடநாட்டில் மந்திர காளியினருகில் இருந்தசிலவிப்பிரர் தென்னாட்டுக்கழை க்கப்பட்டார். அத்தேசம் திருலிங்கமாகவே அவர்எழுந்து த்துவக்கி சிவபூஜைசெய்யும்வாசனையால் அவர் எல்லோரு ம்சிவசாஸ்திரங்களில் அதிகவபிமானம்வைத்து அவற்றி ற்கண்டவாறுப்லாராயினர். அவர்கள்வந்தபின்னரே தெ ன்னாட்டில்சிவாலயங்கள் ஆகமோக்தங்களாகக்கட்டப்பட் டன. அதற்குமுன் இத்தேசத்தில் இவ்வாகமங்களேஇல்லை யோ அவைகள் இருந்தும அநுஷ்டிக்கப்படவில்லையோ உண் மைவிளங்கவில்லை. மேலும் திருக்காளாத்திமான்மியத்தில் வேடுவர்குலதிலகரானஸ்ரீமத்கண்ணப்பதேவர் எனப்படும் ஸ்ரீகாளநாதன் அங்குசிவபரஞ்சுடரின் அருட்டிருமேனி யை அருச்சித்ததனால்என்றுமழியாச் சுகவீடுபெற்றார் என வோர்திவ்வியசரித்திரம் உளது. அதேசங்கதிபத்மவிலாசத் தும் காணப்பட்டது. அச்சங்கதியை ஸ்ரீமதாசாரியசுவா மிகளும் சிவானந்தலகரியில் துதித்திருக்கிறார்கள். ஆயின் அக்காலம் ஆகமோக்தசிவாராதனம் அவ்விடம்நடக்கு மேல் வேடுவரும் வழிபடவிடங்கொடுக்காது. இம்மட் டோ! அப்பேரருட்டிருவிலிங்கத்திருமேனியைக்காட்டா ளையும் கிராதகமும் மற்றுப்பட்டுப்பூச்சியும் பூசித்தனவெ ன்றும் அவர்களுக்குமெய்ப்பேரருட்டிருவருட்பெரு க்கத்தாற்றிருவருட்டிருவிலிங்கத்திருமேனியில் ஐக்கியம் கிடைத்ததற்குச்சான்றுகளின்றும் அம்முப்பொருள்களி ன் அம்சம் அத்திருமேனியிற்காணப்படுகின்றன. இனி அச்செந்து தீக்ஷைபெற்றே பூஜித்திருக்கவேண்டுமெனில்

Koviloor Digital Library

[illegible]

[illegible]

சித்தாந்தமாமா? இனி வைதிகராவது அவைகட்கு வைதிகவிதிப்படி சிவாராதனயோக்கியதையுண்டென ஒப்புவாரா? கருணையால கடவுளவரையாண்டார் என்பதேயன்றிவேறென்பரா? ஏனெனில், அதற்கு அவர்கூறும்சமாதானம்: இவ்விதக்கதை இதில்மாத்திரமல்ல. கஜேந்திரமோக்ஷத்திலும் திருவானைக்கா, திருக்காளத்தி, திருவாலவாய், திருவாரூர்முதலிய திவ்யக்ஷேத்திரமான்மியங்களிலும் மற்றப்புராணங்களிலும் உள்ளதே. ஆங்காங்கு உண்மையாராய்கிடின் அவரெல்லாம்முற்பவத்தின் நம்மலமெரித்தமூதறிஞராயினும் ஏதோ பிரார்த்தவசத்தினுல்இச்சரிரம்தாங்கியும் மூர்சரீரவவிவுடன்முக்கண்ணன் றிருவடிமறவாது அவனைவழிபட்டுவீடுபெற்ருர். ஆகவேதீக்ஷைமுதலியதுசிவாராதனகாரணமாகாது. அதில்லாவிடம் சிவனேசம் உற்பவித்தலாலும் அதுள்ளவிடம் சிவனேசமின்மையாலும் அறிபலாம் என்பது. ஆயின் எவரும்பூஜைசெய்ய விரும்புவோர் பூஜிக்கவிடம்முற்காலத்தில் கொடுக்கப்பட்டது. அக்காலத்தவர்செய்த சிவாராதனத்தால் கண்ணுதலாற் கருணைமாரிபொழியுமிடம் தீக்ஷை எதிர்பார்க்கப்பட்டதில்லை. ஆயின் இக்காலத்துச் சிவவிப்பிரர் குருத்துவம் விருத்திக்கென்று வைத்துக்கொண்டதேயென்பது நன்கு புலப்படும். ஆதலாற்ருன் ஸ்ரீ சைலம்முதலிய க்ஷேத்திரங்களில் இன்றும்வருணத்தில் கீழானவராயினும் ஆராத்தியரே ஆராதிக்கின்ருர். இனி சூத்திரரே ஸ்ரீபுருடோத்தமம் திருப்பழனிமுதலிய விடங்களில்பரிசாரகம் செய்துவருகிருர். ஆயின் இக்காலசிவாராதனைசெய்வோர் நிச்சயமாய் நியதசிவபூசைத்தொழிலாளர் என்பதும்குருக்கள்என்பதும்இடைக்காலத்துவழக்கே எனத்துணிக. ஆயின்இதுவிஷயம் யாம் சொல்லவேண்டுவது அதிகமில்லை. இனி சிவாகமங்களில் சொல்லப்பட்டவர் எங்கேனும்இருந்து எச்சிவாலயாராதனமாயினும் செய்வாராயின் அவரைக்குருக்கள்என்று ஒரு வழியிற் சொல்லலாம். அவரோஇக்காலத்தில்லை என்று நிருபித்திட்டாம். இனி ஏதோ கைலாயத்தில இவர்களுக்கு நான்குமடங்கள் உள்ளனவென்றும் அவரே பூமியில்வந்தார் என்றும் பூமியில்கோதைநதிக்கரையில் உள்ளநான்கு மடங்களே அவரது எனவும் அம்மடபரம்பரை பிறந்தவரே இவர் எனவும் கூறும் கூற்றெல்லாம் பிரபல பிரமாணவிரோதமில்லாவழி பிரமாணமாகலாம். இனி அற்பப்பிரமாணத்தாலும் மறக்கப்படுமியல்பினதும் துணிபற்றதும் சகல ஜந்துசாதாரணமுமான சிவார்ச்சகத்தன்மையைப்பற்றிவந்தகுருத்துவமே சம்சயத்திற்கிடமாகவே அவரைஜகத்குருவாக்கவந்தவோர்வைதிகதாந்திரிகரிடம், ஓதூலிகாய்! நீஏதும்சேஷ்டிக்கவேணடாம். அது அவர் மனப்பாலாம். நின்சமீபத்தவர் மயங்காவண்ணம் உண்மை பகர்ந்திடுவாய். நண்பர்காள்! பிறப்பாற்குருவெனவழங்கிடும் புலவர் புன்மைநனகறிந்தீர்கள்? இவர் உலகம் ஊக்கமற்றதறிந்து பெரும்பட்டம் வகித்து மோசஞ்செய்தனர். அவர்களுக்கு வேதங்களாலாவது ஏதுமில்லையாதலின் வேதங்களையவர் ஓதார். ஆகமோக்தமுத்திரைகளையும் நன்கறியார். ஏதோ பூஜைஎன்றொன்றை முடித்திடுவார். வடநாடுகளில்இன்னியமமில்லை. இனிவிஷ்ணுவர்க்கத்தவரைக்கவனிப்பாம். அவர்கள்தேவாலயபூஜைஒன்றைக்கொண்டே தாங்கள் ஆசாரியர்என்பர். அவர்கொள்

Koviloor Digital Library

[illegible]

கையில் பகவத்பக்தன் ஆசாரியனாகலாம். ஒருவன் ஆசாரியனாக வேண்டிக்கடவுளை நந்தவாலயங்களில் பூஜைசெய்யவேண்டிய அவசியமில்லை. அவருள் மூன்றுவகுப்பு. "வைகானசர், பாகவதர், பாஞ்சராத்திரிகள்" என. இவர்கள் முறையே வைகானசம் பாகவதம் பாஞ்சராத்திரம் இத்தந்திரங்களிற்கண்டபடி பூஜிப்பவர். அவர்களுள் குருத்துவச்சண்டையில்லை. உட்கலகம் வேறில்லை. அவருள் பூஜைசெய்வதால் உண்டாகும் புண்ணியம் குருத்துவரூபமாய் ஒழிவதில்லை. ஆனால் வைதிகரும் சிவவிப்பிரரும் போலவே அத்தேவார்ச்சகர் மற்றவருடன் சம்பந்தம் செய்வதில்லை. அர்ச்சகருடன் மற்றவைதிகர் அங்கும் சம்பந்திக்கார். இனி வைதிகருக்கும் சிவவிப்பிரர்க்கும் மதத்திலும் மற்றைய ஸம்ஸ்காரங்களிலும் வேற்றுமை இருப்பதால் இவர் சம்பந்திக்காதொழியின் ஒழிக. பின் ஒரே மதத்தில் இருந்து ஒரே பரமான்மாவை வழிபடுமியல்பினரானவர் ஒருவருடன் மற்றவர் சம்பந்தியாது நிற்கக்காரணம் அவரே அறியார்போலும்! சிவவிப்பிரர்க்கு ஆகமம் முக்கியப்பிரமாணம். வைதிகருக்கு வேதமே முக்கிய பிரமாணம். அவர் மதம் சுத்தாத்வைதம், இவர்மதம் அத்வைதம். வைதிகருக்கு வேதத்தவ்வளவு ஆகமங்களில் மதிப்பில்லை. சைவப்பிராமணர்க்கு ஆகமங்களவ்வளவு வேதங்களில் மதிப்பில்லை. அவர்கள் ஏதோ சோதனைக்கு நிற்காச்சிவசிருஷ்டிதாமென்பர். வைதிகர் தாம் வேததிற்கண்ட பிரமசிருஷ்டியே என்பர். இவ்விருவர் சம்பந்தித்தல் கூடாதகாரியமே. இனிப்பாகவதருள் அனேகமாய் இவ்விதஉள்வேற்றுமைகள் தெரிபவில்லை. இருவருக்கும் வேதாகமங்கள் பிரமாணங்கள். இருவரும் ஸ்ரீராமாநுஜமதத்தவரே. இருவரும் அர்ச்சாராதனம் செய்பவர். இருவரும் ஒருவிதபஞ்சஸம்ஸ்காரம் பெறுபவர். இருவரும் ஒருவிதபுண்டரம் தரிப்பவர். இருவரும் ஆசாரியத்வம் வகித்துக்கொண்டவர். அங்ஙனமாயினும் அவர் சம்பந்திக்காதது எக்காரணத்தாலோ அறியேம். வைகாநசருக்கும் பாஞ்சராத்திரிகளுக்கும் சம்ஸ்கார வேறுபாடிருப்பினும் பாஞ்சராத்திரவழி நிற்பவரே "ஒருவருக்கொருவர் சேராவழி ஏது" எனமறித்தும் கேழ்விபிறக்கும். ஆராயின் அவரிடம் ஆசாரியத்வம் பெயர்மாத்திரையில் அமைந்ததாயிற்றென்க! எங்கும் குருசிஷ்யவேறுபாடுண்டானது இக்கலிகாலக்கொடுமையைத்தவிர வேறு ஏதென்போம்.

அதிகம் வேறிடமுள்ளது சுபம்.

ஸம்ஸ்கிருதபாஷை.

வைத்தியம்

தொடர்பு.

ஐய, இனி வைத்தியத்தில் உள்வேற்றுமைகளைப்பற்றிச்சொல்லவேண்டியது இச்சமயம் எ ம து க ட மை. அங்கு ரஸவைத்தியத்தில் சொல்லப்படும வைத்தியம் எல்லாம் ரஸமெனும் ஓர் பதார்த்தத்தைக்கொண்டே நடத்தப்படும். ரஸத்தில் தோஷங்கள் அனேகம்; குணங்களும் பல அதில் குற்றங்களைக் களைந்திடாவழி எப்பொழுதும் அதனிடம் குணங்காண்பதரிதாதலின் குற்றங்களையக

Koviloor Digital Library

[illegible]

ற்ற கல்வழிதேடவேண்டும். அதற்குச்செய்யும் ஜாரணம் பந்தனம் மாரணம் முதலிய சம்ஸ்காரங்கள் எதுவும் எந்திரங்களின்றி சாத்தியமில்லை. ஆயின் ரஸவைத்தியத்தை அறியவிரும்பும் ஒருவன் எவ்விதத் யந்திரங்களை யறியவேண்டுவதவசியம். யந்திரங்களை நன்கறிந்தால் அதனால் ஜாரணம் முதலிய ரஸஸம்ஸ்காரங்களை நன்றாய்செய்துமுடிக்கலாம். அச்சம்ஸ்காரங்களால் அதனுள் அமைந்த மலம் ஒழியும். அம்மலமொழிக்கவழி நின்மலரஸத்தில் அதன் குணங்கள் மட்டில்இருக்கும். இனி சுத்திசெய்த ரஸம் ஒன்று கையில் கிடைத்திட்டால் அதனால் எல்லா உலோகங்களையும் உபலோகங்களையும் எல்லா ரத்தினவர்க்கங்களையும் இஷ்டமானபடி வைத்தியத்தில் வழங்கிடச்செய்துகொள்ளலாம். ரஸவைத்தியத்தில் ரஸமேபிரதானமாயினும அதுடன் ரத்தினத்தையும் சேர்த்து வேலை செய்வதுசிதம் என்பது சிலர் கருத்து. ஆகலாற்றான் "ரஸரத்தினசமுச்சயம்" என்னும்கிரந்தத்திலுத்தமான ரஸத்தைக்காய்ச் சரக்காகவைத்துகொண்டு அதன்வழியால் எவ்வித ரத்தினமும் பஸ்மம் அல்லது சிந்தூரமாகச் செய்யப்பட்டுவைத்தியத்துக்குபயோகப்படுத்தப்படுகிறது அவ்வித ரஸவைத்தியத்தில் பிரவிபாகியமென்கிற ரஸாயனதந்திரத்திற்குபயோகம் அதிகமாதலால் வடமொழிவல்லார் எவரும் இவ்வருமை நிறைந்த ரஸவைத்தியத்தை அப்பியசித்தால் மிகவும் சுகம்உண்டு. மேலும் இந்த ரஸவைத்தியம் ஒன்றையே நன்குபயின்றவர்க்குஉலகத்துள்ள பதார்த்தகுணங்களைப் பகுத்தறியும் நல்லறிவுமஉண்டாம். அவ்வறிவு வைத்தியங்களெல்லாவற்றிற்குமே சாதகம். நிற்க, வாய்மாத்திரையால் "இது வாதம், இது பித்தம்" என வீண்காலங்கழிப்பதால் உண்மையறிவதுகஷ்டம். பொருள்களின் குணதோஷநிச்சயம் உள்ளவனே வைத்தியனுவான். மற்றவன் வைபத்தியனெனப்படுவான். சிந்தாமணியில் "பொருள்களின் ரஸம், வீரியம், பாகம் இவைகளை அறிந்தவனே வைத்தியாதிகாரி" எனச்சொல்லப்பட்டது. ஆயின் பதார்த்தங்களைச் சோதிக்காது விநியோகித்திட்டால் அவைகுணம்செய்யாததோடொழியாது குற்றத்தை மிகப்பயக்கும். உதாரணம:—இயற்கையில சேர்வாளம், எட்டி இவை வெகுகடுமையுள்ள விதைகள். இலிங்கம் என்பதோ விஷசத்துள்ளது. அவைகளைச் சோதித்து வைத்தியத்தில் உபயோகித்திட, அவைகுணங்களைக்கொடுக்கின்றன. ஆயின் அவற்றுள் குற்றங்களைப் போல் குணங்களும உள்ளனவென்பது இனிது புலப்படும். அவற்றுள் குற்றம் மாத்திரம உள்ளதானல் அக்குற்றத்தை நீக்கினுல் உருவுக்கே மோசம் நேரும். மிருந்தியாபதும் குணமாகாது. இனிக் குணமட்டுமே உள்ளதனில் அதைச்சோதிக்காது விநியோகித்திட அது பெருந்தீங்குசெய்யாது. ஆயின் உண்மையும்பொய்யும் கலந்தவிடம்விவேகியானவியாபாதிபதி அவற்றைப்பிரித்தறிவது போலக் குற்றங்களை நீக்கிக்குணங்களைஉபயோகிக்கவேண்டுவது விவேகியாகிய வைத்தியர்கடமை. ஆதலாற்றான பதார்த்த குணபாடத்தில் ஒவ்வொருபொருளுக்கும் குணங்களும் குற்றங்களும் சொல்லப்பட்டன. இனி பொருள்களை சுத்திசெய்யாது விநியோகித்தலால் வருங்கேடுபலவிதம் என்று சுத்திநூலில் ஒவ்வொருபொருளுக்கும சுத்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

றிசொல்லப்பட்டது. இச்சுத்திநூலில் சொல்லப்பட்ட சுத்தியை யறியாமலும் அச்சுத்திச்செய்யாமலும் பதார்த்தங்களை விநியோகம் செய்பவரை துர்வைத்தியர் எனவைத்தியநூல் குறைகூறியது. ஆயின் ரஸவைத்தியத்தையறிய வேண்டியது வைத்தியவுண்மையறியவிரும்பும் எவர்க்கும் இன்றியமையாதது. இனிரஸவைத்தியவைத்தியசாஸ்திரமட்டில் உபயோகப்படுவதன்று. மற்றுயோகிகளுக்கும் பல கற்பசாதனங்களுக்குதவுவதால் இந்தரஸவைத்தியத்தையோகிகளும் விரும்புவார். ஆதலாற்றான் ரஸவைத்தியத்தைத்திவ்யவைத்யமென்பர். இந்தரஸவைத்தியசாஸ்திரத்திற்கண்டபடி ரஸத்தைச்சோதித்திட்டால் அதுரோகத்தையட்டில் ஒழித்து நிற்காது முதுமையையும் கூடச் சிலவிடம் ஒதுக்கும் என்றும், சிலவிடம் மரணத்தையும் கூட ஓர்புறம் ஒதுக்கும் என்றும யோகிகள் கருதுகின்றனர். ஆயின் யோகியானவன் சிவவீரியம் என்றும் ரஸத்தைத் துதிக்காநிரான். இந்த ரஸம் சிவவீரியம் ஆதலால் அதில் ஜீவசக்தியும் இருப்பதாய் அனேக யோகிகள் கருத்து. எல்லாப்பதார்த்தங்களிலும் அமைந்த ரஸமே ரஸமெனப்படுமென வைத்தியர் கூறுவர். வைத்தியர் வழிபடுங்கடவுளே ரஸமெனச்சொல்லத்தடையென்ன? ஆகலாற்றான் சிந்தாமணிநூலுடையார் ஆரோக்கியசாலை ஒன்று கட்டி அதில் ரஸத்தைச்சுத்திசெய்து இலிங்கவடிவமாக்கிப் பூஜைசெய்துவந்தால் ரோகங்கள் எல்லாவற்றையும் ஆரோக்கியப்படுத்தலாம் என்றார். இங்கு ரஸவைத்தியத்தில் சிறிது கூறினும். அதிகம் சமயம்நேர்ந்துழி எழுதுவாம். இந்த ரஸவைத்தியம் ஆரியர் மட்டில் அறிந்த அருமையான வைத்தியம் என்பதாம்.

பின்வரும்.

கடிதம்.

கைம்பெண்களுக்கு மறுமணம் அவைதிகமென்பது.

ஐய, இத்தேசத்தில் நம்மவர் அநுஷ்டித்துவரும் விவாககன்மம் மற்றதேசத்தவர் கொண்டதுபோல இம்மைப் பயனைமட்டும்கருதியதல்ல. மற்று மறுமையிலும் சிலபயன்களைக்கருதியே அனுஷ்டிக்கப்படுவது. இம்மையிலும் விவாகத்தின்பயன் ஆரியருக்கு இன்பமட்டேயல்ல. அனேகநன்மைகள் விவாகத்தாற் சாதிக்கற்பாலனவென்பது திண்ணம். 'காற்றினால் உலகத்துள்ள எல்லாஜந்துக்களும் பிழைப்பதுபோல இல்லறத்தைத்தழுவிய சர்வாச்சிரமங்களும் பிழைக்கின்றன' என மனுகூறியவாறு சர்வகன்மங்களையும் குற்றமற நடத்தக்கூடியவாற்றல் இல்லறத்தவர்க்கே என்பது திண்ணம். தைவம், பைதிருகம், ஆர்ஷம் முதலிய கன்மங்கள் எதுவும் இல்லறத்தவனாற்றான் செய்யப்படுகின்றன. ஆதலாற்றான் காளிதாஸகவியும் 'உனது ஆச்சிரமம் சர்வோபகாரங்களையும் செய்யும் பேராற்றலுடையதென்றார் இவ்வில்லறம் குறைவற நிறைவேறுதல் சிரத்தையாலும் நற்றுணைவியாலுமன்றியமையாது. ஆதலாற்றான் ஆரியா பெண்டிரை இல்லறத்துணைவியென்பர்.

வரும்.

Koviloor Digital Library

ஓம்॥

SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்

அநுபந்தம்.

௬ - ம் புத்தக।]   சிதம்பரம்.   நந்தன௵ மார்கழி௴ ௨௨   [இலக்கம் ௨௧

சங்கராசாரியாரது அவதாரமகிமை.

தொடர்ச்சி.

இதற்குப்பிரமாணம்வருமாறு—:

சூதசங்கிதையில் சூதகீதை

பரமவிஞ்ஞானமுரைத்தஅத்தியாயம்.

கருளொளியாற்கழிவதுபோற் கதிர்த்த சிவஞானத்தான், மருளுருஞானங்கழியுமற்றந்தவஞ்ஞான, மிருளவித்தைமாயையெனவிருருவமாயிருக்குந்,தெருள்படைத்துமேலாயதிறத்துற நின்றிவற்றுள். (௫)

மூன்றுமவித்தையாற்பசுபேதமுமொய்வலியமாயையாற, பன்றுபரதத்துவபேதமுங்கற்பிக்கப்பட்டதுவாங்,மன்னுதேகேந்திரியாதிவாசனுபேதத்தாலே, பின்னுபேதமாமவித்தைபேசுபசுபேதத்திற்கும். (௬)

குணங்களுடையவாசனுபேதத்தால்கொள்பேதமா,யிணங்கவிருக்குமாயையிபரதத்துவபேதத்திற்கு, முணங்கலறுகாரணமாகுமொழியாப் பவஞ்சமயக்கொழியப், பிணங்கலறுநன்னெறிநின்றபெரியீர்காண்மும்மூர்த்திகளுள். (௭)

உயர்சத்துவகற்குணதேகமுடையனுயுஞ்சங்கார, மயரத்தகுதமோகுணமதுடையனுயுமவிர்கின்றே,னியலிற்பொலியுமுருத்திரனுமிவைதாமதவன்குணவுடம்பும், வயமார்திதிக்காச்சத்துவகற்குணமுமுடையோன்மாயவனே. (௮)

இதைச்சமஸ்கிருதப்பிரகாரம்விரித்துச் சொல்லுகின்றோம்.

பிரம விஷ்ணு உருத்திரர் வேறுவேறாக விருப்பினும் பரமான்மாவினது அமிசமாவர். சிவக்கூட்டத்திலிருப்பவரன்று. சிவர்க்கு உபாதி அவித்தை; மாயையன்று. மாயைபரமான்மாவுக்கு உபாதி; வேறொருவர்க்கல்ல. மாயையினது காரியமான குணங்களால் மறைவுபட்டவர் பிரமவிஷ்ணு உருத்திரர் மாயோபாதியிலுள்ளவர் பரவியூகங்களாவர்; சிவவியூகத்திலிருப்பவரல்லர். பரமான்மாவினது வியாபகமாயிருப்பது பிரம விஷ்ணு உருத்திரர்க்குச்சரிய னலும் அதிலுருத்திரர் ஒருவரேசிரேஷ்டர்.

மாயையென்னும் பேர் பெற்ற அஞ்ஞானரூபபேதத்தால் பரமாத்துமா தன்மையை யிலக்கணமாகவுடைய பேதங்கற்பிக்கப்பட்டிருக்கிறது. கடாகாசமகாகாசங்களது பேதமெங்ஙனங்கற்பிக்கப்பட்டதோ அங்ஙனமே சிவாத்துமா பரமாத்துமாக்களுக்குப்பேதங்கற்பிக்கப்பட்டது. சிவர்களுக்குப்பலதன்மையெங்ஙனங்கற்பிக்கப்பட்டதோ, அங்ஙனமே பானுக்கும் பல்தன்மை கற்பிக்கப்பட்டது. சுபாவத்திவின்றெங்க. அங்ஙனமே பானுக்கு ஏற்றத்தாழ்வு தன்மையுங்கற்பிக்கப்பட்டது.தேகேந்திரியமுதலிய வற்றிலுண்டான வாசனுபேதத்தால் வேறுபட்ட அவித்தையானது சிவபேதத்திற்குக்காரணமாகும். மற்றொன்றல்ல. குணங்களுடைய வாசனுபேதத்தால் பேதிக்கப்பட்ட மாயையென்பதியாதோ அது பர பேதத்திற்குக்காரணமாகும்; மற்றொன்றல்ல. எவர்க்கு மாயையிலிருக்கின்ற சத்துவமானது சரீரமாமோ, தமமானது குணமாமோ, திரிமூர்த்திகளுக்குள் சங்காரத்தின்பொருட்டு அவர் உருத்திரராவர்; மற்றொருவரல்லர். எவர்க்குத்தமமானது சரீரமாமோ, சத்துவமானது குணமாமோ, திரிமூர்த்திகளுக்குள் பரிபாலனத்தின்பொருட்டு அவர் விஷ்ணுவாவர்; மற்றொருவரல்லர். எவர்க்கு ரஜஸானது சரீரமாமோ, அவ்விரஜசே குணமாமோ, திரிமூர்த்திகளுக்குள் சிருஷ்டியின்பொருட்டு அவர் பிரமாவாவர்; மற்றொருவரல்லர்.

ஷை வேதப்பிரமாணியவிசாரமுரைத்தஅத்தியாயம்.

தேவதேவனுயிருக்கின்றவனது கூடாததைக் கூட்டிவைக்கின்ற மாயையென்னும் சத்தியொன்றுளது. மாயையென்னும் அந்தச்சத்தியால் யாவுங்கூடும். சிவனுடைய அந்தமாயையானது பிரசித்தமானது. ஆயினும் உண்மையாயில்லை. சமுசயமில்லை. கூடாததைக்கூட்டிவைக்கின்ற அந்த மாயையால் சத்தாயிருக்கின்ற சிவனிடத்தில் எல்லாங்கூடும்.

ஷை விசேஷசிருட்டியுரைத்தஅத்தியாயம்.

கருத்தாவாயபரசிவன்றன்மாயையொடுவேறறக்கலப்புற்,றிருப்பானெனினும் பூர்வகற்பத்தினியைவாசனையானும், கருச்சாய்த்துயர்ந்திர்செறிகாலகருமவனுகுணமதாயுந், தருக்காநின்றமாயைக்குந்தனக்கும்பேதங்கற்பிப்பான். (௨)

அறையாநிற்குங்கற்பிதமானதுவாத்துவமல்லாமையால், குறைத்தீர்ந்திர்கற்பிதபேதங்கூறுஅபேதம்பாதியா, திறைபின்பூர்வேட்சணவாசனையாலிட்சிதாவுமாய், மறைதன்மாயையொடுகூடிமாயாகுணபேதங்களால். (௩)

திரிமூர்த்திகளைப்படைத்தவர்க்குந்திகழந்தரியாமியாயிருப்பான், றுரிசிலவரும்பரதத்துவபேதத்தான்முத்தொழில்செய்வா, ருரியவிசேடரூபத்தொவ்வொருவரொவ்வோர்காரியத்தைப்,பிரியமருவச்செய்வார்கள்டேணியுணர்மின்மாதவத்திர். ()

ஷை பஞ்சப்பிரமவிசாரமுரைத்தஅத்தியாயம்.

பரசிவன் மாயையினுலே யைம்பிரமவுருவானுன் பகரம்மாயை, விரவுமசாத்தியமானசெய்கைகளைச்செய்வதனுல்விளம்பம்மாயை, யுரவுறுசமபந்தத்தாலேசக்காரணத்துவமுன்னுகியுள்ள, பரவுறுமெல்லாமந்தப்பரசிவற்குண்டாயினவால்டளகிலீரே. (௰௨)

பரசிவசோநுபவிசாரமுரைத்தஅத்தியாயம்.

மறைமுதல்தனக்குநாமரூபங்கள்மருவுதலில்லையேயெனினுங், கறையறவிளங்குமாயையினுலேகற்பிக்கப்பட்டனவாகும்முறையச்சிவன் மாதேவன்முற்பெயர்களுருத்திரனுமங்களாகுமறைபரம்பிரமமுதற்பெயர்பரதத்துவவிர்வாசகமாமால்.மிக

Koviloor Digital Library

வாயுசங்கிதை.
உருந்திரன்வெளிப்படுமத்தியாயம்.

உறையுமாயையுடன் கூடியுறைவோய்நின்னைத்தொழுதிடுவாம், நறைதாழ்மாலைமுடியமரர்நாடுமுதலேவணங்கிடுவோம், நிறையுமுலக மெவற்றினுக்குந்தாயாய் நின்றோய் நினைத்தொழுவாம், மறையுமந்தவுலகுருவாயமருமணங்கேயடிபணிவாம். (௬)

ஷ வாயுசங்கிதை-சிவஞ்சந்நியுருவிபூதியுரைத்த

அந்தியாயம்.

மாயையினின்றுமுக்குணப்பகுதிவந்திடும் வந்தமற்றதனி, லேய்வுறக்குணங்கள்மூன்றும்வந்திடுமாலவற்றினிலிறைவர்மூவர்களோ, டாயிருபத்துமூன்றுதத்துவமுமெய்திடுமெவற்றினாலவி, ஞாயபேரண்டமுடம்புகள்வந்துதொடர்ந்துறத்தோன்றிடுமன்றே. (௭)

யஜுர்வேதத்தில்
கைவல்லியோபநிஷத்.

அவனே (அந்தப்பரமாத்துமாவே) மாயையினாலேமோகிக்கப்பட்ட அந்தக்கரணத்தையுடையவனாய்ச்சரீரத்தை யடைந்து சகலத்தையுஞ்செய்கிறான்.

சுக்கிலயஜுர்வேதத்தில்
நிராலம்போபநிஷத்.

(௭) ஈஸ்வரன்யார்? அவருடைய இலக்ஷணம்யாது?
பிரமமே தன்னுடைய சக்தியாகிறபிரகிருதியினாலே (ஈஸ்வரனென்கிற) பெயரையடைந்துஉலகங்களைச்சிருஷ்டித்து (அதிலே) அந்தர்யாமியாய்ப்பிரவேசித்து, பிரமாமுதலானவர்களுடைய புத்தியிந்திரியங்களுக்கு நியாமகனாயிருப்பதினாலே ஈஸ்வரனாகிறான்.

சுக்கிலயஜுர்வேதத்தில்
பைங்களோபநிஷத்.

அதில் (மூலப்பிரகிருதியில்) பிரதிபலித்ததுவோ, அது ஈஸ்வரசைதனியமாயிருக்கிறது. அவன் (ஈஸ்வரன்) மாயையைச்சுவாதீனமாயுடையவனாயும் சர்வக்கியனாயும் சிருஷ்டிதிதிலயங்களுக்கு ஆதிகர்த்தாவாயும் சகத்துக்கு முதலாயுமிருக்கின்றான்.

இதுவரையில்ஈஸ்வரன்மாயோபாதிகனென்றும்மாயைநிர்ம்மலஜலத்தைப்போன்றதென்றும்அதோடுகூடியமாயைமோகஞ்செய்யாதென்றும் ஈஸ்வரன் சுயஞ்ஞானவடிவினனென்றும்சர்வஞ்ஞத்துவாதி குணங்களுள்ளவனென்றும் அந்தமாயைசதசத்திற்குப்பின்னமென்றும் கூறிப்பல சுருதிமுதலிய பிரபலசப்பிரமாணங்கள் காட்டினோம். அது பற்றியே மாணிக்கவாசகசுவாமிகளும் 'அந்தணனாகியாண்டுகொண்டருளி, இந்திர ஞாலங்காட்டிய இயல்பு' என்றும், 'சுந்தரவேடத்தொரு முதலுருவு கொண்டிந்திரஞாலம் போல வந்தருளி' என்றும், 'பொய்மையும் ஆயினார்க்கு' என்றும், 'மாயனே' என்றும், 'பேதங்களனைத்துமாய்' என்றும், மாயவனப்பரிமேல்கொண்டு'என்றும்கூறினார். துரியசிவன்,மாயாசத்தியோடுகூடாதுயாதொருசெயலுஞ்செய்யமாட்டார். அது பற்றியே மாணிக்கவாசகசுவாமிகள், தமக்கு உபதேசஞ்செய்தகோலங்களையும், யாவுமான தன்மையையும் இந்திரசாலமெனவும் மாயமெனவும் பொய்மையெனவும் கூறினாரென்க.

புல்பூடாதிகள் பிரமஸ்வரூபமெனல்பது.

'இனி மற்றொருவிஷயத்தைத்தொடுப்போம். 'புல், பூண்டு, மரம், விலங்கு, பறவை, மனிதர், தேவர் எல்லாப்பிறப்பும் பிரமஸ்வரூபங்களென்று கொண்டாடுமிவர் மதத்தில் யாவருமே பிரமத்தின்அவதாரமாகக்கூறவேண்டியது ஆவஸியமாக, இவர் சங்காசாரியரைமாத்திரம் சிவாவதாரமென்று கொண்டாடியது பேதைமையேயாம்' என்கிறார். வேதசாஸ்திரங்களுக்கும் யுக்தியநுபவங்கட்கும் விரோதமாகப்பேசும் பேதைமை யிவரிடத்து முற்றும் நிரம்பியிருக்கின்றதைக்காட்டுகின்றோம். ப்ரம்மம் பூரணமாதலாலும் நீக்கமின்றியிருத்தலாலும் அது இல்லாவிடமின்மையாலும்வேறுபொருளிருத்தற்கிடமின்று.மற்றப்பொருள்களிருக்குமென்னின் அந்தப்பொருள்களிருக்குமிடம் வரையில் பிரமமில்லாதிருக்கும். இல்லாதிருக்கவே; பிரமம் பரிபூரணமென்று பகர்தற்கிடமில்லாமற்போம். மற்றப்பொருளில்லையென்றுஞ்சொல்லப்படாது. இருந்தால் எப்படியிருக்கலாம்? எப்படியிருந்தால் சுருதி, யுக்தி, அநுபவங்கட்கொவ்வும்? இதைப்பற்றி விசாரணைசெய்துபார்ப்போம். வேதசாஸ்திரங்களால் வாதிக்கப்படும் பொருள் பிரமம், சீவர்கள், உலகமாகியமுப்பொருள்களாம். பிரமம் ஆதாரமென்றும் மற்ற இரு பொருள்களும் ஆதேயமென்றும் பூர்வ பக்ஷியார் சம்மதிப்பார். அந்தப்ரமத்தின்கண் மற்ற இரு பொருள்களும் தற்கிழமையாயிருக்கின்றனவா? பிறிதின்கிழமையாயிருக்கின்றனவா? சினை குணம் தொழில்கள் தற்கிழமை; பொருளிடங்காலங்கள் பிறிதின்கிழமை. பிரமத்தின்கண் மற்றப்பொருள்களைத்தற்கிழமையாய்ச்சொன்னால் தான்பிரமத்துக்குப்பரிபூரணஞ்சித்திக்கும். பிறிதின்கிழமையாய்ச்சொன்னால் பரிபூரணஞ்சித்தியாது. தற்கிழமையாகத்தான் சொல்லின் மரத்தின் கிளை,மரத்தின்பசுமை, மரத்தினசைவு இம்மூன்றும்தற்கிழமையினது சினை,குணம்,தொழில்களுக்குமுறையேயுவமானம். சினையென்பது அவயவமானதாலும் ப்ரம்மஸ்வரூபமான துரியசிவன்நிரவயவியானதாலும்சினைசொல்லப்படாது. நிர்க்குணமானசிவனுக்குச்சகுணங்கூறுவதும்யுக்தமல்ல, கிரியாரகிதரான சிவனுக்குத்தொழில்கூறுவதும்குற்றமாம். அன்றிப்ரம்மத்துக்குத்தற்கிழமையாகச்சீவர்களைச்சொல்லின் ஜீவர்கள்படும் துக்கநரகங்களெல்லாம் சிவன்படுகிறதாகவே சொல்லவேண்டும். பிரமத்துக்குஜீவவுலகங்களைப்பிறிதின்கிழமையாகச்சொன்னால்பிரமம்கண்டப்பொருளாய்ப்போம். பிரமங்கண்டப்பொருளானால்புல், பூடு, முதலிய உலகப்பொருளாகாது. வேறுபட்டேயிருக்கும். பிரமம்பூரணப்பொருளானால் வேறுபொருளிருக்கவிடமில்லை. இருந்தால் சினைகுணந்தொழில்களாயிருக்கவேண்டும். சினைகுணந்தொழில்களாயிருந்தால் பிரமமே புல், பூடு முதலியவைகளென்று சொல்லத்தானேவேணடும். எப்படிப்போனாலும் இமிசைதான். அத்வைதசைவசித்தாந்திகளுக்குத்தப்பவழியில்லவேயில்லை. இவ்வளவு குற்றம் தம்மிடம் வைத்துக்கொண்டு பிறர்பேரில் குற்றங் கூறப்போவது அறிஞர்க்கழகன்றாம்.

இனி இவ்வித ஆக்ஷேபங்கள் அணுத்துணையுமில்லா அத்வைத சித்தாந்தத்தை அநுசரித்து அவராக்ஷேபத்துக்குச்சமாதானங்கூறுவாம். பிரமத்தின்கண் சீவவுலகங்களிருக்கவும் வேண்டும்; பிரமத்துக்குப்பரிபூரணதோஷமும் வரப்படாது; சீவவுலகங்களினது நயாஷ்டமும் பிரமத்தைச்சாராமலிருக்க வேண்டும். எப்படிச்சொன்னால் சாராமலிருக்கும்? எப்படிச்சொன்னால் தோஷம்வராது? தோற்றமாய்ச்சொல்லிவிட்டால் தோஷம் வராது. அஃது யாங்ஙனமெனின் கயிற்றின்கண் அரவுபோலாம் என்பதாம். கயிறுதானுண்மை,அரவு பொய்யென்றறிந்த வுடனே அரவு தோற்றுவதில்லை; உலகம் அவ்வாறன்று: ப்ரமத்தைத்தவிர வுலகமின்றெனவுணரினும் பின்னும் தோற்றுகின்றதே' என்னின் உண்மைதான்: உலகு பொய்யென்பதுவரையில் கயிற்றரவு திருட்டாந்தம். காரியம் பொய்யென்றறிந்தும் பின்னும்தோற்றுதற்குத்திருட்டாந்தம்கானல்நீராம்.' இதிலும் சங்கையுள்ளது; அதுநீர் அருந்துதற்கு தவுவதின்று: உலகு அநுபவத்திற்கு வருகின்றது'என்னின் காரியம் பொய்யென்றுணர்ந்தபின்னரும் தோற்றுகின்றது என்பதுவ

Koviloor Digital Library

ையில் கானனீர் திருட்டாந்தம். இனி யநுபவத்திற்கு வருகிறது என்பதற்குத்திருட்டாந்தம் சொப்பனவுலகாம். சொப்பனவுலகு பொய்யாயிருந்தும் தோற்றுதலும் பொருளாயிருந்தலும் அநுபவித்தலுமாய்ப்பொய்யென்று சொல்லற்கிடனின்றது. சொப்பனவுலகு பொய்யாயினும் முற்றும்பொய்யன்று. பொய்யென்பதே இன்னமெனின் மலடி மைந்தன், ஆகாசதாமரை களைப்போல இல்லாமலிருக்கவேண்டும். மெய்யென்பதே இன்னமென்னின் சிவத்தைப்போல முக்காலத்தும் இருக்கவேண்டும். சொப்பனவுலகு மலடிமைந்தனைப்போலஇல்லாமற்போதலுமன்று; சிவத்தைப்போல முக்காலத்து முள்ளதாயிருப்பதுமன்று. உள்ளது (சத்து)ம், இல்லது (அசத்து) மாகச்சொல்லலாமென்னின் ஒன்றுக்கு ஒன்று நேர்மாறான இருஇலக்கணமுள்ள பொருள் இராது; (மேலும்எது உள்ளது (சத்து)ம், இல்லது (அசத்து) மோ, அது உண்மையில் இல்ல (அசத்து) தேயாம். கானனீர் முன்பு உள்ளது; தேர்ச்சியில் இல்லது. அதை இல்லதென்றே சொல்லவேண்டும்.) ஆதலால் சொப்பனவுலகு சதசத்விலட்சணமென்றே சொல்லவேண்டியது. அப்படியே அது போன்ற இவ்வுலகையும் சதசத் விலக்ஷணமென்றே சொல்லற்பாலது. இது பற்றியே சூதசங்கிதை வேதார்த்தமுரைத்த அத்தியாயம்ஆறுவதுபாட்டில்மாயையைச் 'சதசத்திற்குப்பின்ன' மென்றுசொல்லப்பட்டிருக்கின்றது. இதனர்த்தத்தை யுணரார் அத்துவிதிகள் உலகைப்பொய்யென்கிறார்கள் என்று சொல்லுகின்றனர். பொய்யென்பதில் இவ்வளவு வித்தியாசமிருக்கின்றது. சொப்பனவுலகு ஒருகாலத்தில் தோற்றி யொருகாலத்தில்லாமற்போகிறது. அப்படியே சாக்கிரவுலகும் ஒருகாலத்திற்றோற்றி ஒருகாலத்திலில்லாமற்போகின்றது. சொப்பனவுலகு தோன்றுதற்கிடனாயிருப்பதுமனம் மனத்தைத்தவிரச்சொப்பனவுலகின்று.மனம் சத்து சொப்பனவுலகு அசத்து, அல்லது சத்துப்போலி. காரியங்காரணத்தினிடத்தே நிகழ்கின்றது. அப்படியே ப்ரம்மத்தினிடத்து மற்றப்பொருள்கள் தோற்றமாய் நிகழ்கின்றன. சொப்பனவுலகப்பொருள்கள் அவை தோற்றுங்காலத்துச்சத்தியமாகவும் பிரத்தியக்ஷமாகவும் அநுபவசாதன மாகவும் எப்படி மனத்தின்கண் இருக்கின்றனவோ,அப்படியே சாக்கிர வுலகும்அதுதோற்றுங்காலத்துச்சத்தியமாகவும் பிரத்தியக்ஷமாகவும் அநுபவசாதனமாகவும் பிரமத்தினிடத்திருக்கின்றது. காரியமுண்டாதற்கேற்ற சத்தி, காரணத்தின் கணிருப்பது சகஜம். கடசத்தி மண்ணின்கண்ணும் படசத்தி நூலின்கண்ணு மிருப்பதுபோல சொப்பனவுலகு சத்தி மனத்தின்கண் இருக்கின்றது. அவ்வாறே இச்சாக்கிர வுலகசத்தி பிரமத்தின்கண்உள்ளது; அது தான் மாயை. அந்தமாயை பிரமத்தின்கண் அவாந்தரமாயுள்ளது. இருப்பூசியைச்சேட்டிப்பிக்கும் சத்தி, காந்தத்தின்கண் எங்ஙனம் அவாந்தரமாயுள்ளதோ, அங்ஙனமே பிரமத்தினிடத்து மாயாசத்தி அவாந்தரமாயுள்ளது. அந்த மாயாசத்தி பிரமமுமல்ல,பிரமத்தைத்தவிரவுமில்லை. அங்ஙனமாயசத்திஅனேகஉலகங்களையெல்லாம் அடக்கிவைத்திருக்கிறது. அந்தமாயாசத்தியானது, தன்னிடத்தினின்றுமுண்டாக்குங்காரியப்பொருள்களைப்பின்னம் போல்காட்டச்செய்யும்வல்லமைபெற்றது. அதுபற்றியே

சூதசங்கிதை சாந்தோக்கியவுபநிடத்
தாற்பரியமுரைத்தஅத்தியாயத்தில்

செப்புபேத பேதமெம்மாத்திரமும்வரமாட்டாதனைர்வீர்,தப்பிலாதவிப்படியேசாற்றுமெல்லாக்காரியமு, மொப்பிலாதகாரணத்தோடபேதமாயுற் றிருந்தாலு, மெய்ப்பின்மாயையாற்பேதமாகித்தோன்றுமிமையீரே. (௭)

பேசவிகாரமெலாம்பெயராற்பின்னமாகியிருந்தாலு,- மாசிலாதபரமார்த்தமாகவிரும்பிரமத்தோ, டேசிலபேதமாகியேயிருக்கின்றனவென்றெழுதமுக்கி,வாசாரம்பணத்தேனுண்டுவக்குமாலைத்தடந்தோளமரீரே. (௮)

சகத்துக்கொருகாரணமாகித்தயங்குமந்தப்பிரமங்கற், பசுத்தண்டொடையன்முடிவேய்ந்துபாரோர்புகழப்படும்போகஞ், சுகதின்மருவும்விண்ணவர்காள்,சொல்லாநிற்கும்பின்னமுமன்றுகத்தால்செய்யும் பின்னுமபின்னமுமன்றென்றுமேயேயிருக்கும்.

என்று கூறப்பட்டிருக்கின்றது.சொப்பனவுலகும் அதுதோன்றுதற்கிடமான அவாந்தரசத்தியும், அது இருத்தற்கிடமான மனதும்போல, இவ்வுலகும் மாயையும் பிரமமுமாம். கடத்துக்குக்கடசத்தியையுங்காரணமாகச்சொல்லலாம்; சத்தியை மண்ணிலடக்கி மண்ணையுங்காரணமாகச்சொல்லலாம். மண்ணைத்தவிரச்சத்தி வேறில்லாமையாலும் சத்தி ஒருபொருளாயிராமையாலும்சத்தியைமண்ணிலடக்கி,மண்ணேகடத்துக்குக்காரணமென்று கூறப்படுகின்றது. அப்படியேசொப்பனவுலகுதோன்றுதற்கு ஏதுவான சத்தியை மனத்திலடக்கி அச்சொப்பனவுலகுக்கு மனங்காரணமென்று சொல்லலாம். இரண்டுவமானங்களைப்போல்மாயையைப்பிரமத்திலடக்கி,பிரமத்தையுலகிற்குக்காரணமாகச்சொல்லப்படுகின்றது.இப்படிச்சொல்வதால் பிரமம்காரணமும்உலகுகாரியமுமாகும். மண்ணினுள்ளகடாதிகளை நோக்கி இவைகளெல்லாம் கடாதிகளென்றுஞ்சொல்லலாம்; சூட்சுமமாய்ப்பார்க்குமிடத்து மண்ணைத்தவிரப்பொருளில்லாமையால் மண்ணேயென்றுஞ்சொல்லலாம். அப்படியே சொப்பனத்தில் காணப்படும். புல், புழு, முதலிய எல்லாப்பிறப்பும் மனமே யென்று சொல்லலாம். மண்ணைத்தவிரக்கடாதிகளெப்படியில்லையோ அப்படியே மனத்தைத்தவிரச்சொப்பனப்பிரபஞ்சத்திலுள்ள புல், புழுவாதிகளின்றென்க. இவ்விரண்டுவமானங்களைப்போலச்சாக்கிரத்திலுள்ள புல், பூடு, புழு,மரம்,விலங்கு, பறவை, மனிதர், தேவர் ஆகிய எல்லாப்பிறப்புகளையும் ப்ரம்மஸ்வரூபமென்று சொல்லலாம்.

மண்ணைத்தவிரக்கடாதிகளில்லாமைபோல ப்ரம்மத்தைத்தவிர அவைகளில்லாமையாலென்க. புல், பூடு முதலியவைகளை ப்ரம்மஸ்வரூபமென்றெப்படிச்சொல்வது? அவைகளெல்லாம் சடமாயினவே; ப்ரம்மமோ சித்தென்று சொல்லப்படுகிறதே' என்று சங்கிக்கலாம். ப்ரமத்தின்கண் இருவிதசத்திகளுள்ளன ஒன்று அபின்ன சத்தி, ஒன்று பின்ன சத்தி.இந்தச்சடசத்திதான்மாயை. ஊசியைஅசைப்பிக்குந்தர்மம்காந்தத்தின்கண்எப்படிஅவாந்தரமாயுள்ளதோ,அப்படியேப்ரமத்தின்கண் பின்ன சத்தியான மாயையானது அவாந்தரமாயுள்ளது. சத்தியெப்போதுங்கண்ணுக்குப் புலப்படுவதன்று. காரியத்தினாலேதான் நிரூபிக்கவேண்டுவது. மனத்தின்கண் சொப்பனவுலகிற்கு மூலமான சத்தி புலப்படுவதின்று. காரியமாகச்சொப்பனவுலகு தோன்றுகின்றமையால் அப்படிப்பட்ட சத்தியொன்று மனத்தின்கணிருப்பதாக வூகிக்கவேண்டியிருக்கின்றது. இந்திரசாலப்பொருளுக்குஇந்திர சால சக்திகாரணம். அந்தச்சத்தி யிந்திரசாலக்காரனிடத்திருக்கின்றது. அவனும் அவனது இந்திரசாலத்தாற்றோற்றுவிக்கப்பட்டபொருளும் பின்னமாயினும் அபின்னமே; அவனையன்றிப்பொருளில்லாமையாலென்க. ஆனாலும்அப்படியேமனதும் சொப்பனவுலகும்பின்னமாகக்காணப்படினும்பின்னமே;மனத்தைத்தவிர அவையில்லாமையாலென்க.மனம்சித்தாயினும்அதிலுள்ளபின்னசத்தியானதுசடமானதால் அதன்காரியமானவுலகும்சடமாகத்தோற்றுகிறது அப்படியே ப்ரமத்தினிடத்துள்ள மாயாசத்தியானபின்னசத்திசடமானதால் அதன்காரியமானவுலகும்சடமாகத்தோற்றுகின்றது. ஆதலால் புல், பூடு, முதலியனவைகள் ப்ரம்மஸ்வரூபமென்று சொல்வதில்யாதொரு தோஷமுமில்லை. ப்ரம்மத்துக்குப்புல் பூடாதிகள் ஒருவிதத்தில் பின்னமென்றும்ஒருவிதத்தில் அபின்னமென்றுஞ்சொல்லலாம்; மாயையின் காரியமான வுலகுபின்னமாயிருப்பதால் பின்னமென்றும் சத்தியென்பது குணமாயிருப்பதாலும் அது ப்ரம்மத்தைத்தவிர வில்லாதிருப்பதாலும் அந்தச்சத்தியைத்தவிரவுலகில்லாமையாலும் அபின்னமென்றுஞ் சொல்லலாம்.

பின்னருசொன்ன அவசரமின்னதென்றுஅபின்னஞ்சொன்ன அவசரமின்னதென்றுந்தெரியாமல் தக்கபடி அத்வைத விசாரஞ்செய்யாதவர் பிரமிக்கின்றனர். அப்படிப்பிரமிப்பவரிலிவருமொருவராம் போலும். இவர், 'புல், தேவர் முதலிய எல்லாப்பிறப்பும் பிரம்மஸ்வரூபங்களென்று கொண்டாடுமிவர்மதத்தில் யாவருமே பிரமத்தினவதாரமென்று கூறவேண்டியது ஆவசியமாக, இவர் சங்கராசாரியரைமாத்திரம் சிவாவதாரமென்று கொண்டாடியது பேதைமையேயாம், என்று கூறியதற்குத்தக்க நியாயங்கூறி மறுத்திடுவாம். யாவருஞ்சீவர்களாகவிருந்தாலும் தேவப்பிறவிக்கும் புழு, புல்முதலியபிறவிக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. எல்லோரும் மனிதர்களாகவிருந்தாலும் சக்ரவர்த்திக்கும் தோட்டிக்கும் எவ்வளவுவித்தியாசமிருக்கிறது? பண்டிதனுக்கும் மிருகம்போலிருக்கும் பாமரனுக்கு மெவ்வளவு வித்தியாசமிருக்கிறது? குபேரனுக்கும் பிச்சைக்காரனுக்குமெவ்வளவுபேதமிருக்கிறது? ஒருவன்பல்லக்கேறுகிறான். ஒருவன் பல்லக்கைச்சுமக்கிறான். ஒருவன் குருவாயிருக்கிறான்ஒருவன்அவன் காலில்விழும்மாணாக்கனாயிருக்கிறான். ஒருவன்நியாயாதிபதியாயிருக்கிறான்; ஒருவன்அவனால் சிட்சிக்கப்படுகிறவனாகிறான். ஒருவன் சாபானுக்கிரகங்களுள்ள தவஞானங்களைப்பெற்று இருவகைப்பற்றுக்களையும் விட்டு ஆரூடஞானியாயிருக்கிறான்; ஒருவன் மகாபாதகனாய்ப்புலி முதலிய கொடும்புலிகளைப்போலிருக்கிறான். ஒருவன் நிரகங்காரியாய் வெகுளியின்றிச்சாந்தமாயிருக்கிறான். ஒருவன் அகங்காரியாயுங்கோபியாயுஞ்சாந்தமில்லாமலுமிருக்கிறான். ஒருவன்நிட்காமியாயிருக்கிறான் ஒருவன் காமியாயிருக்கிறான். தோல் ஒன்றாயிருந்தாலும்சிரசிலுள்ளதொப்பியின்றோலுக்குங்காலிலுள்ள பாதரக்ஷையின் தோலுக்கும் எவ்வளவு வித்தியாசங்களிருக்கின்றன? காரணமொன்றாயினும் காரியங்களிலெவ்வளவோவித்தியாசங்களிருக்கின்றன வென்பதையின்னும் எடுத்துக்காட்டவேண்டுமோ? பரமத்தை நீக்கி வேறுஒருபொருளும் முன்காட்டியநியாயப்படியில்லையாதலால் அநுபற்றி அப்பிரமத்தில் முன்கூறியபடி இருக்கும் ஈஸ்வரஜீவஜகத்துக்களெல்லாம் ஒரு அவசரத்தில் ப்ரம்மஸ்வரூபமேயென்று (சித்தாந்தமாயல்ல) பூர்வபக்ஷமாய்ச்சொல்லப்படினும் அந்த ஈஸ்வரருக்கும் மற்றச்சீவவுலகங்களுக்கும் எவ்வளவோ தாரதம்மிய மிருக்கின்றது.

சித்தாந்த; ஈஸ்வரன் மாயாபிரதி பிம்பர். அந்தமாயை சுத்த நிர்ம்மல ஜலம் போன்றது. அந்தமாயை மோகஞ்செய்வதன்று. அன்றி அம்மாயையோடு ஈஸ்வரன் கூடியும் கூடாதவராகும். மேலும் அவர் சர்வஞ்ஞத்துவாதிகுணங்களுள்ளவரும் சிருஷ்டியாதி தொழிற்செய்பவருமாம். இந்தத்தொழில்செய்வது ஜீவகாருண்ணியத்தின் பொருட்டேயாம். இவரே சிவகாருண்ணியத்தால்சங்கராசாரியராகஅவதரித்தார். ரஜோகுணப்பிரதிபிம்பர் ஜீவர்கள். ரஜோகுணத்துக்கு அவித்தை யென்றுபேர். அது மோகஞ்செய்வது. அம்மோகத்திற்றுட்பட்டுக்கிஞ்சிக்ஞராயும்பிறப்பிறப்புகளையடைந்து அவ்வீஸ்வரனையுபாசிப்பவர்கள். தமோகுணத்திலிருந்து அந்தக்கரணம், ஞானேந்திரியம், தசவாயுக்கள், கர்ம்மேந்திரியங்கள் பஞ்சபூதங்களாகப்பிறந்தன. இவை சீவர்களுக்குத்தநுகரண புவனபோகங்களாக வீஸ்வரனால்கொடுக்கப்பட்டன. காரணமொன்றானாலுங்காரியங்கள்பலவாகும். அன்றி எவ்வளவோ பேதமாகவுமிருக்கும். ஐந்து ரூபா மதிப்புள்ள இரும்பைப்பலகாரியமாக்க, பத்து ரூபாமுதல் இரண்டுலட்சம் ரூபாவரையில் மதிப்பாகின்றது. அந்த இரும்பைக்கட்டைப்பாறையாகச்செய்தால் பத்து ரூபாவாகும். அந்தவிரும்பைக்கைக்கடியாரங்களுக்கு (SPRING) ஸ்பிரிங் என்னும் கருவியாக்கினால் இரண்டுலட்சம் ரூபாபெறும். பார்த்தால்யாவும் ஒரு எடையும் காரணத்தில் ஒரு மதிப்புமாயிருக்கின்றன. சடப்பொருளிலேயே யிப்படியானால் சித்துப்பொருளிலெவ்வளவு பேதமிருக்கலாம்? சித்துப்பொருளுக்கும் சடப்பொருளுக்குமுள்ள வித்தியாசத்தை நாம் சொல்லவேண்டுவதில்லையே. கவர்னர் ஜனரலுடைய புத்திக்கு மாசம் இருபதினாயிரம் ரூபாசம்பளம்; அவருக்குப்பங்கா விழுகிறவனது புத்திக்கு ஐந்துரூபாசம்பளம். கவர்னர் ஜனரலுக்கு உயர்ந்த சம்பளங்கொடுப்பது புத்தியைப்பற்றியேதான். இலௌகிகத்திலேயே புத்தியிவ்வளவு தாரதம்மியமிருக்குமானால்பாரமார்த்திகத்திலே கேட்கவேண்டுமோ? இவர் ஒருமாயையை சுத்தம், அசுத்தம், சுத்தாசுத்தமென மூன்றாக்கிப்பேதப்படுத்திச்கூறுவதைக்கவனியாமற் பேசுகின்றார். 'அதிஷ்டானமாகியபிரம்மத்தினது அவதாரமென்று கூறாமல் மாயையிலாரோபிதமான சிவனாரதுபிறப்பென்று கூறியதுபேதைமையிற்பேதைமையாம்' என்று கூறிய பேதைமையை முன்னரே நன்கு விளக்கி, துரியசிவன்சிவனடியார் வருவார் என்றதிலுள்ள மட்டில்லாத்தோஷங்களைப்பட்டப்பகலாய்க்காட்டி, அவரது ஆராய்ச்சி யில்லாமையையெடுத்துவிரிவாய்க்கூறியிருக்கின்றோம். அன்றி அவதாரமெல்லாம் உருத்திர மூர்த்திக்கே யென்றும் பேசியிருக்கின்றோம்.

சிவன் மாயாசம்பந்தமுடையவரன்றென்பது.

'இனி இவர் சங்கராசாரியர் பிறப்புக்கு மூலமாகத்தேடிய சிவன் மாயோபாதிகதராயிடினும் அவரோடு மாயோபாதிகதர்களாகத்தோன்றிய பிரம விஷ்ணுக்களது பிரஸ்தாபமுமிவரது மதத்திற்கேட்கப்படுகின்றது. சிவன்விஷ்ணு பிரமன் மாயோபாதிகதர்களது மூவரில் சிவன் தமோ பிரவிஷ்டரும் விஷ்ணு ஸத்வவிஷ்டரும்பிரமா ராஜஸப்ரவிஷ்டருமாயிடுதல் சித்தம்' என்று கூறியதில் இது இவரது மதம் என்றதனால் அத்துவிதிகளுடைய மதம் என்றாயிற்று. இவர் சிவனை மாயோபாதிகரென்றும் அத்துடன் விஷ்ணு பிரமாக்களையும் மாயோபாதிகரென்றுங் கூறுவதாய்க்கூறுகின்றாரன்றோ? இது அவருடைய மருட்சியேயாம். திரிமூர்த்திகட்கும் ப்ரம்மஸ்வரூபரான சிவன் சாட்சியாய் விளங்கப்பட்டவர். அவர் ஒருபோதும் மாயாசகிதமாகமாட்டார். உருத்திரரே மாயாசகிதர். அவரும் மாயையுடனே கூடியும் கூடாதிருப்பவர். ஆதலால் உருத்திரரையும் மாயாசகிதராகச்சொல்லப்படாது. அப்படியிருக்கச்சாக்ஷாத்சிவனைமாயோபாதிகரென்றுகூறியதும்அது அத்வைதிகள் கொள்கையென்று வரைந்ததும் பித்துரையாம். அதோடு சிவன் தமோ பிரவிஷ்டரென்று கூறியது பித்துரையினும்பித்துரையாம். உருத்திரனைத் தமோகுணமுள்ளவரென்றுகூறியிருப்பதுண்மையே. அதற்குச்சுருதி முதலிய பிரமாணங்களை யெடுத்துக்காட்டினோம். அதனால் யாதொருபாதகமுமின்றென்பதையுங்காட்டினோம். சங்கராசாரியார் பிறப்புக்கு நமதன்பர் தமோபிரவிஷ்டராகிய சிவனையே மூலமாகத்தேடியவாறென்னை? தாமசம் ஞானவிரோதமாயுள்ளது என்றுகூறியதிலுள்ள தோஷத்

Koviloor Digital Library

தைக்காட்டுகிறோம். சங்கராசாரியார் அவதாரத்துக்குச்சிவனை மூலமாகத்தேடியது யாருமில்லை. உருத்திரனையே தேடினார்கள். அதற்குப்பிரமாணம் முன்பேகாட்டினோம். அவதாரமெல்லாம் உருத்திரர்க்கே அன்றிச் சாக்ஷாத்சிவனுக்கல்லவென்பதற்குப் பிரமாணங்கள் காட்டினோம். 'தாமசம் ஞானவிரோதம்' என்கிறார். உருத்திரரென்னும் பெயர் சங்காரத்தொழிலால் வந்தது. சிருட்டிதிதிசங்காரங்கள் ஜீவர்கள்மேல் வைத்தகருணையினால் செய்யப்படுகின்றன. ஆசிரியர் மாணாக்கரையும், பிதா புத்திரர்களையும் தண்டிப்பது தாமசகுணமென்று கூறப்படாது. மிகக்காருணியத்தால்செய்யப்படுகின்றதெனறே கூறல்வேண்டும். தண்டிப்பது கொடுமைபோல்மேல்நோக்கான பார்வைக்குத்தோன்றினும் உண்மையிலவ்வாறன்று; அன்பும் அருளுடைமையுமாம். அதுபற்றியே உருத்திரமூர்த்திக்கு அகக்குணம் சத்துவமென்று

சூதசங்கிதை சூதகீதையில்
பரமவிஞ்ஞானமுரைத்த அத்தியாயம்.

எல்லாவற்றினும்பிரமமென்னுமதியேவிசேடமா, நல்லார் புகழுமுத்திராக்குநகுமுள்ளேசத்துவகுணமு, மல்லார் வெளியேதமோகுணமுமாயற்குள்ளேதமோகுணமும், வில்லார்வெளிச்சத்துவகுணமுமுள்ளவென்பார் மெய்யுணர்ந்தோர். (௰௮)

எனக்கூறப்பட்டிருக்கின்றது. அன்றிச்சாக்கிராவஸ்தைக்குப்பிரமனும், சொப்பனவஸ்தைக்கு விட்டுணுவும், சுழுத்தியவஸ்தைக்கு உருத்திரனும் அதிதேவதையாகக்கூறப்பட்டதில் சுழுத்தியவஸ்தையில் காரணங்களெல்லாமொடுங்கிச்சுகமயமாயிருக்கின்றது. சுகம் சத்துவகுணமுமாகும்.

சுழுத்தியில் சுகமென்பதற்குப் பிரமாணம்.

வாயுசங்கிதை ஞானநிலைமையுரைத்த அத்தியாயம்.

ஒன்றுமறியாரிவ்வகையேயுரைப்பார்புந்திமுதலொடுங்க, இன்றுதுயின்றேனெழுந்து நன்காய்த்துயின்றேனென்ன இசைத்தமைபான், என்றுமளவைக்குமடவாகியிருக்கும் ஆன்மாவுளான் அவனை, மன்றமறையந்தரியாமியென்ன நாளும்வழங்குமால் (௨௭)

இதில் நன்றாய்த்தூங்குவது விளக்கமாயிற்று.

கைவல்யோபநிஷத்.

“சுஷுப்திகாலத்தில்சகலமும்லயமடைந்திருக்கையில் அஞ்ஞானத்தினால் சூழப்பட்டவனாய்ச் சுக சுவரூபத்தையடைகிறான்”

சூதசங்கிதையில் பிரமகீதை.
கைவல்பவுபநிடதார்த்தமுரைக்குமத்தியாயம்.

உறங்குமவ்வியத்தமன்னியகமத்தினுட்புகுந்தோன்றொழியாம, விறந்தவவ்விடத்தேதன்னுருவானவின்பமேபுசிக்குமீண்டெழுந்து, உறங்குபோனவைவபடையினுமடையுங்கனாவைவத்தடையினுமடையும், சிறந்தமுப்புரமுமிவனைவிளையாடித்திரிதரச்செய்ததேதிகழ்த்தில். (௧௨)

இனி “இவர் சிவனுக்கு அங்கவஸ்த்ரமுண்டென்று வாதிக்க வருவார்போலும்” என்கிறார். வாதிக்கவந்தேஷைசெய்யுனையுங் காட்டினம். 'அப்போது விஷ்ணுவுக்கு அந்தஸ்தமளைக்கூறிச்சிவனிலும் விஷ்ணு குறைந்தவரென்று வாதிக்கும் வைஷ்ணவகண்டனமுண்டாகுகையால்' என்றுகூறி அச்சங்காட்டுகின்றார். சிவனிலும் விஷ்ணு குறைந்தவரென்று வாதிப்பதில இந்தச்சோமசுந்தரநாயகருக்கென்னவந்தது! இவரைப்போல நாம் 'வாய்க்கொழுப்புச்சீலையால் வடிந்தது' என்பதாய் 'யாகாவாராயினும நாகாக்ககாவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு' என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய தெய்வீகத்திருக்குறளை அவமதித்துஅலட்சியஞ்செய்து மறந்து, விஷயத்தின்மேல் விஷயமாய்க் கண்டனஞ்செய்வதைவிட்டு, படித்துக்கௌரவமாயிருக்கும் ஒரு கனவானை வைது, அதன்பேரில காலிலேவிழமாட்டாத குறையாய்க்கெஞ்சிப்பணத்தண்டமுமிறுத்துச் சுதந்தரத்தைவிட்டு உடன்படிக்கையுமெழுதிக்கொடுத்தோமில்லையே. கொடுத்திருந்தாலன்றோ ஒருமதத்தைக் கண்டிக்க அஞ்சவேண்டும். இவர் மதத்தைக்கண்டிக்க ஏதேனுமஞ்சுகின்றோமா? நமக்குவேதத்தைப்பிரமாணமாகக்கொண்ட எல்லோரும் சகோதரர்கள். வேதசாஸ்திரங்களுக்கு அவர்க்குத்தோன்றிய ஒரு உரை செய்தால் நமக்குத்தோன்றியஒருஉரைநாம்செய்கின்றோம். நமக்கும் அவர்க்கும் விஷயத்தின்மேல சண்டையேயன்றி, ஆளுக்கு ஆள் சண்டையில்லை; சிநேகமே. விஷயத்தின்மேல் பேசுவதை விட்டு நேரே ஆளைத்தூஷித்து வைதால் ஆளுக்கு ஆளே சண்டையுண்டாம். ஒருவரையொருவர் கொல்லமாட்டாத பகையுமுண்டாம். அதுகாரணமாக அநேக அனர்த்தங்களுமுண்டாம். இதுவிஷயமாக இந்தச்சோமசுந்தரநாயகரவர்களுக்கு எத்தனை பேர் எத்தனைவிதமாகச் சற்புத்தி கூறினும் உறைப்பதில்லை. அவர்க்கு மிகச்சிநேகிதராய் அவரைச்சிறப்பித்துப்பேசுவோரும் தூஷகரென்றும்நியாயந்தவறுகிறவர்களென்றும் எழுதுகின்றார்கள். அவர்க்கு ஒருமுறை பட்டதும் ஞாபகத்துக்குவருகிறதில்லை. எதிர்பக்ஷத்தாரைக்கனஞ்செய்து விஷயகண்டனஞ்செய்யலாமே. கனஞ்செய்ய இஷ்டமில்லாவிடில் தூஷியாமலெழுதலாமே. விஷயபலமுள்ளவர்க்குத் தூஷணையேதுக்கு? முற்காலத்துப்பத்திரிகையுமில்லை; அச்சுமில்லை: ஒருநூல் செய்தால் அதைப்பார்த்து மற்றொருவர் கையினாலெழுதவேண்டும். அதுமிகக்கஷ்டம். ஆதலால் நூல் பரவாது. அன்றி யொருமதஸ்தர் செய்தகண்டனைக்கிரந்தம் கண்டிக்கப்பட்ட மதஸ்தர் பலர் கையிலுமேறுவது மகாகஷ்டம். இக்காலத்தில் அப்படியல்ல. ஒருநாளில் அச்சிட்டுப்பரப்பலாம். அதுவும் உலகமுற்றும் ஒருமாசத்தில பரவிவிடும். இரு கட்சிக்காரருக்குப் புறப்பட்ட வேறுகட்சிக்காரரும் பார்க்கிறார்கள். பத்திரிகைகளில் விஷயத்தின்மேல் கண்டனையன்றிமனிதர்கள்மனம் புண்படத்தூஷித்து எழுதினால் அதைப்பார்க்க யோக்கியர்கள் வெறுப்புறுகின்றார்கள். ஆதலால் நியாயமாய்க்கண்டனை செய்பவர்க்கு ஒருவிதத்திலும் பயமிலலை; அவமானமுமில்லை. பொதுமனிதர்கள் சந்தோஷித்து வியந்துபேசுவார்கள். கண்டிக்கப்பட்டமதஸ்தருங்குற்றங்கூறு

Koviloor Digital Library

வதற்கிடனிராது. ஆகலின் சோமசுந்தரநாயகர் இதை வாசித்துப்பார்த்துஇனி எதிர்ப்பக்ஷத்தார் மனம் புண்படாதிருக்க இதமொழிகளால் வாதஞ்செய்து தூஷணையை விட்டொழிப்பாரென்று அவர்க்கு இதமொழிகளால்கூறுகின்றோம். இவர், வைஷ்ணவகண்டனமுண்டாகுமென்றீரே. உண்டானால் வாதிக்கப்படாதோ? இவர் வைஷ்ணவகண்டனஞ்செய்ததில்லையோ? இவர் மாத்திரஞ் செயயலாம்; மற்றப்பேர் செய்யப்படாதோ? இவர் பத்திரமெழுதிக்கொடுத்ததுமுதல் வைஷ்ணவகண்டனஞ் செய்யாதிருக்கிறீரோ என்னமோ தெரியாது. அதுபற்றி மற்றவரையும் அந்தப்பத்திரத்துக் குட்படுத்தப்பார்க்கின்றீரோ அதுவும்நமக்குத்தெரியவில்லை! வாதஞ்செய்யும்போது அநேகமதஸ்தர்களுடைய கண்டனையிடையிடையில் வரக்கூடும். அப்படிக்கெல்லாமிருக்கஎல்லாமதஸ்தர்களையும் விட்டு, வைணவமதஸ்தர்கள்மேல் மாத்திரம் பக்ஷமாய்ப்பேசிய காரணமென்னோ! இவர்க்கு அம்மதத்திலும் அம்மதஸ்தரிடத்திலும் அச்சமிருந்தாலிருககட்டும். அதை நாம் வேண்டாமென்று சொல்லவில்லை: மற்றமதஸ்தர்களுக்குச் சொல்வதுமாத்திரம் அநாவசியத்தினும் அநாவசியமென்று தோன்றுகின்றது. நமக்கு வைஷ்ணவமதகண்டனை வந்தாலுஞ்சரி, இவர்மத கண்டனைவந்தாலுஞ்சரி, நமக்குத்தோன்றியவரையில் எழுதிக்கொண்டுதான்போவோம. ஆனால் ஒருவரையுமிகழ்ந்துபேசமாட்டோம். அப்படியேதேனும் வித்தியாசமான சொற்கள் பிசகி எழுதியிருந்து, அதைச்சோமசுந்தரநாயகரவர்கள் எடுத்துக்காட்டினால் அதற்காக அவர்க்கு வந்தனஞ் செய்வதோடுஅவர் செய்தநன்றியை மறவாமலிருப்போம்.

சிவனும் விஷ்ணுவும் பேதமில்லாதவரென்பதுபற்றி நிற்க,"சிவனும் விஷ்ணுவும் பேதமில்லாதவ"ர்கள் அவர்களில் யாரையுபாசிப்பதுமொன்றேயென்ற "போலி ஸ்மார்த்தர்கள் கூறுவதும், சிவாவதாரமென்றி"வர் கொண்டாடும சங்கராசாரியர் விஷ்ணு புஜங்கமுத"லிய நூல்கள் செய்து விஷ்ணுவை வழிபட்டதும் ஸாவாசங்கதமாம'என்று கூறி, அவர்களுடைய கருத்தையணுத்துணையுமறிந்துகொள்ளாதவரெனப் பட்டப்பகலாய்க்காட்டிக்கொண்டார். போலி ஸ்மார்த்தர் கூறுவதற்கு யாருமுத்திரவாதியல்லர். எல்லாமதஸ்தரிலும் எல்லாச்சாதியாரிலும் எல்லாப்பொருள்களிலும் போலியுண்டு. போலியை யதார்த்தமாகக்கொண்டு பேசுதல் தகுதியன்று. போலிச்சித்தாந்திகள் கூறுவதற்கு யதார்த்த சித்தாந்திகள் உத்தரவாதிபாகார். ஆனால் அவ்வாறு கூறுவோர் போலி ஸ்மார்த்தரல்லர்; யதார்த்த ஸ்மார்த்தரே. அவர் கூறும் ரகஸியங்களினுழத்தைத்தெரியாமையாலும்துவேஷத்தாலும் உணர்ந்துகொள்ளாமையான குற்றமிவர் பேரிலேயேயுள்ளது. அதைத்தெரியப்படுத்துவோமாக, பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய இம்மூவர்க்கும் விலக்ஷணமாயுள்ள பொருள் பிரமம்; பிரமத்தின் பரியாயநாமம் சிவன். இன்னும் பல பரியாயநாமமுண்டு. பிரமா, விட்டுணு; உருத்திரன் இம்மூவரில் ஒருவர்க்கொருவர்முறைபேமேலானவர். இம்மூவர்க்கு மேலானதும் அதிட்டானமானதும் பிரமம். ஷை மூவரும் சிருட்டியாதி தொழிலினிமித்தம் பிரமத்தினின்றுக் தோன்றிப் பிரமத்திலேயேலயமாவர். பிரமம்முப்போதுமுள்ளது. ஷை மூவர் ஒருகாலத்திலுள்ளவர். அதாவது:—தோன்றுதற்குமுன்னரும், ஒடுங்கியதற்குப்பின்னருமில்லாதவர். இதன்படியே ஷை மூவரையும் ஒருவர்க்கொருவர் மேலானவரெனச்சொல்லி, ப்ரம்மஸ்வரூபமான சிவனை ஷை மூவர்க்கும் அதிஷ்டானமாகச் சொலவார்கள்யதார்த்தஸ்மார்த்தர்கள். உருத்திரர்க்கும் விஷ்ணுவுக்கும் அதிஷ்டானம் பிரமமானதாலும் அந்தப்பிரமமே சிவனானதாலும் அதிஷ்டானமான சிவனும் மாயாசகிதரான விஷ்ணுவும் ஒன்றென்று சொல்லுவார்கள். இது உண்மையானதுதான். அன்றி யுக்தி அநுபவங்கட்கும் ஒத்திருக்கிறது. இதற்குவமானங்கூறி அதன் பிரகாரம உவமேயத்தைப் பொருத்திக்காட்டுவாம்.

ஒரே எடையுள்ள பொன்னால் கிரீடமொன்றும் சிலம்புமொன்றுஞ்செய்து, கிரீடஞ்செய்யக்கூலி ரூபா ஆயிரமும் சிலமபு செய்யக்கூலி ரூபா பத்துங்கொடுத்தோமெனவைத்துக்கொள்வோம். அப்படிச் செய்வித்த கிரீடத்துக்கும் சிலம்புக்கும் தாரதம்மியங்கள் எப்படியோ, அப்படியே உருத்திரனுக்கும் விஷ்ணுவுக்குமாம். இதனால் உருத்திரனுக்கும்விஷ்ணுவுக்கும் ஏற்றக்குறைச்சலேற்படுகின்றது பொன்னும சிலம்பும எப்படியொன்றோ அப்படியே சிவனும் விஷ்ணுவுமொன்றென்று மேர்படுகின்றது. காரியங்களிலொன்றுக்கொன்று பேதமில்லையென்று சொல்லப்படாது; காரியத்துக்கும காரணத்துக்கும் அபேதஞ்சொல்லலாம். இந்த அர்த்தத்தைக்கொண்டே சிவனும் விஷ்ணுவுமொன்றென்று ஸ்மார்த்தர்கள் சொல்லுகிறார்கள்.

ஸ்மிருதி, வேதத்தின்பொருளை நினைத்துச்செய்யப்பட்டமையால் அதுகாரணமாக அதற்கு ஸ்மிருதியெனப் பெயர்வந்தது. அதன்வழி நிற்போருக்கு ஸ்மார்த்தரென்று பேர். இதற்குப்பிரமாணம்.—

திருவிளையாடற்புராணம்.

மறைவழிமதங்கட்கெல்லாம்மறைபிரமாணம்பின்சென்,
றறைதருமிருதியெலலாம்அவைக்கனுகுணமாம்இன்ன,மு
றையினால்மார்த்தமென்றுமொழிவது அம்மார்த்தஞ்சோந்
த, துறைகள்வைதிகமாம்மேலாச்சொல்வழிச்சுத்தமார்க்
கம்.

இனிச் 'சிவாவதாரமென்றிவர் கொண்டாடும் சங்காராசாரியா விஷ்ணு புஜங்க முதலிய நூல்கள் செய்து விஷ்ணுவை வழிபட்டது சர்வாஸங்கதம்' என்றாரன்றோ? அதற்குச்சமாதானஞ்சொல்வோம். விஷ்ணுவைவணங்குவதனாலே குற்றமிலலை. விஷ்ணுவைப்பரதத்துவமாகக்கொண்டுவணங்கப்படாதென்பதிவர் கருத்து. சங்கராசாரியார் விஷ்ணுவைப்பரம்பொருளாகக்கொண்டு வணங்கினாரென்பதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. அவர் முறை பிறழாது துதிததிருக்கிறார். அந்தமுறைபிறழாமையென்னெனின் பிரமனைத்துதிக்குங்கால் இந்திராதி தேவர்களால் வழிபடத்தக்கவரென்றும், விஷ்ணுவைத்துதிக்குங்கால் பிரமன்

Koviloor Digital Library

இந்திரன் முதலானவர்களால் வழிபடத்தக்கவரென்றும் உருத்திரனைத் துதிக்குங்கால் விஷ்ணுபிரமன் இந்திரன் முதலியவர்களால் வழிபடத்தக்கவரென்றும் பிரமத்தை அல்லது பிரமத்தின் பரியாயநாமமான சிவனைத் துதிக்குங்கால் பிரம விஷ்ணு ருத்திரர்களாலே வழிபடத்தக்கவரென்றும்சொல்லியிருக்கின்றமையேயாம். விஷ்ணுஸ்துதியில் விஷ்ணுவைப்பரம்பொருளாகச் சொல்லியிருக்கிறாரேயென்று சங்கிக்கலாம். அப்போது அதிஷ்டான ப்ரம்மத்தைச் சேர்த்துச்சொல்வீர். முன் சொன்னபடி சிலம்பும் பொன்னுமொன்றாவதுபோல விஷ்ணுவும் அதிஷ்டான ப்ரம்மமுமொன்றும். அதிஷ்டானத்தைச்சேர்த்து விஷ்ணுவைப்பரத்துவமாகத் துதிக்கும்போதும்ஷைமுறைபிறழாது பிரமாதி தேவர்களால்வழிபடத்தக்கவரென்று'சொல்லுகிறாரேயன்றிப்பிரம உருத்திரரால் வழிபடத்தக்கவரென்று சொல்லுகின்றாரில்லை. அம்பாள் ஸ்தோத்திரத்திலும் இந்தக்கிரமம் தவறாது. லட்சுமீஸ்தோத்திரத்திலும்ஸரஸ்வதிஸ்தோத்திரத்திலும்இந்தக்கிரமம் பிசகாது.

சூதசங்கிதை.

பிரமவிஞ்ஞானமுரைத்த அத்தியாயம்.

பரதத்துவ அபேதபுத்தியாலிம்மூவரையும்பரமென்,றுரவி
ற்பொலிவேதாகமமாதிகடாமுரைக்குமுரைத்தாலுந்,திரி
மூர்த்திகளுருத்திரனைநிகழ்சத்துவகுணதேக, மரி
யதிறத்தோனாகவிவவிசேடனுவான்மாதவத்தீர். ௰௧

ஷை விசேடசிருட்டியுரைத்தஅத்தியாயம்.

பரதத்துவஅபேதத்தைப்பற்றிப்பிரமன்மாயசிவர்,
விரவுசிருட்டிசெய்வரென விளம்புவார்களெஞ்ஞான்றும்.
கரவின்முனிவிர்பரமார்த்தமாகக்கடுக்கைநறுந்தொடை
யோ, டரவும்புனைந்தபரசிவனேயாற்றுஞ்சிருட்டியென்
றுணர்வீர். ௮

ஷை சருவசாத்திரசஙகிரகமுரைத்த அத்தியாயம்.

திரிமூர்த்திகளுமவருடையதிகழுமவதாரங்களுநன்,
கரிபசிவத்தியானஞ்செய்தாலுமவிரும்பரமான்ம,
வுரிபதாகியவிபாகத்தினுறச்சேர்ந்தவரேயல்லாமல,
விரியுஞ்சிவவிபாகத்திற்சேர்ந்தோரல்லர்மெய்த்தவத்தீர்

இந்த அர்த்தத்தைக்கொண்டு விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் அபேதங்கூறினாரேயன்றி மற்றப்படியன்று. பிரம விஷ்ணு ருத்திரன் சிவன் இவர்களை முறையே யொருவர்க்கொருவர் மேலென்று அவரது தோத்திரங்களினால் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. இந்தக்கிரமம் தத்துவராயர்பாடிய பாடுதுறையிலுங்காணலாம்.

புல், பூடாதிகள்பிரமஸ்வரூபமென்பதுண்மையென்பதுபற்றி புல், பூடு, புழு, மரம், விலங்கு, பறவை, மனிதர், தேவர் முதலிய எல்லாப்பிறப்பும் பிரமஸ்வரூபமென்று கொண்டாடுமிவர் மதத்தில்' என்று கூறியிருப்பதால் அவ்வாறு கூறுவது வேதசாஸ்திர விருத்தமென்று சோமசுந்தரநாயகரபிப்பிராயப்படுகிறதாய்த் தெரிகின்றது. புல் முதலியவைகள் ப்ரம்மஸ்வரூபமென்பது இவர்க்குடம்பாடில்லை; வேறென்றே சொல்லவேண்டும்போலும். வேறென்று சொன்னால் பிரமம் அபரிபூரணமாகின்றது. இதற்கு யாதுகூறுவர்? 'புல் முதலியவற்றில் பிரமம் நிறைந்திருக்கிற' தென்னின் இதற்குவமானமவேண்டும். 'குடத்திலிறையச்சலமிருப்பது போ'லென்னின் குடமானது சுற்றிலுமுள்ள ஓடுதவிர மற்றவைகள்புரையுடையதாயிருப்பதாலும் அவ்விடத்தில் குடமில்லாமையாலும் குடமானபொருளிலலாவிடத்தில் நீரிருக்கிறது. இதைப்போல வுவமேயத்தைப்பார்த்தால் புல்லினுள்ளே புரையிருக்கவேண்டும். அந்தப்புரையில்தான் ப்ரம்மமிருக்கவேண்டும். புல்லுள்ளவிடத்தில் ப்ரம்மமிருத்தல் கூடாது. அன்றிக்குட ஆதாரத்தின்பேரில் தான நீரிருக்கிறது. ஆதாரமில்லாமையால் குடத்துக்கு வெளியில் நீரிராது. அப்படியே புல் முதலிய பொருள்களின் ஆதாரத்தின்பேரில் அவைகளுக்குள் ப்ரம்மமிருக்கும். புறம்பில் ஆதாரமில்லாமையால்ப்ரம்மமிருக்கக்கூடாது.ஆதலாலிவ்வுவமானம் பொருத்தமுடையதன்று. 'அடியுமேலுமில்லாத பாத்திரமொன்றை நீர்நிறைந்த தடாகத்தின் மத்தியில் அழுத்தினால் நீர் உள்ளும் புறம்பும் நிறைந்திருக்கின்றதன்றோ! அதுபோல பிரமம், புல்முதலிய பொருள்களினுள்ளும் புறம்பும் நிறைந்திருக்கின்ற' தென்னின் இதுவுங்குற்றமாகும். பாத்திரத்தினுள்ளும்வெளியும்நீர்பூரணமேயன்றி யிடையிலன்று. இடையில் பாத்திரமிருக்கின்றது. பாத்திரமுள்ளவிடத்தில் நீரின்று. அதுபோல்புல் முதலிய பொருள்களின் உள்ளும் புறம்பும் பிரமமிருக்கிறதாயுமிடையிலின்றெனவும் சொல்லவேண்டும். 'எள்ளிலெண்ணெய்போல்நிறைவு சொல்லலா'மென்னின் இதுவுந்தோஷமுள்ளதுதான். எள்ளைச்செக்கில் வைத்தாட்டினால் திப்பியும் நெய்யுமான இரண்டுபொருள்களாகின்றன. எள்ளானது எவ்வளவு அளவு அல்லது எடையிருக்கின்றதோ, அவ்வளவு அளவு அல்லது எடை நெய்யேனும்திப்பியேனுமில்லை. இரண்டுஞ்சேர்த்தால்தான் தானிருக்கின்றது. எள்ளளவுக்கு அல்லது எடைக்கு நெய்எவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்குத் திப்பியிருக்கிறது. எள்ளளவுக்கு அல்லது எடைக்குத்திப்பி எவ்வளவு குறைகின்றதோ, அவ்வளவுக்கு நெய்யிருக்கிறது. எள்ளென்னுஞ்சொல்லுக்குப்பொருள் திப்பியும நெய்யுமன்றி வேறொன்றுமில்லை. எள்ளென்று சொல்லப்படும் பொருளில் சில பாகம் திப்பியும் சிலபாகம் நெய்யுங்கோர்த்துக்கொண்டிருக்கின்றன. இரண்டுக்கும் நிறைவுசொல்லப்படாது. இதன்படி பார்த்தால் பிரமம் நிறைவற்றதென்றே சொல்லவேண்டும். எள்ளிலெண்ணெய் திருட்டாந்தம் தூலமாய்ச் சொல்லப்படுகிறது. ஆழமாய் விசாரித்தால் சரிப்படாது. ஆகாயம் மற்றநான்கு பூதங்களில் பூரணமாய் நிறைந்திருப்பது போல சொல்லலா'மென்னின் இதுவுந்தோஷமாய் முடிகிறது. அனுபிப்பிரதிவாதிக்குப்பிரதிகூலமாகவும் முடிகிறது. எங்ஙனமென்னின் கூறுவாம். ஆகாயமும் மற்ற நான்கு பூதங்களும் காரண காரியம். ஆகாயங்காரணம்; நான்கு பூதங்களும் காரியம்;மண்ணுங்குடமும்போலக்காரணமான மண்ணைத்தவிரக்காரியமான குடமெங்ஙனமின்

ரே, அங்ஙனமே காரணமான ஆகாயத்தைத்தவிரக் காரியமான நான்கு பூதங்களுமின்றென்றே சொல்லவேண்டும். இரண்படியே யுவமேயத்தைப்பார்ப்போமானுல் பிரமம காரணம்; புல்பூடுமுதலியவுலகம் காரியம். காரணத்தையன்றிக காரியத்துக்குப்பொருளிராதுபோல் பிரமத்தையன்றிப புல்பூடாதியுலகிற்குப்பொருளிராது. மண்ணுனது குடத்தில் நிறைய இருக்கின்றதென்னின் மணணைப்போல குடமொருபொருள் உண்மையாயிருந்து அதில் மண் நிறைய இருக்கின்றதென்பதல்ல. மண்உண்மை; குடம் உண்மைப்போலி. போலியில் யதார்த்தநிறைய விருப்பதுகூடும். யானைவாகனத்தில் மரம் நிறைய இருக்கிறதெனறு சொல்வதுபோல். யானையொருபொருளும் மரம் ஒருபொருளும் ஆக இரண்டும உண்மையனறு. ஒன்று உண்மை;ஒன்று தோற்றம். இதுபோல் பிரமமான பொருள் உண்மை; புல், பூடாதியுலகந்தோற்றம். இந்த அர்த்தத்தைக்கொண்டே திருமந்திரத்தில்

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதல்பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல்பூதமே.

பொன்னை மறைத்தது பொன்னணிபூடணம்
பொன்னில் மறைந்தது பொன்னணிபூடணம்
தன்னை மறைத்தது தன்கரணங்களாந்
தன்னில் மறைந்தது தன்கரணங்களே.

என்றுகூறியிருக்கிறார். இதன்படிபார்த்தால் காரணமேகாரியமாகிறது; மரமேயானையாகிறது போலாம். மரம் காரணம்; யானைகாரியம். மரம்யானையாகிறபோது மரமே யானைஸ்வரூபமென்று சொன்னுல் தோஷமென்ன? மரத்தின்காரியமானயானை, குதிரை, தேர்முதலியவற்றையெல்லாம்பார்த்து இவைகளெல்லாம மரஸ்வரூபமென்று எப்படிச்சொல்லலாமோ, பொன்னின் காரியமானபூஷணங்களையெல்லாம் பொன்னின் ஸ்வரூபமென்று எப்படிச் சொல்லலாமோ, நூலின்காரியமான வஸ்திரங்களையெல்லாம் நூலின் ஸ்வரூபமென்று எப்படிச்சொல்லலாமோ அப்படியே பிரமத்தினகாரியமான புல் பூடாதிகளைப்பிரமஸ்வரூபமென்று சொல்லத்தடையென்ன? இப்படிச்சொன்னுல் பிரமத்துக்குப்பூரணமுஞ்சித்திக்கிறது; புல் பூடாதிகட்கு ஒருவிதமாக இருப்புமேற்படுகிறது. பிரமமே அல்லது பிரமத்தின் பரியாயமான சிவனே யாவுமாயிருக்கிறதென்பதற்குச்சுருதி முதலிய பிரபலபிரமாணங்கள் வருமாறு:—

யசுர்வேதத்தில் கைவல்யோபநிஷத்.

அவரே சிவன். அவரே இந்திரன், அவரே நாசமில்லாதவர். அவரே விஷ்ணு. அவரே பிராணன். அவரே காலம். அவரே அக்கினி. அவரே சந்திரன். உண்டாயிருக்கிறதும் இனிபுண்டாகப்போகிறதுமாகியஎல்லாம்அவரே. சாசுவதமாயுள்ளவரும அவரே. அவரையறிந்து மிருத்துவைத்தாண்டுகிறுன. முத்திக்குவேறு வழியில்லை.

யசுர்வேதத்தில் வராகோபநிஷத்

சிவனே குரு, சிவனே தேவன், சிவனே வேதம்,சிவனே பிரபு. சிவனே நான், சிவனே சகலமும், சிவனைக் காட்டிலும் வேறொன்றுமில்லை.

சூதசங்கிதை.

ஞானிபணிவிடைப்பேறுசொற்ற அத்தியாயம்.

வானேவளியேயொளியேபறலேமண்ணேமற்
றானேயுயிரேசுதிரேமதியென்றேரெண்மெய்
தானேயுடையெய்மனன்பாய்மறையுகவில்கிற்கு
மானேறுடையாயடியேன்வேறோவருளாயே. ௩௪

பிரமன்முன்னோர்நில்லையிறேற்றுஞானம்பெற்ற
அத்தியாயம்.

உலகெலாமுருவாகியபுருடனுக்குளமா
யிலகுறுந்தரிசனஞ்செயின்முத்தியிகுவதா
யலகில்பாவமும்போக்கிநல்லருளளிப்பதுவாய்க்
குலவுபோகமும்வேண்டுவார்க்கருள்குணத்ததுவாய் ௫௭

மானதயாகமுரைத்த அத்தியாயம்.

விதியுநிட்டமுமருவுவித்தையுமவித்தையுமெய்ச்சபலவாதந்,துதியறுநிட்பலவாதமிருக்கிறதின்றெனச்சொல்விவகாரத்திற்குப், பதிதருகோசரமானசகலமுமொண்பரசிவசொரூபமென்றே, கதிமருவுதியானஞ்செய்திடல்வேண்டுங்கற்றுயர்ந்துகமையின்மிக்கீர். ௧௬

தைத்திரியவுபநிடததாற்பரியமுரைத்த
அத்தியாயம்.

பிரமன்முதற்றுரபமீறுப்பேசாநின்றவுலகமெலாம்
பரவுமந்தப்பரமசிவனே பண்பார்ந்தப்பரசிவன்றன்
சொரூபஞானமுள்ளோனேதுலங்குசிவன்முத்தனுங்
கருமயாதிகளாற்சிவன்முத்தனுகாண்கடைப்பிடிமின். ௮

கூர்மபுராணம்.

விசுவரூப அத்தியாயம்.

அணுவாமெவைக்குமணுவாயிருத்தியகிலங்கண்மூடியொளிருந், தணியாதவண்டவுருவாயிருத்திசருபஞ்சபூதமதிவான், மணியாமருக்கனுபர்சோமயாசிவடிவாயிருத்திமறைபுந், கணியாதிருத்திநினையார்கணிட்பர்களைசண்ணதாயபெரியோய். ௨௨

வாயுசங்கிதை.

பரசிவப்பிரபாவமுரைத்த அத்தியாயம்.

சிற்பனகடப்பனயாவுசேர்ந்திடிற்
பொற்புறுசடையவனுருவம்போலுமா
லற்புதப்படவிவ்வாறமர்வனென்றதைச்
சொற்பவேசுக்கடாந்தோன்றவோர்ந்திடா. (௧)

தோத்திரமுரைத்த அத்தியாயம்.

சகத்தினுக்கன்னையாகியேயுறைவோய்சகத்துருவாகியேயிருப்போய், மிசத்திசழ்ந்திலங்குவடிவினையுளத்தள்விளையுமஞ்ஞானத்தையறுப்போய், வகுத்திடுசயம்பாலவயுமுடையோய்வபங்கியகுணங்களையுடையோய், தலைப்படுமேலோராவியுளுறைவோய்தனைத்துதிசெய்திடவேண்டும்.

பின்வரும்.

Chidambaram:—printed and published for the proprietor at the "Brahmavidya Press" No, - 38 Senkallooneer Pilliar koil street.

Koviloor Digital Library

NO 22 — நெ. உஉ.

ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத்ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத

ராஜாபாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையை ஆதரித்துவருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ-ஸூ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் <u>பிரமவித்தியா பத்திரிகையின்</u> வருடாந்திரச்செலவை வருடாவருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காலம்வத்ஸரம்.
துவாரவி உஅவ
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,

[illegible]

Koviloor Digital Library

[illegible]

கைம்பெண்களுக்கு மறுமணம் அவைதிகமென்பது.

முன்தொடர்ச்சி.

அவ்வில்லறம் பூர்த்தியெய்தவே திருமணம்புரிதல் ஆரியர்க்கு அத்திருமணச்சம்ஸ்காரம்பெற்ற தருமபத்தினியிடம் பிறக்கும் குழந்தைகள் தருமப்பிரஜைகளே. யாம் கேவலவின்பத்துக்கெனப் பெண்களை மணப்பதில்லை. ஒரு தருமத்தின்பொருட்டே. ஆயின் ஒருபெண்ணை ஒருமுறை ஒருவன் தருமத்திற்காகக்கேட்டான். அதற்கிசைந்து அப்பெண்ணின் தகப்பனும் அக்கன்னியைக் கணவனுக்களித்திட்டான். அவ்விருவரும்கூடிச் சில தருமங்களைச் செய்பவும் செய்தனர். இனித்தெய்வவசத்தால் அம்மணவாளன் இறந்தால் அப்பெண்களை மற்றவன் மணப்பானேன்? ஒருவனில்லறத்துணையாய் நின்று அவன் அநுபவித்தபொருளாய் எஞ்சியதைக்கொண்டு மற்றவன்றன்னில்லறம் விளங்கச்செய்வதுசிதமா? எச்சிலைத்தின்பதுபோலல்லவோ அம்மறுமணத்தம்பதிகள் செய்திடும் கிரியையாகும். இனி இவ்வுச்சிட்ட தம்பதிகள் செய்யும் கன்மமா தேவர்களுக்கும் பிதுருக்களுக்கும் மற்றவர்க்கும் பிரீதியைக்கொடுக்கும். இங்கு இப்பெருந்தீச்செயல் எமது குலத்தைக்கெடுக்கும் என்றே இத்தப்பெரியோர் ஒழித்திட்டார். இனி பெரியோர்சென்ற வழியை மாற்றிப்புதியவழி ஒன்று கண்டு அவ்வழிசெல்வோமானால் அந்தோ! "எனது புருடன் எனக்குப்போதுமானவனல்ல; எனக்குத்தக்க அழகனல்ல; எனக்கு அவனிடம் விருப்பமில்லை; அவனுக்கு வயது முதிர்ந்தது; அவனுக்கு ரோகம்வந்தது" என்பதாதி பல காரணங்களைக்கொண்டு ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொருதினம் ஒவ்வொரு கணவனைப்பார்க்கவேண்டி நேரிடவும்வரும். அம்மம்ம! இதிலும் மேலாய் ஆரியர்மத ஜாதிகளைக்கெடுத்திட வேறு வேண்டியது யாதுளது? இனி இவ்விஷயத்தை அரசரிடம் தெரிவித்தால் அதை அவர் கவனியாது விட்டொழிப்பதுமாத்திரமன்றி அம்மறுமணக்கடுந்தீக்கொழுந்து விட்டெரிய தம்மாணையும் மூட்டிடுவார் போலிருக்கின்றது. இக்கடுஞ்செயல் எக்காலம் நந்தேயம் விட்டகன்றிடுமோ! நம்மவரே நம்முது நூல்களைக்கற்பதில்லையே! இவருக்குண்மை புலப்படுவதெப்படி? இவர் நற்கதியடைவதுதான் எவ்விதம்? ஓகோ! காலத்தின் கொடுமையை நினைக்க மனம் பதறுகின்றது. நம்மவரே நமக்குக் குலவைரிகளாகத்தோன்றிவரும் இக்காலத்தில் நாம் மேற்றிசையாரைத்தூற்ற வகையேது?

Koviloor Digital Library

[illegible]

அவர்கள் மதத்திலும் கடையுடைய பாஷைகளிலும் நம்முடன் வேறுபட்டவர். ஆயின் முதலிருர் எக்காலமும தம்பதிகள் திருமணமான துமுதல் விட்டுப்பிரியாது நேரிடும் தருணத்தை மிகப்புகழ்ந்தார். இதில் ஓர் விவஸ்தை இல்லாவிடில் எத்துணை வயதான கைம்பெண்ணாயினும் தன்னிஷ்டம் பூர்த்தியடையவேண்டி ஒருபுருடனை அபேக்ஷிக்காதொழியாள். இந்த மறுமணம் மடந்தையற்கேயன்றி, கிழவிகளுக்குக்கூடாதென்றால், ஏன்கிழவிக்குக் கூடாது? எந்தக்கிழவி தனக்குச்சுமங்கலித் தன்மைவேண்டாம் என்பாள். நாம் பிறந்து கற்றகல்விப்பயன் இதுதானோ! நீங்கள் மறுமணம் முதலிய மேற்றிசையார்துராசாரங்களை நந்தேயத்தில் நடத்தவுத்தேசிப்பீரேல், வெகுகாலமாய்க் காத்துச் சமயம்பார்த்து நம்மவரைக்கெடுக்கக்கருதிய மேற்றிசையார் கருத்துநிறைவேறத்தடைஏதுமில்லை; பாருங்கள்! மடபதிகள் நிரந்தரநித்திரையையும் நம்மவர் ஒற்றுமையின்மையையும், மற்றவர் இடைவிடா முயற்சியையும், தேவாலய பாலகர் உதாசீனத்தையும், நமது வித்துவான்கள் உட்சண்டைமுயற்சியையும், விதவைகளின் விவாகத்தையும் நினைக்கநினைக்க மனம் அச்சமுறுகின்றது! எக்காலம் எம்மிடம் சதாசாரம் தங்குமோ அறியேம்! மேலும் "ஒருமுறையே கன்னியைக் கொடுப்பது மேலோர்இயல்" எனமனுமொழிந்தார். இருமுறைகொடுத்தல்மேலோர்செயலன்றிழிபலாகமுடிய, அது அவைதிகத்திச்செயலாதலின் அதில்மேலோர் அபிப்பிராயம் எவ்விதத்தும் சொல்லாததறிக. மேல் "விதவைகள், யதிகள், பிரமசாரிகள், இவர்களுக்குத் தாம்பூலம் கோமாம்ஸம் போலொத்தது" என்றும் "விதவை கட்டிலில் படுத்தால பதியை நல்லுலகத்திருந்து நழுவச்செய்வாள்" என்றும் "பல்லக்குமுதலியதேறும் விதவை நரகம்பெறுவாள்'என்றும் 'தலைமயிர்வளர்த்தல் உடம்புமினுக்குதல் எண்ணையிட்டுக்கொள்ளல் கண்ணாடி காண்டல் இவைகள் விதவைக்குக்கூடா'தென்றும் உள்ளபலவசனங்கள் விதவைகளின் மறுமணத்தை மறுக்கத்தடையென்னை? மேற்கண்ட வசனங்களால் விதவைகளுக்குச் சந்தனதாம்பூலாதிகளே கூடாதெனப்பெறப்படுதலால் அவர்கள் எப்படிக் கணவரைக்கூடி விளையாடி குழந்தைகளையும் பெற்றெடுப்பது பிரமாணசம்மதமாகும்? 'புத்' என்னும் நரகம் தகப்பனுக்கு வராது காபபாற்றுவது 'புத்திரன்' எனுஞ்சொல்லுக்குப்பொருள். இனி புனர்விவாகத்தால் பிறக்குங்குழந்தைபுத்துமாத்திரமல்ல; மற்றையஎல்லாநரகங்களையும் தகப்பனுககளிப்பானாதலால் இவன்வெகுவாய் அவனிலும் மேலானவனே. இனி இம்மறுமணப்

[illegible]

பபன்தான்யாதெனின்? அந்தோ! தானும் தன்முன்னோரும் சேர்ந்து நரகவாசம் செய்வதே என நன்குரைக்கலாம். இங்குண்மையிது.—'எவர் பாவத்தினின்று பயந்து அதை விலக்கிடுவோர் அவரே ஆரியர்' என ஆரியச்சொற்பொருள். அச்சொல்லோ நம்மவர்க்கே கூடியதென இன்னும் வேதாதிப்பிரமாணங்களால் நிரூபிக்கலாம். இப்பெயர் ஒன்றே நம்மவர்க்குப்பெரும் பூஷணம்எனலும்தகும். நம்மவர் எப்பொழுதும் பாவத்திற்பயமுள்ளார் என்றும் இன்றைக்கும் மற்றதேசத்தவர்களைப்போல வீண்பாவத்தொழிலை இத்தேசத்தவர் செய்வதில்லையெனபதும் எல்லோருமறிந்த விஷயம். ஆயின இவ்வாரியர் எனப்படும் நம்மவர் பெயராலும் பெரியோரே. ஆதலால் நம்மவரிடம் மற்றவர்க்கு அசூயையதிகம். அவருக்கு இதுவரை நம்மவரைக்கெடுக்கச் சமயம் நேரவில்லை. இக்காலம் கலிமகாராஜன் ஆளுகை நிலைக்கவேண்டி அவர் இத்தேசத்துட்புகுந்தார். நம்மவரைக்கெடுத்தார். துராசாரங்களைக் கொடுத்தார். மதவுண்மைகளை மறைத்தார். சதாசாரங்களைத்துலைத்தார். சோற்றைக்காட்டிக்களியைத்திணிப்பதுபோல மெல்லமெல்ல இலவசப்படிப்பைக்காட்டி நம்மவர்க்கு நாத்திகத்தையன்றிக் கிறிஸ்தவத்தையும் புகட்டினர். அவரே கைம்பெண் மறுமணம் பெண்கல்வி முதலியன அவசியம் என்று நம்மவர்கருத்துர்ப்போதனை செய்பவர். இது பிறரைக்கெடுக்கும் கேடென்பதை யறியார்போலும்! இது ஓர் புறங்கிடக்க; சிலர் ஏதோவேறுசில காரணங்களுக்காக அவரது தாக்ஷிண்யத்துட்பட்டு அந்தோ! இக்கொடுஞ்செயலை ஒப்புகிறார். அது எமக்குமிக வருத்தத்தைத்தருகின்றது. ஓ! சீர்திருத்தக்காரர்காள்! உங்களுக்கிந்தச்சீர்திருத்தவுபதேசம்செய்பவர் ஆரியசாஸ்திரப்பயிற்சியற்றவரே. ஏன் அவர்வார்த்தையைக்குருஉபதேசமாகக் கேட்கிறீர்கள்! அவர் ஆரியப்பயிற்சியற்றவரென்பது எமக்கும் தெரியுமே. இவர்ஆரியப்பயிற்சியுள்ளவராயின் இவர்க்கு இப்புத்தி தோன்றாது. இது உங்களுக்கு வேறுமதஸ்தர் உபதேசத்தால் கிடைத்தவிஷயமாகவே இதைக்கொண்டு நம்மவரைக்கெடுத்திடல் நும்போன்ற லோகோபகாரிகளுக்கு அழகோ! இனி நமது பெண்கள் அனுபவிக்கும் துயரம் பொறுக்காது இவ்விதம் செய்வோம் எனில் வெகு அழகு! அவ்விஷயத்தில்நமது சாஸ்திரங்களைப்பயின்ற வித்துவான்கள் எல்லோரையும் ஒருங்குசேர்த்து அவர்களைக்கொண்டு உண்மையைவிசாரித்துக்காலோசிதமாக ஏதேனும் செய்யச்சாஸ்திரங்கள் இடங்கொடுத்தால், அதைக்கொண்டு உண்மைகடைப்பிடித்து நடத்தவேண்டுவதே நமக்குசிதம். அங்ஙனமன்றி அவ்விஷயத்துண்மையறியா நீவிர் மற்றவர் சொல்லைக்கே

[illegible]

ஜ்யோதிஷம்.

[illegible]

க. [illegible]

(அ) [illegible]

(ஆ) [illegible]

(அ) [illegible]

(ஆ) [illegible]

உதாஹரணம்.

[illegible]

ட்டு இவ்விஷயத்தில் நுழைவது மிகவும் நியாயமன்று; யாம் கண்டமட்டில் நமது தர்மசாஸ்திரங்கள் விதவாவிவாகத்தைத் தடுக்கின்றனவேயன்றி விதிப்பதாகக்காணப் படவில்லை. 'விதவாவிவாகம் செய்யவேண்டும்' எனவிதிக்கும் சாஸ்திரம் எங்குமில்லையெனநாம் சொல்வோம். ஆயின் ஆராய்ச்சிமிகுந்தவாரியர்காள்! இனியேனும் இவ் விதவாவிவாகத்தை விட்டொழித்து நலம்பெறுவீர் என நாம்அகம்வாடி வாசுதேவனைப்பிரார்த்திக்கிறோம். இத்துடன் இவ்விஷயத்தைவிட்டுப் பிறகு வேறு விஷயத்தைப் பற்றிச்செல்வாம்.

இங்ஙனம்,

(ஒப்பம்) திருவேங்கடம்

மொழிபெயர்ப்பு. திருமலைசாஸ்திரி.

ஐய!

சிற்சிலமாதங்களுக்குமுன்னர் 'சோதிடம்' என மகுடஞ்சூட்டிய விடயமொன்று தங்கள் பத்திரிகையில்வெளியிடும்படி தங்களுக்கு அனுப்பி வேண்டிக்கொண்டபிறகு வித்தியார்த்தியாய்ச்சென்னைசெல்ல நேரிட்டமையாலும் அங்கும் சாவகாசம் இல்லாதிருந்தமையாலும் சென்ற மீ. கக-ம் நெம்பர் பத்திரிகையைப் பார்க்கவாய்க்காமற்போயிற்று. ஷை தலைப்பின் கீழ்: 'சற்றேறக்குறைய இருயாமம் விருத்திக்ஷயம் வருமென்பதையுங்கிருபிக்க வலிமை எமக்குண்டு' என்றவிடத்தில் 'அதை அவசியம் வெளியிட்டிடுவீராக. பத்—ர்' என்று கண்டிருந்ததையும் வேறோர் புத்தகத்தில் நாம் குறித்துக்காட்டிய வாக்கிய வியாக்கியானத்தால் சுமார் ௬. நாழிகைவிருத்திக்ஷயம் வருமென்பது பெறப்படவில்லை பென்று கண்டிருந்ததையும் இப்போதுதான் கண்ணுற்றோம். ஷை விஷயங்களை உடனே எழுதாமல் காலந்தாழ்ந்து எழுத நேர்ந்தமைக்கு மன்னித்து அடியில் வரைவனவற்றைப் பிரசுரிக்கும்படி பத்திராதிபரவர்களைப் பிரார்த்திக்கின்றோம்.

1. விருத்திக்ஷயம் தனித்தனி இருவகையாம்.

(a) தினகதம்

(b) ஆத்தியந்தம்

(a) ஒருதின (இராப்பகல்) த்துக்கு ஏற்பட்ட ௬0-நாழிகையில் கூடியும் குறைந்துவரும் அளவே.

(b) தினகதம் ஒருதிதி பிரவிருத்தித்த மொத்தநாழிகை அடுத்த திதியின் பிரவிருத்தியான மொத்தநாழிகையாகிய இவ்விரண்டின் வித்தியாசமே ஆத்தியந்தத்தின் அளவாம்.

[illegible]

உதாரணம்:—

௧௭-வ சப்தமி நாழிகை ௧௭
௧௮-வ அஷ்டமி ௨௧
௧௯-வ நவமி ௨௪

(a) அஷ்டமியின் அதிகப்பிரவிர்த்தியாகிய ௪. நாழிகையும் நவமியின் ௩. நாழிகையும் தினகதவிருத்தி

(b) இங்கேயே அஷ்டமியின் பிரவிர்த்தியான ௨௪ நவமியின் ௨௩ இவ்விரண்டின் வித்தியாசமாகிய ௧. நாழிகை ஆத்தியந்தவிருத்தி.

2. எம்மாதிரி கணனத்தாலும் தினகதம் அதிகரிப்பதற்குத்தக்கதாய் ஆத்தியந்தமும் அதிகரிக்கும் என்பது சுருதியுக்தியனுபவங்களுக்கு ஒப்பமுடிந்ததாகும்எனவே, தினகதமும் ஆத்தியந்தமும் கூடுவதும் குறைவதும்ஆகியவிஷயத்தில் ஒன்று மற்றதைப்பொறுத்திருத்தல்காண்க.

3. மேற்கூறியனவெல்லாம் க்ஷயத்திற்குங்கொள்க.

4. சுமார் கொஞ்சங்குறைய மூன்றுமுகூர்த்தம் தினகதமென்றும் சுமார் 1-க்கு நாழிகை ஆத்தியந்தமென்றும் வாக்கியக்காரர் துணிபு என்பது சர்வஜன சாமான்னியமாய்த்தெரிந்தவிஷயமேயன்றோ. இதுவுந்தெரிந்துகொள்ளமூளையடையாதவர்களுக்குத்தெரிவிக்கச்சென்ற நூறுவருஷத்திபஞ்சாங்கத்தைப்பார்க்கச்சொல்வதிலும் சுளுவானவழி நம்புத்திக்குத்தட்டுப்படவில்லை.

5. «[illegible]» என்றவசனவியாக்கியானத்தால் ஒருதிதி ஒருதினம். ௧௮. நாழிகைதொடங்கி மறுதினம் ௨௪. நாழிகைவரை இருக்குமென்றும் அடுத்த மறுதிதி அந்த ௨௪ தொடங்கி அடுத்த மறுதினம் ௨௪¼ அல்லது ௨௩-௫௯ வரையிருக்குமென்றும் (ஆத்தியந்தவிருத்திக்ஷயம் ௩௰. ௫௯ என்றபடி) ஆசாரியபாதாள் வைத்தியநாததீக்ஷிதர் முதலிய பெரியோர் சொல்லியிருப்பதை மனஞோகாமல் தலைகுனிந்து கண்திறந்துபார்ப்போர் யாவருக்கும் இனிதுவிளங்கும்.

5. ஆத்தியந்தவிருத்திக்ஷயம் ௧-க்கு நாழிகை யெப்புக்கொள்ளும்பொழுது தினகதம் சுமார் மூன்றுமுகூர்த்தம் ஏற்படுவதால் ஆசாரியபாதாள் முதலியபெரியோர்கருத்துப்படி ஆத்தியந்தமே சுமார் மூன்றுமுகூர்த்தம்ஒருக்கால் ஏற்படுவதால் தினகதம் எவ்வளவினதாகுமென்பதை யாவரும் கணக்குப்பூட்டிப்பார்க்கவேண்டுகிறோம்.

இதனால் மூன்றுயாமம் வரை தினகத விருத்திக்ஷயம் துணியக்கருதினோமில்லை. ஆனால் இக்காலத்தில் சுமார் பத்துநாழிகைவரை சம்பவிப்பது போல இனியொருக்கால் அதிகம் வருமாயினும் தர்மசாத்திரம் அதைஇகழ்ந்து கூறவில்லையெனச் சொல்லவந்தோமே யன்றி வேறில்லை.

Koviloor Digital Library

[illegible]

[illegible]

P. S. Ramasesha Iyer
B. A

[illegible]

[illegible]

[illegible]

இதுவரை நாம் மேலேகூறியகியாயங்களால், சோதிட சாத்திரகாற்றங்கூட வீசப்பெறுதவரும், அதுவிஷயமான தர்மசாத்திரத்தின தாற்பரியத்துணிபில் நமது ஸம்ஸ்கிருதபாஷாஞானமே முற்றும்போதுமெனக்கருதியிருப்பவரும் “ஸ்வைராந்” என்ற வாக்கிய வியாக்கியானத்தால் பத்து நாழிகைக்குமேல் விருத்திக்ஷயம் ஏற்படுமென்று சிலர் சொல்வதற்கு அபிமானமே காரணமென்றுஉறுமுகிறவருமான தாதாசாரியார் முதலியோரும் பழமொழி கூறப்பட்டனர்.

பத்துநாழிகைவரை விருத்திக்ஷயம் ஏற்படுங்கால்லோபம் வருகிறதென்று சில அறிவிலிகள்பிதற்றுவது சென்ற ௧௦. ௧௧-ம் நெம்பர் பத்திரிகையில் நாம்எடுத்துக்காட்டிய வசனங்களைப்படியாமையாலோ, படித்தும் அறிந்துகொள்ளப்போதுமானசாத்திர உணர்ச்சியின்மையாலோ, அழுக்காற்றாலோ பிறிதுகாரணத்தாலோ அறிந்திலேம்.

பி. எஸ். ராமசேஷய்யர். பீ. ஏ.

ஆரியசாஸ்திர ரகசியவிவரணம்.

வேதவிசாரம்.

ஐய, இத்தேசவாசிகளாகிய வைதிகர் அனைவரும்மிகச்சிறந்த பிரமாணமென வேதங்களைக்கொண்டாடுகிறார்கள். அதில் தத்துவங்கள் பல் கோடிவிளங்குகின்றன. அதற்குப்பெரியோர் பற்பலநல்லுரையியற்றியுள்ளார். அவ்வேதங்களில் இணையில்லாப்பெரும் நம்பிக்கை நம்மவர்க்குண்டு. எவ்விதத்துணிபும் இதனுள்ளடங்கியதாகவே உற்றுநோக்கில்புலப்படும். இத்தகைய வேதங்கள் எல்லாப்பிரமாணங்களினும் மேலானதாய் நம்மவரால்மதிக்கப்பட்டன. அநேக காலம் துவக்கி நம்மவருக்குள்எவ்வித ஆக்ஷேபமும்இல்லாது இவ்வேதப்பிராமாண்யம்நிலைபெற்று வந்தது. இப்பொழுதும் அனேகர் அவ்விதமேநம்புகிறார். இக்காலத்தோ எப்பொருளினும் சம்சயம் உண்டானமையால் எல்லாப்பிரமாணங்களும் சம்சயம்தான். இங்ஙனமாயதும் கலிக்கொடுமையாற்றான் ‘இவ்வேதம்’ எனுஞ்சொல் ‘ருக்கு’ முதலிய நான்கு சொற்றொடர்களுக்கே பெயராகவிருந்து வழங்கப்பட்டதுபோக, அந்தோ! ‘கைபிடித்தவனெல்லாம் கணவனானான்போல’ அவ்வமத புஸ்தகங்களுக்கும்இதுவேபெயராகவழங்கிவருகிறது. விசேடமாகக் கிறிஸ்தவர்மகமதியர்மற்றவர் இவர்கள்தத்தம்மத புஸ்தகங்களுக்குப் பெயராகவழங்கிவருகிறார்கள். ஓர்தகப்பன் தேடியபொருளைப் பலர்பிரித்துக்கொள்வதுபோல் இத்தேசத்துக்கு வந்தவன் எவனும் வேதச்சொல்லைத்துப்பங்காளியாயினான். இங்ஙனமாக வேதம்எனுஞ்

Koviloor Digital Library

[illegible]

சொற்கு முக்கியவிஷயம் ருக்குமுதலியவைகளே என்பதைக்காட்டிடுவோம்:—இவ்வேதம் எனும் சொல் 'வித்' என்னும் முற்றுவினைப்பகுதியினின்று பிறந்தசொல்லாகவே இது அறிவின் கருவி எனப்பொருள் கொடுக்கும் சொல்லாகின்றது. ஆன்மா என்பது அறிவினிடமாயுண்மையாதலாலும் அதற்குக் காட்சிக்குவேண்டியகருவிகள் இருக்குங்கால் பலவிதமான அறிவுகள் தோன்றி மறைந்து வருவதியற்கையாதலாலும் ஆன்மாவானது எக்காலமும் ஒவ்வொரு அறிவு ஏதேனும் பெற்றேயிருக்கும். இவ்வித அறிவைக்கொடுப்பதால் வேதத்துக்குந்தான் வரும்கௌரவம் யாதெனில், கூறுதும்:—

உலகத்தில் இது குடம் இது ஆடை என்பதாதி அறிவின்பயன் குடத்தால் அல்லது ஆடையால் செய்யவேண்டிய தொழிலைச்செய்வதேயன்றி வேறில்லை. வேதத்தால் தோன்றும் அறிவு அத்தன்மைத்தாகாது. இவ்வுலகத்துட்பட்டு, தாய் கருக்குழிக்கிரையாய், பவசாகரத்துழலும் ஆன்மகோடிகள் ஈடேற்றமடையும் வழியாய நல்லறிவுசுடர் கொளுத்தும் கருவியே வேதம் என்றறிந்தடங்குக. மேலும் இருவினைப்பயனைக்கண்ணுற்கண்டு தெளிதல்கூடாமையின் அவற்றை விளக்கும் நன்னூல் ஒன்று மனிதற்கின்றியமையாமையின், அதற்காகவும் வேதம் அவாவப்படும். மனிதனெனப்பிறந்த எவனும் இப்பவப்பிணிதுலையும் வழியைத்தேடவேண்டியதவசியம். இவ்வித நல்லறிவு வேறு எந்தநூலிலும் கிடைக்காது. வேதங்களிற்றான் கிடைக்குமாதலாலும், இனி ஆரியவேதங்களென வழங்கும் நன்னூல் சுவரம், வர்ணக்ரமம் முதலியபல நல்லேற்பாடுகளுடன் கூடியமையாலும் அதுகாலத்துக்கேற்ப மாறவும் கூடாது. இனிக்கிறிஸ்தவர் கொண்ட விவிலியம் அங்ஙனமல்லாததெனச்சில காரணங்களால் காட்டிடுவோம கிறிஸ்தவர்களே ஆங்காங்கு கூடி 'இவ்வேதம் எல்லோருக்கும்உரியது; இதில் எல்லோருக்கும் பொதுவான பிதாவின்பெருமை அளவைகடந்து வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் அவர் குமாரன் ஆகிய கிறிஸ்துவெனும் ரக்ஷகர் மகிமை மிகவிரிந்துள்ளது; ஆதலால் எல்லோரும் நம்மிடம் சேருங்கள். உமது பொய்நம்பிக்கையாலமைந்த வருணாச்சிரமங்களை விட்டொழியுங்கள்; ஆங்கிலேயர் பாஷையை அறியுங்கள்; இங்குவேண்டிய போகங்களை அனுபவிக்கலாம். உங்களுக்கோ மறுபிறப்பில்லை; இப்பிறப்பிலேயே கிறிஸ்துவைநம்பி ஆறுதல் அடையுங்கள்' என்பதாதி பலவிஷயங்களை உபதேசித்து ஆரியநூற்பயிற்சியற்ற சிறுவரைத் தன்வலையிலகப்படுத்தி வருகிறார்கள்.

மற்றது பின்வரும்.

Koviloor Digital Library

SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்
அநுபந்தம்.

௬-ம் புஸ்தகம்] சிதம்பரம். நந்தனஹூ மார்கழிமீ உ௰௨ [இலக்கம்-௨௨

சங்கராசாரியாரது அவதாரமகிமை.
தொடர்ச்சி.

மநுஸ்மிருதி பிருதவாக்கியம் நந்துவோபதேசம்.

௯௯அ. கணாறுக்குத்தெரிகிறதாயும்,தெரியாததாயுமிருக்கிறவெல்லாப்பதார்த்தமும்பரமாத்துமாவினிடத்தில்வாசஞ்செய்கிறதாய் யோகஜியாநத்தால் பார்த்து வேறிடத்தில் மனம்வைக்காமல் பிரம சாக்ஷாத்காரஞ்செய்கிறவன் அதர்மத்தில் மனதை வைக்கமாட்டான். ஏனென்றால், எல்லாம் பிரமசுருபமென்று அறிந்திருக்கையால் அவனுக்குச் சத்துரு மித்திராளில்லாததால இராகத்துவேஷங்களேற்கிடாதல்லவா?

திருவாசகம்.

ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
அருவமுமுருவமு மானாய்போற்றி

வானாகிமண்ணாகி வளியாகியொளியாகி யூனாகியுயிராகி யுண்மையுமாயின்மையுமாய்
கோனாகியானெனதென் றவரவரைக் கூத்தாட்டுவானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே

நிர்க்குண ஆகாயமதீர்கிலம் திகாலாய் அவையல்லவாய்ஆங் கேகாந்தமேயோர்உருவே

பூதங்களெந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனை

கூறும்நாவேமுதலாகக்கூறுங்கரணமெல்லாம்நீ [தும்நீ
தேறும்வகைநீ திகைப்புநீ தீமைநன்மைமுழு [மைக்கின்
வேறோர்பரிசிங்கொன்றில்லைமெய்ம்மையுன்னை விரித்து

அட்டமூர்த்தியழகன்.

சுந்தரமூர்த்திஸ்வாமிகள்தேவாரம்.

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்,
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்.
நிலனேநீர்வளிதீநெடு வானகமாகின்றபுலனே.

திருஞானசம்பந்தசுவாமிகள்தேவாரம்.

மாயவன்சேயவன்வெள்ளியவன் விடஞ்சேருமைமிடற்ற
னாயவனாகியோரந்தரமும்மவனென்றுவரையாகத்
தீயவனீரவன்பூமியவன் திருவாரையூர்தன்னின்
மேயவனைத்தொழுவாரவர்மேல்வினையாயினவீடுமே.

குற்றநீகுணங்கள்நீகூடலாலவாயிலாய்
சுற்றம்நீபிரானும்நீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்தும்நீபெருத்தமின்பமென்றிவை
முற்றும்நீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே.

திருநாவுக்கரசுசுவாமிகள்தேவாரம்.

அண்டமாய்ஆதியாய்அருமறையோடைமபூதப் பிண்டமாய்.

ஊர்வோனாயுலகேழாய்நின்றான்றன்னை.

நீதியாய்நிலனாகிநெருப்பாய்நீராய்நிறைகாலா யிவையிற்றி னியமமாகிப், பரிபாய்ஒன்றாகிஇரண்டாய்மூன்றாய்ப்பரமானவாய்.

ஐம்பெரும்பூதங்களாய்.

ஓசையெல்லாம்ஆனாய்நீயே.

எல்லாவுலகமுமானாய்நீயே.

அல்லாய்ப்பகலானாய்நீயே.

ஒன்றாயுலகனைத்துமானார்தாமே.

உருமூன்றாயுணர்வின்றனொன்றானை
மூவன்காண்மூவர்க்குமுதலானான்காண்.

இருநிலனாய்த் தீயாகிநீருமாகியியமானனாய்எறியுங்காற்றாகிபருநிலையதிங்களாய்ஞாயிறாகியாகாசமாயட்டமூர்த்தியாகிப், பெருநலமுங்குற்றமும்பெண்ணும்ஆணும் பிறருருவும்தம்முருவுந்தாமேயாகி,நெருநலையாயின்றாகிநாளையாகி நிமிர்புன்சடையடிகணின்றவாறே.

மாலாகிநான்முகனாய்மாபூதமாகி.

இப்பொன்நீ இம்மணிநீ யிம்முத்துநீ யிறைவனீயேயே றூர்ந்தசெல்வன்நீயே.

தானலாதுலகமில்லைசகமிலாதடிமையில்லை.

திருமந்திரம்.

தானேதிசைபொடுதேவருமாய்நிற்குந்
தானேயுடலுந்தத்துவமாய்நிற்குந்
தானேகடல்மலையாதியுமாய்நிற்கும்
தானேயுலகில்தலைவனுமாமே.

உடலாயுயிராயுலகமதாகிக்
கடலாய்க்கார்முகில்நீர்பொழிவானாய்
இடையாயுலப்பிலிபெங்குந்தானாகி
யடையார்பெருவழிபண்ணவல்நின்றானே.

இலிங்கபுராணம்.
பசுபதிபாசமுரைத்த அத்தியாயம்

பதியாகியுறைபவனேமாயையெனும்பாசத்தாற்பசுக்களாகிவதியாநிற்பனஎவையுங்கட்டிடுவென்முகைவிரிநாண்மலர்கடுவித், துதியாமெய்ஞ்ஞானத்தால்தொழுதிடில்அத்தொடர்ச்சியினைபகற்றித்தூய, திமேவியமர்த்துறையக்கண்ணிரங்கிக்கருணைபொழிந்திடுவென்றானே. (௫)

௷ நான்முகனுமாயனுந்துதித்தஅத்தியாயம்.

நினைப்புமாய்மறப்புமாகிநினைவினுக்கெட்டாதொன்றாய், அனைத்துமாய்நின்றாய்போற்றியருமறைக்கொழுந்தேபோற்றி,கனைத்துவண்டிமிரவிள்ளும்கடுக்கையங்கண்ணிபோடு புனிற்றுவெண்டிங்கட்கண்ணி புனைந்த செஞ்சடையாய் போற்றி.

Koviloor Digital Library

ஷை சந்தசந்துழநலானவையுரைத்தஅத்தியாயம்.

பன்னுகின்றசத்தாகியசத்தாய் அவற்றின்பதியாகி
மன்னியுறைதலாற்சிவனைசதசத்பதிபாமென வுரைப்பார்
முன்னிலவியத்தானதியேயுறைந்தவதனுள்முதுமறைதேர்
நன்னுமுனிவரய்வியத்தரென்றுஈடிநவின்றிடுவார்.

"புல், பூடு, விலங்கு, பறவை, மனிதர்களைப் பிரமஸ்வ ரூபமென்றுசொன்னால் அவைகளெல்லாம்சடமாயினவே; அன்றி அவ்வுயிர்கள் படும் ஜனனமாணமுதலியவற்றால் உண்டாகுந் துக்கமெல்லாம் அப்பிரமத்தைச்சாருமே" என்று சங்கைபண்ணக்கூடும். அதையும் பரிகரிக்கிறோம். சொப்பனவுலகுசடம்; அது சித்தாகிய மனத்தினின்றுந் தோன்றுகின்றது; அன்றி அச்சொப்பனவுலகிலுள்ள பல வுயிர்கள்படும் சுகதுக்கங்கள் அம்மனத்தைத் தொடுவதில்லை. சொப்பனவுலகங்காரியம்; மனங்காரணம். காரியமுண்டாதற்கேதுவானசக்தி காரணத்தினிடமிருப்ப தியற்கை; கடசத்தி மண்ணின் கண்ணும் படசத்தி நூலின்கண்ணுமிருப்பதுபோல. அந்தச்சத்தியிருவகை; பின்னசத்தியென்றும், அபின்னசத்தியென்றுமாம். மனத்தினிடத்து அப்படிப்பட்டபின்னசத்தியிருக்கிறது. அந்தச்சத்தியின் காரியங்கான் சொப்பனவுலகு. பின்னசத்தியின்காரியமாகலின் அச்சொப்பனவுலகிலுள்ள வுயிர்கள் படும்துக்கசுகங்கள் மனத்திற்குப்படுவதில்லை. அப்படியே சிவனிடத்துப்பின்னசத்தியென ஓர்சத்தியுள்ளது. அது, காரியமாய்க் காரியபொருள்களைப் பின்னமாகவேதோற்றுவிக்கும். அப்படித்தோற்றுவிப்பதால்இச்சாக்கிரத்திலுள்ளவுயிர்கள் அநுபவிக்கும் துக்கசுகங்கள் சிவத்தைத்தொடுவதில்லை. மாயையானது சிவத்தின்கண் அவாந்தரமாயுள்ளது. பிரமத்தைத்தவிர இல்லவுமில்லை. அதனால் ஒருவாறு அபேதஞ்சொல்லவும்படுகின்றது. அப்படியிருந்தாலும் பிரமத்துக்குவிரோதமான பொருள்களைப் பேதமாகவுண்டுபண்ணும் சத்தியைப்பெற்றது.

ஞாநசங்கிதை ப்ரம்மவிஞ்ஞானழரைத்தஅத்தியாயம்.

முன்னுமவித்தையாற்பசுபேதமுமெய்வலியமாயையா
ற்,பன்னுபரதத்துவபேதமுங்கற்பிக்கப்பட்டதுவான், மன்
னுதேகேந்திரியாதிவாசனாபேதத்தாலே, பின்னுபேதமாம
வித்தைபேசுபசுபேதத்திற்கும். (௬)

குணங்களுடையவாசனாபேதத்தாற்கொள்பேதமா, யி
ணங்கவிருக்குமாயையிபைபரதத்துவபேதத்திற்கு, மூண
ங்கலறுகர்ரணமாகுமொழிபாப்பவஞ்சமயக்கொழிபப்,பிண
ங்கலறுகன்னெறிநின்றபெரியீர்காண்மும்மூர்த்திகளுள். ()

ஷை வேதாப்பிரமாணியவிசாரமுரைத்தஅத்தியாயம்.

நோயவுடதங்கள்போலப்பாத்திபபாதகபாவத்தாற்சைத்
திபமு, மாயதோர்சித்துநான்மறையதனிலறைதரப்படும்ப
ரசிவத்தின், வாயசக்திபகாரியஞ்செய்பவல்லமாயையான்
மாமறைப்பொருளிற், பாயவிரோதமாகவும்விரோதமாக
வுந்தோன்றுமாற்பனவிர் (௧௨)

ஷை விசேஷசிருட்டியுரைத்தஅத்தியாயம்.

கருத்தாவாயபரசிவன்றன்மாயையொடுவேறறக்கலப்புற்
றிருபபானெனினும் பூருவகற்பத்தனியைவாசனையானுங்,
கருச்சாய்த்துயர்ந்நீர்செறிகாலகருமவனுகுணமதாய்ந்தரு
க்கா கிறைமாயைக்குந்தனக்குமபேதங்கற்பிப்பான். (௨)

அறைபாலிற்துங்கற்பிதமான துவாத்துவமல்லாமையாற்
குறைநிர்ந்நிர்ந்நிர்கற்பிதபேதங்கூறு அபேதம்பாதியா
நிறைபின்பூருவேட்சணவாசனையாலீட்சிதாவுமாய்
மறைதன்மாயையொடுகூடிமாயாகுணபேதங்களால்.(௩)

திருமூர்த்திகளைப்படைத்தவர்க்குந்திகழுந்தரியாமியாயி
ருப்பான்,மரிசிலவரும்பாதத்துவபேதத்தான்முத்தொழி
ல்செய்வா, ருரியவிசேடரூபத்தொவ்வொருவரொவ்வோ
ர்காரியத்தைப், பிரியமருவச்செய்வார்கள் பேணியுணர்மி
ன்மாதவத்தீர். (௪)

தூலபூதங்கள்ண்டபேதங்கள் சொற்றிடுமூலகபேதங்கள்
சிலமார்சீவதேகபேதங்கள்செப்புறுருக்குமபூதத்,தேவமுன்
கற்பம்போலவுண்டாகுமிசைத்திடுசிவர்கட்கம்மா, பால
போகார்த்தமாகவனேகபௌதிகங்களுமுண்டாமாதோ ()

நிருமலசிவன்றன் மாயையாற்கனுப்போனிருமிக்கப்பட்
டனவெல்லா, மருவுகாரியங்காரணத்திற்குவேறுகாமையி
ன்மாயைரூபந்தான், பெருகுமாயையுமற்றதிட்டானமாகு
ம்பிரமத்தின்வேறானதன்று, குருபானருள்கைக்கொண்
டுமுக்குறும்புங்கொன்றுயர்ந்தோங்கியமுனிவீர். (௧௨)

தத்துவஞானத்தாற்பரசிவமேசகமாயைசிவன் மூன்று
ன, கொத்துறுசொரூபமாகவேதெரியுங்குறித்திடின்வே
றொன்றுமிலேச்ச, கத்துவேறுகப்பார்ப்பவன்பந்தக்கடுந்த
ளைநீங்குறுனென்றும், பொத்துமாமலத்தினீங்கியின்னரு
ளைப்புணர்ந்தின்பமாந்தருமுனிவீர் (௧௩)

ஆகலாலளவைதருக்கமெய்க்குரவனருண்மொழியனுப
வஞ்சிறிது,மேதமிலாதசிவப்பிரசாதமிவைகளினலுறவெ
ல்லா, மேதகுசிவமேயென்பதுதெரிந்துமேவுகேவலமதா
யிருப்போன், சாதலின்முத்தியடையவனுலென்றுசாற்றி
டுமாமறையனைத்தும். (௧௪)

சகமெலாஞ்சிவமேயெனத்தெரிகின்ற தண்ணியஞான
முஞ்சிவமென், றகமில்கேவலநிற்சலமரீஇயிருக்குமவனுக்
குமீட்டதமேசித்தி, தகவுறுமசித்தியிவற்றொன்றுமில்லைம
ற்றொன்றுமில்லை சகமில்லையஞ்ஞானமில்லை, யுகவிலாஞா
னமில்லையென்பாருணர்வுடையோர் (௧௫)

இந்தப்பிரமாணங்களால் மாயையினது உண்மையையுணர்ந்துகொள்ளலாம்.சொப்பனவுலகு மனத்தைத்தவிரவுமில்லை; மனத்துக்குச்சம்பந்தமுமில்லை. ஆதலால்மனமே சொப்பனவுலகென்று சொல்லவேண்டியிருக்கிறது. கயிற்றைத்தவிர பாம்புமில்லை;பாம்புகயிறுமல்ல. விவர்த்தஉபாதானகாரணகாரியங்களெல்லாமிப்படித்தானிருக்கும். இச்சாக்கிரவுலகான காரியத்துக்கும் சிவன் விவர்த்தோபாதானகாரணம். சொப்பனவுலகிலுள்ள புல்,பூடு முதலியவைகளெல்லாம்மனத்தைத்தவிரஎப்படியில்லையோ, அப்பொருள்களெல்லாம் மனந்தானென்று எப்படிச்சொல்லப்படுகி

ன்றதோ, அப்படியே சிவனைத்தவிர வுலகுஇல்லாமையால்சிவனே புல், பூடாதியுலகமெனச்சொல்லப்படுகின்றது. கடாதிகளெல்லாம் மணசொரூபமென்றெப்படிச் சொல்லப்படுகின்றதோ அப்படியே இச்சாக்கிரவுலகிலுள்ள புல், பூடு, புழு, மரம், விலங்கு, பறவை, மனிதர், தேவர்முதலியஎல்லாப்பிறப்பும் பிரமஸ்வரூபமென்று சொல்லப்படுகின்றது. இதுதான் நியாயம். சுருதியுக்தியநுபவங்களும் காட்டினோம். இதற்குமாறாகப்பேசுபவர்கள்சுருதியுக்தி அநுபவங்களுக்கு விரோதமாகப்பேசும் தான்தோன்றித்தமபிரான்களாம்.

இவர், துரியசிவனுக்குப் பிறப்பில்லையென்றுகூறி, அதற்குமேற்கோளுங்காட்டினர். துரியசிவனுக்குப்பிறப்புக்கூறுபவரிவரேயன்றி நாமன்று. பிறப்பென்பது ஒன்றினின்றும்தோன்றுவது. இவர் துரியசிவனிடத்திலிருந்தும் சிவனடியார் தோன்றியதாகக் கூறுகின்றார். ஆதலால் இவரேகுற்றவாளி. நாம்துரியசிவன், சிவனடியாராகவாவது சங்கராசாரியாராகவாவது தோன்றியதாய்க்கூறவில்லை. உருத்திரமூர்த்தியின் அம்சமே பிறந்ததாகக் கூறினோம். உருத்திரமூர்த்தி பிறந்தார் என்பதற்குப் பிரமாணமுங் காட்டினோம். அப்படிப்பிறந்தாலும் பிறப்புத்துன்பமில்லையென்றும்மாயாசம்பந்தமில்லையென்றும் சிவகாருண்யத்தால் பிறந்தனரென்றும் கூறினோம்.

உவமான ஆபாசம்.

இவர், "பிரம்ம், மாயை, ஈஸ்வரன், கூடஸ்தன், அவித்தை,ஜீவன்முதலிய விவிதப்பொருள்கள் விரிந்நியாகஇடக்தேடித் தமது ஏகவாதத்துக்கிடர்தேடிக்கொண்டது (பஞ்சபாண்டவரென்றால் அறியேனோ? கட்டில்கால்போலவென்று வாயாற்கூறிமூன்று விரல்களைவிரித்து, இரண்டு விரல்களைக்காட்டி, ஒருவிரலால் கீழேகோடிழுத்தவன் கதையோடுதானே) இனமாயதென்க." என்றுகூறி, கற்றவர்நகைக்க, உவமானவுவமேயப் பொருத்தந்தெரியாதவரென்று தம்மைத்தாமேவெளிப்படையாய்க் காட்டிக்கொண்டவிந்தையை யெடுத்து விவரமாய் விரித்து விளம்புவாம். அத்துவைதமதத்தில் பிரமமுதலியவைகளை விவிதப்பொருள்கள் என்று, அத்துவித சித்தாந்தமுணராது ஆரம்பபாடப்படிப்பவரில்சிலர் சொல்லுவார்கள். இவர், அத்துவிதிகள் பிரமம் ஒன்றேஎன்றுசொல்லுவதாய்ப் பலவிடங்களிலெழுதியிருக்கிறார். இங்கு பல பொருள்களென்று சொல்லுகிறார். இரண்டிலொன்று புத்திமருட்சிபால சொன்னதாகவேண்டும். அத்துவித மதத்தில் பிரமம் ஒன்றே முக்காலத்துமுள்ள சத்துப்பொருள். இவர் கூறியபஞ்சபாண்டவர் கட்டில் கால், மூன்றுவிரல், இரண்டுவிரல், ஒருவிரல், ஒருகோடு எல்லாம் சத்துத்திருட்டாந்தம். பஞ்சபாண்டவர் ஐவருமைந்துபொருள்கள். அந்தஐந்துபொருள்களை நாலென்றாவது மூன்றென்றாவது இரண்டென்றாவது ஒன்றென்றாவது கூறுவது எவ்வளவு பேதைமையோ, அவ்வளவு பேதைமை, சத்தான ஒருபிரமத்தைப் பலசத்துப்பொருளாகவைத்து உவமானங்கூறிக்குற்றங்கூறுவோரிடத்திருக்கிறது. "விரிக்கிற்பெருகும்" என்றுக்கூறுகின்றார். இதைவிரித்தால் அதனது ஆபாசந்தான் விரியும். தருமநந்தனர்முதலியவர் அயோக்கியரென்றும், துரியோதனாதியர் யோக்கியரென்றிங்கூறி அதை விரித்தால் எவ்வளவுமணம்பெறுமோ அவ்வளவுமணந்தான்பெறும் அதைவிரித்தால்.

ஆன்மாவேபிரமம்.

"இவர் மதத்தில் ஆன்மாவாகியதானே பிரமமென்றும், தன்னிடத்தில் ஜகஜீவபரங்கள் கற்பிதமென்றும சொலலுமவழக்குண்மையால், தன்னைநோக்க அச்சகஜீவபரங்கள் இழிந்தனவாம். இங்ஙனமாக, பரம அல்லது ஈசனதுஅவதாரமாக (தன்னைத்தவிர வஸ்துவில்லையென்றுசாதித்த) சங்கராசாரியரை சமதன்பர் கூறியது அச்சங்கராசாரியரைத் தூஷித்ததாகவே முடியும்" என்று தமதுவிசாரணையின்மையைக்கூறி, விசாரணையற்றவனையோரை ஏமாற்றப்பார்க்கிறார். ஆன்மா பிரமமென்பதற்குச்சந்தேகமில்லை. ஆன்மாஎன்பது இவ்விடத்துப் பரமான்மாவை: ஜீவான்மா அன்று. ஜீவன் பிரதிபிம்பனாதலால் சத்துப்போலியேயன்றிச்சத்தன்று. பரமான்மாவொன்றேசத்து. இரண்டுஞ்சத்தென்று கூறுவதிவர்மதம். இது சுருதி யுக்தி அநுபவங்கட்கு முற்றும் விரோதம். முன் புயுக்தி அநுபவங்களுக்கு விரோதமெனக்காட்டிப் பின்பு சுருதிமுதலியபதினொன் குவித்தைகட்கும் விரோதமாதலைத்தெரிவிப்பாம். இவர்மதத்தில்பரமான்மாவுக்குச்சிவனென்றும், சிவான்மாவுக்கு ஆன்மாவென்றும் சொல்லப்படுகின்றன. இவ்விரண்டும் வியாபகமென்றுஞ் சொல்லுகிறார்கள். இரண்டு வியாபகப்பொருள் ஒரு இடத்திலெப்படியிருக்கும்? ஒன்றுக்கு மற்றொன்று மேலேயிருக்கிறதா? கீழேயிருக்கிறதா? பக்கத்திலிருக்கிறதா? எங்கேயிருக்கிறதென்றுசொன்னாலும் சரி; இரண்டுங்கண்டப்பொருளாய் விடும். ஆன்மாவும் அகண்டப்பொருளென்று சொல்லி அத்துடனே சிவனையும் அகண்டப்பொருளென்று சொன்னால் எப்படிப் பொருந்தும்? சிவனைப பரிபூரணப் பொருளென்று சொல்லி, ஆன்மாவைக்கண்டப்பொருளென்று சொன்னாலும் பொருந்தாது. பரிபூரணமானபொருளில் ஏகதேசமானதாகவாவதொரு பொருளெப்படி யிருக்கச் சாத்தியமாகும்? ஆதலால் சிவன் எவ்வளவு சத்தோ அவ்வளவுசத்தாகச் சீவான்மாவைச் சொல்லுதல்கூடாது. சொல்லின் சிவனுக்குப்பரிபூரணதோஷமுண்டாம். இத்தத்தோஷமில்லாதபடிசொல்லுகின்றோம். எங்கும்பரிபூரணமாய் நீக்கமின்றியிருப்பது பிரமம். அந்தப்பிரமத்துக்கு ஆன்மாவென்றும், பரமான்மாவென்றும் சிவனென்றும் இன்னும்பல பேராகவுஞ்சொல்லுகின்றன வேதமுதலியகலைகள். அப்படிப்பட்ட சிவனிடத்துள்ள மாயையின் சத்துவகுணத்தில் பிரமா, விஷ்ணு, உருத்திரர்கள்பிரதிபலிக்கின்றார்கள். ரஜோகுணத்தில் சீவர்கள்பிரதிபலிக்கின்றார்கள். தமோகுணத்திலிருந்து அந்தக்கரண ஞானேந்திரியகருமேந்திரியவாயுபஞ்சபூதபௌதிகங்களுண்டாகின்றன. சீவர்கள்ஈசுவரனையுபாசித்து, உபாசித்தஉபாசனைபலத்தால் பிரமஞானம் பெற்றுப்பிரமமாய்அல்லது சிவமாய்விளங்குகின்றார்கள். அஞ்ஞானகாலத்தில் நானென்பதற்குப்பொருள் சீவனும் அஞ்ஞானநீங்கிய ஞானதசையில் நானென்பதற்குப் பொருள் பிரமம அல்லது

Koviloor Digital Library

சிவனுமாகின்றன. அஞ்ஞானதசையில் அதாவது சீவன் நானாகவிளங்குங்காலத்துச் சிவன் நானென்றாவது பிரமம் நானென்றாவது கூறுதல்கூடாது. ஆனால் ஞானசாதனத்தில் நான்சிவன், நான்பிரமம் என்றே அநுஷ்டானஞ்செய்யவேண்டியது. இதுவே வேதாகமபுராணஇதிகாசங்களின் கருத்து. அப்படிப்பட்டபிரமநிலையில் அல்லது சிவநிலையில் சரீரஇந்திரிய அந்தக்கரணஜீவர்களும் ஞாதுரு ஞானஞேயங்களும் சாக்கிரசொப்பன சுழுப்திகளுமில்லை. அதுதான் துரியாதீதநிலை. அந்த நிலையிலுள்ளபொருள் பிரமமென்றும், சிவனென்றும், ஆன்மாவென்றும் சொல்லப்படுகின்றது. (ஆன்மாவென்பதற்கு இவ்விடத்தில் பரமான்மாவென்றே கொள்ளவேண்டும்: சீவான்மாவென்று கொள்ளப்படாது. சுருதிமுதலிய கிரந்தங்களில் சிவனென்றும், பிரமமென்றும் சொல்லுகிறவிடங்களில் ஆன்மாவென்றுங்கூறியிருக்கிறதைப் பிரமாணமூலமாகவுங்காட்டுகின்றோம்.) அப்படிப்பட்டபிரமம் அல்லது சிவம் அல்லது ஆத்மாவானது உலகிலுள்ள எல்லாப்பொருள்களுக்கும் ஜீவர்களுக்கும் பிரமவிஷ்ணு உருத்திரர்களுக்கும் அதிஷ்டானமாய் விளங்குகின்றது. உலகிலுள்ள எந்தப்பொருளுக்கும்மூலமாயுள்ளதெப்படி அணுவோ, அந்த அணுக்களுக்கு மூலமாயுள்ளதும் எப்படி ஆகாயமோ, வஸ்திரங்களுக்கு மூலமாயுள்ளது எப்படிப்பஞ்சோ, பஞ்சுக்கு மூலமாயுள்ளது எப்படி அணுவோ, அணுக்களுக்கு மூலமாயுள்ளது எப்படி ஆகாயமோ, சொப்பனப்பிரபஞ்சத்திற்கு மூலமாயுள்ளது எப்படிமனமோ, அப்படியே சீவர்கள், பிரம விஷ்ணு உருத்திரர் உலகம் இவர்களுக்கு மூலமாயுள்ளபொருள் ஷைபிரமம் அல்லதுசிவம் அல்லதுஆன்மாவாம். அந்தப்பிரமப்பொருள்தான் தத்துவமசிலட்சியார்த்தத்தில் நிலைத்தது. ஜீவர்களானாலும் சரி, ஈஸ்வரர்களானாலும் சரி, உலகமானாலும்சரி, கடைசிமுடிவில் அந்தப் பொருளில்இலயமாகவேண்டுவது. அதுதான் மிஞ்சினபொருள். இப்படியிருக்க, அந்தஆன்மாவென்னும் பொருளைஜீவனைப்போலவேதாந்தசாஸ்திரங்களில் பரிச்சயமில்லாதவர் நினைக்கும்படிகாட்டி, பிரமமென்றும் சிவனென்றும் சொல்லாமல் ஆன்மாவென்னுஞ்சொல்லைமாத்திரமெடுத்துக்கொண்டு, அந்தஆன்மாவில் ஜகஜீவபரங்கள் கற்பிதமென்றும் ஆன்மாவென்னும்பொருளைத்தானாகவைத்து, தன்னைவிட ஜகசிவபரங்கள்மித்தையென்றுங்கூறி ஏமாத்துகின்றார். தானென்று கொள்ளவேண்டியது துரியாதீதநிலையில் பிரமமே. அந்தப்பிரமத்துக்கு ஆன்மாவென்றும் சிவனென்றும்பேர்தான். அப்படிப்பட்ட நிலையிலேதான் அத்துவிதஞானவான்களெல்லாமிருந்தார்கள். அப்படிப்பட்ட பிரமநிலை, அல்லது சிவநிலை, அல்லது ஆன்மநிலையானது நானென்பதற்கும் அவனென்பதற்கும் அவள் அது என்பதற்கும் நீ என்பதற்கும் பொருளாயிருப்பது. இந்தத்தன்மைமூன்றில் படர்க்கையிமூன்றுக்குங்கடந்திருப்பதும் அதுதான். உலகிலுள்ள எந்தப்பொருளைவிசாரித்தாலும் கடைசியில் முடிவாயிருப்பது அந்தப்பொருள்தான். நானென்பதைமாத்திரமிவர் எடுத்துச்சொன்னாரேயன்றி மூன்றிலடங்காதபொருளைச் சொல்லவில்லை. மூன்றிடத்தொரு விலட்சணமெனவுஞ்சொல்லவில்லை. மூன்றிடத்திற்கு விலட்சணமானபொருளை நானென்றும நீயென்றும் அவனென்றுஞ்சொல்வது கற்பனை. இவர், பிறரைத் தூஷிக்கும்நிமித்தம பலபூர்வபக்ஷங்களிலொன்றை யெடுத்துக்கூறித் தெரியாத ஜனங்களையேமாற்றப்பார்க்கிறார். சிவன், அல்லது ஆன்மா, அல்லதுபிரமமானபொருள் ஒன்றே முக்காலத்துமுள்ள பரிபூரணசத்துப்பொருள்; மற்றப்படி ஜகஜீவபரம் [பிரமவிஷ்ணுஉருத்திரர்] களிருட்டிகாலத்தில்தோன்றிச் சங்காரகாலத்தில் இலயமாகின்றவோர் காலப்பொருள்கள். பிரமத்தைநோக்க அவைசத்துப்போலிக கற்பிதப்பொருள்கள்தான். இவைகளையும் சத்தாகச்சொன்னாலென்னையெனின் பிரமத்தைக் கண்டப்பொருளாகச்சொல்லி, அவைகளுக்கு உற்பத்திஸ்தானம்பிரமமல்லாதவேறுபொருளைச்சொன்னால்சொல்லலாம். இப்படிச் சொல்லாவிடில் நாம்சொன்னபடிதான்சொல்லவேண்டும். சங்கராசாரியார் தன்னைத்தவிர வஸ்துவில்லையென்றுசொன்னது பிரமத்தைத்தவிரவஸ்துவில்லையென்றுபொருள்கொள்ளத்தெரியாமல், உலகில் அவதரித்த சரீரஇந்திரியாதிகளை, தானென்பதற்குப்பொருளாக வைத்துக்கொண்டு இகழ்ந்தது அவரியற்கையேயாம. ஆகலால்சங்கராசாரியரைத் தூஷித்ததாகவேமுடியும், என்று கூறியகூற்று கூற்றாகவேமுடிந்ததென்க. இதற்குப்பிரமாணங்கள்வருமாறு:—

யஜுர்வேதத்தில்கைவல்லியோபநிஷத்.

"சர்வஸ்வரூபியாயும் இந்தப்பிரபஞ்சத்திற்கு முக்கிய இருப்பிடமாயும் சூட்சுமத்திலும் அதிசூட்சுமமாயும் நித்தியமாயுமிருக்கிற பரப்பிரமமெதுவோ, அதநீயேஅது; ஜாக்கிரசுவப்நசுஷுப்திமுதலியவைகளில் எந்தப்பிரபஞ்சம் விளங்கிக்கொண்டிருக்கிறதோ அதுபிரமமே. அதுநானேயென்றறிந்தால் சகலபந்தத்திலிருந்தும் விடுபடுகிறான்.

சாக்ஷியாயும் சின்மாத்திரமாயுமிருக்கிற சதாசிவன்நான்தான் என்னிடத்திலிருந்தேசகலமுமுண்டாகிறது. என்னிடத்திலேயே சகலமுமிருக்கிறது. என்னிடத்திலேயே சகலமும்லயமடைகிறது. அந்த அத்துவயமான பிரமம் நானே."

ஞூ-(நான் சிவன் என்றவிடத்தில்சங்கற்பவிகற்பமும்ஜீவனும் அவஸ்தாதிரயங்களும் ஞாதுருஞான ஞேயங்களுமின்றிச்சிவன் மாத்திரமாய் நிற்கும்துரியாதீதநிலை.)

யஜுர்வேதத்தில்அமிர்தபிந்தூபநிஷத்.

அந்தப்பிரமமே 'நான்' என்று அறிந்தால் பிரமமேயாகிறான்.... அந்தப்பிரமமேநான் என்றுநினைக்கப்பட்டிருக்கிறது."

ஸாமவேதத்தில்ஸமைத்திராயண்யுபநிஷத்.
௫-வது பிரபாடகம் ௩௫.

"எப்போதுமுண்டாக்கப்பட்ட ஜீவாத்மாக்கள்பிரமத்தினுடைய தேஜஸின்பிரதிபிம்பமாகவிருக்கிறார்கள்."

வரும்.

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருசுவாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்.

NO 23 நெ. உங.

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத்ஹிரண்யகர்ப்பயாஜிரவிகுல முத்துவிஜய ரகுநாத

ராஜாபாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமதுப்ரம்மவித்தியாபத்திரிகையை ஆதரித்துவருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த கஅகூஉ ஹூ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடர்வருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

(ஒப்பம்) தங்கள்,

[illegible]

சாஸம்வத்ஸரம்.
துலாரவி உஎவ
முகவையம்பதி.

[illegible]

ஆரியசாஸ்திர ரகஸிய விவரணம்.

வேதவிசாரம்

தொடர்பு.

மேலும்இந்துக்கள் வேதம் பலதேவதைகளைப் பரமாகக் கூறுகின்றது. அவர்களுள் சைவர் வைஷ்ணவரையும் வைஷ்ணவர் சைவரையும் தூஷித்திடலால் அவர் கொண்டவேத நூல் அவர்களாலேயே கண்டிக்கப்பட்டது. ஆயின் அது பிரமாணமாகாதெனவும் ஜாலங்காட்டிப்பேசுவர். இதுவும் தவறு.என்னையெனில், நமது வேதங்கள் பலதேவர்களைப் பரம் எனக்கூறுவதுண்மையோ அல்லவோஎனப் பின்விசாரிப்பாம். அதற்குமுன் இந்துக்கள் பல தேவதைகளை வழிபடுவதால் வருங்குறை யாதோஎன விசாரிப்பாம். அவ்விதம் செய்வது அவர்க்கழகே. இதனால் வேதங்களுக்குக் குறைவு ஏதும் இல்லை. பலதேவர்களை இந்துக்கள் வழிபடுவராயினும் அவர் இத்தேவர் எல்லாம் ஒரு பரமான்மாவின் அம்சமெனவே நம்பினவரன்றிவேறுவிதமில்லை.தினந்தோறும் செய்யும்அக்னிகாரியமுதல் எல்லாம்ஈசுவரகைங்கர்யம் ஆவதுபோல் இவ்விடத்துள்ள எந்ததேவதையை ஆராதித்தாலும் அது நேரில் வீடு கைகூடச்செய்யாவிடினும் அதனால் பரம்பரையில் நல்ல பயன்கிடைக்கும் என்பதிற்றடையில்லை. இதில் விவரணம் பின்னெடுத்துச்சொல்வோம். கிறிஸ்தவர் மதம் ஒருதேவனைக்குறித்திடும்நூல் என்பதும் அனேக தேவர்களைத்துதிக்கா நூல் என்பதும் தவறு. அவர் மூலபுஸ்தகம் விவிலியம். அதில் பிதா என்றும், குமாரன் என்றும், பரிசுத்த ஆவி என்றும் மூன்று பொருள் சொல்லப்பட்டன. இனி ஒரே தேவன் கிறிஸ்துவமதத்துட் கூறப்பட்டான் என்பது கிறிஸ்தவர்க்குத்தன் மதத்திலும் அறியாமையைக்காட்டும். மூன்றுபொருள்கள் சொல்லப்படினும அவை ஒரு பொருளே என்று சொல்லித்தப்பித்துக்கொள்ளவும் கூடாது. ஏன் எனில் கூறுதும். பரிசுத்தஆவி மற்றதுடன் ஒன்றுபட்டொழியுமானல் ஒழிந்திடுக. மற்று பிதாவும் குமாரனும் ஒருபொருளாதல் எவ்வாற்றானும்ஒவ்வாது. ஒவ்வாதவரையில்கிறிஸ்தவர் நூல் ஒரே தேவனைக்குறிக்கும் நூலாகாது. உலகத்தில் தேவதத்தன் பிதா. யஞ்ஞதத்தன் குமாரன் ஆனால் இருவரும் பிறந்தநாள்முதல் மரணம் வரை வேறாகவே இன்பதுன்பங்களை அனுபவிக்கக்கண்டோம். அன்றி இருவர்ஒருவராகக்கண்டதில்லை. இனி கயிற்றில் தோன்றும் அரவம் போல் பிதாவினிடம் குமாரன் கற்பிதம் எனில், ஈண்டு சிறிது விசாரிக்கவேண்டும். எங்கேனும் ஓரிடத்தில் கண்ட

[illegible]

பொருள் அதுபோன்ற மற்றவிடத்தில் நிலைத்தலே மயக்கமெனப்படும். இதே வேதாந்திகளுட்சிலர் கொண்டது அஃதில்லாவிடம் அத்தன்மைவழிபிறக்குமறிவே மயக்கம் எனப்பாயநாலார்சொல்வர். எவ்விதத்தும்மயக்கத்திற்குடத்தின் உண்மை அறிந்தவர்க்கு மயக்கம்ஒழியும் என்பது எவரும் ஒப்பியதோர் விஷயம். ஆகவே அங்கு பொருள் இரண்டு ஒன்றாவதில்லை. மேலும் மயக்கத்தில் தோன்றிய பாம்பினாலாவதொன்றும் உண்மைப்பயனல்ல. இங்குபிதாவின் உண்மையறிந்தபிறகும் குமாரன்தோன்றாமல் இருப்பதில்லை. அதுமட்டோ! குமாரன் பிதாத்தொழுததும்லவ்வாது.' குமாரன் பூமியில் வந்துபலகிரியைகளைச் செய்து மறுத்துப் பரமண்டலம்பொய் அங்கு பிதாவின் வலதுபுறத்து வீற்றிருக்கின்றான் என விவிலியம் கூறியிற்றலால் விவிலியத்தில் ஒரே கடவுள் கூறப்பட்டான்என்பது தப்பு. 'விவிலியக்கடவுளர் இருவர்க்குக் குறையில்லை'. ஆயின்இவ்விவிலியத்தைக் குறைகூறுபவர் கிறிஸ்தவராகார். மேலும் உலகத்தில் எல்லோரும் வழிநடந்துவந்தால் கண்டயற்றைக்காரரவம் எனமருண்டோடுபவன் எவனோ ஒருவனுளன். எல்லோருக்கும் மயக்கம் ஓரேசமயம் கிடைக்கமாட்டாது. ஆயின் ஒருவனாவது குமாரனையறியாது பிதாவையறியவேண்டும். அங்ஙனமோ இல்லை. இனி வேறுவழியில் விசாரிப்பாம். பால் தயிராவதுபோல் பிதா குமாரன்ஆவான்எனில், மிகநன்று. பால் என்னும் ஒருபொருள் காய்ந்து தோய்ந்து மறுபொருளாகிய மோரு கலந்து பிறகு தயிர் ஆகிறது. இங்ஙனம் பிதா குமாரனானால் பிதா, ஒருவிதம் திரிந்து குமாரனாகவேண்டும். பால் தயிராவதில், பாலும் தயிரும் அறிவிற்பொருளாகையால் ஒரு அறிஞன் தொழிலவாவப்பட,காய்ந்துகாய்ச்சும் இடையன் அவாகிலை ஒழிப்பதுபோல் இங்கு பிதாவை குமாரனுக்க ஒருவன்வேண்டும். அதுமட்டோ! தயிரான பால் மீண்டும் பாலாவதில்லை. அதுபோல குமாரனை பிதாமீண்டும் பிதாவாவதும் கூடாது: இங்ஙனம் ஒன்று மாற மற்றொன்றாகமாறிமாறி வந்திடின் பொருளுண்மை நிலைப்பதெப்படி? அந்தோ!இவர்ஒருதேவனைநிலைக்கச்செய்ய எத்தனித்துஉள்ளதுக்கே மோசம்தேடிக்கொண்டார்கள். மேலும்தயிரானகாலத்துப்பாலில்லை. பாலானவிடம் தயிரில்லை. ஆகவேபிதா குமாரன் என்னும் காரணகாரியப்பொருள்கள் ஒரே காலத்துத்தனிப்பொருளாய் காணப்பட்டது எவ்வழியும் பொருந்தாது. ஆயின் இவ்வழி விவாதிப்பவர் கடவுள் பெருமையறியாப்பேதை என்பது திண்ணம். மேலும்பிதாஎன்றும் பொருள் அவர் கொண்டபடி பரமாத்துமப்பொருளன்றோ? ஆயின் இனி அவ்வான்ம சொருபத்தைக்கெடுத்

Koviloor Digital Library

[illegible]

துவிடும் வேறு அழிஞன் இருப்பானு? அப்படியாயின் உல கத்துள்ள குடம் முதலிய அசேதனப்பொருள்களுக்கும் அவ்வான்மப்பொருளுக்கும்வேற்றுமைதான் என்ன? இங்ங னமொப்பியவர் மதத்தில் கடவுளுக்கும் அழிவும் திரிபும் எற்படுகின்றது. இஃதுசிதமல்ல. திரிபுண்டெனில் அப்பொ ருள் ஆன்மப்பொருளாவதே சம்சயம்; பரமான்மாவாவதெ ங்கே? மேற்சொல்லிக்காட்டியபடி பிதா எனும் பொருள் காரியப்பட்டுஅசேதனம்போலாகின்றது. தொழிற்பட்டது அனித்தியம். ஆகவே கடவுள் அநித்தியப்பொருளாகவும் ஆக நேரிடுகிறது. ஆயின் நித்தியசித்தனுய பரமாத்மாஎச் சமயமும் ஆனந்த ரூபன். அந்தோ! வீணில் அசேதனனு கவும் அநித்தியனுகவும் ஆக நேருகின்றது. உலகத்தில் உள்ள ஆஸ்திகன் எவனும் கடவுளை அநித்தியர், விகாரி என்று சொல்லமாட்டான். ஆயின் கிறிஸ்தவர் புஸ்தகம் அவர் மதத்தில் பல தேவர்களைச் சொல்வதென்றே கொ ண்டடங்கிடல் உண்மைக் கிறிஸ்தவர்க்கழகாம். ஆயின் இவர், ஆரியரைப்பலதேவர்களைக்கொண்டாடுபவர்எனப்பரி கசிக்கவும் வேண்டுமோ? இவ்வழிவிட்டுவேறுவழியின் றுவிசா ரித்து விவிலியத்தில் ஒரு கடவுள் கூறப்பட்டார். அல் லது பலர் என்பதை விளக்குவாம். நூல்களால் ஆடை போல பிதாவால் குமாரன் என இருவரை ஒன்றுபடுதது வாம் எனில், அதனெவ்வாமை வருமாறு:—உலகத்தில் நூலின்றித் தனிமையில் ஆடையைக்காண முடியாது. ஆடைக்கு முன்னும் பின்னும் நூலாகவே இருப்பு. நூல் நடுவிலும் இருக்கிறது. ஆகவே நூலிற்படம் எப்பொழுது மின்மையால் அது செய்பவன் தொழில் மாத்திரத்தில் கற்பிதப்பொருள். அது உண்மைப்பொருளாயின் முக்கால த்தும் இருக்குமல்லவா? ஆடை முக்காலத்துமுள்ளதல்ல. ஆதலாற்றுன் பொருளிலக்கணமறிந்த பெரியோர் ஆடை யில் பொருள் என்பர். மேலும் தகப்பனும் பிள்ளையும்ஆ ன்மாக்கள் உள்பொருள்கள். வேறுபொருள்கள். நூலும் ஆடையும் ஒருபொருள். அதில் ஆடையோஇல்பொருள். ஆகையாற்றுன் தகப்பன்குணம் பிள்ளையிடம் சேருவதி ல்லை. நூலின்கண்ணமைந்த குணமே ஆடையின் கண்ணு ள்ளது. மற்றுமனேக காரணங்களால் இந்நூலாடை திரு ஷ்டாந்தம் கூடாது. மேலும் இருவரும் ஒன்றுனுல் கிறி ஸ்து எனும் குமாரன் பிசாசத்திடம்பட்ட துயரம் பிதா வினிடமும் செல்லுமே! இனி இதுபோன்ற பல விஷய ங்களில் விவிலிய புத்தகத்தைச்சோதித்தால் அது பலதேவர்களை கூறும் ஓர்பேதை நூலாமேயன்றிவேத நூலாகாது. மேலும் செல்வத்தானும் வறிமையானும் அழகின்மைகளானும்அறி வறிவினர்களாலும் நேரில் கண்கூடாகக் காணப்படுவது போன்ற மறுபிறப்பே இல்லையென நாட்டும் விவிலியமும்

Koviloor Digital Library

[illegible]

ஒரு விஷயமா? ஒருநன்னூலா? நிற்க; ஆரியசாஸ்திரங்களின் ரஹஸ்யத்தை விளக்கவெழுந்த நீர் ஏன் வீணில் கிறிஸ்தவர்முதலியோர் சாஸ்திரவிஷயங்களைப் பேசுகிறீர் எனக்கோபிக்கவேண்டாம். புறமதத்தை ஒழித்துத் தன்மதத்தைஸ்தாபிப்பதே பெரியோர் நல்வழி என நம்பி அவ்வழிசில எழுதினேம். ஆதலாற்றான் ஸ்ரீசிரோமணிகதாதரபட்டாசாரியராதி நையாயிகள் எதுப்போலிகளைக்காட்டுமிடம் புறமதங்களைக்கண்டித்தேதன்மதத்தைகாட்டவேண்டும்என்றனர். இனி இவ்விவாதத்தைவிட்டுத் தொட்டவிஷயத்தை நீள நடத்துவாம்.

ஐய, நமது வேதங்கள், ருக்கு, யஜுர், சாமம், அதர்வணம், என நான்குவிதமாகவிருக்கின்றன. இவற்றுள் ருக்வேதம் சாகை உக. யஜுர்வேதம் சாகைகள் நூறும் ஒன்றும் 101. சாமவேதத்துக்குச் சாகைகள் ஆயிரம் 1000. அதர்வணவேதத்துக்குச் சாகைகள் ஒன்பது. ஆக இவ்வேத சாகைகள் 1131. இவைகளில் எதிலும் உலகசிருஷ்டிமுதலுள்ளஸர்வ ரகசியமும் சொல்லப்பட்டது. இவ்வேதங்களைக் கன்மகாண்டமென்றும் ஞானகாண்டமென்றும் வேறுவழியில் இருபகுதியாக்குவதுண்டு. கன்மகாண்டத்தில் கன்மவியல், அதன்பயன் இம்மைமறுமைகளின் உண்மை, கன்மங்களை விட்டவனுக்குள்ள பிராயச்சித்தமித்தியாதி வெகுவிஷயங்கள் விரிக்கப்பட்டன. இங்கு சொல்லப்படும் எவ்விஷயமும் மக்கள் அறிவுகொண்டு அறியக்கூடாது. அனேககாலம் ஆசிரியன் கருணைபெற்ற பெரியோரன்றி ஒருவன் உண்மையறியார். ஞானகாண்டத்தில் ஆன்மசொரூபத்தை அறியும்வழியும் உண்மையைக்கடைப்பிடிக்குமுயும் ரீதியும், வீட்டின் பெருமையும் வீடுபோகும் வழியும் நிரூபிக்கப்பட்டது, மேலும் ஆத்மலாபத்துக்கின்றியமையாத யோகமுதலியவைகளும் எடுத்துக்காட்டப்பட்டன. அதை விசேஷமாகப் பயிற்சிசெய்பவர் எவ்வழியிலும் பரமான்மாவின் அருள்பெற்று அவனுடன்ஒன்றுபடுவார். ஆகவே அதன் பெருமை அளவிலடங்காது.

இதனுண்மை இப்படியிருக்க, தற்காலத்தறிஞர்சிலர்வேதங்கள்பௌருஷேயங்கள்என வாதிக்கிறார். அவர் கருத்து யாதெனில், ருக்குவேதம் முதலில் "அக்நிமீளே" என்று துவக்கிய மந்திரத்துக்கு ரிஷி, மதுச்சந்தர், காயித்திரிச்சந்தம் (யாப்பு) அக்னிதேவதை என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் ஆதிகாலத்தில் மதுச்சந்தர் எனவொருவர் தனது புத்திசாலித்தனத்தால் பிராமணனாகிப் பிறகு மந்தரான மாந்தருக்காசாரியனாய் அவர் இந்த ருக்கையியற்றினர். இதுண்மை அறியாதார், இது அனாதி என்றுவீணில் மயங்கித் தன்னினத்தாருக்கு ஏதேனும் கொடுக்கவேண்டியதைக்கொடுத்து வீணில் நெருப்பில் நெய்யை ஊற்றி

[illegible]

நெடுக்கிறார்கள். ஆயின் முற்காலத்தவர் அவ்வளவுண்மை யறியாப்பேதைகளானதால் அவர் கொண்டபடி கொள்வ தூசிதமல்ல. வேதங்களைச்செய்தவர்கள் ரிஷிகள் எனப்ப டும் முற்காலத்துப் புத்திசாலிகளே. மேலும் இம்மதுச்சந் தர் பலவாக்கியங்களை எழுதியிருப்பதால் வேதமந்திரரிஷி களில் இவர் பெயர் பலவிடம் வரும் என்பதும், 'ஐகெ' என்னும் மந்திரத்துக்கு சுநச்சேபர் ரிஷி என்பதனால் அம்மந்திரம் அவர்செய்தது என்றும்பிறர் செய்யும்ஆக்ஷே பம். இது அவர் பயிற்சிக்குறைவால் நேர்ந்தவாக்ஷேபம். எக்காரணத்தாலோவெனில், மேற்கண்டவழியால் அனேக மந்திரங்கள்கற்பிதமேயாகலாமாயினும்,பௌருஷேயம்என் பதற்கும் அபௌருஷேயமென்பதற்கும்வேற்றுமை இவ்வி தம் எனவறியாதுஇது.பௌருஷேயம் இது அபௌருஷே யம்என்பதாதி வகுப்பேற்படுத்தல் கூடாது. ஆகவேஅதை க்காட்டிடுவாம். 'எவ்வாக்கியத்தைப்பிரயோகித்தவன் முத லில் தனதுமனதில்அவ்வாக்கியப் பொருளைக்கொண்டுஅத ற்கிணங்கச்சொற்களைச் சொன்னால் அது பௌருஷேய வாக்கியம். உலகத்தில் 'குடத்தைக்கொண்டுவா' என்ப தாதி வாக்கியங்களைப்போல் எந்தவாக்கியத்தை எவன்உப யோகித்தாலும் அதன்பொருளையறிந்தே அவன் உச்சரித் தலால் அவன் உள்ளத்திற்றோன்றிய பொருளுக்கேற்ப அவன் செய்தவாக்கியம் பௌருஷேயமே. வேதங்களோ அங்ஙனமல்ல. அனாதி சைதன்ய கனஞானாதன் அனாதி யில் உள்ள அமைப்பு மாறாது ஒரேவழியாய் உச்சரித்திடு வதால் அது முன்கூறியபடி பௌருஷேயமாகாது. ஆத லாற்றான் 'இம்மகாபூதத்தின் உயிர்த்தலே ருக்குவேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணம்' என்பதாதி வே தங்கள் முழக்குகின்றன. இங்கு மகாபூதம்என்றது பரமே சுவரனையே என்பது முக்திகம் முதலிய வுபநிடதத்தைப் படிப்பார் அறிவார். இதை இங்கு சுருக்கினோம். விரிவை எதிர்பார்ப்பவர் "ஶாஸ்த்ரயோநித்வாத்" என்னும் அதிக ரணத்தில் ஸ்ரீநீலகண்டசிவசாரியர், ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள், ஸ்ரீராமாநுஜாசாரியர், ஸ்ரீமாத்துவாசாரியர் ஆவ ர்கள் முதலிய பெரியோர் இயற்றிய பாடியங்களைக்கண்டு தெளிவாராக. இனிஅந்தந்த மந்திரத்துக்குஒவ்வொருரிஷி பெயர் இருப்பதற்குக்காரணம் என்னை எனில்; உண்மை வெளியிடுவாம். ஒவ்வொரு மந்திரத்தை முறைபிறழாது பயின்று மாந்தர்பயனடையக்கருதிமுதலில் அதனாற்பயன் பெற்ற ஒருவரை ரிஷி எனல் வைதிகரகஸ்யஸம்பி ரதாயம். இனி "அக்நிமீளே" மந்திரத்துக்கு மதுச்சந்தர் ரிஷி என்றால் அந்த ரிஷி அந்த மந்திரத்தால் அக்னியை வழிபட்டு அவர் அருள்பெற்றார் என்பது கருத்து. ஆதலா

Koviloor Digital Library

[illegible]

[illegible]

ற்முன் 'முற்காலத்தில் ஒரு அரசன் செய்தயாகத்தில் நரபசுவாகக்கட்டுண்ட சுனச்சேபமுனி தனது அம்மானுகிய ஸ்ரீவிசுவாமித்திரர் அனுக்கிரகித்த மகாமந்திரமாய "இமம்" என்னும் மந்திரத்தால் வருணனை வழிபட்டு அச்சிறைமீண்டானெனப் புராணங்கள் ஓதுகின்றன. ஆதியில் அம்மந்திரத்தால் வருணனருள்பெற்றவன் சுனச்சேபனே யாதலால் அவனே அம்மந்திர ரிஷியென்றது பொருந்தியது. ஆபின் வேதமந்திரங்களுக்கு ரிஷிகளை எடுத்துரைத்தல் அவைகளைச் செய்தவர்இவர்என வகுத்திடவல்லமைபற்று அவ்வம்மந்திரங்களை மாந்தர் சபித்துப்பவேண்டியதிற் சித்திபெற்றவரை எடுத்துரைத்தலே அதன்கருத்தென்க. ஆபின் வேதங்கள்பௌருஷேயங்களாகா. இனி ருக்குஎன்பது மந்திரம். எஜுஸ் என்பது ஆணை. (விதியும் விலக்கும்). சாமம் புகழ்மொழி. (ஸ்தோத்திரம்.) அதர்வணம் இவைபெல்லாம் அடங்கியன. வேதங்களின் விரிவுக்கஞ்சினேரை நோக்கி ஸ்ரீவேதவ்யாஸபகவான் சிலபகுபாடுகளை வெளியிட்டார். இவர்க்கு முன்னும் இப்பகுபாடுகள் வெகுகாலம் பிழைத்திருந்து இடையிற்சிதைந்தது. ஆகவே அதைமறுத்துச் சீர்திருத்தியது வாதராயணமுனிவர் என்பதே யுண்மை.

மற்றது வரும்.

இங்ஙனம்,

மொழிபெயர்ப்பு. (ஒப்பம்) திருவேங்கிடக்கிராமம்,

திருமலைசாஸ்திரி.

ஓர் விஞ்ஞாபனம்.

ஐய, ஆரியமணிகாள்! நம்முன்னோர் வெகுகாலமாய் பொருளாலும் பயிற்சியாலும் அனுஷ்டானத்தாலும் மற்றதாலும் மேன்மைபெற்றிருந்தார் என்பது எல்லோரும் அறிந்ததே. இக்காலத்தும் இவ்விதப்பெருமையுள்ளவர்ஒருவரிருக்கிறார்கள். ஆயினும் இச்சமயம் நல்லோர் அகப்படுவது அரிதாய்விட்டது. ஆகைபாற்றான் துராசாரம் மலிந்துவருகிறது. இஃதோர் புறங்கிடக்க; இக்காலத்தில் கலிக்கொடுமையால் நேர்ந்திடும் சங்கடங்கள் எவ்வளவெனலாம்! ஐய, சிறிதுகேளுங்கள்! பத்திரிகைகளைப்பாருங்கள்! இக்கொடுமைக்கேதேனும் நிவிர்த்தியைத்தேடுங்கள்! உதாசீனம் செய்யாதிர்கள்! வேட்டல் வேள்வித்தல், ஓதல் ஓதுவித்தல், ஈதல் வாங்கல் ஆகிய அருந்தொழிலாய அறுதொழில் ஒழிந்ததாலோ, அல்லது கண்ணன்கண்ணுதலர் கடவுளாதி திவ்ய தேவாராதனைக்குறைவாலோ, அல்லது

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ருக்குமுதலிய நான்குவேதங்களின் வழக்கம் குறைந்ததாலோ, அல்லது ஸ்மிருதி முதலிய ஸந்நூலாராய்ச்சிக்குறைவாலோ, அல்லது கொலை, குடி, களவு, கூத்தியில்லம்புகுதல்முதலிய அநிதீச்செயலாலோ, அல்லதுகைம்பெண்மறுமணம், தன்கோத்திரத்தில் விவாகம், பெண்கல்வி, பெருக்கம் முதலிய புதிய செய்கைகளாலோ, மற்றெக்காரணத்தாலோ, அறியோம். இத்தேசத்தில் இச்சமயம் எங்கும்மழையின்மையின் வருமைபெருகிவருகிறது.

வரும்.

முடிவான அறிக்கை.

கையொப்ப அபிமானிகளே!

ப்ரம்மவித்தியாவிற்கு நடக்கும் வைமாதத்தோடு 6-வது ஆண்டு பரிபூர்த்தியாகின்றமையால் தங்களால் சேரவேண்டிய பாக்கிச் சந்தாவை தயவுசெய்து அனுப்பிவிடக் கோருகிறேம். இந்த அறிவிப்பை ஆலசியம்செய்து பழையபாக்கியை அனுப்பாதவர்களுக்கும் புதுவருடத்திற்கு முன்பணம்கொடாதவர்க்கும் பத்திரிகைநிறுத்தப்படுமென்பது சத்தியம். சிலர் நீண்டகாலமாக பாக்கியைவைத்துக்கொண்டிருக்கிறர்கள். இதனைக்கண்ணுற்றபிறகும் பாக்கியை அனுப்பிவிடில் அவர்கள்பெயர் தொழில்முதலியவைகளைக்கண்டு பத்திரிகையில் பிரசுரப்படுத்தி பாக்கியை வசூல் செய்ய எவ்விதத்திலும் முயற்சிசெய்யப்படும்.

பத்திராதிபர்.

அறிவிப்பு.

நண்பர்காள்!

இதற்கு முன்னர் ப்ரம்மவித்தியா பத்திரிகைக்காக பில்கலக்டராகவும் ஏஜண்டாகவுமிருந்த சபாரத்தினப்பிள்ளையை இப்பொழுது மேற்கண்ட வேலைகளைப்பார்த்துவரும்படி நியமனம் செய்திருக்கின்றதுமன்றி, நமது ஆபிசில் அச்சிடப்பட்டுவருகிற ஸ்ரீவைத்தியநாத தீக்ஷிதீயத்திற்கும் ஏஜண்டாகவும் ஏற்பாடுசெய்திருக்கிறேம்.

ஆகையால் ப்ரம்மவித்தியாவிற்குச் சேரவேண்டியபாக்கியை நீண்டகாலத்திற்கு வைத்துக்கொண்டு எம்மைநஷ்டப்படுத்தாமல் இவரிடம் ரசீதுபெற்றுக்கொண்டு தயவுசெய்து கொடுத்துவிடக்கோருகிறேம்.

கு-ஸ்ரீ,
பத்திராதிபர்.

Koviloor Digital Library

ஓம்

SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்

அநுபந்தம்.

கூ-ம் புத்தகம்] சிதம்பரம். நந்தனஹு தைமீ எஉ [இல்க்கம்-உரு

திராவிடப்பிரகாசிகை.

ஞானமிர்த மறுப்பு.

நண்பர்காள்! மேற்குறித்த 'திராவிடப்பிரகாசிகை'என்னும் தலைப்பெயர் சுமந்து ஓர் விஷயம் பழையஞானமிர்தத்தும் புதியஞானமிர்தத்தும் வெளிவந்துசிறிதுகாலமே வெளியாகி வழக்கப்படி கின்றது. அது பழையஞானமிர்தத்தில் கண்டவிஷயமே. மறுபடி எழுதும் இடம் சில விஷயம் சோதனைக்குறைவால் எழுதப்பட்டனவெனயாமுரைத்தோம். அவற்றிற்கு ஏதோ சமாதானம் கூறிய தாய்ப்புதியஞானமிர்தம் கக-வது சஞ்சிகையில்'திராவிடப்பிரகாசிகை பூர்வபக்ஷநிராகரணம்' என ஓர் விஷயம் மிக விரிந்ததாக எழுதப்பட்டது. அதை எழுதியவர்தமிழ்ப்பாஷையை மிகவுணர்ந்தவராகவே அவர் புலமைக்கேற்றவாறு விஷயமெழுதிக் கடிதத்தை நிரப்ப வியலாவிடம்"அவர்மடைமை"புலம்பியொழிந்தார் என்பதாதிசொற்களால் இவர்போன்றதமிழ்வல்லார் எழுதிடும் செந்தமிழ்நடையைச்சிறப்பித்தார். அதில் கேட்டகேள்விகளுக்குச்சமாதானம் ஏதும் அளித்திட்டாரில்லையாயினும், சில கதைகள் மட்டும் எழுதப்பட்டன. அவைகளே பிரபலப்பிரமாணம் என்றும் வேறனேகவிதமாகவும் புகழப்பட்டன. அவற்றில் யாம் கேட்டகேள்விக்குச் சமாதானம் ஏதும் வரவில்லை என்பதைமட்டில் ஈண்டு விரிப்பாம். அவர் எழுதும் நடைக்கே கடுஞ்சொற்கள் உயிர்நிலையாதலால் அவைகளில்லாவழி அவர்க்கதோர் குறையென அவர் கருதிப் பயனில்பழிமொழிகளைமொழிந்தனல் தமதுநாவலிமையை நாட்டுவாராயினர். இவைநிற்கார்புறங்கிடக்க; விஷயங்களையாராய்வாம். இப்புதிய ஞானமிர்தம் பிறந்த இரண்டாம்சஞ்சிகைதொடங்கி "ப்ரம்மவித்தியா"வுடன்போராடத்தலைபட்டிடர்ப்பட்டுப் பலதடவை காலந்தப்பி ஒருமுறை இருமுறை இருமுறை ஒருமுறை சிறிதுகாலம் சமாதிநிஷ்டை என்பதாதிகளை யடைந்து எடுத்த விஷயத்தை விடாதுநடாத்தவலியின்றி எவருக்கும் வெறுப்புறச்செய்து ஆதரிப்பவர் எவருமின்றி, வைதிகாபிமானியும் சிவனேசமிகுந்து சிவனடியார் திருவடிதமது திருமுடியாக்கி அனேக தேவப் பிராம்மண ஆசீர்வாதாக்ஷய கவசபூஷணரும், ஸ்ரீராஜராஜேஸ்வரி அனுக்கிரகபாத்திரரும், கொடைவள்ளலும், ஸ்ரீராமஸேது திவ்வியசமஸ்தானபதி ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத பாஸ்கர ஸேதுபதி பூபாலருமான மன்னவர் ஆதரவை ஒன்றைக்கொண்டே இதுவரைநடந்துவந்தது. இப்பொழுது மேல் நடக்கும் சங்கதி நடக்க நடக்கத்தெரியவேண்டும். அம்மன்னவர்மணியே நமது 'ப்ரம்மவித்தையையும்' ஆதரித்து வருவதும் அதற்கு ஒரு 'நிபந்தன 'திரவியம்' என்னும் வரையின்றிச் செல்லும் செலவைக்கொடுப்பதாக ஏற்படுத்தி வரைந்தருளிய நிருபம் இவ்வாறும் புஸ்தகத்தின் முகப்புறத்தில் பேரணியாய்விளங்குவதும் நீவிர் அறிந்திருப்பீர்! அம்மன்னவர் சென்ற சித்திரைமாதத்தன்று நமது ப்ரம்மவித்தியாவை ஆதரிப்பதாகத்தாமளித்தநிருபத்தின்பிரகாரம் ரூபா 1200 ஒருமுறையாய் ஒருவருடத்துக்குக்கொடுத்துதவினர். அன்றுமுதல் நமது 'ப்ரம்மவித்தியா' பத்திரிகை தன்திருமேனி பருத்துப்பல பண்டிதர் தத்தம் சித்தாந்தங்களாய திவ்வியாபரணங்களைத்தனக்குப் பரிசளிக்க, அவற்றைத்தமது திருமேனியிற்றொடுத்து முன்னைந்து வருடங்களிலும் தான்துவக்கிநடத்திவந்த விஷயத்தைவிடாது இன்றும் மேன்மேல் விரித்துரைத்துபதேசித்து வருகின்றாள்! இந்நங்கை ஆதியிலேயே 'ஸம்ஸ்கிருதபாஷை' என மகுடம் புனைந்து அன்றுமுதல் இன்றுவரை நடாத்திவரும் விஷயம் ஒன்று. அதனுள் வேதங்கள், தருமசாஸ்திரங்கள், இதிகாசங்கள் (பாரதம் ராமாயணம்முதலியன)புராணங்கள், சிக்ஷை,வியாகரணம்,நிருத்தம், சோதிடம்,கற்பம, மந்திரம் முதலான பல நன்னூல்களைப்பற்றி எழுதப்படுவதால் அதைப்போல அனுகரணமாகத் திராவிடப்பிரகாசிகைஆரம்பிக்கப்பட்டது. அதில்தொடங்கும்பொழுதே பழையஞானமிர்தத்தில் தமிழ்வழக்குவந்து ஒருமுடிவின்றி ப்ரம்மவித்தைக்கனுகூலமாக யாழ்ப்பாணம் செந்திநாதய்யர் அவர்கள் நடாத்திய 'அமிர்தபோதினி' முதலிய செந்தமிழ்ப் பத்திரிகைகள்தீர்ப்பளிக்க, அவ்வி

Koviloor Digital Library

வாத முடிவின்றி அன்றும் கையொப்பக்காரர் ஆதரவின்றி———நின்றது. இன்றும் இப்பதினோராம்பத்திரிகை விஷயத்தை முதலில் நோக்கிட மனம்வாடுகின்றது. நமது தேசத்தில் பத்திரிகைகள் நடப்பதேமிகக்கஷ்டம். அதிலும் மதவிஷயப் பத்திரிகை நடப்பது அதிதுர்லபம். அதிலும் தமிழில் நடப்பது அரிதினுமரிது. நிற்க; இங்ஙனம் ஒவ்வொரு ஞானாமிர்தமும் தோன்றிகூதிர்காலத்துக்கார்கூட்டமபோன்று சிறிதுகாலம் எதிர்த்து ப்ரம்மவித்தையுடன் போராடிச்சிறிதுகாலம் தனது சமாதிஸ்விஷ்டையை அடைவது வழக்கத்தினிழ் வந்ததோர் விஷயம். ஆயினும் தத்துவவிவேசினி லோகாநந்தம் கீர்வாணவாணிவிலாசம் முதலிய பத்திரிகைகளைப்போல் முற்றிலும ப்ரம்மவித்யா துவேஷத்தால் வீணாகத்தனுவாணுளைப்போக்காது எவரதுபரமாபிமானத்தாலாவது மீண்டும் நமது ஞானாமிர்தம்செந்தமிழ்நன்னடையை நம் தென்னாட்டவர்க்குதவவேண்டிக் காலதருமம் கடவாது வெளியேறவும் ஊக்கத்துடன் பிடித்த பிடிவிடாது எவ்வழியும அதை முன்னுக்குக்கொண்டுவர அப்பத்திராதிபர் முயன்றிடுவார் என எதிர்பார்க்கிறோம். அவர் எவ்வளவு நம்மை வெறுத்துத்திட்டிவரினும், அவர் எமது தமிழ்நடை கடுநடையென வரைந்திடினும் இவர் இயலே அதுவென அவ்விஷயத்தில் யாம் மனவருத்தமுறாது இவர்க்குச்சொல்வது யாதெனில்:—தாம்கொண்ட கடுந்தமிழ் நடைபொன்றேலேயே தமது பத்திரிகையை எல்லோரும் பார்க்கமிகவுபயோகமாவதில்லை. ஆதலின் தமது நாவலிமைகாட்டும் நூலாகவிதையாக்காதுமெல்லியநடையில் இதை எழுதினால் எவரும் படித்துச்சுகம்பெறுவார். அன்றியும் மற்றவர் மனஞ்சுடும் சொற்களாய பலசொற்களையும் எழுதிடுவது நலம் அல்ல என்பதே. இனித் திராவிடப்பிரகாசிகையில் யாம் கேட்டகேள்விச் சுருக்கமும் அதற்கு அவர் மறுமொழியும் எமது கண்டனமும் முறையே அடியிற்காட்டி வருவாம்.

எமதுஆக்ஷேபம்.

பாணினிமுனிவர் பிரஸ்தாபத்தை 'எழியன்முறை' எனும் சூத்திரத்தில் அகத்தியனார் செய்தமையால் அவ்வகத்தியம் பதினாயிரம் வருடங்கட்கு முன்னிருந்ததாக எப்படிச்சொல்லலாம்? பாணினியார்இருந்தகாலம் அவர் செய்தருளிய சூத்திரத்தாலும் பிரகத்கதைமுதலிய சரித்திரங்களாலும் 5000 வருடங்கட்குட்பட்டதேஎன்பது.

இதற்கு அவர் கூறும் சமாதானம்:—வழக்கப்படி திட்டியபின் வடமொழிநூலாதாரங்கொண்டு தென்மொழிக் காலவரையறைகூறுதல்உசிதமன்று. நக்கீரதேவர் அகத்தியர்முதற்சங்கத்திருந்ததாகச்சொல்லுகிறார். (அவர்பெருமைபலபேசினார்) என்பது. அதன்கண்டனம். யாம்வடமொழிநூலாயபாணினீயத்தின்காலவரையறை ஓதவேண்டிவடவியலாசிரியராயபாணினியார்சரித்திரம் கூறும் பிருகத்கதை முதலிய நூல்களையும் அவரருளிய சூத்திரங்களையுமே பிரமாணமெனக்கூறினுமன்றி அவ்வடநூல்களைக்கொண்டு அக்காலங்குறித்திட்டாமில்லை. மற்றுஅவ்வகத்தியம் பாணினியார் சமகாலத்திலாதல் அல்லது பிற்காலத்திலாதல் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பதற்குஅவ்வகத்தியமுனிவர் எழுதிய சூத்திரமென நீவிரும நும்மாசிரியரும் வழங்கும் 'எழியன்முறை'எனும் சூத்திரத்தையும் அதற்கு நுமதாசிரியர்பலர்செய்தவுரைகளையும்நுமது வாக்கையுமே பிரமாணமாகக்காட்டினோம். ஆயின இங்கு எழுதிய நக்கீரர் கதைகேட்டபடிசொல்லப்பட்டமையால் நக்கீரர் கதையே என்க. அங்கு அகத்தியத்தில்பாணினி பிரஸ்தாபம் தென்னூலால் ஸ்தாபிக்கப்படலால், அவர் காலத்துள்ளதெனப்புலப்படவே, அவ்வட வியலாசிரியர் தோன்றியகாலத்தை அவர் சூத்திராதிகளால்நிச்சயித்தல் மரபேயாதலின், யாம் அங்ஙனம்செய்தது குற்றமன்றாக அக்கேள்விகட்குத்தக்கவிடை பகாது சில கதைகள் கூறுகிறார். இவ்வளவு கதையினும் சமாதானமொன்றுமில்லை. மேலே இவரே அதன்மட்டில் தமது மனத்திற்குத் திருப்திவாராதுகண்டு ஏதோ உண்மையுபதேசிப்பவர்போல் ஓர் கபடோபாயசமாதானம் செய்கிறார். அச்சமாதானமாவது 'அநாதிகளான பிமன்முதலிய சப்தங்களுக்கு அவரியல்விளக்கினார். அதுகொண்டு அப்பாணினியார்காலம் வரையறுத்தல் கூடாதகாரியம் என்பதும் மேலும் இதுசத்தப்பிரமவாதிமதமென்பதும் இதே பௌராணிகர் மதமென்பதும் இவ்விதிட்டிரர்பீமர்முதலியவர் ஒவ்வொரு யுகத்தும் பிறப்பாரென்பதுமே. இதை இங்ஙனம் கூறிமறுக்க. சப்தப்பிரமவாதிகள் சப்தப்பிரமம் எனில் 'பரை' எனும் வாக்கைமட்டில் பிரமம் என்பார். அன்றி வைகரியைப்பிரமம் எனக்கூறத்துணியார். அவர்கள் சித்தாந்தத்தில் சம்சயம் நேர்ந்தால் ஸ்போடசந்திரிகை, வாக்கியபதீயம், மஞ்சூஷை முதலிய நூல்களிற்கண்டறிக. இப்பாணினிமுனி சூத்திரத்திலுள்ளபதங்கள் அவர்கள் பெயரேயென்பதற்குப் பிரமாணம் 'கலித்துவாப்ரயுகசந்தியிற்பிறந்த வியாஸமகரிஷிகாலத்துதித்திருந்தயுதிட்டிரர் போப்பிள்ளை ஜனமேஜயன் பிறந்தகாலத்தை துவக்கி சந்திரகுப்தன் காலம்வரை தேசசரித்திரம் முறையே எழுதிவரும் பிரகத்கதையில் கானிஷ்க மகாராஜனுக்கு முந்தியே அவன் தகப்பன்காலத்தில் பாணினிகாந்தார தேசத்தில் பிறந்து குணாட்டியமுனிவரி

Koviloor Digital Library

டம் கல்வி பயின்று இமயமலைசென்று பரமபதியை வழிபட்டருந்தவமியற்றி அத்தவப்பயனாய் அப்பரமன் உபதேசித்தருளிய பதினான்கு மூல சூத்திரங்களைக்கொண்டு வியாகரணம் செய்ததாகச்சரித்திரமிருப்பதை மறுக்கவிவர் வல்லாரல்லர். இனி இவ்வளவு சரித்திரங்களும் அச்சரித்திரத்தில் கண்ட ராஜாங்களும் ஒவ்வொரு யுகந்தோறும் திரும்பித்திரும்பி வருவதாய் சப்தப்ரம்மவாதிசித்தாந்தம் இவர் கூறுவாரேயெனின், அற்றன்று. அங்ஙனமாயின் அடுத்தொட்டி வந்தசரித்திரங்களும் யுகந்தோறும் திரும்புமெனவேகொள்வோமாயின்முன்யுகத்திலும்கூடநாமிருவரும்தமிழ்வழங்கு, திராவிடப்பிரகாசிகை, தத்துவபோதம்முதலியவற்றில்வழங்கிட்டுலகத்தாருக்குண்மைதெரிவித்தோம். இப்பொழுதும் அவ்வாறு பிறந்த அவதாரமே எனலும் கூடும். பின் அவ்விதசித்தாந்தமேயில்லையாமெனின், உண்டு. வேதாகமபுராணேதிகாசங்களில் சிலசரித்திரங்கள் வெவ்வேறாகச்சொல்லப்பட்டமையால் அதின் உண்மையை விளக்கவேண்டி வேதாதிகளில் சொல்லப்பட்டவர் சிலர் ராமகிருஷ்ண வசிஷ்டாதிகள் ஆதிகாரிகர் எனப்படுவார் என்றும், அவரும் ஒரு கற்பத்திற்கொருமுறையே பிறப்பார் என்றும் மூற்கற்பத்தவர்க்கும் பிற்கற்பத்தவர்க்கும்பெயர் ஒன்றுமட்டில் சமமேயன்றி மற்றதெல்லாம் மாறலாம் என்றும், ஆதலாற்றான் ஒருகற்பத்து ராமாவதாரம் விண்டுவின் பாதி, ஒருசமயம் பூர்ணம, ஒருசமயம் தேவியாம்சம், ஒருதடவை ருத்திராம்சம் என்றும், யுத்தம் லிங்கப்பிரதிஷ்டை யிவற்றிலும் முன்பின் பலவும் இருக்கிறது. இதேவிஷயம் புராணசம்மதமும். ஆகையால் ஒவ்வொருகற்பங்களில் ஒவ்வொருவர் வியாசரானார் என்பதாதி வசனங்கள் பற்பல புராணங்களில் உள. நிற்க; இக்கதைகொண்டவேதாதிகளில் அதிகாரபுருடர் எனக்குறிக்கப்படாத துரோணர், ஜீவந்தர், யவனர் முதலிய பெயர்களும் வியாகரணத்திருப்பது இம்மாயாமந்திரங்களால்மறுக்கவொண்ணா ஏதுவேயெனத்துணிக. இவ்வுண்மையை யாம் வியாகரணத்தைப்பற்றி எழுதிய விடத்தில்விரித்திருத்தல்காண்க. அங்கே புராணவிதிகாச விஷயங்களைப்பற்றி விசாரித்து அவற்றில் தோன்றிடும் ககோளபூகோள வித்தியாஸம் காலவேற்றுமை முதலியவைகளை விசாரித்துண்மைவிளக்கினும். ஆதலால் அது எமது தலைப்பாரமாகவிருந்ததேயன்றி இன்றுமிருப்பதில்லையாகவே இவர் அவைகட்கு ஏதோசமாதானம் சொல்லி க்ஷேமம்தேடிக்கொள்ளச்சொன்னதற்கு இயற்கையாகவே க்ஷேமம் தேடிக்கொண்டோம் என்பீரே! என விடையளித்திடுவோம்.

மேலே இவரோ இவ்வடமொழியில் தமக்கும் உள்ளபாத்தியத்தைக்காட்டி உமக்கும் பாத்தியமிருந்தால் நீர் ஏன் அவ்வடமொழியில் வருங்குறையை நிவிர்த்திக்கவில்லை என வினவி ப்ரம்மவித்யாபத்திராதிபர் தமிழ்க்குரியவராயினும் அவர் தமிழ்க்குறையை ஒழிக்காததற்கு எதுகாரணமோ, அதுவே என்று பொருள்பட ஏதோசில கூறி நின்றதுமிதனாலே மறுக்கப்பட்டதறிக. இனித்தமிழ்நாட்டிற்பிறந்து வளர்ந்து தமிழருடன் உறவாடும் எமக்குத் தமிழபிமானமில்லை என இவர் கூறியது பயனில்சொல்லாம். இவரால் அதற்கு வருங்குறையைக் களைந்திடவேண்டியே இப்பூர்வபக்ஷம் செய்தோம் என்க. இதற்குச்சமாதானம் இவர் கூறுவது எவ்வழியினும் ஒவ்வாது. ஆயினும் தென்மொழி அனாதியெனவும் அதினியல் பாணினீயத்துக்கு முந்தியதும் பலவார்ஷ வடவியல்களுள் பலவற்றிற்கு முன்பிறந்ததெனவும் நிரூபிக்கத்தக்க பிரமாணம் எம்மிடமிருக்கிறது. இவ்விவாதம் தீர்ந்தால் யாமே திராவிடப்பிரகாசிகை எழுதி அதற்கு மூலப்பிரமாணங்கள் அனேகங்காட்டிடுவாம. ஆனால் இவரும் இவராசிரியரும் கூறிய விஷயம் மாறாமல் உண்மைவெளியாகாது. இதற்குமேல் அகத்தியம பலதடவை அகத்தியரால் செய்யப்பட்டதென்றும் அவற்றுள் சிற்றகத்தியம் எனப்படும் அகத்தியம ஐயாயிரவருடங்கட்குட்பட்டதே என்றும் ஒப்பிமுடித்தார. வெகுநன்று! இக்கதை எத்தென்மொழிநூலிற்கண்டார்? இனி வடமொழியிலாவதுண்டா? இவர் இப்படி அகத்தியர் அவதாரம் எடுத்ததும் ஒவ்வொரு அகத்தியம் செய்யவும் அகத்தியர்தவஞ்செய்தார் எனவும இவர் எழுதுவது வெகுபல பிரமாணங்களைக்கண்டேபோலும்! இப்பிரமாணத்தால் இவ்வகத்தியம் செய்த அகத்தியர் எவர் என யாம் வினவியது 'அசங்கதம' என்னும் சொல்லால் ஒழிந்ததாய எழுதி, அகத்தியர் அனேகர் என்னும் விஷயத்தில்தமது பயிற்சியின்மையை வெளியிட்டார். அதனால் குற்றமில்லை. அது விஷயம் அவர் அறியார்போலும்! அச்சம்சயமும் இவரால் ஒழியாது. யாமே எமது திராவிடப்பிரகாசிகையில் துலக்கிடுவோம்.

வடமொழிவழக்கறியாருரை.

இவ்விஷயத்தைப்பற்றி யாம் எழுதியதைப் பின்வருமாறு அனுவதித்துக்கண்டிப்பாராயினர். அவ்விஷயத்தை யாம் மறுத்தும் இவர் கண்டித்தும் ஈண்டு எழுதியதும் 'வடவியல் வழக்கறியார் உரை' என்று காட்டி ஒதுக்கிடுவாம்.

'அவர் பூர்வபக்ஷம்' இனி ப்ரம்மவித்தையுடையார் அவ்வாறு வந்தவடமொழிச்சூத்திரவார்த்திக மாபாடியங்களுள் யாண்டும் கேட்கப்படாமையின், அது வடமொழிவழக்கறியார் உரைபாய் மற்றதற்கோர்குறையை நிலையிடுவதாமென ப்ரம்மவித்தையில் வாளாக்கூறி அறிவில்லாரை வஞ்சிக்கின்றமையின் அத்திறத்தார் அறியவேண்டிவடமொழிச்சூத்திரமாபாடியங்களில்ஆண்டாண்டங்ஙனம் வந்தனவற்றுட்சில ஈண்டு எடுத்துக்காட்டுவாய்'

Koviloor Digital Library

என்றது அதன் முகவுரை. இதில் அறிவில்லாரை வஞ்சிக்கின்றீரும் என்பதால் ஆசிரியர் பாணினியார், அறிவில் அகத்தியனார்க்கும் ஆசிரியர் பதஞ்சலியார்க்குங் குறைந்தவரென விவர்க்கு ஏதோ ஒரு அறிவுடையவர் சொல்லியிருப்பார்போலும்! அதனாற்றான் அங்ஙனம் ஒப்பாதவர் அறிவிலிகள் என இவர் மொழிந்தார்மேல் அவ்வறிவிலிகளுங்கே நாம் அடியிற்காட்டப்புகும் பிரமாணங்களைக்காட்டித் தம்பக்ஷத்தை காட்டிக்கொள்ளவிவர் நினைத்தார் என்பது 'அத்திறத்தார் அறியவேண்டி' என்றவர் சுட்டிக்காட்டியதால் ஏற்படுகிறது. இதுசிதமே. அறிவுடன் ஆசிரியனிடம் வடவியல்பயின்றோர் இங்கிவர் எடுத்துக்காட்டும் சூத்திரவார்த்திக மாபாடியங்கள் ஆராய்ச்சிக்குறைவால் இவர் மதத்துக்குச்சாதகமாக வெடுத்தார் எனக்கண்டு நகைப்பாராகவே, ஏதோ சூத்திரவார்த்திக மாபாடியங்களை வீணில் ஒருநாவலர் எழுதிவைாரா வென்று அவைக்கண்டு மயங்கும் திறத்தார்க்கு இது உதவுமெனக்கருதினர் போலும். நிற்க; இவர்காட்டிய வசனங்களாவது இவரும் இவராசிரியரும் கொண்டாடிய பொருள்கொடுக்கின்றனவோவென விசாரிப்பாம். பாணினிமுனிவர் தொல்லாசிரியர் சூத்திரங்களுட்சிலவற்றைத் தமமுடைய சூத்திரங்களால் எடுத்தோதிமறுத்து வேறுவிதி கூறுவர் என்று இவர் எழுதியது வடமொழிவழக்கறியார் உரை என எம்மால் மறுக்கப்பட்டது. அதற்குப்பிரமாணமாக தொல்லாசிரியர் சூத்திரங்களைத்தழுவியே இவ்வாசிரியர் சூத்திரங்கள்தோன்றினவென்பதற்குப் பலபிரமாணங்களைக்காட்டி தொல்லாசிரியர் சூத்திரங்களிற்சிலவற்றைத்தமது சூத்திரங்களால் எடுத்தோதிமறுத்து வேறுவிதிகூறுவர் என விவர் வாய்திறந்ததற்கு அப்பாணினியார்சூத்திரங்கள்3982-ல் ஒன்றையாயினும காட்டவேண்டுமென்றீரும். அதற்குஇதுகாறுமதேடிஎடுத்தசூத்திரம் த்ருதீயாதிஷு பாஷிதபும்ஸ்கம் பும்வத் காலவஸ்ய அவங் ஸ்போடாயநஸ்ய ருதோ பாரத்வாஜஸ்ய த்ரிப்ரப்ருதிஷு சாகடாயநஸ்ய த்ருஷிம்ருஷிக்ருசே: காச்யபஸ்ய என்பனவும் ததசிஷ்யம் ஸம்ஜ்ஞாப்ரமாணத்வாத் லுப் யோகாப்ரக்யாநாத் யோகப்ரமாணே ச ததபாவேऽதர்சநம் ஸ்யாத் ப்ரதாநப்ரத்யயார்த்தவசநமர்த்தஸ்யாந்யப்ரமாணத்வாத்॥ காலோபஸர்ஜநே ச துல்யம்' என்பனவும். இவற்றுள் முற்பகுதியில் உள்ள சூத்திரங்கள் ஐந்து. பிற்பகுதியில் ஐந்து. இவற்றுள் முற்பகுதி ஐந்துசூத்திரங்கள் பாணினியார் தொலலாசிரியர் இலக்கியங்கள் தங்கொள்கைக்கு வேறுனமுறைவிளக்கியிட்டார் என்றும், பிற்பகுதி ஐந்துசூத்திரங்களால் தொல்லாசிரியர் வசனங்களைமறுத்துவிட்டனர் என்றும் முடித்திட்டார். இவ்விருவாக்கியங்களும வடவியல்வழக்கறியாருரைஎனச் சூத்திரார்த்தங்களோடுகாட்டுவாம். முற்பகுதி சூத்திரங்களில் 'த்ருதீயாதிஷு பாஷிதபும்ஸ்கம் பும்வத் காலவஸ்ய' என்னுஞ்சூத்திரத்தில்காலவர் சொல்லும்இலக்கியத்திற்கும்தமதிலக்கியத்திற்குமாறுபாடுளனப் பாணினியார் வெளியிட்டார் என்று எங்கோ கேட்டறிந்தார். சொன்னவரும் வடவியல்முறையறியார் போலும்.

வடவிலக்கணநூலில் எங்கும்பாணினிமுனிவர் முன்னோர் பெயர் எடுத்து ஓதும் ஒவ்வோரிலக்கணமும்விகற்பம் என்பது துணிபு. தாம ஒருஇலக்கியம் கூறி அதற்கு முன்னோரைமேற்கோளாக 'அவங் ஸ்போடாயநஸ்ய' என்பதாதி பல சூத்திரங்களில் எடுத்துக்காட்டியதுபோல மூதறிஞர் இலக்கியத்தைததமது சூத்திரத்தால் கௌரவித்துக்காட்டுவதால் இவ்விருவிலக்கியங்களும் பதஞ்சலிமுனிவராதி பெரியோரால் அபாணினீயம் என வொதுக்கப்படாது உண்மை இலக்கியமாகவே எடுத்து வழங்கப்படுவதாகின்றது. ஆயின் முன்னோர் சித்தாந்தத்தைத் தழுவித் தமது சித்தாந்தம் வந்ததாகக்காட்டித் தம்மதயனுதியிலுள்ளதே என காட்டிடும் பாணினிசூத்திரங்கள் முன்னோர் சூத்திரங்களை மறுக்கவெழுந்தனவென்பது எவ்வளவுசிதமோவென ஆய்ந்தோர் அறிவார். இங்ஙனம்பெரியோர்கூறுவர் என அவர் விசேடமாய்ப்பெரியோரைக்கணப்படுத்தின இந்தச் சூத்திரத்தால் இவர் தேடியதில் தொலலாசிரியர் சூததிரததுட்சிலவற்றை எடுத்தோதி மறுத்துவேறுவிதி கூறியதாக அகப்பட்டதுபோலும. நன்று! நன்று! இதில் எந்தத் தொல்லாசிரியர் சூத்திரம் எடுத்து ஓதிமறுக்கப்பட்டது? தொல்லாசிரியர் ஒருவர் பெயரிருக்கும் சூத்திரம எல்லாம அவர் கொள்கை எடுத்து மறுக்கவெழுந்தனவென விவர்மயங்கியதேயன்றி வேறிலலை! நிற்க; இனி எடுத்தோதிமறுத்து என்னுற்றும் ஒரு விதிகூறி அதுடன் மூதறிஞர் கொள்கையையும் அனுவதித்தலே அதன் பொருள். 'வேதவழக்கு என்னும் உலகத்துச்சொல்லெல்லாம் வேதவழக்கெனயாம் கினைத்துபயோகிப்பதுபோல் இதனுண்மைஉமக்குத்தெரியாதொழிந்ததுஉமதுமடைமை எனவும் இந்நாவலர் சொல்வாராயினும் இவர் கருதியகருத்துப் புலப்படும்படி எழுதாக்குற்றமிவரதேயன்றி எமதலல. மூதறிஞர் வாக்கியங்களைத்தழுவிநிற்றல் ஆசிரியர் பாணினியார்போன்ற முனிவர் பிரான்களுக்கு அழகே. அதை மாற்றிப்பொருள்கோடல் மக்களுக்குமருளேயென்க. அதே பகுதியில் அவர் காட்டிய "ஔவங் ஸ்போடாயநஸ்ய ருதோ பாரத்வாஜஸ்ய த்ரிப்ரப்ருதிஷு சாகடாயநஸ்ய த்ருஷிம்ருஷிக்ருசே:காச்யபஸ்ய" நான்குசூத்திரங்களில் "ருதோ பாரத்வாஜஸ்ய" என்பது துணிபுரை. அந்தப்பிரகாணத்தில் பாரத்துவாஜர்மதமே காட்டப்பட்டதன்றி மறுக்கப்படவில்லை. மற்றவை தம்மதத்துடன் அவர்மதத்தையும் சேர்த்துக்கொள்ளஎடுத்தவையேயன்றி மறுப்பதற்கென எத்தொல்லாசிரியர் சூத்திரமும் எங்கும் பாணினிமுனிவரால் எடுக்கப்படவேயில்லை. மறுக்கப்படவேயில்லை. 'எடுத்தோதிமறுத்து' என்றது வடமொழிவழக்கறியார்உரையே. மீண்டுமுரைப்பாம்.

வரும்

Koviloor Digital Library

சிரிங்கேரி ஸ்ரீஜகத்குருசுவாமிகள் நமது ப்ரம்மவித்தியாவுக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தின் நகல்

NO 24 நெ. ௨௪.

ஸ்ரீ
வித்யா
சங்கர

[illegible]

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமத்ஹிரண்யகர்ப்பயாஜிரவிகுல முத்துவிஜய ரகுநாத

ராஜாபாஸ்கரஸேதுபதிபூபாலர் அவர்கள்

நமதுப்ரம்மவித்தியாபத்திரிகையை
ஆதரித்துவருவதாகக் கொடுத்த நிருபத்தின் நகல்

ஸ்ரீராமநாதசகாயம்.

நமது பிரியமுள்ள வைதிக வாரணர்களாகிய ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு,

அடுத்த ௧௮௯௨ஞூ முதல் தாங்கள் பிரசுரஞ்செய்துவரும் பிரமவித்தியா பத்திரிகையின் வருடாந்திரச்செலவை வருடர்வருடம் ஒரே மொத்தமாக இந்த ஸேது ஸமஸ்தானத்திலிருந்து கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறதை இந்த லிகிதத்துவாரா தெரிவிக்கலாயிற்று.

காலம்வத்ஸரம், துலாரவி ௨௯௳
முகவையம்பதி.

(ஒப்பம்) தங்கள்,

[illegible]

Koviloor Digital Library

[illegible] — ப்ரம்மவித்தியா

[illegible]

சிதம்பரம்.—நந்தன ஹூ தைமீ 21உ

[illegible]

ஆஸ்திகருக்குவலியுறுத்தல்.

ஐய, ஆஸ்திகமணிகாள்! சிறித நற்கதையைக்கேளுங்கள்! இக்காலத்தில் கலியின் ஆட்சிமிகுதியால்எங்கும் நன்மதம் நல்லாசாரங்கள் இவைகள் ஒழிந்துவர நேர்ந்தவிஷயம் ஆரியர்களுக்குப்பெரும் வருத்தமாய் உள்ளது என்பது நீங்கள் அறிந்ததோர் விஷயமே. இங்ஙனம் அடியோடுபிறர் நமது நாட்டில் புகுந்த ஸன்மதசதாசாரங்களை ஒழிததிட்டாலும் இம்மதங்களைக்காலந்தோறும்காக்கவேண்டியே துறவுபூண்ட மடபதிகள் எவரும் இவ்விதவுலகவாபத்தை மனதில ஏற்றுக்கொள்வதேயில்லை. அதைஒழிக்கும் வழிதேடுவதுமில்லை. இவ்விஷயம்ஒவ்வொருவரும் ஒவ்வொரு பத்திரிகையும் சிறப்பாய் ப்ரம்மவித்தையும் அவ்வப்பொழுது எடுத்துத்தூற்றும் ஓர் விஷயமே. இக்காலத்தில் பெயருக்கும் விருதுக்கும் போட்டிபோட்டு வீண் காசுசெலவுசெய்துவரும் பணம் மிகுந்த மடபதிகள் லௌகிகவிபவகாரத்தாற்றானே இரவு பகல் பூர்ணமாக ஒழிக்கின்றார்கள். இக்காலத்தில் மடங்களில் காலைமாலைகளில் நல்லவாத்தியங்கள் கேட்பதும்வரவுசெலவு கணக்குகள் கவனிப்பதும் வக்கீல்களுடன்ரகசியமாலோசிப்பதும் திருவாபரணங்கள் பல்லக்குமுதலியவை பழுதுபார்ப்பதும் கூத்தாடிகள் காமிகள் பாட்டுக்காரர் இவர் கோஷ்டிகள் நடத்துவதும் மற்றசெய்கைகளுக்கிடந்தருவதும் வந்துபோய்க்கொண்டிருக்கும் போலிச்சீடருக்குப் போளிசாப்பாடு போட்டு மயக்கிப்பொருள் பறித்தலும் சிலசமயம் வெளிகளில் யாத்திரைசெய்துகொண்டேஆங்காங்குள்ள சீடப்போலிகளைப் பணத்துக்கெனப் பிடிப்பதும் நல்ல சரிகைவேஷ்டியில் காஷாயம்போட்டுடுத்துவதும் அந்தர்தவிடங்களில் சிறப்பாய் சிற்சில வனசாரங்க

Koviloor Digital Library

[illegible]

ளும் ஆக இவைகளை ஆம்னிகமாய் முடிந்ததேயன்றி, காலையில் கடவுளைத்தரிசித்தல், அல்லது ஸ்மரித்தல், ஸ்னாநம், ஐபம், தபஸு, சிடருக்குத்தத்வோபதேசம், மருந்தோட்டம், கடவுளைப்பூஜித்தல், சிடருக்குப்பிரசாதமளித்தல், ஸத்வித்யாஸன்மதஸதாசாரங்களை விசாரித்தல், அவைகள் பெருகவேண்டிமேலும்கலியைஜயித்திடும்வழிதேடுவது, சிடர்தாபத்தை விசாரித்துஅதைநீக்கமுயசித்தல் உலகோபகாரமே தனதுதொழிலென நினைத்தல் மாலையில் உசிதமான ஐபம் முதலியன ஸன்மதசதாசாரங்கள் விருத்தியடையவேண்டிப் பரமேசுரனை அர்ச்சித்தல் ப்ரம்மவித்தைசம்பிரதாயம் மாருது நிலைபெறச்செயல் தமது சிடர் இருக்குமிடமளவும் பண்டிதர்களைக்கொண்டு நன்மதங்களையும் சதாசாரங்களையும் சிடர்களுக்குபதேசிக்கச்செய்வது அனாரியவியவகாரங்களை விலக்கிடுதல் எங்கும் பரமேசுர பத்தியை விருத்திசெய்வது கன்மங்கள் நன்கு நடக்க ஏற்பாடுசெய்வது கருமபிரஷ்டர்களை உசிதமாகத்கண்டித்தல், நன்மதங்களை வெளியிட்டுலகத்துக்குபகரிக்குமியல்பினரான பண்டிதர்களைப் பாலித்தலும் ஆதரித்தலும் தாமும் சிடர்களைக் கண்டகாலமெல்லாம் ஸன்மதவிசுவாசம் வரும் வழியாய் உபதேசித்தல் உலகபீடைபைக்கேட்டருளி உள்ளம் வெருண்டேனே அதற்குநிவிர்த்தி தேடுதல் ஜனங்களிடம் அன்பும் அனுதாபமும்புலனடக்கம், புண்ணியமலிவு, மற்றவரைப்பீடிக்காமை அறிவிலிகளான சிடர்க்கும் கருணைமிகுதியால் தடுத்தாட்கொண்டருளல் ஆஸ்திக்த்தை விருத்திசெய்வித்தல் வேதம்முதலிய நல்வித்தைகளை எங்கும் பரவச்செய்வது பணம் மிகுதியிருந்தால் ஏழைகளுக்கன்னமளித்துபதேசித்தருளல் என்பதாதிகாரியங்கள் நடப்பதேயில்லை. அந்தோ! பலபத்திரிகைகள் வாயிலாகத்தெரிவித்தோம். நேரிலும் சென்றுரைத்தோம். எதுசெய்யினும் காதில்சேர்ப்பதேயில்லை. அவர்காதிற்றூங்கும் வைரத்தினகுண்டலம் தடுத்து வெளித்தள்ளிவிடுகிறதுபோலும். மேலும் வணங்கியும் இறுமாந்தும் பலவிதமாய்ப்பத்திரிகைகளில் விணணப்பங்களைச்செய்தோம். அவைகள் ஒன்றையும் அவர்கள் கவனிப்பதில்லை. ஆதலால் நமது ப்ரம்மவித்தை இத்தேசமெங்குமலைந்து பார்த்து வாடி வழியின்றி விணில் மனவருத்தமுற்று "எவ்விதத்தில் நன்மதத்தை நாட்டலாம்" எனச்சிந்திக்கத்தலைப்பட்டனள். 'அந்தோ! கலிமிகுந்தது! ந ன் ம த ச த ா ச ா ர ங்களில் சிறிதும் கவலைஎவர்க்கும் இல்லை. வீண்விருதுக்குப்பாடுபடும் மடபதிகள் சிறிதும கவனிப்பதில்லை. இந்தவாபத்து இத்தேசத்தைவிட்டொழிவதெப்படி? நம்மவர் எவரும் நல்லா

Koviloor Digital Library

[illegible]

சாரங்களைக் கைக்கொண்டொழுகும் நற்காலமெப்பொழுதுவரும்'என்பதாதி பலவித சிந்தனை ப்ரம்மவித்யாவுக்கு உண்டாயிற்று. ஆயினும் 'எக்காலம் நல்லறங்குன்றும் பாவமலியும் அக்காலம் யான் அவதரிப்பேன் அர்ச்சுனா! ஏது விபூதிநிறைந்தது அறிவுள்ளது உலகோபகாரமூர்த்தி அதுவே எனதம்சம் என்று நினைத்திடுவாய்'என்பதாதி கண்ணபிரான் திருவாக்கும்' ஒவ்வொரு சதுர்யுகத்தும் கலியில் அவதரிக்கும் ருத்திரமூர்த்தியே அச்சிவாகமங்களை வெளியிடுவார்' என்னும்வாயுவசனமும் பொய்போகாது. 'சிற்சிலவிடங்களில் தமிழ்நாட்டிற்றான்'எனப் பெரியோர் கலி ஐயாயிரத்தன்றுஅவதரிக்குமிடம் தமிழ்நாடெனக்குவித்த பாகவதமும்இதற்குத்துணையாச்சுதே பார்ப்போம் எனத்தமிழ்நாடெங்கும் தேடித்திரியத்தலைப்பட்டனள். இந்நங்கை உற்பத்தியான மூன்றும் தினங்கள் கோபமுத்தூர் சென்று அங்கு சில கிறிஸ்தவரால்தூண்டப்பட்டு உள்ளங்கொதித்துடனே சென்னைசேர்ந்து சென்னை இந்துலகுலேகசங்கத்தை ஸ்தாபித்தனள். அச்சங்கநோக்கமறியாத வைணவர் சைவர் முதலிய சிலர். அன்று அச்சங்கத்தை அழிக்கநினைத்தும் அது அழியவில்லை. பிறகு இத்தகையசபைக்குதவும் ஓர் அரசனையும் ஓரருள்புரியும் ஆசிரியனையும் தேடியடைந்தாள். அதற்குவேண்டியபல விண்ணப்பங்களை வெளியிட்டாள். பலவிடங்களில் நேரில்சென்றும் தெரிவித்தாள். இவ்வாறேமூன்றுவருஷங்கள் சென்ற பிறகு நான்காம் வருடம் தனக்கு ஒருபிரசங்கியைச் சகாயமாகச்சேர்த்துக்கொண்டு வெளிவந்தனள். இவளுக்குட்சபை வெளிச்சபையென இரு சபைகள் உண்டாயின. 'அறையிலாடி அம்பலத்திலாடுவாள்' என்னும்பழமொழிக்கொக்க அறையில் சென்னையிலாடி மற்றுசிற்றம்பலத்திலேயே ஆடவாரம்பித்தாள். அடுத்தவருடம்தான் வியாஜமின்றியும் தமது உபந்நியாசகர் வியாஜத்துடனும் செய்துவந்த முயற்சியால் அச்சபையை ஒருவாறு நிலைநிறுத்தினள். இச்சமயம் வடநாடுகளில் சுந்தராமையர் எம். எ. முதலியபுண்ணியபுருடர் விருத்திசெய்தார்கள். இச்சபைவாயிலாக ஜனங்களுக்குச்சிறிது சிரத்தையுண்டாயிற்று. சில பிரசங்கிகள் வெளியேறினர். பிறர் ஆரம்பரம் ஓர் சிலவிடம் ஒடுங்கியது. துர்மதத்தைத்துராகரித்தனள். நன்மதத்தைப்புகட்டினள் நன்மதத்தில்சிரத்தை உண்டுபண்ணினாள். இவ்விதம் தமிழ் தெலுங்கு நாடுகளில் சிலவிடத்தும் தீபாந்திரங்களும் இலங்கைமுதலிய சிலவிடத்தும பர்மாதேசம் முதலியதேசாந்தரங்களிலும் ஏதோசிறிதுபாகம் சபைகளை ஏற்படுத்தி உலகத்தாருக்குபகரித்தாள். இங்ஙனம் சபையை விருத்

Koviloor Digital Library

[illegible]

திசெய்யும் இப்பரம்மவித்தை ஓர்சமயம் பம்பாயைச்சேர்ந்த தார்வாடா நகரஞ்சென்றனள். அங்கு ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகளிடம் இக்கலிக்கொடுமையைத் தெரிவித்து அவர்கள் அனுக்கிரகத்தை நன்குபெற்றனள். அக்காலமே தக்கபடி யாலோசித்து இவ்விஷயத்தை மேற்கொண்டு நடாத்துவாம் என ஸ்ரீமதாசாரியர்கள் அனுக்கிரகம் பிறந்தது. அத்துவிதபாத்தியமுதலே ஸ்ரீமதாசாரியர்கள் தாம்போகும்கிராமந்தோறும் சீடர்களுக்குச்சன்மதசதாசாரபோதனஞ்செய்வது வழக்கமாயிற்று. அதுதிருமடங்களில்மாத்திரமல்ல.மற்றுநல்ல சிங்காதனமேறும் ஆசார்முதலியசீடர்கூடியசபைகள்எங்குசேர்ந்தாலும்அங்குமஉபன்னிபஸிக்க அவர்களது தூய்மைஉடன்பட்டது. அதுகொண்டு ப்ரம்மவித்தை அநுக்கசுகம்பெற்று எங்கும் தமிழ்நாட்டில் சஞ்சரித்து அந்நாட்டின்பேரணியாயஸ்ரீராமஸேதுதிவ்யஸ்தலத்தை யடைந்தாள்; அங்கு அச்சேதுபதி மகீபாலனைக்கண்டாள். அம்மனவர்மணி இன்னங்கையும் இச்சபையைச்சேர்ந்த உபந்யாசகரையும் மாதமிபதத்திரவியமாக ரூபா. 100 கொடுத்துசவிபாதரித்தார். பிறகு அசேகமன்னவன் அனுப்பிய உத்திரவுப்படி ஸ்ரீகுருஸ்வாமிகளைக்கன்னடநாட்டில் சாளக்கிராமம் என்னுமகிராமத்தில தரிசித்துப்போனந்தமடைந்தாள்.அன்றே அனுக்கிரகஸ்ரீமுகமும்பெற்றுத்தமது திருமண்டலத்துக் கலங்காரின்முள், அன்றமுதல் அபூர்வவிஷபங்களை எடுத்துத்தமது திருமேனியிற்றொடுத்துப்பருத்துப்பலபண்டிதர்கொண்டாடத்தென்னாடுமுழுவதும்உலாவத்தலைப்பட்டனள். இப்பொழுது நமதுநாட்டார் செய்த பூர்வ புண்ணியவசத்தால் ஸ்ரீமதாசாரிய திவ்யசன்னிதியடைந்து மீண்டுமே உலகத்தில்தோன்றிவரும தர்மத தூராசாரங்களை மகாஸ்வாமிசன்னிதியில் வெருவாய்விஞ்ஞாபனம்செய்து கொண்டாள். அக்கணத்தே ஆசாரியமூர்த்திகள் ஆகாவுற்று மனம்வருந்தி சீடரிடம்கருணைகூர்ந்து உடனுயிரம்ரூபாய் சபைக்கெனவீந்து அச்சபையைநடத்தும் வழியையும் ஒருவாறுதீர்மானித்தனர். அவர்கள் தூய்மையின் ஆணைத்திருமுகமிது.-'இதுமுதலே நமது ஸ்ரீமடத்தில்ஆதரவும் பக்தியும் உள்ள சீடர்களான மைசூர், ஜமகண்டி, திருவனந்தபுரம், பரோடா, ஹொள்கார்,சிந்தியா விஜயநகரம், ராயநாதபுரம்ராமதுர்கம்வன பரதிமுதலியமகாசமஸ்தானங்களுக்கும்தேசாயிதேசமுகிதேசபாண்டியர் ஜமீன்தார்கள்குஜ்ஜவியர் வர்த்தகராதியோருக்கும்மற்றமுள்ள ஜனங்களுக்கும் பண்டிதர்களுக்கும ஸ்ரீமுகங்கள் அனுப்பிவரவேண்டும். இதற்கென ரூபா 300000 மூன்றுலக்ஷங்களாவது முதற்றுகைமுதலில சேர்க்கவேண்டும். உடனே தமிழ் தெலுங்கு கன்னடதேசங்களில 30 ஜில்லாக்களில் ஜில்லாவுக்கொருவருக்குக்குறையாது உபந்யாஸிகளை ஏற்படுத்துக. இம்மூன்றுநாடுகளுக்கும் மூவர் மேற்பார்வைக்காரராகநியமிக்கப்படவேண்டும்.இம்மூன்றுநாடுகளுக்குமேல்விசாரணைசெய்து சபையைச்சரிவரநடத்தவேண்டி ஓர் அதிபரைநியமிப்போம். இம்முறையை நடத்தவேண்டி மாதம் ரூபா 1500 செலவு செய்யவேண்டுமே. வருடத்துக்கு ரூபா 18000 இதற்குமுதற்சேரும்வரை திருமடத்திலிருந்தேநடததப்படுமே என்பது. பிறகு இவ்விஷயதில்த் சர்வாதிகாரம்கொடுத்தனுப்ப ஒருவரை உத்தேசித்துமும்

[illegible]

[illegible]

[illegible]

மூர்த்திகள் ஸன்னிதிவிளங்க அகண்டகாவேரி அருகில் துலங்கஸ்ரீ சந்திரமௌளீச்வரன் திவ்யசந்நிதானம்தங்க ஸ்ரீரத்னகர்ப்பகணேசன் இடையூயநீக்கவிருவாமிபார்வை யருள ஸ்ரீகண்டன் சுப்பிரமணியஸஹபரிவாரங்கள்நிறைய எல்லா சுபங்களும் ஒருங்கு சேர்ந்த ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸ்ரீசந்நிதியில் ஸ்ரீ குருவாரத்தில்ஸ்ரீ லோககுருஸ்வாமிகள் ஓர் அனுக்ரஹஸ்ரீமுகத்தைச் சாதுசிஷ்டர்கள்நிறைந்த திருக்கூட்டத்தில்என்றும் உலகத்தில்ஜன்மசோத்தாரணத்தொழிலுடைய இப்பிரவித்தைக்கே உரியது. இவ்விஷயசர்வாதிகாரம் எனவும் இக்கல்வழித்தவத்தவஞான பரமேசுரன்திருவருளால் ஓங்கிவளரும் எனவும் தைரியஞ்சொல்லி அனுக்கிரகித்துப்பல பத்திராக்ஷதைகளுடன் பண்டிதர்க்குரிய மரியாதையுடன் கொடுத்தருளினார்கள். பாருங்கள்! ஜகதுபகாரத்தில் ஜகத்குருக்களது பிரவிர்த்தியை. இவ்வித பிரவிர்த்தியவர்களுக்குரியதேயாயினும் அதை எவரும் கைக்கொண்டு நடத்தாத இக்காலத்தில் அவர்கள் தூய்மையே முன்வந்தது. முன்னம உலகெலாம் புத்தர்காடாக அத்திருவருளே அன்று காத்தது. இன்றும் அதுவே பொதுவில் காக்கும். அசூயைபட்டழிபவர் ஒழிக. அவர் ஏதேனும் சொல்வதையும் உலகத்துக்குபகாரலேசமின்றி வீண்பிடிவாதத்தோடு அவர்பெரியவர் இவர் சிறியவர் என்பதாதிகலமொழிகளால் பல பத்திரிகைகளைநிரப்புவதையும்யாம்ஏதும்கவனிக்கவேண்டியதவசியம் என்றெதுக்கினும். உபகாரம் உண்மையாசாரம் இது அம்மடாதிபதியிடமிருந்து கொண்டதையறியாதார் எவர். மற்ற மடாதிபதிகள் தத்தம் மதங்களையாவது தேசம் எங்கும்பரவச்செய்துவருகிறார்களா! இல்லையே. இப்பொழுது ஆசாரியர்கள் கொள்கை அத்துவிதமே பிரசங்கிக்கப்படவேண்டும். மற்ற உள்மதங்களைக்கண்டிக்கவேண்டுமென்பதல்ல. எவ்விதத்துவெளியில் பாஹியமதங்களைஒழித்து வேதவிச்வாசம்வருணாசிரமசிரத்தைபரமேசுரபக்தி ஜன்மாந்தரலோகாந்தர நம்பிக்கை இவைகளைஜனங்களுக்குண்டாக்கவேண்டும்என்பதே அவர்கள்கருத்து. இச்சங்கராசாரியர்கள் அனுக்கிரகித்த நாமதேயம்"ஆஸ்திகமதோஜ்ஜீவினி"என்பதுமேற்கண்ட விவஸ்தைப்படி வேலையாரம்பித்து விஜயவருடத்துவக்கத்திற்றுன் அதற்கெனநிகழும்நந்தனஹபங்குனிமீ ஏழாந்தேதியன்றே பண்டிதர்களை நியமிக்கப்போகிறார்கள். அவர்களுக்குசிதச் சம்பளமும் ஏற்படுத்தப்படும். கேட்பவர்களுக்கு இதன் விவரம எழுதப்படும். ஆயின் எவரேனும் தமிழ் தெலுங்கு கன்னடங்களில் பிரசங்கிகளாக விரும்பினல் மாசிமாதம 25உக்குள் யோக்கியதாபத்திரிகையுடன விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். இவ்வளவுபெருமையுடன் நமது பத்திரிகைவிஜயத்துடன் விஜயவருடமென்னும் தனது ஸத்தமவருடத்தை நமது ப்ரம்மவித்யை அடைகின்றாள். இவள் எவ்வளவு அனுபந்தங்கள் போட்டுப் பருத்தும் பலவிஷயங்களை மிகுதிவைத்தமை பற்றி 24-சேமபாகளுடன் பூர்த்திபடையாது 25 சஞ்சிகைகளுடன் பூர்த்திபெறுவள். ஏழாம்வருடம் முதற்சஞ்சிகை விஜயவருடம் சித்திரைப்பூர்ணிமையில் வெளிவரும். ஆயின் நடுவில் சபைவிஷயத்தைப்பற்றி வேண்டிய முயற்சிசெய்ப்பதால், பத்திரிகாசிரியர்கள் ஒருமாதகாலம

Koviloor Digital Library

[illegible]

தாமதித்தருளி மேலும் பத்திரிகை விருத்திக்கவும் நன்மத நல்லொழுக்கங்கள் பரகவும் பத்திராதிபர் பத்திரிகைக்காக ஆரியரிடம விஞ்ஞாபித்துக்கொள்ளுகிறார்.

சுபம்.

ஓர்விஞ்ஞாபனம்.

இத்தென்னாட்டில இவ்வருடம் ஆடி ஆவணி புரட்டாசிமீ ங்களில் ஒருதிவலைபளவும் மழைபெய்யவில்லை. சிலவிடம் பெய்தமழையும் போதுமானதாகாமையால், பயிர்கள் செழிக்கவில்லை. இவ்விதம் பெரமாத்திரையில் கார்ப்பருவம ஒழிந்தது. இத்தென்னாட்டிலோ இயற்கையிலே கார்ப்பருவம் சென்றபிறகே கூதிர்ப்பருவத்திற்றான் மழைபொழிவது வழக்கம். இஃதொன்றே துர்பிக்ஷத்துக்குப்போதுமானது. வேறு தேசங்களில வருஷாகாலத்துக்குமுன் பூமியில் விதைத்த விதைகள் மழைகாலத்தில் பெய்யும் மழையால்முளைத்துமிகவும் பெருகிவரும். ஆடி ஆவணி புரட்டாசிமீ ங்களில் விதைக்கக்கூடிய பயிர்கள் ஐப்பசி கார்த்திகைமீ ங்களில் விதைத்தால் பயனில்லையென வேளாண்மையறிந்தவர் சொலவார். மழைப்பருவத்துக்கு மழையில்லை. சரத்காலத்தும் இரண்டொரு தினம் சில மின்னல்கள் தோன்றிக்கதிரவன் ஒளியிலைறக்கியமாயின. வருணன் கிருபை சிறிதும் கிடைக்காதுபற்றி அந்தோ! ஒருதினமாவது துர்தினமில்லை. அதாவது மழையிலலை. இத்தேசத்துச்சழனிகள் படுபாட்டையாதென்றுரைப்போம். கேளுங்கள்! அனேகவிடங்களில் உழுது புழுதியாய்க்கிடக்கின்றன. சிலவிடங்களில் விதை விதைபாசலேயிருக்கின்றது. சிலவிடம் உழவேயில்லை. நஞ்சைகளாயுள்ள அனேக நிலங்கள் வரகு எள்ளுமுதலியபுஞ்சைத்தானியங்கள் போடப்பட்டன. அனேகமாய் நிலங்கள் தன்னினத்துக்கு விரோதியான விதையே விதைக்கப்பெற்றிருக்கின்றன. இதுவும் நிற்க, மழையின்மையின் கொடுமை இதுமட்டோ! சில கிராமங்களில் மனிதர்க்குக் குடிப்பதற்குத் தண்ணீர் அருமையானால் அவர் மூழ்கவும் அவர் சாதிக்கடனைக்கழிக்கவும் வஸ்திரங்களைத்துவைக்கவுமே படும் சங்கடம் கணக்கிலடங்காது. இங்ஙனமானால் இவர் பயிரிடுவது எவ்விதம்.கால்நடைகள் இவருக்கும் கீழான நிலையில் குடிக்கத்தண்ணீரற்றுத்தவிக்கின்றன. திருநட்டதிசைப்பட்டுப் பலவிடம் இருக்கும் பொருளைக்காப்பாற்றுவது மிகவருமையாகவிருக்கின்றது. அனேகவிடங்களில் அனேக ஜனங்கள் கிழங்குகளையும் கனிகளையும தின்று கலியிலும் கிருதயுகநடையைப்பெற்ற ரிஷிகளானார்கள். பயிரிடுவோரும் கால்நடைகளுக்குத்தீனியின்மையால் ஆறாத்துயரம்அடைகிறார்கள். எங்கும் பூர்ணமான விளைவிலலை. நல்லநதிகள் பாயுமிடத்தும் தண்ணீர் அகப்படுவது கஷ்டமாயிற்று. இத்தென்னாட்டில் கம்பு கேழ்வரகு தினைமுதலியபல புஞ்சைத்தானியங்களே உண்டாவது பூமியின் இயல்பு. அவைகளே இத்தேசத்துக்கீழ்ஜாதிஜனங்களுக்கு மிகவுபயோகம். இவ்வருடம் அவைகளும் மிகக்குறைந்தமையால் கீழ்ஜாதியாரும் படும்பெருங்கஷ்டம் பார்க்கமுடியவில்லை. முதல் முதலாக அவரே வறுமை பொறுக்காது இன்னாடுவிட்டு மலைநாடடைந்தனர். அங்கு எக்காலத்தும் ஸ்ரீபதனந்தபத்மநாபன் திருவருளால் அந்தணர்க் கன்னங்கிடைக்கும்

[illegible]

இதேமாதிரி இனியும் இரண்டு மூன்று மாதங்கள் இருந்தால்உலகம் எப்பாடுபடுமோவென்றுநினைக்குமபொழுதெல்லாம் மனது சஞ்சலமுறுகின்றது. இனி இத்தேசத்தில் தற்காலம் தோன்றும பலதுர்க்குணங்களைஎடுத்துரைக்க என்னால்முடியாது ஆயினும் சிறிது கூறுவாம. நமதுதேசத்தில இவ்விதக்கொடுமை அவ்வப்பொழுது சம்பவிக்கின்றது. இதற்குக்காரணம் யாது என நினைத்துப்பார்த்ததில் எமது புத்திபிற்பட்டதை வெளியிடுவாம். சிலர்மட்டும், வேளாண்மைசெய்பவர்சரிவரச்செய்யாமையால்இது சம்பவிப்பதென்பர். அவருரைமதிக்கத்தக்கதல்ல. எத்துணைவிதம் பூமியின் இயல்பறிந்து அதற்குரம்போட்டுவேலைசெய்து உழுது விதைத்தாலும் அதில் மழைத்துளி படாது விளைவது முடியாது. ஆகவே இதற்குக்காரணம் மழையின்மை. மழையின்மைக்குக்காரணம் இன்னதெனப்புலப்படவில்லையாயினும், நாம நம்பும் காரணமிரண்டனுள் ஒன்றுவேதவேதாந்தங்களான கருமஞானகாண்டங்களின் இயற்பயன்களையறிந்து அனுஷ்டிக்காமை.இரண்டாவது இத்தேசத்தில் கணக்கில்லாது நடக்கும் கொடிய கோஹத்தியே, ஏனெனில் சிலநீசர்கள் அவைகளைக்கொன்றுவிடுகிறார்கள். சில நீசர்கள் இது மலட்டுமாடெனக் கூறிஏரில்கட்டி உழுதுவருகிறார்கள். மற்றும் சிலமாபாதகர் சிலகாலம் பசுவை நன்றாகப்போஷித்து அதனாலுண்டான பால் தயிர் நெய்களை உண்டு திண்டனாய்த் திமிரேறி அப்பசு முதுமைபெற்றவுடன் இனி இதனாலாவது ஒன்றும் இல்லையென்று செய்ந்நன்றிசிறிதுமன்றிச்சொற்பதுகைக்காசைப்பட்டு அந்தோ! சிவ! சிவ!! கொடுங்கொலைபாளிகளிடம் கொடுத்துவிடுகிறார்கள். அது தனக்குச் செய்தவுபகாரத்தைச் சிறிதும் நினையாது இவ்விதம் செய்வதா உத்தமனியல். ஐயோ! இப்ப சுஎவ்வளவுபகாரம் செய்தது? அம்மம்ம! இவர் கொடுமை சாலவியக்கத்தக்கது. ஐய! கோசம்ரக்ஷணமென்பது மிகச்சிறந்தபுண்ணியம். கோக்களால்செய்யப்படும் உபகாரம உலகத்துக்கதிகம். அவைகளில் விசேஷமாய் பால் தயிர் நெய் முதலிய வஸ்துக்கள் தேகத்துக்கெவ்வளவோ ஆரோக்கியத்தைக்கொடுக்கின்றன. அதுமட்டோ! பஞ்சகவியமுதலிய அனேக வைதிககாரியங்களுக்கும்உபயோகமாவதாலஇது இருமைப்பயனையும் கொடுக்கும் என்பது சொல்லாதமையும். பசுக்கள் கபிலைமுதலிய பலவேற்றுமைகளைப் பெற்றுயிற்றலால் ஒவ்வொருவிதப்பசுக்களின்பால் ஒவ்வொருவிதப்பிணியைநீக்குமென வைத்தியர்கள் கண்டார்கள். நமதுதேசத்தில் உள்ள சமஸ்தக்ஷேமத்தையும் விருத்திசெய்வது பசுக்கூட்டங்களன்றோ? கன்றுகளால் இத்தேசத்தில் வண்டிகளுக்கும் பாரங்களுக்கும் உண்டாகுமஉபகாரம் அனந்தம் அதிகம் சொல்வதிற்பயன் ஏதுமில்லை. இத்தேசத்தில் நடக்கும் கோவதையாற்றான் மழையின்மைமுதலிய மகாபீடைகள் உண்டாயின. உண்டாகின்றன. உண்டாவன. எங்கு கோக்கள் விருத்தியாகின்றனவோ அங்கு லக்ஷ்மீவிலாசம்உண்டாகத்தடையில்லை. ஆதலாற்றான் ஸ்ரீமத் ராமாயணத்தில்'வித்யதே கோஷு ஸம்பந்நம்' என்று "கோக்களிருக்கின்றவிடம் சம்பத்துண்டாம"எனக்கூறப்பட்டது.

வரும்.

திருவேங்கிடம். திருமலைசாஸ்திரி.

Koviloor Digital Library

ஓம்

SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்

அநுபந்தம்

புத்தகம் கா] சிதம்பரம். நந்தன ௵ தை ௴ உகவ [இலக்கம்-உச

திராவிடப்பிரகாசிகை.

ஞானாமிர்த மறுப்பு.

சகo-ம்பக்கத்தொடர்ச்சி.

மேற்பகுதியில் குறித்தவைந்து சூத்திரங்களுந்தொடர்ந்து ஒரேபிரகரணத்தில் ஆசிரியர்தாமேனுநவிதி "ஜாவிபாஷவஸ்யுக்தவசேந" எனறுகூறி அதைப்பூர்வபக்ஷஞ்செய்து "தடியிஷ்யா ஸஞ்ஞாப்ரமாணத்வாத்" என்பதாதிநான்கு சூத்திரங்கள் அதற்குச்சமாதானமாக இவ்விஷயங்களை உலகவழக்காலே எவரும் எளிதில்அறிவாராகலே இதற்கெனச் சூத்திரம்ஒன்றுவேண்டுவதில்லை என்றும் "ப்ரதாநப்ரத்யயார்த்தவசநம்" என்பதால்தார்கிகர்முதலியோர்மதத்தைமறுத்தும் தமதபிப்பிராயம்சொற்சுருங்கவும் உலகத்தால் எளிதிலறியப்படா அருமபொருளைவிளக்கவும் சாஸ்திரம் வேண்டுமேயன்றிவேறெதற்கும் இல்லை என்பதென்றும்வெளியிட்டார் ஆசிரியர். அது தொல்லாசிரியர் வசனத்தைமறுதிட்டதாக எக்காரணத்தால் கூறினரோ?எக்கமாபாடியத்திற்கண்டனரோ?எவர் இப்பொருள் இச்சூத்திரங்களிலமைந்தனவென இவர்க்குபதேசித்தனரோ? அறியேம். இவ்வைந்து சூத்திரங்களிலும்எத்தொல்லாசிரியர்பெயரும்இல்லை. எவர்வசனமும் அநுவதித்து மறுக்கப்படவில்லை. அச்சூத்திரங்களில் அநுவதிக்கப்பட்ட விஷயங்கள் பெருவழக்கால் அறிபற்பாலனவான விஷயங்களில் என்னில் சூத்திரச்செலவுஎனச்சொல்லுக்குச்சங்கிரகஞ்செய்தருளின பாணினிமுனிவரை 'முன்னோர்கொள்கையை மறுத்துவேறு விதிகூறியவர்' எனஇவ்விதம்கூறுவதுவடமொழிவழக்கறியார்உரை' எனபதில் தடைஏதுமில்லை. தாம்சொன்னபடிஇதுதொல்லாசிரியர்சூத்திரமஅதைஇச்சூத்திரத்தால் ஆசிரியர் பாணினியார் எடுத்தோதிமறுத்து வேறுய இங்ஙவிதிகூறினர்'எனஒன்றெடுத்துக்காட்ட முடியாது.வைதிகசைவச்சொல்லை ஆகமங்களிற்காணாது புதிய ஆசிரியரைத்தேடிபெடுத்ததும்போல், தங்கொள்கைக்குச்சிறிதும் சம்பந்தமற்றதும்எதிர்மறைப்பொருள்கொண்டதுமானசூத்திரங்களைஎழுதிவிட்டடைசிரப்பிபதும்'வடமொழிவழக்கறியாமை'யை நன்குபுலப்படுத்தியமையால்இக்கூற்றெல்லாம்மேற்கூறியவுரையே எனயாம்கூசாதுரைத்திடுவோம். இனி இவர்கொண்டபடி ஆசிரியர் பதஞ்சலியார் மாபாடியத்துள்ளே எங்காயினும் ஆசிரியர் பாணினியார் தொல்லாசிரியர் இன்னவா சூத்திரத்தை இங்கு சுட்டி மறுத்தார் என்றாவது குறித்துமறுத்தார் என்றாவது எழுதியிருக்குமப்பிரமாணவசனத்தைக்காட்டிட இவர்வேண்டுமளவு காலம்கொடுத்திடுவோம்; காட்டட்டும் பார்ப்போம். இனி ஆசிரியர் பதஞ்சலியார் அறியாதஇவ்வுண்மை எவரோ அறிந்தார் என்பது உத்தரமகாராஜாவிரியம்போல் மடந்தையர்முன்னே மணம்பெறுமெனக. மேலே வார்த்திகக்காரர சங்கதியையும் ஆராய்ந்துஅங்கு இவர்காட்டியதும் குற்றமுள்ளதே என விளக்கிடுவாம். அவர் எழுதியவார்த்திகங்கள் "விஶாஷ்ய ப்ரகரணே தீபஸ்யஶ்ருதத்வாதந்ப்யாநம்" வ்ருஜே வ்ருஜ்ய விஶாஷவாதக்ஷ்யம் "உதாஹரணதாவாஷ்ப்ரகரணேஷாவஷ்ய ய வஷயஶேஷவஷாவேஷித்வாச்ச" "ஸாமோயஷ்வோயாஸநீயவாதஃ" என்மொருபகுதி காஷ்ஷ்யேஷ காஞ்ஜாயாஷ்டவக்த்வம் நளகாகாண ஸ்தஷ்யேர்மாநுவ ஜ்ஞேஷ்வக்திவாதம்" என்று இரண்டுவார்த்திகம்ஒருபகுதி. இவற்றுள முற்பகுதியால் ஆசிரியர் பாணினியார் குறைகூறினதை எடுத்துக்காட்டினார்என்றும் பிற்பகுதிகளால் ஸ்யத்யாஷாஸூதே விடீ ஶேஷ்ஷஸேஷ்டிஷ்ஷாஷ்க்ஷ வேவிஷாஷாரஞ்ணிஷ" என்னுஞ்சூத்திரங்களைத்திருத்தினர் என்றும் கூறுகின்றார். பிறகு; இங்கு இவர்முற்கூறியது அவர் (பாணினி) சூத்திரங்களிற்சிலவற்றைஆசிரியர் வாருசியார் எடுத்தோதிமறுத்து வேறுவிதிகூறுவர்' என்பது. இதையேயாம் 'வடமொழிவழக்கறியார்உரை' என்றது. ஆயின் இவர்காட்டிய முற்பகுதிபிற்பகுதிகளில் ஏதேனும் அவர் சூத்திரத்தை எடுத்து மறுத்தாரில்லை. எங்ஙனம எனில் கூறுதும். முற்பகுதியிற்காட்டிய வார்த்திகங்கள் ஆசிரியர் கூறிய விலக்கணத்தகப்படாத சிலஇலக்கியங்களை எடுத்துக்காட்டின. இதனால் அவர்சொன்னதை மறுத்ததாக எவ்விதம் ஏற்படும். காலபதால் இலக்கியங்கள் விருத்திக்க அவைகளையும்பின்னாசிரியர்சேர்ப்பதுசிதம். இரண்டாம் பகுதியில் "ப்ரக்ருதாஸ்" என்னும் சொல்ஆகுபெயராகவே அப்பொருளைக்குறிப்பதாய் அதே சூத்திரத்தில் மாபாடியவிவரணதைக் கண்டவர் அறிந்திருப்பார். ஆயின் இந்தவார்த்திகம் "ப்ரக்ருதாஸ்" என்னும் சொல், பொருள் விளக்குவதேயன்றி அதைமறுப்பதில்லை. மற்ற 'ஶளகாகாநந' என்றது வார்த்திகமெனவிவர் உதகரித்ததுமயக்கத்தாற்றான். அவ்வுண்மை அச்சூத்திரத்துள்ள மாபாடியம் படித்தாலன்றி வெளியாகாது. அது அச்சூத்திரத்துக்கு மாபாடியகாரர் செய்திட்டபொருளை அநுசரித்தபின் காசிகைசெய்த ஜயாதித்யாசாரியர் எழுதியவாக்கியம். அது பிரமாணமாதலேமு

Koviloor Digital Library

தவிர்ச்சம்சயம். அது மாபாடியத்துக்கு விரோதமில்வழியே பிரமாணம். இதை வார்த்திகமெனவெடுத்து எழுதியதும் 'வடமொழிவழக்கறியார் உரையே'. இசனுல் வார்த்திகஞ் செய்தருளிய வாசிரியர் வரருசியார் ஆசிரியர் பாணினியார் அருளிய திவ்வியசூத்திரங்களை மறுத்தாரெனமருண்மொழிந்ததும் 'வடமொழிவழக்கறியார் உரை'யென்க. மேல் மாபாடியக்கடலில் இக்காவலா இறங்கிதசொல்லாசிரியர் சூத்திரவார்த்திக விரோதச்சிப்பிகளை எடுக்குவழங்கும் விரோதத்தைக்காணபாம். காவலர் ஆசிரியர் வரருசியார் திருவாக்கெலலாம சூத்திரங்களென றெண்ணி 'சூத்திரங்களால் திருத்தி' என்றார். ஆயினும் ஏன் இவ்வாறு மயங்கிக்கூறினீர்? எவ்வட நூலாசிரியர் வழக்கில் வார்த்திகங்களைச் சூத்திரங்கள் எனக்கண்டீர்? என வினுவிருல், யாம் பெரியோர்சொல்லெலாற்றையும் சூத்திரம் எனவைத்துக்கொண்டு சூத்திரம் எனப்பிரயோகித்தோம். இவ்வுண்மையறியாது இவ்வினைக்கழத்தியவர் ———ரென்று 'வேதவழங்கு'என்றவிடம்செய்த்தியவினவுக்குச் சமாதானம் அளித்திட்டதுபோல் ஏதேனும் திட்டுவார். உலகத்தில் எவரும் 'குடக்கைக்கண்டேன்' எனச்சொல்லவேண்டியவிடம்'படத்தைக்கண்டேன்' எனபவனை பண்டிதமணியாவனும் மண்ணிலுண்டாகும. பொருள் எல்லாம் குடமெனக்கருதிப்பிரயோகித்தாரிவர் எனஎண்ணிநீர் ஏன் குடத்தைப்படமென்றீர்? என வினவாநிரான். அவனகமது காவலரிடமம் ப்பட்டம்பெறுமலும் மேபாகான். நிற்க. ஆசிரியர் பதஞ்சலியார் ஓரோரிடங்களில் 'அவ்விருவரையும் எடுத்தோதி மறுத்து வேறுவிதிகூறுவர்' என்று தமது வாக்கியத்தையாவது தக்கநியாயங்களால் நிலைநாட்டினுரோவென விசாரிப்பாம். இத்தமிழ் வல்லார் மாபாடியத்துள் சூத்திரவார்த்திக விரோதமுள்ளவிடமாகக்காட்டியது மூவறு பகுதிகளில ஆறிடங்கள். அவற்றுள் சூத்திரவிரோதம கண்டதாகக்குறித்தது மூன்று; வரருசியாரை மறுத்ததாக மூன்று; அவைகள் வருமாறு:— 'விணைச்சொ தீர்வியுராகுருஸ்யாம் 'நவஹா வீஹள'' 'விஸு ஆஹண வுநாதேகு தமோவயஸ்ய' இம்மூன்றும் பாணினிமுனிவர் சூத்திரங்களை மறுத்து வேறுவிதிகூறியவிடமாம். 'ஸ்ஹாதிஷு' 'விபகவ் தாஸிதாகுணாக்யா: ஸைகாஷாஸ்வாஸ்யாகுஷ்யகெ' என்பவைவாகிய இம்மூன்றும் ஆசிரியர வரருசியாரை மறுத்திட்டதற்குத்திருஷடாந்தமாம். இவை ஆறனுள் 'வியூஷ ஹணபுநாதேகு தமோவயஸ்ய'என்றதனுல்சூத்திரக்காரர்ஒரு இலக்கணத்தில் ஒருபொருள் கூறும பதங்கள் இரண்டைப்பிரயோகித்தது உபயோகமில்லை எனப்பொருள் ஆசிரியர்கருத்தாகின்றதேயன்றி(இவர் எங்கும சொற்கருத்தவுரைக்கும இயல்பினராதலின்)வேறே குற்றம் பயக்கும் சொல்லேதுமில்லை. அன்றி இது வடவிலக்கணம் தென்மொழியிலக்கணத்தைப்போல் ஒருநிலையின்றி முன்னுசிரியர் கண்டதைப்பின்னுசிரியர் மறுத்து வேறு இலக்கியம் நிறுத்திடலால் அவ்வளவு உயர்வுபெற்றதில்லையெனச்சொன்னதையாம்வடமொழிவழக்கறியார் உரையென்றோமாக, அதற்குஇது சமாதானமாவதெப்படி? இச்சொற்களால் சூத்திரவார்த்திகங்களில்கிடைத்த எவ்விலக்கியத்தை மறுத்து ஆசிரியர் வேறு விதிகூறினர்! நிற்க; வேறு என்ன இவற்றின் பொருள் என்பீரேல் கூறுதும. இவ்விலக்கணம் என்றும் நிலைபெற்று வழங்கவேண்டி. கடவுளது பூர்ணனுக்கிரகம்பெற்று வேதமபோல் அதனங்கமாக எல்லோரும் கொண்டாடும் பதம்பெற்று நிற்றலால் இதில்எச்சொல்லும்அதிகமெனவாவதுகுறைவு எனவாவது சொல்லக்கூடாதாயினும் புத்திமான்கள் சாஸ்திரவாராய்ச்சிசெய்யும் வழியைக்காட்டவெழுந்தருளியபதஞ்சலிமுனிவர் அச்சொல்லிருமுறைவந்தது குற்றம் என்றமையன்றிவேறெவ்விதத்துமமுன்னோர் கூறியவிலக்கிய இலக்கணவிஷயங்களில் ஏதும்புதியதாய்க்கூறுதொழிந்தார் என்பது திண்ணம். ஆதலாற்ருன் அவ்வாசிரியர் பலவிடங்களில் தாம் புதுவழிகள் பல கூறி பிறகு'இது சித்திக்குமாயினும் ஆசானியம் ஆகும் என விட்டோம்' 'ஸிஷ்யகெந்வஹவாணிமீயதேஹயதி' என்று கூறிமொழிந்திட்டார். மேலும் சில விலக்கியங்களை இப்படியோ அப்படியோ வென வையமுற்றுப்பிறகு 'யயாஸுதுணவேவியகெ'யாண்டும் எமக்குபயோகத்தில் அகப்படாத விலக்கியங்களை (ப்பாணினி) சூத்திரங்களாற்ருன் அறியவேண்டும் என்றுமொழிந்தார். மேலும் இப்பதஞ்சலிமுனிவர் ஆசிரியர் பாணினியார் சூத்திரங்களில் எட்டுணையும பயனில சொல்லில்லையெனக் குறித்த பல வசனங்களையா முன்னமே எடுத்துக்காட்டியது நமது நாவலராலும் மறுக்கப்படாதில்லையில் நிற்றலால் அவற்றை யாம் பின்னெடுக்க வேண்டுவதிலலை. நிற்க; இங்கு எடுத்துக்காட்டியவிஷயங்களாவதுண்மையோவென்பதைஈண்டு விசாரிப்பாம். விசாரித்திடில் அவ்வளவும [உண்மை சொன்னல் கோபம் வரும்] வடமொழிவழக்கறியாருரையே. பாருங்கள்! முதலில் மாபாடியத்தில் நமதுநாவலர் விசாரித்தவழகை! 'ஸ்ஹாதிஷு' என்னும சூத்திரத்தை ஆசிரியர் வரருசியார் மறுத்தார என்றும் அதை மறுத்து ஆசிரியர் பதஞ்சலியார் நிறுத்தினுர் என்றும் இவர் கூறுகின்ருர். இதுமுற்றிலும் வடமொழிவழக்கறியார்உரை. என்னை எனில், இச்சூத்திரம் அஷ்டாத்தியாயியில் ஆருவது அத்தியாயம் முதலாம்பாதம் எண்பத்தைந்தாவது சூத்திரம். இதன் வியாக்கியானமிட்ட வாசிரியர் பதஞ்சலியார் இவற்றின் பயனை வார்த்திகக்காரர் கூறியபடியே கூறிநிற்கின்ருர். அந்தச்சூத்திரத்துக்கு சற்சாவார்த்திகம[12] பன்னிரண்டுளது. அவற்றுள் எது அந்த சூத்திரத்தை மறுத்தது? எதை ஆசிரியர் பதஞ்சலியார் மறுத்து மீண்டும் சூத்திரத்தை நிறுத்தினுர்எனத் தேடிப்பார்த்தும்மாபாடியத்திலாவது அதனுரைகளிலாவது மற்றெந்த வியாகரண கிரந்தத்திலாவது அகப்படாமையால் இது வடமொழிவழக்கறியார் உரையேயென்றெருதுக்கிடுக. மேல் 'நவஹா வீஹள'என்னுஞ்சூத்திரத்துக்குச் சித்தாந்த கௌமுதியினுள் வெள்ளிட்வார்த்திகை விரித்தபொருளைநம்பி நமது நாவலர், இச்சூத்திரம மாபாடியத்தில் மறுக்கப்பட்டதென்றும் பாடியக்காரர் சூத்திரசூத்திக்குமாறுகஒரிலக்கியம் ஒப்பினுர் என்றும்எடுத்து விரித்திட்டார். அதேயிடத்துக்

Koviloor Digital Library

கு உரைசெய்த ஸ்ரீநாகேசபட்டர்சப்தேந்துசேகரத்தையும் மாபாடிய விவரணம் முதலிய வடவியற்பெருநூல்களையும் கண்டாராதலால் அந்த சூத்திரத்துக்குச் சித்தாந்தகௌமுதி நூலுடையாரும் காசிகாவிருத்தியுடையாரும் செய்தபொருள்மிகப்பிழை எனவுரியாதொழியார். ஆயின் இதுவும் வடமொழிவழக்கறியார் உரையே. அதுமட்டோ! 'விஸர்ஜநீயஸ்ய ஸ:' என்னும் சூத்திரத்தில் [ஏதோசிலபதங்களை ஆசிரியர் வாருசியார் மறுத்திட்டாமேயானுர்] ஆசிரியர் வாருசியார் மறுத்திடாதுதங்களை மறுத்திட்டனர் என்று பயங்கிட்டார். இதுவும் வடமொழிவழக்கறியார் உரையே எனக் காட்டுவோம். இச்சூத்திரம் அஷ்டாத்தியாயி ஆறுவது அத்தியாயம் நான்காம் பாதம் [93] தொண்ணூற்றுமூன்றுவது. இவர் கூறியவாறு இசன்பாடியத்தில் எதாமில்லை? மற்று 'விஸர்ஜநீயஸ்ய ஸ:' என்று ஓருவார்த்திகம் இச்சூத்திரத்தில் இன்னும் சில சொற்களைச்சேர்க்கவேண்டும் என்றிருக்க அதைப்பாடியக்காரர் அச்சூத்திரத்தில் அப்பொருளும்சேர்த்திடக்கூடுமாகவே 'அலா நுவ்ருத்தேஸ்ஸித்தம்' என்று வேறே சேர்க்கவேண்டியநலமியில்லை அதுவே பூர்ணம் என்றனர். இச்சூத்திரத்திற்கு மாபாடியம் இப்படியிருக்க அதை மாற்றி ஏதோ 'வாருசியார் மறுத்திடாத சில பதங்களைப்பாடியக்காரர் மறுத்தார்' எனச்சொன்னதும் 'வடமொழிவழக்கறியார் உரையே. விஸர்ஜநீயஸ்ய ஸ:' என்பதைப்பற்றி முன்னமே விசாரித்திட்டாம். ஸ்ரீயுக்தி தாவிதாக்ஷிணாத்யா: என்றது வாருசியார்க்கு இகழ்ச்சி என்றார். இது மாபாபாடியத்தொடக்கத்திலே முதல்வார்த்திகத்தின் பொருளுரைக்குமிடமுள்ளது. இங்கு 'லோகவேதயோ:' என்று தனிச்சொற்களை உபயோகிக்கக்கூடுமாயினும் "லௌகிகவைதிகேஷு" என்றது எதுபற்றியெனா ஓர் ஆசங்கைநிகழ்த்தி 'ஸ்ரீயுக்தி தாவிதாக்ஷிணாத்யா:' தென்னாட்டவர்தத்திதத்தையுபயோகிப்பதில் மிகவாசையுள்ளார் என்னும் சொல்லணியில் இத்தென்னாட்டவர்க்காசையதிகம் என்றதனால் 'தத்திதப்ரியோ வையாகரண:' தத்திதமறிந்தவனே வியாகாணம் அறிந்தவர் என்பதால் அவரைப் புகழ்ந்ததே. அதை இகழ்ச்சியென்றது வடமொழிச்சொற்சுவையறியாமையால் நிகழ்ந்தவாதமாகவே 'வடமொழிவழக்கறியாருரையே. லோபஸ்ஸாகல்யஸ்ய ஸம்ஜ்ஞாத்ருஷ்டே' என்றதும் இகழ்ச்சியென்பதும் வடமொழிவழக்கறியார் உரையே எனக்காட்டுவோம். இத்தவாக்கியம் மாபாடியம் இரண்டாவதான்னிகத்தில் 'ஐஔச்' என்னும் சூத்திரத்துள்ள 'ஔ' என்னும் எழுத்துக்குப்பிரயோஜனம்கூறுமிடம் இருக்கின்றது. அங்கு அனேக சூத்திரங்களைமாற்றிப் பலபொருள்கொண்டாலன்றி இது பயனிலதெனச்சொல்லமுடியாது (இதுசர்வஞ்ஞான கண்ணுசலார் அருளிய சூத்திரம் பதினான்கனுள் இரண்டாம் சூத்திரமாகவே) இதில் இச்சிறுவர்ணத்தின் பிரயோஜனத்தை அடையவேண்டி 'மேச்சிற்புகச்வெட்டிக்குருவி பிடிப்பதுபோல',என்று பிரமத்தையதிகம்காட்டி ஒழிச்சவசனம். இதை இகழ்ச்சியெனக்கொண்டது 'வடமொழிவழக்கறியார் உரை என்பதில் தடை ஏதுமில்லை. அல்லது வடமொழிக்கோர் குற்றங்கூறவேண்டுமென அவர்நினைத்ததும் தவறு எனலாம்.

இனி அவரிடமும் ஏதும் குற்றமில்லை. அவர்தாம் எழுதியது மறுக்கப்பட்டமையான் அதற்கு ஏதேனும் ஒரு விடை எழுதக்கருதி எவராயினும் ஒரு பண்டிதரைக்கேட்டிருக்கலாம். அவர் வடமொழியிலக்கணத்தில் எவ்வளவு பயிற்சியுள்ளவரோ இவர்க்குத்தெரியாது. சாஸ்திரி என்றுதல் ஆசாரியர் என்றுதல பெயர் மாத்திரையால் கவிராயர் கூட்டசதநித்த பிள்ளையைக்கவியெனநம்பினார்போல் நம்பி அவர்சொன்னதை எழுதிவிட்டார். அவர் எவ்விதத்தும் அந்தணராகவேயிருப்பார் எனப்பெருப்பான்மையில் ஊகிக்கவேண்டியிருத்தலால் அவர்வடமொழியிலக்கணத்தினும் தென்மொழியிலக்கணத்தைச்சிறப்பிக்க ஒருப்படார். ஆயினும் நாவலரவர்கள் தாக்ஷிணியத்தால் ஏதோசிலவற்றை எழுதிக்கொடுத்திருக்கலாம். அன்று தமிழ்ப்புலமைத் தலைமைதாங்கிய தமிழாசிரியர் சிவஞானப்புலவர்சொல்லை, தமிழிலக்கணத்தைத்தநிக்கவேண்டியெழுந்த ஆர்த்தவாதம் என்றெருதுக்கிடாது சத்தியம் என நம்பி முன்னகப்பட்டுக்கொண்டதுபோல் இன்னும் எவர் சொல்லையோநம்பி அகப்பட்டார். ஆயின் இவற்றிற்கெல்லாம் சமாதானம் அப்பண்டிதர் ஏதேனும் உரைத்திடுவாராயின் அன்று பார்ப்போம. இதை இவ்வளவு எழுதவேண்டியதில்லை; இது நல்நடையில் எழுதப்படவில்லை; இது தமிழ்வல்லாரல்லது வடமொழிவல்லார் எவருக்கும் உபயோகமில்லை என்று விட்டொழித்தாம் என்றுவது, அவரை நாம் அன்றே ஜயித்திட்டாம் என்றுவது எழுதிக்களிக்கும் வழியை இங்கும் நமது நண்பர் நாவலரைக்கொண்டிருந்தால் மிக நலமாயிருக்கும். நிற்க. இவர் ஏதோமுன்னெடுத்துக்காட்டிய விஷயங்களால் தமதுசித்தாந்தம்நிலைபெற்றதாக நம்பி நாம் எழுதியவைகளுக்கு ஏதோ சமாதானம் செய்வதுபோல் சிலவெழுதுகிறார். அவற்றையும எடுத்துமறுப்பாம். முன் ஆசிரியர் பதஞ்சலியார் பாணினிசூத்திரங்களைப் புகழ்ந்துரைத்த விஷயம் யாம் எழுதினோம. ஆகவே அதைத்தடிக்கிணங்கச் செய்துகொள்ளவேண்டி அவர் எழுதுவதாவது:—'அம்மேதல் ஆசிரியர் பதஞ்சலியார் ஆசிரியர் பாணினியார் சூத்திரங்களுள் ஓரெழுத்துமாத்திரையும் வாளாகூற்றாகாது' என்றும் 'பாணினியார் சூத்திரங்களிற்றானே இலக்கியம் சித்திப்பதறியமாட்டார், அதன்பொருட்டு வேறு சூத்திரம் வேண்டும்' என்றும் பாணினியார்சூத்திரங்கட்கு விரோதமாக எழுதப்படுவதுபிரமாணமாகாது என்றும்மாபாடியத்து ஆண்டாண்டுகூறியதனை யேயெனின், பாணினியார்அருந்தவராய்க்கறைமிடற்றிறைவன் அருளியவாற்றானே வடமொழியிலக்கணஞ்செய்தஆசிரியர் அவர்சூத்திரஉரைகடைப்பிடித்து இலக்கியமாய்தலே முறையாமென்றறிந்தவரானைபோற்றுது சிற்றுணர்வுடையபுலவர் தாந்தாம்அறிந்தவாறேகொண்டு அவர் சூத்திரங்கள் சில மிகையாம், சில குறையாம்,என்றுகுற்றங்கூறின் அது பழுதாமென்று அங்ஙனமானைதரு

Koviloor Digital Library

வாராயினர். தாம முக்குணங்களையும் கடந்துஇறையருள் முற்றுப்பெற்றுடையாராகலின்முக்குணவசத்தான்ஒரோவிடங்களில் அவ்வாசிரியாமுறைமறந்து உரைத்தனவற்றை மறுத்து முறைமைப்படவுரைத்து அவ்வாறு வழக்கு வழிப்படுத்துவாராயினர். இங்ஙனமாகலின் அநுமானுகாதுமுறையேயாம் என்க. இது வாருசியார் மாட்டும் ஒக்கும், என்பது. ஐய, நமது நண்பர் நாவலர் அவர்கள்முன் பின் முரணுகவெழுதுவது தமது நாவலிமையிபலாகக் கொண்டு அதனுற்றான் தமக்கு வைதிகசைவசிகாமணி பாசமயகோளரிமுதலிய பட்டங்கள் பட்டவாத்தனர்கள் அளித்தார் எனக்கொண்டாடித்தம்முட்டாம் களித்துத் தமது இருமொழிவன்மைபக்காட்டி இடர்ப்படுவதுவழக்காகவே இங்கு யாம் எழுதியவற்றை மறுக்கவெழும்பொழுது யாம் எழுதிபபடியே எழுதின் தமக்கு யாபாடியம தெரியாதென எவரேனும நினைத்திடுவார் என வெண்ணங்கொண்டோ அல்லது இலக்கணவழுக்களிருக்கின்றன அவைகளைத்திருத்தியிட்டேபிறகே அநுவதிக்கவேண்டுமென்றே நினைத்தோ அவைகளைத்திருத்தி எழுதுவாராயினர். ஐயோ! இவர்க்கோ வடமொழிபயிற்சிகுறைவு. அதில் இயற்பயிற்சி எங்கே யிருக்கும்? அதிலும் மாபாடியவாடையிவர்க்குஇருக்கநியாயம் ஏது? அதனுற்றான் "வஸ்து கணவஹிஸ்ஹூநுவு திவாஹ்யெ" என்ற பாடியவசனத்துக்கு யாம் எழுதிபபடி 'ஸூத்திரத்திலும்வேறுவிதிபிலக்கியச்சித்திக்கெனத்தேடுவார் என்றனதமாற்றி அதன்பொருட்டு வேறுசூத்திரம் வேண்டுப'என்றெழுதினர். இது பாடியத்துக்குப்பொருந்தாது. அங்கு வார்த்திகம்முதலியவற்றை மறுக்கவே அச்சொல் நிகழ்ந்தமையால் என்க. இனி இதற்கும் நமது நண்பர் சொல்லப்புகும் சமாதானம் ஏதெனில் "யாம் வார்த்திகம் முதலியவற்றை நினைத்தே "சூத்திரம்"எனுஞ்சொல்லிட்டோம். அவ்வுண்மையறியாது இவர் ஏதோ புலம்பினர்'என்பதே. அவ்விஷயமும் இவரியலே யாதலால் எந்தச்சொல்லுக்கு எந்தபிரகணத்தில் எந்தப்பொருள் பொருந்துமோ அதைபபொருளாகப்பார்ப்பார் அச்சொல்லைவைத்துக்கொள்ளவேண்டியதேயன்றி வேறுவிதத்தில்அவர் விஷயமறிந்து சொல்லை உபயோகிக்கமாட்டார். பொருள் பொருந்தாவிடினும் அவரிலக்கணவித்துவானுகவே சந்திமுதலிய இலக்கணப்பொருத்தமே இவர்சொற்றொடர்க்கழகு. அதுவும் ஒரோவிடம் குறையும். அது பற்றித்திருத்திவழிபழித்தார் என்றொதுக்கி விஷயத்தை நோக்குவாம். இவர் 'பதஞ்சலியார் தவத்தான்மனந்தூயராய் முக்குணங்களையும் கடந்து கறைமிடற்றிறையனுர் அருள்பெற்றுடையார் ஆகவே, அவருரையாண்டும் மெய்ந்நிலையுடையதேயாம் என்க' என்று எழுதியதற்கு யாம் அம்மகான் தானே பாணினிமுனிவர் திருவாக்கைகளைவித்திருக்க நீவிர் அதற்குக் குறைகூறியது பழியுரை எனவேமும. அதைமறுக்கவெழுமிவர் பாணினியார் அருந்தவராய் கறைமிடற்றிறைவன அருளியவாற்றானேவடமொழியிலக்கணம் செய்த ஆசிரியா' என்றார். இனிப்பாணினியாரும் இறைவன் அருள்நிறைந்ததவசியாக அவர்இயற்றிய வடவிலக்கணமும் அம்முதல்வன் அருளியவாற்றானே அமைத்துகிடக்க அதற்குக் குறைகூற இவரேனும இவராசிரியரேனும் எவ்வளவு.இதுமுனபின்முரணும் என்பதை இவர் சிறிதும் மனதில் வைக்கவில்லை போலும. எவர் 'அழுக்காற்றினுல் உள்ளடக்கினுலும உண்மைவெளிவந்தே நிலைபெறுமாதலின் வடவிலக்கணத்தை எவ்வழிகுறைத்துரைக்கவிவர்முயன்றிடினும அந்தரியாமி ஆணையால் இவர் நாஉண்மையைவிளக்கினமது வடவியலாசிரியர் இறைவனிட்ட வழிமாறு இலக்கணம் செய்தார்' என இவரைஒப்பச்செய்தது. இவ்விதம்இறைவனருளியவாறேசெய்யப்பட்ட விலக்கணத்தைவாருசியாாதல் ஆசிரியர் பதஞ்சலியாாதல் மறுத்திட்டார் என எவ்வளவு இவர் எடுத்தெடுத்துரைத்திடினும் 'பாகற்காயைப் பூனைகொண்டுபோயிற்றென்றால கேட்போர்க்குப் புத்திஎங்கே' என்படி இறையனுர் வாக்கை மூலமாகக் கொண்டு பாணினிமுனிவர் முகமலர்ந்தசூத்திரங்கள் அவ்விறைவனிலும் வலல எவரால் மறுக்கப்படும் என்பதை அறிஞா அறியாதொழியார். இவைஎல்லாம் அவாகள் நியாயகோடிகளுள்சிலகோடிகள்போலும். மேலும் அவற்றின்மிகை குறைகூறுபவர் 'சிற்றுணர்வுடையார்'என்றும் 'இறைவனடியார் ஆணைமீறும் அதிபாதக'மென்றும் இவரே எடுத்துக்காட்டிப் பிறகுதாமே அதற்கு இலக்காய் அச்சூத்திரங்களுள் குறை காட்டப்புகுந்தது மிகவும் இவர் நாவலிமைக்கொத்ததே. இதுவும்கிடக்க, மேல் பதஞ்சலியார் மறுத்தது தான் எவ்விதம்ஒவ்வும என ஆசங்கை நிகழ்த்தி அவர் முக்குணங்கடந்தவர் என்றும் இவர்முக்குணவசப்பட்டவர் முக்குணவசத்தான் முறை பிறழ எழுதினர் என்றும் அவற்றைப் பதஞ்சலியார் முறைப்படுத்தினர் என்றும் அது முறையே என்றும் எழுதினர். இது ஒரு நியாயகோடி. பாணினியார் முக்குணவசத்துள்ளார் முக்கட்பிரான் அருள் பெற்றார் என்பது 'மலடிமகனுக்கு மைத்துனன் உண்டென்பதை ஒக்காதொழியுமோ? அந்தோ! அகிலநாதன் அருள்கிடைத்தும் முக்குணங்கள் ஒழியாதுநிற்க அவரிடம் அமைந்த பிரார்த்தம் ஏதோ? அது நமது நாவலருக்குமட்டும தெரியத்தான் காரணம் யாதோ, இவர் முக்குணங்கடாதவர், பதஞ்சலியார் மூக்குணங்கடந்தவ இவரிருவருக்கும்நடுவே முக்குணத்தில் சிலவற்றைக்கடந்தவர் வாருசியார் எனபதாதிபகுபாடு செய்யும் நாவலிமை நமது நாவலர்க்குக்கிடைத்ததற்குக்காரணம் ஏதோ அறியேம். 'ஆகாயத்தாமரைமலரை நாம் கண்டோம. அஃதறியார் பேதற்றுரை இது. மற்றவர்க்குரைப்புரை' என்பதாதி சொற்களாகிய நியாயகோடிகள் அணியணியாய் நிறைந்துகிடைக்கும் இந்நாவலர் எழுதுவதெல்லாம் மூலப்பிரமாணமற்றசொல்லாயினும் ஒருசமயம் இவ்வுண்மை இவர்அறியாதுபிதற்றுகிறார். எமக்கு (வைதிகசைவப்பட்டம் தாங்கினேமாதலால) கைலையினின்று கடிதம் வந்தது, அகத்தியனுர் சொப்பனத்திற்சொன்னுர்' என்பதாதி பிரமாணம் ஏதேனும் உரைத்திடினும் இது நாவலருரையாதலால் உண்மை எனமயங்கும் மக்களும் உண்டு. ஆதலால் அத்தி

Koviloor Digital Library

றத்தாரை நோக்கியே மேற்கண்டவக்கியாயகோடிகளைவிடுத்தார்போலும்! மேல் இதுடன் நிற்காது 'இதுவரருசியார் மாட்டும் ஒக்கும்' என்றார். இது ஒரு விந்தை! வரருசியாரும் பதஞ்சலியாரைப்போல் முக்குணங்கடந்தவராயின் அவர் உரையைப்பதஞ்சலியார் மறுத்ததாக இவரும்,இவர் மூதறிஞர் எடுத்துவிடுத்தசித்தாந்தத்தின் பெருமையுமெவ்வளவு. இதை எவரும் அறிவார். இனிப் பாணினியார் முக்குணங்களுக்குள்ளகப்பட்டவர். வரருசியார் அவர்சூத்திரங்களில் குறை கூறியதாக இவருக்குத்தோன்றுகிறபடி அவர் அவரினும் தவமிகுதியுற்று முக்குணங்களுள் சிலவற்றைக்கடந்தவர். ஆசிரியர் பதஞ்சலியார முக்குணங்களையும் கடந்தவர்' என்று எழுதுவதற்கு மூலக்கதை எங்கே கண்டனரோ? திராவிடப்பிரகாசிகையில் இக்கதை எந்தப்புறத்தில் இருந்ததோ! பாணினியார் இறைவனருள்பெற்றதும் பதஞ்சலியார் பெற்றதும் புராணங்களுள் இருக்கக் காண்கின்றோம். ஆசிரியர் வரருசியார் சிவனருள்பெற்ற சங்கதியும் அதிலும் முக்குணவசப்பட்ட பாணினியாரினும் அதிகம் பெற்றார் என்பதாதி அளவையும் வெகு ரகசியமாய் இவரே அறிந்தவிஷயம். இவ்விதம் வீண்கதைகளால் பக்கம் நிறைப்பது பல வியாபகோடியா? இதைக் கண்டு எவ்வறிஞர் நகையாதிருப்பார்! இதில் சிவனடியாருள் சிறந்த பாணினியாரை முக்குணவசப்பட்டு முறைபிறழவுரைத்தார் எனப்பழிகூறியதால் அடியார் அபராதம் அவ்வாசிரியர் இறைவனருளியவாறேஉரைத்த இலக்கணம் முறைபிரண்டதென்பதால் அந்தோ! சிவாபராதம். ஆசிரியர்கள் பாணினி, வரருசி, பதஞ்சலிகள் ஒவ்வொருவரும் சிவனேச சிகாமணிகளாகவிருந்தும் ஒருவர் மற்றவர் சித்தாந்தத்தை மறுக்குமியல்பினர்' என்பதால் சிவசாஸ்திராபராதம் என்பதாதி பல அபராதத்துக்காளாக இவ்விதம் எழுதுவதுதானா நாவலர்க்கழகு! உண்மையில் வேதாங்கமாக அஷ்டாத்தியாயியே பரமனருளிய முறைபிறழாதமைக்கப்பட்டமையால் ருக்குவேதிகளால் கொள்ளப்பட்டது. அவ்வாசிரியர் மணியே வேதங்களுக்கு சிக்ஷைசெய்தருளியவர். ஆகவே அவர் திருவாக்கு வேதம்போல் அத்தியயனத்தானும்மறுமைபயக்கும். வார்த்திகமாபாடியங்கள் அங்ஙனமாகா ப்பொருள்விரிக்குமுரையே. இதுபற்றியே சிலநூலாசிரியர் இச்சூத்திரங்களுக்கு இலக்கியச்சித்திபனுகாவிடம் வேதம்போல் மறுமைப்பயனுண்டென்றார். இவ்விதங்கூறியவர்சத்தேந்துசேகர நூலாசாரியர்பதஞ்சலியார் மாபாடியத்துள் அதிகப்பயிற்சி யுள்ளார். 'ஏகதேசஸ்தஸ்ய தஸ்ய ஸ்ருதா ஏகதேசிநாமுக்தி:' என்பதால் அவர் பெருமையறியலாம். அவர்சிலவிடம் மாபாடியவாக்கியத்தை 'ஏகதேசமதம்' என்றும்ப்ரௌடிவாதம் (பெருமையாய்முன்பின்ஆலோசியாது) என்றும் மறுக்குமியல்பினர். அங்ஙனமேசூத்திரங்கட்கும் ஆராய்ச்சிமிகுந்தஅறிஞர்க்கு இம்மையிலிலக்கியம் வேறு பாணினிய சூத்திரங்களாற்சித்திக்க விரிவாய் இச்சூத்திரம கூறியது கூறல்போல் வேண்டப்படாமையின் அவரை நோக்கி அவை மறுமைபயக்கத்தக்கனவே என்றார். இவ்வுண்மை அந்நூலைப்படித்தறிந்தார் அறிவார். வியாகரணம் என்பது பாணினிதர்ச்சனம் எனப்படுவதேயன்றிப் பதஞ்சலிதர்ச்சனமாகாது. பதஞ்சலியார் 'ஸர்வே ஸர்வபதாதேசா:' என்னும் சூத்திரத்தில் க்ஷணிகவாதிமதத்தை ஏற்றிச்சூத்திரத்தைமறுத்தார். இதனால் இதுவும் அவர் சித்தாந்தமாகுமா? மேலும் வரருசிபதஞ்சலிகளுள் எவரும் இச்சூத்திரம் மிகப்பட்டவுரை இது கூறைப்பட்டது என்றாது இச்சூத்திரப்பொருளை மற்றொருசூத்திரத்திற்றானே அடங்கலாம். ஆகவே அச்சூத்திரம் போதும். இது மிகையென்றுகாட்டிட்டாரேழுறியம்வறுவ்திகூறினாரில்லை. வேறிலக்கியம் சாதித்தாரில்லை. சூத்திரத்தால் ஓர் இலக்கியம் திருத்தச்சொல்லாக, அது வார்த்திக பாடியங்களால் பிழையாய் முடிந்தது இல்லவேயில்லை. ஆகவே சூத்திர வார்த்திகபாடியங்கள் ஒன்றை ஒன்றுமறுத்து வெளியாயினவென்பதூஉம் அதைநிலை நிறுத்தவேண்டி ஈண்டும் முன்னும் எழுதிவந்ததூஉம் 'வடமொழி வழக்கறியார் உரையே. மேலும் அகத்தியனார் இறைவனருளால் நடாத்திய முத்தமிழிலக்கண முதலானவகத்தியம் யாண்டும் மெய்நிலை உடையதே என்றதும் ஒழிந்ததறிக. என்னையெனில் இவர் கூறிய கதையின்படி ஒவ்வொருகாலத்தும் அகத்தியம் ஒழியும்; அதைமீண்டும் அகத்தியர் தவத்தால் கண்ணுதலாரிடம் பெற்றுலகத்துக்குக்கொடுப்பர். அவ்விதவகத்தியங்களுள் சிற்றகத்தியம் 5000. வருடங்கட்குட்பட்டதே என்றொப்பியதால் என்க. இனிச் சிற்றகத்தியம் இவர் கூறியபடி தோன்றியகாலம் 5000. வருடங்கட்குட்பட்டகாலமாகவே இது தோன்றி நடைபெற்று அழிந்தகதை இவருக்குத்தான் தெரியும். இவ்விஷயம் நக்கீரதேவர் அறியார். அறிந்தவராயின் சொல்லியுமிருப்பார். அவருக்குப்பின் தமிழ்வரலாறு எழுத நமது நாவலரன்றி வேறெவரும் பிறந்தாரில்லையாதலால் எனவோர்சமாதானம் நாவலரும்நாவலரபிமானிகளும் சொல்லலாம். ஆயினும் இக்கதையை இவர் எங்கு கண்டார் என வினவுவோர்க்கு மௌனமே சமாதானமாம்; மேலும் சிற்றகத்தியம் 5000 வருடங்கட்குள்ளே செய்யப்பட்டமையின்வடமொழிஇலக்கணம் செய்தருளிய பாணியார் பிரஸ்தாபம் அதில் இருப்பது நியாயமே என்று கொண்டாலும் இவ்வகத்தியம் பதினாயிரம் வருடங்கட்கு முன்னிருந்ததல்ல. அக்காலவகத்தியம்அன்றேஒழிந்ததெனக்கூறவேண்டும். ஆயின்முத்தமிழ் இலக்கண முதநூலாகிய அவ்வகத்தியம் யாண்டும்மெய்நிலையுடைத்தென்பது 'இறந்தவன் இருந்தால் இருமலைகளைப்பந்தாடுவான்' என்பதை ஒக்கும் மேல் யாம் கண்ட அகத்தியம் தோன்றியது பாணினிக்குப்பின்னேயேபாணினியார்சூத்திரங்களில் 'ஸம்புடி ஷ்ட்ராமஸ்யஸ்தா்நாம் பஉவயாடா:' ஸமஸ்த கௌடிந்யயோரமஸ்திகம் விநவ:' என்பதாதி சூத்திரங்களில் எடுத்தோதப்பட்ட அகத்தியர் எவர்? மேல் யாம அகத்தியம் இயற்றிய வகத்யர் எவர் என வினவியதற்கு 'குடமுனிக்குவலியுறுத்தார் கோல்லேற்றுப்பாகர்' என்பதால் விடையளித்ததாக எண்ணித் தமது தாஷனாஸ்திரத்தை ஒருவாறு உபயோகித்தார். ஐயோ! பாவம்!! வடமொழியிலும் பள்ளிப்பிள்ளைகளும் படிக்கும் வடகாடநிகாவொஸீ என்னும் அமரநிகண்டுவாசகியமும் அறியாது 'வட'சத்தத்தின் திரிபு 'குடம்' என்றெழுதியவர் எழுதிய இச்சொல்லே அதற்குச்

சமாதானமாவதுசிதமல்ல. இவ்விதநாலர்க்குமாபாடியக்காரப்பட்டங்கூடாதென்றதை மறுக்கவெழுந்து ஜகத்குருபட்டம் போலென்றும் 'பரசமயபஞ்சானனப்பட்டம்' போல என்றும் பரிகசித்தார். இம்மாபாடியக்காரபட்டம் 'சிவஞானபட்டம் என்ருர். இப்பட்டங்கொடுத்தழைக்கத்தலைப்பட்டவா இவரேயாதலின் மேற்கண்ட ஜகத்குருபட்டம் போன்றதெனஇவர் உரைத்தது மிகவும்பொருத்தமற்றதே. நமது 'பரசமய பஞ்சானனுதிபட்டங்கள் ஒருசமயம் இவரது 'நாவலர் வைதிகசைவசிகாமணி, பரசமயகோளரிமுதலிய பட்டங்கள் நிலைபெற்றுக்கொடிகட்டிப் பறப்பதுபோல் ஒழிந்தே போயினும எமக்கதில் ஏதும் நஷ்டமில்லை. யாம் நமது நண்பரைப்போல் ஏதோ சில கூட்டத்தார் அளித்திட்டபட்டத்தைவழக்கப் பெயரைமாற்றிக் கையெழுத்திட்டோமில்லை.ஓர் சமயம் இவர் பட்டம் குறைந்தால் அது குறைவென்பார்; எமக்குப் பட்டம்வந்துங்களிப்பதில்லை. போனாலும் குற்றமில்லை. நிற்க; 'நமது குலதனமான வடமொழிநற்பயிரை' என்று யாம் எழுதியதற்கு 'வடமொழி கேசியர்க்குமாத்திரம் குலதனமன்று' என்ருர். அவர் அருமை 'நமது' என்னும் பொதுச்சொல்லைப் பொருட்படுத்தவொட்டாது தடுத்தாட்கொண்டதுபோலும். மேல் ஆன்மஸ்துதிமங்களாசரணவாக்கியத்தில் நாம் அவ்வடமொழியைத்தென்மொழிக்குறுதுணையெனக்கொண்டு போற்றிவாழும் உறுதியுடையோம் என்க. 'இனி அமைக' என்று காப்பிட்டார். இவர்க்குச்சித்தாந்தம் இவரேசெய்துகொள்ளும் வழக்கப்படி எழுதினர். ஆயினும் யாமும் அத்தென்மொழியை வடமொழிக்குறுதுணையெனக்கொண்டு போற்றிவாழும்இயலுடையாம்' என்பதையினியாவதிவர் அறிந்துய்வாராக.

சுபம். மற்றதுவரும்.

ஓர்சம்சயநிவாரணவபேட்சை.

ஐய! நமது ப்ரம்மவித்தியாபத்திரிகையின் 'திருவேங்கடக்கிராமம் திருமலைசாஸ்திரிகளவர்கள' 'ப்ராம்மணஜாதியின் உட்பிரிவை மறுப்பு' என மகுடம் புனைந்து ஓர்விஷயம் தொடர்ந்தெழுதிவருவதைக் கண்ணுற்ருேம். அது ஜாதிவொழுக்கம் சமயவொழுக்கம் தேசவொழுக்கம் முதலியன சிறிதுமின்றி அவரவர் கருத்திணுக்கியைய நடக்கும் இக்கலிமக்கட்குப் பெருநலமபெருகச்செய்யுமோர் நற்கருவியே. ஆயின் அவ்வுட்பிரிவை எக்காரணம் பற்றி எப்பிரமாணங்கொண்டு எக்காலந்தொடங்கி யனுட்டிக்கப்புகுந்தனர். அவரின் கொள்கையாது. என்பதனை உள்ளபடி ஆய்ந்தறியாது மறுக்கப்புகுவது நம் பூர்வகாலத்தவரிடத்து அறிவின்மையைச் சாட்டவெழுந்ததாகுமாகலான் அறிஞர் பலருங்கூடியதோர் சபைகூட்டி அச்சபையில் அவ்வவ்வுட்பிரிவினுக்குரிய பெரியோர் மாட்டுமேற்கூறியுள்ள 'எக்காரணம் பற்றி' முதலிய கிடாக்களைவிடுத்து (உட்பிரிவை ஒன்ருக்குவதில்) அவருரைக்கும் நியாயமதனைக் கடைப்பிடித்து மேல நமது சாஸ்திரியார் விடாமுயற்சியைச்செய்ய முனைவருவரேல மிகநன்ருும். அவ்வாறின்றி இவருக்குத்தெரிந்த நியாயத்தைமட்டிலெடுத்து விளக்கிக் கோத்திரபேதமொன்றுதவிர [தொன்றுதொட்டனுட்டிக்கப்பட்டுவருவனவான] மற்றவுட்பிரிவுகளை அபேதமாக்க முயல்வது சித்திபெறுவதெமக்கு மிகசம்சயமே. இதனால் சாஸ்திரியாரின் வாதத்திற்கெதிர்வாதம் பண்ணுவதாய் நினைக்கக்கூடாது. அது சித்திபெறும்பொருட்டுச்செயற்பாலனவற்றை முன்னர்ச்செய்யுமாறு வற்புறுத்த முன்வந்தோமெனக்கொள்க.

பொதுப்பெயராய் ப்ராம்மணர் என்போர் யாவருக்கும் கோத்திரம் பொதுவேயன்ருே? அங்ஙனமாயின் மத்துவராமாநுஜமதத்தரும் ஏனைய [தெலுங்கர் முதலிய] சிலரும் அக்கோத்திரமஹரிஷிகளின் வம்சத்தவரோ அன்ருே? அம்மதத்தாரையும் உட்பிரிவில் நின்றும் விலக்கி ஒன்று சேர்த்து மும்மதத்தரும் சம்பந்தார்ஹருடையரெனவுரைக்கத்தடையாதுளதோ? இதற்கு நமது சாஸ்திரியாரின் நியாயம்இன்னதெனவறிய மிக்கவாவுடனெதிர்பார்க்கின்ருேம்.

பிராந்தியங்கரையான்.

சந்தேகவினவுக்கு விடை.

ஐய! நமது ப்ரம்மவித்தியா 16-ம் லெக்கப்பத்திரிகையின்கண் "அருமையானசந்தேகம" எனக்குறிப்பிட்டு 'கணபதி' என்பவரெழுதியிருப்பதைக் கண்ணுற்ருேம். அதிற்கூறும வினவிற்குத்தக்கவிடையளிக்க அகத்தியம் தொல்காப்பியம் முதலிய நூல்களிலெமக் கனுபவமில்லாவிடினும் நான்முகத்தாற்பண்டிதர் கூறும் கூற்றை இதற்கு முடிபுரையாக வைத்து எமக்குத்தெரிந்ததை வரைந்திட எமது மனம் முன்னிடுகின்றது.

சந்தேகவினா 'ஒன்பது' 'தொண்ணூறு' 'தளாயிரம்' இம்மூன்றெண்களும் முறையே பத்துக்கும் நூறுக்கும்ஆயிரத்திற்கும் மூந்திபதுகளாகவிருக்க, பிந்திய எணகளின் சப்தம அவைகளுக்கெவ்வாறு பிரயோகிக்கக்கூடும் என்பது. எண்களின் கிரமம எவரால் வரையறுக்கப்பட்டதோ அவர் ஒவ்வொரு எண்ணின பிரயோகத்திற்கும் காரணம கூறியிருப்பரென்பது சொலலாதயைந்தவிஷயம. எப்பொருளினிடத்தும சாமீபமுள்ளவஸ்துவுக்கு அதன் குணம் எப்படிச்சம்பந்தப்படுகிறதோ (இங்கேபொருள் வஸ்துவென்றதை மனிதனுகவும் கொள்ளலாம்) ஒரு பொருளின் அல்லது ஒருவனின் குணம் முதலியதையறிவிக்க மற்றொன்றெப்படி. அவசியமோ, கௌரவத்தையுண்டுபண்ணிவவொருவனுக்கு அதையடைந்தவன் அதினால் தனக்குக்கிடைக்கும் மரியாதையை அவனையும் (உண்டுபண்ணினவனையும) அடையச்செய்வது எப்படிகௌரவப்பட்டவனின இன்றியமையாக்கடனுமோ அவ்வப்பான்ற நியாயத்தால விவாதமூன்றெண்களும் ஒருதொடர்ச்சியின் முடிவெண்களாயின. பின்தொடர்ச்சியின் ஆரமப எண் இன்னதென்பதை அறிவிக்குமாறு:—பத்து, நூறு, ஆயிரம மூன்றையும தங்களுக்குற்ற பெயருடன இறுதியில் சேர்த்து முறையே ஒன்பது தொண்ணூறு தளாயிரம் எனவேற்பட்டதென்பது பெறப்பட்டது.

இனிப்பண்டிதர் கூறும் இலக்கணத்தைப்பின் பற்றுவாம்.

பிராந்தியங்கரையான்.

Koviloor Digital Library

ஐய!

'ப்ரம்மவித்தியா பத்திரிகை'யிலும் 'காசைநிலலோசனி'யிலும் ப்ராம்மணசூத்திரஜாதி விபவகாரம் சொற்பகாலமாக நடந்துவருகிறது. அதுபற்றி விஸ்தாரமெழுத அவர்களைப்போல எமக்கவகாசம் கொடுத்திலதாகுலும் பசுபரையரிடத்திருப்பினும் பூஜிக்கத்தக்கதே. கழுதைஅக்கிரஹாரத்தெல்லையை மிதிக்கினும் தடிகொண்டு புடைத்து விரட்டத்தக்கதே.

பிராந்தியங்கரையான்.

ஐய!

நமது 'ப்ரம்மவித்தியா' என்னும் நங்கை தன்மதிப்புக்குரிய தக்கவோராடையின்றி மெல்லிய ஆடையையுடுத்தி வெளிவருவதில் விரைவில் அவ்வாடைமெலிவடைந்து அவளின் அருமைத்திருமேனி பிறர் கண்களாற்கவரப்படுவதை நோக்க எமதுமனம் சகிக்கலாற்றாததாய் எமக்கும் அவளுக்கும் நற்பயனையளித்துவரும் அந்பரைநோக்கிப்பிரார்த்திக்க முன்னிடுகின்றது. தமக்குரிய தர்மத்தையே நடத்திவரும் பதிவிருதாமங்கையர்க்கு ஆடையெவ்வாறிருப்பினும் பெருமை குறையாதாயினும் தமதங்கங்களைப்பிறர் பார்த்திடச்சஹிப்பளோ? ஆகலான் அந்நங்கைக்கு எம்போலியர் வேறு ஆடைகொடுத்திடின் அவள் அவ்வாடையின்கண் மிகவலங்காரங்களும் பலவிஷயங்களும் அமையப்பெற்றவளும் தன்னையாதரிப்பவரிடத்து தினறு தான் விரும்பியவற்றை முடித்துக்கொள்ளுமாற்றலுடையவளுமாகலின், அவ்வேறு ஆடையை உடுத்தச்சம்மதியாளாதலினாலே இனியவள் தன் பெருமைக்கும் தன் பிரஜைகளின் சந்தோஷத்திற்கு மிணங்கவும் இக்குளிர்காலம் அவளைப்பிடியாதிருக்குமாறுதாங்கவும் உரியதோர் நீடித்திருக்கத் தக்க ஆடையுடன் வெளிப்பட எம்மதிபரின்கிருபையை நாடிநிற்கின்றோம்.

பிராந்தியங்கரையான்.

சங்கராசாரியாரது அவதாரமகிமை.

தொடர்ச்சி.

மைத்திரேயோபநிஷத்.

உ-வது அத்தியாயம்.

"மேலும் பகவானானமைத்திரேயர்கைலாசத்திற்குப்புறப்பட்டு அவிடஞ்சென்று, ஓபகவானே! பரமதத்துவரகஸியத்தைச்சொல்லுமென்றுகேட்டார். மகாதேவர்சொன்னதாவது:—தேகமானது தேவாலயமென்று சொல்லப்படுகிறது; அதிலிருக்கிறஜீவனானவன்சிவனே. அஞ்ஞானமாகிய நிர்மாலியத்தைத்தள்ளி (ஸோஹம) 'அவன் நான்' என்கிறபாவனையினாலே பூஜிக்கவேண்டியது."

☞(ஜீவனானவன பிரதிபிம்பன்என முன்சொல்லப்பட்டிருக்கிறது.அப்படியிருக்கஎப்படி ஜீவன்பிரமமாகலாமென்றுசங்கிக்கலாம். பாம்பு கயிறுகிறதென்னின்பாம்புஎன்கிற மயக்கம் போனால் இருப்பது கயிறுதான். அப்படியேதுரியாதீதநிலையில் ஜீவன் நஷ்டமாய்ப் போகிறது. போனால் உள்ளது சிவமேதான். இந்த அர்த்தத்தின்பேரில் ஜீவன் சிவனாகிறான் என்றுசொல்லப்படுகிறது.)

யஜுர்வேதத்தில்ஸ்கந்தோபநிஷத்.

"அவனேபரமேசுவரன். அவனே பிரமம். அர்தப்பிரமம்தான்நான்.சமுசயமில்லை. ஜீவனேசிவன்;சிவனே ஜீவன். அந்தஜீவன் சிவனேதான். உமியினால்கட்டுப்பட்டிருக்கிறபோது நெல்லாயிருக்கிறது. உமியற்றதானால் அதுஅரிசியாகிறது. அப்படித்தான் ஜீவனுங் கட்டுப்பட்டிருக்கிறான். கருமபாசமானால் எப்போதும் (மங்களசுவரூபியாகிய) சிவனாயிருக்கிறான். [கரும] பாசத்தினால் கட்டுப்பட்டிருக்கிறவரையில் ஜீவனாயிருக்கிறான். பாசத்திலிருந்து விடுபட்டால் அப்போது சிவனாயிருக்கிறான்."

☞(சிவனே ஜீவனென்பது எப்படிக்கூடுமென்னின் கயிற்றுபாம்பாவதுபோலவும்,பிம்பசூரியனே பிரதிபிம்பசூரியனாவதுபோலவும்மனமேசொப்பனவுலகமும்,அவ்வுலகத்திலுள்ளஜீவர்களுமாவதுபோலாம்.)

சுக்கிலயசுர்வேதத்தில் பைங்களோபநிஷத்

௪-வது அத்தியாயம்.

"நானேபிரமம்" என்றறியாதவனுக்கு முத்தியுண்டாகிறதில்லை.

யசுர்வேதத்தில் வாராகோபநிஷத்

ஸஹநாவவதுசாந்தி உ-வது அத்தியாயம்.

என்னுடைய பூரணான்மாவைத்தவிர ஜகத் ஜீவன் ஈசுவரன் மாயை முதலியவைகளில்லை. அவர்களுக்கு நான் விலட்சணன் (☞ இவ்விடத்தில்ஆன்மாவென்பது பிரமத்தை. அதிலிருந்தே ஜகத் ஜீவன் ஈசுரர்கள் உற்பத்தி.)

"சத்தியமான பரப்பிர்ம்மம் நான், என்னைத்தவிரவேறேயாதொன்றுமில்லை"

"மஹாகாசத்தில் கடாகாசம் மடாகாசம்போல சிதாகாசமாயிருக்கிற என்னிடத்தில் ஜீவேசுவரர்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். (ஜீவேசுவரர்களாகிய) ஆன்மாவின் சிருஷ்டிக்கு முந்தி எதானது இல்லையோ, அப்படியே முடிவிலும் எதானது தள்ளப்பட்டதோ, அதானது மாயையென்று விவேகத்தினாலே பிர்ம்மஞானிகளால் சொல்லப்படுகிறது. மாயையும் அதின்காரியமும் நசித்துப்போனால் ஈசுவரத்துவமுமில்லை, ஜீவத்துவமுமில்லை. ஆகையினாலே நிருபாதிகமானஆகாசம்போலநான் சுத்தனாகவும் சித்தாகவுமிருக்கிறேன்."

(☞ இவ்விடத்தில் ஆன்மா என்பது பிரமம். நான் என்பது ஜீவத்துவங்கழிந்த துரியாதீதமான பிரமநிலை.)

௩-வது அத்தியாயம்.

"அந்தப்பிரம்மம் நானே (நீயே) என்று எப்போதும்மௌனத்தை ஆசிரயி"

௪-வது அத்தியாயம்.

"சிவனேகுரு, சிவனேதேவன், சிவனேவேதம், சிவனே பிரபு, சிவனேநான், சிவனேசகலமும், சிவனைக்காட்டிலும்வேறொன்றுமில்லை"

வாயுசங்கிதை

ஞானநிலையையுரைத்த அத்தியாயம்.

அறையமகேச்சுரன்சத்திமாயையாமார்மலத்தா
னிறையமுனமேமறைந்துநின்றறையுமான்மாவை
முறையிலந்தமாயைதான்மூடுமெலமாயைகெட
வுறைவதுவேசிவமென்னவுளாப்பராலெனவுரைத்தான். (௪௦)
பாவகத்தாலழியாதசிவன்றனருள்பயக்குமான்

Koviloor Digital Library

மேவியஅவ்வருளினுல்மலமாயும்விந்ததற்பின்
ஓவலில்அப்புருடனேசிவனென்னவுறைவனெனத்
தாவில்தவத்தோர்பின்னுமிவையெடுத்துச்சாற்றினரால். (௰௬)

சூதசங்கிதை ஞானயாகவைபவமுரைத்த அத்தியாயம்.

மல்லலான்மா பலவாய்த்தோன்றுவதுஞ் சிவான்மா பரமான்மாவெனும் பேதந்தோன்றுமதுவுஞ், சொல்லுறின் உபாதியாலன்றி மாமுனிவீர் சுபாவத்தினின்று அஃதெப்படியென்னிற் கேண்மின், வல்லகடமுதலாய வுபாதி சம்பந்தத்தால் வான்பேதமாய்த்தோன்றும் அதுபோலும் உணர்வீர், செல்லலில் வேதாந்தவாக்கியங்களெலாம் பரமசிவனொருவனேயென்னத்தெரிவிக்குமாறும். (௨௪)

ஷை பிரபஞ்ச ஆரோபமுரைத்த அத்தியாயம்.

முன்னுரைத்தசேதனஅசேதனஆகாரங்கள்முதன்மையாகப் பின்னுரைத்தவிருப்பதில்லையெனுமளவும்பிறங்க நிரூபணஞ்செய்காலே, மன்னுமொளிப்பரசிவனோடபேதமேயாஞ்சுருக்கிவகுத்தாம்யாவும், பன்னுசிவமேயன்றிவேறில்லை நன்குணர்வீர்பண்புளிரோ. (௬)

ஷை சூதகீதை விசேடசிருட்டியுரைத்த அத்தியாயம்

தத்துவஞானத்தாற்பரசிவமேசகமாயைசிவன்முன்னுள, கொத்துறுசொரூபமாகவேதெரியுங்குறித்திடின் வேறொன்றுமிலைச்ச, கத்துவேறாகப்பார்ப்பவன் பந்தக்கூடுந்தவினீங் குறுனென்றும், பொத்துமாமலத்தினீங்கியின்னருளைப்புணர்ந்தின்பமார்தருமுனிவீர். (௧௬)

ஷை ஆன்மவநான்மவிவேகமுரைத்த அத்தியாயம்.

ஆதலால்பரமார்த்தமாப்பிரத்தியக்கான்மாபரமேயம்ம, போதகுருவுபதேச மாதிகளாலனான்மாவாப்பொலிந்து தோன்றுங், காதலறுமெவற்றையுமான்மாவாகத் தெரிந்துகொண்டான்மாவையுங்கற், றோதலருந்தவத்தீர்சுத்தப்பிரமமென்றுள்ளே நிச்சயித்து. (௨௧)

அக்குருகடாட்சமுஞ்சிவப்பிரசாதத்தாலேயமையமேவு, ஈசசத்துச்சிவன்முதலானதெல்லாஞ்சிவமென்னும் ஞானந்தானே தக்கசிவப்பிரசாதமாகுமந்தஞானமுள்ளதலைமையோனே, மிக்கசிவஞானியாவானென்றுநான்மறையும்விள்ளுமாலோ. (௨௬

ஷை பிரமகீதை ஐதரேயவுபநிடதார்த்தத்தை யுரைத்த அத்தியாயம்.

சின்மாத்திரமாயுள்ளவெறுஞ்சிவனேதிகழ்வானியாதுக்கும் முன்மாத்திரமும்வேறில்லைமுற்றுமவனேமொழிவுற்ற, நன்மாத்திரமாயான்மாவென்றுரைக்கும்நாமத்தினையுடையான், தன் மாத்திரமேயாகிய அத்தன்மையானசங்கரன்றான். (உ)

இதில் சிவன், ஆன்மாவென்னும் நாமத்தையும் பெற்றிருக்கிறார்.

ஷை ஷை தைத்திரியவுபநிடதார்த்தமுரைத்த அத்தியாயம்.

செய்வான்செய்விப்பவன்செய்யும்பொருள்செய்கருவிசெய்தொழிலென், றைவாய்ப்பொருளும்வெறுமான்மாவாகித்தோன்றுமிறையருளா, லெய்யாமானமெமதறிவுவறிவோனென்னப்படும்பேத, மெய்யாமிறைவன் திருவருளாலெல்லாந்தானாய்விளங்குமால். (௬௪)

அறையுமறையாலாகமத்தாலறியாதுகின்மற்றுந்தா
னறிவதொருபாடையினுலேயறைவானென்றுமமையாதே
யிறையையடைதற்கேதுவிதுவிதனுற்பரமயோகெய்தும்
பிறிதொன்றறவேசிவன்றன்னையோகத்தாலேபெறலாமால். ()

ஷை ஷை கேனோபவுபநிடதார்த்தமுரைத்த அத்தியாயம்.

தொல்லைநல்வினையாற்சருதிநன்மிருதிசொன்னவாதுணிந்தவத்துவேயா, றொல்லையிற்பரமாத்துவிதவேதனத்தையுள்ளவாறுணரவேயுணர்வர், நல்லவிப்பரமாத்துவிதஞானியைநாராயணனுமுருத்திரனு,மெல்லையிலெல்லாத்தேவரும்பூசித்தேத்தவும்பயிலவனென்றும். (௱௬)

ஈசனும்ஞானியிருந்துளவிடத்தேயிருப்பதுமுந்திதானந்தத் தெய்வனேவல்செய்பவன்கா லென்சென்னியிலிருப்பதுமணனி மாவிலாப்பரமஞானியாமுனிக்கு மகேசனுமொப்பலன்மதிக்கிலாசிலாவரியுமொப்பலனுமொப்பலனேவனொப்பாரோ.

இவ்விரண்டுசெய்யுட்களும் அத்துவிதஞானியினது பெருமை கூறுகின்றன.

ஷை ஷை சாந்தோக்கியவுபநிடதத்திறுமத்தியாய அர்த்தத்தையுரைக்கும் அத்தியாயம்.

காண்பவன்றானேயாகுங்காண்பவையென்றயாவுங்
காண்பவன்றன்னில்வேறென்றின்மையிற்றனையேகாணும்
பூண்பதொன்றின்றிநின்றபூரணமதுவென்ற
மாண்டவார்த்தைக்குமுள்ளபொருளிதுமற்றொன்றில்லை. (௱உ)

நீயென்கின்றவார்த்தைக்குப்பொருளாயென்றுநிற்பதுவே
நானென்கின்றவாசகத்தின்பொருளாய்நின்றுநாடுவது
நானென்கின்றவாசகத்தின்பொருளாய்நாடிநிற்பதுவே
நீயென்கின்றவாசகத்தினிற்கும்பொருளுநிலைபெறவே. (௱௩)

நானேமுழுதுமெனையொழியநாடிற்சிறிதும்வேறில்லை
யானபொருளையருமறைதானறையும்படியானதனுலும்
யானுமிசைத்தபடியாலுமிதுவேதிடமாயுளபொருடா
னுனமின்றிநான்முகனுமுரைத்ததுங்கட்குண்மையிதே. ()

தன்னிலேயாக்கப்பட்டகனவினிலுலகமெல்லாந்
தன்னுணர்கனவதாகத்தனிலவையடங்குமாபோற்
றன்னிலேதோன்றுமெல்லாப்பொருள்களுந்தானேயாகுற்
றன்னிலேதன்னிற்றானேயாமதேதனில்வேறின்றே. (௧௩௬)

ஷை ஷை முண்டகோபநிடதார்த்தமுரைக்குமத்தியாயம்.

இந்தவுடம்புறைசீவபரங்களெனப்படுமென்னமிரண்
டந்தவிரண்டினுமொன்றுவினைப்பயனங்குநுகர்ந்திடுமோர்
தொந்தமறும்பரமொன்றுமுணாதுசொலப்படுபேதமில்வான்
வந்தகடத்திலகப்படுபேதமெனப்படுமாயையினால். (௨௩)

தற்பரனுருவஞ்சித்தேதற்பரனிடையேயக்
கற்பிதசீவன்றானுமதாஙக்காலந்தச்
சிற்பொருளொன்றேவேறெனின்மற்றதுசித்தாமோ
வற்பமும்வேறாகாதுசித்தாகாரத்தாலே. (௨௪)

பாவபுண்ணியங்களிரண்டையுமுதறிப்பற்றுவிட்டொன்றொடுமின்றி,யாவையுந்தானாய்வேறிலாதவனைப்பெய்துமற்றிப்பொருளறிந்தான், சிவனும்பரனுஞ்சின்மயமாகுமாதலாலொப்பெனச்செப்பன், மேவியொன்றாகிவிடுதலேயன்றிவேறுவேறாகுமோ வீடு. (௬௧)

உடம்புடன்புணர்ப்பாற்சிவனுக்கிறையோடொப்புளதென்னிலொப்பில்லை, சடந்திகழ்வானின்வான்வேறாகச்சருதியோப்புரைபபரோவொப்பா, யிடுந்திறங்கன்மத்தாலெனிற்கன்மமிறக்குமேவிச்சையாலென்னிற், றிடம்படமுன்பேயுள்ளதேரா

Koviloor Digital Library

னந்திகழ்த் துவதில்ல நதிகழ்த்தா. (௩௨)

எப்படியாலும்பண்டுமெய்ப்போதுமெப்பொழுதுஞ்சிவசிவர்க்கொப்புளதாகுமுருவமொன்றுனவுண்மையால்வேறுறுதொன்றே, யப்படியுள்ளசிவன்பிறர்போலவவிச்சையானிகழுமவ்வவிச்சை, மெய்ப்பரவிச்சையானசித்தொன்றுய்விடுதலொப்படைதல்வேறன்றே. (௩௩)

சிவன்றன்னுருவானசிவத்தைத்தெளியிற்றான்
மேவும்பலதொழிறன்னிடையாலேவினையாடும்
யாவுந்தன்னுருவாகிநிகழ்ந்தாலிவன்முத்த
னுவன்பண்டவனுகாமையின்முத்தனுமாகான். (௩௪)

ஷ ஷ கைவல்லியவுபநிடதார்த்தமுரைக்கும்
அத்தியாயம்.

சிவேனும்பொருளேயதென்றுநிகழ்த்திடும்பொருளாவதுந்,
தாயசிற்பரமேபதங்களிரண்டினுக்குணிவாதலான்
மாயையென்றும்அவித்தையென்றுமுபாதிபேதவழக்கிறு
லாயகற்பிதபேதமல்லதபேதமேபொருளாவதே.

ஷ ஷ பிரகதாரணியவுபநிடதத்தில்
மைத்திரேயபிராமணார்த்தமுரைக்கும் அத்தியாயம்.

வேதநூல்மிருதிபுராணமத்துவிதமெய்ம்மையேவிளம்பமெய்த்தர்க்கஞ், சாதியாநிற்கத்தத்துவஞானத்தவருமிப்பொருளேயேசார, வாதியாஞ்சிவனாராயணனுனிங்கறைந்ததும் அபேதமாயிருக்க, வாதியாமொருவர்க்கிதையனுதரித்தன்மாயையினுடையவல்லபமே. (௧௪)

ஷ ஷ கடவல்லிசுவேதாசுவதரவுபநிடதங்களின்
அர்த்தமுரைத்த அத்தியாயம்.

ஏயபேருலகில்வினைப்பயனுகர்ந்தங்கிதயமேமருவுவாரிருவர்
சாயையாதபமாகின்றனர்சிவசங்கரரென்றிடத்தகுவா
ரோயுமாறறவேயுண்பவன்சிவனாட்டுவான்சிவனிவர்தமக்கிங்
காயபேதந்தானுபாதியால்வந்ததல்லதபேதமேயாகும். (௯)

கூர்மபுராணம் இந்திரத்துய்ம்மன் முத்திபெற்ற
அத்தியாயம்.

ஆங்கவன்றானுந்துயிலுணவருந்தலரும்பெறற் குமரர்மேலாசை, கோங்கெழில்கவற்றுச்சுணங்குபூத்தலர்ந்தகுவிமுலைமகளிரின்புறுத, லிங்கிவைமுதலயாவையுநீத்திட்டியானெனதென்பவைநீக்கி, யோங்குசிவான்மாவினைப்பரமான்மாத்தன்னொடும்பிரிதறவொடுக்கி. (௪௨)

ஷ சாங்கியயோகமுரைத்த
அத்தியாயம்.

நித்தியமாகியொன்றாய்வியாபியாய்நிறைந்துநின்ற
சுத்தமாய்ப்பரமமாகிச்சுயம்பிரகாசமாகித்
தத்துவங்கடந்துநின்றபுருடனுங்காரந்தன்னோ [வோதும்.()
டொத்துத்தான்வேறென்றெண்ணுங்கருத்தன்யானென்ன
நித்தியமாகுமான்மாவேகமாய்நிகழ்ந்துமாயா
சத்தியாயளப்பில்பேதமாமுறுபேதஞ்சாற்றில்
வைத்தநீர்க்குடங்கடோறுந்தோன்றிடுமெதியம்போல
வுய்த்திடுமுபாதிதன்னாற்பற்பலவுருவந்தோன்றும். (௧௭)

ஆதலாற்பிரமமொன்றேநித்தியம்அலகைத்தேரிற்
பேதுறத்தோன்றும்நீரிற்பிரபஞ்சமருண்டுதோன்றும்
நீதறுமனத்தர்நியபிரபஞ்சம்பிரமம்வேறென்
றோதுவர்ஒக்கநோக்கும்யோகியர்ஒன்றாய்க்காண்பர். (௨௰)

திருவாசகம்

சிவமேபெறுந்திருவெய்திற்றிலேன்
நாமொழிந்துசிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்மண்கெடினும்
தான்கெட்டலின்றிச்சலிப்பறியாத்தன்மையனுக்
கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டென்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

சித்தஞ்சிவமாக்கிச்செய்தனவேதவமாக்கும்,பேதமில்லதோர்கற்பளித்தபெருந்துறைப்பெருவெள்ளமே, சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட, பேதங்கெடுத்தருள்செய்பெருமை, உயிருண்டின்றவெம்மானே, சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட அத்தன் அருளியவாறார்பெறுவாரச்சோவே.

திருமந்திரம் மகாவாக்கியம்.

நீயதுவானாயெனநின்றபேருரை
யாயதுநானானெனென்னச்சமைந்தறச்
சேயசிவமாக்குஞ்சீர்நந்திபேரருள்
ஆயதுவாயனந்தானந்தியாகுமே. (௧)

உயிர்பரமாகவுயர்பரசிவன்
அரியசிவமாகஅச்சிவவேதத்
திரியிலுஞ்சீராம்பராபரனென்ன
வுரியவுரையற்றவோமயமாமே. (௨)

ஷ தத்துவமசிவவாக்கியம்.

ஆகியஅச்சோயந்தேவதத்தனிடத்
தாகியவிட்டுவிடாதஇலக்கணைத்
தாருபசாந்தமேதொந்தத்தசியென்ப
வாகியசீவன்பரன்சிவனுமே. (௩)

தொம்பதந்தற்பதஞ்சொல்லும்அசிபதம்
நம்பியமுத்துரியத்துமேனுடவே
யும்பதமுப்பதமாகுமுயிர்பரன்
செம்பொருளானசிவமெனலாமே. (௪)

முத்திபேதம் கருமநிவாரணம்.

ஓதியமுத்தியடைவேயுயிர்பர
பேதமிலச்சிவமெய்துந்துரியமோ
டாதிசொரூபச்சொரூபத்ததாகவே
பேதமிலாநிருவாணம்பிறந்ததே. (௧)

சிவனெனச்சிவனென்னவேறில்லை
சிவனார்சிவனாரையறிகிலர்
சிவனார்சிவனையறிந்தபின்
சிவனார்சிவனாயிட்டிருப்பரே. (௨)

ஷ அநுக்கிரகம்.

அவன்றானகவிடமேழுமொன்றாகி
இவன்றானெனநின்றெளியினுமல்லன்
சிவனாமன்பலபலசிவனுமாகி
நவின்றானுலகுறுநம்பனுமாமே (௩)

ஷ பலவிடங்களில்.

சாயுச்சியம்சிவமாதல், திரிமலந்தீர்ந்துசிவனவனாமே, சிவனேசிவஞானியாதலால், குருவேசிவமெனக்கூறினனந்தி,

சிவோகமேசேர்தலால், தானவனாகி, மாசற்றவென்னைச்சிவமாக்கி, தானேதனக்குத்தலைவனுமாமே, தாமேசிவமானதன்மைதலைப்பட, சேருஞ்சிவமானார்மலந்தீர்ந்தவர்.

"நமதன்பரும் அவர்குருவாகிய சிவகுருமைந்தரும் சிவபெருமானை (தம்பாற்கற்பிதமாய ஜகஜீவபரங்களிலொன்றென) நிஷேதித்துத்தாமேமெய்ப்பொருளென்றுகொண்டு வாழ்கின்றவர்கள்" என்றுகூறினர். இதில் இவருடையவிபரீதத்தையும்

Koviloor Digital Library

சுருதியுக்தி அநுபவங்களுடையவுண்மையையுங்காட்டிவோம். ம்மிடத்தில், ஜகஜீவபரம்கற்பிதமென்று அத்துவிதிகள்சொல்லுவதாய்ச் சொன்னாரேயன்றி, அவனிடத்திற்கற்பிதமென்றும் உன்னிடத்திற்கற்பிதமென்றும்சொல்வதையெடுத்துச்சொன்னாரில்லை. வேதாந்தசாஸ்திர ஆராய்ச்சியில்லாதவர்களை மருட்டவொன்றை மாத்திரஞ் சொல்லி ஏய்க்கப்பார்க்கின்றார். ஜகஜீவபரங்கள், தன்மையில் தம்பால்கற்பிதமென்பது முண்மையே; முன்னிலையில், உன்பால்கற்பிதமென்பது முண்மையே; படர்க்கையில் அவன்பால்கற்பிதமென்பது முண்மையே. தன்மைக்குத்தன்மையாகவும் முன்னிலைக்கு முன்னிலையாகவும் படர்க்லைகக்குப் படர்க்கையாகவுங்கூறி, இம்மூன்றையுங் கூடக்கற்பனைப்படுத்தி, இம்மூன்றுக்குமதீதமான பரம்பொருளின்கண் ஜகஜீவபரங்கள் கற்பிதமெனபதுமுண்மையேயாம். தம்பால ஜகஜீவபரங்கள் கற்பிதமென்றுசொன்னால் தானென்றசொல்லுக்கு மனிதனென்றுபொருள்கொண்டு, மனிதனிடத்திலே, பரம், அதாவது ஈஸ்வரன்கற்பிதமென்று அத்துவிதமதம்சொல்லுகிறதாகும்; அத்துவிதமதமிவ்வளவு ஆபாசமுள்ளதாவென ஜனங்கள்அம்மதத்தை வெறுக்கட்டுமென்கிற எண்ணத்தோடெழுதினாரென்றாவது கொள்ளவேண்டும்; விசாரணையின்மையினால் தெரியாதெழுதினாரொன்றாவது கொள்ளவேண்டும்: தம்பால் ஜகஜீவபரமூன்றுங்கற்பனையென்பதில் தான் என்றசொல்லுக்குப் பொருளேதுவாகக் கொண்டார்? ஜீவனென்றுகொள்வதற்கு நியாயமில்லை; ஜீவனைக்கற்பிதமென்று வரைந்தமையானென்க. பரத்தையுங் கற்பிதமென்றுரைத்துவிட்டமையால் ஈஸ்வரனும் தான்என்றசொல்லுக்குப் பொருளல்ல. ஈஸ்வரனும் ஜீவனுமல்லவென்றதனால்பரம்மம் அல்லது அதன்பரியாய நாமமானசிவன், அல்லதுஆன்மாவாம். இவ்விடத்தில் ஆன்மாவென்றது ப்ரம்மம் அல்லது சிவனும். சிவனுக்கு ஆன்மாவென்னுஞ்சொல் உண்டென்பதற்குப்பிரமாணம் வருமாறு,—

சூதசங்கிதை பிரமகீதையில் ஐதரேயவுபநிடதார்த்தத்தையுரைக்கும் அத்தியாயம்.

சின்மாத்திரமாயுள்ளவெறுஞ்சிவனேதிகழ்வான்யாதுக்கு
முன்மாத்திரமும்வேறில்லைமுற்றுமவனேமொழிவுற்ற
நன்மாத்திரமாஆன்மாவென்றுரைக்குநாமத்தினையுடையான்
றன்மாத்திரமேயாகியஅத்தனமையானசங்கரன்றான். (உ)

நான் என்றசொல்லுக்குப் பொருள்ஜீவனாயிருக்கச் சிவனென்றெங்ஙனங் கூறற்பாலதென்னின் ஜீவன் வாயிலாகச் சிவனென்று பொருள்கொள்ளவேண்டும். ஜீவனென்பது பிரதிபிம்பப்பொருள்; சிவன் பிம்பப்பொருள். பிரதிபிம்பப்பொருளுக்குப்பிம்பப்பொருள்தான் உண்மைப்பொருள். இரண்டுமே தனித்தனியுண்மைப்பொருளென்றுகொண்டாலென்னையென்னின் அப்போது சிவனும் கண்டப்பொருள்; ஜீவனுங்கண்டப்பொருளாகும். இவர்மதமிப்படி சிவனும் அகண்டப்பொருள்; ஜீவான்மாவும் அகண்டப்பொருள். ஒருஅகண்டப்பொருளினிடத்து மற்றொருஅகண்டபபொருளே யிருத்தல் அமையாதென்னின் ஒருஅகண்ட பரிபூரணசிவனிடத்துப் பலகோடி அகண்டபரிபூரண ஜீவான்மப்பொருள் பந்தத்திலாவது முத்தியிலாவது இருத்தல் எங்ஙனமாகும்? இரண்டுசத்துப்பொருள் ஒருஇடத்தில் இருத்தல் கூடாது. அங்ஙனமாகச் சத்தானஒரு சிவனிடத்துப்பலகோடி ஆன்மசத்துப்பொருள்களிருத்தல் எப்படிக்கூடும்? சத்துப்போலிப்பொருளாயின் எத்தனை கோடியானாலும் குற்றமில்லை. ஆதலால் வேதமுதலிய சகலகலைகளும் சிவனைச்சத்துப்பொருளாகவும் ஜகஜீவபரங்களை ச்சத்துப்போலிப்பொருளாகவுங் கூறுகின்றன. இதற்குச் சுருதிமுதலியபிரமாணங்களைமுன்னரோனகுவிளக்கிக்காட்டினும். சகலஜீவர்களும் ஒருசிவனிடத்திலிருந்தாலும் சிவனும் சத், ஜீவர்களும் சத்தென்று கூறப்பொருந்தாமையானும் ஆராய்ச்சியில்சிவமேசத்துப்பொருளாகமுடிதலானும்முதலில் ஜீவர்களெல்லாம்சிவனிடத்து லயப்பட்டுச் சிவனாய் விளங்குதலானும் அஞ்ஞானதசையில் நானென்னுஞ்சொல்லுப்பொருள்ஜீவனேயாயினும் ஞானதசையில்சிவனேபொருளாமென்க. சிவனேமொருளாதலால் அதன்கண் மற்றச்சகஜீவபரங்கள் கற்பிதமென்பதில்யாதொருஆக்ஷேபமுமில்லை. நிற்க;

"அன்றியுமிவர் சங்கராசாரியார் சிவனடியாராதலிழுக்கும் விவகாரத்திலவரடியவராதல் சாலுமெனின், அவ்விவகாரம் அவர்க்குமிச்சையாகலின், அவரடியவராதலு மிச்சையாயொழியும். இம்மிச்சையடியார், அல்லது பொய்யடியாரைச் சிவரகசியம் எடுத்துப்புகழ்வது பொய்யேயாம்" என்றொன்றுகூறினார். முன்சொன்னகாரணத்தினால் சங்கராசாரியர் சிவனடியாதலிழுக்காகாது; சிறக்குமென்றறிந்திடுக. விவகாரத்தில் அவரடியவராம் என்றுகூறி, விவகாரம் பொய்யாதலால் அவரடியவராதலும் பொய்யென்கிறாரன்றோ? இதுசுத்தபைத்தியம். பொய்யைஉபயோகிக்கும் இடமிதுவென்றும், மெய்யைஉபயோகிக்குமிடமிதுவென்றும், இதுபொய், இதுமெய்யென்று ஆராய்வதற்குமுன்னர், ஆராய்கின்றவர் எப்படிப்பட்டவர், ஆராயப்பட்டவர் எப்படிப்பட்டவர், ஆராயப்பட்டபொருள் எப்படிப்பட்டது என்றும் அறியாது, 'எல்லசட்டிலக்க ஏகலக்க' வென்பவர்க்கிணையாகின்றனர். இதைச்சற்று உவமானவாயிலாக விளக்கி அதன்பேரிலுவமேயத்தைக்கூறுவாம். சொப்பனத்தில், "சாத்தன் என்பவன், கயிற்றின்கண் அரவைக்கண்டு பின் தெளிந்து பாம்புபொய்யென்றறிந்தான்" என்றுவைத்துக்கொள்வோம். சொப்பனாவஸ்தையில் அரவுபொய்; சாததன்மெய் அரவை மெய்யென்று கூறினால் எவருமொப்பார்· இனியுண்மையில் அரவுதோற்றுதற்கிடமான கயிறுபொய்யா, மெய்யா என்றவிடத்து, சொப்பனத்திற்றோன்றுங் கயிறாதலால் பொய்யென்றேசொல்லவேண்டும். சொப்பனத்தில்சாத்தன், கயிற்றினிடத்து, அரவையுண்மையென அறியுங்கால் அறிகிறசாத்தன் ஒன்று அதிஷ்டானமான கயிறுஒன்று, ஆரோபமான அரவுஒன்று ஆகமுப் பொருள்களிருக்கின்றன. அரவுபொய்யென்பது சொப்பனத்திலேயேதீர்மானம். கயிற்றையும் அவ்வாறு பெய்யென்றுசொல்லமுடியாது- கயிறுபொய்யெனில் அதையறிகிறசாத்தனும் பொய்யாதல்வேண்டும். பொய்யானாலும் கயிறு சாத்தன் பொய்க்கும், அரவு பொய்க்கும் வித்தியாசமிருக்கிறது. சொப்பனாவஸ்தையில் அரவைப் பொய்யென்றால் சரியென்று ஒத்துக்கொள்வார்களேயல்லாமல் கயிற்றையும் சாத்தனையும் பெய்யென்றால் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். உண்மையில் சொப்பனமும் சொப்பனசாத்தனும் சொப்பன கயிறும் பொய்யேயன்றிமெய்யல்ல. சொப்பனாவஸ்தையை பொய்யென்றுகொள்ளாது மெய்யென்று கொள்ளும்போது. சாத்தன், கயிறுமெய் அரவுபொய்' சொப்பனம் பொய்யென்பது சாக்கிராவஸ்தையைநோக்க. சாக்கிரத்தை நோக்காவிடத்து மெய்யாகவேதான் தோன்றும் சொப்பனக்கயிற்றின்கண்தோன்றும் அரவுபொய்யானபோது சொப்பனமலடிமலடிமகனும் சொப்பன ஆகாயதாமரையும் பொய்யென்றுசொல்லக்கேட்பானேன்? இனிச்சாக்கிரத்தில் மலடிமகனும் ஆகாயதாமரையும் சுத்தபொய்· கயிற்றின்கண் அரவோ மருண்டபோதுபொய்· கயிறும் அதைக்கண்டசாத்தனும் மெய்யாகின்றார்கள். இப்படியே கயிறுஸ்தானத்தில் உலகும் சாத்தன்ஸ்தானத்தில் ஜீவனுமாம். சொப்பனாவஸ்தையில் கயிறும் சாத்தனும் உண்மையானாலும் சாக்கிராவஸ்தையை நோக்க எப்படிபொய்யாமோ, அப்படியே சாக்கிராவஸ்தையில் சாக்கிரவுலகும் ஜீவனுமுண்மையானாலும் துரியசிவாவஸ்தையில் பொய்யேயாம். துரியசிவனைநோக்காவிடத்துஜகஜீவபரங்களானமுப்பொருள்களுமுண்மைதான். அம்முப்பொருள்களும் சிருஷ்டிகாலத்தில் துரியசி

வனிடத்திலிருந்து தோன்றி லயகாலம் வரையிலிருந்து லய காலத்தில தோன்றியமுறையே லயமாகின்றன. இம்மூன்று ங்காரியப்பொருள்கள் துரியசிவன் காரணப்பொருள். காரணப்பொருள் முக்காலத்துள்ள பொருளாகலின் சத்தே. காரியப்பொருள் ஓர்காலப்பொருளாகலின சத்துப்போலியாம். காரியப்பொருள் முற்றும்சத்துமன்று; முற்றும அசத்துமன்று. சத்தானால் துரியசிவனைப்போல் முக்காலத்துமிருத்தல் வேண்டும். அசத்தானால்வான்மலர் வந்தியா புத்திரனைப்போலில்லாதிருத்தல்வேண்டும். சதசத்தெனின் ஒன்றுக்கொன்றுவிரோத இலக்கணமுள்ளபொருளிருத்தல் அரிது. அதுபற்றி ஜகஜீவபரங்களைச்சதசத் விலக்ஷண அநிர்வசனியமென்றுசொலவது தகுதியாம். இந்த ஜகஜீவபரங்களை வான்மலர் வந்தியாபுத்திரனைப்போல்சொல்வது குற்றமாதலால் அசத்தென்று சொல்லப்படாது. அதுபற்றியே வியாவகாரிகசத்தென்று கூறப்படுகின்றது. சங்கராசாரியரை த துரியசிவனென்று கொள்ளாமல் உருத்திர மூர்த்தியினவதாரமென்று கொள்ளுகின்றமையால் மேற்சொல்லியபடி ஜகஜீவபரங்களுக்குச்சொல்லும் இலக்கணத்தைச்சங்கராசாரியர்க்குங் கூறுவது தகுதியாம். ஜகஜீவபரங்கள் துரியசிவனைநோக்க வியாவகாரிக சத்தியமாதலால் சங்கராசாரியரையும் வியாவகாரிகசத்தியமெனறே சொல்வதில் யாதொரு பாதகமுமில்லை. துரியசிவனைப்போல் ஜகசிவபரங்களையும்பாரமார்த்திகசத்தாய்க்கொண்டால் அபபோதுசங்கராசாரியரையும் பாமார்த்திகசத்தாய்க்கொள்ளலாம். அப்படிக் கொள்வதால் நேரிடும்கணக்கற்ற ஆக்ஷேபங்கள் இதுவரையில் செய்திருப்பதாலும் சுருதி,யுக்தி அநுபவங்கட்கு மாறாயிருப்பதாலும் அவ்வாற சொல்லப்படாதென்பதாம். 'இம்மிச்சையடியார் அல்லது பொய்யடியாரை சிவரகசியம் எடுத்துப்புகழ்வது பொய்யேயாம்' என்றுகூறியதிலுள்ள குற்றங்களையும்சொல்லுகின்றோம். சிவரகசியம் துரிய சிவனொன்றேமுக்காலத்துமுள்ள சத்துப்பொருளென்றும் மற்றப்பொருளெல்லாம் சத்துப்போலிப்பொரு ளென்றும் கூறி, சத்துப் போலிப் பொருளையெல்லாம் சத்துப்பொருளென்றுசொல்லும் துவிதமதங்களைத் நிராகரணஞ்செய்யவே கறைமிடற்றண்ணல் அவதரிப்பதாகச்சிவரகசியங்கூறுவதாலும், அதில்அநேக அத்துவிதக்கதைகள் சொல்லுவதாலும் அது பொருளைப்பொருளாகச் சொல்லும் நூலேயன்றிப் பொருளல்லவற்றைப் பொருளாகச் சொல்லும் நூலல்லவாதலாலும் சங்கராசாரியரைப் புகழ்ந்தேயிருக்கின்றமையாலும் அதோடு அவரது அத்துவித சித்தாந்தத்தையே உண்மையென்றுசொல்வதாலும் இவருடைய சொல்லேபயனற்றுப்பொய்யாயினமை காண்க. சங்கராசாரியரை உருத்திராவதாரமென்று யாம் கூறுகின்றோம். இவர், அவரைப்பொய்யடியாரென்கிறார். யாரைநோக்கிச்சொல்லுகிறார். சொல்லுகின்ற இவர்யார்? இவ்விருபாலரும் சிவர்க்கத்திற் சேர்ந்தவர்கள். சிவர்களெங்கிருக்கிறார்கள்? துரியசிவஆதாரத்திலிருப்பதாய்ச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறார். துரியசிவன் முக்காலத்துள்ளசத்துப்பொருள்; அன்றி எங்கும் நீக்கமின்றி யிருக்கும்பரிபூரணப்பொருள். இந்தப்பரிபூரண துரியசிவப்பொருளில்சிவாத்துமாக்கள் சத்துப்பொருளாயிருக்கின்றனரா? சிவனும்பரிபூரணப்பொருள்; இவர் மதப்படி சிவாத்துமாக்களும் தனித்தனி பரிபூரணப் பொருள்கள். ஒருசத்துப்பொருளினிடத்து மற்றொருசத்துப்பொருளேயிருத்தல் அமையாதென்றால் பல கோடிசத்துப்பொருள்களிருக்கின்றனவென்று கூறுவதுபொருந்தாது. பொருந்தாவிடில் அசத்தென்றுசொல்லலாமெனின் அசத்தென்பது இல்லையென்று பொருள்படுதலால் மலடிமகன் வான்மலர்போல் இல்லாமற் போதல் வேண்டும். சிவர்களிருந்து சத்த பரிச ரூப ரச கந்தங்களை அநுபவிக்கக் காண்கின்றோம். சதசத்தெனின் மேற்படி இருவித தோஷங்களும் வந்துபொருந்தும். அன்றி விரோதமான இரு இலக்கணம் ஒருபொருளுக்குக் கூறுதல் கூடாது. பின்னைப் போம்வழியாதெனின் சதசத் விலக்ஷண அநிர்வசனியமென்றே கொள்ளற்பாலதாம். இதனால் சிவர்களைச் சத்தெனச் சொல்லப்படாதென்றேற்படுகின்றது. சங்கராசாரியரைப்பொய்யடியாரென்கிற இவர், தமதிலக்கணத்தையும்இவருடையசொல்லைக்கேட்பவருடைய இலக்கணத்தையும் கவனித்தாரா? ஆராய்ச்சிசெய்தாரா? கவனித்து ஆராய்ச்சிசெய்திருந்தால் சங்கராசாரியரைப்பொய்யடியாரென்று சொல்லத்துணியமாட்டார். சாக்கிராவஸ்தையை நோக்கச் சொப்பனாவஸ்தை சத்துமல்ல; அசத்துமல்ல; சதசத்துமல்ல; அநிர்வசனியமேயாம், அப்படியே துரிய சிவனைநோக்கச் சகசிவேஸ்வரர்கள் சத்துமல்ல: அசத்துமல்ல, சதசத்துமல்ல, அநிர்வசனியமேயாம். இந்த லக்ஷணந்தெரியாது அத்வைதிகள் ஜகசிவபரங்களைப்பொய்யென்று கொள்வதாகப் பிரமித்துத்தடுமாறிப் பேசுகின்றார். துரியசிவனைநோக்க ஜகசிவயீஸ்வரர்கள் கற்பனையென்றும் பொய்யென்றும் சொல்வதற்குப்பொருள் அநிர்வசனியமாம். தம்பால் ஜகசிவபரங்கள் கற்பிதமென்றுசொல்வதற்குப் பொருள் துரியசிவனிடத்தில ஜகசிவபரங்கள் அநிர்வசனியம் என்பதாம்.

சங்கராசாரியரைப்பொய்யென்று கொண்டவர், ஜீவர்களையும் அவ்வாறல்லவோ கொள்ளவேண்டும். கேட்பவரும் சொலலுகிறவருமான ஜீவர்களையும் துரியசிவனைப்போல் சத்தாகவைத்து, சங்கராசாரியரைமாத்திரம் அசத்தாகக்கொள்ளுவதென்னே! ஒருஜாதியிலக்கணம்பெற்ற இருவரில்ஒருவரை ஒரு இலக்கணமுள்ளவராகவும், மற்றவரை அதற்கு மறுதலையான இலக்கணமுள்ளவராகவும கூறுதல் நன்றன்றே. இது எப்படியிருக்கின்றதென்னில் சாத்தன், கொத்தன், மூத்தன் ஆன மூன்றுமனிதரில், சாத்தன் கொத்தனை நோக்கி, 'மூத்தன மனிதன்' என்றுசொல்வதுபோலிருக்கின்றது. சாத்தனும் மனிதன்தான்; கொத்தனும்மனிதன்தான்; மூத்தனும மனிதன்தான். இம்மூவரில் ஒருவன் மற்றொருவனைநோக்கி, இன்னொருவனைக் காட்டி, 'இவன் மனிதன்' என்றால் கேட்பவனும் சொல்லுகிறவனும மனிதனல்லவோ! இம்மூவரில் சாத்தனுடைய புத்தி கூர்மைக்கும் இப்பிரதிவாதியின் கூர்மைக்கும் வித்தியாசமிருப்பதாய் எமக்குத்தோற்றவில்லை. முதலாவது ஈஸ்வராம்சமான சங்கராசாரியரைப்பொய் (அசத்து) என்று சொலலுவதே தவறு; அதோடு கேட்போரையும் சொல்வோரையும் துரியசிவனைப்போல் மெய் [சத்து] என்றுகொண்டது பெருந்தவறு.

இன்னுமிவர் பேசும் விஷயத்தைக்கவனிப்போம். 'உருவமற்ற [ஏகமாகிய] பிரமத்துக்கோ இரண்டாவது பொருளில்லை. அது பொய்யாகிய மாயையிற்பிரதிபலித்தலும் அந்தப்பிரதிபலனம்மெய்யாயிடுதலும் யாங்ஙனம்' என்று ஒரு கேள்விகேட்கிறார். பிரமம ஏகமாயிருப்பதோடு பரிபூரணமாயிருப்பதால இரண்டாவது பொருளில்லையென்பது வாஸ்தவமே. அது பொய்யாகிய மாயையிற்பிரதிபலித்ததெப்படியென்று கேட்கிறாரன்றோ? மாயையை வான்மலர்போல் பொய்யென்று கருதுகின்றார். அதுகூடாது. அநிர்வசனியமென்றறிந்தால் இந்த ஆக்ஷேபஞ் செய்யமாட்டார். மேலும பிரதிபலித்ததென்பது அத்துவிதிகளுடைய சித்தாந்தமன்று. பூர்வபக்ஷமாய்ச்சொல்லப்படுகின்றது. அத்துவிதிகள் பிரதிபிம்ப திருட்டாந்தம் சொல்வது பிம்பத்தைப்போல் பிரதிபிம்பம் சத்தல்லவென்பது வரையில் மாத்திரம்: முற்றுமன்று. இந்தவிஷயத்தைதப்ப

றிய "ஓர் நண்பர்" என்பவர் 1888ஆம் அக்டோபர்மீ 31உ பிரம்மவித்தியாவில இவருக்கு விளக்கிக்காட்டியிருக்கிறார். காட்டி ஐம்பது மாசங்களுக்கு மேலாயும் பின்னும் 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை' என்பதற்கிணங்கப் பேசுகின்றார். மெய்யென்று சொன்னவிருக்காலன்றோ மெய்யாயிருத்தல் யாங்ஙனமென்கிற கேள்விகேட்கலாம். அப்படிச்சொன்னவருமில்லை; இவர் கேள்விக்கேட்கவேண்டிய அவசியமுமில்லை. வேதமுதலியகலைகளில் பரிணாமவாதம், பிம்பப்பிரதிபிம்பவாதம், காரியகாரணவாதம், விவர்த்தவாதம், அமஸாம்ஸிகவாதமுதலிய பலதிருட்டாந்தங்கள் கூறுவதுண்டு. அவற்றிலெந்தத்திருட்டாந்தம் எதற்காக எதுவரையில் சொல்லப்படுகிறதென்றுணரவேண்டும். அது தெரியாமல் அத்துவிதிகள் பூர்வபக்ஷமாய்ச் சொல்லிப் பின் தாங்களே கண்டிக்கும் பூர்வபக்ஷ திருட்டாந்தங்களைச் சித்தாந்தமென்று நமமீது ஆக்ஷேபிப்பது ஆழமறியாமல் காலைவைப்பதற்கிணையாமென்க. 'இவ்வசம்பாவித நிலையிற்கேட்கப்படும் பொய்ச்சிவனாரது அவதாரமாகிய சங்கராசாரியரையும் எப்படியோ ஒருசத்பதார்த்தமாகக்கொள்வது' என்று பேசுகின்றார். சத்து இன்னது அசத்து இன்னதென்று தெரியாதவரையில் இவரெழுதுவதெல்லாம் மணற்சோற்றிற்கல்லாராய்வது போலத்தான். பொருளைப்பொருளாகவும் பொருளல்லவற்றைப்பொருளல்லவாகவும் கொள்ளும் நுட்பவிவேகம் இவர்க்கு வராதவரையில் இவருடன் பேசுவது நீரின்மிச்சக்தனமறைப்பதொக்கும். சிவனும் பொய்யாதலில்லை; சங்கராசாரியாரும் பொய்யாதலில்லை யென்பதை முன்னமே எழுதினோம். 'இவ்வவித்தையும் பொய்ப்பொருள், அதனால் இவ்வவித்தையிற்பிரதிபலனமாய்த் தோன்றிய ஜீவனும் பொய்ப்பொருளாகத்தட்டில்லை. இந்தச்சிவனுக்கதிஷ்டானமிவரது சித்தாந்தத்திற் கூடஸ்தனுகச்சொல்லப்படுகிறது' என்கிறார். பொய்க்கும் மெய்க்கும் விலக்ஷணமான அவித்தை, ஜீவர்களைப் பொய்ப்பொருளென்று சொல்வது சரியன்று. 'பிரமம் மாயையிலும் கூடஸ்தன் அவித்தையிலும் தோய்ந்தஞானம் இவரது சித்தாந்தஞானமாம்' என்று பேசுகின்றார். இது உண்மைதான். அதுமாத்திரமா? வேதமுதலிய பதினான்கு வித்தைகளுடைய சித்தாந்தமுமிதுதான்.

இவரது சங்கராசாரியர் சிவகுருவுக்குத்தாதக ஆரியாம்பாளது கர்ப்பமேயாகிய்ப்பரிசமுற்றுப் பிறந்தாராகையால் இவரைச்சிவரென்று கூறுவதிலும் இவர் பிறந்த பின்னர் உலகில் பல துன்பங்களிலமூழ்ந்தி மொத்துண்டு வருந்தினார் என்றுங்கூறினார். இந்தத்தோஷம் சிவனடியாராய் வருவதிலுமுண்டாமென்றும் உண்மையில் அவதாரத்திற்குத்துன்பமில்லையென்றும் காட்டினோம். ஜீவர்களாய்ப் பிறந்து வைராக்கியவுபாதிகள் பெற்ற ஆரூட ஞானிகளுக்கே ஜனனமரண துன்பமில்லையென்னின் இயற்கையாகவே ஞானவடிவாய் விளங்கும் உருத்திரமூர்த்திக்கும் அவரவதாரத்திற்கும் இல்லையென்று நாம் கூறவேண்டுமோ? இவர், தமிழிலச்சிட்டிருக்கும் 'சங்கரவிஜயம்' என்னும் புத்தகத்திரண்டாமத்தியாயத்தைச்சற்று வாசிப்பாரானால் இவர்க்கிதுவிஷயமாய்த்தோன்றிய ஆக்ஷேபங்களொழிந்துபோம். 'துரியமூர்த்திக்குப்பிறப்பில்லையென்று அநேகப்பிரமாணங்கள் காட்டி, இத்தியாதி பிரபல பிரமாணங்களுக்கு விரோதமாக இத்துரியமூர்த்தியினது அவதாரமாயுள்ளவர் சங்கராசாரியரென்று கூற இவரானமுடியாது' என்றதிலுள்ள ஆபாசத்தையுஞ்சிறிது சொல்லலாம். முடியுமென யிவர்க்குக்கூறியதார்? தாமே இல்லாததைச்சொல்லிக்கொண்டு, அதைச்சாதிக்க இவரால முடியாதென்று பேசுவதென்ன? துரியசிவனுக்கவதாரஞ்சொல்ல அத்துவிதிகளாலுமாகாது; அவர்கள் சொல்லவுமில்லை; சொல்லவுமாட்டார்கள். இந்தச்சோமசுந்தரநாயகரோ, துரியசிவன சிவனடியாராய் மானிடவுருவந்தாங்கி வந்தார்; அல்லது வருவார் என்கிறார். இது அவராலாவது இன்னுமெவராலாவது சாதிக்க ஆகாது. சாதிக்கவரின் அதை மறுக்க அத்துவிதிகளாலாகும். துரியமூர்த்திக்குப்பிறப்பில்லையென்று பிரபலபிரமாணங்கள் காட்டினதாய்ச்சொல்லுகிறானன்றோ; அந்தப்பிரமாணங்களை யெல்லாம் பிரமாணமாகவே அத்துவிதிகள் கொண்டமையால் அவர்கள். துரியசிவனுக்குப்பிறப்பாவது அடியாராய் வருதலென்பதாவது சொல்லுகின்றார்களில்லை. இவரோ அதற்குமாறாகப்பேசிப் பிரமாணங்களை அவமதிக்கின்றவர். 'எந்தவகையானும சங்கராசாரியர் சிவாவதாரமாயினதில்லையென யாம் பிரசங்கித்துத்தீர்த்தோம்' என்பதற்குப்பதிலாவது. சிவாவதாரமென்பதில் சிவன் என்னுஞ்சொல்லுக்குத் துரியசிவனென்று சொல்வாராயின் அது தவறென்று அவரோடுகூட யாமும பிரசங்கித்து, அவ்வாறு சொல்பவரை அவருக்குத்துணையாய் நின்று நாமும் நிராகரணஞ்செய்கின்றோம். அதோடு, இவர், துரியசிவன், சிவனடியாராய் வந்தார், அல்லது வருவாரென்று சொல்வதையும் பலமாய்த்நிராகரணஞ்செய்கின்றோம். சிவனென்னுஞ்சொல்லுக்கு உருத்திரனென்றுபொருள் கொள்ளுங்கால் அதை யெந்தவகையானும் சுருதியுக்தி அநுபவங்களால் முன்பு நிராகரணஞ்செய்ததுபோதாமல் இன்னும பலமாய் நிராகரணஞ்செய்து பிரசங்கிக்கின்றோம். மேல் 'யாம் சங்கராசாரியார் ஜீவனென்று தாபித்ததையும நமதன்பர் அவர் சிவாவதாரமென்று கூறியதையும் பார்த்து மாயாவாதிகள் கலங்காவண்ணம் அன்னோர் கொள்ளுமாசங்கையைப் போக்கி, எப்படியாவது சங்கராசாரியரைச் சிவரூபமாக்கிக் காத்துக்கொள்வாராக' எனவொரு முடிவுகட்டினார். சங்கராசாரியா சிவனென்றுதாபித்தாரபனை ஆழத்திலமிழ்த்தாமையால் வெகு இலேசாய் எடுத்தெறிவிட்டோம். அன்றி உருத்திராவதாரமென்று கூறிச்சூழனைநியாயமும செய்துவிட்டோம். மாயாபாதானவாதரான மாயாவாதிகள் கலங்கி மற்றொருமுறை இங்ஙனம் வாய்வேசாவண்ணம்வேண்டியபடியாபமழைகளையுஞ்சொரிந்தோம். பலவகையிலும் சங்கராசாரியர் உருத்திராவதாரமென்று சொல்லிக்காத்துக்கொள்ளலும் செய்தோம். இனித்துரியசிவமே சிவனடியாராய் வந்தார், அல்லது வருவாரென்பதைக்காத்துக் கொள்ளவேண்டுவது சோமசுந்தரநாயகர் கடனேயாமென்க.

நிற்க; இனியொரு விந்தைவரைகின்றார். அதைக்கண்டால்இவர் இவ்வளவு பேயரல்தராவென நினைப்பார்கள். படி

Koviloor Digital Library

த்தவொருவன், எவ்வளவு நீதியில்லாதவனுனாலும் ஈனு பேரிருக்கும சபையில வாய்திறந்து மோசபுரப்படின் நீதி வழுவாமற் பேசுவான். அந்தமாதிரி நீதியுமிந்தச் சோமசுந்தரநாயகரிடமிருப்பதாய்ப் புலப்படவில்லை. இவர், சங்கராசாரியாருடைய மகிமைதெரியவேண்டினோர், மாத்வர்செய்துள்ள வாயுஸ்தவத்தைப்பார்க்கக்கடவர்" என்று கூறியது தான் விகலதயெனபது. அத்வைதிகளுக்கு நேர்விரோதிகள் துவைதிகள். அது அந்தச்சொல்லின்றேலயேவிளங்கும. யாராயினும்சரி, தங்கள் தங்களினத்துக்குரிய நூல்களைத் தங்கள் தங்கள் இனத்தார்செய்வது முறையேயாமன்றி, அன்னியர் அதிலும்விரோதிகள், அதிலும் நேர்விரோதிகள் செய்வது முறையன்றாம். சங்கராசாரியர் சரித்திரத்தை அவர்மாணாக்கரும் அவரினத்தாரும் அவர்மதஸ்தரும் செய்வது முறையாகுமேயன்றி அத்வைதமதத்திற்குற்றங்கூறும் விரோதமதஸ்தரான துவைதிகள் செய்வது முறையன்று; நியாயமுமன்று. திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரம சைவர்களால் எழுதப்பட்டதைச் சைவர்கள் கொள்வார்களேயன்றி வைணவர்களா லெழுதப்பட்டதைக் கொள்வார்களா! சீகாழித்தலத்தில் சமபந்தசுவாமிகள் திருமங்கையாழ்வாரிடத்தில் வாதஞ்செய்து தோல்வியடைந்ததாக வைணவர்கள் எழுதிவைத்திருக்கின்றார்களே அதைமெய்யென்று சைவர்கள் கொள்வார்களா? திருவள்ளுவநாயனார் இயற்றிய திருக்குறளுக்குச் சமணசித்தாந்திபொருவர், நாயனாரைச்சமணரென்று கொண்டு, அத்திருக்குறளுக்குச் சமணமதபக்ஷமாக வுரையியற்றினார். அதை ஆரியர்கள் உண்மையென்று கொள்வார்களா? கொள்ளார்களென்னின், மாத்வர், தங்களுடைய மாத்வமதத்தைப்பற்றியெழுதிக்கொண்ட நூலில சங்கராசாரியரைப் பற்றி விரோதமாக எழுதிக்கொண்டால் அதை எங்ஙனங்கொள்வது. துவிதமதஸ்தரானமாத்வர், சங்கராசாரியருடைய சரித்திரத்தை மத்துவேஷத்தால மாறுபடுத்தி கற்பனையாக எழுதித்தங்களுக்குள்ளாக வைத்துக்கொண்டிருக்கிறார்களென்று நாம்நினைக்கவேண்டியிருக்கிறது. அதுஇச் சோமசுந்தரநாயகருக்குப் பாலும் பழமும் சாப்பிட்டது போலிருக்கிறதாக்கும். சங்கராசாரியருடைய மாணாக்கரும் அவர்வழிநின்றோரும அவர்மதஸ்தரும்எழுதிய (நாம 20-வதுசஞ்சிகையிற்காட்டியவாறு) பல சரித்திரங்களும் மகிமையாகாமற்போனமைக்கும் விரோதிகள் துவேஷபுத்தியால்எழுதிவைத்துக்கொண்டிருக்கும் ஒருசரித்திரம் மகிமையாய்விளங்குவதற்கும காரணம இந்தச்சோமசுந்தரநாயகரிடத்தில் குடிகொண்டிருக்கும்ஸ்ரீசங்கரமதசதுவேஷமேயன்றிவேறுயாதுகூறுவோம! சங்கராசாரியாருடைய மதஸ்சர் பலர்செய்த [அச்சிட்டிருக்கும்] பலவிதசரித்திரங்களில் விளங்காதமகிமை, விரோதியானவொருவர் இரகசியமாய் எழுதியநூலில் விளங்குமென்றெழுதுவது நியாயந்தானோ? நல்ல எழுத்துநடைவிலிருக்கக்கோணவெழுத்துக் குறுக்கே பேசுகின்றதே. வேதாகம புராணேதிகாச முதலிய கலைகட்கும் யுக்தி அநுபவங்கட்குபொருந்த அத்துவிதமார்க்கத்திலிவ்வளவு துவேஷமும் பொறாமையும் வந்ததற்குக்காரணம் பல நூல்களிற்கூறப்படுகிறது.

சூதசங்கிதையில் பிரமகிஷ்ட ஐதரேயவுபநிஷதார்த்தத்தை யுரைக்கும் அத்தியாயம்.

தத்தமலானபேதத்தவாதியர்தாந்தங்களிற்றுங்கடர்க்கங்கள், நத்துடாநிற்குமபரிசெலாஞ்சுருதிமிருதிகள்கருதியதறிக்கும், சுத்தமாவிருத்தமாகுமென்றேயென்றுணிவுதொல்பிறவியிற்சுழல்வார், நித்தமானதுவேபோயிவற்றிலேகாதல் செய்யுமுன்செய்தநீவினையால். (௬)

காதலாற்றத்தங்கடவுளாருளால்காலபாகத்தினால் அறத்தால், பேதாதலினால்வேதவாதத்தைப்பொருந்துவர்புகளறஅவ்வடைவே, வேதவாதத்தை மேவுநவினையால்விருப்பினாலன்றியேவினருஞ், சாதலானதுவும்பிறத்தலுமில்லாத்தற்பதத்தன்னையேசாவார். (௭)

வான்கருதியமறைவழியைவிட்டுமேற்
றுன்கருதுதல்சதுரன்றுதன்கையில்
ம்தன்கமழ்திரளையைச்சிந்திச்சந்தியாக்
கூன்கையில்விழுந்துளிகொண்டதன்மையே. (௮)

பொருள்கொண்டமறைநின்றுபுகல்கின்றதுணரா
மருள்கொண்டசமயங்கண்மதிகொண்டுகதியா
யருள்கொண்டபரவின்பமடைகின்றஅவர்போல்
இருள்கொண்டுபொருள்கண்டஅவரனறியிவரார். (௯)

கேநோபநிடதார்த்தமுரைக்குமத்தியாயம்.

பரமாத்துவிதஞானியேபரதேவதைதானவனேயித்திரமாமுதநியானிங்குச்செப்பும்பொருள்செய்வினையாலுபசாமாந்தநீசிகெளதமனுலுண்டாஞ்சாபவுரையாலுங், கரமாமனுடர்நெஞ்சதனிற்காதல்செய்யாதொருகாலும். (௰)

கிற்க; ஷைமாத்வர் எழுதியவாயுஸ்தவத்தில் சங்கராசாரியருடையசரித்திரமாத்திரமகிமையா? மற்றப்படி அதிலுள்ள எல்லாவிஷயங்களுமகிமையா? எல்லாவிஷயங்களுமகிமையெனனின் அந்நூல் விஷ்ணுவேபரத்துவமென்றும் சிவன்பரத்துவமல்லவென்றும் வாயுவைப்பார்க்கிலும கருடனைப்பார்க்கிலும் சிவன்குறைந்தவனென்றும் சிவாகமங்கள் மோகசாஸ்திரமென்றும் கூறுகின்றதே. அது இவர்க்குப்பிரமாணந்தானோ? பிரமாணமென்னின சிவன்பரமென்றும் விஷ்ணுபசுவென்றும் சிவாகமங்கள் மோக்ஷநூலென்றுங் கூறுமிவருடைய சித்தாந்தத்துக்கு மோசம்வருமே. வந்தாலும்வரட்டும்; சங்கராசாரியருக்கு மாத்திரமமகிமைகுறைந்தாற்போதுமென்பரோ! அங்ஙனமாயின், தன்மூக்குப்போனாலும் போகட்டும்; அண்டைவீட்டுக்காரனுக்கு அபசகுனம வந்தாற்போதுமென்று தன்மூக்கையறுத்துக்கொண்டு உதிரப்பிரவாகத்தோடு அபசகுனமாய் அண்டைவீட்டுக்காரனுக்கு எதிர்வருவோனுக்கிவர்சற்றுந் தோற்றவரல்லராம். அங்ஙனமன்று; சங்கராசாரியசரித்திரமாத்திரம் மகிமையென்பாராயின ஏனப்படி? இவரது சித்தாந்தசைவமதத்துக்கு விரோதமானவைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு, சங்கராசாரியர் விஷயமாக எழுதியவற்றைத்தள்ளினாலென்னை? எதிரிகளுக்குப் பிரதிகூலமாகவும் இவர்க்கனுகூலமாகவு முள்ளவிஷயத்தை யிவர் பிரமாணமாக எடுத்தால், எதிரிகள் தமக்கனுகூலமாகவும் இவர்க்குப் பிரதிகூலமாகவுமுள்ள விஷயத்தை யெதிரிகள்

எடுத்துக்கொள்கிறார்கள். பிரமாணமாக எடுத்தால் முற்று மெடுக்கவேண்டும். தள்ளினால் முற்றுந்தள்ள வேண்டும். அதைவிட்டு ஆக்கிரகத்தாலும் அவசரத்தாலும் துவேஷத்தாலும் பின்வரும்யோசனையின்றி அதைப்பிரமாணமாக எடுத்துக்காட்டினார். உடனே தமக்குவருங்கஷ்டத்தை யெண்ணினாரில்லை. மாத்வர் எழுதிய சங்கராசாரியசரித்திரத்தைப்பிரமாணமாகக்கொண்டு, அதில்மகிமை விளங்குமென்று சொன்னதில் கொஞ்சம் இராஜதந்திரமிருக்கின்றது. அந்தத்தந்திரத்தை யனுசரித்துத் தான் அதைப்பிரமாணமாகக்கொண்டார். இவர்க்கு வைணவமதத்தவரிலொருபகுதியாரான மாத்வரும் விரோதிகள்தான்; அத்வைதமதஸ்தரும் விரோதிகள்தான். இருவரும் விரோதிகளாயினும் தற்காலம் அத்வைதிகளைவிரோதிக்குஞ்சமயமாதலால மாத்வரோடு சேர்ந்துகொண்டு, "தமக்குவிரோதமான பலவிஷயங்களிருந்தாலும் இருக்கட்டும், இந்தச்சமயத்தில் அத்வைதிகளைத் தூஷிப்பதற்கேற்றதாயிருக்கின்றதே" யென்றுகருதி, மாத்வருடைய வாயுஸ்தவத்தை மற்றப்பிரமாணங்களைவிட வுத்கிருஷ்ட பிரமாணமாகக்காட்டவந்தார். திருவள்ளுவநாயனாரும் ராஜதந்திரத்தைச்சொல்லும்போது,

தன்றுணையின்றால்பகையிரண்டால்தானொருவன்
இன்றுணையாக்கொள்கஅவற்றினொன்று.

பரிமேலழகருரை

தனக்குத்துணையோவெனின்இல்லை; கலிவுசெய்யும் பகையோவெனின்இரண்டு; அங்ஙனமாய்நின்றவழி ஒருவனாகிய தான், அப்பகையிரண்டனுள் பொருந்தியதொன்றை அப்பொழுதைக்கு இனியதுணையாகச் செய்துகொள்கவென்பதாம்.

நாயனார்கூறியபடிதற்காலத்துக்குப்பொருந்தியதொன்றைத்துணையாகக்கொண்டார். இவரையின்னொரு கேள்வி கேட்கின்றோம். இவர்க்குஷஷ்டி வாயுஸ்தவமென்னுங்கவிதைகிரந்தகர்த்தரான நாராயண பண்டிதாசாரியாரெழுதிய ஷஷ்டிவாயுஸ்தவமாத்திரம்பிரமாணமா? அவரின்னும் ஏதேனும் எழுதியிருந்தால் அவைகளும் பிரமாணமா? இதுதவிர மற்ற மாத்துவாசாரியர்கள் எழுதிய நூல்களெல்லாம் பிரமாணமா? அவைகளெல்லாம்பிரமாணமென்னில் அவற்றில அத்துவிதிகளுக்குஎவ்வளவுபாகம் விரோதமாமோ, அவ்வளவுபாகமிவர் மதத்துக்கும் விரோதமாமே.

சிலமாசங்களின் முன்மகம்மதியருடைய மதத்தின்முதற்புத்தகமான கொறான்என்பதை வடதேசத்திலோர்பாதிரியார்மொழிபெயர்த்தசிட்டத்தைமகம்மதியர்ஒத்துக்கொள்ளாமல் அதையொருவரும் வாங்கப்படாதெனக் கூக்குரலிட்டசங்கதி பத்திரிகைகளை வாசிப்பவ ரறிந்திருப்பர். தாயுமானவர் பாடலுக்குவேறுமதஸ்தர் உரைசெய்ததொன்றும் அதுசவமென்றும் வேறுமதஸ்தர் உரைசெய்வது கூடாதென்றும் விகடதூதன்பத்திரிகையில் சிலகாலத்துக்குமுன் ஆக்ஷேபணவாதி யெழுதியதும் அறிந்தவர்அறிந்திருப்பர். சைவசிகாமணியான சேக்கிழார் செய்தமையாலன்றோ திருத்தொண்டர்புராணம் மணம்பெற்றுச் சைவர்களிடத்தில் கௌரவமாய்விளங்குகின்றது! சைவமதவிரோதியான வைணவராலியற்றப்படின் அவ்வாறு மணம்பெற்றுலாவுமா? அதிலும் திருத்தொண்டர்புராணத்துக்குச்சத்துருவாய் அதிலுந்தொண்டர்களை யிகழ்ந்துசெய்யப்படின் அதுசைவர்களால அநுசரிக்கப்படுமோ? திருஞானசம்பந்தசுவாமிகள், திருமங்கையாழ்வாரிடத்தில் வாதஞ்செய்துதோல்வியடைந்ததாக, வைணவர்கள், தங்கள்குருபரம்பரையில் எழுதிவைத்திருக்கிறார்களே. அதைப்பிரமாணமாகச் சைவர் அங்கீகரிக்கின்றனரா? அதையிவர் அனுசரித்துப் பிரமாணமாகக்கொள்வாரா? கொள்ளாரெனின் மாத்வர் நூலைமாத்திரம் பிரமாணமாகக் காட்டியது நன்றாமோ? தமக்கானாலொன்றும் பிறர்க்கானாலொன்றுமா? "மாமியாருடைத்தால் மண்பானை, மருமகளுடைத்தால் பொன்பானையா?" ஐயோபாவம்! இப்படிப்பட்ட குமார்க்கத்திலிந்தச்சூளைவாசி யேன்போகவேண்டும்? திருத்தொண்டர்புராணத்தைப்பார்த்தால் சம்பந்தசுவாமிகளுடைய மகிமை விளங்குமென்பதற்குப்பதிலாக, வைணவருடைய நூலைப்பார்த்தால் விளங்குமென்றுகூறினால் இவர்க்கு எவ்வளவு வருத்தமுண்டாகும்? இவருடையவருத்தத்தில் நூற்றிலொருபங்காவது "வாயுஸ்தவத்தில் சங்கராசாரியருடையமகிமை விளங்கும்" என்றுரைப்பதால் பிறர்க்குண்டாகாதா? இவர்க்குமாத்திரந்தானா? பிறர்க்குஅபிமானமிராதா? துன்பமென்பது எல்லாவுயிர்களுக்கும் பொதுவன்றோ? இவர்க்குமாத்திரம் துன்பம எட்டிக்காயும்வேப்பங்காயும், பிறர்க்கெல்லாம் முக்கனியும் பாலுங்கற்கண்டுமா? இனியேனும்

"அறிவினானாவதுண்டோ பிறிதினோய்
தந்நோய்போல்போற்றாக்கடை"

என்னும் திருக்குறளினுட்பொருளையுய்த்துணர்ந்து, இவ்விதமானபாரபக்ஷ வார்த்தைகளைப் பேசாதிருப்பாராக வெனவற்புறுத்திக்கூறுகின்றோம்.

'இராமகிருஷ்ணாதிகள் விஷ்ணுவினது அவதாரமென்பது சர்வஸம்பிரதிபந்நமாயினவாறு சங்கராசாரியர் சிவாவதாரமென்று பிரசித்திபெற்றால் மாத்திரமே நமதன்பரது மதம்மணம் பெறலாம்' என்று கூறியதற்கு விடைவருமாறு:—உருத்திரமூர்த்திக்கு அவதாரமுண்டென்று பிரபல பிரமாணங்களாயுள்ள சூதசங்கிதை, வாயுசங்கிதை, மார்க்கண்டேயபுராணங்களைக் காட்டினோமாகலின் நமது வாதம் மணம் பெற்றமைகாண்க. இதன்பேரில் விரிக்கிற்பெருகும் என்கிறார். எதைவிரித்தாலும் பெருகுந்தான். விரித்தாலெது விரியும்? உண்மை விரியுமா? இன்மைவிரியுமா வென்று பார்க்கவேண்டும். விரிப்பதுபெரிய காரியமல்ல. உண்மையை விரிப்பதே பெரியகாரியம். இன்மையை விரித்தாலிகழ்ச்சியேயாம். இவருடைய விரிவெல்லாம் உண்மையல்லாமற்போகின்றதால் அதாவது இன்மையாய்ப்போவதால்அதுபிரயோசனமல்லாமற்போகின்றது. இனியும் இன்மையைவிரிப்பாராயின் நாம் உண்மையை விரித்து இன்மையை இன்மையாக்கிவிடுகின்றோம். 'விரிக்கிற்பெருகும்' என்பதற்கு நாம் கொடுக்கும் பதிலிதுவேயாம்'—கடைசிப்பத்தியில் 'சங்கராசாரியர் தான் அச்சிவபத்தரென்று ஸ்தாபிப்பது நமதன்பருக்குத்தலைச்சுமையான பெரும்பாரமாயிருப்பதறிந்து அடங்கிவாழ்வாராக' எனப்பேசினார். இன்மையை புல்-

Koviloor Digital Library

மையாகஸ்தாபிப்பதற்குத் தலைச்சுமையேயன்றி உண்மையை உண்மையாகஸ்தாபிப்பதற்குத்தலைச்சுமையில்லை; வெகுஇலேசு தான். நீதிஸ்தலங்களில் பொய்ச்சாக்ஷி கூறுவோர்க்குத்தான் தலைச்சுமை: அவர்கள் மனம், என்றும் திடுக்குத்திடுக்கென்றடித்துக்கொண்டிருக்கும். மெய்ச்சாக்ஷி சொல்வோர்க்கு அப்படியில்லை. அவர்கள் மனமெப்போதுங் குதூகலமாகவேயிருக்கும். அவ்வண்ணமே நாம் சுருதி ஸ்மிருதி புராண இதிகாசாகமங்கட்கு விரோதமின்றி, அவற்றினுக்குக்கட்டுப்பட்டு வரம்புமீறாமல் அடங்கிப்பேசுகின்றோமாகலின்நமக்கு எக்காலத்தும் பயமில்லை. நாம் பதில்சொல்வதும் வெகு இலேசுதான்.

'கலியில் சிவன் நாலு சிஷ்யர்களோடு சங்கராசாரியராகப் பிறக்கப்போகிறாரென்று ஒரு வசனமிருப்பதாக மாயாவாதிகள் கூறுவதுண்டு. அதனையினி நமதன்பர் தேடிக்கொண்டு வரலாம்' என்கிறார். அவ்வாறு மாயாவாதிகள் சொல்வதில்லை. அத்துவிதிகளே சொல்லுகிறார்கள். அவ்வாறுசிவரகஸ்யமே சொல்லுகின்றதென்று இருபதாவது பத்திரிகையில் வரைந்தாம். அல்லவென்று சொல்பவர்களே மாயாவாதிகள். அவரிலிந்தச்சூளை வாயுமொரு மாயாவாதிதான். முடிவில் 'அவர் தேடிக்கொண்டுவரும வெவ்விதப்பிரமாணங்களையும் யாம் விசாரித்துக்கொள்ளச் சித்தமாயெதிர்பார்த்திருக்கிறோம்' என்று கூறி நிறுத்திவிட்டார். இவருடைய விசாரிப்புப்பயனற்ற விசாரிப்பாயிருப்பதால் அதைத் துகள் துகளாகவும் தூளாகவும் பறந்துபோகச்செய்ய விழிப்போடுசித்தத்திலும் வெகு சித்தமாய் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

சங்கராசாரியரது மகிமை தெரியவேண்டினோர் அத்துவிதத்திற்கு நேர்மாறான துவைதமத சித்தாந்தி மாதவாசாரியற்றிய வாயுஸ்தவத்தைப்பார்க்கக்கடவர் என்று கட்டளையிடும் இவர், சிவனது மகிமை தெரியவேண்டின் அம்மதத்தவர் செய்த நூலிலும் சிவமத விரோதிகளான முடிச்சூர் அப்பாவுமுதலியார் ஏகாங்கியார் முதலியவர் இயற்றிய நூல்களிலும் கண்டுகொள்ளவொருவர் இவர்க்குக்கட்டளையிடின் அப்படியே பார்த்து மகிழ்வாரா? மகிழாரன்றோ? இங்ஙனமே மற்றவர்க்குமிருக்குமென்றிவருக்கேன் தோன்றப்படாது?

இந்தச்சோமசுந்தரநாயகர்க்கு அத்துவிதமதத்திலெவ்வளவு துவேஷமும் அருவருப்பும் உண்டாய் அம்மதத்தைத்தூஷித்துத்தூராக்ஷேபங்கள் செய்தாரோ அவ்வளவுக்கும் அம்மதத்தின் நுட்பமான அர்த்தங்களெல்லாம் வெளிப்பட்டு அது சிறப்புற்றோங்குகின்றது. இந்த நாயகர் தூராக்ஷேபஞ்செய்யாவிடின் இவ்வளவு நியாயங்கள் வெளிப்படா. இத்தனைபேர் எழும்பி இவ்வளவு பேசமாட்டார்கள். தருமர் முதலிய பாண்டவர்,எல்லாராலுமிவ்வளவு நன்குமதிக்கப்படுவது அவர்களுக்கு அநியாயஞ்செய்த துரியோதனாதிகளாலே தான். சோ. நாயகர் தூஷிக்கிறார், தூராக்ஷேபஞ்செய்கிறாரென்றவரை அனேகர் குற்றங்கூறுகின்றார்கள். அது சரியன்று; உண்மையில் அவரே அத்துவிதமதத்தின்பெருமையை விளக்கினவரென்றுசொல்லவேண்டும். அவர் முன்பு அத்துவிதியாயிருந்து ஸ்ரீசங்கராசாரியரையும் புகழ்ந்து துதித்திருக்கிறார். அவர்க்கு ஏதோ இடையில்சிலதுர்க்கருமங்கள் வந்து அதன் வலியிலகப்பட்டுக்கொண்டு அம்மதத்தையும் அம்மதப்பிரவர்த்தகரையும் தூஷிக்கும் சுபாவத்திலிறங்கினர். இனியாவது கொஞ்சம் நல்வினை வந்து கூடுமானால் இவ்வாறு தூஷிப்பது குற்றமென்று பட்டு அக்குற்றத்தினின்று மீளுவார். இல்லையேல் அவருடைய ஜன்மம் பயனில்லாப்பாழ்ஜன்மமென்றே சொல்லவேண்டும்.

ஓர் இந்து.

அரக்கோணவாசியார் அந்தணர்விளக்க மறுப்பின்மேல் மறுப்பு.

(௩௫௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி இந்தயுகத்தில் பிராமணனும் பிராமணஸ்திரியுங்கூடிப்பிறந்தவர்களே பிராமணராவாரென்று கூறுமிவரது துணிவையிவரே துணிந்துவிட்டுப், பூர்வயுகத்தில் க்ஷேத்திரம் பிரதானமன்று எனத்துணிந்து கூறியதனால், இவருக்கொரு நஷ்டமுமுண்டாயினதில்லையன்றோ? அதனாலிவர் க்ஷேத்திர முக்கியத்தைத்தியஜித்ததுபோல், பீஜோத்கிருஷ்டத்தையுந்தியஜித்துப், பிராமணத்வ சித்திக்குத்தவமே காரணமெனக்கொண்டாலிவருக்கொருதோஷமுமுண்டாகாதென்பதுஎமதுகருத்து என்று எமக்கு அறிவுபுகட்டப்புகுந்தார். அங்ஙனமறவுபுகட்டப்புகுமுன், அதனைச்சற்றுக்கூர்ந்து யோஜித்திருந்தால், அவருக்கு நன்மையாயிருந்திருக்கும், அவ்வாறின்றி வெளிவந்தேயெமதிறகுக்கு வீண்வேலை வைத்தாராயிற்று.என்னெனில், பூர்வயுகங்களில் க்ஷேத்திரம் பிரதானமன்று, பீஜமேபிரதானமென்று யாமேகூறினேம்? இந்தயுகத்தில் பிராமணனும் பிராமணமாதுங்கூடிப்பிறந்தவர்களே பிராமணராவாரெனக்கூறியதும்எமதுசிற்றறிவுக்கெட்டியதுகொண்டோ? அற்றன்று,ஸ்மிருதி, புராண, இதிகாசங்களில் முழங்கப்படுவதனையேயன்றோ யாமேற்கோளாகவெடுத்தாண்டோம். நூலாராய்ச்சிக்கும் இவருக்கும் வெகுதூரமாதலால், அவற்றையெமது கருத்தாகக்கொண்டு இடர்ப்பட்டார். அவ்வாறே க்ஷேத்திரமுக்கியத்தைத்தியஜித்ததும், பீஜோத்கிருஷ்டத்தைத் தழுவியதும் உண்மைநூல்களேயாம். யாமவற்றையே கடைப்பிடித்தொழுகுகின்றோம். அதுவே சான்றோர்துணிபும், சன்மார்க்கமுமாம். அதனைக்கைவிட்டு நமதன்பரது பயனற்றகருத்தையாம் ஏன் தழுவவேண்டும்? பிராமணத்வசித்திக்குப்பூர்வ ஜன்ம தபோபலத்தையே நூல்கள் தழுவியபடி யாமுங்கைக்கொள்கின்றோம். ஆகாமியகர்மம் மேல் வரும்பிறப்புகளுக்கு வித்தாவதன்றிப், பிராரப்த கர்மத்தைப்போக்கும் வலிமையுடையதன்று. ஆதலாற்பிறப்பிலில்லாதபிராமணத்வம் செயற்கையாலுண்டாமென்பது,பெரிதும் பேதைமையாமென்க.இவர் தம்மைபிரம, விஷ்ணு,ருத்திராதிதமாகிய நிஷ்களசிவமாகக்கருதியும் மக்சட்கிரங்கி நூதனவேதமளிக்கப் பூவுலகில் அவதாரஞ்செய்தாராகவும் மயங்கினார்போலும். அன்றேல்,'எமது கருத்து' என்று துணிந்துகூறார். இனி அவ்வாறு மயங்காது, வேதவேதாங்காதி உண்மைநூல்களின் கருத்தைத்தழுவி நடந்தால், நமதன்பருக்கு மிகுதியும் நன்மையுண்டாமென்பதில் யாதுந்தடையில்லையாதலால் யாங்கூறியதைத்தழுவி நடந்துசுகிக்கும் வழிநாடுவாராக.

'நமது பிரதிவாதியார் வியாசர் விஷ்ணுவினவதாரமென்று பூஷித்தார். அதனால் வியாசர்க்குப்பிறப்பினாலாயதோஷமுண்டாதலும், தவத்தினாலாய பிராமணத்வம் வருதலும் மறுக்கப்படமாட்டா. வியாசர் பூஜாலொடுபிறந்தமையால், அவர் பிறக்கும்போதே பிராமணரென்றுவாதித்தார். அவ்வியாசருக்கு மூலபுருஷராயிவரங்கிகரித்த விஷ்ணுவோ க்ஷத்திரியர். அவர் தவத்தினாற் பிராமணராயினாரென்பதே இனியமையும். இனியாமொன்று கூறுகின்றோம். துரோணபுத்திரராகிய அசுவத்தாமர், வருகிற துவாபரயுகத்தில் வியாசராகப் பிறக்கப்போகிறாரென்று பாரதம் கூறுகின்றது. அன்றியும் பல வியாசர்கள் நூல்களிற் கேட்கப்படுகின்றார்கள்' என்று கூறினார். பிறப்பினாலாய தோஷமின்னதென்று விளக்கினாரில்லை. தவத்தினாலாய பிராமணத்வமென்றமையால், பிறப்பினாலாய தோஷம் சூத்திரத்வமெனக்கொள்ளப்படுகின்றது. எல்லாருஞ்சூத்திரத்வதோஷத்தையெய்திப் பிறப்பதற்கு, எல்லாருஞ்செய்த்ததகர்மமியாது எனக்கடாயினார்க்கு இவரளிக்கும் விடை

Koviloor Digital Library

யாது? பிறப்பினுல் சூத்ரத்வதோஷமுண்டு என்றுரே. அத்தோஷத்வமில்லாத பிறப்புமுண்டென உண்மைநூல்கள்கூறுவதற்கென்செய்வார்? போகநுகர்ச்சியிற் பலதிறப்பட்டிருக்கும் பூர்வகர்மம், பிறப்புவிஷயத்தில் யாவருக்குமொத்திருக்குமென் பதுசர்வாபத்தமென்க. தோஷத்தோடுபிறந்த தேகமும்ஒருபோதும் பரிசுத்தமாகாதென்க. நன்மை தீமையாகா தீமை நன்மையாகாவாதலாலென்க. வியாசர் சூத்திரராகப்பிறந்திருந்தால், அவர் ஒருபோதும் பிராமணராகாது எப்போதும் சூத்திரராகவேயிருப்பார். அவர் தோஷசம்பந்தமாகிய சூத்திரசரீரத்தோடுபிறவாது,தோஷரஹிதமாய்ச்சிறந்தபிராமணத்திருமேனிகொண்டே பிறந்தாரென்று விளக்குதற்கே, அவர் பூணூலோடுபிறந்தாரென்றுகூறினும். அதை மறுக்கவகையறியாது வியாசர்க்கு 'மூலபுருஷராகிய விஷ்ணு க்ஷத்திரிய' ரென்று கூறியொழிந்தார். இதனுலிவருக்கென்னலாபங்கிடைத்ததோ தெரியவில்லை. என்னெனில், எமக்கும் அரக்கோணவாசியாருக்குஞ்சேர்ந்தயாதும் பூலோகத்துட்பெறப்பட்ட மக்கட்டொகுதியுட்போந்த வருணபேதங்களைப்பற்றியேயன்றி, இதரவுலகவாசிகளைப்பற்றியன்று. விஷ்ணு க்ஷத்திரியரெனறதனுல், இவ்வுலகமேயன்றி ஏனையவுலகங்களும் வருணபேதங்களையொப்பினவென்று, எமக்கு நினைப்பூட்டினராயிற்று. இதனுல் வருணச்சிரமபேதம் அநாதியிலேயுண்டு, சமஸ்தலோகத்தாரும் அதனைக்கைக்கொள்ளவேண்டுமென்றவாருயிற்று. தேவர்கள் கூடவர்ணுச்சிரம பேதங்களையொப்பிநடக்க, நமதன்பருக்குமட்டுமது கசப்பாயினது அவரதுபூர்வஜன்மகர்மபலமேயாம்.பூர்வஜன்மத்தில் வியாசர் க்ஷத்திரியராயினுமாகுக. வைசியராயினுமாகுக. இச்சன்மத்தில் அவர் சூத்ரரா? பிராமணரா? என்பதே எமது வாதம். அவர் ஜாதிப்பிராமணரென்பது எமது நிர்மானம். அதனை மறுத்து அவர் கர்மப்பிராமணரென்று நாட்டுவது, அரக்கோணவாசியாரது மதம். சூத்திரனுகவேபிறந்து, சம்ஸ்காரத்தினுல் துவிஜனுகி வேதமோதிவிப்பிரனுகி, ஞானமெய்திப்பிராமணனுகவேண்டு மென்பது நமதன்பரது தர்க்கவரம்பு. வியாசர் சம்ஸ்காரம்செய்யப்பெற்ருரென்பதற்காதாரமின்மையால் அவர் துவிஜராயினதில்லை. வேதமோதுவித்த ஆசிரியன் கேட்கப்படாமையால், விப்பிரராயினதில்லை. மேற்கூறியவையின்றி ஞானப்பேறின்மையால், அவர் பிராமணராயினதுமில்லை என்று யாம் கூறுகின்றேம். அதனை மறுத்து வியாசர் கர்மத்தினுல்பிராமணராயினதைச்சாதித்துக்கொள்ளட்டும் பார்ப்போம். அவர் பிராமணராதற்குரிய கர்மங்கள்செய்யப்பெருமையும், பிராமணரெனக்கொள்ளப்பெறுதலும் நூற்றுணிபாதலால் அவர் பிறப்பதற்கு முன்னரே உபநயனதி சம்ஸ்காரம்பெற்று, ஜன்மத்திலேயே பிராமணராகப்பிறந்த பெருந்தகையாரென்றே துணியப்படுதலால், அவர்க்குப்பிறப்பினுலாய தோஷஞ்சிறிதுமில்லையென்க. நமது அன்பர்கருத்தைத் தழுவினும்,விஷ்ணுக்ஷத்திரியரேயன்றிச்சூத்திரராகாமையால் அவரது பிரயாசம் வீண்பிரயாசமாயிற்றென்க. வியாசரது கர்மபிராமணத்வத்தைச்சாதித்தற்கு விசுவாமித்திரர் க்ஷத்திரியராயிருந்து, தமது உடல் மாறுபடாமலே, தவத்தினுலேயே பிராமணராயினர்' ரென்பதைத்திருஷ்டாந்தங்காட்டினர். விசுவாமித்திரர்சூத்திரராய்ப்பிறவாமலேக்ஷத்திரியராய்ப்பிறந்ததற்குக்காரணம்விளக்காமற்போனர்.அவருமகரிஷிதமது தபோமகிமையால், பிரமதேஜஸை ஆவாகனஞ்செய்திருந்த ஓர் விருட்சத்தை விசுவாமித்திரர் தாயார் அணைந்து, அதனுலே கருத்தரித்து விசுவாமித்திரரைப்பெற்றதாகஉண்மைநூல்கள்கூறுதலால், அவரும்வியாசரைப்போலவே பூஸ்பரிசமாகுமுன்பிராமணராயிருந்தாரென்பதேசத்தியமாதலால், நமதன்பரது திருஷ்டாந்தமெமக்குப்பெரும்பயன் விளைத்ததென்க.விசுவாமித்திரர் பிறப்பை விசாரியாமல்வெளிவந்ததேநமது தோழரதுவிபரீதவுணர்ச்சிக்கிடமாயிற்றென்க. வருகிற துவாபரயுகத்தில்அசுவத்தாமா வியாசராவாரென்றுரே.இதென்னபேதைமை.இவர்தியாசனையில்லாதவீண்கேள்விகட்கெல்லாம் விடையளிக்க நேரிட்டதேயென்றுவருந்துகின்றும்.சென்றதுவாபரயுகத்தில் பிறந்த வியாசரையேயன்றே நமதன்பர் குறைகூறினர். அதனையேயன்றே யாம் பல படியாலும் பரிகரித்தோம். அதனைவிட்டு வருகிற துவாபரயுகத்தை யாம் கவனிக்கவேண்டிய அவசியம் இப்போது நேரிட்டது யாது? நமது அன்பர் தமது பட்சத்தை நிர்மூலப்படுத்திக்கொள்ளவே போலும் அசுவத்தாமர் சூத்திரரும்,க்ஷத்திரியருமாகாமல் பிராமணரென்றே பாரதாதிநூல்களில் கூறப்படுதலால் அவர் வருகிற துவாபரயுகத்திலும் ஜாதிப்பிராமணராகவே பிறப்பாரென்பது நிர்ப்பாதிதமாய்க்கொள்ளப்பெறுவதையுணராமல் அவரை எடுத்தாண்டது வியர்த்தமாயினமைகாண்க. இனி நமதன்பர் வருகிற கலியுகத்திலும் அரக்கோணவாசியாராகவே பிறந்து எம்மோடுவாதாட வருவதாகத்தீர்மானித்து அசுவத்தாமரை முன் அஸ்திபாரம் போட்டுவைத்தார்போலும். அக்கலியில் யாம் பிறப்பெடுப்போமென்று நம்பிக்கையின்மையால் அதற்குமிப்பொழுதே விடையளித்தும் விட்டோம். இதனைக்கொண்டேயப்பொழுதுந்திருப்தியடைவாராக. பல வியாசர்கள் கேட்கப்படுகின்றர்களென்றர். அவர்களெல்லாரும் ஜாதிப்பிராமணர்களென்றேயாந்துணிந்துகூறுகின்றேம். நமதன்பர் கேள்விப்பட்ட பல வியாசர்களுள் ஒருவராயினும் சூத்திரனுக்கும் சூத்திரப்பெண்ணுக்கும் பிறந்து கர்மத்தினுலே பிராமணராயினுரென்பதற்குத்தக்க நூற்பிரமாணங்கிடைக்குமளவும் அதனைமுற்றுமறந்துவிட்டிருப்பாராக. வியாசர் பிறப்பினுலேயேபிராமணரென்பதையும்(வியாச:கைவர்த்தகந்யாயாம்.) என்றசுருதியர்த்தமின்னதென்பதையும் பல பிரமாணங்களைக்கொண்டே நிரூபித்தோமாகையால், அவரைப்பிறப்பினுலேசனகுலத்தார் என்று பிரசங்கித்துவரும்நமதன்பர்க்கே நிரயத்துன்பப்பிராப்தமாவதன்றி உண்மையைப்பிரகாசப்படுத்திச்சத்தியத்திலேயே நிலைநிற்குமெமக்காவது நமதன்பர் கருதியவண்ணம் ப்ரம்மஸ்ரீ சாஸ்திரியாரவர்களுக்காவது நிரயத்துன்பமென்பதுசொப்பனத்துமில்லையென்றேதுணிக. இத்துணைப்போதுங்கூறியதெற்றுக்கோவென்னில் நமதன்பர்பூர்வயுகங்களில் பீஜபிரதானங்கொண்டதுதவறெனவும் சர்க்கர் முதலாயினர்பிராமணனும்பிராமணமாதுங்கூடிப்பிறவாமையால்அவர்களிடம்ஜாதிப்பிராமணத்வமில்லையென்றும் அவ்வாறு யாங்கூறியது ஏதோ எமதுபட்சத்தையே நாசஞ்செய்துவிட்டதாகவுங்கூறி மகிழ்ந்தார். யாம் கூறியவையெல்லாநூற்பிரமாணவலிமைகொண்டாதலால்அது நமதன்பரது யுக்திப்பிரமாணத்தால் எள்முனை கூடப்பேதிக்கப்பட்டதில்லையெனத்தெருட்டிஅவரது மயக்கவுணர்ச்சியை மாற்றுதற்கேயாம்.

'கும்பத்திற்பிறந்ததையும்கரிக்குருவியினிடம்பிறந்ததையும் அயோனிஜத்வமாகக்கொண்டு இருடியற்கு மேன்மை கூறிய துந்தவறுடைத்து· இவரதுமதத்தைபொப்பின் கல்லிலே பிறக்குந்தேரைக்கும் வேர்வையிலே புழுக்கும் பேன் முதலியவைகளுக்கும் அயோனிஜத்வங்கூறமுந்துவரிவரது சகோதரர்' என்று கூறினர். இதனையவரோ சற்றுக்கூர்ந்து யோஜித்திருந்தால் அவருக்கே யுண்மைவெளிப்பட்டிருக்கும்.அவ்வாறன்றி அவசரப்பட்டு வெளிவந்ததே எமக்கு வீண்வேலைவைத்தற்கு இடமாயிற்று. என்னெனில் கல்லிலே தேரை பிறப்பதும் வேர்வையிலே பேன் ஜனிப்பதுமியற்கையென்றுணராமையாம். அவை வேறுவகையாகப்பிறப்பதில்லை.பவேர்வைமுட்டைநிலம்எனச்சகலஜீவர்களுக்குந் தோற்றுவாய் கூறியிருத்தலையிவருணரார்போலும். அவை ஒன்றிலொன்று மாறிப்பிறவாவெனபது சாஸ்திரசம்மதமாதல் அறியார் போலும். இயற்கைப்பிறப்புக்கும் இயற்கைக்கு மாறுபட்டதெய்வப்பிறப்புக்கும் பேதங்கண்டறியார்போலும். ஸ்ரீகாந்தன் நரசிங்கவடிவமாகத்தூணிற்பிறந்தமையால் அவரது தெய்வத்தன்மை குறைவாயினதில்லையென்பதுங்கேட்டறியார் போலும். கடமுதலிய அ

Koviloor Digital Library

றிணைப் பொருள்களினிடமாயும் மானிடர்பிறப்பதும்பாவதம
மென நூற்பிரமாணங்காட்டிவெளிப்பட்டமலன்றிமதன்பரது
வாதம்மனம்பெருமெதன்க. மனிதர் பிறக்கவேண்டிய சுபாவ
விதிக்குமாறாகக் கடத்தினிடத்தும் பறவையினிடத்தும் பிற
ந்த சிறந்தபெருந்தகையாரைத் தெய்வத்தன்மையுடைய
அயோனிஜர்களென்று பிறர்கூறுவது? கும்பத்தினி
டம் பிறந்தவரையும் கிருவியினிடம் பிறந்தவரையும்மன்
னறிணையிலடக்கக்கூறுவது? அஃறிணையென்றே கூறவேண்
டும். அங்ஙனங்கூறுதற்கு அப்பெருந்தகையாரது திருவுருவ
மும் அவரது பேரியுமிடந்தராது. உயர்திணையென்றற்கு
அவர்களது உற்பத்தியைமாறுஞ்சார்பாகாது. உயர்திணையில்அஃ
றிணை பிறவாது. அஃறிணையிலுயர்திணை பிறவாது. இருதிணை
யமொருதிணையாகாது. அவர்களை இன்னதிணையிலடக்கக்கூறு
வதென்று நமதன்பரே சொல்லட்டும். இருதிணை நால்வகைத்
தோற்றங்கட்குமப்பாற்பட்டிருக்கும் அப்பெரியாரைத்தெய்
வத்தன்மையுடையாரென யாங்கூறியதுஒருபோதுந்தவறுபடா
தென்க. இனி யிதனைமறுத்தற்குத் தக்க யுக்திப்பிரமாணங்
களைத்தேடநமதன்பர்கலைகொண்டுபுறப்படுவார்போலும்?அங்
ஙனமாயின் அதனைத்துண்டு துண்டாகத்துணித்து வீழ்த்தி
யெமது உண்மையை நிலைநிறுத்தும் வல்லமை எமக்குண்டெ
னபதைச்சற்று யோசித்து இனியேனும் வீண்வழக்குகளிற்
றலையிடாது சுகிக்கும் வழி நாடுவாராக.

"இனி வசிட்டர் வேசியவயிற்றிற் பிறந்தாரென்று, வேதா
கமபுராணங்களி லெங்காவது கூறியிருக்கின்றதா வென்
றுகேட்டு, ஒருபாட்டைத் திட்டிமலைவித்தார். வச்சிரசூசி
கோபநிஷத்தில், "பிராமண.நாமகோவா" என்று ஆசங்
கித்து, விசாரிக்கும் பகுதியில், "கிம்ஜாதி:" என்றுபிரவச
னித்து,ஜாதியாபிராமணனென மறுத்தமையாலும், அங்ங
னமறுக்குவருங்கால் 'வசிஷ்ட:ஊர்வச்யாம்' என்றுபிரஸ்
தாபித்து, வசிஷ்டர் ஊர்வசியினிடம்பிறந்ததை யொப்பி
னமையாலும், நமதன்பர் பிராமணன்பிறப்பிலுயர்ந்தானெ
ன்பதும் உலகை வஞ்சித்ததாகவேமுடிந்தது. இந்த உபநி
ஷத்தையழிக்க இவர்தேடியபாட்டு வலியற்றதென்பதிலோ
ராட்சேபனையுமில்லையென்று (தம்மை நியாயாதிபதிஸ்தா
னத்தில் வைத்துக்கொண்டு) திர்மானஞ் சொல்லிமுடித்
தார். எதிரிபட்சத்தைநோக்காது பொதுவில் திர்மானங்
கூறிபதுமட்டுந்தவறு. என்னை? வேதவாக்கியார்த்தவுண்
மையையுணர்தல்உபபிரம்மணங்களின்உதவிகொண்டன்றி
ஒருபோது முடியாது. உண்மையுணர்தல் எளிமையாகா
மையாற்றானே உலகத்தில் அளவிடப்படாத மதங்களுண்டா
யிருக்கின்றன. 'இதிஹாஸபுராணாப்யாம்வேதாந்தர்த்த:ப்
ரகாச்யதே' என்ற உபநிஷத்தும் எமக்குச் சாட்சியாகின்
றது. இதிஹாஸ, புராணாதிகளைக்கொண்டன்றிச் சுருதி
யார்த்த நிச்சயம்பண்ணுதல் கூடாதென்று, பெரியோர்க
ளும் கூறுகின்றார்கள். உபப்பிரமணங்கள் வேதத்தொடு
முரணியவழி அப்பிரமாணத்வமெய்துமேயெனின், சத்தி
யமே; வேதத்தொடு முரணுதவழி சப்பிரமாணமேயாமெ
ன்க அதுகொண்டேசகலபெரியோர்களும், ஸ்மிருதி, புரா
ணாதிநூல்வலிமையாலேயே வேதார்த்த நிரூபணஞ்செய்தி
ருக்கிறார்கள். யாமும் அப்பெரியாரைத்தழுவியே, 'வசிஷ்
ட:ஊர்வச்யாம்'என்று வச்சிரசூசிகோபநிஷத்தில் சுருங்க
ச்சொல்லியிருப்பதை விளக்க எழுந்ததாகிய ஓர் இராமாய
ணச்செய்யுளையெடுத்துக்காட்டினோம். அது நமதன்பரதுக
ருத்துக்கு விரோதமாயினமையாற்றானே, அதனைச் சுருதிவி

ரோதமெனக்கழித்தார். இதனால் நமதன்பரது கருத்தும்
சுருதிக்கருத்தும் ஒன்றெனச்சாதிப்பதாக அவரதுபேராசை
போலும். வேதத்துக்கொத்தபடி. அர்த்தம்பண்ணாமல்தம
துசமயத்துக்கொத்தபடி அர்த்தம் பண்ணிக்கொள்வதாலே
அதுவு நிறைவேறியதுபோலும். யாங்காட்டியஇராமாயண
ச் செய்யுள் ஷை சுருதிவாக்கியத்தோடொத்திருத்தலை மத்
தியஸ்தபுத்தியுடையார் கண்டுகளிப்பார்கள். இவர்க்கு பட்
டும் மலைவிசுதசாகர்கண்டது இவருள்ள மலைவொழியா வி
யற்கையாளராயின் அதற்குபார்தாமென்செய்பலாம். குரு
டன்கண்ணுக்கு ஒளியிருளாககாணப்படுதல் யார்குற்றம்;
கண்குற்றமேயன்றி ஒளியின்குற்றமாகாதவாறுபோல,யாமி
வரது உள்ளமலைவினைமாற்றுவதற்குக்காட்டிய செய்யுள்,
நமதன்பரது மையலொழியாவுள்ளத்துக்கு மலைவாகக்கா
ணப்படின், அது அவரது உள்ளத்தின்குற்றமாகக் காணப்
படுவதேயன்றி யாமென்செய்வோம். இச்செய்யுளைக் கற்
பனுவாக்கியமென்று கழித்தபண்டிதர், கம்பன்சொன்னது
தாமோ அன்றிவேறெந்த அசட்டுக்கவிராயன் குளறிவழிந்
ததோவென்று இவருக்கேசந்தேகத்துக்கிடமாயிருக்கின்ற
'முட்டிபுகும்பார்ப்பார்' என்றுதொடங்கிய ஓர் மூதேவிச்
செய்யுளைமேற்கோளாகக்கொண்டார்; இவர்பிரமாணங்கொ
ண்ட முட்டிவாசகம் எந்தச்சுருதிவாக்கியத்தோடொத்திரு
க்கின்றது. இத்துடனேவிடாமல், வசிட்டர் ஊர்வசிக்குப்
பிறந்தானென்றுசாதிக்கப்புகுந்து, 'பிரமற்குக்கூத்திவயிற்றி
ற்பிறந்தவசிட்டனும்' என்று கபிலன் கூறியதை எடுத்து
க்கிறுக்கிவிடுத்து, இதுஎன்னவதென்றார். அவ்வசனமோ
கபிலன் தன்னையீனஜாதியானென்று உபநயன ஸம்ஸ்கார
ஞ்செய்யச் சம்மதியாதபிராமணர்களை, வயிற்றெரிச்சலால்
தூஷித்து மகிழ்ந்ததாகியவோர் குருட்டுச்சுவடியிலிருக்கி
ன்றது. அதனை நமதன்பரும், அவரினத்தவருமேயன்றி
வேறொருவரும் மேற்கோள்கொண்டிலர். அன்றியும் முன்
னர்க்காட்டிப்போந்த தேவர்வாக்கொடு மாறுபட்டு நிற்கின்
றது. இதனை 'வசிஷ்ட:ஊர்வச்யாம்' என்றவேதவாக்கி
யார்த்தமாய் விளங்குவதென்றார். மேற்கண்ட வேதவாக்கி
யம் வசிட்டர்ஊர்வசிக்குப்பிறந்தானென்றுகூறியதேயன்றி
வசிஷ்டர் பிரமனுக்குக் கூத்திவயிற்றிற்பிறந்தானென்றுபொ
ருள்கொள்ளஇடந்தராமையால்,கபிலன் கூறியதுவேதார்த்
தமென்பது,பேதையர்கொள்கையேயாம்.யாம்காட்டியசெய்
யுள், வசிட்டர் ஊர்வசிக்கு எவ்வாறு புத்திரராயினரென்
பதைவிளக்குதலாலதுவே சுருதிசம்மதமென்பதுவல்லோர்
வாய்க்கேட்டுத்தெளிக. இந்த அபஸ்மாரவசனத்தை யாதா
ரமாகக்கொண்டு பிராமணர்களைச் சூத்திரராக்க மூயன்ற
தோஷமேயன்றோ நமதன்பர் தமதுமரபினரையெல்லாம்
புலையரெனஸ்தாபிக்கப்பட்டதூஉமென்க. இதனையுய்த்து
ணரப்பெற்ற அவரதுமரபினரேயவரைக் கைவிடப்பின்னி
டையாரென்றுணர்க. நமதன்பர் இவ்வாறுபிரசங்கித்துஉத
வியாகநிற்பாரென்பது கருதியே சென்னையில் ஆதிதிராவி
டசபைஏற்பட்டதூஉமென்க. இவ்வாக்கியமென்னவதெ
ன்றார். கூட்டிப்பெருக்கிக் குப்பையிலேதாக்கப்படுவதெ
ன்று யாமறிந்தமட்டும் விடையளித்தோம். இன்னுங்கற்று
வல்லமேலோரையடைந்துத்துணர்ந்துகொள்க. இனியே
னும் இவ்வித வீண்வழக்குகளிற்றலைப்பட்டிடாப்படாதசுகி

க்குர்வழி தேடுவாராக. நமதன்பர்காட்டிய சுருதியிலுமே அவரது கருத்துப்போலவே வசிட்டர் ஊர்வசி கர்ப்பாசயத்தில் பத்துமாதங்கிடந்து புழுங்கிப்பிறந்தாரொன்று பெறப்படாமையாலும், கபிலன் கருத்துப்போலப் பிரமனும்ஊர்வசியுங்கூடி வசிட்டனைப்பெற்றாரொன்று கொள்வதற்கிடமின்மையாலும், அவர் சக்கிலிச்சி தோள் புணர்ந்தமையான் மேம்படாமையாலும்அவற்றைவேறுநூற்பிரமாணங்கொண் சாதிக்கவலிபற்றுப்போயினமையாலும்யாம்காட்டிய பருந்தவர்தம்மை என்றுதொடங்கியஇராமாயணச்செய்யுள் அச்சுருதிவாக்ய அர்த்தத்தை விளக்குகின்றமையாலும், அதுசான்றோர்கொள்கையாதலாலும்,யாம்கூறியதேசத்தியமெனத்தெளிக. ஒருக்கால்அவர் வேறுவசிட்டராயிடுதலேநியதமென்றார். அதற்குப்பிரமாணங்காட்டாமையாலே, பிரமன்முகத்திற்பிறந்தவசிட்டரேயவரொன்றுயாம்துணிந்துகூறுகின்றோம்.நமதன்பரேயதனைமறுக்குங்கடைவகுத்தவர். இதனால் வசிட்டர் ஊர்வசிகருப்பாசயத்திற்கருப்பந்தங்கிபிறந்தாரில்லையென்றும் ஊர்வசிகாதல் காரணமாக வெளிப்பட்ட வருணவீரியத்தால், உடலங்கொண்டு, கும்பத்தினின்றும் ஜனித்த தெய்வீகப்பிறப்புடையாரொன்றுங் கூறிய, எமதுபட்சம்சுருதிவிரோதமன்றெனவினிதுசாதிக்கப்பட்டதுகாண்க வஷ்டூபநிஷத்து,ஜாதியாபிராமணனென்று மறுத்தமையால், ஜாதிப்பிராமணரில்லையென மறுத்தார். ஜாதிப்பிராமணரில்லாதபட்சத்தில்ஜாதியாபிராமணனென்றுசுருதி ஆசங்கித்ததேதன்? இல்லாததை, உள்ளதுபோல ஆசங்கித்து அதனைமறுப்பது அறிவினர் செயலேயாம். ஜாதியா பிராமணனென்றுகூறிப் பின்னர் அதனை மறுத்தமையாலேயே ஜாதிப்பிராமணருண்டென்பது, அச்சுருதிசம்மதமாதலைத்தருங்கநூல் வல்லார்பாற்கேட்டுணர்க. இதனாலே ஜாதிப்பிராமணரில்லையெனச் சாதிக்கப்புகுந்தநமதன்பரது பேராசை வீணாசையாயினமைகாண்க. அவர்காட்டியசுருதிவாயிலாகவே ஜாதிப்பிராமணத்துவ சித்தியினிதுபிரகாசித்தலால், அதனையன்றென்றுமறுப்பது நன்றன்றாமென்க. யாங்கூறியவெல்லாம் சுருதிசம்மதமாகவேவிளங்குதல்சத்தியமாகலின் உலகைவஞ்சிக்கமுயன்றார் இன்னாரெனக்கல்விமான்கள்கண்டு கொள்வார்களென்பது.

'நமதன்பரது சித்தாந்தம் பிறப்பினாலுயர்தவரோ பிராமணரென்றுபோதித்தலால், அவர்கள் செய்கையினாற் பரதுஷ்டராயிருந்தாலும், அந்தத்துஷ்டர்களையே பூஜ்யராக வணங்கு வினியாம் சொள்ளவேண்டியிருக்கின்றது' என்றுகூறிச் சோனாமேகம்போல நிந்தனைமொழிகளைக்காகளவென்று பொழிந்து மகிழ்ந்தார். முதல் வருணத்துதிப்பதும், அதனிற்கீழ்ப்பட்ட வருணத்திற்பிறப்பதும், பூர்வஜன்மகிருதமாயுள்ள நல்வினை, தீவினைகாரணமாகவேயென்பது சாஸ்திரசம்மதம். பூர்வகர்மவிசேஷத்தால் பிராமணனாய்ப்பிறந்தானை பூர்வ கர்மபினதால்சூத்திரனாய்ச் சனித்தவன்வணங்குதலுஞ்சாஸ்திர சம்மதமேயாம். அங்ஙனம்பணிந்தொழுகுதல் பூர்வஜன்ம கர்மமேன்மைதாழ்மைகளை நோக்கியேயாதலால்,இப்பொழுதுசெய்யும்செய்கைகளைப்பற்றியாம்கவனிக்கவேண்டியதில்லை.அவைவருகிற ஜன்மமேன்மைதாழ்மைக்குவித்தாதன் மாத்திரைக்கேபயன்படுதலாலென்க.

'ஜாதிப்ராம்மணம் ஹத்வாகார்யா பூர்த்திகரஞ்சன
அவத்பல்மைவபூதா காப்ராம்மணோஷ்ய நிலையம:'
'யஸ்மிந்கண்டேபஜப்ராப்மிதாம்கிர்ணைபடி சய்யதா
தமேநங்காரயத்புதா தாப்விதயாத்ப்ராப்யணர்ஷபம்'

என்றபாரதவசனத்தால் பிராமணன். ஹீனகர்மம புரிந்தானாயினும், அவனது பிராமணத்துவம் போய்விடாதென்றுவிளங்குதலாலுங்கண்டுதெளிக. அவ்வாறேசூத்திரன் நற்கிரியை செய்தானாயினுமவனது, சூத்திரத்துவமவனைவிட்டொருபோதும் விலகுவதில்லையென்றுதெளிக. அந்தந்தயுகங்களிற்பிறக்கும் வஸ்துக்களுக்குப் பலம், நிறம்,பெருமை முதலானவைகள் அத்தயுகத்திற்கீடாக உண்டாகின்றன என்று பாரதங்கூறுகின்றது.

இதனானும், கலிதர்மபரிசிலனையானும்,நாலுவருணத்தாரும், கலியுகவல்லமைபால் தங்களாசாரஙகளில் வேறுபட்டிருப்பார்களென்பது தோன்றுகிறது. அவர்கள் அவ்வாறு நடப்பது யுகஸ்வபாவமாதலால், அவர்களை நிந்தை கூறலாகாதென்பது நூல்களின்றுணிபு. பிராமணர்கள் தங்கள் குலாசாரநிலைதவறினும் அவர்களைக்கீழ்ப்பட்ட மூவருணத்தாரும், குறைகூறலாகாது பூஜ்யராகவேகொள்ளவேண்டும். ஏனெனில்பிராமணர்களைப்போலவே, க்ஷத்திரியாதி மூவருணத்தவரும் கலியுகமகிமையாற் குறையடைந்துள்ளாரென்பது நூற்றுணிபும் பிரத்தியக்ஷமுமாதலாலென்க. இனி 'யுகேயுகேதுயேதர்மா' என்றவசனத்தால் யுகங்கள்தோறும் தர்மங்கள் வேறுபட்டிருத்தலால் பிராமணர்கள் அந்தயுகத்துக்குக் தக்கவர்களாயிருக்கின்றார்களாதலால் அவர்களை நிந்திக்கலாகாதென்று பராசரஸ்மிருதிகூறிற்று. அன்றியும 'துச்சீலோபித்விஜ:பூஜ்யோநதுசூத்ரோஜிதேந்திரிய:' என்றவசனத்தால் பிராமணன் ஆசார துஷ்கிருதியுடையவனாக விருந்தபோதிலும் பூஜிக்கத்தக்கவனேயாம. சூத்திரன் இந்திரிய நிக்கிரகம்பண்ணி ஆசாரமுறைதவறாதவனாகவிருந்தபோதிலும் பூஜிக்கத்தக்கவனாகான். என்றபராசரஸ்மிருதியே கூறுகின்றது. இவ்வாறு பலநூல்களும் புகல்கின்றன. ஆதலால் பிராமணர்கள் துராசாரகிருத்தியமுடையராயினும் அவர்களை, வைதிகவாமபுகடவாத சூத்திராதியோர் நிந்திக்கலாகாதென்று நூலவவிகொண்டு கூறுகின்றோம். பாசமறுத்துவீடுபெறநாடும் புண்யாத்மாக்களாயுள்ள சூத்திரர்களேபோவுன்னிலையைக்கிக கூறினோமாகையால அரக்கோணவாசியார் எமமேற்சினங்கொள்ளாதிருப்பாராக.

பிராமணஜாதிக்கே பூஜ்யத்துவமும் இதரஜாதியினரெவ்வளவு தவவொழுக்கங்கள்பெறினும் அவர்கள்பிராமணராகாமையுமாகிய அபசித்தாந்தப்ரபஞ்சமாயின், அறுபத்துமூவரடியார் பெருமைமையுண்மை நூல்கள் விரித்தமேன்மையாமென்றார். வர்ணாசிரமபேதவிசாரஞ் செய்கையில் அடியாரைத்தேடியது அவலமேயென்க. அனந்தமூவிஞர், இவருண்மை நூலென்றுகொண்ட திருத்தொண்டர்புராணத்தில் முதல வருணத்தாரையேபிராமணாவேதியர்முதலியசொற்களாற்கூறப்பட்டிருப்பதேயன்றி ஏனையவருணத்தாரைப் பிராமணரென்று யாண்டுங்கூறப்படு

Koviloor Digital Library

ட்டதில்லை.அப்புராணத்தில் எங்காவது, சூத்திரனைப்பிரா
மணனென்றசொல்லாற் கூறியிருந்தால்,அப்போதுஃட்டும்
நமதன்பரதுவாதம் பலம்பெறும். அங்ஙனமில்லாமையே
பரிதாபத்துக்கிடமாயிற்று. திருத்தொண்டர் புராணங்கூ
றிய சேக்கிழாரும், நாலு வருணங்களையும் ஒப்புக்கொ
ண்டு,அவ்வவ்வருணத்தார்க்குரிய பெயராலேயே அவரவர்
களைவழங்கியிருப்பதையுணராது அச்சைவப்பெரியார் கரு
த்தொடுமாறுமேகொண்டு, எல்லாரையும் பிராமணராக்கமு
யன்றது மிகுதியும் பரிதாபமெனக. பெரியபுராணம் சிவ
பக்தியின்மையை விளக்கவெழுந்தது; ஆதலால் அதனைச்
சாதிவிசாரணைக்குமுன கொணடுவந்து காட்டியது நிஷ்பி
ரயோசனமெனக. இனி 'சிவனடியார்களே சைவரும்பிரா
மணருமாவார். சிவசம்பந்திகள் சைவரும், பிரமசம்பந்தி
கள் பிராமணருமாயிடுதல்சத்தியம்.சிவம் பிரமமென்பனவொ
ருபரம்பொருளைக்குறிக்கும் பரியாயச்சொற்கள். சிவமெ
ன்பது தாழ்ந்ததும் பிரமமென்பதுஉயர்ந்ததுமென்றுகூற
இவரால்முடியாது. இதனால்சிவனை வழிபடுதலால் சைவ
ரெனப்படுவோரே, அச்சிவமேபிரமமாயிடுதலினுற்கிப்பிரா
ணரென்று சொல்லப்படுவோரெனக்.' என்றுதமதுபுலமை
முற்றும்வெளிப்படப்பிரசங்கித்தார். இதனால் எமக்கொரு
தாழ்வுமில்லை. சிவனடியார்களே பிராமணரென்பதை நூ
லாதாரங்கொண்டு சாதிக்கப்புகாது, தமது புத்திவிசால
த்தைக்காட்டி மகிழ்ந்தார். அது அசங்கதமெனக. சிவ
சம்பந்திகள் பிராமணராயிடுதல் சத்தியமாயின், சிவதீ
க்ஷையளித்த க்ஷத்திரிய, வைசியர்களை அநுசைவரென்
றும் சூத்திரரை அவாந்தரசைவரென்றும், அநுலோம
பிரதிலோமரை, முறையேபிரவரசைவர், அதியசைவரெ
ன்றும், பெயரிட்ட ஆகமம், அவர்களைப் பிராமணரென்று
கூறமறந்தது என்கொலோ? ஆகமங்களே அவர்களைப்
பிராமணரென்றுகூற நாணுமாயின், நமதன்பரதுசெயல்
சாலச் சிரிப்புடைத்தெனக. சைவர்கள் பிராமணரெனப்
படுதல் நூலவழக்கினும் உலகவழக்கினுங்காணப்படாதி
ருக்க, நமதன்பர் தம்மைப்பிராமணரென்று பெருமைபே
சிக்கொண்டதுகேட்ட, அவரது மனைவி மக்களுங்கூடஉடல்
குலுங்கச்சிரிப்பார்களெனக. அங்ஙனமாயின் வேதாகமங்
கள் எல்லாரையும் பிராமணரென்னும்பொதுப்பெயரால்
விதந்துகூறுது, நாலுவர்ணங்களாக வகுத்து அவரவர்
களுக்கு முறையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர்,சூத்
திரரென்று தனித்தனியே பெயர் கூறியதும மிகையா
காதவாறென்னை? நமதன்பரே சிவசம்பந்திகள் சைவரும்
பிரமசம்பந்திகள் பிராமணருமாவாரெனக் கூறியுள்ளாரா
கையால் சிவசம்பந்திகள் சைவரெனப்படுதலேயன்றிப்,
பிராமணரெனப்படுதல் காலத்திரயத்துமில்லையெனக.ஆக
மதீக்ஷை,சிவதீக்ஷையெனப்படுதலேயன்றிப்,பிரமதீக்ஷை
யெனப்படுவது, இருவகை வழக்கினுங்காணப்படாமை
யால், ஒருபோதுஞ்சைவர்கள் பிராமணராகாரென்றுது
ணிந்திடுக. பிராமணர்கள் பெறும்ஸம்ஸ்காரத்துக்குப் பி
ரமோபதேசமென்பது,நூல்வழக்கும்,உலகவழக்கும் ஆத
லால் யாங்கூறியபடி அவர்களே பிராமணராவாரென்
பது சத்தியமேயெனக. சிவம், பிரமமென்பன ஒருபொரு
ளைக்குறிக்கும்பரியாயச்சொற்களென்பதும், அவை ஒன்

றினென்றுதாழ்வென்பதும் எமக்குடன்பாடாயிற்று ஆயி
னும், சிவமென்னும், சொல், பிரமமென்னுஞ் சொல்லாக
வும்,பிரமமென்னும சொல் சிவமென்னுஞ்சொல்லாகவும்
மாறுதற்கு இலக்கணவிதியாதோ? அறிந்திலம். சிவநாமத்
தைக்கொண்டு சிவனைவழிபடுவார் சைவராதலேயன்றி,பி
ராமணரெனப்படுதல்சாலாதெனக. சிவமென்னுஞ்சொல்
லுக்குப் பிரமமென்பது பரியாயச்சொல்லெனக்கண்டு தெ
ளிந்து, பின்னர் அப்பிரமமேசிவமாதலால், சைவர்களும்
பிராமணராவரெனக் கஷ்டப்பட்டுப் பொருள்கொள்வதி
னும், பிரமகுலத்திற்பிறந்து, பிரமோபதேசமபெற்று பிர
மோபாசனைசெய்வாரைபிராமணரென்று கூறுதல் எளி
தாயிருக்கின்றதையுங்கண்டுதெளிவாராக. இதுபற்றியே
ஆகமங்களும் சிவதீட்சைபெற்றாரைச் சைவரென்றகூறி
பிராமணரென்று கூறப்பின்னடைந்ததெனக. ஆகமதீ
ட்சைபெற்றபிராமணரையும், பிராமணரென்னுது, மஹா
சைவரென்று கூறியதுங்காண்க. தீட்சைபெற்றசூத்திர
ரை அவாந்தரசைவரென்று கூறியது போலாது, அங்ஙன
மமபிராமணரைமஹாசைவரென்று கூறியதும், ஜாதி
அந்தணர்மகிமையுணர்த்துதற்கேயாமெனக. வேதாகம
ங்கள் தீட்சைபெற்ற பிராமணரையே பிராமணரென்று
கூறப்பின்வாங்கி, மஹாசைவரென்னுமாயின். ஏனைய
வருணத்தார் ஸம்ஸ்காரத்தினால் பிராமணராகுதல்சால
வுமழகிதெனக. சிவசம்பந்திகளாகிய ஆதிசைவரைச்சிவ
ப்பிராமணரென்ற கூறியதும், பிரமன்முகோற்பவராகிய
பிராமணரினின்றும் அவர்களை வேறுபிரித்தற்கேயாம்.
ஏனெனில் அவ்விருவரும் ஜன்மத்தினாலேயே பிராமண
ராயிடுதலினுக்கி அவருள் வேறுபாடு காண்பதற்கேயாமெ
னக. நமதன்பரதுகருத்தைத்தழுவுங்கால் சிவப்பிராம
ணரும் சூத்திரரென்பதற்குத்தட்டில்லையாதலால், அவாக
ளையளவுக்குமிஞ்சிப்புகழ்ந்ததும் வியர்த்தமாயிற்றெனக.
இதனால் சிவசம்பந்திகள் சைவராதலேயன்றிப் பிராமண
ராகாரென காட்டப்பட்டது. அன்றியும் வருணபேதங்
கள் முத்திபர்யந்தமிலைபெறுமென்பதுங் கண்டுதெளிக.
சிவபத்திபுரியுமிழிகுலத்தாரைச் சிவசம்பந்தம் பெற்ற ஜா
திவேதியர் வணங்கினதாகத்,தொண்டர்புராணங்கூறியது
தவறுயேயெனின்; அற்றன்று, சிவவியாபகச்சிறப்புநோ
க்கி, அஃறிணைப்பொருளாகியகல், மண், செம்புமுதலிய
வற்றைவணங்குதலால், யாதொருதோஷமும் சம்பவியா
மைபோல அவற்றினும சிறந்தசேதனர்களை அச்சிவவியா
பகசம்பந்தநோக்கிப் பணிதல் குற்றமாகாதென்றுணர்க.
இதுபற்றியே வச்சிரசூசிகோபநிஷத்துக் கூறியதுமெனக.
இதனால் இழிகுலத்தோர் உயர்குலத்தோராகாரென்றும்,
உயர்குலத்தோர் இழிகுலத்தாராகாரென்றுந் தெளிக.

இப்போது உலகில் இராஜ ஜாதியென்றொரு ஜாதியிரு
க்கின்றது அந்தஜாதியினர் தங்களைராஜகுலமென்றேசொ
ல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் அவ்வாறுசொல்லிக்கொ
ள்வதையங்கீகரித்து ஏனையஜாதியினர் அவர்களைப் பணி
யவாவது அவர்களுக்குத்திறைகொடுக்கவாவது செய்கின்
றார்களா?" என்று வினவினர். நாம அநாதிவழக்கைப்ப
ற்றி வாதிடுகிறோம். நூதனமாகவுண்டாகும் ஜாதியைப்

Koviloor Digital Library

பற்றியாம் கவனிக்கவேண்டிய அவசியமில்லை, ஒப்புங்கால் அவர்கூறிய திருஷ்டாந்தப்படி நூதனராஜகுலத்தாரை ஒருவருங்கனஞ்செய்யாதவாறு போல நூதனமாய்க் கிளைத்துவருங்கலிகாலப்பிராமணரையும் அவ்வாறே கொண்டு ஒதுக்கிவைப்பதே நியாயமெனப்புலப்படுகின்றது பூர்வராஜவம்சத்தில் பிறந்தார் எல்லாரையும் இராஜரென்று கொண்டுபணிதலில்லையேயெனின், அது அநாவசியமாம். வேதமந்திரபூர்வகமாக மகுடம்புனைந்து செங்கோல்தாங்கி இராஜரீகம்புரிவானையே இராஜனென்று நூல்கள்தழுவியதன்றி அச்சாதியார் எல்லாரையும் அரசரென்று எந்தநூலுங்கூறியதில்லை. மகுடாபிஷேகஞ் செய்தற்குரிய விதிகளும்பெறப்படுகின்றன. ஒரே ஒருவனுக்குத்தான் முடிசூட்டி யரசனாக்கிக்கொள்ள நூல்விதித்தது. அன்றி க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்தார்க்கெல்லா மகுடஞ்சூட்டி ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வோரரசனை நியமித்துக்கொள்கவென்று நூல்விதியாமைக்கென்செய்யலாம். அதுபோல விப்பிரமகுலத்தில் பிறந்தோரெல்லாரும் உபநயனம் செய்யப்பெற்றுப்பிரமோபாசனை செய்யவேண்டுமென்றும் அவர்களெல்லாரும் பிராமணராவாரென்றும் உண்மைநூல்கள் கூறுமாற்றால் பிரமகுலத்திற்பிறந்தவர்களெல்லாரும் பிராமணர்களென்பதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லையென்க. நமதன்பர் கொண்டுவந்த இராஜகுலதிருஷ்டாந்தம ஈண்டுக்கனம் பெறாதொழிந்தமையுங்காண்க. யாம் சிவனடியார்நிந்தை புரிவதாக மிகுதியும் பரிதபித்தார். இது பஞ்சமகாபாதகன் ஒருவன் வேதவேள்வி புரியும் விப்பிரனை நோக்கி இப்பாதகத்தைச்செய்கிறாயேயென்று கண்ணீர்விட்டழுத கதையோடொக்குமென்க. எக்குலத்துதித்தாராயினும் சிவனடிக்கன்பு பூண்டவர்களே பிராமணோத்தமராவாரென்று முறையிடுநமதன்பர் அதனை மறந்து பிராமணகுலத்துதித்துச் சிவபக்தியிற்சிறந்த அப்பூதி அடிகளையும் திருநீலநக்கநாயனாரையும் பிராமணரென விழிவுகூறி, அப்பர்சுவாமிகளையும் திருநீலகண்டயாழ்ப்பாணரையும், பிராமணோத்தமரென்று புகழ்ந்து கூறிப்பரிபவப்பட்டார். அப்பூதியடிகள்முதலாயினர் நமது அன்பரது கருத்துப்போலக்கர்மப்பிராமணராகாமையால், அவரையிழிவுரையாடினர் போலும்! இவரது சிவதர்மம் சாலச்சிறப்புடைத்தென்க. இதனால் சிவனடியார் நிந்தையிற்றலைப்பட்டுப் பாபத்துக்குமடிகொண்டார் யாமோ? அன்றி நமதன்பர் தாமோ? என்பதை மத்தியஸ்தர்கண்டு இவரது பேதைமைக்கிரங்கி இவரது கொடுமைக்கு மிகுதியுமஞ்சாதொழியாரென்க இவ்வளவுபிராமணத்துவேஷங்கொண்டு, உண்மையைப்புரட்டி உலகைவஞ்சிக்கக்கங்கணங்கட்டிக்கொண்ட இவர்தாமோ ஜீவகாருண்ணியமுடைய பிரமஞானியாவார். இவரோடு சமதையாய்நின்றுவாதாடநேரிட்டதே எமது பூர்வகர்மானுசாரமென்க. இவற்றையெல்லாம் யோசித்துப்பாராது பலவாறுநிந்தனைபுரிந்துமகிழ்ந்த நமதன்பரது இறுமாப்புக்குச் சிறுமாப்பளித்து, இப்பட்டில்விடுத்து வேறுவிஷயங்களை யாராய்வாம்.

சிவபெருமான் மூங்கிலிற்பிறந்ததுபோலவும், வள்ளிநாச்சியார் மானவயிற்றிற்பிறந்ததுபோலவும், சண்முகக்கடவுள் சரவணத்திற்பிறந்ததுபோலவும், வசிட்டரும் அகத்தியரும் கும்பத்திற்பிறந்ததனால் ஜனனவஸ்தையின்றிப் பிறந்தார்களென்பதைக்காட்டுதற்கே யாம்குமாரக்கடவுள்முதலாயினரையெடுத்தாண்டாம். அதனைத்தேர்ந்துணரும் வல்லமையின்மையினால் விபரீதமாகக்கிரகித்துக்கொண்டு தமக்குவேண்டியவாறே திருக்கிவிடுத்தார்.

சிவபெருமானே அகத்தியனைத்தமக்குச்சமானமாயுள்ளாரென்று புகழ்ந்துகூறியிருத்தலையுமுணராது அவனைச் சாமான்யஜீவர்கோடிகளிலொருவனாகமதித்துக்குறைகூறியகுற்றந்தலைமேலேறியிருப்பதையுமெண்ணாது யாம் எமது பெறலருஞ்செல்வப்பெருக்காய முருகேசர் முதலாயினரையிழிவுபடுத்தியதாக வம்புரையாடிவாயில்வந்தபடி உளறிவழிந்தார். அன்றியும் யாம் மகாசைவரெனக் கையொப்பமிட்டிருத்தல்கண்டும் எம்மை மிச்சாவாதியென்றார். இதனாலிவர் சைவநூலுணர்ச்சியில்லாரெனவே தீர்மானிக்க நேர்ந்தபடியால் யாமவரைத்தான்றோன்றிச்சைவரென அழைக்கவுடம்பட்டோம். நமதன்பரே! "இன்னுமெந்தச்சைவனோ யேமாற்றவோ தெரியாது" என்றாராகையால், அவர் சைவரோ அல்லரோ? என்று ஐயுறுதற்கு இடந்தருகின்றது. அவர் சைவராயின் இன்னசைவரென்றுவிளங்கவிசையலராதலால் யாங் கூறியது பொருத்தமுடைத்தென்க.

நமதன்பரிக்காலத்துப் பிரமன்முகத்திற்பிறந்த பிராமணரில்லை. அவருள்ளாரென்பதற்குத்தக்கபிரமாணங்கொண்டு வெளிவருகவென்று இறுமாந்து கூறினாராகையால் யாம் அவ்வாறேயந்தப்பிராமணர்களே இக்காலத்துள்ளாரென்றுகாட்டுதற்கு வாயுசங்கிதைமுதலிய நூல்களைக்காட்டிப்போந்தாம்.

(இன்னும்வரும்.)

இங்ஙனம்,

ஓர் மஹாசைவர்.

Chidambaram:--Printed and published for the proprietor at the "Brahmavidya press" No-3 Senkallooneer Pilliar koil street.